உ

நடராஜ துணை.

தெய்வப் புலமை

திருவள்ளுவ நாயனார்

அருளிச்செய்த

தமிழ் மறையாகிய,

திருக்குறள் முழுவதும்,

பரிமேலழகருரையும்

இவ்வுரைக் கியையுமாறும்

ஆசிரியர்

கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

இயற்றிய

தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும்,

தூறிப்புரையும்

திருத்தமான இரண்டாவது பதிப்பு

ஆங்கில மொழிபெயர்ப்புடன்.

இவை

மை செட்டியாரவாகளாலும்

மங்கலம் - ஷண்முக முதலியாரவர்களாலும்

சென்னை, கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்


பதிப்பிக்கப்பட்டன.

முதல் பாகம்.

1919.

Copy Right Registered.

விலை ரூபாய் எட்டு.



திருவள்ளுவ நாயனர்.

முதற்பதிப்பின்

முகவுரை.

காரண வியாபாரத்தைச் செவ்வையாகவுடைய எவ்வுயிர்களும் சர்வ துக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியும் பெற விரும்புவ தியற்கை யாம்; ஆனால், அவை அவற்றிற்குப் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளும் மயக்கங் காரணமாக வுண்டாம் காமம் வெகுளி உள்ளவ்வையி லும் இண்டாகா வென்பது ஒருதலையாம்; பொருளைப் பொருளாகவும், பொருளல்ல வற்றைப் பொருளல்லவாகவுங் கொள்ளுந் தத்துவ ஞான முதித்த விடத்து உண்டா மென்பது "பொருளல்ல வற்றைப் பொரு ளென் றுணரு, மருளாஞ மாணப் பிறப்பு" "இயுணர் வெய்தியக் கண் ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லா தவர்க்கு" "காமம் வெகுளி மயக்க மிவையூன்ற, ஞமங் கெடக்கெடு நோய்" என்றற் றொடக்கத்துத் திருக் குறளால் நன்கு வெளியாம். உயிர்கள் பிழ்ப்போன ஜன்மங்களிற்செய்த புண்ணிய பரிபாகத்தால் நான்மறை வழங்கும் பரதகண்டத்தில் ஒழுக் கத்தை யுயிரினுஞ் சிறந்ததாகக்கொண்டு கடைப்பிடித்து நன்னெறியிற் செல்லும் நன்மக்கள் குலத்திற்பிறந்து விலக்கியனவற்றை ஒழித்து விதித் தனவற்றையே செய்தவந்தால், அவ்வுயிர்களுக்குத் தத்துவஞான வாயிலா கச் சர்வ துக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியுமாகிய மோட்சம் ஒரு தலையா யுண்டாமென்பது நன்னூல் உணர்ந்தோரது கொள்கையாம். மக்கள் தத்துவஞானம் பெறுதற்பொருட்டு, ஒவ்வொரு சிருஷ்டியு ஞரம்பத்திலும் பரமேசுவரன் அநாதியாய வேதத்தை எடுத்துக்கூறி வருகின்றாரென்பதும், தாமே குருவடிவங் கொண்டு வந்து அதனை விரித்தும் சுருக்கியும் சிஷ்ய பரம்பராக்குக்கூறி வருகின்ற தென்பதும் சாஸ்திரசம்மதமாம். இதனால், மக்கள் தத்துவஞான மடைதற்கு ஏதுவாயுள்ளது வேதமேயா மென்பது பெறப்படும். இது "சத்திய மாகி வேத மொன்றுமே யளவை யாகும்" "வேத மோதியதே மெய்ப்பொருள் மற்றைப் பொருளெலா மித்தையே" "ஆத லான் மறையிற் சொலப்பட்ட அருத்தமே உண்மையானது" என்று சூதசங்கிதை கூறுவதால் நன்கு விளக்கமாம். இதனை மூலமாகக்கொண்டு எழுந்தநூல்கள் பல; அவற்றுள் திருக்குறளும் ஒன்றும். இது மாங்குடி மருதனார் "ஒதற் கெளிதா யுணர்தற் கரிதாகி, வேதப் பெரியோராய் மிகவினங் கித்-தீதற்றோர், உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே, வள்ளுவர் வாய்மொழி மாண்பு" என்றும், மதுரைப்பெருமருதனார் "வேத விழுப்பொ ருளே வெண்குறளால் வள்ளுவஞர், ஓதவுழக் கற்ற தலரு" என்றும் திரு வல்லுவமாலையிற்கூறியிருத்தலால் செவ்வனே புலனும். ஆகவே, "மறைக்கு விரோதமுரை, மொழியார் தருநற் புராணங்கள் முற்றும்பிரமா ணங்களே" என்று சூதசங்கிதை கூறியவாறு திருக்குறளும் பிரமாண நூல்களுள் ஒன் றாவென்றும் பெறப்பட்டது. இத்திருக்குறள் தமிழில் வெளியாய நூல்

களுள் அறம் பொரு ளின்பங்களே எப்பாலவரும் இயைந்தேற்குமாறு முறைப்படக் கூறுவதுபற்றித் தலைமைபெற்றுத் தமிழறிந்தாரியாவாரா லும் வேதம்போன்று போற்றப்பட்டுவருதலும், இதன் சீரறிந்து தெலுங்கு, இங்கிலீஷ், பிரஞ்சு, ஜர்மனி முதலிய பாஷைக் குரியாராலும் தத்தம் பாஷையில் மொழிபெயர்த்துக்கொண்டு பொன்னேபோற் போற்றப் பட்டு வருதலும் குன்றின்மேலிட்ட விளக்காம். இத்திருக்குறளே ஒவ் வொருமதஸ்தரும் தத்தம் மதநூலென்று பாராட்டிவருதலினால், இது யாவ ரும் உய்யுநெறிகண் டெளிதி னுய்யுமாறு இயற்றப்பட்ட நூலாம். இது "சமயிக் கணக்கர் மதிவழி கூரு, தலகியல் கூறிப் பொருளிது வென்ற, வள்ளுவன்" என்று கல்லாடங் கூறுமாற்றானும் அறிதற்பாலதாம். "பல்காற் பழகினுந் தெரியா வுளவேல், தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கு மாண்டினு மிலேயேல், வடமொழி வெளிபெற வழங்கு மென்க" என்று இலக்கணக் கொத்துநூலார் கூறுவதனாலும் இதன் மாட் சிமை நன்குவெளியாம். நாயனார், தேவர் என்றற் றொடக்கத்துத் திரு நாமங்களுடைய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால் அருளிச்செய் யப்பட்ட உத்தரவேதம், தெய்வநூல் என்றற் றொடக்கத்துத் திருநாமங்க ளுடைய இத்திருக்குறளுக்கு உரையியற்றிய தருமர் முதலிய பதின்மருள் பரிமேலழகர் உரையே சீரிய உரையாய் நிலவித்றென்பது "நூலிற், பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன், தெரித்தவுரை யாமோ தெளி" என் றுள்ள பிரயோகத்தினால் இனிது விளங்குவதாம். இப்பரிமே லழகருரை தருக்கம், இலக்கணம், சாங்கியம், யோகம், வேதாந்தம், தருமசாஸ்திரம், சங்கநூல் முதலியவற்றிற் பயிற்சியுடையவர்க்கேயன்றி மற்றையோர்க்குப் பெரிதும் பயன்படாதிருப்பது கருதி, இவ்வுரை முழுதிற்கும் நன்கு புல னும்வண்ணம் தெளிபொருள்விளக்கமும், கருத்துரையும், மிக உரையில் இன்மறைகாய்போலிருக்கும் விஷயங்கள் நன்கு விளங்குமாறு குறிப்புரை யும் (பரிமேலழகர் மேற்கோளாக எடுத்துள்ள செய்யுள்களுக் குரையும், அவர்காட்டிய இலக்கணங்களுக்கு விளக்கமும், சாங்கியமத முதலியவற் றின் சித்தாந்தமும், பெரும்பான்மையும் மேற்கோளாய்க் காட்டியுள்ள செய்யுட்களின் நூற்பெயரும், நூற்பிரமாணங்களும் அக்குறிப்புரையில் விளக்கிக்) கற்றோர்க்கேயன்றி மற்றையோர்க்கும் உடாத்தியாயிரின் சகா யம் பெரும்பான்மையு மின்றி யினிது விளங்குமாறெழுதி இந்நூல் அச் சிடப்பட்டது.

இந்நூலில் உரையுடன் திருவள்ளுவமாலையும் திருவள்ளுவரது சரித் திரமும் சேர்க்கப்பட்டிருத்தலே யல்லாமல், நாயனாரது வேறுசரித்திர விசேஷங்களும், அவரது பத்துத் திருநாமங்களுக் கர்த்தமும், திருக்குறளின் பத்துத் திருநாமங்களுக் கர்த்தமும், இலக்கண விசேஷங்களும், பரிமேலழ கரது சரித்திரமும், வேறு சில விசேஷமும் எழுதிச் சேர்க்கப்பட்டு மிருக் கின்றன.

15—7—1904. கோ - வடிவேலுசெட்டியார்.

ஆ

இரண்டாம் பதிப்பின்

முகவுரை.

இப்பதிப்பு இரண்டாவது பதிப்பாம். முதற் பதிப்புச் சஞ்சிகை வடிவமாக அச்சிடப்பட்டமையின், அது காரணமாகச் சில பிழைகள் அப் பதிப்பில் சேர்ந்துவிட்டன ; அவை இப்பதிப்பிற் திருத்தப்பட்டிருக்கின் றன ; எழுதாது விடப்பட்டனவும் எழுதப்பட்டிருக்கின்றன; பல தூலா ராய்ச்சியால் கண்ட பாட பேதங்களும் காட்டப்பட்டிருக்கின்றன ; மூலத் திற்கு மூசைக்குமொத்த வேறு சில பிரமாணங்களும் காட்டப்பட்டிருக் கின்றன ; நண்பர் பலரது விருப்பின்படி திருக்குறள் மூலத்திற்கு ஆங்கி லேய மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாங்கிலேய மொழிபெயர்ப்பை யியற்றியவர் எமது முக்கிய கண்பருள் ஒருவரும், எம்மோடெப்போதும் பழகி வருகின்றவருமாவர். அவர் தம் பெயரை வெளியாக்குதல் கூடாதென் றெம்மைக் கேட்டுக் கொண்டமையால், அவர் பெயரை அவர் விருப்பத்திற் கேற்றவா றெழு தாதுவிட்டனம் அவர் கைம்மாறு கருதாது செய்த இவ்வுதவி யெஞ் ஞான்றும் மறத்தற்பாலதன்றும்.

இப்புத்தகத்தை யச்சிடும்போது எமதுடனிருந்து வேண்டிய உதவி யைச செய்துவந்த ஸ்ரீமந் - மங்கலம்-சதாசிவ முதலியார் அவர்களுக்கு யாமென்று மறவாத அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேம்.

இப்பதிப்பு அச்சாகி வரும்போது ஐரோப்பா யுத்த மாரம்பமாய் விட் டது ; அதனால், காகிதத்தின் விலை மிக அதிகமாய்விட்டது ; உயர்ந்த காகிதங் கிடைப்பது மிக அருமையாய்விட்டது ; அதுபற்றி மிகச் சில பாகம் முதற்றாமான காகிதத்தில் அச்சிடுதல்கூடாமற் போயிற்று. முதற் பதிப்பு (டிம்மி 8-பக்கங்கொண்ட) 163-பார வளவினதாம் ; இப்பதிப்போ (டிம்மி 8-பக்கங்கொண்ட) 185-பார வளவினதாக முடிவுபெற்றது. அது பற்றி இப்பதிப்பின் விலை ஒரு ரூபாய் அதிகமாக வைக்கப்பட்டிருக்கின் றது.

யுத்தங் காரணமாகக் காகிதத்தின் விலை ஒன்றுக்கு நான்கு மடத்து மீதமாய் விட்டமையால், மிக அதிகவிலை கொடுத்துக் காகிதம் வாங்கி இப்புத் தகத்தை அச்சிடல் வேண்டியதாயிற்று. அதுபற்றி இப்புத்தகத்திற்கு யாம் அதிக விலை வைக்கவில்லை.

இப்பதிப்பினும் பிராந்திப் பிரமாதங்களால் பிழைகள் நேரிட்டிருத்தல் கூடும்; அவற்றை யறிவுடையோர் தெரிவித்தால், அவை பிழைதிருத்த மாகச் சேர்த் தச்சிடப்படுவதுடன் அவர்களுக்கு வந்தனமு மளிக்கப்படும்.

இப்புத்தகம் யாதொரு இடையூறுமின்றிப் பூரணமாக முற்றுப்பெறு மாறு திருவருள் புரிந்த எல்லாம்வல்ல இறைவன் இஃதெஞ்ஞான்றும் நிலவெறுமாறும் அருள்புரிவாரெனப் பிரார்த்திக்கின்றனம். இந்திப்பிழை யனதாயின், உலகம் பொறுக்க.

சென்னை,
1—10—1918. } கோ - வடிவேலு செட்டியார்.

திருக்குறள்
பாலியலதிகார அடைவு.

CONTENTS.

I - அறத்துப்பால் (38)—**On Virtue.**

1. பாயிரம்—(4)	அதிகாரம்.	*Preface.*	பக்கம்.
1 கடவுள்வாழ்த்து	1	Praise of God	6
2 வான்சிறப்பு	2	The excellence of rain	20
3 நீத்தார்பெருமை	3	The greatness of ascetics	28
4 அறன்வலியுறுத்தல்	4	The power of Virtue	43
2. இல்லறவியல்—(20)		*On Domestic Virtue.*	
5 இல்வாழ்க்கை	1	The domestic state	54
6 வாழ்க்கைத்துணைநலம்	2	The virtue of wife	64
7 புதல்வரைப்பெறுதல்	3	Obtaining children	72
8 அன்புடைமை	4	Love	81
9 விருந்தோம்பல்	5	On Hospitality	91
10 இனியவைகூறல்	6	On Sweetness of speech	99
11 செய்ந்நன்றியறிதல்	7	On gratitude	109
12 நடுவுநிலைமை	8	On equity	117
13 அடக்கமுடைமை	9	Self-control	126
14 ஒழுக்கமுடைமை	10	Observance of the proprieties of life	135
15 பிறனில்விழையாமை	11	Against desiring the wife of another	143
16 பொறையுடைமை	12	Patience	152
17 அழுக்காறாமை	13	Against envy	160
18 வெஃகாமை	14	Against covetousness	169
19 புறங்கூறாமை	15	Against back-biting	178
20 பயனிலசொல்லாமை	16	Against profitless conversation	186
21 தீவினையச்சம்	17	On the fear of sin	194
22 ஒப்புரவறிதல்	18	On benevolence	205
23 ஈகை	19	On Alms - deeds	214
24 புகழ்	20	Praise	225
3. துறவறவியல்—(13)		*On Ascetic Virtue.*	
25 அருளுடைமை	1	Kindness	238

	அதிகாரம்.	
26	புலான்மறுத்தல்	2
27	தவம்	3
28	கூடாவொழுக்கம்	4
29	கள்ளாமை	5
30	வாய்மை	6
31	வெகுளாமை	7
32	இன்னாசெய்யாமை	8
33	கொல்லாமை	9
34	நிலையாமை	10
35	துறவு	11
36	மெய்யுணர்தல்	12
37	அவாவறுத்தல்	13
38	ஊழ்	1

II-பொருட்பால் (70)—

1. அரசியல்—(25)

39	இறைமாட்சி	1
40	கல்வி	2
41	கல்லாமை	3
42	கேள்வி	4
43	அறிவுடைமை	5
44	குற்றங்கடிதல்	6
45	பெரியாரைத்துணைக்கோடல்	7
46	சிற்றினஞ்சேராமை	8
47	தெரிந்துசெயல்வகை	9
48	வலியறிதல்	10
49	காலமறிதல்	11
50	இடனறிதல்	12
51	தெரிந்து தெளிதல்	13
52	தெரிந்துவினையாடல்	14
53	சுற்றந்தழால்	15

	பக்கம்.
Abstinence from flesh	259
On Austerities	271
On Inconsistent conduct	283
Against fraud	294
On truthfulness	307
Against anger	318
Against inflicting suffering	330
Against destroying life	342
Instability	358
Renunciation	378
True knowledge	386
The destruction of desire	403
Fate	418

On Property.

The duties of the king.

Kingly excellence	430
On learning	443
On the neglect of learning	456
On hearing (instruction)	466
On Wisdom	478
On the correction of faults	488
On procuring the aid of great men	499
Against associating with evil persons	510
On acting with fore thought	522
On the knowledge of resources	533
On the discernment of a suitable time	545
On the choice of a suitable place	556
On reflection before decision	567
On deliberation in the employment of servants	579
On kindness to relatives	588

	அதிகாரம்.	
54	பொச்சாவாமை	16
55	செங்கோன்மை	17
56	கொடுங்கோன்மை	18
57	வெருவந்தசெய்யாமை	19
58	கண்ணோட்டம்	20
59	ஒற்றுடல்	21
60	ஊக்கமுடைமை	22
61	மடியின்மை	23
62	ஆள்வினையுடைமை	24
63	இடுக்கணழியாமை	25

2. அங்கவியல்—(32)

64	அமைச்சு	1
65	சொல்வன்மை	2
66	வினைத்தூய்மை	3
67	வினைத்திட்பம்	4
68	வினைசெயல்வகை	5
69	தூது	6
70	மன்னரைச்சேர்ந்தொழுகல்	7
71	குறிப்பறிதல்	8
72	அவையறிதல்	9
73	அவையஞ்சாமை	10
74	நாடு	11
75	அரண்	12
76	பொருள்செயல்வகை	13
77	படைமாட்சி	14
78	படைச்செருக்கு	15
79	நட்பு	16
80	நட்பாராய்தல்	17
81	பழமை	18
82	தீநட்பு	19
83	கூடாநட்பு	20
84	பேதைமை	21
85	புல்லறிவாண்மை	22
86	இகல்	23

	பக்கம்.
Against forgetfulness	599
On upright government	609
On unjust government	622
Against acting with a reign of terror	632
On a gracious demeanour	643
On the employment of spies	655
On energy	666
Against idleness	674
On manly effort	684
On perseverance in spite of difficulties	694

On the constituents of Royalty.

The ministers	706
The power of speech	717
Purity of action	728
Firmness of action	737
Method of action	747
The Ambassador	756
Service under the sovereign	768
Knowing the sovereign's mind	778
Knowing the court	788
Fearlessness before the court	799
The country	808
The Fort	820
The way to accumulate wealth	830
The excellence of the Army	840
Excessive valour of the Army	850
Friendship	859
Discerning friendship	869
Longstanding friendship	879
Evil friendship	888
False friendship	898
Ignorance	907
The fool's self-conceit	916
Enmity	926

	அதிகாரம்.	பக்கம்.	
87	பகைமாட்சி	24	The greatness of enmity 935
88	பகைத்திறந்தெரிதல்	25	Examining the nature of enmity 945
89	உட்பகை	26	Internal enmity 954
90	பெரியாரைப்பிழையாமை	27	Against disregard for the great 963
91	பெண்வழிச்சேறல்	28	Inclining towards the wife 973
92	வரைவின்மகளிர்	29	Prostitutes 983
93	கள்ளுண்ணாமை	30	Against drunkenness 993
94	சூது	31	Gambling 1001
95	மருந்து	32	Medicine 1012
	3. ஒழிபியல்—(13)		*Appendix.*
96	குடிமை	1	Noble birth 1025
97	மானம்	2	Honor 1034
98	பெருமை	3	Greatness 1043
99	சான்றாண்மை	4	Perfection of good qualities 1053
100	பண்புடைமை	5	Proper behaviour 1062
101	நன்றியில்செல்வம்	6	Unprofitable wealth 1072
102	நாணுடைமை	7	Modesty 1082
103	குடிசெயல்வகை	8	Method of maintaining the family 1091
104	உழவு	9	Agriculture. 1101
105	நல்குரவு	10	Poverty 1111
106	இரவு	11	Mendicancy 1120
107	இரவச்சம்	12	Fear of begging 1130
108	கயமை	13	Baseness 1139
III-காமத்துப்பால் (25)-			**On Love.**
	1. களவியல்—(7)		*In Union.*
109	தகையணங்குறுத்தல்	1	Pain at the sight of beauty 1152
110	குறிப்பறிதல்	2	Recognition of the signs of mutual love 1164
111	புணர்ச்சிமகிழ்தல்	3	Rejoicing in sexuality 1174
112	கலம்புனைந்துரைத்தல்	4	Praise of pleasure 1185
113	காதற்சிறப்புரைத்தல்	5	Declaration of excessive love 1195
114	நாணுத்துறவுரைத்தல்	6	Abandonment of modesty 1204
115	அலரறிவுறுத்தல்	7	Talk about rumour 1216

அதிகாரம்.			பக்கம்.
2. கற்பியல்—(18)		*Wedded love.*	
116 பிரிவாற்றுமை	1	Unendurable separation	1226
117 படர்மெலிந்திரங்கல்	2	Languishing in sorrow	1237
118 கண்விதுப்பழிதல்	3	Eyes consumed with sorrow	1247
119 பசப்புறுபருவரல்	4	Suffering sallowness	1256
120 தனிப்படர்மிகுதி	5	The solitary anguish	1266
121 நினைந்தவர்புலம்பல்	6	Sad memories	1275
122 கனவுநிலையுரைத்தல்	7	Relating the dreams	1284
123 பொழுதுகண்டிரங்கல்	8	Lamenting at the approach of night	1293
124 உறுப்புநலனழிதல்	9	Wasting away of the limbs	1302
125 நெஞ்சொடுகிளத்தல்	10	Soliloquy	1312
126 நிறையழிதல்	11	Loss of modesty	1321
127 அவர்வயின்விதும்பல்	12	Mutual desire	1331
128 குறிப்பறிவுறுத்தல்	13	The reading of the feelings	1343
129 புணர்ச்சிவிதும்பல்	14	Desire for intercourse	1352
130 நெஞ்சொடுபுலத்தல்	15	Expostulation with oneself	1361
131 புலவி	16	Feigned dislike	1370
132 புலவிநுணுக்கம்	17	Dislike arising from trifles	1379
133 ஊடலுவகை	18	The delights of temporary displeasure	1390



கடவுள் துணை.

திருவள்ளுவர் சரித்திரம்.



புண்ணிய பூமியாகிய இப் பாரதகண்டத்திலே இமயமலையினுச்சியிலே நெற்புப்பொருந்தி விளங்கும் திருக்கயிலாயத்திலே உயர்வொப்பிலாத செம்பொற்றிருக்கோயிலிலே திவ்வியசிங்காசனத்தின்மீது நிதானியாகுந்தவடிவின ராய்ச் சிவபெருமான் பிரமாதி முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணுயிரம் இருடிகள் கின்னரர் கிம்புருடர் கருடர் காந்தருவர் சித்தர் வித்தியாதரர் முதலானவர் இருபுடையும் சூழ்ந்து வணங்கித் தோத்திரித்து நிற்கவும், பூதர்கள் பலவாத்தியங்களை முழக்கியும் வெண்சாமரை வீசியும் ஆலவட்டம் அசைத்தும் நிற்கவும், ஊரஹர என்னும் பேரொலி எங்கும் தழைத்தோங்கவும், தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமா தேவியார் இடப்பக்கத்தில் வீற்றிருக்கவும், அளவிறந்த பெருங்கருணையோடு திருவோலக்கமாகவெழுந்தருளி யிருந்தனர்.

அப்போது உமாதேவியார் எழுந்து பரமபதியாகிய சிவபிரானைப் பணிந்துநின்று, "சுவாமி! திரிலோகத்திலே இல்லறம் வழுவாதுநடாத்தி முத்தியடைந்தவர் உண்டோ? அவரைத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும்" எனச், சிவபெருமான் "உமையே! தெய்வலோகத்திலே வசிட்டர், அகத்தியர், அயன், புயங்கன், சம்பு என்னும் ஐவரும் பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவரும், தென்புலத்தார்கடன் தேவர்கடன் விருந்தோம்பல் சுற்றந்தழுவல் கபிலபூசை செய்தல் முதலியன முடித்துக் கற்பின் வழுவாத நற்குண நற்செய்கையுடைய மனைவிகளோடிருந்து இல்லறத்தை நடாத்தி முத்தியடைந்தனர்" என்று திருவாய் மலர்ந்தருளினர். பார்வதியார் "பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர் யார்? அவர் சரித்திரத்தைக் கேட்க விரும்புகின்றேன்" எனச் சிவபிரான், பூர்வதிலே ஒரு பிரளயம்வர அதனைப் பிரமன் முன்னரேயறிந்து வேற்றுருவடைந்து ஒரு சுரைக்கூட்டிற் புகுந்திருந்து அவ்வெள்ளத்திலே மிதந்து வந்தனன். ம் யாதும் அறியாதவன்போலச் சுரைக்கூட்டி னருகணைந்து, இதற்கு ருப்பவன் யாவன்? என்று கேட்க, அவன் 'யான்வருங் காலமறிந்து த்தவல்ல வள்ளுவன்' என்றான். 'இப்பிரளயத்தில் நீ எப்படி பிழைத் இருந்தாய்' என்றோம். அப்போது பிரமன் நம்மை அறிந்துகொண்டு பரமாநந்தத்தி லழுந்தி, 'பரமபதியே! ஜகத்ரக்ஷகனே! உமது திருவருளன்றே பிழைத்திருக்கின்றேன்; தேவரீர் திருபைகூர்ந்து இத்தன்பாற் நீர்ப்பெருக்கைத் தவிர்க்கவேண்டும்' என்று வேண்ட, அவ்வதிகாரத்தை உமக்கே தந்தோம் என்றுசொல்லி முன்போலவே உலகீதத்தை படைப்பித்தோம்.

இப்படியிருக்கையில், ஆதிகாலத்தில் பூமியிலே பாண்டிநாட்டிலே மதுரைமா நகரத்திலிருந்த சங்கப்புலவர்கள் நம்மை ஓர்கால் அவமதித்ததன் பொருட்டு அவர்கள் கர்வ பங்கமாகும்படி பிரமனைத் திருவள்ளுவராகவும், மஹாவிஷ்ணுவை இடைக்காடராகவும், சரசுவதியை ஔவையாகவும் பூமியில் அவதரிக்கும்படி அனுப்பினோம்.

ஆதியிலே பிர்ம புத்திரர்களாகிய காசிபர்முதலிய நவப்பிர்மாக்களில் காசிபர் ஊர்வசியைச்சேர்ந்து வசிட்டரைப் பெற்றார்; அவர் அருந்ததியைச் சேர்ந்து சக்தியரைப் பெற்றார்; அவர் புங்கனூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பராசரைப் பெற்றார்; அவர் மச்சகந்தியைச் சேர்ந்து வியாசரைப் பெற்றார். இக்கால்வரும் வேதங்களுக் குரியவராயினர்.

பின்பு பிர்மாவானவன் மற்றுஞ் சிலபுத்திரரால் வடமொழியையுந் தென்மொழியையும் விளங்கச்செய்ய வேண்டுமென்றெண்ணி வேதவியாசி படி ஒரு யாகஞ்செய்தான்; அதன்கண் வைத்திருந்த கும்பத்தினின்றும் கலைமகளவதரித்தனள்; அவளைப் பிரமன் விவாகஞ் செய்துகொண்டான்; பின்பு அகஸ்தியர் குறியவடிவோடு அக்கும்பத் துதித்தனர். அவர் சமுத்திர கன்னிகையை மணந்து பெருஞ்சாகான் என்பவரைப் பெற்றார் அவர் திருவாரூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பகவன் என்பவரைப்பெற்று, அவர்க்குச் சகல சாஸ்திரங்களையும் கற்பித்தார் அந்நாளில் பிர்மவம்சத்தில் தவமுனி என்பவர் அருண்மங்கை என்னும் பிராமணமாதைச் சேர்ந்து ஒரு புத்திரியைப் பெற்றுவைத்து விசாலமலையில் தவஞ்செய்யச் சென்றனர். அக்குழந்தையை உறையூர்ப் பெரும்பறையன் கண்டெடுத்துச் சிலகாலம் வளர்த்து வருகையில், அந்தசேரியில் அகாரணமாய் மண்மாரிபெய்தது; பெய்யவே, மேல் நடக்கப்போகிற காரணத்தினால் இந்தப் பெண் தவிர மற்றவர் யாவரும் இறந்தனர். பின்பு அந்தப்பெண் எப்படியோ அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதியையன் வீட்டையடைந்து வளர்ந்து வந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகல சாஸ்திர பண்டிதராய்க் கண்டவர் யாவரும் மதிக்கும்படி பிராமண கிர்த்தியத்தில் வழுவாதவராய்க் காயோத்தினரைக் சேரும் மார்க்கத்திலே மேலூர் அகரத்தைக்கடந்த ஒரு சத்திரத்தில் விறகில் நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்துகொண்டிருந்தார்; அவ்விடத்தில் அந்தப்பெண் வர, அவளைக் கண்டு 'மீயார்? புலைச்சியோ? வலைச்சியோ? இங்கே ஏன்வந்தாய்' என்று அதட்டி, மிகுந்தகோபங் கொண்டு சட்டுவத்தால் அவளது தலையிலே உதிரஞ்சோர அடித்து துட்டிவிட்டார். அவள் அழுதுகொண்டே தன்னிடத்தைக்குப் போய்விட்டாள்.

மறபடியும் பகவனென்பவர் ஸ்நானஞ்செய்து போஜனம் பண்ணி அதிசீக்கிரத்தில் வழிக்கொண்டு இலாளித் காசிஸ்தலமடைந்து கங்காஸ்நானஞ்செய்த பிராயசையிலிருந்து நிர்த்தமெடுத்துவரவேண்டி வரும்போது முன் சுவிப்போன சத்திரத்திலேயே வந்திறங்கினார். மேற்சொல்லிய [illegible] அப்போது யொவனமும் பேரழகும் உடையவளாய் [illegible] பகவனென்பவர் இவளுடைய சௌந்தரிய மகிமை

குணங்களைப் பார்த்து மனமருண்டு நிற்க, அச்சத்தினாலே அதிபராகிய நீதி யையர் அக்குறிப்பினைக் கண்டு 'என் பெண்ணை நீர் விவாகம் பண்ணிக் கொண்டு இங்கேயே இருக்கலாம்' என்று சொல்ல, அதற்கவர் 'நான் கொண்டுவந்த கங்கையை இராமேச்சுரத்திற் செலுத்தித் திரும்பி வரு வேன்' என்று உற்றுநிமொழிகூறிச் செலவு பெற்றுக்கொண்டுபோய் இராமலிங்கத்தருக்கு அபிஷேகம்பண்ணித் திரும்பி வந்தார். அப்போது நீதியையர் பந்து மித்திரர்களோடிருந்து குறித்த கன்னிகையைப் பகவனு ர்க்குப் பாணிக்கிரகணஞ் செய்துகொடுக்க, ஆன்குருவாகிய சடங்குகள் சம் தஷ்டியாய் கடந்தேறின; இந்தாளன் மங்களஸ்நானஞ் செய்விக்கும்போது பகவனென்பவர் அந்தப் பெண்ணினுடைய தலையில் எண்ணெயைப் பெய் யும்படி மயிரை வகிர்ந்தார்; அப்போது தாம் மூன்பு சட்வெத்தா லடித்த வடுவைக்கண்டு அனுமானித்து, 'இந்தப் பெண் யார்' என வரலாறு முற் றும் விசாரித்து வியசனமடைந்து, 'ஆரியாளல்லவா?' என்று சொல்லி அவளைவிட்டு ஓடினர். அவளாரியென்னும்பெயரே அவளுக்குக் காரணப் பெயராயிற்று.

அதுகண்டு ஆரி என்பவளும் பின் தொடர்ந்துசென்று, பொழுது போகையில் எதிரே கண்ட பாணர்சேரியில ஒரு மண்டபத்திலே தங்கிய பகவனென்பவர் அருகிற்சென்று வணங்கிநின்று, 'என் பர்த்தாவே! தெய்வச்செயலால் உமக்கும் எனக்கும் இந்தக்காரியம் கடந்திருக்கச் சகல நீதியும் அறிந்த நீர் என்னைவிட்டு நீங்குதல் தகுமோ' அல்லது தருமமோ?' என்றும், 'உம்மை நீங்கி நான் உயிர்தரிப்பேனே' என்றும் மிகவும் ஆக்கத்துடன் சொல்லப், பிராரத்த கர்மவசத்தால் இவர் புத்தியிலும் அது சரியென்று தோன்றப் 'பெண்ணே! என்னிடத்தில் உனக்கு அன் பிருக்குமானால் யான் சொன்னபடி கேட்கவேண்டும்; அஃதாவது உனக் குப் பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கின்றனவோ அப்பிள்ளைகளை அங்கங்கே அப்பொழுதே விட்டுவருவையானால் யான் உன்னைக்கூடச் சம்மதிப்பேன்' என்று சொல்ல, அவள் அதற்கு உடன்பட்டாள்; அதனால், அன்றிரவில் அம்மண்டபத்தி லிருவருங் கூடிக் களித்திருந்தனர்.

அப்போது நமது கட்டளைப்படி சரசுவதி யாவராலும் புகழப்பட்ட ஒளவையாகப் பிறந்தனள், உடனே அவளிருவரும் புறப்பட்டுப் போனார்

"அருந்தவ மாமுனி யாம்பக வற்குக், கருவூர்ப் பெருமபதிக் கட் பெரும்புலேசி,யாதி வயிற்றினி லன்றவ தரித்த, கான்முகி யாகிய குயில மும் யானே,.யென்னுடன் பிறக்தவ ரொத்தனே பேரெனி,லாண்பான் மூவர் பெண்பா னுல்வர், யாம்வளர் நிறஞ்நிறி னியம்புவல் கேண்மி, னூற்றுக் கா டெனு மூர்தனிற் தனியே,வண்ண ரதத்தி லுப்பை வளர்த்தனன், காவிரிப் பும் பட்டினத்திற் கன்னிலேஞர் சேரியிற், சான்ரு நக்கனி லுதுவை ஞான் னின், வரப்புக் கருவியோர் வண்ணிற் சேரியிற், பான ரகத்தி லெனை வளர்த்தனன், குறவி னோமான் கொடியினைப் புணருழ், வளைவாழ் வின் வள்ளி வளர்க்கன், டொண்டை மண்டலத்தில் வண்டமிழ் மலை

யில் தொண்டைநாட்டிலுள்ள மற்றுள்ளநாட்டில் ஒரு மடத்திற்கூட உப்பை யும், சோழதேசத்தில் கருவூரில் ஒரு சோலையிற்கூட அதிகமானும், காலி ரிப்பூம்பட்டணத்தில் ஒரு மண்டபத்திற்கூட உறைஞையும், திருவாரூரில் ஒரு மடத்திற்கூடக் கபிலரும், வேளிர்மலைச் சாரலிற்கூட வள்ளியம்மை யும், திருமயிலாப்பூரில் இலுப்பைத் தோப்பிற்கூடத் திருவள்ளுவரும் பிறக்தனர்.

இக்குழந்தைகளை யாவர் காப்பாற்றுவாரென்று விட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அப்பிள்ளைகள் சொல்லிய தனி வெண்பாக்கள்:—

ஔவை.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானே—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னம்
கெஞ்சமே யஞ்சாதே நீ.

உப்பை.

அத்தி முதலெறும்பி றனவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசென்—முற்றவே
கற்பித்தான் போனானே காக்கக் கடனிலையோ
வற்பனே வன்ன யரன்.

அதிகமான்.

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட்டே ரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்ய—னுருப்பெற்று
ஓட்டி வளர்க்காளே வோகெடுவா யன்னுய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்.

உறுவை.

சண்டப்பைக் குள்ளுயிர்தன் முயருந்தக் தானருந்து
மண்டத் துயிர்பிழைப்ப தாச்சரிய—மண்டி
யலைகின்ற வன்னு யானுடைய வண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்.

கபிலர்.

கண்ணுழையாக் காட்டிற் கருங்கூற் றவளைக்கு
மண்ணும் படியறிந் தூட்டினவர் —நண்ணு
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழிலென்ன தான்.

வள்ளுவ சிடத்தில் வள்ளுவர் வளர்த்தன, ரும்பார் சோலைச் சும்பார் வனிகளில் லிடை யதிகமான் வளர்த்தனன், பாரூர் சீர்காட் டாளுக் வத்தனர் வளர்த்ப் பானும் வளர்த்தேன் " என்ற கபிலரதும்

அன்னை வயிற்றி லருத்தி வளாததவன்முன்
னின்னும் வினர்க்கர்னை வென்றுயே—மின்னரவஞ்
சூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவினை
பாடும் பெருமா னவன்

திருவள்ளுவர்.

எவ்வுயிருங் காக்கலொரு வீசனுண்டோ வில்லையோ
வீவ்வுயிரில் யானுரிவ னல்லனோ—வவ்வி
யருகுவது கொண்டிங் கலகுவதே னன்னை
வருகுவது தானே வரும்

இப்பாடல்களைக் கேட்டுத் தாய் மனத்துணிந்து நீங்க, அவ்விருவரும் நீர்த்த யாத்திரைக்குச் சென்றனர்.

திருமயிலாப்பூரில விடப்பட்ட குழந்தை அங்குள்ள ஆலயத்தில்நம்மை ஆத்மார்த்தமாகப் பூசித்துக்கொண்டு, இலுப்பை மரத்தடியிலிருந்து அம்மல நிற்றுளிக்குரு தேனையுண்டு, பூர்வம் பிரமாவாதலால் சிகை எகுயோபவீதம் சதுர்வேத புத்தகமுங்கொண்டு வளர்ந்துவருகையில், ஒருவேளானன்மனைவி புத்திரபாகியத்தைகுறித்தது மேற்படி ஆலயத்தினுள்புறம் தவஞ்செய் திருந்தனள். அப்போது 'இக்குழந்தையை நீயெடுத்துக் கொண்டுபோய்த் திருவள்ளுவரென்று நாமகரணஞ்செய்' என்று நம்மால் அசரீரி வாக்குண் டாக்கப்பட்டது; அதனை அவள் கேட்டு மனமகிழ்ச்சியுடன் அக்குழந்தை யை எடுத்துக்கொண்டு போய்க் கணவன்கையிற் கொடுக்க அவனும் இரு காமுமேன்றி வாங்கித தன் மடிமேலிருத்தி உச்சிமோந்து, மகிழ்ந்தனன்; பின் அக்குழந்தையை யவ்விருவரும அருமையாக வளர்த்துவந்தனர். அது கண்ட அவர்கள் சுற்றத்தார் 'ஏதோ ஒரு பிள்ளையை வளர்கிறார்கள்' என்று இகழ்ச்சிசெய்ய, அதற் கவர்களஞ்சிப் புறத்திலுள்ள தொழுவத் தில் தொட்டிலிட்டு அதில் அக்குழந்தையைக் கிடத்திப் பண்ணைக்கார ரைக் காவல்வைத்து வளர்த்து வந்தனர். ஐந்தியதானபின்பு திருவள்ளு வர் தம்மை வளாப்பவர் சுற்றத்தார்களால் நிந்தை செய்யப்படுகிறார்களே என்று கருதி அவர்களைப் பார்த்து 'என்னிமித்தம் உங்களுக்கு வருத்தம் வேண்டுவதில்லை; இனி நான் வேறிடத்திலிருந்து நீங்கள் நினைக்கும்போது வேண்டியதைச் செய்வேன்' என்று சொல்லிப் புறப்பட்டு அவ்வூரில் ஒரு பனைமரத்தினிழலில் இருந்தார். அமமரத்தடி நிழல் அவரைவிட்டு நீங்காதிருந்தது; அதனைக் கண்டவர்களெல்லாம் 'இப்பிள்ளை தெய்வீக மானவனே' என்று துதிக்க, காயனர் அவ்விடம்விட்டுத் திருமுல்லை போகர் முதலிய சித்தர்கள் வாசஞ்செய்யும் மலைக் கொழுந்தருளினர். இவ்விருந்த திருமூல நிவரைக்கண்டு 'வள்ளுவரே! பூர்வத்தில் எம்மிடத் தொழுகிசம் பண்ணினபோது அன்றெந்தோர் உலகத்தைக் [illegible]

முத்தி யருளும்படிக்கும், அதனிற் பொருள், இன்பம் என்னும் முப்பாலையும் தமிழில் அருளிச் செய்யும்படிக்கும், இங்குவந் தவதரித்தீரோ?' என்று திகைக்க, நாயனார் மகிழ்ந்து அங்குத் தவஞ்செய்வோரில் ஒருவராகத் தாமு மிருந்தனர்.

அக்காலத்தில் தொண்டைமண்டலத்தில் ஒரு வேதாளமானது பயிர் களை அழித்தும், உயிர்களை வதைத்தும், பிராணிகளுக்குப் பல துன்பங் களைச் செய்துவந்தது; வருகையில், காவேரிப்பாக்கமென்னும் ஊரிலிருக் கும் ஆயிரம் ஏர்வைதாதுப்பயிர்த்தொழில் நடாத்தும் மார்க்கசகாயனென் னும் ஒரு வேளாளன் அதனை யடக்கினவாகவே வேண்டிய திரவியமும் ஒரு ரும் தருகிறேனென்று பிரசித்தப்படுத்தி யிருந்தான். அதனையடக்குதல் ஒருவர்க்கும் முடியாமையால், அவ்வேளாளன் பெரியோர்கள் வாசஞ்செய் யும் மலையில்வந்து திருமூலர் முதலானவருடன் சொல்ல, அவர்கள் அதோ இருக்கும் திருவள்ளுவருடன்சொல்' என்றனர். அதனை யறிந்து சீவகாருண்யராகிய நாயனார் அவ்வேதாளதத்தை ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தால் வென்று யாவரையுங் காத்தனர்.

அதுகண்டு அவ்வேளாளன் நாயனாரைத் துதித்து 'யான் கொடுக்கும் ஊரையும் திரவியங்களையும் பெற்றுக்கொண்டு, வாசுகியென்னு மெனது பெண்ணையுந்தேவரீர் அங்கீகரித் தருளல்வேண்டும்' என்றுபிரார்த்தித்தான். நாயனார் உலகத்தார்க் கில்லறம் நடாத்திக் காட்டவேண்டிய காரணத்தை யோசித்து 'அந்தப்பெண் நான் கொடுக்கும் மணலை அன்னமாக்கி எனக் குப் படைக்குமானால் அப்படியே விவாகஞ்செய்து கொள்ளுவேன்' என் றார். அந்தப்பெண் அதற்குச் சம்மதித்து அவர் கொடுத்த மணலைச்சமைத் துப் படைத்தனள். பின்பு நாயனார் வாசுகி என்னுமப்பெண்ணை விதிப்படி விவாகஞ் செய்துகொண்டு சிலகாலங்கழித்து திருமயிலைக்குத் தம்மனைவி யுடன்வந்து, ஓர் இல் ஆக்கிகொண்டு, செய்தொழில்களில் பாவமில்லாதது செய்தற்றொழில் என்று தீர்மானித்து, அவ்வூரிலிருக்கும் ஏலேலசிங்கனென் னும வர்த்தகரிடத்தில் நூலவாங்கி ஆடைநெய்து அதனாலவரும் கூலியால் காலங்கழித்திருந்தனர்.

அக்காலத்தில் திருவாலங்காட்டில் சபாநாயகராக எழுந்தருளியிருக்கும் காம் மகிடாசுர சங்காரஞ்செய்து கர்வித்திருந்த பத்திரகாளியுடன் பலவித நடனம் புரிகையில் அக்காளியும் சோர்வுறாமல் நடனம்புரிந்தனள்; அப் போது நமது சூண்டலங்கழுன்றது; அதனைக்காளில் சேர்க்கும்படி ஊர்த்துவ பாதமாக நடனஞ்செய்தோம்; அப்படி பத்திரகாளியாட நாணி நின்றனள். அது கண்டு தேவர்கள் சந்தோஷமுற்றுத் தற்செயலாய் காம் ஊர்த்துவ நட னஞ்செய்த ரகசியம் தெரியாமல்மயங்க, அப்போது நீங்கள் திருமயிலையிலி ருக்கும் திருவள்ளுவரிடத்து இதனைத்தெரித்து கொள்ளுங்களென்று அனுப்பிவைத்தோம். தேவர்கள் அங்கேபோய் அவர் முன்னின்றனர்; நாயனர் அவர் நின்ற குறிப்பறிந்து

வெண்பா.

பூவி லயனும்புரந்தானும் ஓவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவி
லிழைநக்கி நூனெருடி மேழையறி வேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

என்று கூறியருளினர். அதனைக்கேட்டு அவர்கள் சந்தேகந் தெளிந்தார்கள்.

ஒருநாள் நாயனர் நூல் நூற்கும்பொருட்டு எலேலசிங்கர் வீட்டுக்குப் போய்ச் 'செட்டியார் எங்கே?' என்றுகேட்க, அங்குள்ளார் 'சிவபூசை செய்கிறார்' என்றனர்; 'அவர் சிவபூசை இங்குச்செய்கிறாரோ குப்பத்தில் செய்கிறாரோ' என்றனர்; அதனை அவாபத்தினி கேட்டு உள்ளேபோய்ச் செட்டியார்க்குக் கூற, அவர் திடுக்கிட்டுச் சிவபூசைவிட்டு ஓடிவந்து நாயனருடைய உபயசரணங்களையும் வணங்கி, 'சுவாமி! அடியேனைப் பந்தசாகரத்தினின்றும் எடுத்துக் கரையேற்றி யருளல் வேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்தனர். பின்பு ஒருநாள் நாயனர் அவரது பக்குவத்தையும் மற்றுஞ் சில மாணுக்கர் பக்குவத்தையும் சோதிக்கவெண்ணி அவர்களை யழைத்துக்கொண்டு ஒருவனத்திற்செல்ல, அங்குப் பெருகி வரும் வெள்ளத்தில் தம்மைப் பின்றொடர மனைந்திட மற்றவராய்ச் சில மாணுக்கர் பயந்து நின்றுவிட, எலேலசிங்கர் மாத்திரம் அவர்தம்மைத் தொடர்ந்துவந்தனர். அவ்வெள்ளம் வழிவிட்டது. பின்பு நாயனர்எலேலசிங்கரைப் பார்த்து, ஓர் உயர்ந்த மாத்தினுனியி லேறும்படி கூறினர்; அவர் ஏறிய பின்பு 'நின்ற கொம்பையும் பிடித்த கொம்பையும் விட்டுவிடு' என்று கூறினர்; அவர் அவ்வாறே யோசியாமல் விட்டனர்; விட்டும், ஓர் அபாயமுமில்லாம லிருக்கக்கண்டு எலேலசிங்கரை நாயனர் தமது மடிமீதுவைத்து ஞானோபதேசஞ் செய்தருளினர். பின்பு திருமயிலை நாட்டுக் காசஞரிய அச்சுதாஜன் ஒருநாள் எலேலசிங்கரோடு பேசிக் கொண்டிருக்கையில் 'உமக்குப் புத்திரப்பேறில்லையே; உமது ஞானசாரியரைக் கேட்கலாகாதா' என்றனன். அவர் 'கல்லது' என்று போய் நாயனரைக்கண்டு விண்ணப்பஞசெய்ய, நாயனர் 'சுவாமி கடாக்ஷிப்பார்' என்று அனுக்கிரகம் பண்ணினர்.

பின்பு ஒருநாள் எலேலசிங்கரும் அவர் மனைவியாரும் தாம் வழக்கப்படி காலையில் தரிசிக்கும் பசுவின் வாற்புறத்தில் நாம் சிறுகுழவியாயிருக்கழுவுதைக் கண்டு அக்குழந்தையை எடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு ஜனத்சாகரத்திலழுர்ந்து ஞானகுருவாகிய நாயனர் சன்னிதிக்குக் கொண்டுபோய் வைத்து வணங்கினர்கள். அவர் அக்குழந்தைக்கு 'அழகனார்தர்' என்று நாமகரணஞ் செய்தனுப்பினர். இச்செய்தியை எலேலசிங்கர் அச்சுதாஜ னுக்கறிவிக்க, அவன் 'அப்படி தெய்வீகமாய்க்கிடைத்திருந்தால் அக்குழந்தை இங்கு வரவேமே' என்னன். உடனே அரசனது மடியில் குழந்தை வீற்றிருந்தது. அதனைக்கண்டவரசன் ஆச்சரியமடைந்து 'இஸ்தாகான்றிலே'

என்று ஆனந்தமடைந்து, அதனைத் தன் மனைவி கையிற் கொடுக்க அவளும் ஆனந்தமடைந்து அருமையாக வளர்த்துவந்தனள். பின்பு நாயனார் அதே சாக்குநாளுடதேசஞ்செய்துகொண்டுஅதிமகிமையோடுவாழ்ந்திருந்தனர்.

மற்றொரு தினத்தில் ஏலேலசிங்காதி கப்பல் கரைதட்டிப்போயிற்று; அதனை அவர் அரசனுக்குச்சொல்ல, அவன் 'உம்முடைய ஆசிரியரு டனே சொல்லும்' என்றனன். நாயனர் அதனை முன்னமேயறிந்து தமது திருமுன் விண்ணப்பஞ்செய்ய வருகின்ற ஏலேலசிங்கரை யழைத்துக் கொண்டு கப்பலருகிற்சென்று தமது திருக்கரங்களால் அதனைத்தொட்டு 'ஏலையாவென் றிழுங்கள்' என்று கட்டளையிட்டனர்; அப்படியே யிழுக்க வுடனேகப்பல் சரியாகநின்றது.

பின்பொருகாலத்தில் மழையில்லாமையால் தானியங் கொள்ளக் கிடை யாமல் அநேகரிறந்துபோவதைக் கண்டு ஜீவகாருண்யராகிய நாயனர் தமக கன்புள்ள ஏலேலசிங்கரைப் பார்த்து 'நீர் இந்தப் பஞ்சம் மாறுகிறவரைக் கும் வாங்கிவைத்திருக்கும் நெல்லெயெலாம் வாங்கின விலைக்குக் குறுணி யேற்றமாக விற்கக்கடவை'என்றருளினர்;அவர் அவ்வாறே குருமொழிதவ றுதலிற்றனர். பொருள் மலைபோற் குவிக்தது. கட்டி யிருந்த நெற்கூடோ குறையாமலே யிருந்தது. பின்பு மழைபெய்ய உலகம் செழிப்படைந்தது. மறுபடியும் நாயனர் ஏலேலசிங்கரை நோக்கி 'குறுணி குறையவில்' என்றார்; அவர் அவ்விதமாகவே விற்க, மறுநாளைக்குள் அவரிடத்திலிருந்த நெல்லெல்லாம் செலவாய்விட்டன.

நாயனர் ஏலேலசிங்கரைப்பார்த்து 'நீ நெல்லுவிற்று விருத்திசெய்திருக் கிற பொருள்களைமாற்றிப் பொன்னுக்கி உருக்கித்திரட்டிக்கடலிற் போட்டு விடு' என்றனர்; அவர் அப்படியே செய்தனர். அதனை யொரு மீன்விழுங் கிற்று. சிலநாள் சென்றபின் அம்மீன் வலைக்காரர் கையிலகப்படஅவர்கள் அதனைச் சேதிக்கையில் அதன் வயிற்றில் மலினம்படிந்த வொருதம்பமிருக் கக்கண்டு அதிசயித்து, அதனை ஏலேலசிங்கர்க்குக் கொடுத்தனர். அவர் அதனைக் கல்லென்று நினைத்து ஸ்நானஞ்செய்யு மிடத்திற் போடுவித்தார். அது படத்தல் முதலிய பயிற்சியால் மலினம் நீங்கிப் பிரகாசித்தது; அவர் அதில் தமது பேர் வெட்டியிருக்கக் கண்டு †'இது குருவருள்' என்று மகிழ்ச்சி யடைந்தார்.

திருவள்ளுவர் இப்படி அநேக அற்புதங்களைச்செய்துகொண்டிருக்கும் நாளிலே பாண்டிய நாட்டிலே மதுரையில் நக்கீரர்முதலிய சங்கப் புலவர்கள் தாம் அடைந்திருந்த கல்விப்பெருக்கத்தால்கர்வமடைந்து அங்குப்போந்த வித்வச்சிரோமணிகளை எல்லாம் அவமதித்துகடப்பதைக்கேள்வியுற்றிருந்த

---

* இது முதற்கொண்டு பலரும்விழுப்போர் "ஏலேலோ ஏலவலி" என்று சொல்லிக்கொண்டு வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

† இது முதற்கொண்டு "ஏலேலசிங்கன்பொன் எழுகடல்போனாலும் மறுபடியும் வரும்" என்னும் பழமொழி வழங்கப்பட்டு வருகின்றதென்று சொல்லப்படுகின்றது.

அழகானந்தர்முதலிய பெரியோர்கள் திருவள்ளுவரைப் பார்த்து, 'கற்றற் கெளிதாகவும் இம்மைமுதலிய மும்மைக்கு முதவியாகவும், உலோகோப காரமாகவும் உமது பெயரால் ஒரு நூல் செய்யவேண்டும்' என்று வேண்ட, நாயனூர் வேதாகம சாரங்களையெல்லாந் திரட்டி அறம், பொருள், இன்பம் என மூப்பாலாக்கி (1330) குறள் வெண்பாவா லொருநூல் செய்தருளினர். அழகானந்தர் முதலாயினோர் அதனைக்கண்டு சந்தோஷித்து இதனைக் கொண்டு சங்கத்தாரை வெல்லலாம் என்று துணிந்து, நாயனூர்க்குத் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர், நாயனூர் அடியார் வேண்டுகோளுக்கு இசைந்து தமது மனைவியை இல்லின்கணிறுத்திப் புறப்பட்டு இடைக்கழிநாட்டின் வழியாகப் போகையில், ஔவையார் கேர்பட அவரோடும் போனார்; போம்போது இடைக்காடரைக் கண்டு தாம் செல்லுங் காரணத்தைத் தெரிவிக்க, இடைக்காடரும் நாயனுரை நோக்கி 'இடையாலுங் கடையாலு மழியக்கடவதென்று சுவாமி தமமை நிராகரித்த நக்கீரர் முதலிய சங்கப் புலவரைச் சபித்திருக்கின்றனர்; ஆதலால் என்னுலும் உம்மாலு மச்சங்க மழிவுபடப் போகின்றதாகையால், நாமும் உம்முடன்வருவோம்' என்றனர். பின்பவர்கள் சென்று மதுரையை யடைந்து வையை நதியில் ஸ்நானஞ்செய்து சபதபங்களை முடித்துக்கொண்டு பிரதக்ஷிணமாக ஆலயத்திற்குட்சென்று அங்கு மீநாட்சி சொக்கலிங்க மூர்த்தமாகி யமர்ந்துள்ள ஈசுமைத் தரிசனஞ்செய்தனர். பின்பு நாயனூர் மேற்படி சங்கிதானத்தில் பாண்டியராஜன் மந்திரி பிரதானி முதலானவர்கள்சூழ, ஔவையார் இடைக்காடர் மற்றுமுள்ளவருமிருந்து கேட்கும்படி தாமருளிய திருக்குறள் மூப்பாலைச் சங்கத்தார் நெஞ்சில் திகிலேறவும், எனையர் நெஞ்சிற் களிப்பேறவும், அரங்கேற்றி முடித்தனர். அதனைச செவியாரக்கேட்ட பாண்டிய ராஜன் முதலானவர் மிகுந்த ஆநந்தபரவசராய் நாயனுரைப் புகழ்ந்து துதித்தனர்.

அதன் பின்பு நாயனூர், இடைக்காடர் ஔவையார் முதலாயினோர் தம்மைச் சூழ்ந்துவரப், பொற்றுமரைத் தீர்த்தத்தின்கண்ணே சங்கப்பலகை மீது தமிழ்க்காசாக வீற்றிருக்கின்றவரும், திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையார் நானூற்றுக்கும் நூறு குற்றங் கூறினவரும், நம தன்பருமிய தருமி என்னும் பிராமணனுக்குப் பொற் கிழி கொடுத்தற்பொருட்டு நாம் அருளிச்செய்த

அ க வ ல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு மூளவோ நீயறியும் பூவே.

என்னுஞ் திருமுகப் பாசுரத்திற்குக் குற்றங் கூறினமையால் நாம் ஒருவித்து வாளுக அப்புலவர் சபைக்கேகி நக்கீரரைப் பார்த்து,

வெண்பா.

அங்கங் குலைய வரிவாளி னெய்பூசிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீச்சென வறுக்குங் கிரேஞ வென்கவியை
யாராயு மூள்ளத் தவன்.

என்று கேட்டபோது, நக்கீரன் நம்மை யறிந்துகொண்டு,

வெண்பா.

சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனுக் கேகுகுலம்
பங்கமறச் சொன்னற் பழுதாமே—சங்கை
யரிந்துண்டு வாழ்வோ மரனெநின் போல
விரந்துண்டு வாழ்வ திலை.

என்று சொல்ல, நாம் நமது நெற்றிக்கண்ணைக்காட்ட, அப்போதும் அஞ் சாமல் நெற்றிக்கண்ணேயன்றி உடம்பெல்லாங் கண்ணுகக் காட்டினுலுங் குற்றங் குற்றமேயென்று கூறினவரும், மற்றப் புலவர் பாடலையெல் லாம் கொள்ளாயிட்டவரும், பழுதற இலக்கண மிலக்கிய வாராய்ச்சியுள்ள வருமாகிய நக்கீரர்முதலிய புலவர்களுடைய தைரியமும் தருக்கும் அறி வுங்கலங்கிச் சோர்வடையும்படி அவர்களிடத்திற் சென்று, அவர்கள் தம்மை வினவிய அசதி வினுக்களுக்கெல்லாம் செந்தமிழ்ப்பாவா லுத்தரங் கொடுத்தனர். பின்பு சங்கத்தார் நாயனரை நோக்கி 'கீ ரென்தவூர்' என் றனர்; அதற்கவர்

எக்தவூ சென்றீ ரிருந்தவூர் கீர்கேளீ
ரந்தவூர் செய்தி யறியீரோ—வந்தவூர்
மூப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமா
யப்பாலும் பாழா யறும்

என்றற்றொடக்கத்த ஞானர்த்தமான செய்யுட்களால் அவர் வினவியவினுக் களுக்கெல்லாம் உத்தரங கொடுத்தனர். பின்பு சங்கத்தாரை நோக்கி ஒளவை யார் கைச்செய்கையாய் 'இலை என்ன' என்று வினவிய வினவிற்கு அவர்கள்

இவ்வளவு கண்ணிஞ ளிவ்வளவு சிற்றிடையா
ளிவ்வளவு பேரன்ற வின்முலேயா—ளிவ்வளவாய்க்
காமத் தலேவனேயுங் காணுத கன்றிஞ
ணுதாத நாட்டுகுறி நன்கு.

என்று விடைகூற, இது தகுதியான உத்தரமன்றென்று அக்குறிகளுக்கு ஒளவையார்

ஐயமிடினறகெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவே னும்மனத்தை யிட்டுண்மின்—றெயவ
மொருவனே யென்னு வுணரவல் லீரே
லருணினைக்கனேந்து மறும்.

என்று மொழித்தனர்; அதுகேட்டுச் சங்கத்தார் நிலைடைந்து, இவரை வெல்லுதல் முடியாதென்று துணிந்து, இடைக்காடருடனே பேச, அவர்

ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்நிற்
காக்கை யிருந்துகரஃ கஃகெனக்—காக்கைதனே
யெய்யக்கே கா லில்லாம லிச்சிச் செனவெய்தான்
வையக்கோ னுக்தம் மகன்.

என்று கூறினர். பின் சங்கத்தார் இதுபோன்ற செய்யுட்களுக்கு உத்தரங் கொடுக்கச் சக்தியில்லாமல் இவர்களே வெல்வதரிதென் றறிந்து நாணமுற்று, நாயனரைப் பார்த்து 'நீர் பாடிய குறளே நாங்க ளொப்புக்கொள்ளுவதற்கு யெமொன்றுளது; அஃதியாதெனின், நாங்களிருக்கு மிக்தப்பலகை தெள்ளிய செந்தமிழ் நூலெக்கண்டால் இடங்கொடுக்கு மாதலால், இஃ தொப்புக்கொள்ளுமாயின், எங்களுக்கெல்லாம் சம்மதமாம்' என்று சொல்ல, அவ்வாறே நாயனர் தாமருளிச்செய்த திருக்குறளை அச்சங்கப்பலகைமீது வைத்தனர். உடனே அப்பலகை தன்னிடத்திருந்த சங்கத்தார் யாவரும் பொற்றாமரைத் நீர்த்தத்தில் விழும்படி தெயவத்தன்மை பொருந்திய திருக்குறட் புத்தகத்தி னளவாகச்சுருங்கி அதற்குமாத்திரம் இடங்கொடுத்தது. அதனைக் கண்டவர் யாவரும் களிகூர்ந்தனர்; அவருட்சிலர், இதுவே தமிழ் வேதமென்றும், ஆகமமென்றும், சாஸ்திரமென்றும், மதனாலென்றும் பலவாருகச் சொல்லித் துதித்தனர். பின்பு பொற்றாமரைத நீர்த்தத்தில் விழுந்ததுமொறி வருந்திய சங்கப்புலவர் காற்பத்தொன்பதின்மருங் கரை யேறி நாயனரையும் திருக்குறளையும் புகழ்ந்து காற்பத்தொன்பது வெண் பா பாடினர். அது திருவள்ளுவமாலை எனப் பெயர் பெறும்.

மேற்படி சங்கத்தாரும் உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன் முதலானவரும் நாயனரைத் துதித்து 'இக்நூலை அகஸ்தியரும் ஒப்புக் கொள்ளின், அது நன்றும்' என, அதற்கு நாயனர் சம்மதித்ததுப் பொதிய மலைக்குப்போய் அகஸ்தியர் முதலிய முனிவர்களைக்கண்டு தாஞ்செய்த நூலைக் காண்பித்தனர். அவர்கள் அதனை கன்குணர்ந்து அடைந்த சந்தோஷம் அநந்தனுக்கும் சொல்லுதல் முடியாது. அவ்விடத்தில் கொங்கண சித்தர் தம்மை வழிபட நாயனர் அவர்க்களுக்கிரகித்து, அவ்விடத்திருந்து நீங்கி நாமெழுத்தருளியிருக்கும் ஸ்தலமகளை யெல்லாம் தரிசனஞ்செய்து கொண்டு திருமயிலைக்குச் சமீபமாக வருகையில், அப்பதியாரும் எலேல ஜனங்களும் கேள்விப்பட்டெதிர்கொண்டழைத்துவர, நாயனரும் தம் நில்லஞ் சேர்ந்து வாசுகிமாதினோடு கூடிக் களித்திருந்தனர்.

இவ்வண மிருக்கையில், ஒருவர் அவரில்லின்கட்சென்று 'இல்லறம் பெரிதோ துறவறம்பெரிதோ அடியேனுக் கனுக்கிரகஞ் செய்யவேண்டும்

என்று வெகுகாள்காத்திருந்தனர். நாயனர் அதற்குஉத்தாமொன்றுஞ்சொல் லாமல் அவரே யறிந்துபோகும்படி செய்தனர். ஒருகாள் நாயனர் தமது மனையாள் கிணற்றில் சலந்தூக்கிக்கொண் டிருக்கையில் அழைக்கப் பாதிக் கிணற்றனலில் தூக்கின குடத்தை நிற்கவிட்டு அவ்வம்மையார்வந்ததையும், ஒருநாள் அந்த அம்மையார் நாயனர்க்குப் பழையது பரிமாறிநிற்கையில் 'இதுசுடுகின்றது' என அவ்வம்மையார் சீக்கிரத்தில் விசிறிகொண்டுவிசிறி யதையும், மற்றொருநாள் பகலில் நாயனர் நெய்யும்போது கையிலிருந்து குழல் தவறி வீழ்ந்ததை யெடுக்க மனையாளைநோக்கித் ' தீபங்கொண் டுவா ' என, அவ்வம்மையார் தீபங்கொண்டுவந்ததையும் வந்திருந்தவர் கண்டு கற்புடைய மனையாள் வாய்க்கில் இல்லறமேபெரிது, இல்லேயேல் துறவறமே பெரிது என்றெண்ணிக்கொண்டு நாயனரை வணங்கிப் போய்விட்டனர்.

இவ்வாறு யாவருங்காண நாயனரும் அவாதம்மனேவியாரும் அருமை யாக இல்லறம் நடாத்திவருங் காலத்தில்,வாசுகியம்மையார முத்தியடையும் போது நாயனர் திருமுகத்தைப்பார்த்தனர். நாயனர் ' யாதுவிரும்புகின் றாய்' என, அவ்வம்மையார் ' என்னை மணஞ்செய்தவன்று தொடங்கித் தேவரீர்க்கு அன்னம் பரிமாறுகையில் தேவரீர் சிறுபாத்திரத்தில் சலமும் ஊசியும்சமீபத்தில் வையென்று கட்டளேயிட்டதன் காரணம் இன்று வரை யில் அடியேற்குத் தெரியவில்லே' என்று விண்ணப்பஞ்செய்தனர். நாயனர் ' அன்னம் புறத்திற்கிதறுமாயின், அதனை யெடுத்துப் பரிசுத்தஞ் செய்வ தற்கு' என்று கூறினர். அதனைக்கேட்டவர் உடனே முத்தியடைந்தனர். அப்போது நாயனர்

அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவறுத பாவா—யடிவருடிப்
பின்றாங்கி முன்னெழுஉம் பேதையே போதியோ
வென்றாங்கு மென்க ணிரா.

என்றுரைத்து அவ்வம்மையார் திருமேனியைச் சமாதிபண்ணினர். பின்பு நாயனர் மகாவம்புதங்களைச் செய்துகொண்டிருந்து ஏலேலசிங்கர் முதலிய சீடர்களுக்குப் பூரணுக்கிரகஞ்செய்து ஏலேலசிங்கரைப் பார்த்து, ' நமக் குப் பரிபூரணதசை நேரிட்டிருப்பதால், நமது சரீரத்தைப் புரிகட்டி இழுத் தூர்க்குப் புறத்திற்போட்டுவிடு' என்று கட்டளேயிட்டு கிஷ்கடை கூடிப்பரி பூரணமானவர்போலிருந்தனர். அதுகண்டு, ஏலேலசிங்கர் அவரைப் பொற் பெட்டியில்வைத் தடக்கஞ்செய்ய யத்தனித்தனர். அதுகண்டு நாயனர் கண்விழித்துப் பார்த்து, ' அப்பா! நான் சொன்னசொல்லைக்கடவாதே ' என்று சொல்லி உடனே விதேகமுத்தி யடைந்தனர். ஏலேலசிங்கர் நாய னர் கட்டளேயை நிறைவேற்றுகையில் அவரது சரீரப் பரிசமடைந்த பிராணிகளெல்லாம் பொன்னிறமடைந்து சுவர்க்கம் பெற்றன ' என்று உமாதேவியார்க்குப் பரமே சுரூபாளுவாகிய சிவபெருமான் திருவாய்மலர்ந் தருளினர்.

திருவள்ளுவர் சரித்திரம் முற்றிற்று.

திருவள்ளுவர் வரலாறு.

நேரிசை ஆசிரியப்பா.

நயமிகு புகழ்ச்சோ ணுட்டுளோ ரந்தண
னுயர்மணிக் கிழத்தியங் குயிர்த்தவோர் மைந்தற்
கியாணர்சால் பகவ னெனப்பெய ரீந்துபின்
கோணிலை நாணிலை குறித்தசா தகத்தாற்
புன்குல மாதுதா ளுணருமென் றேர்ந்திஃ
தென்குலக் கிழுக்கதா வெனவுளங் கழுமிய
பீழையி னீடுநீ இப்பின்பொரு சிலநாள்
மாழையுண் கண்ணியை மதலையைத் தணந்து
கோணீர்க் கங்கையிற் குடைகுவா னெனினன்
பேணுமச் சிறுவனும் பிரம சரியமேற்
றேவா வருமறை யோதிநூ லுணர்ச்சியின்
மூவா நலத்தினீம் மூவாட் டையனு
யெந்தைநிற் பிரிதரற் கேதுவென் னெனத்தாய்
புந்திநைந் துரைசெயப் பொருண்வட புலந்துரீ இப்
போதரு நெறியிடைப் புலிமகள் கருவூ
ராதியென் பெயரின ளரும்பெறற் செவ்வியள்
பொற்கொடி போன்றெதிர் புகமருண் டினிய
சொற்கொடு புதுநலந் தோய்ந்துணர்ந் ததன்பி
னிச்செய றகாதென வெண்ணிவிட் டேகுழி
மெய்ச்செயற் கற்பினள் விடாதுடன் றொடரக்
கண்டுருத் தொருசிலை கைக்கொடு நுதன்மிசைப்
புண்டர வெறிந்தவட் போக்குபு விரைந்துபோய்த்
திகழ்பா சேதி தீரமே லுளபதி
யகமெலாந் தேடியு மத்தணைக் கண்டிலா
தரந்தையிற் றனதுகா டடைகுவான் மீண்டு
வரும்பொழு திரவவன் மருவறச் சாலையிற்
றற்பிரி வாற்றுத் தளர்ச்சியோ டேர்தாறு
மற்பக னேடுறு மாதிதற் காணு
வுற்றடி வணக்கலு மூயர்மறை யோனவ
ணெற்றியிற் சிலவடு கோரி னேக்கிமுன்
பிணங்குமா தெனத்தெளிந் திவண்வர வென்னென
வணங்குநிற் பிரிந்துறி ஞவிவா மேனென
வீன்றிடு மகவெலா மீன்றுழி யேவிடுத்

தூன்றிய துணிபொடு முடன்வர வல்லியேல்
வருகென வண்ணலம் மடவர லியைதலா
லிருவருந் தலந்தொறு மியங்குகா லங்களி
லுப்பை யெளவை யுறுவை வள்ளியென்
றிப்புவி போற்றுமீ ரிருவர் மகளிரு
மன்னுசீ ரதிகமான் வள்ளுவர் கபில
ரென்னு மாடவ ரிம்மூ வரும்பிறக்
தெவ்வத் தலமெவ ரெவர்க்குப் பிறப்பிட
மவ்வத் தலங்களி னவரவர் வளர்ந்தனர்
செப்புமவ் வெழுவருட் டிருவள் ளுவர்தா
மைப்புய லணிபொழின் மயிலாப் பூரில
வள்ளுவர் மனையிடை வளர்ந்தன ராங்கவ
ருள்ளுமுத் தேவரு ளொருவ ராகிய
சதுர்முகன் றிருவவ தார மாகலின்
முதுமறை யாகம முத்தமிழ்க் கல்பிற
வையந் திரிபிலா தணைத்துணர்ந் குணர்ந்து
தெய்வப் புலமையிற் சிறந்தான் குருவா
யற்புத நீறணிந் தைந்தெழுத் தியம்பித்
தற்பர லிங்கமெய் தரித்தருள் செயப்பெ,ரீஇ
வலங்கொள்பூ வையரிர் மாபினும் றொண்குண
மிலங்குறு வாசுகி யெனும்பெயர்த் தையலை
மணந்தக னமர்ந்து மகிழ்ந்துற வறத்தரும்
வணங்குற வில்லற வாழ்வினும் றருளா
லெண்ணி னுயர்வுறு மினித்தமிழ் மொழியென
முன்னுறு பெருவட மொழியழுக் காறுற
மலைதரும் பற்பல மதத்தரும் வியந்து
தலைமிசைக் கொண்டிது தக்கதென் றேத்த
விம்மை மறுமையீ டெய்தவிந் நூலொன்
றம்ம வமைபுமென் றறிஞருள் ளுவப்ப
வெங்கட் கிணையிலை யெனத்தருக் குறுகடைச்
சங்கப் புலவரத் தருக்குளத் தொழிய
வீரிரு வேதமே யெழுவர் யாகிய
சீரிய விழுமிய செவ்விய நூல்களிற்
சிறந்த பொருளெலாஞ் செந்தமிழ்க் குறளி
லறம்பொருள் காமமென் றுகுமுப் பாலாற்
கூறின ரொருநூல் கொண்டுளார்
தேறினர் பயனெலாஞ் சேர்ந்துயாம் குவமே.

நாயனூர் சொரூபஸ்துதி.

திருமுடி மிசையார் மயிர்முடி யழகுந் தீர்க்கபுண் டரதூத லழகும்-திரண்மணி புயத்தை வருஞ்செவி யழகுங திகழ்கெடுங் காடியி னழகும், அருமுடி செபமா லிகைசின்முத் திரைசே சபய நேர் வலக்கையி னழகும் - அமிழ்தறழ் தமிழ்மா மறைமுறை வரத மமைதரு மிடக்கையி னழகும், கருமுடி யோகப் பட்டையி னழகுங் கடிகொள்கீட் கோவண வழகும்-கழல்களிற் றிகிரி வலீ வரை யழகுங் கமலநல் லாதனத் தழகும், தருமுடிமுகிழ்மெய் மயி லியி னிடைமா தவர்கள்கண் டிறைஞ்சவீற் றிருக்கும் - தழைபுக ழ்த் திருவள் ளுவரெனு நாம சற்குரு சரணமே சரணம்.

திருவள்ளுவர் சரித்திரத்தைப் பற்றிய வேறு குறிப்புக்கள்.

ஒருநாள் சாயங்காலம் திருவள்ளுவநாயனர் தாம் நெய்த அடையை விற்றற்குக் கடைத்தெருவிற்குப்போய் அவ்வாடையைக் கையிற் பிடித் துக்கொண்டு நிற்கையில், இவரது திருக்குறளைப்படித்த வொரு சிறுவன் இவரிடத்தஇவர் கூறியதாலுக்கேற்றபடி யொழுக்கமிருக்கின்றதாவென்று ஆராயவெண்ணி, நாயனரிடத்தசென்று "இவ்வாடையின் விலையென் ன" என்று கேட்க, அவர் "ஒரு பணம்" என்ன, அச்சிறுவன் அதனை வாங்கிக் குறுக்கே கிழித்து "இப்பாதியின் விலையென்ன" என்று வினவ, அதற்கு அவர் "அரைப்பணம்" என்ன, அவன் அப்பாதியையும் பாதியாகக் கிழித்து "இதன்விலையென்ன" என்று கேட்க, அவர் "காற்பணம்" என்று கூறினர். அதுகேட்டு அசிறுவன் நாயனரது பொறுமையைக் கண்டு மகிழ்ந்து விலகிப்போய் இன்னும் இவரது பொறு மையைப் பரிசோதிக்கவேண்டுமென்றெண்ணி, மறுநாட் காலையில் அவ ரது இல்லின்கட்சென்று வாசலியாரைச் சண்டைக்கிழுத்துத் தொந்தரவு செய்ய வாரம்பித்தான். அதனைக்கண்டு நாயனர் நெய்தற்றொழிலைவிட் டெழுந்து போய் அச்சிறுவனை யடைப்புடைத்தனர். புடையுண்ட அச் சிறுவன் நாயனரை நோக்கி "ஐயரே! நீர் 'அகழ்வாரைத் தாங்கு நிலம் போலத் தம்மைஇகழ்வார்ப் பொறுத்த றலே'என்று கூறிய குறள் பயனற்ற தாயிற்றே" என்றனன். அதற்கு நாயனர் "நீ திருக்குறளை முற்றும் படிக்கவில்லைபோலும்! திருக்குறளில் 'செய்தக்க வல்ல செயற்கெடுஞ் செய்தக்க, செய்யாமை யாணுக கெடும்' என்னும் செய்யுளைப் படித்திருந் தால் இக்காரியஞ் செய்யமாட்டாய்" என்று கூற, அதற்கு அச்சிறுவன் திருக்குறளில் சமயோசிதமாகக் கூறவேண்டிய விஷயமனைத்தும் மாறு பாடின்றி யமைந்திருத்தலையறியாது வீணே பெரியாரைப் பழித்த பாவத் தினாலாதலுமென்று மனம்வருந்தி நாயனரிடத்தில் மன்னிப்புக்கேட் டுக்கொண்டு விடைபெற்றுச்சென்றனன் என்பதும்,

நாயனாரில்லாத வேளையில் இவரில்லின்கட் சென்ற ஒருத்தவ சித்தர் நாயனாரது இல் லிலமான குடிசையாயிருத்தலேக்கண்டு, தமது தவமகிமை யால் அவ்விலேலை ஆராஜ மாளிகைபோலாக்கிச் சென்றனர். அவர் சென்ற பின்னர் நாயனார் வந்து பார்த்து "ஆட் கொல்லியுள்ளவிடத்து நாமிருக்க லாகாது" என்று கூறி மனேவியை யழைத்துக்கொண்டு சென்று வேறோ ரிடத்து ஒரு சிறு குடிசை கட்டி அதிற் குடிபுகுந்திருந்தனர். சிலநாள் கழிந்தது அச்சித்தர் நாயனாரைத் தரிசிக்கவந்து தாமமைத்துத்தந்த மாளிகை யிற் காணாது விசாரித்துச்சென்று, மற்றோர் குடிசையிலிருக்கக்கண்டு, அவருடன் தனிமையாய்த் தத்துவங்களி னிலேமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், அவர் பெய்த மூத்திரம் பட்டகலொன்று மாற்றுயர்ந்த பொன்னனதைக்கண்டு மனமுடைந்து, நம்மினுமுயர்ந்த சித்திபெற் றுள்ள இப்பெரியார்க்கு நாம் மாளிகையமைத்துத்தருதல் அவமான காரிய மாமென்றெண்ணி, நாயனாரிடத்து யான்செய்த காரியத்தை மன்னித்தல் வேண்டுமென்று மன்னிப்புக்கேட்டுக்கொண்டு சென்றனர் என்பதும்,

ஒருநாள் நாயனார் தமது மனேவியார் ஆபரணங்களின்மேல் ஆவல் கொண்டிருப்பதையறிந்து அவரது வியர்வை நீரால் தூளையில் வெந்து கொண்டிருந்த பாதரிரங்களே யெல்லாம் பொற்பாத்திரமாக்கிக் காட்டி, "உன தடம்பின் வியர்வை நீரே மட்பாத்திரங்களே யெல்லாம் பொற் பாத்திரங்களாக்கும் தன்மையதாயிருக்க, நீ ஆபரணத்திற் காசைகொள்ளு தல் பயனற்றகாரிய மாம்" என்றுகூறி, அவ்வம்மையாருக்குப் பொருளு டையார்க்குவரும் ஆபத்தினே விரித்துபதேசித்தனர்; அது முதற்கொண்டு "பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்ப்பதேன்" என்னும் பழ மொழி வழங்கிவருகின்றது என்பதும்,

ஒளவையாரும் இடைக்காடரும் நாயனாரைச் சந்தித்த போது அவர் கள் அவரை நோக்கி "நீரியற்றிய குறளெத்தன்மைத்து" என்றவிஞவ, அதற்கவர் "குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை, சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" என்று விடை பகர்ந்தனர்; அதுகேட்ட ஒள வையாரும் இடைக்காடரும் முறையே "ஓம்பொருளு நாற்பொருளு மூப் பொருளிற் பெய்தமைதத, செம்பொருளா யெம்மறைக்குஞ் சேட்பொரு ளாத் - தண்குருகூர்ச், சேய்மொழிய தென்பர் சிலரியா னிவவுலகின், தாய்மொழிய தென்பேன் றகைந்து" என்றும், "சேய்மொழியோ தாய் மொழியோ செப்பி லிரண்டுமொன்றவு, வாய்மொழியை யாரு மறை யென்ப - வாய்மொழிபோ, லாய்மொழிகள் சால வனவெனினு மம்மொழி யீன், சாய்மொழியென் பேன்யான் றகைந்து" என்றும் கூறினரென்ப தும், பிறவும் கர்ணபரம்பரையாக வழங்கிவருகின்றன.

ஒருசாரார் நாயனார் ஸ்மார்த்தப் பிராமணரென்றும், அவர் வாக்கே அதற்குச் சான்றுமென்றும், யோகானுபவ முடைய அவர் இன்னுமுயிரோ டிருக்கின்றாரென்றும், வேளாளர் வீட்டில் வளர்ந்தார், பறையர் வீட் டில் வளர்ந்தார், வள்ளுவர் வீட்டில் வளர்ந்தாரென்ற கூறுதல் கட்டுக்கதை யாமென்றும், வள்ளுவனர் என்னும் பெயர் சாதிபற்றிய பெயரன்றென் றும், பிறவும் கூறுவர்.

திருவள்ளுவமாலையில் ஆசிரியனின்பெயர், வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, முதலியபொருள், கேட்போர், பயன், காலம், களம், காணமென்னும் பதினொன்றும் கன்குவிளங்கிக் கிடத்தலின், அவற்றைவிரிக்காது விட்டனம்.

திருவள்ளுவனுர் திருக்குறளேயன்றி ஞானவெட்டி, திருவள்ளுவர் வண்ணுறை (இதனைவத்தியதூல்),திருவள்ளுவமாயிரம் [இது சோதிடநூல்] என்றற்றொடக்கத்தனவற்றையும் இயற்றினுனென்று கூறுவாருமுண்டு. திருக்குறளுக்கும் ஞானவெட்டி முதலிய நூற்களுக்குமுள்ள வேற்றுமை மின்னலுக்கும் மின்மினிப்பூச்சிக்குமுள்ள வேற்றுமைபோலிருத்தலின், அஃதாராய்ச்சியில்லாதார் கூற்றுமெனவிடுக்க.

கடைச்சங்கத்து வழங்கிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகைநூல்களுளொன்றன பதினெண்கீழ்க் கணக்கிற் சேர்ந்தநூல்களுள் திருக்குறளும் ஒன்றுமென்பர் சிலர்; திருக்குறளாசிரியரின் கடைச்சங்கமிருந்து விட்டமையால், அதன்கண் வழங்கிய பதினெண் கீழ்க்கணக்கில் திருக்குறள் எப்படிசேரும்? அதுகூடாதென்பர் சிலர்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கென்பவை இன்னின்ன வென்பதை,

நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறு நூறு
புறத்த பதிற்றுப்பத் துயர்ந்த பரிபாட லை
கற்றறிந்தா ரேத்துங் கலியே யகமபுறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை
முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலெடுத் நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.
நாலடி நான்முணி நானூற்ப தைந்திணை மு
ப்பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மின்னிலைசொல் காஞ்சியுட னேலா தி யென்பவே
கைந்நிலைய வரங்கீழ்க் கணக்கு

என்னும் வெண்பாக்களினுலறிக.

நான்கென்ன மூப்பால் என்பது திருக்குறளாகாதெனல் திருவள்ளுவ
மாலையைத்தழுவிப்பார்த்தால் விளங்குவதாம்

காலம்.

திருவள்ளுவனுரது காலம் மதுரையில் கடைச்சங்க மிருந்தகால
மாகிய கி.பி.முதல் வரையாகவே வெளியாவதால், இவ்வளவுச் சற்

(3) தேவர்.

தேவர்—தெய்வத்தன்மையுடையவர். சான்றோர் தெய்வத்தன்மையாவது பிறபுலவர் எடுத்துச் சொல்லுதற்கரிய முக்கிய விஷயங்களே யெல்லாம் மக்களெனிதி லறியுமாறு தொகுத்துச் சொல்லுதலாம். உறையூர் முதுகூற்றனார் " தேவிற்பிறக்த நிருவள்ளுவர் " என்று கூறியதிங் குணர்தற்பாலதாம். இங்ஙனமன்றி, தேவர் என்பதற்கு மற்றப் புலவரினும் மிகுதியான பிரகாசத்தினை (மிகுபுகழை) யுடையவரென்று பொருள் கூறுதலும்பொருந்தும். தேவர் என்பதன் பகுதியான திவ் என்பதற்குப் பிரகாசம் என்பது பொருளாம்.

(4) முதற்பாவலர்.

முதற்பாவலர்—முதன்மையாகிய பாவலர். முதன்மை—எப்பாவலரினுஞ் சிறந்து நிற்றல்; பாவலர்—பாவியற்றுவதில் வன்மையுடையார். பா—பாட்டு. இங்ஙனமன்றி, பாக்களில் முதன்மையுடைய வெண்பாக்களில் முதன்மையாயுள்ள குறள்வெண்பாவினால் சொற்சுருங்கிப் பொருள் விரிக்துநிற்க நூலியற்றினமைபற்றி இவ்வாசிரியர்க்கு முதற்பாவலர் என்று பெயருண்டாயிற்றென்று கூறினுமொக்கும். ஆசிரியர் கல்லாடனார் "முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா, ரெப்பா வலரினு மில்" என்றும், சேரைதையார் " தப்பா முதற்பாவாற் ருமாண்ட பாடலினும், முப்பாலி னும்பான் மொழிந்தவர், ×× தெய்வத் திருவள் ளுவர் " என்றும் கூறியமையிற்குக் கவனித்தற் பாலதாம்.

பாக்கள் நான்கு. அவை:—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன.

வெண்பா ஏழுவகையாம். அவை:—குறள்வெண்பா, சிரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா, சிரிசைச் சிந்தியல்வெண்பா, இன்னிசைச் சிந்தியல்வெண்பா, சவலைவெண்பா என்பன.

(5) தெய்வப்புலவர்.

தெய்வப்புலவர் - தெய்வத்தன்மை பொருந்திய அறிவுடையவர். புலமை-கல்வியறிவு தெய்வப்புலமை-பிறர்மாட் டோதுதற் காரணமாகப் புலமை பெறுது இயல்பாகவே புலமை நிரம்பப் பெறுதல். இங்ஙனமன்றி, அசரீரி (உடலுள்)-காமகன் என்னுந் தெய்வங்களால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட புலமையுடையவரானதினாலே இவ்வாசிரியர் தெய்வப்புலவரென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டாரெனினு மொக்கும். " சிறப்பி னுயர் வெய்தினேன் வெலிக்கு " என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் சேனாவரையர் " சிறப்பாவது மன்னர் முதலாயினோரால் பெரும்பான்மை " என்று கூறி, உதாரணங்களுள் " தெய்வப்புலவன் திருவள்ளுவன் " என்றும் எடுத்துக்காட்டினர். திருவள்ளுவர்க்குத் தெய்வப்புலவர் என்பது வெளிப்

யன்றே அசரீரி " திருத்தகு தெய்வத் திருவள் ளுவனோ, ருத்தகு சத் பலகை மொக்க - விருக்க, உருத்திர சன்மர்" என்று கூறிற்று.

(6) நான்முகனார்.

நான்முகனார்-நான்முகனது அம்சமாகப் பிறந்தவர். நான்முகன் - பிரமன்; அம்சம்-கூறு. ஆரியபாஷை வாயிலாக வேதத்தை வெளியிட்டருளிய நான்முகனே திருவள்ளுவராகப் பிறந்து தமிழ்ப்பாஷை வாயிலாக வேதத்தி னருங்கருத்துக்களே வெளியிட்டருளினமைபற்றி, இவ்வாசிரியர் நான்முகனென்றசொல்லப்பட்டார். உக்கிரப்பெருவழுதியார் "நான்மறை யின் மெய்ப்பொருளே முப்பொருளா நான்முகத்தோன், ருன்மறைந்து வள்ளுவனுய்த் தந்தளைத்த-தூன்முறையை " என்றும், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் " மெய்யாய வேதப் பொருள்வினக்ப்-பொய் யாத, தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனுகி, யந்தா மரைமே லயன் " என்றும் கூறியுள்ளவை யிக்குக் கவனித்தற்பாலனவாம்

(7) மாதாநுபங்கி.

மாதாநுபங்கி - தருக்கொழிதலுடையான் தருக்கு - அகங்காரித்தொழுதல். மாதாநுபங்கி என்பது மாதம், அநுபங்கியென்னும் இருமொழியால்ாயதொடர்மொழி. மாதம் - தருக்கு; அநு - உபசர்க்கம்; பங்கி – பங்கஞ்செய்தவன். இங்ஙனமன்றி, மாதாநுபங்கி யென்பதற்கு மாதாவைப் போலும் ஒழுக்கினன் என்று பொருள் கூறுதலுமுண்டு. தாய் தனது பிள்ளையினிடத்து அன்புசெலுத்துதல் போன்று இவர் உலகத்தாரிடத்து அருள் செலுத்துபவர் என்பது இதன் திரண்டபொருளாம். நல்கூர் வேள்வியார் "இப்பக்கம், மாதானு பங்கி மறுவில் புலச்செங்கப், போதார் புனற் கூடற் கச்சு" என்று கூறியதிற் குணர்தற்பாலதாம்.

(8) செங்காப்போதார்.

செங்காப்போதார் - செம்மைவாய்ந்த காவாகிய மலரையுடையார்.செம்மை - சொல்லின்கண் கோணுதலின்மை; அஃதாவது மனத்தின்கண் கோணுதலின்றி அறங்கிடந்தவாறு சொல்லுதல். காயனுர் தாங்கூறுவதை " நன்றென,எப்பாவலரும்"இயையுமாறுதேன்போலினிக்கக்கூறுதல்பற்றி அவரது காவானது தேனிருத்தற்கிடனுன பூவாகவுருவகிக்கப்பட்டது. நமேகள் " பின், வள்ளுவன் வாயதென் வாகசு " என்று கூறியவரிமைபற்றித் திருவள்ளுவரது காவை (வெண்டாமரைப்)பூவாக்கிச் செங்காப்போதார் என்று அவர் கூறப்பட்டாரெனினுமமையும். நல்கூர்வேள்வியார் " செங் காய், போதார் புனற்கூடற் கச்சு " என்று கூறியது மறிக.

(9) பெருநாவலர்.

பெருநாவலர் - பெருமை பொருந்திய நாவலர். பெருமை - பிறர்களில் [illegible] நாவன்மையுடையவர். நாவன்மை - சட்டுமென்றே

வன்மை. இது "கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" என்னும் குறளாலும், "இதனுற் சொல்லினதிலக் கணங் கூறப்பட்டது" என்னுமதனுரையாலும் நன்குவிளக்கும். அரிசிற் பூர் "பாத்த பொருளெல்லாம் பாரிய வேறு, தெரித்து நிறந்தொறுஞ் சேரச் - சுருங்கிய, சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல், வல்லாரார் வள்ளுவரல் லால்' என்றும், கௌணியனுர் "நாப்புலமை வள் ளுவனுர்' என்றும் கூறியன விக்குக்கவனித்தற்பாலனவாம்

(10) பொய்யில்புலவர்.

பொய்யில் புலவர் - பொய்ம்மையின்றிய புலமையுடையார். எனவே, திருவள்ளுவர் ஐயத்திரிபின்றி யுள்ளதையுள்ளபடி யுலகத்தார்க்குணர்த்தின ரென்பதாயிற்று. ஈண்டுப்பொய்ம்மை - ஐயத்திரிபு பராரா "வாலறி' வின் வள்ளுவரும்" என்றும், காரிக்கண்ணனுர் 'மெய்யாய வேதப் பொ ருள்விளக்கப் - பொய்யாது, தந்தா னுலகிற்கு" என்றும், தேவீக்குடிக் கோனுர் "பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய யல்லாத, மெய்ப் பால மெய்யாய் வினங்கினவே - முப்பாலிற், றெய்வத் திருவன் ளுவர்செப் பியகுறளால், வையத்து வாழ்வா மனத்து" என்றும் கூறியன விங்குணர் தற்பாலனவாம்

இந்நூலின் திருநாமங்கள் 10.

(1) திருக்குறன்	(6) பொய்யாமொழி
(2) முப்பால்	(7) வாயுறைவாழ்த்து
(3) உததாரவேதம்	(8) தமிழ்மறை
(4) தெபவனூல்	(9) பொதுமறை
(5) திருவள்ளுவர்	(10) திருவள்ளுவப்பயன்

இவற்றின் பொருள் வருமாறு:—

(1) திருக்குறள்.

திருக்குறன் - சிறந்த குறள்வெண்பாவினுலாகியநூல். திருவென் னும் அடையடுத்த (குறமைப்பண்பின் விகாரமாகிய) குறள் என்னும் பண் புப் பெயர் அதனையுடைய வெண்பாவிற்காதலால், அடையடுத்த பண்பாகு பெயராம்; அது தன்னுற்சமைந்த நூலுக்காதலால், கருவியாகுபெயராம். ஆகவே, இஃதிருமடியாகு பெயராமென்க.

(2) முப்பால்.

முப்பால் - அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையுடையதால். பால் - பகுப்பு. முப்பாலென்பது மூன் றுவிரும்புடைய தென்ப புன்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மை [illegible] வரலாற்றுரி பெற்றின்றது.

(3) உத்தரவேதம்.

உத்தரவேதம் - பின்ரேன்றியவேதம். உத்தரம் - பின்; வேதம் - (உண்மைப்பொருளை) அறிவிப்பது திருக்குறள் வேதபபொருளைத் தன்னகத்தடக்கிய பின்னெழுந்தமைபற்றி உத்தரவேதம் என்று கூறபபட்டது. உத்தரம் என்னுமடையடுத்த வேதமென்னும் காரியபபெயர் அதனை யுணர்த்துதற்குக கருவியாகிய நூலிற்காதலால், அடையடுத்த காரியவாகுபெயராம். இது தானியாகுபெயரென்று கூறற்குமியையும்

(4) தெய்வநூல்.

தெய்வநூல்-தெய்வத்தன்மையமைந்த சாஸ்திரம். தெய்வத்தன்மை - ஈந்நூலகத்துமில்லாத மாட்சிமையை யுடையதாயிருத்தல். இது தெய்வத்தினருளால் தோன்றிய நூலெனினும் ஒக்கும் நூல்-உவமையாகுபெயர். இதன் றன்மையைப் " பஞ்சிதன் சொலலாப் பனுவ லிழையாகச், செஞ் சொற் புலவனே சேயிழையா-வெஞ்சாத,கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியு மாறு" என்னும வெண்பாவினுலறிக.

(5) திருவள்ளுவா.

திருவள்ளுவா-திருவள்ளுவராலருளிச் செய்யப்பட்டநூல். திருவள்ளுவர் என்னுங கருத்தாவின் பெயர அவராலருளிச் செய்யப்பட்ட நூலுக்காதலால், கருததாவாகுபெயராம.

(6) பொயயாமொழி.

பொய்யாமொழி–பொய்ம்மைகலவாத மொழியினுலாகியநூல்; உள்ளதையுள்ளவாறணாததும்நூலென்றவாறும் பொய்யா என்னுமடையடுத்த மொழியெனும கருவியின்பெயர் அதன் காரியமாகிய நூலுக்காதலால், அடையடுத்த கருவியாகுபெயராம சினைச்சிறப்புப்பெயரே சினையாகுபெயராய் வருமென்னும நியதியறியாதார இதனை அடையடுத்த சினையாகுபெயரென்று கூறுவா. பொயயாமொழி யென்பதனை அன்மொழித்தொகையென்று கூறுதலுமுண்டு; பொய்யாமொழி யென்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெசசத தொடராகலின், அது பொருந்தாதென்க.

(7) வாயுறைவாழ்த்து.

வாயுறைவாழ்த்த-உடற்குறுதியாயவற்றைச்செய்யும்மருந்துபோன்று உயிர்க்குறுதியாய வற்றைக் கூறும் நூல். வாயுறை-சொன்மருந்து; வாழ்த்து-வாழச்செய்தல். எனவே, இது மக்களுக்கு நீதிகளை வற்புறுத்திக் கூறுவதென்றுயிற்று; ஆகவே, மக்களுக்கு மருந்து போல்வ தென்றுயிற்று. கௌணியுரை "சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்கினிய, வந்த வினுவி வாழ்த்துமாமருந்து" என்றனர். " வாயுறை வாழ்த்தே வயின் சாடின்,

வெம்புண் டபோல் வெஞ்சொற், றூங்குத லின்றி வழீஇனி பயக்குமெ
ன், றேம்படைக் கினவியின் வாயுறத் தற்றே " என்னுக் தொல்காப்பியச்
சூத்திரமும்,"மூற்பருவத்துக் கைத்தும் பிற்பருவத்து உறுநிபயக்கும் வேம்
புவ்வேம்போல் வெய்யவாய் இன்சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்கு
மெனக்கருதிப் பாதுகாத்துக் கொக்குங் கினப்பிஞன்மெய்யாகஅறிவுறுத்த
வது வாயுறைவாழ்த்தெனப்படும்" என்று நச்சினர்க்கினியர் கூறிய அத
னுரையு மிங்குக் கவனித்தற்பாலனவாம்

(8) தமிழ்மறை.

தமிழ்மறை-தமிழ்வேதம். மறை - இரகசியப்பொருளைக் கூறுவது. பிரத்தியட்சத்தாலும் அநுமானத்தாலும் எவரும் எளிதிலறிய முடியாத பொருளைத் தெளிவாய்க் காட்டுஞ் சொன்மயக் கருவியாயுள்ளது வேதமாக லின், அது தமிழில் மறையென்று கூறப்பட்டது. தமிழ்மறை - தமிழிற் கூறிய வேதம் என்று விரியும். செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனூர் " வே தப் பொருளை வீரகால் விரித்துலகோ, சோதத் தமிழா லுரைசெய்தார் " என்றும், வண்ணக்கஞ்சாத்தனூர் " ஆரியம், வேத முடைததுத் தமிழ்நிரு வள்ளுவனு, சோது குறட்பா வுடைத்து"என்றும் கூறியவை யிங்குணர்தற் பாலனவாம்.


(9) பொதுமறை.

பொதுமறை-பொதுவாகிய வேதம். பொதுமை-நான்கு வருணத் தார்க்கு முரிமையுடையதாதல். அந்தணர் அரசர் வைசியரென்னுக் தலை சர் மூவரும் ஒதுதற்குரிய சிறப்பியலுடைய வேதம்போலாகாது, நான்கு வருணத்தாரும் ஒதுதற்குரிய பொதுவியலுடைமை பற்றித் திருக்குறள் பொதுமறை என்று கூறப்பட்டது வெள்ளிவீதியார் " செய்யா மொழிக் குந் திருவன் ளுவர்மொழிந்த, பொய்யா மொழிக்கும் பொருளொன்றே— செய்யா, வதற்குரிய ரந்தணரே யாராயினேனை,யிதற்குரிய ரல்லாதா ரில்" என்று கூறியதிங்குணர்தற்பாலதாம்

(10) திருவள்ளுவப்பயன்.

திருவள்ளுவப்பயன்-திருவள்ளுவரா லருளிச்செய்யப்பட்ட பயனிலைத்த நூல். இங்குப்பயன்-அறம், பொருள், இன்பம், வீடென்பனவற்றை யடை யச்செய்தல். " அறம்பொரு ளின்பம்வீ டடைதலுற் பயனே" என்பது சூத்திரம். திருவன்ளுவப்பயனென்பது மூன்றும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த வன்மொழித்தொகைக் காரணக்குறிப்பெயராம். கொடி ஞாழன் மாணிபூதனூர் " அறனறிந்தேமன்ற பொருளறிந்தே மின்பின், றிறனறிந்தேம் வீடு தெளிந்தே-மறனெறிந்த, வானார் நெமோற வன்ளு வனூர் தம்வாயாற், கேளா தனவெல்லாங் கேட்டு " என்று கூறினமை காண்க. இப்பெயர்களேயன்றி, இதற்குப் "பொருளுரை" "முதுமொழி" "பாலி முறை" என்னும் பெயர்களுமுண்டு.

பரிமேலழகர் சரித்திரம்.



திருக்குறளுக்கு உரை யியற்றினவர் பதின்மர். அவர் * தருமர், மணக்குடவர், தாமத்தர், † நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமான், காளிங்கர் என்பவராவர். அப்பதின்மருள் பரிமேலழகரியற்றியுரையே சிறந்த வரையென்று போற்றப்பட்டு வருதல்,

" திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தந்
தருத்தமைதி தானே கருதி—யிரித்துரைத்தான்
பன்னு தமிழ்த்தேர் பரிமே லழகனெனு
மன்னுமுயர் நாமன் வகுத்து."

" பாலெல்லா நல்லாவின் பாலா மோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலா மோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி."

என்னும் பரிமேலழக ருரைச்சிறப்புப் பாயிரத்தால் வெள்ளிடை மலைபோல் விளங்குவதாம்.

பரிமேலழகர் திருக்குறளிற்கே யன்றிப் பத்துப் பாட்டினுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படைக்கும் எட்டுத் தொகையினுள் ஒன்றாகிய பரிபாடலுக்கும் உரை யியற்றினரென்றும் சொல்லப்படுகின்றது. பரிமேலழகர் திருக்குறளிற்கே யன்றிப் பிறிதொன்றற்கும் உரையியற்றவில்லையென்றும், அவர் அவ்விரண்டற்கு முரை யியற்றினரென்று கூறுதல் ஆசாக்கோவைக்கும் திருக்கோவையார்க்கும் நச்சினார்க்கினியர் உரையியற்றினரென்று கூறுவதுபோன்ற பொய்ம்மொழியாமென்றும் கூறுவாருமுண்டு. திருவள்ளுவனாயனரே பரிமேலழகராக அவதரித்துத் தாமருளிச்செய்த திருக்

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர், பரிதி பரிமேலழகர் - திருமலையர், மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற், கெல்லையுரை செய்தாரிவர்" என்னும் வெண்பாவினால் திருக்குறளி னுரையாசிரியர் பதின்மரென்பது வெளியாகின்றது.

† நச்சர் என்பார் நச்சினார்க்கினியரல்லர். நச்சினார்க்கினியர் திருக்குறளுக் குரையியற்றினரில்லை. அவர் உரையிட்ட நூல்கள் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி, குறுந்தொகையுள் இருபது செய்யுள் என்பனவேயாம். இது "பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட்டினிக்கலியு, மாரக் குறுந்தொகையு மேந்தான்குஞ் - சாரத், திருத்தகு மாமுனி செய் சிந்தா மணியும், விருத்தினச்சி னார்க்கினிய மே" என்னும் வெண்பாவினால் கண்டுகொள்ளப்படுவதாம்.

குறளிற்கு உண்மைப்பொருள் விளங்க வுரையியற்றி யருளினு ரென்றும், தருமர்முதலாயினோ ரியற்றிய உரைகளில் திருக்குறளின் உண்மைப்பொருள்வெளியாக வில்லையென்றும், அதனற்றான் அவ்வுரைகள் பயன்படாதொழிந்தன வென்றும் கூறுவாருமுண்டு இவரைச் சைவர் "கோளிற் பொறியிற் குணமிலவே" என்னுங் குறளின் விசேடவுரையில் இவர் "எண்குணங்களாவன:-தன்வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை எனவிவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது" என்றுரைத்தல் பற்றியும், உமாபதி சிவாசாரியர் "வள்ளுவர்சீ ரன்பாமொழி வாசகர்தொல் காப்பியமே, தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த், தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறு, தண்டமிழ் மேலாந் தரம்" என்னும் வெண்பாவினுள் 'தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை' என விதந்தோதியிருத்தல் பற்றியும், வேறு சில பற்றியும் சைவர் என்றும், வைணவர் இறைமாட்சியதிகாரத்தின் அவதாரிகையில் "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்' என்று பெரியாரும் பணித்தார்" என்று நம்மாழ்வாரைப் பெரியார் என்று கூறுதல்பற்றியும், "தாம்வீழ்வார் மென்றோட் பயிலினிதுகொல்" என்னும் குறளினுரையில் செங்கண்மாலுலகத்தைச் சிறபபித்துக் கூறியிருத்தல் பற்றியும், வேறு சில பற்றியும் வைணவரென்றும், அத்வைதிகள் "இருள்சேரிருவினையும்" என்னுங் குறளின் விசேடவுரையில் "இன்னதன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றும்" என்றும், "பொருளல்லவற்றை" என்னும் குறளின் விசேடவுரையில "மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை யென்பன ஒருபொருட்கிளவி" என்றும் கூறியிருத்தல் பற்றியும், வேறுசில பற்றியும் அத்வைதியென்றும் கூறுவர்.

பரிமேலழகர் யாவராயினுமாகுக; இவர சைவர் வைணவர் அத்வைதிகள் என்னும் மூவராலும் அங்கீகரிக்கப்பட்ட பெருந்தகையார் என்பதற்கு யாதொரு மாட்சேபமின்றாம்.

பரிமேலழகர் காஞ்சிபுரத்து உலகளந்த பெருமான் கோயில் அருச்சகர் மரபிற்பிறந்தவர், இவர் இளமையிலேயே நல்லாசிரியரை யடித்து வடமொழியையும் தென்மொழியையும் குறைவறக்கற்றுப் பண்டித சிரோமணியாயிப் பொது நோக்குற்று, வைதிகர்யாவரும் பொன்னேபோற் போற்றிக் கொள்ளுமா றுரையியற்றவேண்டுமென்றெண்ணி, அதற்குத் தக்கநூல் யாதென்றாராய்வுழித் திருக்குறளே தக்கநூலென்று துணிந்து, அதற்குத்

இவர் உலகளந்த பெருமாள் கோயில் அருச்சகர் மரபிற் பிறந்தவ ரென்பதற்கு "நீணிலங் கடந்தோன் றிருவோழ் மரபிற், பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே" என்னும் ஓரகவற்பாவி னீற்றடியிரண்டையு முதாரணமாகக் கூறுகின்றனர் சிலர்.

தருமர்முதலாயினோரியற்றிய வுரைகளில் ஆவனவற்றைக்கொண்டு ஆகாதனவற்றை மறுத்துச் சுருதிஸ்மிருதிபுராணேதிகாசங்களின் அருங்கருத்துக்கள் நன்குவிளங்க இலக்கணச்செறிவும் தருக்கப்பொலிவும் குன்றின்மேலிட்ட தீபம்போற்றுலங்கச் சிறந்ததோ ருரையிட் டருளினர்; இவர்தாமியற்றிய உரையைப் பாண்டியனவைக்களத்து அரங்கேற்றச் சென்றபோது அங்குள்ளார் இவரைநோக்கி "நீவீரியற்றிய திருக்குறளினுரைக்கும் மற்றவரியற்றிய வுரைக்குமுள்ள வேற்றுமை யென்னே? அவ்வுரைகளினும் நும்முரை சிறந்த தென்பதனை அற்புதங்காட்டி விளக்கல் வேண்டும்; இங்குள்ள வெண்கலப் பரிமீதிவர்ந்து அரங்கேற்றுக; இப்பரி இடம் பெயர்ந்தியங்குமாயின், நும்முரை உண்மையுரையென் றெப்பப்படும்" என்றுகூற, இவர் * அப்பரிமீதிவர்ந்து தாமியற்றிய உரையை யரங்கேற்றினர்; அரங்கேற்றியபோது அப்பரி இடம பெயர்ந்தியங்கிற்று. அதுகண்டு அங்குள்ள புலவர் இவர்க்கு பரிமேலழகர் என்று சிறப்புப்பெயர் தந்து புகழ்ந்தனர்; இவரது இயற்பெயர் வேறு; இச்சிறப்புப் பெயரே இவர்க்கு இயற்பெயராக வழங்கப்படுவதாயிற்று என்றோர் கதை கர்ணபரம்பரையாக வழங்கப்பட்டு வருகின்றது

பரிமேலழகர் தொல்காப்பியமன்றி வேறு இலக்கணநூலெயெடுத்துக் கூறுமையின், இவர்கொண்ட இலக்கணநூல் தொல்காப்பியமா மென்பது விளங்குவதாம்.

பரிமேலழகர் காமத்துப்பால் களவியலின் அவதாரிகையில் "வடநூலுட் போசராசனும் சுவைபலவென்று கூறுவார் கூறுக; யாங் கூறுவ தின்பச்சுவை யொன்றனையுமே எனஇதனையே மிகுத்துக் கூறினன்" என்று கூறியிருத்தலால், இவரது காலம் போசராசனது காலத்திற்குப் பிற்பட்ட காலமாமென்பது வெளியாகின்றது.

இவர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, காலடி, பழமொழி, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களை யுதாரணமாகக் காட்டுவதுடன் உரை கடையுடன் சேர்த் தெழுதுவதினாலும், இவையாறு சுந்தபுராணம்-கம்பராமாயணம் முத

இவர் அழகர் மலையில் தீயிற் காய்ச்சிய வெண்கலப் பரிமீதிவர்ந்து புலவர்கள் வினவிய வினாக்களுக் கெல்லாம் தக்கவாறு விடையிறுத்துத் தாமியற்றிய திருக்குறளுரையை அரங்கேற்றினரென்றுகூறுவாருமுண்டு.

திரிசிரபுரத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள தாயுமானவர் என்னும் சிவபெருமானது பெயர் அவரது அடியா ரொருவர்க்கு இயற்பெயராக வைத்து வழங்கப்பட்டு வந்தமைபோல, மதுரைமாகாளில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள சொக்கலிங்கப்பெருமானது திருப்பெயர்களி லொன்றான பரிமேலழகரென்னும் பெயர் இவ்வுரையாசிரியர்க்கு இயற்பெயராகவைத்து வழங்கப்பட்டது. இப்பெயராலேயே இவர் சைவரென்பதைத் துணியலாமென்று கூறுவாருமுண்டு.

ஒிய நூல்களே ஒரிடத்தும் எடுத்துக் காட்டாமையாலும், இவரது காலம் கந்தபுராண முதலியவற்றிற்கு முற்பட்ட காலமாமென்பது துணிவாம். எஃது எங்ஙனமாயினும், இவரது காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து நூற்றுமுப்பது வருஷத்திற்கு முன்பெனக் கொள்ளலாம்.

இவர்க்குச் சாங்கியம், வேதாந்தம், தருக்கமுதலிய நூல்களில் அளவு கடந்த ஞானமுண்டென்பது "நீத்தார் பெருமை" "அருளுடைமை" முதலிய அதிகாரங்களிலுரையால் நன்கு வினவுவதாம். இவர் ஜீவன்முத்த புருஷரென்பது "மெய்யுணர்தல்" "அவாவறுத்தல்" என்னும் அதிகாரங்களி லுரையால் செவ்வனே புலனுவதாம்.

நச்சினார்க்கினியர் பரிமேலழகர் "குடம்பை தனித்தொழிய" என்னுங் குறளினுரையில் குடம்பையென்பதற்கு மற்றையோர் கூடு என்று பொருள் கூறியதுபோற் கூறாது முட்டையென்று பொருள்கூறி நய் முரைத்தற் ககமகிழ்ந்து அவரைக் கட்டிக் கொண்டார் என்று கூறுவாரு முண்டு.

வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் றருதல் முதலாயின வுமையப் பேரறிவாளர்பாலும் பொன்னேபோற் போற்றியேற்கத் திருக்குறளுக் குரையியற்றிய பரிமேலழகரது வரலாறு தெரிந்தவளவு ஒருவாறாக வெழுதப்பட்டது.

பரிமேலழகர் சரித்திரம்
முற்றிற்று

திருக்குறளின் மாட்சி.

இலக்கணக் கொத்தின் "வடமொழி யிலக்கணஞ் சிலவுருக தமிர்து" என்னுஞ் சூத்திரத்தில் "பல்காற் பழகினுங் தெரியா வுளவேற், றொல்காப் பியங்திரு வள்ளுவர் கோவையார், மூன்றிலு முழங்கு மாண்டினு மிலே யேல், வடமொழி வெளிபெற வழங்கு மென்க" என்றிருப்பதும், அதனுரையில் "இலக்கணமாவது தொல்காப்பிய மொன்றுமே; செய்யுளாவது திருவள்ளுவ ரொன்றுமே" என்றிருப்பதும், மணிமேகலை—சிறைசெய் காதையில் "தெய்வக் தொழாஅள் கொழுகற் றொழுதெழுவான், பெய் யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொய்யில் புலவன் பொருளுரை தேரும்" என்றிருப்பதும்,

கல்லாடத்தின் "நண்ணிய பாதி" என்னுஞ்செய்யுளில் "சமயக் கணக்கர் மதிவழி கூரு, தலகியல் கூறிப் பொருளிது வென்ற, வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன், முதற்கலி பாடிய முக்கட் பெருமான்" என்றிருப்பதும், இவைபோல்வன பிறவு மிங்குணர்தற்பாலனவாம்.

இந்நூலாசிரியர் சரித்திரத்தையும் இதனுரை யாசிரியர் சரித்திரத் தையும் பற்றிய வேறு சில குறிப்புக்கள்.

திருவள்ளுவர் மதுரையிற் பிறந்தவர்- மயிலையில் வளர்ந்தவரென்றும், மோட்சம் துறவறத்தார்க்கன்றி யில்லறத்தார்க்குச் சித்தியா தென்று கூறிய இவர் இஃதில்லறத்தார்க்குஞ் சித்தியாமென்பதனைத் தம் வாழ்க்கை முற்று மில்லறத்திருந் தொழுகினமையால் வீளக்கினரென்றும், இவரது தந்தையின் பெயர் பகவனன்று, யாளிதத்தனென்றும், இவரது மனைவி யின்பெயர் வாசுகியன்று, மாதாதுபங்கி என்றும், திருவள்ளுவர் "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" என் றகாரமுதலாக வரப்பாடத் தொடங்கி, "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங், கூடி முயங்கப் பெறின்"என்று னகரவொற்றீறாகவரப் பாடி முடித்தமை "எழுத் தெனப் படுவ அகர முதல, னகர விறுவாய் முப்பஃ தென்ப" என்று தொல்காப்பியனார் கூறுவதை வற்புறுத்துவதாமென்றும், பிறவுஞ்சொல் லப்பட்டு வருகின்றன.

திருவள்ளுவர் வைகாசிமாதம் அநுஷநட்சத்திரத்தில் திருமயிலையில் பாகதியடைந்தாரென்று கூறப்படுகின்றது. சிலர் அவர் திருவள்ளூரில் (திருவெவ்வூரில்) பாகதியடைந்தார்; அவர் சமாதியுள்ள விடம் திரு வள்ளூர்த் திருக்குளமாமென்று கூறுகின்றனர்.

பரிமேலழகர் திருக்குறளுக் குரையெழுதுங் காலத்துச் சொட்டமூத் திராகோ புடையவராக விருந்தார்; அதனால், நடுவே யடிமட்டம் வரையில் தூள் செய்துள்ள ஒருவட்டக் கல்லின்மீது சொட்டமூத்திரங் தடையிலாது போமாறிருந்து தாமெழுதத்தொடங்கிய வுரையையெழுதி முடித்தாரென் றும், பரிமேலழகர் - பரிமேலழகரையரென விருவரிருந்தனர்; இவருள் திருக்குறளுக் குரையெழுதினவர் பரிமேலழகராவர், பரிபாடலுக்கும் திரு முருகாற்றுப் படைக்கும் உரையெழுதினவர் பரிமேலழகரையராவரென் றும், பிறவுங் கூறப்பட்டு வருகின்றன.

தொண்டைமண்டலசதகம் " திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன், வள் ளுவ னுரைக்கு வழிகாட்டினன் " என்று கூறுவதால், இவர் காஞ்சீபுரத்தில் பிறந்தவரென்று தெரிகின்றது. சிலர் இவர் ஒக்கையென்னுமூரிற் பிறந் தவரென்றுங் கூறுகின்றனர்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
7	3	மூறமை	மூறைமை
38	17	கிற்கும்	கிற்குமம்.
43	8	பரி:—(இ-ன்).	பரி:—
45	12	thier	there
46	8	மனது	மனத்து
54	2	Virtve	Virtue
60	27	வானப்பிரஸ்தநிலை. இது	வானப்பிரஸ்தநிலை.
61	30	ஞெழிக்கி	ஞெழுக்கி
67	30	வெலனவும்	வெனவும்
69	33	தம்மே	தாமே
70	33	ஒழுக்கு ம	ஒழுக்கம்
71	14	hourish	flourish
85	20	in man	man
88	4	virtueouly	virtue only
92	27	சவாமருந்	சாவாமருந்
107	31	வெமக்ஷத்	வெமகிந்
108	3	காஞ்சிரங்காய்	காஞ்சிரங்காய்
119	14	பட்டானும்	பாட்டானும்
121	36	தகைகுதே	தகைததே
123	11	estate	state
125	10	வகையறுத்து	வரையறுத்து
ஷி	36	நாடிப்	நாடிக்
126	34	மிருதியுமாக	மிருதியாக
129	3	himself;	himself
132	8	தன்மடைவர்	தன்பமடைவர்
140	34	பழியை-பழியையும்	பழியையும்
145	16	(எ - தி).	(எ - று).
ஷி	26	ம்ஃவிய	மனேவிய
153	38	அப்பொறையினும்-அஃ தப் பொறையினும்	அஃதப்பொறையினும்
159	2	(க - ள்).	(க - தி).
163	24	ரீயாடத்தத்	யாரிடத்தத்
169	35	பெருகத்தி	பெருக்கத்தி
173	11	புன்மைபில்	புன்மையில்
ஷி	24	யார்மட்டும்	யார் மாட்டும்
177	7	விருப்பாத	விரும்பாத
180	12	பொய்யாகச்	பொய்யாகப்
ஷி	18	வாழ்தலின்	வாழ்தலின்
186	6	முண்டொ	முண்டோ

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
195	29	மறுளறு	மருளறு
200	24	நொய்ப்பால	கோய்ப்பால
204	28	யைதலே	பைதலே
210	35	கூறி	கூறு
224	21	பட்டாலும	பாட்டாலும்
228	21	பட்டாலும்	பாட்டாலும்
231	26	வீலங்	விலங்
236	17	பொதுவாகை	பொதுவகை
238	31	twe	true
242	10	பிரட்தியக்	பிரத்தியக
ஷெ	16	பிராணங்களே	பிரமாணங்களே
245	32	யாண்டு	ாண்டு
246	3	பிராமாணங	ிரமாணங்
ஷெ	24	யுகை	புகை
247	37	அந்த	தர்த்த
250	7	வீட்டிலில்தாத	வீட்டிலில்லாத
ஷெ	25	விடு	வீடு
251	34	அவ்வளகைளே	அவ்வளவைகளே
251	25	சவீர	சுவிர
256	5	னில்லா	ளில்லா
257	30	பெருளே	பொருளே
259	22	ஊண்	உன்
260	10	ஆளாவென்ப	ஆளாணென்ப
262	8	அவஆணையே	அவஆனையே
ஷெ	30	மற்றெனைமே	மற்றென்றண்மே
263	14	கொல்லுதளாகிய	கொல்லுதலாகிய
264	5	ணுண்ணமை	ண்ணுமை
269	38	உயிர்	உயர்
270	22	ஒருயிரை	ஒருயிரை
273	28	சேய்தலே	செய்தலே
277	13	whaever	whatever
ஷெ	33	தன்பத்ததாய்	தன்பததாய்
278	19	பவ	பல
285	18	கெய்தலே	செய்தலே
286	6	இவ்பொருளுவமை	இல்பொருளுவமை
291	6	காரி	கரி
310	25	தல	தல்
311	16	வந்தஸமயின்	வந்தமையின்
ஷெ	20	தொழு	தொழுகு

279 - வது பக்கத்திற்குப்பின்னர் 290-291-292-293-294-295-296-297-298 என்றிருக்கும் பக்க வெண்களே 280-281-282-283-284-285-286-287-288 என்று திருத்திக் கொள்க.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
312	26	தவமுத்	தவத்
ஷ	27	மஸம்	மனம்
314	16	செய்யமை	செய்யாமை
315	28	ஒவ்வென்	ஒவ்வொன்
ஷ	34	தெண்பது	தென்பது
320	8	தளக்கீக	தனக்கே
327	1	பெருளாமை	வெகுளாமை
ஷ	35	உன்ளிய	உள்ளிய
331	15	சிறப்புடைய	சிறப்புடைய
ஷ	36	வள்ளுக்	வள்ளுக்
332	30	கெய்யா	செய்யா
333	22	மறகாத	மறக்காத
ஷ	23	ஞாபத்திற்கு	ஞாபகத்திற்கு
335	9	கம்முயிர்க்கு	தம்முயிர்க்கு
ஷ	34	யிரத்தியட்சப்	பிரத்தியட்சப்
336	15	யார்க்கீகு	யார்க்கு
345	2	யாதெனின்	யாதெனின்
347	3	heen	been
ஷ	29	ஒன்ருக	ஒன்ருக
352	10	கொல்லலகாது	கொல்லலாகாது
356	25	கல்வீனே	கல்வினே
357	16	வுடம்பினை	வுடம்பினை
359	14	பிறந்திருக்கு	பிறந்திருக்கு
360	5	யுடம்படாதலால்	யுடம்பாடாதலால்
373	35	லதனிலா	லதன்னை
374	27	வெண்டி	வேண்டி
377	29	எனரூர்	எண்ணர்
381	34	தெனப	தென்ப
383	29	கூறியபவா	கூறியவா
392	40	மு ணைறி	முரணைரி
394	13	கேடடு	கேட்டு
401	31	சாதனங்களின	சாதனங்களின்
404	39	சாட்டுங்	காட்டுங்
405	27	வெண்டுங்	வேண்டுங்
410	25	மெனக	மென்க
416	13	தாயுமானாவர்	தாயுமானவர்
424	16	பட்டாலும்	பாட்டாலும்
436	8	டிருப்பன்	டிருப்பவன்
438	33	தன்செலால்	தன்சொலால்
440	15	subjecs	subjects
ஷ	22	லெற்றி	லேற்றி
447	37	மடமலீப்	மடமலீகப்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
450	4	உயர்வ	உயர்வு
464	36	ருடன்மை	ருட்டன்மை
473	18	ever	never
480	34	நாடடம்	நாட்டம்
486	4	அஞ்சவது	அஞ்சுவது
491	14	கெடாமையும்	கொடாமையும்
495	29	சீவசிகந்தா	சீவகசிந்தா
520	35	சிறப்பு	சிறப்பு
523	34	நிகம்	நிகழ்
538	31	சினேயோடு	சினேயொடு
545	14	அசான்	அரசன்
562	31	ஒடும்	ஓடும்
622	27	அரசனது	அரசனதி
624	15	sujects	subjects
639	31	திரு	நிரு
645	16	கண்ணேட்ட	கண்ணேட்ட
648	23	கண்ணேட்டத்தி	கண்ணேட்டத்தி
656	36	ஒற்று	ஒற்று
658	18	ஒற்றினனே	ஒற்றினனே
690	13	proverty	poverty
705	24	அங்கங்கள்	அங்கங்கள்
710	13	வல்லது	வல்லது
713	16	தொடர்ந்து	தொடர்ந்து
726	32	கூறியீருத்தலும்	கூறியிருத்தலும்
728	9	தவந்	தவர்
736	11	எள்பது	என்பது
738	35	ஓரால்	ஓரால்
764	2	தி தனை	தூ தனை
793	29	சபையின்கன்	சபையின்கண்
802	19	agreably	agreeably
802	32	பிறரு	பிறரு
807	18	illeterate	illiterate
826	20	உடையதாப்	உடையதாய்
830	31	மசம்	மதம்
832	15	அதனா	அதனை
835	15	knigs	kings
839	27	thigs	things
839	33	போகாகை	போகாமை
868	26	directnig	directing
879	16	கீழ்நிடா	கீழ்நிடா
888	8	யுனடயார்	யுடையார்
894	22	பத்தத்த	பத்தத்த

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
919	29	வெண்மை	வெண்ணை
934	33	உண்மை	உண்ணை
946	1	496	946
971	19	எத்திய	எத்திய
1004	8	ஒவாது	ஓவாது
1008	17	கொனீஇ	கொளீஇ
1011	21	கெடுத்தல்	கெடுத்தல்
1012	5	does	do
1012	31	சிகரு	சிகரு
1039	23	தன்னே	தன்னே
1041	16	திறந்தால்	திருந்தால்
1047	24	டொழுவா	டொழுகுவா
1051	37	சத்தான்	சாத்தன்
1060	22	சாண்ருண்மை	சான்ருண்மை
1070	23	Kindnes	Kindness
1082	25	கருமங்களில்	கருமங்களில்
1090	30	இறையனகப்பொருள்	இறையனாகப்பொருள்
1091	16	Faimly	Family
1092	17	Faimly	Family
1093	18	Cantrivances	Contrivances
1094	22	மூடிவெய்தம்	மூடிவெய்தம்
1095	15	fructifiy	fructify
1096	3	Blamless	Blameless
1100	31	வீழுன்றி	வீழுன்றி
1101	23	வேளார்க்கும்	வேளாளர்க்கும்
1114	13	அஃது	அஃத
1135	17	desgraceful	disgraceful
1136	13	of who	of those who
1148	10	கண்பா ஞயின	காண்பானுயின்
1149	24	themselve	themselves
1154	11	குமுமை	குழுமை
1155	31	பலதாம்	பாலதாம்
1160	31	உவை	இவ்வ
1164	17	தலைமகன் தலைமகன்	தலைமகன் தலைமகள்
1171	19	நோகீஇய	நோக்கிய
1174	3	உடையவன லல	உடையனவல்ல
1175	17	முற்றமை	முற்றும்மை
1177	34	இனையுடைய	இனையடைய
1179	7	உலதகிலின்ரு	உலகத்திலின்ரு
,,	37	கூறிரான்	கூறினான்
1181	37	கூறினவையின்	கூறினமையின்
1195	21	கலந்ர	கலந்த

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1201	9	னுள்ளாராக்	னுள்ளாராக
1222	32	உருவஞ்	உருவகஞ்
1229	4	அறிதரோ	அரிதரோ
,,	14	ஒரேவழி	ஒரோவழி
1230	18	ஒம்பி	ஒம்பி
1232	18	கறிவீயாவோ	கறிவியாவோ
1236	34	continne	continue
1237	19	கொத்தனென்	கொத்தனன்
,,	27	படாரன்	படாரன்
1244	27	தயற்றலான்	தயிற்றலான்
1249	2	கண்பிதப்	கண்விதப்
1268	3	சசி	ச்சி
1272	13	லொழி	லொழி
1300	28	of the	the
1329	31	femine	feminine
1335	12	brght	bright
1338	35	தொண்கள்	கொண்கன்
1376	25	ஒரு	ஒரு
1379	29	Feigned dislike	Dislike arising from trifles
1383	14	garland flower	flower garland
1395	5	ராயினும்	ராயினும்

திருவள்ளுவமாலை.

11	30	ஞசபான்	ஞற்பாக
12	9	வெள்ளி	ளெள்ளி
13	20	நிறமுன்	நிறமூன்
16	17	பெய்யாதி	பொய்யா து
28	8	வீறெருங்கும்	வீறேருங்கும்
,,	24	காயனாரால்	காயனாரால்
29	29	மும்படி	மும்மடி
30	30	தூகோத்	தூகோத்

ஸ்ரீமத் - மஹா பீத்தாள்

காஞ்சீபுரம் - ஜகாமஸ்வாமி நாயடவர்களின்

அபிப்பிராயம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தேவர்திருக் குறளினுக்குத் தெளிபொருளா தியவுரைகள் செய்த ளித்திப், பூவுலகிற் பூதவுடம் பொடுபொன்றுப் புகழுடம்பு பொருந்தி நின்ருன், கோவணவும் பொழில்சூழ்கோ மனபுரம்வா ழிப்பர்குலக் கொழு ந்தன் ஞன்சீர், நாவலர்தம் பெருமானன் னயசுருண னெழில்வடிவே ளுமன் ருனே.

திருமருவு தேவரரு டமிழ்மறைக்குத் தருமர்மூன்னேர் தோர்ந்து செய்த, உருமருவு முரைகளின்மிக் குயர்ந்தபரி மேலழக ருரையிப் பா ரோர், அருமையினு மருமையா யுணரநின்ற தாகலினன் கதனே யாய்ந்து, குருமருவு தெளிபொருட்டீ பமுங்கருத்துங் குறிப்புரையுங் குலவக் கோட்டி.

எழுதாத வெழுத்திலியை வித்தளித்திட் டில்வுலகரிதும்பு தெய்தப், பழுதாத லென்றுமிலாப் புகழுடம்பு படைத்து நின்ருன் பனிவில் சைதை, முழுமாத வன்னனுஞ்சி ரிரத்தினத்தே கென்றனது முளரித் தாளில், விழுமாவாய்த் துவண்டவன்ற னல்லருள்பெற் றுய்ந்திட்டோ னுலகர் யார்க்கும்.

நன்னயமே புகன்றிடுவோன் றமிழ்க்கடலின் வேலைகண்ட நாவ லோன்சீர், தன்னியநல் வேதாந்தத் துறையினுடு தருக்கனுற் முணிபு ணர்ந்தோன், மன்னியபூம் பொழில்சூழ்கோ மனபுரஞ்செய். மாதவத்தின் வந்த நல்லோன், பொன்னியலும் வடிவேற்பேர் புனைந்திவரு வோன்று கவர் புலமிக் கோனே.

கடவுள் துணை.

திருவள்ளுவர்

திருக்குறள்.

மூலமும் உரையும்.

உரைப்பாயிரம்.

பரி.— † இந்திரன் முதலிய இறையவர் ‡ பதங்களும் அந்தமி லின்பத் தழிவில் வீடும் § நெறி யறிந்து செய்துதற் குரிய ¶ மாந்தர்க் குறுதி யென உயர்ந்தோரா †† னெடுக்கப்பட்ட பொருள் நான்கு.அவை ‡‡அறம்

† இந்திரன் முதலிய இறையவர்:—இந்திரன், அக்கினி, இயமன், கிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானனென்னு மெண்மர்.

‡ பதங்கள்—அமராவதி, தேஜோவதி, சயம்பிரி, கிருஷ்ணாங்கனை, சித்தாவதி, கந்தவதி, அளகாபுரி, யசோவதி என்னு மெட்டுமாம்.

§ நெறியறிந்து—இதுவே கொள்ளத்தக்க சன்மார்க்கமென்று நல் லாசிரியர் வாயிலாக வுணர்ந்து.

¶ மாந்தரெனப் பொதுப்படக்கூறினமையின், ஆண், பெண் என்னு மிருபாலாரும் முத்தியடைதற் குரியராவரென்பதும், தேவர் முதலியோர் அதற்குரிய ரல்லரென்பதும் பெறப்படுமாறறிக.

†† 'எடுக்கப்பட்ட' என்றமையின், அறமுதலியனவு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருவன வென்பது பெறப்படும்.

‡‡ அறமுதலியவற்றை வடநூலார் முறையே தருமார்த்தகாமமோக்ஷ மென்பர்; புருஷார்த்த மெனப்படும் இந்நான்கனுள், அறம் பொருளின் பங்களோத் திரிவர்க்கமெனவும் மோக்ஷத்தை அபவர்க்கமெனவுங் கூறுவர்.

இவற்றுள், முன்னைய மூன்றும் கௌணமும், பின்னையதொன்று முக்கியமுமாம். புருஷார்த்தம் - புருஷனால் விரும்பப்படுவது. அபவர்க்கம் திரிவர்க்கத்தினின்றும் நீங்கல்.

i. அறம்-தர்மம். அஃதாவது மநுமுதலிய நூல்கள் விதித்தவற்றைச் செய்து, விலக்கியவற்றைச செய்யா தொழிதலாம்.

ii. பொருள் - அர்த்தம். அஃதாவது மணி, மக்கள், பரி, பசு, தானி, தாசன், திரவியம், மனை, தானிய மென்பனவாம

பொருளின்பம் வீடென்பன. அவற்றுள், வீடென்பது † சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது ‡ இலக்கண வகையாற் கூறப்படாமையி னூல்களாற் கூறப்படுவன வினை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மதமுதலிய நூல்களில் விதித்தன செய்த லும் விலக்கியன வொழிதலுமாம். அஃது ¶ ஒழுக்கம், வழக்கு, தண்ட மென மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய * வருணத்தார் தத்தமகுரு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய 0 நிலைகளினின் றல்வவற்றிற் கோதிய அறங்களில் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே யெனதெனத்தென் றிருப் பார் அது காரணமாகத் தம்முண் மாறுபட்டப் பொருண்மேற் ¶¶ செல் வது. அது $ கடன் கோடன் முதலிய பதினெட்டுப் பதத்ததாம

iii. இன்பம்-காமம். அஃதாவது பொருள் துணைகாரணமாக ஒரு காலத்து ஒருபொருளால் ஐம்புலன்களும் நுகர்தற் சிறப்புடையதாம். ஒரு பொருளென்றது கற்புடைய மனைவியை.

iv. வீடு - மோட்சம். அஃதாவது உயிர் அவிசை முதலிய பஞ்சக லேசதனினின்றும் நீங்குதல். இவற்றுள், அறம் இம்மைப்பயன், மறு மைப்பயன், வீடென்னு மூன்றையும், பொருள் இம்மைப்பயன் மறுமைப பயனென்னு மிரண்டையும், இன்பம் இம்மைப்பய னொன்றையும் தருவ தாம். அது முதலியவற்றைப் பொருளென்றது வைசேடிகமதம் பற்றியாம்.

" ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருந் தீதாதல்வு
பட்டதே யின்பம பரணன்னே நிம்மூன்று மம
விட்டதே போனின்ப வீடு." என்னு ஔவைப் பாட்டியா அறமுத லிய வற்றிற் கிலக்கணங் கூறுமாறு முணர்க.

† இதனை "வாக்குமன முங்கண்ணு மற்றுளவிந் தியங்களுமே,
நோக்கரிய பஞ்சுடர்" என்று புராணங் கூறுமாற்றா னு முணர்க.

‡ இலக்கண வகையாற் கூறல்:—பிருதிவிக் கிலக்கணம கந்தமுடை மை, அப்புவிற் கிலக்கணம் குளிர்தபரிச முடைமை என்றற் றொடக்கத தனவாகக் கூறுதல் போல்வதாம். அசாதாரண தர்மம் (சிறந்தகுறி) இலக கண மெனப்படும்.

¶ ஒழுக்கம், வழக்கு, தண்டமென்பன முறையே ஆசாரம், வியவ காரம், பிராயச்சித்தம (கழுவாய்) என்று கூறப்படும.

* வருணம் - சாதி 0 நிலை- ஆசிரமம்.

¶¶ சொல்வது என்னும் பாடமுண்டு.

$ கடன்கோடல் முதலியவாவன:—கடனைகோடல், ஒருவனிடத்துக காசுபடி லைத்தல், பொருள், உடையவனலலாத விற்றல், கூடியிருபது

தண்டமோது அவ்வொழுக்க நெறியினும் வழுக்கு நெறியினும் வழீஇயினை அந்நெறி நிறுத்துதற்பொருட் § டொப்பநாடி யதற்குத்தக வொறுத்தல்.

இவற்றுள், வழக்குந் தண்டமும் மூலகநெறி நிறுத்துதற் பயத்தவாவ தல்ல தொழுக்கம்போல மக்களுயிர்க் குறுதி பயத்தற் சிறப்பில வாதலா னும், அவைதாம் நூலானேயன்றி யுணர்வு மிருதியானுந் தேயவிடற்கை யானு மறியப்படுதலானும், அவற்றையொழித் தீண்டித் செய்வப்புலமைத் திருவள்ளுவனாற் சிறப்புடைய வொழுக்கமே அறமென வெடுத்துக்கொள் ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடை மையின், பிறபான்மையாகிய அசிறப்பியல்புகளொழித் தெல்லார்க்கு மொத்தலிற் பெருப்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறந் துற வறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணிண் றதற்குத் துணையாகிய சுற்புடை மனைவியோடுஞ் செய யப் பிவ தாகலின், அதனை மூதற்கட் கூறுவான் தொடங்கி ¶ எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துங் கூறுகின்றார்.

சம்பாதித்தல், தானஞ்செய்த பொருளைக் கொடாமை, சம்பளங்கொடா மை, கட்டுப்பாட்டை மீறி நடத்தல், ஒருபொருளை விற்றவது வாங்கியா வது பின்பு சந்தேகித்தல், மாட்டை உடையவனுக்கும் மேய்ப்பவனுக்கும் வரும் வழக்கு, எல்லை வழக்கு, அடித்தல், திட்டல், திருட்டு, வன்செய்கை, அயலான் மனைவியை யபகரித்தல், மாதராடவர் தருமம், தாயபாகம், சூதாடல் என்பனவாம். இவ்வாறு மநுதர்மசாஸ்திரம் எட்டா மத்தியாயத் திற் கூறப்பட்டிருக்கின்றது.

§ ஒப்ப நாடி யத்தக வொறுத்தி என்பது புறநானூறு 10 - வது செய்யுளிலுள்ளது. இதன் பொருள் - நீதிநூற்குத்தக வாராய்ந்து அத தீமைக்குத் தகத் தண்டஞ்செய்வை என்பது.

¶ எடுத்துக்கொண்டதூ லிடையூறின்றி யினிது முடிதற்பொருட்டு நூன்முகத்துச் செய்யப்படும் வாழ்த்து மங்கலமெனப்படும். அது வஸ்து நிர்த்தேசம் (பொருளியல் புரைத்தல்), நமஸ்காரம் (வணக்கு), ஆசீர்வாதம் (வாழ்த்து) என மூவகைத்தாம்.

(i.) நமஸ்கார முதலியனவின்றிக் கேவலம் கடவுளின் சங்கீர்த்தனம் (ஸ்துதி) வஸ்துநிர்த்தேசவடிவ மங்கலமாம். (ii.) நமஸ்காரத்திற்குத்தகுநி யான கடவுள் குரு முதலியோரிடத்து நமஸ்காரஞ் செய்பவன் தனதிழி சிகைமையை யுணர்ந்துதற்பொருட்டு மனோவாக்குக் காயமென்னுந் திரி

தெளி:—இந்திரன் முதலிய தலைவர்களுடைய பதவிகளையும், முடிவில்லாத இன்பத்தையுடைய அழிவில்லாத வீட்டையும், வழியறிந்து அடைதற்கு உரிய மனிதர்க்கு உறுதியைத் தருவதென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். அவற்றுள், வீடென்பது இப்படிப் பட்டதென்று குறிப்பிட்டு நினைக்கவும் குறிப்பிட்டுச் சொல்லவும்கூடாத நிலைமையையுடைய தாதலால், அது துறவறமாகிய காரணவகையால் சொல்லப்படுவதல்லாமல் இலக்கண வகையினால் சொல்லப்படாமையால், நூல்களாற் சொல்லப்படுவன மற்றைய மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மநுமுதலிய நூல்களில் விதித்தனவற்றைச் செய்தலும் விலக்கியனவற்றை ஒழித்தலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூன்றுவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது பிராமணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளில் நின்று அந்தந்த நிலைகளுக்குச் சொல்லிய அறங்களில் வழுவாமல் நடத்தலாம்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே எனது எனது என்று இருப்பவர் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருளின்மேற் செல்வது. அது கடன்கோடல் முதலிய பதினெட்டு வகையினதாம்.

தண்டமாவது அவ்வொழுக்க வழியிலும் வழக்கு வழியிலும் தவறின வரை அவ்வழியில் நிறுத்துதற் பொருட்டு நீதிநூற்குத்தகுதியாக வாராய்ந்து அக்குற்றத்திற்குத் தகுதியாகத் தண்டித்தலாம்.

காணங்களாலுஞ் செய்யப்படும் வியாபார விசேடம் நமஸ்காரவடிவமங்கலமாம். (iii.)நூலாசிரியர் தாம் விரும்பியபொருளையும் தமதுமாணாக்கர் விரும்பிய பொருளையு மடைதற்பொருட்டுக் கடவுளைப் பிரார்த்தித்தல் ஆசீர்வாதவடிவ மங்கலமாம். 'அகரமுதல'என்னுங்குறள் வஸ்துநிர்த்தேசவடிவ மங்கலமாம். ஏனையகுறள்களில் ஏனைய மங்கலங்கள் வருமாற்றினையுய்த் துணர்க.

''அகர முதல வெழுத்தெல்லாம்'' என்புழி அகரம் கடவுள் வாசகமாயிருத்தலின், அதுவே யீண்டு மங்கலமொழியாம். அகரம் கடவுள் வாசகமாமென்பது ''ஆரு மறியா ரகார மவனென்று'' என்று திருமூலரும்''அக்கரங் களினி லகாரதான'' என்று கண்ணபிரானும் கூறுவதால் இனிது விளங்கும்.

'அகர முதல வெழுத்தெல்லாம்'என்பதில் பிரணவாட்சரத்தின் வடிவமாய அகர, உகர, மகரமெய் அமைந்திருத்தலின் அகர, உகர, மகரமெய் வடிவப் பிரணவாட்சரம் மங்கலமொழியாக வைக்கப்பட்ட தெனினும் பொருந்தும்.

இவற்றுள், வழக்கும் தண்டமும் உலகவழியில் நிறுத்துதலாகிய பயனைத் தருவனவாவதல்லாமல் ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதியை(நன்மையை)த் தருவதாகிய சிறப்புடையனவல்ல வாதலாலும், அவைதாம் நூலாலே யல்லாமல் அறிவு மிகுதியாலும் தேசவியற்கையாலும் அறியப்படுதலாலும், அவ்விரண்டையும் ஒழித்து இங்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ்வறந்தான் நால்வகை நிலைகளே உடையதாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையால் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளே யொழித்து, எல்லார்க்கும் ஒத்திருத்தலால் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலைகளாற் சொல்லப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற வழியில் நின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடும் செய்யப்படுவதாதலின், அதனை முதலிற்கூறத் தொடங்கி எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

வீடொன்று பாயிர நான்கு விளங்கற, நாடிய மூப்பத்து மூன்றெழுத்
தாழ்—கூடுபொரு, ளின்பவி லெழுப திருபதிற் றைந்தின்பம், வள்ளுவர்
சொன்ன வகை.

அறநான் கறிபொரு ளேழொன்று காமத், திறமூன் றெனப்பகுதி
செய்து - பெறலரிய, நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார், போ
லு மொழிந்த பொருள்.

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே, தூய துறவறமொன்
றாழாக - வாய, வறத்துப்பா லுள்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்,றிறத்
துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

அரசிய லமைச்சிய லிரைக், திருவல் லரணிரண்டொன்
றெண்கூ-ழிருவிய, றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன், றென்
பொரு ளேழா மிவை.

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லதித்தன்பு, பூண்பா லிருபாலோ
ராறுக-மாண்பாய, காமத்தின் பக்கமொரு மூன்றுக் கட்டுரைத்தார்,காமத்
தின் வள்ளுவனார் நன்கு.

இத்திருவள்ளுவ மாலைச் செய்யுட்களால் திருக்குறளினது பால் முதலியவற்றி னடைவு நன்கு விளங்கும்.

கடவுள் துணை.

திருவள்ளுவர்

திருக்குறள்.

1. அறத்துப்பால்—ON VIRTUE.

1. பாயிரம்—Preface.

முதல் அதிகாரம்—கடவுள் வாழ்த்து—praise of God.

பரிமேலழகர்:—அஃதாவது கவி தான் § வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட கேற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள், இவ்வாழ்த்தேற்புடைக் கடவுளை யென்னுக; என்னை? † சத்துவமுதலிய குணங்களான் மூன்றிய உறுதிப்பொருட் ‡ கவம்

§ (i) நூலாசிரியர் தாமெடுத்துக் கொண்ட நூலிற் கூறும் விஷயத்திற்கேற்ப நூன்முகத்திற் கடவுள்வாழ்த்தைக் கூறுது தாம் வழிபட்டவருங் கடவுளை வாழ்த்துதல் வழிபடுகடவுள் வாழ்த்தாம். அஃது ஆத்திசூடியில் "ஆத்தி சூடி யமர்ந்த தேவனே, யேத்தி யேதனைத் தொழுவோ மியாமே" என்பது போல்வதாம்

(ii) நூலாசிரியர் நூன்முகத்தில் நூலிற்கூறும் விஷயத்திற் கேற்பக் கடவுளைவாழ்த்துதல் ஏற்புடைக்கடவுள் வாழ்த்தாம். அது ஞானவாசிட்டத்தில் "பொன்னுல கத்தினிற் புலியி லந்தரத், தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது, மன்னுசிற் சோதியே வடிவ மியாவுமாய்த், தன்னுவ தப்பொரு டொழுதி றைஞ்சுவாம்" என்பது போல்வதாம். 'அகரமுதல' என்றற் றொடக்கத்துக் குறள் ஏற்புடைக்கடவுள் வாழ்த்தென்பது வெளிப்படையாம்.

† 'சத்துவ முதலிய குணங்களான் மூன்றிய உறுதிப்பொருட்கு' என்பதற்கு—சத்துவகுணத்தால் அறமும், இராசதகுணத்தால் பொருளும், தாமதகுணத்தால் இன்பமும் ஆகிய உறுதிப்பொருட்கு எனக்கொள்க.

‡ 'அவற்றுள் மூவராகியமுதற்கடவுள்' என்பதற்கு—சத்துவம் ரஜசு தமசு என்னும் முக்குணங்களால் காத்தல், படைத்தல், அழித்தல் செய் தற்பொருட்டு முறையே அரி, அயன், அரனென்னும் மும்மூர்த்திகளின் வடிவமாகிய பரப்பிரஹ்மம் என்று கொள்க.

படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினே" என்பது தேவாரம்; "குலவு மூவ ருருவமுங் கொண்டதே" என்பது பாகவதம்.

றன் முவராகிய முதற் ¶ கடவுளோ டியைபுண்டாகலான், அம்முன்று பொருளையுங் கூறலுற்றார்க் † கம்முவரையும் வாழ்த்துதல் முறைமையாக லின், இவ்வாழ்த் தம் முவர்க்கும் பொதுப்படக் கூறினரென வுணர்க.

தெளிபொருள் விளக்கம்:—அஃதாவது கவி தான் வழிபடுங் கட வுளையாவது எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்புடைய கடவுளையா வது வாழ்த்துதலாம். அவற்றுள், இவ்வாழ்த்து ஏற்புடையகடவுளே யென் றறிக; எங்ஙனமெனின், சத்துவமுதலிய முக்குணங்களால் அறம் பொருள் இன்பமென மூன்றாகிய உறுதிப் பொருளுக்கு அம்முக்குணங்களால் அரி யயனரனென மூவராகிய முதற்கடவுளோடு சம்பந்தமுண்டா யிருத்தலின், அம்மூன்று பொருள்களையும் சொல்லத்தொடங்கிய நாயனுர்க்கு அம்மூவ ரையும்வாழ்த்துதல் முறைமையாதலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படச் சொல்லினரென் றறிக.

க. ‡ அகர முதல வெழுத்தெல்லா $ மாதி
பகவன் முதற்றே யுலகு.

¶ கடவுள் என்பதன்பொருள்—மன மொழி மெய்களுக் கப்பாற்பட் டது என்பது.

† அம் மும்மூர்த்திகளில் எம்மூர்த்தியை வாழ்த்தினும் பயன் வேறு படுவதின்றென்பது "உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்தரு வியந்தவிக நிலைமை, யுணர்ந்துணர்ந் துணரினு மிறைநிலை யுணர்வரி துயிர்கா, ணுணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரிய னரனென்னு மிவரை, யுணர்ந் துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே" என்று பெரியாருரைத்தலால் நன்கு விளங்குக்.

இவ்வதிகாரத்தின் 1. 2. 4. 5. 7. 10. வது எண்ணுள்ள குறள் முதற் கடவுளது வாழ்த்தும், 3. வது எண்ணுள்ள குறள் அயனதுவாழ்த்தும், 6. 8. வது எண்ணுள்ள குறள் அரியினது வாழ்த்தும், 9. வது எண்ணுள்ள குறள் அரனது வாழ்த்துமாம். இதனை யூகித்துணர்க.

‡ அந்தணர் வந்தார், வசிட்டரும்வந்தா ரென்புழி, அந்தணருட் டலைமைநோக்கி, அந்தணருள் ஒருவராகிய வசிட்டரைப் பிரித்துக்கூறு வது போன்று 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்புழி, எழுத்துக்களுட் டலைமைநோக்கி, எழுத்துக்களுள் ஒன்றாகிய அகரம் பிரித்துக் கூறப் பட்ட தென்க. "முனிவர்வந்தார் அகத்தியனும் வந்தான்" என்பது மிதுவே யாம்.

$ "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" ஆதலின், நாயனுர் தமதன்னையாகிய ஆதியையும், பிதாவாகிய பகவனையும் உலகிற்கு முத லாகிய கடவுளாகப் பாவித்து 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என்றனர் என்று கூறுவாருமுளர்.

பரி.—(இதன்பொருள்) அகரமாகிய முதலெழுத்துக்களெல்லாம் ஆதிபகவனாகிய முதலெழுத்தை முதலாகவுடையனவாம்;—(என்றவாறு).

இது தலைமைபற்றிவந்த † எடுத்துக்காட்டுவமை. ‡ அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி § நாதமாத்திரையாகிய வியல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்ற முணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கு முதலாதலுங்கொள்க. 'எழுத்தெல்லாம்' என்றார். ¶ ஆதி

---

† எடுத்துக்காட்டுவமையாவது உவமானத்தையும் உவமேயத்தையும் வெவ்வேறு வாக்கியமாக நிறுத்தி இஃதுவமானம் இஃதுவமேயம் என்பது தோன்ற இடையில் அதுபோல என்னும் உவம உருபு கொடாமற் கூறுவதாம். இதுபற்றி இலக்கணவிளக்கனாரும் அணியியலில் "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு' என்புழி இரண்டு பொருள் வேறுவேறு கூறியதன்றி அகாமுதல எழுத்தெல்லாம் அதுபோல என்றுமென்னும், ஆதிபகவன் முதற்றே உலகு அதுபோல என்றுமென்னும் ஒன்றுகத் தணியுமாற்றான் உவமையும் பொருளும் நீதியின் நிறுவாமையின் அது வேறுபட வந்த உவமத் தோற்றமாய் இதன்பாற்படும்; என்னை? 'வேறுபடவந்த உவமத் தோற்றம், கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்'. என்ப வாகலின். மறுபொருளுவமை எனினும் எடுத்துக்காட்டுவமை எனினும் ஒக்கும்" என்றனர்.

‡ "நெற்பிணி மினத்தினும்" என்னும் நன்னூற் சூத்திரவிருத்தியுரையில், அகரத்தைப்பற்றிக் கூறுமிடத்து "நாதமாத்திரையாயெல்லாவெழுத்திற்குங் காரணமாய் முன்னிற்றலின் அம்முதல்" என்று கூறப்பட்டிருத்தல் லீண்டறியத்தக்கதாம்.

§ நாதம் என்பது வெண்கலமணி யடித்தபின் கலீரென் றுண்டாகும் பொதுச் சத்தம்போன்ற தொடர்ச்சியாகிய சத்தம்; அஃது உயிர் முயற்சியாலெழுகின்ற வுதானவாயுவாற் றோன்றுவது.

¶ ஒரு பொருளே யுணர்த்துதற் பொருட்டு நுவலே ஆகியவென்னும் பண்புருபு தொக்கு நிற்கப் பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயரும் தம்முட் புணர்ந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம். ஆதிபகவனென்பது ஆதியாகிய பகவனெனவிரியும்; இதில் ஆதியென்பது சிறப்புப் பெயரும் பகவனென்பது பொதுப்பெயருமாம். அது தமிழ்நூன் முடிபாயின் "உம்பிக் கொற்றன்" என்பதுபோன்று வல்லொற்றுமிரும். 'அகர முதல' என்பதும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம்.

*பகவனென்னுமிருபெயரொட்டுப்பண்புத்தொகை வடநூன்முடிபு. †உல கென்ற நீண் மெயிர்கண்மேனின்றது. ‡ காணப்பட்ட வுலகத்தாற் காணப்

* ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, சம்பத்து, ஞானம், வைராக்கிய மென்னு மறுகுணங்கட்குஞ் பகமென்னும் பெயருண்மையின், பகவனென் பதன்பொருள் அவ்வாறு குணங்களோடு முடையானென்பதாம்.

† உலகென்பது உயிர்ப்பொருள் உயிரில் பொருளென்னு மிரண் டையு முணர்த்துவதாக, அவ்விரண்—ற்கும் ஆதிபகவன் முதலெனக் கூறுது உயிர்ப்பொருட்கு மாத்திரம் ஆதிபகவன் முதலெனக் கூறியது யாதுபற்றியெனின், உயிர்ப்பொருள் மெய்யுணர்வால் அவிச்சை முத லிய மாசு நீங்கி முத்திபெறுதற் குரியதாஞ் சிறப்புப்பற்றி, உலகென்ற நீண் மெயிர்கண்மே னின்றது' என்று கூறப்பட்டதே யன்றி, உயிரில் பொருட்கு ஆதிபகவன் முதலன்றென்னுங் கருத்தால் கூறப்பட்ட தன் ரும். உயிர்ப்பொருள் உயிரில்பொருளெனனு மிரண்டிற்கு மிறைவன் முதலாமென்பது "தானே திசையொடு தேவரு மாய்நிற்குந், தானே யுடலு யிர் தத்துவ மாய்நிற்குந், தானே கடன்மலே யாதியு மாய்நிற்குந், தானே யுலகிற் றலேவனுமாமே". என்று திருமந்திரங் கூறுவதாலினிது விளங்கும்.

‡ காணப்பட்ட புகையால் காணப்படாத அதன் காரணமாய தெருப் புண்டென்று அனுமானித்தல் போன்று காணப்பட்ட உலகத்தால் காண ப்படாத அதன்காரணமாய கடவுட்கு (உலகம் தனக்கொரு முதலேயுடை யது; தோற்றமுடையதாகலின், யாது தோற்றமுடையது அது தனக் கொரு முதலேயுடையது கடம்போல என்று) உண்மை கூறவேண்டி, புகையானது நீயை உடைத்தாயிருக்கின்றது என்பதுபோல 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என ஆதிபகவனே உலடமையாகவும் உலகை உடைய தாகவும் வைத்துக் கூறினுர் அங்ஙனம் கூறினுரேனும் உலகத்தை உடை மையாகவும் ஆதிபகவனே உடையவனுகவும் கொள்ளவேண்டு மென்பது தோன்ற, 'உலகிற்குமுத லாதிபகவனென்பது கருத்தாகக் கொள்க'என்று கூறப்பட்டது. காணப்பட்ட வுலகென்பது உயிர்ப்பொருளுக்காமிடத்து உடம்போடு (கூடி) காணப்பட்டிவரு ருயிர்ப்பொருளென்றும், உயிரில் பொருளுக்காமிடத்துப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும ஸ்தூல பூதமைந்தனுள் பிருதிவி அப்பு தேயுவடிவ யுயிரில் பொருளென் றுங்கொள்க. " நிலநீர் நீவளி விசும்போ டைந்துங், கலந்த மயக்க மூலக மா தலின்" என்பது தொல்காப்பியம். இதுபற்றி ஆசிரியர் நச்சினுர்க்கினியார் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மொழிமரபு 'மெய்யி னியக்க மகாமொடு சிவணும்' என்னும் சூத்திரவுரையில் " இறைவ னியங்கு திணைக்கண்ணு நிலத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் றன்மையாய நிற் குமா றெல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகரம் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்தவற்றின் றன்மையாயே நிற்குமென்பது சான்றோ ர்க் கெல்லா மொப்ப முடிந்தது. 'அகரமுதல' என்னும் குறளான் அக ரமிய முதலேயுடைய வெழுத்துக்க ளெல்லாம் அதுபோல இறைவனுகிய

படாத கடவுட் குண்மை கூறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என வுலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதலாதிபகவ னென்பது கருத்தாகக்கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுள் தண்மை கூறப்பட்டது.

தெளி:—(இதனது பதப்பொருள்). எழுத்தெல்லாம் - * எழுத்துக்க ளெல்லாம், அகரமுதல - அகரமாகிய முதலே யுடையன (அதுபோல), உலகு—உலகமானது, ஆதிபகவன் முதற்று—ஆதிபகவனுகிய முதலே யுடையது, (எ-று).

இக்குறள் தலைமைபற்றி வந்த வெடுத்துக்காட் டெவமையணி. அகரத் திற்குத் தலைமை (முதன்மை) † விகாரத்தாலன்றி நாதமாத்திரையாகிய வியல்பாற் பிறத்தலாலும், ஆதிபகவனுக்குத் தலைமை செயற்கை யுணர்வா லன்றி யியற்கை யுணர்வால் முற்ற மறிதலாலுங்கொள்க. தமிழெழுத்துக் களுக்கே யல்லாமல் வடவெழுத்துக்களுக்கும் முதலாதலே நோக்கி 'எழுத் தெல்லாம்' என்றார். ஆதிபகவனென்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை வடநூல் முடிபாதலின் வல்லொற்றுமிகாது இயல்பாயிற்று. உல கென்ற திங்கு உயிர்களின்மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தைக் கொ ண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச் சொல்லவேண்டுதலின் 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என்று உலகின்மேல் வைத்துச் சொல்லினார்; அப் படிச் சொல்லினாராயினும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தா கக்கொள்க. 'முதற்றே' என்னும் ஏகாரம் தேற்றப்பொருளது. இசையெய்பு ளால் முதற் கடவுளது இருப்புச் சொல்லப்பட்டது.

(கருத்து). உலகம் கடவுளை முதலாகவுடையது என்பது.

1. As the letter A is the intimate cause of all letters, so God is the intimate cause of the world.

---

2. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

முதலே யுடைத் துலகமென வள்ளுவனார் உவமைகூறிய வாற்றானும், கண் ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யான்' எனக்கூறிய வாற்றானும், பிறநூல்களானும் உணர்க". என்றார்.

* ஈண்டெழுத் தென்றது பரை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்னு நால்வகை வாக்கினுள், அகத் தெழுவனவாகிய பரைமுதல் மூன் றனையு மொழித்தெழுந்து புறத்திசைப்பதாகிய வைகரி வாக்கினை.

† விகாரத்தாலன்றி என்பதற்கு அண்பல் முதலனு வினிம்புறல் முதலிய தொழில்களால் பிறப்பதாகாது என்றும், இயல்பாற்பிறத்த லென்பதற்கு அங்ஙாங்கு கூறு முயற்சியாற் பிறத்தலென்றும், செயற்கை யுணர்வென்பத ற்கு நூலாராயசசி முதலியவற்றாலாய வறிவு என்றும், இயற்கையுணர் வென்பதற்கு இயல்பாகவேயுள்ள (ஐயந்திரிபின்றிய)வறிவு என்றும் கொள்க.

பரி.—(இ - ன்). எல்லா நூல்களையுங் கற்றவர்க் ககிகல்வியறிவா ஞய பயன் யாது, ‡ மெய்யுணர்வினை யுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின், (எ-று).

எவனென்னும் வினுப்பெயர் என்னென்ற ஈண்டின்மை குறித்து நின்றது. கொல்லென்ப தசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் 'நற்றாள்' என்றார் * ஆகம வறிவிற்குப்பயன் அவன்றாளைத் தொழுது பிறவி யறுத்தலென்பது இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). கற்றதனுல் - (எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்)கல்வி யறிவினுல், ஆய - உண்டாகிய, பயன் - பிரயோசனம், என் - யாது, வாலறிவன் - மெய்யறிவினை யுடையவனது, நற்றாள்-நல்லவடிகளை, தொழாஅர் எனின் - வணங்காராயின், (எ - று).

எவனென்னும் வினுப்பெயர் என்னென்ற யிங்கு இல்லை யென்னும் பொருளைக்குறித்து நின்றது. கொல்-அசைநிலை. பிறவிப்பிணியையொழித் தற்கு மருந்தாதலின் 'நற்றாள்' என்றார். நூலறிவிற்குப்பயன் அவனடிகளை வணங்கிப் பிறவியை யொழித்த லென்பது இதனுற் சொல்லப்பட்டது.

(க-து). மெய்யறிவுடைய கடவுளடியை வணங்காதவரதுகல்வி யறிவு பயனுடையதன்றும் என்பது.

2. What benefit have those derived from learning, who worship not the good feet of Him who is possessed of pure knowledge.

கூ. மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

பரி.—(இ-ன்). மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லாவுலகிற்கு மேலாய வீட்டுலகின்கண் அழி வின்றி வாழ்வார், (எ - று).

அன்பானினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் கினைந்த வடி வோடு விரைந்து சேறலின் 'மலிஞன்' என இறந்த காலத்தாற் கூறினர்; என்னை? †"வாராக் காலத்து நிகழுங் காலத்து, மோராங்கு வரூஉம் வினைச்

‡ மெய்யுணர்வு - ஐயந்திரி பின்றிய ஞானம்

* "ஆகம மென்ன மறுமுத லாகிய, வறனெடு புணர்ந்த நிறனறி நூலே" என்பது தண்டியலங்காரம்.

† இது தொல்காப்பியம் சொல்லதிகாரம் வினையியல் நாற்பத்தினுன் காஞ் சூத்திரம்.

இதன்பொருள் "எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாகவரும் வினைச்சொற் பொருண்மை யிறந்தகாலத்தாற் சொல்லுதல் விரைவுப்பொ ருளையுடைய." என்பது. [இது சேனவரையருரை].

சொற் கினெலி, யிறந்த காலத்துக் குறிப்பொடு கினத்தல், விரும்பிபொருள வெண்மனூர் புலவர்". என்ப தோத்தாகலின். இதனைப் " பூமேனடக் தான்" என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட் கேற்றுவாரு மூளர். சேர்தல்—இடைவிடாது கினைத்தல்.

தெளி:—(இ-ன்). மலர்மிசை-(அன்பரது மனத் தாமரையாகிய) மல ரினிடத்து, எகினுன்-சென்றவனது, மாணடி-பெருமை பொருந்திய வடி களே, சேர்ந்தார் - சேர்ந்தவர், நிலமிசை - (எல்லாவுலகங்களுக்கு மேலாகிய) மூத்தியுலகத்தின்கண், நீடுவாழ்வார் - அழிவில்லாது வாழ்வார், (எ - று).

மலரென்பது மலரையொத்தமனத்திற்காதலின் உவமையாகுபெயர். அன்பால் தியானிக்கின்றவரது மனத்தாமரையிடத்து அவர் கினைந்தவடி வோடு விரைந்து செல்லுதலால் ஏகுவானென எதிர் காலத்தாற் கூறுது "எகினுன்" என இறந்தகாலத்தாற்சொல்லினர். இது விரைவுபற்றி வந்த காலவழுவமைதி. மலர் மிசை யேகினுனென்பதை வேறு கடவுள்மீ தேற் றிக் கூறுவாருமூளர். சேர்தல் - இடைவிடாது தியானித்தல்.

(க-து). கடவுளடியைத் தியானிப்பவர் முத்தி யடைவர் என்பது.

3. They who meditate the sacred feet of Him who passes swiftly into the flower of the mind, shall flourish long in the highest of worlds.

ச. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பை யில.

பரி.—(இ-ள்). ஒருபொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல் லாதவனடியைச் சேர்ந்தார்க் கெக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா.

‡ பிறவித்துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர் களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகை யான் வருந்தன்பங்கள். அடிசேர்ந்தார்க் கவ்விரண்டு மின்மையின், அவைகாரணமாகவரு மூவகைத்துன்பங்களும் இலவாயின.

* மண்டலபுருடனிகண்டு அருகன் (சமணமதக்கடவுள்) பெயரைக் கூறுமிடத்து "பூமிசைநடந்தோன் போதன்" என்றும், புத்தன் (பௌத்த மதக்கடவுள்) பெயரைக்கூறுமிடத்து " பூமிசைநடந்தோன் புத்தன் " என்றுங் கூறுதலின், ' பூமேனடந்தான் ' என்பது அருகனையாவது புத்த னையாவது குறிக்குமென்க.

‡ பிறவித்துன்பங்களே வடநூலார் ஆத்தியாண்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்ப.

தெளி.—(இ-ன்). வேண்டுதல் - (ஒரு பொருளையும்) விரும்புதலும், வேண்டாமை-வெறுத்தலும், இலான் - இல்லாதவிறைவனது, அடி-பாதங்களே, சேர்ந்தார்க்கு - சேர்ந்தவர்க்கு, யாண்டும் - எக்காலத்திலும், இடும்பை - பிறவித்துன்பங்கள், இல - உண்டாவனவல்ல, (எ-று.)

பிறவித் துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையால் வருந்துன்பங்களாம். இறைவனது அடியையச் சேர்ந்தார்க்கு அவ்விருப்பு வெறுப்பிரண்டு மில்லாமையால் அவ்விருப்பு வெறுப்பு காரணமாக வருகின்ற மூவகைத் துன்பங்களும் இல்லையாயின.

(க-து). கடவுளடியைச் சேர்ந்தவர்களுக்குப் பிறவித்துன்பங்கள் இலவாம் என்பது.

4. To those who are united to the feet of Him who is without desire or aversion, evil shall never come.

மு. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பரி.—(இ-ள). மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை தீவினையென்னு மிரண்டு வினையு முளவாகா, இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பிநிரிடத்து, (எ-று).

இன்ன தன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் † அவிச்சையை 'இருள்' என்றும், நல்வினையும் பிறத்தற் கேதுவாகலான் 'இருவினையுஞ் சேரா' என்றுங் கூறினர். ‡ இறைமைக் குணங்களிலராயினுமையுடையரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றுமுடைய இறைவன் புகழே 'பொருள்சேர்புகழ்' எனப்பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல்.

தெளி.—(இ-ள்). இருள்சேர்—மயக்கத்தைப்பற்றி வருகிற, இருவினையும்-(நல்வினை தீவினையென்னும்) இரண்டுவினைகளும், சேரா-உண்டாகாவாம். இறைவன்-தலேவனது, பொருள்சேர் - மெய்ம்மைசேர்ந்த, புகழ்-கீர்த்தியை, புரிந்தார் மாட்டு - விரும்பினவரிடத்து, (எ-று).

† அவிச்சையை இருளென்பது "போதமென்பதே விளக்கொவ்வு மவித்தைபொய் யிருளாம்" என்று தாயுமானவர் கூறுமாற்றலு முணரப்படும். அவிச்சையென்பதன் பொருள் விசையையும் வேறுபட்டதென்பது; விச்சை - ஞானம்.

‡ இறைமைக் குணங்கள்—வியாபகத்துவம், சர்வஜ்ஞத்துவம், சர்வசக்திமத்துவம், நிட்களத்துவம், நியாமகத்துவம், சர்வபிரேரகத்துவம், அத்விதீயத்துவம், சர்வசுதந்தரத்துவம், சர்வேசுவரத்துவ முதலியனவாம்.

இத்தன்மையதான சொரூபமுடைய தென்று (கல்வியறிவால் மேம் பாடடைந்த மக்களுள்) ஒருவராலுங் குறிப்பிட்டுச் செரல்லப்படாமையால் அஞ்ஞானத்தை 'இருள்' என்றும், நல்வினையும் பிறத்தற்குக்காரணமாயிருத்தலால் 'இருவினையுஞ்சேரா' என்றும் சொல்லினர். தலைமைக்குணங்களில்லாதவரை அக்குணங்கள் உடையவரென்று நினைத்து அறிவிலார் சொல்லுகின்ற கீர்த்திகள் பொருள்சேராவாகலின் அவை முழுதுமுடைய தலைவனது கீர்த்தியே 'பொருள்சேர் புகழ்' எனப்பட்டது. புரிதல் - எப்பொழுதும் வாயால் துதித்தல்.

(க-து). கடவுளைத் துதிப்பவரிடத்துப் பிறவிக்கேதுவாகிய வினைகளிரண்டு மடையாவாம் என்பது.

5. The two-fold deeds (virtue & vice) that spring from darkness shall not adhere to those who delight in the true praise of God.

சு. † பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

பரி.—(இ-ள்). மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது ‡ மெய யான வொழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார் பிறப்பின்றி யேக்கா லத்து மோரு தன்மையராய் வாழ்வார், (எ-று).

புலன்கள் ஐந்தாகலான் அவற்றின்கட் செல்கின்ற அவாவும் ஐந்தாயி ற்று. ஒழுக்கநெறி ஐந்தவித்தானுஞ் சொல்லப்பட்டமையின் ஆண்டை அறனுரைப்பு * செய்யுட்கிழமைக்கண் வந்தது; "கபிலரது பாட்டு" என்பது

† பொறிவாயி லைந்தவித்தா னென்பது இருஷீகேச னென்னும் வடமொழிப்பெயரின் மொழிபெயர்ப்பாம். இதன் பொருள் இந்திரியங் கட் கீச (தலைவ)னாயிருப்பவனென்பது. இது விஷ்ணுவின் திருநாமங களு ளொன்று.

‡ மெய்யான வொழுக்க நெறியைப் போதிப்பது வேதமாகலின் அதன்நெறி பொய்தீ ரொழுக்கநெறி' என்று கூறப்பட்டது. இது 'வேதமும் மற் றெருன்றினுக்குச் சேட மாகா, தெத்தகைய வுயிர்களுக்குந் தாய்போல வுண்மையே யெடுத்தியம்பும்' என்றும், " ஆதலான் மறையிற் சொலப் பட்ட வருத்தமே யுண்மையானது " என்றும் சூதசங்கிதை கூறுவதால் நன்கு விளங்கும்.

* செய்யுட்கிழமை ஒலிவடிவால் தற்கிழமையும் வரிவடிவால் பிறி தின் கிழமையுமாம்; இது பொருட்பிறிதின்கிழமையி லடங்கும்.

போல. இவை நான்கு பாட்டாலும் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்றலுஞ்செய்தார் வீடுபெறுவரென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). பொறிவாயில் - (மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்) பொறிகளை வழிகளாகவுடைய, ஐந்து - ஐந்தாசைகளையும், அவித்தான் - ஒழித்தவனது, பொய்தீர் - மெய்யான, ஒழுக்கநெறி- ஒழுக்கவழியில், நின்றார் - (வழுவாது) நின்றவர், நீடுவாழ்வார்-பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வர், (எ-று).

சுவை, ஒளி, ஊறு, ஓசை,நாற்றம் என விஷயங்கள் ஐந்தாகவின் அவற்றிற் செல்லுகிற ஆசையும் ஐந்தாயிற்று. ஐந்தவித்தானது ஒழுக்கவழி அவனுற்சொல்லப்பட்ட வேதமாக்கம். ஐந்தவித்தான் பொய்தீரொழுக்க நெறி என்புழித் தொக்குநின்ற ஆறனுருபு செய்யுட்கிழமைப்பொருளது. அது விரியுமிடத்து ஐந்தவித்தானது பொய்தீரொழுக்கநெறி எனவிரியும். இவை நான்கு பாட்டாலும் கடவுளை நினைத்தலும் வாழ்த்துதலும், அவன் வழியில் நிற்றலுமுடையார் முத்திபெறுவரென்பது சொல்லப்பட்டது.

(க-து.) கடவுள் கூறிய நூல் வழியே யொழுகுபவர் பிறப்பகன்றினிதிருப்பர் என்பது.

6. Those shall long prosper who abide in the faultless way of Him who has cut off the five desires of the senses.

எ. * தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

பரி.—(இ-ள்). ஒருவாற்றானுந் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க் கல்லது மனத்தின்கணிகழுந் துன்பங்களை நீக்குதலுண்டாகாது, (எ-று).

† "உறற்பால நீண்டா விடுதலரிது" என்றற்போல ஈண்டருமை இன்மைமேனின்றது. தாள்சேராதார் பிறவிக்கேதுவாகிய காமவெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின் பிறந்திறந் தவற்றான் வருந்துன்பங்களுள் அழுந்துவ ரென்பதாம்.

தெளி.—(இ-ள்.) தனக்கு உவமையில்லாதான் - (ஒருவகையினுமும்) தனக்கு ஒப்பில்லாதவனது, தாள் - பாதங்களை, சேர்ந்தார்க்கல்லால்-சேர்ந்

'தனக்குவமையில்லாதான்' என்று கூறப்பட்டதாயினும் தனக்குமிக்காருமில்லானென்றுங் கொள்க. "ஈடு மெடுப்புமி லீசன்" என்பது திருவாய்மொழி.

† இது நாலடியார் பழவினை 1-வது செய்யுளின்க ணுள்ளது. இதன் பொருள் (ஊழால்) வரத்தகுவன (ஒருவனை) சேராமற்போவது இல்லை யென்பது.

தவர்களுக்கல்லது, மனக்கவலை - மனத்தில் (தோன்றும்) துன்பங்களை, மாற்றல் - நீக்குதல், அரிது - உண்டாகாது, (எ-று).

இக்கு அரிதென்னுமுற்றின் பகுதியாகிய அருமை இல்லையென்னும் பொருளில் வந்தது. உவமையில்லாதவனது பாதங்களைச் சேராதவர் பிறவிக்குக்காரணமாகிய காமவெகுளிமயக்கங்களை நீக்கமாட்டாமையின், பிறக்கிறந்து அக்காம வெகுளி மயக்கங்களால் வருகிற துன்பங்களுள் அழுந்துவர் ரென்பதாம்.

(க-து). கடவுளடியைச் சேர்ந்தவர்களுக்கு மனக்கவலை யில்லை என்பது.

7. Anxiety of mind cannot be removed, except from those who are united to the feet of Him who is without likeness.

அ. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

பரி.—(இ-ள்). அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது, (எ-று).

அறம் பொருளின்பமென வுடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப்பிரித்தமையான், ஏனைப் பொருளும் இன்பமும் 'பிற' எனப்பட்டன. † பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுந் தனக்கு வடிவாக உடையதனாலின் 'அறவாழியந்தணன்' என்றார். 'அறவாழி' என்பதனைத் தருமசக்கர மாகவு மதனையுடைய அந்தணனென்றுரைப்பாரு முளர். அபயுணையைச் சேராதார் கரைகாண தவற்றுள்ளே அழுந்துவராகலின் 'நீந்தலரிது' வென்றார். ‡ இஃதேகதேச வுருவகம்.

தெளி.—(இ-ன்). அறவாழியந்தணன்-தருமக்கடலாகிய கடவுளது, தான் - அடியாகிய (மரக்கலத்தை), சேர்ந்தார்க்கல்லால் - சேர்ந்தவர்களல்லாமல், பிறவாழி - (அதனின்) வேறுகியகடல்களை, நீந்தல் - கடத்தல், அரிது - கூடாது, (எ-று).

அறம்பொருளின்பமென வுடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்புபிரித்ததனால் மற்றைப்பொருளு மின்பமும் 'பிற' எனப்பட்டன.

† "அறமே சிவனுக் கொருவடிவ மாகும்" என்பது காஞ்சிப்புராணம்.

‡ ஏகதேசவுருவகமாவது ஒருபகுதியை யுருவகஞ்செய்து மற்றொரு பகுதியை யுருவகஞ்செய்யாமல் விடுவது. உருவகமாவது உவமையையும் பொருளையும் வேற்றுமையொழிவித் தொன்றென்னும் உள்ளுறை தோன்றவைப்பது. பிறவென்னும பொருளின்பங்களை ஆழி (கடல்) எனவுருவகப்படுத்தித் தாளை (அடியை) ப்புணை என் றுருவகப்படுத்தாமையின் ஏகதேச வுருவகமாயிற்று

பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுந் தனக்கு வடிவமாக உடையவனுதலின் ' அறவாழியந்தணன் ' என்றார். அறவாழியென்பதற்குத் தருமசக்கரமெனப் பொருள் கூறுவாருமுளர். அம் மரக்கலத்தைச் சேராதவர் கரைகாணுது பொருளின்மென்னுமக்கடலுள்ளே அழுந்துவாராகலின் 'நீந்த லரிது 'என்றார். இஃது ஏகதேச வுருவகவணி.

(க-து). கடவுளடியைச் சேராதவர் பொருளும் இன்பமுமாகிய கடல்களை நீழலுவர் என்பது.

8. None can swim the sea of vice, but those who are united to the (ship of) feet of that gracious Being who is himself a sea of virtue.

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

பரி.—(இ-ள்). தத்தமக் கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகளைபோலப் பயன்படுதலுடையவல்ல, எண்வகைப்பட்ட குணங்களை யுடையானது தாளை வணங்காத தலைகள், (எ-று).

† எண்குணங்களாவன:—தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களை நீங்குதல், பேரருளுடைமை, முடிவி லாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது. ‡ அணிமாவை

† எண் குணங்களின அர்த்த விசேடங்களைச சிவஞானவள்ளலார் பதிசங்கையிற் காண்க.

‡ ' அணிமாவை முதலாக வுடையன ' எண்வகைப்படும். அவை அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்பன. (1) தேகம் பரமாணுபோன்று மிகச்சிறிய வருவினை யுடையதாதல் அணிமாவெனவும், (2) தேகம் ஆகாயம்போன்று மிகப் பெரிய வருவினை யுடையதாதல் மகிமாவெனவும், (3)தேகம் மலைபோன்று மிகக்கனத்திருத்தல் கரிமாவெனவும், (4) தேகம் திருப்புபோன்று கனமின்றி மிகலொய்தாயிருத்தல் லகிமாவெனவும், (5)விரும்பியதை விரும்பியவா றடைதல் பிராப்தியெனவும், (6) பரகாயப் பிரவேசஞ்செய்தல் ஆகாய கமனம்புரிதல் இச்சித்த சர்வபோகங்களையு மிருந்தவிடத்திற் பெறுதல் சூரியவொளியால் பொருள்களைக் காணுமாறு போன்று தனதுடலொளியால் பொருள்களைக்காண்டல் திரிகாலவுணர்ச்சி முதலியன பிராகாமியமெனவும், (7) எத்தகையோர்க்கு மேம்பட்டிருத்தல் ஈசத்துவமெனவும். (8) சராசரப்பொருள்களியாவற்றையுந் தன்வசமாக்கல் வசித்துவமெனவுமறிக இவற்றின் விரிவைத் திருவிளையாடற் புராணம் அட்டமாசித்தி யுபதேசித்த படலத்திற் காண்க.

முதலாகவுடையன வெனவும், † கடையிலா வறிவை முதலாகவுடையன வெனவும் உரைப்பாரு முளர். காணுத கண்முதலியனபோல வணங்காத தலைகள் பயனில வெனத் தலைமேல் வைத்துக் கூறினார்; கூறினுரேனும், ¶ இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பதூஉங் கொள்க. இவை மூன்றுபாட்டானும் அவனை ‡ நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

தேளி.—(இ - ன்). கோளில்-(தத்தமகேற்ற விஷயங்களைக்) கொள்ளுதலில்லாத, பொறியின்—இந்திரியங்களைப்போல, எண்குணத்தான்-எண்வகைப்பட்ட குணங்களையுடைய இறைவனது, தாளை-பாதங்களை, வணங்காத்தலை - தொழாத தலைகள், குணமிலவே - பயன்படாத வுடையனவல்லவாம், (எ - று).

எண் குணங்களாவன:—சுவதந்திரதத்துவம், விசுதததேகம், நிராமயான்மா, சர்வஞ்ஞத்துவம், அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, திருப்தி என்பனவாம். இங்ஙனம் சைவாகமத்திற் சொல்லப்பட்டது. எண்குண மென்பதற்கு அணிமாமுதலிய வெண்குணமென்றும் கடையிலாவறிவுமுதலிய வெண்குணமென்றும் பொருள் கூறுவாருமுளர். காணுத கண்முதலானவைபோல வணங்காத தலைகள் பயனில வெனத் தலைமேல் வைத்துச் சொல்லினார்; அங்ஙனஞ் சொல்லினுரேனும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அப்படியே பயனிலவா மென்பதுங்கொள்க.

இவை மூன்றுபாட்டாலும் அவனை நினைத்தலும் வாழ்த்தலும், வணங்கலும் செய்யாவிடத்துண்டாகின்ற குற்றஞ் சொல்லப்பட்டது.

(க-து). கடவுளது அடியை வணங்காத தலையும் வாழ்த்தாத நாக்கும் பயன்படுத வுடையன வாகாவாம் என்பது.

9. The head that worships not the feet of Him who is possessed of eight - fold attributes, is as profitless as a sense without the power of sensation.

† 'கடையிலாவறிவை முதலாகவுடையன' எண்வகைப்படும். அவை கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்பனவாம். இவ்வாறு சமணர்கள் கூறுவர். "கடையிலா வறிவொடு" என்னுஞ் சித்தாமணிச் செய்யுளிங் கறியத்தக்கதாம்.

¶ வணங்காத்தலைகள் வாழ்த்தாத நாக்களுக்கு உபலட்சணமாய நின்றன. உபலட்சணமாவது ஒரு மொழி ஒழிதலின்றி தன்னினங்களைக் கொள்ளுதற்குரித்தாய் வருவது. இது விடாத வாகுபெயரின்பாற் படும்.

‡ நினைத்தல் மனத்தினாலேயும், வாழ்த்தல் வாக்கினாலேயும், வணங்கல் காயத்தினாலேயுமாம்.

க○. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
நிறைவ னடிசேரா தார்.

பரி.—(இ-ள்). இறைவ னடியெனினும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரியகடலை நீந்துவர், அதனைச் சேராதார் நீந்தமாட் டாராய அதனு ளழந்துவர், (எ-று).

* காரண காரியத தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் 'பிற விப் பெருங்கடல்' என்றார். சேர்ந்தா ரென்பது † சொல்லெச்சம். ‡ உல கியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும ¶ அவ்வாறன்றி மாறி நினைப்பார்க் கஃதருமையும் ஆகிய இரண்டும் இத னால் நியமிக்கப்பட்டன.

தெளி —(இ-ள்). இறைவன்-தலைவனது, அடி - பாதமாகிய (மரக் கலீத்தை) (சேர்ந்தார்), பிறவிப்பெருங்கடல்-பிறவியாகிய பெரிய கடலை, நீந்துவர்-கடப்பார், சேராதார் - (அம்மரக்கலத்தைச) சேராதவர், நீந்தார் - கடக்கமாட்டாதவராகி யக்கடலு ளழுந்தா நிறபர், (எ - று).

* விதையினுள் மூலாயு (மரமு) ம் மூலையினுள் விதையும் தொனறு தொட்டுத் தோன்றி வருவது போல, முற்சன்மத்தின கருமத்தா லிச்சன்ம மும் இச்சன்மத்தின் கருமத்தா லினிவருஞ் சன்மமுமாகத் தொன்று தொட்டுக் காரண காரியத் தொடர்சி யுடையதாய்ச சன்மம்முடிவில்லாது வருதலின் அது 'பிறவிப்பெருங்கடல்'என்று கூறப்பட்டது. பிறவியைக் கடலாக வுருவகப்படுத்திக்கூறுவதேயன்றி மாமாக வுருவகப்படுத்திக்கூற வதுமுண்டி. பிறவிக்கடலின் வர்ணனையைச சிவஞான போதத்திலும் பிறவிமரத்தின் வர்ணனையைப் பகவற்கீதை பதினைந்தாவ தத்தியாயத திலுங் காண்க.

† சொல்லெசமாவது செய்யுளி லொருசொற்கு முன்னுவது பின் னுவது சொல்மாத்திரம் குறைந்து நிற்பது. ''சொல்லென் னெச்ச முன் னும பின்னுஞ், சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே'' என்பது தொல்காப் பியம்.

‡ உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைத்தல் சவிகற்ப சமாதி, அல்லது சம்பிரஞ்ஞாத சமாதியெனப்படும். இதற்கிலக்கணம் '' விஜாதீயப் பிரத்தியய விருத்திகளின் அந்தராயமி (மறைப்பி) ன்றிய தைல தாரைபோனறு இடையீடில்லாத சஜாதீயப் பிரஹமாகார விருத திப்பிரவாகம்'' என்று யோகநூல் கூறுகின்றது.

¶ அவ்வாறன்றி மாறிநினைத்தல்—அவ்வாறு சமாதிபுரியாது தான் (ஆத்மா) அல்லாத வுடம்பை யானென்றும் தன்னே டியைபில்லாத பொருளே யெனதென்றுங் கருதுதல்.

இப்பிறப்பிற்கு முற்பிறப்புக் காரண மாகவும் இப்பிறப்பு இனிவரும் பிறப்பிற்குக் காரணமாகவு மிருத்தலின் இப்பிறப்பு மூற்பிறப்பை நோக்கக் காரியமும் இனிவரும் பிறப்பை நோக்கக் காரணமுமாம். இவ்வாறு தொன்முதொட்டுக் காரணகாரியத தொடர்ச்சி யுடையதாயப் பிறவி யெல்லையில்லாது வருதலால் 'பிறவிப் பெருங்கடல்' என்றார். சேர்ந்தார் என்னுஞ் சொல் குறைந்து நின்றமையின் அது வருவித் துரைக்கப்பட்டது. இவ்வாறு வருவது சொல்லெச்சமெனப்படும். உலகியல்பை நினையாமல் கடவுளடிகளையே நினைப்பவர்க்குப் பிறவி நீங்குதலும் அங்ஙனஞ்செய்யாது வேறுபட்டி (உலகியல்பாகிய பொருளினைபங்களை) நினைப்பவர்க்கு அப்பிறவி நீங்காமையுமாகிய விரண்டும் இக்குறளால் நிச்சயிக்கப்பட்டன.

(க-து). கடவுளது அடியைச் சேர்ந்தவர் பிறவிக்கடலைக் கடத்தலும், சேராதவர் அதனைக் கடக்க மாட்டாமையு முடைய ராவர் என்பது.

10. None can swim the wide extended sea of births, but those who are united to the (ship of) feet of God.

இரண்டாம் அதிகாரம்.

வான்சிறப்பு—The Excellence of Rain.

பரி.—அஃதாவது † அக்கடவுள் தானேயான் உலகமும் அதற் குறுதியாகிய அறம் பொரு ளின்பங்களும் நடத்தற் ‡கேதுவாகிய மழையினது சிறப்புக்கூறுதல். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

தெளி.—அஃதாவது கடவுளது ஏவலால் உலகமும் அதற்கு உறுதியைத் தருவதாகிய அறம் பொரு ளின்பங்களும் நடத்தற்குத் துணைக்காரணமாகிய மழையினது சிறப்பைச் சொல்லுதலாம். கடவுள் வாழ்த்தின் பின் வான்சிறப் பென்னும் அதிகாரம் வைத்த முறைமையும் இதனாலே விளங்கும்.

க. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

† ஒவ்வொரு சிருட்டியி னாரம்பத்திலுங் கடவுளிடத்து ஜீவர்களின் காலகன்ம பரிபாகத்திற் கியைய இவ்வளவுகாலம் மழையுண்டாகுக, இவ்வளவுகாலங் குளிருண்டாகுக, இவ்வளவுகாலம் வெயிலுண்டாகுக என்றற் றொடக்கத்தனவாகச் சங்கற்ப முண்டாகின்றதென்பது சாஸ்திரநிச்சயம்.

‡ "கருவி மாமழை" என்பது கைடதம், சித்தாமணி.

பரி.—(இ-ள்). மழை யிடையறது நீம்ப உலகம் நிலைபெற்று வருத லான் அம்மழை தான் உலகத்தீம் † சமிழ்தமென் றுணரும் பான்மை யை யுடைத்து. (எ - று).

‡ நிற்ப வெனபது ன்றெனத திரிந்து நின்றது. உலக மென்றது ஈண்டுயிர்களை. அவை நிலைபெறறு வருதலாவது பரப்பிடையருமையின் எஞ்ஞான்று முடமபோடு காணப்படடு வருதல். அமிழ்த முண்டார் சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலைபெறுத்தலை வானை 'அமிழ்த மென் றுணரற்பாற்று' என்றார்.

தெளி.—(இ-ள்). வான—மழையானது. நின்று - (நடவே நீங்காது) நிற்க. உலகும் - உயிர்கள், வழங்கிவருதலால - நிலைபெறறு வருதலினால, தான் - (அமமழை) தான், அமிழ்தமென்று - (உயிர்களுக்கு) அமிழ்த மென்று, உணரற்பாறறு - அறியுந்தன்மையை யுடையதாம். (எ-று).

நிறபவெனபது ன்றெனத் திரிந்தது உலகமென்பதிங்கு குடிர்கள் மேல் நின்றது. அவ்வுயிர்கள் நிலைபெறறு வருதலாவது பிறப்பு நடவே நீங் காமையால எக்காலமும் உடமபோடு காணப்படடுவருதல். அமிழ்தமுண்டார் சாவாது நிலைபெறுதலின் உயிர்களை நிலைபெறச செயயும் மழையை 'அமி ழ்தமென் றுணரற்பாற்று' என்றார்.

(க-து). உயிர்கள் நிலைபெற்று வருதற்கேது மழையாம் என்பது.

1. As by the continuance of rain the world subsists, it is worthy to be called ambrosia.

உ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

பரி.—(இ-ள்). உண்பார்க்கு நல்ல வுணவுகளை யுளவாக்கி அவற் றை யுண்கின்றநிச்சுத் தானுமுணவாய நீர்மைதூஉ மழை, (எ-று).

தானு முணவாதலாவது தணணீரா யுண்ணப்படுதல். சிறப்புடைய வுயிர்திணைமேல் வைதது கூறினமையின், ஆஃறிணைகளு மிங்கொக்கும். இவ்வா முயிர்களது பசியையும் நீரவேட்கையையும் நீகுதலின, அவை வழங்கிவருத லுடையவாயின எனபதாம்.

† அமிழ்தம - மரணத்தை யொழிப்பதென்னும் பொருளது. இஃது அம்ருதமென்னும் வடமொழியின் திரிபு.

‡ "நின்றென்னும்" செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம் வழங்கி வருதலாலெனனும் வேறு வினைமுதல்வினையெச்சமாகாமை முடிதற்கு வினி யில்லாமையின் "நிற்ப வென்பது ன்றெனத்திரிந்து நின்றது" எனறார்.

தெளி —(இ-ன்). தப்பார்க்கு - உண்பவருக்கு, தப்பாய - உண்மையாகிய, தப்பாக்கி - உணவுகளேயுண்டாகிக், தப்பார்க்கு-(அவ்வுணவுகளே) உண்கின்றவருக்கு, தப்பாயதூம் - (தானும்) உணவாயகிற்பதும், மழை-மழையாம், (எ-று).

தானும் (மழையும்) உணவாதலாவது தண்ணீரா யுணணப்படுதல் (தப்பார்க்கென்று) சிறப்புடைய உயிரினமே மேல் வைத்துச் சொலலுதலின், (மற்றையுயிர்களாய) அஃறிணைகளும் இஃது ஒகும். (உணவாக்கல் உணவாதலென்று) இப்படி உயிர்களது பசியையுந் தாகதையும் நீக்குதலால், அவ்வுயிர்கள் வழங்கிவருதல் உடையனவாயின வென்பதாம்.

(க-து). உண்பவருக குணவுகளே யுண்டாகிக தானும் உணவாக நிற்பதும் மழைபாம என்பது.

2. Rain produces good food, and is itself food for those who eat.

கூ. * விண் † ணின்று போய்ப்பின் ‡ விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

பரி:—(இ-ள்). மழை வேண்டுங்காலத்துப் பெயயாது போயக்கு மாயின் கடலாற் சூழப்பட்ட அகன்ற வுலகத்தின்கணிலெபெற் றுயிர் களை வருத்தும் பசி, (எ-று).

கடலுடைத் தாயினு மதலுற் பயனில்லே யெனபார் 'விரிநீரா வியனுலகத்தவ்' எனறார். உணவினமையின் பசியா னுயிர்க விறக்கும என்பதாம்.

தெளி:—(இ-ள்). விண-மழையானது, இன்று - (பெய்யவேண்டுங காலத்தில) பெயயாமல், பொய்ப்பின-போயகு டாயின், விரிநீர்-கடலாற சூழப்பட்ட, வியனுலகத்தின் - பாரத வுலகத்திலுள, பசி - பசியானது, நின்று-நிலெபெற்று, உடறறும் - (உயிர்களை) வருததும், (எ-று).

கடலுடைத்தாயினும் அதனலுயிராளுகுப் பயனிலலே யென்பார் 'விரிநீர் வியனுலகதது' எனறார். உணவிலலாமையினல் பசியால உயிர்கள் இறக்கு மெனபதாம்.

(க-து). மழைபெய்தல் தவறுமாயின் பசியால் உயிர்கள் வருந்தி யிறக்கும எனபது.

---

* விண் - ஆகாயம்; அஃது இடவாகுபெயராய மழைக்காயிற்று.

† இல்லாமலென்னும் பொருளேயுடைய இன்றி யென ஞஞ்சொல் சண்டு இன்று எனத்திரிந்து நின்றது. நின்றெனனும பிரிக்கலாம்.

‡ கடலிலும் விரிநதநீர் மற்றொன்றில்லாமையின், அது 'விரிநீர்' என்று சொல்லுப்பட்டது.

3. When clouds withhold rain deceiving (our hopes),hunger will long give distress to the sea-girt spacious world.

ச. ஏரி னுழாஅ ருழவர் ¶ புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

பரி:—(இ-ள்). உழவர் ஏரா னுழுதலைச் செய்யார்,மழையென்னும் வருவாயி தன்பயன் குன்றின், (எ-று).

குன்றியக்காலென்பது குறைந்துகின்றது. உணவின்மைகுக் காரணங் கூறியவாறு.

தெளி.—(இ-ள்). உழவர் - உழுதொழில் செய்வோர், ஏரின் - ஏரினால், உழாஅர்-உழுதலைச்செய்யார், புயலென்னும் வாரி - மழையென்னும் வருவாய்,வளங்குன்றிக்கால்-(பெய்தலாகிய தன்) பயன்குறையின், (எ-று).

குன்றியக்காலென்பது செயலுள் விகாரத்தால் குன்றிக்கா லெனக் குறைந்துகின்றது. உணவில்லாமைக்குக் காரணஞ் சொல்லியபடியாம்.

" மல்லலூடு வளமே வாரி பருதியும் வருவா யின்பே " என்பது நிகண்டு.

(கு-து). மழை வளங்குறைந்தால பயிரசெய் மாக்கள் ஏருழா ரென்பது.

4. If the flow of wealth-imparting rain diminish,the fruitful toils of the plough must cease.

ரு. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

பரி:—(இ-ள்). பூமியின்கணுள வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம் அவ்வாறு கெடடார்க்குத் துணையாய்ப பெயது முன்கெடுத்தாற்போல எடுபபதூஉம் இவை யெல்லாம் வல்லது மழை,(எ-று).

* மற்று வினைமாற்றின்கண் வந்தது. † ஆங் கென்பது மறுதலைத்

¶ புயல்—மேகம்; அது சுர்த்தாவாகுபெயராய் மழைக்காயிற்று.

* பெய்யாது நின்று கெடுப்பதென்னும் வினையைப் பெய்துகெடுக்காது எனமாற்றியதினால் மற்று வினைமாற்றின்கண்வந்தது.

மற்று என்னும் இடைசசொல் முன் சொல்லுகின்ற தொழிய இனி வேறொன்று என்னும் பொருளைக் குறிக்குமிடதது வினைமாற்றெனப் படுகின்றது.

† எடுப்பது என்னும் தொழிலுக்கு விரோதமாகிய கெடுப்பது என்னும் மறுதலைதொழிலை யுவமையாக ஆங்கு என்பது (முன் கெடுத்தாற் போல எனக்) குறிப்பித்தல்பற்றி 'ஆங்கென்பது மறுதலைத் தொழிலுவமத்தின்கண் வந்தது என்று கூறப்பட்டது.

தொழி லுவமத்தின்கண் † வந்தது. கேடும் ஆக்கமும் எய்துதற் குரியார் மக்களாதலின் 'கெட்டார்க்கு' என்றார். 'எல்லாம்' என்றது அம் மக்கண் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்களாம் பலவாதல் நோக்கி. வல்ல தென்பது ‡ அவாய்நிலையான் வந்தது. மழையின தாற்றல் கூறியவாறு.

தெளி:—(இ-ள்). கெடுப்பதூஉம்-(பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று) கெடுப்பதும், கெட்டார்க்கு - (அவ்வாறு) கெட்டவர்க்கு, சார்வாய் - துணையாய்ப் (செய்து), மற்றுங்கே - மீண்டுகெடுத்தாற்போல, எடுப்பதூஉம் - (அவரை) எடுப்பதும், எல்லாம் - (இவை) எல்லாம் (வல்லது), மழை - மழையாம், (எ-று).

மற்று கெடுக்காதெண்ணும் வினைமாற்றுப்பொருளில் வந்தது. ஆங் கென்பது மறுதலைத்தொழிலுவமைப்பொருளில் வந்தது. கேடும் பெருக்கமும் பெறுதற்குரியவர் மக்களாதலால் கெட்டார்க்கு' எனறார். 'எல்லாம்' என்றது அம்மக்களது முயற்சி வேறுபாடுகளால் கெடுதலெடுத்தல்கள் பலவாதலே நோக்கியாம். வல்லதென்பது அவாய நிலையால் வந்தது. மழை யினது வல்லமையைச சொல்லியபடியாம்.

(க-து). மக்களுக கெடுபடாதுங காபபது மழையாம் என்பது.

5. Rain by its absence ruins men, and on the other hand helping, restores them to fortune; such is the power of rain.

சு. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

பரி.—(இ-ள்). மேகத்தி னிடத்துள்ள துளிவிழுந் தாபதத்தினது வீழாதா யின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்டலரிது, (எ-று).

விசும்பு—ஆகுபெயர். மற்று வினைமாற்றினகண் வந்தது. இழிவு சிறப்புமை விகாரதத்தாற் றொக்கது. ஓரறி வுயிரும் நில்லை யென்பதாம்.

தெளி.—(இ-ள்) விசும்பின் - மேகத்தினிடமும், துளி - மழைத் துளிகள், வீழின்மல்லால் - வீழிற்காண்பதல்லாமல், மற்று - வீழாதாயின், ஆங்கே-அப்போழுதே, பசும்புற்றலை-பசும்புல்லினது தலையையும், காண்பு-காணுதல், அரிது - கூடாது, (எ-று).

விசும்பு—இடவாகுபெயர். மற்று வீழாதாயி னென்னும் வினைமாற் றுப் பொருளில் வந்தது. தலையுமென்னும் இழிவு சிறப்புமை செய்யுள்

† வந்த வுவமச்சொல் என்றும் பாடமுண்டு.

‡ அவாய்நிலையாவது ஒருபதம் தன்னைமுடிப்பதொருபதம் இல்லாத வழி முடிவு பெறாது நிற்றல். எல்லாமென்பது வல்லதென்பதை யவாவி நின்றது.

விகாரத்தால் தொக்கது. (புல்முதலிய) ஓரறிவுயிரும் இல்லாமற் போமென்பதாம். புற்றலே எனபதற்குப் பனைமரத்தின் கொழுந்தென்று பொருள் கூறுவாருமுளர்.

(க-து). மழை பெய்யாதாயின் ஓரறிவுயிரையுங் காணுதலரிதென்பது.

6. If no drop fall from the cloud, not even a head of green blade of grass will be seen.

எ. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

பரி:—(இ-ள). அளவில்லாதகடலுந் தன்னியல்பு குறையும்,மேகந் தான் அதனைக்குறைத் ததன்கட் பெயயாது விடுமாயின், (எ-று).

உம்மை - சிறப்பும்மை. தன்னியலபு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும் * மணிமுதலாயின படாமையுமாம். ஈண்டுக் குறைத்தலென்றது முகத்தலே; அது ¶ " கடலகுறை படிதநீர் கல்குறை படவெழிந்து " என்பதனுனு மறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழைவேண்டுமென்பதாம்.

இவை யேழு பாட்டானும மழை உலக நடத்தற் கேதுவாதல் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). நெடுங்கடலும் - அளவிடற் கியையாத கடலும், தன்னீர்மைகுன்றும் - தனனியல்பு குறையும், எழிலிதான் - மேகந்தான, தடிந்து - (அக்கடலைக்) குறைத்து, நல்காதாகிவிடின் - (அக்கடலிடத்துப்) பெயயாது விடுமாயின், (எ-று).

கடலுமென்ற உம்மை உயர்வுசிறப்புமை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழும மீன்முதலிய வுயிர்கள பிறவாமையும் மணிமுதலானவை உண்டாகாமையுமாம். இங்குக் குறைதல லென்றது மொள்ளுதலே. மழைக்கு முதலாகிய கடலுக்கும் மழைவேண்டுமென்பதாம.

இவை எழுபாட்டாலும் மழை உலகம் நடைபெறுதற்குத் தானே காரணமாதல் சொல்லப்பட்டது.

மணிமுதலாயின - முத்து, பவளம் முதலியனவாம். " கடலுக்குப பெருமை முத்தும் பவளமும் படுவது. வைகாசியிலே ஞாயிற்றுச் சோதியின் மழையிலே முதற்றிற்குக்கரு, ஐப்பசிப் பூசதது மழையிலே பவளத்திற்குக்கரு; ஆகலின் மழையில்லாத விடத்துக் கடல்பெருமை குறையும்" என்பர் கடலியல்புணர்ந்தார.

¶ பரிபாடல். இதனபொருள்(மேகமாலாதி)கடலினின் றும்மொண்ட நீரை மலையினது நிலைமை நோக்கியும் படி(யதன்கண்)பொழிது என்பது.

(க-து). மழை பெய்யாவிட்டால் கடலும் வளங்குறையு மென்பது.

7. Even the wealth of the wide sea will diminish, if the cloud that has drawn (its waters) up give them not back again (in rain).

அ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

பரி.—(இ-ள்). தேவர்கட்கு மிவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவோடுகூடிய பூசை நடவாது, மழைபெயயாதாயின், (உ-று).

† நைமித்திகத்தோடு கூடிய நித்திய மென்றாகலின் 'செல்லாது' என்றார். உம்மை சிறப்பும்மை. நித்தியதிற் றூய்வு தீரசெய்வது நைமித்திக மாதலின் அதனை முற்கூறினர்.

தெளி.—(இ-ன்).—வானோர்க்கும்-தேவர்களுக்கும், ஈண்டு - இவ்வுலகத்தில், சிறப்பொடு-(மக்களாற் செய்யப்படும்) திருவிழாவுடன் (கூடிய), பூசனை - பூசையானது, செல்லாது - நடவாது, வானம்வறக்குமேல் - மழைபெய்யாதாயின், (எ - து).

(விழாவென்னும்) நைமித்திகத்துடன் கூடிய (பூசையென்னும்) நித்தியமென்றாதலால் 'செல்லாது' என்றார் நித்தியத்தில் (பூசையில்) தாழ்வு தீரசெய்வது (விழா வெனலும்) நைமித்திகமாதலின் அதனை (சிறப்பொடு என) முன்பு கூறினர். வானோர்க்கு மென்ற வும்மை உயர்வு சிறப்பும்மை.

(க-து). மழை பெய்யா தொழியின் தேவர்கட்குந் திருவிழாவுடன் கூடிய பூசை நடவாதென்பதாம்.

8. If the heaven dry up, neither yearly festivals, nor daily worship will be offered in this world to (Gods) inhabitants of heaven.

கூ. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

† யாதானுமோர் நிமித்தம் பற்றிச செய்யுங்கன்மம் நைமித்திக கன்ம மெனப்படும். அது நிரகண காலத்திற் செயயும்நிரார்த்தம் சமுத்திர ஸ்நான முதலியனவாம். எப்போதும் செயயுங் கனமம நித்திய கனமமெனப்படும், அது ஸ்நானம், சந்தியாவந்தனம், தேவபூஜை முதலியனவாம்.

பரி.—(இ-ள்). அகன்ற வுலகின்கண் தானமுந் தவமுமாகிய விரண்டறமும் உளவாகா, மழை பெய்யாதாயின், (எ - று).


தானமாவ தறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்குவகையோடுங்கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களா னுண்டிசுருக்கல் முதலாயின. பெரும்பான்மைபற்றித்தானம் இல்லறத்தின்மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன.

தேளி.—(இ-ள்). வியனுலகம் - விரிந்தவுலகத்தில், தானந் தவமிரண்டும்—தானமும் தருமமுமாகிய வீரண்டறங்களும், தங்கா-உளவாகாவாம், வானம் - மழை, வழங்காதெனின் - பெய்யாதாயின், (எ-று).

தானமாவது தருமவழியால் வந்தபொருள்களைப் பெரியோர்க்கு மகிழ்சியோடுங்கொடுப்பது. தவமாவது மனம் (கண்முதலிய) பொறிவழியிற் போகாமல் நிற்கும்பொருட்டு விரதங்களால் உணவைச சுருக்குதல் முதலானவையாம். மிகுதிபற்றித் தானம் இல்லறத்தின் மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன.

(க-து). மழை பெய்பா தொழியின் தானமும் தவமு முண்டாகா வென்பது.

9. If rain fall not, alms - deeds and penance will not dwell within the spacious world.



கo. நிரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

பரி.—(இ-ள). எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரை யின்றி உலகியலஃ அமையாதாயின், அந்நீர் இடையற தொழுதும் ஒழுக்கத்தும் வானையின்றி யமையாது, (எ - று).

பொருளின்பங்களே உலகியல் என்றார் ; அவை இம்மைக்கண்ணவாகலின். இடையருதொழுகுதல் எக்காலத்துமெவ்விடத்து முளதாதல். நீரின்றமையா துலகெனபது எல்லாராலும் தெளியப் படுதலின் அது போல ஒழுக்கும் வானின் றமையாமை தெளியப்படுமென்பார், 'நீரின் றமையா துலகெனின்' என்றார். † இதனே நீரையின்றியமையா துலகா

† இக் குறளுக்கு நீரின்று - நீரையின்றி, அமையாது-பொருந்தாது, உலகெனின்-உலகியலாயின், யார் யார்க்கும்-எத்திறத்தோர்க்கும், வானின் று-மழையையின்றி, ஒழுக்கமையாது - ஒழுக்கம் நிரம்பாது என்று பொருள் கூறுவாரு முண்டு. ஒழுக்கம்—வருணாசிரம தருமத்திற் கேற்றவாறு நடத்தல்.

யின் எத்திறத்தார்க்கும் மழையையின்றி யொழுக்கம் நிறம்பாதெனவுரைப் பாருமுளர்.

இவைமூன்று பாட்டானும் மழை அறம் பொருளின்பங்கள் நடத்தற் கேதுவாதல் கூறப்பட்டது.

தேளி.—(இ-ன்). யார்யார்க்கும்-எவ்வகை மேம்பாட்டினை யுடையோர்க்கும், நீர்-நீரை, இன்று - இல்லாமல், உலகு - உலகியலானது, அமையாதெனின்-பொருந்தாதாயின், ஒழுக்கு-(அநநீர்நடவேகீங்காது செல்லும்) செலவும், வான் - மழையை, இன்று - இல்லாமல், அமையாது-பொருந்தாது, (எ-று).

இம்மைப்பயனு யனுபவிக்கப்படுவன வாதலின் பொருளின்பங்களே உலகியல் எனருர். நடுவே நீங்காதுசெல்லுதல் எக்காலங்களிலும் எவ்விடங்களிலும் நீருண்டாயிருத்தல். நீரில்லாவிடின் உலகிய லாகிய பொருளின்பங்கள் பொருந்தாவென்பது யாவராலும் தணிந் தறியப் பட்டிருத்தலின், அதுபோல நீரினொழுக்கமும் மழையின்றியின பொருந்தாமை தணிந் தறியப்படுமென்பார் 'நீரின்றமையா லுலகெனின்' என்ருர்.

இவை மூன்று பாட்டாலும் மழை அறம் பொருளின்பங்கள் கடை பெறுவதற்குத் துணைக்காரணமாதல் சொல்லப்பட்டது.

(க-து). உலகியல் நீரில்லாமலும் அந்நீரொழுக்கம் மழையில்லாமலும் பொருந்தாவென்பது.

10. If it be said that the duties of life cannot be discharged by any person without water, so without rain there cannot be the flowing of water.

மூன்ரும் அதிகாரம்.

நீத்தார்பெருமை - *The greatness of ascetics.*

பரி.—அஃதாவது முற்றத்துறந்த * முனிவரது பெருமைகூறுதல். அவ்வற முதற்பொருளைளே உலகிற் துளவளவா நுணர்த்துவார் அவராகலின் இது வான்சிறபபின் பின் வைக்கபபட்டது.

தேளி.—அஃதாவது (யாணைனதென்னு மபிமானத்தை) முற்றும் விட்ட முனிவரது பெருமையைச் சொல்லுதலாம். (வான்சிறப்பிற்கூறிய) அவ்வறம் பொருளின்பமாகிய பொருள்களே உலகத்தாருக்கு உள்ளவாறு அறிவிப்பவர் அம்முனிவராதலால் இந்நீத்தார் பெருமை வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

* இறைவனே மனனஞ் (தியானஞ்) செய்பவர் முனிவரெனப்படுவர்.

க. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

பரி.—(இ-ள்). தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை விழுமிய பொருள்கள பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு, (எ-று .

தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது:— † தததம் வருணத்திற்குமு நிலைக்கும் உரிய வொழுகுகங்களில் வழுவா தொழுக அறம்வளரும், அறம்வளரப் பாவந்தேயும், பாவநதேய அறியாமை நீஙகும், அறியாமை நீஙக ‡ நித்த ¶ அநித்தஙகளது வேறுபாட்டுணர்வும் அழிதன் மாலேய வாய இம்மை மறுமை யின்பஙகளின் உவர்ப்பும் பிறவித துன்பஙகளுந் தோன்றும், அவைதோன்ற * வீட்டின்கண் ஆசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் மூயற்சிகளெல்லாம் நீஙகி வீட்டிற்குக் காரணமாகிய § யோகமுயற்சியுண்டாம், அஃதுண்டாக மெயயுணர்வு பிறகு புறப்பற்றுகிய என தென்பதும் அகப்பற்றுகிய யானென்பதும விடும்; ஆகலான, இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்துவிடுதலெனக் கொளக பனுவலெனப் பொதுப்படக கூறியவதனுன், †† ஒனறையொன் றுவ்வாத சமய நூல்களெல்லாவற்றிறகும இஃதொதத துணிவெனபது பெற்றும். ‡‡ செய்தாரது துணிவு பனுவனமேம லேற்றபபட்டது.

தெளி.—(இ-ள்). பனுவல் - நூல்களது, துணிவு - நிசசயமானது, ஒழுக்கத்து - (தமகுரிய) வொழுக்கத்திலே (நினறு), நீத்தார் - துறநதவரது, பெருமை - மகிமையை, விழுப்பத்து-சிறந்த பொருளகள் பலவற்றுள்ளும், வேண்டும் - (இதுவேசிறநத பொருளென்று) விரும்பும், (எ-று).

† இவ்வதிகாரச சூதசசஙகதை பிரசாதக் கிரமத்திற் கூறிய வடிகிற் கிணக்கமாயிருத்தலறிக.

‡ அழிவுபாட் டபாவத்திற் கெதிர்மறையாகாதது நித்தமெனப்படும். அஃதாவது நாசமின்றி யிருப்பதென்பது.

¶ அழிவுபாட் டபாவத்திற் கெதிர்மறையாவது அநித்தமெனப்படும். அஃதாவது நாசத்தை யடைவதாயிருப்பதெனபது.

* இது முழுட்சுத்தவ மெனப்படும்.

§ ஒரிலட்சியத்தில் (குறியில்) வியாபாரமில்லாது மனம் லயப்பட்டிருத்தல் யோகமெனப்படும்.

†† ஒன்றற்கொன்று சிறப்பியலில் மாறுபட்டிருத்தல்பற்றி 'ஒன்றையொன்றுவ்வாத சமய நூல்கள்' எனறு கூறப்பட்டது.

‡‡ இது கருத்தாவின் தொழிற்பண்பு காரியதின்மே லாய உபசார வழக்கு.

தமக்குரிய வொழுகுகதநிலேகினறு நிறுததலாவது:—தத்தமது சாதிக்கும் ஆசிரமதநிற்கும் உரிய ஒழுகுகவகளில கினறுதவறுது நடககப் புணணியம்வளரும, புணணியம்வளரப பாவஙகுறையும்,பாவஙகுறைய அறியாமை நீஙகும், அறியாமை நீஙக, இது நிதநியம இஃது அநதநியம எனனும் பகுதநதறிவும் அழியுங தனமையவான இம்மை மறுமையின்பஙகளில வெறுப்பும் பிறவிததன்பஙகளும தோன்றும, அவை தோன்ற மோகூத்தில விருப்பமுண்டாம், அஃது உணடாகப் பிறவிகளுக காரணமாகிய(பொருளின்பஙகளேத் தேடுதறகுரிய)வீண முயற்சிகளெலலாம் நீஙகி மோகூத்திற்கு நிமிததகாரணமாகிய யோகமுயறசி உணடாம, அஃது உணடாகத தநதுவஞானம் பிறநது புறபபறறுகிய என தெனபதும அகபபற்றுகிய நானென்பதுமாகிய மமகாரமும அகஙகாரமும நீஙகும்; ஆதலின, இவவிரண்டு பற்றுக்களேயும இமமுறைசய வெலலுதது விடுதலெனக கொளக பனுவலென்று பொதுவாகச சொலலியதால ஒன்றையொனறு நிறுதிராத மதநூல்களெல்லாவறறிறகும் இஃதொதத நிசசயமாமெனபது பெறப்பட்டது. நூலசெயதவரது நிசசயம நூலின்மேல ஏறறப்பட்டது

(க-து). துறநதவர் மகிமைசய சிறபபுடையபொருள்கள பலவறறுள்ளும் மேலானதெனபது நூலகளின நிசசயமா மெனபது.

1. The clear sense of every treatise desires beyond all other excellence, the greatness of those who, while abiding in the rule of conduct peculiar to their state have forsaken all desire.

உ. துறந்தார பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண டற்று.

பரி.—(இ-ள்). இருவகைப பற்றினையும் விடடாரது பெருமையை இவ்வளவென்றெணணுங்கூறி யறியலுறின், அளவு படாமையான, இவ்வுலகத்துப் பிறந்த நிறந்தாரை யெணணி யிதற்குணையொன வறிய லும் றும்போலும், (எ - று).


மூடியாதென்பதாம். கொண்டாலென்னும வினையெசசம் கொணடெனத திரிந்து நின்றது.

தெளி.—(இ-ன்). துறந்தார (யானென தென்னு மிருவகைப் பற்றினையும) விட்டவரது, பெருமை - மகிமையை, துணைக்கூறின் - (இவ்வளவென்று) எணணிககையினுற் சொல்லி அறியப்புகுதால் (அளவுபடாமையால்), வையதது - இவவுலகத்தில, இறநதாரை-(பிறநது) இறநதவரை, எண்ணிக்கொணடற்று - எண்ணி (இததனேபோக எனனு)அறியப் புகுதாறபோலும், (எ - று).

எண்ணியறிதல் முடியாதென்பதாம். கொண்டாலென்னும் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம் கொண்டென்னுஞ் செய்தெனெச்சமாகத் திரிந்து நின்றது.

(க - து). துறந்தவரது பெருமைக் களவில்லை யென்பது.

2. To describe the measure of the greatness of those who have forsaken the two - fold desires, his like counting those who have died in this world.



கூ. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

பரி.—(இ-ள). பிறப்பு வீடென்னும் இரண்டனது தன்பவின்பக் கூறுபாடுகளே யாராயந்தறிந்து அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரதுபெருமையே உலகின்கணுயர்ந்தது,(எ-று).

* "தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப் போல † இருமை யென்ப தீண் டெண்ணினக ணின்றது. பிரிவிலேயகாரம் விகாரத்தாற் றொக்கது. இதனுல் திகிரியுருட்டி யுலகமுழுதாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்று பாட்டானும் நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையினு மிக்கதென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). இருமை - (பிறப்புவீடென்னும்) இரண்டனது, வகை - (தன்பவின்பக்) கூறுபாடுகளே, தெரிந்து-ஆராய்ந்தறிந்து (அப்பிறப்பை நீக்குதற்கு), எண்டு-இப்பிறப்பின்கண், அறம் - துறவறத்தை, பூண்டார் - கொண்டவரது, பெருமை - மகிமையே, உலகு - உலகத்தில், பிறங்கிற்று - உயர்ந்தது, (எ - று).

* பரிபாடல். ஆராயப்பட்ட மாட்சிமையுடைய இயலிசை நாடக மென்னு மூன்று தமிழையுமுடைய தெற்கின்கணுள்ளவழகிய பொதிய வெற்பன் என்ப திதன்பொருள். மும்மைத்தமிழ் என்று கொள்க.

† மும்மைத்தமிழ் என்பதில் மும்மையென்பது மூன்றன் தன்மையையுணர்த்தாமல் மூன்றென்னு மெண்ணே யுணர்த்தினுற் போல இருமை யென்பது இரண்டன் தன்மையை யுணர்த்தாது இரண்டென்னு மெண்ணே யுணர்த்தி நின்றதென்க. இவ்வாறு வருவது பகுதிப்பொருள் விகுதியென்னும் சுவார்த்தபாவதத்திதப் பிரத்தியய மெனப்படும். அஃதாவது சொன்னிலையாற் பகுபதமாயும் பொருணிலையாற் பகாப்பதமாயு மிருப்பதாம்.

இருமையென்பதிஙி கிரண்டென்னும் பொருளில்வந்தது. பெருமை யே யென்னும் பிரிகிலே யேகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. இவ்வேகாரத்தால் ஆக்ஞாசக்கரத்தைச்செலுத்தி உலக முற்று மாண்டவர் சர் முதலானவருடைய பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்று பாட்டாலும் துறந்தவரது பெருமையே எல்லாப் பெருமைகளிலும் உயர்ந்ததெனபது சொல்லப்பட்டது.

(க - து). துறவறத்தைக் கொண்டவரது பெருமையே உலகின்கண் மேம்பாடுடைய தென்பது.

3. The greatness of those who have discovered the properties of both states of being, and clothed themselves in virtue, shines forth in this world (beyond all others).

ச. உரனேன்னுந் தோட்டியா லைந்தைந்துங் காப்பான்
வரனேன்னும் வைப்பிற்கோர் வித்து.

பரி.— (இ - ள்). நிலமை யென்னுந் தோட்டியாற் § பொறிகளாகிய யானையைந்தனையும் தத்தம் ‡ புலன்கண்மேற் செல்லாமற் காப்பான், எல்லாநிலத்தினு மிக்கதென்று சொல்லப்படும் வீடுநிலத்திற் கோர் ¶ வித்தாம், (எ - று).

§ பொறிகள் - இந்திரியங்கள். அவை சுரோத்திரம் (காது), தொக்கு (உடம்பு), சட்சு (கண்), கிஞ்ஞுவை (நாக்கு), ஆகிராணம் (மூகது) ஆம்.

‡ புலன்கள் - விஷயங்கள். அவை சத்தம் (ஒலி), பரிசம் (ஊறு), ரூபம் (உருவம்), ரசம் (சுவை), கந்தம் (நாற்றம்) ஆம்.

¶ அறிவினால் இந்திரியங்களோ விஷயங்களிற் செல்லாவண்ணங் காப்பவன் மோட்சநிலதலில் முளைக்குமோர் வித்தென் றுருவகப் படுத்தினமையின் இஃதேதுவுருவகவணியாம். "உரனென்னும்-காப்பா"னென்றது போகவிசசையற்றுப் பிரணவோபாசனை செய்யுஞ் சக்கியாசியை. இவன் மறுமையில் பிரம லோகத்தையடைந்து பிரமனுக்குச் சமமாகப் போகத்தையனுபவித்து அவ்வுலகத்திற்ருே நாசம்வரும்போது தத்துவஞான முண்டாகப்பெற்று முத்தியடைவனென்பது சாஸ்திர நிசயமாகையால், 'வித்து'என்று கூறப்பட்டான். இஃது "அநுசூதனே முன்னிற்கு னணுகுவர்தற்ருனே." என்று சிவஞானசித்தியார் கூறுவதாலு முணரப்படும்.

¶ இஃதேகதேச வுருவகம். திண்மை யீண்டறிவின்மேற்று அக்கிலத்திற்சென்று முளைத்தலின் 'வித்து' என்றார். ஈண்டுப் பிறந்திறந்து வரும் மகனல்ல னென்பதாம்

தெளி.—(இ-ள்). உரனென்னுந் தோட்டியான் - அறிவென்னு மங்குசத்தினுல், ஓரைந்தும் - (பொறிகளாகிய யானைகள்) ஐந்தையும், காப்பான் - (தத்தம் புலன்களின்மீது செல்லாமற்) காப்பவன், வரனென்னும் வைப்பிற்கு - (எல்லாநிலங்களிலும்) மேலானதென்று சொல்லப்படுகிற மோக்ஷநிலத்திற்கு, ஓர்வித்து-ஒருவிதையாவான், (எ - று).

இக்குறள் ஏகதேச வுருவகவணி. திண்மையென்பதற்கு அறிவென்னும் பொருளின்மேலாயது. அம் மோக்ஷநிலத்திற் போய முளைத்தலின் 'வித்து' என்றார். இவ்வுலகத்திற் பிறந்தும் இறந்தும் வரும் மனிதனல்ல னென்பதாம்.

(கு-து). இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாவாறு தடுப்பவன் முத்தியடைதற் குரியவனெனபது.

4. He who guides his five senses by the hook of wisdom will be a seed in the world of excellence.

ரு. ஐந்தவித்தா னூற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

பரி.—(இ - ள்). புலன்களிற்செல்கின்ற அவாவைவந்தனையும் அடக்கினது வலிக்கு அநேக வானந் துள்ளா நிறைவனுகிய இந்திரனே அமையுஞ் சான்று, (எ - று).

ஐந்து மென்னு முற்றும்மையும் ஆற்றற்கென்னு நான்கனுருபுஞ் செய்யுள் விகாரத்தாற் றொக்கன. \$ தான் ஐந்தவியாது சாபமெய்திவின்று,

¶ உரனென்னு மறிவைத் தோட்டியாக வுருவகப்படுத்தினவர் 'ஓரைந்தும்' என்று எண்ணலளவை யாகுபெயராகக் கூறிய இந்திரிய மைந்தையும் யானைகளென்று உருவகப்படுத்தாமையின், இசைசெய்யுள் ஏகதேச வுருவக மாயிற்றென்க.

\$ இந்திரிய நிக்கிரகஞ் செய்யாத விந்திரன் இந்திரியநிக்கிரகஞ் செய்துள்ள கௌதம முனிவரது மனைவியாகிய அகலிகையைக் கரவிற்புணர்ந்து, அக்கௌதமரால் "ஆயிர மாதர்க குள்ள வறிகுறி" தனதுடலிலுண்டாகச் சாபமடைந்த கதையை இராமாயணம் பாலகாண்டம் அகலிகைப்படலத்திற்காண்க. " எனைத்தானை யாயினு மென்னும் " என்னுங் குறளின் விசேடவுரையில் " இந்திரன்போல எல்லாப்பெருமையு மிழந்து சிறுமையெயதல் நோக்கி 'என்னும்' என்றார் " என்றுகூறி யிருந்தலு மிங்கறியத்தக்கதாம்.

அவித்தவனதாற்ற லுணர்த்தினு ளுகலின் 'இந்திரனே சாலுங்கரி' என்றார்.

நேளி.—(இ - ள்). ஐந்தவித்தான் - (சப்தாதிவிடயங்களிற் செல்லுகின்ற) ஐந்தாசைகளையுமொழித்தவனது, ஆற்றல் - வல்லமைக்கு, அகல்விசும்புளார் - அகன்றபொன்னுலகத்துள்ள தேவர்க்கு, கோமான் - அரசனுகிய, இந்திரனே - தேவேந்திரனே, சாலுங்கரி - போதுமான சாட்சியாம், (எ - று).

ஐந்தும் என்னு மினைத்தென் றறிபொருளில்வந்த மூற்றும்மையும் ஆற்றற்கு என்னும் நான்காம் வேற்றுமையுருபும் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. இந்திரன் தான் ஐந்தாசைகளையும் ஒழிக்காமல் சாபமடைந்துநின்று அவ்வாசைகளை ஒழித்தவனுகிய கௌதம முனிவனது வல்லமையைத் தெரிவித்தானுதலின் 'இந்திரனே சாலுங்கரி' என்றார்.

(க - து). இந்திரிய நிக்கிரகஞ் செய்தவர்க்கன்றி மேன்மேலார்க்குச் சாபாநுக்கிரக வல்லமை யுண்டாகாது என்பது.

5. Indra, the king of the inhabitants of the spacious heaven, is himself a sufficient proof of the strength of him who has subdued his five senses.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

பரி.—(இ - ள்). ஒத்த பிறப்பினாய மக்களுளசெயற்கெளிய வற்றைச்செய்யாது அரியவற்றைச் செயவார் பெரியர், அவ்வெளிய வற்றைச் செய்து அரியவற்றைச் செயமாட்டாதார் சிறியர், (எ-று).

செயற் கெளியவாவன:--மனம்வேண்டியவாறே அதனைப்பொறிவழிகளாற் புலன்களிற்செலுத்தலும் வெல்லுதல் வெருட்டலுமுதலாயின. செயற்கரியவாவன:—இயமநியம முதலாய † எண்வகையோகவுறுப்புக்கள்.

† எண்வகையோகவுறுப்புக்கள் - யோகத்திற்கரிய வெண்வகையங்கங்கள். அவை இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பன. இவற்றுள்:—

இயமம் - கொல்லாமை, மெய்ம்மைகூறல், திருடாமை, பிறர்பொருட்கண் ஆசையில்லாமை, இந்திரியங்களை யடக்கலென்னு மைதுமாம்.

நியமம்-நலம், சௌசம் (உடலிலிருஞறும் மனதை+சத்தியத்திலுமை தூய்மை பார்த்தல்), தத்துவநூலாராய்ச்சி, பெற்றதுகொண்டு மகிழ்தல், தெய்வவழிபாடென்னு மைந்துமாம்.

நீர்ப்பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற் றுபதபக்கமென் பாருமூளர். அவை நியமத்துள்ளே யடங்கலின், நீத்தாரது பெருமைக் கேலாமை யறிக.

ஆசனம் (இருப்பு):—பத்திராசம் (பீஜத்தின் கீழ்ப்பாக நரம்பினிரு பக்கங்களிலும் இருகாற் பரட்டையுஞ் சேர்த்து அவ்விரண்டு காலையும் இரண்டு கைகளாலு மிறுகப்பிடித்து அசையாது இருத்தல்), கோமுகம் [சகன பக்கத்தி (பிருஷ்டபாகத்தி) லிருகாற் பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரல்களைக் கரங்களால் பிடித்திருத்தல்], பங்கயம் (இரு தொடைமேலும் இரண்டுள்ளங்காலையுமாறித் தோன்றவைத்தல்), கேசரி (பீஜத்தின் கீழ்ப்பாக நராபி னிருபக்கங்களிலும் இரண்டு பாதங்களையுஞ்சேர்த்து முழந்தாளின் மீது இரண்டு கைகளையும் நன்முய்ப் பொருந்தும்படிவைத்து அக்கைகளின் விரல்களை செவ்வையாய் விரித்து வாய் திறந்து நாக்கை நீட்டிக்கொண்டு மூக்கு நுனியைப் பார்த்திருத்தல்), சுவத்திகம் (தொடைக்கும் முழங்காற்கு மிடையே யிரண்டுள்ளங் காலையுஞ் செலுத்தி யிறுமாந்திருத்தல்) என்னு மைந்துமாம்.

பிராணயாமம்-இரேசக (வாயுவை மூக்கின்கூலதா லாரவாயிலாக விடுதல்), பூரக (வாயுவை மூக்கின் இடது தூவார வாயிலாக வுள்ளுக்கிழுத்தல்), கும்பகம்(வாயுவை யுள்ளேயடக்குதல்) செய்தலாம்.

பிரத்தியாகாரம் - விஷயங்களில் செல்லாவண்ணம் சகல இந்திரியங்களையுந் தடுத்து உண்ணோக்கியிருத்தலாம்.

தாரணை - தைலதாரைபோன்று இடைவிடாது அநுதக்காரணம் ஒருவகைப்பட் டிருத்தலாம்.

தியானம்-கடவுளிடத்துச் செல்லும் அநுதக்காரணத்தின் பிரவாகமாம்.

சமாதி - உண்டாயிருக்கும் சம்ஸ்காரங (வாசனை)களின் ஒழிவும் அடங்கியிருக்கும் சம்ஸ்காரங்களின் வெளிப்பாடு மூண்டாகி யநுதக்காரணமொருமுகமாய்ப பரிணமித்திருத்தலாம்.

இயமம் பத்திவகைப்படு மெனபதும், நியமம் பத்திவகைப்படுமென் பதும், ஆசனம் எண்பத்துநான்கு வகைப்படு மென்பதும், பிராணயாம மிருவகைப்படுமென்பதும் எண்வகைப்படுமென்பதும், பிறவுமாகிய இவற்றின் விரிவை அடையோகப் பிரதீபிகை முதலியவற்றிற் காண்க.

'நீர் பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற்றுபதபக்கம்' என்பதற்கு நீரின்கண்பலமுறைமூழ்கலும், வெறுநிலத்தறங்கலும், மான்றோலையாடையாகத்தரித்தலும், சடைதரித்தலும், எரியோம்புதலும், ஊரடையாமையும், காணகத்துண்டலும், கடவுளைப்போற்றலுமென்னும் எண்வகை மார்க்கத்தைத் தவம்புரியுங் கூறு என்று கொள்க. இது

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாய்ச், சோர்சடை தாழச் சுடரோம்பி-யூரடையார், கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம் பல், வானகத் துய்க்கும் வழி" என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச்

தெளி.—(இ-ன்). (ஒத்தபிறப்பினாகிய மனிதர்களுள்) பெரியர் - பெரியோர், செயற்கரிய - (செய்வதற் கெளிமையானவற்றைச் செய்யாமல்) செய்வதற்கருமையானவற்றை, செய்வார்-செய்வர், சிறியர்-சிறியோர், செயற்கரிய—(அவ்வெளிமையான வற்றைச் செய்து) செய்வதற் கருமையானவற்றை, செய்கலாதார் - செய்யமாட்டாதார், (எ-று).

செய்வதற் கெளிமையாவன:—மனம்விரும்பியபடியே அதனை (கண் முதலிய) இந்திரிய வாயிலாக விடயங்களிற் செலுத்தலும் விரும்புதலும் கோபித்தலு முதலாயினவாம். செய்வதற் கருமையாவன:—இயமம் நியம முதலான எண்வகை யோகாங்கங்களாம்.

(க-து.) பெரியோர் செய்தற்கரியவற்றையும் சிறியோர் செய்வதற் கெளியவற்றையும் செய்வார்களென்பது.

6. The great will do those things which it is difficult to do; the mean cannot do those things which it is difficult to do.

ஏ. சுவையொளி யூரோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

பரி.—(இ-ள்). சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன்மாத்திரைக ளைந்தனது கூறு பாடையும் ஆராய்வா னறிவின் கண்ணதே உலகம், (எ-று).

† அவற்றின் கூறுபாடாவன:— ‡ பூதங்கட்கு முதலாகிய அவைதாமைந்தும், அவற்றின்கட் டோன்றிய அப்பூதங்களைந்தும், அவற்றின் கூறுகிய $ ஞானேந்திரியங்களைந்தும், ¶ கன்மேந்திரியங்களைந்தும ஆக விருபது

செய்யுளானும், தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலில் "அவ்வகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னும் சூத்திரத்திலுள்ள "நாலிருவழக்கிற் ரூபத பக்கமும்" என்றவடிக்குள்ள வுரையில் நச்சினார்க்கினியர் "மீஇ ராட னிலக்கிடை கோட, ரோஒ லுதித்த ரெல்லெரி யோம்ப, ஞாடை யாமை யுறுசுடை புனைதல், காட்டி லுணவு கடவுட் பூசை, யேற்ற தவத்தி னியல்பென மொழிப." என்று காட்டிய மேற்கோட் செய்யுளிலும் வினக்கமாமென்க.

† அவற்றின்:— சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றங்களின்.

‡ பூதங்கள்:—பிருதிவி (மண்), அப்பு (நீர்), தேயு (அக்கினி), வாயு (காற்று), ஆகாயம் (வெளி).

$ ஞானேந்திரியம்—அறிகருவி. அவை சுரோத்திரம் (காது) தொக்கு (உடம்பு), சட்சு (கண்),ரசனை (நாக்கு), ஆக்கிராணம் - (மூக்கு).

¶ கன்மேந்திரியம்.—தொழிற்கருவி. அவை வாக்கு (வாய்), பாதம் (கால்), பாணி (கை), பாயுரு (குதம்), உபத்தம் (குறி).

பதுமாம். 'வ்கைதெரிவான் கட்டே' என ‖ வுடம்போடு புணர்த்ததனுல் தெரிகின்ற புருடனும், அவன்தெரிதற் கருவியாகிய † மான அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலபபகுதியும் பெற்றும். தத்துவ மிருபத்தைந்தனையுந் தெரிதலாவது மூலப்பகுதியொன்றிற் ‡ றோன்றிய தன்மையிற் பகுதியே யாவதல்லது வீகுதியாகாதெனவும், அதன்கட்டோன்றிய மானும் அதன்கட் டோன்றிய அகங்காரமும் அதன்கட் டோன்றிய $ தனமாத்திரைகளு மாகிய ஏழுந் தத்தமக்கு முதலாயதனை நோக்க வீகுதியாதலும் தங்கட்டோன்றுவன வற்றை நோக்கப் பகுதியாதலு மூடையவெனவும், அவற்றின்கட் டோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினைந்தும் தங்கட் டோன்றுவன வினமையின் விகுதியே யாவதல்லது பகுதியாகா வெனவும், புருடன் தானொன்றிற் றோன்றுமையானுந் தன்கட் டோன்றுவன வினமையானும் இரண்டும் அல்லனெனவுஞ் † † சாங்கியனூலு ளோங்கியவாற்று ஞாய்தல் இவ்விருபத்தைந்து மல்ல தலனெனப் பிறி

‖ உடமபொடு புணர்தலென்னுமுத்தியை வடனூலா கிபாதம என பர். அஃதாவது கூறவேண்டிய அருத்தத்தை வெளிப்படையாகக்கூறு தி தான் கூறுவதன் குறிப்பினுல் விளங்கச்செய்தல். இவ்வுத்தியை நச்சினர்க் கினியர் ஒருதலை மொழிதல் எனனும உத்திக்கு இனமாகக் கொண்டு "உடம்பொடு புணர்த்திச சொல்லுவன அதற்கு இனமெனப்படும்; என் னை? விதியல்லாதது விதிபோல மற்றொருவழிச சேறலின் " என்னர். ஈண்டு ' சுவையொளி யூறோசை நாற்றமென றைந்தின் வகை ' என்ற தனுல் சுவைமுதலின வாகிய தன்மாத்திரைகளும், அவற்றின் காரியமா கிய பிருதிவிமுதலிய பூதங்களும், அத்தன்மாத்திரைகளின் கூறுபாடாகிய ஞானேந்திரியங்களும் கருமேந்திரியங்களும் ஆகிய இருபதுதத்துவங்களே யுங்கூறினுற் போன்று புருஷனும் அவன் தெரிதற்குக்கருவியாகிய மான் அகங்காரமனங்களும், அந்தமான் முதலானவற்றிற்குக் காரணமாகிய மூல ப் பிரகிருதியும் ஆகிய ஐந்தையும் வெளிப்படையாகக் கூறாது, 'தெரிவான்' எனக் கூறியதன் குறிப்பினுல் பெறவைத்தமையினு லுடமபொடு புணர்த் தலாயிற்று. 'சுவை.....வகை' என்னுமிருபதையு முடம்பாக நிறுத்தி,'தெ ரிவான்' என்னுங் குறிப்பினுல் அவற்றோடு புருடன்முதலிய வைந்தையும் புணர்த்தினமையின், உடமபொடு புணர்த்தலாயிற் றென்பது மொன்று.

† மான்—புத்தி. ‡ தோன்றியதன்மையின்—(தோன்றியது+அன் மையின்) தோன்றிய தல்லாமையினுல். $ தன்மாத்திரைகள்—சூக்கும பூதங்கள். † † சாங்கியம் ஸேசுர சாஸ்திரம், நிரீசுவர சாங்கியம் என இரு வகைப்படும். இவ்விரண்டனுள், முன்னது பாகவதம் மூன்றுஸ்கந்தத்திற் கூறப்படும் கருத்தமரிஷியின் புத்திரரான கபிலரால் சொல்லப்பட்டது; பின்னது மற்றொருகபிலரால் சொல்லப்பட்டது. ஈண்டுக் கூறியது நிரீசு வர சாங்கியமாம். இதன் தத்துவம் (பாதார்த்தம்) 25.

தொன் றில்லையென வுலகின தண்மையறிதலின், அஃ தவனறிவின்கண் ணதாயிற்று. இவை நான்குபாட்டாலும் பெருமைக் கேது ஐந்தவித்தலும யோகப் பயிற்சியுந் தத்துவ வுணர்வுமென்பது கூறப்பட்டது.

அவையாவன:—

(1) பிரதானம்	... 1	(6) ஞானேந்திரியம	... 5.
(2) மகத்தத்துவம்	... 1.	(7) கன்மேந்திரியம்	... 5.
(3) அகங்காரம்	... 1.	(8) மனம்	... 1.
(4) தன்மாத்திரை	... 5.	(9) புருடன்	... 1.
(5) ஸ்தூலபூதம	... 5.		ஆ—25

இவற்றுள்:—பிரதானம் என்பது பிரகிருதியாம். பிரகிருதி என்பது முதற்காரணமாம் இது மகதத்தத்துவதற்கு முதற்காரணமா யிருப்பதால் பிரகிருதி என்றுயிற்று. இஃது அநாதியாயிருப்பதால் விகிருதியாவதின்று. விகிருதி என்பதுகாரியம். இப்பிரகிருதி மூலம் (சித்தம்), புரியட்டகம் (சத்தாதி தன்மாத்திரைகளோடுதம மனம புத்தி அகங்காரமும் சோர்ந்தது), விகிருதி (ஸ்தூலதேகமும் பிரபஞ்சமும்) என மூன்றுவிப் பரம்,குக்குமம், ஸ்தூலமென நிற்கும் மகதத்தத்துவம், அகங்காரம் பஞ்சதன் மாத்திரைக ளாகிய ஏழும் பிரகிருதிகளாயும் விகிருதிகளாயு மிருகின்றன. எங்ஙன மெனின், முன்னுள்ளது பின்னுள்ளதற்குப் பிரகிருதியாயும, பின்னுள் ளது முன்னுள்ளதற்கு விகிருதியாயும் இருப்பதாலென்க. தன்மாதிரை களும் (ஸ்தூல) பஞ்சபூதங்களுக்குப் பிரகிருதிகளா யிருக்கின்றன இவ் வாறு மேற்சொனன மகதாதி ஏழு பிரகிருதிகளும் விகிருதிகளாயிருக்கின் றன. பஞ்சபூதங்கள், தசேந்திரியங்கள்(ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள) மனமஆகிய இந்த 16-ம் விகிருதிகளேயாம்; பிரகிருதிகளாவதில்லை. இரம தப்படி மான் (மகத்தத்துவம்) எனினும புதி எனினும ஒக்கும். அப்படி யே புருடன், ஆத்துமா என்பவுமாம். புருடன் அல்லது ஆத்துமா பல; ஒவ்வொன்றும் வியாபகமே. பிரகிருதியும் வியாபகமே. உலகம சத்தியம். இதற்குக்கர்த்தா ஒருவன் இல்லே. புருடன் ஒன்றற்கும் காரணமாகாமை யின் பிரகிருதியன்று;காரியமாகாமையின விகிருதியுமனறு. ஆதலா லவன் அசங்கனுவன். மூலமாதி மூன்று வகையாகப் பிரகிருதி பேதிக்க அத னைப் புருடன் தனதெனக்கொண்டு நிற்பன். மூடவனும் குருடனுங கூடி யபோது (குருடனதோளில் மூடவன் ஏறியபோது) நடத்தலென்னுந் தொழி லுண்டாமாறுபோன்று முக்குணவடிவ பிரகிருதியும் அசங்க உதா சினனுன புருடனும கூடியபோது வியவகார முண்டாகும். சுதந்தரமான பிரகிருதியே ஜகத்திற்குக் காரணமாயிருந்து புருஷனுடைய போகமோக்ஷ ங்களின் பொருட்டுப் பிரவர்த்திக்கின்றது; புருஷன் பிரவர்த்திப்பதில்லே. பிரகிருதியின விஷயவடிவப் பரிணமததால் புருஷனுக்குப் போகம் (இன் பத் துன்பங்கள் புலப்படத் தோன்றல்) உண்டாகின்றது. புத்திவாயிலாக விவேகவடிவப் பிரகிருதியின் பரிணமத்தால் மோக்ஷமுண்டாகின்றது. புரு

தெளி.—(இ-ள்).உலகு - உலகமானது, சுவையொளி யூருசை நாற்றம் - சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும், என்று - என்று சொல்லப்பட்ட, ஐந்தின் - பஞ்ச தன்மாத்திரைகளது, வகை - கூறுபாட்டையும், தெரிவான்கட்டே - ஆராய்பவனறிவினிடத்தே, (எ-று).

அப்பஞ்சதன்மாத்திரை (சூக்கும பூதங்)களது கூறுபாடாவன:—(ஸ்தூல)பூதங்களுக்குக் காரணமாகிய அப்பஞ்சதன்மாத்திரைகளிலிருந்தும், அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்களிலிருந்தும், அப்பஞ்சதன்மாத்திரைகளின் கூறுகிய ஞானேந்திரியங்களிலிருந்தும்,கன்மேந்திரியங்களிலிருந்தும் ஆகவிருபதுமாம். 'வகைதெரிவான்கட்டே' என்று உடம்பொடு புணர்த்திக்கூறியதினால் தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற்குக் காரணமாகிய மான் அகங்காரமனங்களும் அவற்றிற்குக் காரணமாகிய மூலப்பகுதியும் பெற்றனம். தத்துவமிருபத்தைந்தையு மாராய்தலாவது: மூலப்பகுதி யொன்றினின்று முண்டானதன்றுகலின் அது பருதியே யாவதல்லாமல் விகுதியாகாதென்றும், அம்மூலப் பகுதியிலுண்டான மகத்தத்துவமும் அம்மகத் தத்துவத்திலுண்டான அகங்காரமும், அவ்வகங்காரத்திலுண்டான (பஞ்ச)தன் மாத்திரைகளுமாகிய எழும் தத்தமக்குக் காரணமா யிருப்பதையோக்கவிருதியாவுடன் அகவுகளு யிருப்பதால் அவனிடத்தில்போக மோகூங்கள் பொருந்துதலின்று; ஆயினும், ஞானம், சுகம், துக்கம், இராகம், துவேஷம் முதலியன புத்தியின் பரிணாமா யிருக்கினறன. இத்தப் புத்திக்கு ஆத்ம விவேகமில்லை; ஆனல், அவிவேகமிருக்கின்றது. அதனல், பந்தமோகூங்கள் ஆத்மாவின்கண் ஆரோபிக்க (கற்பிக்க)ப் படுகின்றனவே யன்றி, பரமார்த்த (உண்மை)மாக இல்லை; அவிவேகத்தாற் சித்திக்கிற போகத்தால் ஆத்மா போக்தாவெனச் சொல்லப்படுகிறது பரமார்த்தமாக ஆத்மா போக்தாவன்று, புத்தியே போக்தா. புருஷனுக்கு அதனுபாவிற்கு வேறு. பிரகிருதி யித்தன்மைய தென்றும் புருஷன் இதற்கன்மையனென்றும் வெவ்வேறுகப் பகுத்துணர்ந்து பிரகிருதியை யொழித்து வேறுதலே முத்தியிலை என்பது.

இக்கிரியங்களும் மனமும் அகங்காரத்தின் காரியமாமென்பதிங கறியத்தக்கது. இதனது விரிவை சர்வதரிசன சங்கிரகத்தின சாங்கிய தரிசனத்திற் காண்க.

இச்சாஸ்திர சாத்திரத்தைக் கபிலர் ஆறத்தியாயங்களாக்கி, முதலத்தியாயத்தில் விஷயவிரூபணஞ்செய்து, இரண்டாவதத்தியாயத்தில் மகதாதி தத்துவங்கள் பிரதானத்தின் காரியங்களென்றுகாட்டி, மூன்றாவதத்தியாயத்தில் வியத்தினின்றும் வைராக்கியமடையும் வழியைவிளக்கி, நான்காவ தத்தியாயத்தில் விரக்தர்களுடைய சரித்திரங்களைச்சொல்லி, ஐந்தாவதத்தியாயத்தில் ஆக்ஷேப கண்டனம் பண்ணி, ஆறாவதத்தியாயத்தில் முதலாந்து அத்தியாயங்களிற் கூறியவற்றைச சுருக்கிமுடித்துள்ளார்.

இதனைப் பரிமேலழகர் மண்டு விதந்து கூறியது, இது பதார்த்த விசாரணைக்குத் தக்கதா யிருப்பது பற்றி அவ்விசார மாத்திர மேற்கொண்டென்க.

தும் தம்மிடத் துண்டாவனவற்றை நோக்கப் பகுதியாவது முடையனவெ ன்றும், அவ் வகங்காரத்தி லுண்டாயமனமும் ஞானேந்திரியங்களும் கன் மேந்திரியங்களும், அத் தன்மாத்திரையி லுண்டாய பூதந்தளுமாகிய பதி னைறும், தம்மிடத் துண்டாவன வில்லாமையின் விகுதியே யாவதல்லாமல் பகுதியாகா வென்றும், புருடன் தான் ஒன்றினின்று முண்டாகாமையா லும் தன்னிடத்துண்டாவன வில்லாமையாலும (காரியமாதல் காரணமாத வென்னும்) இரண்டுமுடைய னல்லனென்றும் சாங்கிய சாஸ்திரத்திற் கூறிய வகையா லாராய்தலாம். இவ்விருபத்தைந்து தத்துவமுமல்லாமல் உலகெனப் பிறிதொரு பொருளில்லையென்று உலகினது உண்மையை யறிதலின் அவ்வுலகு அவனது அறிவினிடத்ததாயிற்று.

இவை நான்கு பாட்டாலும் பெருமைக்குக் காரணங்கள் ஐம்பொறி யடக்கலும, யோகாப்பியாசமும் தத்துவ ஞானமும ஆமென்பது சொல்லப் பட்டது.

(கு-து). உலகமானது தத்துவக்கூட்டங்களே யாராய்ந்தறிபவ னது அறிவினிடத்ததா மென்பது.

7. The world is within the knowledge of him who knows the properties of taste, sight, touch, hearing and smell.

அ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
* மறைமொழி காட்டி விடும்.

பரி.—(இ-ள்). நிறைந்த மொழியினை யுடைய துறந்தாரது பெ ருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங் களே ‡ கண்கூடாகக் காடும், (எ-று).

நிறைமொழி யெனபது † அருளிற் கூறினும் ¶ வெருண்டு கூறி னும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல்-பயனுணர்த் துதல்.

தேவி —(இ-ள்). நிறைமொழி- (பயன்) நிறைந்த சொல்லையுடைய, மாந்தர் - முனிவரது, பெருமை - மகிமையை, நிலத்து - நிலவுலகத்தில், மறைமொழி - (அவராணையாகசசொல்லிய) மந்திரங்களே, காட்டிவிடும்- (பிரத்தியக்ஷமாகக்) காட்டும், (எ-று).

* மறைமொழி -"புறத்தாருருப புலனுகாமல் (அறியாவாறு) மறைத துச்சொல்லும் சொற்றொடர்." என்பர் நச்சினர்க்கினியர். இதனால் மறை மொழி மந்திரமாயிற் றென்க. "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப" என்பதுதொல்காப்பியம்.

‡ கண்கூடு - பிரத்தியட்சம; அஃதாவது இந்திரியவிஷய சம்பந் தத்தால் தோன்றும் ஞானம்.

† அருளிற்கூறல்-அனுக்கிரகமொழி. ¶ வெருண்டுகூறல் - சாபமொழி.

பயனிறைந்த சொல்லென்பது அருளினுற் கூறினுலுங் கோபித்துக் கூறினுலும் அந்தவந்தப் பிரயோசனத்தைக் கொடுத்தே விடுகிற சொல். காட்டுதல் - பிரயோசனத்தால் தன்மகிமையை யறிவித்தல்.

(கூ-து). துறந்தவரது மகிமையை அவரது பயனிறைந்த சொற்களே வெளிப்படையாகக் காட்டுமென்பது.

8. The hidden words (Mantras) of men whose words are full of effect will shew their greatness to the world.

கூ. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

பரி.—(இ-ள). துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற் குணங்களாகிய குன்றின் முடியின்மேலேறினின்ற முனிவரது வெகுளி தானுளவளவு கணமேயாயினும் பேதையரடைவாரைத் தடுத்தலரிது, (எ-று).

§ சலியாமையும் பெருமையுமபற்றிக் குணங்களைக் குன்றாக வுருவகஞ்செய்தார். குணம் ‡ சாதியொருமை. ‖ அநாதியாய் வருகின்றவாறு பற்றி ஒரோவழி வெகுளி தோன்றிய பொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்குமாகலின் 'கணமேயும்' என்றும், நிறைமொழி மாந்தராகலின 'காத்தலரிது' எனறும் கூறினர். ஏனை இரண்டு பாட்டானும் அவராலே கூறப்பட்டது.

வெகுளி.—(இ-ள்). குணமென்னுங்குன்று - (துறவு தத்துவஞானம் ஆசையில்லாமை முதலிய) நற்குணங்களாகிய மலையின்முடியினிடத்து, வறிதின்றார் - வறிதினின்ற முனிவரது, வெகுளி - கோபமானது, கணமேயும் - (தானுளவளவு) கூறுகாலமேயாயினும், காத்தல் - (கோபிக்கப் பட்டவரால்) அழிதல், அரிது - அரிதாம், (எ-று).

§ சலியாமையினலும், பெருமையினலும் குணங்களை மலையாகக் கூறியது ஏது உருவக அலங்காரமாம்.

‡ "சாதியொருமைபல சாதியேகவசன மென்பர். அஃதாவது ஒருசொல் ஒருமையீறு தோன்ற நின்றும், தோன்றுதலுமாம். பின ஒருமைப் பன்மை விகுதியுருக மேல்வந்து முடிக்குஞ் சொற்களு னினறிக் தாமே பன்மைப்பொருளுணர்த்துவது. ஈறு தோன்றிய சாதி யொருமையு, மீறு தோன்றாத சாதி யொருமையு, மெனவிரு திறபபடி மிருவினமருங்கினும் இலக்கணசூத்திரம்" என்றார் பிரயோக விவேக நூலார். ஈண்டுக் கூறியுள்ள குணம் ஈறு தோன்றாத அஃறிணை சாதியொருமைப் பெயர்.

அசையாமையும் பெருமையும் பற்றிக் குணங்களை மலையாக உருவகம் செய்தார். குணம்-சாதியொருமைப் பெயர். அகாதியாய் வருகின்ற வகையால் ஒரோவிடத்துக் கோபந்தோன்றியபொழுதே அக்கோபத்தினைத் தத்துவஞானம் அழிக்குமாகலால் 'கணமேயும்' என்றும், பயனிறைந்த செல்வலியுடைய திறவிகளாகலின் 'காத்தலரிது' என்றும், சொல்லினர். இவையிரண்டு பாட்டாலும் அவராணை (கட்டளை) சொல்லப்பட்டது.

(க-து). முனிவர்களது கோபத்தை அவர்களாற் கோபிக்கப் பட்டவராலே தடுத்தல் கூடாது என்பது.

9 The anger of those who have ascended the mountain of goodness(good dispositions), though it continue but for a moment, connot be resisted.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
சென்தண்மை பூண்டொழுக லான்.

பத.—(இ-ள்). எல்லா வுயிர்க ளமேலுந் தெவ்விய தன்மனியைப் பூண்டொழுகலான், அந்தணரென்று சொல்லப்படுவார் துறவுத்தி னின்றவர். (எ-று).

பூணுதல்-விரதமாகக் கோடல். * அந்தணரென்ப தழகிய தட்பத்தை யுடையாரென வேதிப்பெயராகலின், அஃதவ் வருளுடையார்மேலன்றிச செல்லாதெனபது கருத்து. அவ்வா ருணையுடையாராயினும் உயிர்கண்மாட் டருளுடையரென்ப திதனுற் கூறப்பட்டது

தெளி.—(இ-ள்). எவ்வுயிர்க்கும் - எல்லாவுயிர்களின்மேலும், செந்தண்மை - செவ்வையானவருள், பூண்டு - (விரதமாகக்)கொண்டு, ஒழுகலான் - நடத்தலால், அந்தணரென்போர் - அந்தணரென்று சொல்லப்படுவோர், அறவோர் - துறவறத்தினின்றவர், (எ-று).

மற்று - அசைநிலை. அந்தணரெனபது அழகிய குளிர்ச்சி (கருணை)யை யுடையவரெனக் காரணப்பெயராகலின், அஃதவ் வருளுடையார் மேலல்லாது மற்றவர்மேல் செல்லாதென்பது கருத்து. அப்படி ஆணையையுடையவராயினும் உயிர்களிடத்துக் கருணையுடையாரென்பது இதனுற் சொல்லப்பட்டது.

" அந்தத்தையணவுவாரந்தணர் என்றது வேதாந்தத்தையே பொருளென்று பேர்கொண்டோர்ப்பார்" என்பர் நச்சினார்க்கினியர்.

(க-து). அந்தணரென்று சொல்லப்படுவோர் உயிர்களிடத்துக் கருணையுடைய முனிவர்களே என்பது.

10. The virtuous are truly called Andhanar, because in their conduct towards all creatures they are clothed in kindness.

நான்காம் – அதிகாரம்.

அறன்வலியுறுத்தல்—*The Power of Virtue.*

பரி.—(இ - ள்). அஃதாவது அம்முனிவரானுணர்த்தப்பட்ட அம்முன்றனுள், ஏனைப பொருளும் இன்பமும் போலாது, அறன் இம்மை மறுமை வீடென்னு முன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத் தென்பது கூறுதல். அக்காரமுறைமையும் முதனினைவினங்கும்.‡ 'சிறப புடை மாபிற் பொருளு மின்பமுமறத்து வழிபடூஉந் தோற்றம் போல" என்றார் பிறரும்.

தெளி.—அஃதாவது அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட அறம் பொருளின்பமென்னும் மூன்றனு ளு,மூறைப பொருளுமின்பமும்போலாகாமல், அறம் இம்மைப்பயன் மறுமைப்பயன் வீடு என்னும் மூன்றையும் தருதலால், அப்பொருளினபமென னு மிரண்டிலும் உறுதியுடையதென்பது சொல்லுதலாம் அதிகாரமுறைமையு மதனுலே விளங்கும்.

க. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனே வுயிர்க்கு.

பரி.—(இ-ள்). வீடுபேற்றையுந்தரும்; துறக்க முதலிய செல்வத்தையுந்தரும்; ஆதலான், உயிர்கட் கறத்தினின்மிக்க ஆக்கம் யாது? (எ-று).

எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின வீடு 'சிறப்பு'எனப்பட்டது.ஆக்கந் தருவதனை 'ஆக்கம்' என்றார். ஆக்கம்-மேனமேலுயர்தல் ஈண்டியெ ரென்றது மக்களுயிரை, சிறப்புஞ செலவமும எயதுதறகுரிய ததுவே யாகலின். இதனுன் அறத்தின் சிறக வுறுதி யில்லை யென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). சிறப்பு - மோகூமனடதலேயும், ஈனும் - கொடுக்கும், செல்வமும் - (சுவர்க்கமுதலாகிய) செல்வத்தையும், ஈனும் - கொடுக்

‡ இது புறநானூறு கக - வது செய்யுட்கனுள்ளது. இதன்பொருள் மேன்மை யுடைய முறைமையினுல் பொருளுங் காமமும் தருமத்தின் பின்னே தோன்றுங் காட்சியைப்போல என்பது.

கும், (ஆதலால்), உயிர்க்கு - (மக்கள்) உயிர்கட்கு, அறத்தினூஉக்கு - தருமத்தின்மேற்பட்ட, ஆக்கம் - பெருக்கத்தைத்தருவது, எவன - யாது? (எ-று).

ஓ - அசை நிலை. எல்லாப் பேறுகளினும் சிறந்ததாகலின் மோக்ஷம் 'சிறப்பு' என்று கூறப்பட்டது. ஞானத்தைத்தருவதாகிய அறத்தை (காரிய வாகுபெயரால்) 'ஆக்கம்' என்றுகூறினார். ஆகையால் மேன்மேலுயர்தல். சிறப்பு செல்வம் மிடைதற்தர்யது மக்களுயிரேயாதலின், இங்கே யுயிரென்ன தது மக்களுயிரை. இதனால அறத்தைப்பார்க்கினும் மிக்க உறுதியைத்தரு வது வேறொன்றில்லை யென்பது சொல்லப்பட்டது.

(க-து). மகளுயிர்க்கு நன்மையைத் தருவது தருமத்தினும் மேம்பட்ட தொன்றில்லை என்பது.

1. Virtue will confer Moksha and wealth (Heaven &c); what greater source of happiness can man possess

உ. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

பரி.—(இ-ள்). ஒருவனுக் கறஞ்செய்தலின் மேற்பட வாக்கமு மி ல்லை; அதனை மயக்கத்தா னன் மறத்தலின் மேற்பட கேடுமி ல்லை, (எ-று).

அறத்தினூஉங் காக்கமு மில்லை' என மேற்சொல்லியவதனையே * அநுவதித்தார்; ‡ அதனற் கேடுவருதல் கூறுதற் பயனெக்கு. இதனால் † அது செய்யாவழிக கேடுவருதல் கூறப்பட்டது.

* அநுவதித்தல - அநுவாதம். அஃதாவது யாதானுமோர் நிமித்தத் தால் ஒன்றனை முற்கூறி, வேறொரு நிமித்தத்தா லதனையே பின்னுங் கூறுதல். அனுவாதமெனினும் வழிமொழிதலெனினு மொக்கும். அனுவ தித்தற்கு முன்னர்ப் பெறப்பட்ட தொனறனை வடநூலார் புரோவாத மென்பர். (புரோவாதம - முன்பு கூறுதல்). இதனால் அனுவாதம் கூறி யது கூற லன்றெனப தாயிற்று. கூறியது கூறலாவது "அங்க மிலாத வனங்கன்" என்பதுபோல் யாதானுமோர் நிமித்தமின்றி முனனர்க்கூறி யதனையே பின்னருங்கூறுதல். அஃதாவது இருகாற்சொல்லி யொருகாற் பயன கொள்ளுதல். பிரயோக விவேகனுலார் "ஒருபொருளை முன்னரெ டுத்துக் கூறுவது புரோவாதம். அதனை யொருநிமித்தத்தாற் பின்னரு மெடுத்துக்கூறுவது அனுவாதம். உதாரணம் 'அறத்தினூஉங் காக்க மெவ னை வுயிர்க்கு' 'அறத்தினூஉங் காக்கமு மில்லை' எனவரும்." என்றார். இங்கே "அறத்தினூஉங் காக்க மெவனை வுயிர்க்கு" என்பது புரோவாதம், அறத்தினூஉங் காக்கம்' என்று மதனையே 'மறத்தலி னூங்கில்லை கேடு' என்னும் நிமித்தம் பற்றிப் பின்னருங கூறியது அநுவாதம்.

‡ அதனல் - அறஞ்செய்தலை மயக்கத்தினல் மறத்தலினல்.
† அது செய்யாவழி - தருமஞ்செய்யா விடத்து.

தெளி.—(இ-ள்). (ஒருவனுக்கு) அறத்தினூஉங்கு - தருமஞ் செய்தலின் மேற்பட்ட, ஆக்கமும - பெருக்கத்தைத தருவதும், இல்லை—, அதனை - அத்தருமத்தை, மறத்தலினூங்கு - (மயக்கத்தால்) மறந்துவிடுதலின் மேற்பட்ட, கேடு - கேட்டைத்தருவதும், இல்லை, (எ-று).

அறத்தினூஉங் காக்கமு மில்லை'என முன்னர்ச சொல்லியவதனையே அதுவாதஞ் செய்தார்; அதனுற் கேடுவருதலைச சொல்லுதலாகிய பயனெக்கி இதனுல் அது செய்யாதவிடத்துக் கேடுவருதல் சொல்லப்பட்டது

(சு-து). தருமஞ்செய்தலின் மேற்பட்ட செல்வமும் அதனை மறத்தலின் மேறபட்ட கேடுமிலலை யென்பது.

2. There can be no greater source of good than (the practice of) virtue; than the forgetfulness of it, their can be no greater source of evil.

சு. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

பரி.—(இ-ள). தத்தமக்கியலுந திறத்தான் † அறமாகிய நல்வினையை யொழியாதே அஃதெய்துமிடந்தா னெல்லாஞ்செய்க,(எ-று).

இயலுந்திறமாவது இல்லறம் பொருளளவிற் கேற்பவும் துறவறம் யாக்கைக்கே கேற்பவுஞ் செய்தல். ஓவாமை - இடைவிடாமை. எய்துமிடமாவன:மனம் வாக்குக் காயமென்பன. அவற்றுற் செய்யும் அறங்களாவன முறையே ‡ நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலுமென இவை. இதனுன் அறஞ்செயயுமாறு கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). ஒல்லும்வகையான்-(தத்தமக்குக்)கூடும்வகையால், அறவினை - தருமமாகிய நல்வினையை, ஓவாதே - ஒழியாமலே, செல்லும் வாயெல்லாம் - (அவ்வறவினை) செல்லு மிடங்களினு லெல்லாம், செயல் - செய்யக் கடவர், (எ - று).

கூடும்வகையாவது இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும் துறவறம் சரீரநிலைக்கு ஏற்பவும் செய்தலாம். ஓவாமை - நடுவே நீங்காமை. செல்லுமிடங்களாவன: மனமும் வாக்கும் காயமுமாம். அவற்றினுற்செய்யும் அற

† அறத்திற் (தருமத்திற) கேதுவாகிய நல்வினையை யென்றுகொள்க. நல்வினையால் தருமமும் அதனுல் சுகமுமுண்டா மென்பதிவ குணாத்தகுதாம்.

‡ மனத்தால் நல்லனவற்றை யெண்ணுதலும், வாயால் நல்லனவற்றைச சொல்லுதலும், உடம்பால் நல்லனவற்றைச செய்தலுமாம்.

ங்களாவன முறையே கற்கிக்கையும் நற்சொல்லும் நற்செயலுமாம். இத னால் அறஞ் செய்யும் வகை சொல்லப்பட்டது.

(க-து). மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணத்தாலுங் கூடுமானவளவு இடைவிடாது தருமஞ் செய்யக் கடவர் என்பது.

3. As much as possible, in every way, incessantly practise virtue.

ச. மனத்துக்கண் மாசில னுதல் லனைத்தற
னுகுல நீர பிற.

பரி.—(இ-ள). * அவ்வாற்றான் அறஞ்செயவான் தன் மனத்தின்கட் குற்றமுடைய னல்லனாக; அப்படியே அறமாயது; அஃதொழிந்த சொல்லும் வேடமு மறமெனப்படா, ‡ ஆரவார நீர்மைய, (எ-று).

குற்றம் - † நீயன சிந்தித்தல். பிறரறிதல் வேண்டிச செய்கின்றனவாகலின் 'ஆகுலநீர' என்றார். மனத்து மாசுடையனாயவழி § அதன் வழிய வாகிய மொழி மெய்களாற் செய்வன பயனில வென்பதூஉம் பெறப்பட்டது.

தெளி.—(இ-ன்). மனத்துக்கண் - (அவ்வகையாக அறஞ்செய்பவன் தன்) மனத்தினிடத்து, மாசிலனுதல் - குற்ற மில்லாதவனுகக் கடவன், அறம் - தருமமாவது. அனைத்து - அவ்வளவு, பிற-அஃதொழிந்த சொல்

* அவ்வாற்றான் - கூடுமானவிதனல்.

‡ ஆரவாரநீர்மை-பிறரறியச்செய்யும் ஆடம்பரத் தன்மையுடையனவாம்.

'பயனெக்கா தாற்றவும் பாத்தறிவோன் றின்றி, யிசைகோக்கி மீகி ன்ரு நீகை...கூலிக்குச் செய்துண்ணு மாறு" என்பது பழமொழி.

† நீயன சிந்தித்தலாவது பிறர்பொருளே யெவ்வா றபகரிக்கலா மென்றெண்ணுதல், பிரமஹத்தி முதலிய கதாதகாரியங்களேச செய்ய விரும்புதல், தேகமே ஆன்மாவென் றதனிடத்து (பரலோகப் பிரயோ ஜனக் கருதாது) வீணே அபிமானம் வைத்தல் முதலியனவாம்.

§ வாக்கும் காயமும் மனத்தினிஷ்டப்படி ஒழுகுதலன்றித் தம் மிஷ்டப்படி ஒழுகுதற் கியலாமை பற்றி 'அதன்வழியவாகிய மொழிமெய் கள்' என்று கூறப்பட்டது. மாசுடைய மனத்தின் வழிப்பட்ட வாக்கு: கடினமாகப்பேசுதல் பொய்சொல்லுதல் கோட்சொல்லுதல் பயனில்லாத வார்த்தைகளேப் பேசுதல் முதலிய வற்றையும், காயம் பிறரது பொருளேத் திருடுதல் ஜீவஹிம்சை செய்தல் பிறமாதரைப் புணர்தல் முதலிய வற் றையும் உடையனவா யிருக்குமென்க.

லும் வேடமும், ஆகுலநீர - (அறமெனப்படுவெனவல்ல)'ஆரவார குணத்தை யுடையனவாம், (எ-று).

குற்றம்—தீயனவற்றை நினைத்தல். பிறரறியவேண்டிச் செய்கின்றன வாதலால் 'ஆகுல நீர' என்றார். மனத்தின்கண் குற்ற முடையவனுடைய போது அம்மனத்தின் வழியிற் பொருந்துவதாகிய வாக்கினலும் காயத்தி (உடம்பி) னலும் செய்யுந் தருமங்கள் பயன்தருவதில்லை யென்பதும் பெறப்பட்டது.

(க-து). தருமஞ்செய்பவன் மனத்தின்கண் மாசற்றிருத்தலே தருமமாம் என்பது.

4. Whatever is done with a spotless mind is virtue ; all else is vain show.

ரு. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

பரி.—(இ-ள்). ¶ பிறராக்கம் பொறாமையும்· * புலன்களின்மேற் செல்கின்ற அவாவும் அவையேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும் அதுபற்றி வருங் கடுஞ்சொல்லுமாகிய இந்நான்கினையுங் கடிந்து இடை யறாது நடந்தது அறமாவது, (எ-று).

இதனுன் இவற்றோடு வீரவி யியன்றது அறமெனப்படா தென்பது உங்கொள்க. இவை இரண்டுபாட்டானும் அறத்தினியல்புகூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). அழுக்காறு - (பிறருயர்ச்சி) பொருமையும், அவா- (ஐம்புலன்கள்மீது செல்லுகின்ற) ஆசையும், வெகுளி - (அவைகாரண மாகப் பிறர்மே லுண்டாகின்ற) கோபமும், இன்னுச்சொல் - (அதுபற்றி வருகின்ற) கடிஞ்சொல்லும். நான்கும்-(ஆகிய விந் நான்கினையும்.இழுக்கா- கடிந்து, இயன்றது-(ஒழிவில்லாமல்)நடந்தது, அறம்-தருமமாவது,(எ-று).

இதனுல் அழுக்காறுமுதலிய இந் நான்கோடுங்கலந்து நடந்தது அற மெனப்படாது என்பதுங்கொள்க. இவை இரண்டு பாட்டாலும் அறத்தி னது இயல்பு சொல்லப்பட்டது.

¶ பிறராக்கம் பொறுமையாவது அன்னியருக்குண்டாகும் கல்வி செல் வம் அதிகாரம் மரியாதை முதலாயினவற்றைக் கண்டு அருயையடைதல்.

புலன்கள் - விஷோபயின்றிய சப்தாதி விஷயங்கள்.

(க-து). பெருமை ஆசை கோபம் கடுஞ்சொல் என்னும் மிந் நான்கினையு மொழித்து நடைபெறுவது தருமமாகும் என்பது.

5. That conduct is virtue which is free from the four things: malice, desire, anger, and bitter speech.

கூ. † அன்றறிவா மென்ன தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

பரி.—(இ-ள்). யாம் இது பொழு தினைய மாகலின் இறக்கு நாளின்று செய்துமெனக் கருதாது அறத்தினை நாடோறுஞ்செய்க; அவ்வாறு செய்தவறம் இவ்வுடம்பினின்று முயிர்போங்காலத்து அதற்கு அழிவில் லாத துணையாம், (எ-று).

மற்றென்ப தசைநிலை. 'பொன்றுத்துணை' என்றார்; * செய்தவுடம் பழியவும் உயிரோடொன்றி யேனையுடம்பிலுஞ் சேறலின். இதனுன் இவ்வியல்பிற்ருய அறத்தினை நிலையாதயாக்கை நிலையினபொழுதே செய்க வென்பது கூறப்பட்டது

தேளி.—(இ-ள்). (காம்இப்பிறவி இனையோமாகலின்) அனறு - இற க்குநாளில், அறிவாமென்னுது - செயலாமென்று நினையாமல், அறம்-தரு

† "மற்றறிவா நலவினை யாமினைய மென்னுது, கைத்துண்டாம் போழ்தே காவா தறஞ்செய்மின், முற்றி யிருந்த கனியொழியத் தீவ ளியா, னன்கா யுதிர்தலு முண்டு" என்பது காலடி.

* மனோவாக்குக் காயமென்னுந் திரிகரணங்களாலும் செய்யப்படு கின்ற கிரியைகள் கர்மங்களெனப்படும்; அக்கிரியைகள் அனுஷ்டான மான (செய்த) வுடன பின்வரும் நன்மை தீமைகளுக்கேதுவான தர்மா தர்மங்களே யுற்பத்திசெய்து கெடுகின்றன. இத்தர்மாதர்மங்கள் அந்தக்கர ணத்தில் அதற்பூதமாய் (வெளிப்படாதபடி) நடுகுகின்றன. அந்தக்கரணம் விடாது பிறவிகள் தோறும் அவ்வவ் வுடம்புகளைப்பற்றியே யிருத்தலின் அவ்வந்தக்கரணத்தில் அதற்பூதமாயிருக்கும் தர்மாதர்மங்கள் அவ்வப்பிற விகளி லுண்டாகும் நன்மைதீமைகளுக் கேதுவாயிருக்கின்றன. இவ் வாறு அந்தக்கரணத்தி லதற்பூதமாய்த்தங்கி யவ்வப்பிறவிகளில் இன்பத் துன்பங்கள் புலப்படுதல் வாயிலாக அனுமிக்கப்படும் தர்மாதர்மங்களையே "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே" என்று பெரியார் கூறியுள்ளா ரென்க. இவ்விரண்டி லொன்றுயிய தருமத் (அறத்) தினைச 'செய்தவுடம் பழியவும் உயிரோடொன்றி (உயிரோடுள்ள அந்தக்கரணத்தி லதற்பூதமாய்த்தங்கி) யேனையுடம்பிலுஞ் சேறலின்' என்று கூறினு ரென்க.

மத்தை, செய்க - (தினக்தோறுஞ்) செய்யக்கடவர், அது - அப்படிச்செய்த தருமமானது, பொன்றுங்கால் - இவ்வுடம்பினின்று முயிர்போங்காலத்து, பொன்றுத்துணை - (அவ்வுயிர்க்கு) அழியாததுணையாம், (எ-று).

மற்று - அசை. தன்னைச்செய்த வுடம்பழியவும் உயிரோடு கூடி மற்றையுடம்பிலுஞ் செல்லுதலால் அறத்தினை 'பொன்றுத்துணை' என்றார். இதனால், இத்தன்மையினதான தருமத்தை நிலையில்லாதவுடம்பு இருக்கின்ற பொழுதே செய்க என்பது சொல்லப்பட்டது.

(க-து). இறக்கும்பொழுது தருமஞ் செய்வோமென் றெண்ணுது இருக்கும்போதே தருமஞ்செய்தால் அஃதிறக்கும்போ தறவியாம் என்பது.

6. Say not we will hereafter make choice (of virtue): be virtuous now; in the hour of death, she will be to you a deathless help.

எ. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
போறுத்தாளே தேர்ந்தா னிடை.

பரி.—(இ-ள்). அறத்தினியபயன் இதுவென்று யாம் ஆகமவளவை யான் உணர்த்தல்வேண்டா, சிவிகையைக் காவுவானுடு செலுத்துவானிடைக் காட்சியளவைதன்னானே யுணரப்படும், (எ-று).

* பயனே 'ஆறு' என்றார்; § பின்னதாகலின். †'என' என்னும் எச்சத்தாற் சொல்லாலிய ‡ ஆகம வளவையும், 'பொறுத்தாளே தேர்ந்தானிடை' என்றதனாற் காட்சி அளவையும் பெற்றும். உணரப்படு மென்பது சொல்லெச்சம். இதனாலறம் பொன்றுத் துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

தெளி.—(இ-ள்). அறத்தாறு - தருமத்தின்பயன், இதுவென - இது வென்று (யாம் ஆகமப்பிரமாணத்தாலறிவித்தல்), வேண்டா - வேண்டிய

* அறமார்க்கத்திற் செல்லுவதாலடையும் பயனே 'ஆறு (வழி)' என்றது கருவியாகுபெயராம்.

§ 'பின்னதாகலின்' என்றற்கு அறத்தின்பயன் அறத்தைக் கைக்கொண் டொழுகியதன்பின்ன ருண்டாகின்ற தாகலின் என்றுகொள்க.

† 'என' என்னும் செயவெனெச்சத்திற்கு என்று சொல்ல என்பது பொருளாகலால் ஆகம (சாஸ்திர)ப்பிரமாணமும், 'சிவிகை பொறுத்தாளே தேர்ந்தானிடை' என்று குறித்துச் சொன்னதினால் பிரத்தியட்சப் பிரமாணமும், பொருள்முடிவின்மையினால் உணரப்படும் என் னும் சொல்லெச்சமும் பெற்றும்.

‡ உண்மையனுபவ அறிவிற்குக் கருவியாயுள்ளது அளவை யெனப்படும். அளவையெனினும் பிரமாணமெனினு மொக்கும்.

தில்லே, சிவிகை - பல்லக்கை, பொறுத்தானேறு - சுமப்பவனேறி, ஊர்ந்தானிடை-(அதன்க ணிருந்து அதை)செலுத்துவோனிடத்து (பிரத்தியட்சப் பிரமாணத்தினுலே யறியப்படும்), (எ-று).

அறத்தின்பயன் அறத்தின்பின்னுண்டாவதாகலின், பயனே ஆறு என்ருர். 'என' என்னுஞ் செயவெனெச்சத்தால் சப்தமாகிய ஆகமப் பிரமாண மும், 'பொறுத்தானேறு ஊர்ந்தானிடை' என்றதனல் பிரத்தியகூப் பிரமாண மும் பெற்றனம். அறியப்படுமென்பது (குறைந்துநின்றதனல்)சொல்லெச் சம். இதனுல் அறம் அழியாத துணையாதல் தெளிவாகக் கூறப்பட்டது.

(க-து). தருமத்தின் பயன் சப்தப்பிரமாணத்தாலே யன்றிப் பிரத்தியட்சப் பிரமாணத்தினுலு மறியப்படும் என்பது.

7. You need not describe (in books) the fruit of virtue; it may be inferred from seeing the bearer of a palankeen and him who rides in it.

அ. வீழ்நாள் படாஅமை நன்ருற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

பரி.—(இ-ள்). செயயாது கழியுநா ளுளவாகாமல் ஒருவன் அறத் தைச் செய்யுமாயின், அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வரும்வழியை வாராமலடைக்குங் கல்லாம், (எ-று).

ஐவகைக் குற்றத்தான் வரும் இருவகைவினையு முள்ளதுணையும் உயிர் யாக்கையோடுங் கூடிநின் றவ்வினைகளது இருவகைப்பயனையுநுகரு மாகலான், அநாண்முழுவதும் 'வாழ்நாள்' எனப்பட்டது. குற்றங்கள் ஐந்தாவன:—‡ 1 அவிசமை, 2 அகங்காரம், 3 அவா, 4 விழைவு, 5 வெறுப்பென்பன. இவற்றை வடநூலார் † பஞ்சக்கிலேசமென்ப. வினையிரண்டாவன:- நல்வினை தீவினையென்பன பயனிரண்டாவன:—இன்பதன்பமென்பன. இதனுல் அறம் வீடு பயக்குமென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்). ஒருவன்-,வீழ்நாள்-(செய்யாமற்)கழியுநாள்,படாஅ மை - உண்டாகாமல், நனறு - தருமத்தை, ஆற்றின் - செய்வானுயின், அஃது - அச்செய்கையானது, வாழ்நாள்-(அவன் சரீரத்தோடு) கூடுநாள்,

‡ 1 அவிசமை - அநாதியாய வஞ்ஞானம். 2 அகங்காரம்—அவ்வவிச சைபற்றி யானென மதிக்குஞ் செருக்கு. 3 அவா-அவ்வகங்காரம் பற்றி யெக்கிது வேண்டுமென்பது. 4 விழைவு - அவ்வவாபற்றி அப்பொருட் கண் செல்லும் ஆசை. 5 வெறுப்பு - அவ்வாசைபற்றி யதன் மறுதலைக் கண் செல்லுங் கோபம.

† பஞ்சகிலேசம் - ஐவகைக்குற்றம்.


வழி - (வரும்) வழியை, அடைக்குங்கல் - (வாராமல்) அடைக்குங் கல் லாம், (எ-று).

அஞ்ஞானம், அகங்காரம், அவா, விருப்பு, வெறுப்பு என்னும் ஐவ கைக் குற்றங்களால் வருகிற நல்வினை தீவினை என்னும் இருவகை வினை களும் உள்ளவரைக்கும் உயிர் உடம்போடுங் கூடிநின்று அவ்விருவினைக ளது பயன்களாகிய சுகதுக்கங்களிரண்டையும் அனுபவிக்கு மாதலால் அக்காலமுழுதும் 'வாழ்நாள்' எனப்பட்டது.

இதனால் தருமம் மோட்சந் தருமென்பது சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் சோர்வடையாது தருமத்தைச செய்தால் அஃதவனின் பிறப்பை நீக்கும் என்பது.

8. He who suffers no day to pass unimproved, but (continually) does some good, such conduct will be a stone to block the passage to other births.



கூ. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

பரி.—(இ-ள்). இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன்பத்தி னிடத்து; அதுவேயுமன்றிப் புகழுமுடைய வல்ல, (எ-று).

ஆறுருபு ஈண் ¶ டெனிகழ்சிக்கண் வந்தது. † "தூஙகு கையா னெஞ்சு நடைய" என்புழிப்போல. இன்பம் - காமதுகர்ச்சி. அஃதாமாறு ‖ காமத்துப்பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று பாவத்தான் வரும் பிறனில்விழைவு முதலாயின அக்

. உடனிகழ்சிப் பொருளாவது வினைகொண்டு முடியும் பொரு ளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாக வுடையபொருள், ஈண்டு 'அறத்தான் வருவதேயின்பம்' (இல்லறத்தோடு பொருந்திவருவதே யின்பமாவது) என்பதில் இன்பம் வினைகொண்டு முடியும்பொருள்; வரு வது என்பது அப்பொருளின் தொழில். அவ்வருவது என்னுந்தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாக வுடையபொருள் அறமாதலால் அறம் உடனிகழ்ச்சிப் பொருளதாயிற்றென்க.

† புறநானூறு 22. இதன் பொருள் அசைந்த (பெருங) கையுடனே (தலையெடுத்து நடக்கும்) உயர்ந்தநடையை யுடையன என்பது.

‖ காமத்துப்பாலின் முதலில் "ஈண்டின்ப மென்றது ஒருகாலத் தொரு பொருளான் ஐம்புலனுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத தினை" என்று கூறப்பட்டிருக்கின்றது.

கணத்துள் இன்பமாய்த்தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின் 'புறத்த' என்றார். அறத்தோடு வாராதன 'புகழுமில' ஏனவே, வருவது புகழுமுடைத்து என்பது பெற்றாம். இதனுள் அறஞ்செய்வாரே இம்மை யின்பமும் புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது.

தேவி.—(இ-ள்). அறத்தான் - இல்லறத்தோடு (பொருந்தி), வருவ தே—, இன்பம்-இன்பமாம், மற்றெல்லாம் அவ்வில்லறத்தினோடு பொரு ந்தாது வருவனவெல்லாம் (இன்பமாயினும்), புறத்த - துன்பத்துட் சேர் வனவாம், (அதுவுமல்லாமல்) புகழும் - புகழையும், இல-உடையனவல்ல, (எ-று).

அறத்தானெண்ணும் ஆனுருபு இங்கு உடனிகழ்ச்சிப்பொருளில்வந்தது. இன்பம்-காமத்தினனுபவம். அஃதாகுவிதம் காமத்துப்பாலின் முதலிற் கூறப்படும். (மற்றது) இன்பத்தின் புறமெனவே துன்பமாயிற்று. பாவத் தால்வரும் பிறனது மனைவியை விரும்புதல் முதலானவை அச்சமயத்தில் இன்பமாய்த்தோன்றுமாயினும் பின்பு துன்மாய் விளைதலால் 'புறத்த' என் றார். இல்லறத்தோடு பொருந்தி வாராதன 'புகழுமில' எனவே, அவ்வில் லறத்தோடு பொருந்தி வருவதாகிய வின்பம் புகழு மூடைத்தாமென்பது பெற்றாம். இதனுல் அறஞ்செய்வாரே இம்மை இன்பமும் புகழும் பெறு வாரென்பது சொல்லப்பட்டது.

(க-து). இல்லறத்தோடு கூடிவரு மின்பமே இன்பமாம்; அது னோடு பொருந்தாதுவரு மின்பம் துன்பமாமென்பது.

9. That pleasure only which flows from domestic virtue is pleasure; all else is not pleasure, and it is without praise.



கo. சேயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

பரி.—(இ-ள்). ஒருவனுக்குச் செய்தற் பான்மையது நல்வினையே; ஒழிதற் பான்மையது தீவினையே, (எ-று).

ஒருமென்பன இரண்டும் அசைகிலே. தேற்றேகாரம் பின்னுங்கூட்ட ப்பட்டது § பழிக்கப் படுவதனைப் 'பழி' என்றார். இதனுற் † செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன.

---

§ பழியென்பது செயப்படுபொருளுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்ட தொழிற்பெயர். அல்லது பழியென்பது பழிப்பதற்கேது வாகிய தீவினையையுணர்த்தலால் காரியவாகுபெய ரெனினு மொக்கும்.

† செய்வது நல்வினையும், ஒழிவது தீவினையுமாம்.

தெளி.—(இ-ன்). ஒருவற்கு - ஒருவனுக்கு, செயற்பாலது - செய்தற்றன்மையது, அறனே - நல்வினையே, உயற்பாலது - ஒழிதற்றன்மையது, பழி(யே) - தீவினையே, (எ-று).

அறனேயென்னும் தேற்றேகாரம் பழியென்பதனோடுங் கூட்டப்பட்டது. ஒருமிரண்டும் அசை நிலைகள். பழிக்கப்படுவதாகிய தீவினையைப் 'பழி' என்றார். இதனைச்செய்வதும் ஒழிவதும் நியமிக்க (நிச்சயிக்க)ப் பட்டன.

(க-து). செய்யத்தக்கது நல்வினையும் செய்யத்தகாதது தீவினையுமா மென்பது.

10. That which it is meet to do is virtue ; that which it is meet to abandon is vice.

பாயிரம் முற்றும்.

அதிகாரம் நான்கிற்குச் செய்யுள்—40.

2. இல்லறவியல்—

On Dcmestic Virtve. ∪

முதல் அதிகாரம்.

இல்வாழ்க்கை—The Domestic State.

பரி —அஃதாவது இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு. இன்னிலை (இல்-நிலை) அறஞ்செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலர்தலின், இஃதறன்வலி யுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மனையாளோடு கூடி வாழ்தலினது சிறப்பாம். இல்வாழ்க்கை நிலையானது அறஞ்செயதற்குரிய இல்லறம் துறவறமென்னும் இருவகை நிலைகளுள் முதலாவதாதலின், இஃது அறன்வலியுறுதலின் பின் வைக்கப்பட்டது.

க. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

பரி:—(இ-ள்). இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப்படுவான் அறவியல்பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர்செல்லும் நல்லுலோழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம், (எ-று).

* இல்லென்ப தாகுபெயர். † என்பானெனச செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. ஏனை மூவராவார் ஆசாரிய னிடத்தினின்றேறுதலும் விரதங காததலுமாகிய பிரமசரிய ஒழுக்கதானும், இல்லை விட்டெ ‡ நியொடு வனததின்கட்சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கதானும், முற்றதுறந்த யோகவொழுக்கத்தா

* இல்லின் (வீட்டின) கண் செய்யப்படுமெ அறத்தை இல் என்றது இடவாகுபெயர்.

† முன்றும் வேற்றுமைக் கருததாவிற்குச செயப்படுபொருள் முதல் வேற்றுமையாக வருதல்பற்றி 'என்பானெனச செயப்படுபொருள் வினை முதல் போலக் கூறப்பட்டது' என்று கூறப்பட்டது. என்பான் என்பதில் அகரச்சாரியையும் படவிகுதியும் தொக்குநின்றன. சொல்லின்கண் படவிகுதி தொக்குப் பொருளின்கண் அது விரிந்து வருவதனைப் பிரயோக விவேகனூலா நிங்குப்படலம் மூன்றுஞ் செய்யுளினுரையில் "நயக்காய்த தோன்றி யக்காய்ப் பொருள் விரியுமாறு காண்க" என்பர்.

‡ நீ - நித்தியாக்கினி.

னும் என இவர். இவருள் முன்னே யிருவரையும் ¶பிறர்மத மேற்கொண்டு கூறினர். இவ ரிவ்வொழுக்க நெறிகளே முடியச் செல்லுமளவும் அச் செலவிற்குப்பசிநோய்குளிர் முதலியவற்றான் இடையூறுவாராமல் $ உண்டி யும் மருந்தும் உறையுளு முதலிய உதவி அவ்வக் நெறிகளின் வழுவா மற் செலுத்துதலான் 'நல்லாற்றினின்ற துணை' என்றார்.

தேளி.—(இ-ள்). இல்வாழ்வா னென்பான் - இல்லறத்தோடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவோன், இயல்புடைய - (அற) இயல்பினை யுடைய, மூவர்க்கும் - (மற்றை) மூவர்க்கும், நல்லாற்றில்-(அவர்செல்லும்) நல்லொழுக்க வழிகளில், நின்ற - நிலைபெற்ற, துணை - துணையாவான், (எ-று).

இல்லென்பது அதனறத்தை உணர்த்தலால் ஆகுபெயர். என்பானென்ன செயப்படுபொருள் எழுவாய் போலச் சொல்லப்பட்டது. மற்றை மூவ ரர்வார் ஆசாரியனிடத்திருந்து வேதமும் ஒதுதலும் விரதங்காத்தலும் ஆகிய பிரமசரிய வொழுக்கமுடையவனும், வீட்டைவிட்டுத் தீயுடன் காட்டினிடத்துப் போய் மனையாள் தொண்டுசெய்யத் தவஞ்செய்கின் றவனுகிய வானப் பிரஸ்தனும், எல்லாப் பற்றுக்களையும்விட்டுச் சமாதிபுரி பவனுகியசந்நியாசியும் என்னுமூவர். இம்மூவருள் பிரமசாரி வானப்பிரஸ்த னென்னுமிருவரையும் பிறமதத்தை யுடன்பட்டுக் கூறினர். இவர்கள் இவ் வொழுக்கநெறிகளே முற்றுப் பெறசெய்து முடிக்குமளவும் அவ்வொழுக் கத்திற்கு இல்வாழ்வான் பசி நோய் குளிர் முதலானவற்றால் இடையூறு வாராது உண்டியும் மருந்தும் உறையுளு முதலியவற்றையுதவி அவரவரை அவ்வவ்வொழுக்கவழிகளில் தப்பாமல் நடத்துதலையினல்'நல்லாற்றினின்ற துணை' என்றார்.

(க-து). இல்லறத்தில்வாழ்பவன் பிரமசாரி வானப்பிரஸ் தன் சந்நியாசி யென்னும் மூவர்க்குந் தக்கதுணையாவானென்பது.

1. He will be called a (true) householder, who is a firm support to the virtuous of the three orders (of Bramachari, Vanaprastan, Sanyasi) in their good path.

¶ இல்லறந்துறவறமென விருவகை நிலையாகவகுத்துக்கொண்டகாய னர் மற்றைப் பிரமசரியநிலையினையும் வானப்பிரஸ்த நிலையினையும் "உடன் படல்" என்னும் மதம்பற்றி மேற்கொண்டு 'மூவர்க்கும்' எனக்கூறி னமைபற்றி 'பிறர்மதமேற்கொண்டு கூறினர்' என்று கூறப்பட்டது.

$ உண்டியும் மருந்தும் உறையுளும்-பசிநீர உணவும், நோய்நீர மருந் தும், வசிக்க இடமும். முதலிய என்றதனல் ஆடை, புத்தகமுதலியனவும் கொள்க.

உ. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

பரி:—(இ-ன்). கலாகணனவரால் துறக்கப்பட்டார்க்கும் நல்கூர்ந் தார்க்கும் ஒருவரு மின்றித் தன்பால்வந் திறந்தார்க்கும் இல்வாழ்வா னென்று சொல்லப்படுவான் துணை, (எ-று).


துறக்தார்க்குப் பாவம் ஒழிய † அவர்க்குக் கலாகணங்கின்று வேண்டு வன செய்தலாலும், துவ்வாதவர்க் குணவுமுதலிய கொடுத்தலாலும், இறந்தார்க்கு § நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலா னும் 'துணை' என்றார். இவை யிரண்டொட்டாலும் இன்னிலே எல்லா வுபகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்). துறந்தார்க்கும் - (ஆதாரமானவரால்) விடப்பட் டவர்க்கும், துவ்வாதவர்க்கும் - வறுமையுடையவர்க்கும், இறந்தார்க்கும்- (ஒருவரு மில்லாமல் தன்னிடத்து வந்து) இறந்தவர்க்கும், இல்வாழ்வா னென்பான்-இல்வாழ்வா னென்று சொல்லப்படுவான், துணை - துணை யாவான், (எ-று).

ஆதாரமானவரால் விடப்பட்டவர்க்குப் பாவமொழிய அவர்க்கு ஆதார மாய் நின்று வேண்டுவனவற்றைச் செய்தலாலும், வறுமையுடையவர்க்கு உண்டி முதலியவற்றைக் கொடுத்தலாலும், இறந்தவர்க்கு நீர்க்கடன் முத லியவற்றைச் செய்து நல்லுலகத்தின் (சுவர்க்கத்தின்) கண் (அவரை) அனு ப்புதலாலும் 'துணை' என்றார். இவையிரண்டொட்டாலும் இல்வாழ்க்கை எல்லா வுபகாரங்களுக்கும் உரித்தாதல் சொல்லப்பட்டது.

(கூ-து). ஆதாரமற்றவர்க்கும் வறியவர்க்கும் இறந்தவர்க்கும் இல்வாழ்வான் துணையாமென்பது.

2. He will be said to flourish in domestic virtue who aids the forsaken, the poor and the dead.



ரு. தேன்புலத்தார் தெய்வம் விருந்தோக்க ருணேன்ரு
கைம்புலத்தா ரேம்ப றலை.

பரி:—(இ-ள்). பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்டவைந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய் தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம், (எ-று).

† அவர் (இல்வாழ்வார்) என்றும் பாடமுண்டு.

§ நீர்க்கடன் - திலதருப்பணம்; திலம்-எள்.

பிதிரர்களார் படைப்புக்காலத் தயனுற் படைக்கப் பட்டதோர் கடவுட்சாதி; அவர்களிடக் தென்றிசை யாகலின் 'தென்புலத்தார்' என்றார். தெய்வமென்பது சாதியொருமை. விருந்தென்பது புதுமை. அஃதின் டாருபெயராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது. அவர் இருவகையர்: பண்டறிவண்மையிற் குறித்து வந்தாரும், † அஃதின்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல் - சுற்றத்தார். எல்லா வறங்களும் தானுனனுய் நின்று செய்யவேண்டுதலின் தன்னே யோம்பலும் அறனுயிற்று. $ என்ற என்பது விகாரமாயிற்று. ஆங்கு - அசை. ஐவகையும் அறஞ்செய்தற் கிட னுகலின் 'ஐம்புலம்' என்றார். அரசனுக்கு ¶ கிறைப்பொருள் ஆறி லொன்று யிற்று; இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூடவேண்டுதலானென்பதறிக.

தேளி:—(இ-ள்). தென்புலத்தார் - பிதிரரும், தெய்வம் - தேவரும், விருந்து - அதிதியரும், ஒக்கல் - சுற்றத்தாரும், தான் - தானும், என்ற-என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து - ஐந்திடத்தும் (செய்யும்), ஆறு-(அற) வழியை, ஓம்பல் - வழுவாமற் செய்தல், தலை - (இல்வாழ்வானுக்குச்) சிறப்புடைய வறமாம், (எ-று).

பிதிரராவார் சிருஷ்டிகாலத்திற் பிரமனுற் சிருட்டிக்கப்பட்டதோர் தேவசாதியார்; அவர்க்கு இடம் தென்திசையாதலின் 'தென்புலத்தார்' என்றார். தெய்வமென்பது சாதிவொருமைப்பெயர். விருந்து - புதுமை. அஃது இங்குப் பண்பாகுபெயராய்ப் புதியவராய் வந்தவரை உணர்த்திற்று. விருந்து - பண்புப்பெயர். அவ்விருந்தினர் முன்னறிந் திருக்கின்றமை பற்றிக் குறித்து வந்தாரும் அஃதில்லாமை பற்றிக் குறியாது வந்தாருமென் றிருதிறத்தராவர். எல்லா வறங்களேயும் தான் செல்வையாயிருந்துகொண்டு செய்யவேண்டுதலின தன்னைக் காப்பாற்றுதலும் அற

---

* இறந்து போனவரது புத்திரர் முதலியோர் செய்யுங் கருமங்களினுல் திருப்தியடைந்து இறந்தவர்க்கும் அவரினத்தவர்க்கும் நேர்ந்த துர்க்கதியை நீக்கவும் நற்கதியை யளிக்கவும் வல்ல வொருவகையான தேவசாதியார் பிதிர்க்களெனப்படுவர்; இவர்கள் இயற்கைத் தேவர்களிலொருவகையினரா யிருத்தல்பற்றி 'பிதிரராவார் படைப்புக்காலத்தய(பிரம)னுற்படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி' என்று கூறப்பட்டது [இயற்கைத் தேவர்களல்லாதார் கருமதேவர்க ளெனப்படுவர். அவர்கள் புண்ணியத்திற் கேற்பச் சுவர்க்காதிகளிற்போகங்களேயனுபவித்துப் புண்ணியங்கழிந்த வடனே அவ்விடத்தினின்றும் நீங்கிவிடுபவர்கள்].

† அஃதின்மையின்-முன்னறிந் திராமைபற்றி. முன்னறிதல் - முன்னறிமுகமா யிருத்தல்.

$ என்றுங்கு (என்ற-ஆங்கு) என்பதிலுள்ள என்ற என்பதில் அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது.

¶ இறைப்பொருள் - வரிப்பணம்.

மாயிற்று. என்ற என்பதன் அகரம் தொக்கு நின்றது. ஐஞ்சு - அசை. தென்புலத்தார் முதலிய வைத்துவகையும் தருமஞ்செய்தற்கு இடங்களாகையால் 'ஐம்புலம்' என்றார். இவ்வைந்திடங்களுக்கும் ஐந்து பங்கு வேண்டுதலால் அரசனுக்குப் பகுதிப்பொருள் ஆறிலொரு பங்காயிற்று.

(க-து). பிதிரர்க்கும் தெய்வத்திற்கும் விருந்தினர்க்கும் இனத்தார்க்கும் தனக்கும் வழுவாது தருமஞ்செய்தல் இல்லறத்தானுக்குத் தலைமையான தருமமா மென்பது.

3. The chief duty of the householder is to preserve the fivefold rule of conduct towards the manes, the Gods, his guests, his relations and himself.

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

பரி:—(இ-ள்). பொருள் செய்யுங்காற் பாவத்திற் கஞ்சி யீட்டி அப்பொருளே யியல்புடைய முவர் முதலாயினர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டலே ஒருவ னில்வாழ்க்கையுடைத்தாயின் அவன்வழி யுலகத் தெஞ்ஞான்றும் நிற்றல் அல்லது இறந்தலில்லை, (எ-று).

பாவத்தான் வந்த பிறன்பொருளைப் பகுத்தண்ணின், அறம் பொருளுடையான் மேலும் பாவந் தன்மேலுமாய் நின்ற வழியெஞ்சுமாகலின் 'பழியஞ்சி' என்றார். ‡ வாழ்வான துடைமை வாழ்க்கையே லேற்றப்பட்டது.

தெளி:—(இ-ள்). (பொருள் சம்பாதிக்கும்போது) பழி - பாவத்திற்கு, அஞ்சி - பயப்பட்டுச் (சம்பாதித்து), பாத்து-(அப்பொருளே இயல்புடையமூவர் முதலிய † பதின்மர்களுக்கும்) பங்கிட்டு,ஊண்-(தான்) உண்ணுதலே, வாழ்க்கை - (ஒருவனது) இல்வாழ்க்கையானது. உடைத்தாயின் - உடையதானால், வழி - (அவனது) சந்ததியானது (உலகத்தில்), எஞ்ஞான்றும் - எக்காலும் (நிற்பதல்லாமல்), எஞ்சல் - இறத்தல், இல் - இல்லை, (எ-று).

---

‡ வாழ்வானது உடைமை பகுத்துண்டல். அஃதவனது வாழ்க்கையின்மேலேற்றி 'உடைத்தாயின் வாழ்க்கை' என்று கூறப்பட்டது. இஃது உடையானது ஒருடைமையை அவனது மற்றோருடைமையின்மே லேற்றிக் கூறிய உபசாரவழக்காம்.

† பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி, துறந்தார், துல்வாதவர், இறந்தார், பிதிரர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தாரென்னும் பதின்மர்.

பழியெனபது பழிப்பிற் கேதுவாகிய பாவத்திற்காதலின் காரியவாகு பெயராம். பாவத்தால் வந்த பிறன்பொருளைப் பங்கிட்டுண்டால், அறமான து பொருளுடையான் மேலும் பாவமானது தன்மேலுமாய் நின்று சந்ததி குறையுமாதலால் 'பழியஞ்சி' என்றார். வாழ்வானது பழியஞ்சிப் பகுத் துண்டலாகிய உடைமை வாழ்க்கையின்மேல் ஏற்றப்பட்டது.

(க-து). பாவத்திற்குப் பயந்து பொருளைத் தேடிப் பிரமசாரி முதலியோர்க்குப் பங்கிட்டுண்ணுகின்றவனது சந்ததி யானது குறைதலில்லை யென்பது.

4. His descendants shall never fail who, living in the domestic state, fears vice in the acquisition of property and shares his food with others.



நி. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

பரி.—(இ-ள்). 'ஒருவன் இல்வாழ்க்கை தன்துணைவிமேற் செய் யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்துண்ட லாகிய அறத்தினையும் உடைத்தாயின், அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம், (எ-று).

** கிரனிறை. இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்றுகாவழி இல் லறங் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று அறனுடைமை பயனுயிற்று. இவை மூன்று பாட்டானும் இன்னிலேயி னின்றுன் அறஞ் செய்யுமாறு கூறப்பட்டது.*

தெளி.—(இ-ள்). இல்வாழ்க்கை - (ஒருவனது) இல்வாழ்க்கையான து, அன்பும் - (தன்மனையாளிடத்தே செய்யத்தகும்) அன்பினையும், அற னும்- (பிறர்க்குப் பகுத்துண்ணுதலாகிய) அறத்தினையும், உடைத்தாயின்- உடையதானால், அது - அவ்வுடைமையானது (அவ்வில் வாழ்க்கைக்கு), பண்பும் - குணமும், பயனும் - பிரயோசனமும் ஆம், (எ-று).

மனையாளுக்கும் கணவனுக்கும் மனவொருமை இல்லாதபோது இல் லறம் முடிவு பெறுதாகையால், இல்வாழ்க்கைக்கு அன்புடைமை பண்பா யிற்று; அறனுடைமை பயனுயிற்று. அன்பையும் அறனையும் முன்வைத்த வொழுங்கின்படி அவற்றோடு சம்பந்தமுள்ள பண்பையும் பயனையும் வைத்தலால் இது முறை கிரனிறையணி. அன்பு பண்பும், அறன் பயனு மாம். இதுவும் வாழ்வானது அன்பும் அறனுமாகிய உடைமையை அவ னது வாழ்க்கையின்மே லேற்றிக் கூறிய உபசாரவழக்காம். இவைமூன்று பட்டாலும் இல்வாழ்வோன் அறஞ்செய்யுமாறு சொல்லப்பட்டது.

** கிரனிறையாவது வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்த முள்ளவற்றை யம்முறையே சொல்லுதல்.*

(க-து). ஒருவ னில்வாழ்க்கை அன்பையு மறத்தையுமுடைய தாயி னவ்வுடைமையானது அதற்குக் குணமும் பிரயோசனமு மா மென்பது.

5. If the married life possess love and virtue, these will be both its duty and reward.



கூ. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

பரி.—(இ-ன்). ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனையின், அவன் அதற்குப் புறமாகிய நெறியிற்போயப பெறும் பயன் யாது, (எ-று).

அறத்தாறென்பது பழியஞ்சிப் பகுத்துண்டலும் அன்புடைமையு மென ¶ மேற்சொல்லிய ஆறு. † புறத்தாறு - இல்லிலிட்டு வனத்துச் செல்லுதில். § அக்கிலையின இது பயனுடைத் தென்பார் 'போஒய்ப் பெறுவதெவன்' என்றார்.

தெளி.—(இ-ன்). (ஒருவன்) இல்வாழ்க்கை-இல்வாழ்க்கையை, அறத் தாற்றின் - தருமத்தின்வழியே, ஆற்றின் - செலுத்துவானையின், புறத்தாற் றில் - (அவன் அவ்வில்வாழ்க்கைக்குப்) புறமாகியவழியில், போய்-சென்று, பெறுவது-பெறும்பயன், எவன் - யாது, (இல்லை யென்றபடி), (எ-று).

தருமத்தின்வழி யென்பது பழியஞ்சிப் பகுத்துண்ணுதலும் அன் புடைமையுமென முன்சொல்லிய வழியாம். புறத்தாறு - மனையகலிட்டு வனத்திற்செல்லும் கிலை. அக்கிலைதரும் மறமைப்பயன் போன்று இவ் வில்வாழ்க்கைகிலை மறமைப்பயன் தருதலுடைய தென்பார் 'போஒய்ப் பெறுவதெவன்' என்றார்.

¶ மேற்சொல்லிய - இவ்வதிகாரத்தின் நான்காவது குறளிலும் ஐந்தா வது குறளிலுங் கூறிய.

† புறத்தாறு - வானப்பிரஸ்தநிலை. இது "விரதானுஷ்டான முள்ள துவிஜன் இவ்வாறு திருகல்தாசிரமத்திலிருந்து பஞ்சேந்திரியங்களை யடக்கிக்கொண்டு வானப்பிரஸ்த ரிமத்தை யடைந்து தபோவனத்தில் வசிக்கவேண்டும்" என்பது மனுதரும சாஸ்திரம்.

§ வானப் பிரஸ்தனுக்கு மறமைப்பயன் மனுதரும சாஸ்திரம் "இங் ஙனம் கூறிவந்த மகாமுனி, வீரதங்களுள் எதையாவது அனுஷ்டித்துத் தன் சரீரத்தை விடுவனையின், அவன் பயம் தக்கென்ன மிலையின்றிப் பிரமலோகத்திற் பரமகதத்தை யடைவன்" என்று கூறுவதறிக.

(க-து). ஒருவன் இல்வாழ்க்கையைத் தருமவழியாக நடத்து வானையின், அவன் துறவறத்திற்போய்ப் பெறும்பயன் ஒன்றுமில்லை என்பது.

6. What will he who lives virtuously in the domestic state gain by going into the other ascetic state?

எ. இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னேன்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை

பரி.—(இ - ள). இல்வாழ்க்கைக்கணின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான் ‡ புலன்களை விட முயல்வா ரெல்லாருள்ளும் மிக்கவன், (எ-று).

முற்றத்துறந்தவர் விட்டமையின், முயல்வாரென்றது மூன்றாநிலையி னின்றாரை. அந்நிலைதான் பலவகைப்படுதலின் 'முயல்வாருளெல்லாம்' எனவும், முயலாதவைதனைப் பயனெய்துதலின் 'தலை' எனவுங் கூறினார்.

தெளி.—(இ-ள்). இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையில் நின்று, இயல்பி னுன் - (அவ்வில்வாழ்க்கைக் குரிய) இயல்போடு கூடி, வாழ்பவ னென்பான் - வாழ்பவனென்று சொல்லப்படுவோன், முயல்வாருளெல்லாம் - (ஐம் புலன்களைவிட) முயற்சி செய்வா ரெல்லாருள்ளும், தலை - மேம்பட்டவனு வான், (எ-று).

முற்றத் துறந்தவராகிய சந்நியாசிகள் ஐம்புலன்களையும் விட்டமை யால், முயல்வாரென்றது வனத்திலே தவஞ்செய்வோராகிய வானப்பிரஸ் தரை. அவ்வானப்பிரஸ்தாசிரமம் பலவகைப்பட்டிருத்தலின் 'முயல் வாரு ளெல்லாம்' எனவும், இல்வாழ்வோன் அம்முயற்சி செய்யாமலே பயனைப் பெறுதலினால் 'தலை' எனவும் கூறினார்.

(க-து). இல்வாழ்க்கைக் குரிய தருமவியல்போடு கூடியில் லறத்தில் வாழ்பவன் தவஞ்செய்வா ரெல்லாருள்ளுந் தலையாவா னென்பது.

7. Among all those who perform penance for future happiness he is greatest who lives well in the household state.

அ. ஆற்றி னெழுக்கி யறனிழுக்கா வில்வாக்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து.

பரி.—(இ-ள்). தவஞ் செய்வாரையுந் தந்த நெறியின்கண் ஒழுகப் பண்ணித் தானுந் தன்னறத்திற் றவறுத இல்வாழ்க்கை அத்தவஞ்செய் வார் நிலையினும் பொறையுடைத்து, (எ-று).

‡ புலன்களைவிட - இந்திரிய நிக்கிரகஞ்செய்ய.

பரி முதலிய இடையூறு நீக்கலின் 'ஆற்றினொழுக்கி' என்றார். தோற்பா ரென்பதாருபெயர். தோற்பார் நிலைக்கு அவர்தம்மையுற்ற நோயல்லது இல்வாழ்வார் நிலைபோற் பிறரையுற்ற நோயும் † பொறுத்தல் இன்மையின் 'தோற்பாரி னேன்மை யுடைத்து' என்றார்.

தெளி.—(இ-ன்). (தவஞ் செய்வோரையும்) ஆற்றின் - (தத்தமது) வழியிலே, ஒழுக்கி - நடத்தி, அறன் - (தானுந்தன்) அறத்தினின்றும், இழுக்காத-தவறாத, இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையானது, தோற்பாரின் - அத்தவஞ்செய்வாரது நிலையினும், தோன்மை-பொறுமையை, உடைத்து - உடையதாம். (எ-று).

(தவத்தினர்க்குப்) பரி முதலாய இடையூற்றைத் தீர்த்தலால் 'ஆற்றி னொழுக்கி' என்றார். தோற்பா ரென்பது அவரதுநிலையை உணர்த்தலால் பொருளாகுபெயர். தவஞ்செய்வாரது நிலைக்கு அவர் தம்மையடைந்த தோஷைப் பொறுத்தல் அல்லது இல்வாழ்வா நிலைபோல் பிறரையடைதற் தோஷையும் பொறுத்த லில்லாமையால் 'தோற்பாரி னேன்மை யுடைத்து' என்றார். (இடையூறு - தடை).

(க-து). தவத்தோரைத் தவவழியினடத்தித் தானுந்தவறாத வனது இல்வாழ்க்கையானது தவஞ்செய்வோரது நிலையினும் மேன்மையுடைய தென்பது.

8. The householder who, not swerving from virtue, helps the ascetic in his way, endures more than those who endure penance.

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப.தில்லாயி னன்று.

பரி.—(மு-ன்). இருவகை யறத்தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட தில்வாழ்க்கையே ; ஏனைத் துறவறமோ வெனின், அதுவும் பிறரும் பழிக்கப் படுவதில்லையாயின் அவ்வில்வாழ்க்கையோ டொருதன்மைத்தாக நன்று, (எ-று).

எகாரம் பிரிநிலைக்கண் வந்தது; இதனும் பிரிக்கப்பட்டது துறவறமாகலின், அஃதென்னுஞ் சுட்டுப்பெயர் அதன்மேனின்றது. பிறன் பழிப்ப

† பொறுத்தல் - மருந்துமுதலியன கொடுத்து நீக்குதல்.

தென்றது † கூடா வொழுக்கத்தை. ‡ துறவறம் மனத்தையும்பொறிகளையும் ஒறுத்தடக்கவல்ல அருமை யுடைத்தாய வழியே, அவற்றை ஒறுக்க வேண்டாது ஐம்புல வின்பங்க ளாரத்துய்க்கு மேன்மை யுடைய வில்வாழ்க்கையோடு அறமென வொருங்கெண்ணப்படுவ தென்றவா ருயிற்று.

இவை நான்கு பாட்டினும் இன்னிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). (இருவகை யறத்திலும்) அறனெனப்பட்டது - (நூல்களால்) அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது, இல்வாழ்க்கையே—, (மற்றைத்துறவறமோ வெனின்), அஃதும் - அத்துறவறமும், பிறன்பழிப்பது-பிறனுற்பழிக்கப்படுவது, இல்லாயின் - இல்லாதிருந்தால், நன்று-(அவ் வில்வாழ்க்கையோடு ஒரு தன்மையதாக) நன்றும். (எ-று).

பிரித்துக்கூட்டிய ஏகாரம் பிரிநிலைப் பொருளது. இவ்வேகாரத்தால் (இல்லறத்தினின்றும்) பிரிக்கப்பட்டது துறவற மாதலால் அஃதென்னுஞ் சுட்டுப் பெயர் அத்துறவறத்தின்மேல் நின்றது. பிறன்பழிப்ப தென்றது கூடாவொழுக்கத்தை. துறவறம் மனத்தையும் இந்திரியங்களையும் வருத்தியடக்கவல்ல அருமையுடைய தாயவிடத்தே, அம்மனத்தையும்இந்திரியங்களையும் வருத்தியடக்க வேண்டாது ஐம்புல வின்பங்களையும் கிரம்ப வனுபவிக்கும் மேம்பாடுடைய இல்வாழ்க்கையுடன் அறமென்று ஒன்றாக வெண்ணப்படுவது என்றவாறாயிற்று. ஐம்புல வின்பம் - சப்தப் பரிசாதி ஐந்து விஷயங்களின் வாயிலாக வருஞ் சுகம்.

இவை நான்குபாட்டாலும் இல்லறமே பயனுடையதென்று இதன் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). துறவறம் பிறர் பழித்தற்கிடமின்றி யிருக்குமாயின் அறனென்று சொல்லப்பட்ட இல்வாழ்க்கையுடன் ஒரு தன்மையதாகச் சிறப்புடையதாம் என்பது. (கூ)

9. The marriage-state is truly called virtue The other (ascetic) state is also good, if *others* do not reproach it (for the vices of those who profess it).

† கூடாவொழுக்கமென்னு மிந்நூலின் அதிகாரத்தைப்பார்க்க.

‡ துறவறத்தில் மனத்தையு மிந்திரியங்களையு மடக்க வேண்டிய வருத்தமிருத்தலால் அது முற்றப் பெறுவது அரிது; இல்லறத்திலே அவ் வருத்தமில்லாமையால் இது முற்றப்பெறுவது எளிது. அவ்வாறிருத்தலால் அத்தன்மையதாய துறவறம் தவறின்றி நடைபெறும் போது இல்லறத்துடன் சேர்த்து எண்ணப்படுவதாகின்ற தென்பதாம்.

50. ¶ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்.

பரி.—(இ-ள்). இல்லறத்தோடே கூடி வாழுமியல்பினால் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே எனினும் வானின்கண் உறையும் தேவருள்ளொருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுமே, (எ-று).

பின்றேவனைப் அவ்வறப்பய னுகர்த லொருதலை யாகலின் 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார். இதனுள் இன்னியைபது மறமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப்பயன் புகழ். அதனையிறந்திட்ட கூறப.

தெளி.—(இ-ள்). வாழ்வாங்கு - (இல்லறத்தோடு கூடி) வாழுமியல் பினால், வையத்துள்-மண்ணுலகத்தின், வாழ்பவன்-, (மண்ணுலகத்தானே யாயினும்), வானுறையும் - விண்ணுலகத்தி லிருக்கின்ற, தெய்வத்துள் - தேவருள், வைக்கப்படும் ; (ஒருவனை) வைத்து (கன்றை) மதிக்கப்படுவான், (எ-று).

(வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் இறந்த)பின்பு தேவனுப்பிறந்து அவ்வறப்பயனுகிய சுகத்தை அனுபவித்தல் நிச்சயமாதலின் 'தெய்வத்துள் வைக்கப்படும்' எனறார். இதனால் இல்லறத்தின் மறுமைப்பயன் சொல்லப் பட்டது. இம்மைப்பயன்புகழ். அதை இறந்தி(புகழதிகாரத்தி)ற் கூறுவர்.

(க-து). இல்லறத்துள் வாழுவது வாழ்பவன் தெய்வத்து ளொருவனுக வைத்து மதிக்கப்படுவா னென்பது.

10. He who on earth has lived in the conjugal state as he should live, will be placed among the gods who dwell in heaven.



இரண்டாம் – அதிகாரம்.

வாழ்க்கைத்துணை நலம்—The Virtue of Wife.

பரி.—அஃதாவது அவ் வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லானது நன்மை. அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி.—அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியது நன்மையாம். அதிகாரமுறைமையும் இதனுலேயே விளங்கும்.

¶ "இம்மையிற் சுகத்தையும், மறுமையிற் சாஸ்வதமான புண்ணிய லோகத்தையும் எவனுடைய விரும்புகின்றனனே அவன் இருகன்னேந்திரியத்தை முயற்சியோடு காப்பாற்றல் வேண்டும்" என்பதனுலுணரும்சாஸ்திரம்.

க. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

ப.—(இ-ள்). மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகளை யுடையளாயிருந்து தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையை யுடையாள் அதற்குத்துணை, (எ-று).

நற்குணங்களாவன:—தூறுதாராப்பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டருளுடைமையு முதலாயின. நற்செய்கைகளாவன:—வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில் வன்மையும், * ஒப்புரவு செய்தலு முதலாயின. வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது முதலியறிந்து அதற்கியைய வழித்தல். இதனுள் † இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). மனைத்தக்க - இல்லறத்திற்குத்தக்க, மாண்புடைய ளாகி - நற்குண நற்செய்கைகளை யுடையவளாகி, தற்கொண்டான் - தன்னைக்கொண்ட கணவனது, வளத்தக்காள் - வரவுக்குத் தக்க வாழ்க்கையை யுடையவள், வாழ்க்கை - அவ்வில்லற வாழ்க்கைக்கு, துணை - துணையாவாள், (எ-று)

நற்குணங்களாவன:—தூறுதன்னை யுபசரித்தலும், விருந்தினரை யுண்பித்தலும், வறியவரிடத்து அருளுடைமையும் முதலானவையாம். நற்செய்கைகளாவன:—இல்வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றி வைத்தலும், உணவுகளைச் சுவைப்படச் சமைத்தற்றொழில் வல்லமையும், உபகாரஞ்செய்தலும் முதலானவையாம். வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது (பொருளின்) முதலியறிந்து அதற்குத் தக்கபடி செலவுசெய்தல். இதனால் இவ்விரண்டு நன்மைகளும் சிறந்தனவென்பது சொல்லப்பட்டது.

(க-து). நற்குண நற்செய்கை யுடையவளாய்த் தனது கணவனது வரவுக்குத் தக்கவாறு செலவுசெய்பவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவா ளென்பது.

1. She who has the excellence of home virtues, and can prudently expend the property within the means of her husband, is a help in the domestic state.

உ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

பரி.—(இ-ள்). மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள்

* ஒப்புரவுசெய்தல் - உலகநடையையறிந்து அதற்குத்தக நடத்தல்.

† மனைத்தக்க மாண்புடையளாதல், தற்கொண்டான்வளத்தக்காளாதல் என்னு மிரண்டு நன்மையும்.

ஒருவனில்லாளிடத் தில்லையாயின், அவ்வில்வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமையுடைத்தாயினும் அஃதுடைத்தன்று, (எ-று).

'இல்' என்றார்; பயன்படாமையின்.

தெளி.—(இன்). மனைமாட்சி - இல்லறத்திற்குத் தருந்த நற்குண நற்செய்கைகள், இல்லான்கண் - (ஒருவனது) மனையாளிடத்தில், இல்லாயின் - இல்லையானால், வாழ்க்கை - அவ்வில்வாழ்க்கையானது, எனைமாட்சித்தாயினும் - (செல்வத்தால்) எவ்வளவு பெருமையை உடையதாயினும், இல் - (அப்பெருமையை) உடையதன்று, (எ-று)

(அவ்வாழ்க்கை அம்மனையியால்)பயன்படுவதின்மையால்'இல்'என்றார்.

(க-து). நற்குண நற்செய்கையுடைய மனைவி இல்லாவிடத்து இல்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைத்தாயினும் பயன்படுவ தில்லை என்பது.

2. If the wife be without domestic excellence, whatever (other) greatness (be possessed in) the conjugal state, it is nothing.

கூ. இல்லதே னில்லவண் மாண்பாரு ளுள்ளதே
னில்லவண் மாணக் கடை.

பரி.—(இ-ன). ஒருவனுக் கில்லான் நற்குண நற்செய்கைய னாயினக்கால் இல்லாதது யாது? அவள் அன்ன வில்லாக்கால் உள்ளது யாது? (எ-று).

‡ மாண்பென்னுங் குணத்தின்பெயர் குணியின்மே னின்றது.

இவை யிரண்டு பாட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே, பிறவல்ல என்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). (ஒருவனுக்கு) இல்லவள் - மனையாள், மாண்பானல் - நற்குண நற்செய்கையை யுடையவளானல், இல்லது - இல்லாதது,

---

‡ 'பண்பென்பன அவற்றின் (பண்பியின்) குணமாய்த் தோன்றித் தமக்கு வேற குணமின்றி நிகழ்வன' என்றும், "பண்பியென்ன காட்சிப் பொருளும் கருத்துப்பொருளுமாகிய இயற்குறிணையும் திணைத்திணையுமாம்" என்றும், குணகுணிகளினிலக்கணம் தண்டியலங்காரவுரையிற் கூறப்பட்டிருக்கிறது. பண்பெனினும் குணமெனினும் ஒக்கும்; பண்பியெனினும் குணியெனினும் ஒக்கும். குணியே நிரலியமெனப்படும். ஈண்டு மாண்பென்னும் குணம் அதனையுடைய குணியை (இல்லானை) பண்பாகு பெயரா யுணர்த்துதல் பற்றி 'மாண்பென்னும் குணத்தின்பெயர் குணியின் மேனின்றது' என்று கூறப்பட்டது. பிரயோகவிவேகநூலார் இலக்கணை கூறுமிடத்து "இல்லதே னில்லவண் மாண்பானுள், மாண்புடையா ளானுள், இது குணம்குணியானது" என்றனர்.

என் : யாதரி இல்லவன் - அம்மனையாள், மாணக்கடை - அந்தக்குண நற் செய்கைகளுடையவளாகா திருந்தால், உள்ளது-இருப்பது, என்-யாது? ()

மாண்பென்னுங் குணத்தின் பெயர் அதனையுடையவளுக் காயிற்று.

இவ்விரண்டொட்டாலும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது மனையாளது நற்குண நற்செய்கையே, மற்றவையல்லவென்பது சொல்லப்பட்டது.

(க-து). மனையவள் நற்குண நற்செய்கை யுடையவளாயின் இல்லாத பொருள் யாது மில்லை; அவள் அவை யில்லாதவளாயின் உள்ளபொருள் யாது மில்லை என்பது.

3. If his wife be eminent (in virtue) what does (that man) not possess ? If she be without excellence what does (he) possess ?

ச. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

பரி.—(இ-ள்). ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள? அவண்மாடுக்க் $ கற்பென்னுங் கலங் கா நிலைமை யுண்டாகப் பெறின், (எ-று).

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் எதுவாவன பிறவின் மையின் 'யாவுள' என்றார். இதனாற் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன் அடையும் பொருள்களுள்) பெண்ணின் - மனையாளினும், பெருந்தக்க-உயர்வாகிய பொருள்கள், யா - எவை, உள - இருக்கின்றன, கற்பென்னுந்திண்மை - (அவளிடத்து) கற்பென்னுங் கல ங்கா நிலைமை, உண்டாகப் பெறின் - உண்டாயிருக்கப் பெற்றால், (எ-று).

கற்புடைய மனைவியைப்போல அறமுதலிய மூன்றற்கும் எதுவாம் பொருள்கள் வேறில்லாமையின் 'யாவுள' என்றார். இதனால் கற்புநலத்தி னது சிறப்புச் சொல்லப்பட்டது

(க-து). ஒருவன் பெறும் பொருள்களுள் கற்புடைய மனைவி யினும் மேம்பட்டது ஒன்று மில்லை என்பது.

$ "கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்னெனவும் அவனே இன் னவாறே வழிபடுக வெனவும் இருமுது குரவர்கற்பித்தலானும் அத்தனார் சிறத்தஞ் சான்றோர் தேயத்தும் ஐயர்பாங்கினும் அமார்ச்சுட்டியும் ஒழு கும் ஒழுக்கத்திலேமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று. இனித்திலவனுங் களவின்கண் ஓரையும் நாளுந் நீதென்று அதனைத் தடைத்தொழுகுதற்பே ல் ஒழுகாத ஒத்தினுங் காணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற் பித்தல்கொண்டு தலைவற்குச் செல்லுந் தினையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று":—நச்சினார்க்கினியர்.

4. What is more excellent than a wife, if she possess the stability of chastity

இ. தெய்வந் தொழாஅள் கொழுநற் ¶ றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

பரி.—(இ-ள்) பிறதெய்வத் தோழாது தன் தெய்வமாகிய கொழு நனைத் தொழாநின்று துயிலெழுவாளை பெய்யென்று சொல்ல மழை பெய்யும், (எ-று).

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத் தாகலின் 'தொழுதெழுவாள்' எனறார் () தொழாதின் றென்பது தொழுதெனத் திரிந்து நின்றது. தெயவந்தா னேவல்செயயு மென்பதாம். இதனுற் கற் புடையவளது ஆறறல கூறபபட்டது.

தெ.—(இ-ன்). தெய்வம் - (பிற) தெயவத்தை, தொழாஅள் - வணங் காளாகி, கொழுநன் - (தனது தெயவமாகிய) கணவனை, தொழுது-வணங் காகின்று, எழுவாள - (நித்திரைவிட்டு) எழுந்திருப்பவள், பெயயென - பெய்யென்று சொல்ல, மழை - மழையானது, பெயயும்—, (எ-று),

கடவுளை வணங்குவதற்கு மனந்தெளிந் திருப்பது துயிலெழுங் கால த்திலாகலின் 'தொழுதெழுவாள்' எனறார். தொழுதெனபது தொழா தின்றென்பதன் விகாரம். தெய்வமும் கற்புடையவளுக்கு எவல் செய்யு மென்பதாம். இதனுல கற்புடையவளது வல்லமை சொல்லப்பட்டது.

¶ 'தொழுதெழுவான்' என்பதற்குப் பரிமேலழகர் 'தொழா தின்று துயிலெழுவான்' எனறுரை கூறியது அசம்பாவிதமாகும்; 'எழுந்து தொழு வான்' எனப்பொருள் படித்தவேண்டும்: தொழாதின்று துயிலெழுதல் கூடாது என்று கூறவாருமுளர். துயில்கூடுங்காலத்து எந்தஸ்மிருதி (நினைவு)அத்தக்காலத்தில் சமஸ்காரமா(வாசனையா)கின்றதோ அந்தஸ்மி ருதி விழிக்குங காலத்தச சமஸ்கார வாயிலாக அவ்விழித்தலே முன்னு கக்கொண்டு வெளிப்பட்டு முன்பின என்பதின்றி நிகழுதல் பிரசித்தமா யிருத்தலின், 'தொழுதெழுவான' என்பதற்குப் பரிமேலழகர் அனுபவ முதிர்ச்சி காரணமாகத் 'தொழாதின்று துயிலெழுவான்' என்றுரை கூறி யதை மறுத்துக்கூறியது அசம்பாவிதமா மென்க. மேலும், திருக்கோவை யாரின் "நினைவதங்காதது" என்னுஞ் செய்யுளிலுள்ள "தொழுதெழு வார்" என்பதற்குப் பேராசிரியர் "தொழாதின்று துயிலெழுவார்" என்றும், 'தொழுதெழுவார் என்றது துயிலெழுங்காலத்தல்லது முன்னுணர் வின் மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு." என்றும் கூறியவாற்றுணுமறிக.

() தொழாதின்றென்னும் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் தொழுதெனச் செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சமாகத் திரிந்து நின்றது. ஆறில் - நிகழ்காலவிடைநிலை.

(க-து). பிறதெய்வத்தைவணங்காது கணவனைத் தெய்வமாக வணங்கி யொழுகுகின்றவளது சொல் பிழைபடுவதில்லை என்பது.

5. She who does not worship God, but who on rising worships her husband, if she say " Let it rain, " it will rain.

கூ. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

பரி.—(இ-ள்). கற்பினின்றும் வழுவாமற் றன்னைக்காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டிமுதலியவற்றாற் பேணி * இருவர்மாட்டு நன்மை யுமைந்த புகழ் நீங்காமற் காத்து மேற்சொல்லிய நற்குண நற் செய்கைகளினுங் கடைப்பிடி யுடையாளே பெண்ணுவாள், (எ-று).

தன்மாட்டுப் புகழாலது வாழுமூர் கற்பாற் றன்னைப் புகழ்வது. சோர்வு - மறவி. இதனாற் றற்புகழ்தற் சிறப்புக் கூறபபட்டது.

தெளி.—(இ-ன்). தற்காத்து - (கற்பினின்றும் வழுவாமல்) தன்னைக் காப்பாற்றி, தற்கொண்டாற்பேணி-தன்னைக்கொண்ட கணவனையும் (உண்டி முதலானவற்றால்) உபசரித்து, தகைசான்ற-(தம்மிருவரிடத்தும்) நன்மையமைந்த, சொற்காத-புகழை (நீங்காமற்) காப்பாற்றி, சோர்விலாள் - (முற்கூறிய நற்குண நற்செய்கைகளிலும்) உறுதியுடையவளே, பெண் - பெண்ணுவாள், (எ-று).

தன்னிடத்துப் புகழாவது (தான்)வாழும் ஊரார் கற்புடைமைபற்றித் தன்னைப் புகழுதல். சோர்வு - மறத்தல். இதனால் தன்னைப் புகழ்தலின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). கற்பிற்றவறாது தன்னைக் காத்துத் தன்கணவனையும் முபசரிக்குங் கீர்த்தியமைந்த நற்குண நற்செய்கை யுடையவளே மனையியாவாள் என்பது.

6. She is a wife who unweariedly guards herself, takes care of her husband and perserves an unsullied fame.

எ. † சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

* இருவர்மாட்டு நன்மை யமைந்த புகழாவது இவனைக் கொன்றவந்திற்கு இவன் என்னதவஞ்செய்தானெனைக் கொண்டவனையும் கற்புமைட்மையைக்கண்டு அவன் மனைவியையும் அவர்கள் வாழும் ஊரார்புகழ்தலாம்.

† " மாதர்கள் தங்களைத் தாமேகாத்தல்வேண்டும், அதுவே அவர்களுக்குச்சிறந்த காவலாகும். பெற்றதாயலைவைத்துப் புறத்தேபோகவிடாது வீட்டிலியே நன்றாகக் காத்தாலும் அதனாலவர்கள் காக்கப்படுவதில்லை":—பிரதாரமசாஸ்திரம்.

ப.—(இ-ன்). மகளிரைத் தலைவர் சிறையாற்காத்துங் காவலென்ன வலியுஞ்செய்யும்? அவர் தமது நிறையாற் காத்துங் காவலே தலையாய காவல், (எ-று).

‡ *நை—மதிலும் வாயிற்காவலு முதலாயின.* § *நிறை—நெஞ்சைக் கற்புநெறியினிறுத்தல். காவல் இரண்டினும் நிறைக்காவலில்லுழி யெனைக் நைறைக்காவலாற் பயனில்லை யென்பார் 'நிறைகாக்கும் காப்பேதலே' என்றார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இதனுற் றற்காத்தற் றெப்புக் கூறப் பட்டது.*

தே—(இ-ன்). *மகளிர் - பெண்டிரை, (தலைவர்), நிறை - நிறையி னால், காக்கும் - பாது காக்கும் காப்பு - காவலானது, எவன் - என்னபி யோசனத்தை, செய்யும்—, நிறை - (தமது) நிறையால், காக்கும் - (அவர்) பாதுகாக்கும், காப்பே - காவலே, தலை - முதன்மையான காவல், (எ-று).*

நை - மதிற்காவல் வாயிற்காவல் முதலானவை. நிறை-மனதைக் கற்பின்வழியிலே நிறுத்தல் நைறைக்காவல் நிறைக்காவலென்னு மிரண்டி னும் நிறைக்காவல் இல்லாத விடத்து மறைசை நைக் காவலால் பயன் இல்லை என்பார் 'நிறைகாக்கு காப்பேதலே' என்றார். காப்பே என்னும் ஏகாரம் பிரிநிலை. இதனுல் தற்காத்தலினது நெப்புச் சொல்லப்பட்டது.

(கு-து). *பெண்கள் கற்பால் தங்களைக் காத்துக் கொள்ளுங் காவலே காவலாவதன்றி யேனையகாவல் காவலாகாது என்பது.*

7. What avails the guard of a prison ? The chief guard of woman is her chastity.

அ. ¶ பேற்றுற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

ப.—(இ-ன்). பெண்டிர் தம்மை யேயீந்திய கணவனை வழிபடுதல் பெறுவாயின், புத்தேளிர் வாழும் உலகின்கண் அவராற் பெருஞ் சிறப் பினைப் பெறுவர், (எ-று).

வழிபடுதலென்பது சொல்லெச்சம். இதனுற் றற்கொண்டாற்பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவ ரென்பது கூறப்பட்டது.

‡ *நைபவரது தானினைத்தவா றெழுதலின்றிப் பிறர் நினைத்த வாறே யொழுகும்படி காத்தல்.*

§ "*நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை*":—கலித்தொகை. "*காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கும்*":—சுக்கிர். 🕮

¶ "*மாதர்சட்டு ஐம்பெருமவேள்வியுபவாசம், விரதமுதலியன கற்ப நாமாகவின்றே; கணவனுக்குப் பணிவிடை செய்வதனுலேயே சுவர்க்கத் திற் பெருமை யடைகிறார்கள்*":—மதுரைமாஞ்சிரம்.

தேளி.—(இ-ன்). பெண்டிர் - மனைவியர், பெற்ருன் - (தம்மைக்) கொண்டகணவனை, பெறின் - (வணங்கியுபசரித்தல்) பெறுவராயின், புத் தேளிர்-தேவர், வாழும்-வாழ்வதற்கிடமாகிய, உலகு-உலகத்தில், பெருஞ் சிறப்பு—(அத்தேவராற் செய்யப்படும்) பெரிய சிறப்பினை, பெறுவர் அடைவார். (எ-று).

வணங்கியுபசரித்த லென்பது குறைந்து நின்றமையின் அது சொல் லெச்சமாம். இதனுல் தன்னைக்கொண்ட கணவனைத் தெய்வமாக வணங் கும் பெண்டிர் மறுமையில் தேவர்களால் வணங்கப்படுவ ரென்பது சொல் லப்பட்டது.

(க-து). கணவரைவணங்கும்மனைவியர் மறுமையில்தேவரால் (சுவர்க்கத்தில்) வணங்கப்படும் பெருஞ்சிறப்படைவர் என்பது.

8. If women shew reverence to their husbands they will obtain great excellence in the world where the gods flourish.

கூ புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

பரி —(இ-ள்). புகழை விரும்பிய இல்லாளை யில்லாதார்க்கில்லை, தம்மை யிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்கவேறுபோல நடக்கும் பெருமித நடை, (எ-று).

புரிந்தவென்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது. பெரு மித முடையானுக்குச் சிங்கவேறு நடையா ¶ னுவமமாகலின் 'ஏறுபோல்' என்ருர். இதனுற்றகைசான்றசொற்காவாவழிப்படவெருற்றங்கூறப்பட்டது.

தேளி.—(இ-ள்). புகழ் - கீர்த்தியை, புரிந்த - விரும்பிய, இல்-மனை யாளை, இல்லோர்க்கு-இல்லாதவர்க்கு, இகழ்வார்முன் - (தம்மை) அவமதித் துப்பேசும் பகைவர்முன், ஏறுபோல்-ஆண் சிங்கம்போல, (நடக்கும்), பீடு நடை-கம்பீரமானநடை, இல்லை - இல்லையாம், (எ-று).

புரிந்தவென்னும் பெயரெச்சத்தின் அகரவீறு (விகுதி) செய்யுள்விகா ரத்தால் தொக்கது. தருக்குடையவனுக்கு ஆண்சிங்கம் நடையினுல் உப மானமாதலால் 'ஏறுபோல்' என்ருர். இதனுல் மனையாள் நன்மையமைந்த புகழைக் காப்பாற்றுதலிடத்தாண்டாகுங் குற்றம்சொல்லப்பட்டது.

(க-து). கீர்த்தியை விரும்பிய மனைவியை யில்லாதவர்க்குத் தமது பகைவர்முன் மேம்பாடாகச்செல்லும் நடையின்றும்.

9. The man whose wife seeks not the praise (of chastity) cannot walk with lion-like stately step, before those who revile him.

¶ இது புலிபோலப் பாய்ந்தானென்பது போலத் தொழிலுவமை.

கo மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
கல னன்மக்கட் பேறு.

பரி.—(இ-ன்). ஒருவற்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளே; அவைதமக்கு நல்ல அணிகல மென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலே, (எ-று).

அறிந்தோரென்பது எஞ்சின்றது. மற்று - அசைநிலை. இதனால் வாழ்க்கைத்துணைக் காவதோர் அணிகலங்கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

தெளி.—(இ-ன்). (அறிந்தோர்) மனை - மனையாளது, மாட்சி - நற்குண நற்செய்கைகளே, மங்கலம்-(ஒருவனுக்கு) நன்மையாம், என்ப-என்று சொல்லுவர், மக்கட்பேறு - நல்ல புதல்வரைப் பெறுதலே, அதன்-அந்நற்குண நற்செய்கைகளுக்கு, நன்கலன் - நல்ல ஆபரணமாம், (என்ப - என்று சொல்லுவர்), (எ-று).

அறிந்தோரென்பது குறைந்து நின்றமையின் சொல்லெச்சம். மற்று-அசை. இதனால் வாழ்க்கைத் துணைக்காவதோர் ணிகலஞ் சொல்லி, அதனால் பின்வருவதாகிய அதிகாரத்திற்குத் தோற்றுவாய் (தொடக்கம்)செய்யப்பட்டது.

(கூ-றி). மனையாளது நற்குண நற்செய்கைகள் அவளதுகண வனுக்கு நன்மையைத் தருவனவாம்; அவள் நல்லபுத்திரரைப் பெறுதல் அவற்றிற் காபரணமாம் என்பது.

10. The excellence of a wife is the good of her husband: and good children are the jewels of that goodness.

மூன்றும் – அதிகாரம்

புதல்வரைப் பெறுதல்—Obtaining Children.

பரி.—அஃதாவது i. இருபிறப்பாளர் முவராணும், ii. இயல்பாக இலக்கப்படுங் கடன் மூன்றனுள் iii முனிவர் கடன் கேள்வியானும்,

i. இருபிறப்பாளராவார் - முதற்பிறப்புத் தாயினாலும் இரண்டாம் பிறப்பு உபநயன சம்ஸ்காரத்தாலு மூண்டாகப்பெற்ற அந்தண ராசர் வைசியர். உபநயன சம்ஸ்காரம் இரண்டாம் பிறப்பென்பது "நிருமார் பின் மனர்மடந்தை நிருக்குழத்தின் மங்கலநா ணென்ன மூன்றாம், பெரு மரப்பின் வர்தொளிரப் பிறப்பிரண்டா வதுபிறந்து நெற்ற பின்னர்" என்ற கலிங்கத்துப்பரணி கூறுவதாலுமறிக. இருபிறப்பாள ரெனினும் துவிஜரெனினு மொக்கும்.

ii. " மூன்று கடன்கழித்த பார்ப்பானும் " என்பது திரிகடுகம்.

iii. முனிவர்கடன் கேள்வியா - (வேதாத்தியயனத்தா) லும், தேவர் கடன் வேள்வியா(யாகஞ்செய்வதா)லும்,தென்புலத்தார்கடன்புதல்வரைப்

தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின், iiii அக்கடனிறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். அதிகாரமுறைமை மேலே பெறப்பட்டது.

தெளி.—அஃதாவது இருபிறப்பாளர் மூவராலும் தகுதியாகச்செலுத்தப்படும் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியாலும், தேவர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலாலும் அல்லது செலுத்தப்படாமையால், அக்கடன் செலுத்துதற்பொருட்டு நல்லமக்களைப் பெறுதலாம். அதிகாரமுறைமை முன்னே பெறப்பட்டது.

க. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
'மக்கட்பே றல்ல பிற.

பரி.—(இ-ள்). ஒருவன் பெறும் $$ பேறுகளுள் அறியவேண்டுவன அறிதற்தரிய மக்களைப் பெறுதல் அல்லது பிறபேறுகளை யாமதிப்பதில்லை, (எ-று).

‡ அறிவென்பது அறிதலைச் செய்வதென அத்தொழின்மேனின்றது. காரணமாகிய $ உரிமை காரியமாகிய அறிதலைப் பயர்த்தலிடு மாதலான், அத்துணிவுபற்றி 'அறிந்த' என † இறந்தகாலத்தாற் கூறினர். ‖ 'அறிவறிந்த' என்றதனுள் மக்களென்னும் பெயர் பெண்ணெழித்து நின்றது. இதனாற் புதல்வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின்' என்பதன் பொருள் மனுதரும சாஸ்திரம் மூன்று மத்தியாயத்தில் "வேதாத்தி யயனத்தாலே ருஷிகளையும், ஓமத்தினாலே தேவர்களையும், சிரார்த்தத்தினாலே பிதிர்க்களையும்.....திருப்தி செய்வித்தல் வேண்டும்" என்று கூறுவதாலும் நன்கு விளங்கும்.

iiii அக்கடனிறுத்தற் பொருட்டு-தென்புலத்தார் (பிதிர்க்கள்) கடனை (சிரார்த்த முதலியன செய்து) செலுத்தும் நிமித்தம்.

$$ புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், தகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, தணிவு, நோயின்மை, வாழ்நாளென்னும் பதினாறு பேறுகளுள்.

‡ அறிவதென்றும் பாடமுண்டு. $ உரிமை - அறிவுடைமை.

† அறிதற்குரிய மக்களை 'அறிந்தமக்கள்' என இறந்தகாலத்தாற் கூறியது தணிவுபற்றி வந்த காலவழுவமைதி. தணிவு—தெளிவு.

‖ மக்களென்னும் பொதுப்பெயர் அறிவறிந்த என்னும் குறிப்பால் பெண்பாலை யொழித்து ஆண்பாலைக் காட்டியது பற்றி 'அறிவறிந்த' என்றதனுள் மக்களென்னும் பெயர் பெண்ணெழித்து நின்றது' என்று கூறப்பட்டது. இவ்வாறு வருதல் ஒன்றெழி பொதுச்சொல் எனப்படும். ஈண்டு மக்களென்னும் பொதுப்பெயரில் பெண்ணை யொழித்து ஆணைக் கொண்டதற்கேது "தண்ணறி வுடையோர் தாமொரு பழியினும், பெண்

பதவி.—(இன்). பெறமவற்றள்—(ஒருவன்) பெறும் பேறுகளுள், அறிவறிந்த - அறிவ்வேண்டுவனவற்றை யறிதற்குரிய, மக்கட்பேறல்ல - புதல்வரைப் பெறுதலல்லது, பிற - மற்றைப்பேறுகளை, யாம்—, அறிவ தில்லை - மதிப்பதில்லை, (எ -று).

அறிவென்னும் பண்புப்பெயர் அறிதலைச் செய்வதென அறிதலைச் செய்யு மத்தொழிலின்மேல் நின்றது. அறியவேண்டுவனவற்றை யறிதற் குக் காரணமாகிய வரிமை காரியமாகிய அவ்வறிதலே யுண்டாக்கியே விடு மாதலின், அத்துணிவுபற்றி 'அறிந்த' என இறந்தகாலத்தாற் சொல்லினர். 'அறிவறிந்த' என்றதனால் மக்களென்னும் பெயர் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக்காட்டி நின்றது. இதனால் புதல்வரைப் பெறுதலினது சிறப் புச் சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவன வற்றை யறிதற்குரிய மக்கட்பேற்றின்மேம்பட்டபேறு இல்லை.

1. Among all the benefits that may be acquired, we know no greater benefit than the acquisition of intelligent children.

---

2. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

பரி.—(இ-ள்). வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பேழின்கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா, பிறராற் பழிக்கப்படாத நற்குண நீகளையுடைய புதல்வரைப் பெறுவாரையின், (எ-று).

அவன் நிலினை வளராத தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப்பெறவனையின என்றவாருயிற்று. பிறப்பேழாவன:—

"ஊர்வ பதினொன்று மொன்பது மாணுட, நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ் - சீரிய, பத்தமாத் தேவர் பதினு லபண்படைத்த, வுத்தமில் ஞறி வென்பது பெரும்பேதை மைத்தே" "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்" என்றற் றொடக்கத்தனவாய்வரும் பிரயோகத்தினாம்.

இதன்பொருள் ஊர்ந்து செல்லும் பிராணிகளின் பிறப்பின்வகை பதினொன்று; மனிதப்பிறப்பின் வகை யொன்பது; நீரில்வாழும் பிராணி கள் பதவகைள் மிருகங்களாகிய இவற்றின் பிறப்பின் வகை தனித்தனிப் பத்துப்பத்து; சிறப்புப் பொருந்திய மூதைமையினையுடைய தேவப்பிறப் பின் வகை பதினொன்று; பிரமனும் படைக்கப்பட்ட மூடிவில்லாத சினை யுடைய சீவத்தினையின் பிறப்பின் வகையிருபது என்பது. இக்குத் தொ கையொடு மெண்பத்து நான்கினையும் என்பத்து நான்கு இலட்சமென் றென்க, என்னை? "தானிலநீர் வைமுட்டை கால்வகை யோனிசரா், மானுட நீர் வாழ்பறவை மாதிருமி-ஞானமிலா, மண்புட்ட தாவரமென் றேழாய் வரும் பயனு, மெண்பத்தி ஞன்கா யிரம்" என்ற சூடாமணி நிகண்டு.

சேர்த் தாவராச் சேர்த்து." *தந்தைதாயர் நீவினை நேம்தற்பொருட் டவரை நோக்கிப் புதல்வர் செய்யுந் தானதருமங்கட் கவர் நற்குணங் காரணமாவின்,* † *பண்பென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது.*

நேளி.—(இ-ன்). *எழுபிறப்பும்—(வினைவசத்தினுற் பிறக்கும்) பிறப்பேழிலும், நீயவை - தன்பங்கள், நீண்டா - (சென்று ஒருவினை) அடையாவாம், பழிபிறங்கா - (பிறரால்) பழிக்கப்படாத, பண்புடை - நற்குணங்களையுடைய, மக்கட்பெறின் - புதல்வரைப் பெறுவாளுயின், (எ-று).*

அவன் நீவினைபெருகாது குறைதற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவாளுளுல் என்றவாருயிற்று. பிறப்பேழாவன:—தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்பனவாம், இவற்றின் யோனிபேதம் எண்பத்தினுஞ்சு நூருயிரமாம். தந்தைதாய்களது நீவினை குறைதற் பொருட்டு அவரைக் குறித்துப் புதல்வர்செய்யும் தானதருமங்களுக்கு அவரது நற்குணம் காரணமாகலின் 'பண்பென்னுங் காரணப்பெயர்தானதருமமென்னுங்காரியத்தின்மேல்நின்றது.

(க-து). *பழிக்கப்படாத நற்குணமுடைய புதல்வரைப் பெறுபவன் எழுவகைப் பிறப்பிலுந் துன்பமடையான் என்பது.*

2. The evils of the seven births shall not touch those who obtain children of a good disposition, and free from vice.

கூ. தம்போரு ளேன்பதம் மக்க ளவர்போரு
டந்தம் வினையான் வரும்.

பரி —(ஓ-ன்). *தம்புதல்வரைத் தம்போருளென்று சொல்லுவர் அறிந்தோர்; அப்புதல்வர் செய்த போருள் தம்மை நோக்கி அவர் செய்யும் () நல்வினையானே தம்பால் வரும் ஆதலான்,* (எ-று).

தந்தம்வினை யென்புழித் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை "மூருகனது குறிஞ்சிநிலம்" என்புழிப்போல, உரிமைப் பொருட்கண் வந்தது, பொருள் செய்த மக்களைப் பொருளென † *உபசரித்தார்.*

இவை யிரண்டு பாட்டானும் நன்மக்கட்பெற்றூர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.

---

† *நற்குணமென்னும் காரணப்பெயர் அக்குணத்தின்காரியமாய நல்வினைகளின்மேல் நின்றதற்றி 'பண்பென்னும் காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது' என்று கூறப்பட்டது.*

() *நல்வினை:—சிரார்த்தமுதலிய சற்கருமங்கள்.*

உரிமை - சுதந்தரம். "பொருளிடத காலமிருவகை நூலென, வுரிமையாய்த் தோன்ற லுரைக்கப் படுமே" என்பது இலக்கணக்கொத்து.

† *உபசரித்தல் - உபசாரம். அஃதாவது ஒன்றன்தன்மையை மற்றொன்றன்மே லேற்றிக் கூறுவது. இது காரியம் காரணமாய் வுபசார*

தெளி:—(இ-ன்). தம்மக்கள் - தம்முடையபுதல்வரை, தம்பொருள் - தம்முடைய பொருள்கள், என்ப - என்றசொல்லுவர் (அறிந்தோர்), அவர்பொருள் - அப்புதல்வர் சம்பாதித்த பொருள்கள், தந்தம் வினையால் - தம்மைக்குறித்து அவர் செய்யும் கர்மினையினாலே, வரும்—(தம்மிடத்து) வரும் (ஆதலால்), (எ-று).

தந்தம்வினையென்னு மிடத்துத் தொக்குநின்ற ஆரும் வேற்றுமை யுருபு உரிமைப் பொருளது. பொருள் சம்பாதித்த புதல்வரைப் பொருளென வுபசரித்துக் கூறினர். இவையிரண்டு பாட்டாலும் நல்ல புத்திரரைப் பெற்றோர் அடையும் மறுமைப் பயன் சொல்லப்பட்டது.

(க-து). புதல்வர் சம்பாதித்த பொருள்: அவர்செய்யும் நல்வினை வாயிலாக மறுமையில் பயன் வடிவமாய்ப் பிதாவைச் சென்றடைதலால் அவர் அப்பிதாவிற்குப் பொருளெனப் படுகின்றனர்.

3. Men will call their sons their wealth, because it flows to them through the deeds which they (sons) perform on their behalf.



ச. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

பரி.—(இ-ன்). சுவையான் அமிழ்தத்தினு மிகவினிமை யுடைத்து; தம் மக்களது சிறுகையான் அளாவப்பட்ட சோறு, (எ-று).

சிறுகையான் அளாவலாவது $ "இட்டுந் தொட்டுங் கல்வியுந் தழுந்த, செய்யுடை யடிசின் மெய்யட வீதிர்த்" தல்.

தெளி.—(இ-ன்). தம்மக்கள் - தம்முடைய மக்களது, சிறுகை-சிறிய கைகளால், அளாவிய - அளையப்பட்ட, கூழ் - சோறானது, அமிழ்தினும்-(சுவையினால் மிகுந்த) அமிர்தத்தினும், ஆற்ற வினிது - மிகவு மினிமை யுடையதாம் (எ-று).

வழக்கு. பொருள் - காரியம், மக்கள் - காரணம். வெப்பிரகாச சுவாமிகள் "ஆளினேயே யருமரசென் பதுபோல வுபசாரிகம்" என்னுர்.காரணம் காரியமாகவும், காரியம் காரணமாகவும், குணம் குணியாகவும், குணியினே குணியினேயாகவும், ஒருபொருளின் வினே மற்றொருபொருளின் வினேயாகவும், இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின்மே லாகவும், வினே முதல்வினேயாகவும், பிறவாகவும் வரும்பொழுது உபசாரவழக்குக் கொள்ளப் படுமிறதென்க. இஃது இலக்கணையி லடங்கும். இதன் விரிவைப் பிரயோக விவேகம் "மருளதுகாரணம்" என்னும் செய்யுளி னுரையிற் காண்க.

$ புறஞானூறு ஈஅ. இதன்பொருள் (தாயிலே) இட்டும், கூடப் பிசைந்து தோண்டியும், வாயாற் கல்வியும், கையால் திழாவியும், செய்யுடைய சோற்றை யுடம்பின்கண் படச் செறுதல் என்பது.

சிறுகையால்ளாவலாவது - மக்கள் தாய்தந்தையரோடு உடனிருந்து உண்ணும்போது தம் கையால்சோற்றைத்துழாவுதல் முதலாயினவாம்.

(க-து). தாய் தந்தையருக்குத் தம்மக்கள் சிறுகையா லளாவிய சோறுனது அமிர்தத்தினு மிக வினியதாமென்பது.

4. The rice in which the little hand of their children has dabbled will be far sweeter (to the parent) than ambrosia.



ங. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

பரி.—(இ-ள்). ஒருவன் மெய்க்கின்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்; செவிக்கின்பமாவது அவரது சொல்லைக் கேட்டல்,(எ-று).

¶ மற்று - வினைமாற்று. மக்களது மழலைச் சொல்லே யன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் 'சொல்' என்றார். § நீண்டல் கேட்டலென்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மே னின்றன.

தெளி.—(இ-ள்). உடற்கு - (ஒருவனது) உடம்பிற்கு, இன்பம் - இன்பமாவது, மக்கண் - மக்களது, மெய் - உடம்பை, தீண்டல் - தொடுதலாம், செவிக்கு - (அவனது) காதிற்கு, இன்பம் - இன்பமாவது, அவர் அவரது, சொல் - சொற்களை, கேட்டல் - கேட்டலாம், (எ-று).

மற்று - வினைமாற்றுப் பொருளது பிள்ளைகளது மழலைச்சொல்லே யன்றி அவர் தாங்களேக்கற்று அறிவுடையவராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாமாகலின், அவை யிரண்டிற்கும் பொதுப்படச் 'சொல்' என்றார், நீண்டலாலாய வின்பத்தைத் தீண்டலின்பமென்றும் கேட்டலாலாய இன்பத்தைக் கேட்ட லின்பமென்றும் கூறினர். இங்குக் காரணப்பெயர்கள் காரியங்களின்மேல் நின்றவாறறிக.

(க-து). மக்க ளுடலைத் தொடுதல் உடற் கின்பமும், அவர் சொற்களைக் கேட்டல் செவிக் கின்பமுமாம் என்பது.

5. The touch of children gives pleasure to the body and the sound of their voice is pleasure to the ear.



¶ மற்றென்பது நீண்டலென்னும் வினையையொழித்துக் கேட்ட லென்னும் வினையைக் கூறு மிடத்து வந்தமையின் வினைமாற்றுப் பொருளதாயிற்று.

§ நீண்டல் கேட்ட லென்னுந் தொழிற்பெயர்கள் அத்தொழில்களாலாய இன்பங்களே யீண்டுணர்த்துதல் பற்றி 'நீண்டல் கேட்ட லென்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மே னின்றன' என்று கூறப்பட்டது. இது காரணங் காரியமாய வுபசாரவழக்காம். காரணம் - காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது. காரியம் - முன்னின்மைக்கு எதிர்மறை.

குழலினிதி யாழினி தென்பதம் மக்கண்
மழலைசொற் கேளா தவர்.

பரி.—(இ-ள்). குழலிசை யினிது யாழிசை யினிதென்று சொல்லுவர்; தம் புதல்வருடைய தந்தலைச்சொற்களைக் கேளாதவர், (எ-று).

* குழல் யாழ் என்பன ஆருபெயர். கேட்டவர் அவற்றினு † மழலைச் சொல் இனி தென்ப ரென்பது ‡ குறிப்பெச்சம். இனிமைமிகுதிபற்றி மழலைச் சொல்லைச் சிறப்பு வகையானுங் கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). தம்மக்கள் - தம்முடைய புதல்வரது, மழலைச் சொல் - குதலைசொற்களை, கேளாதவர்—, குழல்குழலினிசை, இனிது-, யாழ் - வீணையினிசை, இனிது - , என்ப - என்று சொல்லுவர், (எ-று)

குழல் யாழ் என்பன அவற்றி னிசைக்காதலின் ஆருபெயர்கள். கேட்டவர் அவற்றி னிசையிலும் மழலைசொல் இனிதெனறு சொல்லுவா ரென்பது குறிப்பெசசம். இனிமை மிகுதிபற்றி மழலைசொலலைச சிறப்பு வகையாலும் சொல்லியவாரும்

இவை மூன்று பாட்டாலும் இம்மைப்பயன் சொல்லப்பட்டது.

(க-து). தம்மக்களது மழலைச் சொற்களைக கேளாதவர் புள்ளாங்குழலினிசை யினிதென்றுமை, வீணையினிசை யினிதென்றுஞ் சொல்லுவர் என்பது.

6. " The pipe is sweet, the lute is sweet, " say those who have not heard the prattle of their own children.

எ. ¶ தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

பரி.—(இ-ள்). தந்தை புதல்வனுக்குச் செய்யு நன்மையாவது கற்றோரவையத்தின்கண் அவரினு மிக்கிருக்குமாறு கல்வி யுடையனாக்கு தல், (எ-று).

குழல் (புள்ளாங்குழல்) யாழ்(வீணை)என்பன அவற்றுலாய ஓசைக் காதலின் கருவியாகு பெயராம்.

† மழலைச்சொல் - இனஞ்சொல். அஃதாவது சொல்வடிவம் நன்கு வினங்காதிருப்பது.

‡ குறிப்பெச்சம் - சொல்லாற்றல் பொருளாற்றல்களால் வேண்டி கிற்குஞ் சொற்கள் குறைந்து கிற்பது; குறிப்பா லுணரப்படுவ தெஞ்சிகிற்றல்.

தற்பேச்சம்:—" குறிப்பின்கட்டோன்றிய வெச்சம்" என்பர் நச்சினார்க் கினியர்; இஃதருத்தாபத்தியின்பாற்படும்.

¶ " சான்றோ ரூக்குத நன்றைக்குங் கடனே" என்பது புறநானூறு.

பொருளுடைய ஞக்குதன் முதலாயின தன்பம் பயத்தலின், நன்மை யாகவென்பது கருத்து. இதனுற் றக்தை கடன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). தக்தை - தகப்பனுனவன், மகற்கு - புதல்வனுக்கு, ஆற்றும் - செய்யத்தகும், நன்றி-உபகாரமாவது அவையத்து - (கற்றவரது) சபையினிடத்து, முந்தியிருப்ப-(அவரினும்) மேம்பட்டிருக்கும்படி, செய் - (கல்வியுடையவன்) ஆக்குதலாம், (எ-று).

பொருளுடைய ஞக்குதல் முதலானவை பின்னே தன்பத்தைத் தருதலின், அவை நன்மையைத் தருவனவாகா வென்பது கருத்து. இதனுல் தகதை மைந்தனுக்குச் செய்யுங்கடன் சொல்லப்பட்டது.

(க-து). பிதா பிள்ளைக்குச் செய்யும் உதவி கற்றோர் சபையில் அவரின் கல்வியாண்மேம்பட்டிருக்கச் செய்தலாம் என்பது.

7. The benefit which a father should confer on his son is to give him precedence in the assembly of the learned.

அ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

பரி.—(இ-ள்). தம்மக்களது அறிவுடைமை பெரியநிலத்து மன்னு நின்ற வுயிர்கட் கெல்லாந் தம்மினு மினிதாம், (எ-று).

ஈண்டறிவென்றது இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வி யறிவினை. மன்னுயி ரென்றது ஈண்டறி வுடையார்மேனின்றது; அறிவுடைமைகண் டின்புறுதற்குரியவர் அவராகலின். இதனுற் \$ ரூய் தக்தையரினும் அவை யத்தார் உவப்பரென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). தம்மக்கள் - தம்மக்களது, அறிவுடைமை - அறிவு டைமையானது, மாநிலத்து - பெரியநிலத்தில், மன் - நிலைபெற்ற, உயிர்க் கெல்லாம்—உயிர்களுக்கெல்லாம், தம்மின் - தமக்கு இனிய தாதலினும், இனிது - இனியதாயிருக்கும், (எ-று).

இங்கு அறிவென்றது இயற்கை யறிவோடு கூடிய கல்வி யறிவை. அறிவுடைமை கண்டு மகிழ்தற் குரியவர் அறிவுடையோ ராதலால் இங்கு மன்னுயிரென்றது அறிவுடையார்மேல் நின்றது. இதனுல் தாய் தக்தை யரினும் அறிவுடையார் (சபையார்) பெரிதும் மகிழ்வரென்பது சொல்லப் பட்டது.

(க-து). மக்களது அறிவுடைமையைக் கண்டு அவரது தாய் தக்தையரினும் அறிவுடையார் பெரிதும் மகிழ்வர் என்பது.

8. That their children should possess knowledge is more pleasing to all the powerful creatures of this great earth than to themselves.

\$ தக்தையினும் எனவும் பாடமுண்டு. இது பிறழ்ந்தபாடமாம்.

கூ. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

பரி.—(இ-ள்). தான் பெற்றபொழுதை மகிழ்ச்சியினு மிகமகிழும், தன்மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தானென் றறிவுடையார் சொல்லக் கேட்ட தாய், (எ-று).

+ கலானின்கட் கண்ட பொதுவுவகையினும் சால்புடைய னெனக் கேட்ட தெப்புவகை பெரிதாகலின் 'பெரிதுவக்கும்' எனவும், பெண்ணியல்பாற் குணத அறியாமையின் 'கேட்டதாய்' எனவுங் கூறினர். அறிவுடையாரென்பது வருவிக்கப்பட்டது; சான்றோ னெனற் குரியவர் அவராகலின். தாயுவகைக் களவின்மையின், அஃதிதனுற் பிரிதற்குக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). தன்மகனை—,சான்றோனென - (கல்வி கேள்விகளினால்) நிறைந்தோனென்ற (அறிவுடையார்) சொல்ல, கேட்டதாய்—, ஈன்ற பொழுதின் - (தான்) பெற்றகாலத்து மகிழ்ச்சியிலும், பெரிதுவக்கும் - மிகமகிழ்வான், (எ-று).

(ஈன்றபோது தனது) தொடையின்மீது மகனைக் கண்ட (போது உண்டாகிய) பொதுவாகிய மகிழ்ச்சியினும் அவன் நிறைந்த கல்வி கேள்விகளை யுடையனென் றறிவுடையார் சொல்லக் கேட்ட (போது உண்டாகிய) தெப்பாகிய மகிழ்ச்சி பெரிதாகலின் 'பெரிதுவக்கும்' எனவும், பெண்மைக் குணத்தினால் தானுக அறிய மாட்டாமையால் 'கேட்டதாய்' எனவும் சொல்லினர். அறிவுடையா ரென்பது வருவிக்கப்பட்டது; சான்றோ னென்ற அறிதற் குரியவர் அவராகையால், தாய் மகிழ்ச்சிக்கு அளவில்லாமையால், அஃது இதனால் பிரித்துச் சொல்லப்பட்டது.

(கு-து). தன் மகனைக் கல்வியறிவால் மேம்பட்டவனென் றறிஞர் சொல்லக்கேட்ட தாய் பெற்றகாலத்தினும் பெரு மகிழ்ச்சியடைவாள் என்பது.

9. The mother who hears her son called "a wise man" will rejoice more than she did at his birth

கo. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யேன்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

பரி.—(இ-ள்). கல்வியுடையனாகிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறுவது தன்னறிவும் ஒழுக்கமுங் கண்டார் இவன் றந்தை இவனைப் பெறுதற் கென்னதவஞ் செய்தானோ என்று சொல்லுஞ் சொல்லே நிகழ்த்துதல், (எ-று).

+ கலானின் மகற்கண்டபொழுதை யுவகையினும் என்றும் பாட முண்டு. "வயாவும் வருத்தமு மீன்றசா னேவுஞ், வயாஅன் மகற்கண்டு தாய்மகிழ் தாஅங்கு" என்பது காலடி.


† சொல்லென்பது நிகழ்த்துதலாகிய தன் காரணந் தோன்ற நின்றது. நிகழ்த்துதல் அங்ஙனஞ் சொல்ல ஒழுகுதல். இதனால் புதல்வன் கடன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). தந்தைக்கு - (தன்னைக் கல்வியுடையவனாக்கிய) தனக்கினுக்கு, மகன்—, ஆற்றம்-செய்யும், உதவி-பிரதியுபகாரமாவது, (தன்னறிவையும் ஒழுக்கத்தையுங் கண்டவர்) இவன்-இவனது, தந்தை-தகப்பன், (இவனைப்பெறுதற்கு), என் - என்னதவத்தை, நோற்றான்கொல் - செய்தானோ, என்னுஞ் சொல் - என்று சொல்லுஞ் சொல்லை (உண்டாக்குதலாம்), (எ-று).

சொல்லென்பது உண்டாக்குதலாகிய தன்காரணந்தோன்றுமாறு நின்றது. உண்டாக்குதல் - அப்படிச் சொல்ல நடத்தல். இதனால் புதல்வன் தந்தைக்குச் செய்யுங் கடன் சொல்லப்பட்டது.

(க-து). பிள்ளை பிதாவிற்குச் செய்யு முதவி இவன் பிதா இவனைப் பெறுதற் கென்னதவஞ் செய்தானோ வென்று பிறர் சொல்ல வொழுகுதலாம்.

10. (So to act) that it may be said "by what great penance did his father beget him," is the benefit which a son should render to his father.



நான்காம் அதிகாரம்.

அன்புடைமை—அஃஅ.

பரி.—அஃதாவது அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரு முதலிய தொடர்புடையார்கட் காத்லுடையனாதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள பிறத்தலும் அன்பின்பய னாகலின், இது வேஷ்டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பில்வழி இல்லறம் இனிது நடவாமை, * "அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந், துறவோர்க் கெதிர்தலுத் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னே" என்

† சொல்லென்னுங் காரியம் தனது காரணமாகிய நிகழ்த்துதலின்மேல் நின்றது. அது மகனது அறிவும் ஒழுக்கமுமாம்.

* நிலப்பதிகாரம் கொலைக்களக்காதை எக,எஉ,எக: இதன் பொருள் துறவாது விரதங்காப்பாராகிய (சாவக நோன்பிகளென்னும்) பிரமசாரிகளுக்கு அவர்கள் விரும்புவனவற்றைக் கொடுத்தலும், புலன்களைவிடமுயல் வாராய்த் துறவறத்தில் நின்ற அத்தணரென்னும் வானப்பிரஸ்தரைக்காத்தலும், சக்கியரெனும் யெதிர்கொண்டு சென் றுபசரித்தலும், தொன்று தொட்டு மடைபெற்று வரும் ஒப்பற்ற சிறப்பினையுடைய அதிதிகளை யெதிர்சென்றழைத்தலுந் தண்பித்தலுமாகிய இவற்றை யிழந்த வென்னே வென்பது.

தனறும், † அதனை லருள் பிறத்தல், ‡ "அருளென்னு மன்பின்குழவி" என்பதனனு மறிக.

தெளி.—அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாயிய மனைவி யும் புதல்வரும் முதலாகிய சம்பந்த மூடையவரிடத்து ஆசையுடையனை யிருக்கை. அதிகார முறைமையும் இதனுலே விளங்கும். இல்லறத்தைச் செவ்வையாக நடத்தலும் பிற வுயிர்களின்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனதலால், இது வேண்டப்பட்டது. இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியின்மீது அன்பில்லாவிடத்து இல்லறம் செல்வையாக நடைபெறு தெனவும் அந்த அன்பினுல் அருளுண்டாகு மெனவுமறிக.

க. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

பரி.—(இ-ள்). அன்பிற்கும் பிறரறியாம லடைந்துவைக்குந் தாழுள தோ? தம்மா லன்புசெய்யப்பட்டாரது துள்பங்கண்டுழி அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை யெல்லா நும் அறியத்தூற்றும் ஆதலான், (எ-று).

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை கண்ணீர்மேலேற் றப்பட்டது. காட்சியளவைக் கெய்தாதாயினும் $ அனுமான வளவையான் வெளிப்படு மென்பதாம்.

† அதனை லருள்பிறத்தல் - அவ்வன்பினுல் அருளுண்டாதல். அருளாவது தொடர்பு பற்றாத இயல்பாக எல்லா வுயிர்களின் மேலுஞ் செல்வதாகிய கருணை.

‡ திருக்குறள் பொருள்செயல் வகை எ. அன்பென்னு மன்னையாலீனப்பட்ட அருளென்னுங்குழந்தை யென்பது.

$ குறியாராய்ச்சி அனுமான மெனப்படும். ஈண்டனுமான மாமாறு:—இராம னிலக்குவனிடத் தன்புடையான்; இலக்குவனது அன்பன் கண்டவிடத்து இராமனதுகண்களி லழுகைநீர்வருதலின், என்பது. இதுபற்றி இறையனாரகப் பொருள் "அன்பினைந்திணை" என்னுஞ் சூத்திரவுரையில் நக்கீரனார் "அன்பினைந்திணை யென்றவிடத்து அன்பு அறிந்தே னுயினன்றே அன்பினுளைய ஐந்திணையும் அறிவதெனின், அது குடத்தில் விளக்கும் படத்தின் வாளும்போல இதுகாண் அன்பென்றதற்குக்காட்டலாகாது, அன்புடையானருளுங் கண்டவிடத்து இலையுண்மையான் இங்கு அன்புண்டென்று அனுமித்துக் கொள்ளற்பாற்று" என்றும், தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் "ஆங்கவையொருபால்" என்னுஞ் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர் "அன்பென்பது அருட்கு முதலாகி மனத்தி னிகழும் நேயம்; அஃதடையார்க்குப் பிறர்கட் டீங்கு கண்ட வழிக் கண்ணீர் விழுமாகலின் அவ்வருளானே அன்புடைமை விளங்கு மென்பது. இவையெல்லாம் தத்த மனத்தி னிகழ்ச்சியை வெளிப்படுப்பன வாகலின் மெய்ப்பாடெனப் பட்டன" என்றும் கூறியவாற்றனு மறிக.

இதனுல் அன்பினதண்மை உணர்த்தப்பட்டது.

தெளி.—(இ-ன்). *அன்பிற்கும் - அன்பினுக்கும், அடைக்கும் - (பிற நியாமல்) அடைத்துவைக்கும், தாழ் - தாழும், உண்டோ -,(தம்மால் அன்பு செய்யப்பட்டவரது துன்பங் கண்டவிடத்து), ஆர்வலர் - அன்புடையாரது, புன்கணீர் - (பொழிகின்ற) புல்லியகண்ணீரே, பூசறரும் - (உள்ளேயிருக்கின்ற அன்பினை எல்லாரும் அறியத்) தூற்றும் (ஆதலால்)' (எ-று).*

உம்மை அன்பைச் சிறப்பித்து நிற்றலின் உயர்வுசிறப்பும்மை. அன்புடையாரது புன்மை அவரது கண்ணீர்மே லேற்றப்பட்டது. அன்பு பிரத்தியக்ஷச் பிரமாணத்திற்கு வெளிப்படாதாயினும் அனுமானப் பிரமாணத்தால் வெளிப்படுமென்பதாம் தாழ் - தாழ்ப்பான், ஓ - எதிர்மறை. தூற்றும் - வெளிப்படுத்தும்.

இதனுல் அன்பினது உண்மை உணர்த்தப்பட்டது.

(க-து). *அன்பு செய்யப்பட்டவரது துன்பத்தைக் கண்டவிடத்து அன்புடையவரது கண்ணினின்றுவரு மழுகைகூரே யுள்ளிருக்கின்ற அன்பை வெளிப்படுத்துமென்பது.*

1. Is there any fastening (that can shut in) love ? The sorrowful tear of the affectionate will publish the love that is within.

உ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரேன்பு முரியர் பிறர்க்கு.

பரி.—(இ-ள்). அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானும் தமக்கே உரியர்; அன்புடையார் அவற்றுனே யன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர், (எ-று).

ஆனுருபுகளும் பிரிநிலே ஏகாரமும் விகாரத்தாற் ருெக்கன. ‡ என்பு - ஆருபெயர். என்புமுரியராதல் ¶ " தன்னகம் புக்க குறுகடைப் புறவின்,

‡ என் (எலும்) பென்னுஞ் சிறப்புச் சினைப்பெயர் அதன் மூதலாகிய வுடம்பிற் காதலின் சினையாருபெயர். பொதுமைச்சினை சினையாரு பெயராய் வருதலின்று.

¶ புறநானூறு, சுகூ. இதன்பொருள்: தன்னிடத்தை யடைந்த குறிய நடையையுடைய புருவினது அழிவினைக் கண்டஞ்சித் (தன்னழிவிற் கஞ்சாது) தாசுத் தட்டிலேறிய பிச்சக்காரவர்த்தி என்பது. பிச்சக்காரவர்த்தி (தன்னைப் பரிட்சிக்குமாறு) புருவடிவெடுத்து வந்து தன்னிடத்து அடைக்கலம் புகுந்த அக்கினியினிமித்தம் அப்புருவைத் துரத்திவந்த வேட வடிவங்கொண்டுள்ள இந்திரனுக்குத் தனது மாமிசத்தையறுத்துத் தாசுத்தட்டில் வைத்து நிறுக்கும்போது, புருவினைடைக்கு

றபுதிகண் டஞ்சித்" தலைபுக்கோன் ¶ முதலாயினுக்கட் காண்க.

தெளி.—(இ-ள்). அன்பிலார் - அன்பில்லாதவர், (பிறர்க்குப் பயன் படாமையால்), எல்லாம் - எல்லாப்பொருள்களாலும், தமக்கு - தமக்கே, உரியர்-உரியவராவர், அன்புடையார், (அவற்றுலே யல்லாமல்), என்பும் - (தம்) உடம்பானும், பிறர்க்கு - , உரியர் - உரியவராவர், (எ-று).

எல்லா வற்றினும் என்பானமென்ற ஆறறிவுகளும் தமக்கே என்ற பிரிவிலே யோராமுஞ் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. என்பு உடம்பிற் காதலால் ஆகுபெயர். என்பு முரியராகுதல் புருவிற்காகத்துலே யேறிய பெரு முதலாயினோரிடத்துக் காண்க.

(க-து). அன்பில்லாதவர் எல்லாப் பொருளாலுந் தமக்கே யுரியவரும் அன்புடையவர் பிறர்க்குப் பொருளேயன்றித் தம் மூடம்பையுங் கொடுக்க வரியவருமாவர் என்பது.

2. Those who are destitute of love appropriate all they have to themselves; but those who possess love consider even their bones to belong to others.

கூ. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

பரி.—(இ-ள்). பெறுதற்கரிய மக்களுயிர்க் குடம்போ டேண்டா கிய தொடர்க்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பய னென்று சொல்லுவர் அறிந்தோர், (எ-று).

பிறப்பின தருமை பிறந்த வுயிர்கண்மேல் ஏற்றப்பட்டது. * இவை

மாமிசத்தின் எடை குறைவானது கண்டதனே யத்தராசுத்தட்டிலேறிய சமயத்தில் அவ்விரு தேவரும் பிரத்தியட்சமாகி யச்சக்கரவர்த்திக்கு வேண்டிய வரங்களைத் தந்து போயினரென்பது கதை. இக்கதையின் விரிவைப் பாரதம் ஆரண்ணிய பருவத்திற் காண்க. இச்சக்கரவர்த்தியைப் பற்றி இராமாயணம் "பறவை மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறக வழங்கின னுக்" என்றும், "புறவொன்றின் பொருட்டால் யாக்கை புண்ணுற வரிந்த புத்தேள்" என்றும் கூறுகின்றது.

¶ முதலாயினர் என்பதனால் தமது முதலெலும்பை விருத்திரா சுரனே வென்றும் பொருட்டு இந்திரனுக்குக் கொடுத்த ததீசி முனிவரே யன்றி, தனது மரணத்தைக் கருதாது தன்னுடன் பிறந்துள்ள சகல குண் டலங்களே அர்ஜுனவடிவம் கொண்டுவேண்டி யாசித்த இந்திரனுக்குக் கொடுத்த கர்ணனையும் பிறரையும் கொள்க.

அன்போடியைபவர்த்த (அன்போடு பொருந்துதற்குவந்த) என்பது அன்போடியைந்த என்று வந்தவையின், இயைந்த (பொருந்திய) என் பது ஒருவினை அதனோடு சம்பந்தமுடைய மற்றொரு வினைக்காய உபசார

ந்த வென்ப துபசார வழக்கு. † வழக்கு - ஆகுபெயர். உடம்போ டியைந் தல்லது அன்புசெய்ய லாகாமையின், அது செய்தற் பொருட் ‡ டித் தொடர்ச்சி யுளதாயிற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையென் றுயிற்று.

தேவி.—(இ-ன்). அருயிர்க்கு - பெறுதற்கரிய மனிதருயிர்க்கு, என் போடு - உடம்போடி, இயைந்த - உண்டாகிய, தொடர்பு - சம்பந்தத்தை, அன்போடு - , இயைந்த - பொருந்துவதற்குவந்த, வழக்கு - வழியின்பய னும், என்ப - என்று (அறிந்தோர்) சொல்லுவர், (எ-று).

(மனிதப்) பிறப்பினது அருமை பிறந்த (அப்பிறப்பினை யடைந்த) உயிர்களின்மேல் ஏற்றப்பட்டது. இஃதடைமையின் தரும முடையான் மேலாய உபசார வழக்காம். இயைந்த என்பது இயையவந்த என்பதற்காத லின் இஃது முபசார வழக்காம. வழக்கென்பது அதன் பயனுக்காதலின் ஆகுபெயர். வழக்கு - நீதி, உடம்போடு கூடி யல்லாமல் அன்பு செய்தல் கூடாமையால், அவ்வன்பு செய்தற்பொருட்டே இத்தொடர்ச்சி யுண்டாயிற் றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையென் றுயிற்று

(க-து). உயிருக்கு மக்களுடம்போ டுண்டாகிய சம்பந்தம் அன் போடு பொருந்துதற்கு வந்த வழியின் பயனும் என்பது.

3. They say that the union of Atma and ~~jiv~~ man is the fruit of the union of love and virtue (in a former birth).



சு. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

பரி.—(இ-ள்). ஒருவற்குத் தொடர்புடையார் மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்ப முடைமையைத்தரும்; அவ்விருப்ப முடைமைதான் இவற்றுப் பகையும் * தொதுமலும் இலி லேயாய் யாவரு நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும் (எ-று).

உடைமை-உடையனுக் தன்மை; யாவரு நண்பாதல் எல்லாப் பொருளு மெய்துதற் கேதுவாகலின், அதனை 'நாடாச்சிறப்பு' என்றார்.

வழக்காம். அன்பினைப்பற்றிப் பிரபுலிங்கலீலை "தறவற மனைய நஞ்சீர் தாய்மைதற் கல்வி கல்லோர், உறவொரு மகங்கடான மொண்டவம் விரதம், பூசை, பறிவிலை யனைத்து மில்லே யாதர வில்லே யாயின்" என்று கூறுன்றது.

† வழக்கினுலாய பயனை வழக்கென்றது கருவியாகுபெயர்.

‡ இத்தொடர்ச்சி - உயிர்க்கு (மக்கள்) உடம்போ டெண்டான சம்பந்தம்.

* விருப்பித்தும் வெறுப்பித்தும் வியபமாகாதிருப்பது தொதும வெனப்படும். இங்கே தொதுமல் பகைகட்டில்லார்மேல் நின்றது.

தெளி.—(இ-ன்). அன்பு (ஒருவனுக்குச் சம்பந்த முடையவரிடத்துச் செய்த) அன்பானது, (அத்தன்மையினால்) ஆர்வமுடைமை - (பிறரிடத் தும்) விருப்ப முடைமையை, ஈனும் - தரும், அது - அவ்விருப்ப முடை மையானது, நண்பென்னும் - (இவனுக்குப் பகைவரும் கொதமலருமில்லை யாய் யாவரும்) நட்பினரென்று சொல்லப்படுகிற, நாடாச்சிறப்பு - அள விறந்த சிறப்பை, ஈனும் - தரும், (எ-று).

ஆர்வ முடைமை - விருப்பமுடையவனுக்குத் தன்மை. யாவரும் நட்பி னராதல் எல்லாப் பொருளையும் அடைதற்குக காரணமாமாதலின், அதனை 'நாடாச் சிறப்பு' என்றார்.

(க-து). அன்பு பிறரிடத்து விருப்பத்தையும் அவ்விருப்பம் அவரது சிநேகத்தையும் தரும் என்பது.

4. Love begets desire and that (desire) begets the immeasurable excellence of friendship.



இ. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு.

பரி.—(இ-ள்). அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர், இவ்வுலகத்து முல் வாழ்க்கைக்கணின்று இன்பநுகர்ந்து அதன்மேற் றுறக்கத்துச் சென் றெய்தும் பேரின்பத்தினை, (எ-று).

வழக்கு - ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும், மக்க ளோடும், ஒக்கலோடெ கூடி யின்புற்றார் தாஞ்செய்த ‡ வேள்வித்தொழி லாற் றேவராய் ஆண்டும் இன்புறுவராகலின் 'இன்புற்று செய்துஞ் சிற ப்பு' என்றார். தவத்தாற் றன்புற் றெய்தும் துறக்க இன்பத்தினை ஈண் டும் இன்புற் றெய்துதல் அன்பானன்றி யில்லையென்பதாம்.

தெளி.—(இ-ள்). அன்பு - அன்பை, உற்று - உடையவராகி, அமர் ந்த - (இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு - வழியின் பயனும், என்ப - என்று (அறிந்தோர்) சொல்லுவர், வையகத்து - இவ்வுலகத்தில், இன்புற் றார் - (இல்வாழ்க்கையில் நின்று) இன்பத்தை யனுபவித்தவராகி, எய்தும் - (அதன்பின்னே விண்ணுலகத்திற் சென்று) அடையும், சிறப்பு - பேரின் பத்தினை, (எ-று).

வழக்கு அதன் பயனுக்காதலின் ஆகு பெயர். இல்வாழ்க்கையில் நின்று மனைவியோடும், மக்களோடும், சுற்றத்தாரோடும் கூடி இன்பமுற்ற வர் தாம் செய்த வேள்வித் தொழிலினால் தேவராய்ப் பிறந்து அவ்விடத் திலும் இன்பத்தை யனுபவிப்பாராகலின் 'இன்புற்று செய்துஞ் சிறப்பு'

‡ வேள்வி - விரும்பி[illegible]. ஈண்டிஃது ஐம்பெரும் வேள்வி யையும் குறித்து நின்றது.

என்றார். தவத்தினால் தன்பமுற்று அடையும் விண்ணுலக வின்பத்தை இவ்விடத்தில் மின்பமுற்றடைத லன்பாலன்றி இல்லையென்பதாம்.

(க-து). விண்ணுலகி லடையும் பேரின்பம் மண்ணுலகில் இல்வாழ்க்கையிற் பொருந்திய அன்பின் பயனும் என்பது.

5. They say that the felicity (of heaven) and the happiness (of earth) are the fruit of virtue and love (in the conjugal) state.

சு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

பரி.—(இ-ள்). அன்பு துணையாவது அறத்திற்கே யென்று சொல்லுவார் சிலறியார்; ஏனமறத்திற்தும் அவ்வன்பே துணையாவது, (எ-று).

ஒருவன் செய்த பகைமைபற்றி உள்ளத்து † மறநிகழ்ந்துழி அவனை நட்பாகக் கருதி அவன்மே லன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந் துணையாமென்பார் 'மறத்திற்கு மஃதே துணை' என்றார்; ‡ "தன்பத்திற் கியாரே துணையாவார்" என்புழிப்போல.

இவை ஐந்துபாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). அறியார் - அறியாதவர் (சிலர்), அன்பு - அன்பானது, சார்பு-துணையாவது, அறத்திற்கே - தருமத்திற்கே, என்ப - என்று சொல்லுவார், மறத்திற்கும் - (மற்றைய) மறத்தை நீக்குவதற்கும், அஃதே-அவ்வன்பே, துணை - துணையாவது, (எ-று).

ஒருவன் செய்த பகைமையினால் மனத்தினிடத்து மறந்தோன்றிய விடத்து அவனை நட்பாக நினைத்து அவன்மேல் அன்புசெய்ய அவ்வன்பினால் அம்மறம் நீங்கு மாதலின், மறத்தை நீக்குதற்குந் துணையாமென்பார் மறத்திற்கு மஃதேதுணை' என்றார்.

இவை யைந்துபாட்டாலும் அன்பினது சிறப்புச் சொல்லப்பட்டது.

† மறம் - சினம். "கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்" என்பர் நச்சினார்க்கினியர்.

‡ திருக்குறள் நெஞ்சொடு புலத்தல் க. இதன்பொருள் தன்பத்தை நீக்குவதற்குத் துணையாயிருக்கின்றவர்களெவர் என்பது. மறத்திற்கும் என்பதில் நீக்குவது என்பதை நடுவே கூட்டி 'மறத்தை நீக்குவதற்கும்' என்று கொண்டது தமர்த்தம் எனப்படும். தன்பத்திற்கு என்றவிடத்து தன்பத்தை நீக்குவதற்கு எனப் பொருளுரைத் திருப்பதிலும் நீக்குவது என்பது இடையேகூட்டியிருத்தலறிக. பிரயோக்விவேகதாலார் காரகபடலம் 16-வது செய்யுளினுரையில் "பூவிற்குச் சென்றான்" 'தன்பத்திற் கியாரே துணையாவார்' 'மறத்திற்கு மஃதேதுணை' 'பிணிக்குமருந்து' என்பவற்றின்கண் பறித்தல் நீக்குதல் எனநடுவேபெய்து பொருளுரைத் தித் தமர்த்தமென்பதுங் கொள்க" என்று கூறியிருத்தலு மறிக.

(க-து). அன்பு அறத்திற்கே யன்றி மறத்தை நீக்குதற்கும் துணையாம் என்பது.

6. The ignorant say that love is an ally to virtue only, but it is also a help to get out of vice.

எ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

பரி.—(இ-ள்). என்பில்லாத வுடம்பை வெயில்காய்ந்தாற்போலக் காயும், அன்பில்லாத வுயிரை அறக்கடவுள், (எ - று).

என்பில தென்றதனுள் உடம்பென்பதூஉம், அன்பில தென்றதனுள் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றியே யெங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின்முன் * என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறு போல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன்னியல்பாற் சென்றுகெடு மென்பதாம். † அதனைக் ‡ காயுமென வெயி லறவகளின்மே லேற்றினர்; ¶ அவற்றிற்கும் அவ்வியல் புண்மையின். இவ்வாறு $ " அல்லவை செய்தார்க் கறவகூற்றம்" எனப் பிறருங் கூறினர்.

தெளி.—(இ-ள்). என்பிலதனை - எலும்பில்லாத வுடம்பை, வெயில் போல - வெயில் காய்ந்தாற் போல, அன்பிலதனை - அன்பில்லாத வுயிரை, அறம் - அறக்கடவுள், காயும் - வருத்தும், (எ-று).

எ-அசைநிலை. என்பிலதென்றதனுல் உடமபென்பதும், அன்பிலதென்றதனுல் உயிரென்பதும் பெறப்பட்டன. வெறுப்பில்லாமலே எங்கும் ஒரு தன்மையதாகிய வெயிலின்முன்னே புழு தனதியல்பாற் சென்று கெடும் வகைபோல அப்படிப்பட்ட தாகிய அறத்தின்முன்னே அன்பில்லாத வுயிர் தனதியல்பாற் சென்று கெடுமென்பதாம். வெயிலின் முன்பும் அறத்தின் முன்பும் என்பில்லதும் அன்பில்லதும் தம்மியல்பாற் சென்று கெடுவதனைக் காயுமென்று வெயிலின்மேலும் அறத்தின்மேலுமேற்றிக்கூறினார்; அவ்விரண்டற்கும் அக்காயுந்தன்மை யிருவகைதலினென்க. இஃதொன்றன் தருமம் மற்றொன்றற்காய வுபசார வழக்காம்.

(க-து). அன்பில்லாதவனை அறக்கட்டவுள் வருத்தும். ()

7. Virtue will burn up the Atma which is without love, even as the sun burns up the creature which is without bone.

என்பில்லது - புழு. † அதனை—அவ்வாறு கெடுவதனை. ‡ காயுதல்—காய்ந்து கொல்லுதல்.

¶ அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின்—வெயிலுக்கும் அற (தரும) த்திற்கும் காய்தற் றன்மை யிருக்கின்றமையின்.

$ சான்மணிக்கடிகை - 85: இதன்பொருள் பாவத்தொழிலைச் செய்பவருக்குத் தருமதேவதை யமனுகும் என்பது.

அ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை † வன்பாற்கண்
‡ வற்றல் மரந்தளிர்த் தற்று.

பரி.—(இ-ள்). மனத்தின்கண் அன்பில்லாத வுயிர் இல்லறத்தோடு கூடிவாழ்தல் வன்பாலின்கண் வற்றலாகியமரந் தளிர்த்தாற்போலும்.

கூடாதென்பதாம். வன்பால்-வன்னிலம். § வற்றலென்பது பால்வினங்கா அஃறிணைப் படர்க்கைப்பெயர்.

தெளி.—(இ-ள்). அகத்து - மனத்தின்கண், அன்பில்லா வுயிர் - அன்பில்லாத வுயிரானது, வாழ்க்கை-(இல்லறத்தோடுகூடி) வாழ்தலானது, வன்பாற்கண் - வன்பாலென்னும் பாலை நிலத்தில், வற்றன்மரம் - உலர்ந்தாகிய மரமானது, தளிர்த்தற்று - தளிர்த்தாற் போலும், (எ-று).

பாலை நிலத்தில் வற்றல்மரம் தளிர்த்தல் கூடாதபோல அன்பின்பில்லாதவனில்லறத்தோடு கூடிவாழ்தல் கூடாதென்பதாம். வன்பால்-கடினமாகிய பூமி. வற்றலென்பது பால்பகா வஃறிணைப்பெயர்.

(க-து). அன்பில்லாதவன் இல்லறத்தோடு கூடி வாழுதல் பயனுடையதாகாது என்பது.

8. The domestic state of that man whose mind is without love, is like the flourishing of a withered tree upon the parched desert.

கூ. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

பரி.—(இ-ள்). யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற் றுறுப்பாகிய அன்புடைய ரல்லாதார்க்கு ஏனைப் புறத்தின்கணின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறஞ்செய்தற்கண் என்ன வுதவியைச் செய்யும்.

புறத்துறுப்பாவன:—இடனும் பொருளும் எவல்செய்வாரு மூதலாயின. துணையொடு கூடாதவழி அவற்றுற் பயனின்மையின் 'எவன் செய்

† வன்பார்க்கண் என்றும் பாடமுண்டு.

‡ "வற்றல் மரம்போ னிற்பேனே" என்பது திருவாசகம்.

§ வற்றல் என்பது வினைமுதற் பொருளுணர்த்தும் அல்லீற்றுத் தொழிற்பெயர். அதன்பொருள் வற்றவ தென்பது; அதன்கண் ஒன்றன்பாலிற்குரிய விகுதியாவது பலவின்பாலிற் குரிய விகுதியாவது இல்லாமை பற்றி 'வற்றலெனபது பால்வினங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்' என்று கூறப்பட்டது. வற்றன் மரம் - இருபெயரொட்டுப் பண்புத்தாகை.

" இல்லாளுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற், றெல்லாமிருந்து மவற் கென்செய்யும் " என்பது நன்னெறி.

யும்' என்றார். † உறுப்புப்போதலின் உறுப்பெனப் பட்டன. § யாக்கையிற் கண் முதலிய வுறுப்புக்களெல்லாம் என்னபயனேச்செய்யும்; மனத்தின்கண் உறுப்பாகிய அன்பில்லாதார்க்கென் றுரைப்பாருமுளர். ‡ அதற்கு இல்லறத்தோ டியாது மியைபில்லாமை யறிக.

தெளி.—(இ-ன்). யாக்கையகத்து - உடம்பினகத்தில் (கின்ற), உறுப்பு - (இல்லறத்திற்கு) அங்கமாகிய, அன்பிலவர்க்கு - அன்புடையராகாதவர்க்கு, புறத்து - மற்றைப்புறத்தில் (கின்ற), உறுப்பெல்லாம் - அங்கமாவனவெல்லாம், எவன் - (அவ்வறஞ் செய்தலில்) என்னவுதவியை, செய்யும்—, (எ-று).

புறத்துறுப்பாவன:—இடமும் பொருளும் ஏவல் செய்வாரு முதலாயினவாம். அன்பாகிய துணையோடு கூடாதவிடத்து அவ்விடம் பொருள் முதலியவற்றாற் பயனில்லாமையால் 'எவன் செய்யும்' என்றார். உறுப்பை யொத்திருத்தலின் இடமுதலானவை உறுப்பெனப்பட்டன. அகம்-உள்.

(க-து). இல்லறத்திற் குறுப்பாய உள்ளன்பில்லா தார்க்கு இடம் பொருள் முதலிய வற்றால் யாதும் பயனின்றும் என்பது.

9. What will all the external members (of the body) avail those who are destitute of love, the internal member of the body?

கo. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கேண்புதோல் போர்த்த வுடம்பு.

பரி.—(இ-ள்). அன்புமுதலாக அதன்வழிநின்றவுடம்பே உயிர்நின்ற வுடம்பாவது ; அவ்வன்பில்லாதார்க் குளவான வுடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம், உயிர்நின்றனவாகா, (எ-று.)

இல்லறம் பயவாமையின் * அன்னவாயின. இவை நான்குபாட்டானும் அன்பில்வழிப்படுக் குற்றங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). அன்பின்வழியது - அன்புமுதலாக அவ்வன்பின் வழியில் நின்ற உடம்பே, உயிர்நிலை - உயிர்நின்ற உடம்பாகும், அஃதி

† உறுப்பு (அவயவம்) போன்ற இடம் பொருள் முதலியவற்றை உறுப்பு என்றது உவமை யாகுபெயர்.

§ யாக்கை - உடம்பின்கண், புறத்துறுப்பெல்லாம் - கண் முதலிய அவயவங்களெல்லாம், எவன் செய்யும் - என்னபயனேச்செய்யும், அகத்து-மனத்தின்கண், உறுப்பன்பி லவர்க்கு - அங்கமாகிய அன்பில்லாதவர்க்கு என்று பொருள் கூறுவாரு முளர்.

‡ அதற்கு இல்லறத்தோடியாது மியைபில்லாமை-அவ்வுரைக்கு இல்லறத்தோடு யாதொரு சம்பந்தமும் மில்லா திருப்பதை.


அன்னவாயின - எலும்பினைத்தோலால் மூடிய உடம்புகளாயின.

லார்க்கு - அன்பின்மையில்லாதார்க்கு (இருப்பனவாய), உடம்பு - உடம்புகள் என்பு - எலும்பை, தோல் - தோலினால், போர்த்த - போர்த்தனவாம், (உயிர்கின்ற வுடம்பாகா), (எ-று).

இல்லறத்தின் பயனைத் தராமையின் அப்படிப்பட்ட வுடம்புகளா யின. இவை நான்கு பாட்டாலும் அன்பில்லாதவிடத் துண்டாகும் குற் றஞ் சொல்லப்பட்டது.

(க-து). அன்புடையவரே யுயிருடையோராவர், அஃதில்லா தவர் பிணத்திற் கொப்பாவர் என்பது.

10. That body alone which is inspired with love, is the dwelling place of Atma; the body of those who are without love is merely bone covered with skin.




ஐந்தாம் - அதிகாரம்.

விருந்தோம்பல்—*On Hospitality.*

பரி.—(இ-ள்). அஃதாவது † இருவகை விருந்தினரையும் புறந்தரு தல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துண் முன்னைய விரண்டுங் கட்புல னுகாதாரை நினைந்துசெய்வன வாகலானும், பின்னைய விரண்டும்பிறர்க் கீத லன்மையானும், இடை நின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறுகாத அன்புடையிருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃதன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது இருவகையாய விருந்தினரையு முபசரித்தல். தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந் திடத்துஞ் செய்யும் அறங்களுள், முன்னுள்ள இரண்டும் கண்ணுற் காணுதவரை நினைத்துச் செய்வன வாதலாலும், பின்னுள்ள இரண்டும் பிறர்க்குக் கொடுத்த லல்லாமையாலும், நடுகின்ற விருந்தோம்பல் சிறப்பை யுடையதாகி இல்லறங்களுக்கு முதலாயிற்று. வேறுபாடில்லாத அன்பை யுடைய கணவனும் மனையாளும் கூடியல்லது விருந்தோம்பல் செய்யக் கூடாமையால், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.



க. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டே.

† இருவகை விருந்தினர் - முன்னறிந் திருக்கின்றமை பற்றி வந்த அதிதிகளும் அஃதில்லாமைபற்றி வந்த அதிதிகளுமாவர். சமைத்துண்டு வாழாதவர் அதிதிகளெனப்படுவர். இதனை "அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளெஞ்ஞான்றும், அட்டுண்ணு மாட்சி யுடையவர்" என்று அறநெறிச் சாரங் கூறுதலானுமறிக. எனவே, அவர்கள் இல்வாழ்வோராகா ரென்பது பெற்றும்.

பரி.—(இ-ள்). மனைவியோடும் வளத்திற் கெல்லாது இல்லின்க ணிருந்து பொருள்களைப் போற்றிவாழுஞ் செய்கையெல்லாம் விருந்தி னரைப்பேணி அவர்க்குபகாரஞ் செய்தற்பொருட்டே, (எ-று).

எனவே, வேளாண்மை செய்பாலுழி இல்லின்க ணிருத்தலும் பொருள் போற்றலுங் காரணமாக வருந் துன்பச் செய்கைகட் கெல்லாம் பயனில்லை என்பதாம்.

தெளி.—(இ-ள்). (மனைவியோடுங் காட்டிற் செல்லாமல்) இல் - இல்லினிடத்து, இருந்து - , ஓம்பி - (பொருள்களைக்) காப்பாற்றி, வாழ்வ தெல்லாம் - வாழுஞ் செய்கையெல்லாம், விருந்து - விருந்தினரை, ஓம்பி-உபசரித்து, வேளாண்மை - (அவ்விருந்தினர்க்கு) உபகாரத்தைச் செய்தற் பொருட்டே - செய்தற்பொருட்டாம், (எ-று).

எனவே, உபகாரஞ் செயயாதவிடத்து இல்லி லிருத்தலும், பொருளைச் சம்பாதித்துக் காப்பாற்றலும் காரணமாக உண்டாகின்ற துன்பச் செயல்களுக் கெல்லாம் பயனில்லை யென்பதாம்.

(க-து). இல்வாழ்க்கையி லிருந்து வாழ்வது விருந்தினரை யுபசரித்து உபகாரஞ்செய்தற் பொருட்டாம் என்பது.

1. The whole design of living in the domestic state and laying up (property) is(to be able) to exercise the benevolence of hospitality.



2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

பரி.—(இ-ள்). உண்ணப்படும் பொருள் அமிர்தமே யெனினும் தன்னை நோக்கி வந்த விருந்து தன் இல்லின் புறத்ததாகத் தானே யதனை யுண்டல் விரும்புதன் முறைமை யுடைத்தன்று, (எ-று).

சாவாமருந்து - சாவாமைக்குக் காரணமாயெ மருந்து. * விருந்தின் றியே ஒருகாற் றானுண்டலைச் சாவாமருந்தென்பா ருளராயினும், அதனை ஒழிகவென் றலைப்பினும் அமையும். இவை யிரண்டு பாட்டானும் விருந்தோம்பலின் றெறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). சாவா மருந்தெனினும் - (உண்ணப்படும்பொருள்) அமிர்தமேயாயினும், விருந்து-(தன்னை நோக்கிவந்த) விருந்தினர், புறத்த தாக - (தன்வீட்டின்) புறத்திருக்க, தானுண்டல் - தானே (அவ்வமிர்

* 'தன்னைநோக்கி வந்த விருந்தினர் தன்வீட்டின் புறத்தே இருக்க அவரோடுண்ணுதலில்லாமலே ஒருமுறை பொன்றைத்தானுண்ணுதலைச் சாவாமருந்து (அமிர்தம்) என்று தாபிப்பர் சிறுப்பாராயினும் அவ்வாறுண்ணுதலே யொழிக என்பதாம்.

தத்தை) உண்ணுதல், வேண்டற் பாற்றன்று - விரும்பும் முறைமையை யுடையதன்றும், (எ-று).

சாவாமருந்து - இறவாதிருத்தற்குக் காரணமாகிய மருந்து. விருந்து புறத்ததாக - விருந்தின்றியே, தானுண்டல் - (ஒருகால்) தானுண்டலே, சாவாமருந்தெனினும் - சாவாமருந்தென்று கூறுவாருளராயினும், வேண்டற்பாற்றன்று-அதனை யொழிக என்றுரை கூறினும் பொருந்தும். இவை யிரண்டு பாட்டாலும் விருந்தோம்பலின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் தன்னை நோக்கி வந்த விருந்தினரை விட்டுத் தானேயுண்ணுதல் தகாது என்பது.

2. It is not fit that one should wish his guests to be outside (his house) even though he were eating the food of immortality.

ரு. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதே லின்று.

பரி.—(இ-ள்). தன்னைநோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவானதில்வாழ்க்கை நல்தரவான் வருந்திக் கெடுதலில்லை, (எ-று).

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனாற் பொருள் தொலையாது மேன்மேற் கிளைக்கு மென்பதாம்.

தெளி.—(இ-ள்). வருவிருந்து - (தன்னைநோக்கி) வந்த விருந்தினரை, வைகலும் - நாள்தோறும், ஓம்புவான் - உபசரித்து வருபவனது, வாழ்க்கை - இல்வாழ்க்கையானது, பருவந்து - (வறுமையால்) வருந்தி,பாழ்படுதலின்று - கெடுதலில்லை, (எ-று).

இனந்தோறும் விருந்தினரை யுபசரித்து வருபவனுக்கு அதனாற் பொருள் குறையாமல் மேலுமேலும் வளருமென்பதாம்.

(க-து). தன்னிடத்து வந்த விருந்தினரை யுபசரிப்பவனது வாழ்க்கை கேடடைவதில்லை என்பது.

3. The domestic life of the man that daily entertains the guests who come to him, shall not be laid waste by poverty.

ச. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

பரி.—(இ-ள்). திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும், முகமினிய ஓயிற் தக்க விருந்தினரைப் பேணுவானது இல்லின்கண், (எ-று).

மனமகிழ்தற்குக் காரணம் தன் செல்வம் நல்வழிப்படுதல். தருதல் ஞான வொழுக்கங்களா லுயர்தல். இதனாற் பொருள் கிளைத்தற்குக் காரணங் கூறிய வாறு.

தெவி.—(இ-ன்). முகமலர்ச்சியுடையனும், நல்லிருக்கு-தருக்த விருந்தினரை, ஓம்புவான் - உபசரிப்பவனது,, இல் - வீட்டினி டத்து, செய்யாள் - இலக்குமி, அகமகிழ்க்து - மனமகிழ்ந்து, உறையும் - வாழாகிற்பள், (எ-று).

இலக்குமி மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழியிற்பயன் படுதலாம். விருந்தினர்க்குத் தகுதியாவது ஞானத்தினாலும், ஆசாரத்தினா லும் மேம்படுதல். இதனால் பொருள் வளர்தற்குக் காரணம் சொல்லியபடி.

(க-து). விருந்தினரை யுபசரிப்பவனது வீட்டில் செல்வம் நிலைபெற்றிருக்கும் என்பது.

4 Lakshmi with joyous mind shall dwell in the house of that man who with cheerful countenance entertains the good as guests.

நி. வித்து மிடல்வேண்டேங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

பரி.—(இ-ன்). முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்க தானேத் தான் மிசைவானது விளைபுலத்திற்குவித்திடுதலும்வேண்டுமோ, வேண்டா, (எ-று).

கொல்லென்பது அசைநிலை. * தானே விளையுமென்பது குறிப்பெச் சம். இவை மூன்று பாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது.

தெவி.—(இ-ன்). விருந்தோம்பி - (முன்னே) விருந்தினரையுண் பித்து (பின்), மிசில் - மிகுந்த வுணவை, மிசைவான் - (தான்) உண்பவ னது, புலம் - விளைநிலத்திற்கு, வித்து மிடல் - விதை விதைத்தலும், வே ண்டுக்கொல் - வேண்டுமோ, (வேண்டுவதில்லை), (எ-று).

கொல்லென்பது அசைநிலை. (விளைநிலம் ஒருவர் வித்திட வேண்டா மலே) தானே விளையுமென்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டா லும் விருந்தோம்புவார் இம்மையிலடையும் பயன் சொல்லப்பட்டது.

(திருவாசகம்) " விச்ச தின்றியே விளைவு செய்குவாய் விண்ணு மண்ணை முழுது மியாலையும் " என்பதற்கு (சிவஞானபோயம்) " வித்திலாத சம்பிரதாய மேலுமில்லை கீழு மில்லை" என்பது பற்றிப் பிறிதொரு கா ணம் கருதப் படுவது போன்று, விளைநிலம் வித்திடுதலின்றித் 'தானே விளையும்' என்பதற்கும் பிறிதொரு காரணம் கொள்ளல் வேண்டும். அஃ தாவது விருந்தினரை முன்னே யுண்பித்துப் பின்னே தானுண்ணுவா னது வினைநிலத்தில் தெய்வந்தானே வித்திட்டு விளையச் செய்யுமென் பதாம். காரணம் பிரசித்தமாய்க் காணப்படாமைபற்றித் 'தானேவிளையும்' என்று கூறப்பட்டது. காரணம் பிரசித்தமா யறியப்படாதனவற்றைப் பிறி தொரு காரணமின்றியே தாமே யுண்டாயினவென் றுரைக்கும் வழக்குண் மை சுயம்புலிங்கம் என்பதனாலு மறிக.

(க-து). விருந்தினரை யுபசரிப்பவனது விளைவிலைத் தானே விளையும் என்பது.

5. Is it necessary to sow seed in the field of the man who having feasted his guests eats what may remain?

சு. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

பரி.—(இ-ள்). தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ண இருப்பான் மறு பிறப்பிற் றேவருமய் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம், (எ-று).

† வருவிருந்தென்பது இடவழுவமைதி. நல்விருந்து - † எய்தா விருந்து. இதனுன் மறுமைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது.

தேவி.—(இ-ள்). செல்விருந்து - (தன்னிடத்து)வந்த விருந்தினரை, ஓம்பி-உபசரித்து, வருவிருந்து - (பின்) வரத்தக்க விருந்தினரை, பார்த்து - எதிர்நோக்கி, இருப்பான் - (தான் அவரோடுண்ண) இருப்பவன் (மறு பிறப்பில் தேவனும்), வானத்தவர்க்கு - வானிலுள்ள தேவருக்கு, நல்விருந் து - நல்ல விருந்தினனுவான், (எ-று).

தன்மை முன்னிலைகளுக்குரிய வருசொல் விருந்தென்னும் படர்க்கை யோடு கூடி வந்தது இடவழுவமைதியாம். நல்விருந்து - கிடைத்தற்கரிய விருந்தினர். இதனால் மறுமையிலடையும் பயன் சொல்லப்பட்டது.

(க-து). வந்த விருந்தினரை யுபசரித்து வரும் விருந்தினர்க் கெதிர்பார்த் திருப்பவன் மறுமையில் தேவர்களுக்குச் சிறந்த விருந்தினனுவன் என்பது.

6. He who, having entertained the guests that have come, looks out for others who may yet come, will be a welcome guest to the inhabitants of heaven.

† (தொல்காப்பியம்) "தருசொல் வருசொல் லாயிரு இளவியும், தன்மை முன்னிலை யாயி ரிடத்த" என்னும் விதிப்படி தன்மை முன்னிலை யென்னு மிரண்டிடங்களுக்கு முரிய வருசொல் விருந்தென்னும் படர்க் கையிடத்தோடு கூடிவந்தமைபற்றி 'வருவிருந்தென்பது இடவழுவமைதி' என்று கூறப்பட்டது. இலக்கணப் பிழை யுடையதாயினும் அறிவுடைய மூன்னோரா லங்கீகரித் தமைக்கப்பட்டது வழுவமைதியெனப்படும்.

‡ எய்தாவிருந்து-விருந்தார் வீட்டிற்குக் கண்ணபிரானும் அப்பூதியடிக ளில்லத்திற்கு அப்பர்சுவாமிகளும் விருந்தாகச் சென்றுற் போல்வது.

எ. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றனைத்துணை வேள்விப் பயன்.

பரி.—(இ-ள்). விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்ன வளவிற் றென்பதோ ரளவுடைத்தன்று; அதற்கு அவ்விருந்தின் றகுதி யளவே அளவு, (எ-று).

* ஐம்பெருவேள்வியி னொன்றுகலின் 'வேள்வி' என்றும், பொரு ளளவு † "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" ஆகலின் 'இனைத்துணைத்தென்ப தொன்றில்லை' என் றும் கூறினர். இதனுள் இருமையும் பயத்தற்குக்காரணம் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). வேள்விப்பயன் (விருந்தினரை யுபசரித்தலாகிய) வேள்வியினது பயன், இனைத்துணைத்தென்பது-இன்னவளவின தென்ப தாகிய, ஒன்றில்லை - ஓரளவினை யுடையதன்று, (அப்பயனுக்கு), விருந் தின் - அவ்விருந்தினராது, தினை-(தகுதி) அளவே, தினை - அளவாம், ().

பிரமயாகம், தேவயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மனிதயாகம் என் னும் ஐம்பெருவேள்வியில் மனிதயாகம் என்னும் விருந்தோம்பலும் ஒன்

* "இருகன்தன் யந்திரம் அல்லது முறம், அம்மி, தடைப்பம், உரல் உலக்கை, தண்ணீர்க்குட மென்னு மிவ்வைந்தினையு முபயோகப் படுத்திக் கொள்ளுவதால் அவனுக்கு ஐவகைக் கொலைப்பாவங்க ளுண்டாகின்றன". "அவ்வைந்து பாவங்களையும் போக்குவதற்காக மகரிஷிகளால் நினைக் தோதும் ஐந்து மகா யக்கியங்கள் இருகன்தனுக்குக் கிரமமாக விதிக்கப்பட் டிருக்கின்றன". "அவ்வைந்து யக்கியங்களில் வேதமோதுதல் பிரமயக்கி யம். அன்னத்தினாலாவது ஜலதருப்பணத்தினாலாவது பிதிர்க்களைக் குறித் தத் திருப்தி செய்வது பிதிர்யக்யம். தேவதைகளைக்குறித்து அக்கினியி லோமஞ் செய்வது தேவயக்யம். வாயச (காக்கை) பலி முதலானவை வைப்பது பூதயக்யம். அதிதிகளுக் குணவிடுவது மானுடயக்யம். ஆக மகா யக்யம் ஐந்து". "இவ்வைந்து மகாயக்யங்களையுந் தன் சக்திக்குத் தக்கபடி யெவன் செய்கிறானோ அவன் இருகன்தாரிமத்தி லிருக்தபோதினும மேற் சொன்ன ஐந்து கொலைகளின் தோஷங்களையுமடைவதில்லை" என்று மனு தருமசாஸ்திரம் மூன்றுமத்தியாயத்தில் ஐம்பெரும் வேள்வி செய்வதற் கேதுசொல்லப்பட் டிருக்கின்றது." ஒண்பிரம மேவோ தாதலோ மம்மலர்த்தல், எண்டெய்வ மீதல்பலி யேபூதம் - ஒண்டொடியீர், எண் ணீர்க் கடனற்ற லேபிதிர் விருந்தோம்பல், அண்ணீர்மை மானுடயாகம்" என்னும் வெண்பாவினாலும் ஐம்பெரும் வேள்வியின் தன்மை யுணர்தற் பாற்றும்.

† நாலடியார் அறன்வலி யுறுத்தல்,
இதன்பொருள்: அமைதர்க்கத்திற் கொடுக்கப்படும் பொருள் அற்பமா யிரு ப்பினும் யோக்கியம் எனபதோடு சேர்ந்தால் ஆகாயமும் அற்பமாகும்படி மூடி யிடும் (பொருள் கொடுத்தலினாலாய பயன் விருத்தியாகும்) என்பது.

ருகலின் 'வள்வி' என்றும், பொருளளவு சிறிதாயினும் சற்பாத்திரத்திற் சேர்ந்ததாயின் அதன்பயன்மிகப்பெரிதாமாகலின் 'இளைத்துணைத்தென்ப தொன்றில்லை' என்றும் சொல்லினர். இதனால் இம்மைப்பயன் மறுமைப் பயனென்னு மிரண்டையுந் தருதற்குக் காரணம் சொல்லப்பட்டது.

(க-து). விருந்தினரை யுபசரிப்பதன் பயன் அவ்விருந்தினரது தகுதியினளவே யளவாம் என்பது.

7. The advantages of benevolence cannot be measured; the measure (of the virtue) of the guests (entertained) is the only measure.

அ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

பரி.—(இ-ன). நிலையாபொருளை வருந்திக் காத்துப் பின் அதனை யிழந்து இதுபொழுது யாம் பற்றுக்கோடில மாயினேமென்றிரங்குவர், அப்பொருளான் விருந்தினரை யோம்பி வேள்விப்பயனை யெய்தும் பொறியிலாதார், (எ-று).

‡ "ஈட்டிய வொண்பொருளைக்,காத்தலு மாங்கே கடிந்தன்பம்" ஆகவின் 'பரிந்தோம்பி' என்றார். ‖ வேள்வி - ஆகுபெயர்.

தெளி.—(இ-ள்). விருந்து - விருந்தினரை, ஓம்பி - (நிலையாப்பொருளைக்கொண்டு) உபசரித்து, வேள்வி - வேள்விப்பயனை, தலைப்படாதார்-அடையும் அறிவிலாதவர், பரிந்தோம்பி - (அந்நிலையாப்பொருளை) வருந்திக் காத்து, (பின்பு அப்பொருளை யிழந்து), பற்றற்றேம் - (இப்போது யாம்) ஆதாரமிலமாயினேம், என்பர் - என்றிரங்குவார், (எ-று).

சம்பாதித்த பொருளைக் காத்தலும் பெருந்துன்ப மாதலால் 'பரிந் தோம்பி' என்றார். வேள்வி அதனபயனுக்காதலின ஆகுபெயர்.

(க-து). விருந்தினரை யுபசரியாதவர் பொருளைக் காப்பாற்றி வீணே யிழந்தோ மென்றிரங்குவர் என்பது.

8. Those who have taken no part in the benevolence of hospitality shall (at length lament) saying, " we have laboured and laid up wealth and are now without support."

‡ நாலடியார் ஈயாமை - ம். இதன்பொருள் சம்பாதித்த நல்ல பொருளைக் காப்பாற்றுவது மப்படியே மிருந்த துன்பம் என்பது.

‖ வேள்வி யென்பது அதனாலாய பயனுக்காதலால் காரியாகுபெயராம்.

கஃ உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டே.

பரி.—(இ-ன). உடைமைக் காலத் தின்மையாவது விருந்தோம்பலி லிகழும் பேதைமை; * அஃதறிந்தார்மாட்டே உளதாகாது, பேதையார் மாட்டே யுளதாம், (எ-று).

உடைமை - பொருளுடையனுந் தன்மை. பொருளாற் கொள்ளும் பயனே இதழ்ப்பத்து உடைமையை இன்மையாக்கலின், † மடமையை இன்மையாக வுபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலி லிகழ்ன், பொருள் கிளரவழியும் அதனற் பயனிலலே லென்பதாம். இவையிரண்டு பாட்டானும் விருந்தோமபாவழிப்படை குற்றம் கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). உடைமையுள் - (பொருள்) உடையவனுயிருக்குங் காலத்தி, இன்மை - வறுமையாவது, விருந்தோம்பல் - விருந்தினரை யுபசரித்தலே, ஓம்பா - (விரும்பாது) இழுமை, மடமை - பேதைமையாகும், (அஃது அறிந்தாரிடத் தனதாகாது), மடவார்கண்-அறிவில்லாதவரிடத்தே, உண்டு-உளதாம், (எ-று).

மடமையானது பொருளாற் கொள்ளும் பயனே இழக்கச்செய்து உடைமையை இல்லாமையாக்கலால், அம்மடமையை இன்மையாக வுபசரித்தார். பேதைமையாலே விருந்தோம்பலிலே இழிக்தால், பொருளிருந்தவிடத்தும் அப்பொருளால் பயனில்லை யென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் விருந்தோமபாத வீடத்து உண்டாகுங் குற்றமு சொல்லப்பட்டது

(க-து). செல்வதனுள் வறுமையாவது விருந்தினரை யுபசரியாமை. அஃதறிவில்லா ரிடத்துண்டு மென்பது.

9. That stupidity which exercises no hospitality is poverty in the midst of wealth. It is the property of the stupid.

கஅ. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

பரி.—(இ-ன). அனிச்சப்பூ () மோந்துழி யன்றிக் குழையாது; ‡ விருந்தினர் முகம் வேறாக நோக்கக் குழையும், (எ - று).

அஃ தறிவுடையவர்மாட் டென்றமை பாடமுணர்.

† உடைமைக் காலத்து இன்மைக் கேதுவாகிய (விருந்தோம்பலிலிகழும்) பேதையை இன்மை யென்ற (காரணத்தைக் காரியமாகக்) கூறியதற்றி 'மடமையை இன்மையாக வுபசரித்தார்' என்ற கூறப்பட்டது இது காரணம் காரியமாக வுபசாரத்து. காரணம்-மடமை; காரியம்-இன்மை.

() மோந்துழின்றிக் குழையாத-மோந்தவிடத்தல்லாமல் வாடாத.

‡ "முகாத்திரி பரிவதம் புறாகவர்ந்துருப்பவன் அற்றுவேக் கருத்தக்கலை; மடோறம் வாரா ஒருகாலத்த வருவதோர் அதிதி என்ற பெயர் " மஞ - 3 வது அத்தியாயம்.


¶ அனிச்சம்-ஒருபெயர். $ சேய்மைக்கட் கண்டுழி இன்முகமும் அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும், ‡ அது பற்றி உடன்பட்டவழி நன்றூற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள், முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடி நீங்குதலின், நீண்டியவழி அல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனுள் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). அனிச்சம் - அனிச்சப்பூவானது, மோப்ப - மோந்தவிடத்து, குழையும் - வாடும், (அதுபோல), விருந்து - விருந்தினர், முகந்திரிந்து-முகம் வேறுபட்டு, நோக்க - பார்க்க, குழையும் - வாடுவர், (எ-று).

அனிச்சம்-பொருளாகுபெயர். தூரத்திற் கண்டவிடத்து முகமலர்ச்சி காட்டலும், அம்முகமலர்ச்சி பற்றிச் சமீபத்தில் வந்தவிடத்து இன்சொற் சொல்லுதலும், அவ்வினசொற்பற்றி உடன்பட்டபோது உபசாரஞ் செய்தலும் என்ற விருந்தோம்புவார்க்கு அவசியமிருக்கவேண்டிய மூன்றனுள் முதலாவதாகிய முகமலர்ச்சி யில்லாதபோது விருந்தினர் தூரத்திலிருந்தே முகம்வாடிநீங்குதலால் நீண்டிய விடத்தல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரா யிருப்பரென்பதாம். இதனால் விருந்தோம்புவார்க்கு முதலில் முகமலர்ச்சி வேண்டுமென்பது சொல்லப்பட்டது.

(க-து). விருந்தினர் தம்மை இல்வாழ்வார் முகம்வேறுபட்டுப் பார்த்தபோது தாமும் முகம்வேறுபட்டு நீங்கிப்போவர் என்பது.

10. As the Anicham flower fades in smelling, so fades the guest when the face is turned away.



ஆறும் அதிகாரம்.

இனியவைகூறல்—On Sweetness of Speech.

பரி.—அஃதாவது மனத்தினுக்கு உவகையை வெளிப்படுப்பனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இதுவும் விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின் பின் வைக்கப்பட்டது.

¶ அனிசை மென்பது ஒரு மரவிசேடம்; அஃதீன்ற அதன் பூவிற் காதலின் பொருளாகு பெயராம்.

$ "வந்த விருந்து மலாத வதன சோக்கு முன்முழையு
மந்த வடைவா லகத்தன்பை யுலர்ந்த முகத்தான் வெளிப்படுத்திச்
சந்த மணிவா யினுந்தோன்றச் சற்றும் வஞ்சக் கலவாமே
யுள்ளுஞ் சுவையின மொழியென்று மூரைத்தல் வேண்டும் பயன்மே
[ண்டின்"—.விநாயகபுராணம்.

‡ அவை பற்றி என்றும் பாடமுண்டு.

தெளி.—அஃதாவது மனத்திலுள்ள மெய்ச்சியை வெளிப்படுத்த வல்லவிய இனிய சொற்களைச் சொல்லுதலாம். இதனும் விருந்தோம்பு வார்க்கு அவசியம் வேண்டியதாகலின், விருந்தோம்பலின் பின் வைக்கப் பட்டது.

க. இன்சொலா லீர மினிதிப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டாவாய்ச் சோல்.

பரி.—(இ-ள). இன்சொலாவன அன்போடே கலந்து வஞ்சனை யிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்த்தார் வாயிற் சொற்கள், (எ-று).

† ஆல் - அசைநிலை. அன்போடு கலத்தல் - அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை - வாபமை. மெய்புணர்த்தார் ' தெஞ்சிற் செல்லாஞ் செம்மை புடைத்தாய்த் தோன்றலின், அறம் ' செம்பொருள் ' எனப்பட்டது. இலவாஞ்சொல்லென இயையும். ‡ வாபென வேண்டாது கூறினார்; நீபசொற்பயிலா வென்ப தறிவித்தற்கு. இதனுன் இன் சொற் லெக்கணம் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). இன்சொல் - இனியசொற்களாவன, ஈரமோ இ- அன்போடு கலந்து, படிறிலவாம் - வஞ்சனை யிலவாதனவா யிருக்கின்ற, செம்பொருள் - அறத்தினை, கண்டார் - அறிந்தவர்கள், வாய்சொல் - வாய்ச்சொற்களாகும், (எ-று).

ஆல் - அசை. அன்போடு கலத்தல் - அன்புடைமையை வெளிப் படுத்தல். படிறின்மை - மெய்ம்மை மெய்புணர்ந்தவர் மனத்துக் கெல்லாம் செம்மையுடையதாயத் தோன்றலால், அறம் ' செம்பொருள் ' எனப்பட்டது. இலவாஞ் சொல்லெனக்கூட்டுக. நீபசொற்களைக் கூறுதன் என்பதறிவித்தற்கு வாய் எனவேண்டாது சொல்லினர். இதனுல் நூனிய சொல்லுக்கு இலக்கணம் சொல்லப்பட்டது

† ஆல் - சொல்லல் எனபதிலுள்ள ஆல்.

‡ கண்டாய்சொல் என்பதே போதுமானதாயிருக்க வல்லாதகூறுது. வேண்டுதலில்லாத ' வாய் ' என்பதனைக் கூட்டிக் ' கண்டாய்வாய்சொல் ' எனக் கூறியது ' நீபசொற்பயிலா ' எனத் தான்வேண்டியதை முடித்தற் கென்க. இதனை " ஒழுக்க முடையவர்க் கொல்லாவே நீபு, வழுக் கியும் வாயாற் சொலல் " என்னுக் குறளுரையில் " சொல்லையே அமைந்திருக்க ' வாயால் ' எனவேண்டாத கூறினர்; கல்லசொற்கள் பயி ன்றதனைத் தாம் வேண்டியகை நெட்டு முடித்தற்கு " என்றும், " தூய் தாரிற் றாய்மையுடையர் " என்னுக் குறளுரையில் " வாய் எனவேண்டாத கூறினர்; நீபசொற்கள் பயின்றதனைத் தாம் வேண்டியதனிழிபு முடி த்தற்கு " என்றும் கூறுவதாலுணர்க. இவ்வாற வேண்டாதசொல்லுஞ் சொல் விதப்புச் சொல்லெனப்படும். " விதப்புச் சொல் வேண்டியது மினைக் ரு " என்பது சூத்திரம்.

(க-து). அறத்தினே யறிந்தவாது வாய்ச் சொற்களே இனிய சொற்களாம் என்பது.

1. Sweet words are those which imbued with love and free from deceipt flow from the mouth of the virtuous.

உ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னுகப் பெறின்.

பரி.—(இ-ள). நேர்க்கவத்து ஒருவற்கு வேண்டிய தோருபோரு ளாக்கிக்கொடுத்தலினும் நன்று, கண்டபொழுதே முகமினியனாய் அதனேடு இனிய சொல்லையு முடையனுகப பெறின், (எ-று).

† இன்முகத்தோடு கூடிய இனசொல் ஈதல்போலப் பொருள்வயத் தனன்றித் தன்வயதத தாயினும், அதனெஞ சுடையார்க்கல்ல தியல்பாக வின்மையின், அதனினும் அரிதெனறுங் கருத்தான் 'இன்சொலனுகப் பெறின்' என்ருர்.

நேளி.—(இ-ன்). முகனமர்ந்து - (கண்ட பொழுதே) முகமலர்ச்சி யுடையவனுய், இனசொலனுக - (அதனேடு) இன்சொல்லையு முடையவ னுக, பெறின்-(ஒருவன்) பெற்ருல் (அது), அகனமர்ந்து - மனமகிழ்ந்து, ஈதலின் - (ஒருவனுக்கு வேண்டியதொரு பொருளைக்) கொடுத்தலினும், நன்று - நலலதாம், (எ-று).

முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல் கொடுத்தல் போலப் பொருள் வசத்ததாகாமல் தன்வசத்ததாயிருந்தாலும். அவ்வின்சொல் தருமசிந்தை யுடையவர்க் கல்லது பிரர்க்குச சுபாவமாக விராதாகையால். அக்கொடுத்த லினும் இன்சொற்சொல்லுதல் அரிதென்றுகருததால் 'இன்சொலனு கப்பெறின' என்ருர்.

(க-து). ஒருவன் முகமலர்ந்தினிய சொற்களேச் சொல்லுவா னுயின், அவனேதொருவனுக்கு மனபகிழ்ந்து பொருளைக்கொடுத்தலி னுஞ்சிறந்ததாம் என்பது.

2. Sweet speech, with a cheerful countenance is better than a gift made with a joyous mind.

ஊ முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
மின்சோ லினதே யறம்.

† "சுகை யரிதெனினு மின்சொலினு கூடாத
லோகோ கொடிததனினுமம்மா".—நீதிநெறிவிளக்கம்.

பரி.—(இ-ன்). கண்டபொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி, பின் நண்ணியவழி மனத்துடனுகிய இனிய சொற்களைச் சொல்லுதலின் கண்ணதே அறம், (எ-று).

† ஈகை யென்னும் வினையெச்சம் இன்சொலை அடையடுத்து நின்ற வினைத் தொழிற்பெயர் கொண்டது. § அறம் ஈதலின் கண்ணதன்றென்றவாறு. இவை யிரண்டு பாட்டானும் இனமுகத்தோடு கூடிய இன்சொல் முன்னரே பிணித்துக் கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்தென்பது கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). அறம் - தருமமானது, முகத்தானமர்ந்து-(கண்டபோதே) முகத்தால் விரும்பி, (முகமலர்ச்சி காட்டி), இனிதுநோக்கி-இனிதாகப் பார்த்து, (பின்சோர்வு விடத்து), அகத்தானும் - மனத்துடனுமிய, இன்சொலினதே-இனிய சொற்களைச் சொல்லுதலினிடத்ததே, (எ-று).

ஈகையென்னும் வினையெச்சம் இன் (இனிமை) என்னு மடையடுத்து நின்ற சொல்லென்னு முதனிலைத் தொழிற்பெயரைக் கொண்டது. அறமானது இன்சொல்லினிடத் துண்டாவதன்றி ஈகையினிடத்துண்டாதன் றென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல் முன்னதாகவே விருந்தினரைப் பற்றிக் கொள்ளுதலால் விருந்தோம்புதலிற் சிறந்ததென்பது சொல்லப்பட்டது.

(க-து). அறம் இன்சொல்லினிடத்ததே யாம் என்பது.

3. Sweet speech, flowing from the heart, (uttered) with a cheerful countenance and a sweet look is true virtue.

ச. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

பரி.—(இ-ன்). எல்லாரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லை யுடையார்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் நல்கூர்வு இல்லையாம், (எ-று).

ஈ முதலிய பொறிகள் கை முதலிய புலன்களோ டொராசை யுடைமையின் ‡ 'துவ்வாமை' என்றார். யார்மாட்டும் இன்புறூஉ மின்சொ

† ஈகை யென்னும் வினையெச்சம் இன்னென்னுமடையடுத்து நின்ற சொல்லென்னு முதனிலைத் தொழிற்பெயர் கொண்டது என்றும் பாடமுண்டு.

§ இன்சொல் வினையினது மீதலே யித்தாக, வண்சொற் கினைட்டு வாய்மை பெருவட்டி, பண்புரீர் பயிற்றி யறக்கறி சினவோர், பைங்கூழ் நெடுவேய்செய்.—அறநெறிச்சாரம்.

‡ துப்பு - அனுபவம், துவ்வாமை—அனுபவியாமை; பாலே, அது வதுமையாயிற் றென்க.

லவர்க்குப் பகையும் சொதமறு மின்றி உன்னத கண்பேயாம்;ஆகவே,அவர் எல்லாச் செல்வமும் மெய்தலவென்பது கருத்து.

தேவி.—(இ-ன்). யார்மாட்டும் - எல்லாரிடத்தும், இன்புறஉம்-இன் பத்தை மிகச்செய்யும், இன்சொலவர்க்கு-இனியசொற்களே யுடையவர்க்கு, துன்புறஉம் - துன்பத்தை மிகச்செய்யும், தல்வாமை - வறுமையானது, இல்லாகும் - இல்லேயாம், (எ-று).

நாமுதலிய இக்கிரியங்கள் கலைமுதலிய விஷயங்களே யனுபலியா மையை யுடைமையால் வறுமையைத் 'தல்வாமை' என்றார்.யாவரிடத்து மின்பத்தைமிகச்செய்யும் இன்சொல்லையுடையவர்களுப்பகையும்சொதமறு மில்லாது இருப்பது நட்பேயாம்; ஆகவே,அவர் எல்லாச் செல்வமும் பெற வரென்பது கருத்து.

(க-து). இன்சொல்லுடையவர்க்கு வறுமை யுண்டாவதில்லை.

4. Sorrow-increasing poverty shall not come upon those who use in all cases pleasure-increasing sweetness of speech.

இ. பணிவுடைய னின்சொல னுதல லோருவற்
கணியல்ல மற்றுப் பிற.

பரி.—(இ-ன்). ஒருவனுக் கணியாவது தன்னும் ‡ நுழப்படுவார்கட் காழ்ச்சியுடையனுய் எல்லார்க்கணும் இனியசொல்லையுழையனதல்; (இவை யிரண்டேயன்றி மேய்க்கணியும் பிறவணிகள் அணியாகா,(எ-று).

இன்சொல னுதற் னெமாகலின், பணிவுடைமையும் உடன் கூறினர். மற்ற - அசைநிலே. வேற்றுமையுடைமையால் 'பிற' எனவும், இவை போலப் பேரழகு செய்யாமையின் 'அல்ல' எனவுங் கூறினர். இவை யிர ண்டு பாட்டாலும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட் டது.

தே.—(இ-ன்). ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - ஆபரணமாவது, பணிவுடையன்-(தன்னுல் வணங்கப்படும்பெரியாரிடத்து)வணக்கமுடைய வனுகி, இன்சொலனுதல் - (எல்லாரிடத்தும்)இனிய சொல்லையுமுடைய னுதலாம், பிற-(இவ்விரண்டு மல்லாமல் உடம்பில் அணியும்) மற்றை யாபரணங்கள், அல்ல - ஆபரணங்களாகாவாம், (எ-று).

ஒருவன் இன்சொல்லுடையவ னுவதற்கு இனமாயிருப்பதாலல் பணிவுடைமையும் உடன் கூறினர். மற்ற-அசை. தன்னின் வேறு பிருக் கையால் அணியும் ஆபரணங்களேப்'பிற' எனவும், இவைபோலப் பேரழகு செய்யாமையால்'அல்ல'எனவும்சொல்லினர். இவை பிரண்டு பாட்டாலும்

---

‡ நாழப்படுவார் - அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தம்மூன் னோர், தந்தை, தாயென்னுமிவர்.

இவைபோல - பணிவுடைமையும் இன்சொல்லும் போல.

இனியசொற்களைச் சொல்லுவார்க்கு வரும் இம்மைப் பயன் சொல்லப் பட்டது.

(க-து). ஒருவனுக்காபரணம் பணிவுடைமையுமின்சொல்லு மாம் என்பது.

5. Humility and sweetness of speech are the ornaments of man, all others are not (ornaments).

கூ. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
காடி யினிய சோலின்.

பதி.—(இ-ள்). பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ் சொற்களை மனத்தாலே ஆராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுவானேயா, அவனுக்கு பாவங்கள் தேய அறம் வளரும், (க-று).

தேய்தலாவது தன் பகையாகிய அறம் வளர்தலின் தனக்கு கிலேயின்றிமெலிதல். † "தவத்தின்முனைவில்லாதாம் பாவம்" எனபதனாலும் ‡ இப்பொருட்டு. நல்லவை காடிச சொல்லுக காலுங் கடியவாகச சொல்லின், அதனாற் றென்பதாம். இதனுள் மறைப்பயன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). நல்லவை - (பொருளாற் பிறர்க்கு) நன்மையைத தருஞ் சொற்களே, காடி - (மனத்தால்) ஆராய்ந்து, இனிய - இனிமையுள் ளனவாக, சொலின் - (ஒருவன்) சொல்லுவானேயின், (அவனுக்கு), அல் லவை - பாவக்கள, தேய-குறைய, அறம்-தருமமானது, பெருகும் - வள ரும், (எ-று).

பாவம் தேய்தலாவது தன்பகையாகிய அறம் வளர்தலால் தனகு இருப்பிடமில்லாது வாதேல். கலகசொற்களேயுமொருவன் மனத்தாலாராய்ந்து சொல்லுகிடத்தும் கடினமாகச சொல்லின், அஃது அறமாகா தெனப தாம். இதனுள் மறைமைப்பயன் சொலலப்பட்டது.

(க-து). இன்சொற் கூறபவனுக்குப பாவங்குறையப் புண் ணியம வளரும் என்பது.

6. If a man while seeking to speak usefully, speaks also sweetly, his sins will diminish and his virtue increase.

எ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

பதி.—(இ-ள்). ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையு முண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும், பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப்பண்பி னின்றும் நீங்காத சொல், (எ-று).

† காலடியார் குறவு—க. இதன்பொருள் (ஒருவன்செய்த) தவம் வினைருமிடத்து (அவன்முன்செய்த) நீவினையானது (அவனிடத்து) நிற்கமாட்டாது (ஒழியுமென்றபடி) என்பது.

‡ இப்பொருட்டு - இவ்வர்த்தத்தை யுடையது.

நீதி - உலகத்தோடு பொருந்துதல். § பண்பென்பது கண்டிதரைத் தான் இனிமையே விள்ளது. ¶ தலைப்பிரிதல் ஒருசொல்லீற்றமைத்து.

* தேவி.—(இ-ள்). பயனின்ற (பொருளினும் பிறர்க்கு) கன்மை யைக் கொடுத்து, பண்பின்-(இனிமைக்) குணத்தினின்றும், தலைப்பிரிய-தீங்கால, சொல் - சொற்கள் (ஒருவனுக்கு), பயனின்ற - (இம்மைக்கு) நீதியையும் உண்டாக்கி, கன்றிபயக்கும் - (மறுமைக்கு) அறத்தையும் தரும். (எ-று).

நீதி - உலகத்தோடொட்டவொழுகுதல். பண்பென்பது இவ் வெளிய வை கடறென்று மதிகாரத்தால் இனிமைமேல் ஏற்றது. தலைப்பிரிதல் - ஒருசொல்.

(க-து). *இன்சொற் கூறுபவன் இம்மைக்குரிய நீதியையும் மறுமைக்குரிய தருமத்தையும் உடையவனுவன் என்பது.*

7. That speech which, while imparting benefits, ceases not to please will yield righteousness (for this world) and merit for the next world.

கூ சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

பரி.—(இ-ள்). பொருளாற் பிறக்கு தோய் செய்யாத இனிய சொல் ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும், (எ-று).

மறுமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மையின்ப மாவது உலகம் தன்வயத்த தாகலான் எல்லை வெய்தி இன்புறுதல்.

இவை யிரண்டொட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலி யுறுத்தப்பட்டது.

---

§ உருவ முதலியவற்றையுணர்த்தும் பண்பென்னும் பொதுப்பெயர் இங்கு இனியவை கூறலென்னு மதிகாரத்திற்கேற்ப இனிமையென்னும் சிறப்புப்பண்பி (குணத்தி)ன் மேல் ஏற்றது. அதிகாரத்தால் வருவித்து முடிப்பதினு மூடனுரை அதுவுங்க வென்பர். இதன் விரிவை இலக்கணச் சோற்றின் " அதிகாரத்தா லவாய்வே தன்னும்" என்னுஞ் சூத்திரவுரை யிற் காண்க.

¶ தலைப்பிரித லென்பது இரண்டு சொல்லைத் தொன்றினுஞ் சிலிர்ன்றி நீங்குதலென்று மொருபொருளே புணர்த்தலின் ஒரு சொல் லின் தன்மையை யுடையதாம். ஈண்டுத் தலையென்பது பொருளுணர்த் தாது நின்ற வுபசர்க்கம்.

* நிறைமை - குணம். அது சிறுசொல்லின் பயனுதலால் 'நிறைமை நீங்கிய வின்சொல்' [(சொல்) தேகுவகிய) குணத்தினின்றும் நீங்கிய வினியசொல்] என்று கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). தொகையுணர்வில்லை-(பொருளிஞற் பிறர்க்கு) கோய் செய்யாத, இன்சொல் - இனியசொற்கள் (ஒருவனுக்கு), மறமையுமிம்மை யும் - மறமை யிம்மையென்னுமிருமையிலும், இன்பம்-இன்பத்தை, தரும்-கொடுக்கும், (எ-று).

மறமையின்பமிம்மையின்பத்திலும்பெரிதாமாகலின்,மூன்புமறமை சொல்லப்பட்டது. இம்மை இன்பமாவது உலகத்தார் தன் வசப்படுதலால் கல்லனவற்றையெல்லாமடைதது இனபமடைதல். இவையிரண்டு பாட்டா லும் இருமைப்பயனகளும் ஒருசோ அடைதல் உதறி செய்யப்பட்டது.

(க-து). இன்சொற்க ளுடையவனுக் கிருமையிலும் இன்ப முண்டாம் என்பது.

8. Sweet speech, free from harm to others, will give pleasure both in this world and in the next.

கூ இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பரி.—(மு-ள்). பிறர் கூறிய வின்சொல் தனக்கின்பம் பயத்தலை அனுபவித் தறிகின்றவன், † அது நீங்கப பிறமாட்டு வன்சொல்லைச் சொல்லுவது என்னபயன் கருத்து, (எ-று).

இனிதென்பது வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இன் னாதாகலின், அது கூறலாகா தென்பது கருத்து.

தெளி.—(இ-ன்). இன்சொல்(பிறர்சொல்லிய)இனியசொற்கள், இனி தின்றல்-(தனக்கு) இன்பத்தருதலை, காண்பான்-அனுபவித்தறிகின்றவன், (அதனிற்க), வன்சொல் - கடுஞ்சொற்களை, வழங்குவது - (பிறரிடத்து) சொல்லுவது, எவன் - என்னபயனைக் குறித்து, (எ-று).

இனிதென்பது இன்ப மென்னும் பொருளில் வக்தமையின் குறிப்பு வினையாலணையும் பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இனிதன் முதை யால், அக்கடுஞ்சொல்லை சொலலலாகா தென்பது கருத்து.

(க-து). பிறர் கூறிய இன்சொல் தனக்கின்பக் தருதலையறி பவன் பிறரிடத்து வன்சொல்லைச் சொல்லுவதென்னே என்பது.

9. Why does he use harsh words who sees the pleasure which sweet speech yields?

கo. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

† அது நீங்க - அவ்வின் சொற்களைப் பேசுதலொழிக்க.

பரி.—(இ-ள்). அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது, பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன் கூறுதல், இனிய கனிகளும் தன்கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாதகாய்களை நுகர்ந்ததனோடொக்கும், (எ-று).

* கூறலென்பதனைத் சொற்களென்பது பெற்றும். † பொருளை விசேடித்துநின்ற பண்புகள் உவமைக்கண்ணுஞ் சென்றன. ‡ இனியகனிக

---

* 'இனிய வுளவாக வின்னாதகூறல்' என்பதில் 'கூறல்' என்ற கூறுவதனால் இனியவென்பது இனிய சொற்களென்றும் இன்னாதவென்பது இன்னாத (கடுஞ்) சொற்களென்றும் பெற்றாம். இங்கு இனிய இன்னாத வென்னும் பெயரெச்சங்கள் தாம் கொண்முடியும் சொற்களை யவாவி நிற்றல்பற்றிச் சொற்கள் என்பன வருவிக்கப் பட்டனவென்க.

† சொற்களென்னும் பொருளை (உபமேயத்தை) விசேடித்து (பிரித்துக்காட்டி) நின்ற இனிய இன்னாத என்னும் (குறிப்புப்பெயரெச்சமாகிய) பண்புச்சொற்கள் முறையே கனியென்னும் உவமானத்தையும் காயென்னும் உவமானத்தையும் விசேடித்து நின்றன என்பது. இதனால் இனியசொற்கள் இன்னாத சொற்கள் என்பனபோலக் கனிகாய் என்பனவற்றையும் இனியகனி இன்னாதகாய் என்ற கொள்ளவேண்டு மென்பதாயிற்றென்க. உவமேய மெனினும் வாணியமெனினும் புகழ் பொருளெனினும், புனலுளியெனினு மொக்கும்; உவமானமெனினும், அவ்வாணியமெனினும், அல்பொருளெனினும், புனலிலியெனினும் ஒக்கும். இதுபற்றி இலக்கணக் கொத்தின் " அற்றொருகருமறி " என்னுஞ் சூத்திரவுரையுள் " இனிய வுளவாக வின்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந் தற்று " என்புழி இனியகனி யின்னாதகாய் எனப்பன்னும் பிரித்துப் பொருத்தலே பண்பு" என்றிருத்தலையுங்காண்க.

‡ ஔவையார் அதியர்கோமான் என்னும் வள்ளலிடத்திருந்து அமிழ்தின் தன்மையையுடைய கருநெல்லிக் கனியைப் பெற்றுண்டதனால் இருநூற்று நாற்பதுவருஷம் ஜீவித்திருந்தாரென்பது கதை. இது புதுமையாக ஈசுவரனைச் செய்புளி 'தொண்டிலைப்ப, பெருமலை விடாதத் தருமிசைச் கொண்ட, சிறியிலை நெல்லித் நீங்களனி குறியா, தாதனின்னகத் தடக்கிச். சாதலீங்க வொருக்கி தனேபே". (இதன்பொருள் - பசுமை நிலைமையையுடைய பெரியமலையிடத்து விடரின்கண் அரிய உசிக்கட்கொள்ளப்பட்ட சிறிய இலையினையுடைய நெல்லியின் இனியபழத்தைப் பெறுதற்கு அரிதென்று கருதாது அதனைப் பெறச் பெருமுற்சியினை மெய்க்குக் கருதி நின்னுயிரையடக்கிசாதலொழிய மெங்கு அமிழ்தாய் என்பது)என்ற ஔவையார் கூறியிருப்பதனாலும், ஈண்டையுரைசிரித்துச் சிறப்புரைத்தப் படையில் "கழற்பூஞ் சாறு கலனிய நெல்லி,யமிழ்தியலீ நீங்களனியெனவைகிய வரவுச் செல்லாது மொளிநிகழ் செம்மே, லரவக் கடற்றானையதிகனும்" என்ற இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்பாடியிருப்பதனாலும் விளங்குமென்க. அதியர்கோமானுக்கு அதிகனென்னும், அதியமான்நெடுமானஞ்சி

சென்றது ஒளவையுண்ட செல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை. இன்ஞ காய்சென்றது காஞ்சிரங்காய்போல நஞ்சாவனவற்றை. வெஞ்சொற் சொல்லுதல் முடிவித்தனர்க்கே யின்ஞசென்பதாம். இவை யிரண்போட்டாலும் இன்ஞத கூறலின் குற்றம் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). இனிய - (அறத்தையுண்டாகும்) இனியசொற்களும், உளவாக - (தனக்கு) உண்டாயிருக்க (அவற்றைச்சொல்லாமல்), இன்ஞத - (பாவத்தையுண்டாக்கும்) வெஞ்சொற்களை, கூறல் - (ஒருவன்) சொல்லுதல், கனி -(இனிய) கனிகளும், இருப்ப - (தன்கையினிடத்து) உண்டாயிருக்க (அவற்றைத்தின்ஞமல்),காய் -(இனிமையில்லாத) காய்களை, கவர்ந்தற்று - தின்பதனோடொக்கும், (எ-று).

கூறல் என்பதனால் (இனிய) சொற்கள் (இன்ஞத) சொற்களென்ப பெறப்பட்டன. சொற்களென்று முகமேயன்ஞத விசேடித்தின்ற இனிய இன்ஞத என்னும் பண்புகள் முறையே கனி காய என்னும் உவமானத்திலுஞ் சென்றன. இனியனவின்சென்றது ஒளவையுண்ட செல்லிக்கனிபோல் அமிர்தமாவனவற்றை. இன்ஞதகாய்சென்றது எட்டிக்காய்போல நஞ்சாவனவற்றை. வெஞ்சொற் சொல்லுதல் முடிவில் தனக்கே இன்னாதென்பதாம். இவையிரண்டு பாட்டாலும் வெஞ்சொற் சொல்லுதலின் குற்றஞ் சொல்லப்பட்டது.

(கு-து). இன்சொற் கூறுத வன்சொற் கூறபவனுக்கு இன்ப முண்டாகாது துன்பமுண்டாம் என்பது.

10. To say disagreeable things when agreeable are at hand. is like eating unripe fruit when there is ripe.

வெற்றம்,செம்மனஞ்செல்றம். அஞ்செ என்றம்பெயருண்டு இவ்வாறன்றி, காலிரிப்பூம் பட்டினத்திருந்த பத்தனென்றுமோர் வைசியன்வியாபார விஷயமாகக்கடல் யாத்திரைசெயும்போது தனிசேடனது சூழ்ச்சியால்கடலுக்குள்ளே சென்ற,தனிசேடன்மகோ(ரக கன்னியை)மணம்புரிந்து,அக்குப் பன்னிரண்டு வருடமிருந்த, தனிசேடனிடத்திருந்த அனேகவித்த வகைத்தினங்களும் பூஷணங்களும்,போர்த்துக்கொள்ளின் இமை மாறுதிருக்கத் தக்கதொருபொற்படாமு(சூடையு)ம், உண்டால்தீராகலம்உயிர்வாழுத்தக்க தொரு கருசெல்லிக்கனியும்பெற்ற,காலிரிப்பூம பட்டினம் வந்து, தான்பெற்றவர் துன்னுவற்றுள் ஒன்ஞன கருசெல்லிக் கனியிற்பாதியை யரசனுக்குக் கொடுத்து, மற்றைப்பாதியையும் பொற்படாத்தையும் தன்மேல் வருமணிமாலையும் அர்தாநியும்பாடிய ஒளவையார்க்குக்கொடுத்து வாழ்ந்தனன் என்ஞமொரு கதையுமுண்டு. பத்தனிடத்திருந்த கருசெல்லிக் கனியைப் பெற்றவரசன் அதியமோமானென்றும், அவ்வதியர் கோமான் பத்தனிடத்துப் பெற்ற கருசெல்லிக்கனியிற் பாதியையே ஒளவையார்க்குக் கொடுத்தனென்றும் கூறவருவார்.

ஏழாவது அதிகாரம்.

செய்ந்நன்றியறிதல்—On Gratitude.

பரி.—அஃதாவது தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு § உய்தியில் குற்றம் செய்தி நன்றி கோறலேயாகலின், ‡ அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டே, இஃதினியவை கூறலின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமை. இனிய சொற்களைச்சொல்லி இல்லறத்தின் வழுவாதவர்க்கு உய்தியில்லாத குற்றம் செய்நன்றியை மறத்தலேயாதலின், அதனைப் பாதுகாத்து நீக்குதற்பொருட்டே, இஃது இனியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.

க. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

பரி.—(இ-ள்). தனக்கு முன் நேரந்தவியுந் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்தவுதவித்த மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறுக்கொடுத்தாலும் ஒத்தலரிது, (எ-று).

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையன வாதலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாவின. செய்யாமைச் செய்த வுதவியென்ற பாடமோதி ‡ மறித்தலை மாட்டாமை புன்னலிடத்துச் செய்தவுதவியென் றுரைப் பாரு முளர்.

தெளி.—(இ-ள்). செய்யாமல்-(தனக்குமுன் நேருதவியும்) செய்யாதிருக்க, செய்த - (ஒருவன்பிறனுக்குச்) செய்த, உதவிக்கு— உபகாரத்திற்கு, வையகமும் - மண்ணுலகத்தையும், வானகமும் - விண்ணுலகத்தையும், மாற்றல் - சுடாகக் கொடுத்தாலும் (ஒத்தல்), அரிது - கூடாது,(எ-று).

பிரதியுபகாரங்களெல்லாம் காரணமுடையனவாதலின், காரணமில்லாத வுபகாரத்திற்கு அவை பொப்பாகாவாவின.

(க-து). *தனக்குபகாரஞ் செய்யாதவனுக் கொருவன் செய்த வுபகாரத்திற் கொப்பாகத் தாத்தக்கது ஒன்றுமின்மும் என்பது.*

1. (The gift of) heaven and earth is not an equivalent for a benefit which is conferred where none had been received.

---

§ உய்தியில்குற்றம் - பிராயச்சித்தத்தா லொழிதலில்லாத பாவம்.

‡ அதனைப்பாதுகாத்துக் கடிதற்பொருட்டே-செய்ந்நன்றி மறத்தலைத் தம்மிடத் தணுகவொட்டாது விலக்கும் நிமித்தம்.

‡ மறித்தலை மாட்டாமை புன்னலிடத்துச் செய்தவுதவி - பிரதியுபகாரஞ்செய்தற்பொலைமையுள்ள (ஏழைகள்) இடத்துச் செய்தவுபகாரம்.

உ. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

பரி.—(இ-ள்). ஒருவனுக் கிறுதிவந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம், † தன்னை நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினு மிகப்பெரிது, (எ-று).

அக்கால நோக்கு தல்லது பொருணோக்கலாகா தென்பதாம். * காலத்தினாலென்பது வேற்றுமை மயக்கம்.

தெளி.—(இ-ள்). காலத்தினால்-(ஒருவனுக்கு ஆபத்துவந்த)அளவில், செய்த - (ஒருவன்) செய்த, நன்றி-உபகாரமானது, சிறிதெனினும்(தன்னை நோக்கச்) சிறிதாயிருந்தாயினும், (அக்காலத்தை நோக்க),ஞாலத்தின்-நிலவுலகத்தினும், மாணப்பெரிது - மிகப் பெரிதாம், (எ-று).

ஆபத்துவந்த அக்காலத்தை நோக்கவேண்டுவ தல்லாமல் தன்னிடத்துள்ளபொருளை நோக்கலாகா தென்பதாம். காலத்தினா லென்பது காலத்தில் என வந்தமையின் வேற்றுமைமயக்கம்.

(கு-து). ஒருவன் துன்பம்வந்த காலத்திற் செய்த வுதவி சிறிதாயினு மக்காலத்தை நோக்க அது நிலவுலகினும் பெரிதாம் என்பது.

2. A favour conferred in the time of need, though it be small (in itself) is (in value) much larger than the world.

ரு. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

பரி.—(இ-ள்). இவரிக் கிதுசெய்தால் இன்னது ‡ பயனாலொன்று ஆராய்தல் இலராய்ச் செய்த வுதவியாகிய சார்பினையுடைய நூலாயின், அதனன்மை கடலினும் பெரிதாம், (எ-று).

இவை மூன்று பாட்டானும் முறையே காரணமின்றிச் செய்ததூஉம் காலத்தினாற் செய்ததூஉம், பயன் றூக்காராய்ச் செய்ததூஉம் அளவில வாதல் கூறப்பட்டது

† தன்னை நோக்க- அவன் தனதுடைய பொருளைப் பார்க்க.

* காலத்தினால் என்பதிலுள்ள மூன்றனுருபு தனக்குரிய பொருளில் வாராது ஏழனுருபிற்குரிய இடப்பொருளில் (காலத்தில் என) வந்தமை பற்றி 'காலத்தினா லென்பது வேற்றுமை மயக்கம்' என்றுகூறப்பட்டது. வேற்றுமைமயக்க மெனினும் உருபு மயக்கமெனினு மொக்கும். அஃதாவது தன்பொருளிற் றீர்ந்து பிறிதோருருபின் பொருட்டாதல்.

‡ பயக்கு (தரு) மென்று என்னும் பாடமுண்டு.

தெளி —(இ-ஞ்). பயன்- (இவர்க்கிவ்வுதவி செய்தால் அவரிவ்வுதவியைச் செய்வரென்னும்)பயனே,தூக்கார்-ஆராய்தலிலராய், செய்த—,உதவி-உதவியாகிய, நயன் - அன்புடைமையை, தூக்கின் - ஆராயின், நன்மை - (அவ்வுதவியின்) நன்மையானது, கடலின் - கடலினும்,பெரிது-பெரியதாம்,(எ-று).

இவை மூன்றுபாட்டாலும் முறையே காரணமில்லாமற் செய்ததும், காலதாமினுற் செய்ததும், பிரயோசனத்தை யாராயாதவராயச் செய்ததும் அபாவில்லாதனவாதல் சொல்லப்பட்டது.

(க - து). பின்வரும் பயனேக்கருதாது செய்த வுதவியின் நன்மை கடலினும் பெரிதாம் என்பது.

3. If we weigh the excellence of a benefit which is conferred without weighing the return, it is larger than the sea.

ச. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

பரி.—(இ - ள). தமக்குத் தினையளவிற்றய உபகாரத்தை ஒருவன் செய்தானுயினும் அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின் பயன் தெரிவார், (எ-று).

தினை பனையென்பன சிறுமை பெருமைகட்குத் ‖ காட்டுவன சில வளவை. அக்கருத்தின் பயனுவது அங்ஙனங்கருதுவார்க்குவரும் $ பயன்.

தெளி.—(இ - ள்). தினைத்துணைநன்றி - (தமக்குத்) தினையளவின தாகிய உபகாரத்தை, செயினும் - (ஒருவன்) செய்தானுயினும், (அதனை அவ்வளவினதாக நினையாமல்), பனைத்துணையா-பனையளவினதாக, கொள்வர் - நினைப்பார், பயன்-(அங்ஙினைப்பின்) பயனை, தெரிவார்-அறிபவர், ().

தினை பனை யென்பன சிறுமை பெருமைகளுக்குக் காட்டுவனவாகிய சில அளவைகள். அங்ஙினைப்பின் பயனுவது அப்படி நினைப்போர்க்கு வரும் பிரயோசனம்.

(க-து). பெரியோர் சிறியவுபகாரத்தையும் பெரியவுபகாரமாகக் கொள்ளுவர் என்பது.

4. Though the benefit conferred be as small as a millet seed those who know its advantage will consider it as large as a palmyra fruit.

‖ காட்டுவனவாகிய சிலவளவை யென்றும் பாடமுண்டு. இவ்வளவை உவமான அளவையின் பாற்படும்.

$ பயன் - புகழ் புண்ணியங்கள்.

ரு. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

பரி.—(இ-ள்). கைம்மாறு உதவி * காரணத்தானும் பொருளானுங் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன் செய்த உதவி யளவிற் றன்று; அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதி யளவிற்று, (எ-று).

சால்பு எவ்வளவு பெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென் பார் 'சால்பின் வரைத்து' என்றார். இவை யிரண்டுபாட்டானும் † மூன்று மல்லாத உதவி மாத்திரமும் அறிவார்க்குச் ‡ செய்தவழிப் பெரிதாமென் பது கூறப்பட்டது

தெளி.—(இ-ன்). உதவி-எதிர்செய்யும் உதவியானது, உதவிவரைத் தன்று - (காரணமும் பொருளுங் காலமுமாகிய மூவகையாலுமுன்செய்த) உதவியளவினதன்று, உதவி செயப்பட்டார்-அவ்வுதவியைச் செய்யப்பெற் றுக் கொண்டவரது, சால்பின் வரைத்து - தகுதி யளவினதாம், (எ-று).

சால்பு எவ்வளவு பெரிதாயுள்ளது உதவியும் அவ்வளவு பெரிதாமென் பார் 'சால்பின்வரைத்து' என்றார். இவை யிரண்டு பாட்டாலும் செய்யா மற் செய்தவுதவி முதலிய மூன்றுமல்லாத உதவிமாத்திரமும் அறிவோர் க்கு உதவி செய்த விடத்து அவ்வுதவி பெரிதா மென்பது சொல்லப் பட்டது.

(க-து). உதவிசெய்யப் பெற்றுக்கொண்டவரது மகிழ்ச்சி யளவே யுதவிக் களவாம் என்பது.

காரணமும் பொருளும் காலமுமாகிய மூவகையானும் என்றும் பாடமுண்டு.

† மூன்று மல்லாத உதவி - காரணமில்லாமற் செய்த வுபகாரமும் ஆபத்து வந்த காலத்திற் செய்த வுபகாரமும் பயனே யெதிர் நோக்காது செய்த வுபகாரமுமல்லாத வுபகாரம். அஃதாவது பிறர் செய்த வுபகாரத் தை யேற்றுக் கொண்டவர் அவருக்கு அவர் செய்த வுபகாரத்தினது காரணம் பொருள் காலமென்பனவற்றிற்கேற்பப் பிரதியுபகாரஞ் செய்யாது தமது தகுதிக்கேற்றவண்ணம் பிரதி யுபகாரஞ் செய்தலாம். இதனால் உபகாரம்: காரணமில்லாமற் செய்வதும் ஆபத்து நேர்ந்த காலத்திற் செய் வதும் பயனே யெதிர் பாராது செய்வதும் பிறர் செய்த வுதவிக் கேற்றவண்ணம் பிரதி யுபகாரஞ் செய்யாது அவர் மனங்களிக்கும்படி தமது தகுதிக்கேற்ற வாறு பிரதி யுபகாரஞ் செய்வதுமென நால்வகைத்தா யிற்றென்க. எனவே, காரணங் கருதியும்பொருள் கருதியும் காலங் கருதி யும் செய்யுமுபகாரம் ஒரு பிரயோசனத்தை நோக்கிச் செய்வதா யிருத்த லின் அது நிறைந்ததாகாதென்க.

‡ செய்தவழிப் பெரிதாமென்பது—உபகாரஞ்செய்தவிடத்து அஃது இராமபாணம்போல் மிகுதியாமென்பது.

5. The benefit itself is not the measure of the benefit; the worth of those who have received it is its measure.

சு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் பேப்பாயார் நட்பு.

பரி.—(இ-ள்). துன்பக்காலத்துத் தனக்குப் பற்றுக் கோடாயினாது நட்பை விடாதொழிக; அறிவொழுக்கங்களிற் குற்றமற்றாது கேண்மையை மறவாதொழிக, (எ-று).

கேண்மை - கேளாந்தன்மை. § இம்மைக் குறளி கூறுவார் மறுமைக் குறளியும் உடன் கூறினர்.

தேளி.—(இ-ன்). துன்பத்துள் - துன்பமுண்டாய காலத்தில், துப்பாயார் - (தனக்கு) உதவியானவரது, நட்பு - சினேகத்தை, துறவற்க - விடாதிருக்கக் கடவன், மாசற்றார் - (அறிவொழுக்கங்களிற்) குற்றமற்றவரது, கேண்மை - கேளாந்தன்மையை, மறவற்க - மறவாதிருக்கக் கடவன், (எ-று).

கேளாந்தன்மை - நட்பாந்தன்மை. இம்மைக் குறளிசொல்ல வந்தவர் மறுமைக் குறளியு முடன்சொல்லினர்.

(க-து). துன்பக்காலத் துதவிசெய்தவரது சினேகத்தை விடாதும் குற்றமற்றவரது சினேகத்தை மறவாதும் இருத்தல் வேண்டும் என்பது.

6. Forget not the benevolence of the blameless, forsake not the friendship of those who have been your staff in adversity.

எ. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

பரி.—(இ-ள்). தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்

§ ஒன்றின முடித்தல் தன்னினமுடித்தலென்னு முத்தியால் இம்மைக்குறளியாகிய துன்பத்துட் பேப்பாயார் நட்பு துறவற்க என்று கூறினவர் அதனோடு மறுமைக் குறளியாகிய மாசற்றார் கேண்மையையும் மறவற்க என்று கூறினரென்க. இம்மை - இப்பிறப்பு. மறுமை - வருபிறப்பு; அஃதாவது மரணத்தின்பின் வருகிலே. இவ்விடத்தது சுவர்க்கமாம். மாசற்றார் கேண்மை மறுமைக்குறளி யாமென்பது "இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி, யும்மை யுயர்கதிக் குய்த்தலான் - மெய்ம்மையே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே, நட்டா ரெனப்படு வார்" என்றதெறிச்சாங் கூறுவதனாலு மறியப்படும்.

பிணை § எழுமையினை யுடைய தம்மெழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர், (எ-று).

*எழுமையென்றது * வினைப்பயன்தொடரும் எழுபிறப்பினை; †அது வினையாபதியுட் கண்டது. எழுவகைப்பிறப்பு ‡ மேலே யுரைத்தாம். ¶ விரைவுதோன்றத் 'துடைத்தவர்' என்றார். நினைத்தலாவது துன்பந் துடைத்தலான அவர் மாட்டெதாகிய அன்பு பிறப்புதோறுந் தொடர்ந்து †† அன்புடைய ராதல். இவை யிரண்டு பாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகா தென்பது கூறப்பட்டது.*

தேளி.—(இ-ள்). தங்கண் - தம்மிடத்து (உண்டாகிய), விழுமம் - துன்பத்தை, துடைத்தவர்-நீக்கினவரது, நட்பு-நட்பினை, எழுமை-(வினைப் பயன்தொடரும்) எழு பிறப்பினையுடைய, எழுபிறப்பும் - (தமது) எழு வகைப் பிறப்பிலும், உள்ளுவர் - (நல்லோர்) நினைப்பார், (எ-று).

எழுவகைப் பிறப்பினை மேலே கூறினும். விரைவு தோன்றுமாறு துடைத்தவர்'என்று இறந்தகாலத்தாற் கூறினார். நினைத்தலாவது துன்பத்தை நீக்குதலால் அவரிடத்தணடாகிய அன்பு பிறவிதோறுந் தொடர்

---

§ எழுமையினையுடைய தம்மெழுவகைப் பிறப்பினும் என்பதற்கு நல்வினை தீவினைகளின் பயனுகிய சுகதுக்கங்கள் தொடர்ந்து வரும் ஊர்வன முதலாகிய எழுவகைத் தோற்றமது (பிறப்பினு)ள் யாதாவதொன்றாக மாறிமாறிவருதலே யுடைய தமது எழுபிறப்பினும் என்றுகொள்க இவ்வாறன்றி எழுவகைத்தோற்றத்துள் முறையே ஒவ்வொன்றனது எழுபிறப்பினு மென்றுங்கூறலாம்; அது பொருத்தமாயிற்கொள்க. '' நூறுகோடி கற்பங்களாலும் அஞ்ஞானியின் கனமம் போக மின்றி நாசமாவதில்லை ; ஆனால் செய்த சுபாசுபகன்மங்கள் இனறியமையா தனுபவிகசுத் தக்கன வாம்" என்பது சுருதி.

வினைப்பயன் எழுபிறப்பு வரையிலும் தொடருமென்பது "ஒருமையு ளாமைபோ லேந்தடக்க லாற்றி, னெழுமையு மேமாப் புடைத்து" என்றும், "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி போருவற், கெழுமையு மேமாப் புடைத்து" என்றும் மேல்வருங குறள்களானும விளங்கும்.

† அது - வினைப்பயன் தொடரும் எழு பிறப்பு. வளையாபதி ஐம் பெருங் காப்பியங்களு ளொன்று.

‡ மேலேயுரைத்தாம் என்றது புதல்வரைப்பெறுதலதிகாரம் 2-வது பாட்டி னுரையிற் கூறிய "ஊர்வ பதினென்றும்" என்னுஞ் செய்யுளை.

¶ துடைக்கிறவர் துடைப்பவரென நிகழ்காலத்தாலேனும் எதிர் காலத்தாலேனுங் கூறாது 'துடைத்தவர்' என இறந்தகாலத்தாற் கூறியது விரைவுபற்றி வந்த காலவழுவமைதியாம்.

†† 'குறப்பாவை' என்னும் திருக்கோவையார்ச் செய்யுளில் "பிறப்பா னடுப்பினும் பின்னுந்தன் னத்தகும் பெற்றியரே" என்றிருத்த லிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

ந்து (வர) அன்புடையவராதல். இவ்விரண்டு செய்யுளாலும் உதவிசெய்தவ ரது கட்பினை விட்டலாகாதென்பது சொல்லப்பட்டது.

(க-து). *நல்லோர் தமது துன்பத்தை நீக்கினவரது நினைகத் தைத் தம்மெழுவகைப் பிறப்பிலும் நினைப்பர் என்பது.*

7. (The wise) will remember throughout their seven - fold births the love of those who have wiped away their affliction.

அ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

பரி.—(இ - ள்). ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவ ற்கு அறனன்று; அவன் செயத தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன், (எ-று).

இரண்டும் ஒருவனுற் செயயப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வருத்தக் கூறியவாறு.

தெளி.—(இ - ள்). நன்றி - (ஒருவன்முன்செயத)நன்மையை, மறப் பது—, நன்றன்று - (ஒருவனுகு) அறனல்ல, நன்றல்லது - (அவன்செய்த) தீமையை, அன்றே - செய்தபொழுதே, மறப்பது—, நன்று-அறமாம்;()

இதனால் நன்மையும் தீமையும் ஒருவனுல் செயயப்பட்ட விடத்து அவ் விரண்டனுள் மறப்பதும் மறவாததும் வருத்தச சொல்லியவாறும்.

(க-து). *ஒருவர் பிறர்செய்த நன்றியை மறவாது அவர்செய்த தீமையை மறக்கவேண்டும் எனபது.*

8. It is not good to forget a benefit ; it is good to forget an injury even in the moment (in which it is inflicted).

கூ. கொன்றன்ன வின்னு செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

பரி.—(இ-ள்) தமக்கு முன்றெரு நன்மை செய்தவர் பின்கொன்று லொத்த இன்னுதவற்றைச் செயதாராயினும், அவையெல்லாம் அவர் செய்த நன்மை யொன்றனையும் நினைக்க இல்லையாம், (எ - று).

§ தினைத்தினை பனைத்தினையாகக் கொள்ளப் படுதலின், அவ்வொ ன்றுமே அவற்றை யெல்லாங் கெடுக்கு மென்பதாம். இதனுன் நன்றல்லது அன்றே மறக்குந் திறங் கூறப்பட்டது.

§ 'தினைத்தினை பனைத்தினையாகக் கொள்ளப்படுதலே' "தினைத் தினை நன்றி செயினும் பனைத்தினையாக், கொள்வர் பயன்தெரி வார்" என்னுங் குறளானறிக.

தெளி.—(இ - ன்). (தமக்கு முன்னொருவன்மைசெய்தவர்) கொன்ற ன்ன - (பின்) கொன்றாற்போலும், இன்ன - வெறுக்கப்படுவனவற்றை செயினும்-செய்தாராயினும், அவர்செய்த—, ஒன்றுநன்று - ன்மையொன் றையும், உன்ன - நினைக்க, கெடும்—(அவையெல்லாம்) இல்லையாம் (எ-று).

நினையவு ன்றி பனையவு ன்றியாகக் கொள்ளப் படுதலினால் அவ்வொன்றுமே அவ்வெறுக்கப்படுவனவற்றை யெல்லாம் கெடுக்கு மென் பதாம். இதனால் ன்றல்லதை அன்றேமறக்கும் விதம் சொல்லப்பட்டது.

(க - து). முன்னே ருபகாரத்தைச் செய்தவர் பின் பலதீமை களைச் செய்தாலும் அவை முன்செய்த வுபகாரத்தை நினைக்கக் கெடும் என்பது.

9. Though one inflict an injury great as murder, it will perish before the thought of a single benefit (formerly) conferred.



கஉ. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லே
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பரி.—(இ - ள்). பெரிய வறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தி னீங்கும்வாயிலுண்டாம்; ஒருவன் செய்தநன்றியைச் சிதைத்த மக னுக்கு அஃதில்லை, (எ - று).

பெரிய வறங்களைச் சிதைத்தலாவது * ஆன்முலையறுத்தலும், மக ளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல். இதனைச் செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). எந்நன்றி- எத்தவறங்களை (பெரியவறங்களை), கொன் றார்க்கும்-கெடுத்தவர்க்கும், உய்வு-பாவத்தினீங்கும்வழி, உண்டாம்—உண் டாகும், செய்ந்நன்றி - (ஒருவன்) செய்தவுபகாரத்தை, கொன்றமகற்கு - கெடுத்த மனிதனுக்கு, உய்வு-அப்பாவத்தினீங்கும்வழி, இல்லை—,(எ-று).

பெரிய அறங்களைச்சிதைத்தலாவது பசுவின்முலையையறுத்தலும், மக ளிர் கருவையழித்தலும், அத்தனையைக் கொல்லுதலும் முதலாகிய பாதகங்

* ஆன்முலையறுத்தல் - ஆவின்முலையை யறுத்தல். மகளிர் கருவி னைச் சிதைத்தல் - பெண்களின் கருப்பத்தை யழித்தல். பார்ப்பார்த் தபு தல் - பிராமணரைக் கொல்லுதல் கோஹத்தி (பசுவதை) கௌஹத்தி (கௌ வதை) பிரமஹத்தி (பிராமணவதை) யென வாக்காற்சொல்லவும் படாமை பற்றி ஆன்முலையறுத்தல் என்றற் றொடக்கத்தனவாக மறைத்துக் கூறி னர். இஃது " ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு, மாணிழை மகளிர் கருவைதத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொற்கை யோர்க்கும், வழு வாய் மருங்கிற் கழுவாய் முளவென, நிலம்புடை பெயர்வ தாயினு மொரு வன்,செய்நி கொன்றோர்க் குய்தி யில்லென, வறம்பாடிற்றே யாயிழை களவு" என்ற புறநானூறு(கச) கூறுவதாலு மறிதற் பாற்றும்.

கனச்செய்தல், இதனால் செய்ந்நன்றியை மறத்தலின் கொடுமை சொல்லப்பட்டது.

(க - து). பிறர்செய்த உபகாரத்தை மறந்தவர்கட்கு எவ்வகையானும் பாவத்தில் நீங்கும்வழி யில்லை என்பது.

10. He who has killed every virtue may yet escape; there is no escape for him who has killed a benefit (by forgetting it).

எட்டாவது அதிகாரம்.

நடுவுநிலைமை—*On Equity.*

பரி.—அஃதாவது பகை நொதுமல் நண்பென்னும் மூன்றுபகுதியினும் அறத்தின்வழுவாது ஒப்பநீர்ந்த நிலைமை. ¶ இது நன்றி செய்தார்மாட்டு அந்நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே, அவ்விடத்துத் சிதையலாகா தென்றற்குச் செய்ந்நன்றி யறிதலின்பின் வைக்கப்பட்டது.

தேவி.— அஃதாவது பகைவர் அயலோர் நட்பினரென்னும் மூவகையோரிடத்தும் அறத்தின்வழுவாமல் ஒப்பநிற்கும்நிலைமை. இது நன்றிசெய்தவரிடத்து அந்நன்றியை நினைத்தவிடத்துக் கெடுமன்றே, அவ்விடத்தும் கெடலாகா தென்றற்குச் செய்ந்நன்றி யறிதலின்பின் வைக்கப் பட்டது.

க. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

பரி.—(இ-ள). நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமே நன்று: பகை நொதுமல் நண்பென்னும் பகுதிதோறும் தன்முறைமையை விடாதொழுகப் பெறின், (எ - று).

§ தகுதியுடையதனைத் தகுதியென்றார். † "ஊரானேர் தேவருலம்" என்பது போலப் பகுதியானென்புழி ஆனுருபு ‡ தொறுமென்பதன் பொருட்டாய் நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கத் தருமைதோன்ற நின்றது. இதனுள் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

தேவி.—(இ - ன்). *தகுதியெனவொன்றே - நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே, நன்று—,பகுதியால்-(பகைவர் அயலோர் நட்*

¶ இது - நடுவுநிலைமை.

§ தகுதியை (யோக்கியத்தை) யுடைய நடுவுநிலைமையைத் தகுதியென்றமையின் அது பண்பாகு பெயராம்.

† ஊர்தோறு மொரு தேவகோயில் என்பது பொருள்.

‡ தொறுமென்பதன் பொருட்டாய் நின்றது - தொறும் என்பதன் பொருளதாய் நின்றது . தொறுமென்பது தன்னையேற்ற பெயர்ப் பொருளெல்லும் அப்பெயர்ப் பொருளோ டியையும் பொருளிருப்பது.

பினர் என்னும்) பிரிவு தோறும், பாற்பட்டு - (தன்)முறைமையையிடாது, ஒழுகப்பெறின் - நடக்கப்பெற்றால், (எ-று).

ஏகாரம் - பிரித்து (ஒன்று என்பதனோடு) கூட்டப்பட்டது. தகுதி-ஆகுபெயர். பகுதிபானென்னு மூன்றனுருபு தொறுப்பொருளில் வந்தது. பெறினென்பது அவ்வொழுக்கத்தி னருமைதோன்றநின்றது. இதனால் நடுவுநிலைமையது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). மாறுபாடுத நடுவுநிலைமை அறங்களுள் மேம்பாடுடையது என்பது.

1. That equity which consists in acting with equal regard to each of (the three) divisions of men (enemies, strangers and friends) is a pre-eminent virtue.

உ. செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

பரி.—(இ-ள்). நடுவுநிலைமையை உடையவனது செல்வம் பிறர் செல்வம்போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலை யுடைத்து, (எ-று).

* விகாரத்தாற் றொக்க வெச்சவுடையான, ‡ இறக்குந் தினையும் அவன்றனக்கும எமாப்புடைத்தென்பது பெற்றம். அறத்தோடு வருதலின், ¶ அன்னதாயிற்று. † தான் இறந்துபடினிற்பதாகலின் 'எசசம்' என்றார்.

தேவி.—(இ-ள்). செப்பமுடையவன் - நடுவுநிலைமையை யுடையவனது, ஆக்கம்-செல்வமானது, சிதைவின்றி - (பிறர்செல்வம்போல்) அழிதலின்றி, எச்சத்திற்கும - (அவன்) சுற்றத்தியார்க்கும், ஏமாப்பு - உறுதியாதலை, உடைத்து - உடையதாம, (எ-று).

விகாரத்தினுற் தொக்கு நின்ற எச்சவும்மையால் சாரனவும் அவனுக்கும் உறுதியுடையதென்பது பெறப்படும். அறத்தோடு வருதலால் அப்

* (செப்ப முடையவனுக்கே யன்றி யவனது) எச்சத்திற்கு மென்னு மிறந்தது தழீஇய வெச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

‡ நடுவுநிலைமை யுடையவனுக்கு வரும்பொருள் தருமமார்க்கத்திற்கு விரோதமின்றியதாயிருத்தலின் அதனை(பொருளா)ல் அவனையன்றி யவன் சுற்றத்தியாரும் இன்புறுதல் நிச்சயமாதல் பற்றி ' இறக்குந்தினையும் அவன்றனக்கும் எமாப்புடைத் தென்பது பெற்றம்' என்று கூறப்பட்டது.

¶ அன்னதாயிற்று - (செல்வம்) எச்சத்திற்கு முரணியாதலே யுடையதாயிற்று.

† தானிறந்தபோதும் மிருந்து நிற்பது தன்சுற்றத்தியாதலின் அச்சுற்றத்தினை எச்சம் (மிருந்து நிற்பது) என்று கூறினர்.

படிப்பட்டதாயிற்று. தானிறந்தவிடத்து எஞ்சி நிற்பதுபற்றிச் சந்ததியை 'எச்சம்' என்றார்.

(க-து). நடுவுநிலைமை யுடையவனது செல்வம் அவன்சந்ததிக்கும் உறுதியாதலையுடையதாம் என்பது.

2. The wealth of the man of rectitude will not perish, but will bring happiness to his posterity.

ரு. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

பரி.—(இ-ள்).—தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும், நடுவு நிற்றலை யொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தைச் அப்பொழுதே ஒழிய விடுக, (எ-று).

நன்மைபயவாமையின் § 'நன்றேதரினும்' என்றார் இச்சத்தலானென்பது இகந்தெனத் திரிந்தது நின்றது. இவை யிரண்டிடாலும் முறையே நடுவுநிலைமையான் வந்தசெல்வம் நன்மை பயத்தலும், ¶ ஏனைச்செல்வம் நீமை பயத்தலுங் கூறப்பட்டன.

தெளி.— (இ-ள்). நன்றேதரினும் - (தீங்கன்றி) நன்மையே தந்தாயினும், நடுவிகந்த - நடுவுநிற்றலை நீங்கலால், ஆக்கம் - உண்டாகின்ற, ஆக்கத்தை - செல்வத்தை, அன்றே - அப்போதே, ஒழிய—நீங்கிப்போக, விடல்-விடக்கடவன், (எ-று).

நன்மையைத் தாராமையால் 'நன்றேதரினும்' என்றார். இகந்தென்னும்வினை இகந்தெனத் திரிந்துநின்றது. இஃதெச்சத் திரிவெனப்படும். இவை யிரண்டிடாட்டாலும் முறையே நடுவுநிலைமையால் வந்தசெல்வம் நன்மையைத் தருதலும் மற்றைய வழியால் வந்த செல்வம் நீமையைத் தருதலுஞ் சொல்லப்பட்டன.

(க-து). நடுவுநிலைமை யில்லாது வருஞ்செல்வம் நன்மையைத்தந்ததாயினு மதனை யப்பொழுதே விடவேண்டும் என்பது.

3. Forsake even in the moment (of acquisition) that gain which though it should bring advantage is without equity.

சு. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

§ நடுவு நிலைமையை விட்டதனு லுண்டாகின்ற செல்வமானது அப்போது நன்மையைத் தருவதுபோலக் காணப்படினும் அனுபவத்தில் நீமையைத் தருவதாகவேயிருத்தலின் 'நன்றேதரினும்' என்று கூறப்பட்டது. தரினும் என்னுமும்மை எதிர்மறைப் பொருளது.

¶ ஏனைச்செல்வம் - நடுவுநிலைமை யின்மையான் வந்தபொருள்,

பரி.—(இ-ள்). இவர் நடுவுநிலைமை யுடையர் இவர் நடுவுநிலைமை யிலரென்னும் விசேடம், அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும், (எ-று).

† தக்கார்க்கு எச்ச மூண்டாதலும் $ தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலை யாகலின், ‡ இருதிறத் தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனால் தக்காரையுந் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). தக்கார் - (இவர்) நடுவுநிலைமையை யுடையவர், தகவிலர் - (இவர்) நடுவுநிலைமையை யில்லாதவர், என்பது - என்னும் விசேஷம், அவரவர் - அவரவருடைய, எச்சத்தால் - நல்ல புதல்வரது இருப்பினாலும் இல்லாமையாலும், காணப்படும் - அறியப்படும், (எ-று).

நடுவுநிலைமையை யுடையவருக்குச் சந்ததி உண்டாதலும், அஃதில்லாதவர்க்கு அஃ தில்லாமற்போதலும் நிச்சயமாதலின், அவ்விருவகையினரையும் அறிதற்கு அவை அடையாளங்களாயின. இதனால் நடுவுநிலைமை யுடையவரையும், அஃதில்லாதவரையும் அறியுமுறை சொல்லப்பட்டது.


(உ-தா). இவர் நடுவுநிலைமை யுள்ளவர் இவர் நடுவுநிலைமை யில்லாதவர் என்பது அவரவர்களது சந்ததியாற் காணப்படும்.

---

† தக்கார்க்கு எச்ச முண்டாதலும்-நடுவுநிலைமையுடையோர்க்கு நல்ல பின்னோக ளுண்டாதலும். $ தகவிலார்க்கு இல்லையாதலும் - நடுவுநிலைமை யில்லாதவர்களுக்கு நல்லபின்னோக ளில்லையாதலும்

‡ இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின - நடுவுநிலைமையுடையாரையும் அஃதில்லாதாரையும் தெரிந்து கொள்ளுவதற்கு அவரவர்க்கு நல்லபின்னோகளிருத்தலும் துஷ்டபின்னோக ளிருத்தலும் அடையாளங்களாயின. (1) இவர்தக்கர் ; நன்மக்களே யுடையரா யிருத்தலின். (2) இவர்தகவிலர்;நன்மக்களேயுடையவராயிராமையின் என்பன ஈண்டலு மானமாம். இவ்விஷயம் மனுதரும சாஸ்திரம் மூன்று மத்தியாயத்தில் "முக்கியமாய் உத்தமமான விவாகத்தாற் பிறக்கும் பின்னோகள் சாதுக்களா யிருப்பார்கள். கிக்கிரத்தக்க விவாகத்தாற் பிரக்கும் பின்னோகள் துஷ்டர் களாயிருப்பார்கள் " என்றும், நான்மணிக்கடிகை "மகனுரைக்குந் தந்தை நலத்தை" "பழியின்மை மக்களாற் காண்க" என்றும் கூறுவதாலு மறியப் படும். இதனால் வித்தின் விசேட குணத்திற்கேற்ப முளையுண்டாவது போன்று அவரவர்களது விசேட குணத்திற்கேற்பப் பின்னோகளுண்டாவ தென்பது பெறப்படுகின்றது. இது (பெருந்திரட்டு) "முக்குணத் தம்மின் மாறி முயங்கிடைத் தந்தைக் கப்போ, தெக்குண முதிக்கும் பின்னோக் கதுகுணம் விளியதாமால்". (குறந்திரட்டு) " தந்தைக் கொத்தக் குணமுதிக் குஞ் சனிக்கும் பொழுதின் மைந்தற்கு, மந்தக்குணமாம் " என்று வரும் பிரயோகங்களா லினிதுவிளங்கும். " செந்நெல்லா லாய செழுமூலை மற்றமச், செந்நெல்லே யாகியீதலா—லந்நெல், வயனிறையக் காய்க்கும் வளைய வூர, மனைறிவு தந்தை யறிவு" என்று நாலடியார் கூறுவதுமதிக.

4. The worthy and the unworthy may be known by (the character of) their offspring.



ரு. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்ரோர்க் கணி.

பரி.—(இ-ள்). தீவினையாற் கேடும் நல்வினையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன ; அவ்வாற்றை யறிந்து அவை காரணமாக மனத்தின்கட் கோடாமையே அறிவான் அமைந்தார்க்கு அழகாவது, (எ-று).

† அவை காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வருவன வாகக் கருதிக் கேடுவாராமையைக் குறித்தும் பெருக்கம் வருதலைக்குறித் தும் ஒருகலைக்க ணிற்றல். $ அவற்றிற்குக் காரணம் ‡ பழவினையே, கோடுதலன்று என உண்மை யுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை அழகு செய்தலின் 'சான்ரோர்க் கணி' என்றார்.

தெளி.—(இ-ள்). கேடும்-(தீவினையினால் பொருள் முதலியன) கெடு தலும், பெருக்கமும் - (நல்வினையினாலை) பெருகுதலும், இல்லல்ல - (யாவருக்கும்) இல்லாதவையல்ல, (முன்னமே அமைந்து கிடந்தனவாம்), (அவ்வழியை அறிந்து), நெஞ்சத்து-மனத்தின்கண், கோடாமை - (அவை காரணமாகச்) சாய்தலில்லாமையே, சான்ரோர்க்கு - (அறிவால்) நிறைந் தோர்க்கு, அணி - அழகாம், (எ-று).

அவை காரணமாகச் சாய்தலாவது அக்கேடும் பெருக்கமும் (பழவினை யினாலே வருது கொண்டிருக்க), இப்போது (செய்யுமுயற்சியால்) வரு வனவாக நினைத்தக கேடுவாராமையைக் குறித்தும், பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒரு பக்கத்திற் சாய்தலாம். அவற்றிற்குக் காரணம் பழ வினையே, சாய்தலல்லவென உண்மை யுணர்ந்து நடுவுநிலை யுடையவரா யிருத்தல் அறிவால் நிறைந்திருத்தலை அழகு செய்தலால் 'சான்ரோர்க் கணி' என்றார்.

(கு-து). எப்போதும் நடுவுநிலைமையினின்றுந் தவறாமையே பெரியோர்க்கு அழகாம் என்பது.

5. Loss and gain come not without cause ; it is the ornament of the wise to preserve evenness of mind (under both).



† அவை - கேடும் பெருக்கமும், $ அவற்றிற்கு-கேட்டிற்கும் பெருக் கத்திற்கும்.

‡ பழவினை - முற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினை. "பல்லாவு ளஞ்சித் விடினுங் குழக்கன்று, வல்லதாற் தாய்நாடிக் கோடலைத் - தொல் லைப், பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த, கிழவனை நாடிக் கொளற் கு" - என்பது நாலடியார்.

சூ. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச•
நடுவோரீ யல்ல செயின்.

பரி.—(இ-ள்). ஒருவன் தன்னெஞ்சம் நடுவுநிற்றலை யொழிந்து நடுவல்ல வற்றைச்செய்ய நினைக்குமாயின், அந்நினைவை யான் கெடக்கட வே னென்றுணரு ‡ முற்பாதமாக வறிக, (எ-று).

நினைத்தலும் செய்தலோடொக்கு மாதலின் 'செயின்' என்றார்.

தெளி.—(இ-ன்). தன்னெஞ்சம் - (ஒருவன்) தனதுமனம், நடுவு - நடுவு நிற்றலை, ஒழி - நீங்கி, அல்ல-நடுவுநிற்ற லல்லாதனவற்றை (பாவச் செயல்களை), செயின்-செய்ய நினைக்குமாயின்(அந்நினைவை),யான் - நான், கெடுவல் - கெடக்கடவன், என்ப தை - என்றுணரு முற்பாதமாக, அறிக - அறியக்கடவை, (எ-று).

யாதாவதொன்றனைச் செய்ய நினைத்தலுமதனைச் செய்தலோடொக்கு மாதலின் 'செயின்'என்றார். நினைத்தல் காரணமும் செய்தல் காரியமுமாம.

(க-து). நடுவுநிலைமையி னின்றுந் தவறினவனுக்குத்தவறுது கேடுண்டாம் என்பது.

6. Let him whose mind, departing from equity, commits sin well consider thus within himself, "I shall perish."

எ. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

பரி.—(இ - ள்). நடுவாக நின்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை வறுமையென்று கருதார் உயர்ந்தோர், (எ-று).

*கெடுவென்பது * முதனிலைத் தொழிற்பெயர். செல்வமென்றுகொள்ளுவரென்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டாலும் முறையே கேடும் பெருக்கமுங் கோதலான் வாரா வென்பதூஉம், கோடுதல் கேட்டிற் கேதுவா மென்பதூஉம், கோடாதவன் தாழ்வு ‡ கேடன் றென்பதூஉம் கூறப்பட்டன.*

தெளி.—(இ - ள்). உலகம் - உயர்ந்தோர், நடுவாக-நடுவு நிலைமையாக (நின்று) நன்றிக்கண் - அறத்தின் கண்ணே, தங்கியான் - தங்கினவனது, தாழ்வு வறுமையை, கெடுவாக - வறுமையென்று, வையாது - வையார் (நினையார்), (எ-று).

---

‡ உற்பாதம் - பின்வரும் நன்மை தீமைகளை முன்னறிவிக்கும் குறி.

* முதனிலைத் தொழிற்பெயராவது பகுதியே தொழிற்பெயர்ப் பொருளதாய் நிற்பது.

‡ செல்வ மென்பதனூஉம் என்றும் பாடமுண்டு.

கெடுவென்பது புடைபெயர்ச்சியையுணர்த்துந் தல் விகுதிகெட்டு வந்தது. (உயர்ந்தோர் நடுவு நிலைமையுடையவனது வறுமையை) செல்வமென்றுகொள்ளுவாரென்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டாலும் முறையே கேடும் பெருக்கமும் நடுவுநிலைமை தவறுதலால் வருவனவல்லவென்பதும், நடுவு நிலைமைதவறுதல் கேட்டிற்குக் காரணமா மென்பதும், நடுவுநிலைமையிற் றவறுதவனது தாழ்வு கேடாகா தென்பதும் சொல்லப் பட்டன.

(க-து). நடுவுநிலைமையோடு தருமவழியிலொழுகுகின்றவனது வறுமையைப் பெரியோர் தாழ்வாக நினையார் என்பது.

7. The great will not regard as poverty the low estate of that man who dwells in the virtue of equity.

அ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

பரி.—(இ-ள்). முன்னே தான் சமனாக நின்று பின்தன்கண்வைத்த பாரத்தை வரையறுக்குந் துலாம்போல, இலக்கணங்களான் அமைந்து ஒரு பக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம், (எ-று).

† உவமை அடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் உவமைக்கண்ணும கூட்டிச், சான்றோர் சீர்தூக்கலாவது ‡ தடைவிடைகளாற் கேட்டவற்றை ¶ ஊழான் உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற் கோடாமையா

† கோலை (தராசுக்கோலை)என்னும உவமானத்தின் அடையா (விசேஷணமா)ன சமன்செய்தலேயுஞ் சீர்தூக்கலேயும் சான்றோரென்னும் உவமேயத்திற் சேர்த்திச் சமன்செய்தலேயும் சீர்தூக்குதலேயு முடைய சான்றோரென்றும், சான்றோரென்னும் உவமேயத்தி (பொருளி)ன் அடையான அமைதலேயும் ஒருபாற் கோடாமையையும், கோலென்னுமுவமேயத்திற் சேர்த்து அமைதலேயும் ஒருபாற் கோடாமையையுமுடைய கோலென்றும் கொள்ளவேண்டுமென்க. எனவே சமன்செய்தலும், சீர்தூக்கலும், அமைதலும், ஒருபாற் கோடாமையு மென்னும் கான்கும் கோலுக்கும் சான்றோர்க்கும் விசேஷணமாயின வென்பது பெற்றாம்.

‡ "தொடைவிடை யூழாத் தொடைவிடை தன்னித்,தொடைவிடை யூழிவை தோலாத்-தொடைவேட், டழிபட லாற்ற லறிமுறையென் றெட்டின், வழிபடுதல் வல்ல தவை" என்பது புறப்பொருள்வெண்பாமாலை. தடைவிடைகளாற் கேட்டவற்றை—ஆட்சேப சமாதானவாயிலாக வாதிப் பிரதிவாதிகளிடத்துக் கேட்ட விஷயங்களை. தடையென்பதற்குத் தொடையென்றும்பாடபேதமுண்டு. தொடையென்பதற்கு ஆட்சேபித்தலென்பது பொருள்.

¶ ஊழான்—அறநூல் கூறிய விதிப்படி. இவ்வாறன்றி ஊழான் என்பதற்கு இயற்கை யறிவால் எனினு மொக்கும்.

வது அல் வுள்ளவாற்றை மறையாது பகை தொதமல் நட்பென்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதலாகவும் உரைக்க. † இலக்கணங்களான் அமைதல் இருவழியும் ஏற்பனகொள்க.

நேனி.—(இ-ள்). சமன்செய்து - (மூன்னேதான்) சமனுகநின்று, சீர்தூக்கும் - (பின்னே தன்னிடத்து வைத்தபாரத்தை) அளவு செய்யும், கோல்போல் - துலாம்போல, அமைந்து - (இலக்கணங்களால்) நிறைந்து, ஒருபால் - ஒருபக்கத்தில், கோடாமை - சாயாமையான தி, சான்றோர்க்கு - (அறிவால்) நிறைந்தோருக்கு, அணி - அழகாம், (எ-று).

உவமானத்தினடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் உவமேயத்தினிடத்தும் உவமேயத்தினடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் உவமானத்தினிடத்தது கூட்டுக. சான்றோர் சீர்தூக்கலாவது (வாதப் பிரதிவாதிகள கூறும்)தடையாலும் விடையாலும் கேட்ட வற்றை முறைமையாகவுள்ளபடி யறிதல். ஒருபாற் கோடாமையாவது அவ்வுள்ளபடியறிந்தவற்றை மறைக்காமல் பகைவர், அயலோர், நட்பனரென்னும் மூவகையோருக்கும் ஒப்பச சொலலுதல். இலக்கணங்களாலமைதல் உவமான வுவமேயமென னுமிரண்டிடத்தும்பொருந்துவனகொள்க. துலாம்-நிறைகோல்.

(க-து). நடுவு நிலைமையை விட்டு ஒருவா பக்கத்திற சார்ந்து பேசாமையே பெரியோர்க் கழகாம் என்பது.

8. To incline to neither side, but to rest impartial as the even fixed scale is the ornament of the wise.



கூ. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

பரி.—(இ-ள்). நடுவுநிலைமையாவது சொலலின்கட் கோடுத லில்லாததாம் ; ‡ அஃதன்னதாவது மனதின்கட் கோடட மின்மையைத் திண்ணிதாகப் பெறின், (எ-று).

† இலக்கணம் (அவ்வியாத்தி யதிவியாத்தி யசம்பவமென்னு மூக்குற்றக்களும் நீங்கிய தன்மை)களால் அமைதல் (பொருந்துதல்) இருவழியும் (உவமானமான கோலினகண்ணும் உவமேயமான சான்றோர் கண்ணும்)ஏற்பன (ஏற்கத்தக்கவைகளோ)கொள்க. ஏற்பனவாவன:—ஐயந்தீரப் பொருளை யுரைத்தல், மிகினும் குறையினும் நில்லாததாகலாம். "துலாகோலியல்பே தூக்குங் காலே, மிகினுங குறையினு நில்லா தாகலு,மையந் தீர்த்தலு நடுவு நிலைமையோ, டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே", " ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலு,மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே"என்னும் சூத்திரங்களும் சண்டறியத் தக்கனவாம்.

‡ அஃதன்னதாவது சொல்லில் கோணுத லில்லாமலிருப்பது. அஃதறமாவது என்றும் பாடமுண்டு.

சொல்- † ஊழான் அறுத்தச்சொல்லுஞ்சொல். (இவையிரண்டு பாட்டானும்) ‡ காரணம்பற்றி ஒருபாற்கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவு நிலைமையாமெனவே, அதனோடுகூடாதாயின அவ்வாறுசொல்லுதல் நடுவு நிலைமை யன்றென்பது பெறப்பட்டது.

தேளி.—(இ-ள்). செப்பம்-நடுவு நிலைமையாவது, சொல் - சொல்லினிடத்து. கோட்டமில்லது - கோணுதலில்லாததாம (அஃதத்தன்மையதாவது), உள் - மனதகினிடத்து, கோட்டமின்மை-கோணுதலில்லாமையை, ஒருதலையா - உறுதியாக, பெறின - பெற்றால், (எ-று)

சொல் - முறைமையாக வழக்கியறுத்துச சொல்லுஞ்சொல், (இவையிரண்டுபாட்டாலும் சபையானது) காரணம்பற்றி யொருபக்கத்திற் சாயதலில்லாத மனத்துடன் கூடுமாஞல் அறங்கிடந்தபடி கூறுதல் நடுவு நிலைமையாமென்று கூறலே, அத்தன்மையதாகியமனத்தோடு கூடாதாஞல் அப்படி கூறுதல் நடுவுநிலைமை யல்லவென்பதுபெறப்பட்டது. (கூறப்பட்டது எண்ணும பாடம்).

(க-து). மனகோட்ட மற்றுச சொல் லினிடத்துக் கோணுதலில்லாமையே நடுவு நிலைமையாம என்பது.

9 Freedom from crooked speech is rectitude if it be accompanied by steady freedom from crookedness within.

கஎ. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

பரி.—(இ-ள). பிறர் பொருளையும் தம்பொருளபோலப் பேணிச் செய்யின், வாணிகஞ்செய்வார்க்கு நன்றய வாணிகமாம், (எ-று).

* பிறவுந தமபோற் செயதலாவது கொள்வது மிகையுங் கொடுப்பது

† ஊழான அறுத்தச சொல்லுஞ் சொல்—அறநூல கூறிய விதிப்படி வரையறுத்துச சொலலுந் தீர்ப்பு

‡ காரணம் பற்றி...பெறப்பட்டது என்பதன் பொருள்(நியாய)சபையார் பகைவ ரெகேரென்னும் காரணம்பற்றி யொருபக்கத்திலும் சார்தலில்லாத மனத்தோடு கூடுவாராயின அவர் அறநூல் விதித்தபட தீர்ப்புச சொல்லுதல் நடுவுநிலைமையாமென்று சொல்லலே, ஒருபக்கத்திலுஞ் சார்தலிலலாத மனத்தோடு அவர் கூடாராயின் அறநூல் விதித்தபடி தீர்ப்புச சொல்லுதல் நடுவுநிலைமையல்ல வென்பது பெறப்பட்டதென்க. இதனுல் அறநூல் விதித்தபடி தீர்ப்புச சொன்னலும் சொல்வாரது மனதில் பட்சபாத மிருக்குமாஞல் அத்தீர்ப்பு நடுவுநிலைமையாகா தென்பது பெற்றும்.

* தமவும் பிறவு மொப்ப நாடிப், கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது, பல்பண்டம் பகர்ந்து வீகம்" என்பது பட்டினப்பாலை.

குறைவுமாகாமல் ஒப்பாகடிச்செய்தல். இப்பாட்டுமூன்றனுள் ‖ முன்னைய விரண்டும் அவையத்தாரை நோக்கின; § ஏனையது வணிகரைநோக்கிற்று. ¶ அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுகச்சிறந்தமையின். (இதனால் நடுவு நிலைமை வகை கூறப்பட்டது).

தேவி.—(இ-ன்). பிறவும் - பிறர்பொருளையும், தமபோல் - தம்முடைய பொருளைப்போல, பேணி-பாதுகாத்து, செயின்-செய்தால், (அச்செய்கையானது) வாணிகஞ்செய்வார்க்கு - வியாபாரஞ் செய்வார்க்கு, வாணிகம் - (கல்ல) வியாபாரமாம், (எ-று).

பிறவுந்தமபோற் செய்தலாவது தாம் கொள்ளும் பொருள் தாங்கொக்கும் பொருட்கு மிகுதியும், தாம் கொடுக்கும்பொருள் தாம் வாங்கும் பொருட்குக் குறைவும் ஆகாமல் பொருந்த வாராய்ந்து செய்தல்.

இச்செய்யுள் மூன்றனுள், முன்னுள்ள விரண்டும் சபையாரை நோக்கினவாம், மற்றது வர்த்தகரை நோக்கியதாம்; அவ்விருவகையார்க்கும் நடுவுநிலைமையென்னுமிவ்வறம் வேறுகச்சிறந்திருத்தலின். (இதனால் நடுவு நிலைமையது கூறுபாடு சொல்லப்பட்டது).

(க-து). பிறர்பொருளையுந் தமது பொருளைப்போலப் பாதுகாத்துச்செய்யும் வியாபாரமே சிறந்த வியாபாரமாம் என்பது.

10. The true merchandize of merchants is to guard and to do by the things of others as they do by their own.

ஒன்பதாவது - அதிகாரம்

அடக்கமுடைமை—Self - Control.

பரி.—(இ-ள்). அஃதாவது மெய், மொழி, மனங்களை நீநெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனுதல். அஃது † தெளிவார்தும்மைபோற் றங் குற்றமுங் காணும் நடுவு நிலைமை யுடையார்க்காதலின், ‡‡ இது நடுவு நிலைமையின்பின் வைக்கப்பட்டது.

‖ முன்னையிரண்டும் அவையத்தாரை நோக்கின ; 'சமன்செய்து' என்னுங் குறளும் 'சொற்கோட்டமில்லது' என்னுங் குறளும் (மீயாய) சபையாரைக் குறித்து நின்றன.

§ ஏனையது—"வாணிகஞ்செய்வார்க்கு" என்னுமிக்குறள்.

¶ அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுகச் சிறந்தமையின் - சபையார் வணிகரென்னு மிருவர்க்கும் இந்த நடுவுநிலைமையாகிய தருமம் வேறுகச் சிறந்திருத்தலின். இதனால் சபையோர்க்கும் வணிகர்க்கும் நடுவு நிலைமை யாவர்னும் மிருதிறமாக வீருக்க வேண்டு மென்பது நின்னமாயிற்று. † புறங்கூறாமை. 10 - வது குறள்.

‡‡ இது - அடக்கமுடைமை யென்னு மிவ்வதிகாரம்.

தெளி.—அசீதாவது காயமும், வாக்கும், மனமும் நியமழியிற் செல்லாமல் அடங்குதலுடையனு யிருத்தல். அவ்வடக்கம் அயலாரது குற்றம் போலத் தமதுகுற்றமுங் காணும் கவுகிலேமை யுடையவருக்கு உரிய தாதலால் இது நடுவுகிலேமையின் பின் வைக்கப்பட்டது.

க. அடக்க ‖ மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

பரி—(இ-ள்). ஒருவனே அடக்கமுகிய அறம் பின் றேவருலகத் துய்க்கும்; அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட்செலுத் தும், (எ-று).

* இருளென்பது ஓர் நரகவிசேடம். ‡ “எல்லாம், பொருளிற் பிறக்து விடும்” என்றாற்போல § உய்த்துவிடுமென்பது ஒரு சொல்லாய் கின்றது.

தெளி.—(இ-ள்). அடக்கம் - (ஒருவனை) அடக்கமாகிய அறமானது, அமாருள - (பின்) தேவருலகத்தில், உய்க்கும் - கொண்டுபோய்விடும், அடங்காமை - அடங்காமையாகிய பாவமானது, ஆரிருள் - வகித்தற் கரிய நரகத்தில், உய்த்துவிடும் - செலுத்திவிடும், (எ-று).

இருளென்பது நரகவகையு ளொன்று. உய்த்துவிடுமென்ப தொரு சொல்.

(க-து). அடக்கமுடையவர் சுவர்க்கத்தையும் அடக்கில்லாதவர் நரகத்தையு மடைவர் என்பது.

‖ அமரர் என்பது மரணமில்லாதவ ரென்னும் பொருளது.

* இருள் என்பது அதற்குத்தானமாகிய நரகத்திற்காதலின் தானி யாகு பெயராம். எஞ்ஞான்றுமிருள் தெருங்கியுள்ள நரகத்திற்கு அதிதமம் என்று பெயர்.

‡ நான் மணிக்கடிகை, எ. இதன் பொருள் போகம் கீர்த்திமுதலிய யாவும் நிரயத்தினுல் பிறக்கும் என்பது. பிறந்துவிடுமென்பது ஒரு சொல்.

§ உய்த்துவிடு மென்பது செலுத்தும் என்னும் ஒருமொழிப்பொரு ளதாயிருத்தல்பற்றி ‘ஒருசொல்லாய் கின்றது’ என்று கூறப்பட்டது. உய்த்துவிடும் என்பதில் உய்த்துவிடு என்பது பகுதி. இதில் விடு தனி வுப்பொருளுணர்த்திற்று. பாவபுண்ணியங்களிரண்டும் இம்மையிலே மனி தர்களால் செய்யப்பட்டுச் செயப்படு பொருள்களாக கிற்பினும், மறுமை யிலே அவை வினைமுதலாக கின்று தம்மைச் செய்தவர்களைச் செயப்படு பொருளாக்கி நரகசுவர்க்கங்களுக் கனுப்புதல்பற்றி ‘அடக்க மமாரு ளுய்க் கும்’ என்றும் “அடங்காமை யாரிரு ளுய்த்து விடும்” என்றும் கூறப்பட் டன வென்க.

1. Self-control will place (a man) among the Gods ; the want of it will drive (him) into the thickest darkness (of hell).

உ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.

பரி.—(இ-ள்). உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை; ஆகலான், அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க.

உயிரென்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மேனின்றது; அறிந்தடங்கிப் பயன்கொள்வது அதுவேயாகலின்.

தெளி.—(இ-ன்). அடக்கத்தை—அடக்கத்தினை, பொருளா - (உறுதிப்) பொருளாக(கொண்டு), காக்க - (அழியாமற்) காக்கக்கடவன், உயிர்க்கு-உயிர்கட்கு, அதனினூஉங்கு- அவ்வடக்கத்தின்மேற்பட்ட, ஆக்கம்-செல்வமானது, இல்லை—,(ஆதலால்), (எ-று).

உயிரென்பது சாதியொருமைப்பெயர் அஃதில்லிடத்து மக்களது உயிரின் மேல் நின்றது; (அறியத்தக்கனவற்றை) அறிந்து மன மொழி மெய்களடங்கிப் பயனெப்பெறுவது அவ்வுயிரேயாதலன்.

(க-து). அடக்கத்தின் மிக்க செல்வமின்மையின், அதனை யழியாவாறு காத்தல் வேண்டுமென்பது.

2. Let self - control be guarded as a treasure; there is no greater source of good for man than that.

ரு. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

பரி.—(இ-ள்). அடங்குதலே நமக்கு அறிவாவதென்று அறிந்து நெறியானே ஒருவன் அடங்கப்பெறின், அவ்வடக்கம் நல்லோரான் அறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும், (எ-று).

இல்வாழ்வானுக்கு அடங்குநெறியாவது மெய்ம்முதன் மூன்றும் தன்வயத்தவாதல்.

தெளி.—(இ-ன்). அறிவறிந்து - (அடங்குதலேநமக்கு) அறிவாவதென்று அறிந்து, ஆற்றின் - நல்வழியாலே, (ஒருவன்), அடங்கப்பெறின் - அடக்கப்பெற்றால், செறிவு - அவ்வடக்கமானது, அறிந்து - (நல்லோரால்) அறியப்பட்டு, சீர்மை - மேம்பாட்டை, பயக்கும் - (அவனுக்குத்) தரும், (எ-று).

இல்வாழ்வானுக்கு அடங்கும் வழியாவது காயமும், வாக்கும், மனமும் தன்வசமாக வாதலாம்.

(க-து). ஒருவன் மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணத்தாலும் அடங்கிநடப்பானாகில் அவ்வடக்கம் அவனுக்கு மேன்மையைத் தரும் என்பது.

3. If a man, knowing that self-control is knowledge, control himself, in the prescribed way such self-control, known by the wise, will bring distinction.



ச. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

பரி.—(இ-ள்). இல்வாழ்க்கையாகிய தன்னோறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி மலையினுயர்ச்சியினும் மிகப்பெரிது. ()

திரியாதடங்குதல் - பொறிகளாற் புலன்களை நுகராதின்றே அடங்குதல். மலை - ஆகுபெயர்.

தெளி.—(இ-ள்). நிலையின் - (இல்வாழ்க்கையாகிய தன்) வழியில் திரியாது - வேறுபடாது (நின்று), அடங்கியான் - அடங்கினவனது, தோற்றம் - உயர்ச்சியானது, மலையினும் - மலையினுயர்ச்சியினும், மாணப் பெரிது - மிகப்பெரிதாம், (எ-று).

வேறுபடாது நின்று அடங்குதல்-செவி முதலிய வைந்திந்திரியங்களாலும் சத்தமுதலிய வைம்புலன்களையும் அனுபவித்தைக் கொண்டிருந்தே அடங்குதல். மலையை முதற்பொருளின பெயர் அதன் பண்பாகிய வுயர்ச்சிக்காதலின் பொருளாகுபெயராம்.

(க-து). *அடங்கி நடப்பவனது மேன்மை மலையி னுயர்ச்சியினும் பெரிதாம் என்பது.*

4. More lofty than a mountain will be the greatness of that man who without swerving from his proper (domestic) state controls himself.



து. எல்லார்க்கு நன்றும் பணித்த லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

பரி.—(இ-ள்). பெருமித மின்றி யடங்குதல் எல்லார்கதும் ஒப நன்றேயெனினும், அவ்வெல்லாருள்ளும் செல்வமுடையார்க்கே வேறு செல்வமாஞ் சிறப்பினே யுடைத்து, (எ-று).

பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்பும் உடையாரஃதின்றி † அவைதம்மானே அடங்கியவழி அவ்வடக்கம் சிறந்து காட்டாதாகலின் 'செல்வர்க்கே செல்வந் தகைத்து' என்றார். ¶ செல்வத்

† *அவைதம்மானே - கல்வியினும் குடிப்பிறப்பினும்.*

¶ *செல்வத்தகைத்து என்பது மெலிக்கும்வழி மெலித்தலென்னும் செய்யுள் விகாரத்தால் செல்வந்தகைத்து என மெலிந்து நின்றது. [ஞகர வொற்று நகரவொற்றாகிய விகாரம்].*

தகைத் தென்பது மெலிந்து நின்றது. † பொதுவென்பாரையும் உடன் பட்டு நின்றே சிறப்பாதல் கூறியவாறு. இவையைந்துபாட்டாலும் பொது வகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). பணிதல் - (பெருமைப்பாடில்லாது) அடங்கு தல், எல்லார்க்கும்—,ன்றும் - (ஒப்ப)ன்றாகும்,(ஆயினும்), அவருள்ளும்- அவ்வெல்லாருள்ளும், செல்வர்க்கே - செல்வ முடையவர்களுக்கே, செல் வத்தகைத்து - (வேறொரு) செல்வமாய்த் தோன்றுஞ் சிறப்பினே யுடைய தாம், (எ-று).

பெருமைப்பாட்டினை (செருக்கினை) யுண்டாக்கும் கல்வியும் குடிப் பிறப்பும் உடையவர் அப்பெருமைப்பாடில்லாமல் அவற்றாலே அடங்கிய விடத்து அவ்வடக்கம் சிறந்து தோன்றுதாகலின் 'செல்வர்க்கே செல் வத் தகைத்து' என்றார். செல்வத் தகைத்தென்பது செல்வத்தகைத்தென மெலித்தல் விகாரமடைந்து நின்றது. அடக்கம் யாவர்க்கும் பொதுவான தருமமாமென்பாரையு மங்ஙனேகிரித்து நின்றே அது சிறப்பாதலைக் கூறியவா றும். இவை பைந்துபாட்டாலும் பொதுவகையால் அடக்கத்தினது சிறப் புச் சொல்லப்பட்டது.

(க-து). செல்வ முடையவரிடத்தே அடக்கம் சிறந்து விளங் கும் என்பது.

5. Humility is good in all ; but especially in the rich it is (the excellence of) a higher riches.

சு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னேழமையு மேமாப் புடைத்து.

பரி.—(இ-ள்). ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம் பொறிகளையும் அடக்கவல்லனாயின், அவ்வன்மை அவனுக்கு ஏழுபிறப் பின்கண்ணும் அரணதலை உடைத்து, (எ-று).

† பொதுவென்பாரையு முடன்பட்டுநின்றே சிறப்பாதல் கூறியவாறு என்பதற்குக் கல்வியுடையார் குடிப்பிறப்புடையார் செல்வமுடையா ரென்னு மூன்று திறத்தினர்க்கும் அடக்கமென்னுங்குணம் பொதுவான தாகு மென்பாரது அபிப்பிராயத்தையு மொப்புக்கொண்டே பொருளுடை யார்க்கே அவ்வடக்கம் இன்றியமையாச் சிறப்பினதாகுமென்று கூறிய விதமாம். இதனால் அடக்கமானது கல்வியுடையாரிடத்தும் குடிப்பிறப் புடையாரிடத்தும் சிறந்துவிளங்காமல்பொருளுடையாரிடத்தேசிறந்துவிள ங்குமென்பது பெறப்பட்டது. பொருளில்லாவிடத்துச் செருக்கு மிகுதற் கேதுவின்மையின் செருக்கு மிகுதற்கேதுவான பொருளுடையாரிடத்து அடக்கமிருப்பின் அவ்வடக்கம் கல்வியுடையாரது அடக்கத்திலும் குடிப் பிறப்புடையாரது அடக்கத்திலும் மேம்பட்டு விளங்குமென்பது கருத்து.


‡‡ ஆமை ஐந்துறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமல் அடக்கவேண்டுமென்பார் ஆமைபோல்' என்றார். ஒருமைக்கட்செய்த வினையின் பயன் எழுமையுந் தொடருமென்பது இதனுணர்க. இதனுள் மெய்யடக்கங்கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). ஒருமையுள் - (ஒருவன்) ஒருபிறப்பினிடத்து, ஆமைபோல் - ஆமையைப்போல, ஐந்து - ஐம்பொறிகளையும், அடக்கலாற்றின் - அடக்க வல்லவனுகில், (அவ்வல்லமை அவனுக்கு), எழுமையும் - எழுபிறப்பின் கண்ணும், ஏமாப்புடைத்து - காவலாதலை யுடையதாம், ()

ஆமையானது தனது கால்கள் நான்கும், தலையொன்றுமாகிய வைந் தவயவங்களையுந்தன்பம் வாராதபடி யடக்கும் விதம்போல இவனும் மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளையும் பாவம் வாராதபடி அடக்கவேண்டு மென்பார் 'ஆமைபோல்' என்றார். ஒரு பிறப்பிற் செய்த வினைப்பயன் எழுபிறப்பிலுந் தொடருமென்பது இதனுலறிக. இதனுல் காயத்தினடக்கம் சொல்லப்பட்டது.

* (க-து). ஒருவன் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனுயின் அவனுக்கு அவ்வடக்கம் எழுபிறப்பிலுந் துணையாம் என்பது.

6. He who throughout one birth like a tortoise keeps in his five senses, the fruit of it will prove a safeguard to him throughout the seven - fold births.



எ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

பரி.—(இ-ள்). தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்க மாட்டாராயினும் * நாவொன்றனையுங் காக்க; அதனைக் காவாராயின் சொற்குற்றத்தினகட் பட்டுத் தாமே துன்புறுவர், (எ-று).

யாவென்பது அஃறிணைப்பன்மையினுப்பெயர்; அஃது எண்டு எஞ் சாமை உணர்கின்றது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. சொற்குற்

‡‡ ஆமை தன் னைந்துறுப்புக்களையும்அடக்குவதுபோல ஒருவன் ஐம் பொறிகளையு மடக்கவேண்டுமென்பதன் பயன் பகவத்கீதை சாங்கிய யோகவத்தியாயத்தில் "இவன் (துறவி) ஆமையானது (தன்) அவயவங் களை (உள்ளுக்கிழுத்துக் கொள்வது) போலச் சகலமான விஷயங்களிலிரு ந்தும் இந்திரியங்களை யெப்போது இழுத்துக்கொள்ளுகிறானே அப்போது அவனுடைய ஞானமானது நிலைத்தது" என்று கூறுவதனுலுமறிக.

* "ஆக்கப் படுக்கு மருந்தாவாய்ப் பெய்விக்கும், போக்கப் படுக்கும் புலாலைத் தின்பிக்கும், காக்கப் படுவன விந்திரிய மைந்தினு, நாக்கல தில்லை நலிவெல்லு மாறே" என்பது வியாபதி.

தம் - சொல்லின்கட்டோன்றுங் குற்றம். † அல்லாப்பர், செம்மாப்பர் என் பனபோலச் சோகாப்பரென்பது ஒரு சொல்.

தெளி.—(இ-ன்). யா - (தம்மால் காக்கப்படுவனவாகிய) எல்லாவற் றையும், காவாராயினும் - காக்கமாட்டாராயினும், நா - நாவொன்றையும், காக்க - காக்கக்கடவர், காவாக்கால் - (அந்நாவினைக்) காக்கமாட்டாராயின், சொல்லிழுக்குப்பட்டு - சொற்குற்றத்தில் அகப்பட்டு, சோகாப்பர் - (தாமே) துன்பமடைவர், (எ-று).

யாவென்பது எவையென்னும் பொருளையுணர்த்தும் அஃறிணைப்பன் மை விளைப்பெயர். அஃதிங்குக் குறையாமை யென்ப தறியுமாறு கின்றது. யாவுமென்னும் முற்றும்மை செய்புள் விகாரத்தாற் றொக்குநின்றது. சொற்குற்றம் - சொல்லினிடத்துத் தோன்றுங் குற்றம். அது குன்றக் கூறல் முதலியனவாம். சோகாப்பரென்பது ஒருசொல்.

(க-து). காவடக்கமில்லார் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன் புறுவர் என்பது.

7. Though you guard nothing else, guard your tougue; as for those who do not guard it their words will be drawn into evil and they will suffer distress.

அ. ஒன்றுனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றுகா தாகி விடும்.

பரி.—(இ-ள்). தீயவாகிய சொற்களின் பொருள்களாற் பிறர்க்கு வருந் துன்பம் ஒன்றையினும் ஒருவன்பக்கல் உண்டாவதாயின், அவனுக் குப பிறவறங்களான் உண்டான நன்மை தீதாய்விடும், (எ-று).

தீயசொல்லாவன : நீகருபடக்கும் பொய், குறளை, கடுஞ்சொல்லென் பன. ‡ ஒருவன் நல்லவாகசொல்லுஞ் சொற்களன்கண்ணே ஒன்றுயி

† சோகம் என்பதன் விகாரமாகிய சோ என்னும் சொல்லும் காப்பர் என்னும் சொல்லும் ஆகிய இரண்டுசொல்லும சேர்ந்து சோகாப்பர் என் றுயின என்பாரது கூற்றை யொப்பாது ‘அல்லாப்பர் செம்மாப்பர் என் பன போலச் சோகாப்பரென்பது ஒருசொல்’ என்று கூறப்பட்டது. சோ காப்பர் என்பதில் துன்பமென்னும் பொருளோ யுணர்த்தும் சோகம் என் னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சோகாப்பு என்பது பகுதி, அல்லாப் பர் செம்மாப்பர் என்பனவற்றில்அல்லாப்பு செம்மாப்பு என்பன பகுதிகள்.

‡ ‘ஒன்றுனுந்தீச்சொற் பொருட்பய னுண்டாயின்’ என்பதற்கு ஒன் றுனும் - (ஒருவன் நல்லனவாகச சொல்லும் சொற்களிடத்தே) ஒரு சொல் லாயினும், தீச்சொற் பொருட்பயன் - தீயசொலலாலுண்டாகும் பொருளி னது பயன், உண்டாயின் - (பிறர்க்கு) உண்டாவதாயின் என்று பொருள் கூறுவாருமுளர் என்பது.

னும் தீச்சொற்பயம் பொருளினது பயன் பிறர்க்குண்டாவதாயின் என் றுரைப்பாருமுளர்.

தெளி.—(இ-ன்). தீச்சொல் - தீயவாகிய சொற்களின், பொருட் பயன் - பொருள்களால் (பிறர்க்குவரும் துன்பமாகிய) பயனானது, ஒன் றானும் - ஒன்றாயினும், உண்டாயின் - (ஒருவனிடத்தில்) உண்டாவதா யின், நன்று - (அவனுக்குப் பிறவறங்களாலுண்டாகிய) நன்மையானது, ஆகாதாகிவிடும் - நீதாய்விடும், (எ-று).

தீயசொற்களாவன:—தீமையைத்தரும் பொய், குறளை, கடுஞ்சொல் என்பனவாம்.

(க-து). ஒருவன் கடுஞ்சொற்களைச் சொல்லுவானுயின் அச் சொற்கள் அவனது நன்மையனைத்தையுங் கெடுக்கும் என்பது.

8. If a man's speech be productive of a single evil, all the good done by him will be turned into evil.

கூ. தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாருதே
நாவினுற் சுட்ட வடு.

பரி.—(இ-ம). ஒருவனை ஒருவன் தீயினுற் சுட்டபுண் மெய்க்கட் கிடப்பினும் மனத்தின்கண் அப்போழுதே ஆறும்; அவ்வாறன்றி வெவ் வுரையுடைய நாவினுற் சுட்டவடு அதன் கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது.

ஆறிப்போதலால் தீயினுற்சுட்டதனைப் 'புண்' என்றும், ஆறாமை யின் நாவினுற்சுட்டதனை 'வடு' என் றுங் கூறினர். தீயும் வெவ் வுரையுஞ் சுடுதற்கு ழிலான் ஒக்குமாயினும், ஆறுமையாற் றீயினும் வெவ்வுரை கொடிதென்பது போதரலின், இது ‡ குறிப்பான்வந்த வேற் றுமை யலங்காரம். இவை மூன்று பாட்டானும் மொழியடக்கங் கூறப் பட்டது.

தெளி.—(இ-ன்). (ஒருவனை யொருவன்), தீயினுற் சுட்ட—நெருப் பாற்சுட்ட, புண்-புண்ணானது,(உடம்பினிடத்திருந்தாலும்), உள்-மனத தினிடத்து, ஆறும்-(அப்போதே)ஆறிப்போம்,(அப்படியல்லாமல்),நாவினுல்-

‡ உவமானமான தீயு (நெருப்பு)ம் உவமேயமான கடுஞ்சொல்லும் சுடுகிற(பிறரைவருத்துகின்ற)தொழிலினுல் தம்முள் சமான மூடையனவா யிருந்தாலும் (தீயினுற் சுட்டபுண் உடம்பில் ஆறிப்போவதுபோலாகாது நாவினுற் சுட்ட வடு மனத்தின்கண் ஆறாது கிடத்தலின்) நெருப்பைப் பார்க்கிலும் கடுஞ்சொல் கொடியது என்னும் வேற்றுமை 'ஆறாதே நாவி னுற் சுட்டவடு' என்னுங் குறிப்பாற்பெற வைத்ததமையின் இது குறிப்பான் வந்தவேற்றுமையலங்காரமாயிற்று. வேற்றுமையலங்காரமாவது வெளிப் படையாகவாவது குறிப்பாகவாவது ஒப்புடைய இருபொருளை யொரு பொருளாகவைத்து அவற்றைத் தம்முள் வேற்றுமைபடச் சொல்லுதலாம்

(நீயசொற்கள்வேயுடைய) காவினால், சுட்ட—,வடு-வடுவாவது, (அம்மனத் தினிடத்தும் எப்போதும்) ஆறுது—ஆறுதாம், (எ-று).

ஆறிப்போதலால் நீயினுஞ்சுட்டதனைப் 'புண்' என்றும், ஆறுதிருத் தலால் காவினுஞ் சுட்டதனை 'வடு' என்றும், சொல்லினார். நீயும் கடுஞ் சொல்லும் சுடுதற்றொழிலால் தம்முளொக்குமாயினும் ஆறுவையினால் நீயினும் கடுஞ்சொல் கொடியதென்பது தோன்றுதலால் இது குறிப்பால் வந்த வேற்றுமையணி. இவை மூன்றுபாட்டாலும் வாக்கின தடக்கம் சொல்லப்பட்டது.

(க-து). வருத்துந்தொழிலால் கடுஞ்சொல் தீயினுங் கொடி யது என்பது.

9. The wound which has been burnt in by fire may heal, but a wound burnt in by the tongue will never heal.

கo. கதுங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

பரி.—(இ-ள்). மனத்தினகண் வேதுளிதோன்றுமற் காத்துக் கல்வி யுடையவனுய் அடங்குதலை வல்லவனது செவ்வியை, அறக்கட வுள் பாரா நிற்கும்; அவனே யடையு நெறியிற்கட் சென்று, (எ-று).

அடங்குதல்—மனம் புறத்திப் பரவாது அறத்தின் கண்ணே நிற்றல். செவ்வி—தன்குறை கூறுதற்கேற்ற மன மொழி முகங்கள் இனியனுங் காலம். இப்பேற்றியானே அறக் தானே சென்றடையும் என்பதாம். இதனுன் †† மனவடக்கங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). கதம் - கோபத்தை, காத்து (மனத்தின்கண் தோன்றுமல்) பாதுகாத்து, கற்று - கல்வியுடையனுகி, அடங்கல் - அட ங்குதலில், ஆற்றுவான்-வல்லவனுயிருப்பவனது, செவ்வி-சமயத்தை, அறம்-அறக்கடவுள், பார்க்கும் - பாராநிற்கும், ஆற்றில் - (அவனைச்சேரும்) வழியில், நுழைந்து - சென்று, (எ-று).

அடங்குதல்-மனம் பராமுகப்பட்டு (பாவவழியிற்) செல்லாது அறத் திலே நிற்றல். செவ்வி - தன்குறையைச் சொல்லுதற்கேற்ற மனமொழி முகங்கள் இனிமையுடையவனு யிருக்கிற காலம். இத்தன்மையுடைய வனே அறக்கடவுள் தானே சென்று அடையுமென்பதாம். இதனுல் மன த்தினடக்கம் சொல்லப்பட்டது.

---

†† மெய்ம்முதலிய வற்றின் அடக்கத்தைப்பற்றி நீதிநெறிவிளக்கம் "பொய்குறளே வன்சொல் பயனிலவெண் றிர்ந்தான்கு, மெய்தானை சொல் லின் வழுக்காது - மெய்யிற், புலமைத்துங் காத்து மனமா சகற்று, நலம ன்றே நல்லா தெனல்" என்றும், நிரிகடகம் "வாயி னடங்குத றுப்புரவா மாசற்ற, செய்கை யடங்குத றிப்பியமரம் - பொய்யின்றி, நெஞ்ச மடங்கு தல் வீடாகும்" என்றும் கூறுமாறறிக.

(க-து). *கல்வியறிவுடையவனுய்க்கோபம்வாரா தடங்கியிரு ப்பவனிடத்து எல்லாவறங்களும் கிலிபெறும் என்பது.*

10. Virtue, seeking for an opportunity, will come into the path of that man who, possessed of learning and self-control, guards himself against anger.

பத்தாவது அதிகாரம்.

ஒழுக்கமுடைமை—

Observance of the proprieties of life.

பரி.—அஃதாவது சுத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏதப்பட்ட ஒழுக்கத்தினை யுடையராதல். இது மெய்ம்முதலிய அடங்கினார்க் கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—*அஃதாவது தத்தமது சாதிக்கும் ஆசிரமத்திற்கும் சொல் லப்பட்ட ஆசாரத்தை யுடையவராயிருத்தல். இது காயமுதலானவை யடக் கினவர்க்கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப் பட்டது.*

க. ஒழுக்கம் விழுப்பந் தரலா னெழுக்க
முயிரினு மோம்பப் படும்.

பரி.—(இ-ள்). ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத் தருதலால் அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும், (எ-று).

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின், பொதுப் படக் கூறினர். சுட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அஃதனம் விழுப் பந்தருவதாயது ஒழுக்கமென்பது பெற்றும். † உயிர் எல்லாப்பொருளி னுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பந் தாராமையின் 'உயிரினு மோம்பப்படும்' என்றார்

தெளி.—(இ-ள்). ஒழுக்கம் - ஆசாரமானது, விழுப்பம்-சிறப்பினை, தரலான் - (எல்லார்க்கும்) கொடுத்தலால், ஒழுக்கம்-அவ்வாசாரமானது, உயி ரினும் - உயிரைப்பார்க்கிலும், ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும், (எ-று).

ஒழுக்கம் உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் சமமாகச்சிறப்பினைத்தரு தலால் 'ஒழுக்கம் விழுப்பந் தரலான்'எனப்பொதுப்படச்சொல்லினர். (அவ் வொழுக்கமென) அகரச்சுட்டுவருவிக்கப்பட்டது. அச்சுட்டினால் அவ்வாறு சிறப்பினைத் தருவதாயது ஒழுக்கமென்பதுபெற்றும். ஒருவனுக்கு உயிரா

---

† *ஒருவனுக்கு உயிர்போலச் சிறந்தது யாதொரு பொருளுமில்லை. அவ்வாறாயினும் அவ்வுயிர் கல்லினைக்கும் நிலினைக்கும் காரணமாய்நின்று இன்பத்துன்பங்களை வருவித்துக்கொள்ளுகின்றது. ஒழுக்கமோ அவ்வாறு காமல் இன்பத்தை யுண்டாக்குவதற்கே காரணமாயிருக்கின்றது; அதனால் ஒழுக்கம் உயிரைப்பார்க்கிலுஞ் சிறந்தது மென்க.*

னது எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போலச் சிறப்பைத் தராமையால் அஃது 'உயிரினுமோம்பப்படும்' என்றார்.

(க-து). ஆசாரம் உயிரினும் சிறப்புடையதாம் என்பது.

1. Propriety of conduct leads to eminence, therefore should it be preserved more carefully than life.

உ. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

பரி.—(இ-ள்). ஒழுக்கத்தினை ஒன்றனும் அழிவுபடாமற் பேணி வரு நீதியுங் காக்க,‡ அறங்கள் பலவற்றையும் ஆராயுந்து அவற்றுள் (ஒரு மைக்குந் துணையாவது யாதென்று மனத்தை ஒருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமே யாகலான், (எ-று).

† பரிந்தென்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. இவையிரண்டோட் டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). ஒழுக்கம் - ஆசாரத்தை, ஓம்பி - (ஒன்றுலும்அழிவு படாமல்) பாதுகாத்து,பரிந்து-வருந்தியும், காக்க-காக்கக்கடவன், தெரிந்து, (அறங்கள்பலவற்றையும்) ஆராய்ந்து,(அவற்றுள் இம்மை மறுமையென்னும் இருமைக்குந் துணையாவது எவ்வறமென்று), ஓம்பி - (மனத்தை) அடக்கி, தேரினும்-தெளிந்தறிந்தாலும், துணை - துணையாயமுடிவது, அஃதே - அவ் வாசாரமே, (ஆதலால்), (எ-று).

பரிந்து மென்னும் உம்மை செயலுள் விகாரத்தால் தொக்கது. இவை இரண்டு பட்டாலும் ஒழுக்கத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). அறங்களுள் சிறந்த துணையாயிருப்பது ஆசாரமாதலின் அதனைப்பழுதுபடாமல் காத்தல்வேண்டும் என்பது.

2. Let propriety of conduct be laboriously preserved and guarded; though one know and practise and excel in many virtues, that will be an eminent aid.

ஊ. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

‡ அறங்கள்பலவாவன;ஆதலர்க்குச்சாலே,ஒதுவார்க்குணவு,அறுசமயத் தார்க்குண்டி, பசுவிற்குவாயுறை, சிறைசோறு, ஐயம, தின்பண்டூல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், நோய்மருந்து, பிறர்துயர்காத் தல், தண்ணீர்ப்பந்தல், மடம்,தடம்,சோலை,ஆவுரிஞ்சுதறி,விலங்கிற்குணவு, எறுவிடுத்தல், வீலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் என்றற் றொடக்கத்தன.

† இவ்வும்மை இழிவு சிறப்பும் எதிரதுதழீயதுமாம்.

பரி.—(இ-ள்). எல்லார்க்குந் தத்தம் வருணத்திற் கேற்ற ஒழுக்க முடைமை குலனுடைமையாம்; அவ்வொழுக்கத்திற் றவறுதல் அவ்வருணத் திற் றுழ்ந்த வருணமாயிவிடும், (எ-று).

‡ பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும் ஒழுக்கம் உடைய ராக உயர்குலத்தாராவராகலின் 'குடிமை'யா மென்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தாராவராகலின் 'இழி ந்தபிறப்பாய் விடும்' என்றும் கூறினர். உள்ளழிப்படுங் குணத்தினும் இல் வழிப்படுங் குற்றம் பெரிதென்றவாறு. § பயன் இடையீடின்றி எய்துதலி ன், அவ்விரைவுபற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனுகவோதப்பட்டன.

தேளி.—(இ-ள்). (எல்லார்க்கும்) ஒழுக்கமுடைமை-(தத்தமதுவருணத் திற்குப்பொருந்திய) ஆசார முடைமையானது, குடிமை - குலமுடைமை யாம், இழுக்கம் - (அவ்வாசாரத்தினின்றும்) தவறுதல், இழிந்த பிறப்பாய் விடும்-(அவ்வருணத்தில்) தாழ்ந்த வருணமாய் விடும், (எ-று).

பிறந்த சாதியுள் இழிந்த குலத்தவராஞலும் ஆசாரமுடையவராகவுயர்ந்த குலத்தினராவ ராதலின்: 'குடிமை' ஆம் என்றும், உயர்ந்தசாதியிற்பிறந்தவ ராஞலும்ஆசாரத்திற்றவறத் தாழ்ந்தசாதியாராவராதலின் 'இழிந்தபிறப்பாய் விடும்' என்றுஞ்சொல்லினர். ஆசாரமுள்ளவிடத் துண்டாகுங் குணத்தி லும் அவ்வாசாரமில்லாவிடத் துண்டாகுங் குற்றம் பெரிதாமென்பதாம். (ஒழுக்கம் இழுக்கம் என்பவற்றின்) பயன் தடையில்லாம லடைதலால், அவ்விரைவுபற்றி அப்பயனுக்குக் காரணமாகிய வினைகளே பயனுகச் சொல்லப்பட்டன. வருணம் - சாதி. குலம் - குடிச்சிறப்பு.

(க-து). ஆசாரமுடையவர் உயர்ந்த குலத்தாரும் அஃதில்லாத வர் இழிந்த சாதியாருமாவர் என்பது.

3. Propriety of conduct is true greatness of birth; impropriety will sink into a mean birth.

‡ "நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ், சொல்ல வல்லாற் பொரு ளில்லோத் - தொல்சிறப்பி, லெண்பொரு ளொன்றே தவங்கல்வி யான் வினை, யென்றிவற்று ளுஞ்சு குலம்" என்பது நாலடியார்.

ஒருவர் பிறந்தசாதியுள் தாழ்ந்த குலத்தவராஞலும் ஒழுக்கமுடைய வராயிருந்தால் அவர் உயர்ந்த குலத்தாராவர் என்றும், ஒருவர் உயர்ந்த சாதியுள் பிறந்தவராஞலும் அவர் ஒழுக்கத்தினின்றும் தவறினால் தாழ்ந்த சாதியராய் விடுவாரென்று மறிக.

§ குலனுடைமையும் தாழ்ந்த வருணமுமாகிய பயன் (பிரயோஜ னம்) இடையீடின்றி (காலதாமத மின்றி) யெய்துதலின் (உண்டாத லினால்) அவ்விரைவுபற்றி (அந்தவிரைவு நோக்கி) அவ்வேதுவாகிய வினை களே (குலனுடைமையும் தாழ்ந்தவருணமுமுண்டாவதற்குக் காரணமாகிய ஒழுக்கமுடைமையும் இழுக்கமுமாகிய வினைகளே) பயனுக (குலனு டைமை இழிந்தபிறப்பு என்னும் பிரயோஜனமாக) ஓதப்பட்டன. இது காரணம் காரியமாக வந்த வுபசார வழக்கு.

ச. மறப்பினு ‡ மோத்துக் கொளலாகும் § பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பரி.—(இ-ள்). கற்ற வேதத்தினை மறந்தானெயினும் அவ்வருணங் கெடாமையிற் பின்னும் அஃதோதிக் கொளலாம், அந்தணனது உயர்ந்த வருணம் தன்னொழுக்கங் குன்றக் கெடும், (எ-று).

மறத்தவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான் 'மறப்பினும்' என்றார். † சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனையவருணங்கட்குங் கொள்ளப்படும்.

தெளி.—(இ-ள்). ஒத்து - (கற்ற) வேதத்தினை, மறப்பினும்-மறந்தானெயினும், கொளலாகுட - (அவ்வருணங் கெடாமையிற் பின்னும் அதனை) ஓதிக்கொள்ளலாம், பார்ப்பான் - பிராமணனது, பிறப்பு - உயர்ந்தவருணமானது, ஒழுக்கங்குன்ற - (தனது) ஆசாரங்குறைய, கெடும்—அழியும், ()

கற்றவேதத்தினை மறந்தவிடத்து இழிகுலத்தானுனதலால், அதனை மறக்கலாகாதென்னுங்கருத்தால் 'மறப்பினும்' என்றார். மறப்பினுமென்ற உம்மை எதிர்மறைப்பொருளது. சிறப்புடைய முதல் வருணத்திற்குச சொல்லுதலினால், இவ்வொழுக்கம் மற்றைய வருணங்களுக்குங்கொள்ளப்படும்.

(க-து). ஒருவனிடத்து ஆசாரங் குறைந்தால் அவனது சாதி கெடும் என்பது.

4. A Brahmin though he should forget the Veda may recover it by reading ; but if he fail in propriety of conduct even his high birth will be destroyed.

ரு. அழுக்கா றுடையான்க ணிக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

பரி.—(இ-ள்). அழுக்கா றுடையான்மாட்டு ஆக்கமில்லாதாம் போல ஒழுக்கமில்லாதவன் மாட்டும் உயர்ச்சி யில்லை, (எ-று).

‡ தொன்றுதொட்டு ஒருவர்க் கொருவரால் ஓதப்பட்டுவருங் காரணத்தினால் வேதத்திற்கு ஒத்து என்னும் பெயர் வழங்கப்படுகின்றது.

§ பிராமணர் வேதத்தின் பொருளையே பிரதானமாகக் கொண்டு பார்ப்பதுபற்றி அவர் பார்ப்பார் என்று சொல்லப்படுகின்றார். கலித்தொகையுரையில் நச்சினர்க் கினியர் "வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்" என்று கூறியதும் ஈண்டறியத்தக்கதாம்.

† சிறப்புடைய வருணத்தவராகிய பிராமணருக்கு ஆசாரங்குறையச் சாதிகெடும் என்று சொல்லினமையின், ஆசாரங்குறையச்சாதிகெடுமென்னு மிவ்விஷயம் மற்றைய சாதியாருக்கும் கொள்ளப்படு மென்று கூறியது உபலட்சணமாம்

§ உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சி யில்லை யென்பது பெற்றும் ; என்னை ? ‡ "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற" மும் நல்கூர்தலின். உயர்வு - உயர்குலமாதல்.

தெளி.—(இ-ள்). அழுக்காறுடையான்கண் - பொருமையுடையவனிடத்து, ஆக்கம்போன்று - செல்வமில்லாமைபோன்று, ஒழுக்கமிலான் கண் - ஆசாரமில்லாதவனிடத்தும், உயர்வு - உயர்சியானது, இல்லை—,()

கொடுப்ப தழுக்கறுப்பானது சுற்றத்தாரும் வறுமையடைதலின், உவமானத்தினுல் ஒழுக்கமில்லாதவனது சுற்றத்தாருக்கும் உயர்சியில்லை யென்பது பெறப்பட்டது.* உயர்வு - உயர்ந்தகுலமாதல்.

(க-து). ஆசாரமில்லாதவனுக்கு மேன்மை யில்லை என்பது.

5. Even as the envious man will be without wealth, so will the man destitute of propriety of conduct be without greatness.

கூ. ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

பரி.—(இ-ள்). செய்தற்கருமைநோக்கி ஒழுக்கத்திற் சுருங்கார் மனவலியுடையார் ; அவ்விழுக்கத்தால் தமக் கிழிகுலமாகிய குற்றமுண் டாமாற்றை யறிந்து, (எ-று).

† ஒழுக்கத்திற்சுருக்கம் அதனையுடையார்மே லேற்றப்பட்டது. கொண்ட * விரதம் விடாமைபற்றி 'உரவோர்' என்றார்.

தெளி.—(இ-ள்). உரவோர் - மனவலிமையை யுடையார், (செய்தற் கருமைநோக்கி), ஒழுக்கத்தின் - ஆசாரத்தினின்றும், ஒல்கார் - சுருங்கார், இழுக்கத்தின் - அத்தவறுதலால், ஏதம் - (தமக்கிழிகுலமாகிய) குற்றம், படுபாக்கு - உண்டாகும்வழியை, அறிந்து - தெரிந்து, (எ-று).

§ 'அழுக்காறுடையான்கணுக்கம் போன்று'என்னுமுவமானத்தினுல் ஒழுக்க மில்லாதவனது சுற்றத்தாருக்கும் மேன்மையில்லை யென்பது பெற்றும். (ஏனெனின், ஒருவன் பிறர்க்குக் கொடுக்கும் பொருளைக் குறித்துப்பொருமையடைகின்றவனது சுற்றத்தாரும் தரித்திரத்தை அடைவதாலென்க). இவ்வுவமையின் கருத்து ஒருவன் பிறர்க்குக் கொடுக்கும் பொருளைக் குறித்துப் பொருமை யடைகின்றவனுக்கேயன்றி அவன் சுற்றத்தாருக்கும் செல்வமில்லாமை போன்று, ஒழுக்கமில்லாதவனுக்கேயன்றி அவன் சுற்றத்தாருக்கும் உயர்ச்சி (மேன்மை) யில்லை என்பதாம். ‡ அழுக்காறுமை—சு.

† ஒல்காமை - ஒழுக்கத்தின்றருமம் ; அதனையுடையவர் - ஒல்கார்.

* இன்னதருமஞ் செய்வனெனவும் இன்னபாவ மொழிவனெனவும் தமது சக்திக்குப் பொருந்தும்படி யேற்பதெதிக் கொன்வன விரதமாம்.

ஒழுக்கத்தினை சுருக்கத்தை அதனை உடையார்மே லேற்றி 'ஒல்கார்' என்றுகூறப்பட்டது. இஃது உடைமையின் தர்மம் 'உடையார்மேலாய உபசார வழக்கு. மேற்கொண்டவிரதம் விடாலமபற்றி'உரவோர்' என்றார்.

(க-து). ஆசாரம் குறைதலால் வருங்குற்றத்தை யறிந் தோர் அவ்வாசாரத்திற் றவறார் என்பது.

6. Those firm in mind will not slacken in their observance of the proprieties of life, knowing the misery that flows from the transgression from them.

எ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

பரி.—(இ-ள்). எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டை யெய்து வர் ; அதனினின் றிழுக்கதலானே தாம் எய்துதற்குரித்தல்லாத † பழி யை யெய்துவர், (எ-று).

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின், எய்தாப்பழியெய்துவர் என்றார். இவை யைந்து பாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும் இல்வழிப் படுங் குற்றமுங் கூறப்பட்டன.

தேவி.—(இ-ள்). (எல்லாரும்) ஒழுக்கத்தின்-ஆசாரத்தினாலே, மேன் மை - மேம்பாட்டை, எய்துவர் - அடைவார், இழுக்கத்தின் - (அவ்வாசா ரத்தினின்றும்) தவறுதலாலே, எய்தாப்பழி-(தாம்) அடைதற்கு உரியதல் லாதபழியை, எய்துவர் - அடைவார், (எ-று).

(ஒழுக்கத்தினின்றுந்தவறியவன்மீது ஒருவன்)பகைமையால் அடாத பழியைச்சொல்லிய விடத்து அதனையும் தவறுபற்றி உலகத்தார் அடு க்குமென்று கொள்ளுவாராகலின் எய்தாப்பழி யெய்துவர் என்றார். இவை ஐந்துபாட்டாலும் ஆசாரமுள்ளவிடத்து உண்டாகும்குணமும் அஃதில்லாவிடத்து உண்டாகும்குற்றமும் சொல்லப்பட்டன.

(க-து). ஆசாரத்தினுயர்வும் அஃதில்லாமையினு மிழிவு முண்டாம் என்பது.

7. From propriety of conduct men obtain greatness ; from impropriety comes insufferable disgrace.

அ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

† பழியையும் பழியையும் என்றும் பாடமுண்டு.

பரி.—(இ-ள்). ஒருவனுக்கு நல்லவொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும், (எ-று).

* 'நன்றிக்கு வித்தாகும்' என்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், † 'இடும்பைதரும்' என்றதனால் நல்லொழுக்கம் இன்பந் தருதலும்பெற்றும்; ‡ ஒன்றுகின்றே வேனயதை முடிக்குமாகலின். இதனுற் $ பின்வீளவு கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). நல்லொழுக்கம் - (ஒருவனுக்கு)நல்லவாசாரமானது, நன்றிக்கு - அறத்திற்கு, வித்தாகும் - காரணமாகும், (காரணமாயிருமையிலும் இன்பந்தரும்), தீயொழுக்கம்-தீயவாசாரமானது, என்றும்-எப்போதும் (பாவத்திற்குக் காரணமாயிருமையிலும்), இடும்பை - துன்பத்தை, தரும் - கொடுக்கும், (எ-று)

நல்லொழுக்கம் அறத்திற்குக்காரணமாமென்றதனால் தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும, தீயவொழுக்கம் இருமையிலும் துன்பம் தருமென்றதனால் நல்லொழுக்கம் இருமையிலும் இன்பம் தருதலும்பெறப்படும்; ஒன்றுகின்றே மற்றதை முடிக்குமாதலின். இதனால் பின்வீளவது சொல்லப்பட்டது.

(க-து). நல்லொழுக்கம் இன்பத்தைத்தருந் தருமத்திற்கும் தீயொழுக்கம் துன்பத்தைத்தரும் பாவத்திற்குங் காரணமாம்.

8. Propriety of conduct is the seed of virtue; impropriety will ever cause sorrow.



கூ. ஒழுக்க முடையவர்க் கோல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சோலல்.

* நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் எனவும் பாடமுண்டு.

† தீயொழுக்க மிடும்பைதரும் எனவும் பாடமுண்டு.

‡ ஒன்றுகின்றே-நன்றிக்குவித்தாகு நல்லொழுக்கமென்னுமொன்றுகின்றே, வேனயதைமுடிக்குமாகலின்-தீயொழுக்கம் பாவத்திற்குக்காரணமாகுமென்னு மற்றதை முடிக்குமாகலான் என்றும், ஒன்றுகின்றே-தீயொழுக்கமென்று மிடும்பைதருமென்னு மொன்றுகின்றே,வேனயதை முடிக்குமாகலின் - நல்லொழுக்கம் என்றும் இன்பந்தருமென்னு மற்றதை முடிக்குமாகலான் என்றுங்கொள்க [ஒன்றுகின்றே வேனயதை முடிக்குமாகலின் என்பது முறைப்பட வருத்துக்கூறப்பட்டது].

$ பின்வீளவு - நல்லொழுக்கத்தினாலும் தீயொழுக்கத்தினாலும்பின் (மறுமையில்) (முறையே) உண்டாகும் இன்பதுன்பங்கள்.

பரி.—(இ-ள்). † மறந்தும் தீயசொற்களைத் தம்வாயாற் சொல்லுந் தொழில்கள் ஒழுக்கமுடையவர்க்கு முடியா, (எ-று).

தீயசொற்களாவன:-பிறர்க்குத் தீங்குபயக்கும் பொய்ம்மூதலியனவும், வருணத்திற் குரியவல்லனவு மாம். அவற்றது பன்மையாற் சொல்லுதற் றொழில் பலவாயின. சொலல்-சாதியொருமை. 'சொலல்' எனவே அமைந்திருக்க 'வாயால்' எனவேண்டாது கூறினர்; நல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரிய மென்ப.

தெளி.—(இ-ன்). வழுக்கியும்-மறந்தும், தீய-தீயசொற்களை, வாயாற் சொலல் (தமது) வாயினாற் சொல்லுந்தொழில்கள், ஒழுக்கமுடையவர்க்கு-ஆசாரமுடையவர்களுக்கு, ஒல்லா - முடியாவாம், (எ-று).

தீயசொற்களாவன:—பிறர்க்குத் தீமைபயத்தரும் பொய்சொல்லுதல் முதலானவையும், வருணத்திற்கு உரியன வல்லாத சொற்களுமாம். அச சொற்களது பன்மையால் சொல்லுதலாகியதொழில் பலவாயின. சொலல்-சாதியொருமைப்பெயர். 'சொலல்' எனவே (வாயென்பதுதானே) அமைந்திருக்க 'வாயால்' என்றுவேண்டாது சொல்லினர்; (அவ்வாய்) கற்சொற்க ளைப் பேசிப்பழகியதென்று தாம்வேண்டியதனை சிறப்பை முடித்தற்பொ ருட்டு. இவ்வாறு கூறுவதனை வடநூலார் தாற்பரியமென்பர். தாற்பரியம்-அவ்வப்பொருளுணர்ச்சி விருப்பால் உசாவிக்கப்படுந்தன்மை.

(க-து). நல்லொழுக்க முள்ளவர்கள் மறந்தும் தீய சொற்களைச் சொல்லுதலில்லை என்பது.

9. Those who study propriety of conduct will not sepak evil even forgetfully.



கட. $ உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

பரி.—(இ-ள்). உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக்கல்லாதார் பலநூல்களையுங் கற்றாயினும் அறிவிலாதார், (எ-று).

உலகத்தோடு பொருந்தவொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வாறுரன் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் ‡ இக்காலத்திற்கு

† ஒழுக்கமுடையவர் மறந்து சொல்லினும் பிறர்க்கு நன்மையையுண்டாக்குஞ் சொற்களையே சொல்லுவரென்பது பெறப்படுமாறறிக.

$ "எவ்வ தறைவ துலக முலகத்தோ, டவ்வ தறைவ தறிவு" என்னுங் குறளிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

‡ "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்னும் நன்னூற் சூத்திரமும் இங்குக் கவனிக்கத்தக்கதாம்.

எலாதன வொழிந்து சொல்லாதனவற்றுள் எற்பன கொண்டு வருதலான் அவையும் அடங்க 'உலகத்தோ டொட்ட' என்றும், கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆதலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதார் என்றுங் கூறினர். † *ஒழுகுதலைக்கற்ற லாவது* ‡ *அடிப்படுதல். இவையிரண்டு பாட்டானும் சொல்லானுஞ் செயலானும்வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவாற்றுற் றொருத்தக் கூறப்பட்டன.*

தெளி.—உலகத்தோடு - உயர்ந்தாரோடு, ஒட்ட - பொருந்த, ஒழுகல் - நடத்தலை, கல்லார் - கல்லாதவர், பல - பலநூல்களையும், கற்றும் - கற்றாராயினும், அறிவிலாதார் - அறிவில்லாதவராவர் (எ - து).

உயர்ந்தாரோடு பொருந்த நடத்தலாவது உயர்ந்தார்பலரும்நடந்தவழியாக நடத்தல். தருமசாஸ்திரம் கூறியவற்றுள், இக்காலத்திற்குப்பொருந்தாதனவற்றை விட்டு, கூறுதனவற்றுள் பொருந்துவனவற்றைக் கொண்டு வருதலால் அவையும் அடங்குதற்கு 'உலகத்தோடொட்ட' என்றும், கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப்பயன் ஒழுக்கமும் ஆதலின் அவ்வொழுக்கத்தைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதார் என்றும் சொல்லினர். ஒழுகுதலைக்கற்றலாவது பின் பற்றி நடத்தல். இவையிரண்டு பாட்டாலும் சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவிதத்தினுல் தொகுத்துச் சொல்லப்பட்டன

(க - து). உலகத்தோடு பொருந்த நடத்தலைக் கல்லாதவர்களது கல்வியறிவு பயனுடைய தாகாது என்பது.

10. Those who know not how to act agreeably to the world, though they have learnt many things, are still ignorant.



பதினைன்றாவது அதிகாரம்.

பிறனில் விழையாமை—

Against desiring the wife of another.

பரி.—அஃதாவது காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது ஒழுக்கமுடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது காம மயக்கத்தினுல் பிறனதுமனையாளை விரும்பாமை. இப்பிறனில்விழையாமை ஒழுக்கமுடையவரிடத்தே உண்டாவதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

† ஒழுகுதலைக் கற்றல்-பெரியோர் நடந்தபடி நடக்கத் தொடங்குதல்.

‡ அடிப்படுதல் - அப்பெரியோ ரொழுக்கத்தை மேற்கொண் டாசரித்து வருதல்.

க. பிறன்பொருளாட் பேட்டோழுகும் பேதைமை ஞாலத் தறம்பொருள் கண்டார்க ணில்.

பரி.—(இ - ள்). பிறனுக்குப் பொருளாந் தன்மையையுடையாளைக் காதலித்தொழுதுகின்ற அறியாமை ஞாலத்தின்கண்அறநூலும் பொருணூலுமாகிய விரண்டையும் ஆராய்ந்தறிந்தார்மாட் டில்லை, (எ - று).

பிறன்பொருள் - * பிறனுடைமை. † அறம் பொருளென்பன ஆகுபெயர். ‡ செவ்வெண்ணின் ரெகை விகாரத்தாற்ரொக்குகின்றது. இன்பம் ஒன்றையே நோக்கும் ¶ இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் § பரகீயமென்று கூறுவாராகலின் 'அறம்பொருள் கண்டார்கணில்' என்றார்; எனவே, அப்பேதைமையுடையார் மாட்டு அறமும் பொருளும் இல்லை யென்பது பெறப்பட்டது.

தேவி.—(இ - ள்). பிறன் - பிறனுக்கு, பொருளான் - உடைமையாந்தன்மையையுடையவளை, பெட்டு-இசைத்து, ஒழுகும்-உடக்கின்ற, பேதைமை-அறியாமையானது, ஞாலத்து - பூமியின்கண், அறம்-அறநூலும், பொருள் - பொருள்நூலும் (ஆகிய விரண்டையும்), கண்டார்கண் - ஆராய்ந் தறிந்தவரிடத்து, இல் - இல்லை, (எ - று).

அறமும் பொருளும் அவற்றைபுணர்த்தும் நூல்களுக்காதலின் காரியவாகுபெயர்கள். அறம் பொருளிரண்டும் என்னும்பெயர்ச்செவ்வெண்ணின்

---

* பிறனுடைமை - அன்னியனுக்குரிமையா (சொத்தமா) யிருப்பது.

† அறம் பொருள் என்னுங் காரியங்களின்பெயர் அவற்றை (அறத்தையும் பொருளையும்) உணர்த்துதற்குக் கருவியாகிய நூற்களுக்கு (தரும சாஸ்திரத்திற்கும் அருத்தசாஸ்திரத்திற்கும்) ஆதலால் காரியவாகுபெயர்.

‡ அறமும் பொருளுமென உம்மைவைத்தெண்ணுதி அறம் பொருளென எண்ணியது ஈண்டுச் செவ்வெண்ணும். இசசெவ்வெண் (அறம் பொருளிரண்டும் எனத்)தொகைபெற்றே வரல்வேண்டும். அத்தொகை (இரண்டுமென்னுந்தொகை) இங்குச்செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றமையின் 'செவ்வெண்ணின் ரெகை விகாரத்தாற்ரொக்குகின்றது' என்று கூறப்பட்டது. செவ்வெண்ணுவது எண்ணிடைச் சொற்கள் தொக்குநிற்பவருவது. உம்மைத்தொகைக்கும் செவ்வெண்ணிற்கும் வேறுபாடு " பல மொழிகளேயுந்திரட்டி யொருபிண்டமாகக் கூறியவழி உம்மைத்தொகையாகவும்,பினவுபடக்கூறியவழிசசெவ்வெண்ணுகவும் கொள்ளப்படுமென்க" என்று நன்னூல் விருத்தியுரை கூறுகின்றது.

¶ இன்பநூல் - காமநூல். அது கொக்கோக முதலியனவாம்.

§ பரகீயம்-அன்னியருக்குரியது,இதன்மூண்மொழி சுவகீயம்(தனக்குரியது). பரகீயமென்பதற்குப் பிரகிருதிகம் என்றும் பாடமுண்டு. (அதன் பொருள் பிறனது மனைவியாளைக்கூடிக்களித்தலென்பது).

தொகை செய்யுள்விகாரத்தால் தொக்கு நின்றது. இன்பமொன்றையே கருதுங் காமநுகர்ஞையார் (பிறனுக்குரியவரே விரும்பி நடத்தலாகிய) இப்பொல்லாத வொழுக்கத்தையும் பரகியமென்று கூறுவாராதலால் 'அறம் பொருள் கண்டார்க ணில்' என்றார். எனவே அவ்வறிவில்லாதவரிடத்து அறமும்பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது.

(க`- து). பிறன் மனைவிபை விரும்பி யொழுகுதல் அறநூலையும் பொருள் நூலையும் ஆராய்ந்தறிந்தவரிடத்தில்லை என்பது.

1. The folly of desiring her who is the property of another will not be found in those who know (the attributes of)virtue and (the rights of) property.



2. அறன்கடை நின்றாரு ளில்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

பரி.—(@ - ள்). காமங் காரணமாகப் பாவத்தின்கண் நின்றாரெல்லாருள்ளும் பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கட்சென்று நின்றாரிலும் பேதையாரில்லை, (எ - து).

‡ அறத்தினீக்கப்பட்டமையின் 'அறன்கடை' என்றார். அறன்கடை நின்ற ¶ பெண்வழிச்செல்வாரையும், † வரைவின் மகளிரோடும் $ இழிகுலமகளிரோடுங்கூடியின்ப நுகர்வாரையுமபோல, அறமும் பொருளும் இதத்தலே யன்றிப் § பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங்கருதிய வின்பமும் இழக்கின்றாராகலின் 'பேதையாரில்' என்றார், எனவே இன்பமுமில்லையென்பது பெறப்பட்டது.

‡ அற (தரும)த்தினின்று நீக்கப்பட்டு அவ்வறத்தின் பின்னே (கடையிலே) நிற்பது பாவமாதலால் அஃது 'அறன்கடை' என்று சொல்லப்பட்டது.

¶ பெண்வழிச்செல்வார் - தமதுவழியில் நடத்தற்கு உரிய மரியாதை வழியே நடப்பவர்.

† வரைவின்மகளிர் - விலைகொடுப்பார் யாவருக்கும் தம் நலத்தை விற்பதே யன்றி அந்நலத்தை யனுபவித்தற்கு இன்னாரானவர் இன்னாரல்லாதாரென்னும் வரம்பில்லாத வேசியர். வரம்பு - எல்லை.

$ இழிகுலமகளிர் - தாழ்ந்த குலத்திற் பிறந்த பெண்கள்.

§ பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங்கருதிய வின்பமுமிழக்கின்றாரென்பது "புக்க விடத்தச்சம் போதரும் போதச்சந், துய்க்கு மிடத்தச்சந் தோன்றுமற் காப்பச்ச, மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ, வுட்காண் பிறனில் புகல்" என்னுங் காலடியார் கூறுவதாலு மறியப்படும்.

(தேளி.—(இ - ன்). அறன்கடை - (காமங்காரணமாக) பாவத்தின் கண், நின்ருருசெல்லாம் - நின்றவரெல்லாருன்னும், பிறன்கடை - (பிற னது மனையாளை விரும்பி) அப்பிறனது வாயிலினிடத்து (சென்று), நின் ருரின்-நின்றவர்போல, பேதையார்-மூடர், இல் - இல்லை, (எ - று).

அறத்தினின்றும் நீக்கப்பட்டமையின் பாவத்தை 'அறன்கடை' என் ருர். பாவச்செயலில் நின்ற பெண்வழிநடப்பவரையும், பாத்தையரோடும் இழிகுலமகளிரோடும் கூடி இன்பமனுபவிப்பவரையும்போல, அறத்தையும் பொருளையும் இழந்துபோவதேயல்லாமல் பிறனது மனையாளிடத்துச் செல்வார் அச்சத்தினுல் தாமெண்ணிய இன்பத்தையும் இழந்துவிடுகின் ருராதலால், 'பேதையாரில்' என்ருர்; எனவே, (அவர்க்கு) இன்பமுமில்லை யென்பது பெறப்பட்டது.

(க - து). பிறன் மனைவிபை விரும்பி நடப்பவர் அறம்பொரு ளின்பங்களை யிழத்தலின் பெருமூடராவர் என்பது.

2. Among all those who stand on the outside of virtue there are no greater fools than those who stand outside their neighbour's door.

கூ. விளிந்தாரின் வேறல்லர் * மன்ற தேளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

பரி.—(இ-ள்). தம்மை ஐயுறதார் இல்லாள்கண்ணே பாவஞ்செய் தலை விரும்பி ஒழதுவார் உயிருடையரேனும் இறந்தாரேயாவர், (எ-று).

அறம் பொரு ளின்பங்களாகிய பயன் உயிரெய்தாமையின் 'விளிந்தா ரின் வேறல்லர்' என்றும், அவர் தீமை புரிந்தொழுகுவது இல்லுடையவ ராது தெளிவுபற்றியாகலின் 'தெளிந்தாரில்' என்றுங் கூறினர்.

தேளி.—(இ-ன்). மன்ற - நிச்சயமாக, தெளிந்தார் - (தம்மைநல் லவரென்று) தெளிந்தவராது, இல் - மனையாளிடத்தே, தீமை - பாவஞ் செய்தலை, (கூடுதலை), புரிந்து - விரும்பி, ஒழுகுவார் - நடப்பவர், (உயிரு டையவராயிருந்தாலும்), மன்ற-நிச்சயமாக, விளிந்தாரின் - செத்தவரினும், வேறல்லர் - வேருகார், (இறந்தவரேயாவர்), (எ-று).

அறம் பொரு ளின்பங்களாகிய பயன்களை உயிர் அடையாமையால் 'விளிந்தாரின் வேறல்லர்' என்றும், அவர் பாவஞ்செய்தலை விரும்பி நடப் பது மனையாளையுடையவராது தெளிவுபற்றியாதலால் 'தெளிந்தாரில்' என் றும் சொல்லினர்.

* மன்ற என்பது நிச்சயமென்னும் பொருளையுணர்த்தும் இடைச் சொல். "மன்றவென் னெவி தேற்றஞ் செய்யும்" என்பது தொல்காப் பியம். மன்றவென்பதனை விளிந்தாரின் வேறல்லர் என்பதனோடுங்கூட்டுக.

(க-து). தம்மிடத்துச் சந்தேகமில்லாதவரது மனையாளிடத்துக் களவிற் புணர்ருதலே விரும்பி நடப்பவர் இறந்தவரே யாவர்.

3. Certainly they are no better than dead men who desire evil towards the wife of those who undoubtingly confide in them.

சு. எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

பரி.—(இ-ள்). எத்துணைப்பெருமை யுடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும், காமமயக்கத்தாற் றினையளவுந் தம்பிழையை யோராது பிறனுடைய இல்லின்கட்புகுதல், (எ-று).

† இந்திரன்போல எல்லாப்பெருமையு மிழந்து சிறுமையெய்தல் நோக்கி 'என்னும்'என்றார். ‡ "எண்ணி றறியாதீர் போல விவைகூறி, னின்னீர வல்ல நெடுந்தகாய்"என்புழிபோல § உயர்த்தசொட் பன்மை யொருமை மயங்கிற்று. * தேரான் பிறனென்பதனைத் தம்மை ஐயுறுத பிறனென் றுரைப்பாரு முளர்.

---

† கௌதமமுனிவரது மனைவியாகிய அகலிகையை விரும்பிப்புணர்ந்த இந்திரன் அத்தீச்செய்கையினால் தனதுபெருமைகெட்டு இழிவையடைந்தாற்போன்று பிறன்மனையானே விரும்பிப்புணர்வோர் மிக்க மேம்பாட்டையுடையோராயினும் அத்தீச்செய்கையினால் அம்மேம்பாடு கெட்டு இழிவையடைதலேக்குறித்து "என்னும்" என்றார். என்னும் என்பது பெருங்கெடுதியாய் முடியுமென்பதை யுணர்த்திநின்றது.

‡ கலித்தொகை - பாலை, இ. இதன்பொருள் (உன்னைப்பிரிந்தால்) யானுயிர்தாங்கி யிருத்தலாற்றாது இறந்துபடுதலே அறியாதிருந்தீர்போல உடன்சேற (செல்லுத)லே மறுத்த இம்மொழிகளேக் கூறுதலால் பெற்றது என் ? பெருமைக்குணமுள்ளவனே, இக்கூற்று-(இவ்வார்த்தை) உனக்கு உரியனன்றுயிய நீர்மைகளேயுடைய வல்ல என்பது.

§ கலித்தொகைப்பாட்டில் அறியாதீர் என்றுயர்த்திச்சொல்லுதற் பொருட்டுவந்த பன்மைப்பால் நின்னென்னும் ஒருமைப்பாலோடு மயங்கிநின்றுற் போன்று, இக்குறளில் எனைத்துணையர் என்றுயர்த்திச் சொல்லுதற்பொருட்டுவந்த பன்மைப்பால் தேரான் என்னும் ஒருமைப்பாலோடு மயங்கிநின்ற தென்க. இவ்வாறுவருவது பால் வழுவமைதி யெனப்படும். நன்னூல் விருத்தியுரைகாரர் "எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுங், தேரான் பிறனில் புகல்" என்பது செறலின் (கோபத்தினுல்) பலர்பால் ஒருமைப்பாலாயிற்று" என்பர்.

* தேரான்பிறன் என்பதற்கு தேரான் - (நம்மிடத்துச்) சந்தேகமடையாத, பிறன் - பிறனது என்று பொருள் கூறுவாருமுளர்.

தேளி.—(இ-ள்). பிறனில்விழையும் - (காமமயக்கத்தினால்) பிறனை யவ ரும், [சிறிதாயினுமென்றபடி], தோன்-(தமது பிழைமை) கருதாது, பிற னில் - பிறனுடைய மனையாளிடத்து, புகல் - செல்லுதல், எனைத்துணைய ராயினும் - எவ்வளவு பெருமையை யுடையவரா யிருப்பினும், என்னும் - (ஒருவர்க்கு) யாதாய்முடியும், (எ-று).

இந்திரன் போல எல்லாப்பெருமைகளையும் இழந்து சிறுமையை அடைதலேக்குறித்து 'என்னும்' என்றார். உயர்த்ததற்கண் வந்த எனைத் துணையென்னும் பன்மை தோன்னென்னும் ஒருமையோடு மயங்கிற்று.

(க-து). பிறனது மனையாளைக் கலவிற்சென்று கூடுகின்றவன் எவ்வளவு பெருமையை புடையவனாயிருப்பினும் அவன் அப்பெரு மையையிழந்து சிறுமையை யடைவான் என்பது.

4. However great one may be what does it avail if without at all considering his guilt he goes unto the wife of another.



ரு. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

பரி.—(இ-ள்). எய்துதல் எளிதென்று கருதிப் * பின்விளைவு கரு தாது பிறனில்லின்கண் இறப்பான், மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற் கும் † குடிப்பழியினை யெய்தும், (எ-று).

இல்லின்கண் இறத்தல் - இல்லாள்கண் நெறிகடந்து சேறல்.

தேளி.—(இ - ன்) எளிதென - (இவளைசேருதல்) எளிதென்று (நினைத்து), (பின்விளைவதைநினையாமல்), இல்-(பிறனது) மனையினிட த்து, இறப்பான் - செல்லுவோன், விளியாது - அழிதலின்றி, எஞ்ஞான் றும் - எக்காலமும், நிற்கும் - நிலைநிற்பதாகிய, பழி - (குடிப்) பழியை, எய்தும் - அடைவான், (எ - று).

இல்லிறத்தல் - (பிறனது) மனையாளிடத்து நீங்கிதவறிச் செல்லுதல்.

(க - து). அஞ்சாது பிறனது மனையாளிடத்திற் செல்பவன் நீங்காத குடிப்பழியை யடைவான் என்பது.

5. He who thinks lightly of going unto the wife of another acquires guilt that will abide with him imperishably and for ever.

* பின்விளைவு - பின்னருண்டாகும் பகை, பாவம், அசசம், பழி.

† "தானிற்குடிப்பழியாம்" என்பது நாலடியார்.

கூ. ‡ பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

பரி.—(இ-ள்). பிறன் இல்லாள்கண் நெறிகடந்து செல்வானிடத்துப் பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியு மென்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம், (எ - று).

எனவே, இருமையும் இழத்தல் பெற்றாம். இவை யாறு பாட்டானும் பிறனில் விழைவான்கட் குற்றங கூறப்பட்டது.

தேவி.—(இ - ள்). இல் - (பிறனது) மனையாளிடத்து, இறப்பான் கண் - நீதிதவறிச் செல்லுவோனிடத்து, பகை பாவ மச்சம் பழி யென நான்கும்-பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றங்களும், இகவாவாம் - (ஒருபோதும்) நீங்காதனவாம், (எ - று).

'இகவாவாம்' எனவே, அவன் இருமைப்பயன்களையும் இழப்பானென் பது பெறப்பட்டது. இவை ஆறு பாட்டாலும் பிறனதுமனையாளே விரும்பு வோனிடத்துக் குற்றம் சொல்லப்பட்டது.

(க-து). பிறன் மனையாளைச் சேர்பவனிடத்துப் பகை பாவம் அச்சம் பழி யென்னுமிந்நான்கு குற்றங்களும் விட்டு நீங்காவாம்.

6. Hatred, sin, fear, disgrace; these four will never leave him who goes unto his neighbour's wife.

எ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

பரி.—(இ-ள்). அறனுகிய வியல்போடுகூடி இவ்வாழ்வானென்று சொல்லப்படுவான், பிறனுக்குரிமை பூண்டு அவனுடைய இயல்பின் கண்ணே நிற்பாளது பெண்டன்மையை விரும்பாதவன், (எ-று).

$ ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண்வந்தது. இல்லறஞ் செய்வா னெனப்படுவா னவனே யென்பதாம்.

தேவி.—(இ-ள்). பிறனியலாள் (பிறனுக்குரிமை பூண்டுஅப்) பிற னுடைய வியல்பிலே நிற்பவளது.பெண்மை-பெணதன்மையை, நயவாதவன் - விரும்பாதவன், அறனியலான்-அறமாகிய வியல்போடு(கூடி), இல்வாழ்வா னென்பான் - இல்வாழ்வானென்று சொல்லப்படுவான், (எ-று).

‡ "பிறன்ரூரம், நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென், றச்சத்தோ டிந்நாற் பொருள்" என்பது நாலடியார்.

$ அறனியலான் என்பதன்கணுள்ள (மூன்றனுருபாகிய) ஆனுருபு. பெண்மைநயவாதவனது வினையாகிய வாழ்தற்றொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடையது அறவியலாதலால், அஃது உடனிகழ்ச்சிப் பொருளதாயிற்று

அறனியலான் என்னும் மூன்றனுருபு இங்கு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. இல்லறஞ்செய்வானெனப்படுவான்(பிறனியலாள் பெண்மை நயவாத) அவனே யாவன் என்பதாம்.

(க-து). பிறனது மனைவியை விரும்பாதவன் அறவிபல்போடு கூடி யில்வாழ்வானென்றுசொல்லப்படுவான் என்பது.

7. He who desires not the womanhood of her who should walk according to the will of another will be praised as a virtuous householder.

அ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ரோர்க்
கறனென்றே வான்ற வொழுக்கு.

பரி.—(இ-ள்). பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை சால்புடையார்க்கு அறனுமாம், நிரம்பிய வொழுக்கமுமாம், (எ-று).

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் * உட்பகையாகிய காமம் அடக்குதற்கருமையின், அதனை யடக்கிய ஆண்மையைப் 'பேராண்மை' என்றார். † ஒன்றேவென்பது எண்ணிடைச்சொல். செய்தற்கரிய அறனும் ஒழுக்கமும் ‡ இதனைச செய்யாமையே பயக்குமென்பதாம்.

தேவி.—(இ-ள்). பிறன்மனை - பிறனது மனையாளை, நோக்காத - உட்கொள்ளாத, பேராண்மை - பெரிய ஆண்தன்மையானது, சானோர்க்கு - (பலகுணங்களாலும்)நிறைந்தோர்க்கு, அறனென்றே—அறமுமாம், ஆன்ற வொழுக்கு - நிறைந்த வொழுக்கமுமாம், (எ-று).

புறப்பகையாகிய சத்துருக்களை அடக்கும் ஆண்மையுடையோர்க்கும் உட்பகையாகிய காமம அடக்குவதற்கு அருமையாகவிருத்தலால், அவ்வுட்பகையாகிய காமத்தை அடக்கிய ஆண்மையைப் 'பேராண்மை' என்றார். ஒன்றே என்பது எண்ணுப்பொருளில் வந்த இடைசசொல். செய்தற்கரிய அறமும்ஒழுக்கமும் (பிறமனை நோக்கலென்னும்) இதனைச் செய்யாமையே தருமென்பதாம்.

---

* உட்பகையாகிய காமம், வெகுளி, கயம்பற்றுள்ளம்(லோபம்), மானம், உவகை,மதமெனப் பட்டவாறனுள் காமமே மற்றவற்றிற்குக் காரணமாயொழித்தற் கரிதா யிருப்பதுபற்றி 'உட்பகையாகிய காமம் அடக்குதற் கருமையின்' என்று கூறப்பட்டது.

† ஒன்றே என்பது ஒழுக்கத்தோடுங்கூடி அறனுமாம் ஒழுக்கமுமாமென எண்ணுப் பொருள்பட்டுவந்தமையின் எண்ணிடைச்சொல்லாயிற்று.

‡ இதனை - பிறன்மனையாளைக் கூடக் கருதாதலை.

(க-து). *பிறனது மனைவியை விரும்பாதபேராண்மையே பெரியோர்க்குத் தரும்மும் ஒழுக்கமுமாம் என்பது.*

8. That noble manliness which looks not at the wife of another is the virtue and dignity of the great.

கூ. நலக்குரியார் யாரெனி னெமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

பரி.—(இ-ள்). அச்சந் தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து எல்லா நன்மைகளும் எய்தறதற்குரியார் யாவரெனின், பிறனெருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார், (எ-று).

அகலம், ஆழம், † பொருளுடைமை முதலியவற்றால் அளவிடப்படாமையின் 'நாமநீர்' என்றார். ‡ உரிச்சொல் லீறு திரிந்து நின்றது. ¶ நலத்திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. இருமையினும் நன்மையெய்துவ ரென்பதாம்.

தேவி —(இ-ள்). நாமநீர் - அச்சந்தருங் கடலால் (சூழப்பட்ட), வைப்பில் - பூவுலகத்தின்கண், நலக்கு - (எல்லா) நன்மைகளையும் பெறுதற்கு, உரியார்யாரெனின் - உரியவர் யாவரென்றால், பிறற்கு - பிறனெருவனுக்கு, உரியாள் - உரிமையானவளது, தோள்-தோள்களை, தோயாதார்-சேராதவர், (எ-று).

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றால் அளவிடப்படாமைபற்றிக் கடலை 'நாமநீர்' என்றார். நாம் என்னுமுரிச்சொல் நாம எனத் திரிந்து நின்றது. நலத்திற்கென்பது நலக்கெனவிகாரப்பட்டுநின்றது. (பிறற்குரியாள்தோள்தோயாதார்) இருமையிலும் நன்மை யடைவாரென்பதாம்.

(க-து). *நன்மைக ளெல்லாவற்றையு மடைதற் குரியவர்பிறன் மனைவியைச் சேராதா ராவர் என்பது.*

9. Is it asked, "who are those who shall obtain good in this world surrounded by the terror-producing sea?" Those who touch not the shoulder of her who belongs to another.

† *பொருள் - சங்கு, பவளம், முத்து, உப்பு முதலியன.*

‡ *அச்சப் பொருளுணர்த்தும் நாம் என்னும் உரிச்சொல் நாம எனத் திரிந்து நின்றது. "பேரா முருமென வரூஉங் கிளவி, யாமுறை மூன்று மச்சப் பொருள" என்பது தொல்காப்பியம்.*

¶ *நலத்திற்கு என்பது அத்துச்சாரியையும் இன்சாரியையும் செய்யுள் விகாரத்தால் தொக்குநிற்க நலக்கு என வந்தது.*

கo அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

பரி.—(இ-ள்). ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், அவனுக்குப் பிறனெல்லைக்கண் நிற்பாளது பெண்மையை விரும்பாமை யுண்டாயின், அதுநன்று, (எ-று).

இக்குணமே மேற்பட்டுத் தோன்று மென்பதாம். இவ்வான்கு பாட்டானும் பிறனில் விழையாதான்கட் குணங்கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) அறம் - அறத்தை, வரையான் - (தனக்குரியதாகச்) செய்யாமல், அல்ல - பாவங்களை, செயினும் - செய்வானாயினும் (அவனுக்கு), பிறன்வரையாள் - பிறனெல்லையில் நிற்பவளது, பெண்மை - பெண்தன்மையை, நயவாமை - விரும்பாமை (உண்டானால்), நன்று - (அது) நல்லது, (எ-று).

(அறத்தைத் தனக்குரியதாகச் செய்யாது பாவங்களைச் செய்யுங்குற்றங்களிலும் பிறன்மனையாளை விரும்பாமையாகிய) இக்குணமே சிறந்துவிளங்கு மென்பதாம். இவ்வான்கு பாட்டாலும் பிறன்மனையாளை விரும்பாதவனிடத்துக் குணம் சொல்லப்பட்டது.

(க-து). தருமத்தைச் செய்யாது பாவத்தைச்செய்பவனிடத்துப் பிறனது மனைவியை விரும்பாமை யுண்டாயிருக்குமாயின், அஃது அவனிடத்திற் சிறந்து விளங்கும் என்பது.

10. Though a man perform no virtuous deeds and commit (every) vice, it will be well if he desire not the womanhood of her who is within the limit (of the house) of another.



பன்னிரண்டாவது அதிகாரம்.

பொறையுடைமை.—Patience.

பரி.—அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையாற்றதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாதுபொறுத்தலையுடையராதல். *நெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறவில் விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது காரணம் பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்தவிடத்துத் தாமும்அத்தீங்கினை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலே யுடையராதலாம். நெறியில் நீங்கியவற்றைச்

---

* நெறியினீங்கிய செய்தாரையும் - நல்லொழுக்கத்தி னின்றும் நீங்கிப் பிறன்மனையாளை விரும்புதல் முதலிய தீயகாரியங்களைச் செய்தவர்களையும். "நெறியி னீங்கியோர் நீரல கூறினு, மறியா மையென் றறிதல் வேண்டும்" என்பது சிலப்பதிகாரம்.

செய்தாரையும் பொறுக்கவேண்டு மென்பதற்கு (பொறையுடைமை யென்னும்) இது பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

க. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

பரி.—(இ-ள்). † தன்னை யகழ்வாரை வீழாமற்றாங்கும் நிலம் போலத், தம்மை யவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய வறம்,(எ-று)

இகழ்தல்—மிகையாயின செய்தலும் சொல்லுதலும்.

தெளி.—(இ-ள்). அகழ்வாரை-(தன்னைத்)தோண்டுபவரை, தாங்கும்-(வீழாமற்) சுமக்கும், நிலம்போல-நிலத்தைப்போல, தம்மை இகழ்வார்-தம்மையவமதிப்பவரை, பொறுத்தல்—,தலை - முதன்மையான அறமாம்.

இகழ்தல் - தீமையாயினவற்றைச் செய்தலும் சொல்லலுமாம்.

(க-து). பிறர் தம்மை யவமதிப்பதைப் பொறுத்துக் கொள்ளுதலே ஒருவர்க்குத் தலைமையான அறமமாம் என்பது.

1. To bear with those who revile us, even as the earth bears up those who dig it, is the first of virtues.

உ. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

பரி.—(இ-ள்). பொறை நன்றுகலால், நாமொறுத்தற்று இயன்ற காலத்தும் பிறர்செய்த மிகையைப் பொறுக்க; அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், ‡ அப்பொறையினும் நன்று, (எ-று)

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப் படுதலின், மறத்தலை 'அதனினு நன்று' என்றார்.

தெளி.—(இ-ள்). இறப்பினை (பொறுமை கடலினும் பெரிதாகலால்) (பிறர்செய்த)தீமையை, என்றும்-(தாம்) தண்டித்தற்குத்தக்க காலத்திலும் பொறுத்தல் - பொறுக்கக்கடவர், அதனைமறத்தல்-அத்தீமையை நினையாமல்-(அப்பொழுதே) மறத்தலை (பெற்றால்), அதனினும் - (அம்மறத்தல்) அப்பொறுமையிலும், நன்று - மிகநல்லது, (எ-று).

தீமையென்றது முன்சொல்லிய தீமையாயினவற்றைச் செய்தலும் சொல்லலுமாகியவிரண்டு குற்றங்களையும். அத்தீமையைப் பொறுக்கும் போதும் அது நினைக்கப்படுதலால் மறத்தலை 'அதனினு நன்று' என்றார்.

(க-து). பிறர்செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொண்டு அக்குற்றத்தை யப்பொழுதே மறத்துவிடல் வேண்டும் என்பது.

† 'தன்னை யகழ்வாரை வீழாமற் றாங்கும் நிலம்போல' என்று கூறினமையின் தம்மைக் கொலைசெய்வதை யொத்த குற்றஞ் செய்தாலையும் பொறுப்பதும் பொறுத்திருந்தே யவர்களைக் காப்பதும் சிறந்த தருமமா மென்பது பெறப்பட்டதென்க.

‡ அப்பொறையினும் என்றும் பாடமுண்டு.

2. Bear with reproach even when you can retaliate; but to forget it will be still better than that.

கூ. § இன்மையு ளின்மை விருந்தோரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

பரி.—(இ-ள்). ஒருவனுக்கு வறுமையுள் * வைத்து வறுமையாவது விருந்தினரை யேற்றுக்கொள்ளாது நீக்குதல்; அதுபோல, வன்மையுள் வைத்துவன்மையாவது ‡ அறிவின்மையான் மிகைசெயிற்றாரைப் பொறுத்தல், (எ-று).

இஃது § எடுத்துக்காட்டுவமை. † அறனல்லாத விருந் × தோரால் பொருளுடைமை யாகாத வாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மை யாகாதே வன்மையாமென்பது கருத்து.

§ "உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா, மடமை" என்று விருந்தோம்பலிற் கூறப்பட் டிருத்தலறிக.

* வைத்து என்பது உம்மைப்பொருளது

‡ அறியார்மாட்டுக் குற்றஞ்செய்தழி அக்குற்றத்தைப் பொறுத்தல் என்றும் பாடமுண்டு.

§ எடுத்துக்காட்டுவமையைப்பற்றி 'அகரமுதல' என்னுங் குறளின் குறிப்புரையில் எழுதி யிருத்தலைக் கண்டுணர்க

இச்செய்யுளில் 'இன்மையு ளின்மை விருந்தோரால்' என்னும் வாக்கியமும் 'வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை' என்னும்வாக்கியமும்வந்திருத்தலையும் இடையில் அதுபோல என்னுஞ்சொல் தொக்கிருப்பதையும் காண்க.

† ஐம்பெரும் வேள்வியிலொன்றுகிய விருந்தோம்பலே யிகழ்வாரது பொருள்அறனல்லாத (தருமஞ் செய்தற் குரியதாகாத) பொருளாயிருத்தலின் அறனல்லாத என்னும் எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சத்தை விருந்தென்பதனே டியைக்காது பொருளென்பதனே டியைத்துக்கொள்க.

× தழுவல் என்பது தழாலென்றுயது போன்று ஒருவல் என்பது ஓரால் என்றுயிற்று. ஓரால் - நீக்குதல்.

விருந்தினரை யிகழுவார்க்குள்ள பொருள் தருமத்திற்கு உரிமை யாகாத பொருளாயிருத்தலின், அது போகின்றி நின்றவழியும் அதனால் பொருளுடையவர் பயன் கொள்ளாதிருக்கிறார்; இருக்கவே, அவர் பொருளுடையவரா யிருந்தும் ("வைத்துப் பொருளைத் தானுகாான் வழங்கா னிருந்துஞ் செத்தானே, செத்த பின்ன ரென்செய்வான் தீயார்கொள்வ ரீட்டேனான், மெத்தும் வருத்த மேயன்றி வேரொன்றில்லே" "எனதென தென்றிருந்த மேழை பொருளே, யெனதென தென்றிருப்பன் யானுக் - தனதாயின், ருளு மதனே வழங்கான் பயன்றுவ்வான், யாளு மதனே யது" என்றுள்ளபடி) பொருளில்லாதவராகவே யிருத்தல் போன்று அறி

தேவி.—(இ-ன்). (ஒருவனுக்கு) இன்மையுளின்மை - வறுமையுள்ளும் வறுமையாவது, விருந்தொராஅல் - விருந்தினரை (எற்றுக்கொள்ளாமல்) நீக்குதலாம், (அதுபோல), வன்மையுள்வன்மை - வலிமையுள்ளும் வலிமையாவது, மடவார் - அறிவில்லாமையினால் தீமை செய்தவரை, பொறை - பொறுத்தல், (எ - று).

இக்குறள் எடுத்துக்காட்டுவமையணி. விருந்தினரை நீக்குதற்கேதுவாகிய பொருள் அறத்திற்குரிய பொருளாகாதவாறு போன்று அறிவிலார் செய்த தீமையைப் பொறுத்தலும் எளிமையாகாதே வலிமையாமென்பது கருத்து.

(க-து). வல்லமை பலவற்றுள்ளும் வல்லமையாவது அறிவிலார்செய்த குற்றத்தைப் பொறுத்தலாம் என்பது.

3. To neglect hospitality is poverty of poverty. To bear with the ignorant is might of might.

உ. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்.

பரி.—(இ-ள்). ஒருவன் † சால்புடைமை தன்கணின்று நீங்காமை வேண்டுவனாயின், அவனுக்கு பொறையுடைமை தன்கண் அழியாமற் காத்தொழுகப்படும், (எ-று).

பொறையுடையாற் கல்லது சால்பில்லை யென்பதாயிற்று. இவை கான்கு பாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

தேவி.—(இ-ள்). (ஒருவன்) நிறையுடைமை-சால்புடைமையானது, நீங்காமை - (தன்னிடத்தினின்றும்) நீங்காமை, வேண்டின் - வேண்டுவிலார் செய்த குற்றத்தைப் பொறுத்தக் கொள்ளுதல் மென்மை (எளிமை) யாஞலும் அது மென்மையாகாது வன்மை (வலிமை) யாயே யிருக்கின்ற தென்பது கருத்தாமென்க.

இதனால் விருந்து விலக்கலின் மேற்பட்ட தரித்திரமும் பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்தலின் மேற்பட்ட வல்லமையும் இல்லை யென்றபிற்று. ஆகவே, விருந்தினரை யோம்புகின்றவன் பொருளில்லாதவனாயிருந்தாலும் பொருளுடையவனுகவே கருதப்படுவோ னென்பதும் பிறரியற்றிய குற்றத்தைப் பொறுத்துக் கொள்பவன் இந்திரிய நிக்கிரகஞ் செய்யும் வல்லமை யில்லாதவனாயிருந்தாலும் அவ்வல்லமை யுடையவனுகவே கருதப்படுவானென்பதும் பெற்றாம்; பெறவே, இந்திரிய நிக்கிரகஞ்செய்யும் வலிமையிலும் பிறர் செய்த குற்றத்தைப் பொறுக்கும் வலிமை மேன்மையுடைய தாயிற்றென்க.

† சால்புடைமை - சற்குணங்களெல்லாம் ஒன்றனுள் குறைவின்றி பூரணமாயிருத்தல்.

வாஞயின், (அவஞல்), பொறையுடைமை - பொறுமையுடைமையானது, போற்றி-(தண்ணிடத்தழியாமற்) பாதுகாத்து, ஒழுகப்படும்-நடக்கப்படும்.

பொறுமையுடையவனுக்கல்லாமல் மற்றவருக்கு நிறையுடைமையில்லை யென்பதாயிற்று. இவை நான்குபாட்டாலும் பொறையுடைமையின் சிறப்புச்சொல்லப்பட்டது.

(க-து) நிறையுடைமையை விரும்புகின்றவன் பொறையுடைமையைத் தன்னிடத்து அழியாமற் காக்கக் கடவன் என்பது.

4. If you desire that greatness should never leave you, preserve in your conduct the exercise of patience.

ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

பரி.—(இ-ள்). பிறன் தமக்குத் தீங்குசெயதவழிப பொறது அவனை ஒறுத்தாரை அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துக் கொள்ளார்; அதனைப பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து கொள்வர் (எ-று).

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனை டொத்தலின் 'ஒன்றுக வையார்' என்றார். பொதிந்து வைத்தல - சால்புகடமைபற்றி † இடைவிடாது நினைத்தல்.

தெளி.—(இ-ள்). (பிறன் தமக்குத் தீமை செய்த விடத்து) ஒறுத்தாரை - (பொறுக்காமல் அவனை) தண்டித்தவரை, (அறிவுடையார்), ஒன்றுக - ஒருபொருளாக, வையார் - மனத்துட்கொள்ளார், பொறுத்தாரை - (அத்தீமையைப்) பொறுத்தவரை, பொன் போல் - பொன்னைப் போல, பொதிந்து - முடிந்து, வைப்பர் - மனத்துட்கொள்வர் (எ-று).

தண்டித்தவரும் அத்தீமை செய்தவனைடொத்தலால்'ஒன்றுகவையார்' என்றார். பொதிந்துவைத்தல் - நிறையுடைமைகாரணமாக இடைவிடாது நினைத்தல்.

(க-து). அறிவுடையவர் பொறுமையில்லாதவரை யொருபொருளாக மதியாது அரிதுடையவரைப் பொன்னைப்போல மதிப்பர்.

5. The wise will not at all esteem the resentful. They will esteem the patient even as the gold which they lay up with care.

† இடைவிடாது நினைத்தலாவது தம்மைத் தண்டித்தவரைத் தண்டியாது பொறுத்துக்கொண்டவரது பொறுமையைப் பொன்னை முடிந்து வைத்துக்கொண்டிருப்பவன் அப்பொன்னைக் காப்பதுபோன் றறிவுடையார் செண்ணியிருத்தல்.

சு. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

பரி.—(இ-ள்). தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு உண்டாவது அவ் வொருநாளை யின்பமே, அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழுண்டாம், (எ-று).


ஒருநாளையின்பம்—அந்நாளொன்றிலும் கருதியது முடித்தே மெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். † ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடை உலகமென்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது.

தெளி.—(இள்) ஒறுத்தார்க்கு-(தமக்குத் தீமை செய்தவனைத்) தண்டித்தவர்க்கு (உண்டாவது), ஒருநாளை யின்பம்-அவ்வொருநாளை யின்பமே, பொறுத்தார்க்கு - (அத்தீமையைப்) பொறுத்தவர்க்கு பொன்றுந்துணையும்-(உலகம்) அழியுமளவும், புகழ் - கீர்த்தி (உண்டாம்), (எ-று).

ஒருநாளையின்பம்-அந்நாளொன்றிலும் கினைத்தது முடித்தோ மென்று செருக்கி யிருக்கும் பொய்யின்பமாம். தனக்காதாரமாகிய உலகம் அழியப் புகழும் அழியுமாதலின், பொருத்த முடைய உலகமென்னுஞ் சொல் வருவித்துக் கூறப்பட்டது. செருக்கு-கர்வம்,

(க-து). தமக்குத் தீமைசெய்தவனைத் தண்டித்தவருக் கொருநாளை யின்பமும், அத்தீமையைப் பொறுத்தவருக் குலக மழியுமளவும் புகழுமுண்டாம் என்பது.

6. The pleasure of the resentful continues for a day. The praise of the patient will continue until the world passes away.



எ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநோற்
றறனல்ல செய்யாமை நன்று.

பரி.—(இ-ன்). செய்யத் தகாத கொடியவற்றைத் தன்கட்பிறர் செய்தாராயினும், அவர்க்கு அதனால் வருந் துன்பத்திற்கு நோற்று தான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்குநன்று,(எ-று).

† ஆதாரமாகிய வுலகம் பொன்ற (கெட) ஆதேயமாகிய புகழும் பொன்று (கெடு) மாகலின் ஏற்புடை (தகுதியுடைய) உலகமென்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. இங்ஙனங் கூறியதினால் ஆதாரமாகிய வுலக மூள்ளவரைக்கும் ஆதேயமாகிய புகழிருக்குமென்பது பெறப்பட்டது. இஃது "ஒன்று வுலகத் தியர்ந்த புகழல்லாற், பொன்றுது நிற்பதொன் றில்" எனப் புகழதிகாரத்திற்கூறுவதனாலும் விளங்கும்.

உம்மை சிறப்பும்மை. தின்பத்திற்கு நோதலாவது ‡ "உம்மை யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்" என்று பரிதல்.

தெளி.—(இ-ன்). நிறனல்ல - செய்யத்தகாத தீயசெயல்களை, தன் தன்னிடத்து, பிறர் - அயலார், செய்யிலும் - செய்தாராயினும், நோ (அவருக்கு அதனால் வரும்) தின்பத்திற்காக, நொந்து - வருந்தி, அறனல்ல - (தான்) அறமல்லாத செயல்களை, செய்யாமை-செய்யாதிருத்தல் நன்று - (ஒருவனுக்கு) நல்லதாம், (எ-று).

செய்யினுமென்றவும்மை இழிவுசிறப்பும்மை. தின்பத்திற்காக வருந் துதலாவது இப்பாவத்தினால் இவர் மறுமையில் எரிவாய் நரகத்தில் வீழ் வாரேயென் றிரக்கங்கொள்ளுதல்.

(க-து). செய்யத்தகாத கொடியசெயல்களைத் தன்னிடத்துச் செய்தவருக்குப் பின்வரும் தீங்கிற்களஞ்சித் தருமமல்லாத செயல் களை அவரிடத்துச் செய்யாதிருத்தல் ஒருவனுக்குச் சிறப்புடைய வறமாம் என்பது.

7. Though others inflict injuries on you, yet compassionating the sorrow that will come upon them it will be well not to do to them any thing contrary to virtue.

அ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

பரி.—(இ-ள்). மனச்செருக்கால் தங்கட் டீயவற்றைச் செய்தாரைத் தாம் தம்முடைய பொறையான் வென்று விடுக, (எ-று).

தாமும் அவர்கட் டீயவற்றைச் செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு † வெல்க வென்பதாம். இவை நான்கு பாட்டானும் பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

தெளி.—(இ-ன்). மிகுதியால் - மனச்செருக்கினால் (தம்மிடத்து), மிக்கவை - தீயசெயல்களை, செய்தாரை - செய்தவர்களை, தாம் - தாங்கள், தந்தகுதியால் - தமது பொறுமையினால், வென்றுவிடல் - வென்று விடக் கடவர், (எ-று).

தாமும் அவரிடத்துத் தீயசெயல்களைச்செய்து தோல்வியடையாது பொறுமையால் அவரிலும்மேம்பட்டு வெல்லுகவென்பதாம். இவை நான்கு பாட்டானும் பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.

‡ காலடியார், திறவு, அ. இதன்பொருள் மறுமையி லெரிகின்ற வாயையுடைய நரகத்திலே வீழ்வார்களே என்பது.

†† "வெல்வது, வேண்டின் வெகுளி விடல்" என்பது நான்மணிக் கடிகை.

(க-னி). தீமைசெய்தவரைப் பொறுமையால் வெல்லவேண்டும் என்பது.

8 Let a man by patience overcome those who through pride commit excesses

கூ. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சோ னுேற்கிற் பவர்

பரி.—(இ - ள்). இல்வாழ்க்கைக்க ணின்றேயும் துறந்தாரைப் போலத் தூய்மையுடையார், நெறியைக்கடந்தார்வா யின்னுத சோல்லைப் பொறுப்பவர், (எ - று).

தூய்மை - ¶ மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினர்; தீய சொற்கள் பயின்றதெனத் தாம்வேண்டியதன் இழிபு மூடித்தற்கு.

தேளி.—(இ-ள்). இறந்தார் (நல்வழியைக்) கடந்தவரது, வாய்-வாயினின்றுண்டாகும், இன்னுச்சொல்-வெறுக்கப்படுஞ் சொற்களை, சோற்கிப்பவர்-பொறுப்பவர்,(இல்வாழ்க்கையிலேயிருந்தாலும்), துறந்தாரின்-துறந்தவரைப்போல, தூய்மை - பரிசுத்தகுணத்தை, உடையர்-உடையவராவர்.

தூய்மை - மனவழுக்கில்லாமை. வாயென்ற வேண்டாது சொல்லினர்; (அவ்வாய்) தீயசொற்களைப்பேசிப்பழகியதெனத தாம்வேண்டியதன் இழிபு தோன்றுதற்கென்க.

(க - து) தீயவழியில் நடப்பவரது கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர் துறவிகள் போலப் பரிசுத்தகுண முடையவராவர்.

9 Those who bear with the uncourteous speech of the insolent are purer than ascetics.

கo. உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சோல்லு
மின்னுச்சோ னுேற்பாரிற் பின்.

பரி.—(இ - ள்). விரதங்களான் ஊனைத்தவிர்த்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரிலும்பெரியர்; அவர் பெரியாரவது தம்மைப் பிறர் சோல்லும் இன்னுத சோல்லைப் பொறுப்பாரிற்பின், (எ - று).

பிறர் - அறிவிலாதார். * சோலாமைக் கேதுவாகிய இருவகைப் பற்

மனமாசினமை-மனத்தின்கணகாமம்வெகுளி மயக்கஙகளல்லாமை.

* சோலாமைக் கேதுவாகிய இருவகைப்பற்று - விரதங்களினுல் உணவைவிட்டுத் தம்மையடைந்த பசி சோய் முதலியவற்றைப் பொறுத்துக்கொள்ளாமைக்குக் காரணமான யானெனதென்னுஞ் செருக்கு. (தானல்லாத வுடம்பையானென்று கருதி யதனிடத்தில் வைக்குமபிமானம் யானென்னுஞ்செருக்கு. இஃது அகங்காரமெனபயும்.தன்னுசெம்பந்த


ரூடு கின்றே † கோற்றலின் 'இன்னுச்சொ னுேற்பாரிற் பின்' என்ருர். இவை யிரண்டோட்டானும் பிறர் மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). உண்ணுது - (விரதங்களினுல்) உணவைவிட்டு, நோற்பார் - (தம்மை யடைந்த நோயைப்) பொறுப்பவர், பெரியர் - (எல்லாரினும்) பெரியவராவார், (அவர்பெரியவராவது),பிறர் - அயலார், சொல்லும் - (தம்மைப்பற்றிச்) சொல்லும், இன்னுச்சொல் - வெறுக்கப்படுஞ் சொற்களை, நோற்பாரின - பொறுப்பவரின், பின் - பின்னும்,(எ - று).

பி ற ர் - அறிவில்லாதவர். தவஞ்செய்யாமைக்குக் காரணமாகிய யானெனதென்னும் இருவகைப்பற்றுக்களோ டிருத்தே பொறுத்தலால் 'இன்னுச்சொ னுேற்பாரிற் பின்' என்ருர். (பிறர்சொல்லும் வெறுக்கப்படுஞ் சொற்களைப் பொறுப்பவர் தவஞ் செய்வாரினும் பெரியாரென்பது சொல்லலாயிற்று). இவை இரண்டோட்டாலும் பிறர் வருத்தமுண்டாகச் சொல்லியவற்றைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.

(க - து). பிறர் கூறுங் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவருக்கு உணவைவிட்டுத் தம்மையடைந்த நோயைப் பொறுத்துக் கொள்ளுந் தபசிகள் பிற்பட்டவராவர் என்பது.

10. Those who endure abstinence from food are great, next to those who endure the uncourteous speech of others.



பதின்மூன்றுவது அதிகாரம்.

அழுக்காருமை—*Against Envy.*

பரி.—இதனுள் $ அழுக்காறென்பது ஒருசொல். அதற்குப்

மில்லாத பொருளை யெனதெனக்கருதி அதனிடத்துவைக்கு மபிமானம் என தென்னுஞ் செருக்கு. இதுமமகார மெனப்படும்). இதனுல்பொறுத்துக்கொள்ளுதற்குக் காரணம் யாவென தென்னுஞ் செருக்கில்லாமை யென் ருயிற்றென்க

† நோற்றலின் - அறிவில்லாதார் சொல்லுகின்ற வெறுக்கப்படுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதலினுல்.

$ அழுக்காறு என்பதை அழுக்கு ஆறு என இரண்டு சொல்லாகக் கொள்ளாது ஒரு சொல்லாகவே கொண்டு 'அழுக்காறென்பது ஒருசொல்' என்ருர். அழுக்கறுத்தல் என்னுந் தொழிற்பெயர் விகுதிகெட்டு முதனிலை திரிந்து அழுக்காறு என வந்தது. இவ்வாறு வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயரெனப்படும். அழுக்காறு என்பது சொல்லால் உடன்பாடாயிருப்பினும் பொருளால் எதிர்மறையை யுணர்த்திற்று. இலக்கணக் கொத்தில் "விதிச்சொன் மறைப்பொரு ளாகி வருவும்" என்பதற்கு இஃதே உதாரணமாகக் காட்டப்பட் டிருக்கின்றது.

பொருள் * மேலே யுரைத்தாம். † அச்சொற் பின் அழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை ஆகாரமும் மகாஜகாரவிகுதியும் பெற்று § அழுக்காறுமையென நின்றது. இப்பொறுமையும் பொறைக்கு மறுதலையாகலின், இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது

தே.—அஃதாவது பிறரிடத்துச் செல்வ முதலியனவற்றைக் கண்டவிடத்துப் பொறுமைப்படாமை. இப்பொறுமையும்பொறுமைக்கு எதிரியதாகலின், இப்பொறுமையை விலக்குதற்கு இவ்வழுக்காருமை பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

க. ஒழுக்காருக் கோள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

பரி.—(இ - ள்). ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னுங் குற்றமில்லாத இயல்பினைத் ¶ தனக்கோதிய ஒழுக்கநெறியாகக் கோள்க, (எ - று).

இயல்பு - அறிவோடுகூடிய தன்மை. ‖ அத்தன்மையும் கன்மபயத்தலின், ஒழுக்கநெறிபோல உயிரினுமோம்புக என்பதாம்.

தெளி:—(இ - ன்) ஒருவன்—தன்னெஞ்சத்து - தனது மனத்தின்கண், அழுக்காறு - பொறுமையென்னுங் குற்றம், இலாத - இல்லாத, இயல்பு - இயல்பினை, ஒழுக்கு - (தனக்குச் சொல்லிய) ஒழுக்கத்தினது, ஆறாக - வழியாக, கொள்க - கொள்ளக்கடவன், (எ - று).

இயல்பு - அறிவோடுகூடிய தன்மை, அவ்வறிவோடு கூடிய தன்மையும் நன்மையைத் தருதலால், அழுக்காறிலாத வியல்பினை ஒழுக்கவழிபோல உயிரினும் சிறந்ததாகக் காப்பாற்றுக என்பதாம்.

* மேலே யுரைத்தாம்—அறன்வலியுறுத்தலின் 5 - வது குறளினுரையில் 'பிறராக்கம்பொறுமை' எனறுகூறினும்.

† அச்சொல் - (அழுக்காறென்னுஞ் சொல்) அழுக்காற்றை (பொறுமைப்படுதலைச்) செய்யாமை யென்னும் பொருள் தோன்ற எதிர்மறை ஆகாரமும் மகரவகார (மை) விகுதியும் பெற்று அழுக்காருமை (பொறுமைப் படுதலைச் செய்யாமை) யெனநின்றது

§ அழுக்காருமை யென்பது சொல்லால் எதிர்மறையா யிருப்பினும் பொருளால் உடன்பாட்டை யுணர்த்திற்று. இலக்கணக்கொத்தில் "மறைச்சொல் விதிப்பொருளாக வருதலும்" என்பதற்கு இஃதே யுதாரணமாகக் காட்டப்பட்டிருகின்றது. அழுக்காருமை யென்பதற்குப் பொறுமைப்படாமை அஃதாவது பொறுத்தலென்பது பொருள்.

¶ தனக்கோதிய-ஒழுக்கமுடைமையதிகாரத்தில் "ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க, முயிரினு மோம்பப் படும்" என்று தனக்குச சொன்ன.

‖ அத்தன்மையும்-தன்னெஞ்சத் தழுக்காறிலாத வியல்பும்.

(க - து). ஒருவன் பொறுமை யில்லாதிருத்தலைத் தனக் கோதிய ஒழுக்க வழியாகக் கொள்ளக்கடவன் என்பது

1. Let a man esteem that disposition which is free from envy in the same manner as propriety of conduct.

உ விழுப்பேற்றி னஃதோப்ப தில்லையார் மாட்டே
மழுக்காற்றி னன்மை பெறின்.

பரி.—(இ - ள்). யாவர்மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலை ஒருவன் பெறுமாயின், * மற்றவன் பெறுஞ் சீரிய † பேறுகளுள் அப் பேற்றினை யொப்பதில்லை, (எ - று).

அழுக்காறு பகைவர் மாட்டும் ஒழிதற்பாற் றென்பார் 'யார்மாட்டும்' என்றார். அன்மை - வேறுதல். இவை யிரண்டு பாட்டானும் அழுக்காறின்மையது குணங் கூறப்பட்டது.

தெளி.—(இ - ன்). யார்மாட்டும் - யாவரிடத்தும், அழுக்காற்றின் - பொறுமையினின்றும், அன்மை - நீங்குதலை, பெறின் - (ஒருவன்) பெறுவானெயின், விழுப்பேற்றின் - (மற்றவன் பெறும்) மேலான பேறுகளுள், அஃது - அப்பேற்றினை, ஒப்பது - ஒத்திருப்பது, இல்லை—, (எ - று).

பொறுமைப்படுதல் பகைவரிடத்தும் ஒழிதல்வேண்டுமென்பார் 'யார் மாட்டும்' என்றார். அன்மை - வேறுதல், இவையிரண்டு பாட்டாலும் பொறுமை யில்லாமையினது குணம் சொல்லப்பட்டது.

(க - து). ஒருவன் யாவரிடத்தும் பொறுமை யில்லாதிருப்பானெயின், அவனுக்கு அதைவிடச் சிறந்த பேறு இல்லை என்பது.

2. Amongst all attainable excellencies there is none equal to that of being free from envy towards every one.

ஊ அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

பரி.—(இ - ன்). மறுமைக்கும் இம்மைக்கும் அறமுஞ் ‡ செல்வமும் ஆகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப்படுவான் பிறன் செல்வங் கண்டவழி அதற்று உவவாது அழுக்காற்றைச் செய்வான், (எ - று).

அழுக்கறுத்த லெனினும் அழுக்கா றெனினும் ஒக்கும். ‡ அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமாமென்பதாம்.

* மற்று - பின்பு. † பேறு - பெறப்படுவது. அது புகழ் முதலியனவாம்.

‡ புகழும் என்றும் பாடமுண்டு. † அழுக்காற்றைச் செய்யின் என்றும் பாடமுண்டு.

தெளி.—(இ - ள்). அறன் - (மறுமைக்கு) அறமும், ஆக்கம் - (இம்மைக்குச்) செல்வமும் (ஆகிய வுறுப்புகளை), வேண்டாதானென்பான்-(தனக்கு) வேண்டாதவனென்று சொல்லப்படுவோன், பிறன் - பிறனது, ஆக்கம்-செல்வத்தை, பேணுது- (கண்டலிடத்து அதற்காக) மகிழாமல், அழுக்கறுப்பான் - பொறுமைப்படுதலைச் செய்வான், (எ - று).

பொறுமைப் படின் தனக்கே துன்பமாம் என்பதாம்.

(க - து). பொறுமை யுடையவனுக்கு மறுமைக்குரிய அறமும் இம்மைக்குரிய பொருளுமில்லை என்பது.

3. Of him who instead of rejoicing in the wealth of others envies it, it will be said "he neither desires virtue nor wealth."



ச. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

பரி—(இ - ள்). அழுக்காறு ஏதுவாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார்; அத்தீநெறியால் நமக் $ கிருமையினுந் துன்பம் வருதலை யறிந்து, (எ - று).

அறனல்லவையாவன - செல்வம், கல்வி ‡ முதலியன உடையார்கட் டீங்கு நினைத்தலும் சொல்லுதலும் செய்தலுமாம்.

தெளி.—(இ - ள்). (அறிவுடையோர்) அழுக்காற்றின் - பொறுமை காரணமாக, அல்லவை - அறமல்லாதவைகளை, செய்யார்—, இழுக்காற்றின்-(பொறுமைப் படுதலென்னும்) அத்தீயவழியால், ஏதம்-துன்பமானது, படுபாக்கு-(தமக்கு இருமையிலும்) உண்டாதலை, அறிந்து - தெரிந்து, (எ-று).

அறமல்லாதவையாவன-செல்வங் கல்வி முதலியன வற்றை யுடையனடத்தித் தீமையாயினவற்றை நினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

(க-து.) அறிவுடையவர் பொறுமை காரணமாகப் பிறர்க்குத் தீங்கானதைத்தானுந் தீமைசெய்யார் என்பது.

4. The wise knowing the misery that comes from transgression will not through envy commit unrighteous deeds.



நி. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னுர்
வழுக்கியுங் கேடீன் பது.

$ இருமையிலுந் துன்பம் வருதலாவது இம்மையில் வறுமைத்துன்பமும் மறுமையில் நரகத்துன்பமு மூண்டாதல். ‡ முதலியன என்றதனால் சொற்செலவு, நிலக்கிழமை, ஆண்மை, அதிகார முதலிய வற்றையுங் கொள்க.

பரி.—(இ-ள்.) அழக்காறு பகைவரை ஒழிந்துங் கேடு பயப்பது ஒன் * றகலின், அவ்வழக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடு பயத்தற்கு அதுதானே அமையும், (எ-று).


அதுவே யென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற் றொக்கது.

தேவி.—(இ-ள்.) அழுக்காறு - பொறுமையானது, ஒன்னர் - பகைவரை, வழுக்கியும்-ஒழித்திருந்தும், கேடீன்பது-கேட்டைத் தருவதொன்று, (ஆதலால்), உடையார்க்கு-(அப்பொறுமையை)உடையவர்க்கு (கேட்டைத் தருதற்குப் பகைவர் வேண்டாம்), அது - அப்பொறுமையே, சாலும் - போதும், (எ-று).

அதுவே யென்னும் பிரிநிலையேகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

(க - து.) பொறுமையே ஒருவனுக்குக் கேட்டைத்தரும் பெரும் பகையாம் என்பது.

5. To those who cherish envy that is enough. Though enemies fail in their attempts, that will bring destruction.



சு. † கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

பரி.—(இ - ள்) ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காறு றைச் சேய்வானது சுற்றம் உடுக்கப்படுவதும் உண்ணப்படுவது மின்றிக்கெடும், (எ-று).

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள் களைப்பற்றிப்பொறுமைசெய்தல். சுற்றங்கெடுமெனவே, அவன்கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர் பேறு பொறுமை தன் பேற்றையேயன்றித் தன்சுற்றத்தின் பேற்றினையும் இழப்பிக்கு மென்பதாம்.

தேவி.—(இ-ள்.) கொடுப்பது - (ஒருவனும் பிறர்க்குக்) கொடுக்கப் படும் பொருள்களைப்பற்றி, அழுக்கறுப்பான் - பொறுமைப் படுபவனது, சுற்றம்-உறவினர், உடுப்பதூஉம் - உடுக்கப்படுவதும், உண்பதூஉம் - உண்ணப்படுவதும், இன்றி-இல்லாமல், கெடும்-அழிவர், (எ-று.)

---

* ஆகலின் என்பது ஏதுப் பொருளே யுணர்த்து மிடைச்சொல்.

† "எடுத்தொருவ ருக்கொருவ ரீவதனின் முன்னே, தடுப்பது தினைத் தினைத்த கோதகையில் வெள்ளி, கொடுப்பது விலக்குகொடி யோய்தினைது சுற்றம், உடுப்பதவு முண்பதவு மின்றிவிடு கின்றாய்" என்பது இராமாயணம்.

சுற்றத்தார் கெடுவரெனவே, அவன் கெடுதல் சொல்லாமலே பெறப் பட்டது. பிறர் செல்வத்தைக் கண்டு பொறுமைப்படுதல் தன் செல்வத் தையே யல்லாமல் தன் சுற்றத்தாரது செல்வங்களையும் இழக்கச் செய்யு மென்பதாம்.

(க-து) ஒருவர் மற்றொருவருக் கொன்று கொடுப்பதைக்குறித் துப் பொறுமைப் படுவோனது சுற்றத்தாரும் உடுக்கவாடையு முண்ணச்சோறு மில்லாமற் கெடுவர் என்பது.

6. He who is envious at a gift made to another will with his relations utterly perish destitute of clothing and food.

எ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

பரி.—(இ - ள்). பிறராக்கங் கண்ட வழிப் பொறுமை உடையா னைத் திருமக டானும் பொறாது தன்றவ்வைக்குக் காட்டி நீங்தும்,(எ-று).

* தவ்வை - மூத்தவள். தவ்வையைக் காட்டியென்பது † "அறிவுடை யந்தண னவளைக்காட் டென்றலே" என்பதுபோல ‡ உருபுமயக்கம்.

* தேவாசுரர் திருப்பாற்கடலைக் கடைந்தபோது அக்கடலினின்று மூதேவி முன்னும் இலக்குமி பின்னும் பிறந்தமையாலே மூதேவிக்கு மூத் தவள் என்னும் பெயருண்டாயிற்று. 'சீதேவி யாருடனே துய்யதிருப் பாற்கடலின், மூதேவி யேன்பிறந்தாள் முன் " என்பது தனிப்பாடல்.

† கலித்தொகை, மருதம், எ. இதன்பொருள் அறிவினையுடைய பிரா மணன் அவளுக்குக் காட்டென்று சொன்னலே என்பது 'அறிவுடை' என்னுமிவ் வடிக்கு நச்சினர்க்கினியர் " அறிவில்லாத அந்தணன் அவ னைக் காணப்பண்ணென்று சொன்னலே" என்றுரைகூறி "அறிவுடை யந்தணன் இகழ்ச்சி. அவட்கு என உருபுமயக்கமுமாம்" என்று விசேட வுரை வகுத்திருக்கின்றனர்.

‡ தவ்வையை யென்பதன்கணுள்ள ஐயென்னு மிரண்டனுருபு தனக் குரிய செயப்படுபொருளே யீட்டுக் கு வென்னும் நான்கனுருபிற் குரிய கோடற் பொருளில் (அவனே யென்பது அவளுக்கு என வந்தாற்போலத் தவ்வையை யென்பது தவ்வைக்கு என) வந்தமையின், உருபு மயக்கமா யிற்று. "உருபின் மயக்கமோ ருருபின் பொருளொடு, தன்பொருள் விடுத் தித் தலைமயங் குதலே" என்பது இலக்கண விளக்கம். இவ்வாறன்றி ஒரு வேற்றுமையின் பல வுருபுகளில் ஒருருபு குறிக்கவேண்டிய பொருளை அவ் வேற்றுமையின் மற்றொருருபு குறிப்பது உருபு மயக்கமென்பாரு முண்டு

$ மனத்தைக் கோடெவித்து அழுக்காறுடையனுயினனே யென்றுரைப் பாருமுளர்.

தெவி;—(இ - ன்). அழுக்காறுடையானை - (பிறர்செல்வங் கண்ட விடத்துப்)பொருமைப் படுகின்றவனை; செய்யவள்-திருமகள், அவ்வித்தி-(தானும்) பொருமைப்பட்டு, தவ்வையை-(தனது) தமக்கைக்கு, காட்டி - காண்பித்து, விடும் - நீங்குவாள், (எ - று)

தவ்வையை யென்பது தவ்வைக்கு என்னும் பொருளில்வந்தமையின், உருபு மயக்கமாம் தவ்வை - மூதேவி. திருமகள் - இலக்குமி.

(க - து). பொருமை யுடையவனை மூதேவியடைவாள் என் பது.

7. Lakshmi envying (the prosperity) of the envious man will depart and introduce her sister to him.

அ அழுக்கா றெனவொரு பாவி திருச்சேற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

பரி.—(இ - ள்). அழுக்காறென்று சொல்லப்பட்ட வோப்பிலாத பாவி தன்னை யுடையானை இம்மைக்கட் செல்வத்தைக் கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும், (எ - று).

× பண்பிற்குப் பண்பில்லையேனும், தன்னையாக்கினனை இருமை யுங் கெடுத்தற் கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் 'பாவி' என்றார்;

$ ஒளவிய மென்பது மனக்கோட்டத்திற்கும் பெயராதலின், அவ் வித்தழுக்கா றுடையானை என்பதற்கு மனத்தைக் கோடெவித்து (கோ ணப்பண்ணி) அழுக்காறுடையனுயினனே (பொருமை யுடைத்தா யிருக் கின்றவனை) யென்றுரை கூறுவாருமுளர். இவ்வுரையினுல் பொருமை யுடையவனது மனத்தைத் திருமகளே கோணப்பண்ணுகிறு னென்பது பெறப்படும்.

× அழுக்காறு என்பது தர்க்குணங்களிலொன்று. குணமெனினும் பண்பெனினுமொக்கும். "பொருண்மைச்சாதி யுடைமையாதல் குணமு டைமையாதல் பொருட்கிலக்கணம்" "பண்பிற்குப் பண்பு கோடல் பொருந் தாமையின்" என்று தருக்கநூல் கூறுகின்றமையின், பண்பியில் (குணி யில்) பண்பிருக்கு மெனவும், பண்பு மற்றொரு பண்பையேற்றுப் பண்பி யாதலின்றெனவும் பெறப்படுகின்றன. படவே அழுக்காறென்பது குண மா யிருத்தலால் அது பண்பியாகா தென்றுமியற்று; ஆகவே, அதனை ப் பாவமெனக் (குணமாகக்) கூறுது பாவி யெனக் (குணியாகக்) கூறு வது வழுவாம். வழுவாதல் பற்றிப் 'பண்பிற்குப் பண்பில்லையேனும், (அழுக்காறென்னுங் குணத்திற்கு மற்றொரு குணத்தை யேற்றுக்

‖ கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின். இவை யாறுபாட்டானும் அழுக்காறுடைமையது குற்றங் கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). அழுக்கா றெனவொரு பாவி-பொருமையென்று சொல்லப்பட்ட வொப்பில்லாத பாவியானவன் (தன்னையுடையவனை), திருச்செற்று - (இம்மையில்) செல்வத்தைக் கெடுத்து, தீயுழி யுய்த்துவிடும் - (மறுமையில்) நரகத்தினிடத்துச் செலுத்திவிடுவான், (எ - று).

அழுக்காறென்னுங் குணத்திற்குக் குணமின்றாயினும், தன்னை யுண்டாக்கினவனை இருமையிலும் கெடுக்கின்றதொடுமைபற்றி அதனைப் 'பாவி' என்றார்; கொடுந்தொழிலுடையானைப் பாவியென்னும் வழக்கமிருத்தலின். இவை யாறுபாட்டாலும் பொறுமை யுடைமையினது குற்றம் சொல்லப் பட்டது.

(க - து). பொறுமைபானது தன்னை யுடையவனைக் கெடுத்து நரகத்திற்றள்ளும் என்பது.

8. The sinner's envy will destroy a man's wealth in this world and drive him into the pit of fire in the next world.

கூ. அவ்விய நெஞ்சத்தா னுக்கமுஞ் சேவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

பரி.—(இ - ள்). கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும் ஏனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின், அவை ஆராயப்படும், (எ - று).

கோட்டம் - ஈண்டு அழுக்காறு. உளவாயினென்பது எஞ்சிநின்றது, ¶ ஆக்கக் கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் எதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையாரால் $ இதற்கேதுவாகிய பழவினையாதென்று ஆரா

குணியாகுந்தன்மை யின்றாயினும்) தன்னையாக்கினானை (அழுக்காறென்னுந் தன்னையுண்டு பண்ணினவனை) இருமையுங் கெடுத்தற் கொடுமை (இம்மை மறுமை யென்னு மிரண்டிலுங் கெடுக்குந் தீமை) பற்றி, அழுக்காற்றினை(பாவமெனக் குணமாகக் கூறுது) (குணியாகப்) பாவி யென்றார்' என்று கூறப்பட்டது. அழுக்காறுகிய குணத்தைப் பாவமெனக்கூறுது 'திருச் செற்றுத் தீயுழி யுய்த்து விடும்' என எது காட்டிப் பாவி யெனக்கூறியது எது வருவகவணியாம்.

‖ கொடியானைப் பாவி யென்னும் வழக்குண்மையின்-தீயகாரியங்களைச் செய்கின்றவனைப் பாவியென்று பேசும் வியவகாரமிருக்கிற படியினால். இது கொடியகாரியங்களைச் செய்த துரியோதனனைப் பாவித் துரியோதனன் என்று கூறுவதாலு மறிதற் பாற்றும்.

¶ ஆக்கக்கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் எதுவாக - செல்வமுஞ் சரித்திரமும் பொருமையும் நடுவுநிலைமையுங் காரணமாக.

$ இவற்றிற் (ஆக்கக்கேடுகட்) கேதுவாகிய என்னும் பாடமுண்டு.

பப்படுதலின் 'நினைக்கப்படும்' என்றார். § "இம்மைச் செய்தன யாணறி கல்வினை, யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித், திருத்தகு மாமணிக் கொழுத்துடன் போந்தது" என நினைக்கப்பட்ட வாறறிக.

தெளி.—(இன்.) அவ்விய நெஞ்சத்தான் - கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது, ஆக்கமும் - செல்வமும், செவ்வியான்-மற்றைச்செம்மையை யுடையவனது, கேடும் - வறுமையும், (உண்டாயின்), நினைக்கப்படும் - (அவை) ஆராயப்படும், (எ-று).

கோட்டம் - இங்குப் பொருமையென்னும் பொருளது. உண்டாயின் என்பது குறைந்து நின்றது. பொருமையினுற் செல்வமும், நடுவுநிலைமையினுற் கேடும் உண்டாகுதல் கூடாமையால், அறிவுடையவரால் இச்செல்வமும் வறுமையும் உண்டாதற்குக் காரணமாகிய பழவினையாதென்று ஆராயப்படுதலால் 'நினைக்கப்படும்' என்றார். செம்மை - நடுவுநிலைமை.

(க - து). அறிவுடையோர் பொருமையுள்ளவனது செல்வத்தையும் நடுவுநிலைமையுடையவனது வறுமையையும் பழவினையின் பயனென் றெண்ணுவர் என்பது.

9. The wealth of a man of envious mind and the poverty of an upright man will be pondered.

கo. ‡ அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

பரி.—(@ - ள்); அழுக்காற்றைச் செய்து பெரிய ராயினாரும் இல்லை; * அச்செயலிலாதார் பெருக்கத்தி னீங்கினாரும் இல்லை, (எ-று).

¶ செல்பதிகாரம், அடைக்கலக்காதை. கக, கஉ, கஊ, இதன்பொருள் யாணறிய இப்பிறப்பிற் செய்தன வெல்லாம் நல்வினையாகவும் இம்மூழ மாணிக்கக் கொழுத்து போன்ற மனைவியுடன் நீ வந்து ஒரு தினையுமின்றித் தனியே யலைந்தது முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயன் தானே என்பது. பட்டினத்தடிகள் "என்செயலாவது" என்னுஞ் செய்யுளில் "இந்த வூனெடுத்த, பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு, முன்செய்த தீவினை யோயிங்க னேவுக்கு மூண்டதுவே" என்று கூறியது மிங்கறியத் தக்கதாம்.

‡ அழுக்காறு என்னும் பண்புப்பெயர் தொழிற்பெயராங்கால் அழுக்கறல் எனநிற்கும். இங்கு அழுக்கற்று என்பது செய்து என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்.

* அச்செய லிலாதார்க்குள் என்றும் பாடமுண்டு.

இவை யிரண்டுபோட்டாலும் ‡ கேடும் ஆக்கமும் வருதற் கேது ஒருங்கு கூறப்பட்டது

தெளி.—(இ-ள்). அழுக்கற்று - பொறாமைப் படுதலைச்செய்து, அகன்றாரும் - பெரியவராவாரும், இல்லை—, அஃதில்லார் - அச்செயலில்லாதவரும், பெருக்கத்தின் - பெருக்கத்திலிருந்து, சேர்ந்தாரும் - நீங்கினவரும், இல்-இல்லை, (எ - று).

பெருக்கம் - செல்வம். இவை யிரண்டு பாட்டாலும் அழிவும் ஆக்கமும் வருதற்குக் காரணஞ் சேர்த்தது சொலலப்பட்டது.

(க - து) பொறாமைப் பட்டுச் செல்வ முற்றாரும் அஃதின்றி வாழ்வாரும் இலலை யெனபது.

10. Never have the envious become great, never have those who are free from envy been without greatness



பதினொன்காவது அதிகாரம்

வெஃகாமை—*Against Covetousness.*

பரி—அஃகாவது பிறர்க்குரிய பொருளை வௌவக் கருதாமை. பிறருடைமை கவர்தலுமிப் பொருளையே யன்றி யதனைத் தான வௌவக்கருதுதலுங்தற் பமென்றற்கு, இஃது அழுக்காறாமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃகாவது பிறருக்குரியவாயுள்ள பொருளை யபகரித்தாகு கினையாமையாம். பிறருடைமையைக் கண்டவிடத்துப் பொருமையடைதலே யல்லாமல் அவரை தான அபகரிதற்கு கினைத்தலும் குற்றமென்பதற்கு, இது (வெஃகாமை) அழுக்காறாமையின் பின்னே வைக்கப்பட்டது.

க நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்

பரி.—(இ - ள்). பிறர்க்குரியன கோடல் நமது அறம் அன்றென்னும் நடுவுநிலைமை இன்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின், அவ்வெஃகுதலே அவன்குடியைக் கெடச்செயது, பலகுற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும், (எ - று).

‡ கேடுவருதற்கேது அழுக்காற்றைச் செயதலும், ஆகம வருதற் கேது அழுக்காற்றைச் செய்யாமையு மாமெனக கூறப்பட்டது.

அழுக்காற்றைச்செயது பெரியராயினாருமில்லை என்றதனால்அதனைச் செயயாதார் பெரியவராவா ரென்பதும், அச்செயலிலாகார் பெருகுகத்தினின்கு நீருமில்லை என்றதனால், அச்செயலுடையார் பெருக்கத்து னீங்குவா ரென்பதும் பெறப்படுமாறறிக.

குடியை வளரசெய்து பலநன்மையும்பயக்கும் இயல்புபற்றிப் பொருள் வெஃகினென்பார் 'நன்பொருள் வெஃகின்' என்றிர். பொன்றவென்பது $ பொன்றியெனத் திரிந்து நின்றது. செய்தென்பது சொல்லெச்சம்.

தெளி.—(இ - ன்). நடுவின்றி - (பிறர்க்குரிய பொருள்களைக்கொள்ளுதல் நமக்கு அறமல்ல வென்னும்)நடுவுநிலைமை யில்லாமல்,நன்பொருள்- (அவரது) நல்லபொருளை, வெஃகின் - (ஒருவனபகரித்தற்கு) விரும்புவானுயின் (அவ்விருப்பு), குடிபொன்றி- (அவன்) குடியைகெடச் (செய்து), குற்றமும் - பல குற்றங்களையும், ஆங்கே - அப்போதே, தரும் - (அவனுக்குக்) கொடுக்கும், (எ-று).

குடியை வளரசெய்து பல நன்மைகளையும் உண்டாக்குந் தன்மை பற்றிப் பொருள் வெஃகின் என்பார் 'நன்பொருள் வெஃகின்' என்றார். பொன்ற வென்பது பொன்றியெனத் திரிந்து நின்றது. செய்து என்பது குறைந்து நின்றமையின் சொல்லெச்சமாம்.

(கு-து). ஒருவன் நடுவுநிலைமை யில்லாமல் பிறர்பொருளை யபகரிக்க விரும்பினால் அவ்வாறவனது குடியைக் கெடுத்து அவனுக்குப பல குற்றத்தையுங் கொடுக்கும் என்பது.

1. If a man departing from equity covet the property of others at that very time will his family be destroyed and guilt be incurred.

உ. படுபயன் வெஃகிப் பழிப்படவு செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

பரி.—(இ - ள்). பிறர்பொருளை வேளவிறலி தமக்கு வரும்பயனே விரும்பி, அது வேளவுதற்குப் பழியின்கண்ணே படுஞ் செயல்களைச் செய்யார், நடுவுநிலைமையன்மையை அஞ்சுபவர், (எ - று).

நடுவு - ஒருவன் பொருட்குப் பிறன் உரியன் அல்ல னென்னும் நடுவு

தெளி.—(இ - ள்) நடுவன்மை - (ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியனல்லனென்னும்) நடுவுநிலைமையல்லாமைக்கு, நாணுபவர்-அஞ்சுவோர், (பிறர்பொருளை யபகரித்தலினால்). படுபயன் - (தமக்கு) வரும் பயனை, வெஃகி விரும்பி, பழிப்படவு - (அப்பொருளை யபகரித்தற்கு) பழியினிடத்தே பொருந்துஞ் செயல்களை, செய்யார்—, (எ - று).

$ பொன்றியெண்பது - பொன்றுவித்து என்பதன் விகாரமென்பாருமுண்டு.

* நடுவு - நீதி

(க - து) நழிவுநிலைமை யுடையோர் பிறர்பொருளை யபகரித்தலால் தமக்கு வரும் பயனை விரும்பித் தீயசெயல்களைச்செய்யார்.

2. Those who blush at the want of equity will not commit disgraceful acts through desire of the profit that may be gained

கூ. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

பரி.—(@ - ள்). பிறர்பால் வேண்டிய பொருளால் தாம் எய்தும் † நிலையில்லாத இன்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார், அறத்தான் வரும் ‡ நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பவர், (எ - று).

பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியுமென்பார் 'சிற்றின்பம்' என்றார். $ மற்றையின்பமென்பது மற்றின்பமென நின்றது.

† நிலையில்லாத இன்பம் - விரைந்தழியும் இன்பம்.

‡ நிலையுடைய இன்பம் - பாவத்தால்வரும் பொருளா லுண்டாகும் இன்பம் விரைந்து அழிவதுபோலன்றித் தாமுள்ளவரைக்கு மனுபவிக்கும் (இம்மை) இன்பமும், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுறை, தெய்வத்துள் வைக்கப் படும்" என்று இல்வாழ்வானுக்குக் கூறியுள்ள மறுமைப் பயனுகிய சுவர்க்க இன்பமுமாமென்க. இதனுலிங்குக் கூறியுள்ள இன்பம் "ஆரா வியற்கையவா" நீங்குதலால் வெளிப்படும் எஞ்ஞான்றும் ஒரு நிலையாகவுள்ள (மோட்ச) வின்பமன்றெனருயிற்று; எனென்றால், இல்வாழ்வானுக்கு அவா (ஆசை) நீங்குதலில்லாமையினு லென்க. எனவே, துறவறவியல் அவாவறுத்தலதிகாரத்தில் "அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்" "இன்ப மிடையறு நீண்டு மவாவென்னுந்,துன்பத்துட் டுன்பங் கெடின்" என்று கூறியிருத்தலினுல் துறவிகளுக்கே மோட்ச இன்பமுண்டாகு மென்பது தேற்றமாயிற்று.

தருமமார்க்கத்தால் வரும் பொருளைக் கொண்டனுபவிக்கு மின்பமும் சுவர்க்க வின்பமும் நிலையில்லாதனவா யிருக்க அவற்றை நிலையுடைய வின்பமென்று கூறுதல் எவ்வாறு பொருந்துமெனின், நீண்டகாலிருந்து மரணமடையுந் தேவர்களை அமரர்கள் (மரணமில்லாதவர்கள்) என்றும், பிறப்புடைய பிரமனை அஜன் (பிறப்பில்லாதவன்) என்றும் கூறுவதுபோல் உபசாரமாக அவ்வின்பங்கள் நிலையுடையனவென்று கூறப்பட்டனவே யன்றிப் பிறிதன்றென்க.

$ மற்றென்னு மிடைச்சொல் சிற்றின்பமென்று குறிக்கப்பட்டதை யொழித்து அதற்கு (அச்சிற்றின்பத்திற்கு) இனமாகிய பேரின்பத்தைக் குறித்து நின்றமைபற்றி 'மற்றையின்பமென்பது மற்றின்பமெனநின்றது' என்றுகூறப்பட்டது. படவே, மற்றையென்னு மிடைச்சொல் குறிக்கப்பட்

தெளி.—(இ - ன்). மற்றின்பம் - (அறத்தின்பயனுக வரும்) நிலையுடையவின்பத்தை, வேண்டுபவர் - விரும்புவோர், சிற்றின்பம் - (பிறரிடத்து அபகரித்த பொருளினுல்தாம் அடையும்) நிலையில்லாதவின்பத்தை, வெஃகி - விரும்பி, அறனல்ல - அறமல்லாத செயல்களை, செய்யார்-(அவரிடத்து) செய்யார், (எ - று).

பாவத்தின்பயனுகவருதலால் அப்பொழுதேஅழியுமென்பார் 'சிற்றின்பம்'என்றார். மற்றைபின்பமென்பது மற்றின்பமெனக் குறைந்து நின்றது.

(க - து). பேரின்பத்தை யிச்சிப்பவர் சிற்றின்பத்தை யிச்சித்துத் தருமம் மல்லாதவற்றைச் செய்யார் என்பது.

3. Those who desire the higher pleasures of heaven will not act unjustly through desire of the trifling joy of this life.

சு. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

பரி.—(இ - ள்). யாம் வறிய மென்று கருதி அது நீதிதப் பொருட்டுப் பிறர் பொருளை விரும்புதல் செயயார், ¶ ஐம்புலன்களையும் வென்ற தூய்மையில்லாத காட்சியினை யுடையார், (எ - று)

டதையொழித்து அதற்கினமாயதைக்குறித்து ஏற்கு மென்றுரையிற்றென்க. தொல்காப்பியம்இடையியல்'மற்றை தென்னுங் கிளவி தானே சுட்டுதிலே யொழிய வினங்குறித் தன்றே" என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில் சேனுவரையர்"ஆடை கொணர்ந்தவழி யவ்வாடை வேண்டாதான் மற்றை யது கொணு வென்னும்,அஃது அச்சுட்டிய ஆடை யொழித்து அதற்கினமாகிய பிறவாடை குறித்து நின்றவாறு கண்டு கொள்க"என்று கூறியதனுலும் இது நன்கு விளங்குமென்க. (இங்குச் சிற்றின்பம் பேரின்பம் என்று கூறப்பட்டனவற்றின்தனுளள சிறுமை பெருமை என்னும் விசேஷணங்கள் (அடைகள்) முறையே நிலையில்லாமையையும் நிலையுடைமையையு முணர்த்தி நின்றன). இதனுல் மற்று என்னு மிடைசசொல்லும் மற்றை யென்னு மிடைச்சொல்லும் வெவ்வேறென்பது பெற்றும். நண்ணூல் விருத்தியுரைகாரர் "மன் - மன்னே, கொன் - கொன்னே யென நின்றுழிப் போல மற்று மற்றையென இறுதிவிகாரமாய் நின்றதன்றி இதற்கென வேறுபொருளின்மையாலும்" என்று கூறுவர்; இராமாநுஜ கவிராயர் தமது நண்ணூல் விருத்திபுரையில் இதனை மறுத்திருக்கின்றனர்.

¶ ஐம்புலன்கள் - செவிமுதலிய வைந்திந்திரியங்கள். புலன்கள் இந்திரியங்களே யுணர்த்துதல் ஆதலாற் புலன்களேன்று மடக்கினது " என்றும் "வென்றனே புலன்களேன்தார்" என்றும், "கம்பித்து வந்த புலனைந்துங் கலக்க மாற" என்றும் வரும் பிரயோகங்களாலு மூணரப்படுமென்க.

வெல்லுதல் ‡‡ பாவநெறிக்கட் செல்ல விடாமை. புலம்வென்றபுன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலும்இல்லையாயிற்று. புன்மையில் காட்சி - பொருள்களைத் $ திரிபின்றி யுணர்தல்.

தெளி.—(இ - ள்) புலம்வென்ற - ஐம்புலன்களையும் வென்ற, புன்மையில் - குற்றமில்லாத, காட்சியவர் - அறிவினையுடையவர், இலமென்னும் (யாம்) வறியேமென்று (நினைத்து), வெஃகுதல்செய்யார் - (அவ்வறுமை நீங்குதற் பொருட்டுப் பிறர்பொருளை) விரும்புதல் செய்யார்,—(எ - று).

ஐம்புலன்களையும் வெல்லுதல்—அவற்றைப் பாவவழியிற் செல்ல விடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு தரித்திரமில்லாமையால், அவர் பிறர்பொருளை விரும்புதலும் இல்லையாயிற்று. புன்மையில் காட்சி - நித்திய வஸ்துவியப் பொருள்களே (இது நித்தியப்பொருள் இஃதநித்தியப் பொருளென) பிறழ்வில்லா தறிதல்.

(க - து). ஐம்புலன்களையும் வென்ற ஆற்றலுடையவர் யாம் வறியேமென் றெண்ணிப் பிற பொருளை விரும்பார் என்பது.

4. The wise who have conquered their senses and are free from crime will not covet the things of others, saying "we are destitute."

நி. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

பரி.—(இ - ள்). நுண்ணிதாய எல்லா நூல்களினுஞ் சென்ற தம்மறிவு என்ன பயத்ததாம், பொருளை விரும்பி யாவர் மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வாராயின், (எ - று).

யார்மாட்டும் * வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் † முதலியன செயதல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின் 'அறிவென்னும்' என்றார்.

தெளி.—(இ - ள்). அஃகி - நுட்பமானதாகி, அகன்ற - (எல்லாதுல்களிலும்) சென்ற, அறிவு-(தம்) அறிவானது, என்னும்-என்னபயனையுடையதாம், வெஃகி - (பொருளை) விரும்பி, யார்மாட்டும் - யாவரிடத்தும், வெறிய - அறிவோடு பொருந்தாத செயல்களை, செயின் - (அறிவுடையார்) செய்வாராயின், (எ - று).

‡‡ பாவநெறிக்கட் செல்லவிடாமை - அறமார்க்கத்திற்கு விரோதமாகச் சப்தாதி விஷயங்களில் செவியாதி யிந்திரியங்களைச் செலுத்தாமை.

$ திரிபின்றி யுணர்தல் - மாறுபாடின்றி யுள்ளவாறே யறிதல்.

* வெறிய - மயக்கத்தோடு கூடிய செயல்கள்.

† முதலியன என்றமையின், அரசதண்டனைக் குரிய செயல்களும் முதலியனவும் கொள்க.

யாவரிடத்தும் அறிவோடு பொருந்தாத செயல்களைச் செய்தலாவது மேன்மக்களிடத்தும் கீழ்மக்களிடத்தும், இழிந்த செயல்களும் கொடிய செயல்களும் முதலாயினவற்றைச் செய்தல். அறிவிற்குப்பயன் அவ்விழிந்த செயல்கள் முதலாயின வற்றைச்செய்யாமையாகலின் 'அறிவென்னும்' என்றார்.

(க - து). நுண்ணிய கல்வி யறிவுடையவர் யாவரிடத்தும் பொருளை விரும்பி மயக்கத்தால் கொடுந் தொழில்களைச் செய்வாராயின் அவர் கல்வியறிவு பயனுடையதன்றும் என்பது.

5. What is the advantage of extensive and accurate knowledge if a man through covetousness act senselessly towards all.

க. அருள்வேஃகி யாற்றின்க ணின்றருன் போருள்வெஃகிப்
போல்லாத சூழக் கெடும்.

பரி —(இ - ள்). ‡ அருளாகிய அறத்தைவிரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கண் நின்றவன் பிறர்பொருளை அவாவி அதனை வருவிக்குங் குற்றநெறிகளை எண்ணக்கெடும், (எ - று).

இல்லறமெறியால் அறிவு முதிர்ந்துழியல்லது துறக்கப்படாமையின், அதனைத் + துறவறத்திற்கு ஆறு என்றார். கெடுதல் $ இரண்டறமுஞ் சேரவிழத்தல். சூழ்ந்த தூணையானே கெடுமெனவே, செய்தாற் கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது.

தேளி.—(இ - ள்). அருள் வெஃகி - அருளாகிய அறத்தைவிரும்பி, ஆற்றின்கண்-(அவ்வறத்திற்கு) வழியாகிய இல்லறத்தின்கண், நின்றன்-றன்னைவன், பொருள்வெஃகி - (பிறர்) பொருளை விரும்பி, பொல்லாத - (அப்பொருளை வருவிக்கும்) குற்றவழிகளை, சூழ - எண்ண, கெடும் - கெடுவான், (எ - று).

‡ இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்திருத்தல் போன்று துறவறத்திற்கு அருளுடைமை சிறந்திருத்தல்பற்றித் துறவறத்தை 'அருளாகிய அறத்தை' என்று கூறினார்.

+ துறவறத்தை யடைதற்கு இல்லறம் வழியாயுள்ள தென்பது சூதசங்கிதை பிரசாதக்கிரம முரைத்த வத்தியாயத்தில் "சித்தியடைமித்தி யகன் மங்கணிட்கா மியமாகப், பத்தியுறச் செய்வதனைப் பாவமெலா நாச முறு, மொத்தியன்மற் றதனுனே யொழியாம லுறுசித்த,சுத்தியுள தாமென்று சொல்லுமான் மறையனைத்தும்." "பின்னருருத் நிரதேவன் பிறங்குபிர சாதத்தர, லுன்னரிய சமுசாரத் துன்னதோ டுன்தெரிந்து, மன்னவயி ராக்கியமு மருவியுறு கருமஙக, டன்னமும மிலாதாய சன்னியா சங்கிடைக்கும்." என்றுகூறி யிருப்பதனுலும் நன்கு விளங்கும்.

$ இரண்டறமும் - இல்லறமும் துறவறமும்

இல்லறவழியால் அறிவு முதிர்ந்த வீடத்தல்லது துறத்தல் கூடாதா கையால், அவ்வில்லறத்தினைத் துறவறத்திற்கு ஆறு என்றார். கெடுதல் - இரண்டடங்களையும் ஒருமிக்க விழத்தல். பொல்லாதவற்றை எண்ணியவள வாலே கெடுமெனவே, செய்தாற் கெடுதல் சொல்லாமலே பெறப்பட்டது.

(க - து). அருளே விரும்பி இல்லறத்தில் நின்றவன் பிறர் பொருளே விரும்பிக் குற்றவழியை நினைக்கக் கெடுவான் என்பது.

6. He who through desire of the favour of God abides in the path in which it may be obtained, if he covet the property of others and think of evil methods to obtain it he will perish.

எ. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

பரி.—(இ - ள்). பிறர்பொருளை அவாவிக்கொண்டு அதனை லாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக, பின் அனுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றுதலில்லை ஆகலான், (எ - று).

* விளையென்பது முதனிலைத் தொழிற் பெயர். இலை யேழுபாட்டானும் வெஃகுதலின் குற்றங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). வெஃகி - (பிறர்பொருளை) விரும்பிக் கொண்டு, ஆம் - (அப்பொருளால்) உண்டாகின்ற, ஆகம் - பெருக்கத்தை, வேண்டற்க - வேண்டாதிருக்கக்கடவன், விளைவயின் - (பின்) அனுபவிக்கும் போது,பயன் - (அப்பெருக்கத்தின்) பயன், மாண்டற்கரிதாம் - நன்றுகுதலில்லை (ஆதலால்)—(எ - று).

விளை - முதனிலைத்தொழிற்பெயர். பெருக்கம் - மேன்மேலுயருதல். இவ்வேழு பாட்டாலும் பிறர்பொருளை விரும்புதலின் குற்றஞ் சொல்லப் பட்டது.

(க - து). பிறர்பொருளை யபகரித் தனுபவிக்கின்றவர்கட்கு மேன்மையுண்டாவ தில்லை என்பது.

வினைப்பகுதியை முதனிலைத்தொழிற்பெயராகக்கொள்ளும் மரபுபற்றி 'விளையென்பது முதனிலை (பகுதி)த் தொழிற் பெயர்' என்று கூறப்பட்டது. வினைப்பகுதியை முதனிலைத் தொழிற்பெயரென்று கொள்ளுதல் பிரயோகவிவேகம் "முன்னிலையேவல்" என்னுஞ் செய்யுளியலுரையில் "கடவாமடி, என்று நன்னூலிற்கூறிய முதனிலைத் தொழிற் பெயர்கள் தாது வெனவும் பிரகிருதி எனவும் பெயர்பெறும்" என்று கூறியவாற்றானுமறிக. இலக்கணக் கொத்து நூலார் வினைப்பகுதியை முதனிலைத்தனிவினைப் பெயரென்பர். வினைப்பெயரெனினும் தொழிற் பெயரெனினு மொக்கும். விளைவயின் என்பது எதிர்கால வினைத்தொகைநிலைத் தொடர்மொழி.

7. Desire not the gain of covetousness. In the enjoyment of its fruits there is no glory.

அ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

பரி.—(இ-ள்). சுருங்கன் மாலேத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக் காரணம்மியாதென்று ஒருவன் ஆராயின், அது பிறன்வேண்டுங் கைப்பொருளைத் தான்வேண்டாமையாம், (எ-று).

‡ அஃகாமை-ஆகுபெயர். § வெஃகாதான் செல்வம் அஃகாதென்பதாயிற்று.

தெளி.— (இ-ள்). செல்வத்திற்கு - (குறைந்துபோந்தன்மையுடையதாகிய) செல்வத்திற்கு, அஃகாமை - குறையாதிருத்தற் காரணம், யாதெனின் - எதுவென்று (ஒருவன்) ஆராயின் (அக்காரணம்), பிறன் —, வேண்டும் - விரும்புகின்ற, கைப்பொருள் - கைப்பொருளை, வெஃகாமை-(தான்) வேண்டாமையாம், (எ-று).

அஃகாமை அஃகாமையின் காரணத்தை யுணர்த்துதலால் ஆகுபெயர். பிறன் பொருளை விரும்பாதவனது செல்வம் குறையாதென்பதாயிற்று.

(க - து). செல்வங் குறையாமைக்குக் காரணம் பிறன்பொருளை விரும்பாதிருத்தலாம் என்பது.

8. Do you ask "what is the indestructibility of wealth?" It is to be free from coveting the possessions of others.

கூ அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

பரி.—(இ-ள்). இஃது அறனென்றறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் அடைதற்காங் கூற்றினை அறிந்து அக் கூற்றுனே சென்றடையும், (எ-று).

அடைதற்காங்கூறு - காலமும், இடனும், ‖ செவ்வியு முதலாயின. இவையிரண்டு பாட்டானும் வெஃகாமையின் குணங் கூறப்பட்டது.

தெளி —(இ-ள்). அறனறிந்து - (இஃது) அறமென்றறிந்து, வெஃகா (பிறர் பொருளை) விரும்பாத, அறிவுடையார் - அறிவுடையவரை,

‡ அஃகாமையென்னு மெதிர்மறைத் தொழிற்பெயர் அஃகாமை (சுருங்காமை)க்குக் காரணத்தை யுணர்த்துதலால் காரியவாகு பெயராம்.

§ வெஃகாதான் - வினையாலணையும்பெயர்.

‖ செவ்வி - அக (மன) மகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் இனிய சொல்லு முடையவராயிருக்குஞ் சமயம்.

திரு - திருமகன், நிறனறிந்து - (தான்சேர்தற்காம்) நிறத்தை யறிந்து, ஆங்கே - அத்நிறத்திலுலே, சேரும்-சென்றடைவாள், (எ-று).

அடைதற்காம்நிறம் - காலமும், இடனும், சமயமும் முதலாயின. திருமகனென்றநீண்டப் பெருஞ்செல்வத்தை. இவையிரண்டு பாட்டாலும் பிறன் பொருளை விரும்பாமையின் குணஞ் சொல்லப்பட்டது.

(க-து). பிறன்பொருளை விரும்பாத அறிவுடையாரை இலக்குமி தானே சென்றடைவாள் என்பது.

9. Lakshmi knowing the manner in which she may approach will immediately come to those wise men who knowing that it is virtue,covet not the property of others.



கo. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

பரி.—(இ-ள்). பின் வீளவதறியாது ஒருவன்பிறன்பொருளை வௌவக்கருதினின், அக்கருத்து அவனுக்கு இறுதியைப்பயக்கும்: அப்பொருளை வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும், (எ - று).

*பகையும் பாவமும் பெருக்கலின் 'இறலீனும்' என்றும்,அப்பொருளை வேண்டி யுழல்வோர் யாவரையுங் கீழ்ப்படித்தலின் 'விறலீனும்' என்றுங் கூறினர். * செருக்கு - ஆகுபெயர். இதனுல் ‡ அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.*

தெளி.—(இ-ன்). (ஒருவன்) எண்ணுது - (பின்வீளவதை) அறியாமல், வெஃகின் - (பிறன்பொருளை) அபகரிக்கக் கருதுவானுயின், (அக்கருத்து), இறல் - அழிவை, ஈனும் - (அவனுக்குத்)தரும், வேண்டாமை யென்னுஞ்செருக்கு - (அப்பொருளை) விரும்பாமையென்னுஞ் செல்வமானது, விறல் - வெற்றியை, ஈனும் - தரும், (எ-று).

(பிறன் பொருளைவிரும்புதல்) பகையையும் பாவத்தையும் பெருகச் செய்தலால் 'இறலீனும்' என்றும், (வேண்டாமை யென்னுஞ்செருக்கு) அப்பொருளை விரும்பி யலேவோர்கள் யாவரையுங் கீழாகச் செய்தலால் 'விறலீனும்' என்றுஞ்சொல்லினர். செருக்கு - செருக்கின் காரணமாய செல்வத்தை யுணர்த்துதலால் ஆகுபெயர். இதனுல் அக் குற்றமுங் குணமுஞ்சேர்த்துச் சொல்லப்பட்டன.

(க-து). பிறன்பொருளை விரும்புகின்றவனுக் கழிவும் விரும்பாதவனுக்கு வெற்றியு முண்டாம் என்பது.

---

* செருக்கென்னுங் காரியப் பெயர் செருக்கை (கர்வத்தை) யுண்டாக்குவதற்குக் காரணமாய செல்வத்தையுணர்த்துதலால் காரியவாகு பெயராம்.

‡ அவ்விருமையும் ஒருங்குகூறப்பட்டன—வெஃகுதலின் குற்றமும் வெஃகாமையின் குணமும் ஒருமிக்கச் சொல்லப்பட்டன.

10. Without regard of consequences to covet the wealth of another will bring destruction. That greatness of mind which covets not will give victory.



பதினேந்தாவது அதிகாரம்.

புறங்கூருமை.—*Against Backbiting.*

பரி.—அஃதாவது காணுதவழிப் பிறரை யிகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றம் அடியாகவருதலான், இஃது அழுக்காறுமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது காணுதவிடத்துப் பிறரை இகழ்ந்துபேசாமையாம். வாக்கின்குற்றம் மனக்குற்றத்தின் வழியாகவருதலால் இஃது (புறங்கூருமை) அழுக்காருமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

க. அறங்கூரு னல்ல செயினு மோருவன்
புறங்கூரு னென்ற லினிது.

பரி.—ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், பிறனைப் புறங்கூறனென் றுலகத்தாரால் சொல்லப்படுதல் நன்று, (எ-று).

புறங்கூருமை $ அக்குற்றங்களான் இழிக்கப்படாது ¶ மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்).ஒருவன்—அறங்கூரன் - அறமென்று சொல்லுவதுஞ் செய்யாது, அல்ல-பாவங்களை, செயினும் - செய்வானாயினும், புறங்கூரன் - (பிறனைக்) காணுவிடத்து இகழ்ந்துபேசான், என்றல் - என்று (உலகத்தாரால்) சொல்லப்படுதல், இனிது - நல்லது, (எ-று).

புறங்கூருமை அக்குற்றங்களா லிழித்துக் கூறப்படாமல் மேற்பட்டு விளங்குமென்பதாம். இதனால் (புறங்கூருமையென்னும்) அவ்வறத்தினது நன்மை சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் தருமமல்லாதவற்றைச் செய்தானும் புறங்கூறுதல் இலனாயின் அதனாலவன் மேம்பட்டு விளங்குவான் என்பது.

$ அக்குற்றங்கள் - அற (தரும) மென்பதை (வாயினூற்) சொல்லுவது மின்றிச்செய்த தீவினைகளாலுண்டாகிய குற்றங்கள்.

¶ புறங்கூருதவன் உலகத்தவரால் பிறகுற்றங்களா லிழித்துக்கூறப்படாது மேம்பட்டுவிளங்குவானென்பதாம்.

1. Though one do not even speak of virtue and live in sin, it will be well if it be said of him "he does not backbite."

2. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

பரி.—(இ-ள்). அறனென்பதொன்றில்லையெனவழித்துச்சொல்லி அதன்மேற் பாவங்களைச் செய்தலினும் தீமையுடைத்து; ஒருவனைக்காணுதவழி இகந்துரையால் அழித்துச்சொல்லிக் கண்டவழி அவனெதிர் † பொய்த்து நகுதல், (எ-று).

‡ உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல் $ ஒளியைக் கோறல்.

தேவி.—(இ-ள்). அறனழீஇ-அறமென்பது ஒன்றில்லையென் றழித்துச்சொல்லி, அல்லவை செய்தலின் - (அதன்மேற்) பாவங்களைச செய்தலினும், தீதே - தீமையுடையதாம், புறனழீஇ - ஒருவனைக்காணுதவிடத்துப் பழிச்சொற்களால் குறைவாகப்பேசி, பொய்த்துநகை - (கண்டவிடத்து அவனெதி) பொய்யாகமுகமலர்ந்து பேசுதல், (எ-று).

அறத்தை யழித்தலினும் புறங்கூறுதலும், அல்லவற்றைச் செய்தலினும் பொய்த்து நகுதலும் தீயனவாமென் றறிக. புறனழித்தல்-புறங்கூறி ஒளியைக் கெடுத்தல்.

(க-து). ஒருவன் பிறனைக்காணுதவிடத்திகழ்ந்துபேசிக் கண்டவிடத்துப் புகழ்ந்து பேசுதல் தருமத்தையழித்து அதருமத்தைச் செய்தலினுந் தீயதாம என்பது.

2. Deceitfully to smile in another's presence after having reviled him to his destruction behind his back is a greater evil than the commission of every other sin and the destruction of every virtue.

† பொய்த்துநகுதல் - பொய்யாக நகைத்து வெளியனபு பாராட்டுதல்

‡ அறனென்ப தொன்றில்லை யென்றழித்துச் சொல்லுதலினும் ஒருவனைக் காணுதவழி யிகழ்ந்துரையால் அழித்துச் சொல்லல் தீது எனவும் அதன்மேற் பாவங்களைச்செய்தலினும் கண்டவழி யவனெதி பொய்த்துநகுதல் தீதுஎனவும் கொள்க. செய்தலின் என்பதன்கணுள்ள இன்னுருபு காட்டினும் என்னும் உறழ்ச்சிப்பொருளில் வந்தது. அறனழித்தலினும் புறனழித்தல் தீது அல்லவை செய்தலினும் பொய்த்து நகுதல் தீது என்று வந்தமையின் இச்செய்யுள் முறைநிரனிறைப் பொருள்கோள்.

$ ஒளியைக்கோறல் - மிக்குத்தோன்றும் மதிப்பைக் கெடுத்தல். ஒளியென்பதற்குப் பொருள் "ஒளியொருவற் குள்ள வெறுக்கை" என்னுங் குறளின் விசேடவுரையில் "ஒளி தானுளதாகாலத்து மிக்குத்தோன்றுதலுடைமை" என்றெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

10. Without regard of consequences to covet the wealth of another will bring destruction. That greatness of mind which covets not will give victory.



பதினைந்தாவது அதிகாரம்.

புறங்கூறுமை.—*Against Backbiting.*

பரி.—அஃதாவது காணுதவிடத்துப் பிறரை யிகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றம் அடியாகவருதலான், இஃது அழுக்காறுமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது காணுதவிடத்துப் பிறரை இகழ்ந்துபேசாமையாம். வாக்கின்குற்றம் மனக்குற்றத்தின் வழியாகவருதலால் இஃது (புறங்கூறுமை) அழுக்காறுமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

க. அறங்கூ றனல்ல செயினு மோருவன்
புறங்கூ றனென்ற லினிது.

பரி.—ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், பிறனைப் புறங்கூறனென்றுலகத்தாராற் சொல்லப்படுதல் நன்று, (எ-று).

புறங்கூறுமை $ அக்குற்றங்களான் இழிக்கப்படாது ¶ மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்).ஒருவன்—அறங்கூறன் - அறமென்று சொல்லுவதுஞ் செய்யாது, அல்ல-பாவங்களே, செயினும் - செய்வானாயினும், புறங்கூறன் - (பிறனைக்) காணுமிடத்து இகழ்ந்துபேசான், என்றல் - என்று (உலகத்தாரால்) சொல்லப்படுதல், இனிது - நல்லது, (எ-று).

புறங்கூறுமை அக்குற்றங்களா லிழித்துக் கூறப்படாமல் மேற்பட்டு விளங்குமென்பதாம். இதனால் (புறங்கூறுமையென்னும்) அவ்வறத்தினது நன்மை சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் தருமமல்லாதவற்றைச் செய்தானும் புறங்கூறுதல் இலனாயின் அதனாலவன் மேம்பட்டு விளங்குவான் என்பது.

$ அக்குற்றங்கள் - அற (தரும) மென்பதை (வாயினால்) சொல்லுவதி மின்றிச்செய்த நிலைகளாலுண்டாகிய குற்றங்கள்.

¶ புறங்கூறுதலவன் உலகத்தவரால் பிறகுற்றங்களா லிழித்துக்கூறப் படாது மேம்பட்டுவினங்குவானென்பதாம்.

1. Though one do not even speak of virtue and live in sin, it will be well if it be said of him "he does not backbite."

உ. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

பரி.—(இ-ள்). அறனென்பதொன்றில்லையென அழித்துக்சொல்லி அதன்மேற் பாவங்களைச் செய்தலினும் தீமையுடைத்து; ஒருவனைக்காணுதவழி இகந்துரையால் அழித்துக்சொல்லிக் கண்டவழி அவனெதி † பொய்த்து நகுதல், (எ-று).

‡ உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல் $ ஒளியைக் கோறல்.

தெளி.—(இ-ள்). அறனழீஇ-அறமென்பது ஒன்றில்லையென் றழித்துச்சொல்லி, அல்லவை செய்தலின் - (அதன்மேற்) பாவங்களைச செய்தலினும், தீதே - தீமையுடையதாம், புறனழீஇ - ஒருவனைக்காணுதவிடத்துப் பழிச்சொற்களால் குறைவாகப்பேசி, பொய்த்துநகை - (கண்டவிடத்து அவனெதி) பொய்யாகமுகமலர்ந்து பேசுதல், (எ-று).

அறத்தை யழித்தலினும் புறங்கூறுதலும், அல்லவற்றைச் செய்தலினும் பொய்த்து நகுதலும் தீயனவாமென் றறிக. புறனழித்தல்-புறங்கூறி ஒளியைக் கெடுத்தல்.

(க-து). ஒருவன் பிறனைக்காணுதவிடத்திகழ்ந்துபேசிக் கண்டவிடத்துப் புகழ்ந்து பேசுதல் தருமத்தையழித்து அதருமத்தைச் செய்தலினுந் தீயதாம என்பது.

2. Deceitfully to smile in another's presence after having reviled him to his destruction behind his back is a greater evil than the commission of every other sin and the destruction of every virtue.

† பொய்த்துநகுதல் - பொய்யாக நகைத்து வெளியனபு பாராட்டுதல்.

‡ அறனென்ப தொன்றில்லை யென்றழித்துச் சொல்லுதலினும் ஒருவனைக் காணுதவழி யிகழ்ந்துரையால் அழித்துச் சொல்லல் தீது எனவும் அதன்மேற் பாவங்களைச்செய்தலினும் கண்டவழி யவனெதி பொய்த்துநகுதல் தீதுஎனவும் கொள்க. செய்தலின் என்பதன்கணுள்ள இன்னுருபு காட்டினும் என்னும் உறழ்ச்சிப்பொருளில் வந்தது. அறனழித்தலினும் புறனழித்தல் தீது அல்லவை செய்தலினும் பொய்த்துநகுதல் தீது என்றவந்தமையின் இச்செய்யுள் முறைகோளினைப் பொருள்கோள்.

$ ஒளியைக்கோறல் - மிக்குத்தோன்றும் மதிப்பைக் கெடுத்தல். ஒளியென்பதற்குப் பொருள் " ஒளியொருவற் குள்ள வெறுக்கை " என்னுங் குறளின் விசேடவுரையில் " ஒளி தானுளதாகாலத்து மிக்குத்தோன்றுதலிடமை" என்றெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

கூ. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

பரி.—(இ-ள்), பிறனைக் காணுதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கினியனைப் போலித்து ஒருவன் உயிர்வாழ்தலின், அதுசெய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும், (எ-று).

†† பின் புறங்கூறிப் பொய்த்தலொழிதலின், 'சாதல்' 'ஆக்கந்தரும்' என்றார். ஆக்கம் ¶ அஃதொழிந்தார் மறுமைக்கண் எய்தும் பயன். 0 அறம் - ஆகுபெயர். () தருமென்பது இடைமுழுவமைதி.

தெளி.—(இ-ள்). புறங்கூறி - பிறனைக்காணுத விடத்து இகழ்ந்து பேசி, பொய்த்து - (கண்டவிடத்து அவனுக்கினியவனைப்) பொய்யாகச் பேசி, உயிர்வாழ்தலின் - (ஒருவன்) உயிர் வாழ்தலினும், சாதல் - (அது செயயாமல்) உயிர்விடுதல், (அவனுக்கு), அறங்கூறும்-தரும சாஸ்திரங்கள் சொல்லும், ஆக்கம்-பயனை, தரும்-கொடுக்கும், (எ-று).

உயிர்விட்டபின் புறங்கூறிப் பொய்த்தலாகிய பாவம் நீங்கலால், 'சாதல்' 'ஆக்கந்தரும்' என்றார். ஆக்கம்-புறங் கூறுதலாகிய அப்பாவஞ் செய்யாதொழிந்தவர் மறுமையில் அடையும பயன். அறம்- அறத்தைக்கூறும் நூலெயுணர்த்துதலால் ஆகுபெயர். தருமென்பது படர்க்கையோடியைந்து வந்தமையி னிடைமுழுவமைதியாம்.

(க-து). ஒருவன் பிறனைக் காணுதவிடத்திலிகழ்ந்தும் கண்ட விடத்திற் புகழ்ந்தும் பேசி யுயிர் வாழ்தலினும் இறத்தலே அவனுக்கு நன்மையைத்தருவதாம் என்பது.

3. Death rather than life will confer upon the deceitful backbiter the profit which the treatises on virtue point out.



கூ. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

†† பின் புறங்கூறிப் பொய்த்த லொழிதலின்-மரணமடைந்த பின்னர்ப் புறங்கூறிக் கபடமா யொழுகுதல் நீங்குதலால்.

¶ அஃதொழிந்தார் - புறங்கூறுதலை விட்டவர்.

0 அறமென்னும் காரியப்பெயர் அதனை யுணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்காதலின் காரியவாகுபெயராம்.

() தன்மை முன்னிலை யிடத்திற்குரிய தருமென்னுஞ் சொல் சாதல் என்னும் படர்க்கைச்சொல்லோ டியைந்தவந்தமையின் இடைமுழுவமைதியாயிற்று.

பரி.—(இ - ள்). ஒருவன் எதிரே நின்று கண்ணேட்டமறச் சொன்னாலும், அவனெதிர் இன்றிப் பின்வருங் குற்றத்தைத் நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக, (எ-று).

பின் - ஆகுபெயர். † சொல்வான் தொழில் சொன்மே லேற்றப் பட்டது. இவை மூன்றுபாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப் பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) கண்நின்று - எதிரே நின்று, கண்ணறு-கண்ணேட்டமற, சொல்லினும் - சொன்னாலும், முன் இன்று - (அவன்) எதிரில்லாமல், பின்னோக்காச் சொல் - பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லை, சொல்லற்க - சொல்லாதிருக்கக் கடவன், (எ-று).

பின் என்பது பின்வருங் குற்றத்தை யுணர்த்துதலால் ஆகுபெயர். சொல்வானது நோக்காத தொழிலைச் சொல்லின்மேலேற்றி 'நோக்காச் சொல்' என்று கூறப்பட்டது. கண்ணேட்டம்-தாட்சணியம். நோக்காமை சிந்தித்துணராமை. இவை மூன்றுபாட்டாலும் புறங்கூறுதலின்கொடுமை சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் மற்றொருவனை முன்னிகழினும் பின்னிகழாதிருக்கக்கடவன் என்பது.

4. Though you speak without kindness before another's face, speak not behind his back words which regard not the subsequent guilt.



இ. † அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும் புன்மையாற் காணப் படும்.

பரி:—(இ-ள்). புறஞ்சொல்லுவானெருவன் அவனை நன்றென்று சொல்லினும், அது தன் மனத்தானையிச் சொல்லுகின்றனல்ல னென்

---

* பின் என்னும் காலப்பெயர் பிற்காலத்தில் வரும் குற்றத்தை யுணர்த்துதலால் காலவாகு பெயராம்.

† பின்வருங் குற்றத்தை நோக்காது புறங்கூறுவானது நோக்காத தொழிலை அவனது புறங்கூற்றுச் சொல்லின்மே லேற்றி 'பின்னோக்காச் சொல்' என்றார். [பின்வருங் குற்றத்தை நோக்காதவனது சொல் பின்னோக்காச்சொல் என்றுரைக்கப்பட்ட தென்பது]. முன்னின்று பின்னோக் காச்சொல் என்பதனைப் பிரயோகவிவேகநூலார் "இஃதொரு பொருளின் வினை மற்றோர் பொருளின் வினையானது" என்று இலக்கண கூறுமிட த்துக் கூறினார்.

† அறஞ்சொல்லு நெஞ்சத்தான் என்பதைப் பிரயோக விவேக நூலார் நெஞ்சோ டறஞ் சொல்லுவானென விகுதி பிரித்துக் கூட்டுவர்.

பது அவன் புறத் சொல்லுதற்குக் காரணமான ‡ மனப்புன்மையானே அறியப்படும், (எ-று).


¶ மனந்நிதாகலின், அச்சொல் கொள்ளப்படா தென்பதாம்.

தேவி:—(இ - ள்). (புறங்கூறுவா னொருவன் அறத்தை கல்ல தென்று சொன்னலும்) அறம் - (அந்த) அறத்தை, செஞ்சத்தான் - (தன்) மனத்தின் வழியனுப்,சொல்லும்-கூறுகிறன்,அன்மை(யன்)-அல்லனென் பது, புறஞ்சொல்லும் - (அவன்) புறங்கூறுதற்குக் காரணமாகிய, புன்மை யால் - {மனப்} புன்மையாலே, காணப்படும் - (அறிவுடையோரால்) அறி யப்படும், (எ - று).

மனம் நிதாயிருக்கையால், (அறம் நன்றென்று சொல்லுகிற) அச் சொல் அங்கீகரிக்கப்படா தென்பதாம்.

(க - து). தருமத்தை நன்றென்று கூறுபவனது மனத்தி னிடத்துத் தருமமில்லாமை அவன் புறங்கூறுதலா லறியப்படும்.

5. The emptiness of that man's mind who merely praises virtue will be seen from the meanness of reviling another behind his back.



கூ. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
தீறன்றெரிந்து கூறப் படும்.

பரி.—(இ-ள்). பிறனொருவன் பழியை அவன்புறத்துக் கூறுமவன், தன்பழி பலவற்றுள்ளும் உளையுந்திற முடையவற்றைத் தெரிந்து அவனுற் கூறப்படும், (எ-று).

$ புறத்தென்பது அதிகாரத்தாற் பெற்றாம். இது வருகின்றவற்றி ற்கு மொக்கும். () நிறன் - ஆருபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்

---

‡ மனப்புன்மை- மனக்குற்றம்.

¶ புறங்கூறுவான் அற (தரும)ங் கூறினாலும் அவன்மனம் புன்மை யையுடையதாயிருத்தலின், அவன் கூறுஞ் சொல்லே அறிவுடையவர் ஏற்றுக் கொள்ளுதலில்லை யென்பது.

$ புறத்து என்பது புறங்கூறுமை யென்னு மதிகாரத்தால் வருவித் கப்பட்டது. அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை வடநூலார் அத ஷ்ங்க மென்பர்.

() நிறன் என்னும் பண்புப்பெயர் நிறத்தை (வலியை)யுடைய பழிச் சொற்களை யுணர்த்துதலால் பண்பாகு பெயராம்.

டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி ¶ அவனிறந்துபட் டோயுந் திற த்தனவாகிய பழிகளோ நாடி எதிரே கூறுமாகலின் ' திறன்றெரிந்து கூறப் படும்' என்றார்.

தெளி:—(இ - ள்). பிறன்பழி - பிற (ஞருவ) னது பழியை, கூறு வான் - (அவனைக்காணுதவிடத்திச்) சொல்லுவோன், தன்பழியுள்ளும் - தனது பழி (பல) வற்றுள்ளும், திறன் - (வருத்தும்) விதமுடையவற்றை, தெரிந்து - ஆராய்ந்து, கூறப்படும் - (அவனால்) சொல்லப்படுவான், (எ-று).

காணுதவிடத்தென்பது அதிகாரத்தாற் பெறப்பட்டது. இது பின் வருகின்றனவற்றிற்கும் பொருந்தும். திறன்-திறமுடையவற்றையுணர்த் தலால் ஆகுபெயர். தன்னைக் காணுதவிடத்துப் பிறன்பழித்துச் சொன்ன விதத்தைக்கேட்டவன் அப்பழியைச் சொன்னவனுக்கு(அவன் கூறிய)அவ் வளவல்லாமல் அவன் மிகவருத்தக்கமடைந்து வருத்தும் வகையனவாகிய பழிகளை ஆராய்ந்து எதிரே சொல்லுவானுதலால் ' திறன்றெரிந்து கூறப் படும்' என்றார்.

(க - து). பிறனது பழியைக்காணுதவிடத்துச்சொல்லுவோ னது பழி சொல்லப் பட்டவனுல் சொன்னவன் வருந்துமாறு எதிரே நின்று விரித்துச்சொல்லப்படும் என்பது.

6. The character of the faults of that man who publishes abroad the faults of others will be sought out and published.

எ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ற தவர்.

பரி:—(இ - ள்). தம்மை விட்டு நீங்குமாற்றம் புறங்கூறித் தங்கே ளிரையும் பிரியப்பண்ணுவர்; கூடி மகிழுமாறு இனியசொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலை யறியாதார், (எ - று).

பிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. கேளிரையும் பிரிப்ப † ரென்ற கருத்தான், அயலாரோடு மென்பது வருவித்துரைக்கப்பட்டது. அறிதல் ‡ தமக்குறுதியென் றறிதல். § "கடியு மிடன்தேற்றான் சோர்ந்த

¶ அவனிறந்துபட்டோயுந்திறத்தனவாகிய பழிகளை என்பதற்கு,அவன் மிகுதியு மடைந்து வருந்தும் வகையனவான பழிச்சொற்களை என்று கொள்க. அவனிறந்துபட் டென்பதற்குப்பிறியாக அவன் நிறத்துப்பட்டு எனவும் அவனிறத்துப்(மார்பில்)பட்டு எனவும் பாடபேத முண்டு.

† என்றகருத்தான் என்பதற்கு! என்னுங்கருத்தான் என்றும் பாட முண்டு.

‡ தமக்குறுதியென் றறிதல் - தமக்கு நன்மையைத் தருவதென் றுணர்தல்.

§ கலித்தொகை மருதக்கலி, உ எ. இதன்பொருள் (ஒருத்தி வண்டு களை) ஓட்டுமிட மறியாதவளாகிக் கைசோர்ந்தான் என்பது,

னன்மை" என்புழிப்போலத் ¶ தேற்றுமை தன்வினையாய் நின்றது. புறங் கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

தெளி:—(இ - ள்). கசச்சொல்லி - (கூடி) மகிழும்படி (இனியசொற் களைச்) சொல்லி, கட்பாடல் - (அயலாரோடு) சிநேகஞ்செய்தலே, தேற்ற தவர் - (தமக்குறுதியென்று) அறியாதவர், பகச்சொல்லி - (தம்மை விட்டு) நீங்கும் வழியாகப் புறங்கூறி, கேளிர் - (தமது) சுற்றத்தாரையும், பிரிப்பர் - பிரியப்பண்ணுவர், (எ - று).

கேளிரும் என்ற உயர்வு நெறும்மை செய்யுள்விகாரத்தால்தொக்கது. கேளிரையும் பிரிப்பரென்றகருத்தால் அயலாரோடுமென்பது வருவித்துச சொல்லப்பட்டது. தேற்றுமையென்பது தன்வினைப்பொருளில் வந்தது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

(க-து). பிறர்தம்மோடுகூடிமகிழும்படி யின்சொற்களைச்சொல்லியவரோடு சிநேகஞ்செய்தலே யறியாதவர்கள் புறங்கூறியுறவினரையும் பிரிப்பர் என்பது.

7. Those who know not with laughter-producing speech to live in friendship will estrange even their relatvies by backbiting.

அ. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினு
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

பரி:—(இ - ள்). தம்மோடு நெருங்காதாரது குற்றத்தையும் அவர் புறத்துத் தூற்றும் இயல்பினையுடையார், அயலார்மாட்டுச் செய்வது யாது கொல்லோ, (எ - று).

தூற்றுதல் - பலரும் அறியப் பரப்புதல். அதனிற் கொடியது பிறி தொன்று காணுமையின் 'என்னைகொல்' என்றார். செய்வதென்பது சொல்லெச்சம். என்னர் கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென் றுரைப்பாருமுளர்.

¶ தேற்றுதவர் என்பதன்கணுள்ள தன்வினை பிறவினை யிரண்டிற் கும்பொதுவான தேற்றுமை யென்னும் எதிர்மறை வினையானது இங்கே தன்வினையாய்நின்றது. "தன்வினைபிறவினை யிவ்வீரு வினைப்பொது" என்னுமடிக்கு உதாரணமாக இலக்கணக்கொத்துதாரர் "பிரிவர், ஆவெர்; பிரிப்பர், ஆட்டுவர் இவை தன்வினை பிறவினை. 'தேற்றுவொழுக்க மொருவன் கணுண்டாயின்,' 'நட்பாடதேற்றுதவர்,' எ-ம், அவனைத்தேற்றிக் கெடுத்தான்; அவனைத்தேற்றிப் பிரித்தான். எ-ம் இவை சொல்லொன்றே தன் வினையும் பிறவினையுமாயின. 'தொல்காப்பியனெனத் தன்பெயர்தோற்றி;' 'பொருண்முதலாறினுந்தோற்றி;' 'தொடர்ந்த தொழிலல காலந்தோற்ரு;' இவன் வெளுத்தான் இவை போல்வனவுமது" என்று கூறினர்.

தெளி:—(இ - ள்). தன்னியார் - (தம்மோடு) நெருங்கினவரது, குற்றமும் - குற்றத்தையும், தூற்றும் - (அவரைக்காணுதலிடத்தில்) தூற்றும், மரபினர் - இயல்பினை யுடையவர், எதிலார்மாட்டு - அயலாரிடத்துச் (செய்வது), என்னைகொல் - யாதோ, (எ - று).

தூற்றுதல் - பலரும் அறிய விரித்துச் சொல்லுதல். அத்தூற்றுதலினுங் கொடிய செயல் வேறொன்று காணுமையால் 'என்னைகொல்' என்றார். செய்வதென்பது குறைந்திறின்றமையின் சொல்லெச்சமாம். என்னைகொல் என்பதற்குப் பிரதியாக என்னர்கொல்எனப்பாடங்கூறி அதற்குப்பொருள் எத்தன்மையினை யுடையவராவர் என்று கூறுவாருமுண்டு.

(க - து). உறவினரது குற்றத்தையும் தூற்றுமியல்பினை யுடையார் அயலாரது குற்றத்தைத் தூற்றுதிரார் என்பது.

8. What will those not do to strangers whose nature leads them to publish abroad the faults of their intimate friends?

கூ. அறனெக்கி யாற்றுங்கொல் வையம் புறனெக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

பரி:—(இ - ள்). பிறர் நீங்கினவளவு பார்த்து அவர் பழிப்புரையை உரைப்பானது உடற்பாரத்தை, நிலம் † இக்கொடியது பொறுத்தலே எனக்கறமாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும், (எ-று).

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரிதென்னுங் கருத்தால் 'அறனெக்கியாற்றுங்கொல்' என்றார். இவையைந்து பாட்டானும் புறங்கூறுவார்க் கெய்துங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). புறன்நோக்கி - பிறர்நீங்கினவளவு பார்த்து, புன்சொல் - (அவரது) பழிப்புரைசொல்லை, உரைப்பான் - சொல்லுவோனது, பொறை - (உடற்) பாரத்தை, வையம் - பூமியானது, அறன்நோக்கி- (இக்கொடியதைச் சுமத்தலே எனக்கு) அறமாவதென்றறிந்ததை, ஆற்றுங்கொல் - சுமக்கின்றது போலும், (எ - று).

(பூமிக்கு மலை, கடல், ஆறு முதலிய) எல்லாவற்றையும் சுமத்தல் சுபாவமாயினும் இது (புறங்கூறுவானது உடற்பாரம்) சுமத்தற்கருமையானதென்னுங் கருத்தால்(வையம்) 'அறனெக்கி யாற்றுங்கொல்' என்றார். இவையைந்துபாட்டாலும் புறங்கூறுவாருக் குண்டாகுங் குற்றம் சொல்லப் பட்டது.

(க-து). பூமி புறங் கூறுவோனது உடற் பாரத்தைத் தருமத்திற் கஞ்சிச் சுமக்கின்றதுபோலும் என்பது.

9. The world through charity supports the weight of those who, observing that others are absent, speak reproachful words.

† மிகக் கொடியது என்னும் பாடமுண்டு.

கo. எதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

பரி:—(இ - ள்). எதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர்தற்றங் காணுமாறுபோலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தையுங் காணவல்லராயின், அவர் நிலைபேறுடைய வுயிர்க்கு வருவதொரு துன்பமுண்டோ.


நடுவுநின்று ஒப்பக்காண்ட லருமைநோக்கிக் 'காண்கிற்பின்' என்றும், கண்டவழி யொழிதலிற் பாவம் இன்றும்; ஆகவே, வரும் பிறவிகளினுந் துன்பம் இல்லை யென்பது நோக்கி 'உயிர்க்குத் தீதுண்டோ' என்றுங் கூறினர். இதனால் புறங்கூற்றொழிதற்குபாயங் கூறப்பட்டது.

தேவி:—(இ - ள்). (அயலாரைப் புறங்கூறுவோர் அதுசெய்தற்கு) எதிலார்குற்றம்போல் - (அதை) அயலாது குற்றத்தைக்காணுமாறுபோல, தங்குற்றம் - (புறங்கூறுதலாகிய) தமது குற்றத்தையும், காண்கிற்பின் - காணவல்லவராயின், மன்னுமுயிர்க்கு - (அவரது) நிலைபெறுதலுடைய உயிர்க்கு, தீது - (வருவது ஒரு) துன்பம், உண்டோ - உண்டாகுமோ, (உண்டாகாதென்றபடி) (எ - று).

(எதிலார் குற்றம்போலத் தமது குற்றத்தையும்) நடுவுநிலைமையாக விருந்து ஒப்பக் காணுதலாகிய அருமைநோக்கி 'காண்கிற்பின்' என்றும், (அவ்வாறு) கண்டவிடத்துப் புறங்கூறுதலொழிதலின் பாவமில்லையாம்; இல்லையாகவே, வரும் பிறவிகளிலும் துன்பமில்லை என்பதுகுறித்து உயிர்க்குத் தீதுண்டோ என்றும் சொல்லினர் இதனால் புறங்கூறுதலை விலக்குதற்கு உபாயம் சொல்லப்பட்டது.

(க - து). அயலார் குற்றத்தைப பார்ப்பதுபோலத் தமது குற்றத்தையும் பார்ப்பவர்க்குக் கெடுதியுண்டாகாது என்பது.

10. If they observed their own faults as they observe the faults of others, would this evil of backbiting still exist among men ?



பதினோராம் அதிகாரம்.

பயனில சொல்லாமை—

Against Profitless Conversation.

அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருளின்பமாகிய பயன்களுள், ஒன்றும் பயவாதசொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் எனச் $ வாக்கின்கணிகழும் பாவ நான்கனுள்

$ "கடுஞ்சொல், பொய், புறங்கூறல் பயனிலசொல் என்னுமிந்நான்கும் வாக்கின் அசுபகருமங்கள்". "வாக்கினுல் பெரும்பான்மையும் அசுபகருமத்தைச்செய்தால் பறவை அல்லது மிருகமாகப்பிறக்கின்றான்" என்பது மனுதர்மசாஸ்திரம் பன்னிரண்டாவதத்தியாயம். "படிறும் பயனிலவும் பட்டி யுரையும், வசையும் புறனு ரையாரே யென்று, மசையாத வுள்ளத்தவர்" என்பது ஆசாரக்கோவை.

* பொய் துறந்தார்க் கல்லது ஒருதலேயாகக் கடியலாகாமையின், † அஃ தொழித்து இல்வாழ்வாராற் கடியப்படும் ‡ ஏனை மூன்றனுள், கடுஞ்சொல் $ இனியவைகூறலானும், குறளை ¶ புறங்கூருமையானும் விலக்கி நின்ற பயனில்சொல் இதனுள் விலக்குகின்ரு ராகலின், இது புறங்கூருமை யின்பின் வைக்கப்பட்டது.

தேளி.—அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொரு ளின்பங்க ளாகிய பிரயோஜனங்களுள், ஒன்றையும் தாராத சொற்களைச் சொல்லா மையாம். பொய்,குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்று வாக்கினிடத் தண்டாகும் பாவம் நான்கனுள், பொய துறந்தவர்க் கல்லாமல் மற்றவர்க்கு நிச்சயமாக நீக்குதல் கூடாமையால், அதனை யொழித்து இல்வாழ்வாரால் நீக்கப்படுவனவாகிய மற்றைய மூன்றனுள், கடுஞ்சொல்லை இனியவை கூறலாலும், குறளையைப் புறங் கூருமையாலும் விலக்கி, (விலக்காது) நின்றபயனில் சொல்லை இதனுல் (இவ்வதிகாரத்தால்) விலக்குகின்ரு ராக வால் இது (பயனில சொலலாமை) புறங்கூருமையின்பின் வைக்கப் பட் டது.

க. ‖ பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மேள்ளப் படும்.

பரி.—(@ - ள்). அறிவுடையார் பலருங் கேட்டு வெறுப்பப் பய னில வாகிய சொற்களைச் செல்லுவான் எல்லாராலும் இகழப்படும்.

அறிவுடையார் பலருங்கேட்டு வெறுப்பவே § ஒழிந்தாராலும் இக ழப்படுதலின் 'எல்லாரு மெள்ளப்படும்' என்ரூர். மூன்றனுருபு விகாரத் தாற் ருெக்கது.

தேளி.—(இ - ள்). பல்லார் - (அறிவுடையார்) பலரும், முனிய - (கேட்டு) வெறுக்க, பயனில - பயனிலவாகிய சொறகளை, சொல்லுவான், -

* பெரும்பான்மையும் காமமும் பொருளும்பற்றி யுண்டாவதாகிய பொய்யைத் துறவறத்தார்க் கல்லாது, இல்லறத்தாக்கு முற்றும் பற்றற வொழித்தல் கூடாமையின், பொய் துறந்தார்க் கல்லது, ஒருதலேயா (நிச் சயமா) கக் கடியலாகாமையின்' என்று கூறப்பட்டது.

† அஃதொழித்து - பொய் பேசுத லொழித்து.

‡ ஏனை மூன்றனுள் - மற்றைய குறளை (புறங்கூறல்), கடுஞ்சொல், பயனில்சொல் என்னு மூன்றனுள்.

$ இனியவைகூறலானும்-இனியவைகூறலென்னு மதிகாரத்தாலும்.

¶ புறங்கூருமையானும்-புறங்கூருமை யென்னு மதிகாரத்தாலும்.

‖ பயனே யாராய்தற்குரியவர் அறிவுடையவ ராகலின், இக்கே பல்லார் என்பது அறிவுடையார்மேல் நின்றது.

§ ஒழிந்தாரென்றது அறிவிலிகளை.

சொல்லுகின்றவன், எல்லாரும் - எல்லாராலும், எள்ளப்படும் - இகழப்படுவான், (எ - று).

அறிவுடையார் பலருங்கேட்டு வெறுக்கவே ஒழிந்தவராலும் (பயனிலசொல்லுவான்) இகழப் படுதலால் 'எல்லாரு மெள்ளப்படும்' என்றார். எல்லாரானும் என்ற மூன்றும் வேற்றுமையுருபு செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

(க - து). பயனில்லாத சொற்களைச் சொல்பவன் யாவராலும் மிகழப்படுவான் என்பது.

1. He who to the disgust of many speaks uselesss things, will be despised by all.

உ. பயனில பல்லார்முற் ‡ சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

பரி.—(இ - ள்). பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலரு முன்பே ஒருவன் சொல்லுதல் விருப்பமிலவாகிய செயல்களைத் தன் னட்டார் மாட்டுச் செய்தலினும் தீது, (எ - று).

விருப்பமில - வெறுப்பன. †† இச்சொல் அச்செயலினும் மிக விகழற் பாடு பயக்கு மென்பதாம்.

தெளி.—(இ - ள்). பல்லார்முன் - (அறிவுடையார்) பலர்முன்னே, பயனில - பயனில வாகிய சொற்களை, சொல்லல்-(ஒருவன்) சொல்லுதல், நட்டார்கண்-(தன்) சினேகிதரிடத்து, நயனில - விருப்ப மிலவாகிய செயல் களை, செய்தலின் - செய்தலினும், தீது - தீயதாம், (எ - று).

விருப்பமிலவாகிய செயல்கள் - வெறுக்கப்படுஞ் செயல்கள். இச் சொல் அசெயலைக் காட்டிலும் மிகவும் இகழப்படுதலையுண்டாக்கு மென் பதாம்.

(க - து). பயன்படாத சொற்களைச் சொல்லுதல் சினேகிதரிடத்து வெறுக்கப்படுஞ்செயல்களைச் செய்தலினுங்கொடியதாம்.

2. To speak useless things in the presence of many is a greater evil than to do unkind things towards friends.

‡ சொல்லல் என்பதனால் பயனிலவென்பது பயனிலவாகிய சொற்களென்றும், செய்தல் என்பதனால் நயனிலவென்பது விருப்பமிலவாகிய செயல்கள் என்றும் பெறப்பட்டன வென்க.

†† இச்சொல் அச்செயலினும் - பயனிலவாகிய சொல் விருப்பமிலவாகிய செயலைப் பார்க்கிலும்.

கூ. நயனிலு னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

பரி.—(இ - ள்). பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்கு முரைதானே இவன் நீதியில னென்பதனை ¶ உரைக்கும்,(எ-று).

$ உரையால் இவன் நயனிலனென்ப தறியலாமென்பார், அதனை உரைமே லேற்றி உரைசொல்லும் என்றார்.

தெளி.—(இ - ள்). பயனில - பயனிலவாகிய பொருள்களை, (ஒருவன்), பாரித்து - விரித்து, உரைக்கு முரை - சொல்லுஞ் சொல்லே,நயனிலனென்பது - (இவன்) நீதியில்லாதவ னென்பதனை, சொல்லும் - அறிவிக்கும், (எ - று).

பயனிலவாகிய வுரையால் இவன் நீதியில்லாதவ னென்பதை அறியலா மென்பார் அவ்வறிதலை உரையின்மீதேற்றி உரைசொல்லும் என்றார்.

(க-து). ஒருவன் பயனில்லாத சொல்லை விரித்துக் கூறினால், அஃது இவன் நீதியில்லாதவ னென்பதை யறிவிக்கும்.

3. That conversation in which a man utters forth useless things will say of him "he is without virtue."

கூ. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

பரி.—(இ - ள்). பயனுடைபடாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுமாயின், அவை அவர்மாட்டு நீதியோடு படாவாயி, அவனை நற்குணங்களி னீக்கும், (எ - று).

பண்பு—இனிமையும் மெய்ம்மையும் * முதலாய ‡‡ சொற்குணங்கள். சொல்லுமாயி னென்பதும், அவர்மாட்டென்பதும் எச்சமாக வருவிக்கப் பட்டன.

தெளி.—(இ - ள்). பயன்சாரா - பயனுடு பொருந்தாத, பண்பில் சொல் - குணமில்லாத சொற்களை, (ஒருவன்),பல்லாரகத்து - பலரிடத்து,

---

¶ உணர்த்தும் என்றும் பாடமுண்டு.

$ அறிதலாகிய சேதனதருமத்தை யுரைமே லேற்றி உரைசொல்லும் என்றமையின், இஃதொரு பொருளின் தருமம் மற்றொரு பொருளின்மே லாய வுபசார வழக்காம்.

* முதலாய என்பதனால் கெடுதிவிளைவியாமை, கேட்டாரைத் தன்வசப்படுத்தல் முதலியவற்றையுங் கொள்க.

‡‡ சொல்லின் குணங்கள் கேட்டார்க்கினிமை யுடைமை, உண்மை யுடைமை, நீமை விளைவியாமை முதலியனவாம்.

(சொல்லுவானுயின் அவை அவரிடத்து), நயன்சாரா - நீதியோடு பொருந்தாதன வாகி, நன்மையின்-நற்குணங்களினின்றும், நீக்கும் (அவனை) நீங்கச் செய்யும், (எ - று).

பண்பு - இனிமையும் மெய்ம்மையும் முதலாகிய சொற்குணங்கள். சொல்லுவானுயின், அவரிடத்து என்பன குறைத்து நின்றமையின், அவை வருவித் துரைக்கப்பட்டன. இவை யிசையெச்சங்களாம்.

(க - து). குணமில்லாத சொற்களே யொருவன் சொல்லுவானுயின், அவை அவனை நற்குணங்களினின்றும் நீக்கும்.

4. The words devoid of profit or pleasure which a man speaks with many persons will, being inconsistent with virtue, remove him from goodness.

ரு. சீர்மை சிறப்போடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

பரி.—(இ-ள்). பயனிலவாகியசொற்களை இனிய நீர்மையுடையார் சொல்லுவாராயின், அவாது † விழுப்பமும் அதனால் வரும் நன்கு மதிக்கம்பாடும் உடனே நீங்கும், (எ-று).

‡ நீர்மை - நீரின்றன்மை. சொலினென்பது சொல்லாமையை விளக்கிற்று.

தேவி.—(இ - ள்). பயனில-பயனிலவாகிய சொற்களை, நீர்மையுடையார் - நற்குணத்தை யுடையவர், சொலின் - சொல்லுவாராயின், சீர்மை-(அவாது) மேம்பாடும், சிறப்போடு - (அம் மேம்பாட்டினால் வரும்) நன்கு மதிக்கப்படுதலும் (உடனே), நீங்கும்-(அவரிடத்திருந்து) நீங்கும், (எ-று).

நீர்மை - நற்குணத்தின்றன்மை. சொலினென்பது நீர்மை யுடையார் பயனிலவற்றை சொல்லாமையை விளக்கி நின்றது.

(க - து). நற்குணமுடையோர் பயனில்லாத சொற்களைச் சொல்லுவாராயின் அதனால் அவரது மேன்மையும் நன்கு மதிப்பும் ஒழியும் என்பது.

5. If the good speak vain words their eminence and excellence will leave them.

சு. பயனில்சொற் பாராட்டே வானே மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

† விழுப்பம் அதனால் வரும் நன்கு மதிக்கப்பாடனே நீங்கும். என்னும் பாடமுண்டு.

‡ நீர்மை - குணம். நீரின்றன்மை - (நற்) குணத்தின் தன்மை.

பரி.—(இ-ள்). பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லு வானை மகனென்று சொல்லற்க; மக்களுட் பதரென்று சொல்லுக.

* அல் வீருதி வியங்கோள்; முன் எதிர்மறையினும், பின் உடம்பாட் டினும் வந்தது. † அறிவென்னும் உள்ளீடின்மையின் 'மக்கட்பதடி' என் றார். இவை யாறுபட்டானும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது.

தேவி.—(இ-ள்). பயனில்சொல் - பயனில்லாத சொற்களை, பாராட்டு வானை-பலதரமுஞ்சொல்லுகின்றவனை,மகனெனல்-மனிதனென்று சொல் லற்க, மக்கட் பதடியெனல் - மக்களுள் பதரென்று சொல்லுக. (எ - று).

எனல், எனல் என்னும் அல் ஈற்று வியங்கோள் முற்றுக்களிரண்ட னுள், முன்னது எதிர் மறையிலும் பின்னது உடன்பாட்டிலும் வந்தன. பதருக்கு அறிகியாகிய உள்ளீ டில்லாமைபோலப் பயனில் சொற் பாராட்டு வானுக்கு அறிவாகிய உள்ளீடில்லாமையால் 'மக்கட்பதடி' எனறார். இவை யாறு பாட்டாலும பயனில்லாத சொறகளைச சொலலுதலின் குற்றம் சொல்லப்பட்டது உள்ளீடு-உளளிருப்பது. பதர்-அரிசியில்லாத நெல்.

(க - து). பயன்படாத சொறகளைச சொல்லுகின்றவன் மக் களுள பதராவான என்பது.

6. Call not him a man who parades forth his empty words, call him the chaff of men.

* மகனெனல் என்பதனகணுள்ள எனலும மக்கட் பதடியெனல் என் பதன்கணுள்ள எனலும் அல்லீற்று வியங்கோள் வினை முற்றுக்கள். இவற் றுள் முன்னது (எனறு சொல்லற்க என்று பொருள் படுதலால்) எதிர் மறையிலும், பினனது (என்று சொல்லுக என்று பொருள் படுதலால்) உடன்பாட்டிலும வந்தன. "கயவொடுசவ்வொற்று" எனனுஞ் சூத்திரத்தி னுரையில் இலக்கண விளக்கனாரும் "பயனில்சொற் பாராட்டு வானை மக னெனல், மக்கட் பதடி யெனல், என அல்லீறு விகித்தற்கண் மறையும் உடம்பாடுமாய் வருதலு முணர்க" என்றனர்.

பொருளின் புடைபெயர்ச்சி யிருதலால் வினை (தொழில்) நிகழுத லின் எங்கே பொருளின் புடைபெயர்ச்சி யிருக்கின்றதோ அங்கே வினை நிகழுமென்றும், எங்கே பொருளின புடைபெயர்ச்சி யில்லையோ அங்கே வினை நிகழாதென்று மறிக. இலக்கணனூலார் வினை நிகழுதலை யுடன் பாடென்றும் அது நிகழாமையை யெதிர் மறையென்றும் கூறுவர். வட னூலார் உடன் பாட்டை அந்துவயமென்றும் எதிர்மறையை வியதிரேகி யென்றும் கூறுவர்.

† அறிவிற் இலக்கணம் கலித்தொகை கெய்தற்கலி யகு-ல், "அறிவெ னப் படுவது பேதையார்சொன் னேன்றல்" என்று கூறப்பட்டிருக்கின்

எ. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

பரி.—(இ-ள்) ¶ நீதியோடு படாதசொற்களைக் சான்றோர் சொன்னாயினும், சொல்லுக, அஃதமையும்; அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின், $ அது நன்று, (எ-று).

‖ சொல்லினு மெனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தீயவென்பதாம்.

தேவி.—(இ-ள்). சான்றோர் - (பல குணங்களாலும் நிறைந்த) அறிவுடையவர், நயனில - நீதியோடு பொருந்தாத சொற்களை, சொல்லினும் - சொன்னாயினும், சொல்லுக - சொல்லக்கடவர், (அது பொருத்தும்), பயனில - (அவர்) பயனில்லாத சொற்களை, சொல்லாமை - சொல்லாதிருத்தலே (பெற்றால்), நன்று-(அது) நல்லது, (எ-று).

சொல்லினும் எனவே, சான்றோர் நயனில சொல்லாமை பெறப்பட்டது. நயனில்லாத சொற்களிலும் பயனில்லாத சொற்கள் கொடியன வென்பதாம்.

(க - து). சான்றோர் நீதியோடு பொருந்தாத சொற்களைச் சொன்னாயினும் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருக்கக் கடவர் என்பது.

7. If you will speak things without excellence speak them; it will be well for the wise not to speek useless things.

ஏ. அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

பரி.—(இ-ள்). அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார் மிக்க பயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லார்.

அறிதற்கரிய பயன்களாவன வீடுபேறும், † மேற்கதிச்செலவும் ‡ முதலாயின. பெரும் பயனில்லாத வெனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன.

றது. அறிவினிலக்கணத்தை விரிவாக அறிவுடைமை யென்னு மதிகாரத்திற் காண்க.

¶ நீதி - உலகத்தோடு பொருந்துதல். $ அது-பயனிலசொல்லாமை.

‖ சொல்லினும் என்பதன்கணுள்ள உம்மை எதிர்மறைப் பொருளது.

* வீடு பேறு - முத்தி பெறுதல்.

† மேற்கதிச்செலவு - சுவர்க்க முதலாயின வற்றின்கட் செல்லுதல்.

‡ முதலாயினவென்பதனுல் நிஷ்காமியகருமம், ஈசுவரார்ப்பணியானம், பிராணயாமம், சாதன சதுஷ்டயம், சற்குரு சேவை, சிரவண மாந நிதித்தியாசனம், தத்துவஞான முதலியவற்றையுங் கொள்க.

தேளி.—(இ - ன்). அரும்பயன் - அறிதற்கரிய பயன்களோ, ஆயும் - ஆராயவல்ல, அறிவினர் - அறிவினையுடையார், பெரும்பயன் இல்லாத சொல் - மிகுந்த பயனில்லாத சொற்களே, சொல்லார் - சொல்லமாட்டார்.

அறிதற்கரிய பயன்களாவன முத்திப்பேறும், மேற்கதியடைதலும் முதலானவை. பெரும்பயனில்லாத சொற்களைனவே சிறிது பயனுடைய சொற்களும் தள்ளப்பட்டன. சிறிது பயனுடைய சொற்கள் - இம்மைப்பய னொன்றையே தரும் சொற்கள்.

(க-து). அறிதற்கரிய பயன்களே யாராயும் அறிவினையுடை யார் பயன்படாத சொற்களைச் சொல்லார் என்பது.

8. The wise who seek for great advantage will not speak words that have not much weight.

கூ. பொருடேர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடேர்ந்த
மாசறு காட்சி யவர்.

பரி:—(இ - ள்). பயனினீங்கிய சொற்களை மடந்துஞ் சொல்லார், மயக்கத்தினீங்கிய தூய அறிவினையுடையார், (எ - று).

தூயவறிவு § மெய்யறிவு. ¶ மருடேர்ந்தவெனலும் பெயரெச்சம் காட் சியவரென னுங குறிப்புப்பெயர் கொண்டது. இவை மூன்றுபாட்டானும் பயனிலசொல்லாமையின் குணங்கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்). மருடேர்ந்த - மயக்கத்தினின்றும் நீங்கிய, மாசறு - மாசற்ற [பரிசுத்தமாகிய], காட்சியவர் - அறிவினையுடையார், பொருடேர்ந்த - பயனினின்றும் நீங்கியசொற்களை, பொசசாந்தும் - மறந்தும், சொல் லார் - சொல்லமாட்டார், (எ - று).

பரிசுத்தமாகிய வறிவு - யதார்த்தஞானம். மருடேர்ந்த வென்னும் பெய ரெச்சம் காட்சியவரென னுங்குறிப்பு வினையாலணையும் பெயரைக்கொண்டு முடிந்தது. இவை மூன்றுபாட்டானும் பயனிலவாகிய சொற்களைச் சொல் லாமையின் குணம் சொல்லப்பட்டது.

(க - து). குற்றமற்ற அறிவினையுடையோர் பலனில்லாத சொற்களை மறந்தும் சொல்லார் என்பது.

9. Those wise men who are without faults and are freed from ignorance will not even forgetfully speak things that cannot profit.

§ மெய்யறிவாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் ஐயந்திரிபின்றி யுள்ளவாறறிவது. இது தத்துவஞான மெனப்படும்.

¶ மருள் - மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்ப்பொரு ளென் றறி யும் விபரீத (மாறுபாடான) ஞானம்.

க0. சொல்லுக சொல்லீற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

பரி.—(இ-ள்). சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக; சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லா தொழிக.


‖ சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும், () சொற்பொருட்பின் வருநிலை யென்னும் அணியோக்கி வந்தது. * "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பது போல. இதனாற் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன.

தேவி.—(இன்). சொல்லில் - சொற்களில், பயனுடைய - பிரயோசன முடையசொற்களை, சொல்லுக - சொல்லக்கடவர், சொல்லில் - சொற்களில், பயனிலாச்சொல் - பிரயோசனமில்லாத சொற்களை, சொல்லற்க - சொல்லாதிருக்கக்கடவர், (எ - று).

சொல்லினென்பது இரண்டு வாக்கியத்தினும் (வந்தது) மிகையாயிருப்பினும் அது சொற் பொருட்பின் வருநிலை யென்னு மலங்கார நோக்கி வந்தது. இதனால் சொல்லுதற்குசொறகள் பயனுடைய சொற்கள் எனவும் சொலலத்தகாத சொற்கள் பயனிலாதசொற்கள் எனவும் நியமிக்கப் (நிச்சயிகக்) பட்டன.

(க-து.) பயனில்லாத சொற்களைச் சொல்லாது பயனுடைய சொற்களைச் சொல்லுகடவர் ஏன்பது.

10. If you speak, speak what is useful, and speak not useless words.



பதினேழாவது அதிகாரம்.

தீவினையச்சம்.—On the fear of sin.

பரி.—அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுள் மேலுயிர்களுக்கு நிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்குகின்றாகலின், இது பயனிலசொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

‖ சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும் - பயனுடைய சொல்லுக பயனிலாச்சொல் சொல்லற்க என்னும் இரண்டு வாக்கியத்திலும் சொல்லின் எனபது அவையினறி யமையாயிருப்பினும், ஒரு வாக்கியத்தில் மாத்திரம் சொல்லின் என்பதிருப்பினமையு மென்பதாகருத்து.

() சொற்பொருட்பின் வருநிலை யென்னும் அணியாவது முன்னர் வந்த சொல்லும் பொருளும் பினனர்ப் பலவிடத்தும் வருவது.

* நாலடியார் அறன்வலியுறுத்தல், 9. இதன்பொருள் நாள்தோறும் நாட்செல்லுதல் வரப்பார்த்திரும் என்பது. "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதாணார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலை வைத்தாரா தார்" என்னுமிச்சொல்டிச்செய்யுளில் வைகல் என்னுஞ்சொல் பொருள் வேற்றுமை பின்றிப் பலமுறை வந்திருத்தலேக்காண்க.

தெளி.—அஃதாவது பாவத்தைத் தருவதற்கேதுவாயுள்ள தீவினைகளைச் செய்வதற்கு அஞ்சுதலாம். இதனால் காயத்தினிடத்திலிருக்கின்ற பாவச்செயல்களையெல்லாம் தொருத்தி விலக்குகின்ற ராகவின், இது (தீவினையச்சம்) பயனிலசொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

க. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

பரி.—(இ-ள்). தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை முன் செய்த தீவினையுடையார் அஞ்சார்; அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர்.

தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது. † மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் 'அஞ்சார்' என்றும், செய்தறியாமையான் 'அஞ்சுவர்' என்றுங் கூறினார்.

தெளி.—(இ - ள்). தீவினையென்னுஞ் செருக்கு - தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை, தீவினையார் - (முற்பிறப்பிற்செய்த) தீவினையுடையார், அஞ்சார் - பயப்படார், விழுமியார் (அஃதில்லாதவராகிய) மேலோர், அஞ்சுவர் - பயப்படுவர், (எ-று).

தீவினைக்கேதுவாகிய செருக்கு தீவினையென்னுஞ்செருக்கெனக்காரியம் காரணமாக வுபசரித்துக்கூறப்பட்டது. தீவினைகாரியம்; அதன்காரணம் செருக்கு. முன்னரேதொடங்கிச்செய்து பழகிவந்தமையால் 'அஞ்சார்' என்றும், செய்தறியாமையால் 'அஞ்சுவர்' என்றும் சொல்லினார்.

(க-து). தீயகாரியங்களைச் செய்தற்கு முற்பிறப்பில் செய்த தீவினையுடையார் பயப்படார்; மற்றவர் பயப்படுவர் என்பது.

---

* தீவினை செய்தற்குக் காரணமான செருக்கை (மயக்கத்தை - அவிக்கையை) 'தீவினையென்னுஞ்செருக்கு' என (தீவினையென்னுங்காரியத்தைச் செருக்கு என்னுங்காரணமாக)க்கூறியது பற்றித் 'தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது' என்று கூறப்பட்டது. இதனால் செருக்கினால் தீவினை நிகழுமென்றும் செருக்கில்லாவிட்டால் தீவினைநிகழாதென்றும் பெற்றாமென்க. பிரயோகவிவேகதாலார் "மறுளறுகாரணம்" என்னுஞ்செய்யுளினுரையில் "தீவினை என்னுஞ் செருக்கு, தீவினையால்வருஞ் செருக்கு. இது காரணம் காரியமானது" என்றார். பரிமேலழகர் தீவினையைக் காரியமாகவும் செருக்கைக் காரணமாகவும் கொண்டாற்போன்றுகொள்ளாது பிரயோக விவேக தூலார் தீவினையைக் காரணமாகவும் செருக்கைக் காரியமாகவுங் கொண்டா ரென்பது ஈண்டறியத்தக்கதா மென்க.

† மேற்றொட்டுச்செய்து கைவந்தமையான்-தீவினைகளைக்கீழ்ப்போன பிறப்புக்களில் விடாதாரம்பித்துச் செய்து பழகிவந்தமையினால், (அத்தீவினையின்சம்ஸ்காரம் அத்தக்காரணத்தில் அதற்பூதமாகத் தங்கியிருக்கின்றது; அதனால்).

Those who have experience of evil deeds will not fear but the excellent will fear the pride of sin.

உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

பரி.—(இ-ள்). தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துந் துன்பமே பயத்தலான், அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனுற் றீயினு மஞ்சப்படும், (எ-று).

* பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கின்மையின், † தீயினு மஞ்சப்படுவ தாயிற்று.

நேளி —(இ-ள்). தீயவை - (தனக்கு இன்பந்தருதலைக் குறித்துச் செய்யுங்) தீவினைகள், (பின்பு அவ்வின்பத்தை யொழித்து), தீய-துன்பத்தையே பயத்தலால் - தருதலால், தீயவை - (அவ்வியல்பினை யுடையனவாகிய) தீவினைகள், தீயினும் - நெருப்பினும் (அதிகமாக), அஞ்சப்படும்- (ஒருவனால்) அஞ்சப்படும், (எ - று).

வேறொரு காலத்திலும் வேறோரிடத்திலும் வேறே ருடம்பிலும் போய்ச்சுடுதல் தீவினைக்கேயல்லாமல் நெருப்பிற்கில்லாமையால்(தீயவை) 'தீயினு மஞ்சப்படும்' என்றார்.

(க - து). தீவினைகள் விடாதுவந்து எந்தும் வருத்துவனவாயிருத்தலின், அவை நெருப்பைப் பார்க்கினும் கொடியனவாம்.

2. Because evil produces evil, it should therefore be feared more than fire.

ரு. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

பரி.—(இ - ள்). தமக்குறுதி நாடும் அறிவுக ளெல்லாவற்றுள்ளுந் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர், தம்மைச் செறுவார் மாட்டுத் தீவினைகளைச் செய்யாது விடுதலை, (எ - று).

* நெருப்பானது எக்காலத்தில் எத்தேசத்தில் எவ்வுடம்பிற்பட்டதோ அக்காலத்தில் அத்தேசத்தில் அவ்வுடம்பிற் சுடுவதன்றி வேறுகாலத்தில் வேறு தேசத்தில் வேறுடம்பிற் சென்று சுடுவதில்லையாம்; தீவினையோ வெனின், அங்ஙனமன்றி எக்காலத்தில் எத்தேசத்தில் எந்த உடம்பாற் செய்யப்பட்டதோ அந்த வுடம்பிலுள்ள வுயிரை வருத்துவதன்றி, அவ்வுயிரைவிடாது பற்றிச்சென்று மற்றொரு காலத்திலும் மற்றொரு தேசத்திலும் மற்றோருடம்பிலும் வருத்துவது பற்றி அது 'தீயினு மஞ்சப்படுவதாயிற்று' என்க.

† தீயினு மஞ்சப் படும் என்றார் என்றும் பாடமுண்டு.

‡ விடுதற்குக் காரணமாகிய அறிவை 'விடல்' என்றும் $ செயத்தக் குழியுஞ் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராதென ¶ உய்த் துணர்தலின், அதனை 'அறிவினு ளெல்லாந் தலை' என்றுங் கூறினர். () செய்யாது என்பது கடைக் குறைந்து நின்றது. இவை மூன்றுபாட் டானும் தீவினைக்கஞ்ச வேண்டுமென்பது கூறப்பட்டது.

தேவி.—(இ - ள்). செறுவார்க்கும்-(தம்மை) வருத்துவோரிடத்தும், தீய - தீவினைகளை, செய்யாவிடல் - செய்யாது விடுதலை, அறிவினுளெல் லாம் - (தமக்கு நன்மையை விரும்பும்) அறிவுக ளெல்லாவற்றிலும், தலை - தலைமையாய வறிவாகும், என்ப-என்று (நல்லோர்) சொல்லுவர், (எ-று).

தீவினைகளை விடுதற்குக் காரணமாகிய அறிவை 'விடல்' எனறும் செய்யத்தக்கவிடத்தும் செய்யாதொழியவே தகுந்த துன்பம் வாராதென் றுராய்ந் தறிதலால், அதனை 'அறிவினுளெல்லாந் தலை' என்றும், சொல் லினர். செய்யாஎன்பது செய்யாதென்பதன் விகாரம். இவைமூன்று பாட் டாலும் தீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

(க - து). தம்மை வருத்துவோரிடத்துத் தீவினைகளைச் செய் யாமல் விடுமறிவு எல்லாவறிவினுள்ளுந் தலைமையாய வறிவாம்.

3. To do no evil even to enemies will be called the chief of all the virtues.

க. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

பரி.—(இ-ள்). ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந் தும் எண்ணுதொழிக; எண்ணுவனெனின், * தனக்குக் கேடுபயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும், (எ-று).

‡ விடுதற்குக் காரணமாகிய அறிவை—தம்மை வருத்துவோரிடத் துத் தீவினைகளைச் செய்யாமல் விட்டுவிடுதற்கு ஏதுவாகிய அறிவை. விட லென்னுங் காரியத்தின்பெயர் அதனை யுணர்த்துதற்குக் காரணமான அறி விற்காதலின் காரியவாகுபெயராம்.

$ செயத்தக்குழியுஞ் செய்யாதொழியவே—தீவினைகளைச் செய்வதற் குத்தக்க காரணம் சேர்ந்த விடத்தும் அவற்றைச் செய்யாம லொழியவே.

¶ "சிறுவரையே யாயினுஞ் செய்தான் றல்லா, லுறுபயனெஞ் ஞில்லை யுயிர்க்கு" என்றறிதலின்.

() செய்யாது என்னும் எதிர்மறை வினையெச்சம் கடைக்குறைந்து (தவ்விகுதி செய்யுள் விகாரத்தாற் கெட்டுச்) செய்யா எனநின்றது.

* தனக்கு - பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை யெண்ணின வனுக்கு.


† கேடென்பன ஆருபெயர். ‡ சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின், § இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப் பட்டது. () அறக்கடவு ளெண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க நினைத்தல். நீவினை எண்ணலும் ஆகாதென்பதாம்.

தெளி.—(இ - ன்). (ஒருவன்) பிறன்-பிறனுக்கு, கேடு-கேட்டைத் தரும் வினையை, மறந்தும் - மறந்தாயினும், சூழற்க - எண்ணுதிருக்கக் கடவன், சூழின் - எண்ணுவானாயின், சூழ்ந்தவன் - அவ்வெண்ணினவனுக்கு, கேடு - கேட்டைத்தரும்வினையை, அறம்-அறக்கடவுள், சூழும் - எண்ணுவான், (எ-று).

கேடிரண்டும் கேட்டைத்தரும் வினைகளேயுணர்த்துதலால் ஆருபெயர்கள் எண்ணுகின்றபொழுதே தானும் உடனே எண்ணுதலால், இவன் பிற்பட்டானும் அறக்கடவுள் (பிற்படாது) முற்படுவானென்பது பெறப்பட்டது. அறக்கடவு ளெண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க நினைத்தல். நீவினையை (செய்தலேயன்றிச் செய்ய) எண்ணுதலு மாகா தென்பதாம்.

(க - து). பிறனுக்குக் கேட்டைத் தரும் வினையைச்செய்ய நினைப்பவனுக்குத் தருமக் கடவுள் தானுங்கேட்டைத்தரும் வினையைச் செய்ய நினைக்கும் என்பது.

4. Even through forgetfulness meditate not the ruin of another. Virtue will meditate the ruin of him who thus meditates.



ஞ இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து

பரி.—(இ - ள்). யான் வறியனென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளே ஒருவன் செய்யாதொழிக; செய்வனாயின் பெயர்த்தும் வறியனும், (எ - று).

† கேடு என்பவை யிரண்டும் கேட்டைத்தரும நீவினைகளே யுணர்த்து தலால் காரியவாகு பெயர்களாம்.

‡ சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின் - ஒருவன் மற் றொருவனுக்குக் கேட்டைத்தரும் வினையைச்செய்ய வெண்ணுகின்ற காலத்தே தானும் (அறக்கடவுளும் - தருமதேவதையும்) உடனே அவனுக்குக் கேட்டைத் தரும் வினையைசெய்ய வெண்ணுதலால்,

§ இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது—பிறனுக்குக் கேட்டைத் தரும் வினையைச் செய்ய எண்ணின இவன் பிறனுக்குத் தீவினையைச் செய்வது இடையூற்றின் மிகுதிப்பாட்டால் நிறைவேறுது போயினும் அல்லது நிறைவேறக் காலஞ் செல்லுமாயினும் தரும தேவதை யவனுக்குக் கேட்டைத்தரும் வினையைச் செய்வது தவறுது உடனே நிறைவேறு மென்பதாம்.

() பிறனுக்குத் தீமைசெய்ய நினைப்பவனிடத்து 'மறம்' எனும் அறம் பையப் பையக் குறையுமென்பதாம்.

§ அத்தீவினையாற் பிறவிதோறும் இலனுமென்பதாம். () அன் விகு இ முன் தனித்தன்மையினும், பின் படர்க்கை யொருமையினும் வந்தது. தனித்தன்மை 1 "உளனுவென் னுயிரை யுண்டி" என்பதனுனுமறிக. 2 மற்று - அசை ; லே. 3 இலபென்று பாட மோதவாரு மூனர். 4 பொரு

§ அத்தீவினையாற் பிறவிதோறும் இலனும் - ஒருவன் தனக்குள்ள வறுமை நீங்குமிமித்தம் அண்ணியருக்குச் செய்யுந் தீவினையினுல்ஒவ்வொரு பிறப்பிலும் தரித்திரனுவான்.

() முதலடியிலுள்ள இலன் என்பதன் அன்விகுதி தனித்தன்மை (தன்மை யொருமை) யிலும், இரண்டாமடியிலுள்ள இலன் என்பதன் அன்விகுதி படர்க்கை யொருமையிலும் வந்தனவென்க. அன் விகுதி தன்மை யொருமைக்கு வருதலைப்பற்றி நன்னூல் விருத்தியுரைகாரர் "அன் ஆன்" என்னுஞ் சூத்திரத்தினுரையில் "அன்னென்னுந் தன்மை யொருமை விகுதி தொன்று தொட்டதன்றி யிலக்கியங் கண்டமையின் எதிரது போற்றலென்னு முத்தியால் தழீஇக் கொண்டதாதலின் அதனை வலியுறுத்திப் பின்னும் அன்னெனவிதந்தும்" என்று கூறினுரென்க,

1 கலித்தொகை, குறிஞ்சி உக. இதன் பொருள் (யான்சிறிது)உயிரு டனே யிருக்கும்படி என்னுயிரை வாங்கிக்கொண்டி என்பது. 'உளனு வென்னுயிரையுண்டி' என்பதன்கணுள்ள உளன் என்பதன் அன்விகுதி தன்மை யொருமையில் வந்தது. யாப்பருங்கலக் காரிகையில் "பந்த மடி தொடை பாவினங் கூறுவன்" என்று அன் விகுதி தன்மை யொருமை யில் வந்திருத்தலையுங் காண்க.

2 மற்றும் என்பதன்கணுள்ளஉம்மை பெயர்த்து என்பதனோடுபிரித் துக் கூட்டப்பட்டது; அப்பெயர்த்தும் என்பது பின்னும் என்னும் பொ ருளே யுணர்த்தலின், மற்று என்பது அசை நிலையாயிற்று. பெயர்ச்சொல் லையும் வினைச்சொல்லையுஞ் சார்ந்து ஒரு பொருளையு முணர்த்தாது வரு வது அசைநிலை யெனப்படும்.

3 முதலடியிலும் இரண்டாமடியிலுமுள்ள இலன் இலன் என்பன வற்றை இலம் இலம் என்றுபாடங்கூறுவாரு முண்டி. இப்பாடத்தின்படி முன்னுள்ள இலம் என்பதற்கு யாம் பொருளில்லோம் என்றும் பின்னு ள்ள இலம் என்பதற்கு வறுமை என்றும் பொருள் கொள்க. (இலமா கும் என்பதற்கு - வறுமையுண்டாகு மென்பது பொருன்.) வறுமை யென் னும் பொருளையுணர்த்தும் இ ல ம் என்னுஞ்சொல் உரிச்சொல்லாம். இஃது "இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை" என்னும் (தொல்காப் பியச்)சூத்திரத்தின் விசேடவுரையில் சேனுவரையர் "இலமென்னு முரிச் சொல், பெரும்பான்மையும் பாடென்னுந் தொழில்பற்றியல்லது வாரா மையின் இலம் பாடென்றூர்" என்று கூறியதனுலு முணரப்படு மென்க.

4 இலனென்று - (யான் பொருளினுல்) தரித்திரனென் றெண்ணி, தீயவுவ செய்யற்க - தீவினைகளைச் செய்யாதொழிக, செய்யின் - செய்தால், இலனுகும் - (அப்பொருளாலே யல்லாமல் நற்குண நற்செய்கைகளாலும்,) தரித்திரனுவான், பெயர்த்தும் - பின்னும், என்று 'இலன்' என்னு மிக் குறளுக்கு வேறு பொருள் கூறுவாரு முண்டி.

ஏன் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க; செய்யின், அப்பொரு ளானே யன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனுமென் றுரைப்பாரு முளர்.

தேளி.—(இ - ன்). இல்லனென்று - (யான்) வறுமை யுடையேனென் றுனைத்து, (அவ்வறுமை நீங்கு நிமித்தம்), தீ வினை - தீவினைகளை, செய்யற்க - (ஒருவன் பிறர்க்குச்) செய்யாதிருக்கக்கடவன், செய்யின்-செய் வானுனுல், பெயர்த்தும் - பின்னும், இலனுகும் - வறுமையை யுடையவனு வான், (எ - று).

மற்று - அசைநிலை. அத்தீவினையினும் பிறவிதோறும் வறியவனுவ னெனபதாம். இனிலென்னுமிரண்டனுள், முன்னது தன்மை யொரு மை யெதிர்மறைக் குறிப்பு வினைமுற்றும் பின்னது உயர்திணையாண்பால் படர்க்கை யெதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுமாம்.

(க-து). வறுமை நீங்குதற் பொருட்டுப் பிறர்க்குத் தீமைசெய் தின்றவன் மீண்டும் வறுமையை யுடையவனுவான் என்பது.

5. Commit not evil, saying, "I am poor". if you do you will become poorer still.

சு. தீப்பால தான்பிறர்ச்சட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

பரி.—(இ - ள்). துன்பஞ்செய்யுங் * கூற்றவாகிய பாவங்கள் தன் னைப் பின் வந்து வருத்துதலை வேண்டாதவன், † தீமைக் கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர்மாட்டுச் செய்யாதொழிக, (எ-று).

‡ செய்யின், அப்பாவங்கள் அடுதல் ஒருதலை யென்பதாம்.

தேளி.—(இ - ள்). நோய்ப்பால-துன்பஞ்செய்யுங் கூற்றுபாடையன வாகிய பாவங்கள், தன்னை—, அடல் வேண்டாதான் - (பின் வந்து) வருத்துதலை வேண்டாதவன், தீப்பால - தீமைக் கூற்றுபாடையன வாகிய வினைகளை, தான—, பிறர் கண - பிறரிடத்து, செய்யற்க - செய்யாதிருக் கக் கடவன், (எ - று).

செய்வானுயின், அப்பாவங்கள் அவனை வருத்துதல் நிச்சயமென்பதாம்.

(க - து). *பாவங்கள் தன்னைப் பின்பற்றிவந்து வருத்து தலை விரும்பாதவன் தீவினைகளைப் பிறரிடத்துச் செய்யாதிருக்கக் கடவன் என்பது.*

6. Let him not do evil to others who desires not that sorrows should pursue him.

* கூற்ற - பகுதியுடையன. † தீமைக் கூற்ற - தீமையென்னும் பகுதியிற் பட்டவை. ‡ செய்யின் - பிறரிடத்துத் தீவினைகளைச் செய்தால்.

எ. எனைப்பகை யுற்றரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

பரி.—(இ - ள்). எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனை ஒரு வாற்றுற் றப்புவர் : அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது 1 புக்குழிப் புக்குக் கொல்லும், (எ-று).

2 "வீயா-தடம்பொடி கின்ற வுயிரு மில்லே" 3 என்புழியும் 4. வீயாமை நீங்காமைக்கண் வந்தது.

தெளி.—(இ-ள்). எனைப்பகையுற்றரும்-எவ்வளவு பெரிய பகையையுடையவரும், உய்வர் (அப்பெரிய பகையை ஒருவழியால்) தப்பிப்போவர். (அப்படியல்லாமல்), வினைப்பகை - தீவினையாகிய பகையானது, வீயாது - நீங்காமல், பின்சென்று - சென்றவிடத்திற்சென்று, அடும் - கொல்லும்.

வீயாது என்பதிங்கு நீங்காது என்னும் பொருளில் வந்தது.

(க - து). மிகப்பெரிய பகைக்குத் தப்பினாலும் தீவினையாகிய பகைக்குத் தப்புதல் முடியாது என்பது.

7. However great be the enmity men have incurred they may still live. The enmity of sin will incessantly pursue and kill.

அ தீயவை செய்தார் கெடுதல் னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

பரி.—(இ - ள்). பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாங்கெடுதல் எத்தன்மைத்தெனின், ஒருவன் நிழல் நெடிதாகப் போயும் அவன் றன்னை விடாது வந்து அடியினிடத்தங்கிய தன்மைத்து, (எ - று).

5 இவ்வுவமையைத் தன்காலம் வருந்தினையும் புலனாகாது உயிரைப் பற்றி கின்று, அது வந்திழி உருப்பதாய தீவினையைச் செய்தார் பின் அதனும் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃதுரை யன்றென்

1. புக்குழிப் புக்குக்கொல்லும் - (தாம்வேறுசரீரத்தில்) புக்க (பிரவேசித்த) விடத்தி (தானும் உடனே) வந்து (பிறவிதோறும்) வருத்தும்.

2. புறநானூறு, 363. இதன்பொருள் நீங்காமலுடலோடு கூடி நின்ற வுயிர்களுமில்லே யென்பது. 3. என்புழியும் - என்றவிடத்தும்.

4. வீயாமை யென்பது நீங்காமையென்னும் பொருளில் வந்தது.

5. நிழறன்னை, வீயா தடியுறைந் தற்று' என்னும் இவ்வுவமானத்தை (பயனைக் கொடுத்தற்குரிய) தன்னுடைய காலம்வருமளவும் வெளிப்படாது. [தீவினையாகிய தன்னைச்செய்த] உயிரைப்பற்றி (உயிரினது அந்தக் காரணத்தில் சம்ஸ்காரவடிவாய்) நின்று அது (தன்னுடைய பயனைக்

பதற்கு அடியுறைத்த நிழல் தன்னை வீக்தற் றென்னுது 'வீயாதடியுறைத் தற்று'என்றபாடமே கரியாயிற்று. மேல் 'வீயாது பின்சென்றமும்'என்றார், ஈண்டு அதனை உவமையான் விளக்கினர்.

தெளி:—(இ - ள்). நியவை - தீவினைகளை, செய்தார் - (பிறர்க்குச்) செய்தவர், கெடுதல் - (தாம்) கெடுதல், (எத்தன்மையதென்றால்), நிழல் - (ஒருவனது) நிழலானது, (நெடுந்தூரம்போயினும்), தன்னை-அவன்றன்னை, வீயாது - விடாதவந்து, அடி - (அவனது) அடியினிடத்து, உறைந்தற்று - தங்கிய தன்மையதாம், (எ - று).

முற்செய்யுளில்'வினைப்பகை, வீயாது பின்சென் றடும்'என்றகூறிய வர், இங்கு அதனை 'நிழறன்னை,வீயா தடியுறைத் தற்று' என்னும்உவமானத் தினால் விளக்கினர். (அடி-பாதம்).

(க - து). தீவினையானது நிழல்போலத் தன்னைச் செய்த வனையே பற்றி நின்று வருத்தும் என்பது.

8. Destruction will dwell at the heels of those who commit evil even as their shadow that leaves them not.

கொடுத்தற்குரிய காலம் வந்தபோது வெளிப்படுவதாகிய தீவினையைச் செய்தவர் பின்னர் அத்தீவினையால் கெடுதற்கு உவமானமாகச்சொல்லு வாருமுண்டு. இதன் கருத்தாவது ஒருபொருளின் நிழலானது (விளக் கொளி முதலியன வின்றிய இருளில்) ஒளிவருமளவும் வெளிப்படாது அப்பொருளைப்பற்றி யிருந்து, ஒளிவந்தபோது வெளிப்பட்டுத் தோன்று தல்போன்று, ஒருவன் செய்த தீவினையானது தனதுபயனை அவன் அனு பவித்தற்குரிய காலம் வருமளவும் வெளிப்படாது அவனது அந்தக்கர னத்தில் சம்ஸ்கார வடிவாய் நின்று தனது பயனை யனுபவித்தற்குரிய காலம் வந்தபோது வெளிப்பட்டு அவனை வருத்தும் என்பது. இவ்வுரை ஒருவனது நிழலானது நெடுந்தூரம் போலுலும் அவனை விடாது வந்து அவனடியில் தங்கும் தன்மையைப் போன்று ஒருவன்செய்த தீவினையா னது (பயனைக்கொடுக்குங் காலம் வாராமை காரணமாக) விலகியதுபோலக் காணப்பட்டாலும் அவனைவிடாது வந்து வருத்தும் என்னும் பரிமேலழக ரது அபிப்பிராயத்திற்கு மாறுபட்டதா மென்க. [இவ்வுரை 'அடியுறைத்த நிழல்தன்னை வீந்தற்று' என்று பாடமிருந்தால் ஒக்கும், அவ்வாறின்றி 'வீயா தடியுறைந்தற்று' என்று பாடமிருப்பதால் ஒவ்வாது என்று பரிமே லழகர் அதனை மறுத்தனர்]. அடிதுறையாகா தென்பதற்கு அடியுறைத்த நிழல் தன்னை வீந்தற்று (தன்னைவீந்தற்று—தான் மறைந்திருந்ததை வெளிப்படுத்திய தன்மைத்து.) என்று கூறுது வீயா தடியுறைத்தற்று என்ற பாடமே கரி (சாட்சி) யாயிற்றென்பது. மேல் (எனைப்பகையுற்றாரு மூய்வர் வினைப்பகை, வீயாது பின்சென் றடும். என்னுங்குறளில்)'வீயாது பின்சென்றமும்' என்றவர், ஈண்டு (நியவை செய்தார் என்னுமிக்குறளில்) அதனை (வீயாது பின்சென் றடும் என்பதனை) உவமானத்தினால் விளங் கச சொன்னரென்பது.

கூ. தன்னைத்தான் காதல னயி னேனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

பரி.—(இ-ள்). ஒருவன், தன்னைத்தான் காதல் செய்தல் உடைய னயின், தீவினையாகிய பதுதி * எத்துணையுஞ் சிறிதொன்றயினும் பிறர் மாட்டுச் செய்யா தொழிக, (எ - று)

$ நல்வினை, தீவினையென வினைப்பகுதி இரண்டாகலின் 'தீவினைப் பால்' என்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தலே விளக்கினராகலின் 'தன்னைத்தான் காதலனயின்' என்றார். இவை யாறுபாட்டானும் பிறர்க்குத் தீவினைசெய்யிற் றங்கெடுவரென்பது கூறப் பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) தன்னை—, தான்—, காதலனயின்-விரும்புதல் செய்தலுடையவனயிருந்தால், தீவினைப்பால் - தீவினையாகிய பகுதி,எனத்தொன்றும்—எவ்வளவுஞ்சிறிய தொன்றானும், துன்னற்க-(பிறரிடத்து) செய்யாதிருக்கக் கடவன், (எ - று).

நல்வினை தீவினை என்று வினையின்பகுதி இரண்டாகலின் 'தீவினைப் பால்' என்றார். பிறரிடத்துசெயத தீவினை தன்னிடத்துத் துன்பந் தருதலே விளக்கினராதலால் 'தன்னைத்தான் காதலனயின்' என்றார். இவை ஆறுபாட்டாலும் பிறர்க்குத் தீவினைசெய்தால் தாம் கெடுவரென்பது சொல்லப்பட்டது. (பகுதி-பாகம்).

(க - து). ஒருவன் தன்னைப்பாதுகாக்க விரும்பினால் பிறர்க்குத் தீமைசெய்யாதிருக்கக் கடவன் என்பது.

9. If a man love himself let him not commit any sin however small.

கo. ‡ அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

* எத்துணைச் சிறிதொன்றயினும் என்றும் பாடமுண்டு.

$ இலக்கணக்கொத்து "அவைதா - மனமொழி" என்னுஞ் சூத்திரத்தினுரையில் 'பட்டணத்துப் பிள்ளையார் வினைகளே வரம்பு (எல்லை) செய்யுமிடத்து 'செய்தன சிலவே செய்வன சிலவே, செய்யா நிற்பன சிலவே யவற்றிடை, நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே, யொன்றினும் படாதன சிலவே' என மூவினை கொண்டார்" என்று கூறுகின்றது.

‡ பிரயோக விவேகனூலார் "ஆக்கிய சொற்க டருதி"என்னுஞ் செய்யுளினுரையில் அருங்கேடன் என்பதனைக் கேடரியன் என விகுதி பிரித்துக் கூட்டுவர்

பரி.—(இ - ள்). ஒருவன் சேந்நெறிக்கட் செல்லாது கோடுநெறிக் கட் சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச்செய்யானாயின், அவனை, அரி தாகிய கேட்டையுடைய னென்பதறிக (எ - று).

அருமை - இன்மை. அருங்கேடனென்பதனை † "சென்றுசேர் கல் லாப் புன்ன புள்ளி லென்றூழ் வியன்குளம்" என்பது போலக்கொள்க. ஒடி என்னும் வினையெச்சம் செய்யானென்னும் எதிர்மறைவினையுட் ‡ செய்தலோடு முடிந்தது. இதனாற் தீவினைசெய்யாதவன் கேடிலனென் பது கூறப்பட்டது.

அருமை - அருங்கேடன் என்பதன் அருமையென்னும்பகுதி. இஃது இல்லாமை யென்னும் பொருளை யிங்கேயுணர்த்திற்று "தனக்கு வமை யில்லாதான் றுன்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது" என்னுங் குறளின் விசேடவுரையில் "உறற்பால தீண்டா விடுதல ரிது" என்றுற்போல ஈண்டு அருமை யின்மைமே னின்றது" என முகூறியிருத் தலுமிங் கறியத்தக்கதாம்.

கேடரியன் என்பது அருங்கேடன்என்றுயது வடமொழிப்புணர்ச்சி. 'இக்நான் கியல்பு மியம்புவர் மொழிக்கும்" என்னுஞ்சூத்திரத்தினுரையில், "இனிச் சொற்கள் இக்நனந் தமிழ்மொழி யியால் நிலைமாறுதலுமன்றி, வடமொழி யியால் நிலைமாறுதலுமுள. உ-ம் செய்தவேள்வியர்;எய்திய செல்வத்தர்; கழிந்தவுண்டியர்; வேண்டாவுயிரார்; அருங்கேடன்;கொண்ட கூழ்த்தாகி; கூப்பியகையினர்; வெறுத்தவாசையர்; பொறுத்த சடையினர்; கெட்டவறுமையர்; விட்டவவாவினர்; வேர்த்து வெகுளார்; கொழுநற் றொழுதெழுவன்; வாய்ப்ளந்துறங்கினன்; குறட்டைவிட் டுறங்கினன், எனவரும்.

இனித் தமிழ்மொழியியால் நிலைமாறுதற்கும், வடமொழியியால் நிலைமாறுதற்கும் வேறுபாடென்னெனின், நிலைமொழியும் வருமொழியுங் திரியாது தம்முள் நிலைமாறுதல்; திரிந்து தம்முள் நிலைமாறுதலென்க. உ-ம்;வைக்குங் குந்தன்னுளையெடுத்து;பருகுவன்யைதனை யெல்லாங்கெட, எ-ம், வாய்ப்ளந்துறங்கினன்;குறட்டைவிட்டுறங்கினன்; எ-ம்,முறையேகா ண்க" என்ற இலக்கணக் கொத்துக் கூறிற்று.

† அகநானூறு 42. இதன்பொருள் சென்று சேருதலையறியாத பற வைகளையும் அப்பறவைகளைப்போல (சென்று சேருதலையறியாத) வெயி லையுமுடைய பெரியகுளம் என்பது;பறவைகளும்சூரியகிரணமுஞ் சோர குனமெனபதாம். சென்று சேர்கல்லாப்புள்ளவியன் குளம் என்பது வட மொழிப் புணர்ச்சி. என்றூழ் என்பதற்கு மிங்ஙனமே கொள்க.


‡ பகுதியைத்தொழிற்பெயராகக் கொள்ளுதலே(செய்யென்னும் பகு தியைச் செய்தலென்னும் தொழிற்பெயராகக்கொள்ளுதலே) 'எளிதுமாஅர்' என்னுங் குறளில் உழார் என்பதற்கு 'உழுதலைச்செய்யார்'என்றுரை கூறி யிருப்பதாலு மறிக.

தேளி.—(இ - ன்). (ஒருவன் செவ்வையான வழியிற் செல்லாது) மருங்கோடி - கொடியவழியிற்சென்று, தீவினை - தீவினைகளை, செய்யானெனின் - (பிறரிடத்து) செய்யானாயின், அருங்கேடனென்பது-(அவன்) கேடில்லாதவனென்பதை, அறிக - அறியக்கடவர், (எ-று).

அருங்கேடன் - கேடரியன். அருமை - இன்மைப்பொருளது. ஒடியென்னும் வினையெச்சம் செய்யானென்னுமெதிர்மறை வினையின் செய் (செய்தல்) என்னும் பகுதிகொண்டு முடிந்தது. இதனால் தீவினை செய்யாதவன் கேடில்லாதவனுவனென்பது சொல்லப்பட்டது. (மருங்கு-பக்கம்).

(க - து). தீவினை செய்யாதவனுக்குக் கேடுண்டாகாது.

10. Know ye that he is freed from destruction who commits no evil, going to neither side of the right path.



பதினெட்டாவது அத்தியாயம்.

$ ஒப்புரவறிதல்:—On Benevolence.

பரி.—அஃதாவது உலகநடையினை யறிந்துசெய்தல். 1 உலகநடை 2 வேதநடைபோல 3 அறநூல்களுட் கூறப்படுவதன்றித தானே அறிந்து

"இனியொரு பொருளின் புடைபெயர்ச்சியே வினையென்பது எல்லார்க்கு மொப்பமுடிந்தது; அவ்வினையைக் கொள்ளுதலால் வினையெச்சமென்பதும் அங்ஙனமுடிந்தது. அவ்வினையெச்சம வினையைக்கொள்ளுதலன்றி வினையின்மையைக் கொள்ளாது என்பதும் அங்ஙன முடிந்தது. ஆகவே, உண்டுநடந்தான என்பது பொருந்தும். உண்டுகடவான் என்பது பொருந்தாது. இலக்கணவழுவேயாம. ஆகையால் அம்மறைச்சொல்லினுள் முதனிலையைப்பிரித்து ஒருபொருளின் புடைபெயர்ச்சியாகிய புடைபெயர்ந்த நடத்தலென்னுந் தொழிற்பெயராக்கி, வினையெச்சத்தை வினை கொண்டுமுடித்துப் பின்புசெய்யானென்னு மறையைவருவித்து உண்டு நடத்தலைச் செய்யானென்று முடிப்பர் இக்கருத்துப் பரிமேலழகர்க்கும் உரையாசிரியர்க்கும் நியமம். இது மறைச்சொல்லின் முதனிலை விதிப்பொருள் பெற்றது" என்று இலக்கணக்கொத்து நூலாசிரியர் "விதிச்சொன் மறைப்பொரு ளாகி வருஉவும்" என்னுஞ் சூத்திரத்தினுரையிலெழுதியிருப்பது மிகுகறியத்தக்கதாம்.

$ ஒப்புரவறிதற்குப்பயன் இம்மையிற்புகழ். இஃது ஈகை யதிகாரத்தின் அவதாரிகையில் "இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது" என்றும், இவ்வதிகாரத்தின் பத்தாஞ்செயுளின் விசேடவுரையில் "புகழ்பயத்தல்நோக்கி" என்றும், கூறியிருத்தலினுலும் விளங்கும்.

1 உலகநடை - லௌகிகப் பிரக்கிரியை. 2 வேதநடை - வைதிகப் பிரக்கிரியை. (நடை - ஒழுக்கம்). 3 அறநூல்கள் - மனுமுதலிய தரும சாஸ்திரங்கள்.

செய்யுந் தன்மைத்தாகலின் 'ஒப்புரவறிதல்' என்றார். † மேல் மன மொழி மெய்களால் 5 தவிரத்தகுவன கூறினார். இனிச்செய்யத் ததுவன வற்றுள் 6 எஞ்சினின்றன கூறுகின்றாராகலின், இது நீவினை யச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

தேளி.—அஃதாவது உலகுடையைஅறிந்து(உபகாரஞ்)செய்தலாம். லௌகிகவொழுக்கமானது வைதிக வொழுக்கம்போலத் தருமசாஸ்திரங்களுள் சொல்லப்படுவதல்லாமல் தாமே அறிந்துசெய்யுந் தன்மையதாதலால் 'ஒப்புரவறிதல்' என்றார். முன்னர் மனோவாக்குக் காயங்களாற் செய்யத்தகாதனவற்றைச் சொல்லினர். இனிச் செய்யத்தகுவனவற்றுள் (முன் சொல்லப்பட்டனவற்றுள்) அடங்காதனவற்றைச் சொல்லுகின்றாராகையால், இது (ஒப்புரவறிதல்)நீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

க. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னுற்றுங் கோல்லோ வுலகு.

பரி.—(இ - ள்). தமக்கு நீர் உதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யாநின்றன, ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனல்ல.

என்னுற்றும் என்ற வினாயாதும் ஆற்றுஎன்பது தோன்ற நிற்றலின் $ அது வருவித்துரைக்கப்படும். ‖ தவிருந்தன்மையவல்ல வென்பது கடப்பாடென்னும் பெயராலே பெறப்பட்டது. ¶ செயவாரது வேண்டாமையைச் செயப் படுவனமே லேற்றினர்.

தேளி.—(இ - ள்). உலகு - உயிர்கள், மாரிமாட்டு—(தமக்குநீருதவுகின்ற)மேகங்களினிடத்து, என்-என்ன பிரதியுபகாரத்தை, ஆற்றும்-செய்கின்றன, [ஒன்றும் செய்கின்றனவில்லை.] (ஆதலால்), கடப்பாடு - (அம்மேகங்கள் போல்வார் செய்யும்) உபகாரகளும், கைம்மாறு-பிரதியுபகாரங்களோ, வேண்டா - வேண்டுவனவல்ல, (எ - று).

கொல், ஓ, அசை. (உலகு) 'என்னுற்றும்' என்னுங்கேள்வி (உலகு) யாதும் ஆற்று (செய்யா) என்பது தோனறநிற்றலால், அது வருவித்துச் சொல்லப்படும். கடப்பாடென்னும் பெயரினாலேயே(உபகாரங்கள்) அவையஞ் செய்யத்தக்கனவென்பது பெறப்பட்டது. கடப்பாடு-முறையறிந்து

---

† மேல் - முன்னே. அஃதாவது பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, நீவினையச்சம் என்னும் அதிகாரங்களில். 5 தவிரத்தகுவன-ஒழிக்கத்தக்கவை. 6 எஞ்சினின்றன - மிஞ்சுகின்றவை.

$ அது - யாதும் ஆற்று என்பது.

‖ தவிருந்தன்மையவல்ல - ஒழிக்குந்தன்மையன அல்ல.

¶ இது வினைமுதலினது பண்பு செயப்படுபொருண்மேலாய வுபசார வழக்கு.

செய்யுமுபகாரம், உபகாரஞ் செய்காரது வேண்டாமையை அவரால் செய்யப்படும் உபகாரத்தின்மேலேற்றிக் கடப்பாடு கைம்மாறுவேண்டாஎன்று கூறினர்.

(க - து). அறிவுடையார் பிறர்க்குக் கைம்மாறுகருதாது உபகாரங்கள் செய்வர் என்பது.

1. Benevolence seeks not a retrun. What does the world give back to the clouds

உ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பரி.—(இ - ள்). ததுதி யுடையாரிக் † காயின் முயறலேச் செய்து ஈட்டிய பொருள் முழுதும் ஒப்புரவு ‡ செயித்தற் பயத்தவாம்.

$ பிறர்க்குதவாதார் பொருள் போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்திழத்தற் பொருட்டும் அன்றென்ப தாயிற்று.

தெளி.—(இ - ள்). தக்கார்க்கு - தகுதியுடையவர்க்கு (ஆயின்), தாளாற்றி - முயற்சிசெய்து, தந்த - சம்பாதித்த, பொருளெல்லாம்-பொருளனைத்தும், வேளாண்மை - உபகாரத்தை, செய்தற்பொருட்டு - செய்தற் பயனுடையனவாம், (எ - று).

(தக்கார் முயற்சிசெய்து சம்பாதித்தபொருள்) பிறர்க்கு உதவி செய்யாதவராது பொருள்போலத் தாமே அனுபவித்தற் பொருட்டும், (சேர்த்து) வைத்து இழத்தற்பொருட்டும் அன்றுமென்பதாயிற்று.

(க - து). தக்கார் முயற்சிசெய்து பொருளேச்சம்பாதிப்பது பிறர்க்கு உபகாரஞ்செய்தற் பொருட்டாம் என்பது.

2. To exercise benevolence towards the worthy is the whole design of labouring and acquiring property.

ரு. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

* தகுதி-கல்வி கேள்வியறிவு ஒழுக்கங்களா லுண்டாகிய யோக்கியம்.

† ஆயின் (ஆனல்) என்பது செய்யுளில் குறைந்து நின்றது.

‡ செயித்தற் பயத்தவாம் - செய்தலாகிய பிரயோஜனமுடையனவாம்.

$ இதனுல் சம்பாதித்த பொருளேத் தக்கார்க் குதவித் தாமுமனுபவித்து வரவேண்டு மென்பது பெறப்படுமாறறிக.

† நிறைதலென்னும் இடத்திலிகழ் பொருளின் தொழில் இடத்தின் மே லேற்றப்பட்டது. ‡ பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வே ண்டுவன தப்பாது உதவு மென்பதாம்.

நேளி:—(இ - ன்). உலகு - உலகதடையை, அவாம் - விரும்பிச்செய் யும், பேரறிவாளன் - பெரியவறிவினை யுடையவனது, திரு - செல்வம், ஊருணி - ஊரில்வாழ்வார் நீருண்ணுங குளமானது, நீர்நிறைந்தற்று - நீர் நிறைந்தாற்போலும், (எ - று).

நிறைதலெனனும் நீரின் தொழிலை நீருக்கிடமாகிய குளத்தின்மே லேற்றி 'ஊருணி நீர்நிறைந தற்றே' என்று கூறப்பட்டது. அச்செல்வம் பாழ்படாமல் நெடுங்காலமிருந்து எல்லாருக்கும வேண்டுவனவற்றைத் தவ றாது உதவுமென்பதாம்.

(க - து). பேரறிவாளனது செல்வம் ஊராருண்ணுங் குளத் திலே நீர் நிறைந்தாற் போன்று யாவருக்கும் பயன்படுவதாம்.

5. The wealth of that man of eminent knowledge who desires (to exercise the benevolence approved of in) the world is like the full waters of a city tank.

கூ. பயன்மர § முள்ளூர்ப்பழுத்தற்றுற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

பரி:—(இ - ள்). செல்வம் ¶ ஒப்புரவுசெய்வான் கண்ணே படு மாயின், அது பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும், (எ - று).

0 உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நயன்' என்றார். எல்லார்க்கும் எளிதிற் பயனகொடுக்கு மென்பதாம்.

† நிறைதலென்னும் இடத்தி (குளத்தி) னிகழ்பொருளாகிய நீரின் (ஜலத்தின்) தொழிலை அதற்கு இடமாகிய குளத்தின்மேலேற்றி 'ஊருணி நீர்நிறைந் தற்றே' என்று சொல்லப்பட்டது. இஃதிடத்தி னிகழ் பொரு ளின் தொழில் இடத்தின் மேலாய வுபசாரவழகு.

‡ உலகதடையை விரும்பிசெயயும் பேரறிவாளனது செல்வமானது ஊருணி நீர்போல் பாழ்போகாது நெடுங்காலம் நின்று யாவர்க்கும் அவர் விரும்புவனவற்றைத் தப்பாது உதவுமென்பதாம்.

§ உள்ளூர என்பது ஊருள் என்பதன் இலக்கணப்போலி; முன்பின் னுகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகையுமாம்.

¶ ஒப்புரவு செய்வான் செல்வம் ஊர்நடுவே பயன்படுமரம் பழுத்தாற் போன்றதென்பது "நடுவூருண் வேம்பிலை சுற்றுக்கோட் புக்க, படுபேய் யன்னர் பலர்கச்ச வாழ்வார்" என்று காலடியார் கூறிவதைத் தழுவுின்ற வாறறிக.

0 உலகநீதி பலவாவன - ஒருவரையும் பொல்லார்கு சொல்லாமை, வஞ்சனைகள் செய்வாரோ டிணங்காமை, மனம்போன போக்கெல்லாம் போகாமை முதலியனவாம்.

தெளி:—(இ-ள்). செல்வம்-செல்வமானது, யாணுடையான்கண்-உபகாரஞ் செய்பவனிடத்தே, படின்-உண்டாகுமாயின், (அவ்வுண்டாதல்), உள்ளூர்-ஊர்க்குமே, பயன்மரம்-(யாவர்க்கும்) பிரயோஜனப்படுகின்ற மரமானது, பழுத்தற்று-(பழம்) பழுத்தாற்போலும், (எ-று).

ஆல்-அசை. உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு நிறுத்தையால், அவ்வொப்புரவையே 'நயன்' என்றார். அவ்வொப்புரவுடையான் அம்மரம்போல யாவர்க்கும் எளிதிலே பயன்றருபவனுவா னென்பதாம்.

(க-து). உபகாரஞ் செய்பவனிடத்திற் செல்வமுண்டாதல் நடுவூரிலே பயன்படுமரம் பழுத்தாற்போன்று பயனுடையதாம்.

6. 'The wealth of a man (possessed of the virtue) of benevolence is like the ripening of a fruitful tree in the midst of a town.

எ. மருந்தாகித் தப்பா மரத்தற்றுச் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

பரி:—(இ-ள்). செல்வம் ஒப்புரவுசெய்யும் பெரியதகைமையையுடையான்கண்ணே படுமாயின், அஃது எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் $ தப்பாத மாத்தை யொக்கும், (எ-று).

தப்புதலாவது 1 கோடற்கரிய விடங்களி னின்றுதல், 2 மறைத்து நின்றுதல், 3 காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. 4 தன்குறை

$ தப்பாத-பயன்படுதலிற் றவறாத.

1 ஒருவன் சென்று கொள்ளுவதற் கருமையான செங்குத்தானமலை முதலிய விடத்திலிருத்தல்.

2 ஒருவன் சென்று கொள்ளுவதற்கு அருமை யில்லாத புழைக்கடை முதலிய விடத்திலிருந்தும் வேறு பொருள்கள் மறைக்க மறைந்து நிற்றல்.

3. ஒருகாலத்திலிருந்து மற்றொரு காலத்திராமை.

4. மருந்தாகித் தப்பாத (வேம்பு முதலிய) மரம் யாதொரு மாறுபாடு மில்லாமல் வெளிப்பட்டு நின்று தன்னுடைய இலை தளிர் முதலியவற்றை முறித்தும் பறித்தும் செதுக்கியும் பிறர் செய்யும் தன்னுடைய குறைவை நோக்காது (தன்னுறுப்புக்களை யுபயோகப்படுத்திக் கொள்ளும்) எல்லாத வருத்தத்தையும் ஒழிப்பதுபோன்று, பெருந்தகையானது செல்வமும் யாதொரு மாறுபாடு மில்லாமல் வெளிப்பட்டு நின்று தன்னை யுடையவன் பிறர்க்குக் கொடுத்தலினுற் குறையும் தன்னுடைய குறைவை நோக்காது எல்லாத வருத்தத்தையுந் தப்பாம லொழிக்குமென்பதாம். "தங்குறைநீர் வள்ளார் தளர்ந்து பிறர்க்குறுஉம், வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர், திங்கள், கறையிருளை நீக்கக் கருதா தலகி, னிறையிருளை நீக்குமே னின்று" என்பது நன்னெறி.

கோக்காது எல்லார் வருத்தமுந் தீர்க்குமென்பதாம். இவை மூன்று பாட்டானுங் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). செல்வம்-செல்வமானது, பெருந்தகையான்கண்-(உபகாரஞ்செய்யும்) பெரிய தகைமையை யுடையவனிடத்தே, படின்-உண்டாகுமாஞல், (அச்செல்வமானது), மருந்தாகி - (எல்லாவுறுப்புக்களும் பிணிகளுக்கு) மருந்தாய், தப்பா - தப்பாத, மரத்தற்று - மரத்தை ஒக்கும்.

ஆல் - அசை. எல்லாவுறுப்புக்களுமென்றது மரத்திற்கு-இலை. பூ, காய், கனி முதலியவற்றை; செல்வத்திறகு - அனுபவித்தற்குரிய பலபொருள்களே. தப்புதலாவது கொள்ளுதற்கரிய விடங்களிலே நின்றுவது, மறைந்து நின்றுவது, காலத்தால் வேறுபட்டாவது பயன்படாமை. மருந்தாகித் தப்பாத மரமானது தன் குறைவை நோக்காது எல்லார்வருத்தமுந் தீர்க்குமாறுபோலப் பெருந்தகையானது செல்வமும் தன்குறைவை நோக்காது எல்லார் வருத்தமுங் தீர்க்குமென்பதாம். இவை மூன்று பாட்டாலும் உபகாரஞ் செய்பவனது பொருள் பயன்படுமாறு சொல்லப்பட்டது.

(க - து). பெருந்தகைமையை யுடையவனிடத் தண்டாகுஞ் செல்வம் மருந்தாகித் தப்பாத மரம் போன்று பயனுடையதாம்.

7. Wealth is like a tree which as a medicine is an infallible cure for disease, if it be in the possesion of a man who has the great excellence (of benevolence).

அ. இடனில் பருவத்து மோப்புரவிற் கோல்கார்
கடனறி காட்சி யவர்.

பரி:—(இ - ள). செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவுசெய்தலுந் தந்தனாரர், தாஞ்செய்யத் தகுவனவற்றை யறிந்த வியற்கை யறிவுடையார், (எ - று).

† பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியாரென்பதாம்.

தெளி:—(இ - ள்). கடனறி - (தாம்) செய்யத்தகுங காரியங்களை யறிந்த, காட்சியவர் - இயற்கையறிவுடையவர், இடனில் பருவத்தும்-செல்வஞ் சுருங்கிய காலத்திலும், ஒப்புரவிற்கு - உபகாரஞ்செய்வதற்கு, ஒல்கார் - தளாரார், (எ - று).

(கடனறி காட்சியவர் இடம்பொருளேவல் முதலிய) மற்றைய வெல்லா மொழிந்தாலும், இவ் வொப்புரவு செய்தலே யொழியா ரென்பதாம்.

(க - து). அறிவுடையோர் வறுமை நேர்ந்த காலத்திலும் பிறர்க்குதவி செய்வதிற் குறையார் என்பது.

† "வழங்குவ துன்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைப்பிரிதல் இன்று" என்னுங் குறள் ஈண்டுக் கவனிக்கத் தக்கதாம்.

8. The wise who know what is *duty* will not diminish their benevolence even when they are without wealth.

கூ. நயனுடையா னல்கூர்ந்தா னீதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

பரி.—(இ - ள்). ஒப்புரவு செய்த்லையுடையான் நல்கூர்ந்தானீதலாவது, தவிராது செய்யும் நீர்மையையுடைய அவ்வோப்புரவுகளைச் செய்யப்பெறாது வருந்துகின்ற வியல்பாம், (எ - று).

தான் நுகர்வன நுகரப்பெறுமை அன்றெனபதாம். இவை யிரண்டு பாட்டானும் வறுமையான் ஒப்புர வொழிதற்பாற் றன்றென்பது கூறப் பட்டது.

தெளி.—(இ-ள்). நயனுடையான் - உபகாரஞ்செய்தலேயுடையவன், நல்கூர்ந்தானீதல் - வறுமையுடையவ னீதலாவது, செயும் - (ஒழியாமற்) செய்யும், நீர - குணத்தையுடைய அவ்வுபகாரங்களை, செய்யாது-செய்யப் பெறுமல், அமைகலாவாறு - வருந்துகின்றவியல்பாம், (எ-று).

தான் அனுபவிக்கும் பொருள்களே யனுபவிக்கப்பெறுமை நயனுடையானுக்கு வறுமையன்றென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் வறுமையால் உபகாரம் செய்யாது விடத்தக்கதனறென்பது சொல்லப்பட்டது.

(க - து). உபகாரி தரித்திரனுவது தான் பிறர்க்குச் செய்யுமுதவியைச செய்ய முடியாமையால வருந்துதலேயாம் என்பது.

9. To be in sorrow through inability to perform the benefits which should be performed is the poverty of a benevolent man.

கo. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றக் * கோட் டக்க துடைத்து.

பரி:—(இ-ள்). ஒப்புரவுசெய்த்லான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின், அக்கேடு (ஒருவன்) தன்னை விற்றியினுங் கோள் ளுந் ததுதியை யுடைத்து, (எ-று).

† *தன்னை விற்றுக்கொள்ளப் படுவதொருபொருள் இல்லையன்றே? இஃதாயின், அதுவுஞ் செய்யப்படுமென்றது; புகழ் பயத்தல் நோக்கி. இதனல் ஒப்புரவினுற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது.*

---

* *கொள்ளத் தக்க துடைத்து என்பது செய்யுள் விகாரத்தால் கோட் டக்க துடைத்து என்றுயிற்று.*


† *ஒருவன் தன்னைப் (பிறர்க்கு) விற்று (விக்கிரயஞ் செய்து) கொள் ளப்படுவதொரு பொருள் (வாங்கப்படும் வஸ்து) இல்லை யன்றே? (இன்று யினும்) இஃதாயின் (ஒப்புரவு செய்தலால் பொருட் கேடுவருமானல்)*

தெளி.—(இ-ன்). ஒப்புரவினால் - உபகாரஞ் செய்தலால், வருங்கே டெனின் - (ஒருவனுக்குப்பொருட்) கேடு வருமென்பா ரிருப்பாராயின், அஃது - அக்கேடானது, ஒருவன்—, விற்று - (தன்னை) விற்றலினும், கேட்டக்கதுடைத்து - வாங்குக் தகுதியை யுடையதாகும், (எ-று).

ஒருவன் தன்னைப்பிறரிடத்து விற்றுத் தான் வாங்கிக்கொள்ளப்படுவ தொரு பொருள் இல்லையல்லவா? ஒப்புரவினால் கேடுவருவதண்டாயின், அது புகழுண்டாக்குதலேக் கருதி அக்கேட்டின் பொருட்டி அதுவும் (தன்னைவிற்றலும்) செய்யப்படுமென்பதாம். இதனால் ஒப்புரவினால் கெடுவது கேடன்றென்பது சொல்லப்பட்டது.

(க - து). உதவிசெய்தலாற் பொருட்கேடு வருமென்றாலும், அக்கேட்டினை யொருவன் தன்னை விற்றாயினுங்கொள்ளக்கடவன்.

10. If it be said that loss will result from benevolence such loss is worth being procured by the sale of one's self.



பத்தோன்பதாவது அதிகாரம்.

† ஈகை.—*On Alms—deeds.*

பரி.—அஃதாவது $ வறியார் யேற்றார்க்கு மாற்றது கோடுத்தல். ¶ இது மறுமை நோக்கியதாகலின், () இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது வறியராய் இரத்தவர்க்கு இல்லையென்னாது கொடுத்தலாம். இது (ஈகை) மறுமையைக் குறித்ததாகலின், இம்மையைக் குறித்த ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

(அக்கேட்டின்பொருட்டி) அதுவுஞ் செய்யப்படுமென்றது (தன்னை விற்றலும் செய்யப்படும் என்று கூறியது);புகழ்பயத்தலே (கீர்த்தியுண்டாக்கலே) கோள் (என்க). "கெடுவாக வையா துலகநடுவாக, நன்றிக்கட் டங்கியான் மூழ்வு" என்னுங்குறள் ஈண்டுக் கவனிக்கத் தக்கதாம்.

‡ ஈகை - ஈதல். அஃதாவது உயர்ந்தோன் இழிந்தோனுக்கு அவன் வேண்டியதொன்றைக் கொடுத்தல். ஈதலேப் பெறுவோன் இழிந்தோனென்பது "ஈயென் னிளவி யிழிந்தோன் கூற்றே"என்னும் (தொல்காப்பியச்) சூத்திரத்தாலு மினிது விளங்கும்.

§ வறியார் யேற்றார்க்கு - தரித்திரராய் வந்து யாசித்தவர்களுக்கு.

* மாற்றமை - ஒன்றைக்கொடுத்துப் பிறிதொன்றை வாங்காமை. பிரதியுபகாரங் கருதாமை யென்றபடி.

¶ இது மறுமை நோக்கியதாகலின் - ஈகைபானது மறுமை (மரணத்தின்பின் வரும் பயனேக்) குறித்ததாகலின்.

() இம்மை நோக்கிய - இம்மைப் (இப்பிறப்பின்) பயனுமை புகழைக குறித்த.

க. ‖ வழியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

பரி.—(இ - ள்). ஒரு பொருளு மில்லாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது; அஃதொழிந்த எல்லாக்கொடையும் †† குறியெதிர்ப்பை கொடுக்கும் நீர்மையை யுடைத்து, (எ-று).

† ஒழிந்த கொடைகளாவன ‡ வறிய ரல்லாதார்க்கு ஒரு பயனெக் கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்து வாங்கி அவ்வாங் கிய வாறே எதிர் கொடுப்பது. ¶ நீரது என்புழி அதுவென்பது பகுதிப் பொருள் விகுதி. $ பின்னுந் தன்பால் வருதலின், 'குறியெதிர்ப்பை நீரதுடைத்து' என்றார்: இதனுள் * ஈகைய திலக்கணங் கூறப்பட்டது.

தேளி.—(இ - ள்.) வறியார்க்கு - ஒரு பொருளு மில்லாதவர்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒன்றை, ஈவதே - கொடுப்பதே, ஈகை - (பிறர்க்குக்) கொடுத்தலாம், மற்றெல்லாம் - அவ்வறியார்க்குக் கொடுப்ப தொழிந்த எல்லாக் கொடையும், குறியெதிர்ப்பை - குறிக்கப்பட்ட பின் வரும் பயனை (க் கொடுக்கும்), நீரது - குணத்தை, உடைத்து-உடையதாம்.

ஒழிந்த கொடைகளாவன வறியவரல்லாதவர்க்கு ஒரு பயனை நோக் கிக் கொடுப்பனவாம். குறி யெதிர்ப்பையாவது பிறர்டத்து ஓளவு குறித் துப் பொருளை வாங்கி அவ்வாங்கியபடியே அவர்க்கு மீண்டும் எதிராய்க்

‖ இக்குறளின் கருத்தை " எற்றகை மாற்றுமை யென்னுங் தாம் வரையா, தாற்றுதார்க் கீவதா மான்கட-ஞற்றின், மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல், பொலிகட னெனனும் பெயர்த்து " என்னும் காலடிச் செய்யுளானு மறிக.

†† குறியெதிர்ப்பை என்பதில் ஐகாரம் சாரியை. குறியெதிர்ப்பு என் பது இறந்தகால வினைத்தொகை; அஃது (எதிர்காலத்திற் பெறும்படி யாகக்) குறித்த எதிர்ப்பு எனலிரியும். இதனது நிரண்டபொருள் எதிர் காலத்திற் பெறுமபடியாக வெண்ணி நிகழ்காலத்தில் ஒன்றை யொத்தார்க் கும் மிக்கார்க்குங் கொடுப்பதென்பது.

† ஒழிந்த - வறியவர்களுக்குக் கொடுத்த லொழிந்த.

‡ வறிய ரல்லாதார்க்கு - தரித்திர ரல்லாதவர்களுக்கு; அஃதாவது ஒத்தார்க்கும் உயர்ந்தார்க்கும்.

¶ நீரது என்பதன் அது என்பது நீர்மை யென்னும் பண்பின் விகாரமாகிய நீரென்னும் பகுதியின் பொருளை யுணர்த்தித் தனக்கெனப் பொருளின்றி யிருத்தல்பற்றிப் பகுதிப்பொருள் விகுதியாயிற் றென்க.

$ பின்னுந் தன்பால் வருதலின்—ஒத்தார்க்கும் மிக்கார்க்குங் கொடு த்தலை மறபடியுந் தம்மிடத்தில் வருதலினால்,

* ஈதற்குரியவர் ஒன்பதின்மரென்றும், ஈதற்குரிய ரல்லாதார் எண் பதின்மரென்றும் காசிகாண்டம் கூறுகின்றது ஆதலுமாறு:—

கொடுப்பது. நீரது என்னுமிடத்து அது பகுதிப்பொருள் விகுதி. (அவ் வாறு கொடுத்த பொருள்) பின்னுந் தன்னிடத்து வருதலால் 'குறியெதிர்ப்பை நீரதடைத்' என்றார். இதனுல் ஈகையினது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து). தரித்திரருக்கீதலே யீகையாவதன்றி யேனையோர்க்கீதல் ஈகையாகா தென்பது.

1. To give to the destitute is true charity. All other gifts have the nature of (what is done for) a measured return.



உ. நல்லா ரெனினுங் கொளலீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

பரி —(இ - ள்). ஏற்றல் விட்டுலகிற்கு நல்லநெறி யென்பார் உளராயினும் * அது நீது; ஈத்தார்க்கு அவ்வுல கெய்துத லில்லையென்பாருளராயினும் ஈதலே நன்று, (எ - று).

† எனினுமென்பது இருவழியும் அங்ஙனங் கூறுவார் இன்மை விளக்கி நின்றது. ‡ பிரிநிலை ஏகாரத்தால் பிறவறங்களின ஈதல் சிறந்த தென்பது பெற்றும். § நல்லது கூறுவார் நீயதும உடன் கூறினர்.

"மாண்புடை யாளர் கேண்மையர் தத்தம் வழிமுறை யொழுக்கினி லமர்ந்தோர், சேண்படு கிரப்பி னெய்தினுர் புரப்போர் நீர்ந்தவர் தந்தை தாய் குரவர், காண்டகு முதலி புரிந்தளோ ரினையோ ரொன்பதின் மருளுள களிப்ப, வேண்டுறு கிளிய மளிப்பின்மற் ருென்றே கோடியா மெனமறை விளமபும்."

"முகனெதி ரொன்றும் பிரியின்மற் ருென்று மொழிபவர் விழைவுறு தகை, ரகன்றகேள் வியிலா ரருமருந்த துவர்க ளரும்பொருள் கவருநர் தூர்த்தர், புகலருந் தீமை புரிபவர் மல்லர் செருக்கினர் புனருழிற் றீயோ, ரிகழ்தரு மினையோ ரொன்பது பெயர்க்கு மீந்திடல் பழுதென விசைப்பார்."

* அது - ஏற்றல் (யாசித்துப் பிறரீதலேற்பெறுதல்). யாசித்தல் தீதாதலை இரவச்சமென்னு மதிகாரத்திற் காண்க.

† நல்லாரெனினுங் கொளலீது மேலுலக மில்லெனினு மீதலே நன்று' என்னு மிரண்டு வாக்கியத்திலு முள்ள எனினும் என்பது கொளல் நல்லாரு, ஈதலுக்குப் பயனுக மேலுலக மில்லை என்று அப்படி சொல்லுவாரில்லாமையை விளக்கி நின்றது.

‡ பிரிநிலையாவது பலவற்றினின்று மொன்றைப் பிரித்துக் காட்டி நிற்றல்.

§ நீயதை விளக்கினுலல்லது நல்லது விளங்காமையினுலே 'ஈதலே நன்று' என நல்லது சொல்லவந்தவர் 'கொளலீது' எனத் நீயது முடன் கூறினர். இது ஒன்றின முடித்தல் தன்னின முடித்தலென்னு முத்தி. 'மறவற மாசற்றார் கேண்மை' என்னுங் குறளின் விசேடவுரையில் "இம்மைக்குறுதி கூறுவார் மறுமைக்குதவியு முடன்கூறினர்" என்று கூறியிருத்தலும் ஈண்டுக் கவனிக்கத்தக்கதாம்.

தெளி.—(இ-ன்). கொளல் - (பிறர் கொடுத்தலே வாங்கிக்) கொள்ளுதல், நல்லாறெனினும்-(முத்தியுலகத்தை யடைதற்கு) நல்லவழியென்பவர் இருப்பாராயினும், (அது), நீதி-குற்றமாம்,(கொடுத்தவிற்கு), மேலுலகம்-(அந்த) முத்தி யுலகத்தையடைதல், இல்லெனினும் - இல்லே யென்பவர் இருப்பாராயினும், ஈதலே - கொடுத்தலே, நன்று - நல்லது, (எ - து).

எனினுமென்பது இரண்டிடத்தும் அவ்வாறு சொல்லுவாரில்லாமையைக் காட்டிநின்றது. ஈதலே யென்னும் பிரிநிலை ஏகாரத்தால் பிறவதங்களில் ஈதல் சிறந்ததெனபது பெறப்பட்டது. நல்லது சொல்லவந்தவர் நீயதும் உடன்சொல்லினர்.

(க - து). யாசித்தல் முத்தியடைதறகு நல்லவழி யென்றும் அது செய்தலாகாது. ஈதலால் முத்தியடைதலில்லே யென்றும் அது செய்தல் நலலது என்பது.

2. To beg is evil, even though it were said that it is a good path (to heaven). To give is good, even though it were said that those who do so cannot obtain heaven.

ரு. இலனென்னு மேவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

பரி:—(இ - ள்). யான் வறியனென்று இரப்பான் சொல்லும் இவ்வாவைத் தான் பிறர்கட்சொல்லாமையும், † அதனைத் தன்கட் சொன்னர்க்கு மாற்றது ஈதலும் இவை யிரண்டும் உளவாவன குடிப் பிறந்தான் கண்ணே, (எ - று).

மேற்றீதென்றது ஒழிதற்கும், நன்றென்றது செய்தற்கும் உரிய வினை யுணர்த்தியவாறு. $ இனி 'இலனென்னு மேவ்வ முரையாமை யீதல்' என்பதற்கு 1 அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், 2 அதனைப்பின்னும் பிறனொருவன்பாற்சென்று அவனுரையா வகையாற் கொடுத்த லெனவும், 8 யான்

† அதனை - அவ்விளிவரவை (தனபருதருமொழியை).

$ 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என்பதற்கு (பரிமேலழகர் பிறர் கூறிய மூன்றுரையை யெடுத்தெழுதிக காட்டினர். அவை வருமாறு:—)

1. இலனென்னுமெவ்வம் - அத்தன்பத்தருமொழியை, (யாசிப்பானொருவன் தனக்கு), உரையாமை - சொல்லுவதற்கு (முன்னே அவன் குறிப்பை யறிந்து), ஈதல் - (பொருளைக்) கொடுத்த லென்றும், 2. இலனென்னு மெவ்வம் - அத்தன்பத்தரு மொழியை, உரையாமை - (மதபடியுடனிறனொருவ னிடத்திற் போயவன்) சொல்லாத வண்ணம், ஈதல் - (பொருளைக்) கொடுத்தலென்றும், 8 இலனென்னு மெவ்வம் - (யானிப்போது பொருளுடையேன்) அல்லே னென்ற (உலோப குணத்தினுலே

இதபொழுது. பொருளுடையே னல்லே னெனக் கருபபா சொல்லும் இனியவரையை தொல்லாது கொடத்தலெனவும் உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனைப் பொருட்பண்மைபற்றி வந்த பண்மைபாக வுரைப்பர்.

தெளி.—(இ - ன்). இலனென்னும்-(யான்) வறியேனென்னு (இரப் பவன்) சொல்லும், எவ்வம் - துன்பக்குமொழியை, உரையாமை - (தான் பிறரிடத்துச்)சொல்லாமையும், (அதனைத்தன்னிடத்துச்சொன்னவர்க்கு), ஈதல் - (இல்லையென்னுது) கொடுத்தலும், (ஆகிய இவ்விரண்டும்), குல னுடையான் கண்ணே - நற்குடியிற் பிறந்தவனிடதே, உள - உண்டா யிருக்கும், (எ - று).

முற்செய்யுளில் கொல்லிது என்றதைச செய்யாது நீங்குவதற்கும், ஈதலே நன்றென்றதைச செய்தற்கும உரியவனே அறிவித்த வாரும்.எவ் வ(துன்ப) மென்பது எவ்வக்குமொழிக் காதலின் காரியவாகுபெயராம்.

(க - து).யாசகா கூறியதைப பிறரிடத்துச் சொல்லாமை யும் அவர்க்கில்லை யென்னுமல் பொருளாக் கொடுப்பதும் நற்குடி யிற் பிறந்தவரிடத்துண்டாம எனபது.

3. (Even in a low state) not to adopt the mean expedient of saying "I have nothing, " but to give is the characteristic of the man of noble birth.

ச இன்னு தீரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

பரி.—(இ - ள்). ஒருத்தலேயன்றி முகக்கப்படுதலும் ஒளிதன்று, ஒருபொருளை யிரந்தவர் அது பெற்றதலில் ஒளிதாகிய அவர் முகங் காணுமளவும், (எ - று).

* எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்

தம்மிடத்திலுள்ள பொருளே யாசகர்க்கு) (மறைப்பவர்)சொல்லுத்தன்பக் தருமொழியை, உரையாமை - சொல்லாது, ஈதல் - (பொருளைக்) கொடுத் தலென்னும் பொருள் கூறுவாரு முண்டு. அவர் (அம்மூவகை யுரைகார ரும்) ஈதலென்பதனை ஈயப்படும்பொருள் பன்மை (பலவா யிருத்தல்) பற் றி வந்த பண்மையாக (ஈதல்கள் எனச்) சொல்லுவாரென்க [ஈயப்படும் பொருள் பலவாதலே மூப்பத்திரண்டறங் கூறுமிடத்துக்காண்க]. "அருத் தியி னிலனென் னாமு னனித்தது மிலனென் றப்பா, துரைத்திலு ளுகச் சால வுதவுது மேற்கின் றாரும். வருத்தற விலனென் னுமை வழங்கிட வரைவில் செல்வம், பொருத்தது மொன்றி னென்ற புகழ்மிக விளங்கு கிற்கும்" என்ற விராடபுராணம் இம்மூன்றரையையுமடக்கிக் கூறிற்று.

இரந்தது நழீஇய வெச்சவும்மை, இரக்கப் படுதலும் என்பது இரந்தலே யன்றி யென்பதனைத்தழுவி நிருப்பதறிக.

பதுதல் - இரப்பார்க்கு ஈவலென்றிருத்தல். † அதனை 'இன்னுது' என்றது ‡"எல்லா மிரப்பார்க்கொன் றீயாமை" கூடுங்கொல்லோ வென்னும் ¶ அச்ச நோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல் வேண்டுமென்பது பெறப் பட்டது.

தேனீ—(இ - ன்). (யாசித்தலே யல்லாமல்) இரக்கப்படுதல் - யாசிக் கப்படுதலும், இன்னுது - இன்பஞ்செய்வதன்று, இரந்தவர்-(ஒருபொருளை) யாசித்தவர், (அப்பொருளைப் பெற்றதனால்), இன்முகம் - இனிதாகிய (அவர்) முகத்தை, காணுமளவு - பார்க்குமளவும், (எ - று).

இரக்கப்படுதலு மென்னும் எச்சவும்மையும் அளவும் என்னு முற் றும்மையும் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. இரக்கப்படுதல்-யாசிப் பவர்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பேனென நிருத்தல் யாசிப் பவர்க்கு அவர் வேண்டியன வெலலாங கொடுகக் கூடாமை கோடுமோ வென்னும் அச்சத்தைக்குறித்தி அதனை 'இன்னுது' என்றார். எனவே, யாசிப்பவர்க்கு எல்லாப் பொருளும் கொடுத்தல் வேண்டு மென்பது பெ றப்பட்டது.

(க - து). ஈதலுடையார் இரப்பவரதி னிய முகத்தைக் காணுமளவும் வருந்துவர்.

4. To see men begging from us is disagreeable, until we see the pleasant countenance of those who beg.

ஞ. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

† அதனை - இரக்கப்படுதலை.

‡ காலடியார் குடிப்பிறப்பு. 5. இதன்பொருள் பொருந்திய எல்லாப் பொருளையும் யாசிப்பவர்க்குக் கொடுக்கக்கூடாமை என்பது. ¶ "எல்லாம், இரப்பார்க்கொன் றீயாமை யசசம்" எனபது காலடியார்.

§ "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத், நிறந்தாரை யெண் ணிக்கொண் டற்று" என்றும், "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றும், "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்றும், துறவறத்தாரையுயர்த்திக் கூறி "துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன், மற்றை யவர்க டவம்" என்று இல்லறத்தாரை யிழித்தக்கூறிய காயனார் இக்குறளில் இல் லறத்தாரை யுயர்த்திக் கூறியதென்னெனின், 'தவடர்ந்து வின்முருகி யெல்வுலகும் கைகொண்டு, மாதடர்ந்த வாழி வலவனைச்-காரெழுதற், கெஞ்ஞெ ரிலெனினு மாயனினெனெமோல்,வஞ்யொ னீர்காட்டார் மன்" என்னுஞ்செய்யுளில் ஒருவனைக்குணம்பற்றிச் சோழனைத் திருமாலுக்கு மேம்பட்டவனென்று சொன்னாலும், அச்சோழன் எங்ஙனம் காவற்கடவு ளாய திருமாலுக்குயர்ந்தவனாகுமோ அங்ஙனமே பிறரது பணைப்போக் கு மிமித்தம் பற்றி இல்லறத்தாரைத் துறவறத்தார்க்கு மேம்பட்டவரென்ற

பரி.—(இ-ள்). தவத்தான் வலியார்க்கு வலியாவது, தம்மை யுற்ற பசியைப் பொறுத்தல்; அவ்வலிதான் அவ்வினம் பொறுத்தற்கரிய பசியை ஈயையான் ஒழிப்பாரது வலிக்குப்பின், (எ-று).

தாமும் பசித்துப் பிறரையும் அது நீக்கமோட்டாதார் ஆற்றலின் தாமும் பசியாத பிறரையும் அது நீப்பார் ஆற்றல் என்றென்பதாம்.

தேவி.—(இ-ள்). ஆற்றவார் - (தவத்தால்) வல்லமையுடையவருக்கு, ஆற்றல்-வல்லமையாவது, பசியாற்றல்-(தம்மை யடைந்த) பசியைப் பொறுத்தலாம், (அவ்வல்லமைதான்), அப்பசியை - அப்படி பொறுத்தற்கரிய பசியை, மாற்றவார் - (ஈதலினால்) நீக்குவோரது, ஆற்றலிற்பின் - வல்லமைக்குப் பிற்பட்டதாம், (எ-று).

தாமும் பசித்துப் பிறரையும் அப்பசி நீக்கமோட்டாத தவத்தினரது வல்லமையிலும் தாமும் பசியாது பிறரையும் அப்பசி நீப்பவராகிய இல்லறத்தாரது வல்லமை கல்ல தென்பதாம்.

(க - து). தம்மையடைந்த பசியைப் பொறுக்குந் தவத்தினரது வல்லமையிலும் அப்பசியை யொழிக்கும் இல்லறத்தாரது வல்லமை மேம்பாடையதாம் என்பது.

5. The power of those who perform penance is the power of enduring hunger. It is inferior to the power of those who remove the hunger (of others).

கூ. அற்ரு ழிபசி ‡ தீர்த்த லஃதொருவன்
பெற்ரூன் பொருள்வைப் புழி.

பரி.—(இ-ள்). வறியாரது மிக்க பசியை அறவேக்கித் தீர்க்க, பொருள்பெற்ற ஒருவன் அதனைத் தனக்குதவ வைக்கும் இடம் அவ்வறுமாகலான், (எ-று).

§ எல்லா நன்மைகளும் அழிய வருதலின் 'அழிபசி' என்றார். அற வேக்கியென்பது ஒஞ்சென்றது. அற்றாழிபசி தீர்த்த பொருள் பின்ற சொன்னலும், அவர் ஒன்னார்தெறலும் உவந்தாரையாக்கலும், வேண்டிய வேண்டியாங் செய்தலும், தன்னுயிர் தானறப்பெறலும், கூற்றங்குதித்தலு முடைய துறவறத்தார்க்கு மேம்பட்டவராகாரென்க.

‡ *நீர்த்தல் - தன்னாற்ற வியல்கொள்ளிலுமுற்ற.*

§ இயல் எல்லா நன்மைகளு மழியுமென்பது "மானம் குலக்கல்வி வண்மை பரிவுடைமை, தானந் தவமுயர்ச்சி தானான்மை - தேனின், கெ வ்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பலவ் நிடப்பறத்த போம்" என்னும் வெண்பாவினுள் மறிக.

னக்கே வந்த † உதவு மென்பதாம்.

தேனி.—(இ-ள்). அற்றார் - வறியவரது, அழியி - மிகுந்தபசியை, தீர்த்தல் - (அறஞ்செய்து) நீர்க்கடவன், அஃது - அவ்வதம், பொருள் பெற்று ஞெருவன் - பொருளைப்பெற்றவனொருவன், வைப்புழி - (அப் பொருளைத் தனக்குதவு) வைக்குமிடம் (ஆதலால்), (எ-று).

எல்லா நன்மைகளுக்கேட வருதலால் 'அழிபசி'என்றார். அறஞ்செ யென்பது குறைத்து நின்றது; இஃதிசையெச்சமாம். அற்றாழி பசி தீர்த்த பொருள் பின் பயன்வடிவாகத் தனக்கே வந்து உதவுமென்பதாம்.

(க - து). பொருளைப் பெற்றவன் அதனைத் தனக்குதவு வைக்குமிடம் வறியவர் பசியைத் தீர்க்கும் அறமாம் என்பது.

6. The removal of the killing hunger of the poor is the place for one to lay up his wealth.

எ. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

பரி.—(இ-ள்). எத்தான்றும் ¶ பகுத்துண்டல் பயின்றவனைப் பசி யென்று சொல்லப்படுந் தீயநோய் தீண்டுதல் இல்லை, (எ-று).

¶ இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களை யழித்து,அதனல்லதும் உடம்புகட்குத் தின்பஞ்செய்தலின் 'நீப்பிணி' எனப்பட்டது. ‡ தனக்கு மருத்துவன் ருஞகலின், பசிப்பிணி நணுகாதென்பதாம். இவையாறு பாட்டாலும் ஈதலின் நிறப்புக் கூறப்பட்டது.

† உதவுதலாவது தோட் கோட்பாய் (தோளில்கோக்கப்படும் கட்டை முதலியன்றதாய்)ப் பயன்வடிவாக வந்து இம்மை மறுமைகளில் சுகபோகத்தைத் தருதல். நாலடியார் " ஆட்பார்த் திழலு மருளில்கூற் றுண்ணுமையால், தோட்கோட்புக் காலத்தாற் கொண்மெயின்' என்ற கூறுவதையு மறிக

பகுத்துண்டல் - வறியவர் முதலியோர்க்குப் பங்கிட்டுண்ணுதல்.

பயனாது இவ்வுடம்பிலிருந்து, (தத்துவ) ஞானத்தையும் அதனை யடைதற்குச் சாதனமான அருளுடைமை புலால் மறுத்தல் முதலிய வொழுக்கங்களையு மழித்து, அவ்வாறழித்த தேதவாக இனிவரும் உடம்புளுக்குத் தின்பத்தைச் செய்தலினால் அது (பசி)'நீப்பிணி'என்ற கூறப்பட்டதென்க. இதனால் பசிப்பிணி எப்பிணியிலுங் கொடியதென்பதுபெற்றும்.

‡ தனக்கு மருத்துவன் (மருந்தின் தன்மையை யறிந்து கொடுப்பவன்) தான் என்பது 'எமக்குத் தீனையாவார் வேண்டுமென் றெண்ணித், தமக்குத் தீனையவார் தாந்தெரிதல் வேண்டா, பிறர்க்குப் பிறர்செய்வ தன்றோமற் றில்லை, தமக்கு மருத்துவர் தாம்' என்ற பழமொழி கூறலை காணு மறிந்தபாற்றும்.

தெளி.—(இ-ள்). பாத்தி - (எங்ஙாளும்) பகுத்தி, ஊண் - உண்ணல். மரீஇயவனை - பழகியவனை, பசியென்னும் - பசியென்று சூறப்படும், தீப்பிணி - தீயநோய். தீண்டலரிது - தீண்டுதலில்லை, (எ-று)

பசி இவ்வுடம்பின்கணின்று ஞானத்தையும் ஆசாரத்தையுங் கெடுத்து, அவ்வாறு கெடுதலால் பன்னருந் உடம்புகளுக்குந் தீனபஞ்செய்தலால் தீப்பிணி' என்று கூறப்பட்டது. தனக்கு வைத்தியன் தானேயாகையால், பசிப்பிணி சோதென்பதாம் இலை ஆறுபாட்டாலும்ஈதலின் சிறப்புச சொல்லப்பட்டது.

(க - து). பிறர்கடிட் டுண்ணாமைக்குப பசிதீராயில்லையாம.

7. The fiery disease of hunger shall never touch him who habitually distributes his food to others.

அ. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லூழுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

பரி.—(இ-ள்) தாமுடைய பொருளை யரியாதுவைத்துப் பின்னிழந்தபோம் அருளிலாதார், பறியார்க்கு வேண்டியபற்றை கொடுத்து அவர் உவத்தலான் அருளுடையாரெயதும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ, (எ-று)

¶ உவக்கு மென்பதை காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது இன்பமென்னுங் காரியப்பெயர் கொண்டது. § அறிதாரையோ, தாமும் அவ்வின்பத்தை யெய்துகல்லாது வைத்திழப்பரென்பது கருத்து.

தெளி —(இ - ள்) தாமுடைமை-தாமுடையமபாருள். வைத்து - (கொடாது) வைத்து, (பின்னே), ஆழுகூழும் - ஆழுகதுவிதிம், வன்கணவர்-அருளிலாதவர், ஈத்து (பறியார்க்கு அவர் வேண்டியமபாருளக்காக) கொடுத்து, உவக்கும் - (அவ்வறியவர்) மகிழுதலால் (அருளுடையார்) உடையும், இன்பம்-மகிழ்ச்சியை, அறியார்கொல்-கண்டறியாரோ, (எ-று).

காரணப்பொருளில் வந்த உவக்கும் மென்னும் பெயரெச்சம் இன்பமென்னுங் காரியப்பெயர் கொண்டது. வன்கணவர் அறிதாராயின், தாமும்

¶ புல்லினவினபம் என்பது போல யாசகர் உவத்தல் (மகிழ்தல்) காரணமாகவும் (அதனால்) அருளுடையார் உடையும் இன்பம் காரியமாகவும் இருத்தலினால், காரணப் பொருளில் வந்த உவக்கும் என்னும் பெயரெச்சம் இன்ப மென்னுங் காரியப்பெயர்கொண்டு முடிந்ததாயிற்று.

§ தம்முடைய பொருளைப் பிறருக்குக்கொடாது சேர்த்து வைத்துப் பின்னர் (கள்வர்முதலியோர் கொள்ளுதலால்) இழக்குபோகும் வன்கண்ணர் (கொடியோர்) அருளுடையார் ஏழைகளுக்கு அவர்வேண்டிய பொருளைக் கொடுத்து அவ்வேழைகள் மகிழுதலால் அவ்வருளுடையாரடையும் இன்பத்தை யறிந்தால், அவ்வன்கண்ணரும் அவ்வின்பத்தை யடைவதல்லாமல் பொருளைச் சேர்த்துவைத்து நிழவாரென்பது கருத்தாயென்க.

அவ்வின்பத்தை யடைவதல்லாமல் பொருளைச சேர்த்துவைத் திழவாரென் பது கருத்து. (தாமுடைய - தமமுடைய).

(க - து). வறியவர்க்கியாது பொருளைச் சேர்த்துவைத் திழப் பவர் வறியவருக்குப பொருளைக் கொடுத்தது அது காரணமாக அருளுடையாரடையு மின்பத்தை யறியார் என்பது.

8 Do the hard-eyed who lay up and lose their possessions not know the happiness which springs from the pleasure of giving

கூ. இரத்தலி னின்னது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்

பரி:—(இ - ள்) பொருடகுறை நிரபபவேண்டி வறியார்க்கு ஈயாது தாமே தனித்துண்டல், ஒருவர்க்குப பிறர்பாற்சென்று இரத்தலினும் (என்னது ஒருதலையாக. (ஈ - று).

டொருட்குறை நிரபபலாத ஒரோ ரொண்களோகுறித்து அத்துணை ாட்டெதுமென எட்டத்தையே மேறகொண்டு * இவறகுகூட்டுதல் தனித் தல - பிறரையொதிதல. இரகுகற நளளது அப்பொழுதை யிளிவரவே, பின நல்குரவிலலே; தமியருண்டாகு மவை † யிரண்டு முளவாமாகலின் 'இரததலி னினனெது' என்றார் ‡ நிரபபிய வெனபதற்குத் தேடிய வுளவு களோ வென்றாரைப்பாரு முளர

தெளி:—(இ - ள்) நிரப்பிய - (பொருளின்குறைவை) நிறைக்க வேண்டி, (ஈயவர்குகு கொடாரல), தாமே தமயா - தாமே தனித்தவ ராகி, உணல - உணணுகல (ஒருவாகு), மன்ற - நிச்சயமாக, இரதத லின் - (பறரிடதனிற செனறு) யாசிததலினும, இனனது - தனபஞ் செயவதாம, (ஈ - று)

பொருளின் குறைவை நிரத்தலாவது ஒவ்வொரு தொகையைக் குறித்து அவ்வளவு சம்பாதிப்பாரென்று சம்பாதித்தலேயே மேற் கொணடு உலோபஞ் செய்து சோததல் தனிததல் - பிறரைச சேரா வணண மொழிதல. யாசிதத லுககு உள்ளது அப்போதை யிழிவே, பின்னே யுறுமையில்லே, தனந்தரா யுண்ணுதலுககு அவ்விரண்டு முண் டாமாதலால் இரததலினின்னது' எனறார்.


இவறறல-உலோபஞ்செயதல. உலோபமாவது தர்மவிரோதமாகப் பிறாது பொருளை விரும்புதல். மெய்ஞ்ஞானவிளக்கம் உலோபதிற்குவடி வம் "உற்றபொருள் பற்றி யுதவாமை" என்று கூறுகினறது.

† இரண்டும - இளிவரவும் (இழிவும்) நல்குரவும் (தரித்திரமும்).

‡ நிரப்பிய என்பதனைச செயயிய எனனும வினையெச்சமாகக் கொள் ளாது அஞ்சாரியை குறைந்த வினையாலணையும் பெயராகி அதற்குத் தே டிய யுணவுகளோ வென்றுரை கூறுவாரு முண்டி.

(க - து). மேன்மேலுஞ் சேர்க்க வேண்டித் தம்முடைய பொருளை வறியவர்கட்குக் கொடாது தாமே யனுபவிப்பவர்க்குப் பிறரிடஞ் சென்றிரந்தை யாசித்தலினும் பெருந்துன்பமாம் என்பது. (கூ)

9. Solitary and unshared eating for the sake of filling up ones own riches is certainly much more unpleasant than begging.



கo. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

பரி.—(இ-ள்). ஒருவர்க்குச் சாதல்போல இன்னாததொன் றில்லை; அத்தன்மைத் தாகிய சாதலும், வறியார்க் கொன்றீதல் முடியாதவழி இனிது, (எ - று).

§ பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான் 'இனிது' என்றார். இவை மூன்று பாட்டானும் ஈயாமையின் குற்றங் கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). (ஒருவனுக்கு) சாதலின் - இறத்தல் போல, இன்னாதது - துன்பஞ்செய்வதொன்று, இல்லை—, அதூஉம் - அத்தன்மைய தாகிய இறத்தலும், ஈதல் - (வறியார்க்கு ஒன்றைக்,) கொடுத்தல், இயையாக் கடை - முடியாத விடத்து, இனிது - இன்பஞ் செய்வதாம், (எ - று).

பிறர்க்குப் பயன் படுவதில்லாத உடற்சுமை நீங்குதலால் 'இனிது' என்றார். இவை மூன்று பட்டாலும் ஈயாமையின் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து). வறியவர்க்கொன்றைக் கொடுக்க முடியாத காலத்து இறத்தலே ஒருவற் கின்பந்தருவதாம் என்பது

10. Nothing is more joyless than death; yet even that is joyful where charity cannot be exercised.



§ பிறர்க்குப் பயன்படுதலில்லாத வுடற்சுமையினால் உயிர்க்கு யாதும் பிரயோசன மில்லாமையின், அஃதொழிதலே(பூமிக்குப்பார மொழிதலோ ம) அதற்கு இனிதா மென்பது. இதனால் தரித்திரர்களுக்கு அவர் வேண்டிய வற்றைக்கொடாமை மரணவேதனையினும் மிகக்கொடியதாமென்பது பெற்றாம். "வைத்துப் பொருளைத் தானுகாண் வழங்கா னிருந்துஞ் செத்தானே, செத்த பின்ன ரென்செய்வான் தீயார் கொள்ள நீட்டுதலான், மெத்தும் வருத்த மேயன்றி வேறொன் றில்லை" என்று விநாயகபுராணங் கூறுவதும் இங்குக் கவனிக்கத்தக்கதா மென்க.

இருபதாவது அதிகாரம்.

புகழ்.—Praise.

பரி.—அஃதாவது ¶ இல்வாழ்க்கைழதல் ஈகையீறுகச் சொல்லப் பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனுகி இவ்வுலகின் கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறுகச் சொல்லப் பட்ட இல்லறத்தில் தவறுதொழுபவர்க்கு இம்மைப்பயனுகி இவ்வுல கத்தில் விளங்கி யழியாது நிற்குங் கீர்த்தியாம். இது (புகழ்) பெரும்பான் மையும் ஈகைபற்றி வருதலால், அவ்வீகையின் பின் வைக்கப்பட்டது.

க. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

பரி.—(இ-ள்). வறியார்க்கீக; அதனுற் புகழுண்டாக வாழ்க, அப்பு கழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை ஆகலான், (எ-று).

இசைபட வாழ்தற்குக் கல்வி, ஆண்மை முதலிய பிற காரணங்களு மூளவேனும், ‡ "உணவின் பிண்ட முண்டி முதற்று" ஆகலின், ஈதல்

இல்வாழ்க்கை யென்னும் அதிகாரமுதல் ஈகையென்னும் அதி காரம ஈறுக-(கடையாக) (உள்ளலிப் பத்தொன்பது அதிகாரங்களில்) சொல்லப்பட்ட (பிரமசாரி முதலிய பதின்மருக்கும் பங்கிட் டுண்டல், மைந்தரைச் சபையில் முந்தியிருக்கச் செய்தல், சுற்றத்தாரிடத்து அன்பா யிருத்தல், விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல் முதலிய) இல்வாழ்க்கைக் குரிய தருமங்களில் தப்பாது நடந்தவர்களுக்கு இப்பிறப்பின் பிரயோஜன மாகி யிவ்வுலகின்கண் (கர்ணன் முதலியோர்களது கீர்த்தியைப்போன்று) விளங்கிக் கெடாது நிற்கும் புகழாமென்க.

‡ புறநானூறு 18. இதன்பொருள் உணவாலாவதாகிய வுடம்புணவை முதலாகவுடையது என்பது. புறநானூற்றின் மூலத்தில் "உண்டி முதற் றே யுணவின் பிண்டம்" என்றும், அதன் விசேடவுரையில் "உணவின்பிண் டம் உண்டிமுதற்றுதலான்" என்று மிருக்கின்றன. பரிமேலழகர் மூலத் தின்படி 'உண்டி முதற்றே யுணவின் பிண்டம்' என்று கூறுது அன்வயத் தின்படி 'உணவின் பிண்ட முண்டி முதற்று' என்று கூறினரென்க. உடல் நிலைத்திருப்பதற்குக் காரணங்கள் பலவிருப்பினும் அவற்றுள் (காற்றுமுத லியவற்றுள்), சோறும் நீரும் சிறப்பாயிருத்தல் ("உண்டிகொடுத்தோ ருயிர் கொடுத் தோரே" "உணவெனப்படுவது நிலத்தொடுநீரே" என்று புறநானூ று 18 வது செய்யுளில்கூறுவது மிங்கறியத் தக்கதாம்) போன்று, புகழுண் டாக வாழ்வதற்குக் கல்வி முதலிய பலகாரணங்களிருப்பினும் அவற்றுள் வறியார்க்கொன்று கொடுத்தலே சிறப்பாயிருக்கின்றதென் றுணர்க. கலித் தொகை "ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்" என்றுகூறுதலும்,

சிறந்த தென்பதற்கு ‡ ஞாபகமாக 'ஈதல்' என்றார். ¶ உயிர்க்கென்பது, பொதுப்படக் கூறினுரேனும், விலங்குயிர்கட் கேலாமையின், மக்களுயிர் மேனின்றது.

தெளி:—(இ-ள்.) ஈதல்- (வறியவர்குக்) கொடுக்கக்கடவர், இசைபட (அவ்வாறு கொடுத்தலால்) புகழுண்டாக, வாழ்தல் - வாழக்கடவர், அதுவல்லது - அப்புகழல்லாமல், உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, ஊதியம் - பயன், இல்லை - (வேருென்று) இல்லை, (ஆகலால்), (எ-று).

புகழுண்டாக வாழ்வதற்குக் கல்வி, ஆண்மை, நற்குடிப்பிறப்பு, கல்லொழுக்கம், செல்வம், நீவினைக்கஞ்சுதல், நடுவுநிலைமைமுதலிய வேறுகாரணங்களும் இருப்பனவாயினும், அவற்றுள், ஈகை சிறந்ததென்பதற்கு ஞாபகமாக 'ஈதல்' என்றார். உயிர்க்கெனப் பொதுப்படச் சொல்லினுராயினும், ஈதலா லிசைபட வாழ்தல் பசுபட்கி முதலிய அஃறிணையுயிர்கட்குப் பொருந்தாமையின். அஃதிலா லிசைப்பட வாழும் மக்களுயிரை யுணர்த்தி கின்றது.

(க-து.) வறியவர்க் கொன்றைக் கொடுத்தலாலுண்டாகும் புகழைப்பார்க்கிலும மக்களுயிர்க்கு வேறுபயனில்லை என்பது.

1. By giving (to the poor) live with praise. There is no greater profit to man than that.

உ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கோன்
நீவார்மே னின்றும் புகழ்.

பறநானூறு "செல்வத்துப் பயனே யீதல்" என்று கூறுதலு மிங்கே யறியத தக்கனவாம்.

‡ (உணவாலுளாகிய வுடம்பிற்கு உண்டிமுதலா யிருக்கின்றது) ஆதலால், ஈகை சிறப்புடைய தென்பதற்கு ஞாபகமாக (அறிவிப்பதாக) 'ஈதல்' என்று கூறினுரென்பது.

இம்மலே நீயுடைத்தி, புகையுடைமையால், அடுக்கலோப்போல என் புழித்நீயுடைமையைப் புகையுடைமை யறிவிப்பதுபோல, இசைபடவாழ்தலே ஈதலுடைமை யறிவிக்கின்ற தென்பது. ஈண்டனுமான மாமாறு:—இவன் இசைபடவாழ்பவன்; ஈதலுடைமையால்; கர்ணனேப்போல என்பது. இசைபடவாழ்வதற்கு ஈதல் ஞாபகமாக விருத்தலின், இது "காதலன் மேலூடல் கரையிறத்தல் காட்டுமால், மாதர் குதல்லியர்ப்ப வாய்குடிப்பமீது, மருங்குவளே வின்முரிய வாளிகை நீண்ட, கருங்குவளே சேந்த கருத்து" என்பதுபோன்று ஞாபகமேது வணியாம்.

¶ உயிர்க்கு ஈதலிசைபட வாழ்தல் என்புழி உயிரென்னும் பொதுப்பெயரும் வாழ்தலென்னும் பொதுவினையும் ஈதலிசைபட வென்னுஞ குறிப்பால் அஃறிணையுயிரை யொழித்து உயர்திணையுயிரையுணர்த்தி கின்றன.

பரி:—(இ-ள்.) உலகத்து ஒன்றுரைப்பார் உரைப்பனவெல்லாம் வறுமையான் இரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈவார்கண் நிற்கும் புகழாம், (எ-று).

† புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும். அவற்றுள், 'உரைப்பாருரைப்பவை' என எல்லார்க்கும் உரிய வழக்கினையே எடுத்தாயினும், ‡ இனம்பற்றிப் புலவர்க்கே யுரிய செய்யுளுங் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழாமென்பதூஉம் பெற்றும். § ஈதற் காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங்காண்க. ¶ இதனைப் பிறர்மேலும் நிற்கு மென்பார் தாமெல்லாஞ் சொல்லுக; புகழ் ஈவார்மே னிற்குமென்றுரைப் பாருமுளர். அது புகழது சிறப்பு நோக்காமை யறிக.

நேஎளி:—(இ-ள்.) உரைப்பார் - (உலகத்தி லொன்றைக்) கூறுபவர், உரைப்பவை யெல்லாம் - கூறுவன வெல்லாம், இரப்பார்க்கு - (வறுமை யால்) யாசிப்பவர்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒன்றை, ஈவார்மேல்-கொடுப்பவரிடத்து, நிற்கும் - நிற்கின்ற, புகழ் - கீர்த்தியாம், (எ-று).

புகழ்தான் உரையும் பாட்டும் என்றிருவகைப்படும். அவற்றுள், 'உரைப்பாருரைப்பவை' என்று எல்லாராலும் உரிய (உலக) வழக்கையே எடுத்துக் கூறினுமாயினும், இனம்பற்றிப் புலவர்க்கே உரியபாட்டும் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் இரப்பார்க்கொன் றீவார்மே னிற்கும் புகழாம் என்பதும் பெற்றும். புகழின் காரணங்களுள், ஈதலாகிய காரணம் சிறந்தமை இக்குறளுள்ளுங் காண்க. புலவர்-வித்துவான்கள்.

† புகழ் உரையும்பாட்டுமென விருவகைப்படுதல் "வேற்றுமையில்லா விழுத்தினைப் பிறந்து, வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை, யுரையும் பாட்டு முடையோர் சிலரே, மரையிலை போல மாயுந்தினைனர் பலரே" என்று புறநானூறு கூறுவதாலு முணரப்படும்.


‡ இனம்பற்றி- சம்பந்தம்பற்றி. (இனமென்பதிங் குபலட்சணமாம்).

§ ஈதற் காரணஞ் சிறந்தமை யிதனுள்ளுங்காண்க - புகழுண்டாக வாழுவதாகிய காரியத்திற்கு வறியவர்க்கு அவர்வேண்டிய தொன்றை யீதலாகிய காரணம் வேறு காரணங்களிலுஞ் சிறந்திருத்தலை யிப்பாட்டினிடத்துங் காண்க.

¶ இத்திருக்குறளை உரைப்பாருரைப்பவையெல்லாம்(உரைக்க), புகழ் இரப்பார்க்கொன்றீவார்மேல் நிற்கும் என இரண்டு முடிபாக்கி,இதனை(புகழை) கல்வியாண்மை முதலியவற்றையுடையபிறரிடத்தும் (புகழ்) நிற்கு மென்பார் தாமெல்லாஞ் சொல்லட்டும்; புகழ்(வறியவர்க் கொன்று) கொடுப்பாரிடத்து நிற்குமென்றுரை கூறுவாருமுண்டு. அவ்வாறு கூறுதல் பேசுவார் பேசுவனவும் பாடுவார் பாடுவனவும் வறியார்க்குக் கொடுப்பாரது கீர்த்தியாமென்பது போலப் புகழின்சிறப்பைக் குறிக்காமை காண்க. பிறர் கூறியவுரை அதிகாரத்திற் கேற்ப ஈவார்மேல் நிற்கும்புகழின் சிறப்பையே குறிக்காது பிறரது புகழின் சிறப்பையுங் குறித்தல் பற்றி மறுக்கப்பட்டதென்க.

(க-து.) கொத்திக்குரியரா ஈகையாளரே என்பது.

2 Whatsoever is spoken in the world will abide as praise upon that man who gives one alms to the poor.



கூ. ¶ ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரு தி நிற்பதோன் றில்

பரி.— (இ-ள்.) தனக்கு இணையின்றாக வோங்கிய புகழல்லது உலகத்து இறவாதுநிற்பது பிறிதோன்றில்லை, (எ-று).

இணையின்றாக வோங்குதலாவது கொடுத்தற் கரிய ‡ உயிர உறுப்புப் பொருளாகிய கொடுத்தமைபற்றிவருதலால் தன்னோடொப்பதின்றித் தானே உயர்தல் * அத்தன்மைத்தாகிய புகழே செயற்படுவ தென்பதாம இனி,ஒன்ரு வென்பதற்கு ஒரு வார்த்தையாகச் சொல்லினெனவும், † ஒரு தலையாகப் பொன்ரு தி நிற்பதெனவும் உரைப்பாருமுளர் இவை மூன்று பாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது

தேளி.—(இ - ள்). ஒன்ரு - (தனக்கு) ஒப்பில்லையாக, உயர்ந்த - ஓங்கிய, புகழல்லால் - கீர்த்தியல்லாமல், உலகத்து - உலகத்தில், பொன்ரு தி - அழியாமல, நிற்பது - நிலைபெறுவது, ஒன்று - வேருென்று, இல - இல்லை

(புகழ்) தனக்கு ஒப்பில்லையாக வோங்குதலாவது கொடுத்தற்கரிய உயிரையும், உறுபபையும், பொருளையும கொடுத்தமைபற்றி வருதலால தன்னோடு ஒப்பது இல்லாமல தானே உயர்தல அத்தன்மையதாகிய புகழையே மகளை சமபாதிக்க வேண்டுமெனபதாம். இவை மூன்று பட்டாலும புகழது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து). உலகத்தில் அழியாது நிற்பது புகழாம் என்பது ()

¶ "இருநிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநாடு"—நான்மணிக்கடிகை.

‡ பிறர்க்குதவியாமாறு உயிரைக் கொடுத்தவர் தலை முனிவர்; உறுப்பை (தசை முதலிய அவயவங்களை)க் கொடுத்தவர் சிபி சக்கரவர்த்தி;கவசகுண்டல முதலிய பொருளைக் கொடுத்தவன் கர்ணனென்க

* அத்தன்மைத்தாகிய புகழ் - தனக்கு ஒப்பில்லையாக வோங்கிய கீர்த்தி;அஃதாவது தனக்காதாரமாகிய வுலகமுள்ளவளவும் உயிரும் உறுப்பும் பொருளும் கொடுத்தலா லுண்டாகி யழியாது நிலைபெற்றாகிய கீர்த்தியாம

இதனுல் ஆதாரமாகிய உலகமுள்ளவளவும் நிலைபெற்றாகிய புகழ்நிற்கு மென்பதாயிற் றென்க இது "சாதல்வர் தடுத்த காலும் தனக்கொரு சாதலின்றிப், பூதல மிறக்குங் காலும் புகழுடம் பிருக்கும்" என்ற விராடபுராணம் கூறுவதாலு மறியப்படும.

† ஒன்ரும் பொன்ரு தி நிற்பது-நிச்சயமாகவழியாது நிலைபெறுவது.

3. There is nothing that stands forth in the world imperishable, except fame, exalted in solitary greatness.

சு. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு.

பரி.—(இ-ள்). ஒருவன் நிலவெல்லைக்கண்ணே பொன்றது நிற்கும் புகழைச் செய்யுமாயின், புத்தேளுலகம் அவனையல்லது தன்னை செய்தி நின்ற ‡ ஞானிகளைப் பேணாது, (எ-று).

$ புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின் 'புலவரைப்போற்றுது' என்றார். ¶ அவன் இரண்டு லகும் ஒருங்கெய்துதல் † "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வல வனேவா வான வூர்தி, யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) நிலவரை - பூமியினெல்லையிலே, நீள் புகழ் - அழியாது நிற்கும்புகழை, ஆற்றின் - செய்வானுயின், புத்தேளுலகு - சுவர்க்கலோகமானது, (அவனே யல்லாமல்), புலவரை - (தன்னை யடைந்திருக்கிற) ஞானிகளை, போற்றுது - விரும்பாது, (எ-று).

(புகழைசெய்பவன் புகழுடம்பால் இவ்வுலகத்தையும் தேவவுடம்பால் அவ்வுலகத்தையும் ஒருமிக்க அடைதல் போல) ஞானிகள் புகழுடம்பால்

‡ ஞானிகளென்றது ஞானயோகங் கைவரப்பெறுது அப்பியாசகலேயி லிருந்து மறுமையில் (சுவர்க்கத்தில்) (கரும) தேவரானவர்களை. "(யோகஞ் செய்தும் பூரணமாய்ச் செய்யாதுவிட்டவனுயினு) யோகப்பிரஷ்டன் புண்ணியஞ் செய்தவர்களது உலகங்களையடைந்து வெகுகாலஞ் சுகமாயிருந்து, சதாசாரமுள்ள ஐசுவரியவான்களுடைய வீட்டிற் பிறக்கிறன்" என்பது பகவத்கீதை ஆறுவதத்தியாயம்.

$ திறவறத்திற்சென்று தத்துவஞானம் பெறுது இறந்தவர்கள் மறுமையில் தேவவுடம்பையன்றியமையில்புகழுடம்பைப்பெறுமையால்(இயற்கைத்) தேவர்கள் அவர்களைப் புகழுடம்பில்லாமை பற்றி விரும்பாது, பூதவுடம்பைக்கொண்டு இம்மையில் ஈகையால் புகழுடம்பையும் மறுமையில் தேவவுடம்பையும் பெற்றவனையே விரும்பிப் போற்றுவரென்றறிக.

¶ அவன் இரண்டுலகும் ஒருங்கெய்துதல் - புகழுடையான் புகழுடம்பால் இவ்வுலகத்தையும் தேவவுடம்பால் விண்ணுலகத்தையும் ஒரு சேர அடைதல்.

† புறநானூறு, உஎ. இதன்பொருள்:—புலவரால் பாடப்படும் புகழையுடையோர் ஆகாயத்தின்கண் பாகரும் செலுத்தப்படாத விமானத்தைப் பொருத்துவரென்று சொல்லுவா ரறிவுடையோர் தாஞ்செய்யும் நல்வினை முடித்து என்பது. புலவர்பாடும் என்னுஞ் செய்யுளைப் புலவர் பாடும் புகழுடையோர் தஞ்செய்வினை முடித்து விசும்பின் வலவனேவா வான வூர்தி யெய்துப வென்ப என்றன்வயித்துக் கொள்க.

இவ்வுலகத்தையும், தேவவுடம்பால் அவ்வுலகத்தையும் ஒருமிக்க அடையாமையால், புத்தேளுலகு 'புலவரைப் போற்றாது' என்றார்.

(க - து). தேவர்கள் தம்மையடைந்துள்ள புலவரை விரும்பாது புகழுடையாளனையே விரும்புவார்கள் என்பது.

4. If one has acquired extensive fame within the limits of the earth, the world of the Gods will no longer praise the yogis who have attained that world.

நி. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

பரி.—(இ - ள்). புகழுடம்பிற்கு ஆங்கமாதலுங் கேடும் புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடும் சதுரபாடுடையார்க் கல்லது இல்லை, (எ - று).

‡ நத்தென்னுஞ் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம் என்னும் பகுதிப்பொருள விகுதிபெற்று, நத்தமென்றாயிற்று. † போலென்பதனின் றசையசை. § ஆகு மென்பதனை முன்னுங்கூட்டி, அரி தென்பதனைத் தனிதனி கூட்டியுரைக்க. ஆக்கமாகுங் கேடாவது ¶ புக

‡ பொருந்தல் என்னுந் தொழிற்பெயர் பொருத்தம என்றாற்போன்று நத்தலென்னுந் தொழிற்பெயர் நத்தம் என்றாயிற்று என்று கொள்ளினுங் குற்றமாகாது.

† போல் என்பது இங்கு உவம வருபாகாது உரையசையாய் நின்றது. சிறிது பொருளுணர்த்தி வாக்கியத்தை யலங்கரித்து நிற்பது உரையசையெனப்படும். உவம வருபு உவமவுரு பாகாது வருமிடத்து அஃது ஒப்பில் போலியென்று சொல்லப்படுகின்றது. ஒப்பில்போலி - ஒப்புமை யுணர்த்தாத போலி. ஒப்பில்போலியாய வரும் உரையசைச சொல்லைப்பற்றிப் பிரயோகவிவேக நூலார் "ஆக்கும் பிரதி பதத்திடன" என்னுஞ் செய்யுளினுரையில் விரித்துக் கூறியிருக்கின்றனர். அங்கு ஒப்பில் போலி வாக்கியாலங்காரத்தில் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

§ உளதாகு மென்பதனகண்ணுள்ள ஆகும் என்பதனை நத்தமென்பதனோடுகூட்டி நத்தமாகுங் கேடு என்றும், அரிது என்பதனைக் கேடு என்பதனோடும் சாக்காடு என்பதனோடும் கூட்டி நத்தமாகுங் கேடரிது உளதாகுஞ் சாக்காடரிது என்றுங்கொள்க. இக்குக்காட்டிய அன்னுவயத்தின்படி வித்தகர்க்கு (அறிவுடையவர்க்கு) அல்லாமல் மற்றவர்க்கு (மூடர்களுக்கு) நத்தமாகுங் கேடும் உளதாகுஞ் சாக்காடுமில்லை யென்றாயிற்று; ஆகவே, வித்தகர்க்கு நத்தமாகுங்கேடும் உளதாகுஞ்சாக்காடு முண்டாமென்பது பெற்றாம்.

¶ புகழுடம்பு (கீர்த்தியாகியவுடல்) விருத்தியடைய அதற்குக் காரணமாகிய பூதவுடம்பு (பிருதிவிமுதலிய பூதங்களாலாயவுடல்) தரித்திரத்தையடைதல். அஃதாவது புகழுடம்பு விருத்தியடையவடையப் பூதவுடம்பிற்குக் குறித்த நாட்கள் குறைந்து கொண்டே வருதலென்பது.

முடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்காடா வது $ புகழுடம்புநிற்கப் பூதவுடம்பு இறத்தல். ‡ நிலையாதனவற்றுல் நிலை யின வெய்துவார் வித்தகராகலின் 'வித்தகர்க்கல்லாலாரிது' என்ருர். இவை யிரண்டு பாட்டானும் புகழுடையாரெய்து மேன்மை கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). வித்தகர்க்கல்லால் - அறிவுடையவர்க் கல்லாமல், (மற்றவர்க்கு), நத்தம் (ஆகும)-(புகழுடம்பிற்குப்) பெருக்கமாகும், கேடும்-வறுமையும், அரிது - இல்லை, உளதாகும் - (புகழுடம்பு) நிலைபெறுவதாகும், சாக்காடும் - மரணமும், (அரிது - இல்லை), (எ - று).

நந்து என்னு முதனிலைத் தொழிற்பெயர் புணர்ச்சிவிகாரத்தால் நத்து என்ருய்.பின் அம்மென்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தம் என்ரு யிற்று. போல் என்பதினுருவமை. ஆகும் என்பதனே மூன்னுங் கூட்டி அரிது என்பதனேத தனித்தனி கூட்டியுரைத்தலுங் கொள்க. பெருக்கமா குஞ கேடாவது புகழுடம்பு செல்வத்தை யடையப் பூதவுடம்பு வறுமை யடைதல். நிலைபெறுவதாகு மரணமாவது புகழுடம்பு நிலைபெறப் பூதவுட ம்பு இறத்தல். நிலையில்லாத உயிருடல் முதலியவற்றுல் நிலைபெற்றதீர் த்திகளே யடைபவர் வித்தகராதலின் 'வித்தகர்க் கல்லாலாரிது' என்ருர். இவ் விரண்டு பாட்டாலும் புகழுடையாரடையும் மேன்மை சொல்லப்பட்டது.

(க - து). அறிவுடையார் பூதவுடம் பிறந்தாலும் புகழுடம் போ லுலகமுள்ள வளவு மிருப்பர் என்பது.

5. Prosperous desruction and living death will abide with none but the illustrious.

கூ. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ருேன்ருமை நன்று.

பரி.—(இ - ள). மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத் தோடு பிறக்க; அக்குணம் இல்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங் காய்ப் பிறந்தல் நன்று, (எ - று)

* புகழ்—ஈண்டு ஆகுபெயர். † 'அஃதிலார்' என்றமையின் மக்களா யென்பதூஉம், மக்களாய்ப் ¶ பிறவாமையென்ற அருத்தாபத்தியான்

$ புகழுடம்பு இனிவளருதலில்லாமல் ஒரு வரையறைப்பட்டு நிற்கப் பூதவுடம் பழிதல். கர்ணன்முதலியோர்க் குண்டாயபுகழ் அவர்களிறந்த பிறகு வனர்ச்சியின்றி யோரளவாலிருப்பது மீண்டறியத் தக்கதாமென்க.

‡ நிலைபெறுத வுயிர் முதலியவற்றைக் கொடுத்தலால் நிலைபெற்ற கீர்த்திகளே யடைந்தவர் ததீசி முனிவர் முதலியோர்.

* புகழென்னும் காரியப் பெயர் அதனை (புகழை) யுண்டாக்குவதற் குக் காரணமாய நற்குணத்தை யுணர்த்தியதலால் காரியவாகு பெயராம்.

† அஃதிலார் - புகழிற்குக் காரணமான குணமில்லாதவர்.

¶ தோன்றுமை யென்ற அருத்தா பத்தியான் என்றும் பாடமுண்டு.

‡ விலங்காய்ப் பிறத்தலென்பதூஉம் பெற்றும். $ இகழ்வார் இன்மையின் 'நன்று' என்றார்.

தேளி.—(இ - ள்). தோன்றின் - (மனிதராய்ப்) பிறத்தால், புக ழொடு - புகழிற்குக் காரணமாகிய குணத்தோடு, தோன்றுக - பிறக்கக் கடவர், அஃதிலார் - அக்குணமில்லாதவர், தோன்றலின் - (மனிதராய்ப்) பிறத்தலினும், தோன்றுமை-பிறவாமையானது, [மிருகமாய்ப் பிறத்தல்], நன்று - நல்லது, (எ - று).

புகழிற்குக் காரணமாய குணத்தைப் புகழென்றமையின், அஃதிற்காகு பெயராம். 'அஃதிலார்' என்றதனால் மனிதராயென்பதும், மனிதராய்ப் பிற வாமையென்ற அருத்தாபத்தியினால் மிருகமாய்ப் பிறத்தலென்பதும் பெ றப்பட்டன. இகழ்வாரில்லாமையால், தோன்றுமை 'நன்று' என்றார்.

(க - து). புகழிற்குக் காரணமாகிய குணமில்லாதவர் பிறப் பின்பயனை யடைவதில்லை என்பது.

6. If you are born (in this world) be born with qualities conducive to fame. For those who are destitute of them it will be better not to be born

எ. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

பரி.—(இ - ள்). தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதார் ¶ அது

‡ (கீர்த்திக் கேதுவான குணமில்லாதவர் மக்களாய்ப் பிறத்தலைக் கா ட்டிலும் மக்களாய்ப் பிறவாமை நல்லது என்று கூறியதில்) மக்களாயப் பிறவாமை என்ற அருத்தாபத்தியினால் மிருகமாய்ப்பிறத்தல் என்பது பெ றப்படுகின்றது. இங்ஙனமன்றியின் இது கூடாது என்றுரைப்பது அருத் தாபத்தி யெனப்படும். அஃதாமாறு:— மக்களாய்ப்பிறவாமை கூடாதா யின்விலங்காய்ப்பிறத்தல் கூடாதுஎன்பது. விலங்காயப் பிறத்தல் கூடுமா யின் மக்களாய்ப் பிறத்தல் கூடாது என்பது கருத்து. விலங்காய்ப் பிறத்த லென்பது பறவை முதலியனவாகப் பிறத்தற்கு முபலட்சணமாம். தொல் காப்பியனார் அருத்தாபதிக் இலக்கணம் சொல்லதிகாரம் இளவியாக்கத் தில்"எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" என்று கூறினார். அதன் பொருள் இனமாகிய பலபொருட்கண் ஒன்றனைவாங்கிக் கூறியவழி அச சொல் தன் பொருட்கினமாகிய பிறபொருளைக் குறிப்பான் உணர்த்தலு முரித்து என்பது.

$ புகழிற் கேதுவான குணமில்லாதவரைப் பிறர் அருளில்லாதவ ரென் றும், அன்பில்லாதவரென்றும், தாட்சண்ணிய மில்லாதவரென்று மிகழு தல் போன்ற மிருகங்களே யிகழுவ தில்லாமையினால் புகழிற் கேதுவான குணமில்லாதவர் மக்களாய்ப் பிறத்தலினும் மிருகமாய்ப் பிறத்தல் நல்லது என்று கூறப்பட்டதென்க. ¶ அதுபற்றி - புகழுண்டாக வாழாமைபற்றி.

பற்றிப் பிறர் இகழ்ந்தவழி இவ்விகழ்ச்சி * நம் மாட்டாமையான் வந்த தென்று தம்மை நோவாதே தம்மை யிகழ்வாரை நோவது என் கருதீ.

புகழ்பட வாழலாயிருக்க, அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலையாகலின் 'இகழ்வாரை' என்றார்.

தெளி.—(இ - ன்). புகழ்பட - (தமக்குப்) புகழுண்டாக, வாழாதார் - வாழமாட்டாதவர், (அதுபற்றிப் பிறரிகழ்ந்தவிடத்து), தம்நோவார் - (இவ் விகழ்ச்சி தமது மாட்டமையால் வந்ததென்று) தம்மை நோவாதவராகியே, தம்மை யிகழ்வாரை - தமமையிகழ்ந்து பேசுபவரை, நோவது-வெறுப்பது, எவன் - என்னநினைத்து, (எ - று)

புகழுண்டாக வாழுதலாயிருக்க, அவ்வாறு வாழமாட்டாத குற்றம்பற் றிப் பிறர் இகழ்வது நிச்சயமாகலால் 'இகழ்வாரை நோவ தெவன்' என்றார்.

(கு-து). புகழுண்டாக வாழவறியாதவர் அதுபற்றித் தம்மைப் பிறரிகழ்வது நோக்கி வெறுப்பதிற் பயனில்லை என்பது.

7. Why do those who live without praise grieve those who despise them, though they do not grieve themselves.

அ. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெருஅ விடின்.

பரி.—(இ - ள்). புகழென்னும் எச்சம் பெறலாயிருக்க அது பெறு தோழிவாராயின், வையகத்தோர்க் கெல்லாம் † அதுதானே வசை யென்று சொல்லுவர் நல்லோர், (எ - று).

$ 'எசசம்' என்றார்; செயதவரிறந்துபோகத் தான் இறவாது நிற்ற லின். ¶ இகழப்படுதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டாவென்பது கரு த்து.

* நம் மாட்டாமையான் - (புகழுண்டாக வாழாத)நமது மடமையால்.

† அதுதானே - புகழென்னு மெச்சத்தைப் பெரூதொழிதலே.

$ புகழானது தன்னே யுண்டாக்கினவர் இறந்து போகத் தான் இற வாமல் உலகமுள்ளவளவும் எஞ்சி (மிகுந்து)நிற்றல்பற்றிப் புகழ் எச்சமாயி ற்று. புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தலென்பதாம்.

¶ புகழில்லாதவ னிகழப்படுதற்குப் புகழில்லாமையே காரணமாயிருத் தலின் அவனுக்கு நிந்தையுண்டாவதற் கேதுவான வேறொரு குற்றம் வேண்டாமென்பது கருத்தாமென்க. ஒருவன் புகழைப் பெறுவிட்டாலும் இகழைப் பெறுமலிருக்கக் கூடாதோ வெனின், திண்மையின் அபாவமே எண்மையாய் முடிவது போன்று புகழில்லாமையே இகழாய் முடிதலின் அஃது கூடாதென்க.

தெளி.—(இ - ன்). இசையென்னுமெச்சம் - புகழென்னும் எச்சத்தை, (பெறுவதாயிருக்க), பெருஅ விடின் - (அப்புகழென்னு மெச்சத்தைப்) பெரு து விடுவாராயின், வையத்தார்க்கெல்லாம் - பூமியிலுள்ளார்க் கெல்லாம், வசை - (அதுதானே) வசையாகும், எனப - என்று சொல்லுவர், (ஒல்லோர்).

செய்தவர் இறந்தபோகத் தான் இறவாமல் நிற்றலால் புகழை 'எச்சம்' என்றார். பிறரால் இகழப்படுதற்கு மற்றொரு குற்றம் வேண்டா மென்பது கருத்து. வசை - இகழ்ச்சி.

(க - து) கீர்த்திபெறுதவருக்கு அது பெறுமையே வசையாம் என்பது.

8. Not to beget fame will be esteemed a disgrace by all who are in this world.

கூ. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
$ யாக்கை போறுத்த நிலம்.

பரி.—(இ - ள்). புகழில்லாத வுடம்பைச் சுமந்த நிலம் பழிப்பில் லாத வளப்பத்தையுடைய வீனையுள் குன்றும், (எ - று).

† உயிருண்டாயினும் அதனற் பயன் கொள்ளாமையின் 'யாக்கை' எனவும், அது நிலத்திற்குப் பொறையாகலின் 'பொறுத்த' எனவுங் கூறினார். ‡ வீனையுள் குன்றுதற்கேது பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. 0 குன்றுமென இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேனின்றது. இவை நான்கு பாட்டானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

$ யாக்கை - கைவிகுதிபெற்ற தொழிற்பெயர். அதன்பொருள் கட்டலென்பது. அஃதிவருந் தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீரென்னும் எழுவகைத் தாதுக்களால் கட்டப்பட்ட வுடம்பினை யுணர்த்துதலால் தொழிலாகு பெயராம்.

† புகழில்லாது வாழும் இல்வாழ்வோன் உயிருடையவனு யிருந்தாலும் அவன் அந்த வுயிரினுல் இம்மைப்பயனுகிய புகழை யுண்டாக்கிக் கொள்ளாமையின் அவனே யென்னுது 'யாக்கை' எனவும், 'சோற்றிற்குக் கேடு பூமிக்குப்பாரம்' என்னும் பழமொழிப்படி புகழில்லாதவன் பூமிக்குப் பாரமாயிருத்தல் பற்றிப் 'பொறுத்த' எனவும் கூறினரென்பது.

‡ வீனையுள் - நெல் முதலியவற்றின் வினவு. வீனையுள் என்பது உள்ளீற்றுத் தொழிற் பெயர்.

0 புகழில்லாத வுடம்பைச் சுமக்கின்ற விடத்தில் நிகழுகின்ற நெல் முதலியவற்றின் வினவு குறைதலே யந்த விடத்தின்மே லேற்றி நிலம் வண்பயன் குன்றும் என்று கூறப்பட்ட தென்பது. இவ்வாறு வருவது இடவாகு பெயராம்; உபசார வழக்குமாம்.

தேளி.— (இ - ள்). இசையிலா - புகழில்லாத, யாக்கை - உடம்பை, பொறுத்த - சுமந்த, நிலம் - விளைநிலமானது, வசையிலா - பழிப்பில்லாத, வண்பயன் - வளப்பத்தையுடைய விளைவு, குன்றும் - குறையும், (எ - று).

(இசையிலாத வுடம்பிற்கு) உயிருண்டாயினும் அவ்வுயிரால் (அது) பயன்கொள்ளாமையால் 'யாக்கை' என்றும், அந்த யாக்கை நிலத்திற்குப் பாரமாதலின் 'பொறுத்த' என்றும் சொல்லினர். விளைவு குறைதற்குக்காரணம் பாவசரீரத்தைச் சுமக்கின்ற வெறுப்பு. இடத்து நிகழ் பொருளாகிய நெல்முதலிய பொருளின் தொழில் குன்றுமென இடத்தின் மேல் நின்றது. இவை நான்குபாட்டாலும் புகழில்லாதவரது தாழ்வு சொல்லப்பட்டது

(க - து) கீர்த்தியில்லாத வுடம்பைச் சுமக்கின்ற விளைநிலம் பயன்படும் விளைவைத் தருவதில்லை என்பது.

9. The ground which supports a body without fame will diminish the reproachless riches of its produce

ய. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

பரி.—(இ - ள்). தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர் வாழ்வா ராவார்; புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவார்; (எ - று).

† வசை யொழிதலாவது 'இசையெனு மெச்சம்' பெறாதலாயினமையின், இசை யொழிதலாவது வசைபெறுதலாயிற்று; ‡ மேல் 'இசையிலா யாக்கை' என்றதனை விளக்கியவாறு. இதனுள் ¶ இவ்விரண்டும் உடன் கூறப்பட்டன. மறுமைப்பயன் $ 'வானுறையுள், தெய்வத்துள் வைக்கப் படும்' என மேலேகூறப் பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்.

† வசை (நிந்தை) நீங்குதல் இசை (புகழ்) யென்னு மெசசத்தைப் பெறுவதா யிருத்தலால் வசை நீங்குதல் இசை யடைவதாயிற்றென்க. இதனுல் இசை யிருந்தால் வசை வாராதென்றும் வசை யிருந்தால் இசை வாரா தென்றும் பெற்றாம். இசைதோன்ற, வசைதோன்ற என்று சொல்லவந்தவர் அவ்வாறு கூறுது அருத்தா பத்தியால் வசை யொழிய இசை யொழிய என்று கூறினரென்க.

‡ மேல் ('வசையிலா வண்பயன்' என்ற மேலே யுள்ள குறளில்) இசையிலா யாக்கை என்றதனை யிங்ஙனங்கூறிய விதமா மென்க. இதனுல் இசை (புகழ்) இல்லாதவர் உற்றறிபுல னொன்று மில்லாத சடப்பொருளோடொப்ப ரென்ப தாயிற்று.

¶ இவ்விரண்டும் - வசையொழிய வாழ்வாருயர்வும், இசையொழிய வாழ்வா ரிழிவும்.

$ திருக்குறன், இல்வாழ்க்கை, ௧0.

இனி † மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே யடங்கும். அஃதறிந்தடக்கிக் கொள்க; யாமுரைப்பிற் பெருகும்.

இல்லறவியல் முற்றுப் பெற்றது.

தேளி:—(இ - ள்.) வசையொழிய - (தம்மிடத்து) வசையுண்டாகாமல், (புகழுண்டாக),வாழ்வாரே - வாழுகின்றவர்களே, வாழ்வார் - (உயிர்), வாழுவாராவர், இசையொழிய - புகழுண்டாகாமல், (வசையுண்டாக), வாழ்வாரே - வாழுகின்றவர்களே, வாழாதவர் - இறந்தோராவார், (எ - று).

வசை யொழிதல் (இசையென்னு மெசசமாகிய) புகழ் பெறுதலாதலால், இசையொழிதல் வசை பெறுதலாயிற்று. முற்செயயுளில் 'இசையிலா யாக்கை' என்று கூறியதனை விளக்கியவாறும். இதனுல் உயர்வுந தாழ்வுமாகிய விவ்விரண்டும உடன் சொல்லப்பட்டன. மறுமைப் பயன் " வானுறையுந, தெய்வத்துள் வைக்கப் படும்' என்று முன்னே சொல்லப் பட்டமையால், இல்லறத்திக்கு இவ்வுலகதனிற் புகழும் தேவருலகத்திற் போகமும் பயனென்பது பெறப்பட்டது.

இனி மனுமுதலிய தரும சாஸ்திரங்களால் பொதுவாகையாகக் கூறப பட்ட இல்லறங்களெல்லாம் இவா தொகுத்துக் கூறிய இவ்விருப தனி காரத்துள்ளே அடங்கும், அஃதறிந்து அடக்கிக் கொள்க; யாம் உரைப் பிற் பெருகும்.


(க - து.) கீர்த்தியோடு வாழ்பவரே உயிா வாழ்வா ராவார்; மற்றையவ ரிறந்தோராவர் என்பது.

10. Those live who live without disgrace. Those who live without fame live not

பாயிரத்தின் குறள்-சய இல்லறத்தின குறள்-உா

ஆகக் குறள - உாசய.


இல்லறவியல் முற்றுப் பெற்றது.



† மனுதரும சாஸ்திரத்தின் 3,4, 5, அத்தியாயங்களில் நாயனர் இல்லறத்திற் குரியதாகக் கூறிய பொதுத்தருமங்கள் தெரிந்து இடத்திலே யுய்த்துணர்ந்து கொள்க.

3. துறவறவியல்

On Ascetic Virtue.



பரி.—இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவற மாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி யறிவுடையராய்ப பிறப்பினை யஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க் குரிந்தாய அறம். அதுதான்: வினைமாசுதீர்ந்து அந்தக்காரணங்கள் தூயவாதற் பொருட்டு அவாற் காக்கபடும் விரதங்களும், அவற்றன் அவை தூய வாயவழி யுதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

விரதம்.

† அவற்றுள், விரதங்களாவன: இன்ன வறஞ் செய்வலெனவும், இன்னபாவ மொழிவலெனவும் தம்மாற்றலுக் கேற்ப வரைந்து கொள்வன. ‡ அவை தாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவை தம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்து நிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான் றொடங்கி, முதற்கண அருளுடைமை கூறுகின்றார்.

தெளி —இனி முறையாகத் துறவறத்தைச்சொல்லத் தொடங்கினார். துறவறமாவது முற்கூறிய இல்லறத்நிற்றவரு தடந்து அறிவுடையவராயப் பிறப்பிற்குப் பயந்து முதலி பெறுதற் பொருட்டுத் துறந்தவர்கட்கு உரியதாகிய அறமாம். அத்துறவறந்தான்: இருவினைகளா லுண்டாகுவ குற்றம் நீங்கி (மனம், பத்தி, சித்தம், அகங்கார மென்னும்) அந்தக்காரணங்கள் பரிசுத்தமாகு நிமித்தம் அத்துறவறவரால் பாதுகாகப்படும் விரதங்களும், அவ்விரதங்களால் அவ்வந்தக்காரணங்கள் பரிசுத்தமானவிடத் திண்டாவ தாகிய ஞானமுமென் றிருவகைப்படும்.

அவற்றுள், விரதங்களாவன: இன்ன அறங்களைச் செய்வேனென்றும், இன்னபாவங்களைச் செய்யாது விடுவேனென்றும் தமது வல்லமைக்கேற்ற வாறு மேற்கொள்வனவாம். அவ்விரதங்கள் அளவில்லாதனவா யிருத்தலால் விரியுமென்றஞ்சி, அவ்விரதங்களுள்ளே பலவற்றையும் தம்முள்ளடக்கி நிற்குஞ் சிறப்புடையனவாகிய சிலவற்றை இவ்வுச சொல்லத் தொடங்கி, முதலில் அருளுடைமையை யருளிச்செய்கின்றார்.

† அவற்றுள் - விரதம், ஞானமென்னு மிரண்டனுள்.

‡ விரதங்கள் பலவாதலே மனுதரும சாஸ்திரத்திலும், சூதசங்கிதை ஞானயோக காண்டம் கழுவாயுரைத்த வத்தியாயத்திலும், பிறவற்றிலும் காண்க.

முதலாவது அதிகாரம்.

அருளுடைமை.—*Kindness.*

பரி.—அஃதாவது * தொடர்பு பற்றது இயல்பாக எல்லாவுயிர் கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்று அன்புடைமை போல இது துறவத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

தெளி.—அஃதாவது சம்பந்தங்கருதாது இயல்பாக எல்லா வுயிர்களின் மீதுஞ் செல்வதாகிய கருணையாம். இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்திருத்தல் போல, இவ்வருளுடைமை துறவறத்திற்குச் சிறந்திருத்தலால் முற்படச் சொல்லப்பட்டது.

க. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

பரி.—(இ - ள்). செல்வங்கள பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப் பட்ட செல்வமாவது அருளான் வருஞ்செல்வம், அஃதொழிந்த ‡ பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார் கண்ணும் உளவாம் ஆகலான்.

அருளான் வருஞ் செல்வமாவது உயிர்களேயோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார் கண்ணே யல்லதில்லாத அருட்செல்வமே சிறப் புடைய செல்வம், ஏனை நீசர்கண்ணு முளவாம் பொருட்செல்வங்கள் சிறப் பில வென்பதாம்.

தெளி.—(இ - ள்). பொருட்செல்வம்-பொருளால்வருஞ் செல்வங்கள், பூரியார்கண்ணும் - இழிந்தவரிடத்தும், உள - இருக்கின்றன, (ஆதலால்), செல்வத்துட் செல்வம் - செல்வங்கள் பலவற்றுள்ளும் (ஆராய்ந்து எடுக்கப் பட்ட) செல்வமாவது, அருட்செல்வம் - அருளால் வருஞ்செல்வமாம்.

அருளால் வருஞ்செல்வமாவது உயிர்களைப் பாதுகாத்து (பாதுகாக் கும்) அவ்வறத்தால் மேம்படுதலாம். உயர்ந்தோரிடத் திருப்பதேயல்லாமல் (இழிந்தோரிடத்து) இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், (உயர்ந்தோரிடத திருப்பதே யலலாமல்) மற்றைய இழிந்தோரிடத்தும் உளவாகும் பொருட் செல்வங்கள் சிறப்புடையன வல்ல வென்பதாம்.

(க - து). பொருளால்வருஞ் செல்வத்தினும் அருளால்வருஞ் செல்வமே சிறப்புடைய தென்பதாம்.

1. The wealth of kindness is twe of wealth, in as much as the wealth of property is possessed even by the basest of men.

---

* தொடர்பு - மனைவி, மக்கள், பந்து, மித்திரர் முதலியவரைப் பற்றி வருஞ் சம்பந்தம்.

‡ பொருளான் வரும் செல்வம்—உண்டி, உடை, உறையுள, வினை விலம். ஏவல் முதலியன.

உ. நல்லாற்று ஞடி யருளாள்க பல்லாற்றுற்
றேரினு மஃதே துணை.

பரி.—(இ - ள்). அளவைகளானும் பொருந்து மாற்றானும் நன்றான நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்றாய்ந்து, அது டையராக; † ஒன்றையொன் றெவ்வாத சமயநெறிகள் எல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறிதில்லை, (எ - று).

* அளவைகளாவன ‡ பொறிகளாற் காணுங்காட்சியும், ¶ குறிகளான் உய்த்துணரும் அனுமானமும, $ கருத்தா மொழியாகிய ஆகம

† ஒன்றையொன் றெவ்வாத சமயநெறிகள் என்பது மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் "உலகச் சமயங்க ளொவ்வாத ராத்திரமாஞ், சிவலோக் கடலுள ஞப்பிடந்து தமிமாறுந், கவலைக் கெடுத்துக் கழலிணை கடந்தருளுஞ், செயலைப் பாவிநாந தெள்ளேணங் கொட்டாமோ" என்று கூறுவதலுலு மறியப்படும்.

* அளவை - பிரமாணம; உண்மை யனுபவ வறிவிற்குக் கருவியாயுள்ளது பிரமாண மெனப்படும்.

‡ பொறிகளாற் காணுங்காட்சி - செவிமுதலிய விந்திரியங்களால் சப்தமுதலிய விஷயங்களே யறியும் அறிவு. "பிரதியட்சப் பிரமைக்குக் காரணம் பிரதியட்சப் பிரமாணமாம்; எங்ஙனம் இது கடமென்றற்றொடக்கத்திற் பிரத்தியட்சப் பிரமைக்குக் காரணம் கண் முதலிய விந்திரியங்களா யிருத்தலின், கண் முதலிய விந்திரியங்களே பிரத்தியட்சப் பிரமாணமாம். (பிரமை - உண்மை யனுபவ வறிவு):—நியாயப் பிரகாசம்.

குறிகளான் உய்த்துணரும் அனுமானம் - புகை முதலிய குறிகளால மலை முதலிய விடங்களில் நெருப்பு முதலியன வுண்டென்றாய்ந் தறிகின்ற அனுமானம். (குறி, இலிங்கம, சாதனம், ஏது என்பன ஒரு பொருட் சொற்கள்). அனுமான மெனினும் கருதலெனினு மொக்கும். "அனுமிதிப் பிரமையின் கரணம் அனுமானப் பிரமாணமாம்; எங்ஙனம் இம்மலை வன்னி (தீ)யுடைத்து எனலும் அனுமிதி ஞானத்திற்குப் புகை வன்னியின் வியாப்தி யுடையதா மென்னும் வியாப்தி ஞானம் காரணமாயிருத்தலின், அவ் வியாப்தி ஞானம் அனுமானப் பிரமாணமாம். (வியாப்தி-யாண்டுப் புகை ஆண்டுத்தீயென நியதமானவுடனிகழ்ச்சி):—நியாயப் பிரகாசம்.

$ கருத்தா மொழியாகிய ஆகமம் - பரமேசுவரன் சிருஷ்டியிலுரம் பத்தில் சீவர்களுய்யுமாறு எடுத்துச சொல்லியவேதம். ஒன்றைச செய்கிறவன் கர்த்தா வெனப்படுவன். செய்யத்தக்கது கர்த்தல்லிய மெனப்படும். ஆகம மெனினும் உரையெனினு மொக்கும். காண்டம், (பிரத்தியட்சம்), கருதல், உரையென்னு மூன்றும் மூறையே அனுபவம், யுக்தி, சுருதியென்றும் சொல்லப்படும். "சத்தப்பிரமாணம் ஆத்தன் வாக்கியம்..... ஆத்தனுவான் உண்மைப் பொருளைக் கூறுவான":— தருக்க சங்கிரகம்.

மும் என மூன்று. † ஒப்புப்பற்றி யுணரும் உவமேயம், ‡ இங்ஙன மன்றியின் இது கூடா தென்றுணரும் அருத்தாபத்தியும், $ உண்மைக்கு மாறாய இன்மையும் என இவற்றையுங் கூட்டி ஆறென்பாரு முளர். $ இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே யடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறுவது இது கூறும்; இது கூடா தெனத் தனகண்ணே தோன்றுவது. இதனை வடநூலார் யுத்தி என்ப.

† ஒப்புப்பற்றி யுணரும் உவமை - ஒன்றற் கொன்றுள்ள சாதாரண தருமம (பொதுமை) பற்றி யறிகின்ற வுவமானம். உவமான மெனினும் உவம மெனினும் ஒப்பெனினு மொக்கும. "உவமானம் உவமிதியறிவிற்குக் காரணம், உவமிதி பெயர்க்கும் பெயர்ப்பொருட்கு மூள்ள சம்பந்த மறியு மறிவு; அதற்குக் காரணம் ஒப்புமையறிவு":—தருக்க சங்கிரகம்.

‡ இங்ஙனமன்றியின இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தி - பகலுண்இரவும்புணர்த்தலின்றியின உடம்புபருத்திருத்தலகூடாதென்றெதிர் மறை முகத்தாலறிகின்ற அருத்தாபத்தி. அருத்தாபத்தி யெனினும் பொருட்பே றெனினுமொக்கும. "உபபாதகத்பதனைக் கேதுவான உபபாத்திய ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம்; உபபாதகஞானம் அர்த்தாபத்திப் பிரமேயம்"—விருத்திரத்நாவலி.

¶ உண்மைக்கு மாறாய இன்மை-விளங்குதலுண்மைக்கு மாறுபட்ட விளங்குதலில்லாமை; இஃது அநுபலத்திப் பிரமாணமெனப்படும். அபாவப்பிரமாணமெனினும் அநுபலத்திப் பிரமாணமெனினுமொக்கும். இது வெளுணானித்தியின் "அளவை காண்டல கருதலுரையபாவம பொருளொப் பாறென்ப" என்னும் பாட்டினுரையில ஞானப்பிரகாசர் அபாவம் என்பதற்கு அநுபலத்தி யென்று பொருள்கூறி யிருத்தலு மிங்கு அறியதக்கதாம். "அபாவ பிரமையின் அசாதாரணகாரணம அநுபலத்திப் பிரமாணமாம்":— விருத்திரத்நாவலி. காண்டல், கருதல், உரை, ஒப்பு, பொருட்பேறு, அநுபலத்தியெனு மளவைகளே யன்றிப் பரிசேடம், சம்பவம், ஐதிகம், ஓயல்பு என்னும வேறளவைகளுங் கூறுவாரு மூண்டு அவையெலலாம மேற்கூறிய ஆறனுளடங்குவது பற்றி விதந்து கூறாது விட்டார்.

$ இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே யடங்குதலின் மூன்றென்றலே கருத்து - உவமை, அருத்தாபத்தி, அநுபலத்தியென்னு மிம்மூன்று பிரமாணங்களும ஒருவாற்றான் (ஒருவகையினால்) காண்டல் கருதல் உரையென்னும் மூன்றனுள்ளே அடங்குதலால், பிரமாணம் (காண்டல் கருதல் உரை யென்னும) மூன்றென்று கூறுதலே கருத்தாமென்க. பிரத்தியட்ச முதல் அநுபலத்தி யீறாயுள்ளவற்றைப் பிரமாணமாகக்கொண்டவர்கள் உவமையும அருத்தாபத்தியும் அநுபலத்தியும் காண்டல்முதலிய அளவைகளுள் அடங்காவென்று பிரபலகாரணங்காட்டியிருத்தல்பற்றி, காண்டல் கருதல் உரையென்னு மூன்றையும் பிரமாணமாகக்கொண்ட சாங்கியர் முதலியோர் கூறியபடி யொருவகையால் உவமைமுதலியன காண்டல் முதலியவற்றுள் அடங்குதலே மேற்கொண்டு பரிமேலழகர்

† ஆற்றுனென்பது வேற்றுமை மயக்கம். ஒன்னாரையொன் றுவ்வாமை யாவது மதவேறுபாட்டான் ‡ அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறுகோடல்; அன்னவாயினும் அருள் தூணை யென்றற்கண் ஒக்குமென் பதாம். உயிரை விட்டு நீங்கா திருமையினும் உதவலின் 'தூணை' என் றார். இவையிரண்டு பாட்டாலும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

நேளி:—(இ-ள்). நல்லாற்றான் - (பிரமாணங்களாலும் யுத்தியாலும்) நன்றாகவழியிலே,(நின்று), நாடி-(நமக்குத் தூணையாகும்அறம்யாதென்று)

இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே யடங்குதலின்' என்று கூறினு ரென்க. சாங்கியர்முதலியோர் உவமையும் அருத்தாபத்தியும் அனுமானப் பிரமாணத்திலும்,அனுபலத்தி பிரத்தியட்சப்பிரமாணத்திலும் அந்தர்க்கத (அடக்க)மா மென்பர். (பிரத்தியட்சப் பிரமாணத்தால் அபாவதத்தை யறி யும்போதத்தற்குச் சககாரியாக அனுபலத்தியைக் கொண்டனர் தார்க்கீகர் முதலியோர்).

† ஆற்றான் என்பதன் மூன்றனுருபு தனக்குரிய பொருளைவிட்டு ஆற்றினென (நெறியிலென) ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்தமையின் வேற்றுமை மயக்கமாயிற்று.

‡ அளவைகள் தம்முள் மாறுகொள்ளுதலே மேலே கூறினும்; அண் டுக் காரண. அளவையா லளக்கப்படும் பொருளாகள தம்முள் மாறுகொள் ளுதலாவது லோகாயதன் உலகமேயுள்ளதென்றும், வேதாந்தி பிரமமே பாரமார்த்திகமாக வுள்ளதென்றும், சைவர்முதலியோர் கடவுள் சீவர்கள் மாயை என்னுமூன்றும் என்றும் உள்ளனவென்றும், தார்க்கீகர் பிருதிவி முதலியவற்றின பரமாணுக்களும், ஆகாயம் காலம்திக்கு ஆத்மா மனமென் றுமைந்தும், சமவாயமும், சாமாந்தியமும், பிறவும் என்றும் உள்ளனவென் றும், சமணர்கள் காலம், சீவன், தனமாத்திகாயம், அதனமாதிகாயம், புண்ணியம், பாவம், ஆகாயம், புற்கலம், பந்தம், வீடு என்னும் பத்தும் அநாதியென்றும் பிறவும் (அவ்வம் மதவாதிகள்) கூறித் தம்முள் மாறு கொள்ளுதலாமென்க.

பிரமாண நிரூபணம்.

பிரமையின் காரணம்-பிரமாணமாம். பிரமையென்பது யதார்த்தானுப வமாம். வியாபாரமுடைய அசாதாரண காரணம் காரணமாம். வியாபாரத் தின் வேறுய அசாதாரண காரணமே காரணமென்பதும் பிரமாணத்திற் கிலக்கணமாம். காரணத்திற் றோன்றிக் காரியத்தைத் தோற்றுவிப்பது வியாபாரமாம்.

பிரமாணமெனினும் அளவையெனினு மொக்கும். இதனை மதவாதி கள் தத்தஞ் கொள்கைக்குச் சாதனமாகப் பலவாருக வங்கீகரித்திருக்கின்ற னர். அவற்றுள்:—

(1) சார்வாக மதத்தர் பிரத்தியகூப்பிரமாண மொன்றனையே யங்கீ கரித் திருக்கின்றனர்.

ஆராய்ந்து, அருளாள்க-அருளுடைய ராகக்கடவர், பல்லாற்றான்-(ஒன்றை யொன் றொத்திராத) சமயவழிகளெல்லாவற்றாலும், தேரினும்-ஆராய்ந்தாலும், துணை - துணையாவது, அஃதே - அவ்வருளே, (வேறொன்றில்லை).

(2) கணாதர், பௌத்த மதத்தார் அனுமானமென்னு மிரண்டாவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் பிரத்தியகூப் பிரமாண மொன்றையே யங்கீகரிக்கு மிடத்தித் திருப்தியை விரும்புகின்ற புருஷனுக்குப்போஜனத்திற் பிரவிர்த்தியுண்டாதல் கூடாது. சாப்பிடாத பதார்த்தத்தில் திருப்தியுண்டாகு மென்பதற்குப் பிரத்தியகூப் பிரமாணத்தினால் யாதொரு பிரட்தியகூஞானமுமில்லே. சாப்பிட்ட போஜனத்திலுண்டான திருப்தியினுபவம் சாப்படாத போஜனத்திலும் அனுமானத்தினு லுண்டாகுமெனவறிந்து, திருப்தியின்பொருட்டுப் போஜனத்திற் பிரவிர்த்தி யுண்டாகின்ற தென்பர்.

(3) சாங்கியர்முதலியோர் சத்தமென்னு மூன்றுவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் பிரத்தியகூம், அனுமானமென்னு மிரண்டு பிரமாணங்களோமாத்திரமங்கீகரிக்குமிடத்தித்,தேசாந்தரத்தில்உன்தகப்பனிறந்துபோஞனென்று பிறர் சொல்லக் கேட்டவனுக்குத் தன்தகப்பனிறந்து விட்டானென்னும் நிச்சயமுண்டாதல் கூடாது. தேசாந்தரத்தில் தன்தகப்பனிறந்துவிட்டானென்னும் ஞானம்,அவனுக்குப் பிரத்தியகூம், அனுமானம் என்னுமிவ்விரண்டு பிரமாணங்களாலு முண்டாகவில்லே; ஆகையால், மூன்றுவதான சத்தப் பிரமாணமும் வேண்டுமென்பர்.

(4) நியாயமதத்தர் உவமானமென்னும் நான்காவது பிரமாணதையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் பிரத்தியட்சமுதலிய மூன்று பிரமாணங்களே மாத்திர மங்கீகருமிடத்தி ஒருவன் கவயமென்னு மிருகத்தைக் கண்டதில்லே; ஆலை கவயம அலைதாடியினிய ஆ(பசு) போன்ற தென்று காட்டுமனிதன் சொல்லக்கேட்டிருக்கிறான். அவன் காட்டிற்குப் போன காலத்தி அலைதாடியின்றிய ஆலையொத்த பிண்டத்தைப் பார்த்தபோது காட்டுமனிதன் சொன்னதை ஸ்மரித்து இது கவயத்தின் சொற்பொருளென் றறிகிறான். உவமானப் பிரமாணத்தை யங்கீகரியாதொழியின், இந்த ஞான முண்டாதல் கூடாதென்பர்.

(5) பட்டர் சிஷ்யரான பிரபாகர மதானுசாரிகள் அருத்தாபத்தியென்னு மைந்தாவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் பகலுண்ணாதவன பருத்திருத்தலேக் கண்டவனுக்கு இவனிரவில்மறைந்துண்பா னென்னும் ஞானமுண்டாகின்றது; அது பிரத்தியகூ முதலிய நான்கு பிரமாணங்களாலு முண்டாவதில்லே; ஆகையால், பருத்திருத்தலுக்குக் காரண மிராப்போஜனமென்பது அருத்தாபத்திப் பிரமாணத்தால் பெறப்படுகின்றதென்பர்.

(6) பட்டர் மதத்தர் அனுபலப்தியென்னும் ஆறுவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் வீடுமுதலிய விடத்துக் கடமுதலியனவில்லே யென்னும் ஞானமுண்டாகிறது. அப்போது எது தகுதியாக

பிரமாணங்களாவன இந்திரியங்களாற் காணுங் காட்சியும், புகைமுத லிய குறிகளால் ஆராய்ந்தறியும் அனுமானமும், கருத்தா (ஈசனது) மொழியாகிய ஆகமமும் என மூன்றுவகைப்படும். ஒப்புமைபற்றி யறியும் விளங்கலில்லையோ அதன் அபாவஞானமுண்டாகின்றது. இந்த அபாவத் தின் நிச்சயம் பிரத்தியகூமுதலிய ஐந்து பிரமாணங்களாலு முண்டாவ தில்லை; அனுபலத்திப் பிரமாணத்தா லுண்டாகின்றது; ஆதலால் ஆறுவ தான அனுபலப்திப் பிரமாணமும் அதியாவசியமா மென்பர்.

இவ்வாறு பிரமாணங்களுள், நையாயிகர் அருத்தாபத்திப் பிரமாணத் தை வியதிரேகியனுமானத்திலும், அனுபலப்திப் பிரமாணத்தைப் பிரத்தி யகூப் பிரமாணத்திலு மடக்கிப் பிரமாணங்கள நான்கே யென்பர்.

கணாத மதானுசாரிகளான வைசேடிகரும்,பௌத்தரும், பிரத்தியகூம், அனுமானம்,உவமானம், சத்தம் என நையாயிகரங்கீகரித்துள்ள நான்கனுள் சத்தத்தையும்,உவமானத்தையும் அனுமானப் பிரமாணத்திலுளடக்கிப்,பிர மாணங்களிரண்டேயென்பர். சாங்கியர்முதலியோர் உவமானத்தை யனுமா னத்தி லடக்கியும் வேறுபிறவாகவும் கூறுவர்.

மேற்குறித்த ஆறுபிரமாணங்களன்றி ஐதிகம், சம்பவம் முதலிய வேறு பிரமாணங்களு முண்டு; அவையனைத்தும் அவ்வாறனுளடக்கும்.

சட்பிரமாண நிரூபண சங்கிரகம்.

1. பிரத்தியகூப் பிரமாணம்.

பிரத்தியகூம் - காண்டல். பிரமாணம் - அளவை.

பிரத்தியட்சப்பிரமாணமெனினும் காண்டலளவையெனினுமொக்கும்.

காண்டலளவையும் காணபேதத்தா லறுவகைப்படும். (காரணம்-கருவி). அக்காரணமாவன:—

1. சுரோத்திரம், 2. துவக்கு, 3. சட்சு, 4. சிங்குவை, 5. கிராணம், 6. மனம் என்பனவாம், இவற்றுள்:—

(1) சுரோத்திரம் என்பது செவி(செவியினுளிருக்கு மிந்திரியம்);இத ன்தொழில் சப்தத்தை யறிதல். சுரோத்திரத்திற்கும் சப்தத்திற்கும் சம்ப ந்தமுண்டாகும்போது சுரோத்திரத்தினுற் சப்தப்பிரத்தியட்ச முண்டாகி றது. சப்தமென்பது சப்தத் தன்மை முதலியன வற்றிற்கு முபலட்சண மாம்.

(2) துவக்கு என்பது சரீரம் (சரீர முற்றும் வியாபித்திருக்கு மிந்திரி யம்); இதன் தொழில் பரிசத்தையறிதல்.தொக்கிற்கும் பரிசத்திற்கும் சம் பந்த முண்டாகும்போது துவக்கினுற் பரிசத்தின் பிரத்தியட்ச முண்டா கிறது. பரிசமென்பது திரவியம் திரவியத்தன்மை முதலியவற்றிற்கு முப லட்சணமாம்.

(3) சட்சு என்பது கண்(கண்ணுறை கருமணியிலிருக்குமிந்திரியம்);. இதன் தொழில் ரூபத்தையறிதல். சட்சுவிற்கும் உருவத்திற்கும் சம்பந்த

உவமானமும், இங்ஙனமன்றியின் இது கூடாதென் றறியும் அருத்தாபத்தியும், உண்மைக்கு எதிராகிய இல்லாமையும் எனவிவற்றையுங்கூட்டிப் பிரமாணம் ஆறென்பாரும் உண்டு. இவையும் ஒருவகையால் பிரத்தி

முண்டாகுமபோது சட்சுவினுல உருவத்தின பிரத்தியட்ச முண்டாகிறது. உருவமெனபது உருவமுடைய திரவிய முதலியவற்றிற்கு முபலட்சணமாம்.

(4) ஙெஙுவை என்பது நாக்கு. (நாக்கினுனியி லிருக்கு மிந்திரியம்); இதன் தொழில் இரசத்தை யறிதல். ஙெஙுவைக்கும் இரசத்திற்கும் சம்பந்த முண்டாகும்போது ஙெங்வையால் இரசத்தின் பிரத்தியட்ச முண்டாகிறது. இரசமென்பது இரசத்தன்மை முதலியவற்றிற்கு முபலட்சணமாம்.

(5) ஙிராணம் என்பது மூசு கு.(மூப் நுனுனியிலிருக்குமிந்திரியம்);இதன தொழில் கந்தத்தை யறிதல். ஙிராணத்திற்கும் கந்தத்திற்கும சமபந்தமுண்டாகும்போது ஙிராணத்தாற் கந்தப்பிரத்தியக்ஷ முண்டாகிறது. கந்தமென்பது கந்தத்தன்மை முதலிய வற்றிற்கு முபலட்சணமாம.

(6) மனமென்பதுநெஞ்சு(நெஞ்சிலுளிருக்கு மிந்திரியம்);இதன் தொழில் சுகமுதலியவற்றை யறிதல், மனத்திற்குக் கண் முதலிய இந்திரியங்களின் வாயிலாகவாவது வேறுவகையாலாவது பதார்த்தங்களினை சம்பந்த முண்டாகும்போது மனத்தாற் சுகதுக்க முதலியவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகிறது. மனம் இந்திரிய மனறெனபாரு முண்டு.

மீண்டும பிரத்யக்ஷம், சவிகற்பம், நிருவிகற்பம் என்னும் பேதத்தாலி ருவகைத்தாம். விகற்பத்துடன் கூடியது சவிகற்பமாம். விகற்பமாவது பொருள், ஜாதி, குணம், கிரியை முதலியனவாம், இவறறோடு கூடிய ஞானம் சவிகற்ப ஞானமாம்.

ஜாதி, குணம், கிரியை, பொருள் முதலியவற்றின் சேர்க்கையின்றி, இஃதொன் றென்று வஸ்துவின் சுத்தவமாத்திரத்தாலுண்டாகும் ஞானம நிருவிகறப ஞானமாம்.

2. அனுமானப் பிரமாணம்.

அனுமிதிப் பிரமையின் காரணம் அனுமானப் பிரமாணமாம். அனுமிதிப்பிரமைபட்சத்திற்சாத்திய முண்டென்றுணரும் ஞானமாம். அனுமானம் வியாத்தியினனுபவம். வியாத்தி எது (புகை) சாதனியங் (தீக்) களின் நியதமான வுடனிகழ்சி.

அடுக்களை முதலியவிடங்களில் தினந்தோறும் புகையிருக்கக் காணும் புருஷனுக்குப், புகையுள்ள விடங்களிலெல்லாம் அக்கினி யிருக்குமென்னு மோ ரனுபவ முண்டாகிறது. இது வியாத்தியனுபவ மெனப்படும்.

இவ்வனுபவ முடையவன் பர்வதமுதலிய இடங்களுக்குப் போகுங்கால், புகையின் பிரத்தியக்ஷ முண்டாகு மிடத்து, அவனுக்குப் புகைக்கும், வன்னிக்குமுள்ள உடனிகழ்சியின் ஞாபக முண்டாகின்றது, இதனால்

யட்சம் அனுமானம் ஆகமமென்னும் அம்மூன்றனுள்ளே அடங்குதலால், பிரமாணம் மூன்றென்றலே கருத்தாம். யுத்தியாவது இதுகூடும் இது கூடாது எனத் தன்னிடத்தே தோன்றுவது. ஆற்ருன் என்பது ஆற்றில் மலே முதலிய விடங்களில் வண்ணியுண்டென்னும் ஞான முண்டாகிறது. இதுவே அனுமிதி யெனப்படும்.

ஈண்டுப் புகை ஏது அல்லது இலிங்கமெனப்படும்.

ஏது அல்லது இலிங்கத்தாலறியப்பட்ட வன்னி (நீ) சாத்தியமெனப் படும்.

ஏது, சாத்திய மிரண்டிற்கும் ஆசிரயமாயிருக்கும பர்வதம் முதலியன பக்ஷமாம். எவ்வதிகரண (இட) த்திற் சாத்தியத்தை யறியும் விருப்பமுண் டாயச, சாத்தியத்தின் அனுமிதிவடிவ நிசய முண்டாகின்றதோ அது பட்சமெனப்படும்.

தூமமுள்ள விடத்து மில்லாவிடத்தும் வன்னியிருப்பதால் தூமத்தி னும் வனனி யதிகவிடத்திருப்பதாம்; ஆகையால் வன்னி வியாபகமாம்.

வன்னியுள்ள விடத்தெல்லாம் தூமமில்லாமையால் தூமம் வியாப்பி யமாம். (சொற்பவிடத திருப்பதாம்).

அனுமிதிஞானத்தில் ஏது சாத்தியங்களின் வியாப்தியனுபவம் கர ணமாம். இந்த வியாப்தி ஞானத்தின ஸ்மிருதி (ஞாபகம்) வியா பாரமாம். அனுமிதியறிவு பயனும் உடனிகழ்ச ஞானமெனினும் வியா ப்திஞான மெனினு மொக்கும். சிலா வியாப்தி ஞானத்தையும் சிலர், வியா ப்திஸ்மிருதியினையும், சிலர் ஏது ஞானத்தையும், சிலர் ஞானவதுவினையும் காரணமென்பர்.

அவ்வனுமானம் † கேவலாந்துவயி ‡ கேவலவியதிரேகி $ அந்துவய வியதிரேகியென மூவகைத்தாம். அந்துவயம் - உடன்பாடு, வியதிரேகம், எதிர்மறை.

அவற்றுள்:—(1) கேவலாந்துவயியாவது அந்துவயத்தில் மாத்திரம் வி யாத்தி யுடையது. அது குடம் அபிதேயம் (பெயரிட்டு வழங்கற்பாலது); பிரமேயத் தனமையால் என்பது போலவாம். ஈண்டுக்குடம் பட்சம்; அத ன் அபிதேயத்தன்மை சாதனியம்; பிரமேயத்தன்மையால் என்பது ஏது. ஈண்டு, யாண்டு யாண்டுப் பிரமேயத்துவம் ஆண்டு ஆண்டு அபிதேயத்து வம் படம்போல என அந்துவயவியாப்தி மாதிரமுளது; யாண்டுச்சாதனிய மில்லை, ஆண்டு ஏதுவில்லை என வியதிரேக வியாத்தியின்மையா (அபிதே யத்துவமும், பிரமேயத்துவமு மெஙகுமிருத்தலா) லென்க.

(2) கேவல வியதிரேகியாவது வியதிரேகத்தில் மாத்திரம் வியாத்தியு டையது. அது பிருதிவி எனையவற்றின் வேறு; கந்தமுடைமையால்; யாதி எனையவற்றின் வேறன்று அது கந்தமுடையதன்ம அப்புப்போல என்பது போலவாம். இங்கு யாதுகந்தமுடைத்து அஃது எனையவற்றின் வேறு

எனப் பொருள்பட்டமையின் வேற்றுமை மயக்கமாம். ' ஒன்றை யொன் றொத்திராமையாவது மதவேறு பாட்டால் பிராமாணங்களும் (அவற்றாலறி யப்படும்) பொருள்களும் தம்முள்ளே மாறுகொள்ளுதலாம்; அப்படி யிருந் தாலும் அருள் தானேயென்று சொல்லுமிடத்து (அது தம்முள் வேறுபட் டுள்ள சமயிகட்கெல்லாஞ்) சம்மதமா மென்பதாம் உயிரைவிட்டு நீங்காமல் இதுபோல என அந்நுவயத்தில திருட்டாந்தமிலலே; பிருதிவிமுழுதும் பட்சமே யாகலினென்க.

(3) அந்நுவயவியதிரேகியாவது அந்நுவயத்திலும், வியதிரேகத்திலும் வியாப்தியுடையது. வன்னியைச சாதிக்குங்கால் புகையுடைமை அந் நுவயவியதிரேகியாம்; யாண்டுப்புகை ஆண்டுத்தீ அடுக்களைப்போல என அந்நுவயத்திலும், யாண்டுத்தீயில்லை ஆண்டுப் புகையில்லை மடுப்போல என வியதிரேகத்திலும் வியாப்தி யுடைமையினென்க.

மீண்டும் அவ்வநுமானம் சுவார்த்தானுமானம் (தன் பொருட்டனுமா னம்) பரார்த்தானுமானம் (பிறர்பொருட்டனுமானம்) என்னும் வேறுபாட் டாலிருவகைத்து.

(1) தன்பொருட்டனுமானமாவது தனக்கனுமிதி ஞானம விளங்குதற் குக் காரணமாம்; வாக்கியப் பிரயோகமின்றி வியாத்திஞானமுதலியவறறால் எவ்வனுமிதி யுண்டாகின்றதோ அது சுவார்த்தானுமிதியாம்.

(2) பிறர் பொருட்டனுமானமாவது தானேபுகையால்வன்னியைஅனு மித்துப் பிறருணர்தற்பொருட்டு ஐவகை யுறுப்புடன் கூடிய வாக்கியத் தைக் கூறுவது.

ஐவகையுறுப்பாவன:—1. பிரதிஞ்ஞை (மலைவன்னியுடைத்து) 2-ஏது (புகையுடைமையால்), 3. திருஷ்டாந்தம் - (யாது யாது யுகையுடையது அது அது வன்னியுடையது அடுக்களைப்போல), 4. உபநயம் - (இதுவு மங்ஙனம்), 5. நிகமனம் - (ஆதலினிங்ஙனம்), (ஆதலால் மலைவன்னியுடை த்து) என்பனவாம்.

பிரதிஞ்ஞையாவது பட்சத்தைத் தணிபொருளுடையதாகக் கூறல்.

ஏதுவாவது இன் ஆன் உருபீறாக இலிங்கத்தை யெடுத்துக் காட்டு வது.

திருட்டாந்தமாவது ஏதுசாத்தியங்களின் உடனிகழ்ச்சியை யெடுத் துக்காட்டுவது. வாதிப் பிரதிவாதிகளுக்கு யாண்டுவிவாதமில்லையோ யாண் டு இருவராலும் நிச்சயிக்கப்பட்ட அருத்தமுளதோ அது திருஷ்டாந்த மெ னப்படும்.

உபநயமாவது பட்சதருமத்தன்மை யுணர்தற்பொருட்டுத் திருட்டாந் தத்தைச சார்த்திக் கூறுவது.

நிகமனமாவது முடிந்தது முடித்தல்; மறுதலையின்மைகாட்டல் முதலி யன நிகமனத்திற்குப்பயனும்.

இம்மை மறுமை யென்னும் இருமையிலும் உதவுதலால் அருளே 'துணை' என்றார். இவையிரண்டு பாட்டாலும் அருளினது சிறப்புச் சொல்லப் பட்டது.

(க-து). சமயங்கள் பலவும் அருளுடைமையைக் கொண்டா டுதலின், அதனையொருவன் நன்னெறிக்கண்நின்றுபெறக்கடவன்.

2. (Stand) in the goodpath, consider and be kind; although you may perfectly study the rules of many different (sects), kindness will be your best aid in the acquisiton of heavenly bliss.

3. சத்தப்பிரமாணம்.

மீமாட்சமதத்தில் சத்தம் நித்தியமாம்; மற்றவர் மதத்தில் சத்தம் குண மாம்; நியாயமதத்திலோ ஆகாயத்தின் குணமே சத்தமாம். இந்தச் சதத்தம் 1. தொனிவடிவம், (2) வர்ண (எழுத்தி) வடிவம் என்னும பேதத்தால் இருவகைத்தது.

பொருளுடைய வர்ணம் (எழுத்தி).அல்லது வர்ணசமுதாயம்பதமாம்; பதசமுதாயம் வாக்கியமாம். ஒன்றற்கொன்று சம்பந்ததோடு கூடிய சகல பதார்த்தங்களின் ஞானம, அல்லது சகலபதார்த்தங்களின் சம்பந்தவடிவ ஞானம் வாக்கியார்த்த ஞானமாம்.

வாக்கியார்த்த கோசர யதார்த்தஞானம் சாப்திப் பிரமையாம், சாப்தி ப்பிரமையின காரணம் சத்தப்பிரமாணமாம்.

பதத்திற்கும் (அதனுலறியப்படும) பொருளுக்குமுள்ள சம்பந்தம்விரு த்தி யெனப்படும். இந்த விருத்தி சக்தி விருத்தி, இலட்சணை விருத்தி யென்னும் பேதத்தா லிருவகைத்து.

சக்தியாவது பதத்தைக்கேட்பதனல் பதப்பொருளுணர்சியுண்டாகு மாறு செய்யும் பதத்திலுள்ள சாமர்த்தியமே பதசக்தியாம். கடபதத்தைக் கேட்பதனல் கடவடிவப்பொருளின் ஞான முண்டாகிறது; இதுவே கட பதத்தின் சத்தியாம். பதத்திறகும் அர்த்ததத்திற்குமுள்ள சாட்சாத் (நேர்) சமபந்தம சக்திவிருத்தியாம.

பதத்தின் சக்திவிருத்தியாலறியப்படும்பொருள் சக்தியமெனப்படும். சக்தியசம்பந்தம் இலக்ஷணையாம்; அல்லது பதத்திற்கு அர்த்தத்தோடுள்ள பாம்பரைச் சம்பந்தம லட்சணையாம்; அதனுலறியப்படும் பொருள் இலட்சி யமாம்.

கங்கையென்னும்பதத்தின் சக்தியமாகிய பிரவாகத்திற்குக் கரையோ டுள்ள சம்பந்தம் கங்கையென்னும் பதத்தின் இலட்சணையாம்; அதனுலறி யப்படுங் கங்கையின்கரை இலட்சியமாம்.

''அர்த்தவாசகம் பதம். அது முக்கியம் கௌணமென்னும் வேறு பாட்டாலிருவகைத்து. (1) எது சக்திவிருத்தியா லெப்பொருளே யறிவிக் கின்றதோ அஃதப் பொருளில் முக்கியமாம்; அது குதிரை குட முதலிய

பொருள்களே யறிவிப்பது குதிரை குட முதலிய பதமாதல் போல்வதாம். (2) வது இலட்சணை விருத்தியா லெப்பொருளே யறிவிக்கின்றதோ அஃ தப்பொருளில் கௌணமாகிய இலாக்ஷணிகமாம். அது கங்கையி லிடைச் சேரி யென்புழிக் கங்கை யென்னும் பதம் கரையை யறிவிப்பதாதல்போல் வதாம்." என்பது தருக்க கௌமுதி.

இச்சாப்த போதத்திற்கு அவாய்நிலே, தகுதி, தாற்பரியம், அண்மை என்னும் நான்கும் சககாரிகளாம். அவற்றுள்:—

அவாய்நிலேயாவது ஒரு பதார்த்தத்திற்கு வேறுபதார்த்தத்தோடு கொண்கூட்டு மெனர் வின்மையாம்.

தகுதியாவது ஒரு பதார்த்தத்திற்கு வேறு பதார்த்தத்தோடுள்ள சம்பந்தமாம்.

தாற்பரியமாவது கேட்பவனுக்கு இப்பதத்தால் இப்பொருளின் ஞான முண்டாகவேண்டுமென் றப்பதத்தைக் கூறுவோனது இச்சையாம்.

அண்மையாவது யோகிய பதங்களின் விருத்திரூப சம்பந்தத்தா லுண்டாகும் மறைப்பின்மிய பதார்த்தகங்களின் ஸ்திருதியாம்.

இச்சத்தம் விதி, நிஷேதம், அர்த்தவாதம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்தி.

அவற்றுள், விதிவாக்கியமாவது இதனைச்செய்க என்றுபுருஷனைப்பிர வர்த்திக்குமாறு செய்யும் வாக்கியமாம். ஜோதிஷ்டோமத்தால் ஸ்வர்க் ககாமன் யஜிக்க எனபது விதிவாக்கியமாம. ஜோதிஷ்டோம மென்னும் யாகம் ஸ்வாக்கரூப இஷ்டசாதனமாமென்பது பொருள். யஜிக்க என்னும் விதியால் இஷ்டசாதனத் தன்மை யடையப் படுதலாம.

நிஷேதவாக்கியமாவது நிவர்த்திபரமான வாக்கியமாம். அது மதுபா னம் செய்யற்க என்பதாம். மதுபானம் இஷ்டவிசேஷசாதன மன்மையா லென்க. இஷ்டவிசேஷமும் பாபத்தை யுண்டுபண்ணுமையேயாம்.

விதிநிஷேதங்களுக்கு வேறாய வாக்கியம் அர்த்தவாதவாக்கியமெனப் படும். அதுவும் பூதார்த்தவாதம் (வச்சிரஹஸ்தன் புரந்தரன்), குணர்த்தவா தம் (யக்கியகம்பம் ஆதித்தன்), அனுவாதார்த்தவாதம் (அக்கினி பனிக்கு மருந்து) என மூவகைத்தாம்.

இச்சத்தம் இலௌகிகம் வைதிகமெனனும் வேறுபாட்டா லிருவகைத்து. இலௌகிகவாக்கியங்களுள், ஆப்தனாற் சொல்லப்பட்ட சிலவே பிர மாணமாம்; வைதிகவாக்கியமோ பரமாப்தனாகிய பகவானாற் சொல்லப்பட் டமையின் முற்றும் பிரமாணமேயாம்.

4. உவமானப் பிரமாணம்.

உவமிதியறிவிற்குக் காரணம் உவமானப்பிரமாணமாம்.
உவமானமாவது சாதிரூபிய (ஒப்புமை) ஞானவடிவினதாம்.

சாதிருசியமாவது பேதத்தோடுகூடிய சமானதர்மமாம். முற்றுஞ் சமானதர்மமுள்ளவிடத்து உவமானம் சித்திப்பதின்று.

எங்ஙனம்:—கவயத்தையறியாத ஒரு நகரவாசி காட்டு வாசியினிடத்துக் கவயம்(காட்டுப்பசு) அலைதாடியின்றிய ஆ (பசு) போன்றிருக்குமென்னும் வாக்கியத்தைக்கேட்டு, அவ்வாக்கியார்த்தத்தை யனுபவித்து, காட்டிற்குச் சென்றபோது, அலைதாடியின்றிய ஆவையொத்த பிண்டத்தைக் கண்டு,அக்காட்டுவாசியினுடையவாக்கியார்த்தத்தைஸ்மரித்து அப்பிண்டத்தில் கவயபதத்தின் வாச்சியத்தன்மையை யறிகிறான். ஈண்டுக் கவயபதத்தின் வாசியத்தன்மையின் ஞானம் உவமிதியாம்; காட்டுவாசியின துவாக்கியார்த்தானுபவம் காரணமாம்; வாக்கியார்த்தத்தின ஸ்மிருதி வியாபாரமாம்.

சாதிருசிய ஞானத்தால் உவமிதியறிவுண்டாதல்போன்று விதர்ம ஞானத்தாலும்உவமிதியறிவுண்டாம்எங்ஙனம்:—காண்டாமிருகத்தையறியாத ஒருவன் காட்டுவாசியினிடத்து ஒட்டையின விலக்ஷண (வேறுபாடான) தாமமுடைய கொம்போடுகூடிய மூக்கினையுடையது காண்டாமிருகமென்னும் வாக்கியத்தைக் கேட்டு, அவ்வாக்கியார்த்தத்தை யனுபவித்துக் காட்டிற்குச் சென்ற காலத்து ஒட்டையின் விலக்ஷண தர்மமுடைய கொம்போடுகூடிய மூக்கினையுடைய பிண்டத்தைக் கண்டு, அக்காட்டுவாசியினுடைய வாக்கியார்த்தத்தை ஸ்மரித்து (ஊஹித்து), அப்பிண்டத்தில் காண்டாமிருக பதத்தின் வாசியத தன்மையையறிகிறான். ஈண்டுக் காட்டுவாசியினுடைய வாக்கியார்த்தானுபவம் காரணம்; வாக்கியார்த்தத்தின் ஸ்மரணம் வியாபாரம்; காண்டாமிருகபதத்தின் வாச்சியத்தன்மையின் ஞானம் உவமிதியாகிய பயனும்.

5. அருத்தாபத்திப்பிரமாணம்.

அருத்தாபத்திப் பிரமையின் காரணம் அருத்தாபத்திப் பிரமாணமாம். உபபாதக (இராப்போஜனத்தின்) கற்பனைக் கேதுவாகிய உபபாதநீய(பருமைத்தன்மையின்)ஞானம் அருத்தாபத்திப் பிரமாணமாம்; உபபாதக(இராப்போஜனத்தின்) ஞானம் அருத்தாபத்திப் பிரமையாம்.

அருத்தாபத்தி - (உபபாதக) வஸ்து. ஆபத்தியாவது - கற்பனையாம். ஆகவே, அருத்தாபத்தி யென்பது வியவஹாரப்பொருள் வஸ்து கற்பனையென்பதாம்.

எங்ஙனம்:—பருத்திருக்குந் தேவதத்தன் பகலுண்ணுவென்று காணுமிடத்தாவது, கேட்குமிடத்தாவது, வெயபகலி லுண்ணவில்லையோ அவனிரவிலு முண்ணுமிடத்தப் பருமை சம்பவியாதென்றுணர்ந்த பின்னர்ப் பருமைக்குக் காரணம் இராப்போஜனமென்று கற்பிக்கப்படுகிறது. இந்த இராப் போஜனத்தின் கற்பனை அருத்தாபத்திப் பிரமையாம்; இந்த இராப்போஜனத்தின் ஞானத்துக்கு ஏதுவாகிய பருமையின் ஞானம் அருத்தாபத்திப் பிரமாணமாம்.

இது திருஷ்ட (காண்டல்) அருத்தாபத்தி, சுருத (கேட்டல்) அருத்தாபத்தியென் றிருவகைத்தாம்.

(1) பகலுண்ணுதலனது பருமையைக் காண்டலாலுண்டாகும் இராப் போஜனத்தின் ஞானம் திருஷ்டாருத்தாபத்தியாம்.

(2) வீட்டிலில்லாத தேவதத்தன் ஜீவித்திருக்கிறானென்று கேட்குமிடத்து, வீட்டிற்குவெளியே தேவதத்தனது இருப்பின்றி வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் பொருந்தாதாகலின், வீட்டிற்கு வெளியே தேவதத்தனது இருப்புக் கற்பிக்கப்படுகிறது. வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் திருஷ்டமன்று; ஆனால் சுருதமாம். ஆகலின், இது சுருதார்த்தாபத்தியாம்.

6. அனுபலப்திப்பிரமாணம்.

உபலப்தி அல்லது உபலம்பம் என்பதற்கு ஞானம், அல்லது விளக்கம் என்பது பொருளாம்; ஆகவே, அனுபலப்திக்கு ஞானமின்மை, அல்லது விளக்கமின்மை யென்பது பொருளாம்.

அபாவப் பிரமையின் காரணம் அநுபலத்திப் பிரமாணமாம். அனுபலத்திப் பிரமாணத்தாலுண்டாகும் ஞானம் அபாவப்பிரமையாம். எங்ஙனம்:—வீடுமுதலியவிடத்துக் கடமுதலியன இல்லை யென்னும் ஞானமுண்டாகிறது. கடமில்லாதவிடத்துக் கடத்தின் தகுதியான விளக்கமின்மையால் அதன் அபாவஞானமுண்டாகின்றது. அதுவே, அபாவப் பிரமையாம். கடத்தின் ஞானமில்லாத புருஷனுக்குக் கடத்தினபாவ ஞானமுண்டாகாதாகலின், பிரதியோகியுணர்ச்சியின்றி யபாவ வுணர்ச்சியுண்டாகாதென்பதுநியமமாம். பிரதியோகியென்பது எதிர்மறையாம். கடத்தினபாவத்திற்கெதிர்மறை கடமாம். அக்கடமே பிரதியோகியாம். இவ்வாற்றால் விசேஷ்ய (விலக்கு) முஞானத்திற்கு விஷயமாவது, அல்லது சம்பந்த சாதிருசியங்கட்கு வேறுய பிரதியோகியினபேட்சை யோடுகூடிய ஞானத்திற்கு விஷயமாவது அபாவத்தினிலக்கணமாம். வீடு முதலிய விடத்துக் கடாபாவத்தை (கடத்தினில்லாமையை) யறியுமிடத்து, ஆண்டுக் கடத்தின் யோக்கியானுபலப்தி (தகுதியாயவிளக்கமின்மை) அனுபலத்திப் பிரமாணமெனவும், அதனாலுண்டாகுங் கடாபாவஞானம் அபாவப்பிரமை யெனவுமறிக.

இந்த அபாவம் சம்சர்க்காபாவம். அந்யோந்யாபாவமென இருவகைத்தாம். அந்யோந்யாபாவம் ஒன்றேபாம். சம்சர்க்காபாவம்: பிராகபாவம், பிரத்வம்சாபாவம், சாமயிகாபாவம், அத்யந்தாபாவமென நால்வகைத்தாம்.

(1) பிராகபாவம்-உற்பத்தியின்றி, நாசமுடைய அபாவமாம். எங்ஙனம் கடத்தின் பிராகபாவம், கடவுற்பத்திக்குமுன் கடத்தினுபாதான காரணமாய கபாலத்திலிருக்கின்றது; கபாலத்தினுற்பத்திக்கு முன்னும் கபாலத்தினுபாதான (முதல்) காரணத்திலிருக்கிறது. இவ்வாற்றால், கடத்தினுற்பத்திக்குமுன் கடத்திற்குக் காரணமாய பரமாணுசமுதாயத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது. பரமாணு கடங்களுக்கு இடையிலுள்ள தவி

யணுகமுதல் சபரிலமீரூயுள்ள சகல அவயவிகளின் பிராகபாவமும் அவற் றிணுற்பத்திக்குமுன் பரமாணுவின்க ணிருக்கின்றது. இவ்வாற்ரூல் அஃ தற்பத்தி யில்லாததாம். அது நாசமுடையதுமாம்; ஏனெனின், கடம் உற்பத்தியானதும் அதன் பிராகபாவ மிருப்பதின்று;கடவுற்பத்தியே பிரா கபாவத்தி னுசீமாம்.

(2) *பிரத்துவம்சாபாவம் - உற்பத்தியுடையதாய், நாச மில்லாததான அபாவமாம்,தண்டத்தால் கடநாசமுண்டாகும்போது அதன் பிரத்துவம்சா பாவ மூற்பத்தியாகிறது. அஃது அநந்தமா(நாசமில்லாதது)ம். ஏனெனின், ஒன்றன் துவம்சத்தின் துவம்சம் உண்டாதலில்லை. கடத்தின் துவம்சம் யாவருக்கும் அனுபவசித்தமாம். கடத்தின் துவம்சத்தின் துவம்சம் (அஃ தாவது அழிந்த கடத்தின் புனருற்பத்தி) ஒருவரானுபவத்திலில்லை. ஆத லால் பிரத்துவம்சாபாவம் உற்பத்தியுடையதாய், நாசமில்லாததாம்.*

(3) *சாமயிகாபாவம்-உற்பத்தியுடையதும் நாசமுடையதுமாயுள்ள அபா வமாம், எங்ஙனம்:—ஓரிடத்துள்ள கடம், மற்றோரிடத்திற்குக் கொண் டுபோன போது அவ்விடத்தில் அக்கடத்தின் அபாவ மூண்டாகின்றது. மீண்டுமவ்விடத்தி லக்கடத்தைக்கொண்டு வந்து வைத்தபோது அது நாச மாய் விடுகின்றது. இத்தன்மைய வபாவமே சாமயிகாபாவமாம்.*

(4) *அத்தியந்தாபாவம்—அநாதியநந்தவபாவமாம். வாயுவிலுருவ மின் றென்பது அத்தியந்தாபாவத்திற்குதாரணமாம். ஒருகாலத்திருந்து ஒரு காலத்திராத பதார்த்தத்திற்குற்பத்தி நாசங்கள் அமையும். என்று மில்லாத பதார்த்தத்திற்கு உற்பத்திநாசம் சொல்வது கூடாது. அத்தன்மையதே அத்தியந்தாபாவமாம். அநாதி - உற்பத்தியின்மை; அநந்தம்-நாசமின்மை.*

அத்தியந்தாபாவத்திற்கு வேறாய் உற்பத்தி நாசமில்லாத அபாவம் அந் நியோந்தியா பாவமாம். இது பேதமென்றும், பின்னத்தன்மை யென்றும், அதிரிக்கத்தன்மை யென்றும் சொல்லப்படும். எங்ஙனம்:-கடம்படமன்று என்று மிடத்தில் கடத்தில் படத்தினது அபேதம் நிஷேதிக்கப்படுகின் றது. கடத்தின் வேறாயதுபடமென்பது வாக்கியத்தின் பொருளாம். இவ் வாற்ரூல், அபேதத்தை நிஷேதிக்கும் அபாவம் அந்நியோந்தியாபாவமாம்.

அபாவங்களின் இலக்கணம் நியாயசித்தாந்தப்படி கூறப்பட்டது. இதற்கு மறுப்பு மூண்டு.

பரிமேலழகர் காட்சி முதலிய அளவைகளைச் சுருக்கமாகக் கூறினமை யின், அவ்வளவைகளை விளங்குமாறு ஒருவகையாக விரித்துக்கூறினும்.

கூ. அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்ன வுலகம் புகல்.

பரி.—(இ - ள்). இருள் செறிந்த துன்பவுலகத்துட் சேன்று புகுதல் அருள்செறிந்த நெஞ்சினை யுடையார்க்கில்லை, (எ - று).

இருள்செறிந்த துன்பவுலக மென்றது இணிந்த வீருளை யுடைத் தாய்த் தன்கட்புகுவார்க்குத் துன்பஞ் செயவதோர் நரகத்தை. அது கீழுல கத்துள் ஒரிடமாகலின் 'உலகம்' எனப்பட்டது.

தெளி.—(இ - ன்). இருள்சேர்ந்த—இருள் மிகுந்த, இன்னவுலகம் - துன்பவுலகத்தில், புகல் - (போய்ப்) புகுதல், அருள்சோந்த — அருள் மிகுந்த, நெஞ்சினர்க்கு - மனதினையுடையவர்க்கு, இல்லை —, (எ - று).

இருள்சேர்ந்த வின்ன வுலகமென்றது கெருவுகிய வீருளையுடைய தாய்த் தன்னிடத் தடைந்தவர்க்குச் துன்பஞ் செய்வதொரு தமப்பிரபை யென்னும் நரகத்தை. அதுகீழுலகத்தின் ஒரிடமாகலின 'உலகம்' என்று கூறப்பட்டது.

(க - து) அருளுடையார் நரகமடையா ரென்பது. (கூ)

3 They will never enter the world of darkness and wretchedness, whose minds are the abode of kindness

கூ. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

பரி.—(இ - ள்) நிலைபேறுடைய உயிர்களைப்பேணி அவற்றின் கண் அருளுடைய வொருவற்குத் தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகா வென்று சொல்லுவர் அறிந்தோர், (எ - று).

* உயிர்களெல்லாம் † நித்தமாகலின் 'மன்னுயிர்' என்றார். அஞ்சுதல்-

* உயிர்களெல்லாம் சித்தாயிருத்தல் பற்றி 'நித்தமாகலின்' என்று கூறினர். இது கந்தபுராணம் சூதசங்கிதை நித்தியவத்து விசாரமுரைத்த வத்தியாயத்தில் "ஒத்தசட மித்தியமல் லாதசித்துக் கனிதநியமவ்வுறு தலின்றே" என்றும், பாகவத புராணம் 11-வதஸ்கந்தத்தில் "அறிவினி லாக்கை மூன்று மசத்திய மென்று நீகண், நிறைவுறு மறிவு தானே நித் நிய மென்று தேர்வோர், பிறவிவெங் கடலே யொன்றார்" என்றும், கூறுவதனாலும நன்குணரப்படும்

உயிர்களெல்லாம் நித்தியம, சித்தாயிருத்தலின், யாது சித்து அது நித்தியம் ஈசுவரன்போல; யாது நித்தியமன்று அது சித்தன்று கடம்போல என்பதில் கனுமானமாம். இஃ தன்வய வியதிரேகி யனுமானமாம்.

† நித்தியம்-துவசம்சாபாவ அப்பிரதியோகி (முன்னின்மைக் கெதிர் மறையாகாமை); அசீதாவது நாசமின்றி யிருப்பது.

¶ துன்பநோக்கியஞ்சுதல் * அன்னவறத்தினேன் கொலைமுதலிய பாவங்கள் செய்யானெனவே, மறுமைக்கண் நரகம் புகாமைக் கேதுகூறியவாறும் பிற்று.

தெளி:—(இ - ன்). மன்னுயிர் - நிலைபேறுடைய உயிர்களே, ஓம்பி - பாதுகாத்து, அருளாள்வார்க்கு (அவ்வுயிர்களிடத்து) அருளுடையவனுயிருப் பவனுக்கு, தன்னுயிர்—தனது உயிர், அஞ்சும்-அஞ்சுதற்குக் காரணமாகிய, வினை - தீவினைகள, இல - உளடாகா, எனப - என்று (அறிந்தோர்) சொலலுவர், (எ - று)

உயிர்களெல்லாம் (சித்தாயிருப்பதுபற்றி) நிதியமாதலின் 'மன்னுயிர்' என்றார். அஞ்சுதல்-துன்பநோக்கிப் பயப்படுதல அப்படிப்பட்ட அறமுடையவன் கொலைமுதலிய பாவங்களைச செயயானெனவே, மறுமையிலவன் நரகமடையாமைக்குக காரணம் சொலலியவாருமிற்று.

(க - து) உயிர்களிடத்துக் கருணையுடையவன தீவினைகளைச செய்வதிலனென்பது.

4 The wise say that the evils, which his soul would dread will never come upon the man who exercises kindness and protects the life of other creatures.

ரு. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

பரி. -(இ - ள்) அருளுடையார்க்கு இம்மையினும் ஒரு துன்பம் உண்டாகாது; ‡ அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று, (எ - று).

† சான்றுவா - தாங்கண்டு தேறிய பொருளைக காணுதார்க்குத் தேற்றுதற்குரியவர். அருளாளவார்க கலலலுண்டாக ஒருகாலத்தும ஓரிடத்தும் ஒருவருங் கண்டறிவா ரின்மையின், ‡ இன்மை முகததான்

¶ தீவினையாலுண்டாகுந் துன்பதைதை கருதி அதி செயயப் பயபபடுதல்.

* அன்னவறத்தினேன் - மனனுயிரோம்பி யருளாளுமவ்வறத்தினையுடையவன்.

‡ அதற்கு - இம்மையிலும் ஒருதுன்பம உண்டாகாதெனபதற்கு.

† "பரஸ்பரம் வழக்கிடு மிருவரினும் வேறுய, அவ்விருவரது வழக்கைச் சாட்சாத்தாக (நேராக) வறிந் ததாசின (பட்சபாத மற்றவ)ரு மிருப் பவன் சாட்சியெனப் படுவான்" என்பது ததவாதுசதாதனம்.

‡ அருளுடையவர்களுக்குத் துன்பமுண்டாக ஒருகாலதனிலு மோரிடத்திலும் கண்டறிந்தாரொருவருமில்லை யென்பதனை யேதுவாகக்கொண்டு உலகத்தாரியாவரையுஞ் சாட்சியாகக் கொண்டாரென்க.

ஞாலத்தார் யாவரும் சான்றென்பார் § 'வளிவழங்கு மல்லன்மா ஞாலங்கரி' என்றார். ¶ எனவே, இம்மைக்கணென்பது பெற்றாம். ஞாலம் - ஆகு பெயர். இவை மூன்று பாட்டானும் ‖ அத்திணையுடையார்க்கு இருமை யினும் துன்பமில்லாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). அருளாள்வார்க்கு - அருளுடையவருக்கு, (மறு மையிலேயன்றி இம்மையிலும்), அல்லல் - ஒருதுன்பம், இல்லை - உண்டா காது, (அதற்கு), வளிவழங்கும் - காற்றுலாவுகின்ற, மல்லல் - வளப்பத்தை யுடைய, மா - பெரிய, ஞாலம் - பூமியில் வாழ்வோர், கரி - சாட்சியாவார்.

சாட்சியாவார் - தாம்கண்டு தெளித்தபொருளைக்காணுதவர்க்குத் தெளி வித்தற்கு உரியவர். அருளாள்வார்க்குத் துன்பமுண்டாக ஒருகாலத்திலும் ஒரிடத்திலும் ஒருவரும் கண்டறிவா ரில்லாமையால், இல்லாமை காரண மாக உலகத்தாரெவரும் சாட்சியாவாரென்பார் 'வளிவழங்கு மல்லன்மா ஞாலங்கரி' என்றார். எனவே, (சாட்சிபாதல்) இம்மையிலென்பது பெறப் பட்டது. ஞாலத்தாரை ஞாலமெனலால் அஃறிட வாகுபெயராம். இவை மூன்று பாட்டாலும் அவ்வருளாகிய திணையை யுடையவர்க்கு இம்மை மறுமை யென்னும் இருமையிலுந் துன்பமில்லாமை சொல்லப்பட்டது.

(க - து). அருளுடையார்க்கு இம்மையிலும் மறுமையிலும் துன்ப முண்டாவதில்லை என்பது.

5. This great rich earth, over which the wind blows, is a witness that sorrow never comes upon the kind-hearted.

கூ. பொருணீங்கிப் பொச்சாந்தா ரேன்ப ரருணீங்கி
யல்லலவை செய்தொழுகு வார்.

பரி:—(இ-ன்). உயிர்கண்மாட்டுச் செய்யப்படும் அருளைத்தவிர்ந்து தவிரப்படுங்கொடுமைகளைச் செய்தொழுகுவாரை முன்னும் உறுதிப்

§ வளி (காற்று) வழங்காத விடத்து மக்கள் வாழுத லின்மையின், 'வளிவழங்கு மல்லன்மாஞாலம்' என்று கூறப்பட்டது. காற்றில்லாத விட த்தி ஒருவரும் ஜீவித்திருத்தல் முடியாதென்பது "ஆதிநா யகனே கேட்டி யமரர்கோன் குலிசத் தாலே, காதலை யமைந்தன் காலன்வாய் வீழக் கண்டு, வாதரா யன்கோ பிக்க வயிறுகள் பெருஞ்சா லென்னப், பூதமெ ன்ன வீங்கிப் புரண்டனர் புவனத் துள்ளோர்" என்று இராமாயணம் உத்தரகாண்டத்துள் கூறுவதாலு மறியப்படும். வளிவழங்கு ஞாலத்தை இவ்வுலகமென்றது பிரசித்தமாயிருப்பதை நோக்கியாம்.

¶ எனவே - வளிவழங்கு ஞாலமெனவே.

‖ நாரத பரிவிராஜகோப நிஷத்து ஐந்தாம் உபதேசத்தில் "சர்வ பூதங்களும் பயப்படுதற் கேதுவாகாது சஞ்சரிக்கின்ற முனிக்குச் சர்வபூத ங்களாலும் ஒருபோதும் பயமுண்டாவ தில்லை" என்று கூறுகின்றது.

பொருளாச்செய்யாது தாம் துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர், (எ - று).

உறுதிப்பொருள் - அறம், துன்புறுதல் - பிறவித்துன்ப மூன்றினையும் அனுபவித்தல் † மறந்திலராயின், அவ்வாறுரூகா ரென்பது கருத்து.

தேவி:—(இ - ள்) அருளீங்கி - (உயிர்களிடத்துச் செய்யப்படும்) அருளே யொழித்து, அல்லவை - ஒழிக்கப்படுங் கொடுமைகளே, செய்தொழுகுவார் - செய்து நடப்பவரை, பொருளீங்கி - (முற்பிறப்பிலேயும்) உறுதிப்பொருளாகிய அறத்தைச்செய்யாது, பொச்சாந்தார் - (தாம் துன்பமடை கின்றமையை) மறந்தவர், என்பர் - என்று (நல்லோர்) சொல்லுவர்.

துன்பமடைதல் - தன்னைப் பற்றிவருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமாகிய பிறவித்துன்ப மூன்றையும் அனுபவித்தலாம். மறவாதிருந்தாராயின், அப்படி நடவாரென்பது கருத்து.

(க - து). உயிர்களிடத்தருளின்றித் தீங்கிழைப்பவர் தீவினையின்பயனை மறந்தவராவர் என்பது.

6. The wise say that, those, who neglect kindness and practice cruelties, neglected virtue in their former birth, and forgot the sorrows which they must suffer.

எ. அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

பரி:—(இ - ள்) உயிர்களிடமேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பம் இல்லை, பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயிருத்தல்போல, (எ - று).

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத் தின்பங்கட்குப் பொருள் காரணமாதல்போல, அவ்வுலகத்தின்பங்கட்கு அருள் காரணமென்பதாயிற்று.

தேவி:—(இ - ள்). பொருளில்லார்க்கு - பொருளில்லாதவர்க்கு, இவ்வுலகம்-இவ்வுலகத்தின்பம், இல்லாகியாங்கு - இல்லையாயிருத்தல்போல, அருளில்லார்க்கு - (உயிர்களின்மேல்) அருளில்லாதவர்க்கு, அவ்வுலகம் - முத்தியுலகத்தின்பம், இல்லை-இல்லையாம், (எ - று).

அவ்வுலகம் இவ்வுலகமென்பன ஆண்டுள்ள இன்பங்களுக் காதலின், இடவாகுபெயர்களாம்.இவ்வுலக வின்பத்தை யடைதற்குப் பொருள் காரண

† தாம் பிறவித்துன்பங்களால் வருத்துகின்றதை மறவாதவராயின், உயிர்களிடத்துச் செய்யப்படும் அருளே ஒழித்து, பற்றற வொழிக்கப்படுவனவாகிய கொடுமைகளைச்செய்து நடக்காரென்பது கருத்தாமென்க.

மானுத்போன்று அந்த வுலக வின்பத்தை யடைதற்கு ' அருள் காரணமா மென்பதாயிற்று.

(க - து). பொருளில்லாதவர்க்கு இவ்வுலகத்தின்பமும் அருளில்லாதவர்க்கு முத்தி யுலகத்தின்பமுமில்லை என்பது.

7. As this world is not for those who are without wealth, so, that world is not for those who are without kindness.

அ. பொருளற்றூர் பூப்ப ரொருகா லருளற்று
றற்றூர்மற் றூத லரிது.

பரி:—(இ - ள்). † ஊழான் வறியராயினூர் அது நீங்கிப் பின் னொருகாலத்துச் செல்வத்தாம் பொலிவர்; ‡ அவ்வாறன்றி, அருளி லாதார் பாவம் அறுமையின் அழிதீதாரே, பின்னொருகாலத்தும் ¶ ஆத லில்லை, (எ - று).

$ மற்று - வினைமாற்றின்கண் வந்தது. மேற் பொருளின்மை யோடு ஒருவாற்றான் ஒப்புமை கூறினராகலின், அது மறுத்துப் பிறவாற் றான் அதனினும் கொடிதென்பது கூறியவாறு.

தெளி:—(இ - ள்). பொருளற்றூர் - (போகூழினால்) வறுமை யடை ந்தவர், (அவ்வறுமைநீங்கி), ஒருகால் - (பின்) ஒருகாலத்தில், (ஆகூழி னால்), பூப்பர்-(செல்வத்தினால்) வினங்குவார், (அப்படியல்லாமல்), அருளற்

† ஊழ் - நல்வினையின்பயனுகிய இன்பமும் தீவினையின் பயனுகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைவதற்குக்காரண மாகிய தியதி.

‡ அவ்வாறன்றி - ஊழினாலே தரித்திரராயினூர் அத்தரித்திரம் நீங்கிப் பின்பொருகாலத்தில் செல்வமுடையவராவதுபோ லல்லாமல்.

¶ பாவம்நீங்கி யருட்செல்வ முடையவ ராகுத லில்லை.

$ அற்றூர் என்னும் வினையை மாற்றி அருமையின் என்னும் பொரு ளைத் தந்தமையின் மற்று வினைமாற்றுயிற்று.

மேல்(அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க், இவ்வுலக மில்லாகியாங்கு என்னும் குறளில்) பொருளில்லாமையோடு அருளில்லா மையை யொருவகையால் உவமை கூறினராதலால் (இக்குறளில்) அது மறுத்து (பொருளில்லாமையோடு அருளில்லாமையை யொப்புச் கூறி யதைமறுத்து) பிறவாற்றான் (வேறொருவழியினால் அஃதாவது ஊழினால் தரித்திராயினூர் அத்தரித்திரம் நீங்கிப் பின்பொரு காலத்தில் செல்வ முடையவராவர்; அருளில்லாதவர் பாவம் ஒழியாமையின் அழிந்தவரே; பின்னொருகாலத்தும் விருத்தி யடைவதில்லை யென்பதனால்) பொருளில் லாமையினும் அருளில்லாமை கொடியதென்றுகூறியவிதமாமென்க.

ஈரி - அருளில்லாதவர்; (பாவம்நிச்சயமாய்); அறிஞர் - அழிக்கமாட்டார்கள், மற்று - பின்னொரு காலத்திலும், ஆதலரிது - (அருட்செல்வ முடையவர்) ஆதலில்லை; (எ - து).

மற்று - வினைமாற்றுப் பொருளது. முன்னுள்ள குறளில் பொருளில் லாமையோடு அருளில்லாமையை ஒருவிதத்தால் ஒப்பாக்கிச் சொன்னாதலால், அதனை மறுத்து இக்குறளில் மற்றொரு விதத்திலுள அப்பொருளில்லாமையினும் அருளில்லாமை கொடிய தென்பது சொலலிய வாறும்.

(க - து). அருளில்லாதவர் எக்காலத்தும் மேம்பாடுறுவதில்லை என்பது.

8 Those who are without wealth may, at some future time, become prosperous; those who are destitute of kindness are utterly destitute; for them there is no change.

க. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றுற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

பரி.—(இ - ள்). உயிர்க்கண்மாட்டு அருள் செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின், ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை யுணர்ந்தாற் போலும், (எ - று)

மெய்ப்பொருள் - மெய்ந்நூலிற் சொல்லும பொருள் † நிலைபெறுதற் ஞானமிலலாதவன இடையே மெயப்பொருளை உணர்ந்தால், அதனைத் தன ஞானம் இன்மையாற றானே அழித்தலிமை. அதுபோல, அருளா தான் இடையே அறஞ்செயதால் அதனைத் தனனருளாமையாற் றானே அழித்து விடுமென்பதாயிற்று; ஆகலே, பிறவறங்கட் கெலலாம் அருளுடைமை மூலமென்பதூ பெற்றும். இவை நான்குபாட்டானும் அறி தணையில்லாதார்கு வருங்குற்றங கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). அருளாதான் - (உயிர்களிடதது) அருள்செய் யாதவன், செயயும் - செய்கின்ற, அறம்-அறத்தை, தேரின் - ஆயின், தெருளாதான் - ஞானமில்லாதவன, மெயப்பொருள் - மெய்ந்நூலிற் சொ ல்லும் பொருளை, கண்டற்று - (ஒருகால்) அறிதாறபோலும, (எ - று).

ஆல் - அசை. நிலைபெற்ற ஞானமில்லாதவன் றானே மெய்ப்பெருளை யறிந்தால், அதனைத் தன்னிடத்தில் ஞானமில்லாமையால் தானே அழிதீதி விடுவான்; அதுபோல அருளில்லாதவன் றானே அதஞ்செய்தால் அதனைத தன்னிலைதி தருளில்லாமையால் தானே அழித்துவிடுமா ணென்பதாயிறற; ஆகலே, மற்றெல்லா வறங்களுக்கும் அருளுடைமை காரணமென்பதூ பெறப்பட்டது. இவை கான்குபாட்டாலும் அவ்வருளாகிய தணையில்லாத வர்க்கு வரும் குற்றஞ் சொல்லப்பட்டது.

† நிலைபெற்ற ஞானம் - சத்குரு சூரி தரிபினிடத்திப் பலமுறறி தீதி தவ விசாரஞ் செய்ததனு லுண்டாகிய ஐயந் திரிபின்றிய ஞானம்.

(க - து). அருளில்லாதவன் செய்யும் அறம் அறமாவதில்லை.

9. If you consider the virtue of him who is without kindness it is like the perception of the true being by him who is without wisdom.

கo. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

பரி:—(இ - ள்). தன்னின்வலியார் தன்னை நலிய வரும்போது அவர்முன் தானஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க; அருளில்லாதவன் தன்னின் எளியார்மேல் தான் நலியச் செல்லும் பொழுது, (எ - று).

மெலியா ரெனை சிறப்புடைய உயர்திணைமேற் கூறினுராயினுர், ஏனை யஃறிணையுங் () கொள்ளப்படும். † அதனை நினைக்கவே, ‡ இவ் வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாமென்றறிந்து, அதன்மேல் அருளுடை யனு மென்பது கருத்து. இதனால அருள் பிறத்தற் குபாயங் கூறப்பட் டது

தெளி:—(இ - ள்) (அருளில்லாதவன்) தன்னின் மெலியார்மேல் - தன்னிலுமெளியாரிடத்து. தான்—,செல்லுமிடத்து - (வருத்துவதற்குச்) செல்லும்பொழுது, வலியார் - (தன்னிலும்) வலியவர், (தன்னைவருத்துவ தற்கு வரும்போது), முன் - (அவர்) முன், தனை - (அஞ்சிற்கும்) தனதுநிலையை, நினைக்க - நினைக்கக்கடவன (எ - று).

மெலியாரெனறு சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினு ராயினும், ஏனைய அஃறிணையுயிர்களுங் கொள்ளப்படும். அதனை நினைக்க வே, இருதவுயிருக்கும் அப்படியே அச்சமுண்டாகு மென்றறிந்து, அவ்வுயி ரின்மீது அருளுடையவனுவா னெனபது கருத்து. இதனுல் அருள்பிறப் பதற்கு உபாயஞ் சொல்லப்பட்டது.

(க - து). தன்னிலும் வலியவர் தன்னைவருத்த வரும்போது தானிருக்கும் நிலைமையை பெண்ணுகின்றவன் தன்னிலும் மெலி யவரை வருத்தாதல் செய்யான் என்பது.

---


* ஏனை யஃறிணை யெனபன, இப்பு, சவகு, கறையான், எறும்பு, திம்பி, வண்டு, பறவை, ஆடு, மாடு முதலியனவாம்.

() இவ்வாறு கொள்ளுதல் உபலட்சணமாம்.

† அதனை நினைக்கவே - தன்னைப் பார்க்கிலும் வலியவர் தன்னை வரு த்த வரும்போது அவவலியவர் முனபு தான்பயந்து நிற்கும் நிலைமையை நினைக்கவே.

‡ இவவுயிர்க்கும் அவ்வாறே யச்சமாமென் றறிந்து - நாம் வருத்தப் புகு மிப்பிராணிக்கும் நம்மிலும் வலியவர் முன்னர் நாம் பயந்ததுபோலப் பயமுண்டாகு மென்று தெரிகது.

10. When a man is about to rush upon those who are weaker than himself, let him remember how he has stood (trembling) before those who are stronger than himself.



இரண்டாவது அதிகாரம்.

புலான்மறுத்தல்:—*Abstinence from flesh.*

பரி:—அஃதாவது ஊனுண்டலே யொழிதல். ¶ கொலைப்பாவத் தைப்பிரீனும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனுன் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்கு மடத்தாய ஊனுண் டல் அருளுடையார்க் கியைவதன்றுகலின்: அதனை விலக்குதற்கு, இஃ தருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது ஊனுணலுதலை யொழிதலாம். கொலைப் பாவத்தைப் பின்னும் உண்டாக்கலால் அக்கொலைப் பாவத்திற்குக் காரண மாதலையும், முன்னும் அக்கொலைப்பாவத்தால் வருவதால் அக்கொலைப் பாவத்தின் காரியமாதலையும் ஒரு சேர டையதாகிய ஊனுண்ணுதல் அருளுடையார்க்குப் பொருந்துவது அன்றுகலின், அதனை விலக்குவதற்கு, இப்புலானமறுத்தல் அருளுடைமையின் பின் வைக்கப்பட்டது.

க. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

பரி:—(இ - ள்) தன்னுடம்பை வளர்த்தற் பொருட்டுத் தான் பிறி தோருயிரின் உடம்பைத் தின்பவன் எவ்வகையான் நடத்தும் அருளினை.

‡ பயனிலாத ஊண் பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொலைமை

¶ பிராணிகளைக் கொல்லுவதா லுண்டாகும் பாவத்தை (மாமிசமுண் டல்) பின்னும் உண்டாக்குவதனால் அக்கொலைப் பாவத்திற்குக் காரண மாயிருத்தலையும், முன்னும் (மாமிசமுண்டல்) பிராணிகளைக் கொல்லுவதா லுண்டாதலால் அக்கொலையின் காரியமாயிருத்தலையும் ஒருமித்துடை யதாயிருக்கின்ற மாமிசம் புசித்தல் அருளுடையவர்களுக்குப் பொருந்துவ தல்லாமையாலும், அம்மாமிசம் புசித்தலை நீக்குவதற்கு இப்புலான் மறுத்த லென்னு மதிகாரம் அருளுடைமையெனு மதிகாரத்தின் பின் வைக்கப் பட்டதென்க. இவ்வதாரிகையால் ஒருவன் மாமிசம் புசித்தல் பல பிராணிகளைக் கொல்லுவதற்குக் காரணமாயும், பலபிராணிகளைக் கொன்ற தன் காரியமாயு மிருக்கின்றதெனபது நன்கு விளக்கமாயிற்று.

‡ பயன்படுதலில்லாத உடலைப் பெருகச்செய்தலைப் பயன் (பிரயோ ஜனம்) என்றெண்ணி மாமிசம் புசித்தலாகிய இக்கொடிய காரியத்தைச் செய்வோனே அறிவில்லாத துஷ்டனென்றுமியற்று. இதனால் துறவறத் தான் மோட்சமடைதற்கு சோ்சாதனமான ஞானத்தைப் பெறுவதற்கே

செல்வரையே அறிவிலாத தொடியோ னென்றலா குய்த்து. 'எவ்வுயி ராருருவும்' என்பது ஆராய்ச்சியுள்ளத்தை இதழ்ச்சித் குறிப்பு.

தெளி:—(இ - ள்) தன்னூன் - தன்னுடம்பை, பெருக்கற்கு வளர்த்தற்பொருட்டு, தான் —, பிறிதூன் - மற்றொரு பிராணியினுடம்பை, உணபான - நிகழ்பவன், எவ்வநம - எவ்வகையால், அருள் - அருளாகும் - ஆகுவான் (எ - து).

பயனில்லாத உடலை வளர்த்தலைப் புயனென்று கூறினார் (பிறிதினூன்றும்) இக்கொடுமையுடைய செய்வோனை அறிவில்லாத கொடியோனென்றலாகாதென்பதை இதழ்ச்சிதருகுறிப்புக் கொள்.

(க - து). புலாலுண்பவன் அருளுடையவனாகான் என்பது.

1. How can he be possessed of kindness, who to increase his own flesh, eats the flesh of other (creatures).

---

2. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யவாவில்லை யூன்றின் பவர்க்கு.

பதி.—(இ-ள்). பொருளாற்பயன் கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை, அதுபோல, அருளாற்பயன்கோடல் ஊன்றின்புவர்க்கில்லை, (எ-று).

ஒரு புண்ணை விரைவிலே யணைவடிதலாலே விட்டு உடல்பெருகுமாறு முயற்சி புரிந்தாலும், பயனில்லாத காரியமாமென்பது பெற்றாம். இறைவரது தான் உடல் பெருகச் செய்பவராகாதெனபது மனுதர்மசாஸ்திரம் 6 ம் அத்தியாயத்தில் " (வானப்பிரஸ்தன்) காயமிழைக்கு முதலியன வகப்படாவிட்டாலும் வானப்பிரஸ்த பிராமணர்களிடத்திலும் அவர்களில்லாவிட்டாலும் வனவாசஞ் செய்கின்ற திருகஸ்தர்களிடத்திலும், தன்பிராணாதாரத்திற்கு ஒப்பிய போகமான வனவு பிட்சையெடுத்தல் கொள்ளல் வேண்டும் " என்று கூறுவதாலுமுணரப்படும். மேலும், ஷை நூருமதாஸ்திரம் ஐந்தாவது ஆத்தியாயத்தில் "எவன் *மற்றொன்றன் மாமிசத்தினாலே தன்மாமிசத்தையதிர்த்திசெய்ய விரும்பினானோ அவனிலும் பாவி யிந்த வுலகத்திலொருவனு மிலனே" என்பது கூறுவது மிங்குறியத்தக்கதாகும்.

* 'எவ்வனமாருருவும்' என்பதில் எவ்வன மென்றும்வினு எதிர்மறைக்கண் நின்றலையின், ஆரும் என்பது ஆரான் என்றும் பொருளுணர்த்தினிற்கு. ஆனால்த்தலே, ஊன் ஊன்பதன் ஆருள் ஆருஞ் என்பது 'புலாலுண் நீரே பல்லான் நீரே, கயன்மூன் னுண்ணு நாமுமிர் நிலாகலுட், பயனில் பூப்பிற் பல்லான் நீரே" என்று புறநானூறு கூறுவதை யோகு நோக்கிச் சிறிப்புரைக்க.

பொருட்பயன் இழக்கத்திற்குக் காரணம் காலமை போல, அருட்பயன் இழத்தற்கு ஊன் தினல் காரணமென்ப தாயிற்று. ‡ ஊன் தின்னாரி ஐம் உயிர்கட்கு ஒரு தீங்கு தினையாதார்க்கு அருளாட்டம் பிழக்கில்லை யென்பாரை மறுத்து, அஃ தண்டென்பது இவை யிரண்டிற்கும் ஒப்பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). பொருளாட்சி - பொருளினைப் பயன் கொள்ளுதல், போற்றுதார்க்கு - (அப்பொருளைக்) காப்பாற்றுதலருக்கு, இல்லை—, ஆங்கு—அதுபோல, அருளாட்சி - அருளினைப் பயன கொள்ளுதல், ஊன் தின்பவர்க்கு - மாமிசம் புசிப்பவருக்கு, இல்லை—,(எ - று).

பொருட்பயனை இழத்தற்குக்காரணம் அப்பொருளைக் காப்பாற்றுமை போல அருட்பயனை இழத்தற்கு மாமிசம் புசித்தல் காரணமென்பதாயிற்று. மாமிசம் புசித்தாராயினும் உயிர்களுக்கு ஒரு தீங்கு நினையாதவர்க்கு அருளை யாளுதற்குக்குறைவில்லை யென்பாரை மறுத்து, அக்குறை யுண்டென்பது இவை இரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து). அருளாலாம் பயனை ஊனுண்பவரடையார்களன்பது.

2. As those possess no property who do not take care of it, so those possess no kindness who feed on flesh.

கூ. பதைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா தோன்ற
னூடலகவை யுண்டார் மனம்.

பரி.—(இ - ள்). கோலைக்கருவியைத் தங்கையில் கொண்டவர் மனம் அதனாற்செய்யுங் கோலையையே நோக்குவதல்லது அருளை நோக்கு காதவாறுபோல, † பிறிதோருயிரின் உடலைச் சுவைபட வுண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது, (எ - று.)

சுவைபடவுண்டல் - ¶ காயங்களான் இனியகவைத்தாக்கி யுண்டல்.

‡ மாமிசம் புசித்தாரானாலும் பிராணிகளுக்கு ஒருகெடுதி யெண்ணுதவர்களுக்கு அருளையாளுதற்குக் குறைவில்லையென்று கூறும் புத்தர் மூதலியோரை மறுத்து மாமிசம் புசிப்போரானது (பிராணிகளைக் காப்பதாகிய அருளான தில்லாமையினால்) பிராணிகளுக்குத் தீங்கெண்ணுவதாகியதும்முண்டென்பதாம். "அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி, யிம்மா னுடலெல்லா மின்புற் றிருக்கின்ற, தம்மா வெனுஞ்சத்தஞ் கேட்டன்ற மாதவர்க்கும், பொய்ம்மா தியமென்றும் புசித்தவர்க்கென் சோல்லுவதே" என்பது சிவஞானவள்ளலார்.

† (ஆடு முதலிய) பிராணிகளின் மாமிசத்தை யுண்டவரது மனத்தின்கண் தாமதகுணவிருத்தி யதிகரித்தலின், அம்மனதானது சத்துவ குண விருத்தியின்பருதியதான அருளை நோக்குதல் கூடாதாயிற்று.

¶ மாமிசத்தை மிளகு, உப்பு, வெங்காயம் முதலிய வேறுபொருள்களால் உருசி யுண்டாகச் சமைத்துண்ணுதல்.

இதனுள் ஊன் தின்றார் மனம் தீங்கு நினைத்தல் உவம வளவையாற் சாதித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

தெளி.—(இ - ன்.) ஒன்றன் - பிறிதோருயிரினது, உடல் - உடலை, சுவையுண்டார் - சுவைபடவுண்டவரது, மனம் - மனமானது, படை கொண்டார் - கொலைக்கருவியை (தங்கையில்) கொண்டவரது, நெஞ்சம் போல் - மனம் (அக்கருவியாற் செய்புங் கொலைத்தொழிலையே நோக்குவ தல்லாமல் அருளை நோக்காதவாறு) போல, நன்றாக்காது - (அவ்வூணையே நோக்குவதல்லாமல்) அருளைநோக்காது, (எ - று).

சுவைபடவுண்டல் - பிறிதோருயிரினுடலைக் காயங்களால் இனியசு வையுடையதாகச் சமைத்து உண்டல். படை - வாள்முதலானவை. இத னுள் ஊன்தின்றவரது மனம் தீங்குநினைத்தலை 'படைகொண்டார் நெஞ்சம் போல்' என்னும் உவமானப் பிரமாணத்தினுள் சாதித்து முற்செய்யுளிற் சொல்லியது உறுதி செய்யப்பட்டது.

(க-து). புலால் புசிப்பவரதுமனம் அருளை நாடுவதில்லை.

3. Like the (murderous) mind of him who carries a weapon in his hand, the mind of him who feasts with pleasure on the body of another creature, has no regard for goodness.

ச. † அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

பரி.—(இ - ள்). அருள் யாதெனிற் கொல்லாமை; அருளல்ல தியாதெனிற் கோறல்; பூகலான், அக்கோறலான் வந்த ஊனைத்தின் கைபாவம், (எ - று).

‡ உபசாரவழக்காற் கொல்லாமை, கோறலாகிய காரியங்களை அருள் அல்லதெனக் காரணக்களாக்கியும், ஊன தின்கையாகிய காரணத்தைப்

† 'அருளல்ல தியாதெனிற் கொல்லாமைகோறல்' என்பது முறை நிரனிறைப் பொருள்கோளாய் அருள் கொல்லாமை அல்லது கோறல் என்றிவைந்து நின்றது. யாதெனின் என்னும்வினை கடைநிலைத்தீவகமாய் நின்று அருளென்பதனிஞ்சென்றியைந்து நின்றது.

‡ ஒன்றன் றன்மையை மற்றொன்மே லேற்றிக் கூறுவதாகிய உப சாரவழக்கால் அருள் காரணமாக உண்டாகும் கொல்லாமையாகிய காரியத் தையும் அருளில்லாமை காரணமாக உண்டாகும் கொல்லுதலாகிய காரி யத்தையும் கொல்லாமை அருள் கோறல் அருளல்லது (அருளில்லாமை) என்று காரணக்களாக்கியும், (பாவமாகிய காரியமுண்டாவதற்கு உரியதா யுள்ள) மாமிசம் புசித்தலாகிய காரணத்தை ஊன்றினல் பொருளல்லது என்று காரியமாக்கியும் சொன்னுரென்க. இக்குக் கூறிய விரண்டனுள், முன்னது காரியம் காரணமாக வந்த வுபசாரவழக்கு; பின்னது காரணம் காரியமாகவந்த வுபசாரவழக்கு

† பொருளல்லதெனக் காரியமாக்கியுங கூறினர். அருளல்லது கொடுமை, சிறப்புப்பற்றி § அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்ல தெனப்பட்டது. ¶ கோறலென முன்னின்றமையின் 'அவ்வூன்' என்றார். § இனி யிதனை யிவ்வாறன்றி 'அருளல்லது' என்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறலென்பதற்குக் கொல்லாமை யென்னும விரதத்தை யழித்தலென் றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) அருள்-அநுகூலமானது, யாதினின்-எதுவென் றால், கொல்லாமை - கொலை செயாமையாம், (அது) அல்லது - அருளல்லாததென்பது, யாதினின் - எதுவென்றால், கோறல் - கொல்லுதலாம், (ஆதலால்), அவ்வூன் - அக்கொல்லுதலாலவதரிக்கப்பட்ட மாமிசத்தை தினல் - தின்னுதல், பொருளல்லது - அறனல்லாததாம் [பாவமாம்] (எ - று).

உபசாரவழக்குப்பற்றிக் கொல்லாமையாகிய காரியத்தை அருளென்றும், கொல்லுதலாகிய காரியத்தை அல்லதென்றும் காரணகாரணத்தினும், ஊன் தின்னுதலாகிய காரணத்தைப் பொருளல்லதெனக் காரியமாகவும், கூறினர். அருளல்லது—கொடுஞ்செயல், சிறப்புப்பற்றி அறமும் பொருளெனப் படுதலால், பாவம் பொருளல்லது என்று கூறப்பட்டது. கோறலெனமுன்னிருக்கின்றமையின (கொல்லுதலால் வந்த)'அவ்வூன்'எனறார்.

(க-து). மாமிச முண்ணுதல் பாவ ஹேதுவா யிருத்தலின், அதனை யருந்தடையைபா லொழிதல் வேண்டு மென்பதாம்.

4. Is it asked what is kindness and its opposite? It is the preservation of life, and its destruction. Therefore it is not right to eat that flesh, from which life has been taken away.

† பாவமென்றும் பாடமுண்டு.

§ அறம் (தருமம்) எனபதி குணமாயிருக்க, அதனைப் பொருளென்று கூறுதல் ஆகாது இம்மைப்பயன் மறுமைப்பயன் வீடு என்னும் மூன்றையுந் தரும் சிறப்புப்பற்றியாம். வைசேடிகர் குணமுதலியவற்றையும் பொருளென்பர். அருளுடைமையை ஆறாவது குறளில் அறத்தைப் பொருளென்று கூறிய நுண்பொருளைக் காண்க.

¶ கோறல் என்று முன்னடியில் நின்றமையின், அதனை அகரச் சுட்டால் குறிப்பித்து 'அவ்வூன்' என்று கூறினாரென்க.

§ இனி இக்குறளை யிப்படியல்லாமல் 'அருளல்லது' என்பதனை யொன்றாகக் கொண்டு கொல்லாமை கோறல் எனபதற்குக் கொல்லாமை யென்னும்விரதத்தை யழித்தலென்று பொருள் கூறுவாருமுளரென்பது. (அஃதாவது அருளில்லாமையாவது கொல்லாமை யெனனும் விரதத்தை யழித்தலென்பதாம்). இலக்கணக்கொத்தில் "செயா விருவினை செய்வினை யாகி" என்பதனுரையில் "வில்லக்கன வற்றைச் செயாமையே கல்வினைசெய்தல்" என்பதற்கு "அறவினையாதனிற் கொல்லாமை" என்று கூறியதுமிங்கறியத்தக்கதாம். (அருளல்லது என்பதன் பொருள் கருணைப் பண்பில்லாதது என்பது)

இ. * உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ணல்
வண்ணத்தல் செய்யா தளறு.

பரி.—(இ - ன்). † ஒருசாருயிர் உடம்பினின்றும் நீங்கல் வேறு ஊன்மையென்கின்ற அறத்தின்கண்ணது; ஆதலான், ‡ அந்நிலை தூலைய ஒருவன் அதனையுண்ணுமையின், அவனே விழுங்கிய நீரையும் மீன் உமிழ்ந்து அங்காவாதுந் (எ - று).

உண்ணப்படும் விலங்குகள் அதனைத் நேய்த்து லெவாக வுனைய பல வாய் வருதலின் 'உண்ணுமை யுள்ள துயிர் நிலை' எனவுரை, உண்ணினென் பதற் உண்ணவெனத் திரிக்துரின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்தில் அழுந்த வேண்டுமாதம். ¶ கொலைப்பாவம் சொன் னார் மேல் நிற்றலின், பின் ஊனுண்பாக்குப்பாவமில்லை யென்பாரை மறு த்து, அஃதுண்டென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

தேனீ.—(இ - ன்). உயிர் ‡ (லெவகை) உயிர்கள், நிலை - (உடம்பினி லுற்றே) நிற்றல், ஊன் † மாமிசத்தின்த, உண்ணுமையுள்ளி தி-உண் ணுங்கால் வெளிகின்ற அறத்தினிடத்தது, (ஆதலால்), உண்ண் - (தாம்கொருவரை ஒரு வன் அம்மாமிசதனை) உண்பானாயின், அளறு - (அவனும்முழுகிய) நரக மானது, அண்ணுதல் செய்யாது - (பன் உமிழ்ச்சற்கு) வாய்திறவாது. ()

இகருதல் நன்னூல் விருத்தி யுரையில தாப்பிசைப் பொருள் கோளிற்கு உதாரணமாக எடுகப்பட்டிருக்கிறது. தாப்பிசைப்பொருள் கோளிர்வது இடைகின்ற மொழி இயைபாய முன்னும் பின்னும்கின்ற மொழிகளோடு கூடுதலாம். 'உண்ணுமை' எனு மிக்குறளில் இவ்ட கின்றமொழி ஊன் என்பது அஃது உண்ணுகை யென்பதேனும் உண் ண என்பதனோடேக் கூடி வருவதுணர்க.

† ஒருசாருயிர் - நின்பதற் குரியவாகாத பிராணிகள்.

‡ அவ்விலெருவை - உயிர் உடம்பினிடத்து நிற்கும் நிலைகளை.

¶ "நின்னுமதி குற்றமிலே செத்தநெறும் புத்தா நின்பையெனக் கொன்றனக்குத நிற்றினர்க்குப் பாவ, மன்னுவதன் காரணத்தாற் றீன் ஞரர்க்கு வகைத்தொன்றி ரீடாண்மையிஞல் வகைத்த திவர்க்கே பாவ, மெ ன்னிலுனே யூட்டினர்க்குப் பாவஞ்சேர வென்னதவம் புரிகின்ரும் புலால் வகைப் டெரியோ, வன்னுடல ககையென ஈனி வேற்று ருடலுன்னி யவை யெனைவர்க்கிலேகை வியே" என்று வெளாளசித்தி கடதரிசி; மனுதரும சாஸ்திரம் ஐந்தாவது அத்தியாயத்தில் "பிரோஷிதோ மெற்ற செய்யம் எட்டினே யிலேறவன், அவசரச்செய்திவன், பிரிதிரைத் பற்றித் தெரிகிறவன், அனுமதிற்றவன், அதை வாங்குகிறவன், அதற்ச் சம்பந் திதவன், பரிமாறுகிறவன், புசிக்கிறவன், ஆகிய வின்னினேவரும் சாத்தி யமென்று சொல்லப்படுகிறார்கள்" என்று கூறியதும்; நின்மனிஷ்டத்தில் "அவசியம் பிரி தினை யாக்கலும் குற்றம், விலக்காயிற் சோமபானம் பிரசாதமும் குற்றம்" என்று கூறுவது மிக்கே அறிந்தி நக்கலாகி.

உண்ணப்படுகிற விலங்குகள் உண்ணும் அதனைக் குறைத்து சில வாக மற்றையவிலங்குகள் பலவாக விருத்தியடைந்துவருதலால் 'உண்ணுமையுள்ளதுயிர்க்கிலே' என்றார். உண்ணல் என்பது உண்ணினென்பதன் விகாரம். மாமிசமுண்டவன் மாமிசமுண்ணும் அப்பாவத்தினால் நெடுங்காலம் நரகத்தில் அழுந்துவானென்பதாம். கொலைப்பாவம் கொன்றவர்மேல் நிற்றலால், பின் மாமிசமுணபவர்க்குப் பாவமில்லை யென்பாரைமறுத்தி, அப்பாவம் உண்டென்பது இவையிரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து). மாமிசம் புசிப்பவன் நீளாதரகத்தை யடைவான்,

5. Not to eat flesh contributes to the continuance of life; therefore if a man eat flesh, hell will not open its mouth to let him escape out,after he has once fallen in.

சு. ‡ தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

பரி.—(இ - ள்). பேதைமை காரணமாக அல்லது ஊன் தின்னை காரணமாக உலகங் கொல்லாதாயின், பொருள்காரணமாக ஊன் விற் பார் யாவரும் இல்லை, (எ - று).

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மை மேனின்றது. † பின்னிகழும்

‡ தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனின் என்றும் பாட முண்டு.

† பின்னே யுண்டாகும் மாமிசம் புசித்தல் முன்னேயுண்டாகும் கொலைக்குக் காரணமாகாமையின், மாமிசம் புசிப்பார்க்குக் கொல்லுதலாகியகாரணத்தினால் வரும்பாவமில்லை யென்ற ஆசியைப் பார்த்து இங்ஙனமன்றோ யின் இது கூடாதே என்னும் அருத்தாபத்திப் பிரமாணத்தினால் புலாலுண்ணல் கொலைக்குக் காரணமாதல் சாதிக்கப்பட்டதென்க.

இங்கு அருத்தாபத்தியாவது:— (அறியாமை காரணமாக, அல்லது) மாமிசம் புசித்தல் காரணமாக உலகத்தார் பிராணிகளைக் கொல்லாராயின் [இஃது இங்ஙனமன்றோயின் என்னும் அருத்தாபத்தியின் முதலவயவத்தின் பொருள்.] விலைப்பொருட்டாக மாமிசம்விற்பார் யாவருமில்லை (இஃது இது கூடாதென்னும் அருத்தாபத்தியின் இரண்டாமவயவத்தின் பொருள்.) என்பதாம்.

இன்னும் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லுவாரில்லை யாயின், மாமிசத்தை விற்பவர் யாவருமில்லை யென்பது இதன் திரண்டபொருளாம்.

இங்கு மாமிசம் உண்ணுதற் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லுவாருண்டாயின் அம்மாமிசத்தை விலையின நிமித்தம் விற்பாருமுண்டு என்பது அன்வயம் (உடன்பாடு).

மாமிசம் உண்ணுதற் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லுவாரில்லையாயின், அம்மாமிசத்தை விலையின நிமித்தம் விற்பாரொருவருமில்லை யென்பது வியதிரேகம் (எதிர்மறை)

தின்கை முன்கிகழும் கொலைக்குக் காரண மாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவமில்லை யென்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தி யளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனுள் § மேலது வலியுறுத் தப்பட்டது.

தெளி.—(இ - ள்). தினற்பொருட்டால் - (அறியாமை காரணமாக, அல்லது) மாமிசம் புசித்தல் காரணமாக, உலகு - உலகத்தார், கொல்லாதெ னின் - (பிராணிகளைக்) கொல்லாராயின், விலைப்பொருட்டால் - விலைப் பொருள்காரணமாக, ஊன்தருவார்-மாமிசத்தை விற்பவர் யாரும் - எவரும், இல் - இல்லை, (எ - று).

உலகென்பதிற்கு உயிர்ப்பன்மை (எண்ணிறந்த வுயிர்கள்) மேல் நின் றது. பின் புண்டாகும் மாமிசம்புசித்தல் அதற்கு முன்னே உண்டாகும் கொலைக்குக் காரணமாகாமைபால், மாமிசம் விற்பவர்க்குக் கொலை செய்யுங் காரணத்தால் வரும் பாவம் இல்லை யென்ற வாதியை நோக்கி, அருத்தா பத்திப் பிரமாணத்தினால் மாமிசம்புசித்தல் கொலை செய்தற்குக் காரண மாதலைச் சாதித்தலின், இதனுல் மூற்கூறியது உறுதி செய்யப்பட்டது.

(க - து). ஆதிமுதலிய பிராணிகளைக் கொன்று, அவற்றின் மாமிசத்தையுண்பாரிலராயின், அதனை விற்பாருமிலராவர்என்பது.

6. If you say that the world does not destroy life for the purpose of eating, then no one would sell flesh for the sake of money.

எ. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதோன்றன்
புண்ணு துணர்வார்ப் பெறின்.

பரி.—(இ - ள்). புலாலாவது பிறிதோருடம்பின் புண், அதுதூய்து அன்மை அறிவாரைப் பெறின், அதனை உண்ணுதொழியல் வேண்டும்.

அஃதென்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தாற் றொக்கதது.

§ மேலது எனபது இவ்வதிகாரத்தின் 4 வது குறளும் 5 வது குற ளுமாம்.

சுட்டடியாகப் பிறந்த ஆய்தத்தோடர் குற்றியலுகரமொழி கீழே மொழியாக நின்று வருமொழியோடு புணரு நிடத்து வருமொழி முதலில் உயிரிருந்தால் ஆய்தங்கெடா தென்றும், வருமொழி முதலில் மெய்யிருந் தால் ஆய்தங் கெட்டு முற்றியலுகரமாமென்று முள்ளவிதி [தொல்காப்பி யம் குற்றியலுகரப் புணரியலில் "முன் னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி, மன்னல் வேண்டு மல்வழி யான" (முனனென னதனுல் வேற்றுமைக் கண்ணு மில்லி திகொள்க என்று விசேடவுரையிலெழுதப்பட்டிருக்கின்றது) என் றும், "னகரமுன் வரினே தானிலை யின்றே" என்று முள்ளவிதி] யின்படி புண்ணதுணர்வார் என்பதன்கணுள்ள அதுணர்வார்என்பது அஃதுணர்வார் என்றிருத்தல் வேண்டும். இங்கு அவ்வாறின்றிச் செய்யுள் விகாரத்தால்

† அம்மெய்ம்மை யுணராமையின், அதனை உண்கின்ற தென்பதாம். ‡ பொருந்துமாற்றானும் புலாலுண்டல் இழிந்ததென்பது இதனாற் கூறப் பட்டது.

தேவி.—(இ - ள்). புலாஅல் - புலாலாவது, பிறிதொன்றன் - வே றோருடம்பினது, புண் - புண்ணும், அஃது - அப்புலால், (அசுத்தமாயி ருத்தலை), உணர்வார் - அறிபவரை, பெறின் - பெற்றால், உண்ணுமை வேண்டும் - (அப்புலாலை) உண்ணுதொழியல் வேண்டும், (எ - று).

அஃது என்பது செய்யுள் விகாரத்தால் ஆய்தக்கொக்கு அதுவென்று வந்தது. புலால் வேறோருடம்பினது புண்ணுமென்னும் அந்த மெய்ம்மை யையறியாமையால், அந்தப்புலாலை உண்கின்றதென்பதாம். இதனால் யுத் தியினாலும் மாமிசம் புசித்தல் இழிந்த தென்பது சொல்லப்பட்டது.

(க - து). மாமிசம் வேறோருடம்பினது புண்ணுமென் றறிந் தவர் அதனை யுண்ணார் என்பது.

7. Since the wise consider flesh as the unclean ulcer of a body, let it not be eaten.

அ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

ஆயதங்கெடுத் தாணர்வார் என்றிருத்தல்பற்றி 'அஃதென்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தாற் றொக்கது' என்று கூறப்பட்டது.

† மாமிசமானது மற்றோருடம்பின் புண்ணுமென்னு முண்மையை யறியாமையினால் அம்மாமிசத்தை யுண்ணுகின்றார் அறிவிலாரென்பதாம். புலாலுண்டலி னிழிவைப் பற்றிச் சான்றோர்கள் "புலையென்னும் புலைதீரப் புனலென்னும் புனைபூத்து, உலகின்ற முழுமூட ரறிவென்ன வறி வென்ன, புலையனைய மலமுணலு மெமையுண்ணும் புலையர்க்குக், குல மென்ன நலமென்ன கூடுவென் றனகோழி" என்றும், "தகருண தெறிசே சிந்தத் தாங்கொளிர் துட்ட கோலை, புகலுமுன் மீதிற் றூகைப் பொருதுளங் குலைத்துத் ருயால், பகர்தரு மவற்றி னூனைப் பற்றிய மூளை யோடு, மகமகிழ்ந் தயின்ற வாறென் னைறைதுறு மறிவி லாதோய்" என்றும், பிறவுங் கூறியிருத்தலினுங் ரண்குணர்தற் பாலதாம் (தகர்-ஓடு, சிந்தல்-இம்மல்).

‡ பொருந்தாமாறு - இதுகூடும் இதுகூடாதெனத் தன்னிடத்தே தோன்றும்யுக்தியாம்; இங்ரு யுக்தியாவது மாமிசம் சுத்தமா யிருந்தால் அதனை யுண்ணுதல் கூடும்; (அங்ஙனமன்றி) அது புண் வடிவ அசுத்த மா யிருத்தலால் அதனை யுண்ணுதல் கூடாதென்பது. புண்ணானது அரு வருக்கத்தக்கதா யிருக்கின்றது; மாமிசமும் புண்வடிவமா யிருத்தலால் அஃது மருவருக்கத் தக்கதாம்; அருவருக்கத் தக்கதாகவே, புண்வடிவ மென்றறிந்தும் மாமிசத்தை யுண்ணுதல் அறியாமையிலு மறியாமையா மென்க.

பரி.:-(இ - ள்). மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார் ஒருயிரி னீங்கிவந்த ஊனை உண்ணார், (எ - று).

§ தலைப்பிரி வெனபது ஒரு சொல். ¶ பிணமென ஊனின் மெய்ம்மை தாமே உணர்தலின் 'உண்ணார்' என்றார்.

தெளி:—(இ - ள்) செயிரின் - (மயக்கமாகிய) குற்றத்தினின்றும், தலைப்பிரிந்த - நீங்கிய, காட்சியார் - அறிவினையுடையவர், உயிரின் - ஒருயிரினின்றும், தலைப்பிரிந்த - நீங்கிவந்த, ஊன் - ஊனை, உண்ணார்.

தலைப்பிரி வென்பது ஒருசொல். பிணமென்று மாமிசத்தின் மெய்ம்மையைத் தாமே யறிதலால் 'உண்ணார்' என்றார்.

(க - து). அறிவுடையார் மாமிசமுண்ணார் என்பது

8. The wise, who have freed themselves from mental delusion, will not eat the flesh which has been severed from an animal.

கூ. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

பரி.—(இ - ள்). தீயிற்கு நெய முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒரு விலங்கின் உயிரைப்போக்கி அது தின்ற ஊனை உண்ணாமை நன்று, (எ - று).

அவ்வேள்விகளான் வரும் பயனினும், இவ்விரதத்தான் வரும் பயனே பெரிதென்பதாம்.

§ தலைப்பிரிந்த எனபதில் தலையென்பது பொருளுணர்த்தாத உபசர்க்கமாய வந்தமைபற்றி, 'தலைப்பிரி'வென்பது ஒருசொல்' என்று கூறப்பட்டது.

ஒருயிரினின்றும் நீங்கிவந்த மாமிசத்தை (உயிர்நீங்கிய உடலை)ப் பிணமென்று தாமே உள்ளவாறு அறிதலால் பிணவடிவ மாமிசத்தை மயக்கம் நீங்கிய அறிவினையுடையார் உண்ணார் என்பதாம். எனவே, மாமிசம் புசிப்பவர் மாமிசத்தைப் பிணவடிவமென றறியாமையினு லதனை யுண்ணுகின்ற ரென்பதாயிற்று; ஆகலே, பிணத்தைத் தொட்டதனால் தீட்டுண்டாயிற்றென் றதற்காகப் பரிகாரந் தேடுவோர் பிணவடிவ மாமிசத்தைப் புசித்தல் அறியாமையினும் அறியாமையாம். இதனால் மாமிசம் புசிப்போர் பிணம புசிப்போரென்றுயிற்றென்க. "பிணங்கிடக்க நாலு கரே னென்னுரீ பேசுஉ, குணங்கிடக்க வேண்டியதென் கூறுய் - பிணத்தைக், கலத்திலே யிட்டுக் கலக்குதா வாபப், புலத்திலுற் றின்றல் புகல்' என்னுமிச் செய்யுளும் ஈண்டறியத்தக்கதாம்.

மனுதரும சாஸ்திரம் ஐந்தாமத்தியாயத்தில் "எவன் நூறு வருஷ பரியந்தம் வருஷந்தோறும் அஸ்வமேதயாகஞ் செய்கின்றானோ, எவன் மாமிசத்தைச் சாமான்யமும் நீக்குகின்றானோ இவரிருவருக்கும் புண்ணிய பலன்

தேவி:—(இ - ள்). அவி - (நெய்முதலிய) அவிகளை, சொரிந்து-(தீயினிடத்தி) பெய்து, ஆயிரம்வேட்டலின் - ஆயிரம்யாகஞ் செய்தலி னும், ஒன்றன் - ஒருவிலங்கினது, உயிர் - உயிரை, செகுத்து - போக்கி, உண்ணுமை - (அவ்வுயிர் கின்ற மாமிசத்தை) உண்ணுதிருத்தல். நன்று-நல் லது, (எ - று).

அந்த யாகங்களால் வரும் பயனிலும், புலால் மறுத்தலென்னும் இந்த விரதத்தால் வரும் பயனே பெரி தென்பதாம். அவி - தேவர்க்கிடுமுணவி.

(க - து). அளவிறந்த வேள்வி புரிதலா லுண்டாகும் பயனி னும், புலாலுண்ணுது மறுத்தலா லுண்டாகும் பயன் சிறப் புடைய தென்பதாம்.

9. Not to kill and eat the flesh of an animal, is better than the pouring forth of ghee in a thousand sacrifices.

கஎ. கோல்லான் புலாலை மறுத்தானைக் † கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

சரிதான்" "மாமிசத்தை நீக்குகிறவன் எந்தப்பலனை யடைகிறானே அந்தப் பலனைப் பழம் கிழங்கு சாலியனை மென்னு மிவற்றால் ஜீவிக்கின றமுனியு மடையமாட்டான்" என்று கூறுவது மிங்கறியத்தக்கதாம். தீயினகண் தேவருணவாகிய நெய்முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் (ஆயிரமென் றது இங்குக் கணக்கிறந்தன வற்றை யுணர்த்தி கின்றது) யாகங் (ஈற்று ருந்தி யாகம் எனப்படும்)களைச செய்வதால் மறுமையிலுண்டாகும் சுவர்க்க முதலியஉற்றினபயனிலும், மாமிசத்தை யுண்ணுகின றவொருவன் அதனி ழிவையறிந்து மாமிசமுண்ணுமையாகிய விரதத்தை மேற்கொள்ளுவானு யின் அவனுக்குப் பெரும்பயனுண்டாகு மென்பதாம். எனவே, வேள்வி யிலுகு இழித்துக் கூறப்பட்ட தன்றென்றுமிற்றென்க. இஃதறியாது ("வேத வேள்வியை நிந்தனை செய்தல், லாதமில்லி யமணெனுதேரை" என்று திருஞான சம்பந்த சுவாமிகள்கூறியவாறு) வேதவேள்வியை நிந்தனை செய்பவராகிய சமணருக்கு 'அவிசொரிந்து' என்னுமிக்குறள் சாதகமா மென்று கூறுவாருமுளர். அவர் "அவிசொரிந்த தாயிரம் வேட்டலின்" என னும் பிரயோகத்தை நன்குகவனிதலிலர் போலும். இராமனேப்பார்க்கிலும் இலக்குமணன் நல்லவன் என்பதி இராமன் தீயவனுகவாறு போன்று வேள்வி செய்வதினும்புலால்புசியாமை நன்றென்பதிலும்வேள்வி நீயதாக தென்க. வேட்டலின் என்பதன் இன் னுருபுஉறழ்பொருவின்கண் வந்தது. மேலும்,காயஞர் புலாலுண்ணுமையைசிறப்பிக்கவேண்டி வேள்விசெய் தலினும் புலால் புசியாமை நன்றென்று கூறினரெனினு மொக்கும்;யாகஞ் செய்கிறவனுக்கும் புலால் மறுத்தவனுக்கும் பலன் சமமாகத் தருமசாஸ்தி ரக்கூறுதலாலென்க.

†கைகூப்பித் தொழுதல் உயிர்நிலைக்கன்றி, அஃதிலைக்கின்மையின், 'எல்லாவுயிரும்' என்பதனிங குயர்திணையுயிராம்.

பரி:—(இ - ள்). ஒருயிரையுங் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனே † எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும், (எ - று)

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது $ ஒன்றே யுடையார்க்கு அதனாற் பயனில்லையாகலின், கொல்லாமையும் உடன்கூறினார். ¶ இப்பேருள் உடையான் மறுமைக்கண் தேவரின் மிக்கானெனன 0அப்பயனது பெருமை கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் ஊனுண்ணுமையது உயர்ச்சி கூறப்பட்டது.

தேவி:—(இ - ன்). கொல்லான் - (ஒருயிரையுங்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை - புலாலையுமுண்ணாதவனை, எல்லாவுயிரும் - சர்வப்பிராணிகளும், கைகூப் -கைகுவித்து, தொழுமெனவணங்கும், (எ-று),

கொல்லாமையும புலாலை மறுத்தலுமாகிய இவ விரண்டறங்களையும் ஒருமிக்க வுடையவர்க்கல்லாமல் (அவற்றுள,) ஒன்றுமாத்திரம் உடையவர்க்கு அதனாற் பயனில்லையாகலின புலால் மறுத்தலுடன கொல்லாமையும சொல்லினார். இப்பேருளுடையவன் மறுமையில் தேவரிலும் உயர்ந்தவனெனன்று அப்பயனது பெருமை சொல்லியவாறும். இவை மூன்று பாட்டானும மாமிசமுண்ணுமையினது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க - து). ஒருயிரையுங் கொல்லாது புலாலுண்ணுதிருப்பவனை யெல்லாவுயிரும் வணங்கும். எனபது.

10. All creatures will join their hands together, and worship him who has never taken away life, nor eaten flesh.

† ஒருயிரையுங் கொல்லாமலும் புலாலுண்ணாமலு மிருக்கும் பேருளுடையான இம்மையில் மனிதவர்களுடைகளும மறுமையில தேவவர்களுங் களும் கைகூப்பித் தொழுமியல்புடையவனுய், அவனருளை மேம்பட்டு வினருவா ளெனபதாம். மனுதாமசாஸ்திரம் ஐந்தாவ தத்தியாயத்தில் "எவன் ஜந்துக்களைக் கட்டாமலும் கொல்லாமலும் வருதப்படுத்தாமலு மிருக்கிறானே அவன் சாவ ஜனமித்ரனுகச் சகல சுகத்தையுமனுபவிக் கிறான்" என்றும, ஆருவதத்தியாயத்தில் 'எந்ததுயினிடத்திலிருந்து ஒருபிராணிக்குஞ் சிறிதும் பயமுண்டாகவில்லையோ, அவனுக்கு இறந்த பின் ஒருவரிடத்திலும பயமுண்டாவதில்லை" என்றும் கூறுவது மிகுகறியத்தக்கதாம்.

$ தானே யொன்றைக்கொன்று புசித்தல், பிறர்கொன்ற வொன்றைத் தான் புசித்தல், ஒன்றைக்கொன்று தானுண்ணுது பிறர்க்கு உண்ணக் கொடுத்தல் என்னுமூன்றும் கூடாவென்பது இதனுல் நன்குவிளங்குமென்க.

¶ இப் பேருருளுடையான்-கொல்லான் புலாலை மறுத்தானுகிய இப் பெருங கருணையாளன்.

0 அப்பயனது - மறுமைக்கண் தேவரின் மிக்கானெனனும் அப்பயனது.

மூன்றுவது அதிகாரம்

தவம்—On Austerities.

பரி:—அஃதாவது மனம் பொறிவழி போகாது, நிற்றற்பொருட்டு விரதங்களான† உண்டிசுருக்கலும் ¶ கோடைக்கண் வெயில்நிலை நிற்றலும், 0 மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும், ‖ முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றுற் றம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களை யோம்புதல். புலான் மறுத்து உயிர்கண்மேல் அருண் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலான்மறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மனம் இந்திரியங்களின் வழியிற் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களினுல்உணவைச்சுருக்குதலும்வெயிற் காலத்தில் வெயிலில் நிற்றலும் மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் நீரில் நிற்றலும், முதலான செயல்களை மேற்கொண்டு, அவ்வுணவைச் சுருக்குதல் முதலியவற்றுல் தம்முயிர்க்குவரும் துன்பங்களைப் பொறுத்து, பிற வுயிர்களைப் பாதுகாப்பதாம். புலாலுண்டலே மறுத்து உயிர்களின்மேல் அருள் முதிர்ந்தவிடத்துத் தவம் செய்யப்படுவதாகலின், இது (தவம்) புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

க உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை யற்றே தவத்திற் குரு.

பரி:—(இ-ள்). தவத்தின்வடிவு உண்டிசுருக்கல் முதலியவற்றுல் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செயாமையுமாகிய வவ்வளவிற்றே, (எ-று)-

‖ மன விந்திரியங்களின் ஏகாக்கிரமே (ஒருமையே) தபசு என்று லிவேக சிந்தா மணி கூறுகின்றது

† உணடிசுருக்கல் - உணவைக் குறைத்தல். ¶ கோடைக்கண்வெயில் நிலை நிற்றல்-சித்திரைமாத முதல் ஆடிமாத மீறுயுள்ள வெயிற்காலத்தில் வெயில் படுமிடத்தில் நின்றுகொண்டிருத்தல். வெயில் நிலைநிற்றல் என்பதனுல் (காற்புறமும் தீசூழ மேலே சூரியகிரணம் படுவதான) பஞ்சாக்கினி மத்தியில் நிற்றலுங்கொள்க.

0 ஆவணிமாத முதல் கார்த்திகைமாத மீறுயுள்ள மழைக்காலத்திலும் மார்கழிமாதமுதல் பங்குனிமாத மீறுயுள்ள பனிக்காலத்திலும் நீர் நிலையில் (வரி ஆறு மடுமுதலியவற்றில்) நின்றுகொண்டிருத்தல்.

¶ முதலிய என்றதனுல் ஈராத்துணியைப் போர்த்துக்கொள்ளலும், பட்சோபவாசம் மாதோபவாச மிருத்தலும், மரத்தின்கீழ் வசித்தலும், பிற வுங்கொள்க.

மற்றுள்ளன வெல்லாமிவற்றுள்ளே யடங்குதலின், அற்றேஎனத் தேற்றேகாரங் கொடுத்தார். † தவத்திற்குரு அற்றே என்பது யானை யது கோடு கூரிதென்பதனே யானைக்குக்கோடு கூரித் என்றற்போல ஆறுவதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். இதனால் தவத்தது இலக்கணங் கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்). தவத்திற்கு - தவத்தினது, உரு - வடிவம், உற்றநோய் - (உணவைச் சுருக்குதல் முதலியவற்றால் தம்மூயிர்க்கு) வருந் துன்பங்களே, நோன்றல் - பொறுத்தலும், (தாம்), உயிர்க்கு - (பிற) உயிர்களுக்கு, உறுகண் செய்யாமை - துன்பஞ் செய்யாமையும் (ஆகிய), அற்றே - அவ்வளவினதேயாம், (எ - று).

மற்றைய விரதங்களெல்லாம் உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை யென்னும் இவ்விரண்டிலே அடங்குதலான், அற்றே எனத் தேற்றேகாரங் கொடுத்தார். தவத்திற்கு என்னும் நான்கனுருபு தவத்தின தென ஆறும் வேற்றுமைப்பொருளில் வந்தது. இதனால் தவத்தினது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து). தவத்தின் வடிவம் விரதங்களால் வருந்துன்பத் தைப் பொறுத்தலும் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமையு மாம் என்பது.

1. The nature of religious discipline consists, in the endurance by the ascetic of the sufferings which it brings on himself, and in abstaining from giving pain to others.

திரிகாலஸ்தானம், தேவரிஷிபிதிர்களுக்குத் தர்ப்பணஞ் செய்தல், சுவப்பிரயோசனத்தில் விருப்பமில்லாமை, புணர்சியில்லாமை முதலியன வெல்லாம் உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை யென்னு மிவ்விரண்டனுள்ளே அடங்குதலால், (தவத்தினது வடிவம் உற்றநோய் நோன்றலும் உயிர்க் குறுகண் செய்யாமையுமாகிய) அற்றே (அவ்வள வினதே) யெனத்தேற்றேகாரங் கொடுத்தாரென்க. அற்றே என்பதன் ஏகார விடைச்சொல் துணிவுப்பொருளே யுணர்த்தியதுபற்றித் தேற்றே காரமாயிற்று.

† தவத்தினது உரு அற்றே என்பது தவத்திற்கு உரு அற்றே யென்று வந்தது யானையது கோடெரிது (தந்தம் கூர்மையுடையது) என் பதனேயானைக்குக்கோடுகூரிது என்று கூறுவதுபோல் ஆறனுருபின் பிழ மைப் பொருட்கண் நான்கனுருபு வந்தவேற்றுமை மயக்கமாம் (தவத்திற்கு என்பதன் நான்கனுருபு தனக்குரிய பொருளே விட்டு ஆறனுருபின் உறுப் புத் தற்பிழமைப்பொருளில் வந்தது இங்கு மயக்கமாம்).

உ. தவமும்ந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

பரி.:—(இ-ள்). † பயனேயன்றித் தவத்தானும் உண்டாவது † முற்றவ முடையார்க்கே; ஆகலான், அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம், (எ - று).

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவு போக்கவின் தவமுடையார்க் காகும்' என்றும், ‡ அஃதிலார்க்கு அவையின்மையின் முடிவு போகாமையின் அவமாம் என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்). *தவமும் - (பயனேயல்லாமல்) தவமும் (உண்டாவது), தவமுடையார்க்கு - (முன்னைத்) தவத்தை யுடையார்க்கே, (ஆதலால்), அதனை - அத்தவத்தை, அஃதிலார்-அம்முன்னைத் தவமில்லாதவர், மேற்கொள்வது - செய்யத்தொடங்குவது, அவம் ஆகும்-வீண்முயற்சியாம்.*

(தவத்தை முற்பிறப்பிற் செய்துள்ள) பழக்கத்தால் (இப்பிறப்பில்) அறிவும் வல்லமையும் உடையராய்த் தவத்தைச செய்து முடித்தலால் 'தவமுடையார்க் காகும்' என்றும், அப்பழக்கமில்லாதவர்க்கு அவ்வறிவும் வல்லமையு மில்லாமையினல் தவம் முடிவு பெறுமையால் அவம் ஆகும் என்றும் கூறினர்.

(க - து). முற்பிறப்பிற் றவஞ்செய்து பழகினவருக் கன்றி மற்றையோாக்குந் தவத்தைச்செய்து முடித்தல்கூடாது என்பது.

2. Austerities can only be borne, and their benefits enjoyed, by those who have practised them in a former birth; it will be useless for those who have not done so, to attempt to practise them now

கூ. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கோன்
மற்றை யவர்க டவம்.

பரி.:—(இ - ள). இல்லறத்தையே பற்றி நிற்பார் துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாந் தவஞ்சேய்தலை மறந்தார் போலும், (எ - று).

† *பயனேயன்றி - முற்பிறப்பிற் செய்த தவத்தினல் இப்பிறப்பி லுண்டாகும் செல்வம் நுண்ணறிவுமுதலிய பிரயோஜனங்களே யல்லாமல். "மேலைத் தவத்தனவே யாகுமாக் தான்பெற்ற செல்வம்" என்பது மிங்கறியத் தக்கதாம்.*

‡ *அஃதிலார்க்கு அவையின்மையின் முடிவுபோகாமையின்—முற்பிறப்பில் தனஞ்செய்த பழக்கமில்லாதவர்களுக்குந் தவத்தைச்செய்து முடித்தற்குரிய அறிவும் ஆற்றலுமில்லாமையினல் தவம் இடையூறின்றி நிறைவேறுமையினல்.*

தப்புரவு அனுபவிக்கப்படுவன. † 'வேண்டிய வேண்டியாங் செய்தற்' பயத்ததாகலின், ‡ யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ் செய்யுந் தானத்தின்மேல் விருப்பமிருதியான் மறந்தார்போலு மெனவே, தானத்திற் றவம் மிக்கதென்பது பெற்றாம்.

* அனுபவிக்கப்படுவன - செவிமுதலிய இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் சப்தமுதலிய விஷயங்கள்.

† வேண்டிய வேண்டியாங் செய்தல் என்பது இவ்வதிகாரத்தின் 9ஃ தாங் குறளிலுள்ளது.

‡ பொதுவகையாக 12 வருஷம் பிரஹ்மசரிய விரதத்தையும், 25 வருஷம் இருகஸ்தாசிரமத்தையும் அததற்குள்ள நியமப்படி நிறைவேற்றி, அறிவுடையராய்ப் பிறப்பித்துப்பயன்தி, மோட்சமடைதற் பொருட்டு யானெனதென்னும் இருவகைப்பற்றையும் துறந்தவரியாவராலும் (மனம் இந்திரியங்களின் வழியே போகாமல் நிற்றற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் கோடைக்கண் வெயில்நிலை நிற்றல் முதலியனவாகச்) செய்யப்படுவதாகிய தவத்தை இல்லறத்தார் "குடும்பபாரந்தலைக் கொண்டவர்க் கல்லல் விடும்பரிசு" இன்மையைத் தமதனுபவத்தாலறிந்து சம்சாரத்தில் வைராக்கியமடைந்து அதைவிட்டு "நிறைந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"(இதன்பொருள் அறம் பொருளின்பத்திற்நிறைந்த வீட்டின்பம் பெறுதற்கு ஏதுவான றவற்றை (வானப்பிரத்தத்தையும் சந்நியாசத்தையும்) அடிப்படுதல் யான் முற்கூறிய இல்லறத்தின் பயன் என்பது)என்று தொல்காப்பியம் "காமஞ்சான்ற" என்னுஞ் சூத்திரத்திற் கூறியவாறு துறவறத்தை மேற்கொண்டு செய்யாது, தாம் செய்யும் (தருமவழியால் வந்த பொருளைத் தக்கோர்க்குச் சந்தோஷத்தோடு கொடுத்தலாகிய) தானத்தின் மேலுள்ளவிருப்ப மிருதியால் மறந்தார்போலு மென்பது. இவ்வாறு கூறியதனால் இல்லறத்தார்க்கு தவத்தாலடையப் படுவதாகிய வீடு கிட்டாதென்பது நிண்ணமாயிற்று. இது "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற்றல்லா, ரவஞ்செய்வா ராசையுட் பட்டு" என்னுங் குறளானும் நன்கு விளங்கும். இங்கு "ஒழுக்கத்தி னீத்தார்" என்னுங் குறளின் விசேட வுரையும் கவனிக்கத் தக்கதாம். மேலும், 'தவத்தை (இல்லறத்தார்) தாஞ் செய்யுந் தானத்தின்மேல் விருப்பமிருதியால் மறந்தார் போலும்' என்று கூறியதனால் இல்லறத்தார் தவத்தை மறந்ததனால் பிறப்பிறப்பிற் காளாவிஞரென்பது நன்கு விளங்கிற்று. இல்லறத்தார் மோட்சம் பெற்றாரென நூல்கள் கூறுகின்றனவே யெனின், அவர்கள் (ஜனகன் முதலாயினோர்) "அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லர், துறந்தானவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்" என்றுள்ளவாறு மனத்துறவு பூண்டிருந்தாராகலின், அது கூடுமென்க. மனுதரும சாஸ்திரம் ஆறுவதத்தியாயத்தில், பிரமசாரி, கிருகஸ்தன்,வானப்பிரஸ்தன், சந்நியாசி யென்னும் நால்வருக்கும் சந்தோஷம், தமக்கொருவனபகாரஞ்செய்தாலும் தாம் பிரதியபகாரஞ் செய்யாமை, மகோன்னிதகம், அன்னியாயமாய்ப் பொருள் தேடாமை, நல்லொழுக்கம். இந்திரியநிக்கிரகம், சாஸ்திரஞானம்,

தெளி:—(இ - ள்). மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றி நிற்பவர்கள், துறந்தார்க்கு - துறவறத்தை மேற்கொண்டவர்க்கு, துப்புரவு - உண்டியும் மருந்தும் இருப்பிடமும், வேண்டி - (உதவுதலே) விரும்பி, தவம் - (தாம்) தவஞ்செய்தலே, மறந்தார்கொல் - மறந்தார்போலும்,(எ-று).

துப்புரவு - அனுபவிக்கப்படும் பொருள்கள். தவமானது வேண்டியவற்றை வேண்டியபடியே யடைதலாகிய பயனையுடையதாதலால், யாவராலும் செய்யத்தகுவதாகிய அத்தவத்தைத் தாம் செய்யுந் தானத்தின் மேலுள்ள விருப்பமிகுதியால் மறந்தார்போலு மெனவே, தானத்திலும் தவம் உயர்ந்தது என்பது பெற்றாம்.

(க - து). இல்வாழ்வோர் துறவிகளுக்கு உதவி செய்தலே விரும்பித் தாம் தவஞ்செய்தலே மறந்தார் போலும் என்பது.

3. Is it to provide food for the ascetics who have abandoned the desire of earthly possessions that other persons have forgotten to practise austerity?

ச. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

பரி.—(இ - ள்). தம்மறத்திற்குப் பகையாய அழிவுசெய்தாரைக் கெடுத்தலும் அதனை உவந்தாரை உயர்த்தலும் ஆகிய இவ்விரண்டையும் தவஞ்செய்வார் நினைப்பாராயின், அவர் தவவலியான் அவை அவர்க் குளவாம், (எ - று).

‖ முற்றத்துறந்தார்க்கு ஒன்னாரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், 0 தவத்திற்கேற்றி யுரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனால், அவர்க்கு அவையெண்ணுமை இயல்பென்பது பெற்றாம். () ஒன்னார் பிரஹ்மஞானம், உண்மை, கோபமில்லாமை யென்னு மிப்பத்தும் பொதுவான தருமங்களாமென்று கூறிப் பின்பு "இப்பதிதவகையான தருமங்களையு மெவர்களறிந்து அந்தப்படி நடக்கிறார்களோ அவர்கள் மேலான மோட்சத்தை யடைகிறார்கள்" என்று கூறியது விங்கறியத்தக்கதாம்.

‖ முற்றத் துறந்தார் - யானெனதென்னு மபிமானத்தை வாசனை மாத்திரமாயு மில்லாவாறொழித்தவர்.

0 ஒன்னாரைத் தெறலும் உவந்தாரை யாக்கலுமாகிய சாபானுக்கிரகம் தவத்திற் குண்டென்பது விசுவாமித்திரரும் திரிசங்குவை முறையே நீசனாகவும் விண்ணுலகிலொருவனாகவும் செய்திருக்கும் கதையாலும் பிறவாற்றாலு முணரப்படும்.

() ஒன்னார் (பகைவர்) தவத்தாலன்றி வேறுவகையால் கௌசிகராசனைப்போல் பெரியவராயினும், உவந்தார் திரிசங்குமுனிவரின் இரண்டாம்புத்திரனைப்போல மிகவற்பராயினும், அவர்களுக்குக் கௌசிகராஜனுக்கு விட்டாலும் திரிசங்கு புத்திரனுக்கு விசுவாமித்திரராலும் முறையே கேடும் பெருக்கமு முண்டாயினமை போல, தாழ்வும் உயர்வும் தவமுடையார்க்கேற்ற வளவாலே வந்து நிற்குமென்பதாம்.

பெரியராயினும், உவந்தார் சிறியராயினும் கேடும் ஆக்கமும் நினைத்ததனை யானே வந்து நிற்குமெனத் தவஞ் செய்வார்மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.

தெளி:—(இ - ள்). ஒன்னர்-(தமது துறவறவொழுக்கத்திற்குப்பகையாய் நின்று) கெடுதி செய்தவரை, தெறலும் - கெடச்செய்தலும், உவந்தாரை - (அவ்வறவொழுக்கத்தினை) விரும்பினவரை, ஆக்கலும் - உயரச்செய்தலும், (ஆகிய இரண்டையும்), எண்ணின் - (தவஞ்செய்வார்) நினைப்பாராயின், தவத்தான் - (அவரது) தவவலிமையினால், வரும் - (அவ்விரண்டும் அவருக்கு) உண்டாகும் (எ - று).

முழுதுந் துறந்தவருக்கு ஒன்னரும் உவந்தாரும் இருப்பது கூடாமையால், ஒன்னர்த் தெறலு முவந்தாரை யாக்குதலுமாகிய சாபாநுக்கிரகம் தவத்தின்மீதேற்றிச் சொல்லப்பட்டது 'எண்ணின்' என்றதனால் அவர்க்கு அவற்றை எண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னர் பெரியராயினும் அவருக்குக்கேடும், உவந்தார் சிறியராயினும் அவருக்கு உயாவும் நினைத்த வளவாலேவந்து நிற்குமெனத் தவஞ செயவாமேல் வைத்துத் தவத்தினது வல்லமை சொல்லியவாறும்.

(க - து). சத்துருக்களைக் கெடுத்தலும மித்துருக்களைக் காத்தலுந் தவவலிமையால் வரும் என்பது.

4. If the ascetic desire the destruction of his enemies, or the aggrandizement of his friends, it will be effected by the power of his austerities.

---

(5). வேண்டிய வேண்டியாங்கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

பரி.—(இ - ள்.) முயன்றல் மறுமைக்கணீ தாம் வேண்டிய பயன்களீ வேண்டியவாறே பெறலாம்; ஆதலால், செய்யப் படுவதாகிய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும், (எ-று.)

| 'ஈண்டு' என்பதனால் மறுமைக்கணென்பது பெற்றும். || மேற்கதி ¶ வீடுபேறுகள் ‡ தவத்தானன்றி எய்தப்படா வென்பதாம். இவை நான்கு பாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.

முயன்றல் - தவத்தை யாரம்பித்துச் செய்தால்.

தவஞ்செய்தல் ஈண்டு (இம்மைக்கண்) என்பது கூறினமையின், வேண்டிய வேண்டியாங் கெய்தல் மறுமைக்கண் என்பது பெற்றும்.

|| மேற்கதி - இந்திரன் முதலிய இறையவர் பதங்கள்.

¶ வீடு - உயிர் காமம் வெகுளி மயக்கங்களினின்றும் நீங்குதல்.

‡ மேற்கதியும் வீடும்பேறும் தவத்தாலன்றி யடையப்படாவென்பது மனுதரும சாஸ்திரம 11-வது அத்தியாயத்தில் "ஔஷதம், நோயில்லாமை,பிரஜாவிர்த்தி, கருமாநுஷ்டானம், சுவர்க்கமுதலிய பற்பல புண்

தெளி:—(இ-ள்.) வேண்டிய (முயன்றுல் மறுமையில் தாம்) விரும் பிய பயன்களே, வேண்டியாங்கு - விரும்பியபடியே, எய்தலால் - பெற லாம் ஆதலால், செய்தலம்-செய்யத்தகுவதாகிய தவமானது,ஈண்டு-இம்மை யில், முயலப்படும் - (அறிவுடையோரால்) முயன்றுசெய்யப்படும் (எ-று).

'ஈண்டு' என்பதனுல் மறுமையில் என்பது பெறப்பட்டது.மேற்கதியும் மோக்ஷமும், தவத்தாலல்லாமல் பிறிதொன்றுல் அடைதல் கூடாதென்ப தாம். இவை நான்கு பாட்டாலும் தவத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து). மறுமையில் தாம் விரும்பிய பயன்களே யடைதற் பொருட்டு இம்மையில் தவமானது அறிவுடையோரால் செய்யப் படும் ஈன்பது.

5. Religious discipline is practised in this world, because it secures the attainment of whaever one may wish to enjoy in the next world.

கூ * தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்பற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

பரி.—(இ-ள) தங்கருமஞ் செயவாராவார் துறந்து தவத்தைச்செய் வார்; † அவரையோழிந்த பொருளின்பங்களிற் செய்வார் அவற்றின் கண் ஆசையாகிய வலையுடபடடுத் ‡ தமக்குக் கேடுசெய்வார்,(எ - று).

அநித்தமாய | மூவகைத் துன்பத்தாய் உயிரின்வேறுய உடற்கு ணியலோக வாசமென்று மிவை யெல்லாம தவத்தினுலேயே சித்திக் கின்றன; எனினின, அவற்றிற்குத தவமே காரணமல்லவா'' என்று கூறுவதாலும் விளங்குமென்க.

தவம் காமியத்தவம், நிஷ்காமியததவமென்றிருவகைத்தாம்; காமியத் தவம் சாபாதுக்கிரகதத்திற் கேதுவும், நிஷ்காமியத் தவம் தத்துவ ஞானத் திற் கேதுவுமாம். நிஷ்காமியத்தவம் தத்துவ ஞானவாயிலாக மோக்ஷ வேதுவாமென்பதிங குணரதத்தக்கது.

''நிலையாமை நோய்மூப்புச சாக்காடென் றெண்ணித, தலையாயார் தங்கருமஞ் செய்வார்'' என்பது நாலடி.

† அவரை - தவஞ்செய்வாரை.

‡ தமக்குக் கேடுசெயவார் - தமக்கு மருத்துவர் (வைத்தியர்) தாமென் றறியாது தங்களுக்குத் தாங்களே கெடுதிசெய்துகொள்ளு மவிவேகிகள்.

| மூவகைத துன்பததாய் - அத்தியாத்மதுக்கம், அதிபூதத்துக்கம், அதிதைவ துக்கமென்னு மூவகைப் பிறவித்துன்பங்களே யுடையதாய்.

(1) ரோகம் தாகம் பசிமுதலியவற்று லுண்டாகுந் துக்கம் அத்தியா த்ம துக்கமாம். ஆத்மாவை யாசையித்திருக்கும் ஸ்தூல சூட்சுமசரீரம் அத்யாத்ம மெனப்படும்; அதலு லுண்டாகும் துக்கம் அத்தியாத்ம

வருத்தம் வருமென் றெழியாது தவத்தினைச்செய்க, பிறப்புப் † பிணி () மூப்பிறப்புக்களான் ‡ அநாதியாகத் தன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடுபெற மாகலின், தவஞ்செய்வாரைத் 'தங்கருமஞ் செய்வார்' என்றும், கணத்துள் அழிவதாய நிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவியுந் தின்புறத்தக்க பாவஞ்செய்து கோடலின், $ அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றும் கூறினர். * மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

தேவி.—(இ-ன்.) தங்கருமஞ் செய்வார் - தமதுகருமத்தைச் செய்பவராவார், தவஞ்செய்வார் - (துறந்து) தவத்தைச் செய்வார், மற்றல்லார் - அவரை யொழிந்த பொருளின்பங்களைச் செய்வார், ஆசையுட்பட்டு - (அப்பொருளின்பங்களிடத்து) ஆசையாகிய வலையிலகப்பட்டு, அவஞ்செய்வார் (தமக்குக்) கேடுசெய்பவராவார், (எ-று).

அநித்தியமாய்த் தண்ணெப்பற்றி வருவன முதலிய மூவகைத் தின்பத்தை யுடையதாய் உயிரின் வேறுயுள்ள உடம்பிற்கு வருத்தம் வருமென்று விடாமல் தவத்தைச்செய்யப், பிறப்பு, பிணி, மூப்பு, இறப்புக்களால் அநாதியாகத் தன்பமடைத்து வருகிறஉயிரானது ஞானம் உண்டாகப்பெற்று மோக்ஷமடையும் ஆதலால, தவஞ்செய்வாரைத் 'தங்கருமஞ்செய்வார்' என்றும், கணப்போதில் அழிவதாகிய நிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவிகளிலும் துன்பமடையத்தக்க பாவஞ் செய்து கொளுதலால், அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றும் சொல்லினர். மற்று-வினைமாற்றுப் பொருளது.

(க - து). துறவறத்தை மேற்கொண்டு தவஞ்செய்பவர் தங்கருமஞ்செய்பருமாகிய ஏனையோர் அவஞ்செய்பவரு மாவர்.

6. Those discharge their duty who perform austerities; all others accomplish their own destruction, through the entanglement of the desire of riches and sensual pleasure.

துக்கமெனப்படும் (2) திருடர் புலி சர்ப்பம் முதலியவற்று லுண்டாகுந் துக்கம் அதிபூத துக்கமாம். சரீரத்திற்கு வேறுயும் கண்ணிற்கிரியத் திற்கு விஷயமாயு மிருப்பது அதிபூதமெனப்படும்; அதனலுண்டாகும் துக்கம் அதிபூததுக்க மெனப்படும். (3) யட்ச ராட்சதப் பிரேதக் கிரகாதி களாலும் சீதவாத (காற்று) ஆதபங் (வெயில்) களாலு முண்டாகும் துக்கம் அதிதைவதுக்கமாம். சரீரத்திற்கு வேறுயும் கண்ணிற்கிரியத்திற்கு விஷயமாகாமலு மிருப்பது அதிதைவமெனப்படும்; அதனலுண்டாகுந் துக்கம் அதிதைவ துக்க மெனப்படும்.

† தன்னே யுடையவரைத் தனது வல்லமைக்கேற்ப வேறுகாரியத்தில் பிரவேசிக்காவாறு பிணித்தலின் (கட்டலின்) நோய் பிணியென்று சொல்லப்பட்டது.

() மூப்பு - முதுமை (கிழத்தனம்) ‡ அநாதி - தொடக்கமில்லாதது.

அல்லாதாரை - தவஞ்செய்யாதவரை.

தவஞ்செய்தலென்னும் வினையை மாற்றித் தவஞ்செய்யாமையென்னும் வினையைத் தந்தமையின், மற்று வினைமாற்றுமாயிற்று.

எ. 0 சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

பரி.—(இ - ள்). தீயின்க ‖ ணேடும் பொன்னுக்கு ‡ அது சுடச் சுடத் தன்னெடுகலந்த தும்ற நீங்கி ஒளிமிதமாறுபோல, தவஞ்செய்ய வல்லார்க்கு அதனன் வருந்துன்பம் வருத்த வருத்தத் தம்மோடு கலந்த பாவ நீங்கி ஞானமிதம், (எ - று).

0 'சுடச்சுடரும் பொன்போல்'என்ற ராயினும்,கருத்துகோக்கி, இவ்வா றுரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின் ' ஒளி ' எனப்பட்டது.

தெளி:—(இ - ள்). சுட-(புடத்தீயானது) சுடச்சுட, பொன் சுடரும் போல் - (அப்புடத்தீயில் உருகியோடும்) பொன்னுக்கு (தன்னெடுகலந்த மாசுநீங்கி) ஒளிமிகுகின்ற (விதம்) போல, நோற்கிற்பவர்க்கு-தவஞ்செய்ய வல்லவர்க்கு, துன்பம் - (அத்தவத்தால் வருகிற) துன்பம்,சுடச்சுடவருத்த வருத்த, ஒளிவிடும் - (தம்மோடுகலந்த பாவமொழிந்து) ஞானமிகும்,(எ-று).

ஒளி - பொன்னுக்குக் காந்தியும், தவஞ்செய்வோர்க்கு ஞானமுமாம். காந்தி மிகுந்தோறும் பொன்னுக்கு மாசு நீங்குதல்போல ஞானமிகுந்தோறும் தவத்தினர்க்குப் பாவம் நீங்குமென்க. விளக்கு முதலிய ஒளிபோலப் பொருள்களை விளக்கலால், ஞானம் ' ஒளி ' என்று கூறப்பட்டது.

(க - து). தவத்தை மிகுதியாகச் செய்கின்றவருக்குப் பாவம் நீங்கித் தத்துவ ஞானமுண்டாம் என்பது.

---

0 இக்குறள் மனுதரும சாஸ்திரம் ஆறாவதத்தியாயத்தில். " எப்படி சுவர்ண முதலியனவற்றி லழுக்கு நெருப்பிற் காய்ச்சினால் போய்விடுமோ, அப்படியே தேகத்தைச் சார்ந்த இந்திரிய தோஷங்களெல்லாம் பிராணயாமத்தால் (இரேசக பூரக கும்பகஞ் செய்தலால்) போய்விடுகின்றன" என்று கூறுவதற் கொத்திருத்த லறிக.

‖ ஓடும் - உருகியோடுகின்ற. ‡ அது - புடத்தீ.

0 'சுடச்சுடரும் பொன்போல்' என்று கூறினு ராயினும் புடத்தீ தபிக்கத் தபிக்கப் பொன்னுனது மாசுநீங்கி (மாற்றுயர்ந்து) ஒளிமிகுவது போல, தவம் அதிகப்பட அதிகப்பட்ட தபோதனர்கள் மனமாசொழிந்து (சாபாநுக்கிரகமாகிய பெருமைமிக்கு) ஞானம்வினங்கப் பெறுவரென்னும் கருத்து நோக்கி, சுடச்சுட நோற்கிற்பவர்க்கு என்று உவமேயத்திலுள்ள சுடச்சுட என்னும் அடுக்கிற் கியையச் சுடச்சுடரும் பொன்போல் என்னும் உவமானத்திலும் சுடச்சுடச் சுடருமெனச் சுடவென்ப தொன்றைக் கூட்டி யிவ்வாறு (நீயின்கணேடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னெடு கலந்த குற்றநீங்கி ஒளிமிகுமாறுபோலஎன்று) சொல்லப்பட்டது. அடுக்குகள் - தொழிற் பயில்வுப் பொருளில் வந்தன.

7. Bright as gold which has been purified in the fire will those shine, who have endured the burning of pain in frequent austerities.

அ. † தன்னுயிர் தானறப் பெற்றுனே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

பரி.—(இ - ள்). தன்னுயிரைத் தானே தனக்குரித்தாகப் பெற்றவனே அது பெறுதனவாகிய மன்னுயிர்களெல்லாந் தொழும், (எ - று).

தனக்குரித்தாதல் - தவமாகிய தன்கருமஞ் செய்தல். ‡ *அதனினுங்* குப் பெறுதற்கரியது இன்மையின 'பெற்றுனே' என்றார். ¶ *அது* பெறு *தனவென்றது* $ ஆசையுட்பட்டு o அவஞ்செயு முயிர்களே. * சாபமும் அருளுமாகிய விரண்டாற்றலு முடைமையின் 'தொழும்' என்றார்.

தேவி.—(இ - ள்) *தன்னுயிர்* - தனது உயிரை, *தானற* - (தான்) *தனக்கு உரியதாக. பெற்றுனே* - பெற்றவனே, *எனைய* - *அது பெறுதன* வாகிய, *மன்னுயிரெல்லாம்*- நிலைபேறுடைய உயிர்களெல்லாம், *தொழும்* - வணங்கும, (எ - று).

தனக்குரியதாதல் - தவமாகிய தன்கருமஞ் செய்தல். அத்தவஞ்செய் தலேக்காட்டிலும் பெறுதற் கருமையானது பிறிதொன் றில்லாமையால் 'பெற்றுனே' என்றார். அது பெறுதனவென்றது ஆசையாகியவலியிலகப் பட்டுத்தமக்குக் கேடுசெய்யு முயிர்களே. சாபானுக்கிரகமென்னு மிரண்டு வல்லமையும் பெற்றிருத்தலின் 'தொழும்' என்றார்.

† இளமை கழியாநின்றது; மூப்புப்பிணியோடு வாராநின்றது என்று கருதிப் பேரறிவுடையராய்த் தவகருமமாகிய தவத்தைச செய்பவர்கள் இந் திரியங்களின் வயமாகாது இந்திரியங்களைத் தம்வயப்படுத்தி யிருத்தலி ன், அவர்கள் '' இம்மைக்கு மும்மைக்கு தமையுடைமை தலே '' என்று பழமொழி கூறியவாறு தம்மைத் தமக்கேயுரிமையாகப் பெற்றிருக் கின்றார்க ளென்பதைத் ' தன்னுயிர் தானறப் பெற்றுனே ' என்பது குறிப் பிக்கின்ற வாறுகாண்க. அறப்பெறுதல் - முற்றுந் தனக்கே உரியதாகப் பெறுதல்.

‡ *அதனினுங்கு* - தவமாகிய தன்கருமஞ் செய்தலேக்காட்டிலும்.

¶ *அது* - தவமாகிய தன்கருமஞ் செய்தல். $ ஆசை - பொருளின் பங்களின் மேலுள்ள விருப்பம். o அவம்—கேடு.

தனஞ்செய்வான் (ஒன்றுர்த் தேறலுமாகிய) சாபமும் (உவத்தா ரை யாக்கலுமாகிய) அருளு (அனுக்கிரகமு) மாகிய இரண்டு வல்லமையு முடைத்தா யிருத்தல்பற்றி, அவனைத் தவஞ்செய்யு முரிமைபெறுதி தமக்குக் கேடுண்டாக்கும் வினையைச் செய்யும் மாக்கள் (தம்முயிரைத் தமக்கு உரிமையாகப் பெறுமை காரணமாக) வணங்குகின்றனரென்க

(க-து). தன்னுயிரைத் தனக்குரியதாகப் பெற்றவனே யெல்லா வுயிரும் வணங்கும் என்பது.

8. All other creatures will worship him who has attained the control of his own soul.

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னுற்ற றலைப்பட் டவர்க்கு.

பரி.—(இ - ள்). * கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், தவத் தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு, (எ - று).

சிறப்பும்மை: —† அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங் கைகூடுமென ‖ எச்சவும்மையாக வுரைப் பினும் அமையும். ஆற்றல் - சாபவருள்கள். இவை நான்குபாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

தேவி. —(இ-ள்). கூற்றம் - யமனை, குதித்தலும் - கடத்தலும், கை கூடும்-உண்டாவதாம், நோற்றலின் - தவஞ்செய்வதால் (வரும்), ஆற்றல்-வல்லமையை, தலைப்பட்டவர்க்கு-உடையவர்க்கு, (எ-று).

குதித்தலுமென்னும உயர்வு சிறப்பும்மை அது கூடாமையை விளக் கியது; மன்னுயிரெல்லாந் தொழுதலே யல்லாமல் யமனைக்கடத்தலாகிய இதவும் சித்திக்குமென்றிறந்ததழீ இய எச்சவும்மையாகக் கூறினும் பொருந்தும். ஆற்றல் - சாபானுக்கிரகம். இவை நான்கு பாட்டாலும் தவஞ் செய்வாரது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க – து). தவவலிமையுடையோர் யமனையும் வெல்லுவர்.

9. Those who have attained the power which religious discipline confers, will be able also to pass the limit of Yaman, the God of death.

க0. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

* தவத்திற் சிறந்தவர் யமனை வெல்லுதலும் கூடு மென்பது டலேயா முயற்சி களைகணு ஞ்ழின், வலிசெந்தும் வன்மையு முண்டே-யுல கழியப், பான்முனை நின்று மறலி யுயிர்குடித்த, கான்முனையே (மார்க்கண் டனே) சாலுங் கரி" என்று நீதிநெறிவிளக்கங் கூறுவதாலும், கூர்ம புராணத்தில் வுள்ள சுவேதன் சரித்திரத்தாலு மறிதற் பாற்றும்.

† அது கூடாமை - யமனிடமின்றுந் தப்புதல் முடியாமையை.

‖ எச்சவும்மையாவது சொல்லப்படாது குறைத்து நின்றபொருளை தீதும் உம் என்னும் இடைச்சொல்லாம்.

பரி.—(இ-ள்.) உலகத்துச் செல்வர்கள் சிலராக தல்கூர்ணார் பல ராதற்குக் காரணம் யாதெனின், அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல், (எ-று).

செல்வம் நல்குரவென்ன ஈண்டு † அறிவினது உண்மை யின்மை களையுங் குறித்து நின்றன; என்னை? ‡ "நுண்ணுணர் வின்மை மறமை யஃதுடைமை,பண்ணப் பிணித்த பெருஞ்செல்வம்" என்றாகலின், கோற் பார் சிலரெனக் காரணங் கூறினமையான், காரியம் வருவித்துரைக்கப் பட்டது. ¶ தவஞ்செய்யாதவர்க்கு இம்மையின்பமும் இல்லையென இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்.) (உலகத்திற் செல்வர்கள் லொரு) இலர்-தரித்திரர், பலராகிய காரணம்- பலராதற்குக் காரணம், (யாதென்றால், அக்காரணம்), கோற்பார் - தவஞ்செய்வார், லெர் - லெராக, நோலாதவர் - அத்தவஞ்செய் யாதவர், பலர்- பலராதல், (எ-று).

இங்குச் செல்வம் நுண்ணறிவையும், தரித்திரம் அந்நுண்ணறிவில் லாமையையுங் குறித்து நின்றன. கோற்பார் லெரெனக் காரணத்தைக் கூறினமையின் அதன் காரியமாகிய செல்வர்கள் லெராகவென்பதுவருவித் துச்சொல்லப்பட்டது. இதனால் தவஞ்செய்யாதவர்க்கு இம்மை யின்பமும் இல்லையென்று அவரது தாழ்வு சொல்லப்பட்டது.

(கு-து). செல்வர் சிலரும் தரித்திரர் பலருமாக இருத்தற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலரும் அது செய்யாதார் பலருமாக இருத்தலேயாம் என்பது.

10. Because there are few who practise austerity and many who do not, there are many destitute and few rich men in the world.

† அறிவினது உண்மையின்மைகளையும்-அறிவுடைமையறிவில்லாமை களையும்.

‡ காலடியார் அறிவின்மை, க இதன் பொருள். தப்பமாகியவறிவில் லாமை தரிதரிரமாம்; அவ்வறிவுடைமை மிகவும் வளர்ந்த பெரியசெல்வ மாம் என்பது.

¶ தவஞ்செய்யாதவர்க்கு மறமை யின்பமேயன்றி இம்மையின்பமு மில்லையென்று கூறியதனால் தவஞ்செய்தவர்களுக்கே இம்மையின்பமும் மறமையின்பமும் உண்டாமென்பது பெற்றாம். பெறவே, தவத்திற்கு மறமையின்பமேயன் றி யிம்மையின்பமும் தருந் தன்மை யுண்டென்பது தேற்றமாயிற்று. 'இலர்பலர்' என்னுமிக் குறளினால் தவஞ்செய்யாதார் பல ராயிருத்தலால் தரித்திரர் பலராயிருக்கிறரென்றும், தவஞ்செய்வார் லெரா யிருத்தலால் செல்வர் லெராயிருக்கிறரென்றும் பெறப்படுதலினால், வெவ்வே முடைமைக்கும் அஃதில்லாமைக்கும் காரணம் முறையேதவமும் அதின்

நான்காம் அதிகாரம்

கூடாவொழுக்கம்.—*On Inconsistent Conduct.*

பரி.—அஃதாவது தாம் விட்ட † காமவின்பத்தை உளளின்மையிற் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்றுதவத்தோடு பொருந்தாத்தாய நியவொழுக்கம். ‡ அது விலக்குதற்து, இது தவத்தின் பின் வைக்கப்பட்டது.

தெளி.—*அஃதாவது தாம் வெறுத்து விட்ட காமவின்பத்தை ஸ்திர புத்தி யில்லாமையினால் பின்னும் விரும்பும்வழி தோன்ற அவ்வழியே கைக்கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாகிய நியவொழுக்கம். அதனை விலக்குதற்கு இக்கூடாவொழுக்கம் தவத்தினபின் வைக்கப்பட்டது.*

க. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் $ பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

பரி.—(இ - ள்). வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்த வொழுக்கத்தை, உடம்பாய் ஆவனேமே கலந்து நிற்கின்ற பூத ங்களைந்தும் கண்டு, தம்முள்ளே நகும், (எ - று).

*காமம் தன் கண்ணே தோனறி கலியாகிற்கவும் அதனது இன் மைகூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் 'வஞ்சமனம்' என்றும், அக்கலிவு பொறக்க மாட்டாதொழுகுவ களவொழுக்கதனைப் ' படிற்றொழுக்கம்' என்றும். * உலகத்துக் களவுடையார் பிறரறியாமற் செய்வனவற்றிற்கு*

மையுமா மென்பது பெற்றும். "செய்தீ வினையிருகத தெயவத்தை நொக் தக்கால், எய்த வருமோ விருதிதியம்" எனபது நல்வழி.

† காமவின்பம் - ஒருகாலத் தொருபொருளால் ஐமபுலனகளும் அனு பவித்தற் றெப்புடையதாய (மகளிரது புணாசியால் வரும்) சிற்றின்பம்.

‡ *அது விலக்குதற்கு - தவத்தோடு பொருந்தாததாகிய நியவொழுக் கத்தை நீக்கும் பொருட்டு*

$ நாலடியார் "துய்த்தக்கழியான்" என்னுஞ் செயயுளில் "வைத்த, பொருளு மவனை நகுமே யுலகத், தருளு மவனை நகும்" என்ற கூறுகின் றது. ‡ இது செய்யாதது செய்தபோற் கூறும் இலக்கணையாம்.

* *உலகத்துக்களவுடையார் பிறரறியாமற் செயவனவற்றிற்கு ஐம் பெரும் பூதங்கள் சான்றுடலின் எனபது "வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும், வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த, வெங்கு முள [illegible] ரென்றஞ்சி, யங்கங் குலைவ தறிவு" என்று நீதி [illegible] கூறுவதாலு மறிதற்பாற்றும்.*

† ஐம்பெரும் பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்ற வார்த்தையுமறிந்து, அவனறியாமற் தம்மூன்னே நகுதலின் 'அகத்தேநகும்' என்றல் கூறினர். ‡ செய்தகுற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து.

தெளி.—(இ-ள்). வஞ்சமனத்தான் - வஞ்சனைபொருந்திய மனத்தையுடையவனது, படிற்றொழுக்கம் - மறைந்த ஒழுக்கத்தை, பூதங்களைந்தும்- (உடம்பாய் அவனெடு கலந்து நிற்கின்ற) பஞ்சபூதங்களும் (கண்டு), அகத்தே—(தம்) உள்ளே, நகும்- சிரிக்கும, (எ - று).

காமம் தன்மனத்தினிடத்தே தோன்றி வருத்திக் கொண்டிருக்கவும் அக்காமத்தினில்லாமையைச் சொல்லிப் புறத்தாரை வஞ்சித்தலால் 'வஞ்சமனம்' என்றும், அவ்வருத்தம் பொறக்கமாட்டாது செய்யுங் கள்ளச்செயலைப் 'படிற்றொழுக்கம்' என்றும், உலகதநிற்களவுடையவர் பிறர் அறியாமற்செயயுங் காரியங்களுக்கு ஐம்பெரும் பூதங்கள் சாட்சியாகலின், அச்செயலையும் அவன மறைக்கின்ற விதத்தையும் அறிந்து, அவன் அறியாமல் தம்முன்னே சிரித்தலால் 'அகத்தேநகும்' என்றும் சொல்லினர். செயதகுற்றம் மறையாதாகலின், தவஞ்செயவானுக்கு அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து.

(க - து). வஞ்சனைபொருந்திய மனமுடைய துறவியின் கனவொழுக்கத்தைக் கண்டு அவனது உடல் மயமாயுள்ள ஐம்பெரும் பூதங்கள் தம்முன்னே சிரிக்கும என்பது.

1. The five elements of his body will laugh within him, at the feigned conduct of the deceitful-minded man.

உ வாணயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

† ஐம்பெரும் பூதங்கள் (பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம்) சடமா (தம்மையும் பிறவற்றையும் அறியாமலிருப்பதா) கலின், அவைசான்று (சாட்சியா)தல் கூடாது; கூடாமையின், அவற்றின் அதிதேவதைகளைக் கொள்க " ஐம்பூதம் பார்ப்பார் பசுத்திங்க ணுயிறு, தம்பூத மெண்ணு திகழ்வானேற் றன்மெய்க்க, ணேம்பூத மன்றே கெடும்" என்றுள்ள ஆசாரக்கோவையின்செய்யுளினுரையில் 'ஐம்பூத மன்றே கெடும்'என்பதற்கு "ஐந்து பூதத்தையுமுடைய தெய்வங்கள் அன்றே கெட்டகன்று போம்" என்று பொருள்கூறப்பட்டிருப்பதுமிவ கறியத்தக்கதாம். பிருதிவிக்குப் பிரமனும், அப்புவிற்கு அரியும், தேயுவிற்கு அரனும், வாயுவிற்கு மகேசனும், ஆகாயத்திற்குச் சதாசிவனும் அதி தேவதைகளாமென்க.

‡ செய்த குற்றம்மறையாது என்பது "மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்,பறைவதறிதாய் கோடிப் பரக்குங் கழிமுடைப்,புன்புலா னுற்றம் பூதம்பொறித்து மூடினுஞ், சென்றதைக்குஞ் சேயார் முகத்து" என்பது நீதிநெறிவிளக்கம் கூறுவதாலு மறிதற்பாற்றும்.

பரி[illegible](இ-ள்). ஒருவனுக்கு வான்போ லுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும், தான் குற்றமென் றறிந்த அதன் கண்ணே தன் னெஞ்சு தாழுமாயின், (எ - று).

† வானுயர் தோற்றமென்பது ‡ "வான்றோய்குடி" என்றற்போல இலக்கணைவழக்கு. ¶ அறியாது செய்தகுற்றமல்லது அறிந்து வைத்துச் செய்தகுற்றங் கழுவப்படாமையின், நெஞ்சுகுற்றத்தாயேயிடும்; விடவே, நின்றவேட மாத்திரத்திற்குப் புறதாரை வெருட்டுதலே யல்லது வேறு பயனில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ள்). தான் அறி-தான் (குற்றமென்று) அறிந்த, குற் றம் - (அக்) குற்றத்திலே, தன் னெஞ்சம் - தனது மனம், படின் - தங்கு மாயின், (ஒருவனுக்கு), வானுயர் - வானபோலுயர்ந்த, தோற்றம் - தவ வேடமானது, எவன் - என்னபயனை, செய்யும்—, (எ - று).

கம்பீரமாய் விளங்குந் தவவேடத்தை வானுயர் தோற்றமென்பது இலக்கணை வழக்காம். அறியாது செய்த குற்றத்திற் கல்லாமல் அறிந்து செய்த குற்றத்திற்குப் பிராயச்சித்தம் இல்லாமையால், நெஞ்சு குற்றமுடை யதாயே விடும்; விடவே, நின்ற தவவேடமாத்திரத்திற்குப் புறத்தாரை அஞ்சச்செய்தலே யல்லாமல் வேறு பிரயோஜனம் இல்லை யென்பதாம்.

(க–து). தான்குற்ற மென்றறிந்த விஷயத்திற் செல்லும் மன முடையவனது தவவேடமானது அவனுக்கு யாதுபயனைச் செய்யும் என்பது.

2. What avails an appearance of sanctity high as heaven, if the mind suffer the indulgence of conscious sin?

கூ. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

† வானுயர் தோற்றமென்றது - மிகப்பொலிவுள்ள தவவேடத்தை. ‡ புகழ்திரம்பிய குடியை வான்றோய்குடி (உயர்ச்சியால் வானிற்றோய்ந் தகுடி) என்றற்போல இலக்கணை வழக்காமென்க. இலக்கணையாவது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொருபொருட்குத்தற்றரைப்பது. இக்குவானின் உயர்வைத் தவவேடத்திற்குத்தற்று, வான்போலுயர்ந்த தவவேடம் என்று கூறப்பட்டது. வழக்கு - சொல் நடை, அஃதாவது வியவகாரத்தில் வழங்கப்படுவது. (காலடி-குடிப்பிறப்பு-2.)

¶ அறியாது செய்த குற்றமல்லது அறிந்து வைத்துச்செய்த குற்றங் கழுவப்படாமையின் - அறியாமற் செய்த குற்றம் பிராயச்சித்தத்தால் நீக் கப்படுவதல்லாமல் அறிந்து செய்தகுற்றம் பிராயச்சித்தத்தால் நீக்கப்படா மையால், மனுதர்மசாஸ்திரம் பதினொன்றாவது தத்தியாயத்தில் "அறியாமை யினால் பிராமணனைத செய்ததற்குப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டது.

பா.—(இ - ன்). மனத்தைத் தன்வழிப்படுத்தும் வல்லமை யில்லாத இயல்பினை யுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான் நினைத்தவழிப்படுதல் பசு காவலர் கடியாமல் புலியின் தோலைப் போர்த்துப் பயிர்களை மேய்ந்தாற் போலும் (எ - று).

‡ இவ்பொருளுவமை. ¶ வலியிலேமையாவென்ற அடையானும், மேய்ந்தற்றென்னுந் தொழிலுவமையானும், வல்லருவத்தோடு மனவழிப் படுத்லென்பது பெற்றும். காவலர் கடியாமை - புலி புல்லின்று தென்பதனாலும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லருவங்கோடற்குப் பயன் † அன்னகாரணங்களான் உலகத்தார் அபிமையாயிற்று. இவ்வாறு தன்க்குரிய இல்லாமையுந் துறந்து வலியுமின்றிப் பிறரியாத வல்லருவமும் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது தன மனமோடிய வழியே ஓடிமறைத்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல், பெற்

டத்திலுல் வேண்டுமென்ற செய்த பிரமஹத்திக்குப் பிராயச் சித்தமே விதிக்கப்படவில்லை" என்று கூறுவது மிக்கறியத்தக்கதாம்.

‡ இல்பொருளுவமையாவது எக்காலத்து மில்லாத பொருளே யுவமானமாக வெடுத்துரைப்பது. இல்பொருளுவமை யெனினும் அபூதவுவமை யெனினு மொக்கும். இலக்கணவிளக்கம் "அவனியி லில்லா வண்ணதோர் பொருளே,யுவமைசெய்திரைக்கு மபூதவுவமையும்"என்று கூறிற்று. இங்குப் பசு புலியின் தோலைப்போர்த்துப் பயிரை மேய்த லெக்காலத்து மில்லாமையின் 'பெற்றம், புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று' என்பது (வண்பாற்கண், வற்றன் மரந்தளிர்த் தற்று' என்பதுபோல) இல் பொருளுவமை யாயிற்று

¶ வலியிலேமையாவென்ற அடையானும் (இங்கு வலியில் என்பது அடை. அடையெனினும் விசேடண மெனினும் ஒக்கும்), மேய்ந்தற்றென்னுந்தொழிலுவமையானும் (இதிலுமேயதல் என்னுந் தொழில் உவமானமாகவந்தது தொழிலுவமானமாக வருவது தொழிலுவமையாம்.) வல்லருவத்தோடு (மனத்தைத் தம்வழிப்படுத்தும் வல்லமை யுடையவரது தவவேடத்தோடு) மனவழிப்படுத (மனஞ்சென்றவழியே மகோகிக்கிரக மூடையவரதுதவவேடத்தைக்கொண்டிருப்பவன்செல்லுத)லென்பதுபெற்றும். அஃதாவது மகோகிக்கிர மில்லாமை யென்னும் விசேடணத்தானும் பசு புலியின் தோலைப்போர்த்து மேய்ந்தாற் போலும் என்னுந் தொழிலுவமையானும் மகோகிக்கிர மில்லாதவன் தவவேடத்தோடு நின்ற மனஞ் சென்றவழியே செல்லுகிறனென்பது. "வேட நெறியில்லார் வேடம்பூண் டென்பயன்" என்புள்ள பிரயோகமு மிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

† அன்னகாரணங்களான் உலகத்தார் அபிமை யாயிற்று - புலி புல்லின்றுதென்பதனாலும் கொல்லச் சென்றால் கொல்லுமே யென்னும் அச்சத்தாலும் பசுவைக் காவற்காரர் தாக்காமை போன்ற தவத்தினர் காமம் வீழ்ப்பவுவாசென்பதனாலும் கொல்லச்சென்ற மிளாரித்தான் சாபம் தேடுமே யென்னும் பயத்தாலும் உலகத்தார் சுத்தேயமை யாயிற்று.

நம்மனக்குரிய புல்லே லிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற் போலுமென்ற உவமையானறிக.

தேனீ.—(இ-ள்). வலி - (மனத்தைத் தன்வயப்படித்தியடக்கும்)வல் லமை, இல் - இல்லாத, நிலைமையான் - இயல்பினையுடையவன், வன்னெஞ் சம் - (மனத்தைத் தம் வயப்படுத்தி யடக்கிய) வல்லமையை யுடையவரது தவவேடத்தை, (கொண்டு தான் அம்மனம்போன வழியே போற்றல்), பெற்றம் - பசுவானது, (காவற்காரர் தூரத்தாதிருக்கும்படி),புலியின்றோல் - புலியினது தோலே, போர்த்து - போர்த்துக்கொண்டு, மேய்க்தற்று - (பயி ரை) மேய்க்தாற் போலும், (எ - று).

புலியின் தோலைப் போர்த்துப் பயிரை மேயும் பசு என்ற மின்மை யின், 'பெற்றம் தற்று' என்பது இல்பொருளுவமையணி. 'வலியில்' என்னு மடையாலும், 'மேய்க்தற்று' என்னுந் தொழிலுவமையாலும் (வலி யில் நிலைமையான்) வல்லுருவத்தோடு மனம் போன வழியே போதலென் பது பெறப்பட்டது. காவலர் தூரத்தாமை - புலி பசித்தாற் புல்லைத் தின் ஞதென்பதனாலும், (நெருங்கிச் சென்றுற் கொல்லுமே யெனலும்) பயத் தாலுமாம்; ஆகவே, வல்லுருவங் கொள்ளுவதற்குப் பயன் அத்தன்மைய வாயகாரணங்களால் உலகத்தார் சந்தேகவ கொள்ளாமை யாயிற்று. இப் படி தனக்குரிமையாயுள்ள மனவியையுக் துறந்து (மனத்தைத் தன்வயப் படுத்தும்) வல்லமையுமில்லாது பிறர் சந்தேகங் கொள்ளாத வல்லுருவமுங் கொண்டு நின்றவன் (கூடா வொழுக்கத்தான் (மனவழிப்படுதலாவது தன் மனஞ்சென்றவழியே சென்று (தவவேடத்தில்) மறைந்து நின்று பிறர்க்கு ரிமையாயுள்ள பெண்களே விரும்புதலாம். அத்தன்மையதாதலிப் பசு தன க்குரிமையாயுள்ள புல்லே (மேயதலே) லிட்டுப் பிறர்க் குரிமையாயுள்ள பயி ரை மேய்க்தாற் போலு மென்ற வுவமானதனிலுலறிக.

(கு-து). மநோநிக்கிரகஞ்செய்யும் வலிமை யில்லாதவன் தவ வேடம் பூண்டு தினனே புரிதல் பசு புலியின்தோலைப் போர்த்துப் பயிரை மேய்க்தாற்போலும் என்பது.

3. The assumed appearance of power, by a man who has no power to restrain his senses and perform austerity, is like a cow feeding on grass covered with a tiger's skin.

4. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

பரி.—(இ - ள்.) * அவ்வலியினிலைமையான் தவவேடத்தினிக்ண் ணே மறைந்து நின்று தவமல்லவற்றைச் செய்தல் வேட்டுவன்புதலின் கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற்போலும், (எ-று.)

* அவ்வலியினிலைமையான் என்றது மேற்குறளிற் கூறிய வலியி னிலைமையானே.

† தவம் - ஒருபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது பிறர்க்குரிய மகளிரைத்தன்வயத்தாக்குதல். ‡ இதுவும் இத்தொழிலுவமையானாகிக.

தெவி.—(இன்.) (அல்வல்லமையில்லாத நிலைமையான்) தவம் - தவ வேடத்திலே, மறைத்து - மறைத்துநின்று, அல்லவை-தவமல்லாதவற்றை, செய்தல்—,வேட்டவென் - வேடன், புதல்-புதலிலே, மறைந்து - மறைத்து நின்று, புன்-பறவைகளை, நிமித்தற்று - பிடித்தாற்போலும், (எ-று).

தவமென்பது தவவேடத்திற்காதலின் ஒருபெயராம். தவமல்லவற் றைச்செய்தலாவது பிறர்க்கு உரிய மகளிரைத் தனக்கு வசமாகும்படிசெய் தல். இப்படி செய்தலென்பதும் இத்தொழி லுவமையி னறிக.

(க—து). ஒருவன் தவவேடத்தில் மறைந்து நின்று பாவகா ரியங்களைச் செய்தல் வேடன் புதலில் மறைந்து நின்று பறவைக ளைப் பிடிப்பதுபோலுமாம் என்பது.

4. He who hides himself under the mask of an ascetic and commits sins, is like a sportsman who conceals himself in the thicket to catch birds.



இ. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மேற்றேற்றேன்
றேதம் பலவுந் தரும்.

பரி:—(இ - ள்) தம்மைப் பிறர் நன்கு மதித்தற்பொருட்டே யாம் பற்றற்றே மென்று சொல்வாரது மறைந்தவோழுக்கம் அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும், பின் என்செய்தேம் என்செய்தே மென்று தாமேயிரங்தும்வகை, அவர்க்குப் பலதுன்பங்களையுங்கொ டுக்கும்,(எ - று.)

சொல்லளவல்லது பற்றருமையின் 'பற்றற்றே மென்பார்' என்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் நிற்பதாய பாவத்தைச் செய்வார் § அதன்வினைவின்கண் அந் தோவினையேயென்றழுங்குவராகலின்'எற்றெற்று' என்றும் கூறினர். இ னையைந்து பாட்டானும் கூடாவொழுக்கத்தின் இழுக்கம் கூறப்பட்டது.

---

† தவமென்னும் முதலின்பெயர் அதனுறுப்பாகிய வேடத்திற்காத லால் முதலாகுபெயராம்.

‡ இதுவும் (தவமறைந்தல்லவை செய்தலும்) இத்தொழிலுவமை யான் (புதன்மறைந்து வேட்டுவன்புட்நிமித்தற்று என்னும் தொழிலு வமையால்) அறிக. இங்ஙப் புட்நிமித்தற்ற லென்னுந்தொழில் உவமான மும், அல்லவை செய்தல் உவமேயமுமாம்.

§ அதன்வினைவின்கண்-அப்பாவத்தின்பயனாகிய துன்பத்தை யனுப விக்கும்போது.

தெளி.—(இ-ன்). (பிறர் தம்மை வன்கும்பிடத்தற் பொருட்டே) பற்றற் றேமென்பார்-(யாம்) பற்றற்றேமென்றசொல்லுவாரது, படிற்றொழுக்கம்-மறைந்தவொழுக்கமானது, (அப்பொழுது இனிதுபோலத்தோன்றுமாயினும்), எற்றெற்றென்று - (பின்) என்செய்தோம் என்செய்தேமென்று; (தாமே இரங்கும்படி), எதம்பலவும் - (அவர்க்குப்) பல துன்பங்களையும், தரும் - கொடுக்கும், (எ-று).

சொல்லன வில்லாமல் பற்றுநீங்காமையால் 'பற்றற்றேமென்பார்' என்றும், சிறியதாய்க் கணப்பொழுதள்ளே அழிவதாகிய (காம) இன்பத் தின் பொருட்டுப் பெரியதாய் நெடுங்காலம் நிற்பதாகிய பாவத்தைச்செய் வோர் அப்பாவத்தின் பயனாகிய துன்பத்தை யனுபவிக்கும்போதையோ தீவினையே யென்றழுவா ராதலின் 'எற்றெற்று' என்றும் சொல்லினர். இவையைந்துபாட்டாலும் கூடாவொழுக்கத்தினதருற்றம்சொல்லப்பட்டது.

(க-து). இருவகைப்பற்றையும் விட்டோமென்று கூறித் தீச் செயல்களினைச் செய்பவருக்கு அவரிரங்கும்வகை அவற்றால் பல தீங்குண்டாமென்பது.

5. The false conduct of those who say they have renounced all desire, will one day bring them sorrows that will make them cry out, "oh, what have we done, what have we done."

கூ. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணு ரில்.

பரி.—(இ-ளீ). நெஞ்சாற் † பற்றறதுவைத்துப்பற்றற்றார்போன்று தானஞ்செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல வன்கண்மையை யுடை யார் உலகத்தில்லை, (எ-று).

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கண் தேவாதற் பொருட்டே இவ்வருந்தவர்க்கு இன்னது ஈதுமென்றறியாது ஈந்தாலா அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் *"அடங்

† பற்றறதுவைத்து - இருவகைப்பற்று மொழியாதிருந்தும்.

* சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் 244. இதன்பொருள் சிங்கத்தின் கோபம் போன்ற கோபத்தையும் வல்லமையையும் பெருமை பொருந்திய வேற்படையையுமுடைய அரசர்களுக்கு ஆண்சிங்கம்போன்ற சீவகனே! ஒலிக்கின்ற ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீர் என்னு மூன்று நீரினையுமுடை ய விசாலமான சமுத்திரத்தின் நடுவிலே பல தீவுகளிருக்கின்றன, அத்தீ வுகளிலே இந்திரிய நிக்கிரகஞ் செய்யாதவர்களுக்குக் கொடுத்த தானத் தின் பயனாலே (தானங்கொடுத்தவர்கள்) உடம்பு மக்களுடம்பும் முகம் விலங்கின் முகமுமாய் வேறுபாடுடையவர்களாகத் தோன்றி யுதிர்கின்ற கனியை யுண்டுவாழ்வார்களென்பது. இதனால் கொடியவர்க்குக் கொடுத்த தானம் தீமையை யுண்டாக்குமென்பது பெறப்பட்டதென்க.

கலர்க் கேந்த தானப் பயத்தினு லலமு மூர்தீர்த், தடங்கட னவுட் டீவு பல வுள வவற்றட் டோன்றி, யுடம்போடு முகங்க ளொவ்வா சூழ்கனி மாக்கி வாழ்வர், மடங்கலஞ் சிற்றத் தப்பின் மானவேன் மன்ன ரேறே." என்ப தனு னறிக. தமக்கு () ஆவன செய்தார்க்கு ஆகாதன் வினைத்தலின் 'வன் கணரில்' என்றார்.

தேளி.—(இ-ன்). கெஞ்சின்-மனத்தினுல், துறவார் - (பற்றுக்களைத்) துறவாதிருந்தும், துறந்தார்போல்-பற்றற்றார்போன்று,வஞ்சித்து-(தானஞ் செய்வாரை) வஞ்சனைசெய்து, வாழ்வாரின்-வாழுமவர்போல, வன்கணர் - இரக்கமில்லாமையையுடையவர், இல்-(உலகத்திலொருவரும்) இல்லை, ()

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுபிறப்பில் தேவராகும் நிமித்தம் இந்த அரிய தவத்தோர்க்கு இன்னபொருளைக் கொடுப்போமென்று அறியாமற் கொடுத்தவரை அப்பொருளைப் பெற்றுக்கொண்டு தாழ்ந்த பிறப்பினராக்குதலாம். தமக்கு ஆவனவற்றைச் செய்தவர்க்கு ஆகாதனவற்றை யுண்டாக்குதலால் 'வன்கணரில்' என்றார்.

(க-து). அகத்துறவின்றிப் புறத்துறவுபூண்டு பிறரைவஞ்சிப் பவர் மிகவும் கொடியவராவர் என்பது.

6. Amongst living men there are none so hard - hearted as those, who without forsaking desire in their heart, falsely take the appearance of those who have forsaken it.

எ. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

பரி.—(இ-ள்). † குன்றிமணியின் புறத்தைக் கண்டாற் போல வேடத்தாற் செம்மையுடையராயினும் அதனீழக்குப்போல மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம், (எ-று).

‡ குன்றி-ஆகுபெயர். $ செமமை கருமையென்பன பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் அறியாமையினுஞ் சென்றனவாயினும்

(). ஆவன - உண்டி மருந்து உறையுள் முதலிய உபகாரங்கள்.

† குன்றியின் புறம்போல என்றும் பாடமுண்டு.

‡ குன்றிமணியின் சிவப்பு நிறத்தைக் குன்றி யென்றது பொருளாகு பெயராம்.

$ உவமான மான குன்றிமணிக்கணுள்ள செம்மை கருமை (சிவப்பு நிறம் கறுப்புநிறம்) என்பன பொருளின்கண் (உவமேயத்தில் - அஃதாவது கூடாவொழுக்கமுடைய தவவேடமுடையாரிடத்து)செம்மை,கருமை என்னும் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் (வேடப்பொலிவினும்) அறியாமையினும் சென்றவாயினும், பண்பால் ஒத்தலின் (செப்பம் அறியாமையென்பன குன்றிமணியின் சிவப்புக் கறுப்பென்னுங் குணத்தினு லொத்திருத்

பண்பால் ஒத்தலின், இவைபண்புவமை. *"கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோகிலமே" என்பதுமது.

தேளி.—(இ-ள்). குன்றிப்புறம்-குன்றிமணியின் மேற்பாகத்தை கண் டனையேனும்-கண்டாற்போல வேடத்தால் செம்மை யுடையவராயினும், அகம்-மனம், குன்றிமூக்கின் - அக்குன்றிமணியின் மூக்குப்போல, காரி யார்-இருண்டிருப்பவரை, உடைத்து-(உலகமான தி) உடையதாயிருக்கின் றது, (எ-று).

குன்றியென்பது அதன் நிறத்திற்காதலின் ஆகுபெயராம். உவமான த்திலுள்ள சிகப்பு கறுப்பென்பன உவமேயத்தில் நிறத்தைவிட்டுசெம் மையான வேடத்திலும் அறியாமையிலும் சென்றனவாஞலும், (செம்மை யானவேடம் அறியாமை யென்பன) பண்பால் சிகப்பு கறுப்பு என்பவற் றோடு ஒத்திருத்தலால், செம்மைகறுமையென்பன பணபுவமையாம். அஃ தாவது உவமானத்திலேயுள்ள செம்மை கருமைகள் முறையே உபமேயத் திலேயுள்ள செம்மையான வேடதையும் அறிவில்லாமையையு முணர் த்தி நின்றனவென்பது. கண்டென்பது கண்டாலென்பதன் திரிபு.

(க-து). உலகமானது அகத்தே அறியாமையையும் புறத்தே தவவேடத்தையும் உடையாரையும் உடையதாயிருக்கின்றது.

7. The world contains persons whose outside appears as fair as the red berry of the Abrus, but whose inside is as black as the nose of that berry.

அ. மனத்தது மாசாக மாண்டார்ந் ராடி
மறைந்தொழுகு மாந்தா பலர்.

பரி.—(இ - ள்). மாசு தம்மனத்தின் கண்ணதாகவே பிறர்க்குத் தவத்தான்மாட்சிமையுடையாராய் நீரின்மூழ்கிக்காடி, தாம் அதன்கண் ணே மறைந்துசெல்லும் மாந்தர் உலகத்துபபலர், (எ-று).

மாசு - காம வெகுளி மயக்கங்கள். அவை போகநகன்றி மாண்டா ரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், † அதனொழிலே அவர் மறை

தலால்) இலை (செம்மை கருமை யென்பன) பணபுவமையாமென்க. பண் புவமையாவது பண்பை யுவமான மாகக் கூறுவது. இங்குக் குன்றிமணி யின் செம்மைகருமைகள் உவமானமாயும் கூடாவொழுக்கத்தினாது வேட ப்பொலிவும் மனக்களங்கமும் உபமேயமாயும் நின்றனவென்க.

* திருக்கோவையார் கூஉ, இதன்பொருள் (சிவபெருமானது சிற் றம்பலத்தை விரும்பாத)உணவாற்செருக்கு மனம்போல ஒருகாலைக்கொரு கால் (கரு) நிறம்பெற் றிருளாகின்ற குயில்கள் எனபது. இங்கு உணவாற் செருக்குமனம் கருமை (அறியாமை)யுடையதாதலைக கூறியவாறுணர்க.

† உள்ளத்தி னுள்ளே யுணர்வெனுக் நீர்த்தநீர, மெள்ளக் குடைந்து மின் ருடார் வினைகெடப், பள்ளமு மேடும் பறந்து திரிவாரிக், கள்ள மன மூடைக் காசினி யோரே என்பது திருமந்திரம்

தற் டெளக்கினர். இனி ‡மாண்டார் நீராடி யென்பதற்கு மாட்சிமைப் பட்டாரது நீர்மையையுடையாரென வுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அவ்வொழுக்க முடையாரது குற்றமும், அவரையறிந்து நீக்கல் வேண்டு மென்பதுங் கூறப்பட்டன.

தேவி.—(இ-ன்). மாசு - அழுக்காகாது, மனத்ததாக - (தம்) மனத்தி னுள்ளதாக, மாண்டார் - (பிறர்க்குத் தவத்தால்) மாட்சிமையுடையவராய், நீராடி - நீரில்மூழ்கிக், (காட்டி), மறைந்து - (தாம் அம்மூழ்குதலினிடத் தே) மறைந்து, ஒழுகும் - நடக்கும், மாந்தர் - மனிதர், பலர் - (உலகத் தில்) பலர், (எ - று).

மாசு-காம வெகுளி மயக்கங்கள். அக்காம வெகுளி மயக்கங்கள்போகு தற்காக வல்லாமல் மாட்சிமையுடையவரென்று பிறர் கினைத்தற்காக நீராடு தலால், அந்நீராடுந்தொழிலை அவர் மறைதற்கு இடமாக்கினர். இவை மூன்றுபாட்டாலும் அக்கூடாவொழுக்கமுடையவரது குற்றமும், அவரை அறிந்து நீக்குதல்வேண்டுமென்பதும் சொல்லப்பட்டன.

(க-து). துறவறத்தாருட்பலர் உள்ளத்தைச் சுத்தமாக்க முய லாது உடலைச் சுத்திசெய் தொழுகின்றனர் என்பது.

8. There are many men of masked conduct, who perform their ablutions, and make a show of greatness, while their mind is defiled with guilt.

கூ. கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

பரி.—(இ - ள்.) அம்பு வடிவாற் செவ்விதாயினும், செயலாற் கோடியது; யாழ் § கோடலால் வணைந்ததாயினும், செயலாற் செவ் வீது; அவ்வகையே தவஞ்செய்வாரையுங் கோடியர் செவ்வியரென் பது வடிவாற் கொள்ளாது அவர் செயல்படக் கூற்றனே அறிந்து கோடல், (எ-று).

கணைக்குச்செயல் - தொலை. யாழுகுச்செயல் - இசையாலின்பம்பய த்தல். அவ்வகையே செயல் † பாலமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவுங் கொள்க வென்பதாம். இதனுன் அவரை யறியுமாறு கூறப்பட்டது.

---

‡ மாண்டார் நீராடியென்பதற்கு மாட்சிமைப்பட்டவருடைய குண முடையாரென்று பொருள் கூறுவாருமுண்டு.

§ கோடு - யாழின் (வீணையின்) தண்டு, கோட்டால் - தண்டால்.


† பாலத்திற் கேதுவாயிருப்பின் தகாசென்றும் அறத்திற்கேதுவா யிருப்பின் தக்கவரென்றும் அவரைக் கொள்ளவேண்டு மென்பதாம்.

தெளி.—(இன்). கணை - அம்பானது, (வடிவினும் செவ்வியதாயிரும் பினும்), கொடிது - (செயலினல்) கொடியதாயிருக்கின்றது, யாழ்-வீணை யானது, கோடி-கோட்டினல், (வளைத்ததாயிருப்பினும்), செவ்விது- (செய வினல்) செவ்வியதா யிருக்கின்றது, ஆங்கன்ன - அவ்வகையே, (தவஞ் செய்வாரையும் கொடியர் செவ்வியரென்பது வடிவினுற் கொள்ளாமல்), வினைபடுபாலால் - (அவரது) செயல்பட்ட பகுப்பினுலே, கொளல் - அறி ந்துகொள்ளக் கடவர், (எ - று).

அம்புக்குச்செயல் - கொல்லுதல். வீணைக்குச் செயல்—இசையினல் இன்பத்தைத்தருதல். அவ்வகையே தவத்தினரதுசெயல் பாவமாயின் கொடியரென்றும், அறமாயின் செவ்வியரென்றும் அவரையறிந்து கொள் னல்வேண்டுமென்பதாம். இதனுல் அவரை அறியும்வழி சொல்லப்பட்டது.

(க—து). இவர் கூடாவொழுக்கமுடையார், இவர் நல்லொழு க்கமுடையார் என்பது அவரவரது செய்கையா லறிப்படும்.

9. As, in its use, the arrow is crooked and the curved lute straight, so by their deeds, and not by their appearance let the uprightness or crookedness of men be estimated.



க०. * மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

பரி.—(இ - ள்). தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா, உயர்ந்தோர் தவத்திற் காகத் தென்று குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின், (எ - று).

† பறித்தலும் ‡ மழித்தலுள் அடங்கும். மழித்தலென்பதே தலைமயி

* நாரத பரிவிராஜகோபநிஷத்து ஐந்தாவது உபதேசத்தில் "தண் டத்தைப் பிடித்திருத்தலுலாவது மொட்டையடித் திருத்தலுலாவது வேஷத்தினுலாவது இடம்பசாரத்தினுலாவது முத்தி சித்திப்பதில்லை. எவனுலே ஞான தண்டம் பிடிக்கப்பட்டிருக்கின்றதோ அவன்தான் யதண்டி"என்றும், மனுதருமசாஸ்திரம் ஆறுவதத்தியாயத்தில் "ஒருவன் ஒரா ரைமத்திலிருந்து அந்த ஆரைமத்திற்குத்தக்க தண்ட கமண்டலமுதலிய அடையாளங்களில்லாமலிருந்தாலும், எல்லாப் பிராணிகளிடத்திலும் சம புத்தியுடையவனுய்த்தருமஞ் செய்யவேண்டுமே யன்றிக் காஷாயந்தரித்தல் முதலிய வேடமாத்திரம் தருமத்திற்குக் காரணமாக மாட்டாது" என்றும், கூறுவதற்கு இக்குற ளிணங்கியிருத்தலைக் காண்க.

† பறித்தல் - தலைமயிரை யொவ்வொன்றுகப் பிடுங்கல். இவ்வாறு செய்வது சமணமதசம்பிரதாயம். இது சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் விஜயமாதேவியார் தூதில் "மணியியல் சிப்பிடச் செக்கும் வாணுத, லணியிருங் கூந்தலே யெளவை மார்கடாம், பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்னனுற், றுணிபொருள் சிந்தியாத் தூதத்தன் மேயினுர்" என்றுகூறு வதனுலு மறிதற் பாற்றும். ‡ மழித்தல் - மொட்டையடித்தல்.

வை யுணர்த்தலின், அது கூறாயினர். இதனுள் கூடாவொழுக்க மில்லா தார்க்கு வேடமும் வேண்டாவென அவரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ - ன்). (தவஞ்செய்வார்க்கு) மழித்தலும்-(தலையிரை) சைத்தலும், நீட்டலும் - (அதனைச்) சடையாக்கலும், (ஆகியவேஷமும்), வேண்டா - வேண்டுவனவல்ல, உலகம் - உயர்ந்தோர், பழித்தது - (தவத் திற்கு ஆகாதென்று) குற்றங்கூறிய ஒழுக்கத்தை, ஒழித்து விடின் - நீக்கி விடுவாராயின், (எ - று).

தலையிரைப் பறித்தலும் மழித்தலில் அடங்கும். மழித்தலென்பதே தலையிரைத் தெரிவித்தலால், அதைக்கூறாதுவிட்டார். இதனுல் கூடா வொழுக்கமின்றித் தவஞ்செய்வார்க்கு வேஷமும் வேண்டாமென்று அவ ரது சிறப்புச் சொல்லப்பட்ட

(க - து). உயர்ந்தோர் குற்றமென்று கூறுவனவற்றைவிட் டொழுகுதலே தவத்தோர்க்குச் சிறப்பாவதன்றி வேடஞ்சிறப்பா காதென்பது.

10. There is no need of a shaven crown, nor of tangled hair, if a man abstain from those deeds which the wise have condemned.

ஐந்தாம் அதிகாரம்.

கள்ளாமை:—*Against Fraud.*

பரி.—அஃதாவது பிறருடையையா யிருப்ப தியாதொருபொருளை யும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை கருதுதலும் செய்தலோ டொத்தலின் 'கள்ளாமை' என்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு வினையாடு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனங் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின், அதனைக் கருதியவழியும் பெரியதோ ரிழுக்காம் ஆகலின், § இது துற

§ இது-கள்ளாமை. கள்ளுதல்(திருடுதல்) ஒரோவிடத்து கண்ருமென் பதி இறையனாரகப்பொருள் "அன்பினைந்திணை" என்னுஞ் சூத்திரவுரை யில் நக்கீரனார் "களவெனுஞ்சொறகேட்டுக் களவ நீதென்பதூஉம் காமமெ னுஞ்சொற்கேட்டுக் காமக் நிதென்பதூஉமன்று; மற்றவை நல்லவாமாறு முண்டு; என்னை? ஒரு பெண்டாட்டி தமரோடுகலாய்த்து (பகைத்தி) நஞ் சுண்டு சாவலென்னு முனைத்தாளாய் நஞ்சுகூட்டிவைத்து விலக்குவா ரில் லாத போழ்து உண்பலென்று நின்றவிடத்து, அருளுடையானொருவன் அதனைக்கண்டு இவள் இதனை யுண்சொவாமைக் கொண்டுபோய் உகுப்ப லென்று அவளைக்காணுமே கொண்டுபோய் உருத்திட்டான்; அவளுஞ்சன நீக்கத்தக்கண் நஞ்சுண்டு சாவாள் சென்றாள்; அதனாளாய்ச்சாக்காடு (மரணம்) நீங்கினாள். அவன் அக்களவினன் அவளையுயக்கொண்டமையான்

வறமாயிற்று. 0 புறத்துப் போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம் அஃதொழித்து புறத்தேபோந்து பஃறலைப்பட்டு உடம்பின் பொருட்டுப்பொருளே நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக்கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோ ரிழுக்காதலறிக. இவ்வாறு வாய்மை முதற்கோல்லாமையீறாய நான்கதிகாரத்திற்கு மோக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது பிறருடைமையாயுள்ளபொருள்களுள், யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ள நினையாமையாம். நினைத்தலும் செய்ததற்குச் சமானமாதலால் 'கள்ளாமை' என்றார். இல்வாழ்வார்க்காஞல் சுற்றத்தார் முதலியோரிடத்து வினையாட்டு வகையாலாவது அவரை வஞ்சனைசெய்து கொள்ளுதற்குத் தக்க பொருள்களே அவ்வாறு கொண்டாலும் பொருந்தும்; துறந்தவர்க்காஞல் அப்பொருளே யபகரிக்க நினைத்தலிடதுமை பெரியதொரு குற்றமாகலின், இது துறவறத்திற் குரியதாயிற்று. புறத்திற் போகாமல் மடங்கி ஒருமுகப்பட்டு உயிரையே நோக்கவேண்டியதாகிய அவரது மனம் அவ்வுயிரையே நோக்குவதொழிந்து புறத்திலே போய்ப் பலவகையாக விரிந்து, அதுகூடலான விஷயங்களி லழுந்தி உடம்பின்பொருட்டுப் பொருளே நோக்குதலேயல்லாமல், அப் பொருளையும் வஞ்சித்துக்கொள்ள நினைத்தல்அத்துறவறத்தார்க்குப் பெரிய தொரு குற்றமாதல் அறிக. இவ்விதம் வாயமைமுதற் கொல்லாமை முடிவாயுள்ள நான்கதிகாரத்திற்கும் ஒக்கும. பொருளைப்பற்றி யுண்டாகுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இக்கள்ளாமை காமம் பற்றி யுண்டாவதாகிய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

க. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

கல்லூழிற்செல்லுமென்பது மற்றும் இதுபோல்வன களவாகா; நன்மை பயக்குமென்பது" என்று கூறியதனால் காண்க. நாயஞெடுத்துக்கொண்ட களவு இத்தகைய தன்றென்பது இவ்வதிகாரத்தால் நன்கு விளங்கும்,

0 பிறப்பையொழிக்கத் துறவறம் பூண்டார்க்குப் பிறப்பையொழித்தற்குரிய செயல் மனத்தை விஷயங்களிற் செல்லாவா றடக்கி யொருமுகப்படுத்தி யுயிரையேநோக்க வைத்தலாயிருத்தல்பற்றிப் "புறத்துப்போகாது மடங்கி யொருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம்" என்று கூறப்பட்டது. (மனம் விஷயங்களிற் செல்லா தடங்கி யொருமுகப்பட்டு உயிரையே நோக்கி யிருத்தல் சொரூபத்தியானமென்றுகூறப்படும்.) இது திருமந்திரம் "சாத்திர மோதுஞ் சதுர்களே விட்டுநீர், மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின், மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்கினுல், ஆர்த்த பிறவி யகலவிட் டோடுமே" என்று கூறுவதாலு மறிதற் பாற்றும்.

பரி.—(இ-ள்). வீட்டினையிகழாது விரும்புவான் இவனென்று த்வ ந்தோரான் நன்கு மதிக்கப்படுவான் யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்வக் கருதாவகை தன்னெஞ்சினைக்காக்க, (எ-று).

என்னாதென்னும் எதிர்மறை வினையெச்சம் என்னாமையெனத் திரிந்துநின்றது. வீட்டினை யிகழ்தலாவது காட்சியே அனுமானாவதென் றும், நிலம், நீர், தீ, வளியெனப் பூதம் நான்கேயென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தாற் மேன்றிப் பிரிவான் மாய்வதாய () உடம்பின்கண் ணே அறிவு மதலின் கட் ‡ களிப்புப்போல வெளிப்பட் டழியுமென்றும், இதற்குயிர் பின்பிறவாதென்றும், ¶ இன்பமும் பொருளும் ஒருவனுற் செய்யப் படுவதென்றுஞ் சொல்லும் உலோகாயத ‡ முதலிய மயக்கநூல் களைத் தெளித்து, அவற்றிற்கேற்ப ஒழுகுதல். ஞானத்திற்கேதுவாயமெய்ந் நூற் பொருளேயேனும் ஆசிரியனே வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவுங் களவா மாகலின் 'எனைத்தொன்றும்' என்றார். நெஞ்சு கன்னாமை காக்க எனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கன்னு தல் கன்னக்கருதுதலென்பது பெற்றாம்.

() *அந்தமி லூருக்கள்பல வாமுறை புணர்ப்பின்*
மைதுறை கடாதிபல மண்ணில்வரு மாபோற்
புந்திருணம் வண்பொறி புலன்களு மவற்றி
னுக்கியெழும் வாரியி னுமுங்குமிழி யொத்தே:—என்பது பிரபோத சந்திரோதயம்.

‡ *களிப்பு - மயக்கம்.*

¶ *உலோகாயதர்கள் புருஷார்த்தங்கள் நான்கெனக் கொள்ளாது (அறம் பொருளின்பம் வீடு என்னும் நான்கையும் புருஷார்த்தமாகக் கொள்ளாது வீடு என்பதொன்றின்மையின் அதனுறித்து அறஞ்செயல் பயனற்றசெயல் என்றகொண்டு அவ்விரண்டையு மொழித்து) இன்பமும் பொருளுமே புருஷார்த்த (புருஷர்களின் இச்சைக்கு விஷயமாவது புரு ஷார்த்தமெனப்படும்) மெனக்கொண்டு, அவ்விரண்டும் முற்பிறப்பித் செய்த வினைகளுக்கியையவருகின்றன வென்று கொள்ளாது அவனவனது முயற்சிக் கியைய வருகின்றனவென்ற கூறுவர். அவர்களின் சித்தார்த்தர் சருக் கம் "பூதமொரு நான்கேதத் தவங்கள் இன்பம் பொருளிரண்டே புரு டார்த்தம் புலன்க ளாறே, ஏதமிலார் கண்டபிர மாணம்தோற்று மிவ் வுடலே யான்மாவாம் இறப்பே முத்தி'' என்பதனாலறிக.*

‡ *முதலிய என்றமையின், (சேதன சித்) தேகமே ஆத்மா என்று கூறும் உலோகாயத மதமேயன்றி இந்திரியாத்ம வாதி முதலிய மதங்களை யுங்கொண்க. அம்மதங்களின் தன்மையை யொருவாருக்கு சுருக்கி யுரைக் கின்றும். வருமாறு:—*

(1) தேகாத்மவாதி:—நான் என்னும் புத்திக்கு விஷயமாயிருப் பது ஆத்மா. நான் மனிதன், பார்ப்பான், பருத்தேன், இளைத்தேன் என்றற் றொடக்கத்தனவாய அனுபவத்தினால் தேகத்திலேயே நான்

தெளி.—(இ - ள்). எள்ளாமை - (தவத்தோரால் முத்தியை) இகழா மல், வேண்டுவா னென்பான் - விரும்புவான் இவனென்றுணர்ந்து மதிக் கப்படுவோன்; எனைத்தொன்றும் - யாதொரு பொருளையும், கள்ளாமை - (பிறரை) வஞ்சித்துக்கொள்ள நினையாதபடி, தன்னெஞ்சு - தனது மனத் தை, காக்க-காக்கக்கடவன், (எ - று).

எள்ளாது என்னு மெதிர்மறைத் தெரிநிலவினையெச்சம் எள்ளாமை யெனத்திரிந்து நின்றது. முத்தியையிகழ்தலாவது பிரத்தியட்சப் பிரமாண மே பிரமாண மாவதென்றும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு எனப்பூதங்கள் நான்கேயென்றும்,அப்பூதங்களின் கூடுதற் சிறப்பினுல் தோன்றிப்பிரிவினு ல் அழிவதாகிய உடம்பினிடத்தே அறிவு மதுவினிடத்துக் களிப்புப்போல

என்னும் புத்தியுண்டாவதால் தேகமே ஆத்மா. ஆபத்து சேர்ந்தபோது தேகத்திலேயே பிரியமுண்டாவதால் தேகத்திலும் பிரியமான பொருள் வேறொன்றுமில்லை. தேகத்திலுள்ள விருப்பத்தின் பொருட்டே பிறரிட த்து விருப்ப முண்டாகின்றது; ஆகவே, இதனைக்காப்பாற்றல் அலக்கரித் தல் முதலியனவே புருஷார்த்தங்களாம். ஆகாயம், கடவுள், ஊழ், ஜன் மாந்தரம் முதலியனவில்லை.பூதங்களின் சையோக விசேடத்தாலுடம்பாம்; இதன் மரணமே மோட்சமாம்; பிரத்தியட்சமே பிரமாணமாம் என்பன்.

(2) இந்திரியாத்மவாதி:—சாணப்பமித்தேகம் இந்திரிய மிருத்தால் ஜீவித்திருக்கின்றது; இல்லாவிட்டால் மரித்துப்போகின்றது. இவ்விந்தி ரியம் தேகத்திற்கு வேறுயிருக்கின்றது உடல் பிழைத்திருப்பதும் மரிப்ப தும் இந்திரியத்தின் வசமா யிருப்பதாலும், கேட்டேன் கண்டேன் பரிசித்தேன் என்றற்றொடக்கத்தனவற்றுள் நான் என்னும் புத்தி இந்திரி த்தி லிருப்பதாலும் இந்திரியமே ஆத்மா என்பன்.

(3) பிராணாத்மவாதி:—பிராணவாயு இருத்தால் இத்தேகம் ஜீவித் திருக்கின்றது; அது நீங்கிப்போஞல் அழிந்துபோகின்றது. தேகம் நிலைத் திருப்பதற் கேது பிராணனுயிருத்தலால் பிராணனே ஆத்மா என்பன்.

(4) மனவாத்மவாதி:—பிராணன் உணர்ச்சிவடிவமன்றுதலாலும், இந் திரியங்கள் மனத்தின் சையோகத்தினுல் விஷயங்களை யறிவதாயிருப்ப தாலும்,யாதொருவியவகாரமும் மனமின்றி நிகழாமையாலும் மனமே ஆத் மா என்பன்.

(5) புத்தியாத்மவாதி:—மனம் புத்தியின் வசமாயிருக்கின்றது; புத்தி யின் ஆகாரமேமனமாம். புத்தியோ அடிக்கடி மாறிக்கொண்டிருக்கின்றது. எவ்வியவகாரமும் அடிக்கடி மாறு மியல்புடைய இப்புத்தியின் வசத்தால் பிரகாசிக்கின்றது. ஆதலால்புத்தியே ஆத்மா வென்பன்.

(6) பட்டர்மதத்தினர் ஆத்மா சிற்சடவடிவ மென்றும்,மாத்யமிகர் ஆத் மா அசத்து (மூற்று மில்லாதது) என்றும், பிரபாகரையாயிகர்கள் ஆத் மா சுபாவத்தில் சடமென்றும், சமணர்கள் ஆத்மாதேகத்திற்கேற்ப வளர் தல் குறைதலே யுடையதென்றும், பிறவும் கூறுவர். இவற்றின் விரிவு களைச் சர்வதரிசண சங்கிரகம், பெருந்திரட்டு முதலிய நூற்களிற்காண்க.

வெளிப்பட்டு அழியுமென்றும், இறந்தவுயிர் பின்னே பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனது முயற்சியால் வருவதென்றும் சொல்லும் உலோகாயத முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து தெளிந்தவற்றிற்குப் பொருந்த நடத்தலாம். தத்துவஞான முண்டாவதற்குக் காரணமான உண்மை நூற் பொருளையாயினும் ஆசாரியனே ¶ ஆத்மம், அனாத்மம், ஸ்தானம், சம்பாவ மென்னுஞ் சதாசிதச் சேவைசெய்யாமல் அவனே வஞ்சித்துக் கொள்ளின், அதுவும் கனவாமாகலின் 'எனைத்தொன்றும்' என்றார். நெஞ்சு கள்ளாமை காக்க என்ற கூறவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதலாவது கனவுசெய்ய நினைத்தலென்பது பெறப்பட்டது.

(க*து). முத்தியை விரும்பு கின்றவன் பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ள நினையா திருக்கக்கடவன் என்பது.

1. Let him, who desires not to be despised, keep his mind from the desire of defrauding another of the smallest thing.

உ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

பரி.—(இ - ள்). குற்றங்களைத் தந்நெஞ்சாற் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்; ஆதலால், பிறனொருவன் பொருளை அவன் அறியாவகையால் வஞ்சித்துக்கொள்வேமென்று கருதற்க, (எ - று).

'உள்ளத்தால்' என வேண்டாது கூறினார்; அவருள்ளம் எனையாருள்ளம் போலாது சிறப்புடைத்தென்பது முடித்தற்கு. உள்ளலுமென்பது இழிவு சிறப்புமும்மை. † அல் விகுதி வியங்கோளெனிர்மறைக்கண் வந்தது. இவை யிரண்டோட்டானும் ‡ இங்ஙனைக்குக் கனவாவது $ இஃதென்பதூஉம் () அது கடியப்படுவ தென்பதூஉங் கூறப்பட்டன.

தெளி—(இ - ள்.) உள்ளத்தால் (குற்றங்களைத் தமது) மனதினால், உள்ளலும் - நினைத்தலும், தீதே - (துறந்தார்க்குப்) பாவமேயாம், (ஆதலால்), பிறன் பொருளை-பிறனொருவனது பொருளை, கள்ளத்தால்(அவன்) அறியாத வகையினால், கள்வேம் - வஞ்சித்துக் கொள்ளுவோம், எனல்-என்று நினையாதிருக்கக்கடவர், (எ - று).

அத்துறந்தாரது மனம் மற்றவரது மனம்போல் குற்றமுடைய தாகாமல் மெய்புணர்வு அவாவின்மை முதலிய கற்குணங்களால் சிறப்புடையதாயிருக்கின்ற தென்பதை முடித்தற்கு 'உள்ளத்தால்' என்று வேண்டாது

¶ "ஆத்தமுடனங்கமே" என்னும் வேதாந்த சூளாமணிச் செய்யுளில் குணவாத்தக்கதாம்.

† 'பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்' என்னுங் குறளிலுள்ள எனல் என்பதற்குக் குறிப்புரையி லெழுதியுள்ளதை யிங்கமைத்துக்கொள்க. ‡ இங்ஙனைக்கு-இத் துறவற மெழுந்தகத்திற்கு.

$ இஃதென்பதூஉம் - பிறன்பொருளைக் கனவுசெய்ய நினைத்தலென்பதும். () அது-பிறன்பொருளைக் கனவுசெய்ய நினைத்தல்.

சொல்லினுர். உள்ளலு மென்றவும்மை இழிவு சிறப்பும்மை. எனல் என்பது அல்லீற்றெதிர்மறை வியங்கோள்வினை முற்று. இவை யிரண்டோட்டாலும்(துறந்தவரது) இவ்வொழுக்கத்திற்குக் களவாவது இஃதென்பதும், அது நீக்கப்படுவ தென்பதுஞ் சொல்லப்பட்டன.

(க - கூ). தீயன வற்றைச் செய்ய வெண்ணுதலும் தீமை தருவதா யிருத்தலின், அதனை யொழித்தல் வேண்டும் என்பது.

2. Even the thought of sin is sin; think not then of craftily stealing the property of another.

கூ. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

பரி:—(இ - ள்). களவினலுளதாகிய பொருள் வளர்வதுபோலத் தோன்றித் தன்னெல்லையைக் கடந்துகெடும், (எ - று).

† ஆக்கத்திற் கேதுவாகலின், ஆக்கமெனப்பட்டது. எல்லையைக்கடந்து கெடுதலாவது ‡ தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச், செய்த அறத்தையும் உடன்கொண்டு போதல். ¶ அளவறிந்தென்று பாடமோதி, அவர்பயன்கொள்ளு மளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென் றுரைப்பாரு முளர்.

தெளி.—(இ - ள்). களவினுல் - களவுசெய்தலினுல், ஆகிய - உண்டாகிய, ஆக்கம - பொருளானது, ஆவதுபோல - வளர்வதுபோல,(தோன்றி), அளவிறந்து - (தனது) எல்லையைக் கடந்து, கெடும் - அழியும், (எ - று).

பொருள் ஆக்கத்திற்கு ஏதுவாகலால், அஃது ஆக்கமென்றுகூறப்பட்டது. (பொருள் தனது) எல்லையைக் கடந்து கெடுதலாவது (தன்னையுடையவனுக்குத்)தான் போகுங்காலத்தில் பாவத்தையும் பழியையும் நிலை பெறச்செய்து, (அவன்)செய்த தருமத்தையும் உடன்கொண்டு போதல்.

(க - து). களவு செய்தலா லுண்டாகிய செல்வம் விருத்தியடைவதுபோற் றோன்றிப் பாவத்தையும் பழியையும் நிறுத்தி விரைந்துகெடும் என்பது.

3. The property, which is acquired by fraud, will pass all bounds and perish, even while it seems to increase.

† ஆக்கம் - மேல் மேலுயர்தல்; ஆக்கத்திற்குக் காரணமான பொருளை யாக்கமென்றது காரியவாகுபெயரால்.

‡ தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்தி - பொருளழியும்போது மறுமைக்குப் பாவத்தையும் இம்மைக்குப் பழியையும் வைத்து.

¶ அளவிறந்த என்பதை அளவறிந்த என்று பாடமோதி, அதற்குப் பொருளானது தன்னைக் களவாற்கொண்டவர் தன்பயனை யனுபவிக்குங் கால வளவினையறிந்து, (கெடும் -)அவ்வனுபவ காலத்திற்கு உதவாமல் அழியுமென்று பொருள் கூறுவாருமுண்டு.

ச. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

பரி.—(இ - ள்). பிறர்பொருளே வஞ்சித்துக் - கோடற்கண்ணே மிக்க வேட்கை அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்,(எ-று).

† கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து ‡ அதனற் பாவமும் பழியும் பயந்தே விடுதலின் 'வீயாவிழுமந்தரும்' என்றார். இவையிரண்டு பாட்டானும் $ அது கடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). களவின்கண் - (பிறர்பொருளே) வளைத்துக் கொள்ளுதலிலே, கன்றிய - மிகுந்த, காதல் - ஆசையானது, (அப்போது இனிதுபோலத் தோன்றி), விளைவின்கண் - (தான்) பயனைக் கொடுக்கும் போது, வீயாவிழுமம் - தொலையாத துன்பத்தை, தரும் - கொடுக்கும்.

கன்றியகாதல் (மிகுந்த ஆசை) எக்காலும் அக்களவையே பழகச் செய்து அதனால் பாவமும் பழியும் கொடுதலே விடுதலால் 'வீயா விழுமந் தரும்' என்றார். இவையிரண்டு பாட்டானும் அது நீக்கப்படுவதற்குக் காரணஞ் சொல்லப்பட்டது.

(க-து). களவுசெய்தலில் மிகுந்த ஆசையானது முன்ன தினி துபோலத் தோன்றினும் பின்னர்ப் பெருந்துன்பத்தைத் தரும்.

4. The eager desire of defrauding others, when it has brought forth its fruit, will produce undying sorrow.

ரு. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
போச்சாப்புப் பார்ப்பார்க் கில்.

பரி.—(இ - ள்). அருளினது உயர்ச்சியையறிந்து அதன்மேல் அன் புடையராய் ஒழுகுதல் பிறர்பொருளே வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவ ரது சோர்வு பார்ப்பார்மாட் டுண்டாகாது (எ - று).

தமக்குரிய பொருளேயும் அதனது ¶ குற்றம் நோக்கித் துறந்து போந்தவர் பின் பிறர்க்குரிய பொருளே கன்குமதித்து, அதனை வஞ்சித்

† கன்றுதலான்-காதல் மிகுதலால். கன்றுதலான் என்பதற்குப் பிர தியாகக் கன்றியகாதல் என்றும் பாடமுண்டு. இதுவேரோர்; உய்த்துணர்க.

‡ அதனால் (மிக்கவேட்கை திருதிலேயே) பழகச்செய்தலினால்.

$ அது - பிறன்பொருளைக் களவுசெய்ய நினைத்தல்.

¶ குற்றம் நோக்கலாவது "நிறைசெல்வம், நீரிற்சுருட்டு நெடுந்தி ரைகள்"போல்வது என்றும், பொருளை சம்பாதிப்பதும், அதனைக்காவல் முதலியோர் அபகரியாவாறு கப்பதும், செலவழிப்பது முதலியன பெருக் துன்பத்திற் கேதுவாமென்று முணர்தலாம்.

தக் கோடற்கு அவரது சோர்வுபார்க்கும் மருட்சியரானுல், அவர்மாட்டு, உயிர்கண்மே லருள்செயதல் நமக்குறுதியென் றறிந்து, அவ்வருளின் வழு வாதொழுகுக் தெருட்சி கூடாதென்பதாம்.

தே வி:—(இ-ன்). அருள்-அருளினது (உயர்ச்சியை), கருதி-அறிந்து, அன்புடைய ராதல் - (அவ்வருளின்மேல்) அன்புடையராய் நடத்தல், பொருன் - (பிறரது) பொருளே, கருதி - (வஞ்சித்துக்கொள்ள) நினைத்து, பொசசாப்பு - (அவரது) சோர்வை, பார்ப்பார்கண் - பார்ப்போரிடத்து, இல் - உண்டாகாது, (எ - று).

தமக்குரிய பொருளேயும் அதனது குற்றத்தைப் பார்த்து (இது நீ தென்று வெறுத்துத்) திறத்துவந்தவர் பின்னர்ப் பிறர்க்குரிய பொருளே நன்மை தருவதென்றுகருதி, அப்பொருளே வஞ்சித்துக்கொள்ளுதற்கு அவரது சோர்வைப் பார்க்கும் மயக்க முடையவரானுல், அவரிடத்து, உயிர்களின் மீது அருள் செய்தல் நமக்கு உறுதி தருவதாகுமென்றறிந்து, அவ்வருளில் தவருது நடக்குந் தெளிவு கூடாதென்பதாம்.

(க-து). பிறர்பொருளே விரும்புவோர் அருளுடைய ராகார்.

5. The study of kindness, and the attainment of love to it, is not with those who, watch for another's forgetfulness, through desire of his property.

சு. அளவின்க ணின்றுழுக லாற்றூர் களவின்கட்
கன்றிய காத லவர்.

பரி:—(இ - ள்). உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நேறியின்க ணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார் களவின்கண்ணே மிக்கவேட்கை யை யுடையார் (எ - று).

உயிர்முதலியவற்றை ¶ அளத்தலாவது காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளேயும், அதற்கு அநாதியாய் வரு

¶ அளத்தல் - பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களால் உயிர்முதலிய வற்றை வரையறைசெய்துள்ளவாறறிதல். அளவை-பிரமாணம்; (அதனுல்) அளக்கப்படு (அறியப்படு) வது பிரமேயம்; அளத்தல் - பிரமை (உள்ளவாறறிதல்).

(1) I. மனத்திற்கு உயிரோடு சையோக முண்டாம்போது யானுள னென்னும் ஞானமுண்டாதலின், ஆண்டு உயிர் அகலிஃதிரிய மென்னும் மனவடிவப் பிரத்தியகூப் பிரமாணத்தால் அறியப்படுகின்றமை காண்க.

பிறவிக்கஞ்சித் தன்னையடுத்த சுத்தாத்தக்கரணமுடைய சிடனே நோக்கிச் சற்குரு சுருதியுத்தி யனுபவ வாயிலாக நீ உடம்பு முதலியவற்றினும் வேருய அறிவுருவென்றுகூற, அதனுல் அவனுக்கு நான் உடம்பு முதலியவற்றினும் வேருய அறிவுரு வென்னும் பிரத்தியட்ச ஞானமுண்டாதலுங் கொள்க. ஈண்டுச் சற்குருவாக்கியம் பிரத்தியட்சப் பிரமாணமும், (அத

ஞல்) உயிர்க்கும் மனத்திற்குமுண்டாய் சம்பந்தம் சகாரிகாரணமும், தான் அறிவுருவென்னும் ஞானமும் பயனுமாம்.

II. ஜீவித்துள்ள வுடல் உயிரோடு கூடியது; பிராணவாயுமுதலியவற்றை யுடையமையான்; யாது உயிரோடு கூடியதன்று, அது பிராணவாயு முதலியவற்றை யுடையதன்று கடம்போல என்னும் அனுமானப் பிரமாணத்தாலும் உயிர் உடம்பினும் வேறென்றறியப் படுகின்றமை காண்க.

III. "ஒருபெரிய மீனுனது இருகரைக்குள் அங்குமிங்குஞ் சஞ்சரிப் பதுபோல,இச்சப் புருஷனும் கனவு கனவு உறக்கமென்னு மவத்தைகளில் மாறிமாறிச் செல்லுகின்றன்". "எவன் விஞ்ஞான மயனோ அவன் பிராணன் முதலிய வற்றினும் வேறுபவன்" என்றற் றொடக்கத்துச் சப்த (சுருதி)ப் பிரமாணத்தாலும் உயிர் உடம்பினும் வேறென் றறியப் படுகின்றமை காண்க.

(2) I. தருமபுத்திரன் தருமம் (நல்வினை) உடையான்; விஷ்டாசார (ஆசாரொழுக்க)முடையவனுயிருத்தலின்;யாவன் தருமமுடையனல்லன் அவன் விஷ்டாசாரமுடையனல்லன் தரியோதனன்போல.தரியோதனன் அதர்மம்(தீவினை)உடையான்; விஷ்டாசார மின்றியவனு யிருத்தலின்;யாவன் அதர்ம முடையானல்லன் அவன் விஷ்டாசார மின்றியவனல்லன். தரும புத்திரன்போல என்னு மநுமானப் பிரமாணங்களால் நல்வினை தீவினைக ளுண்டென்பது பெறப்படுகின்றமை காண்க.

II. "மூவகை யெனுத்தோ மூழ்கி யுற்றிடு, மாவிக ளுலப்பில வாதி புன்னன,தீவினை நல்வினைத் திறத்தின் வண்மையா, லோவற மூறைமுறை யுதித்து மாயுமே" என்னுஞ் சப்தப் பிரமாணத்தால் (என்றகந்த புராணம் கூறுவதால்) உயிர்கள் இருவினையால் நால்வகைக் கதியுட் பிறந்திறந்து வருத லறியப்படுகின்றமை காண்க.

(3) I. பிறந்திறந்து வருதற் கேதுவாய இருவினைகளைச் செலுத்தற் குபாய (சாதன)மா யிருப்பன யோகஞானங்களென்பதும், அவற்றால் உயிர் கள் முத்தியடையு மென்பதும் கீழ்வரும் பிரமாணங்களால் செவ்வின் விளங்கும். வருமாறு:—

"காம்த்தவைம் புலனுஞ் செற்றுக் காணங்க ளடக்கி காளு, மூழ்த்த மென் சருகு மாந்தி யோனெி லுறங்கு கின்றேர், ...வாழ்த்தறற் கரிய முத்தி வீட்டின்ப மருவி வாழ்வார்:—கூர்மபுராணம்.

"தாதிசோக மாத்மஜ்ஞ் - ஆத்மஜ்ஞானி சோகத்தைக் கடக்கின்றன்":—சுருதி.

"மட்டி லாவ்வன மார்ப சருமம்போற், றெட்டி வானேச் சருட்டிவ ருண்டெனிற், பெட்டி ஞானம் பெறுதபே ரின்பமே, யொட்டி முத்தி யுதகரு முண்டோ":—சூதசங்கிதை.

II. யோகஞான மென்புழி யோகமும், அதனல் வரும் ஞானமுமென்றகொண்க. "யோகியர்க்கே ஞான மொழுங்காம்"என்று பெரியார் பணித் திருத்தலு மறிக.

இன்ற † நல்வினை தீவினைக்குற்ற வினைவகளையும், அவற்றுள் அது ‡ காற்கதியுட் பிறக்கிறத்து வருதலையும், அதுசெய்யாமல் அவற்றைக் கெடுத்தற் குபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றுள் அஃதெய்தும் வீட்டினையும் அளந்து, உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியான மென்ப. அதற்கேற்ப ஒழுகுதலாவது அவ் வளக்கப்பட்ட டனவதனுள், ¶ தியனவற்றினீங்கி § நல்லனவற்றின்வழி நிற்றல்.

நெளி.(இ - ள்). களவின்கண் - களவுசெய்தலிலே, கன்றிய - மிகுந்த, காதலவர் - ஆசையையுடையவர், அளவின்கண் - (உயிர்முதலியவற்றை) அளவு செய்தலாகியவழியில், பின்று-நிலைத்த, ஒழுகலாற்றார் - (அவ்வழியில் நிலைத்திருப்பதற்கு எற்ப) நடக்கமாட்டார், (எ - று).

உயிர்முதலியவற்றை யளவு செய்தலாவது பிரத்தியட்ச முதலாகச் சொல்லப்பட்ட பிரமாணங்களால் உயிர்ப்பொருளையும், அவ்வுயிர்ப் பொருட்கு அநாதியாய்வருகின்ற நல்வினை தீவினைகளுக்கேற்பவண்டாம்சுகதுக்க முதலிய வினைவகளையும், அந்நல்வினை தீவினைகளால் அவ்வுயிர் நால்வகைக் கதிகளில் பிறக்கிறத்து வருதலையும், அவ்வாறு பிறக்கிறத்து வருவது செய்யாமல் அக் நல்வினை தீவினைகளை யொழித்தற்கு உபாயமான யோக ஞானங்களையும், அந்த யோக ஞானங்களால் அவ்வுயிர் அடையும் முத்தியையும் அளவுசெய்து, உள்ளவாறறிதல். இவ்வாறறிவதைச் சமணர் தருமத்தியான மென்பர். அவ்வாறறிந்ததற்குப் பொருந்த நடத்தலாவது அவ்வளக்கப்பட்டனவற்றுள், தியவைகளினின்றும் நீங்கி நல்லவைகளின் வழியில் நிற்றலாம்.

(க - து). களவுசெய்தலில் மிகுந்த ஆசையையுடையவர் உண்மை யறிந்தொழுகார் என்பது.

6. They cannot walk steadfastly, according to rule, who eagerly desire to defraud others.

எ. களவேன்னுங் காரறி வாண்மை யளவேன்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

பரி.—(இ - ள்). களவென்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினையுடையராதல் உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினார்கண் இல்லை, (எ - று).

---

† நல்வினை தீவினைக் குற்ற வினைவகளையும் - நல்வினை தீவினைகளின் குற்றத்தைத் தரும் வினைவகளையும் (என்பு பொருள்கூறினுமமையும்).

‡ காற்கதி - மக்கள், தேவர், நாகர், விலங்கு என்னும் நால்வகைப் பிறப்பு.

¶ தியனவற்றி னீங்குதல் - பிறப்பிற் கேதுவான வினைகளைச்செய்வதினின்று மொழிதல்.

§ நல்லன வற்றின்வழி நிற்றல் - பிறப்பைக்கெடுத்தற் கேதுவான யோகஞானங்களின் வழியி லொழுகுதல்.

இருள் - மயக்கம். † காரியத்தைக் காரணமாக வுபசரித்துக் 'கள வெண்ணுங் காரறி வாண்மை' என்றும், காரணத்தைக் ¶ காரியமாக வுப சரித்து 'அளவென்னு மாற்றல்' என்றுங் கூறினர். களவுந்துறவும் இருளு மொளியும் போலத் தம்முண் மாறுகலின், ஒருங்கு நில்லா வென்பது இவை மூன்று பாட்டாலுங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). களவென்னும்-களவென்று சொல்லப்படுகின்ற, கார் - மயக்கிய, அறிவாண்மை - அறிவினையுடையராதல், அளவென்னும்-(உயிர் முதலியவற்றை) அளத்தலெனனும், ஆற்றல் - பெருமையை, புரிந் தார்கண் - விரும்பினவரிடத்து, இல் - இல்லை, (எ - று).

'களவென்னுங் காரறிவாண்மை'எனக் காரியத்தைக் காரணமாக உப சரித்தும், 'அளவெனனுமாற்றல்' எனக் காரணத்தைக்காரியமாக உபசரித் தல் கூறினர். களவுந்துறவுமும் இருளும்ஒளியும்போன்றுதம்முள் (ஒன் றற்கொன்று) பகையா யிருப்பதாகலின், (அவை ஒரிடத்து) ஒருமித்துக் கூடுகிற்பனவல்லவென்பது இவை மூன்றுபாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து). களவை விரும்பு மறிவு உண்மையை யறிய விரும் பினரிடத்துண்டாகா தென்பது.

7. That black knowledge which is called fraud, is not in those who desire that greatness which is called rectitude.

அ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

பரி:—(அ - ள்). அவ்வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலைபெற்றாற்போல நிலைபெறும்; களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை, (எ - று).

உயிர் முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் துறவறஞ்சலியாது நிற்கு மென்பது இவ்வுவமையாற் பெற்றாம். களவொடு மாறின்றி நிற்பது இதனாற் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்). களவறிந்தார்-களவையே பழகியறிந்தவரது, நெஞ் சில்-மனத்தில், கரவு - வஞ்சனையானது, அளவறிந்தார்-அவ்வளத்தலையே

† 'களவென்னுங் காரறிவு' என்பதில் காரறிவு காரணம் களவு காரி யம் என்றும், 'அளவென்னுமாற்றல்' என்பதில் அளவு காரணம் ஆற்றல் காரியமென்று மறிக; என்னை? காரறிவினால் களவும், அளத்தலால் ஆற் றலுமுண்டாகின்றமையினென்க. களவிற்குக்காரணமான காரறிவைக் 'கள வெண்ணுங்காரறிவு' என்றும், அளவின் காரியமான ஆற்றலை 'அளவென்னு மாற்றல்' என்றுங் கூறியது உபசார வழக்கமாம். ஈண்டுக் கூறிய உபசார வழக்கிரண்டனுள், முன்னது காரியம் காரணமாய வுபசாரவழக்காம்; பின் னது காரணம் காரியமாய வுபசாரவழக்காம்.

¶ காரியமாக்கி என்றும் பாடமுண்டு.

பழகி யறிந்தவரது,* நெஞ்சத்து - மனத்தில், அறம்போல - அறம் (நிலை பெற்றுத்) போல, கிற்கும் - நிலைபெறும், (எ - று).

உயிர் முதலியவற்றை அளவைகளால் அளந் தறிந்தவர்களுக்குத் துறவறம் அசையாது கிற்குமென்பது (அளவறிந்தார் நெஞ்சத் தறம் போல என்னும்) இவ் வுவமானத்தினால் பெறப்பட்டது. களவோடு மாறுபாடின்றி கிற்பது வஞ்சனை யென்பதினாற் சொல்லப்பட்டது.

(க - து). உண்மையறிந்தார் நெஞ்சத்து அறம் நிலைபெற் றிருப்பதுபோலக் களவறிந்தார்நெஞ்சத்து வஞ்சனை நிலைபெறும்.

8. Deceit dwells in the mind of those who are conversant with fraud, even as virtue in the minds of those who are conversant with rectitude.

கூ. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ரு தவர்.

பரி:—(இ - ள்). அவ்வளவல்லாத தீய நினைவுகளை † நினைத்து அப்பொழுதே கெடுவர், களவல்லாத பிறவற்றை யறியாதவர். (எ-று).

தீய நினைவுகளாவன-பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ் சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனால் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. ¶ நினைத்தலுஞ் செய்தலோ டொக்குமாகலின் 'செய்த' என்றும், அஃது உள்ள வறங்களைப் போக்கிக் காத்த சொற் செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் 'ஆங்கே வீவர்' என்றுங்கூறினர். மற்றையவாவன—துறந்தார்க்கு உணவாகவோதப்பட்ட காய் கனி இழங்கு சருகு முதலாயினவும், இல் வாழ்வார் செய்யுந் தானங் களுமாம். தேற்ருமை ‡ அவற்றையே தகர்ந்து அவ்வளவால் கிறைக் கிருத்தலே யறியாமை. இதனாற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). களவல்ல - களவுசெய்த லல்லாத, மற்றைய பிறவற்றை, தேற்ருதவர் - அறியாதவர்(களவுசெய்த லொன்றையே அறிந் தவர்), அளவல்ல - அவ்வளவல்லாத தீய நினைவுகளை, செய்த-நினைத்து, ஆங்கே-அப்போதே, வீவர் - கெடுவர், (எ - று).

தீய நினைவுகளாவன - பொருளுடையவரை வஞ்சிக்கும் விதமும், அவ்வஞ்சனையால் அப்பொருளைக் கொள்ளும் விதமும், கொண்ட அப்

† நினைத்தபொழுதே என்னும் பாடமுண்டு.


¶ "நினைத்தலுஞ் செய்தலோ டொக்குமாகலின், 'செயின்'என்ருர்" என்பது "கெடுவல்யா னென்ப தறிக" என்னுங் குறளின் வீசேடவுரை.

‡ அவற்றையே - காய் கனி இழங்கு சருகு முதலாயினவற்றையே.

பொருளால் தாம் சம்தாதிவிஷயங்களே யனுபவிக்கும் விதமும் முதலா வினவாம். (பிறர்பொருளே யபகரிக்க) நினைத்தலும் செய்தற்குச் சமானமா மாகலின்'செய்து' என்றும்,அக்கினைப்பு உள்ள அறங்களைப்போக்கி மறைப் பான சொல்லையும் செயலையும் புகுமாறுசெய்து அப்போதே கெடுக்குமாத லால் ' ஆங்கே வீவர் ' என்றும் சொல்லினர். மற்றையவாவன-துறக் தார்க்கு உணவாகச் சொல்லப்பட்ட காய் கனி மிழங்கு சருகு முதலான வையும், இல்லறத்தில் வாழ்வார் செய்யும் தானங்களுமாம். தேற்றுமை யாவது அவற்றையே உண்டு அவ்வண்டவளவால் போதுமென் றிருத்தலே யதியாமையாம். இதனால் களவுசெய்வார் கெடும்வகை சொல்லப்பட்டது.

(க - து). களவொன்றையே யறிந்தவர் விரைக்து கெடுவர்.

9. Those, who are acquainted with nothing but fraud, will perish in the very commission of transgression.



கo. கள்வார்க்குத் தள்ளு முயிர்கிலே கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

பரி.—(இ-ள்). * களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும் தவறும்; அது செய்யாதார்க்கு நேடுத் தேணதாகிய புத்தே ளுலகுந் தவறாது, (எ-று).

உயிர் நிற்றற்கிடனுகலின் 'உயிர்கிலே' எனப்பட்டது. சிறப்பும்மை கள் † இரண்டும் விகாரத்தாற்றொக்கன. இம்மையினும் அரசனால் ஒறுக் கப்படுதலின் உயிர்கிலையுக் தள்ளும் என்றும், மறுமையினுக் தேவராதல் கூடுதலின் புத்தே ளுலகுக் தள்ளாது என்றுங் கூறினர். ‡ "மற்றது,தள் ளினுக் தள்ளாமை நீர்த்து" ¶ என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதல றிக. இதற்குப் பிறவாறுரைப்பாருமுளர். இதனால் இருவர்பயனும் ஒரு ங்கு கூறப்பட்டது.

தேவி.—(இ - ன்). கள்வார்க்கு - களவினைப் பழகுவார்க்கு, உயிர் கிலை (தம்மின்வேறல்லாத) உடம்பும், தள்ளும் - தவறும், கள்ளார்க்கு -

* களவினைப்பயிலுக் திறவிகளுக்கு யோகஞானக்க ளில்லாமையின், உயிர் உடலுக்கு வேறென்னு முணர்வின்றென் றுணர்த்தவர் 'களவினை ப்பயில் வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும்' என்று கூறினர்.

† இவ்விரண்டனுள் முன்னது இழிவுசிறப்பு ; பின்னது உயர்வு சிறப்பு.

‡ திருக்குறள் ஊக்கமுடைமை, 6. இதன்பொருள் அல்வுயர்ச்சியா னது (ஊழ்வகையினுல்) தவறினும் (உயர்ச்சியையடைய வேண்டுமென் னுமெண்ணம்) தவருமைத் தன்மையுடையது என்பது.


¶ என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதலறிக—என்ற விடத்தும் தள்ளுதலென்பது தவறுதலென்னு மிப்பொருளுடைய தாதலையறிக.

அக்களவினைச் செய்யாதவர்க்கு, புத்தேளுலகு - (தெய்வத்தன்மை) தேவருலகமும், தன்னாது - தவறாது, (எ-று).

உயிர் தங்குவதற்கிடமா யிருத்தலால் உடம்பு 'உயிர்நிலை' என்று சொல்லப்பட்டது. உயிர்நிலையும் புத்தேளுலகும் என்னும் இறப்பும்மை யிரண்டும் செய்யுள் வீகாரத்தாற் றொக்கு நின்றன. (கள்வார் மறுமையிலே யமனால் தண்டிக்கப் படுதலன்றி) இம்மையிலும் அரசனால் தண்டிக்கப்படுதலால் உயிர்நிலையும் தன்னும் என்றும், (கள்ளார் இம்மையிலே புகழும் புண்ணியமு முடையவ ராதலன்றி) மறுமையிலும் தேவராதல் கூடுமாதலால் புத்தேளுலகும் தன்னாது என்றும் கூறினர். இதனால் கள்வார் (திருடுவார்) கள்ளார் (திருடாதவர்) என்னும் இருவர் பயனும் சேர்த்துச் சொல்லப்பட்டது.

(க-து). களவு செய்பவ ரிருமையிலுந் துன்புறுவர்; களவு செய்யாதவ ரிருமையிலு மின்புறுவர் என்பது.

10. Even their body will fail the fraudulent; but even the world of the gods will not fail those who are free from fraud.



ஆறுவது அதிகாரம்.

வாய்மை—On Truthfulness.

பரி.—அஃதாவது மெய்யினது தன்மை. † பெரும்பான்மையுங் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

தெவி.—அஃதாவது மெய்யினது தன்மையாம். பெரும்பான்மையும் காமமும் பொருளும் பற்றியுண்டாவதாகிய பொய்ம்மையை விலக்குதலால், இது (வாய்மையென்னு மதிகாரம்) கூடா வொழுக்கங். கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

க. வாய்மை யெனப்படவே தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

பரி.—(இ-ள்). மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல், (எ-று).

† கூடாவொழுக்கம் காமத்தாலும் களவு பொருளாசையாலு முண்டாம்; பொய்பேசுதல் பெரும்பான்மையாகக் காமத்தாலாவது பொருளாசையாலாவது உண்டாமென்க.

* தீமை யாதொன்றும் இலாதவென இயையும். † எனப்படுவதென் பது † "ஊரெனப்படுவதுறையூர்" என்றாற்போல நின்றது. இதனுள் கிழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது. அதுதானும், நீங்கு பயவாதா யின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாமென்பது கருத்து.

தெளி.—(இ-ன்). வாய்மையெனப்படுவது - மெய்ம்மையென்று தெ ப்பித்துச் சொல்லப்படுவது, யாதெனின் - யாதென்று வினவினால், (அது பிறிதோ ருயிர்க்கு), தீமை-தீங்கு, யாதொன்றும்-சிறிதாயினும், இலாத - தாத சொற்களே, சொலல்-சொல்லுதலாம், (ஈ-று).

தீமை யாதொன்று மிலாத என்றன்வயமாம். எனப் படுவதென்பது செயப்பாட்டு வினைப்பெயர். இதனுல் கடந்ததைச் சொல்லுதல் என்பது நீக்கப்பட்டது. அக்கடந்ததைச் சொல்லுதலும், தீங்கைத்தாரா திருக்கு மாயின் மெய்ம்மையாம; தீங்கைத் தருமாயின் பொய்ம்மையாமென்பது கருத்து.

(க-து). பிறிதோருயிர்க் கொருசிறிதுந் துன்பத்தை யுண்டு பண்ணுதசொல்லே மெய்ம்மைச்சொல்லாம் என்பது.

1. Is it asked what is truth? It is the speaking of such words as are without the least degree of evil to others.

உ. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

பரி.—(இ-ள்). பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமா யின், பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம்.

குற்றந்தீர்ந்த நன்மை-அறம்; அதனைப்பயத்தலாவது கேடாதல் சாக் காடாதல் எய்த நின்றவோருயிர் * அச்சொற்களின் பொய்ம்மையாலே † அதனினீங்கி யின்புறுதல். கிழாதது கூறலும், நன்மை பயவாதாயின்

---

* தீமையென்பதனே யாதொன்றும் என்பதற்கு முன்னர்க்கூட்டித் தீமையாதொன்றும் இலாத என்றன்வயிக்கப்பட்டது.

† மூன்றும் வேற்றுமைக் கருத்தாவின் செயப்படு பொருளான வாய் மையெனப்படுவது என்பது ஊரெனப்படுவதுறையூர் என்றாற்போல படுசொல்லனைக்கொண்டு வந்தது.

‡ இதன்பொருள் ஊரென்று சொல்லப்படுவது உறையூர் என்பது.

* அச்சொற்களின்—(ஒன்றை மற்றொன்றாக மறைத்துச்சொல்லும்) பொய்ம்மைச் சொற்களை.

† அதனினீங்கி - கேட்டினின்றுவது மாணத்தினின்றுவது நீங்கி.

பொய்ம்மையாம்; ‡ பயப்பின் மெய்ம்மையாமென்பது கருத்து. இவை யிரண்டு பாட்டானும் நீங்குபயவாதகிகழ்ந்தது கூறலும் நன்மைபயக்கும் கிகழாதது கூறலும் மெய்ம்மையெனவும், நன்மைபயவாத கிகழாதது கூற லும் நீங்கு பயக்கும் கிகழ்ந்ததுகூறலும் பொய்ம்மையெனவும், அவற்றது இலக்கணங்கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). பொய்ம்மையும் - பொய்ம்மைச்சொற்களும், புரை தீர்ந்த-குற்றத்தினின்று நீங்கிய, நன்மை-நன்மையை, பயக்குமெனின் - (பிறர்க்குத்) தருமாயின், வாய்மையிடத்த - மெய்ம்மைச்சொற்களினிடத் தனவாம, (எ-று).

குற்றத்தினின்று நீங்கிய நன்மை - அறம்; அவ்வறத்தினைத்தருதலா வது கேட்டையாவது மரணத்தையாவது அடைய கின்றதோருயிர் அச் சொற்களின் பொய்ம்மையிலுலே அதனின் நீங்கி இன்பமடைதல். கடவாததைச் சொல்லுதலும் நன்மையைத்தாராதாயின் பொய்ம்மையாம்; நன்மையைத் தருமாயின் மெய்ம்மையாமென்பது கருத்து. இவையி ரண்டு பாட்டாலும் நீமையைத்தாராத கடந்ததைச் சொல்லுதலும் நன்மை யைத்தரும் கடவாததைச் சொல்லுதலும் மெய்ம்மையாம் எனவும், நன் மையைத் தாராத கடவாததைச சொல்லுதலும் நீமையைத்தரும் கடந்த தைச் சொல்லுதலும் பொய்ம்மையாம எனவும், அவற்றது (மெய், பொய்ச் சொற்களது) இலக்கணம் சொல்லப்பட்டது. குற்றம் - பழிபாவம்

(க-து). பொய்பேசுதலும் நன்மையைத் தருமாயின், அது வும் மெய்ம்மைச்சொல்லாம் என்பது.

2. Even falsehood has the nature of truth, if it confer a benefit that is free from fault.



கூ. * தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

‡ கடவாததைக கூறுதலும் நன்மையைத் தருமாயின் மெய்ம்மையா மென்பது "உம்மையின் மறுமை தன்னி லுபய னிரண்டும் பார்க் கின், இம்மையில் வினைக்கும் யார்க்கு மவாவ நியற்கை யாலே, மெய்ம்மை யே யொருவர்க் குற்ற விபத்தினை மீட்கு மாயிற், பொயம்மையு மெய்மமை போலப் புண்ணியம் பயக்கு மாதோ" என்று பாரதங்கூறுவதனுலுமறிதற் பாற்றும்." பொய்யுரை புகலிற் றீமையா மென்னப் புகன்றனர் புலமைமை ன் குணர்ந்தோர், ஐயறுண் மருவுகுற் செய்யவாய மகளிர் புலவியி லகுதண ராவி, உய்யுமென் புழியி லாவினை யளிக்கு மிடத்தினி லோடாரி லெடுக் கண், தையலார் மணத்திற் பொய்ம்மையு மெய்ம்மை தன்னினும் விழுமி தா மன்றே" என்று காசிகாண்டங் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

* "நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்" என்பது உலகநீதி.

பரி.—(இ-ள்). ஒருவன் தன்னெஞ்சறிவ தொன்றனைப் பிறர் அறி ந்திலனென்று † பொய்யாதொழிக, ‡ பொய்த்தானுயின்,¶ அதனை அறி ந்த தன்னெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று, தன்னை அதன் பய னுய துன்பத்தையெய்துவிக்கும், (எ-று).

நெஞ்சு § கரியாதல் * "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார், தங்காது தலைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு, ணெஞ்சறிந்த கொடி யவை மறைப்பவு மறையாவா, நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்" என்பதனுனு மறிக. பொய் மறையாமையின், அது கூறலாகாதென்பது இதனுற் கூறப்பட்டது.

நேளி.—(இ-ன்). (ஒருவன்) தன்னெஞ்சு-தனது மனமானது, அறி வது-அறிவதாகிய வொன்றை, பொய்யற்க - (பிறர் அறிந்திலரென்று) பொ ய்யாதொழியக்கடவன், பொய்த்தபின் - பொய்த்தானுயின், தன்னெஞ்சே- (அப்பொய்த்தலை அறிந்த) தனது மனமே, (அப்பாவத்துக்குச் சாட்சியாய் நின்று) தன்னை -, சுடும், சுடாநிற்கும், (அப்பாவத்தின் பயனுகிய துன்பத் தையடைவிக்கும்), (எ-று).

பொய் மறையாதாதலால், அப்பொய்யினைச் சொல்லலாகாதென்பது இதனுல் சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் தன் மனமறியப் பொய்பேசினுல், அம்ம னமே அவனை வருத்தும என்பது.

† பொய்யா தொழிக - மறைத்துப்பேசா தொழியக்கடவன்.


‡ பொய்த்தானுயின் - மறைத்துப் பேசுவானுனல்.

¶ அதனை - அம்மறைத்துப் பேசுதலை.

§ நெஞ்சு கரியாதல் - ஒவ்வொருவருக்குந் தத்தம் மனமே சாட்சியா தல.

கலித்தொகை, நெய்தற்கலி, அ. இதன்பொருள் - அறியாதவர்கள் (தம்மனம் இது செயலாகாதென்று) மீளாதே (வேறு) விலக்குவாருமின்றி உலகத்திற் கண்டவர்களு மில்லையென்று (கருதித்) தாஞ்செய்யுந்தீவினைக ளுள் தாம் நெஞ்சறியவே செய்த கொடிய தீவினைகளைப் (பினபு பிறரறி யாமல்) மறைத்தார்களாயினும் (தவை) மறையமாட்டாவாம்; நெஞ்சைக் காட்டிலும் அணுகியசாட்சி (வேறு) இல்லை யாதையால் என்பது. உண ராதார் தங்காது தலைவின்றி யுலகத்துள் கண்டவரில்லெனத் தாஞ்செய் யும் வினைகளுள் நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவும் மறையாவாம் நெ ஞ்சத்திற் குறுகிய கரியில்லையாகலின் என்பதுஅர்வயமாம்,இங்குள்ளமறை ப்பு மறையாவா மென்பதற்கு நச்சினர்க்கினியர் 'மறைப்பினு மறிபவர்' என்ற பாடல்கொண்டு 'பிறரறியாமல் மறைத்தார்களாயினும் தாஞ்செய்த மையை அறிந்திருக்கின்றவர்கள்'என்றரை கூறியிருக்கின்றனர். 'தன்னை ந்தா னெஞ்சம் கரியாகத் தானடக்கின், பின்னைந்தா னெய்தாப் பயனில்லை' என்று அறநெறிச்சாரம் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

3. Let not a man knowingly tell a lie; for after he has told the lie, his mind will burn him with the memory of his guilt.



ச. † உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

பரி.—(இ - ள்). ஒருவன் தன்னுள்ளத்திற்கேற்பப் பொய்கூறாது ஒழுகுவனையின், அவன் உயர்ந்தோருள்ளத்தின்க ணெல்லாம் உளனும்,()


‡ உள்ளத்தாலென்பது வேற்றுமை மயக்கம். பொய்கூரு தொழுகு தலாவது மெய் கூறியொழுகுதல். ‡ அவனது அறத்தின தருமைநோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பரென்பதாம். இதனுல் 6 இம்மைப்பயன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) உள்ளத்தால்-(தன்) மனத்திற்கு(ஏற்ப), பொய்யாது-பொய்பேசாமல். ஒழுகின் - நடப்பானையின், (அவன்), உலகத் தார் - உயர்ந்தோரது, உள்ளத்துளெல்லாம் - மனங்களிலெல்லாம், உளன்- இருப்பவனுவன், (ஒ-று).

உள்ளத்தாலென்பது உள்ளத்திற்கு என்னும் பொருளில் வந்தலமையின் வேற்றுமை மயக்கமாம். பொய்பேசாமல் நடத்தலாவது மெய்பேசி நடத் தல். மெய்பேசி நடக்கும் அவனது அறத்தினது அருமையை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பாரென்பதாம். இதனுல் பொய்பேசாதொழுபவனுக்கு வரும் ¶ இம்மைப்பயன் சொல்லப்பட்டது.

(க-து). தன் மனமறியப் பொய்பேசா தொழுகுன்றவனை யறிவுடையாரியாவரும் போற்றுவர் என்பது.

4. He, who in his conduct preserves a mind free from deceit will dwell in the minds of all men.



ரு. மனத்தோடு வாய்மை மொழியிற் றவத்தோடு
தானஞ்செய் வாரிற் றலை.

† 'உள்ளத்தாற் பொய்யா தொழுகின்' என்றமையின், துறவறத்தார்க் கு வாய்மை பொய்சொல்லக் கருதாமையென்பது பெறப்பட்டவாறறிக;

‡ உள்ளத்தால் என்பதன் மூன்றனுருபு தனக்குரிய பொருளை விட்டு நான்கனுருபிற் குரிய பொருளில் வந்தமையின், வேற்றுமை மயக் கமாயிற்று.

‡ அவன் றவத்தின தருமை நோக்கி என்றும் பாடமுண்டு.

¶ இம்மைப்பயன் - இம்மையில் (இப்பிறப்பில்) அடையும் பயன் அஃதிங்கு உலகத்தா ருள்ளத்து ளெல்லா முளனுதல்.

பரி.—(இ-ன்). ஒருவன் தன்மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின், அவன் † தவமுந் தானமும் ஒருங்கு செய்வாரினுஞ் சிறப்புடையன், (எ-று).

மனத்தொடு பொருத்துதல்-மனத்திற் கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யு மவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செயயு மது ‡ பயனுடைத் தென்பதாம்.

தெளி.—(இ-ன்) (ஒருவன்) மனத்தொடு-(தன்) மனத்தோடு, (பொருத்த), வாய்மை-உண்மையை, மொழியின்-சொல்லுவானாயின், (அவன்), தவத்தொடு-தவமும், தான மு-தானமும், செயவாரின-(ஒருமிதத்த) செய வாரினும், தலை-சிறப்புடையவனாவான், (எ-று).

மனத்தோடு பொருத்துதல் - மனத்திற கொதிருத்தல். (துறவறத் தார்கு)புறமாகியஉடம்பாற செயயும் அத்தவத்தினுங் தானத்தினும் அகமாகிய மனம் வாக்குகளாற் செய்யும் அது(மெய்பேசுதல்)பயனுடைய தென்பதாம். புறம் - வேளி அசம் - உன்.

(க-து) மனமும் வாக்கும் ஒத்திருக்க மெய்பேசுகின்றவன் தவத்தையுந் தானத்தையுமொருமிதத்த செய்கின்றவாகளினும சிறப்புடையவனாவான் எனபது.

5. He, who speaks truth with all his heart, is superior to those who make gifts and practise austerities.



சு பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

பரி.—(இ-ன்). ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணமில்லை, மறுமைக்கு மெய் வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையுந் தானே கொடுக்கும், (எ-று).

---

† தவத்தொடு தானமும் என்றும் பாடமுண்டு.

தவமாவது மலம் இந்திரியங்களின் வழியே செல்லாது நிற்கும் பொருட்டு விரதங்களால் உணவைச சுருக்குதல் முதலாயினவாம். 'மனம் பொறிகட் கொருமையே தவமாம்' என்பது வேதாந்த சூளாமணி. இது துறவறத்திற்குச் சிறப்பாக வுரியதாம்.

தானமாவது தருமவழியால் வந்தபொருளை யோக்கியர்களுக்குச் சம்தோஷத்தோடு கொடுத்தல். இஃதில்லறத் திற்குச் சிறப்பாகவுரியதாம்.

‡ மனத்தொடு வாய்மை மொழிபவன் துறவறத்திற் சென்ற வினருந் தவத்தின் பயனிலும் இல்லறதிற் சென்றவினருந் தானத்தின் பயனிலும் மேலான பயனையடைவா னென்பதாம்.

† புகழ்-ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றினும், துறவறத்திற்கு உண்மை முதலியவற்றினும் வருத்தல் வேண்டுமென்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் ‡ அவ்விருவகைப் பயனையுந் தானே தருமென்பார் "எய்யாமை யெல்லா வறமுந் தரும்" என்றார்.

தெளி:—(இ - ள்). பொய்யாமையன்ன - (ஒருவனுக்கு) பொய்பே சாமையை யொத்த, புகழ் - புகழ்க்காரணம், இல்லை - (இம்மைக்கு) இன்றும், (அப்பொய்பேசாமை) (அவனுக்கு), எய்யாமை-(உடம்பு)வருந்தாமல், எல்லாவறமும் - எல்லாவறங்களையும, தரும - (மறுமைக்குத்தானே) கொடுக்கும், (எ - று).

புகழென்பதிங்கு அதன் காரணத்தையுணர்த்துதலின், ஆகுபெயராம். இல்லறத்திற்குப் பொருள் சம்பாதித்தல் முதலியவற்றிலும் துறவறத்திற்கு உண்டி சுருக்குதல் முதலிய வற்றிலும்உடம்பு வருந்துதல் வேண்டுமெல்லா,அவ்வருத்தங்கள் அடையாமல் அவ்விருவகை அறங்களும் கொடுக்கும் பயன்களையும் பொய்யாமைதானே கொடுக்கு மென்பார் 'எய்யாமை யெல்லாவறமுந் தரும்' என்றார்.

(க - து). பொய்பேசாமையானது எளிதாக இம்மைக்குரிய புகழையும் மறுமைக்குரிய அறத்தையும் தரும் என்பது.

6. There is no praise like the praise of never uttering a falsehood; without giving any suffering, it will lead to every virtue.

எ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பரி.—(இ - ள்). ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்லனாயின், அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று, (எ - று).

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று; ஏனையது இணிவின் மேற்று. ‡ பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற் கருமை

† புகழ் என்னும் காரியப்பெயர் தன் காரணமாகிய பொய் பேசாமையை யுணர்த்துதலின் காரியவாகு பெயராம்.

‡ அவ்விருவகைப் பயனையும் தானே தரும்-இல்லறத் துறவறமென்னும் இருவகையறங்கள் கொடுக்கும் பயனையும் மெய்பேசுதலே கொடுக்கும்.

* மேற்று - மேலது.

‡ பலவறங்கள் - சாந்திராயணம், இருச்செ முதலிய விரதங்கள்.

யால் ‡ சிலதவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றய இதனையே மேற்கொண்டு தவருமற் செய்தல் நன்றென்பார் 'செய்யாமை செயயாமை நன்று' என்றார். § இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொயயாமற் செய்யிற் பிறவறஞ்செய்கை நன்றெனப் பொழிப்பாக்கிப், பொயகூறிற் பிறவறஞ்செய்கை நன்றாகாதென்பது அதனைற்போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர். பிறவறங்களெல்லாக் தரும் பயனைத் ¶ தானே தரும் ஆற்றலுடைத்தென மறுமைப்பயனது மிருதி இவை மூன்று பாட்டாலுங் கூறப்பட்டது.

நேளி:—(இ-ன்). பொய்யாமை பொய்யாமை-(ஒருவன்) பொய்பேசாமையையே பொய்பேசாமையையே, ஆர்தின் - செய்ய வல்லவனுயின், (அவன்), அறம்பிற - பிறவறமுகளை, செயயாமை செய்யாமை - செயயாமையே செய்யாமையே, நன்று - நல்லது, (எ-று)

பொய்யாமை பொய்யாமை, செய்யாமை செய்யாமையென்னும் அடுக்கிரண்டனுள, பொய்யாமை பொயயாமை எனனும் முதலாவதடுக்கு இடைவிடாமைப் பொருளது; செயாயமை செய்யாமை எனனும் மற்றவருக்குத் தணிவுப்பொருளது. பல வறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமை யாகலால் சிலதவறினுல் குற்றப்படுதலின், அவ்வெல்லா வறங்களின் பயன்களையும் தானே தரவல்லதாகிய இப்பொய் பேசாமையொன்றையே மேற்கொண்டு தவருமற் செய்தல் நல்லதென்பார் 'செய்யாமை செய்யாமை நன்று' என்றார். பிறவறங்களெல்லாம் மறுமையில் தரும் பயனைத் தானே கொடுக்கும் வல்லமை யுடையதென மறுமைப் பயனது மிருதி இவை மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து). பொய் பேசாதவன் வேறு அறங்களைச் செய்தல் வேண்டுவதில்லை ; அஃதவனுக்கு பிறவறங்களின் பயனை யெல்லாந தரும் என்பது.

‡ சிலதவறிற் குற்றப் படுதலின - சாந்திராயண முதலிய விரதங்களை யனுட்டிக்கும்போது, அவற்றிற்கு விதித்துள்ள விதிகளில் சில கால தேச நிமித்தங்களால் தவறிப்போனுல் அவ்விரதங்கள் முடிவின்மை யடைதலின்.

§ இக்குறளை இவ்வாறல்லாமல், பொய்யாமை பொய்யாமை யாற்றின்-பொயயாமையை (பொய் பேசாமையை) பொய்யாமல் (தப்பாது) செய்யின் (அனுஷ்டிதாதால்), அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று-பிறவறஞ் செய்கை (வேறு தாமங்களைச் செய்தல்) நன்று என்று பொழிப்பாக்கி (பொழிப்புரையாக்கி), பொய் கூறிற் பிறவறஞ் செய்கை நன்றாதென்பது அதனுற போந்த (கிடைத்த) பொருளாக்கி யுரைப்பாரு முளர். ஈண்டுச் செய்யாமை செய்யாமை யென்னுமிரண்டெதிர்மறைத் தொழிற் பெயரும் செய்தலென்னும் ஒரு பொருளனவாம்.

¶ தானே - பொய் பேசாமையே.

7. If a man has the power to abstain from falsehood, though he practise no other virtue, it will be well with him.

அ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

பரி:—(இ - ள்). ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீராலே யுண்டாம்; அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையாலுண்டாம்; ()

† காணப்படுவது உள்ளதாகலின், உண்டாமென முரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் - வாலாமை நீங்குதல். மனந்தூய்தாதல் - மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லை யென்றவாறாயிற்று. இதனுள்ள துறந்தார்க்கு ‡ இரண்டு தூய்மையும் வேண்டுமென்பதூஉம் பெற்றாம்.

தெளி:—(இ - ள்). புறம் (ஒருவனுக்கு) - உடம்பு, தூய்மை - பரிசுத்தமாந்தன்மை- நீரான் - நீரினாலே. அமையும் - உண்டாகும், (அதி போல்), அகம் - மனம், தூயமை - பரிசுத்தமாந்தன்மை, வாய்மையான் - மெய்பேசுதலால், காணப்படும் - உண்டாகும், (எ - று).

காணப்படும் பதார்த்தம் உள்ளதாமாகலின், காணப்படு மென்பதற்கு உண்டாமென்று பொருள் கூறப்பட்டது. உடம்பு பரிசுத்தமாதல்-அழுக்கு நீங்குதல், மனம் பரிசுத்தமாதல்-மெய்யுணர்தல். உடம்பு பரிசுத்தமாதற்கு நீரையன்றிவேறு காரணம் இல்லாமையானுறப்பானும், மனம் பரிசுத்தமாதற்கு மெய்பேசுதலன்றி வேறு காரணமில்லை என்னவாறாயிற்று. இதனாலே துறவிகளுக்கு இரண்டு தூய்மையும் வேண்டுமென்பதும் பெறப்பட்டது.

(க - து) உடற் சுத்தி நீராலாவது போன்று மனச்சுத்தி மெய்பேசுதலாலாம் என்பது.

---

* அரிச்சந்திரபுராணம் "சேயமை யண்மையி லுயிர்க்கொரு தீனை யெனச் சிறந்த, வாயமை யாலகந் தூய்மையா மறநிலைப் புறத்தைத், தூய்மை செய்வது நீராலாற் சொல்லின்வே றுளதோ" என்று கூறுகின்றது.

† பாவபதார்த்தம் அபாவபதார்த்தமென்னு மிரண்டனுள், ஒவ்வென்றும் அதற்குரிய பிரமாணங்களால் ஈண்டுக் கடமுண்டு, ஆண்டுப் படமுண்டு; ஈண்டுக்கடாபாவமுண்டு, ஆண்டுப் படாபாவ முண்டென் றறியப்படுகின்றமைபற்றி, 'காண (அறிய)ப் படுவது உளதாகலின், (காணப்படுமென்பதற்கு) உண்டாமென்றுரைக்கப்பட்டது' என்று கூறப்பட்டது. அவ்விருவகைப் பதார்த்தங்களுள், யாதேனுமொன்று உள்ளதாகாவிடத்து அது காணப்படுவதாகாதென்பது ஈண்டுணர்தற் பாற்றும். "உலகினுள், இல்லதற் இல்லை பெயர்" என்ற பழமொழி கூறுவது மறிக.

‡ இரண்டு தூய்மையும் - புறந்தூய்மையும் அகந்தூய்மையும்.

8. Purity of body is produced by water; purity of mind comes from truthfulness.

கூ. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

பரி.—(இ - ள்). புறத்திருள்கடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம் விளக்காகா; துறவான் அமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே (எ - று).

உலகத்தார் விளக்காவன:—ஞாயிறு, திங்கள், தீயென்பன. இவற்றிற்குப் போகாத இருள் போகலின் 'பொய்யா விளக்கே விளக்கு'என்றார்.அவ்விருளாவது அறியாமை. † பொய்யாத விளக்கென்பது குறைந்து நின்றது; பொய்கூறுமையாகிய விளக்கென்றவாறு. ‡ இனி இதற்குக் கல்வி முதலிய வற்றான வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல; அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே யென் றுரைப்பாரு முளர்.

தேவி:—(இ - ள்). சான்றோர்க்கு - (துறவினால்) நிறைந்தோர்க்கு, எல்லாவிளக்கும் - (புறத்திருளே நீக்குகின்ற உலகத்தாரது)விளக்குகளெல்லாம், விளக்கல்ல - விளக்குக்களாவன வல்ல, பொய்யாவிளக்கே - (மனத்திருளே நீக்குகின்ற) பொய்பேசாமையாகிய விளக்கே, விளக்கு - விளக்காவதாம். (எ - று).

உலகத்தாரது விளக்குகளாவன:—சூரியன், சந்திரன், அக்கினியென்பனவாம். இவ்விளக்குகளுக்கு நீங்காத அகத்திருள (பொய்பேசாமையால்) நீங்குதலின் 'பொய்யா விளக்கே விளக்கு' என்றார். அவ்வகத்

† பொய்யாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் செய்யுள் விகாரத்தால் ஈறு குறைந்து பொய்யா என (ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச சமாய்) நின்றது.

பெயரெச்சத்தைப் பண்புத் தொகையாகக் கோடல் வடநூல் வழக்கு. அவ்வழக்குப் பற்றிப் பொய்யா விளக்கெனபது 'பொய் கூறுமையாகிய விளக்கு' எனவிரிக்கப்பட்டது.

"நிலபெய ரெச்சமுஞ் நிலவினைத் தொகையும், இருவகை யுவமையும் வண்ணச் சினைசொலும், பண்புத் தொகையெனப் பகரும் வடநூல்" என்பது இலக்கணக்கொத்து.

‡ இனி இக்குறளுக்கு, எல்லா விளக்கும் - கல்வியறிவு ஒழுக்கங்களால் வரும் விளக்க மெல்லாம், விளக்கல்ல - விளக்கம் அல்ல; சான்றோர்க்கு - அமைந்தார்க்கு, விளக்கு-விளக்கமாவது, பொய்யா விளக்கே - பொய்பேசாமையா லுண்டாகும் விளக்கமே யென்றுரை கூறுவாரு முண்டென்பது.

திருவாவது 0 (தன்னை) அறியாமை. பொய்யாத என்பது ஈறு குறைந்து 'பொய்யா' என நின்றது. புறம் - வெளி.

(க - து). சான்றோர்க்கு விளக்குப் பொய்பேசாமையேயாம்.

9. All lamps are not lamps; the lamp of truth is the lamp of the wise.

க0 யாமெய்யாக் கண்டவற்று ளில்லே யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

பரி:—(இ - ள்). யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லே (எ - று).

¶ மெய்புணர்த்துவனவற்றை 'மெய்' என்றார். அவையாவன:—தங்கண் மயங்கம் இனமையின் பொருள்களே யுள்ளவா றுணர வல்லராய்க் காம வெகுளிக ளின்மையின் § அவற்றை யுணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய † இறைவர் அருளான் உலகத்தா ருறுதி யெய்துதற்பொருட்டுக் கூறிய ‡ ஆகமங்கள். அவை யெல்லாவற்றிலும் ¶ இஃதொப்ப முடித்த தெனபதாம். இவை மூன்றபாட்டானும் இவ்வதத்தினது தலேமை கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்) யாம் - நாம், மெய்யா - மெய்ந்நூல்களாக, கண்டவற்றுள் - அறிந்த நூல்களுள், எனைதொன்றும்-யாதொரு தன்மையாலும், வாய்மையின் - மெயபேசுதலினும், நல்ல-சிறந்தனவாகச் சொல்லப்பட்ட, பிற-பிறவறங்கள், இல்லே - (எ-று).

0 "தன்னே யறியத் தனக்கொரு கேடில்லே, தன்னே யறியாமற் றானே கெடுகின்றான்" என்பது திருமந்திரம்.

¶ மெய்யையுணர்த்துவதற்குக் காரணமாய் நின்ற நூல்களே மெய்யென்றது காரியவாகு பெயராம்.

§ நீத்தார்பெருமை யவதாரிகையில் "அவ்வறமுதற் பொருள்களே யுலகிற்கு உள்ளவா றுணர்த்துவா ரவராகலின் (நீத்தாராதலால்)" என்று கூறியிருப்பது மிங்கறியத் தக்கதாம்.

† இறைவர் - தத்துவஞானிகள்.


‡ ஆகமங்கள் - வினேயினீங்கி விளங்கிய வறிவினேயுடைய முதனவன் (கடவுள்) திருட்டியி ஞரம்பதில் மக்களுய்யுமாறு எடுத்துச்சொல்லிய முதனூலே அடிபொற்றிச் செய்த மனு முதலிய நூல்கள்.

¶ இஃது - எல்லாத்தருமங்களிலும் பொய்பேசாமை யென்னுந்தரு மமே உயர்ந்தது என்னும் அபிப்பிராயம்.

மெய்யை யறிவிக்கின்ற நூல்களை ஆகுபெயரால் 'மெய்'என்றார். அம் மெய்ந்நூல்களாவன:—தம்மிடத்து மயக்கம்இல்லாமையினல்பொருள்களை யுள்ளபடி யறியவல்லவராய்க் காமக்குரோதங்க ளில்லாமையினல்அப்பொருள்களை யறிந்தபடியே சொல்லவும் வல்லவாய மேலோர் திருவாயினல் உலகத்தார் கண்மையையடையும் நிமித்தஞ் சொல்லிய ஆகமங்கள். அவ்வாகமங்களெல்லா வற்றினும் இஃது ஒப்பமுடிந்த தென்பதாம். இவை மூன்று பாட்டாலும் பொய் பேசாமையென்னும் இவ்வறத்தினது உயர்வு சொல்லப்பட்டது.

(க-து). மெய்பேசுவதற்கு நிகரானது அறமொன்றுமில்லை.

10. Amidst all that we have seen described as real excellence, there is nothing so good as truthfulness.



ஏழாவது அதிகாரம்.

வெகுளாமை—*Against Anger.*

பரி.—அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டேதாயவிடத்தும் அதனைச் செயாமை. இது பொய்ம்மைபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

தெளி. — அஃதாவது கோபஞ்செய்தற்குக் காரணம் ஒருவனிடத்திண்டாகிய விடத்தும் அக்கோபத்தைச்செய்யாமையாம். இது (வெகுளாமை) பொய் பேசுவதுபற்றி யுண்டாவதாய கோபத்தைவிலக்கலால், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

க. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

பரி.—(இ-ள்). தன் சினம் பலிக்குமிடத்து அதனை யெழாமற் றடுப்பானே அருளாற் றடுப்பானுவான்; ஏனப்பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென்? தடாதொழிந்தாலென்? (எ-று).

செல்லிடம் அல்லிடமென்றது தவத்தாற் றன்னின் மெலியாரையும் வலியாரையும். வலியார்மேற் * காவாவழியும் † அதனன் ‡ அவர்க்கு வருவ

---

* காவாவழியும் - (சினத்தைக்) காவா (தடுக்கா) த விடத்தும்.

† அதனன் - காவாமையினல்.

‡ "வலியவனிடத்து மொரத்தான் மாட்டினும் வெகுளி கூத்தல், பொலிவுசெயறம தென்னப் பொருந்துரு தனையர் தம்பால், லலிவுற வெகுளி செல்லா தாதலா னலிய லாற்ரு, மெலியவ னிடத்திற் காக்கும் வெகுளியே யறம தென்பர்" என்பது பிரபுலிங்கலீலை.

தோர் தீங்கின்மையிற் காத்தவழியும் அறனில்லை யென்பார் 'காக்கினென் காவாக்கா லென்' என்றார். இதனுன் வெகுளாமைக் கிடங் கூறப்பட்டது.

தெளி.— (இ-ள்). சினம் (தன்) கோபம், செல்லிடத்து - பலிக்குமிடத்து, காப்பான் - (அக்கோபத்தை எழாவாறு) தடுப்பவனே, காப்பான் - (அருளினால்) தடுப்பவனுவான், அல்லிடத்து - மற்றைப்பலியாதவிடத்து, காக்கினென்- (அக்கோபத்தினைத்) தடுத்தால் என்ன ? காவாக்காலென்- தடுக்காவிட்டால் என்ன? (எ-று)

செல்லிட மென்றது தவத்தால் தன்னின் மெலியவரையும், அல்லிடமென்றது தவத்தால் தன்னின் வலியவரையுமாம. வலியவர்மேல் கோபஞ்செய்தலேத் தடுக்காதவிடத்தும் அதனால் அவர்க்கு வருவதோர் தீங்கு இல்லாமையால் தடுத்த விடத்தும் அறம இல்லை யென்பார் 'காக்கினென் காவாக்கா லென' என்றார். இதனால் கோபஞ்செய்யாமைக்கு இடம் சொல்லப்பட்டது.

(க - து). தன்னினும் மெலியாரைக் கோபியாதவனே சினத்தை வென்றவனுவன் என்பது.

1. He restrains his anger who restrains it when it can injure; when it cannot injure, what does it matter whether he restrain it, or not ?

உ. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

பரி.—(இ-வி). ஒருவன் வேதுளி தன்னின் வலியார்மே லெழினீ $ தனக்கே தீதாம், மற்றை யெளியார்மே லெழினும் அதனிற் றீயன பிற இல்லை. (எ-று).

¶ செல்லாவிடத்துச் சினம்பயப்பது இம்மைக்கண் அவரான் வரும் ஏதமே; ○ ஏனையது இம்மைக்கட்பழியும மறுமைக்கட்பாவமும்பயத்தலின் ‖ 'இல்லதனிற் றீய பிற' என்றார். () ஒரிடத்தும் ஆகாதென்பதாம்.

$ அது தனக்கே என்றும் பாடமுண்டு.

¶ செல்லாவிடம் - தன்னுடையகோபம் செல்லுவதற்கு உரியதாகாத விடம்.

○ ஏனையது - தன்னுடையகோபம் செல்லுவதற்கு உரியதானவிடம்.

‖ அதனிற் றீயன பிறவில்லை என்றும் பாடமுண்டு.

() ஒரிடத்தும் - செல்லிடம், அல்லிடமென்னு மிரண்டனுள், ஒரிடத்திலும். "பெரியவர் தம்கைக் காய்ந்தான் பிறங்கல்கல் வியகோ லெப்பான், புரிவன புரியப் பட்டுப் புலம்புவ ஞெதார்க் காய்ந்தான், எரிய கதி

தெளி:—(இ - ன்). வெம் - (ஒருவன்) கோபமானது, செல்லா விடத்த - தன்னின் வலியவர்மேல், (உண்டாயின்), தீது-(தனக்கே) நீதாம், செல்லிடத்தும்-தன்னினெளியவர்மேல், (உண்டாயினும்), அதனின் - அக்கோபத்தினும், நியபிற - நீமையுடையவை வேறு, இல் - இல்லை, (எ - று).

வலியவர்மேற் செய்யுங் கோபத்தால் உண்டாவது இம்மையில் அவரால் வருத்தன்பமொன்றே; எளியவாமேற் செய்புங் கோபம் இருமையிற் பழியையும் மறுமையிற் பாவத்தையும் தருதலால் 'இல்லதனிற்றீயபிற' வென்றார். வலியவர், எளியவர் என்னும் யாரிடத்தும் கோபஞ்செய்தல் ஆகாதென்பதாம்.

(க - து). வலியவர்மீது செய்யுங் கோபம் இம்மையிற் நீமையையும், மெலியவர்மீது செய்புங் கோபம இருமையினும் நீமையைத் தரும் என்பது.

2. Anger is bad, even when it cannot injure; when it can injure, there is no greater evil.

கூ. மறத்தல் வெகுளியை யாமாட்டுங் தீய
பிறத்த லதனுன் வரும்.

பரி:—(இ - ன). யாவர்மாட்டும் வெகுளியை ஒழிக, ஒருவர்க்குத் தீயனவெல்லா முளவாதல் அதனுன் வரும் ஆகலான், (எ - று).

வலியார், ஒப்பார், எளியாரென்னும் மூவர் மாட்டும் ஆகாமையின் 'யார்மாட்டும்' எனறும், $ மனதகாற் றறதார்க்கு ஆகாதன வாகிய தீச்சிந் தைதசெல்லாவற்றையும் பிறப்பித்தலின 'நீய பிறத்த லதனுன் வரும்' என்றுங்கூறினார்.

னில் வீழ்வ னிழிந்தவர்க் காய்தா னெனருல், ஒருவர்தம் மிடத்துஞ் சீற் றமுருமையே ன்று மாதோ' எனபது பிரபுலிங்கலீலை.

$ மனத்தினுல் யாணைதென்னும் இருவகைப்பற்றையும் விட்ட வர்க்கு ஆகாதனவாய கொடிய வெண்ணங்க ளெல்லாவற்றையும் கோபம் உண்டாக்குதலின், நியபிறதலதனுன்வரும்' என்று கூறப்பட்டது நீய வெண்ணகளாவன பழிபாவங்களுக் கஞ்சாமை, கருணையில்லாமை, அளுருனமில்லா தொழிதல், மேறகொண்டுள்ள விரததைவிட்டுவிடல் முதலியனவாம். விட்டார்மக்களே விசுவாமித்திரர் வேடர்களாகும்படி சபித்தமையும், கபிலர் சகரரைச் சபித்தமையும், இந்திரன் விசுவரூபனென்னுங்குருவின் நீலையை வெட்டினமையும், பிறவும் இங்கு அறியத்தக்கனவாம். "கோடிமெய்ச் கொடியன்யா னெய்திலார் குலவுரூர், நீபமொத் தொளிர் நபோ' தனர்களுஞ் னெமெனும், பாவமும் நயலுளோர் பதைபதைத் தயிர்நிதன், சாபமிட் டனேயர்தம் தவமும்விட் டிடுவரே" என்பது பிரபோத சந்திரோதயம்.

தெளி:—(இ - ன்). யார்மாட்டும் - யாவரிடத்திலும், வெகுளியை - கோபஞ்செய்தலை, மறத்தல் - மறந்தொழியக்கடவர், (ஒருவருக்கு), தீய - தீமையெண்பனவெல்லாம், பிறத்தல்-உண்டாகுதல், அதனான்-அக்கோபத்தினால்,வரும்-வாராகிற்கும், (ஆதலால்), (எ - து).

வலியவர், ஒப்பார், எளியவர் என்னு மூவரிடத்தும், (கோபஞ்செய்தல்) ஆகாமையால் ' யார்மாட்டும் ' என்றும், மனத்தினுல் துறந்தவர்க்கு ஆகாதனவாகிய தீயசிந்தைக ளெல்லாவற்றையும் உண்டாக்கலால் 'தீயபிறத்த லதனான் வரும்'என்றும் சொல்லினர்.

(க-து). கோபத்தால்வருங் கெடுதிகள் பலவாதலின், அதனை யாவரிடத்தும் ஒழித்தல் வேண்டும் என்பது.

3. Forget anger,towards every one, as fountains of evil come from it.

ச. 0 நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

பரி:—(இ - ள்). துறந்தார்க்கு அருளாலுளவாய முகத்தினின்கணகையையும் மனத்தின்கணுவகையையுங்கொன்று கொண்டேழுகின்ற † சினமே அல்லது அதனிற் பிறவாய பகைகளும் உளவோ இல்லை, (எ - று).

துறவாற் புறப்பகை யிலராயினும் உட்பகையாய் நின்று அருண் முதலிய ஈட்பினையும் பிரித்துப் பிறவித்தின்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகையில்லையாயிற்று. இவை மூன்றுபாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). (துறந்தார்க்கு அருளினுலுண்டாகிய) நகையும் (முகத்தினிடத்து) மலர்ச்சியையும், உவகையும் - (மனத்தினிடத்து) மகிழ்ச்சியையும், கொல்லும் - அழித்தற்கொண் டெழுகின்ற, சினத்தின்-கோபத்தைப் பார்க்கிலும், பிற - வேருகிய, பகையும் - பகைகளும், உளவோ - உண்டோ, (இல்லை), (எ- து).

0 " மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கில முதலற முடிக்குமா போலத், தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாந் தகிக்கும், ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா லதனையுள் ளடக்கவு மடங்கா, தோங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்வே றுண்டோ" என்பது இராமாயணம்.

† சினமே யல்லது அதனில் - கோபமேயல்லாமல், அக்கோபத்தைப் பார்க்கிலும்.

புறப்பகை - புறத்தி (வெளியி)ற் பகைவராக வீருப்பவர்.

(துறந்தவர்) துறவால் (தவவேடத்தினுந்) புறப்பகை இல்லாமையினும் உட்பகையாய் நின்று (அவர்க்குரிய) அருள்முதலாகிய உட்பனையும் நீக்கிப் பிறவித்துன்பத்தையும் அடைவித்தலால், அவர்க்குச் கோபத்தின் மிகுந்த பகை இல்லையாயிற்று. இவை மூன்றுபாட்டாலும் கோபத்தினது நிங்கு சொல்லப்பட்டது.

(க-து) முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையுங் கெடிக்க வல்ல கோபத்திற்கு மேற்பட்ட பகை வேறில்லை என்பது.

4. Is there a geater enemy than anger, which kills both laughter and joy ?

ரு. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

பதி.—(இ-ள்) * தன்னைத்தான் துன்பமெய்தாமற் காக்க நினைத் தானுயின், தன் மனத்துச் சினம் வாராமற் காக்க; காவானையின், அச் சினந் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை யெய்துவிக்கும்,(எ-று).

† 'வேண்டிய வேண்டியாங் கெய்தற்' பயத்ததாய தவத்தைப்பிறர் மேற் சாபம் விடுதற்காக ‡ இழந்து ¶ அத்தவத் தின்பத்தோடு பழைய $ பிறவித் துன்பங்களு ஒருங்கெய்தலின் 'தன்னையே கொல்லும்' என்றார். () "கொல்லச் சுரப்பதாங்கு" * என்புழிப்போலக் கொலைச்சொல் ஈண்டுத்துன்பமிகுதியுணர்த்தி நின்றது.

தெளி.—(இ-ள்) தனனை (ஒருவன்) தன்னை, தான் காக்கின் - தான் (துன்பம் அடையாமல்) காக்க நினைத்தானுயின், சினம் (தன் மனதில்) கோபம், (வாராமல்), காக்க - காக்கக்கடவன், காவாக்கால் - காவானுயின், சினம் - அக்கோபமானது, தன்னையே—, கொல்லும்—கெடுக்கும் கடுந் துன்பங்களை யடைவிக்கும், (எ - று.)

* "உன்னங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக், கொண்ணுங் குணமே குணமென்க" என்பது நன்னெறி.

† திருக்குறள் தவம் 5. இதன்பொருள் வேண்டிய பயன்களை வேண்டியபடியே யடைதல் என்பது.

‡ இழந்தவத்தின்பதோடு என்றும் பாடமுண்டு.

¶ உண்டிசுருக்கல், கோடைக்கண்வெயினிலே நிற்றல் முதலியவற்றால் வருந்துன்பம்.

$ தன்னைப்பற்றியும் பிறவுயிர்களைப்பற்றியும் தெய்வத்தைப்பற்றியும் வரும் பிறவித்துன்பங்கள்.

() நாலடியார் சமயாமை-9. இதன்பொருள் மிகவும் வருத்தக் கீழ்மகன் (பிறர்க்குப் பொருளைத்) கொடுப்பான் என்பது. * என்னுமிடத்திற்போல.

வேண்டிய பயன்களை வேண்டியபடியே யடையத்தருவதாகிய தவத்தைப் பிறர்மீது சாப மிடுதற்காக இழந்து அத்தவத் தின்பத்தோடு பழைய பிறவித் துன்பங்களும் ஒருமிக்க அடைதலால்(ஏனம்) 'தன்னையே கொல்லும்'என்றார். கொல்லும் என்னுஞ்சொல் இங்குத் துன்பத்தின் மிகுதியை யறிவித்து நின்றது.

(க - து). தவமேனுத்தான் காக்க விரும்புகின்றவன் கோபத்திற் கிடந்தாதிருக்கக் கடவன் ; தாதாஞுயின், அஃதவனுக்குப் பெருந்துனபத்தைத்தரும் என்பது.

5. If a man would guard himself, let him guard against anger; if he does not guard it, anger will kill him.

சு. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.

பரி.—(இ - ள்). சினமென்னும் நேரூப்புத் தனக்கு * இடமான வரையே யன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுந் சுடும், (எ-று).

'சேர்ந்தாரைக் கொல்லி' என்பது † ஏதுப்பெயர், தான் சேர்ந்த விடத்தைக் கொல்லுந் தொழிலது என்றவாறு. 'சேர்ந்தாரை' என உயர்திணைப்பன்மைமேல் வைத்தது வனேசான்று பாலும் தவசருத்தீதாகூடிய ‡ பொருளாற்றலாற கொண்டார். ஈண்டு உருவகஞ்செய்கின்றது துறக்

* இடமானவர் - (கோபநிருத்தர்) இடமானவர்.

† ஏது (காரண)ப் பெயர் - உறுப்பாற்றலால் பொருளே யுணர்த்தி வருமபெயர். சேர்ந்தாரைக்கொல்லி யென்பதன்கண் சேர்ந்தாரையெண்ணும் உறுப்பும் கொல்லி யென்னும் உறுப்பும் இருத்தலேயும் அவை ஆற்றலால் சேர்ந்தவிடத்தைக் கொல்லுந் தொழிலது என்னும் பொருளே யுணர்த்துதலேயும் அறிக. பிரயோக விவேகநூலார் "ஆற்றலாவது வீரலென்னுஞ் சொல் உதிரை யுணர்த்தாது வீரலேயே யுணராதது நிற்றலாம். அதுபோலச்சொல்லியற்கையாய நிற்றலென்பதே" என்றனர்.

‡ பொருளாற்றல - பொருளின்கணுள்ள சாமர்த்தியம். இங்குச் சேர்ந்தாரை யென்னும் பலர்பால் முதறை கான்கு பால்களுக்கும் உபலட்சணமாம். ஒருமொழி ஒழித்துநின்ற தன்னினதைதைக் கொள்ளுதற்குரியதாய் வருவது உபலட்சண மெனப்படும். "செயபவன் கருவி" என்னும் நன்னூற் சூத்திரவுரையில் சங்கரநமச்சிவாயப் புலவர் "செய்பவன் எனவொருபான்மேல் வைத்தோதினுமேனும் 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே' என்பதனுல் ஐம்பாலுங் கொள்க." என்முவரைத் திருத்தலிங்குக் கவனித்தற் பாலதாம். "சிலவுலகத்து வென்றும், சிலையாலாலயஞ் செய்தான் என்னுந் தொடரினுள் முறையே கல் வில் என்முணர்த்தாது வில் கல்

தார் இனத்தையே யாகவின், இனமென்னு நெருப்பென்ற ¶ விதப்பு, உல கத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்த விடத்தையே; இந்நெருப்பு சோர தவிடத்தையுஞ் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டு இனமென்றது முற்றத் துறந்தி தவஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதி பயக்கு மொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகோக் ஙிச் சுடுமென்னுந் தொழில் கொடுத்தாராயினும், அகற்றுமென்பது பொருளாகக்கொள்க.வமப்புணை † ஏமத்தையுபதேசிக்கும்புணை. ‡ இனமென்னு மேமப்புணையென்ற ஏகதேசவுருவகத்தாற் பிறவிக்கடலுள் அழுந்தாமல் வீடென்னுங் கரையேற்றுகின்றவென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ¶ தன்னையும் வீழ்த்து ஒடுப்பாரையும் அகற்றுமென்பதாம்.

தெவி:—(இ - ன்) இனமென்னும் - கோபமென்னும், சேர்ந்தாரைக் கொல்லி-நெருப்பானது, (தனக்கு இடமானவரையே யல்லாமல்), இன மென்னும் - (அவருக்கு) இனமாகிய, ஏமம்-ஏமமாயுள்ள, புணையை - மரக் கலத்தையும், சுடும் —சுடாநிற்கும், (எ-று).

என்றுணர்த்தலே பொருளாதலால்" என்றனர் இலக்கணக்கொத்து நூலார். "சொல்லாற்றலாற்றேன்றுவதாகிய பொருளாற்றலாற்றேன்றுவதுமாகிய மூதலியவற்றுள் வேறோராற்றாற் பெறப்படுவது" என்று தருக்க சங்கிரகதீபிகையுரை கூறுகின்றது.

¶ வேண்டியதொன்றை முடித்தற்கு வேண்டாத தொன்றைக் கூறுதல் விதப்பு எனப்படும். இனமென்று கூறுது இனமெனவுஞ் சேர்ந்தாரைகொல்லியென (சேர்ந்தாரைக்கொல்லி யென்பதை) அதிகமாகக்கூறினமையின், சேர்ந்தவிடத்தைச் சுடும் நெருப்புப்போலாகாது கோபாக்கினி சேராத வீடத்தையுஞ் சுடும் என்னும் வேண்டியது முடித்தல்பெறப் பட்டவாறறிக.

* அகற்றும்-தனக்கிடமானவரைவிட்டு நீங்கச செய்யும்

† ஏமப்புணை - இரட்சகத்தோணி.

‡ இனத்தை யேமப்புணையென் றுருவகப்படுத்தினதற் கியையப் பிறவியைக் கடலாகவும் முத்தியைக் கரையாகவும் உருவகப்படுத்திக் கூறுதலானா 'இனமென்னுமேமப்புணை'என ஏகதேசமாயுருவகப்படுத்தினமையின், இஃது ஏகதேசவுருவகமாயிற்று. ஏகதேசவுருவகமாவது(இனமுள்ளவற்றுள்)ஒரு பாகத்தையுருவகப்படுத்தி மற்றொரு பாகத்தை யுருவகப்படுத்தாது விடுவது.

¶ கோபமானது தன்னையுடையவனையும் பிறவிக்கடலில் வீழ்ச்செய்து, (தத்துவ உபதேசத்தால்) அவனை எல்லாவற்றும் தத்துவஞானியனவாயும் நீக்குமென்பதாம்.

'சேர்ந்தாரைக்கொல்லி' என்பது காரணப்பெயர்; தான் (பெருப்பு) சேர்ந்தவிடத்தைக் கொல்லும் (அழிக்கும்) தொழிலையுடையதென்பது அதன்பொருள். 'சேர்ந்தாரை' என்று உயர்திணைப் பலர்பால்மேல் வைத்து மற்றைய ஆண் பெண் ஒன்று பல என்னும் நானகு பாலேயும் தமது கருத்தோடு கூடிய பொருளாற்றலாற்கொண்டார். இங்குச் சினமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி என்று உருவகஞ் செய்கின்றது நீத்தாரது கோபத்தையே யாதலால், சினமென்னும் பெருப்பென்ற விதப்பு, உலகத்து பெருப்புச் சுடுவது தான் சேர்ந்தவிடதை மாதிரம்; இக்கோபமாகிய பெருப்புத் தான்(சேர்ந்த விடத்தைப்பையன்றி)சேராதவிடத்தையும் சுடுமென்னும் வேறுபாடுதோன்றநின்றது. இவருஇனமென்றது யாரினனதென்னும்இரு வகைப்பற்றுக்களேயும்பற்றறவிட்டித்தவத்தினுலும் தத்துவஞானத்தினுலும் பெரியவராய்ப்(பிறப்பிற்கஞ்சித் தம்மை யடைந்துவீடையும் வழியைக்) கேட்டவர்களுக்கு உறுதிதரும் மொழிகளே இனிமையாகச்சொல்லுகின்றவரை. 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி' என்று கூறிய உருவகத்தை நோக்கிச் சுடும் என்னுங்தொழில அசினமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லிக்குக் கொடுத்தாரானுலும், அசுடும் என்பதற்கு அகற்றும் (நீக்கும் அல்லதுவிலக்கும்) என்பது பொருளாகக் கொள்க. எமப்புணை-இனிமையாகிய மொழிகளே யுபதேசிக்குந்தோணி. 'இனமென்னுமேமப்புணை' என்று கூறிய எகதேச உருவகத்தால்பிறவிக்கடலிலழுந்தாவாறு முத்தியென்னுங் கரையிலேறச் செய்கின்றவென வருவித்து அப்புணைக்கு முன்கூட்டுக. புணையையுமென்னும் இறந்தது தழீஇய எச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. கோபம் தன்னையும் பிறவிக்கடலில் வீழ்வித்து எடுப்பாரையும் நீக்குமென்பதாம். பெருப்பிற்குச் சேராதவிடத்தையும் சுடுதலையும், மரக்கலத்திற்கு ஓர்தாபதேசஞ் செய்தலையும் அதிகமாகச் சொல்லுதலால் இது மிகையொற்றுமை யுருவகவணியாம்.

(க-து). கோபாக்கினியானது தன்னை யுடையவனைக்கெடுத்து அவனுக்குத் துணையாவாரையும் நீக்கும் என்பது.

6. The fire of anger will burn up even the pleasant raft of friendship.

எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

பரி.—(இ-ள்). சினத்தைத் தன்னுற்றல் உளார்த்துவதோர் துணை மென்று தன்கட்கொண்டவன் அவ்வாறுழிழத்தல், நிலத்தினைக்குத்தல் நீத்வன்கை அந்நிலத்தை யுறுதல் தப்பாதவாறு போலத் தப்பாது. (இ)

வைசேடிகர் † பொருள்,‡ பண்பு, ¶ தொழில், $ சாதி, † விசேடம் ‡ இயைபு என்பனவற்றை அறுவகைப்பொரு ளென்றற்போல, ஈண்டே குணம் பொருளெனப்பட்டது. பிழையாததற்றென்பது குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டானும் வெகுண்டார்க்கு வரும் தீங்கு கூறப் பட்டது.

நேஎரி.—(இ - ள்). சினத்தை - கோபத்தை, பொருளென்று-(தன து வல்லமையைத் தெரிவிப்பதாகிய ஒரு) குணமென்று, கொண்டவன் - (தன்னிடத்து)கொண்டவன், கேடு - அவ்வல்லமையை யிழத்தல், நிலத்து-பூமியி னிடத்து, அறைந்தான - அறைந்தவனது, கை - கையானது, பிழையா தற்று - (அங்கிலத்தை யடைதல்) தப்பாதலிதம்போலத் தப்பாது,(எ - று).

தார்க்கிகருள் ஒருபகுதியாராகிய வைசேடிகர் திரவியம், குணம், கரு மம், சாமானியம், விசேடம், சமவாய மென்பனவற்றை அறுவகைப்பொரு

* கௌதமரது நியாயமதத்தை யனுசரித்தவர்கள் நையாயிகரென்றும் கணாதரது நியாயமதத்தை யனுசரித்தவர்கள் வைசேடிகரென்றும் சொல் லப்படுவர். [விசேஷம் என்னும் பதார்த்ததை யங்கீகரித்தவர் வைசேடி கரெனப்படுவர்.] தருக்க சங்கிரகம் "விசேடம் நித்தப் பொருள்களில் இருப்பனவாய், அவை வெவ்வேறாய் நிற்றலைத் தெரிப்பனவாம்" என்று கூறுகின்றது. வைசேடிகர் குணமுதலிய வற்றையும் பொருள் என்று கூறி னற்போல காலடியாரும் பிதர் மனேயமை 2-வது செய்யுளில் 'பகை பழிபாவமென், றச்சத்தோ டிந்நாற்பொருள்' (பகைபழிபாவ அசசங்களோப் பொருள்) என்று கூறுவது மிகவறியத் தக்கதாம்.

† பொருண்மைச் சாமானியமுடைய தாதல், குணமுடையதாதல் பொருளெனப்படும். பிருதிவி, அப்பு முதலியன பொருளாம்.

‡ குணத்தன்மைச் சாமானியமுடையதாதல், திரவியம் (பொருள்) கர் மம் என்னும் இரண்டிற்கும் வேறுபற்பொதுவியல் புடையதாதல் பண்பு (குணம்) எனப்படும். உருவம், இரசம் முதலியன குணமாம்.

¶ கருமத்தன்மைப் பொதுவியல் புடையதாதல், அசைவு வடிவின தாதல் தொழில் (கர்மம்) எனப்படும். எழுதல், வீழ்தல் முதலியனதொழி லாம்.

$ நித்தியமாயொன்றாய்ப் பலவற்றிற் சமவேதித்து (ஒற்றிற்று) நிற் பது ஜாதி (சாமானியம்) எனப்படும்.

† இவ்வீது இதனினும் வேறு என்று வேறு பிரித்தறியும் புத்தி மாத் திரத்திற்கு ஏது விசேடம் (சிறப்பு) எனப்படும்.

‡ இணைமுதலுக்கும், குணகுணிக்கும், ஜாதியவத்திக்கும், கிரியை கிரியாவானுக்கும், விசேடம் நித்தியப் பொருளுக்கு முள்ள சம்பந்தம் இயைபு எனப்படும். இயைபு எனினும், ஒற்றுமைச் சம்பந்தமெனினும், சமவாய மெனினும் ஒக்கும். (ஜாதியுடையது-வியத்தி)

னென்று கூறினற்போன்று இன்குர் (சினமென்னுங்) குணம் பொருனென்று கூறப்பட்டது. பிழையாததற்று என்பது செய்யுள் விகாரத்தால் பிழையாதற்றுஎனக் குறைந்துநின்றது. இவை மூன்று பாட்டாலும் கோபஞ்செய்தார்க்குவரும் தீங்கு சொல்லப்பட்டது.

(க - து). கோபத்தைப் பொருளாகக் கொண்டவன் தவறுது கெடுவான் என்பது.

7. Destruction will come upon him who regards anger as a good thing, as surely as the hand of him who strikes the ground will not fail.

அ. இணரேரி தோய்வன்ன வின்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

பரி.—(இ - ள்). பலசுடரை உடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தால் ஒத்த இன்னுதவற்றை ஒருவன் செய்தானெயினும், அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று, (எ - று).

இன்னுமையின் மிகுதிதோன்ற 'இணரெரி' என்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற 'இன்னு' என்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்குமென்பது தோன்றப் 'புணரின்' என்றுங் கூறினர். இதனால் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). இணர் - பலசுடர்களையுடையதாய, எரி - பெருநெருப்பானது, தோய்வன்ன - (வந்து) (தன்மீது) படிந்தாற்போன்ற, இன்னு - தின்பந் தருவனவற்றை, செயினும்-(ஒருவன்) செய்தானெயினும், வெகுளாமை-(அவனை) கோபியாமை, புணரின் - (ஒருவனுக்கு) கூடுமாயின், நன்று - (அது) நல்லது, (எ - று)

தின்பந்தருவனவற்றின் மிகுதிதோன்ற, 'இணரெரி' என்றும், அத்தின்பந்தருவனவற்றை மேலுமேலுஞ் செய்தல் தோன்ற 'இன்னு' என்றும், அச்செய்கை முனிவரையும் கோபிக்கசெய்யுமென்பது தோன்றப் 'புணரின்' என்றும் சொல்லினர். இதனால் கோபஞ்செய்யாமையினது நன்மை சொல்லப்பட்டது.

(க-து). பொறுத்தற்கரிய துன்பஞ் செய்தவனையுங் கோபியாதிருக்கும்வல்லமையே துறவறத்தானுக்குச் சிறந்தவல்லமையாம்.

8. Though one commit things against you as painful to bear as if a bundle of fire had been thrust upon you, it will be well, to refrain, if possible, from anger.

கூ. உன்னிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்,

பரி.—(இ - ள்). தவஞ்செயியுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையாரையின், தான் கருதியபேறெல்லாம் ஒருங்கே பெறும்.

† 'உள்ளத்தால்'என வேண்டாது கூறியவதனுன், அருளுடை உள்ள மென்பது முடிந்தது. அதனுல் உள்ளாமையாவது அவ்வருளாகிய பகை யை வளர்த்து அதனுன் மூற்றக் கடிதல். இம்மை மறுமை வீடென்பன வேறு வேறு நிறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றுனே யெய்து மென்பார் 'உள்ளிய வெல்லா முடனெய்தும்' என்ருர், இதனுல் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). உள்ளத்தால் - (தவஞ்செய்பவன் தன்) மனத் தால், வெகுளி - கோபத்தை, உள்ளாகினின் - (ஒருபோதும்) நினையா னுயின், உள்ளிய வெல்லாம் - (தான்) நினைத்த பேறெல்லாம், உடன் - ஒருமிக்க, எய்தும் - பெறுவான், (எ - று)

அருளுடைய வுள்ள மென்பது தோன்றுமாறு 'உள்ளத்தால்'என்பது அதிகமாகச் சொல்லப்பட்டது. அவ்வருளுடைய வுள்ளத்தால் நினையாமை யாவது அவ்வருளாகிய பகையை வளர்த்து அப்பகையினுல் கோபமுழு தையும் நீகஇவிடுதல். இம்மை மறுமை வீடு என்பன வெவ்வேறு வகைப் பட்டன வாஞலும், அவை யெல்லாம் கோபத்தை நினையாமையாகிய வீவ் வொன்றனுலேயேயெய்தக்கடக்கும் என்பார் 'உள்ளிய வெல்லா முடனெய்தும்' என்ருர். இதனுல் கோபஞ்செய்யாதார்க்கு வரும் நன்மை சொல்லப்பட் டது.

(க - து). கோபஞ் செய்தலை மறந்தவன் எண்ணிய பயன்க ளனைத்தையுந் தவறு தி பெறுவான் என்பது.

9. If a man never indulges anger in his heart, he will at once obtain what ever he has thought of.

கூ. இறந்தா றிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் * துறந்தார் துணை.

பரி.—(இ-ள்). சினத்தின் கண்ணே மிக்கார், உயிருடையாராயினும்,

† உள்ளான் என்று கூறியதனுலேயே உள்ளத்தால் எனபதி பெறப் பட்டிருத்தலின், உள்ளத்தால் என்றுகூறியது வேண்டாதகூறியதாயிற்று. வேண்டாத தொன்றைக்கூறுதல் வேண்டியதொன்றை முடித்தற் காதலி ன், உள்ளத்தால் என்று மிகையாகக் கூறியது அருளுடைய உள்ளமென் பதைக்குறிப்பித்து நின்றதென்க. நீத்தாரது மனம் அருளுடைய தென் பது "அந்தண ரென்போ ரறவோர்மற் றெல்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுக லான்" என்னுங் குறளாலுமறியப்படும்.

துறந்தார்-வீடுபெற்றார். வீடுபெறுதலாவது இருவகைப் பற்றையும் பற்றற வொழித்தல்.

செத்தாரோ டொப்பர்; சினத்தைத் * துறந்தார், சாதற்றன்மையராயினும், † அதனை யொழித்தா ரளவினர், (எ-று).

மிக்க ‡ சினத்தை உடையார்க்கு ஞானமெய்துதற் குரிய உயிர் நின்றதாயினும் கலக்கத்தான் அமைதெய்தாமை ஒருதலையாகலின், அவரை 'இறந்தாரனையர்' என்றும், சினத்தை விட்டார்க்குச் சாக்காடெய்துதற்குரியராக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின் அவரை ¶ 'துறந்தார்துணை' என்றுங் கூறினார். § துறந்தார் துணை பன்மை யொருமை மயக்கம். இதனுள் () அவ்விருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). இறந்தார் - (கோபத்திலே) மிகுந்தவர், (உயிருடையவரா யிருப்பினும்), இறந்தாரனையர் - செத்தாரோ டொப்பாவார், சினத்தை—கோபத்தை, துறந்தார் - விட்டவர், (சாதற்றன்மையையுடையவரா யிருப்பினும்), துறந்தார் துணை - அசாதற்றன்மையை யொழிந்தாரோடு ஒப்பாவர், (எ-று).

* கடிந்தார் என்றும் பாடமுண்டு.

† அதனை யொழிந்தார் - சாதற்றன்மையை யொழிந்த சிவன் முத்தர். சிவன முத்தர்க்குப் பிறப்பில்லாமையின் அவர்க்கு மரணமுமில்லாமையாயிற்று; ஆகவே, சிவன முத்தர் பிறப்பிறப்பின்றி யொருசன்மையராய் வீளங்குவரென்பது பெற்றும். சினத்தைத்துறந்தார் முதலாவரென்பது "(ஒருவன்) இந்திரிய நிக்கிரகத்தாலும், இராகத் துவேஷம் (காமம், வெகுளி) இல்லாமையாலும், ஜீவ ஹிம்சை செய்யாமையாலும் மோட்சமடைதற்கு யோக்கியனாவான்" என்று மநுதருமசாஸ்திரம் ஆறாமத்தியாயத்திற் கூறுவதாலுமறிதற்பாற்றும்.

‡ சினமானது மனதினிடச்தெழும்விருப்பத்திற்குத் தடையுண்டாய போதுண்டாவதாம் சினம் தமோகுணவியாபாரமாமாதலின், அதுசத்துவ குணமுடையாரகவிருக்கும் நீத்தார்க்குஆகாதாயிற்று; ஆகவே, மிக்கசினத்தையுடையார் கலக்கமின்றிய சத்துவ குணமுடையராயிருத்தல் கூடாதெனக. "சாற்றமுளர் ஞாலவிருப் பகற்படப் படிலெழுஞ், சீற்றமேயுருவமா மெனையுமென் சிங்கைகோய், மாற்றமோர் கொலையெனு மாதையுங் கலகனு, மாற்றல்சேர் மகனையு மார்கொல்வெல் வார்களே" என்று பிரபோதசந்திரோதயம் கூறுவதும் இங்குக் கவனிசகத் தக்கதாம்.

¶ வீடுபெற்றரோ டொப்பர் என்றும் பாடமுண்டு.


§ துறந்தாரென்னும் பன்மை வினையாலணையும் பெயரோடு துணையென்னும் ஒருமைப்பெயர் மயங்கி வந்தமையின், அத்தொடர் இரண்டுகண்ணுஞ் சென்றது என்பதுபோலப் பன்மை யொருமைமயக்கமாயிற்றென்க.

() அவ்விருவர் - கோபித்தவர், கோபியாதவர்.

அதிகோபமுடையார்க்கு ஞானம் பெறுதற்கு உரிய உயிர் இருப்ப தாயினும் (அவர்) மனக்கலக்கத்திஞல் அந்த ஞானத்தை யடையாமை நிச் சயமாதலால், அவரை 'இறந்தாரினேயா' என்றும், கோபத்தைவிட்டவர்க்கு மரணமடைதற்குரிய வடம்பு இருக்கதாயினும், (அவர்) ஞானத்திஞல் முத் தியை யடைவதுநிச்சயமாதலால், அவரை 'துறந்தார்துணே' என்றும்சொல் லினர். துறந்தார் துணை என்பது பன்மையிலொருமை வந்த வழுவமைதி. இதனுல் அவ்விரண்டு பயனும் ஒருங்கித்தை சொல்லப்பட்டது. சாதாரண மையொழிதல்-இனிப்பிறவாத நாதல்நீங்குதல், தலீதாவது முத்திபெறுதல்.

(க - து). அளவிறந்த கோபத்தையுடையவர் செத்தாரோரா டொப்பர்; அதனே யொழித்தவர் முத்தியெற்றேரோடொப்பர். ()

10. Those, who give way to excessive anger, are no better than dead men; but those, who are freed from it, are equal to those who are freed (from death).



எட்டாவது அதிகாரம்.

இன்னுசெய்யாமை— *Against inflicting suffering.*

பரி.—அஃதாவது துவசித்து ஒருபய நோக்கியாதல், சேற்றும்பற்றி யாதல், * சோர்வாதல் ஒருயிர்க்கு இன்னதவற்றைச் செயயாமை. இன்னசெய்தல் † வெகுளியொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின்பின் வைக்கபட்டது.

தெளி.—அஃதாவது தனக்கு ஒருபயங்கருதித்தாவது வைரமபற்றி யாவது, சோர்வினுலாவது ஒருயிர்க்குத் தன்பந்தருவனவற்றைச் செய்யா மையாம். இன்னசெய்தல் வெகுள ஒழியவும் உண்டாமென்பதையறிவித் தற்கு, இது (இன்னசெயபாலது) வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது. வைரம் - தீராக்கோபம்.

க. சிறபடீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

பரி.—(இ-ள்). ‡ யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய

* சோர்வு - மறதி. † வெகுளி - கோபம்.

‡ "வாயுவிரண் டுந்தடுத்துப் புலனெறிக்கி யிலக்கின்மனம் வைத்தா தார, தேயமுணர்ந் தசனபகொடத தெய்வதங்க ளபிமுகமாய்த் திரும் பச செய்தி, போகதன்பின் பிரமபெலத் திந்திரமு திடைத்தினேத்துப் பொருவல்வி சோதி, யாகதைப்டாலிதல்" யோகமெனப்படும். யோகத் தால் எப்பேறுமுண்டாமென்பதி "எப்பணியு மகன்றிடுமெவ் வினேயுமறு ஞ் சித்தியெல்லா மெய்தி மோக்ஷமுப்புவனத திலும்பெறுதற் கரியபொ ருளொன்றுமிலே முடிக்க வேண்டி, லப்பிரமா தியர்செயலு மறைக்கணத் தின் முடித்திடலா மாத லாலே, யொப்பரிய யோகமத மிதுபோலப் பிறி தொர்மத முண்டோ வென்றுன்" என்னுஞ் செய்யுளாலுமறியப்படும்.

செல்வங்களைப் பிறர்க் கின்னுசெயது பெறலாமாயினும், அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்றுன் † மனநதூயாரது துணிவு, ()

‡ உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனை ¶ 'சிறப்பு'என்றும், அதன் பயிற்சியான $ வாயுவை வென்றெய்தபபடிதலின் * எட்டுச சித்திகளையும் 'சிறப்பீனுஞ் செலவம்' எனறும், காமம், வெகுளி, மயக்கமென்னுங் குற்றங்கள் அற்றமையான் 'மாசற்றூர்' என்னும் கூறினர். இதனுல் தமகொரு பயனுகக்கிச் செய்தல் விலக்கப்பட்டது.

தெளி:—சிறப்பு - யோகமாகிய சிறப்பு, எனும் - தருவனவாகிய, செல்வம் - (அணிமா முதலிய) செலவங்களை, பிறர்க்கினனு - பிறர்க்குத் துனபந் தருவனவற்றைச (செயதி), பெறினும் - பெறலாமாயினும், (அத் துன்பந் தருவனவற்றை), செய்யாமை - செயயாதிருத்தல், மாசற்றூர்- (ஆகமங்கள சொல்லிய வழியால) மனந்தூய்மை யானவாகளது, கோள் - துணிவாம், (எ - று).

பெறினும் என்னும் உம்மை எதிர் மறைப்பொருளது. சிறப்புடைய யோகத்தைச் ' சிறப்பு ' எனறும், அநத யோகாபபியாசத்தால் வாயு வையடக்கி யடையப்படுதலால் அணிமா முதலிய எட்டுச்சித்திகளையும் 'சிறப்பீனுஞ் செல்வம்' எனறும், காமம் வெகுளி, மயக்கமெனனுமுக்குற றஙகளும் நீங்கினமையினுல 'மாசற்றூர்' எனனுங் கூறினர். இதனுல் தமக் கொரு பிரயோசனதனதைக குறித்துப் பிறாகுதத துனபந் தருவனவற் றைச் செயதல் விலக்கப்பட்டது.

(க - து). எவ்வகைத்தாய பயனை ப்பறுவதா யிருப்பினும், பிறாக்குத்தீமை செய்யாமையே பெரியோர்களது கொளகையாம.

1. It is the determination of the spotless not to cause sorrow to others, although they could (by so causing) obtain the wealth which confers greatness.

† மாசற்றூர் யாவர்க்கும் என்றும் பாடமுணடு

‡ யோகாப்பியாசத்தால் பெறப்படும் அணிமாமுதலிய ஐசுவரியங் களைப் பிறாகுத் தீமைசெய்து பெறுதல முடியாததபற்றி (பெறினும் என்னும்)உம்மை பெருமை மிறது (மேலது) என்று கூறப்பட்டது

¶ சிறபபென்னும்பெயா அதனையுடைய யோகத்திற் காயது ஆகு பெயராம; இது விடாத லிலக்கணையாம்.

$ வாயுவை வெல்லுதல் - பிராணவாயுவை இசைசக பூரக கும்பகஞ் செய்தல். இது பிராணயாம மெனபபடும். இசைசகம் - பிராணவாயுவை மூகினின் வலது துவாரவாயிலா வீடுதல்; பூரகம் - பிராணவாயுவை மூகினை இடது துவாரவாயிலாக வள்ளுக்கிழுத்தல. கும்பகம்-பிராணவாயுவை யுள் ளேயடக்குதல்.

* அணிமாமுதலிய (எட்டுச) சித்திகளினிலக்கணஙகளைக் கடவுள் வாழ்த்தில் ஒன்பதாவது செய்யுளின் குறிப்பிற் காணக.

உ. கறுத்தின்ஞ செய்தவக் கண்ணு மறுத்தின்ஞ
செய்யாமை மாசற்றார் கோள்.

பரி:—(இ - ள்). தம்மேற் செற்றங்கொண்டு ஒருவன் இன்ஞதவற்றைச் செய்தவிடத்தும், மீண்டு தாம் அவனுக்கின்ஞதவற்றைச் செய்யாமையும் அவாது துணிவு, (எ - று)

† இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரதத்தாற்றொக்கது. அவ்வின்ஞதவற்றை உட்கொள்ளாது விதெல செயற்பாலதெனபதாம்.

தெளி:—(இ - ன்). கறுத்து - (ஒருவன் தன்மீது) வைரங்கொண்டு, இன்ஞ - தீனபந்தருவனவற்றை, செய்தவக்கண்ணும் - செய்தவிடத்தும், மறுத்து - மீண்டு, இன்ஞ - (தாம் அவனுக்குத்) தீன்பந் தருவனவற்றை, செய்யாமை - செயயாமையும், மாசறறார் - அகுறறமறறவரது, கோள் - துணிவு, (எ - று).

செய்யாமையு மென்னும் இறந்ததுதழுஇயவெச்சவும்மை செய்யுள் விகாரததால தொகுகுன்றது. அதது தீன்பந் தருவனவற்றை மனதிற் கொள்ளாமல் விடெது செயயததக தென்பதாம்.

(க - து). பெரியோர் தமக்குத் தீன்பஞ செய்தவர்களுக்குந் தீன்பஞ செய்யார் என்பது.

2 It is the determination of the spotless not to do evil even in return to those who have cherished enmity and done them evil.

ங. செய்யாமற் செறறார்க்கு மின்ஞத செய்தபி
ஞய்யா விழுமந் தரும்.

பரி:—(இ - ள்). தான் முன்போரின்ஞமை செயயாதிருக்கத் † தன்மேற் செற்றங் கொண்டவர்க்கும் இன்ஞதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின், அச்செயல் அவனுக்குக் கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும், (எ - று).

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமும எய்துதல்.

தெளி:—(இ - ள). செய்யாமல்-(தான் முனபுதீன்பந் தருவ தொன்றை) செய்யாதிருக்க, செற்றார்க்கும் (தன்மீது) வைரங்கொண்டவர்க்கும், இன்ஞத - தீனபந் தருவனவறறை, செய்தபின் - (துறந்தவன்) செயவானாயின், (அச்செயலானது), உய்யா - கடக்கமுடியாத, விழுமம் - இடும்பையை, தரும் - (அவனுக்குக்) கொடுக்கும், (எ-று)

† செயயாமையும் என்றவும்மை 'பிறக்கின்ஞ செயயாமையேயன்றி ஞன்பதைத் தழுவிநிற்றலின், இறந்தது தழீஇய வெச்சவும்மைய யிற்று.

† தன்னைச்செற்றார்க்கும் என்றும் பாடமுண்டு.

அவ்விடும்பையாவது தவத்தையிழத்து பழியையும் பாவத்தையும் அடைதல்.

(க - து). காரணமின்றித் துன்புஞ் செய்தார்க்குந் துன்புஞ் செய்தல் கூடாது; செய்தால், அது பெருந்துன்பத்தைத் தரும் என்பது.

3. If an ascetic inflict suffering even on those who hate him, when he has not done them any evil, it will afterwards give him irretrievable sorrow.

ச. இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

பரி.—(இ-ள்). தமக்கின்னுதவற்றைச் செய்தாரைத் துறந்தேயா ஒறுத்தலாவது அவர்தாமே நாணுமாறு அவர்க்கு முனிய வுபகாக ளாச் செய்து * அவ்விரண்டனையும் மறத்தல், (எ-று).

† மறவாவழிப் பின்னும்வந்து நிலைக்குமாகலின், மறக்கற் பாலவாயின. ‡ அவரை வெல்லுமுபாயங கூறியவாறு. இவை மூன்றுபாட்டானுஞ் செற்றம் பற்றிச செய்தல் விலக்கப்பட்டது.

* அவ்விரண்டனையும்- பிறர்தமக்குச செய்ததீமைகள, தாம் அவர்க்குச செய்த இனியவுபகாகள் (சந்தோஷத்திற் கேதுவான வுபசாரங்கள்) ஆகிய இரண்டையும்.

† பிறர் தமகுசசெய்த தீமைகளையும் தாம் அவர்க்கு (அவர் வெட்கப் படும்படி) செய்த இனியவுபகாகளையும் துறந்தார் மறகாதவிடத்து அவை பின்னும் ஞாபத்திற்கு வருதலேன்றுமாகலின், மறக்கத் தக்க வையாயின வென்க. இஙகே மறத்தலென்றது அச்செய்கைகள் சமஸ்கார வாயிலாக ஞாபகத்திற்குவாராதொழிதலே. அனுபவத்தின் காரியமாய் எண்ணத்திற தேதுவாயிருப்பது சம்ஸ்கார மெனப்படும். கள்ளாமை யதி காரதனின் அவதாரிகையில் "புறதறிப் போகாதிமடஙகி ஒருதலைப்பட்டு உயிரையேபோக்கற்பாலதாய அவர் (துறவிகள்) மனம்" என்றகுறியிருத் தலினுல் நீத்தார்க்கு ஆதமஜிந்தனையன்றி வேறுஜிந்தனை யிருத்தல்கூடாதென் பது நன்குவிளங்கும்; வினகுகேவே, நீத்தார்க்கு வேறுஜிந்தனை ஆத்மஜிந்த னைக்குத் தடையாகுமென்க. பிறர் தமக்குச் செய்ததீமையை யெண்ணும போது சினமிகுந்து உயிரையே போக்கியமைதலாயிருக்கும் மனமானது அமைதிகெட்டுக் கலக்கத்தை யடைதலினுலும, தமகுக்கெடுதிசெய்தவர் களுக்குத் தாம்செய்த இனியவுபகைகளை யெண்ணும்போது தமது மேன் மைகாணப்பட்டு அதனுல் அகங்காரப்புண்டாகிக் கலக்கத்தை யடைதலி னுலும், கலக்கம் மனம் ஒருமுகப்படாமைக்குக் காரணமாயிருத்தலினுலும், மனம் ஒருமுகப்படாதபோது ஆத்மஜிந்தனை யுண்டாகாதிருத்தலினுலும் அவ்விரண்டை மறக்கத் தக்கவையாயின வென்க.

‡ அவரை—தமக்குத் தீமை செய்தவரை,

தெளி.—(இ-ன்). (தமக்கு) இன்னு - துன்பந்தருவனவற்றை, செய்தாரை-செய்தவர்களை, ஒறுத்தல் (தருந்தோர்) தண்டித்தலாவது, அவர் நாண- அவர் (தாமே) நாணும்படி, (அவருக்கு), நன்னயம்- இனிமையான மிழ்ச்சிகளை, செய்து—, விடல்-(அவ்விரண்டையும்)மறத்தலாம், (எ-று).

மறவாதவிடத்துப் பின்னும் வந்து தோன்றுமாதலின், அவை மறக்கத்தக்கனவாயின. அவரைவெல்லுமுபாயஞ்சொல்லியபடி. இவை மூன்று பாட்டாலும் வைரம்பற்றிச் செயதல் விலக்கப்பட்டது.

(க-து). துன்பஞ் செய்தார்க்கு இன்பஞ் செய்தால் அதுவே அவர்க்குத் தண்டனையாம் என்பது. (சு)

4. The (proper) punishment to those who have done evil (to you), is to put them to shame by showing them kindness, in return and to forget both the evil and the good done on both sides.



கு. அறிவினு னுகுவ துண்டோ பிறிதினெய்
தந்நோய்போற் போற்றக் கடை

பரி.—(இ-ள) துயர்த்தார்க்கு ¶ உயிர்முதலியவற்றை உள்ளவாறு அறிந்த அறிவினுன் ஆவதொரு பயனுளதோ? பிறிதோருயிர்க்கு வரும் இன்னுதவற்றைத் தம்முயிர்க்கு வந்தனபோல் தடுக்க வேண்டுமென்பது.

‖ குறிக்கொண்டு காத்தலாவது கடத்தல், இருத்தல், விடத்தல், நிற்றல், உணடல் ¶ முதலிய தந்தொழிலுகளானும், ⁰ பிறவாற்றானும், உயிர்

§ உயிர்முதலியவற்றை யுள்ளவா றறிதலேப்பற்றிக் கள்ளாமை யறிகாரத்தின் ஆறுவது செயலின் வீசேடவுரையிற் காண்க.

§ பிறிதோருயிர்க்கு வரும் இன்னுதவற்றைத் தம்முயிர்க்கு வந்தனபோல் குறிக்கொண்டு காக்கவேண்டுமென்பது "பிறர்மை யின்னுலியற்றி டிற் றமக்குப் பிழைப்பற வெய்துமென் பதனை, அறிகுறற்றுன் ராதலாலுய்ர்க னனைத்தைதும் தம்முயிர் போல, செறியினிற் கருதி வினியவா மைநாதி புலனெய் செறியலா வழியிற், பொறியினிற் செலுத்தா தடக்கனன் குணாடு த புலமையோ ரொழுகலென்னப் புகல்வார்" என்று காஞ்சிகாண்டம் கூறுவ தாலு மறியப்படும்.

‖ குறிக்கொண்டு-கவனம்வைத்து.

¶ முதலிய என்றதனுல் தண்ணீர் கவர்தல், காறியுமிழ்தல், நெருப்பு மூட்டல் முதலியவற்றையுங் கொள்க.

⁰ பிறவாற்றானும் (வேறுவழிகளாலும்). அவையாவன. "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்" என்று விதிலிருப்பதனுல அசத்தியமுங் கூறி யுயிரைக்காத்தல், தமது ஆற்றற் கேற்றவாறு ஒருபிராணியை மற்றொரு பிராணி கொல்லா வண்ணஞ்செய்தல் முதலியனவா மென்க.

களுறுவலவற்றை முன்னேயறிந்து உருமந் காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நண்ணிய வுடம்புடையவற்றைப்பற்றி வருதலின் பொதுப்படப் 'பிறிதினுெய்' என்றும், மறப்பான் அது தன்புறினும் நமக் கின்னு செய்தலாமென்றறிந்து காத்தல்வேண்டு மாகலின், () அது செய்யா வழி ‡† 'அறிவினு னுருவ தண்டோ' என்றுங் கூறினர் இதனும் சோர் வாற் செய்தல் விலக்கப்பட்டது.

தேவி.—(இ-ள்). பிறிதின்-வேறுருயிருக்கு(வரும்), நோய்-தன்பந் தருவனவற்றை, தந்நோய்போல் - தம் முயிர்க்குவந்த தன்பங்கள்போல, போற்றுக்கடை- (குறிகொண்டு) காப்பாற்றுத விடத்து, அறிவினன்- (துறந்தார்க்கு உயிரூதலியவற்றை உள்ளவாறு அறிந்த) அறிவினுல், ஆகுவது - ஆகுமொருபயன், உண்டோ-உளதோ, (இல்லை), (எ-று).

குறிக்கொண்டு காப்பாற்றலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற் றல், உண்டல் முதலாகிய கமதிதொழில்களாலும், மற்றையவற்றாலும் உயிர்களடையும் தன்பங்களை முன்னே அறிந்து அவை வாராமற்காத்தல். இத்தன்பம் பெரும்பான்மையும் அஃறிணையில் எறும்புமுதலாய சிறியவு டம்புடைய பிராணிகளைப்பற்றி வருதலால் பொதுப்படப் 'பிறிதினுெய்' என்றும், மறப்பினுல் அப்பிராணிகள் தன்பத்தை யடையினும் நமக்குத் தின்பஞ்செயதலாமென்று உணர்ந்து காத்தல்வேண்டு மாகலின், அதுசெய் யாத விடத்து 'அறிவினு னுருவ தண்டோ' என்றும் சொல்லினர். இத னுல் சோர்வினால தனைப் தருவனவற்றைச் செய்தல் விலக்கப்பட்டது.

(க - து). அறிவினது பயன் பிறிதோருயிர்க்கு வருந்தின்பத் தைத் தனக்கு வருதல் போலக கொள்ளுதலாம் என்பது.

5. What benefit has he derived from his knowledge, who does not endeavour to keep off pain from another as much as for himself?

சூ. இன்னு வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்.

பரி.—(இ-ள்). மக்கடத இன்னுதனவென அனுமானத்தால் தான றிந்தவற்றைப் பிறன்மாடுச் செயதலே மேவாமை துறந்தவனுக்கு வே ண்டுமீம், (எ - று).

‡ இன்பத்தினபங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவை

() அது - காத்தல். † அறிவாற்பயனில்லை என்றும் பாடமுண்டு

‡ உயிர்க்குணமான இன்பத்தன்பங்கள் யாத்தியட்சப் பிரமாணத்தி னுல் அறியப்படாவாகலின், அவை அனுமானப் பிரமாணத்தினு லறியப் படுவனவாம் மேலே முதலிய விடத்துப் புகையைக்கண்டு இந்த நெருப்பு ண்டென்று ஊகித்தறிவது போலப் பிறரது முகவிலாசத்தையும் அஃதில் லாமையையுங்கண்டு, அவரது உள்ளத்தில் சுகமும் துக்கமுமுண்டென்று ஊகித்தறிதல் வேண்டுமென்க. ஒருயிரின் சுகதுக்கம் பிறிதோருயிர்க்குப் பிரத்தியட்ச மாகாதென்பது கருத்து.

யான் அறியப்படாமை யறிக. § அறமும் பாவமும் உளவாவது மன மூல ஞயவழியாகலான் 'உணர்ந்தவை' என்றார்.

தெளி:—(இ - ள்). இன்னுவென - (மனிதருக் ருத்) தன்பந்தருவன வென்று, தாலுணர்ந்தவை - (அனுமானப் பிரமாணத்தினால்) தான் அறிந்தவற்றை, பிறன்கண் - பிறனிடத்து, செயல்-செய்தலை, தின்னமை-பொருந்தாமை, வேண்டும்-(தறந்தவனுக்கு) வேண்டும், (எ - று).

இனபத்தின்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை பிரத்தியட்சப் பிரமாணத்தினால் அறியப்படாமை யறிக. அறமும் பாவமும் உண்டாவது மனமூலஞயவிடத்தாகலின் 'உணர்ந்தவை' எனறார்.

(க - து). தான் தன்பமென் றறிந்தவற்றைப் பிறனிடத்துச் செய்யாதிருத்தல் வேண்டும் என்பது.

6. Let not a man consent to do those things to another which he knows will cause sorrow

எ. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கீகு மனத்தானு
மாணைசெய் யாமை கலை.

பரி.—(இ - ள்). மனத்தோடு உளவாகின்ற இன்னுத செயல்களை எக்காலத்தும் யாவர்க்குஞ் சிறிதாயினுஞ் செயயாமை நல்லபாய அறம், (எ-று).

ஈண்டு மனத்தா னுகாதவழிப் பாவமில்லையென்பது பெறாம். ஆற்றலுண்டாய காலத்திம் ஆகாமையின் 'எஞ்ஞான்றும்' என்றும், எளியார்க்கும் ஆகாமையின் 'யார்க்கும்' என்றும், செயல் சிறிதாயினுட, பாவம் பெரிதாகலின் 'எனைத்தானுட' என்றும் கூறினர்.

தெளி:—(இ - ன்). மனத்தானுமை-மனத்தோடு உண்டாகின்ற, மாணுதன்பந் தருஞ்செயல்களை, எஞ்ஞான்றும - எக்காலத்திலும், யார்க்கும்-

ஈண்டனுமானமாமாறு:—1 இராமன் இன்பமுடையான்; முகக்கினர்ச்சியுடை பவனுயிருத்தலின்; யாவன் இன்பமுடையானல்லன் அவன் முகக்கினர்சியுடையானல்லன், (இங்கிரஜித்தையிழந்து வருந்தும்) இராவணன் போல.

2 இராவணன் துன்பமுடையான; அவன் முகக்கினர்ச்சியின்றியவனுயிருத்தலின்; யாவன் துன்பமுடையானல்லன் அவன் முகக்கினர்ச்சியின் றியவனல்லன்' இராமன்போல.

§ ஒருவனுக்கு அற(தரும)மும் பாவமும் உண்டாவது அவன் மனமுன்னவனுன விடத்தேயாதலால் 'உணர்ந்தவை' என்றார். இதன் தாற்பரியமாவது பாவமும் புண்ணியமும் புத்தி பூர்வகமாய்த் தீச்செயலையும் நற்செயலையும் புரிவதாலுண்டாகுமேயன்றி அபுத்தி பூர்வகமாய்அவற்றைச் செய்வதனுலுண்டாகா என்பது.

யாவர்க்கும், எனைத்தானும் - சிறிதாயினும், செய்யாமை - செய்யாதிருத்தல், தலை - முதன்மையான அறம், [எ-று].

இங்குத் தீண்பந்தருஞ்செயலே மனமறியாது செய்தவிடத்து அதனால் பாவமுண்டாவதில்லை என்பதுபெற்றாம். வல்லமையுண்டான காலத்திலுந் தீண்பந்தருஞ்செயலைச் செய்தல் நன்மை யாகாமையால் 'எஞ்ஞான்றும்' என்றும், எளியார்க்கும் அதனைசெய்தல் நன்மையாகாமையால் 'யார்க்கும்' என்றும், செயல் சிறிதாஞலும் பாவம் பெரிதாகலால்'எனைத்தானும்' என்றும் சொல்லினர்.

(க - து). எந்தக் காலத்திலும் எத்தன்மையோர்க்கும் தீமை செய்யாதிருத்தலே முதன்மையான தருமமாகும் என்பது.

7. It is the chief of all virtues not knowingly to do any person evil, even in the lowest degree and at any time

அ. † தன்னுயிர்க் கின்ஞமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்ஞ செயல்.

பரி.—(இ - ள்). பிறர்செயயும் இன்ஞதன தன்னுயிர்க்கு இன்ஞ வாதீ தன்மையை அனுபவித் தறிகின்றவன் நீலேபேறுடைய பிறவுயிர் கட்குத் தானவற்றைச் செய்தல் என்னகாரணத்தான், (எ - று).

*"(பிரஹ்ம ஹத்திமுதலிய) இந்த மஹாபாதகங்களைக்குணமுள்ள பிராமணன் (மனம்) அறியாது செய்தால், அவன் பிராயச்சித்தஞ் செய்துகொண்டபின் அவனுக்கு அரசன் 500 பணம் தண்டம்விதிக்க";"பிராமணனுழிந்த மற்றக்குணமுள்ள மூன்று வருணத்தாரும் மஹாபாதகங்களை (மனம்) அறியாது செய்தால் அவர்களின் பொருளெல்லாவற்றையுங் கவருதலைத் தண்டமாக விதிக்க" என்று மனுதாமசாஸ்திரம ஒன்பதாவ தத்தியாயத்திற் கூறுவதும்,

"செய்துயிர்கட் கினிமை" என்னுங் கொலை மறுத்தல் செய்யுளினுரையில் திருப்போரூர்—சிதம்பர சுவாமிகள் "கொல்லாவிரதியாய் நடந்து வருங்காலத்து உண்ணேயறியாமல் வந்த கொலைதோஷமானது வேறொரு விதத்தால் நாசத்தையடையும் ; அஃதெத்தாலென்னில், சற்குருவினது திருப்பாதத்தை நியமமாக வழிபட்டுச் செய்யும் அவனது எவலின் வலியாலெனக்கொள்க" என்று கூறுவதும் இங்கு நன்கு கவனித்தற் பாலனவாம்.

† "இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ, வன்சொல் வழங்கு வது" என்னுங் குறளு மிங்கறியத் தக்கதாம்.

† இவ்வாறே இவை பிறவுயிர்க்கும் இன்னுவென்பது ‡ அனுமானத் தானறிர்தலைத் தச் செய்கின்ற 0 பாவங் கழுவப்படாமையின், இன்னு தையான்வருத்தப் பின்னே வந்து வருத்துமென்பது ஆகமத்தானு மறிந்து ஒழியற்பாலனென்பது தோன்றத் 'தான்' என்றும், அத்தன்மையான் ஒழி யாமைக்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற 'என்கொலோ' என்றுங் கூறினர். † இவை மூன்று பாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட் டது.

தெளி.—(இ-ன்). தன்னுயிர்க்கு-(பிறர்செய்யும் தன்பந்தருஞ்செயல் கள்) தனதுயிர்க்கு, இன்னுமை - தன்பந்தருவனவாந் தன்மையை, அறி வான் - (அனுபவித்து) அறிகின்றவன், மன்னுயிர்க்கு - நிலைபெறுதலை யுடைய பிறவுயிர்களுக்கு, இன்னு - அத்தன்பந்தருஞ்செயல்களை, தான் செயல் - தான்செய்வது, என்கொலோ-என்னகாரணத்தால், (எ - று).

† பிறர் செய்யுந் தீமைகள் தன்னுயிர்க்குத் தன்பந்தருந்தன்மையை யனுபவித்தறிகின்றவன் இவ்வாறே (பிறர் செய்த தீமையால் தான் வருந் துவதுபோல) இவை (நான்செய்யும் தீமைகள்) பிறவுயிர்க்கும் இன்னு (தன்பந் தருவனவாகும்) என்பது ஆகமானத்தால் அறிந்து வைத்து (அறிந்திருந்தும்)செய்கின்ற பாவம் கழுவப்படாமையின் (பிராயச்சித்தத் தால் நீக்கப்படுதலில்லாமையால்) இன்னுதன (பிறவுயிர்களுக்குத்தன்ப மூண்டாகுமாறு யான் செய்ததீமைகள்) யான் வருந்தப்பின்னே (மறுமை யில்) வந்து வருத்துமென்பது ஆகமம் (நூல்) பிரமாணத்தாலும் (இரும் பார்க்குந் காலமா யேதிலார்க் காளாய்க்,கரும்பார் கழணியுட் சேர்வர்-சுரும் பார்க்குங், காட்டோய் வாழுஞ் சிலுஞ் குறும்பூழுங், கூட்டோய்க் கொ ண்டுவைப் பார். அக்கோபோ லங்கை யொழிய வினலுழுத்,தக்கத் தொழு தோ யெழுபவே - அக்கால், அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற, பழவினை வந்தடைந்தக் கால் என்று) அறிந்து (பிறவுயிர்களுக்குத் தீமைசெய்தலே) ஒழியற்பாலன் (ஒழியக்கடவன்) என்பதுதோன்ற (வினை க்கு) த் 'தான்' என்றும்; அத்தன்மையான்(இம்மையில் பிறவுயிர்களுக்குச் செய்த தீச்செயல்கள் மறுமையில் வந்து தம்மைச் செய்தவினை வருத்து மென்பதை நூற்பிரமாணத்தினு லறிந்தவன்) (பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்தலே) ஒழியாமைக்குக் காரணம் மயக்கம் (அஞ்ஞானம்) என்பது தோன்ற 'என்கொலோ' என்றும் கூறினுரென்க.

‡ ஈண்டனுமானமாமாறு:—இப்பிராணி தன்புற்று வருத்துகின் றதே; நாம் அடித்தல் முதலியகொடுஞ்செயல்களைச் செய்தமையின்; பிறர் செய்த கொடுஞ்செயலால் நாம் தன்புற்றவருந்தியதுபோல என்பது.

0 இப்பாவம் என்றும் பாடமுண்டு.

‡ "இன்னுவென" "எனைத்தானும்" "தன்னுயிர்க்கின்னுமை" என் னுமுதலினையுடைய இம்மூன்று குறளானும் பயனெடுத்துச் செய்தல், செற் றம் பற்றிச்செய்தல், சோர்வாற் செய்தல் என்னு மூன்றற்கும் பொதுவா மாறு இன்னுசெயல் விலக்கப்பட்டதென்க.

இப்படியே இச்செயல்கள் பிறவுயிர்க்கும் துன்பத்தருவனவென்பதை அனுமானத்தால் அறிந்திருந்தும் செய்கின்ற பாவம் பரிகரிக்கப் படாமையால், துன்பத்தருமவைகள் யான் வருத்தத்தையடைய பின்னே வந்து தன்னை வருத்து மென்பதை (அனுமானத்தாலே யன்றி) ஆகமத்தாலும் அறிந்து அவற்றை விடக்கடவனென்பது தோன்றத் 'தான்' என்றும், அத்தன்மையான் (துன்பத்தருஞ் செயல்களை) ஒழியாமைக்குக் காரணம மயக்கமென்பதுதோன்ற 'என்கொலோ' என்றும் சொல்லினர், இவை மூன்று பாட்டாலும் பொதுவாகையால் இன்னுசெயல் விலக்கப் பட்டது.

(க - து). பிறர்செய்யும் தீமை தனதுயிர்க்குத் துன்பத்தருவதாயிருத்தலே யனுபவித்தறிகின்றவன் பிறவுயிர்க்குத் தீமை செய்தல் அறியாமையேயாம என்பது.

8. Why does a man inflict upon other creatures those sufferings, which he has found by experience are sufferings to himself?

கூ. $ பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு பிற்பகற் ருமே வரும்.

பரி.—(இ - ள்). துறந்தவர் பிறர்க்கின்ருதனவன்மை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின், தமக்கின்ருதன அதன் பிற்கூற்றின்கண் அவர் செய்யாமற் ருமேவரும், (எ - று).

¶ முற்பகல் பிற்பக லென்பன முன பின்னுகத் தொக்க ஆரும் வேற்றுமைத்தொகை. ‡ தவமழிதலின, அஞ்ஞனங் கடிதினும் எளிதி

$ "நெடியது காண்கலாய் நீயளியை நெஞ்சே, கொடியது கூறினுய் மன்ற - அடியுளே - முற்பகற் கண்டான பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் கண்டு விடும்" என்பது பழமொழி.

¶ பகல்முன் பகல்பின் எனபன முறபகல் பிற்பகல் எனமாறி நின்ற ஆரும் வேற்றுமைத்தொகைச்சொற்கள். இவை பகலின துமுன், பகலினது பின் எனவிரியும். இங்ஙனம் மாறி நிற்பது இலக்கணப் போலியெனப் படும். "நிலைமொழி வருமொழிகள் முன்பின்னுக மாறி நிற்பன இலக்கணப்போலி" என்பது நன்னூல்விருத்தியுரை. "தற்புரு டத்தொகை" என்னுஞ் செய்யுளி னுரையில் பிரயோக விவேக நூலார் "பரிமேலழகர் முற்பகல் பிற்பகல் என்பனவற்றை முன்பின்னுகத்தொக்க ஆரும் வேற்றுமைத்தொகையென்பர். வடநூலார் முன்னின்ற மொழிபிரதமையாகலின், பிரதமா தற்புருடனென்பர்" என்று கூறுவர்.

‡ துறந்தவர் பிறர்க்குத்துன்பந்தருவனவற்றைச் சினகாரணமாகச்செய்தலால் அவரது தவமானதழித்து விடுகின்றது; அஃதழித்து விடுதலிற்

லும் வரும்; அதனால் அவைசெய்யற்கென்பதாம். † இனித் தானே வரு மென்பது பாடமாயின, அசசெயல்தானே தமக்கின்னுதனவாய் வருமென உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்துரைக்க.

தெளி.—(இ-ன்). (துறந்தவர்) பிறர்க்கு—அன்னியர்க்கு, இன்னு-தின்பந் தருவனவற்றை, மூற்பகல-ஒரு முகூர்த்தத்தினது முற்பாகதத்தில், செயியின் - செயவாராயின, தமக்கு—,இன்னு-தனபந்தருமவைகள், பிற்ப கல்-அம்முகூர்த்தத்தினது பிற்பாகத்தில,(அவர்செய்யாமல்) தாமேவரும-.

பகல்முன் பகல்பிந என்பன முன்பின்னுகமாறி (ஆறனுருபு தொக் கு) முற்பகல் பிற்பகல எனவந்தன (பிறர்க்குதறந்தவர் தின்பங்கள் தரு வனவற்றைச செய்தலால் தமது) தவமழிதது போதலின, அவ்வாறு (தின் பகைள்) வினைவிலும எளிதிலும் வரும், அதனால துறவிகள அத்தின்பக

அகனைம் (அப்படி அ்தாவது முற்பகலிற பிறாகுத தின்பஞ் செயதால் பிற்பகலில அதுகாரணமாகத தின்பஞ செய்தலாகுத் தினபம்) விரைவாக வும் எளிதாகவும் உரும, அதனால (முறபகலிற பிறர்குத நீமையைச செய் தால பிற்பகலில அது வாயிலாகத நீமை செபதலாகுத நீமை விரைவாக வும் எளிதாகவும் வருவதாக விருததலால்) அவை (பிறாக்கின்னுதன வற் றைச) செய்ய வேண்டாம எனபதாம, "தபோதனாகளுஞ சினமெனும், பாவமுற றயலுளோா பதைபதைத துயிரிதச,சாபமிட் டுணையர்தந்தவரும் விட் டிவெரி" என்று மெயஞ ஞானவிளகைகூறுவதும், "கோபத்தினு லுண்டானஎட்டுத்திக்கயகாவன: புறங்கூறுதல, துணிவு, திரோகம,பொ ருமை,பிறா குணததைச சகியாமை, பிறாபொருளியகாித்தல், காரண மின்றியடிததல, கிட்டின லெனவெட்டாம்" என்று மனுதரும சஸ திரம் 7-வது அத்தியாயதறகூறுவதும, இவறறிய தகனவாம இதனால் பிறாகுத நீமையை யளவுகடந்து செய்தவருகு இம்மையி லேயே விரைவாகவும் எளிதாகவும் தின்ப முண்டாகுமென்பது பெறப்படு னைறதென்க.

† தாமவரும எனறு தானவரும என்று பாடல கூறுவாரு மிரு ந்தல பற்றித 'தானே வருமென்பது பாடமாயின்' எனறு பாடபேதங்கூறி அதற்குப்பொருள (துறந்தவா பிறாகுத தின்பந்தருஞ் செயலே யொரு பகலதி முனபாகததினகண செய்வாராயின) அசசெயல்தானே (அப்பக லது பின்பாகததினகண்) தமகுத தினபந்தருவனவாய்வரும் என்று உப சாரவழகாக்கி யாகம் வருவிததிரைதததுக்கொக என்றுகூறினுரென்க. அசசெயலால் தமக்கு இன்னுதன வருமென்று (பிறாக்குத்தீமைசெய்த லுக் காரணமாகவும் அதனால தமக்கு இன்னுதன வருதலுக் காரியமாகவும்) கூறுதி, அசசெயல் தானே தமக்கு இன்னுதனவாய வரும் என்று கூறி யது உபசாரவழக்காமென்க. அசசெயலால் வரும இன்னுதனவற்றை அச்செயலே இன்னு என்று கூறினமையின், இது காரணம் காரியமாய உபசாரவழக்காம். தமக்கு இனனுதனவாய் என்பதன்கணுள்ள ஆய் எனப் பது ஆக்கச்சொல்லாம்.

தருஞ்செயல்களைப் பிறர்க்குச் செய்யாதிருக்கக் கடவரென்பதாம். மூடர்த் தம்-இரண்டாழிசை.

(க - து). பிறர்க்குத் தீமை செய்பவர்க்கு அத்தீமையின் பய னனை துன்பம் விரைவாகவும் எளிதாகவும் வருமென்பது.

9 If a man inflict sorrow upon others in the morning, it will come upon him unsought in the very evening.

க○. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார் நோயின்மை வேண்டு பவர்.

பரி.—(இ-ள்). இன்னுதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னு தன செயதார் மேலவாம்; அதனால், நம்முயிர்க்கு இன்னுதன வேண்டா தார் பிறிதோருயிர்க்கு இன்னுதன செய்யார், (எ-று).

* உவர்நிலத்து விளைவித்திட்டார்க்கு விளைவும் அதுவேயாகலின்

* உவர் (உப்பு) நிலத்து விளைவித்திட்டார்க்கு (விளைவதற்குத் தகுதியான விதையை விதைத்தவர்களுக்கு) விளைவும் அதுவேயாகலின் (விளைதலும் அந்நிலத்தின் தன்மையாகவே யிருத்தலினால்).

உவர்நிலத்தில் விளைபயன் கொள்ளும்படி நீரைவிதை முதலியவற்றை விதைத்தவர்களுக்கு அவ்விதை காரணமாக வுண்டாகும் விளைவும் அவ் வுவர்நிலத்தின் தன்மையதாகவே யிருத்தல்போன்று, பிறிதோருயிர்க்குத் துன்பந்தருஞ் செயல்களைச் செய்தவர்க்கு அது காரணமாக வரும் பயனும் துன்பமேயாகும் என்பது கருத்தாமென்க. (உவர்நிலம் என்பது பிறிதோருயிர்க்குத் தீமை செயயப்பழகிய வுள்ள மென்றும், விளைவித் திடுதல் என்பது பின தீமையை புண்டுபண்ணும் தீவினையை அவ் வுளளத்தில் சம்ஸ்கார மாக்குதலென்றும், விளையும் அதுவே யாதல் என்பது அச்சம்ஸ்கார வாயிலாகவரும் தீ மை யும் அவ்வுள்ளத்தின், தன்மையதாகவேயிருக்குமென்றுங்கொள்ளவேண்டுமென்க) திருக்கோவை யாரின் "நினைவித்தி" என்னுஞ் செய்யுளிலுள்ள "வினைவித்திக் காத்து விளைவுண்ட தால் விளைந்ததுவே" என்பதும், தினையைவிதைத்தவன் தினை யையறுப்பான், வினையை விதைத்தவன் வினையை யறுப்பான் என்னும் பழமொழியும், இங்குக் கவனிக்கத்தக்கனவாம்.

உவர்நிலத்து என்பதற்குப் பிரதியாக உயிர்நிலத்து என்றும் பாட முண்டு. அப்பாடத்திற்குப் பொருள் உயிராகிய நிலத்தில் விளைவித்திட் டார்கு - (சுகதுக்கங்களை யுண்டுபண்ணும் நல்வினை தீவினைகளின் சம்ஸ் காரத்தை யுண்பெண்ணினவர்களுக்கு) விளைவும் அதுவே யாகலின் (பின் வரும் பயனுயிய சுகதுக்கங்களும் அச்சம்ஸ்காரத்திற்கேற்ற வண்ணமே யுண்டாகுமாதலால்) என்பதாம்.


'கோயெல்லா கோய்செய்தார் மேலவாம்' என்றார். இது * சொற்பொருட் பின்வருநிலை. இவை யிரண்டுபோட்டாலும் † அது செய்தார்க்கு வரும் நீக்கு கூறப்பட்டது.

தெளி—(இ-ன). கோயெல்லாம் - தின்பந்தருவனவெல்லாம், கோய் செய்தார் மேலவாம் - (பிறிதோருயிர்க்குத்) தின்பந்தருவனவற்றைச் செய்தவர் மேலனவாம், (அதனால்), கோயின்மை வேண்டுபவர் - (தம்மூயிர்க்குத்) தின்பந்தருவனவற்றை விரும்பாதவர், கோய் - (பிறிதோருயிர்க்குத்) தின்பந்தருவனவற்றை, செய்யார் - செய்யமாட்டார், (எ-று).

உவர்நிலத்தில் வினைவித்திட்டார்க்கு வினைவும் அதுவேயாகலால் 'கோயெல்லா கோய்செய்தார் மேலவாம்' என்றார். இது சொற்பொருட் பின் வருநிலை யணி. இவை யிரண்டு பாட்டாலும் அது செய்தவர்க்கு வரும் நீக்கு சொல்லப்பட்டது.

(க - து). தாம் தின்பமடையாதிருத்தல் விரும்புவோர் பிறவுயிர்களுக்குத் தின்பஞ் செய்யார் என்பது.

10. Sorrow will come upon those who cause pain to others; therefore, those who desire to be free from sorrow, give no pain to others.



ஒன்பதாவது அதிகாரம்.

கொல்லாமை—*Against destroying Life.*

பரி—அஃதாவது ‡ ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன

சிவக திதாமணி முத்தியிலம்பகம் ரகசுகத்தின்பத்தில் "வெவ்வினை செய்யு மாந்த ருயிரெனு நிலத்து வித்தி, யவ்வினை வீளையு ளுண்ணு மவ்விடத் தவர்க டின்பம்" என்று கூறுகின்றது. அதற்குப்பொருள் நச்சினர்க்கினியர் "நீவினையைச் செய்புமாந்தர் தமது உயிரெனு நிலத்தே யத நீவினையை விதைத்தது அத்நீவினையின் பயனே துகரும்அக்காலத்திடத்தே அக்துகர் படுந்துன்பம்" என்று கூறியிருக்கின்றார்.

* கோய் என்னுஞ்சொல் பலமுறைவந்தும் பொருள்வேற்றுமை யின்றி யிருத்தலால், இக்குறள் சொற்பொருட்பின் வருநிலையணி யாம். சொற்பொருட்பின் வருநிலையணியாவது முன்னர் வந்த சொல்லும்பொருளும் பின்னர்ப்பலவிடத்தும வருவதாம்.

† அது - பிறிதோருயிர்க்குத் தீமை.

‡ ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈரய வுயிர்கள் - ஐயறிவும், நாலறிவும், மூவறிவும், ஈரறிவும் ஓரறிவுமுதையே யுடைய பிராணி

ஈறய உயிர்களைச் சோர்த்துங் கொல்லுதலைச் செய்யாமை. †இது ‡ மேற்கூறிய அறங்களெல்லா வற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் ¶ கூறுத வறங்களையும் அகப்படுத்தி நிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

கள். சப்த பரிச ரூப ரச கந்தங்களையறிவது ஐயறிவுயிரென்றும், பரிச ரூப ரச கந்தங்களை யறிவது நாலறிவுயிரென்றும், ரூப ரச கந்தங்களை யறிவது மூவறிவு வுயிரென்றும், ரச கந்தங்களை யறிவது ஈரறிவுயிரென்றும், பரிசுமாத்திரமறிவது ஓரறிவுயிரென்றும்அறிக.சப்தம் செவியாலும்,பரிசம் தவக்காலும், ரூபம் கண்ணாலும், ரசம் நாக்காலும், கந்தம் மூக்காலும் அறியப்படுவனவாம்.

''புன் (பல்) மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்''
''மூரணந் தானிரா வறிவொ டறிவுயிர்''·(மூரண்-இப்பி;ஈந்து-சங்கு).
''சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்''(சிதல்-கறையான்).
''தும்பிவண் டாதிகண் ணறிவினு லறிவுயிர்''.

"வானவர் (தேவர்) மக்கள் (மனிதர்) நரகர் (நரகத்திலிருப்போர்) விலங்கு (மிருகம்) புள் (பறவை), ஆதி செவியறிவோ டையறி வுயிரே" என்று நன்னூல் கூறுகின்றது.

நன்னூல் விருத்தியுரைகாரர், ''ஆசிரியர் தொல்காப்பியர்'மக்க டாமே யாறறி வுயிரே' எனக் கூறியிருக்க,மக்கள் முதலியோரை ஐயறிவுயிரெனக் கூறல் மாறுகொளக் கூறலாம் பிறவெனின், மக்கள் முதலியோர மனவுறி வோடு ஆறறி வுயிரென்பது நோக்கியன்றே முன்னர் 'மக்க டேவர் நரகருயர்திணை' எனக்கூறிப் போந்ததூஉ மாதலின், இங்ஙனம் ஐம்புலன் மாத்திரையே நுகரும் அறிவுடைய மக்கள் முதலியோரை விலங்கு முதலியவற்றோடு எண்ணி ஐயறிவுயிரெனக் கூறினரென உய்த்துணர்ந்து கொள்க." என்று கூறியிருக்கிறார் '' மாவு மாக்களு மையறி வினவே'' என்னும் (தொல்காப்பியச்) சூத்திரவுரையில் ''மாக்களெனப் படுவார் மன வுணர்ச்சி யில்லாதார்'' என்றும், 'மக்க டாமே யாறறி வுயிரே' என்னும் (தொல்காப்பியச்) சூத்திரவுரையில் "மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர் வேயன்றி மனமென்பதோ ரறிவுமுடையர்'' என்றும், மாக்களுக்கும் மக்களுக்கும் வேற்றுமை நச்சினர்க்கினியர் கூறியிருக்கின்றனர். மனவுணர்வு பரலோகபுத்தி. மிருக முதலியவற்றிற்கு இகலோக இச்சையேயன்றிப் பரலோக இச்சையில்லாமையினால், இகலோக இச்சையும் பரலோக இச்சையு முடைய மனிதர் அவற்றினும் சிறந்தவராயினரென்க.

† இது - கொல்லாமையென்னு மிவ்வதிகாரம்.

‡ மேற்கூறிய அறங்கள்—முன்னர்க் கூறியுள்ள அருளுடைமை முதலியன.

¶ கூறுத அறங்கள்—சாந்திராயண விரத முதலானவை.

தெளி.—அஃதாவது ஐயறிவுடையனவு முதல் ஓரறிவுடையவை யீருகவுடைய வுயிர்களை மதந்தம் கொல்லுதலைச் செய்யாமையாம். இது முற்கூறிய அறங்களெல்லாவற்றினும் சிறப்புடையதாய்ச் சொல்லாதொழிந்த அறங்களையும் தன்னுள் அடக்கி நிற்கையால், விரதங்களின் முடிவில் வைக்கப்பட்டது.

க. அறவினை யாதெனிற் கோல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

பரி.—(இ-ள்) அறங்களெல்லாமாகிய செய்கை யாதென்று வினவின், அஃது ஒருயிரையுங் கோல்லாமையாம், அவற்றைக் கோல்லுதல் பாவச்செய்கைகள் எல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான்.

$ அறம் - சாதியொருமை. § விலக்கியது ஒழிதலும் அறஞ்செய்தலா மாகலின், கொல்லாமையை 'அறவினை' என்றார். ஈண்டுப் பிறவினையென்றது † அவற்றின் வினைவை, கொலைப்பாவம் விளைக்குந்தன்மை ‡ வினைப்பாவங்களெல்லாங் கூடியும் விளைக்கமாட்டா என்றவாறு. $ கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்று § மேற்கோள்கூறி, அதற்கேது எதிர்மறைமுகத்தாற் கூறியவாருயிற்று.

$ அறம்-ஈறுதோன்றாத சாதியொருமை. ஒருமைப் பன்மையீறுகள் மேல் வந்து முடிக்கும் சொல்லின் நிதானமே பன்மைப்பொருளை யுணர்த்துஞ்சொல் சாதியொருமையெனப்படும்.

§ "அறவினை யாதெனிற்கொல்லாமை; தோன்பென் பதிவே கொன்றதின் னுமை; அழுக்காறுமை, வெகுளாமை, பெரியாரைப் பிழையாமை முதலாக விலக்கினவற்றைச் செய்யாமையே நல்வினைசெய்தல்" என்பது இலக்கணக்கொத்து.

† அவற்றின் வினைவை—பாவசெயல்களாலுண்டாகுந்தன்பங்களை.

‡ வினைப்பாவம்—பிறர்மனைவியை விரும்புதல், கட்குடித்தல், பிறர் பொருளைத் திருடுதல், சூதாடல் முதலிய செய்கைகளாலுண்டாகிய பாவங்கள்.

$ "ஆனை யடியு னடங்கா வடியில்லை.தான தபோ னிற்கின்ற தன்மை தா-னூனுயிரைக், கொல்லா வறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கு, மெல்லா வறமு மிசைக்கி" என்பது பெருந்தேவனார் பாரதம்.

§ மேற்கோளெனினும் பிரதிஞ்ஞையெனினுமொக்கும். மேற்கோளாவது பக்கத்தைத் தணிபொருளுடையதாகக் கூறுவது அறவினை யாதெனிற் கொல்லாமை என்பது மேற்கோள் இங்குக் கொல்லாமை (கொல்லாமை தானே) என்பது பட்சம். அறவினை (பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந்தரும்) என்பது தணிபொருள்.

தெளி.—(இ-ள்) அறவினை-அறங்களெல்லா மாகியசெய்கை, யாதெனின் - யாதென்று வினவினால், (அது), கொல்லாமை-(ஒருயிரையும்)கொல்லாமையாம், கோறல்-(அவற்றைக்) கொல்லுதல், பிறவினையெல்லாம்-பாவச் செய்கை யெல்லாவற்றையும், தரும்-(தானே) தரும், (ஆதலால்),(எ-து.)

அறம்- சாதியொருமைப் பெயர். விலக்கியதைச் செய்யாமையும் அறஞ்செய்தலாம்; ஆதலால், கொல்லாமையை 'அறவினை' என்றார். இக்குப் பிறவினையென்றது அவ்வினைகளின் வினைவை. கொலைப்பாவம் வினைக்குத் தன்பத்தை மற்றைப் பாவங்களெல்லாம் கூடியும் வினைக்கமாட்டாவென்ப தாம். கொல்லாமை தானே வினையவறங்க ளெல்லாவற்றின் பயனையுந் தருமென்று மேற்கோள் சொல்லி, அதற்குக் காரணம் (கோறல் பிறவினையெல்லாந் தரும் என) எதிர்மறை முகத்தாற் சொல்லியவாறுமாயிற்று.

(க-து.) பிராணிகளைக் கொலைசெய்வதால் வரும் பாவம் மிகக் கொடியதா யிருத்தலால், அதனைச் செய்யாமையே சிறந்த அறச் செய்கையாம் என்பது.

1. Never to destroy life is the sum of all virtuous conduct. The destruction of life leads to every evil.

உ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

பரி.—(இ-ள்). உண்பதனைப் பகிர்த்தவுயிர்க்கட்குப் பகுத்துக்கொடுத்துண்டு * ஐவகை யுயிர்களையும் ஓம்புதல் அறநூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்த அறங்களெல்லாவற்றினுந் தலையாய அறமாம், (எ-று.)

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தாற் தொக்கது. ஓம்புதல் † சோர்ந்துங் கொலை வாராமற் குறிக்கொண்டு காத்தல்.

'கொல்லாமை தானே பிறவறங்க ளெல்லாவற்றின் பயனையுந் தரும் என்பதற்கு எது (காரணம்) கோறல் பிறவினையெல்லாந் தரும் (தருதலால்)என்று எதிர்மறையாகக் கூறியவாறும். கொல்லாமைக்கு எதிர்மறை கோறலாகலின் இங்குக்கோறல் எதிர்மறையாயிற்று.

கொல்லாமை தானே பிறவறங்களெல்லா வற்றின் பயனையுந் தரும் என்பது பிரதிஞ்ஞை; கோறல் பிறவினையெல்லாந் தருதலால் என்பது எதிர்மறை ஏது.

* ஐவகையுயிர்—இவ்வதிகாரத்தி னவதாரிகையிற் கூறிய ஐவகைப் பிராணிகள்.

† மறந்தும் கொலைவாராதபடி கவனங்கொண்டு ஐவகைப்பிராணிகளையுங் காப்பாற்றுதல். துறவிகளுக்குக் கொல்லாவிரதம் அவசியமாமென்பது மனுதர்மசாஸ்திரம் ஆறுவதத்தியாயத்தில் "இரவிலும் பகலிலும் தனக்

† அதற்குப் 0 பகுத்தண்டல் இன்றியமையா வுறப்பாகலின், அச்சிறப்புத் தோன்ற $ அதனை இறந்தகால வினையெச்சத்தாற் கூறினர். ¶ எல்லாநூல் களிலும்கல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கியல் பாகலின், ஈண்டும் பொதுப்பட 'நூலோர்' என்றும், அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான, இது ‖ 'நூலே' என்றும் கூறினர்.

தெளி:—(இ-ன்). டகுதி - (உண்பதற்கே) பகித்த வுயிர்களுக்குப்) படுகிடக்கொடுத்த, உண்க-, பல்லுயிர் - ஜவகையுயிர்களையும். ஓம்புதல்— காப்பாற்றுதல், நூலோர்-அரநூலுடையார், தொகுத்த வற்றுளெல்லாம்— (தூறுதேர்க்குத்) தொகுத்தின்ன அறங்களெலாவற்றினும், தலை-முதன் மையான அறமாம், (எ-று).

பல்லுயிரும் எனும் முற்றும்மை செய்யுள்விகாரத்தாற்றொக்குநின் றது ஒம்புதல்-மறாதும் கொலாராமற் குறிக்கொண்டு காத்தல். அத தற்குப் பகுத்தண்ணுதல் அவசியம் இருக்கவேண்டிய அங்கமாதலால், அச்சிறப்புத தோன்ற அதனைப் 'பகுத்துண்டு' என்று இறந்தகால வினை யெச்சத்தினுற் கூறினர். எல்லா நூல்களினும் நல்லவைகளே யெல்லா மெடுத்து எல்லார்க்குமாக பொதுப்படச் சொல்லுதல் இந்நூலாசிரியருக்கு இயல்பாதலால், இங்கும் பொதுப்பட 'நூலோர்' என்றும், அவரெலாரு க்கும் ஒப்ப முடிதலால், பகுத்தண்டு பல்லுயி ரோம்புதலென்னு மிதனைத் 'தலை' என்றும் சொல்லினர்.

(க-து). உண்பவறறைப் பகித்த வுயிர்களுக்குப பங்கிட்டுண் டி பலவகை யுயிர்களோயுங் காப்பாற்றுதலே அறங்களெல்லாவற்றி னும் மேலாய அறமாம்.

குத் தெரியாமையால் யாதாவதொரு பிராணி இறந்துபோவதனாலுண்டா கும் பாவம்போவதற்காக ஸ்நானஞ்செய்தவுடனே ஸந்த்யாதி ஆறுபிராண யாமஞ்செய்தல் வேண்டும்" எனும கூறுவதனலும்நன்குவிளங்கும். "கொ ல்லாவிரதம் குவலயமெல்லாமோங்க, எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச சை பராபரமே" என்ற தாயுமானவர் கூறுவது மிங்கறியத்தக்கது.

† அதற்கு—சோர்ந்தும் கொலாராமற் குறிக்கொண்டு காத்தற்கு.

0 உண்ணுந் தொழிற்கு நீராடுந் தொழில் அங்கமாதல்போன்ற பல்லு யிர் ஓம்புந்தொழிற்குப் பகுத்தண்ணுந் தொழில் அங்கமாமென்க.

$ அதனை யிறந்தகால வினையெச்சத்தாற் கூறினர்—பகுத்தண்டலைப் பகுத்தண்டு என்ற இறந்தகால வினையெச்சத்தாற் கூறினர்.

¶ "ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின், அன்றென்ப வாறு சமயத்தார்- ன்றென, வெப்பா லவரு மியைபவே வள்ளுவனூர், முப் பான் மொழிந்த மொழி" :—திருவள்ளுவமாலை.

தலையாய வறம் என்றும் கூறினர் என்றும் பாடமுண்டு.

2. The chief of all (the virtues) which authors have summed up, is the *partaking* of food that has been shared with others, and the preservation of the manifold life of other creatures.

கூ. ஒன்ரூக நல்லது கோல்லாமை மற்றதன்
பின்சாரப் போய்யாமை நன்று.

பரி.—(இ-ள்). நூலோர் தொகுத்த அறங்களுள் † தன்னே டிணேப்பதின்றித் தானேயாக நல்லது கோல்லாமை. அஃதொழிந்தால், போய்யாமை அதன்பின்னேநிற்க நன்று, (எ-று)

நூலோர்தொகுத்த அறஙகளென்பது ‡ அதிகாரத்தான் வந்தது. அதிகாரக கொல்லாமையாயினும், $ மேற் 'பொய்யாமை பொய்யாமை யாற்றின்' எனவும், 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லே' எனவுங் கூறினுர்கலின், இரண்டறத்துள்ளும் யாது சிறந்ததென்று ஐய நிகழுமன்றே, அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்ருர்; முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். †† அதனேப்

† தன்னே டிணேயொப்ப தின்றி என்றும் பாடமுண்டு. இதற்குத் தன்னேடு ஒப்பதும் மிக்கதுமில்லாம லென்ற பொருள் கொள்க. இணே என்பது ஒப்பது என்னும் பொருளே யுணர்த்தலால், ஒப்பது என்பதற்கு மிக்கது என்ற பொருள் கொள்ளப்பட்டது.

‡ கொல்லாமையென்னு மிவ்வதிகாரத்திற் கியையவந்ததென்பது. இவ்வதிகாரத்தி னிரண்டாங்குறளில் 'நூலோர் தொகுத்தவற்று ளெல்லாந் தலே' என்றுள்ளதும் இவ்வுக் கவனிக்கத் தக்கதாம்.

$ வாய்மை யதிகாரத்தில் 'பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம் பிற, செய்யாமை செய்யாமை நன்று' என்றும், 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லே யெனத்தொன்றும், வாய்மையி னல்ல பிற' என்றும் பொய்பேசாமையே எல்லாவறஙகளிலும் சிறந்ததாகக கூறினுராதலால், பொய்யாமை கொல்லாமையென்னும்இரண்டறவுரைகளுள்ளும் யாது சிறப்புடையதென்று சந்தேகமுண்டாகுமல்லவா, அச்சந்தேக முண்டாகாதபடி யிவ்வு 'ஒன்ருக நல்லது கோல்லாமை' என்று கோல்லாவிரதத்தை யெடுத்துக்கூறி, (அதற் கடுத்தது பொய்யாமையாகிய விரதம என்று விளக்க) 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்று கூறினர்; (முன்னுண்டாய காதினும் பின்னுண்டாய கொம்பு உறுதியுடைதா யிருத்தல் போன்று) முன்னர்க் கூறிய பொய்யாமையாகிய விரதத்தைப் பார்க்கினும் பின்னர்க்கூறிய கோல்லாமையாகிய விரதம் உறுதியுடைதா யிருத்தலினென்க. இதனுல் ஒன்றைப்பற்றி முற்கூறும் விதியினும் பிற்கூறும்விதி யுறுதி யுடையதா மென்பது பெற்றும். இவ்வாறு வருதலே மனுமுதலிய நூல்களில் காண்க.

†† அதனே(பொய்யாமையைப்)பின்சார நன்று என்றது(யாது பற்றி யெனின்) நன்மையுண்டாக்கு மிடத்துப் பொய் பேசுதலும் தெய்பேசுத

பின்சார ன்றென்றது, *ன்*மை பயக்கும் வழிப் பொய்யும் மெய்யாயும், *தீ*மை பயக்கும் வழி மெய்யும பொய்யாயும், † நிரிந்துவருதலா னென வுணர்க. இவை மூன்று பாட்டானும இல்வறத்தினது சிறப்புக் கூறப் பட்டது.

தேளி.—(இ-ன்). (தூலோர் தொகுத்துள்ள அறங்களுள்) ஒன்றை-(தன்னே டொப்பதில்லாமல்) தானேயாக, கொல்லாமை—, கல்லது - *ன்*றும், (அது நீங்கினால்), பொயயாமை - பொய்பேசாமையானது, அதன் *பின்சார* - அதன் பின்னேநிற்க, *ன்*ற-ல்லது (எ-று).

தூலோர் தொகுத்துள்ள அறங்கள் என்பது கொல்லாமை யென்னும் அதிகாரத்தால் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும் முன் 'பொய் யாமை பொய்யாமை யாற்றின' என்றும்,'யாமெய்யாக் கண்டவற்று ளில்லே' என்றும், சொன்னதாலால், பொய்யாமை கொல்லாமை யென்னு மிரண் டறங்களுள்ளும், எது சிறந்தது என்று சந்தேகம உண்டாமன்றே, அசசச் தேகம் உண்டாகாமற் பொருட்டு, இங்கு 'அதன் பின்சாரப் பொய்யாமை *ன்*ற' என்றார்; முன்சொன்னதினும் பின்சொன்னது உறுதியுடையதாக லால். அதனைப் பின்சார *ன்*ற என்றது *ன்*மையை யுண்டாக்குமிடத்துப் பொய்பேசாதலும் மெய்பேசுதலாயும், தீமையை யுண்டாகுமிடத்து மெய் பேசாதலும் பொய பேசுதலாயும் மாறுபட்டு வருதலா லென்றறிக. இவை மூன்று பாட்டாலும இக்கொல்லாவறத்தினது சிறப்புச் சொல்லப்பட் டது. மற்ற - அசைநிலே.

(க - து). பொய்பேசாமை கொல்லாமையென்னு மிரண்டறங் களுள் கொல்லாமையெனனும அறமே சிறபபுடையதாம்.

3. Not to destroy life is an incomparably (great good); next to it in goodness ranks freedom from falsehood.

ச. கல்லா றெனப்படவே தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழ் நெறி.

லாதவும் தீமையை யுண்டாகுமிடத்து மெய்பேசுதலும் பொய்பேசுதலாக வும்மாறுபட்டு வருதலாலென்றறிக.பொய்பேசாமை கொலையையுண்டாக்கி னால் பொய்பேசுதலாகவும் பொய்பேசுதல்கொலேயை யொழித்தால் மெய் பேசுதலாகவுமிருத்தலால்,பொய்யாமை கொல்லாமைக்குப் பிற்பட்டதாயிற் றென்க. " கொல்லா லத்தது கோன்மை பிறர்தீமை, சொல்லா லத்தது சான்பு'என்ற சான்றுண்மை யதிகாரத்திற்கூறதலு மிங்கறியத்தக்கதாம்.

† இதனேப்பற்ற அது நிரிந்து வருதலான் என்றும் பாடமுண்டு.

அதற்கு, இதனேப்பற்ற—கொல்லாமையாயெவிரதத்தை மேற்கொ ண்டொழுக, அது - பொய்பேசாமை, நிரிந்துவருவதால் - மாறுபட்டுவருத லால் என்ற பொருள்கொள்க.

பரி.—(இ-ள்). * மேற்கதி விடு பேறுகட்கு நல்ல நெறியென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், † அஃது யாதோருயிரையுங் கொல்லாமையாகிய அறத்தினைக்காக்கக் கருதும் நெறி, (எ-று).

'யாதொன்றும்' என்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல்-வழுவாமற்காத்தல். இதனால் இவ்வறத்தினை யுடையதே நன்னெறி யென பது கூறப்பட்டது.

தேளி:—(இ-ன்). நல்லாறெனபடுவது (மேற்கதியும் முத்தியும் பெறுதற்கு) நல்லவழியென்று சொல்லப்படுவது, யாதெனின்-யாதென்று வினவினால், (அது), யாதொன்றும் - யாதோருயிரையும், கொல்லாமை - கொல்லாமையாகிய அறத்தினை, சூழும்-(காக்க) தினைக்கும், நெறி-வழியாம், (எ-று).

'யாதொன்றும்' என்று கூறியது, புல்மரமுதலாகிய ஓரறிவுயிரையும் உள்ளாக்குவதற்காம். காத்தல - யாதோருயிரையுங் கொல்லாமையாகிய வறத்தினைத் தவமும் பாதுகாத்தல். இதனால் கொல்லாமையாகிய இவ வறத்தினையுடையதே நலலவழியெனபது சொல்லப்பட்டது.

(க - து). யாதோருயிரையுங கொலலாமையாகியவறத்தைக்காப்பதே சுவர்க்க முதலியவறறை யடைவதற்கு நல்லவழியாகும் என்பது.

4 Good path is that which considers how it may avoid killing any creature.

நி. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

பரி.—(இ-ள்). பிறப்புநிலைன்ற நிலைபை அஞ்சிப் பிறவாமைப்போரு ட்டு மனவாழ்க்கையைத் துறந்தா ரெல்லாருளளும் கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன், ()

பிறப்பு நின்ற நிலையாவது ‡ இயங்குவ ¶ கிற்பவென்னும் $ இரு வகைப்பிறப்பினும் இன்பமென்ப தொன்றின்றி உள்ளன வெல்லாந் தன்

* மேற்கதி - இந்திரன் முதலிய தேவர்களின் பதவிகள். † அஃது-நல்லதெரி. ‡ இயங்குவ-நடப்பன (அசைவன). ¶ கிற்ப-நிற்பன (அசையாதன)

$ " ஒரி னுள்ளமே பாரின்மா னுடர்முத லுளவறு பிறப்புடுஞ், சேரு மின்பமொன றில்லையென் பதுபிரத் தியக்கமா கீவல்லாய், போர்க ளாதி தன் பிழையல ரடைவதும் புகலறு லுணர்ந் தாயே, கோ லாவரன் கழல லான் மிகுசுக நிலைபிறி நிலையன்றே" என்பது வைராக்கியசதகம்.

பமே யாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமய வேறுபாட்டாற் பல வாம் ஆகலின் 'நீத்தாருளெல்லாம்' என்றார். இதனுள் இவ்வறம் மறவாத வன் உயர்ச்சி கூறப்பட்டது.

தேளி.—(இ-ள்). நிலை-(பிறப்புநின்ற) நிலையை, அஞ்சி—,(பிறவா மைப் பொருட்டு), நீத்தாருளெல்லாம் - (மனைவாழ்க்கையைத்) துறந்தவ ரெல்லாருள்ளும், கொலையஞ்சி - கொலைப்பாவத்தையஞ்சி, கொல்லாமை - கொல்லாமையாகிய அறத்தை, சூழ்வான் - மறவாதவன், தலை - உயர்ந் தவனுவன், (எ-று).

பிறப்பு நின்ற நிலையாவது மனிதர் முதலாகிய சராமும், மராமுதலாகிய அசராமும் ஆகிய இருவகைப் பிறப்பிலும் இன்பமென்ப தொன்றில்லா மல் உள்ளனவெல்லாம் துன்பமே யாகிய நிலைமை. துறவு ஒன்றேயாயி னும், சமயவேறுபட்டால் அது பலவாமாதலால் 'நீத்தாருளெல்லாம்' என் றார். இதனுல் கொல்லாமையாகிய விவ்வறத்தை மறவாதவனது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க - து) பிறப்பிற்கஞ்சித் துறவறம் பூண்டவர்களுள், கொ லைப் பாவத்திற்குப் பயந்தவனே சிறந்தவனுவான் என்பது.

5. Of all those who, fearing the permanence of earthly births, have abondoned desire, he is the chief who, fearing the guilt of murder, considers how he may avoid the destruction of life.

சு. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்
செல்லா துயிருண்ணுங் கூற்று. [மேற்

பரி:—(இ-ள்). கொல்லாமையை விரதமாக மேற்கொண் டொழு தவனது வாழ்நாளின்மேல் உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது,(எ.று).

† மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின்பயன் அனுபவிப்பரென்

* காரத பரிவிராஜகோபங்ஷத்தி 5-வது உபதேசத்தில் "வாஸ்தவ மாகச் சங்கியாசம் ஒன்றேயாம்; அஃதஞ்ஞானத்தினுலேயும், அசத்தியினு லேயும், கருமலோபத்தினுலேயும் மூன்றுவிதமாய் (பிறகு) வைராக் கியசங்கியாசம், ஞான சங்கியாசம், ஞானவைராக்கிய சங்கியாசம், கரும சங்கி யாசம் என நான்குவித மாயிற்று" என்று கூறுவது மிங்கே யறியத்தக்க தாம்.

† "மிகமேவிய புண்ணிய பாவமெனும் வினையின்பயன் மேலொரு காலமுரு, நிகமேவரு மென்பத னுலுனரோ யெல்லாமிவ ணேச்செற வெய் தினவே" என்று சிவர்ணபோதங் கூறுவதும்,

"மனதாற்செய்த அறம் பாவங்களின் பயனே இப்பிறப்பிலாவது மறு பிறப்பிலாவது மனதாலேயே அனுபவிக்கின்றன; இவ்வனமே, வாயாற்

ணும் அறனாற் றணிபுபற்றி, () இப்பேரறஞ் செய்தான்றானுங் கொல்லப் படான்; படாளுகவே, அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்து மென்பார் வாழ்நாண்மேற் கூற்றுசெல்லாது எனறார். செல்லாதாகவே, காலநீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறு மென்பது கருத்து. இதனால் அவர்க்கு வரு நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்). உயிருண்ணுங் கூற்று - உயிரைக்கொண்டுபோம் யமனனவன், கொல்லாமை-கொலைசெயயாமையை, மேற்கொண்டு-(விரத மாக) மேற்கொண்டு, ஒழுகுவான - நடப்பவனது, வாழ்நாண்மேல் - ஆயுளின்மேல், செல்லாது - செல்லான் (எ-று).

மிகப் பெரிய அறஞ்செய்தவரும் மிகப் பெரிய பாவஞ் செய்தவரும் (அறம் பாவங்களைச் செய்தவர் மறுமையிலே சுகதுக்கங்களை யனுபவிப்பா ரென்னும்) முறையினுல்லாமல் இம்மையில்தானே அவ்வறம்பாவஙக ளின் பயன்களாகிய சுகதுக்கங்களை அனுபவிப்பாரென்னும் அறநூலின தது துணிவுபற்றி, இடைபெரிய அறஞ்செய்தலனும் கொல்லப படான்; கொல்லப் படாதவனுகவே,அவன் கருவுறும்போது நியமிக்கப்பட்ட ஆயுட் காலத்தை யாதொரு தடையுமின்றி யடைவானென்பார் வாழ்நாண்மேல் கூற்றுசெல்லாது என்றார் கூற்றுச் செலலாதாகவே, (அவனுக்குக்)காலம் நீடித்திருக்கும்; காலம் நீடித்திருந்தால தத்துவஞானமுண்டாகி (அவன்) உயிர் மோட்சத்தைப்பெறும் எனபது கருத்து. இதனுல் கொல்லாவிரதத் தோர்க்குவரும் நன்மை சொல்லப்பட்டது,

(க - து). கொல்லா விரதமுடையவன் மிகுகாலமிருப்பான்.

6. Yama the destroyer of life, will not attack the life of him, who acts under the determination of never destroying of life.

எ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

பரி:—(இ-ள்). அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பினின்றுபோம் போலாயினும், தான் பிறிதோரின்னுயிரை அதனுடம்பி னின்றுந் தொழிலாகச் செய்யற்க, (எ-று).

தன்னை † அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்க வென்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி.

செய்த அறம் பாவங்களின்பயனை வாயாலும்,காயத்தாற்செய்த அறம்பாவங் களின் பயனைக் காயத்தாலும் அனுபவிக்கின்றானன் என்று மனுதர்மசாஸ்தி ரம்12-வது அத்தியாயததிற் கூறுவதும் இங்கறியத்தக்கனவாம்.

() கொல்லாமை மேற்கொண் டொழுகுவானும்.

* அது செய்யாதவழி - பிறிதொரு பிராணியைக் கொல்லுதல் செய்யாவிடத்து, † அது-பிறிதொருபிராணி.

† இஃது இல்லறம் அன்மைக்குக் காரணம் இவை யிரண்டுபோட்டானுங் கொலையதுகுற்றங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). (தேவர்பொருட்டு யாகத்தி லொன்றைக் கொன்றல்) நன்றாகும் - இன்பமாகும், ஆக்கம் - செல்வமானது, பொறித-பொறி தானும், எனினும்-என்று (இல்வாழ்பவர்க்கு) சொல்லப்பட்டதாயினும், சானறோர்க்கு-(துறவினுல்) நிறைந்தோர்க்கு, கொன்று - (ஒருயிரைக்) கொல்ல, ஆகும் - (அதனுல்) வரும், ஆக்கம் - செல்வமானது, கடை-இழி வுடையதாம், (எ-று).

இன்பமுதலுஞ் செல்வமாவது (யாகஞ்செய்க) தானும் தேவராய்ச் சுவர்க்கத்தினிற்சென்று அடையுஞ் செல்வம். அச்செல்வம் சிறிதாகையாலும்,பின்னும்பிறத்தற்குக் காரணமாகலாலும், மோட்சமாகிய முடிவில்லாதசுகத்தை யடைபவர்க்குக் 'கடை' எனப்பட்டது. (யாகத்தில தேவர் பொருட்டு ஒன்றனைக் கொல்லுதல்) சுவர்க்க போகத்தையடைய விரும்பிய இல்லறத்தார்க்கு ஆகுமாயினும் மோட்சமடைய முயறலிக்குந் துறவறத்தார்க்கு ஆகாதென்றதனுல், விதிவிலக்குகள தம்மூல மாமுபடாமை விளக்

கியை யுண்டுபண்ணும் வாக்கியம் விலக்கெனப்படும் அது கள்ளுண்டல் கூடாது என்றற்போல்வது இவரு இல்லறத்தான் வேள்வி புரியக்கடவன் என்பது விதி; துறவறத்தான் வேள்வி புரியாதிருக்கக்கடவன் என்பது விலக்கு. இல்லறத்தாருக்கு வேளிபுரிதல் சிறப்பாயும் துறவறத்தார்க்கு அது செயயாதொழிதல் சிறப்பாயும் இருக்கின்றனவெனக. மனுதர்ம சாஸ்திரம் சங்கியாச தருமமதைக் கூறுமிடத்து "தேவர், இருஷி, பிதிர்க்களிடத்தில் மூன்று கடனுடன மனிதன் பிறக்கிறான். அவற்றுள், யக்கியத்தால் தேவர்களுக்கும், பிள்ளைபெறுவதால் பிதிர்க்களுக்கும, வேதமோதுவதால் இருஷிகளுக்கும் கடனைதீர்த்துச், சோதிட்டோம முதலிய யாகங்களைச் சக்திக்குத் தக்கவாறு செய்தி பின்பு மோட்சத்திற்குபயோகமான சந்நியாசத்தில் மனம்வைதல் வேண்டும்" எனறும், "நிறமை செய்யாமையாலும், இந்திரியங்களுக்கு விஷயப்பற்றில்லாமையாலும், நித்திய கர்மானுஷ்டானஞ் செய்வதாலும், சாந்தாயணாதி தவஞ்செய்வதாலும் பெரியோர்க ளில்வுலகத்தில் மோட்சத்தைச சாதிக்கிறார்கள்" என்றும் கூறுவதுமிகுந நன்குசிந்திக்கத்தக்கதாம். இம்முறையறியாது 'நன்றாகும் ஆக்கம்' என்னுமிக்குறன்சமணமதத்திற்குச் சார்பாயுளளதென்று கூறுவாருமுளர்.

† இஃது(கொன்றாகு மாக்கங்கடையாதல்) இல்லறமல்லாமைக்குக்காரணமாமென்க. எனவே, அது துறவறத்திற்குக் காரணமாயிற்று. எங்ஙனமெனின், வேள்வியாற் சித்திக்கும்சுவர்க்கவின்பத்தைக் கடையாகக்கொண்டவன தலையாயவின்பமாதென விசாரித்து, அதனுல் தலையாயவின்பத்தைப் பெறுதற்பொருட்டு, அதற்குச் சாதனமான துறவறத்தை மேற்கொள்ளுதலினென்க. இம்மையின்பத்தையேயன்றிச் சுவர்க்கவின்பத்தையும் கடையாகக்கொள்ளுதலே இகபரபோகவிராக மென்பர் சான்றோர்.

கியவாரூயிற்று. இஃது இல்லறமல்லாமைக்குக் காரணம். இலை யிரண்டு பாட்டாலும் கொலேயினது குற்றஞ்சொல்லப்பட்டது.

(க-து). சான்றோர் கொலேசெய்வதா லுண்டாகுஞ் செல்வத்தைக் கடையாகக்கொள்ளுவர் என்பது.

8. The advantage which might flow from destroying life in sacrifice, is dishonourable to the wise who renounced the world, even though it should be said to be productive of a great good.

கூ. கோலைவினைய ராகிய ‡ மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து

பரி.—(இ-ள்). கொலைத்தொழிலே யுடையராகிய மாந்தர், அத்தொழிலின் கீழ்மையை அறியுநெஞ்சத்த ரல்லராயினும், $ அக்கீழ்மையை அறிவார் நெஞ்சத்துப புலைத்தொழிலினர், (எ-று).

'கொலைவினையர்' என்றதனுன், வேள்விக்கட் கொலையன்மை

'மாக்களெனப்படுவார் மனவுணர்ச்சியிலராதார்' எனபர்நச்சினர்க்கினியர்.

$ அக்கொலைதொழிலின் கீழ்மையை யறிவார்.

‡ வேளவியிற்செய்யும் கொலை கொலையன் றென்பதுபற்றித் தருக்க கௌமுதி சாத்தியதரில் வியாபிததுச சாதனத்தில வியாபியாமையாகிய உபாதி கூறுமிடதது "யாகத்திற்செயயும் பசுக்கொலை அதர்மசாதனமாம்; கொலேமையான்; யாகத்திற்குப் புறம்பான கொலையைப்போல என்புழி நிவிர்த்தததன்மை உபாதி. அவ்வதர்ம சாதனமாகிய சாத்தியதனின் வியாபகமுண்டாகிறது; யாண்டு யாண்டு அதர்மசாதனத்துவம் ஆண்டாண்டு நிவிர்த்தததுவமென்றிருததலான் சாதனதன்மையாகிய கொலேமையின் அவ்வியாபகமு முண்டாகின்றது; யாண்டு யாண்டுக் கொலேமை ஆண்டாண்டு நிவிர்த்தததுவமென்பதின்மையின், பட்சமாக்கப்பட்டகொலேயிற் கொலேமையிருக்கினும நிவேதிக்கபபடு தனமையினமையான்." என்றும், மனுதருமசாஸ்திரம ஐந்தாவததத்தியாயத்தில் "யக்கியத்திற்காகவேபசுக்கள் பிரமனுல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அந்தயக்கியஞ்செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தை யடைகின்றன; ஆகையால், யக்கியத்திற் செய்யும் பசுஹிம்சை ஹிம்சையன்று" என்றும், "கொடிகள், பசுக்கள், விருக்ஷங்கள், மிருகங்கள், பட்சிகள் என்னுமிவற்றை யக்கியத்திற்கு உபயோகப்படுத்தின் பின்பு அவை உயர்ந்தகதியை யடைகின்றன" எனறும், "சராசரவிஷய தத்தில வேதங்கூறிய ஹிம்சையை ஹிம்சையென்று நினைத்தல்கூடாது. வேதத்தினின்றே தருமம விளங்குகிறதல்லவா. ஆதலால் அந்த வேதம் ஹிம்சையைச் சொன்னபோதிலும் புண்ணியமாகவே யிருக்கும்" என்றும் கூறுகின்றன.

யறிக. புலவினையென்றது ‡ தொழிலாற் புலையரென்றவாறு. இம்மைக் கட் கீழ்மை யெய்துவ ரென்பதாம்

தேளி.—(இ-ள்). கொலைவினையராகிய - கொலைத்தொழிலே யுடைய வராகிய, மாக்கள்-மனிதர், (அக்கொலைத்தொழிலினது இழிவை யறியும் மனத்தினரல்ல ராயினும்), புண்மைதெரிவாகத்து-அவ்விழிவை யறிவா தது மனத்தினிடத்து,புலவினையர்-புலைத்தொழிலினராய்த் தோன்றுவர்.

'கொலைவினையர்' என்று கூறியதினால், வேள்விக்கண் செய்யுங் கொ லை கொலையாகாமையறிக. புலவினையரென்றது தொழிலினால்புலைய ரென்றவாறும்,அப்புலவினையர் இம்மையில்தாழ்வையடைவாரென்பதாம்.

(க - து). கொலைத்தொழிலி னிழிவையறிந்தவர் கொலைசெய் வாரைச் சண்டாளர்களாக மதிப்பார் என்பது.

9. Men who destroy life are base men, in the estimation of those who know the nature of such meanness.



கo. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பரி.—(இ-ள்). ¶ நோக்கலாகா நோயுடம்புடனே வறுமைகூர்ந்த இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை இவர் முற்பிறப்பினகண் உயி ர்களை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவரென்றுசொல்லுவர் வினை வினைவுகளை யறிந்தோர், (எ - று.)

† செல்லாவாழ்க்கை தீவாழ்க்கை யெனக்கூட்டுக.

‡ தொழிலாற் புலையர் - சாதியாலன்றிக் கருமத்தால் சண்டாள ரானவர்.

¶ காண்டற்கியலாத கோயோடு தரித்திரமுடையவராய் இழிதொழி ல் செய்திருப்பவரை கல்வினை தீவினைகளினது விளைவாகிய சுகதுக்கங் களை யறிந்தவர் இவர் முற்பிறப்பில் கொலைப்பாவஞ் செய்தவ ராவாரென்று கூறுவது உரை யனுமான மெனப்படும். ''நீதியான்முற் கன்மபல ரிகழ் வதிப்போ திச்செயதி, யாதியாக வரும்பயனென் றறித லுரையா லனு மானம்'' என்பது சிவஞானசித்தி.

† தீ எனபதனை விசேடணமாகவுடைய வாழ்க்கையென்னும் விசே டியத்தைச் செல்லா என்பதனோடுங்கூட்டிச் செல்லாவாழ்க்கை யென்றும் கொள்க. கொள்ளவே, செல்லாவாழ்க்கை யென்றும் தீ வாழ்க்கை யென் றும் கொள்ளவேண்டுமென்பதாயிற்று. செல்லாவாழ்க்கை—வறுமை மிகுந் த வாழ்க்கை; தீ வாழ்க்கை - இழிதொழிலேயுடையவாழ்க்கை. செல்லாவெ ன்பது இங்கு வறுமையை யுணர்த்திநிற்கும். செல்லாமை தரித்திரத்தையும் செல்லல் செல்வத்தையு முணர்த்துதலே கோடியார் குடிப்பிறப்பில்

‡ செயிருடம்பினாதல் ¶ "அக்கேபோ லங்கை யொழிய வீரலழுகித், துக்கத் தொழுநோ யெழுபவே' என்பதனுனு மறிக. மறுமைக்கண்இவையு மெய்துவ ரென்பதாம். இவை இரண்டி பாட்டானுங் கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

அருளுடைமை முதல் கொல்லாமையீறுகச் சொல்லப்பட்ட இவற் றுள்ளே சொல்லப்படாத வீரதங்களும் அடங்கும்; அஃதறிந்தடக்கிக் கொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

தேனீ.—(இ - ள்). செயிருடம்பின் - பார்க்கக் கூடாத நோயுடம்புட னே, செல்லாத்தீவாழ்க்கையவர்-வறுமை மிகுந்த இழிதொழில் (செய்யும்) வாழ்க்கையினேயுடையாரை, (இவர் முற்பிறப்பில்), உயிர் - உயிர்களை, உடமபின் - (அவை நின்ற) உடம்புகளிலிருந்து, நீக்கியார் - நீக்கினவர், என்ப - எனறு (வினைவிளைவுகளை அறிந்தோர்) சொல்லுவார், (எ - று).

வாழ்க்கை என்பதனோடு செல்லா என்பதனேயும் கூட்டிச் செல்லா வாழ்க்கை தீவாழ்க்கை. யெனக்கொள்க. செயி ருடம்பின ராதல்-பெருவி யாதி கொண்ட வுடம்பினை யுடையாராதல். மறுபிறப்பில் இவையும் (செயி ருடம்பினேயும் செல்லாத் தீவாழ்க்கையையும்) அடைவரென்பதாம். இவை இரண்டுபாட்டாலும் கொலைசெய்வார்க்குவருந் தீமை சொல்லப் பட்டது.

அருளுடைமை முதல் கொல்லாமை இறுதியாகசசொல்லப்பட்ட இ வற்றுள்ளே சொல்லப்படாத வீரதங்களும் அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக்கொள்க. இங்குச சொனனுல் விரியும்.

"செல்லா வீடத்துங் குடிப்பிறந்தார் செய்வன, செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்" என்னு கூறுவதனுலுமறிக.

செயி ருடம்பினாதல் - காணுதற்கியையாத பெருவியாதி பொரு ந்திய வுடமபினை யுடையவராதல்.


செயிர் என்பது இங்குக் கண்டு சகித்தற்குக்கூடாத பெருவியாதியை யுணர்த்தி நின்றது.

¶ காலடியார் நீவினேயச்சம் 3, இதன் பொருள் [அலவனை(கண்டை)க் கால் முறித்துத்தின்ற பழவினே வந்தடைந்தக்கால்] (அத்தீவினே யுடை யார்) சங்குமணிபோல உள்ளங்கையொழிய வீரல்களுமுகி (விழத்) தக் கமடைந்து தொழுநோ (பெருவியாதி) யோடு திரிவார்கள் என்பது.

"இருநோய் நமக்குண்டென் றெண்ணுதே யெவ்வுயிரு, முன்னுவக் கொனமுணணு சூர்க்கர்தா - மென்நோவும், பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென், றெண்ணப் படுவா ரிசைந்து" என்றுபெரும்தேவனுர்பார தங்கூறுவது மிங்குணர்தற்பாற்றும்.

(க - து). கொலைத்தொழில் புரிவோர் மறுமையில் தரித்திரத்தையும் கொடிய பிணியையு மடைவார் என்பது.


10. The wise will say that men of diseased bodies who live in degradation and in poverty, are those who separated the life from the body of animals in a former birth.



ஞானம்

பரி.—இனி † அவற்றின் பயறகிய ஞானங்கூறிய தோடங்கினார். ஞானமாவது ¶ வீடுபயக்குமுணர்வு; அது நிலையாமை முதல் அவாவறுத்தலிறுதியாக நான்கதிகாரத்து வடக்கப்படட்டது.

தெளி.—இனி அவ்விரதங்களின் பிரயோசனமாகிய ஞானம் சொல்லத்தொடங்கினர். ஞானமாவது மோட்சத்தைத்தரும் அறிவு; அது நிலையாமைமுதல்அவாவறுத்தல்இறுதியாக நானகதிகாரத்துள அடக்கப்பட்டது.



பத்தாவது அதிகாரம்.

நிலையாமை—*Instability.*

பரி:—$ அவற்றுள, நிலையாமையாவது தோற்ற முடையனயாவும் நிலையுதலிலவாந்தன்மை. () மயங்கியவழிபபேய்த்தேரிற்புனல்போலத்

† விரதங்களிஞல் அந்தக்கரணம் பரிசுத்தமாக அது வாயிலாக ஞான முண்டாதல் பற்றி 'அவற்றின் (விரதங்களின்) பயஞகிய ஞானங் கூறிய தொடங்கினர்' என்று கூறப்பட்டது.

‡ பாலென்பது வேறுபாலே யுணர்த்தாது பசுவின்பாலேயே யுணர்த்துவதுபோல இங்கு ஞானமென்பது கட ஞானம் படஞான முதலியவற்றை யுணர்த்தாது வீடு பயக்கு முணர்வையே யுணர்த்திற்றென்க

¶ வீட்டைத்தருவது ஞானமே யென்பது "ஞான மலது கதிகூடுமோ" என்று தாயுமானவரும், "ஞானத்தின் மிக்க வறகெறி காட்டில்லே" என்று திருமூலரும், இவ்வாறு பிறரும் கூரியவாற்ருஞ மறிதற்பாற்ரும்; எனவே, ஞானமின்றி வீடெண்டாகாதென்பது தேற்றமாயிற்றென்க.

$ அவற்றுள்- நிலையாமை முதலாகவுள்ள அந்நான்கனுள்.

() மயங்கியவிடத்துக் காணலில் நீர்தோன்றுவதுபோலச் சச்சிதாநந்த வடிவப் பிரஹ்மத்தில் திரிபுடி (காண்பான் காட்சி காணப்படும்பொருள்) தோன்றி திருவிகற்பசமாதி வாயிலாகத தெளிந்தவிடத்துக் கயிற்றரவு போலக்கெடுமென்பவர்கள் அத்துவித சித்தாந்திகள். இவர்கள்; இம்மயக்கம் சிவர்களிடத்து அநாதியாயுள தென்றும், இச்சிவர்கள் சொப்பன

தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலிற் போய்யென்பாரும், † நிலைவேறுபட்டு வருதலாற் காணத்தோறும் பிறந் திறக்கு மென்பாரும், ‡ ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறு படாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயு டைய வென்பாருமெனப் பொருட் பேற்றி கூறுவார் பலதிறத்தாராவர்; அவரெல்லார்க்கும் ¶ அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃதுணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்று விடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

தெளி:—அவற்றுள், நிலையாமையாவது தோற்றமுடையன வெல் லாம் நிலைத்திருத்த லில்லாதனவாந் தன்மை. மயங்கியவிடத்துக் கான லிற்சலம் போலத்தோன்றி மெய்யுணர்ந்தவிடத்துப் பழுதையிற்பாம்பு போலக்கெடுதலாற் பொய்யென்பாரும், நிலைவேறுபட்டு வருவதாற் கணந்தோறும் பிறந்திருகுமென்பாரும், ஒருவிதத்தால் வேறுபடுத

வுலக சீவர்கள்போலப் பிரஹமத்தில் கற்பிதமாயுள்ளவர்களென்றும், கூறு வர்.

† நிலைவேறுபட்டு வருதலால் கணந்தோறும் பொருள்கள் பிறந்திற க்கு மென்பவர்கள் பௌத்தசித்தாந்திகள். இவர்கள க்ஷணிக விஞ்ஞான வாதிகளெனப்படுவர். தாமரையிதழைப்பலவாக அடுக்கி உளியைத்தடிதலால் அவ்விதழ்களில் எட்டிதழ் அறுபடுங்காலவளவு கணமெனப்படும். இம்மதத் தர் க்ஷணிக விஞ்ஞான வடிவ புதமியே ஆன்மா; இப்புத்தி பிரகாச வடி வினையுடையது; சகல பதார்த்தங்களும் இத ஞாகாரமாயிருக்கின்றன; ஒவ் வொரு க்ஷணதலிலும் விஞ்ஞான முண்டாகி நாசமடைகின்றது; மூன்றிய விஞ்ஞானத்திற்குச் சமானமாக வேறு விஞ்ஞான முண்டாவதால் மூன்றிய விஞ்ஞானம் நாசமடைகின்றது; இவ்வாறு தோன்றித தோன்றி யழிந்து அழிந்து நதியின் பிரவாகம்போல விஞ்ஞானதாரை (ஒழுங்கு) தொடர்ந்து கொண்டே இருக்கின்றது; இத்தவிஞ்ஞானதாரை ஆலய விஞ்ஞானதாரை பிரவிர்த்தி விஞ்ஞானதாரை யென்றிருவகையாம்; நான்கான் என்னும் விஞ்ஞானதாரை ஆலய விஞ்ஞானதாரையாம்; இது கடம் இது படம் என் னும் விஞ்ஞானதாரை பிரவிர்த்தி விஞ்ஞானதாரையாம்; ஆலய விஞ்ஞான தாரையினின்றும பிரவிர்த்தி விஞ்ஞானதாரை யுண்டாகின்றது என்று கூறுவர்.

‡ ஒருவகையால் வேறுபடுதலும் ஒருவகையால் வேறுபடாமையுமா ய்ப் பொருள்களிருக்கின்றமையின் பொருள்கள் நிலையுதலும் நிலையாமை யுமாய் ஒருங்கேயுடையன வென்பவர்கள் உலகஞ்சத்திய மென்னும் மற் றைச் சமயவாதிகள். இவர்கள் வேறுபடுதலைக் காரியத்திலும் வேறுபடா மையைக் காரணத்திலும் கொள்வர். எம்மதவாதமும் இம்மூன்றனுளடங்கி நிற்றலை யுய்த்துணர்ந்துகொள்க.

¶ அவற்றது - தோற்றமுடையனவற்றின்.

லும் ஒருவிதத்தால் வேறுபடாமையுமுடையனவாயிருத்தலின்நிலைத்தலும் நிலையாமையும் ஒருமித்துடையன வென்பாரும் என்றுபொருளின்றன்மை கூறுவார் பலவகைப்பட்டவராவர்; அவரெல்லார்க்கும் அவற்றினது நிலையாமையுடம்படாதலால், இங்கு அந்நிலையாமையையே கூறுகின்றார். இந்நிலையாமையை யறிந்த விடத்தல்லது, உலகப்பொருள்களிலேயுள்ள மனப் பற்று விடாதாகலின், இது (நிலையாமை) முனைவைக்கப்பட்டது.

க. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

பரி.—(இ-ள்). நிலையுதல் இலவாகிய பொருள்களை நிலையுதலுடையவென்று கருதுகின்ற புல்லிய வறிவினை யுடையராதல் துறந்தார்க்கு கிழிவு, (எ-று).

† தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற்றினமேற் பற்றுச்செய்தல் பிறவித் துன்பத்திற் கேதுவாகலின், அது வீடெய்துவார்க் கிழுக்கென்பது இதனுற் கூறப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பாண்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்திற் கேதுவாகிய செல்வத்தின் கண்ணும் அதனை யனுபவிக்கும் யாக்கையின கண்ணும் ஆகலின், வருகின்ற பாட்டுகளான் ‡ அவற்றது நிலையாமையை விதந்து கூறுப.

தேளி.—(இ-ள்). நில்லாதவற்றை - நிலைதிருத்தலில்லாதனவாகிய பொருள்களை, நிலையினவென்று-நிலைத்திருத்தலுடையனவென்றுணரும்-கினைக்கின்ற, புல்லறிவாண்மை - அற்பபுத்தியை யுடையவராதல், கடை-(துறந்தார்க்கு) இழிவாம், (எ-று).

தோற்றமுடைய பொருள்களை நாசமில்லாதனவென்று கினைக்கும் அற்பபுத்தியால் அப்பொருள்களின்மீது பற்றுசெய்தல் பிறவிதுன்பத்திற்குக்காரணமாமாகலால், அப்பற்று மோட்சத்தை யடைவார்க்குத் தவருமென்பது இதனுற் சொல்லப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்திற்குக் காரணமாகிய செல்வத்தினிடத்தும் அதனை அனுபவிக்கும் உடம்பினிடத்தும் ஆகலின், வருகிறபாட்டுக்களால் அவ்விரண்டன் நிலைமையை வேறெடுத்துச் சொல்லுவார்.

† தோற்றமுடையனவெல்லாம் நாசமுடையன வாயிருத்தலைக்காண்டல் கருத லுரை வாயிலாக வறியாது தோற்றமுடையன வற்றை அழிதலில்லாதவை யென்று எண்ணும் மந்தபுத்தி யுடையவரை நோக்கி மனதனை முன்னிட்டுப் பட்டினத்தடிகள் “பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும், தோன்றின மறையு மறைந்தன தோன்றும், பெருத்தன சிறுக்கும் சிறுத்தன பெருக்கும், உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும், புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்” என்று கூறியிருத்தலுங் நன்குணர்தற்பாற்றும்.

‡ அவற்றது - செல்வம் உடல்களது.

(க - து.) நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளன வென்று கருதுதல் மதியீனமாம் என்பது.

1. That ignorance which considers those things to be stable which are not so, is dishonourable to the wise.

2. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

பரி.—(இ - ள்.) ஒருவன் மாட்டுப் பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கட் காண்போர்தழாம் வந்தாற்போலும்; அவனது போகலும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற் போலும், (எ - று).

'பெருஞ்செல்வம்'எனவே, துறக்கச்செல்வமும் அடங்கிற்று. போக்கு மென்ற எச்சவும்மையான் வருதலென்பது பெற்றாம். அக்குழாங்கூத்தாட்டுக்காரணமாக அரங்கின்கட் பலரிறத்தாற் றானேவந்து அக்காரணம் போயவழித் தானும் போமாறுபோலச் † செல்வமும ஒருவனல்வினைகாரணமாகவருவன் மாட்டுப் பலரிறத்தாற் றானேவந்து ‡ அக்காரணம் போயவழித் $ தானும் போமென்ற தாயிற்று.

தெளி.—(இ - ள்.) (ஒருவனிடத்து) பெருஞ்செல்வம் - பெரியசெல்வம் (வருதல்), கூத்தாட்டு - கூத்தாடுதல்(செய்கின்ற), அவை - சபையினிடத்து, குழாத்தற்று - (காண்போர்) கூட்டம் வந்தாற்போலும், போக்கும்-(அச்செல்வம்) போதலும், அது - அக்கூட்டமானது, விளிந்தற்று - (அக்கூத்தாடுதல் முடிந்தவிடத்து) போயினாற் போலும், (எ - று).

'பெருஞ் செல்வம்'என்றகூறவே, சுவர்க்கச் செல்வமும் அடங்கிற்று. போக்குமென்ற இறந்ததுதழுவியவசெச வும்மையால்வருதலென்பதுபெறப்பட்டது. அக்கூட்டமானது கூத்தாடுதல் காரணமாகச சபையினிடத்துப் பலவிதத்தால் தானேவந்து அக்கூத்தாட்டுக் காரணம் போனவிடத்துத் தானும்போகும் வகைபோலச் செல்வமும் ஒருவனது நல்வினை காரணமாக அவனிடத்துப் பலவிதத்தால் தானேவந்து அந்நல்வினையாகிய காரணம் போனவிடத்துத் தானும் போமென்றதாயிற்று.

† "மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல, வருவு முயர்குலமு மெல்லாங் - திருமடந்தை, ஆம்போ தவனோடு மாகு மவள்பிரிந்து,போம் போ தவனோடும் போம" என்பதுமிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ தாமரைமுகை மலர்தற்குச் சூரியனும்,அது குவிதற்குச் சந்திரனும் நிமித்த காரணமாயிருத்தல்போல, செல்வம் வருதற்குநல்வினையும் அது போதற்குத் தீவினையும் நிமித்த காரணமாயிருக்கின்றன வென்பதாம்.

$ தானும் - செல்வமும்.

(க-து.) செல்வம் நிலைபெறுதலுடையதன்று என்பது. (உ)

2. The acquisition of wealth is like the gathering together of an assembly for a theatre; its expenditure is like the breaking up of that assembly.



ஈ. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ற
லற்குப வாங்கே செயல்.

பரி.—(இ - ள்.) நில்லாத வியல்பினை யுடைத்துச் செல்வம்; அது னைப்பெற்றால், அதனைற் செய்யப்படும் அறங்களை அப்பெற்றபொழுதே செய்க, (எ - று).

† அல்கா வென்பது இரிந்து நின்றது. ‡ ஊழுள்வழியல்லது துறந் தாரைப் பெறப்படாமையின் 'அதுபெற்றால்' என்றும், § அஃதில்வழி யில்லாமையின் 'ஆங்கே' என்றுங் கூறினர். அதனைற் செய்யப்படும் அறங் களாவன: ¶ பயனெக்காது செய்யுங் கடவுட்பூசையும், தானமும் †† முத லாயின. () அவை ஞானவேதுவாய் வீடியபத்தலின், அவற்றை 'அற்குப' என்றும், ‡‡ 'செயல்' என்றுங் கூறினர். இவையிரண்டு பாட்டானும் செல் வநிலையாமை கூறப்பட்டது.

அற்குப என்பது வினையாலணையும் பெயர். அதன் பொருள் நிலைப்பன என்பது.

† நிலைத்தலென்னும் பொருளதாகிய அல்குதல் என்னும் தொழிற்பெ யரின் பகுதியாகிய அல்கு என்பது செய்யுள்விகாரத்தால அற்கு எனத்தி ரிந்துநின்றது; அல்கா என்பதன் ஆகாவிகுதி எதிர்மறைப் பொருளது.

‡ துறந்தவரிடத்துப் பொருள் சம்பாதித்தற்கியன்ற முயற்சியில்லா மைபற்றி 'ஊழுள்வலியல்லது துறந்தாரைப் பெறப்படாமையின், அதுபெற் றால்என்றும்' என்றுகூறப்பட்டது. படவே, துறந்தவர் பொருளைப் பெ றுதற்குக் காரணம் அவரது ஊழேயென்றும் அவரது முயற்சி யன்றென் றும் பெற்றாமென்க.

§ அஃதில்வழி நில்லாமையின் - அவ்வூழ் (நல்வினை) இல்லாதவிட த்துச் செல்வம் நிலைபெற்றிராமையின்.

¶ "ஆற்றும் பயன்வேண் டாக்கருமம் அத்தக்காண சுத்திதரும்" என் றுமெய்ஞ்ஞான விளக்கங் கூறுகின்றது. பயனெக்காது செய்யுங்கருமம் நிஷ்காமிய கருமமெனப்படும்.

†† முதல்வனின் என்றமையின் தண்ணீர்ப்பந்தர் வைத்தல், பெரியோர் தங்க மடங்கட்டுதல், நிலைகொடுத்தியிர் காத்தல், கல்விச்சாலை யேற்படுத் துதல், அன்ன சத்திர மேற்படுத்துதல் முதலியவற்றையுங் கொள்க.

() அவை-கடவுட் பூசை முதலியன. ‡‡ செய்க என்றும் பாடமுண்டு.

தெளி.—(இ - ள்.) செல்வம் - செல்வமானது, அற்கா - நிலைபெறுதலில்லாத, இயல்பிற்று - இயல்பினை யுடையதாம், அதுபெற்றால் - அச் செல்வத்தைப் பெற்றால், அற்குப - (அச்செல்வத்தினைச் செய்யப்படும்) அறங்களை, ஆங்கே - அப்பெற்றபொழுதே,செயல்-செய்யக்கடவன்,(எ-று).

அல்காவென்பது அற்கா எனத்திரிந்துநின்றது. (செல்வம் நல்) ஊழ்உள்ளவிடத்தல்லது திறந்தவரால்பெறப்படாமையால் 'அதுபெற்றால்' என்றும், அவ்வூழ் இல்லாதவிடத்து நில்லாமையால்'ஆங்கே'என்றும் சொல்லினர். அச்செல்வத்தினைச் செய்யப்படும் அறங்களாவன:பயனைக் குறியாது செய்யும் கடவுட்பூசையும், தானமும் முதலானவை. அவைஞானத்திற்குக் காரணமாய் மோட்சத்தைத் தருதலால், அவ்வறங்களை 'அற்குப' என்றும், 'செயல்' என்றும் சொல்லினர். இவை இரண்டு பாட்டாலும் செல்வத்தின் நிலையாமை சொல்லப்பட்டது.

(க - து.) செல்வம் நிலைபெறுவதல்ல யிருத்தலின், அச்செல்வத்தைப் பெற்றவன் அதுகொண்டு விரைந்து அறஞ்செய்ய வேண்டும் என்பது. (கூ)

3. Wealth is perishable; let those who obtain it immediately practise those virtues which are imperishable.

ச. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

பரி.—(இ-ள்.) நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறை போலத் தன்னைக்காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயதுயிரீர், அஃதுணர்வாரைப்பெறின், (எ-று).

* காலமென்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற் பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானுகக் கூறுபடாமையின் 'நாளென வொன்றுபோல்' என்றும், அது தன்னை வாளென்று உணராமாட்டாதார் நமக்குப்பொழுது போகாநின்ற தென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் 'காட்டி' என்றும், இடைவிடாது ஈர்தலான் † 'வாளது' என்றும், அஃதீர்கின்றமையை உணர்வார் அரியராகலின் 'உணர்வார்ப்பெறின், எனமுங்கூறினர். ‡ உயிரென்

* கழிந்தது கழிகின்றது கழிவது என்னும் வியவகாரத்திற்குக் காரணமாயிருப்பதிகாலமெனப்படும். அது பிருதிவி முதலிய வற்றைப்போல உருவமுடையதாக விராமையின் 'காலமென்னும் அருவப்பொருள்' என்று கூறப்பட்டது. † வாளின்வாயது என்றும் பாடமுண்டு.

‡ உயிரானது தெத்தாயிருத்தலால், அது வாளால் அறுக்கப்படுவதாகாதென்க. இது பகவற்கீதை சாங்கியயோகத்தில் "ஆயுதங்கள் இவனை(ஆத்மாவை) வெட்டுவதில்லை; நெருப்பானது இவனைச் சுடுவதில்லை; நீரான இவ

னுஞ் சாதியொருமைப்பெயர் ஈண்டு உடம்பின்மேனின்றது; ஈரப்படுவது அதுவேயாகலின். வாளென்பது ஆருபெயர். இனி இதனை நினைப்பதில்லை; வாயுவான திவினை உலர்த்துவதில்லை.'' என்று கூறுவதாலு மறிதற் பாற்றும்.

உயிரானது தன்னையறுத்துச் செல்கின்ற காலமாகிய வாளினது வாயினிடத்தது என்று கூறப்படினும் அறுக்கப்படுவது உயிர்க்கு நிலைக்களமாகிய உடம்பன்றி உயிரல்லாமையின் 'உயிரென்னும் சாதியொருமைப் பெயர் ஈண்டு(இங்கு)உடம்பின் மேனின்றது; ஈரப்படுவது (காலமென்னும் வாளினால் அறுக்கப்படுவது) அதுவே (உடம்பே)யாகலின்'என்று கூறப்பட்டதென்க. உயிருக் கிருப்பிடமான உடம்பை உயிரென்றது தானியாகுபெயராம்.

மைத்திராயண்ணியுபநிடதம் ஆறாவது பிரபாடகம் 15-ல் ''சூரியனுருப்பிக்தி அதுகாலமாயிற்று; எனெனின், கலேமுதலியவற்றோடு கூடியிருப்பதினுற்றான்.....வருஷத்தினுல் பிராணிகளுண்டாகிறார்கள்; அப்படி யுண்டானவர்கள் வருஷத்தினுலேயே விருத்தியடைகிறார்கள்; வருஷத்திலேயே லயமடைகிறார்கள்'' என்று கூறுகின்றது நாலடியார் செல்வ நிலையாமையில் ''தோற்றஞ்சான ஞாயிறு நாழிபா வைகலும், கூற்ற மளக்குதுக் காளுண்ணும்'' என்றும், அறனவலி யுறுத்தலில் ''வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலே வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்காள்மேல் வைகுதல், வைகலே வைத்துணரா தார்'' என்றும் கூறுவது மிகுதிக் கவனிக்கத் தக்கதாம்.

இனி இதனை (இக்குறளுக்கு) நானென வொன்றுபோற் காட்டி-நானென்பது ஒருபொருள்போலத்தோன்றி, உயிரீரும்வாள்-உயிரை மீர்வதொரு (அறுப்பதாகிய வொரு) வாளாமென் றுரைகூறுவாருமுளர். என வென்பது பெயர்சொல்லாகாது இடைசசொல்லா யிருத்தலாலும், ஒன்றுபோற்காட்டி யென்பதற்கு ஒருபொருட் சிறப்பு இல்லாமையாலும், அது என்பது குற்றியலுகர மல்லாமையாலும் அஃது உரையல்ல வென்றறிக.

இம்மறப்பின் விபரம் வருமாறு'—என என்னும் இடைச்சொல் (என்று சொல்லப்படுவது என்னும் பொருளதாகிய) என்பது என்னும் (வினையாலணையும்)பெயராகாமையாலும், 'ஒன்றுபோற்காட்டி' என்பதற்கு (அறுக்கப்படுவதொரு காலவரையறை போலத்தன்னை (உலகினர்க்குக்) காட்டி யென்றுரை கூறுது)குணந்தொழில்முதலியனவாக விராது பொருளா யிருக்கும் நானை யொருவிசேடமுங் கற்பிக்காது ஒருபொருள் போலத் தோன்றி என்றுரைகூறியதில் யாதொரு சிறப்புங் காணப்படாமையாலும், 'வாளதுணர்வார்' என்பதை வாளது உணர்வார் என்று பிரிக்காது வாள் அது உணர்வார் என்று பிரிக்குமிடத்து அஃதை இஃது முதலிய ஆய்தத்தொடர் குற்றியலுகரமொழிகள் நிலைமொழியாக நிற்குமிடத்து ''முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி, மன்னல் வேண்டு மல்வழி யான'' என்னும் (தொல்காப்பிய) விதிப்படி அஃதுணர்வார் என்றிருத்தல்வேண்டும்;

நானென்பதொரு பொருள் போலத்தோன்றி உயிரை யீர்வதொரு வாளா மென்றுரைப்பாருமுளர். எனவென்பது பெயரன்றி இடைச்சொல்லாகலா னும்,'ஒன்று போற்காட்டி' என்பதற்கு ஓர் பொருட்பிறப் பின்மையானும், அது வென்பது குற்றிய லுகர மன்மையானும், அஃதரையன்மையறிக.

தெவி.—(இ-ள்) உயிர் - உயிரானது, நாளென - நாளென்று அளவு செய்யப்படுவதாகிய, ஒன்றுபோல் - ஒருகாலவளவுபோல, காட்டி - (தன் னைக்) காட்டி, ஈரும் - அறுத்துச்செல்லுகின்ற, வாளது - வாளினது வாயி னிடத்தது, உணர்வார்ப்பெறின் - (அதனை) அறிவாரைப்பெற்றால்,(எ-று).

காலமென்னும் அருவப்பொருள் உலகியலே நடத்துதற் பொருட்டுச் சூரியன் முதலாகிய அளவுசெய்யுங் கருவிகளால் இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லாமல் தானுங்கூறுபடாமை யால் 'நாளென வொன்றுபோல்' என்றும், அக்காலம் தன்னை வாளென்று அறியமாட்டாதவர் நமக்குப்பொழுது போகாதின்றதென்றுமிழும்படி(அவ ரை)காளாய்மயக்கலால் 'காட்டி' என்றும், இடைவிடாமல் அறுத்தலால், 'வாளது' என்றும், அக்காலம் அறுக்கின்றதை அறியவல்லவர் அரியவரா யிருத்தலால் 'உணர்வார்ப்பெறின்' என்றுஞ்சொல்லினர். அறுக்கப்படுவது உடம்பேயாகலால் உயிரென்னுஞ் சாதிபொருமைப்பெயர் தானியாகு பெய ராய் நிற்ப உடம்பையுணர்த்தி நின்றது. வாளினதுவாயை வாளென்றமை யின், இது பொருளாகுபெயராம். இதனுள் உடம்புகளுக்கு அளவுசெய்யப்ப ட்ட நாள் கழிகிறவிதம் சொல்லப்பட்டது

(க-து.) உடம்பானது நாளாகத் தன்னைக் காட்டி மக்களை மயக் கி வருகின்ற காலதத்துவமென்னும் வாளினது வாயில் அறுபட்டு வருகின்றது என்பது.

4. Time, which shows itself to the ignorant as it were something real, is in the estimation of the wise only a saw which cuts down life.

ரு. நாச்சேற்று விக்குண்மேல் வாராமு னல்லினை
மேற்சென்று செய்யப் படும்.

பரி.—(இ-ள்.) உரையாடாவண்ணம் நாவையடக்கி விக்குள் எழுவ தற்கு முன்னே வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப்படும்.

அவ்வாறின்றி அதனைவார் என்று (அது இது முதலிய முற்றியலுகர மொழி நிலைமொழியாக நிற்க உயிரை முதலாகவுடைய வருமொழிவந்து) புணருமென்பதற்கு விதியில்லாமையாலும் அவ்வுரை பொருந்தாதென்று பரிமேலழகர் மறுத்தாரென்க.

† மேனெஞ்சிவருதல் ஒருதலையாகலானும் வந்துழிசெய்தலே யன்றிச சொல்லலுமாகாமையானும் "வாராமுன்" என்றும், அதுதான் இன்னபொழுது வருமென்ப தின்மையின் 'மேற்சென்று' என்றுங் கூறினார். மேற்சேறல்-மண்டுதல். கல்வினை செய்யுமாற்றின்மேல்வைத்து நிலையாமைகூறியவாறு.

தெளி.—(இ-ன்.) காசசெற்று - (பேசாதிருக்கும்படி) காவை யடக்கி, விக்குள்-விக்கலானது, மேல்வாராமுன்-எழுவதற்கு முன்னே, கல்வினை - (மோட்சத்திற் கேதுவாகிய)அறமானது, மேற்சென்று-விரைந்து, செய்யப்படும்-செய்யத்தக்கதாம், (எ-று).

விக்கலானதுமேல்நோக்கி வருதல் நிசசயமாதலானும், அவ்விக்கல் வந்தவிடத்து வீட்டிற்குக் காரணமான அறத்தைச செய்தலே யல்லாமல் சொல்லுதலுங கூடாமையாலும் "வாராமுன்" என்றும், அவ்விக்கல்தான் இன்னகாலத்தில் வருமென்பதில்லாமையால் 'மேற்சென்று'எனறுங்கூறினார். மேற்செல்லல்-தூரிதப்படுதல். கல்வினைசெய்யும் வழியின்மேல் வைத்து நிலையாமை சொல்லியவாறும். இதனால் அந்த நாள்கழிந்தாலுண்டாகும் நிலையாமை சொல்லப்பட்டது.

(க-து.) காவை யடக்கி விக்குள் எழுவதற்கு முன்பே விரைந்து வீட்டிற் கேதுவாயவறத்தைச செய்யவேண்டும் என்பது.

5. Let virtuous deeds be done quickly, before the hiccup comes, making the tongue silent.

சு. ‡ நேருந ளுளனெருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

பரி.—(இ-ள்.) ஒருவன் நேருநளுளனெனறு அவனே இன்றில்லையாயினு னென்றுசொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து இவ்வுலகம்.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையும் உணர்த்தின்றன. அவை பெண்பாற்கும் உரியவாயினும் * சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினார். இந்நிலையாமையே உலகின் மிக்கதெனபதாம்.

† "புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி, இன்னினியே செய்க வறவினை" என்று நாலடியாரும், "காலைசெய் வோமென்றறத்தைக் கடைப்பிடித்துச், சாலச்செய் வாரே தலைப்படுவார்" என்று அறநெறிச்சாரமும் கூறுவது மிக்குக் கவனிக்கத தக்கதாம்.

‡ "மின்னி னிலையில மன்னுயி ராக்கைகள்" என்றனர் சடகோபர்.

* அறிவு ஆற்றல் முதலியவற்றில் பெரும்பான்மையாகப் பெண்பாலும் ஆண்பால் சிறந்திருப்பதுபற்றி ஈண்டு 'உளன்' என்று ஆண்பாலாகக் கூறப்பட்டது. ஈண்டு ஆண்பால் மற்றைப்பாலுக்கு முபலட்சணமாம்.

தேளி.—(இ-ன்.) இவ்வுலகு - இவ்வுலகமானது, ஒருவன்-ஒருவன்- நேற்றைக்கு, உளன் - உளனாயினன் (பிறந்தவனாயினன்), (அவனே), இன்று - இன்றைக்கு, இல்லை - இலனாயினன் (இறந்தானாயினன்), என்னும் பெருமை- என்னும் சொல்லும் (நிலையாமையின்) மிகுதியை, உடைத்தி-உடையதாயிருக்கின்றது, (எ-று).

இங்கு உளன் என்பதன் பகுதியாகிய உண்மை பிறத்தலையும், இல்லை யென்பதன் மூதலிலுள்ள இன்மை இறத்தலையும் அறிவித்து நின்றன. பிறத்தலும் இறத்தலும் பெண்பாலுக்கும் உரியனவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாலுக்கே சொல்லினர். இந்த நிலையாமையே உலகத்தினிடத்து மிகுந்திருக்கின்றதெனபதாம். இதனால் அவ்வுடமபுகள் ஒரோவிடத்துப் பிறந்தவளவிலே இறத்தல் சொல்லப்பட்டது.

(க-து.) இவ்வுலகமானது நேற்றுப் பிறந்தவன் இன்றைக் கிறந்தா னென்னும் நிலையாமையின் மிகுதியை யுடைத்தா யிருக்கின்றது என்பது.

6. This world possesses the greatness that one who yesterday was is not to-day.

எ. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

பரி.—(இ-ள்.) ஒருபொழுதளவும் தம்முடம்பும் உயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார், மாட்டாதுவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளை நினையாநிற்பர் அறிவிலாதார்,(எ-று).

இழிவுசிறப்பும்மையாற் பொழுதெனபது ஈண்டுக் கணத்தின்மேனின்றது. † காரணமாகிய வினையினாலே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாத தாயிற்று. பலவாய நினைவுகளாவன: ‡ பொறிகளான நுகரப்படும் இனபங்கள் தமக்குரிய வாமாறும், § அதற்குப் ¶ பொருள்

"உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம், எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த, மாநதர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச், சாந்துணையுஞ் சஞ்சலமே தான்" என்றனர் ஔவையார்.

† "விளைப்போக மேயொரு தேகவகண் டாய்வினை தானெழிற்றால், தினைப்போ தனவுகில் லாதிகண்டாய்" என்றனர் பட்டினத்தடிகள்.

‡ செவிமுதலிய இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் சப்த முதலிய இன்ப விஷயங்கள்.

§ அதற்கு-பொறிகளால் அனுபவிக்கப்படும் இன்ப விஷயங்கள் தமக்குரியனவாதற்கு.

¶ இன்பங்களை யநுபவித்தற்குப்பொருள் தினைக்காரணமாதலை கால

துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றை த்தா மூயலுமாறும், † அவற்றிற்கு வரு மிடையூறுகளும், அவற்றை நீக்கு மாறும், நீக்கி அப்பொருள் கைடக்கூட்டுமாறும், அதனைப் பிறர்கொள் ளாமற் காக்குமாறும், அதனுன் நட்டாரை யாக்குமாறும், நள்ளாரை யழிக்குமாறும், தாம அவ்வின்பகள் நுகருமாறும் முதலாயின. அறிவிலா ரது இயல்பின்மேல் வைத்து கிலையாமை கூறியவாறு. இனிக் ¶ கருதுப வென்பதனை அஃறிணைப் பன்மைப் பெயராக்கி யுரைப்பாருமுளர்.

தேளி.—(இ-ன்.) ஒருபொழுதும் - (அறிவில்லாதவர்) ஒருபொழுதள வும், வாழ்வது—(தம்முடம்பும் உயிருங்கூடி) இருத்தலே, அறியார்-அறிய மாட்டார, (மாட்டாதிருந்தும்), கோடியுமல்ல-கோடியளவுமன்றி, பல-அக் கோடியிலும் பலவாகிய கினைவுகளே, கருதுப-கினையாகிற்பர், (எ - று).

ஒருபொழுதும் என்ற இழிவுசிறப்பு உம்மையால் இங்குப் பொழுதென் பது கணப்பொழுதளவை யுணர்த்திகின்றது. நிமித்தகாரணமாகிய பிரா ரத்த வினையினளவே உடம்பும் உயிருங்கூடி வாழ்வதற்கும் அளவாகலால், அவ் வளவு அறியப்படாததாயிற்று. பலவாகிய கினைவுகளாவன: இந்திரியங்க ளால் அனுபவிக்கப்படும் இன்பங்கள் தமக்குரியவை யாகும்விதமும், அதற் குப் பொருள் துணைக்காரணமாகும் விதமும், அப்பொருள் தம்முயற்சிக ளால் வரும் விதமும், அம்முயற்சிகளைத் தாம் செயயும் விதமும், அம் முயற்சிகளுக்கு வரு மிடையூறுகளும், அவ் விடையூறுகளை நீக்கும் வித மும், நீக்கி அப்பொருளைச் சேர்க்கும் விதமும், அப் பொருளைப் பிறர் கொண்டுபோகாமற் காப்பாற்றும் விதமும், அப்பொருளால் கிகழ்கிதரை ஆக்கும் விதமும், பகைவரை அழிக்கும் விதமும். தாம் அவ்வின்பங்களை

டியார் மெய்ம்மையில் ''வகலிலா வையத்து மன்னிய மூன்றில் (அறம் பொருளின்பங்களில்), நடுவண(பொருளான) தெய்த வீருதலையு (அறமும் இன்பமு) மெயதும்'' என்று கூறுவதாலுமறிக.

முதற்கருவிக் (முதற்காரணதிற்) குச் துணையாய் அது காரியப்படு மனவுமிருப்பது துணைக்காரண (கருவி) மெனப்படும். இங்கு இன்பதைத யனுபவிப்போனது மனத்திலுள்ள நல்வினையின் அதிர்ஷ்டம் இன்பதிற கு நிமித்தகாரணமாம்; அம்மனத்தி னின்றும் அவ்வின்ப முண்டாவதற்குப் பொருள் துணைக்காரணமாம், மனம் முதற்காரணமாம்.

† ''இன்னல் கரும்பொருளே ஈட்டலுந் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—யன்ன, தழிதலுந் துன்பமே யத்தோ பிறர்பா லிழத்தலுந் துன்பமே யாம்'' என்பது நீதிவெண்பா.

¶ கருதுப என்பதனைப் பகாவீற்றுப் பலர்பால் வினைமுற்றாகக் கொள் ளாது அகாவீற்று அஃறிணைப் பன்மைப் பெயராக்கி (கினைக்கும் விஷயங் கள் என்று) சொல்லுவாரு முண்டென்பது. இங்குக் கருதுப என்பது வினையாலணையும் பெயர். இதற்குப் பயனிலை பல (எண்ணிறந் தனவாம்) என்பது.

யனுபவிக்கும் விதமும் முதலாயினவாம். அறிவில்லாதவரது இயல்பின் மேல் வைத்து நிலையாமைசொல்லியபடியாம். இதனால் அவ்வுடம்புள்ள் ஒரு கணமாயினும் நிற்குமென்பது நம்பப்படாமை சொல்லப்பட்டது.

(க-து.) ஒரு பொழுதளவும் தாம் வாழ்வதை யறியாதவர் கோடிக்கு மேலான வெண்ணங்களே யெண்ணுகின்றனர்.

7. Innumerable are the thoughts which occupy the mind of the unwise, who know not that they shall live another moment.

அ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

பரி.—(இ - ள்) முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனு ளிருந்த புள்ளுரீ பருவம் வந்துழிப்பறந்துபோய தன்மைத்து,உடம்பிற் கும் உயிர்க்கு முளதாய நடபு, (எ-று).

'தனித்தொழிய' என்றதனால், முன் தனியாமை பெற்றும். ‡ *அஃதாவது கருவுந்தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறுந்தோணியும் அதற்கு* $ *ஆதாரமாய் நிற்றல். அதனால் அஃது உடம்பிற் குவமையாயிற்று; அத னுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க் குவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளே கூறினார்; ¶ பதந்துபோதற் றொழிலான் உயிரோ டொப்புமை யெய்து வது அதனிலேயாகலின். 0 நட்பென்றது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட் பின்றிப்போத லுணர்த்தின்றது. சேதனமாய அருவாய் நித்தமாய உயி ரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண் மாறுக*

‡ *அஃதாவது - தனியாமை (பிரியாமை) யாவது.*

$ *யாதாவதொன்று தன்னிடத்திருக்குமா றிடங் கொடுப்பது ஆதார மெனப்படும். கருவுந்தானும் (முட்டையும்) ஒன்றாய்ப் பிறந்தும், அக்கரு வுருப்பட்டு வேறுருமளவும் அக்கருவுக்கு முட்டை ஆதாரமா யிருக்கின்ற தென்க.*

¶ *ஜீவன் பறக்கின்றது; துடிக்கின்றது என்னு முலகவழக்கமு மிங் குணரத்தக்கதாம்.*

0 *உயிருக்கும் உடலுக்கும் நட்பில்லா திருத்தலே நட்பு என்று கூறி யது அரக்கரைப் புண்ணியசனம் என்பது போன்ற எதிர்மறை யிலக்கணை யாம்.குறிப்பு மொழியாவது கூறவேண்டியபொருளே வெளிப்படையாகக் கூறுது ஆராய்ச்சியால் வினங்கும்படி சொல்லுதலாம். இதன் தன்மையை "ஒன்றுழி பொதச்சொல்" என்னும் நன்னூற் சூத்திரத்தின் விருத்தி யுரையில் விரிவாய்க் காணலாம்.*

லின், வினைவயத்தாற் கூடியதல்லது நட்பிலவென்ப தறிக. † இனிக் குடம்பை யென்பதற்குக் கூடென்று உரைப்பாருமுளர். அது புள்ளுடன் தோன்றுமையானும், அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை யறிக.

தெளி:—(இ-ள்.) உடம்பொடு-உடம்பிற்கும், உயிரிடை - உயிர்க்கும், (உண்டாகிய), நட்பு-சிநேகமானது, குடம்பை -(முன்னே தனியாகிருந்த) முட்டையானது, தனித்தொழிய-தனித்துக்கிடக்க, புள்-(அதனுள்ளிருந்த) பறவை, பறந்தற்று-(பருவம்வந்தவிடத்து) பறந்துபோனதன்மையதாம், (எ-று).

'குடம்பைதனித்தொழிய' என்றதனால் முன்னர்த் தனியாமை (பிரிந்திராமை) பெற்றும். அஃதாவது கருவுந்தானும் (முட்டையும்) ஒன்றுபோற் பிறந்து அக்கரு வேறுருவமாவும் அதற்கு ஆதாரமாக நிற்றலாம். அதனால் அம்முட்டை உடம்பிற்கு உவமானமாயிற்று; அம்முட்டையினிடத்து வேற்றுமையில்லாது நின்றே பின்பு நுழையாமற் போவதினால், புள் (பறவை) உயிருக்கு உவமானமாயிற்று. முட்டையினிடத்துப் பிறப்பனவாகிய பாம்புமுதலிய பிறவும் இருப்பினும், பறந்துபோதலாகிய தொழிலால் உயிரோடொப்புமையாயிருப்பது புள்ளேயாதலால் அப்புள்ளையே உவமானமாகக்கூறினர். நட்பென்றது இங்குக் கற்கறித்து நன்கட்டாய் என்பதுபோலக்குறிப்புச்சொல்லாய் (உயிருடம்பினிடத்தி) நட்பில்லாத போதலே யறிவித்து நின்றது. அறிவாயும் அருவாயும் நித்தமாயுமுள்ள உயிரும், அசேதன(ஜட)மாயும் உருவாயும் அநித்தமாயுமுள்ள உடம்பும் தம்முள்ளே மாறுபட்டிருத்தலால், அவை வினைவசத்தால் கூடியதல்லாமல், அவற்றிற்கு நட்பில்லையென்பதறிக. இதனால் அவ்வுடம்புகள் உயிர்நீங்கியவிடத்துக் கிடக்குமாறு சொல்லப்பட்டது.

† இனிக் குடம்பை யென்பதற்குக் கூடு என்றுபொருள் கூறுவாருமுண்டு. அக்கூடு பறவையுடன் தோன்றி நிருத்தலாலும், அக்கூட்டில் அப்பறவை மறுபடியும் வந்து நுழைவ தண்டாகையாலும், உடலுக்குக் கூடு உவமான மாகாதென்க. அஃதாவது ஓர் உடம்பினின்றும் நீங்கிய உயிர்மறுபடியும் (வேறு உடம்பிற் புகுவதன்றி) அவ்வுடம்பில் புகுவதில்லாமையால், குடம்பை யென்பதற்குக் கூடு என்று பொருள் கூறுதல் பொருந்தாதென்று மறுக்கப்பட்டது. ''கறந்தபான் மூலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா, துடைத்த சங்கு ஞெரைபடு முயிர்களு மூடற்புகா'' என்றிவ்வாக்கியர்கூறுவதிங் குய்த்திணைத்தக்கதாம். காலடியார் யாக்கை நிலையாமையில் ''கோளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி, வாளாதே போவரான் மாந்தர்கள் - வாளாதே, சேக்கை (கூடு) மர ஞெழியச் சேணீங்கு புட்போல, யாக்கை தமர்க்கொழிய நீத்து'' என்றுள்ள செய்யுள் குடம்பைக்குக் கூடு என்று பொருள்கூறுவதற்குச் சாதனமாய் நின்றதென்க.

(க-து.) உயிர்க்கும் உடம்பிற்கும் சிறிதுஞ் சிநேகமில்லை.

8. The love of the soul to the body is like the love of a bird to its egg which it flies away from and leaves empty.

கூ. † உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

பரி:—(இ-ள்) ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோ டொக்கும்; அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோ டொக்கும், (எ-று)

உறங்குதலும் விழிதலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருகின்றற்போல சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடனகூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) சாக்காடு-(ஒருவனுக்கு) மரணம், (வருதல்), உறங்குவதுபோலும்-தூக்கம (வருதல்) போலும், பிறப்பு - (அம்மரணத்தின் பின்னே) பிறப்பு, (வருதல்), உறங்கிவிழிப்பதுபோலும் - தூங்கிவிழித்தல் (வருதல்) போலும், (எ-று).

உயிர்களுக்கு உறங்குதலும் விழித்தலும் இயல்பாய் விரைவாக மாறி மாறி வருதல்போல இறத்தலும் பிறத்தலும் இயல்பாய விரைவாக மாறி மாறி வருமென்பது கருத்து இறத்தலாகிய நிலையாமையே நிலைபெற்ற விதத்தை அறிவித்தற்குப் பிறப்பும் உடன் சொல்லப்பட்டது. இதனுல் அவ்வுடம்புகளுக்கு இறப்பும் பிறப்பும் மாறி மாறி வருமாறு சொல்லப்பட்டது. உறக்கம்—சுழுத்தி.

(க-து.) சாதலும் பிறத்தலும் உறங்குவதும் விழிப்பதும் போன்றனவாம் என்பது.

9. Death is like sleep; birth is like awaking from it.

கo. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

† "பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும், உறங்கலும் விழித்தலும் போன்ற தண்மையின்" என்பது மணிமேகலை.

பரி:—(இ-ள்.) வாதமுதலியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக் கிநந்தே போந்த உயிர்க்கு எத்நான்றும் இருப்பதோரில் இதுகாறும் அமைந்ததில்லேபோலும், (எ-று).

† அக்நோய்கள் இருக்க அமைந்த ஞான்று இருந்தம், வெகுண்ட ஞான்றபோயும், ஒருடம்பினும் நிலேபெறுது வருதலால் 'தச்சிலிருந்த' என்றார். பின் புறப்படாது புக்கேவிடுமில் அமைந்ததாயின், ‡ பிறரிற்க ளுன் ஒதக்கிராதென்பதாம்; ஆகவே, $ உயிரோடு கூடிகிற்பதோருடம்பும் இல்லேயென்பது பெறப்பட்டது. இவை யேழு பாட்டானும், முறையே ¶ யாக்கைகட்கு வரைந்த நாள் கழிகின்றவாறும், கழிந்தால் 0 உனதாம்நிலே

"இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே,இடும்பொய்யை மெய் யென் றிராதே", "எல்லாப் படியாலு மெண்ணிலு லிவ்வுடம்பு,பொல்லாப் புழுமலிகோய்ப் புண்குரம்பை" என்பது நல்வழி.

† வாத பித்த நிலேத்திம மென்னும் நோய்கள்(உயிராகிய தான் உட லில் தங்கி) இருக்க மேம்படாது அடங்கியிருக்கும் காலத்தில் (உடலில் தங்கி) இருந்தம், (அக்நோய்கள்) வெகுண்டளுன்று(கோபித்த காலத்தில் அஃதாவது மேம்பட்டு வருத்தியகாலத்தில்) (அவ்வுடலே விட்டுப்) போயும் ஒருடம்பிலும் நிலேத்திருத்தலே யடையாது உயிர் சுழன்றுகொண்டிருக்கு மென்றறிக.

‡ பிறரென்றது வாதமுதலிய நோய்களே.

$ புறகானுறு "இருங்கடலுடுத்த"என்னுஞ் செய்யுளில்"உடம்பொடு நின்ற வுயிரு மில்லே" என்று கூறுகின்றது.

¶ (1) 'காளென வொன்று போற்காட்டி' என்னுங் குறளால் உடல் களுக்கு வற்பத்திய நான்கழிகின்றவகையும், (2) "காச்செற்று' என்னுங் குறளால் அந்நான் கழிந்தால் உண்டாகும் நிலேமையும், (3) 'கெருவுள ளெருவன்' என்னுங் குறளால் அவ்வுடல்கள் ஒவ்வோரிடத்துப் பிறந்த போதேசாதலும், (4) 'ஒருபொழுதும்' என்னுங் குறளால் அவ்வுடல்கள் ஒருகணப்போதாவது நிலேத்திருக்குமென்பது தெளிந்தறியப்படாமையும், (5) 'குடம்பை தனித்தொழிய' என்னுங் குறளால் உயிர்நீங்கியவிடத்து உடல்கள் கிடக்கும்வகையும், (6) 'உறங்குவது போலும்' என்னுங் குற னால் உடல்களுக்கு இறத்தலும் பிறத்தலும் மாறிமாறி வரும் வகையும்,, (7) 'புக்கில மைந்தின்று' என்னுமிக்குறளால் மாறிமாறிப் பிறந்திறக்கும் உடல்கள் உயிருக்கு உரியனவல்ல வென்பதும் என்று இவ்வகையால் உடம்பு நிலேத்திராமையைப்பற்றிக் கூறியவகையைக் கண்டுகொள்க என்ப தாம். "மூப்பு,தக்கம், நோய் என்னுமிவை வளிப்பதாயும், பசி,தாகம்,குளிர், காளென்னு மிவற்றுல் பயத்தை யுண்டு பண்ணுவதாயும், பெரும்பான் மையும் இரஜோகுண முள்ளதாயும்,பஞ்சபூதங்களுக் கிருப்பிடமாயும்,நிலே யற்றதாயுமிருக்கிற இந்தச்சரீரமாகியவீட்டை இவனுத்மா மறபடியு மடை யாவாறு செய்யவேண்டும்" என்று மனுதருமசாஸ்திரம் ஆறுவதத்தியாயத் தில் கூறுவதுமிங்குக் கலனிக்கத்தக்கதாம்.

0 'உனதாயநிலேயாமையும்' என்றும் பாடமுண்டு.


மையும், அவை ஒரோவழிப் பிறந்த வளவிலே இறத்தலும், ஒருகணமாயி ணும் நிற்கு மென்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்கு மாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறி மாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய அன்மையுமென்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறிய வாறு கண்டுகொள்க.

தெளி:—(இ-ள்.) உடம்பினுள் - (வாதமுதலாகிய நோய்களின் வீடுக ளாகிய) உடம்புகளுள், திரிலிருந்த-ஒதுக்குக்குடியிருந்தே வந்த, உயிர் க்கு-உயிருக்கு, புக்கில்-என்றைக்கும் இருப்பதாகிய ஒரு வீடான தது,அமை ந்தின்மைகொல்-(இதுவரையில்) அமைந்ததில்லைபோலும், (எ-று).

உயிரானது அவ்வாதமுதலாகிய நோய்களடங்கியிருக்க அமைந்தகா லத்தில் உடம்பில் இருந்தும், அவை, கோபித்த காலதத்தில் அவ்வுடம்பை விட்டுப்போயும், ஒருடம்பிலும் நிலைபெறுமல் வருதலால் 'திரிலிருந்த' என்றார். பின்னே புறப்படாமல் புகுந்தேவிடுகிற வீடு அமைந்ததாயின், பிறர் வீடுசெளில் ஒதுக்குக்குடி இராதென்பதாம். ஆகலே, உயிரோடுகூடி நிற்பதாகியவோருடம்பும் இல்லையென்பது பெறப்பட்டது. இதனுல், அவ் வுடம்புகள் உயிருக்கு உரியவை அல்லவென்பது சொல்லப்பட்டது. 'நா ளென' என்பது முதலாகிய எழுகுறள்களாலும் யாக்கை நிலையாகம சொல்லப்பட்ட தென்றறிக. வீடு-உடம்பு.

(க-து.) உயிருக்கு நிலையாயிருப்பதோருடம்பு என்றுமில்லை.

10. It seems as if the soul, which takes a temporary shelter in a body, had not attained a home.



பதினேன்றுவது அதிகாரம்.

துறவு:—Renunciation.

பரி.—அஃதாவது † புறமாகிய செல்வத்தின்கண்ணும் ‡ அகமா கிய யாக்கையின் கண்ணும் உளதாய § பற்றினை, ¶ அவற்றது நிலேயா மை நோக்கி விடுதல். அதிகார முறைமையும் இதனுனேவிளங்கும்.

தெளி;—அஃதாவது புறமாகிய செல்வத்திலும் அகமாகிய உடம்பி லும் உண்டாகியபற்றை, அவற்றினது நிலையாமையைப் பார்த்து விடுத லாம். அதிகாரம் வைத்தமுறைமையும் இதனுலே விளங்கும்.

க. 0 யாதனின் யாதனி னீங்கியா னேதை
லதனி னதனி னிலன்.

† புறம்-வெளி. ‡ அகம்-உள். § பற்று-அபிமானம். அவற்றது-புறமாகியசெல்வம் அகமாகிய உடம்பு என்னும் இரண்டனது.

0 யாதியா தொருவ னீங்கியா னேக லதனினு லதனிலா லிலனென் றேதலா லினத்தர் துயர்தருமெனுந் துயர்பரம் பொருளினைக் காட்டும்' நீதிலோர் குரவனெங்குள னெனவே தேமொல்" என்பதனைராத்தியநீபம்'

பரி:—(இ.ள்.) ஒருவன் யாதொருபொருளின்யாதொருபொருளின் நீங்கினான், அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்துதல் இலன், (எ-று).

அடுக்குகள் பன்மை குறித்து நின்றன. நீங்குதல்-துறத்தல். ஈண்டுத் துன்பமென்றது இம்மைக்கண் ‡ அவற்றைத்தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவும் ஆய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப்பொருளையும் ஒருங்கே விடுதல் தலைமை; அஃதன்றி ஒரோவொன்றைவிடினும் அவற்றான் வரும் துன்பம் இலனு மென்பது கருத்து.

தெளி:—(இ-ள்.) (ஒருவன்) யாதனின் யாதனின்-யாதொருபொருளினின்றும் யாதொருபொருளினின்றும், நீங்கியான்-நீங்கினான், (அவன்), அதனினதனின்-அப்பொருளினால் அப்பொருளினால், நோதல்-துன்பமடைதல், இலன்-உடையவனாகான், (எ-று)

யாதனின் யாதனின், அதனின் அதனின் என்னும் அடுக்குகள் பன்மை (மிகுதி)ப் பொருளில் வந்தன. நீங்குதல்-விட்டொழிதல் இங்குத் துன்பமென்றது இப்பிறப்பின்கண் அப்பொருள்களைத் தேடுதலாலும், காபபாற்றுதலாலும், இழந்துவிடுதலாலும் வருவனவும், மறுபிறப்பின் கண் பாவத்தால் வருவனவும் ஆகிய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப் பொருள்களையும் ஒருமிக்கவிடுதல் தலைமையான துறவாகும்; அப்படியல்லாமல் அப்பொருள்களை ஒவ்வொன்றாக விட்டாலும் விட்ட அப்பொருள்களால் வருந்துன்பம் அவனுக்கு இல்லையா மென்பது கருத்து.

(க-து). எவ்வெப்பொருள் ஒருவனால் விடப்படுகின்றதோ அவ்வப்பொருளால் அவன் துன்பத்தை யடைவதில்லை.

1. Whatever thing a man has renounced, by that thing he cannot suffer pain.

2. † வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

‡ "ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடுந்துன்பங்-காத்தல், குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக், குறைபதி மற்றைப் பொருள்" என்பது நாலடியார்.

† "வேண்டினுண் டாகத் துறக்கவென் றமையால் விருத்தனுய்க் கருத்தழிந்திருவும், காண்டல்செய் விழிபஞ் சடைந்துட னடுங்கு காலம் வந் தடைவதன் முன்னர்,மாண்டகற் பதனுற் சாலியைப் போலு மனேவியா னியசமா நியினுற், றீண்மோ கந்தம் பலவடைக் திதெற் கெண்ணிரீத் திடு வர்புண் ணியரே" என்பது வைராக்கிய தீபம்.

பரி:—(இ-ள்.) எல்லாப்பொருள்களையுந் துறத்தலால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல; அவ்வின்பங்களை வேண்டின், ‡ அவற்றைக் காலம் பெறத் துறக்க.

அவ்வின்பங்களாவன: அப்பொருள்கள் காரணமாக மனமொழிமெய்கள் அலையாதிற்றலானும், அவை நன்னெறிக்கட் சேறலானும் வருவன, ¶ இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்தமாகலின் ‘உண்டாகத் துறக்க’ என்றார். இன்பங்களென்பதும்காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கண் துன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்கள் உளவாதலும் உண்டென்பதாம்.

தெளி:—(இ-ள்). துறந்தபின் - (எல்லாப்பொருள்களையும்) துறத்தலால், (ஒருவனுக்கு), ஈண்டு-இப்பிறப்பிலே, இயற்பால-உண்டாகுமுறைமையையுடைய இன்பங்கள், பல-பலவாம், வேண்டின்-(அவ்வின்பங்களை) விரும்பினால், உண்டாக-(காலம்) உண்டாக, துறக்க - (அப்பொருள்களைத்) துறக்கக்கடவன், (எ-று).

அவ்வின்பங்களாவன: துறந்த அப்பொருள்கள் காரணமாக மனமும் வாக்கும் காயமும் அலையாது நிறறலாலும், அம்மனம் வாக்குக்காயங்கள் நல்வழியிற் செல்லுதலாலும் வருவன. இளமைப்பருவத்திற் றுறந்தவன் அவ்வின்பங்களை நெடுங்கால மடையாளுதலால் ‘உண்டாகத் துறக்க’ என்றார், இன்பங்களென்பதும் காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இப்பிறப்பின்கண் துன்பங்கள் இல்லாமற் போதலே யல்லாமல் இன்பங்கள் உண்டாதலும் உண்டென்பதாம்

(க-து.) இன்பங்களை விரும்பினவன் எல்லாப்பொருள்களையுந் துறக்கக்கடவன் என்பது.

2. After a man has renounced all things, there will still be many things in this world which he may enjoy if he should desire them; let him, while it is time, abandon the world.

க. † அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வேல்லா மொருங்கு.

‡ அவற்றைக் காலம் பெறத் துறக்க-எல்லாப்பொருளையும் (தேகத்தோடு கூடியிருக்கும்) காலம் (துறவறத்தில்நீடித்து) இருக்க விட்டுவிடக்கடவன்.

¶ “நரைவருமென் றெண்ணி நல்லறி வாளர், குழவி யிடத்தே துறந்தார்” என்பது நாலடியார்.

† “ஐம்புல னடல்வேண் டும்விடல் வேண்டும் மொருங்குவேண் டிய வனைத்தையுமென், றும்பரும் பரவு மொருதமிழ் வேத முரைத்தலா னேரிரு வகையா, நம்புறச் சார்பை வெறுத்தவா றுறத்தைம் புலனெழித் தொ

பரி:—(இ-ள்.) விடேம்துவார்த்தச் செவிமுதலிய ஐம்பொறிகட்கு முரியவாய ஓசைமுதலிய ஐம்புலன்களையுங் கெடுத்தல்வேண்டும்; கெடுக்துங்கால், ‡ அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும், (எ-று).

¶ புலமென்றது அவற்றை நுகர்தலே. 0 அது மனத்தைத் தன்பத்தானும் பாவத்தானும் அன்றி வாராத பொருள்கண்மேல் அல்லது வீட்டு நெறியாகியயோகஞானங்களிற் செலுத்தாமையின்,() அதனை 'அடல்வேண்டும்' என்றும், * அஃது அப்பொருள்கண் மேற்செல்லின், அந்நுகர்ச்சி விறருபெற்ற தழல்போல் முழுகுவதல்லது அடப்படாமையின் வேண்டிய வெல்லா மொருங்குவிடல்வேண்டும் என்றுங் கூறினர்.

தெளி:—(இ-ள்.) (முத்தியை யடைவோர்க்கு) ஐந்தன்-செவிமுதலா கிய ஐம்பொறிகளுக்கு (உரியவாய),புலத்தை-(ஓசைமுதலாகிய ஐம்) புலன் களையும் (அனுபவித்தலே), அடல்வேண்டும்-கெடுத்தல்வேண்டும், (கெடுக் கும்போது), வேண்டியவெல்லாம்-(ஓசைமுதலாகிய அப்புலன்களே யனு பவித்தற்பொருட்டுத்) தாம்படைத்த பொருள்களை யெல்லாம், ஒருங்கு-ஒரு மிக்க, விடல்வேண்டும் - விடுதல்வேண்டும், (எ-று).

'புலம்'என்றது சப்தமுதலிய விஷயங்களைச் செவிமுதலிய விந்திரி யங்கள் அனுபவித்தலே. அவ்வனுபவிப்பு மனத்தைத் தன்பத்தினாலும் பாவத்தினாலும் தேடப்பட்டுவருமை பொருள்களின்மேல் அல்லாமல் முத்திவழியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையால் அதனை 'அடல் வேண்டும்' என்றும், அம்மனம் அப்பொருள்மேல் சென்றால் அவ்வனுப வீப்பு விறகிட்ட நெருப்பைப்போல வளர்வதல்லது கெடுக்கப்படாமையால் வேண்டிய வெல்லா மொருங்குவிடல் வேண்டும் என்றும், சொல்லினர்.

மூன்றினு டருமச், செம்பொருள் காண்ப தறிவறி யாமை சிதைத்தல்வீ டெனத்திகழ் தருமால்" என்பது வைராக்கிய தீபம்.

‡ அவற்றை-சத்த பரிச ரூப ரச கந்த மென்னும் ஐம்புலன் (விஷ யங்)களை.

¶ புலமென்றது இங்கே அவற்றை (சப்தாதி விஷயங்களை) (செவி யாதி பிந்திரியங்கள்) அனுபவித்தலே யுணர்த்தி நின்றது.

0 அது (நுகர்தல்) மனத்தினைப் பிறரைத் தன்பப்படுத்துவதனாலும் பாவச்செய்கையாலு மல்லாமல் வாராத (வரும்) பொருள்களின்மே லல்லா மல் முத்திபெறற்கு வழியான யோகத்திலும் ஞானத்திலும் செலுத்தாமை யின் () அதனை (அந்நுகர்தலே) 'அடல்வேண்டும்' என்று கூறினர்; அன்றி வாராத என்னுமிரண் டெதிர்மறை வினைச்சொற்களும் வரும் என்னும் பொருளை யுணர்த்தி நின்றன.

எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும் என்பதுபோல ஒருவர் தமக்குள்ள பொருள்களனைத்தையுங் கொடுத்தால் அவர்க்கு விஷயா னுபவம் குறையுமென்பது பெறப்படுகின்ற தென்க.

(க-து.) முத்தியடைய விரும்புவோர் இந்திரிய நிக்கிரகஞ் செய்வதோடு எல்லாப்பொருள்களையும் பற்றறத்துறக்கவேண்டும்.

3. Let the five senses be destroyed; and at the same time, let every thing be abandoned that the ascetic has formerly desired.

ச. இயல்பாகு நோன்பிற்கோன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து

பரி:—(இ-ள்.) பற்றப்படுவ தொரு பொருளும் இல்லாமை தவஞ் செய்வார்க்கு இயல்பாம்; அஃதன்றி, ஒன்றுயினும் உடைமை அத்தவத் தைப் போக்குதலான், மீண்டும் மயங்குதற்கு ஏதுவாம், (எ-று).

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. † நோன்பென்பதூஉம் மயலென்பதூஉம் ஆகுபெயர். ‡ பெயர்த்தலான் என்பதனிறிந்து நின்றது; நோன்பைப் பெயர்த்தலா னென வேற்றுமைப் படுத்துக் கூட்டுக. ¶எல்லா ப்பொருள்களையும் விட்டு ஒரு பொருளே விடாத வழியும் அதுசார்பாக விட் டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற் கிடையூடாய் மனக்கலக்கஞ் செய்யு மென்பது கருத்து. இவை ஞானிகு பாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்.) நோன்பிற்கு-தவஞ்செய்வார்க்கு, ஒன்று-(பற்றப் படுவது) ஒருபொருளும், இன்மை-இல்லாதிருக்கை, இயல்பாகும்-இயல் பாம், உடைமை - (பற்றப்படுவதான ஒருபொருளு மில்லாதிருத்தலன்றி ஒன்றுயினும்) உடைத்தா யிருக்கை, பெயர்த்தல் - (அத்தவத்தைப்)போக்கு தலால், மற்றும் - மீண்டும், மயலாகும் - மயங்குதற்குக் காரணமாகும், எ - று.

† நோன்பு என்னும் பண்புப்பெயர் அதனையுடையவர்க்காதலால் பண்பாகுபெயராம்; மயலென்னும் காரியப்பெயர் அதற்குக் காரண மான பொருளுடைமைக் காதலால் காரியவாகு பெயராம்.

‡ பெயர்த்தலான் என்பதனே நோன்பிற்கு என்பதனோடுகூட்டவேண் டியிருத்தலால், 'நோன்பைப் பெயர்த்தலாலென வேற்றுமைப்படுத்துக்கூட் டுக' எனவுரை. இங்கு நோன் பென்பதனோடு இரண்டனுருபு புணர்த்தப் பட்டது. வேற்றுமைப் படுத்தல் - வேற்றுமை யுருபேற்றதாகச் செய்தல். நோன்பிற்கு என்பது பெயர்த்தலான் என்பதனோடு புணரும்போது குவ் வுருபுகெட்டு நோன்புஎன நின்ற தென்க.

¶ ''பரமஹம்சனு யுள்ள யதி இரண்டு கௌபீனங்களையும், ஒரு கந்தல் தணியையும், ஒரு தண்டத்தையும் ஸ்வீகரிக்கலாம்; இவற்றைவிட அதிகம் விதிக்கப்படவில்லை; ஆகையினால் இவற்றைவிட அதிகமாய்ச் சுவீ கரித்தால் ரௌரவநரகத்தையடைந்து பசு பட்சிமுதலிய யோனியில் பிறக் கிறான்'' என்று நாரதபரிவிராஜகோபநிஷத்தி மூன்றுவது உபதேசத் தில் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

ஒன்றும் என்னும் இழிவுசிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தோற்பவரை நோன்பென்றும் மயலுக்கு ஏதுவை மயலென்றுங் கூறினமையின், அவைஆகுபெயர்களாம். பெயர்த்தலான் என்பதுபெயர்த்து எனத்திரிந்து நின்றது; நோன்பைப் பெயர்த்தலால் என்ற வேற்றுமை விரித்துக் கூட்டிக்கொள்க. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒருபொருளை விடாத விடத்தும், அப்பொருள் சார்பாக விட்ட பொருள்க ளெல்லாம் திரும்பி வந்து தவத்திற்கு வீரோதமாய் மனக்கலக்கம் செய்யு மென்பது கருத்து. இவை நான்கு பாட்டாலும் என தென்னும் புறப்பற்று விடுதல் சொல்லப்பட்டது.

(க - து.) தவஞ் செய்வார்க்கு யாதொருபற்றுங் கூடாது.

4. To be altogether destitute is the proper condition of those who perform austerities; if they possess anything, it will change their resolution and bring them back to their confused state.

ரு. * மற்றுந் தொடர்ப்பா டெவன்கோல் பிறப்பறுக்க
ஞற்றுர்க் குடம்பு மிகை.

பரி.—(இ - ள்.) பிறப்பறுத்தலே மேற் கொண்டார்க்கு † அதற்குக் ‡ கருவியாகிய உடம்பும் மிகையாம்; ஆனபின், அதற்கு மேலே இயைபில்லனவுஞ் சில தொடர்ப்பா டெவாதல் என்னும், எ - று.

உடம்பென்ற பொதுமையான், ¶ உருவுடம்பும், அருவுடம்புங் கொள்ளப்படும். அவற்றுள், அருவுடம் பாவது § பத்துவகை இந்திரிய வுணர்

நாரதபரிவிராஜகோபநிஷத்து சுவேதபதேசத்தில் "சத்தியவாக்குள்ளவனுயும், ஞானவைராக்கியங்களோடு கூடினவனுயும், தேகமாத்திர மிச்ச மாயுள்ளவனுயும் (சந்நியாசி) வசிக்கவேண்டும்" என்று கூறுவதும், மனுதரு மசாஸ்திரம் ஆறுவதத்தியாயத்தில் "வேலைக்காரன் தனக்கு யஜமானன் சம்பளம் கொடுக்கும் நாளை யெதிர்பார்ப்பதுபோலத் தன்தேகநாச காலதசை (சந்நியாசி) யெதிர்பார்த்திருக்கவேண்டும்" என்றுகூறுவது மிங்குக் கவனிக்கத்தக்கனவாம்.

† அதற்கு-பிறப்பறுத்தலுக்கு.

‡ உடம்பில்லாத மாயையில் லயப்பட்டிருக்கும் பிரளய காலத்தில் சீவர்கள் பிறப்பையொழித்துக் கொள்ளுதல்முடியாமையால், அவர்களுக்கு உடம்பு பிறப்பை யொழித்தற்குக் கருவியா (காரணமா) யிற்றென்க "உயிர்க்குறுதி யெல்லா மூடம்பின் பயனே, அயிர்ப்பின்றி யாதியை நாடு" என்று ஔவை குறள் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

¶ உருவுடம்பு - ஸ்தூலசரீரம். அருவுடம்பு-சூக்குமசரீரம்.

§ பத்து வகை இந்திரிய வுணர்வு-மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐவகை ஞானேந்திரியங்களாலும், வாக்குப் பாதம் பாணி பாயுரு

வோடும் ஐவகை வாயுக்களோடும் † காம வினை விளைவுகளோடுங் கூடிய மனம்; இது ‡ தண்ணுடம் பெனவும் படும். இதன்கட்பற்று நிலையாமை உணர்ந்ததினையான் விடாமையின், விடுதற் குபாயம் ¶ முன்னர்க்கூறுப. இவ்வுடம்புதனால் துன்பம் இடையுறுது வருதலை யுணர்ந்து, இவற்றுள் ஆய $ கட்டினை () இறைப்பொழுதும் பொருதுவீட்டின்கண்ணேவிரைத

உபத்த மென்னும் ஐவகைக் கருமேந்திரியங்களாலும் உண்டாகும் ஞானம்.

ஐவகைவாயு—பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்னும் ஐந்திவகை வாயுக்கள். தருக்கசங்கிரகம் "சரீரத்தினகத்துச் சஞ்சரிக்கும் வாயுப் பிராண னெனப்படும்; அஃதொன்றுயினும் உபாதி வேறு பாட்டால், பிராணன் அபானன் முதலிய பெயர்பெறும்" என்று கூறுகின்றது.

† காமவினை விளைவு-பொருள்களை விரும்புவதாகிய ஆசையு (காம மு)ம், கல்வினை தீவினைகளின் சம்ஸ்காரவாயிலாக வரும் சுகதுக்கங்களு மாம். விசாரசாகரம் புத்தியின் தன்மையைச் சொல்லுமிடத்து "காமகரு மங்களுடன் கூடியபுத்தி" என்று கூறியிருத்தலு மிங்கறியத் தக்கதாம்.

‡ சரீர கோபகிஷத்து "ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள்(பத்து) பிராணன் ஐந்து, மனம் புத்தி இத்தப்பதினேழுடன் கூடினது சூட்சும தேகம் அல்லது லிங்கதேகம் என்று சொல்லப்படுகின்றது" என்று கூறுகின்றது. நுண்ணுடம் பெனினும் சூக்குமவுடம்பெனினும் ஒக்கும்.

"சூக்கும சரீரமே அவித்தை, காமம், கர்மமென்னு மிம்மூன்றுடன் கூடிப் புரியஷ்டக மென்று கூறப்படுகின்றது. அஷ்டபுரியின் கூட்டத் திற்குப் புரியஷ்டகமென்று பெயராம். அவ்வஷ்டபுரியாவன :-(1) ஞாநேந் திரிய பஞ்சகம், (2) கர்மேந்திரிய பஞ்சகம், (3)அந்தக்காரண சதுஷ்டயம், (4) பிராண பஞ்சகம், (5) பூதபஞ்சகம், (6) அவித்தை, (7) காமம், (8) கர்மம் என்பனவாம். * * * * இஃதெனக்குக் கிடைக்க வேண்டுமென்னு மந்தக் காரணத்தின் விர்த்தி விசேஷம் ராகமாம். அது வே காமமெனப்படும். கர்மமோ சஞ்சிதம், ஆகாமியம், பிராரப்தமென மூவகைத்தாம்" என்று தத்வாநுசந்தானங் கூறுகின்றது.

¶ முன்னர்க்கூறுப என்றது இவ்வதிகாரத்தின் பத்தாவதாகிய "பற் றுக பற்றற்றான்' என்னுங் குறளை; இக்குறளின் விசேடவுரையில் "அப் பற்றுவிடுதற்கு உபாயம் இதனுள் கூறப்பட்டது" என்று கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

$ கட்டாவது முத்திநெறியிற் புகவொட்டாது தடுத்து மனவிமுத லியவரிடத்து நேசமிகச்செய்து அது காரணமாகப் பராதீனமாக்குதல்.

() பிறப்பறுத்தலை மேற்கொண்டார் உடம்பினுலாயகட்டினை இறைப் பொழுதும்பொருது வீட்டின்கண்ணே விரைதலின் என்பது "இவனதி

லின் 'உடம்புமிகை' என்றார். இன்பதுன்பங்களான் உயிரோடு * ஒற்றுமை யெய்துதலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும். இதனுன் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) பிறப்பறுக்கலுற்றார்க்கு - பிறவியை நீக்குமுயற் சியை மேற்கொண்டவருக்கு, உடம்பும்-(அப்பிறப்பை நீக்குதற்கு உதவி யாகிய) உடம்பும், மிகை-அதிகமாம், (ஆனபின்), மற்றும்-அதற்குமேலே, தொடர்ப்பாடு-(சம்பந்தமில்லாத பொருள்களும் சில) சம்பந்த முடையன வாதல், எவன்-என்னுகும், (எ-று)

கொல்-அசை. பொதுப்பட உடம்புஎன்றதால் உருவுடம்பும், அருவு டம்பும் கொள்ளப்படும். அவ்விருவகை யுடம்புகளுள், அருவுடம்பாவது பத்திலகை இந்திரிய வுணர்வுகளோடும் ஐவகை வாயுக்களோடும் காம கர்ம வினைவுகளோடும் கூடியமனம்; இது சூட்சுமசரீர மெனவும்படும். இவ்வுடம்பினிடத்தில் அபிமானம் நீலியாமையையறிந்த மாத்திரத்தால் விடாமையினுல், விடுவதற்கு உபாயம் மேலே கூறுவார். உருவுடம்பு அருவுடம்பென்னு மிவ்விருவகை யுடம்புகளால் துன்பம் இடைவிடாமல் வருதலையறிந்து, இவ்வுடம்புகளா லாகிய பந்தத்தினைக் கணப்பொழுதும் பொறுக்காமல் முத்தியினிடத்து விரைந்து செல்வதனுல் 'உடம்புமிகை' என்றார். (யான்கெடி, யான்துக்கிஎன்று) இன்பதுன்பங்களே யனுபவித்தலி னுல், உயிரோடு ஒற்றுமை யடைந்திருத்தலால் இவ்விருவகை யுடம்பு களும் யானென்று சொல்லப்படும். இதனுல் யானென்னும் அகப்பற்று விடுதல் சொல்லப்பட்டது.

(க-து.) பிறப்பை யொழிக்க முயல்வார்க்குடம்பும் பாரமாம்.

5. What means the addition of other things to those who are attempting to cut off future births, when even their body is too much for them.

காரி யாஞை னிருதிரி யகை னாலும், புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலும், தவஞமூன் றடைத்து வெய்யிற் சமித்திடாப் புழுப் போல் வெம்பிப், பவமறு ஞான நீர்த்தம் படிந்திடப் பதறி ஞனே'' என்று கைவல்லிய நவநீதங் கூறுவதால் நன்கு விளங்கும்.

இன்பதுன்பங்களே யனுபவித்தலினுல், உயிரோடு உடம்புஒற்றுமை யடைந்திருத்தலாம். அஃதாவது இன்பதுன்பங்களே யனுபவிப்பது இன் னதுதானென்று அறியாமலிருத்தலாம். உயிர்க்கு உடம்பு வேறுபட்ட தென்பது யோகஞானங்களாலன்றி வேறுவகையால் பிரத்தியட்சமாகக் காண்டல் முடியாமையின், யோகஞானமில்லாதவர்களுக்கு உயிரும்உடம்பும் ஒற்றுமை யுடையனவாகவே விளங்குமென்க. ''ஒற்றுமை யத்தி னென் றெனத் தோன்றினும், வேற்றுமை யத்தின் வேறே யுடலுயிர்'' என்பது நன்னூல்.

யானெனை தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

பரி:—(இ-ள்.) தானல்லாத உடம்பை யானென்றும் தன்னுடையை பில்லாத பொருளை எனதென்றுங்கருதி, † அவற்றின்கட் பற்றுச்செய் தற் கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான் வானோர்க்கும் எய்தற் கரிய வீட்டுலகத்தை யெய்தும், (எ-று).

மயக்கம்-அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற் பெற்ற ‡ உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யானெனது அன்மை தெளிந்து, ¶ அவற்றின்கட் பற்றைவிடுதல். இறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. இதனுள் இவ்விருவகைப்பற்றினையும் விட்டார்க்கே வீடெளி தென்பது கூறப்பட்டது.

தேவி:—(இ-ள்.) யானெனதென்னும் (தானல்லாத உடம்பை) யானென்றும் (தன்னுடை சம்பந்தமில்லாத பொருளை)எனதென்றும் நினைத்து,(அவறறினிடதது)பற்றுசெய்வதற்குக்காரணமாகிய,செருக்கு-மயக்கத்தை, அறப்பான்-கெடுப்பவனை, வானோர்க்கு-தேவர்க்கும்,உயர்ந்த-அடைதற்கரிதாகிய, உலகம்-முத்தியுலகத்தை, புகுமடைவான், (எ-று).

மயக்கம-அஞ்ஞானம். அவ்வஞ்ஞானத்தைக் கெடுதலாவது ஞானாசாரிய ரிடத்துப் பெற்ற உபதேசங்களாலும் யோகாப்பியாசத்தாலும் (யானெனதென்னும்) அப்பொருள்கள் யான என்பதும் எனது என்பதும் அல்லவென்று தெளிந்து, அவற்றினிடதுப் பற்றைவிடுதல். வானோர்க்கு மென்னுமுயர்வு சிறப்பும்மை செய்யுள் விகாரதத்தால்தொக்கு நின்றது. இதனால் யானெனதென்னும் இருவகைப்பற்றையும் விட்டவர்க்கே மோட்சமுண்டென்பது சொல்லப்பட்டது. பற்று-அபிமானம்.

(க-து). யானென தென்னுமபிமானத்தினை யொழித்தவனை முத்தியடைவான் என்பது.

6. He who destroys the pride which says "I," "mine," will enter a world which is difficult even to the Gods to attain

எ. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

* திருவாய்மொழி "நீர்நும தென்றிவை, வேர்முதன் மாயதனிறை, சேர்மி னுயிர்க்கதன், சேர்திறை யில்லே"என்றும்,பிரபுலிங்கலீலை "யானெனதெனுப திருந்திடு காறு, ஞானமுருன்" என்றும் கூறுகின்றன.

† அவற்றின்கண்-யானெனதென்பதனிடத்து.

‡ உறுதிமொழி-உறுதி (நன்மை)யைத் தாத்தக்கவார்த்தை.

¶ அவற்றின்கண் - யானென தென்பதன்கண்

பரி:—(இ-ள்.) இருவகைப்பற்றினையும் இறுகப் பற்றி விடாதாரைப் பிறவித் துன்பங்கள் இறுகப்பற்றி விடா, (எ-று).

இறுகப்பற்றுதல் - காதல்கூர்தல். † *விடாதவர்க் கென்பது வேற்றுமை மயக்கம். இதனால் இவை விடாதார்க்கு வீடில்லையென்பது கூறப் பட்டது.*

தெளி:—(இ-ன்.) *பற்றினை-(யாவனெனதென்னும் இருவகைப்) பற்றுக்களையும், பற்றி-இறுகப்பற்றி, விடாதவர்க்கு - விடாதவரை, இடும்பைகள்-பிறவித்துன்பங்கள், பற்றி-இறுகப்பற்றி, விடா-விட்டு நீங்காவாம்.*

இறுகப்பற்றுதல்-(யாவனெனதென்பவற்றில்) ஆசைமிகுதல். விடாதவர்க்கென்பது விடாதவரை யென்னும் பொருளில் வந்தமையின் வேற்றுமைமயக்கமாம். இதனால் இருவகைப் பற்றுக்களையும் விடாதவர்க்கு மோட்சம் இல்லையென்பது சொல்லப்பட்டது.

(கு-து.) *யாவனெனதென்னும் இருவகைப்பற்றுக்களையும் விடாதவர்க்குப் பிறவித்துன்பங்கள் நீங்கா என்பது.*

7. Sorrows will never let go their hold of those who give not up their hold of desire

அ. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

பரி:—(இ-ள்.) முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார், அங்ஙனந் துறவாதார் மயங்கிப் ‡ பிறப்பாகிய வலையுட்பட்டார், (எ-று).

முற்றத்துறத்தலாவது பொருள்களையும், இருவகை யுடம்புகளையும் உவர்த்துப் §பற்றறவிடுதல். அங்ஙனந் துறவாமையாவது அவற்றுள் யாதானுமொன்றன்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். தணிவுபற்றித் ¶ 'தலைப்

† *விடாதவர்க்கு என்பதன் நான்காவதுருபு தனக்குரிய பொருளை விட்டு (விடாதவரையென) இரண்டாவதுருபின் பொருளில் வந்தமையால் வேற்றுமை மயக்கமாயிற்று.*

‡ *உயிரை வேறு (முத்தி) மார்க்கத்தில் செல்லாவண்ணம் பற்றிப்பது பற்றிப் பிறப்பு என்று கூறுதலால் 'பிறப்பாகிய வலை' என்று கூறப்பட்டது.*

* இருவகை உடம்பு-உருவுடம்பு, அருவுடம்பு.

§ *பற்றறவிடுதல்-அபிமானமொழிய நீங்குதல்; பொருளைத்துறத்தல்-பொருளின்கண் அபிமான மின்மை;உடம்பைத் துறத்தல்-உடம்பின்கணபிமான மின்மை.*

¶ *(நீரத்துறந்தார்) தலைப்படுவார்என்று எதிர் காலத்தாற்கூறுதலைப் பட்டாரென்று இறந்தகாலத்தாற் கூறியது தணிவு (தெளிவு) பற்றிவந்த காலவழுவமைதி.*

பட்டார்' என்றும், § பொய்ந்நெறிகண்டே பிறப்புகளையு ளகப்படுதலின் 'மயங்கி' என்றுங் கூறினர்.

தெளி:—(இ-ன்.) நீரத்துறந்தார்-முழுதுந்துறந்தவர், தலைப்பட்டார்-(முத்தியை) அடைந்தவராவர், மற்றையவர்-அப்படித்துறவாதவர், மயங்கி-மருண்டு, வலைப்பட்டார்-(பிறப்பாகிய) வலையிலகப்பட்டவராவர், (எ-று).

முழுதுந்துறத்தலாவது பொருள்களையும், இருவகை யுடம்புகளையும் வெறுத்துப்பற்றறவிடுதல். அப்படி துறவாமையாவது அப்பொருள் முதலியவற்றில் யாதாவது ஒன்றனிடத்துச் சிறிதாயினும் பற்றுச்செய்தல். தணிவுபற்றித் 'தலைப்பட்டார்' என்றும், பொய்வழிகண்டே பிறப்பாகிய வலையிலகப்படுதலால் "மயங்கி" என்றும் சொல்லினர்.

(க-து.) யாதெனதென்னும் இருவகைப் பற்றையும் பற்றறத் துறந்தவர்க் கல்லாமல் மற்றவர்க்கு வீடுண்டாகா தென்பது.

8. Those who have entirely renounced all things and all desire have obtained absorption into God; all others wander in confusion entangled in the net of many births

கூ. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

பரி:—(இ-ள்.) ஒருவன் இருவகைப்பற்றும் அற்றபொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பையறுக்கும்; அவையறுதபொழுது அவற்றுப் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும், (எ-று).

காரணமற்ற பொழுதே காரியமும் அற்றதா முறைமை பற்றி

§ பொய்ந்நெறிகண்டிருந்தும் என்றும் பாடமுண்டு.

பொய்ந்நெறி காண்டலாவது அறிவுநூல் கூறும் வழியிற்செல்லாது உலகநூல் கூறும் வழியிற்செல்லுதல். அஃதாவது பிறவிக்குக் காரணமாயுள்ள பொய்ந்நெறி (வழி) யை மோட்சமடைதற்குக் காரணமான மெய்ந்நெறியென்றுகண்டுகொடத்தலாம்.(பொய்ந்நெறி-தப்புவழி).தப்புவழியிற்சென்றோர் தாங்கருதிய வீடத்தினிற்குப் போகமுடியாமைபோல, உலகநூலை அறிவுநூலென்று நம்பி அதிற் கூறியபடி யொருவர் தாமடைய வெண்ணிய வீட்டை யடையாரென்பது இரண்டாங் கருத்தாம்.

காரணமாகிய மண்ணும் நெருப்பும் ஒழிந்தபோதே அவற்றின் காரியமாகிய கடமும் புகையும் ஒழிதல்போன்று, காரணமாகிய யானென தென்னும் இருவகைப்பற்று மொழிந்தபோதே அவற்றின் காரியமாகிய பிறப்புமொழிந்து போமென்பதாம். இதனால் காரணமற்றபோது காரியமும் தென்பது பெறப்பட்டது. இங்குக் காரணமென்றது முதற் காரணத்தை. எது காரியத்தின் சொரூபத்தில் பிரவேசிக்கின்றதோ, எது இல்லாமல் காரியஞ் சித்திப்பதில்லையோ அது முதற்காரணமாம்.


பற்றற்ற கண்ணே' என்றார். † "அற்றது பற்றெனி லுற்றது வீடு" என்பதாலும் ‡ அது பற்றி வந்தது. இவை யிரண்டு பாட்டாலும் ¶ அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

தெளி:—(இ-ன்.) (ஒருவன்) பற்றற்ற கண்ணே - (இருவகைப்) பற்றுக்களும் அற்றபொழுதே, (அப்பற் றறுதியானது),பிறப்பு - (அவனது) பிறவியை, அறுக்கும் - ஒழிக்கும், மற்று - அல் லிருவகைப்பற்று அறுத பொழுது, நிலையாமை காணப்படும்—(அவ்விருவகைப் பற்றால் பிறந்து இறந்து வருகிற) நிலையாமையானது அறியப்படும், (எ-று).

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாகு முறைமைபற்றி 'பற்றற்ற கண்ணே' என்றார். இவை இரண்டு பாட்டாலும் அவ்விரண்டும் சேர்த்துச் சொல்லப்பட்டன அறுதல்-நீங்குதல்.

(க-து.) யாவனெனதென்னும்இருவகைப்பற்றும்நீக்காத விடத்துப் பிறப்பொழிதலின்மைபால் நிலையாமையே அறியப்படும்.

9. At the moment in which desire has been abandoned, other births will be cut off; when that has not been done, instability will be seen.



கo. பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பரி:—(இ-ள்.) * எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவேநன்னெறி யென்று மனத்துக் கொள்க; கொண்டு, () அதன்கண் உபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு,(எ - று).

§ கடவுள் வாழ்த்திற்கேற்ப ஈண்டும் பொதுவகையாற 'பற்றற்ருன்'

† திருவாய்மொழி 2-ம் பதிகம், 5. இதன் பொருள் (யாவனெதென்னும் இருவகைப்) பற்று நீங்கியதாயின் (ஜீவன்) முத்தி யுண்டாயிற்று என்பது. பற்றற்றதெனின் வீடுற்றது என்றன்வயிக்கப்பட்டது.

‡ அது - காரணமற்ற பொழுதே காரியமு மற்றதாகு முறைமை.

¶ அவ்விருமையும்—தீரத் துறந்தார்க்கு வீடுண்டென்பதும், அவ்வாறு துறவாதவர்க்குப் பிறப்புண்டென்பதும்.

* "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே" என்பது இராமாயணம் ஆகாயம் வாயு முதலிய பூதங்களையும் அவற்றின் காரியங்களையும் பற்றி நின்றே பற்றறுத்திருத்தல் போன்று, இறைவன் எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே பற்றற்றிருக்கின்றான் என்பதாம்.

() அதன்கண்-அந் நன்னெறியி னிடத்தில்.

§ கடவுள் வாழ்த்திற்கேற்ப—கடவுள்வாழ்த்தென்னும் முதலதிகாரத்திற்குப் பொருந்த.


என்றார். ¶ பற்றற்றான் பற்றென்புழி ஆறாவது செய்யுட் கிழமைக்கண் வந்தது. ஆண்டுப் பற்றென்றது 0 பற்றப்படுவதனை. அதன்கண் உபாய மென்றது $ தியான [] சமாதிகளை. விடாது வந்த பற்றென்றது அநாதி யாய் வரும் உடம்பிற் பற்றினை. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனைற் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) பற்றற்றான் - (எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே) பற்றில்லாத கடவுள், (அருளிச் செய்த), பற்றினை - முத்திவழி யை, பற்றுக - (இதுவே நல்லவழியென்று) மனத்திற் கொள்ளக் கடவர், (கொண்டு), அப்பற்றை - அதனிடத்து உபாயத்தை,பற்றுக-(அம்மனத்தி னைற்) செய்யக் கடவர், பற்று-(விடாது வந்த) பற்று, விடற்கு-ஒழிதற்கு.

கடவுள் வாழ்த்துக்கேற்ப இங்கும் பொதுவகையினால் 'பற்றற்றான்' என்றார். பற்றற்றான் பற்று என்றவிடத்துப் பற்றற்றானது என்னும் ஆறாம்வேற்றுமையுருபு செய்யுட்கிழமைப்பொருளில் வந்தது. அங்ஙப்பற் றென்றது பற்றப்படும் முத்திநெறியை. அம்முத்திநெறியினிடத்து உபா யமென்றது தியானசமாதிகளை. விடாதுவந்த பற்றென்றது அநாதியாகவ ருந் தேகாபிமானத்தினை. இதனால் அத்தேகாபிமானம் விடுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.

(க-து.) தியானசமாதிகளைச் செய்தால்யாவென்னும் பற்றொ ழியும் என்பது.

10. Desire the desire of Him who is without desire; in order to renounce desire, desire *that* desire.



¶ பற்றற்றான்பற்று என்பது ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

0 பற்றப்படுவதனை-(மோட்சவிருப்பமுள்ளோன்) பற்றப்படுவதாகிய முத்திவழியை. முத்திவழியென்றது முத்திவழியைக் கூறும் ஞானசாஸ்தி ரத்தினை. முத்திவழி, முத்திவழியை யுணர்த்தும் நூலுக்காதலின் காரிய வாகு பெயராம்.

$ கடவுளிடத்து விட்டுவிட்டுச் செல்லும் அந்தக்கரணத்தின் பிரவா கம் தியானமெனப்படும்.

[] உண்டாயிருக்கும் சம்ஸ்காரங் (வாசனை) களின் ஒழிவும் அடங்கி யிருக்கும் சம்ஸ்காரங்களின் வெளிப்பாடு மூண்டாய் அந்தக்கரண மொரு முகமாய்ப் பரிணமித்திருத்தல் சமாதியெனப்படும். "நீ மெய்ஞ்ஞான நன்னிட்டை சாருதல்" என்னும் வைராக்கிய சதகச்செய்யுளினுரையில் "மனமாதி மூக்கரணங்களும் அசையாது நின்றவிடம் மெய்ஞ்ஞான நிட்டை யென்பதும், அவையசைந்து செய்யுந் தியானசமாதிகள் அந்நிட் டை வருவதற்கு ஏது வென்பது மறிக" என்று சிதம்பர சுவாமிகள் கூறி யிருக்கின்றனர்.

பன்னிரண்டாவது அதிகாரம்.

மெய்யுணர்தல்—*True Knowledge.*

பரி:—அஃதாவது † பிறப்பு வீடுகளையும், ‡ அவற்றின் காரணங்களையும், §விபரீத ¶ ஐயங்களின் அன்றி உண்மையா னுணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானமென்ப. (இதுவும் பற்றற்றன் பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபற்றித் துறவின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—*அஃதாவது பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும், விபரீத சந்தேகங்களால் அல்லாமல் உண்மையாக வறிதல். இம்மெய்யுணர்தலை வடநூலார் தத்துவஞான மென்பர். இம்மெய்யுணர்தலும் பற்றற்றன் பற்றினைப் பற்றிய விடத்து உண்டாவதாகையால், அக்காரண வொற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.*

க. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளாஞ மாணப் பிறப்பு.

ப:—(இ-ள்.) மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென் றுணரும் விபரீத வுணர்வானேயுளதாம் இன்பமில்லாத பிறப்பு, (எ-று).

† *பிறப்பில் தன்பக் கூறுபாடும், வீட்டில் (முத்தியில்) இன்பக்கூறுபாடு முளவென்க.*

‡ *அவற்றின் காரணங்கள்—பிறப்பு வீடுகளின் காரணங்களாகிய அஞ்ஞானமும் ஞானமும்.*

§ *விபரீதம்-திரிவு. "திரிவு மித்தையினுலாகிய வுணர்வு. அது இப்பியை வெள்ளி யென்பது" என்று தருக்க சங்கிரகம கூறுகின்றது. அஃதாவது ஒன்றை (கயிற்றை) மற்றொன்றுக (பாம்பாக) வறிதலாம்.*

¶ *ஒன்றை (கயிற்றை) அதுவோ இதுவோ (கயிறோ பாம்போ) என்றறிதல் ஐயம். ஐயம்-சந்தேகம். தருக்க சங்கிரகம் "ஐயமாவது ஒருதருமியின் மாறுபட்ட பல தருமங்களான் விசேடிக்கப்பட்ட வுணர்வு. தருமமெனினும் தன்மையெனினும் ஒக்கும். அது குற்றியோமகனே என்பது" என்று கூறுகின்றது.*

() *இதுவும் (மெய்யுணர்தலும்) பற்றற்றன் பற்றுகிய முத்திவழியைப் பற்றியபோது உண்டாவதா யிருத்தலால், அக்காரண வொற்றுமை பற்றி (மெய்யுணர்தலுக்குப் பற்றற்றன் பற்றினைப்பற்றுதல் காரணமாயிருக்கும் ஒற்றுமைபற்றி)த் துறவின் பின் வைக்கப்பட்டது.*

இங்குக் காரணமென்பது நிமித்தகாரணம். எது சொரூபத்தில் பிரவேசிக்கின்றதில்லையோ, ஆனுல் காரியத்திற்கு வேறுக இருந்துகொண்டு காரியத்தைச் செய்கின்றதோ, எதன் நாசத்தினுல் காரியம் நாசமடைகின்றதில்லையோ அது நிமித்த காரணமெனப்படும்.

அவ்விபரீத உணர்வாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் இல்லையெனவும், மற்றும் † இத்தன்மையவுஞ் சொல்லும் மயக்கநூல் வழக்குகளே மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல். ‡ குற்றியைமகனென்றும், § இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றுகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை யென்பன ஒரு பொருட்கிளவி. நரகர், விலங்கு, மக்கள் தேவரென்னும் நால்வகைப் பிறப்பிலு முள்ளது தன்பமேயாதலின் 'மாணப்பிறப்பு' என்றார். இதனாற் பிறப்புத் தன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிசசையென் பதூஉம கூறப்பட்டன.

தேவி.—(இ-ள்) பொருளல்லவற்றை-மெய்ப்பொருள்க ளல்லாதன வற்றை, பொருளென்று-மெய்ப்பொருள்க ளென்று, உணரும்-அறிகின்ற, மருளான்-விபரீத ஞானத்தினாலே, மாணப்பிறப்பு - மாட்சிமையில்லாத பிறப்பு (இன்பமில்லாத பிறப்பு), ஆம்-உண்டாகும, (எ-று).

பொருளல்லவாறறைப் பொருளெனவுணரும் விபரீதஞானமாவது மறு பிறப்பும், இருவினைப் பயன்களும், கடவுளும் இல்லையென்றும், மற்றும் இப்படிப்பட்டவைகளேயும் சொல்லுகிற மயக்கநூல் வழக்குகளேமெய்ந்நூல் வழக்கென்று நிசயிதல். கட்டையைக் கள்ளனென்றும், மினுங்கினை வெ ளளியென்றும் இவ்வகையே ஒருபொருளே மற்றொருபொருளாக நிசயித் தலும் அது (விபரீதமாம்). மருள, மயகக, விபரீதஞானம், அஞ்ஞானம் என்பன ஒருபொருட் சொறகள். நரகர், விலஙகு, மக்கள், தேவர் என்கிற நால்வகைப்பிறப்புக்களிலும் உள்ளது தன்பமேயாதலால 'மாணப்பிறப்பு' என்றார் இதனால் பிறப்புத் தனபமென்பதும், அப்பிறப்பிற்கு முதற்கார ணம அஞ்ஞானமென்பதும் சொல்லப்பட்டன.

(க-து) மெய்ப்பொரு ளல்லாதவற்றை மெய்ப்பொருளென் றறியும் விபரீத ஞானத்தினால் பிறப்புண்டாகின்றது என்பது.

1 Inglorious births are produced by the confusion of mind which considers those things to be real which are not real.

-•=|| =•-

உ. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

† இத்தன்மையவும்என்றதுகூறினமையின், ஆகாயமென்பதொன்றில்லை யெனவும், பூதஙகளின் கூட்டுறவால் உயிரென்பதொனறு தோன்றி அவற் றின் பிரிவால் அழியுமெனவும், காண்டலளவை யன்றி வேறு அளவைக ளில்லை யெனவும், பிறவும கூறுதலுங் கொள்க.

‡ குற்றி-மரக்கட்டை. § இப்பி-முத்துச்சிப்பி.

பரி:—(இ-ள்.) † அவிச்சையினீங்கி மெய்யுணர்வினை யுடையராயினு ர்க்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக்கொடுக்கும்,(எ-று).

‡ இருள்-நரகம்; அஃதாகுபெயராய்க் காரணத்தின் மேனின்றது. ¶ நீங்கியெனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது ; நீங்கவென்பதன் திரி பெனினும் அமையும். மருணீங்கியென்னும் வினையெச்சம் காட்சியவரென் னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. மாசறுகாட்சியென்றது 0 கேவல வுணர்வினை. இதனால் வீடாவது $ நிரதிசய இன்பமென்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் * கேவலப்பொருளுணர்வென்பதூஉம் கூறப்பட்டன.

† கடவுள்வாழ்த்து "இருள்சேரிருவினையும்" என்னும் குறளின் விசேடவுரையில் "இன்னதன்மைத்தென ஒருவராலுங்கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றும்" என்று கூறியிருத்தலால், இன்னதன்மைத தென்று ஒருவராலும் கூறப்படாமை அவிச்சைக்கு இலக்கணமாயிற் றென்க.

‡ இருள் நரகம் என்பது அடக்கமுடைமை யதிகாரம் மூதற்குறளின் விசேட வுரையில் "இருள் என்பது ஓர் நரகவிசேடம்" என்று கூறுவதாலு மறிக. இருள் என்னுங் காரியப் பெயர் அவ்விருளை (நரகத்தை) யடைவதற் குக்காரணமான பிறப்பினை யுணர்த்தலால் காரியவாகு பெயராம். ஒருவன் நரகத்தையடைதல் பிறப்பினுலாதலின் நரகதையடைதற்குக் காரணம்பி றப்பாயிற்றென்க.இதனுல் ஞானத்தாலடைவது மோட்சமென்றும்,பிறப்பி னுலடைவது நரகமென்றும்பெறப்பட்டனவென்க.இருள்-அவிச்சை.அஃது ஆகுபெயராய்க் காரியத்தின் மேனின்றது என்றும் பாடமுண்டு. இப்பாட த்தின்படி அவிச்சை யென்னும் கருவியின் (மூதற்காரணத்தின்) பெயர் அதன்காரியமாகிய பிறப்பிற்காதலால்(மூதற்)கருவியாகு பெயராம். இருள் என்பது அவிச்சையை யுணர்த்துதல் " இருள்சேரிருவினையுஞ் சேரா" என்னுங் குறளாலறிக.

¶ இருணீங்கியென்பதற்கேற்ப மருணீங்கியென வந்தது எதுகைத் தொடையாம். இஃது ஓரடியுள் சீர்களினெழுத்தொன்றிவந்த எது கைத் தொடையாம். பல வடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுதுதற்க ளொன்றிவருவது தொடையெனப்படும். தொடைக் இலக்கணம் இலக்கண விளக்கம் " அடிபிரண்டி, தொடித்தமன் சேறலிற் றொடையே" என்று கூறுகின்றது.

0 கேவலவுணர்வு—பிரமஞானம் அல்லது சிவஞானம். " உரைசெ யிற் பிரம ஞான மொன்றுமே முத்திக் கேது" என்பது பிரபுலிங்கலீலை.

$ நிரதிசயவின்பம்—பேரின்பம். அஃதாவது அதிசயமற்ற வின்பம். அதிசயம்-பேதம், "பேதமில்லதோர் கற்பனித்தபெ ருந்துறைப்பெரு வெள் ளமே" என்பதிருவாசகம்.

* கேவலப் பொருளென்றும் பாடமுண்டு. பற்றற்றான் பற்றினைப் பற்றுதல் வாயிலாக வீடடைவதன்றி நேரே பற்றற்றான் (கடவுள்) வாயி லாக வீடடைதலின்று மென்ப தினுணர்த்தற்பாற்றும்.

தெளி:—(இ-ன்.) மருள் நீங்கி-அஞ்ஞானத்தினின்றும் நீங்கி, மாசறு-குற்றமற்ற, காட்சியவர்க்கு - (மெய்) அறிவினையுடையா ராயினோர்க்கு, (அம்மெய்யறிவானது), இருள்-பிறப்பினை, நீங்கி-நீங்கச்செய்து, இன்பம்-முத்தியை, பயக்கும்-கொடுக்கும், (எ-று).

இருள்-நரகம்; அஃதாகு பெயராய்த் தன் காரணமாகிய பிறப்பின் மேல் நின்றது. இருணீக்கியென்பது மருணீங்கியென்னுந் தொடைநோக்கி இருணீக்கியென்று மெலித்தல் விகாரம் பெற்று நின்றது; நீங்கியென்பது நீங்கவென்பதன் திரிபென்றுமாம் ஒக்கும். மருணீங்கி யென்னும் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் காட்சியவரென்னுங் குறிப்பு வினையாலணையும் பெயரைக்கொண்டு முடிந்தது. மாசறுகாட்சி - கேவல ஞானம். இதனால் வீடாவது அதிசயமற்ற இன்பமென்பதும், அவ்வின்பத்தினைப்பெறுதற்கு நிமித்த காரணம் கேவலப்பொருளாகிய பிரமஞான மென்பதும் சொல்லப்பட்டன.

(க-து.) மெய்ஞ்ஞானம் பெற்றார்க்குமுத்தியுண்டாம்என்பது.

2. A clear undimmed vision of things will deliver its possessors from the darkness of future births, and confer the felicity of Heaven.

கூ. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

பரி:—(இ-ளீ.) ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு எய்கி நின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாத லுடைத்து, (எ-று).

ஐயமாவது பல தலையாயவுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும் கடவுளும், உளவோ இலவோவென ஒன்றிற்றுணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ, கயிறே அரவோவெனத்துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றுற் பிறர்மதங் கேளாத்தம்மத ¶ நிறுத்தல் எல்லாச் சமயநூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழும் ஐயத்தினே யோகமுறுத்திச்சியுடையார் தம்மனவத்தானீக்கி மெய்யுணர்வாராகலின், அவரை 'ஐயத்தினீங்கித் தெளிந்தார்' என்றும், அவர்க்கு அவ்வனுபவ வுணர்வு 0 அடிப்பட்டு வரவரப் பண்டை உலகியலுணர்வு † தூர்ந்தவருமாகலின், ‡ அதனைப் பயன்மேலிட்டு 'வையத்தின் வான நணிய துடைத்து' எனறுங் கூறினர்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது.

¶ நிறுத்தல்-ஸ்தாபித்தல். 0 அடிப்பட்டு-பழகி. † தூர்ந்து-குறைந்து. ‡ அதனைப் பயன்மேலிட்டு-(உலகியலுணர்வு) தூர்ந்து (குறைந்து) வருதலே மெய்யுணர்வின் பயனிய வீட்டுலகின்மேல் வைத்து. (மெய்யுணர்வால் உலகியலுணர்வு குறையக்குறைய வீட்டுலகம் சமீபித்துக்கொண்டே வருமென்பது கருத்தாம்).

தெளி:—(இ-ன்.)ஐயத்தின் நீங்கி-சந்தேகத்தினின்றும் நீங்கி,தெளிந்தார்க்கு-மெய்யுணர்ந்தவர்க்கு, வையத்தின்-(அடைந்துகின்ற)நிலவுலகத்திலும்,வானம்-(அடையக் கடவதாகிய) முத்தியுலகம், நணியது-சமீபித்திருத்தலே, உடைத்து-உடையதாம், (எ-று).

ஐயமாவது பலவகையாய அறிவு. அவ்வையமாவது மறுபிறப்பும், இருவினைப் பயன்களும், கடவுளும் உண்டோ இல்லையோ என்று ஒன்றில் நிச்சயம் பிறவாமல் நிற்றல்; காணலோ நீரோ, பழுதையோ பாம்போ என்று ஒன்றிலும் நிசயம் உண்டாகாது நிற்பதும் அது (ஐயமேபாம்). ஒருவிதத்திலுல் பிறர் மதத்தை நிராகரித்துத் தமது மதத்தை நிறுத்துதல் எல்லாச் சமயநூல்களுக்கும் இயல்பாகலால், அந்நூல்கள் சொல்லுகின்ற பொருள்களில் எது உண்மையென்று உண்டாகுஞ் சந்தேகத்தை யோகாப் பியாசத்தில் முதிர்ச்சியுடையார் தமது அநுபவஞானத்திலுல் நீக்கி உண்மையை அறிவாராகலால், அவரை 'ஐயத்தினீங்கித தெளிந்தார்' என்றும், அவ்வியோகமுதிர்ச்சியுடையவர்க்கு அவ்வனுபவஞானம் தொடர்ந்துமேலிடுதோறும் மேலிடுதோறும் பழைய லோகாசாரஞானம் மறந்து வருமாதலால், அதனைப் பயனுகிய வீட்டிலகின்மேல் வைத்து'வையத்தின் வானணியது உடைத்து' என்றும் சொல்லினர்; சொல்லலே சந்தேக ஞானமும் பிறவிக்குக் காரணமாதல் சொல்லப்பட்டது.

(க-து.) சந்தேகத்தினின்றும் நீங்கி மெய்யுணர்ந்தவர் தவறாது முத்தியடைவர் என்பது.

3. Heaven is nearer than earth to those men of purified minds who are freed from doubt.

ச. ¶ ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

பரி:—(இ-ள்.) $ செல்லப்படுகின்ற புலன்கள்வேறுபாட்டான் ஐந்தாகிய வுணர்வு அவற்றைவிட்டுத் தம்மையத்ததாய வழியும் † அதனுற் பயனில்லையேயாம்; மெய்யினை யுணர்தலில்லாதாகிது, (எ-று).

¶ "ஐயறி வறிந்தவை யடங்கினை ரேனு, மெய்யறி வில்லாதவர்கள் வீடது பெறுரே" என்பது சிவர்ணபோதம்.

$ செல்லப்படுகின்ற புலன்கள்—மனம் செவி முதலிய விந்திரியங்கள் வாயிலாகச் சென்று அனுபவிக்கின்ற சப்த முதலிய விஷயங்கள் செல்லப்படுகின்ற என்பதற்குப் பிரதியாகச் சொல்லப்படுகின்ற என்றும் பாடமுண்டு.

† அதனுல்-(ஐந்தாகிய வுணர்வு-மனம்) தம்வயத்ததாவதினுல்.

‡ ஐந்தாகிய வுணர்வு-மனம், அஃதெய்துதலாவது மடங்கி ஒருதலைப் பட்டித் ¶ தாரணைக்கண் நிற்றல். அங்ஙனநின்றவழியும் வீடு பயவாமையின் 'பயமின்று' என்றார். சிறப்புமை எய்துதற்கருமை விளக்கினின்றது. இவை யிரண்டு பாட்டானும் 0 மெய்யுணர் வுடையார்க்கே வீடெனத மெய்யு ணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) ஐயுணர்வு-(ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என் னும் ஐந்புலன்களிலும் செல்லுதலின் வேறுபாட்டால்) ஐந்தாகிய உண ர்வு, எய்தியக்கண்ணும்-(அப்புலனகளே விட்டிக) தமக்கு வசப்பட்டதாய விடத்தும், (அதனால்), பயன்-பிரயோஜனம், இன்று - இல்லையேயாம், மெய்யுணர் வில்லாதவர்க்கு—மெயயினை யறிதலில்லாதவர்களுக்கு, (எ-று).

ஐந்தாகிய உணர்வு-மனம். அம்மனம் வசப்படுதலாவது மடங்கியொரு முகப்பட்டுததாரணையில் நிற்றல். மனம் அப்படி நின்றவிடத்தும் அது முத இலையத்தாராமையால் 'பயமின்று' என்றார். ஐயுணர் வெய்தியக்கண்ணும் என்றதனயர்வு சிறப்பும்மை மனம தம்வயத்ததாதற்கு அருமையா மென் பதை வீளக்கி நின்றது. இவையிரண்டு பாட்டாலும் மெய்யை யுணர்ந்தவ ர்க்கே முத்தி உண்டென்று மெயயுணர்வின சிறப்புச் சொல்லப்பட்டது.

(கு-து.) மெய்புணர் வில்லாதவர் மனவடக்கம் பெற்றாலும் அதனாலவர்க்கு முத்தியுண்டாவதில்லை என்பது.

4. Even those who have all the knowledge which can be attained by the five senses, will derive no benefit from it if they are without a knowledge of the true nature of things.



(4). எப்பொரு ளேத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ-ள்.) யாதொரு பொருள் யாதோ ரியல்பிற்றாய்த் தோன் றிலும், அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கணி ன்று மெயயாகிய பொருளைக் காண்பதே மெயயுணர்வாவது, (எ-று).

பொருடோறும் உலகத்தார் † கற்பித்துகொண்டு வழங்குகின்ற

‡ செவியாதி யிந்திரியங்களின வாயிலாகச சப்தாதி (ஐந்து) விஷய ஞானங்களே யுடைத்தாயிருப்பது மனமாதலால் 'ஐந்தாகிய வுணர்வு மனம்' என்று கூறப்பட்டது.

¶ தைலதாரை போன்று இடைவிடாது அந்தக்கரணம் ஒருவகைப்பட் டிருத்தல் தாரணையெனப்படும். இது யோகாங்கங்களுள் ஒன்று.

0 மனமடக்கல் யோகமாயும் மயக்கறுதல் ஞானமாயு மிருத்தலால், மயக்கறுக்கும் ஞானமின்றி மனமடக்கும் யோகத்தால் முத்தியுண்டாகா தென்பதாம்.

† கற்பித்துக்கொண்டு-வற்பறித்துக்கொண்டு.

‡ கற்பனைகளைக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பதென்றவாறுயிற்று. ¶ அஃதாவது 0 கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சொலிரும் பொறை என்றவழி அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதொரு குடியும், வேழநோக்கினை யுடையா னென்பதோர் வடிவும், சேஎயென்ப தோரியற்பெயரும், மாந்தரஞ்சொ லிரும்பொறை யென்பதோர் சிறப்புப் பெயரும் ஒரு பொருளின்கட் கற்பனையாகலின், † அவ்வாறுணராது § நிலமுதல்உயிரீறுமிய தத்துவங்களின் தொகுதியெனவுணர்த்து, ¶ அவற்றை நிலமுதலாகத் தத்தங்காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றுற்

---

‡ கற்பனை-உண்மையாகாதது.

¶ அஃதாவது - காண்பதாவது. 0 கோச்சேரமான் யானைக் கட்சேஎய் மாந்தரஞ்சொ லிரும்பொறை என்பவன் சேரர்குலத்தரசன். இவ்வரசன் புறநானூற்றில் புலவர்களால் பாடப்பட்டுள்ள அரசர்களிலொருவன். அப்பெயருள் கோ-(இராஜன்) என்பது கூத்திரிய ஜாதியையும், சேரமான் என்பது குடிப்பெயரையும்[குடிப்பெயர் ஒருகுலத்திற்கு வழங்கும் பெயர்], யானைக்கண் என்பது (அவனுக்குள்ள) கண்ணின் வடிவத்தையும் (யானைக் கண்போல் அவன் கண்ணிருந்தமை பற்றி யானைக்கண் என்று சொல்லப் பட்டது),சேஎய் என்பது (அவனது) இயற்பெயரையும் (இயற்பெயர்தாய் தந்தைகளா லிடப்பட்ட பெயர்), மாந்தரஞ்சொ லிரும்பொறை யென்பது (அவனுக்குள்ள) சிறப்புப் பெயரையும் (சிறப்புப்பெயர் ஒருகாரணம் பற்றிப் பின்வரும்பெயர்), உணர்த்தினவென்க. மாந்தரஞ்சேரலிரும் பொறை என்றும்பாடமுண்டு. மாந்தரஞ்சொலிரும்பொறை என்பதற்கு மக்களெடுத்துக் கூறும் அழகிய புகழாகிய பெரியசுமையை புடையவனென்பது பொருள். மாந்தரஞ் சேரலிரும்பொறை என்பதற்கு மனிதர்களுக்குள்ளே மிகுந்த பொறுமையுடைய அழகிய சேரன் என்பது பொருள்.

† அவ்வாறுணராது - (மெய்யென்று) அப்படியே யறியாமல்.

§ நிலமுதல் உயிரீறுமியதத்துவங்கள் - பிருதிவிமுதலிய பூதங்கள் 5, செவிமுதலிய ஞானேந்திரியங்கள் 5, வாக்குமுதலிய கர்மேந்திரியங்கள் 5, பிராணன் முதலிய வாயுக்கள் 5, மனமுதலிய அந்தக்காரணங்கள் 4, உயிர் 1 ஆக 25-ஆம்.

¶ அவற்றை (அத்தத்துவங்களை) நிலமுதலாகத் தத்தம் (தமது தமது) காரணங்களு ளொடுக்குதலாவது பிருதிவியை அப்புவிலும், அப்பு வைத் தேயுவிலும், தேயு(நீ) வை வாயுவிலும்,வாயுவை ஆகாயத்திலும், ஆகாயத்தை அவிச்சையிலு மொடுக்குதலாம். ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரியபஞ்சகம், பிராணாதி பஞ்சகம், அந்தக்காண சதுஷ்டயமாகிய இப்பத்தொன்பது தத்துவங்களும் பிருதிவிமுதலிய பூதங்களின் காரியங்களாயிருத்தலால், பூதங்களின் ஒடுக்கஞ் சொன்னபோதே இவற்றி னொடுக்கமுஞ் சொல்லப்பட்டதாயிற்றென்க.

"எழுதரு முழுது மவனியி லழிய வெழுபுவி புனலிடை யழிய, முழுதறு புனலு மனலிடை யழிய மூரணெறி வளியினி லழிய, விழிவறு

† காரணகாரியங்கள் இரண்டுமின்றி ‡ முடிவாய்நிற்பதனை யுணர்தலாம். 'எப்பொருள்' என்ற பொதுமையான் இயங்குதிணையும்நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறேயுணரப்படும். இதனுள் மெய்யுணர்வினது இலக்கணம் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) எப்பொருள் - யாதொருபொருள், எதன்மைத்தா யினும்-யாதோ ரியல்பினதாய்த் தோன்றினாலும், (அத்தோன்றியவிதத் தைக் கண்டுவிடாமல்), அப்பொருள் - (தோன்றிய) அப்பொருளினிருது, மெய்ப்பொருள்-மெய்யாகிய பொருளை, காண்பது-காண்பதே, அறிவு-மெய் யுணர்வு, (எ-று).

மெய்யுணர்வாவது ஒவ்வொரு பொருளிலும் உலகத்தார் கற்பித்துக் கொண்டுவழங்குகின்ற கற்பனைகளை யொழித்து ஒழியாமல் நின்ற உண் மையைக் காணுதலென்றவாறாயிற்று அஃதாவது கோச்சேரமான் யானை க்கட்செய்ய மாந்தரஞ்சொ லிரும்பொறை என்ற வீடத்து அரசனென்ப தொருசாதியும், சேரமானென்பதொரு குடிப்பெயரும், வேழமோக்கினை (யானைக்கண்ணை) யுடையானென்ப தொருவடிவும், சேயனைபதொரியற் பெயரும், மாந்தரஞ்சொ லிரும்பொறை யென்பதொரு சிறப்புப்பெயரும் ஒரு பொருளினிட சத்துக் கற்பனையாதலால், அவ்வாறறியாது மண முதல் உயிர்முடிவாகிய சததவங்களின கூட்டமெனறறிந்து, அச தத்தவக்கூட் டங்களை மண்முதலாகத் சததவ காரணங்களி லொடுக்கிக்கொண்டுபோஞல்

வலிய தூடைவளி ககன மதிலிற விருளினி தெதுவும், அழிதரு விருளு மறி வினி லழிய வழிவது நிலையறி வதுவாம்'' என்று பெருந்திரட்டுக் கூறு வது மிங்குணர்தற் பாலதாம்.

† மண்ணைதிகடதை நோக்கக் காரணமாயும் அணுவை நோகக காரியமாயு மிருத்தலால் காரியம காரணமாயும் காரணம் காரியமாயும வரு மென்பது பெறப்படுகின்றது, படவே, காரியமும காரணமு முற்பத்தி நாசமுடையனவாமெனபதாயிற்று சடப்பொரு ளெல்லாம் ஒன்றை நோக் கக் காரணமாயும் மற்றொன்றை நோக்கக காரியமாயும் இருத்தலால் அநித் தமாம். விசாரிக்குமிடத்தி, உயிரா ஆதமாவது ஆத்மா வெவவகையாலும் ஒன் றற்குக் காரணமாகாமலும் மற்றொன்றற்குக் காரியமாகாமலும நித்தமா யிருத்தலின், அதனை யுணர்தல 'காரண காரியஙகளிரண்டு மின்றி முடிவா ய்நிற்பதனையுணர்தலாம' என்று கூறப்பட்டது ''தரதிசோகம் ஆத்மவித்- ஆத்மாவையறிந்தவன் சோகத்தைக கடக்கின்றான'' என்று சுருதிகூறுவ தும, 'அவனுக் (பிரஹ்மதத்திற்)குக் காரியமுங காரணமுமில்லை'' என்று கூவேதாசுவதரோப நிடதம் கூறுவதும்,''அறிவிற் கழிவில்லை யாக்கமு மில் லை'', ''காரிய காரணங கற்பனை சொற்பதப், பாரமும் பாழில் பராபரத் தா னே'', ''காரிய காரண வாதனைப் பற்றறப், பாரண வமமுப சாந்தப்பரி தே'' என்று திருமந்திரங் கூறுவதும இங்கூன்றி யுணர்தற் பாலனவாம்.

‡ முடிவாய் நிற்பது—ஆத்துமா.

காரணகாரியங்களிரண்டு மில்லாமல் முடிவாய் நித்தமானே யறிதலாம். 'எப்பொருள்' என்ற பொதுமையினால் சகரும் அசகமுமாகிய பொருள்களெல்லாம் இப்படியே யறியப்படும். இதனால் மெய்யுணர்வினது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க-து.) விசாரவாயிலாக மெய்ப்பொருளை யுணர்வதே மெய்யுணர்வாம் என்பது.

5. True knowledge is the perception concerning every thing of whatever kind that *that* thing is the true thing.

சு. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

பரி:—(இ-ள்.) இம்மக்கட் பிறப்பின்கண்ணே உபதேச மொழிகளை அனுபவழுடைய தேசிகர்பாற் கேட்டு அதனுன் மெய்ப்பொருளை யுணர்ந்தவர் மீண்டு இப்பிறப்பின்கண் வாராதநெறியை யெய்துவர்.

'கற்று' என்றதனால் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், 'ஈண்டு' என்றதனால் வீடுபேற்றிற்குரிய * மக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்றாம். ஈண்டுவாராநெறி-வீட்டுநெறி. † வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை யுணர்தற்கு உபாயம் மூன்று:—அவை ‡ கேள்வி விமரிசம், பாவனையென்பன. அவற்றுள்கேள்வி இதனாற் கூறப்பட்டது.

பெறவரிது மக்கட் பிறவிபெற் றாலு, மறிவுநூ லாய்த லரிதே-
யதினும், தறவுடைய ஞான லரிதே யதின்மெய், யறிவுடைய ஞான லரிது'' என்பது அமிர்தசாரம்.

† முதற்பொருளை (தலைமைப்பொருளை அஃதாவது எப்பொருளுக்கும் முதற் பொருளாய்த னகைகொரு முதற்பொருளை யில்லாதிருக்கும் பரப்பிரமத்தை) ஐயந்திரிபின்றியறிதல் சிற்றையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகி, எஞ்ஞான்று மொருதன்மைத்தாயிருக்கும் வீடுகூடுவதற்கு நிமித்தகாரணமாயிருத்தலின், 'வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை' என்று கூறப்பட்டது.

‡ கேள்வி, விமரிசம், பாவனையென்பன முறையே, சிரவணம்(கேட்டல்), மனனம் (சிந்தித்தல்) நிதித்தியாசனம் (தெளிதல்)என்று சொல்லப்படும். சிரவணத்தினுல் அஞ்ஞானமும், மனனத்தினுல் சந்தேகமும், நிதித்தியாசனத்தினுல் விபரீதமு மொழிதலால் முதற்பொருளை யுணர்தற்குச் சிரவண முதலியன உபாயமாயினவென்க.

[முத்தியடைதற்குரிய வழியை ஞானசாரியனிடத்துக்கேட்டல் சிரவணம்; ஞானசாரியனிடத்துக்கேட்டவிஷயத்தை யுக்தியினுஞ்சிந்தித்தறிதல் மனனம்; சிரவணத்தினுலும் மனனத்தினுலும் தெளிந்தபொருளில் மனம் அசைவறவிருத்தல் நிதித்தியாசனமாம்.]

தெளி:—(இ-ன்.) ஈண்டு-இம்மக்கட் பிறப்பினிடத்தே, கற்று - (உப தேசமொழிகளே அனுபவமுடைய ஞானசாரியரிடத்துக்) கேட்டு, (அதனல்), மெய்ப்பொருன்-உண்மைப்பொருளை, கண்டார் - உணர்ந்தவர், மற்றீண்டு-திரும்பி இப்பிறப்பினிடத்து, வாராநெறி-வாராதவழியை, தலைப்படுவர்-அடைவார், (எ-று).

'கற்று' என்றதனல் (ஞானுசிரியர்) பலரிடத்தும் பலதரமும் பழகுதலும், 'ஈண்டு' என்றதனல் முத்தி பெறுவதற்குரிய மனிதப்பிறப்பினது பெறுதற்கு அருமையும் பெறப்பட்டன. ஈண்டுவாராநெறி-முத்திவழி. முத்திக்கு நிமித்தகாரணமாகிய முதற்பொருளை யறிவதற்குச்சாதனம் மூன்று:-அவை கேட்டல்,சிந்தித்தல், தெளிதல் என்பன. அவற்றுள், கேட்டல் இதனல் சொல்லப்பட்டது.

(க-து.) ஞானசாரியனிடத்து உபதேசங்கேட்டுண்மைப்பொருளையறிந்தவர்க்குப் பிறப்புண்டாவதில்லை யென்பது.

6. They, who in this birth have learned to know the True Being,enter the road which returns not into this world.

எ. ஓர்த்துள்ள முள்ள துணரி னெருதலேயாப்
போர்த்துள்ள வேண்டா பிறப்பு.

பரி:—(இ-ள்.) அங்ஙனங்கேட்ட உபதேச மொழிப்பொருளை ஒருவனுள்ளம் அளவைகளானும் பொருந்துமாற்றனுந் தெளிய ஆராய்ந்து அதனுன் முதற்பொருளை யுணருமாயின்,அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா, (எ-று).

† ஒருதலேயாவோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்துமாறும் ‡ மேலே உரைத்தாம். இதனல் விமரிசங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) (அப்படிக் கேட்ட உபதேசமொழிப்பொருளை)உள்ளம்-(ஒருவனது) உள்ளமானது, ஒருதலேயாக - தெளிவுண்டாக, ஓர்த்து-(பிரமாணங்களாலும் யுத்தியினலும்) ஆராய்ந்து,(அதனல்),உள்ளது-முதற்பொருளை,உணரின்-அறிவானுயின், பிறப்பு(அவனுக்குப்) பிறப்பு, (உள்ளதாக), போர்த்த—மாறி, உள்ளவேண்டா-நினைக்கவேண்டுவதில்லை, (எ-று).

ஒருதலேயா ஓர்த்தென்றன்னுவயமாம். பிரமாணங்களும் யுக்தியும் மேலே கூறினும், இதனல் சிந்தித்தல் சொல்லப்பட்டது.

---

† முதலடியினீற்றிலுள்ள ஒருதலேயா என்பது அவ்வடியின் முதலிலுள்ள ஓர்த்து என்பதன்முன் கூட்டப்பட்டது.

‡ மேலே என்றது அருளுடைமை யதிகாரத்தின் இரண்டாங் குறளின் விசேடவுரையை.

(க-து.) குருவினிடத்துக் கேட்ட வுண்மைப்பொருளைச் சந்தேகமின்றி யறிந்தவனுக்குப் பிறப்புண்டாவதில்லை என்பது.

7. Let it not be thought that there is another birth for him whose mind having thoroughly considered all it has been taught has known the True Being (God).

அ. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ-ள்.) பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சை கெட வீட்டிற்கு நிமித்தகாரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது, (எ-று).

* பிறப்பென்னும் பேதைமையெனவும், சிறப்பென்னுஞ் செம்பொருளெனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். † ஐவகைக் குற்றங்களுள், அவிச்சை ஏனைய நான்கிற்குங் காரணமாத லுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக் கூறினர். எல்லாப் பொருளிலுஞ் சிறந்ததாகலான் வீடு சிறப்பு எனப்பட்டது. தோற்றக் கேடுகளின்மையின் நித்தமாய், ‡ நோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலின்மையின் தூய்தாய்த, தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்றமுதற் பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனைச் 'செம்பொருள்' என்றார். § மேல் 'மெய்ப்பொருள்' எனவும், 'உள்ளது' எனவும் கூறியதூஉம் இதுபற்றி யெனவுணர்க. அதனைக்காண்கையாவது உயிர்

பிறப்பிற்கு மூதற்காரணமாகிய அவிச்சையைப் 'பிறப்பென்னும் பேதைமை' என்றும், சிறப்பிற்கு (முத்திக்கு) நிமித்தகாரணமாய செம்பொருளைச் 'சிறப்பென்னும் செம்பொருள்' என்றும் கூறினமையின், இவை காரியங்காரணமாயவுபசாரவழக்காம். (காரியங்காரணமாவது காரியத்தைக் காரணமாகக்கூறுவது). பிரயோகவிவேக நூலார் " மருளறுகாரணம் " என்னுஞ்செய்யுளுரையில் " பிறப்பென்னும் பேதைமை-பிறப்பிற்கேதுவாகிய பேதைமை; இதுகாரியங்காரணமானது" என்று கூறியிருக்கின்றனர்.

† ஐவகைக்குற்றங்கள்-அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம்.

‡ தன்னினும் பெருமையுடைய பொருள் தனனில் கலத்தலில்லாதிருத்தல் பற்றி 'நோன்மையாற்றன்னை யொன்றும் கலத்த லின்மையின்' என்றுகூறப்பட்டது. நோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலில்லாதது நிராபேட்சித வியாபகமெனப்படும்.

§ மேல் என்றது இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளையும் ஏழாவது குறளையும்.

தன்னவிச்சைகெட்டு அதனினு ஒற்றமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் † சமாதியெனவுஞ் ‡ சுக்கிலத்தியானமெனவுங்கூறுப. உயிர் உடம்பினீங்குங் காலத்து அதனால் ¶ யாதொன்று பாவிக்கப்பட்டதோ, அஃதே அதி வாய்த்தோன்று மென்பது எல்லா வாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்திப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் § கேவலப்பொருளாகிய பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்கவுபாயமில்லை யென்பதறிக. இதனாற் பாவனை கூறப்பட்டது.

தேளி:—(இ-ன்.) பிறப்பென்னும் - பிறப்பிற்கு முதற்காரணமான, பேதைமை-அஞ்ஞானமானது, நீங்க-கெட்டொழிய, சிறப்பென் னும்-மூத்திக்கு விசித்தகாரணமான, செம்பொருள்-செல்வியபொருளை, காண்பது காண்பதே, அறிவு-(ஒருவனுக்கு) மெய்யுணர்வாம, (எ-று).

பிறப்பென்னும் பேதைமையென்றும், சிறப்பென்னுஞ் செம்பொரு ளென்றும் காரியங்களைக் காரணங்களாக உபசரித்துக் கூறினர். அஞ்ஞான முதலிய ஐவகைக்குற்றங்களுள் அஞ்ஞானம் மற்றைய நான்கனுக்கும் காரணமாதலுடைமையால், (காரணமாகும்) அச்சிறப்புப்பற்றி அவ்வஞ் ஞானத்தையே பிறப்பிற்குக் காரணமாக்கிச சொல்லினர். எல்லாப்பொ ருளிலும் சிறந்ததாகலால் முத்தி சிறப்பு என்றுகூறப்பட்டது. உற்பத்தி நாசங்களில்லாமையினால் நித்தியமாய்ப், பெருமையால் தன்னை யொன்

தியானிப்பவன் தியானமென்னு மிரண்டையும் விடுவதனால், தியா னிக்கப்படும் வஸ்து வொன்றனையே விஷயஞ்செய்யும் காற்றில்லாததீபம் போன்றுள்ள சித்தம் சமாதியாம். இது தர்மமேகமென்று சொல்லப்படும். தருமமாகிய மழையை(ஆதமசாட்சாத்காரத்தை - பிரதியகாத்ம அபின்ன பிரஹ்மதரிசனத்தை)ப் பெயயும் (உண்டாக்கும்) மேகம் (கிருஷிகற்பசமா தி) தருமமேகமாம் (பிரத்தியக்-உள், அபின்ன-வேற்றுமைப்படாதது). யோகசூத்திரம் 4-வது பாதம 28-வது சூத்திர மிங்குணரத்தக்கதாம.

‡ ''இணரெரி முழுக்க மன்ன சுக்கிலத் தியான மென்னும், கணை யெறிந் தகைப்ப வீழ்ந்து காற்படை சூழப்பட்டார்'' என்பது சீவகசிந்தா மணி முத்தியிலம்பகம் 4823.

¶ ''இந்தவுடலம் விடும்பொழுதில் யாவனியாதொன் றினைகின்கை, னந்தவளவே யந்தப்பா வனையா லதனை யடையுமால்'' என்று பகவற்கீதை கூறுவதும், தாயுமானவர் எங்குநிறைகின்றபொருள் மூன்றுவது செய் யுளில் ''யாதொன்று பாவிக்கதான், அதுவாத லாலுன்னை நானென்று பாவி க்கின் அத்துவித மார்க்க முறலால், எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள் செயெந்தைநீ குறையு முண்டோ'' என்றும் கூறுவதும் இங்குக்கவனிக்கத் தக்கனவாம்.

§ கேவலப்பொருள்-தனிமைப்பொருள் [யாதொரு சம்பந்தமுமின்றி வினங்குதல் பற்றிப் பரப்பிரஹ்மம் கேவலப் பொருளெனப்பட்டது.]

முக் கலத்தலில்லாமையினால் பரிசுத்தமாய், எல்லாப்பொருளையுந் தான் கலந்து நிற்கின்ற முதற்பொருளானது விகாரமில்லாமல் எக்காலத்தும் ஒரு தன்மையதாயிருத்தல்பற்றி, அம்முதற்பொருளைச் 'செம்பொருள்' என்றார். முன்னே 'மெய்ப்பொருள்' எனறும் 'உள்ளது' என்றும் சொல்லியதும் இது பற்றி யென்றறிக. அச்செம்பொருளைக் காணுதலாவது உயிர் தனது அஞ்ஞானங்கெட்டு அச்செம்பொருளோடு ஒற்றுமையுண்டாக (சிவோஹம் அல்லது அஹம்பிரஹ்மாஸ்மி அல்லது பிரஹ்மைவாஹம் என்று) இடைவிடாதுபாவித்தல். இப்பாவனையைச் சமாதியென்றுஞ் சுக்கிலத்தியானமென்றுங் கூறுவர். உயிர் உடம்பை விட்டு நீங்குங்காலத்தில் அவ்வுயிரால் யாதொன்று பாவிக்கப்பட்டது, அவ்வுயிர் அப்பாவிக்கப்பட்டதாய்ப் பிறக்குமென்பது எல்லாச்சாத்திரங்களுக்கும் நிச்சயமாதலால், முத்தியடைவார்க்கு உயிர் உடம்பை விட்டுப் போகுங்காலத்தில் பிறப்பிற்குக் காரணமானபாவனை கெடுதற்பொருட்டே கேவலப்பொருளையே பாவித்தல் வேண்டுதலால், அக்கேவலப்பொருளை முன்னே பாவிதத்துப் பழகுதலாகிய இதனிலும் மேலாய சாதனமில்லை யென்பதுணராக. இதனால் பாவனை சொல்லப்பட்டது.

(க-து.) பிறவிக்குக் காரணமான அஞ்ஞானங்கெடஉண்மைப் பொருளை யுணர்வதே மெய்ப்பறிவாம் எனபது.

8. True knowledge consists in the removal of ignorance which is the cause of births, and the perception of the True Being (God) who is the bestower of heaven.

கூ. $ சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

பரி:—(இ-ள்) ஒருவன் எல்லாப்பொருட்குஞ் சார்பாய அச்செம் பொருளை யுணர்ந்து இருவகைப்பற்றும் அற ஒழுகவல்லனாயின், அவனை * முன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் † அவ்வுணர் வொழுக்கங்களே அழித்துப் பின்சாரமாட்டா, (எ-று).

‡ ஆகுபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையும் 'சார்பு' என்றார். ஈண்டொழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலே. அஃது

$ 'சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையால், சார்புணர்வு தானேயாமுமாம்-சார்பு, கெடவொழுகி னல்ல சமாதியுமாம் கேதப், படவருவ தில்லையினைப் பற்று'' என்பது திருக்களிற்றுப்பாடியார்.

முன்-இனி, † அவ்வுணர்வொழுக்கம் - செம்பொருளையுணர்தலும் இருவகைப்பற்று மறவொழுகுதலுமாம்.

‡ சார்பு என்னுமிரண்டனுள் முன்னது எல்லாப்பொருட்கும் சார்பாய செம்பொருளை (பரப்பிரஹ்மத்தை)யும், பின்னது உயிரைச்சார்தலை

* இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மன வொருக்கம், தாரணை, தியானம், சமாதியென எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும்; யோகநூல்களுட்காண்க. மற்றிச்சார்தராவென இயையும். சாரக்கடவனவாய் நின்ற தன்பங்களாவன: பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அனாதியின்றி † மீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தலும், பிறந்தவுடம்பான் மூகந்து நின்றனவும் ஒழியப் பின்னுமனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன. ‡ அவை வினைக் கின்மூன்றிருள்போல ஞானயோகங்களின் முன்னர்க்கெடுதலான் 'அழித்தச் சார்தரா' என்றார். இதனை ஆருகதர் உவர்ப்பென்ப. § பிறப்பிற்

யுடைய இருவகைப்பற்றையுமுணர்த்தினமையின், தொழிலாகுபெயராம். சார்பு - புல்லிருந்தி பெற்றதொழிற்பெயர்.

* இயமம்—பொய்கொலை களவே காமம் பொருணசை, யிவ்வகையைந்து மடக்கிய நியமம்.

நியமம்.—பெற்றதற் குவச்தல் பிழற்புநனி யுளர்த்தல், கற்பன கற்றல் கழிகேடு நுய்மை, பூசனைப் பெரும்பய மாசாற் களிததலொடு, நயனுடை மரபி னியம மைம்தே.

ஆசனம்.—நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென், றெற்த நான்கி னெல்லா கிலைமையோ, டின்பம் பயக்குஞ் சமய முதலிய,வந்தமில் நிறப்பி ஞாசன மாகும்.

பிராணயாமம்.—உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுள், சந்த மிய க்கந் தடுப்பது வளிநிலை.

பிரத்தியாகாரம்.—பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாம, லொருவழிப் படுப்பது தொகைநிலைப் புறனே.

தாரணை.—மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையே.

தியானம்.—நிறுத்திய வம்மன நிலைநிரி யாமற்,குறித்தபொருளொடு கொளுத்த னிலையே.

சமாதி.—ஆங்ஙனம் குறித்த வம்முதற் பொருளொடு,தான்பிரிஞகாத் தகையது சமாதி.

இவை தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் " அறவகைப்பட்ட " என்னுஞ் சூத்திரத்தினுரையில் கச்சினார்க்கினியார் காட்டிய உரைச் சூத்திரங்கள்.

† சம்பாதிக்கப்பட்ட வினைப்பயனுக்குச சஞ்சிதமென்றும், அனுபவிக்கும் வினைப்பயனுக்குப் பிராரத்தமென்றும், சம்பாதிக்கும் வினைப் பயனுக்கு ஆகாமியமென்றும் பெயராம்.

‡ அவை - அத்தின்பங்கள்.

§ கடவுள் வாழ்த்து கூ-வது குறளினுரையில் " நல்வினையும், பிறத்தற் கேதுவாலான் " என்று கூறப்பட்டிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

குக் காரணமாகலான், நல்வினைப் பயனும் 'நோய்' எனப்பட்டது. மேல் மூன்றுபாயத்தானும் பரம்பொருளை யுணரப் பிறப்பறும் என்றார். அஃது அறும் வழிக்கிடந்த தின்பங்களெல்லாம் என்செய்யுமென்னுங் கடாவை யாசங்கித்து அவை ஞானயோகங்களின் முதிர்ச்சி யுடைய வுபாயரைச் சாரமாட்டாமையானும் வேறு சார்பின்மையானும் செட்டுவிடுமென்பது இதனால் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்) (ஒருவன்) சார்பு-(எல்லாப் பொருள்களுக்கும்) சார்பாகிய அச்சம்பொருளை, உணர்ந்து - அறிந்து, சார்பு - (யாவையுந்தன்னும்) இருவகைப் பற்றுக்களும், கெட-முற்றுங்கெடும்படி, ஒழுகின்-நடக்க வல்லவனுயின், சார்தரும் - (மூன் அவனை) அடைதற் குரியனவாய் நின்ற, நோய்-துன்பங்கள், அழித்து-(அவ்வுணர்வையும் ஒழுக்கத்தையும்) அழித்து, மற்றுச்சார்தரா - பின் அடையமாட்டாவாம், (எ-று).

சாருமிடத்தையும் சார்வனவற்றையும் ஆகுபெயரால் 'சார்பு' என்று கூறினர். இங்கு ஒழுக்கமென்றது யோகவழிநடத்தலே. அஃது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என வெண்வகைப்படும்; அவற்றின் விரிவெல்லாம் இங்குக்கூறினால் பெருகும்; அவற்றை யோகநூல்களுள் கண்டு கொள்க. மற்று என்பது சார்தரா என்பதனோடு தொடர்ந்து நின்றது. அடையக்கடவனவாய் நின்ற தின்பங்களாவன: பிறவி அநாதியாய வருதலால் உயிரினுல் அளவில்லாமல் சமபாதிகப் பட்டுள்ள இருவகை வினைகளின் பயன்களுன் இறந்த உடம்புகளால் அனுபவித்தனவும், பிறந்தவுடம்பால் மொண்டு நின்றனவும், நீங்கப் பின்னும் (இனிவரும் உடம்புகளால்) அனுபவிக்கக்கடவனவாய்க் கிடந்தனவாம். அவை வினைக்கின்மூன் இருள்கெடுதல்போல ஞானயோகங்களின் முன்னே கெடுதலால் 'அழித்துச்சார்தரா' என்றார். இச்சார்புகெடவொழுகுதலைச் சமணர் உவர்ப்பு என்பர். பிறவிக்குக்காரணமாதலால் நல்வினைப்பயனும் 'நோய்' எனப்பட்டது. மூன் மூன்று சாதனங்களாலும் பரம்பொருளை அறியப் பிறப்பறும் என்றார். அப்பிறப்பு அறுமிடத்துப் பின்வரக்கிடந்த தின்பங்களெல்லாம் யாதுசெய்யுமென்னும் வினவை எழுப்பிக்கொண்டு அத்தின்பங்களெல்லாம் ஞானயோகங்களின் முதிர்ச்சியையுடைய உயிரைச சாரமாட்டாமையாலும் வேறுசாருமிடமில்லாமையாலும் கெட்டுவிடுமென்பது இதனால் சொல்லப்பட்டது.

(கு-து) உண்மைப்பொருளை யறிந்து பற்றறவொழுகுபவனைத் துன்பங்கள் சாராவாம் என்பது.

'9. He,who so lives as to know Him who is the support of all things and abandon all desire, will be freed from the evils which would otherwise cleave to him and destroy his efforts after absorption (by entangling him again in the net of desire).

மூன்றுபாயம்-சிரவணம், மனனம், நிதித்தியாசனம்.

கூ0. காமம் வேகுளி மயக்க ‡ மிவைமூன்ற
ஞமங் கெடக்கெடு நோய்

பரி:—(இ-ள்.) ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சையென்னும் இக்குற்றங்கண் முன்றனுடையபெயருங் கூடக் கெடுதலான், அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா, (எ-று).

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லும் ஆசையும், $ அதுபற்றி அதன் மறதலைக்கட்செல்லுங் கோபமுமென வடநூலார் † குற்றமைந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும், அவாவுதல் ஆசைக்கண்ணு மடங்குதலான் மூன்று என்றார். ¶ இடையருத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றுங் காட்டுத்தீமுன்னர்ப் பஞ்சுத்துய்போலு மாகலின், அம்மிகுதி தோன்ற 'இவை மூன்ற ஞமக்கெட' என்றார். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. கெடவென்பது எசத்திரிவு. நோயெ

‡ காமம் வெகுளி மயக்கங்களேயன்றி, அவற்றின் பெயரும் நோய்க் கேதுவாதல்பற்றி, 'இவை மூன்ற ஞம (மு) ங் கெடக்கெடு நோய்' என்றார். காமம் வெகுளி மயக்கமென்னு மெண்ணும்மும் நோயக் கேதுவாமென்பது கருத்து. "நினைவே பக்த நினைவொழியி னிலைமை யான முத்தியுமாம்" என்று குமாரதேவர் கூறுவதீண்டு ணர்ந்துணர்தற் பாலதாம்.

$ அப்பொருளே யடைவதற்கு விரோதமாயிருப்பவர்மீ தாண்டாகும் கோபமும்.

† இக்குற்றமைந்தும் பஞ்சக்கிலேசமெனப்படும். அவை அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபினிவேசம் என்பனவாம். (1)அது வல்லாததன் கண் (ஆத்மாவல்லாத வுடலபினிடத்து) அது (ஆத்மா) வென்னும் ஞானம் அவித்தை; (2) சதிவகுணம் ஆத்மா என்னு மிவரிரண்டினும் நானென்னும் ஒருமைபபிரமாணம் அஸ்மிதை; (3) சுகத்தை யறிந்தவனுக்குச் சுகஸ்மரண பூர்வகமாகச் சுகசாதனங்களிலுண்டாகும் இச்சை இராகம்; (4) துக்கத்தை யறிந்தவனுக்குத் துக்கஸ்மரண பூர்வகமாக அதன் சாதனங்களின கிச்சை துவேஷம்; (5) பூர்வஜன்மத்தில் அநுபவித்த மரண துக்கங்களின் வாசனைநிடத்திலுள் ளிருமி முதல் விர்வான் வரையிலுமுள்ள சர்வப்பிராணிகட்கும் ஒவ்வொருவாளும் சரீர்நிகட்கும் எனக்கும் வியோகம் (பிரிவு) வேண்டாமெனக்காரணமின்றி நான் இருப்பலே, இல்லாமற் போவலே என்றுண்டாகின்ற இருவகைத்தாய கிலேசம் அபினிவேசம் என்றைவகைக்கிலேசங்களுக் கிலக்கணம் சர்வதரிசனசங்கிரகத்தின் பதஞ்சலிதரிசனம் கூறுகின்றது.

¶ "எறியாவெரி வருகானிடை யெரியாதன வெவைதாம், அறியாவறி வுடையோர்களு மறிவாரது வியபோல், குறியால்வரு குணஞானமெ

ன்பது சாதியொருமை. காரணமாய ‡ குற்றங்களைக் கெடுத்தார் காரிய மாய வினைகளைச் செய்யாமையின், ¶ அவர்க்கு வரக்கடவ துன்பங்களு மில்லையென்பது இதனாற் கூறப்பட்டது. $ முன்னிடந்த † துன்பங்களும் மேல்வரக்கடவ துன்பங்களும் இலவாதல் மெய்யுணர்வின் பயனாதலின், இவை யிரண்டாம்பாட்டும் இவ்வதிகாரத்த வாயின. இவ்வாற்றானே மெய் யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்த வுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்க ளுமே யென்பது பெற்றாம்.

தேவி:—(இ-ள்.) (ஞான யோகங்களின் முதிர்ச்சி யுடையவர்க்கு) காமம் வெகுளி மயக்கம்-விருப்பு வெறுப்பு அஞ்ஞானம் என்னும், இவை மூன்றன்-இக்குற்றங்கள் மூன்றனது, காமம்-பெயராம் (கூட), கெட - கெ டுதலால், நோய்-(அக்காமவெகுளிமயக்கங்களின் காரியங்களாகிய) வினை ப்பயன்கள், கெடும்-உண்டாதலில்லை, (எ-று).

அநாதியான அஞ்ஞானமும், அவ்வஞ்ஞானம்பற்றி உடம்பை யானெ னமதிக்கும் அகங்காரமும், அவ்வகங்காரம்பற்றிஎனக்கு இதுவேண்டுமென் னும் அவாவும், அவ்வவாபற்றி அப்பொருளினிடத்துச் செல்லும் ஆசையு ம், அவ்வாசைபற்றி அதனை மறதலையிடத்துச் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தென்றார். இவர்(நாயனார்)அவ்வைக்தனுள், அகங்கா ரம் அஞ்ஞானத்திலும் அவாவுதல் ஆசையிலும் அடங்குதலால்(காமம்வெகு ளிமயக்கமென)மூன்றுஎன்றார். இடையருதஞானயோகங்களின் முன்னே இக்குற்றங்கள் மூன்றும் காட்டித்தீ முன்னே பஞ்சின் தொடர்நூனி கெடு வதுபோலக் கெடுவதாகலின், அம் மிருதிதோன்ற' இவை மூன்றனுமகுகெ ட' என்றார். காமமும் என்னு மிழிவுநிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது.கெடுதலால் என்னும்(செயினென்னும் வாய்பாட்டு)வினை யெச்சம் கெட என்னும் (செயவென்னும் வாய்பாட்டு) வினையெச்ச மாகத் திரிந்து நின்றது. {வருமொழி நோக்காது பன்மைப்பொருளுணர்த்தலின்) நோய் என்பது சாதியொருமைப் பெயர். காரணமாகிய (காமம் வெகுளி

யனலேகொள விடுமேல்,பொறியால்வரு வினையானவை பொடியாமிதோர் பொருளே'' என்பது பகவத்கீதை.

‡ அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய வருவினைகளே என் றும் பாடமுண்டு.

¶ ''வினைப்பயனே வெல்வதற்கு வேத முதலா, மனைத்தாய நூலகத்து மில்லை - நினைப்பதெனக், கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சே மெய், விண்ணுறுவார்க் கில்லை வீதி'' என்பது நல்வழி.


$ ''பஞ்சினை யூழித் தீப்போல் பலசன்ம விவித வித்தாம், சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ ருக்கும், இஞ்சிதா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும், விஞ்சினை பிராரத் தத்தின் வினையனு பவித் தித் தீரும்'' என்பது கைவல்லிய நவநீதம்.

† துன்பங்கள் - துன்பத்திற்குக் காரணமாய வினை.

மயக்கமென்னும்) குற்றங்களைக் கெடுத்தார் (அவற்றின்) காரியமாகிய (கல்வினை நீவினையென்னும்) வினைகளைச் செய்யாமையால் அவர்க்கு வரக்கடவனவாகிய துன்பங்களும் இல்லையென்பது இதனால் சொல்லப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல்வரக் கடவனவாகிய துன்பங்களும் இல்லாமற்போதல் மெய்யுணர்வின் பயனுதலால், இவ்வீரண்டு குறளும் இவ்வதிகாரத்தில் சொல்லப்பட்டன. இவ்விதத்தாலே மெய்யுணர்ந்தார்க்கு (மிஞ்சி) நிற்பன எடுத்த உடம்பும் அவ்வுடம்பு கொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம்.

(க - து.) மெய்யுணர்ந்தார்க்கு முக்குற்றங்களும் ஒழிதலின், அவற்றால் வரும் துன்பங்களில்லை என்பது.

10. If the very names of these three things, desire anger, and confusion of mind, be destroyed, then will also perish the evils which flow from them.



பதின்மூன்றுவது அதிகாரம்.

† அவாவறுத்தல்—*The destruction of desire.*

பரி:—அஃதாவது ‡ முன்னும் பின்னும் ¶ வினைத்தொடர் பறுத்தார்க்கு நடுவுநின்ற உடம்பும் அதுகொண்ட § வினைப்பயன்களும் நின்றமையின், * வேதனைபற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழையபயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும்

† எனக்கிது வேண்டுமென்னும் விருப்பம் அவா எனப்படும்.

‡ முன்னும் பின்னுமாகிய வினைத்தொடர்பு - சஞ்சித ஆகாமியம். சென்ற சரீரத்திற் செய்யப்பட்டுப் பயனுக்கு வாராதுள்ள வினை சஞ்சிதமாம்; எதிர்காலத்தில்(வர்த்தமான சரீரத்திற் செய்யப்படும்)வினை ஆகாமியமாம்.

¶ திடஞானியர் அதிடஞானியர் என்னும் இருவருள் இவர் அதிடஞானியாவர். பரதமகாராஜா தம தரசுரிமையைத் துறந்து காடுசென்று கடுந்தவஞ்செய்து, ஞானயோகமுடையவராக வொழுகி, இறக்குங் காலத்தில், தாம் வளர்த்துவந்த மானொன்றைப்பற்றி வருத்தமுற்று, இனியதனைக் காப்பாற்றுவார் யாரென்னுஞ் சிந்தனையோ டிருந்தமையால் மானுயப் பிறந்தாரென்று விஷ்ணுபுராண முதலியன கூறுவதும் பிறவு மிங்ஙன் குணர்தற் பாலனவாம்.

§ வினைப்பயன்கள்—பிராரத்த வினையின் பயனுகிய சுகதுக்கங்கள். சென்ற சரீரத்திற் செய்யப்பட்டு வர்த்தமான (நிகழ்கால) சரீரத்திற் கேதுவாயுள்ள வினை பிராரத்தமாம்.

* வேதனை பற்றி - உண்டி, உடை, உறையுள் முதலியன தக்கனவாகக் கிடைக்கப்பெறுமையா லுண்டாகுந் தளர்ச்சியினால்.

அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாத மெய்ப்பொருணூர்வான் அறுத்தல். † அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

தெளி:—அஃதாவது முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கு நடுகின்ற உடம்பும் அவ்வுடம்புகொண்ட வினைப்பயன்களும் இன்றமையால், வருத்தம் பற்றி ஓரோவிடத்துத் துறக்கப்பட்ட சப்த முதலிய விஷயங்களின் மீது பழைய பழக்க வசத்தினால் மனவு செல்லுமல்லவா, அங்ஙனவும் அஞ்ஞானம் போலப் பிறவிக்குக்காரணமாகலால், அங்ஙனவை இடைவிடாத மெய்ப்பொருணூர்வால் அறுத்தலாம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

க. அவாவேன்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

பரி:—(இ - ள்.) எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைக்கும் வித்து அவாவென்று சொல்லுவர் நாலோர், (எ - று).

‡ உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்த வினையும், ¶ அது காட்டுங்

† மெய்யுணர்தல் அவாவறுத்தற்குக் காரணமாகலின் அக்காரணகாரிய வியைபு நோக்கி, மெய்யுணர்தற்குப் பின் அவாவறுத்தல் வைக்கப்பட்டது.

‡ உடம்பு நீங்கிப்போங் காலத்து (மரணமடையுந் தருணத்தில்) அடுத்த வினையும் (மேல்வரும் பிறவிக்கு அடுத்ததாயுள்ள வினையும்), அது காட்டுங் கதி நிமித்தங்களும் (அவ்வினையானது உயிர் சென்றடையும்படி அவ்வுயிர்க்குக் காண்பிக்கின்ற மக்கட்பிறப்பு முதலியனவும், அம்மக்கட்பிறப்பு முதலியவற்றை யடைவதற்குரிய காரணமும்), அக்கதிக்கண் அவாவும் (அம்மக்கட் பிறப்பு முதலியவற்றில் விருப்பமும்) உயிரின் கண் முறையே வந்துறுப்ப (உயிரினிடத்துக்கிரமமாக ஒன்றன்பின் ஒன்றாகவந்து தோன்ற அஃதாவது முன்னே அடுத்த வினையும் அதன்பின் அதுகாட்டுங் கதிநிமித்தங்களும், அப்பால் அக்கதிக்கண் அவாவும் வந்துண்டாக), அறிவை மோகம் மறைப்ப (தெளிவுண்டாகா வண்ணம் அறிவை மோக மென்னும் விபரீத புத்தி தடுக்க), அவ்வுயிரை (மோகத்தால் தடுக்கப்பட்ட வுயிரை) அவ்வவா அக்கதிக்கட்கொண்டு செல்லுமாகலான் (அவ்விருப்பமானது அப் பிறப்பிலிழுத்துக் கொண்டுபோகு மாதலினால்), அதனை (அவாவை) 'பிறப் பீனும்வித்து' என்று சொல்லினர். "ஆழு வரிச்சையே மேலுமே லும்பிறப் பளிக்குமவித் தெனஞெஞ்சே" என்னும் வைராக்கிய சதகச் செய்யுளி னுரையில் சிதம்பரசுவாமிகள் "உடல்விட்டு உயிர் நீங்குங்கால் யாதோர் அவாத்தோன்றிற்று; அவ்வவாவின் வழித்தாய்ச் சென்று உயிர் பிறத்த லின், அவா பிறப்பிற்குவித்தெனப்பட்டது" என்று கூறியிருத்தலு மிங்கறி யத் தக்கதாம்.

¶ அது காட்டுங்கதி நிமித்தங்களும் என்பதற்குப்பிரதியாக அது காட்டுங் கதியும் என்றும் பாடமுண்டு.

கதி மித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் 'உயிரின்கண் முறையே வந்து நிற்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டு செல்லுமாகலான், அதனைப் 'பிறப்பீனும் வித்து'என்றும், † கதி வயத்தானுனதாய அவ்வுயிர் வேறுபாட்டினும் ‡ அவை தன்மை நிரியும் ¶ உற்சர்ப்பிணி $ அவசர்ப்பிணி யென்னுங் கால வேறுபாட்டினும், அது வித்தாதல் வேறுபடாமையின் 'எல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்' என்றும், § இஃது எல்லாச் சமயங்கட்கும் ஒத்தலான் 'என்ப'என்றுங் கூறினர். இதனால் பிறப்பிற்கு அவா வித்தாதல கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) எல்லாவுயிர்க்கும் - உயிர்களெல்லாவற்றிற்கும், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், தவாஅ -கெடாது வருகின்ற, பிறப்பு - பிறவியை, ஈனும், - உண்டாக்கும், வித்து—காரணம், அவா-அவாவாகும், என்ப-என்று (தூலோர்) சொல்லுவர், (எ - று).

உடம்பு கீழ்ப்போங்காலத்தில் அடித்தவினையும், அவ்வினை காட்டுங் கதிமித்தங்களும், அக்கதியிலவாவும் உயிரினிடத்து முறையே வந்து தோன்ற, அறிவை மோகமானது மறைக்க, அவ்வுயிரை அவ்வவாவானது அக்கதியினிடத்துக்கொண்டு செல்லுமாதலால், அவ்வவாவைப்'பிறப்பீனும் வித்து' என்றும், கதிவசததால் உளதாகிய அவ்வுயிரின் வேறுபாட்டினும், அக்கதிகளின் தன்மை மாறுபடும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி யென்னுங்காலவேறு பாட்டினும், அவ்வவா காரணமாதல் வேறுபடாமையால்'எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும்' எனறும், இஃது எல்லாசசமயங்களுக்கும் ஒத்தலால் 'என்ப' என்றும் கூறினர். இதனால் பிறப்பிற்கு அவா காரணமாதல் சொல்லப்பட்டது.

(க - து.) *பிறப்பிற்குக் காரணம் அவாவாம் என்பது.*

1. The wise say that the seed, which produces unceasing births, at all times, to all creatures, is desire

உ. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

† ஒரு தன்மைத்தாயிருக்கும் உயிர் பிறப்பின் வேறுபாட்டினால் மக்கள் மூதலியனவாகச் சொல்லப்படுதல் பற்றிக் 'கதி(பிறப்பு) வயத்தா (வசத்தா) னுனதாய அவ்வுயிர் வேறுபாட்டினும்' என்று கூறப்பட்டது.

‡ அவை தன்மை நிரியும்-அக்கதி (பிறப்புக்)களி னியல்புவேறுபடும்.

¶ உலகம் வாழ்நாள் போக மூதலியவற்றுல் வளர் பிறைபோலப் பெருகுங்காலம் உற்சர்ப்பிணி எனப்படும்.

$ உலகம் வாழ்நாள் போக மூதலியவற்றுல் தேய்பிறைபோலச் சுருங்குங் காலம் அவசர்ப்பிணி எனப்படும்.

§ இஃது - அவா பிறப்பிற்கு வித்தாதல்.

பரி:—(இ-ள்.) பிறப்புத் துன்பமாதல் அறிந்தவன் ஒன்றைவேண்டின் பிறவாமையை வேண்டும்; அப்பிறவாமை தான் ஒருபொருளையும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானேயுண்டாம், (எ - று).

† அதனியாகத் தான் பிறப்புப் பிணி ‡ மூப்பு இறப்புக்களாற்றுன்ப மூற்று வருகின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின் கண்ணே யாகலின் பிறவாமை வேண்டும் என்றும், ஈண்டைச் சிற்றின்பங்களுள் ஒருபொருளே அவாவின் அது பிறப்பீனும் வித்தாய்ப் பினனும் முடிவில் லாத துன்பமே விளைத்தலின், 'அது வேண்டாமை வேண்டவரும்' என்றும் கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும்வழி கூறத் தொடங்குகின்றமையின் ¶ மற்று வினைமாற்றின் கண் வந்தது.

தெளி:—(இ - ள்.) (பிறப்புத் துன்பமயமாயிருத்தலை யறிந்தவன்) வேண்டுங்கால் - (ஒன்றை) வேண்டினால், பிறவாமை - பிறவாதிருத்தலே, வேண்டும்—விரும்புவான், அது - அப்பிறவாமையானது, வேண்டாமை - (தான் ஒருபொருளையும்) விரும்பாமையை, வேண்ட—விரும்ப, வரும் - (அவனுக்குத் தானே) உண்டாம், (எ - று).

அதனியாகத் தான் பிறப்புப் பிணிமூப்பு இறப்புக்களால் துன்பமடைந்து வருகின்றமையை அறிந்தவனுக்கு ஆசை இன்பத்திலே யாதலால் பிறவாமை வேண்டும் என்றும், இவ்வுலகத்தை சிற்றின்பத்தைக்குறித்து ஒருபொருளேனும்பினால் அவ்விருப்பம்பிறவியமயத்தருங்காரணமாய்ப்பின்னும் முடிவில்லாத துன்பத்தையே உண்டாக்குதலால் 'அது வேண்டாமை வேண்டவரும்' என்றும் சொல்லினர். பிறவாமையின் சிறப்பினைச்சொல்லிப் பின்னர் அப்பிறவாமை வரும் வழியைசொல்ல வாரம்பித்தலால் மற்று வினைமாற்றுப்பொருளில் வந்தது.

(க - து.) பிறப்புத் துன்பந்தருவதென் றறிந்தவன், அதனைப் பெறுமைக்குரிய காரணத்தை விரும்பவேண்டும்.

2. If any thing be desired, freedom from births should be desired;that freedom from births will be attained by desiring to be without desire.

† "துன்பந் தோன்றி லெவருந் துறவறஞ் சேர நாய்த்தனித்தே, யின்பந் தேட லியற்கை" என்பது மகாராஜாதுறவு.

‡ மூப்பு - ஜரத்தனம்.

¶ மற்றென்னு மிடைச்சொல் பிறவாமையென்னும் வினையைப் பிறத்தல் (உண்டாதல்) என்னும் வினையாக மாற்றினமையின், வினைமாற்றுப் பொருளதாயிற்று. பிறவாமை பிறத்தல்- பிறவாதிருத்தல்.

காூ. † வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதோப்ப தில்.

பரி:—(இ - ள்.) ஒருபொருளையும் அவாவாமையை ஒக்கும்விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின் கண் இல்லை; இனி அவ்வளவே அன்று; கேட்கப்படுகின்ற துறக்கத்தின் கண்ணும் ‡ அதனை ஒப்ப தில்லை, (எ - று).

¶ மக்கள் செல்வமும், தேவர் செல்வமும் மேன்மேல் நோக்கக் கீழ்க் கீழாதலுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அதற்கு $ இரண்டிலினுமொப்பதின்மையின் 'அஃதோப்ப தில்'என்றுங்கூறினர்.ஆகம வளவைபோலாதுகாட்சியளவையான் எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள் செல்வம்வகுத்து முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும், விழுச்செல்வமாமெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி:— (இ - ள்.) வேண்டாமையன்ன - (ஒரு பொருளையும்) விரும்பாமையையொத்திருக்கும், விழுச்செல்வம்-மேலாயசெல்வமானது, ஈண்டு-(காணப்படுகிற)இவ்வுலகத்தில், இல்லை—,(இனி அவ்வளவேயல்ல), ஆண்டும் - (கேட்கப்படுகிற) சுவர்க்கத்திலும், அஃதொப்பது - அச்செல்வத்தையொத்திருப்பது, இல் - இல்லை, (எ - று).

மக்களது செல்வமும் தேவரது செல்வமும் மேல்மேல் நோக்கக் கீழ்க் கீழாதலுடைமையால், தனக்குமேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அச்செல்வத்திற்கு இரண்டிலுங்களினும்ஒப்பதில்லாமையின் 'அஃதோப்பதில்'என்றும் சொல்லினர் ஆகமப்பிராணத்தாலறியப்படுவதுபோலாகாமல் பிரத்தியட்சப்பிராமாணத்தால் எல்லாராலும் தெளிந்தறியப்பட்டிருத்தலால், 'விழுச்செல்வ மீண்டில்லை' என மக்களது செல்வம் பிரித்து முன்னே சொல்லப்பட்டது. இவ்விரண்டு பாட்டாலும்.வேண்டாமை பிறவாமைக்கு வழியாமெனவும், மேலாயசெல்வமாமெனவும், அவ் வேண்டாமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) அவாவறுத்தலுக் கொப்பாய செல்வம் எவ்வுலகத்தும் இல்லை என்பது.

† "ஆசை யறுமின்க ளாசை யறுமின்க, ளீசனே டாயினு மாசை யறுமின்க, ளாசை படப்பட வாகும் பெருந்துப, ராசை விடவிட வாகுந் தானே" என்பது திருமந்திரம்.

‡ அதனை-வேண்டாமை யென்னுஞ்செல்வத்தை.

¶ மக்களுள்ளே அரசனது செல்வத்தை நோக்கக் குடிகளது செல்வம் கீழாதலும், தேவர்களுள்ளே பிரமனது செல்வத்தை நோக்க இந்திரனது செல்வம் கீழாதலும் பிறவு மிங்குய்த்துணர்க.

$ இரண்டிலெனு - மண்ணுலகு விண்ணுலகு.

3. There is in this world no excellence equal to freedom from desire; and even in that world, there is nothing like it.

ச. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

பரி:—(இ-ள்.) ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை; அவ்வவா வில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே உண்டாம், (எ-று).

† வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் 'தூஉய்மை' என்றும், ‡ காரியத்தைக் காரணமாக உபசரித்துத் 'தூஉய்மை யென்ப தவாவின்மை' என்றும், வாயமையையுடைய பாரத்தை ஆதுபெயரான 'வாஅயமை' என்றுங் கூறினர். ¶ மற்று மேலையது

† வீடாவது உயிரானது அவிசசை முதலிய குற்றங்களினின்றும் நீங்குதலாதலால், அவ்வீட்டைத் தூய்மையென்று கூறினர். தூய்மையுடைய முதலியைத் தூய்மை யென்றது பண்பாகு பெயராம்.

‡ வீடு காரியமாயும் அவாவறுத்தல் காரணமாயு மிருத்தலால் (வீடாகிய) காரியத்தை (அவாவறுத்தலாகிய) காரணமாக வுபசரித்துத் 'தூஉய்மை யென்ப தவாவினமை' என்று கூறப்பட்டது.

பிறப்பிற் கேதுவாகிய பேதைமையைப் 'பிறப்பென்னும் பேதைமை' என்றாற்போலத் தூய்மைக்கு (வீட்டிற்கு) ஏதுவாகிய அவாவின்மையைத் 'தூஉய்மை யென்ப தவாவினமை' என்று கூறினமையின், இது காரியமாய காரணமாய வுபசார வழக்காம்.

'காரணத்தைக் காரியமாக வுபசரித்துத் தூஉய்மையென்ப தவாவின்மையென்றும்' என்றும்,பாடமுண்டு. அப்பாடத்தினபடி தூயமை(முத்தி) காரணமாயும் அவாவின்மை காரியமாயு மிருத்தல் வேண்டும். [அஃதாவது வீட்டினுல் அவாவின்மை யுண்டாதல்வேண்டு மென்பது.] அவ்வாறில்லையென்பது 'அவாவறுத்தல் வீட்டிற்குப் பரம்பரையானன்றி நேரே யேதுவென்பதாஉம்' என்று கீழே பரிமேலழகர் கூறியிருத்தலினுலும் உணர்க. விளங்கும்; விளங்கவே, அது பாடமன்றென்க.

¶ மற்றென்னு மிடைச்சொல் அவாவின்மை யென்னும் வினையை (அவாவில்லாமை யென்னுங் குறிப்புத் தொழிற்பெயரை) (அவாவின்மை) உண்மை யென்னும் வினையாக மாற்றினமையின், வினைமாற்றுப்பொருளதாயிறது. அவாவின்மை யுண்மை - அவாவின்மை யுண்டாதல்.

தூஉய்மையென்ப தவாவின்மை (முத்திக்குக் காரணம் அவாவின்மை)' என்று அதன் சிறப்பை முன்னர்க்கூறிப் பின்னர் 'அது வாஅய்மை வேண்டவரும்(அவாவின்மை பாம்பொருளே இடைவிடாதுபாவிக்கவரும்)' என்று அவ்வவாவின்மை வரும் வழியைக் கூறத்தொடங்குகின்றமையின்,

போல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல் —இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிற்கு † பரம்பரையானன்றி நேரே யேது வென்பதனாலும், ‡ அதனை வரும்வழியும் இதனாற் கூறப்பட்டன.

தேளி:—(இ-ள்.) தூஉய்மையென்பது - (ஒருவர்க்கு) முத்தியென்று சொல்லப்படுவதை, அவாவின்மை - ஆசையில்லாமையாம், அது-அவ்வாசை யில்லாமை, (தான்), வாஅய்மை-மெய்ம்மையை, வேண்ட-விரும்ப, வரும்-(தானே) உண்டாம், (எ-று).

முத்தியாவது உயிர் அஞ்ஞானம் அகங்காரம் அவா ஆசை கோபம் என்னும் ஐவகை மாசுக்களி (குற்றங்களி) னின்றும் நீங்குவதாகலால், அம்முத்தியைத் 'தூஉய்மை' என்றும், முத்தியென்னுங் காரியத்தை அவா வின்மையென்னுங்காரணமாக உபசரித்துத் 'தூஉய்மை யென்பதவாவின் மை' என்றும், வாய்மையையுடைய பரம்பொருளைப் பண்பாகுபெயரால் 'வாஅய்மை'என்றும் சொல்லினர். மற்று மேற்கூறியதுபோல வினைமாற் றுப்பொருளில் வந்தது.வேண்டுதல்-பரம்பொருளையொற்றுமையுற இடை விடாது பாவித்தல். அவாவறுத்தல் முத்திக்கு ஒன்றன் வாயிலாக வல்லா மல் நேரே காரணமென்பதனும், அவ்வவாவறுத்தல் வரும் வழியும் இதனால் சொல்லப்பட்டன. வாய்மை-மெய்ம்மை.

(க-து.) முத்தியைத்தரும் அவாவின்மையானது பரம்பொ ருளை யொற்றுமையுற இடைவிடாது பாவித்தலா லுண்டாகும்.

மற்றென்னு மிடைச்சொல் மேலையதுபோல (வேண்டுங்கால் வேண்டும் என்னும் இவ்வதிகாரத்தின் 2-வது குறளிலுள்ள மற்றென்னு மிடைச் சொல்போல) வினைமாற்றின்கண் வந்தது என்பதாம்.


† பரம்பரை - ஒன்றைப் பின்பற்றி யிருப்பது.

‡ அதனை வரும்வழியும் - (முத்தியுறுதற்கு நேர்சாதனமாய) அவாவின் மை யுண்டாகும்வழி பரம்பொருளை யொற்றுமையுற இடைவிடாது பாவி த்தலென்பதும்.

சிவோகம்அல்லது அகம்பிரஹ்மாஸ்மி அல்லது பிரமைவாகம்என்று பரம்பொருளை யபேதமாக நிரந்தராப்பியாசஞ் செய்தலால் மனம் பலமு கப்பட்டோடாதபூரணமாக ஒருமுகமாம்; அஃதொருமுகமாய விடத்து, சத்துவகுணத்தால் வைராக்கிய மயமான சாந்தவிருத்தியுண்டாம்; அஃது உண்டாயபோது சிவாநந்தம் அல்லது பிரஹ்மாநந்தம் பூரணமாகவினங்கும்; அது வினங்கியபோது சப்தாதி வாயிலாக வவ்வப்போதுண்டாகும் ஆநந்தம் மிகுவற்பமாகத் தோன்றும்; அது தோன்றச் சப்தாதி விஷயங்களிலுள்ள அவாவறும்; அஃதறவே, வீடு உள்ளங்கைநெல்லிக்கனிபோல் வினங்கும் என்பது ஈண்டுணர்தற்பாற்றும்.

" அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பாமுக மாகுனு லம்மட்டும். நிச த்தி லுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால், வசத்தி லுன் மன தின்றுசின் மாத்திர வடிவமா யிடின்மைந்தா, கசத்த தேசத்தி லிருக் கினு மாநந்தக் கடல்வடி வாவாயே" என்பது கைவல்லிய நவநீதம்.

Purity of mind consists in freedom from desire; and that freedom from desire is the fruit of the love of truth.



இ. அற்றவ ரேன்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றுக வற்ற திலர்.

பரி:—(இ-ள்.) பிறவி அற்றவரென்று சொல்லப்படுவார் அதற்கு நேரே யேதுவாகிய அவா அற்றவர்கள் † பிற ஏதுக்களற்று அஃதொன்றும் அறுதவர்கள், ‡ அவற்றுல் சிலதுன்பங்க ளற்றதல்லது. $ அவர் போற் பிறவி அற்றிலர், (எ-று).

இதனுல் அவாவறுத்தாரது சிறப்பு ¶ விதிமுகத்தானும் எதிர்மறை முகத்தானுங் கூறப்பட்டது,

தெளி:—(இ - ள்.) அற்றவரென்பார்-(பிறவி) அற்றவரென்று சொல்லப்படுவார், அவாவற்றூர் - (அப்பிறவி யறுதற்குநேரே ஏதுவாகிய) அவா அற்றவர்கள், மற்றையார் - பிறவேதுக்கள் அறறு அவ்வவா வொன்றும்

† பிற ஏதுக்களற்று அஃதொன்றும் அறுதவர்கள்-பிறவியுண்டாவதற்குப் பரம்பரைக் காரணமாயுள்ள உயிர்களிடத்துக் கருணையில்லாமை, மாமிசம் புசித்தல், தவஞ்செய்யாமை, கூடாவொழுக்கம், நன்மையைத்தாராத பொய்பேசுதல், திருடுதல், கோபங்கொள்ளுதல், பிறர்க்குத நீமை புரிதல், பிராணிகளைக் கொல்லுதல் முதலிய வேறு காரணங்க ளொழியப்பெற்று அவ்வவாவொன்றும் ஒழியப் பெறுதவர்கள்.

‡ அவற்றுற் சிலதுன்பங்க ளற்றதல்லது - பிறவிக்குப் பரம்பரைக் காரணங்க ளொழியப்பெற்றமையால் சிலதுன்பங்க ளொழிந்த தல்லாமல்.

$ அவர்போல் - அவா அற்றவர்கள்போல்.

¶ அவா பிறவிக்கு நேரேயேதுவும், அவாவறுதல் பிறவியறுதற்கு நேரே யேதுவுமாமென்க.

'அற்றவரென்பா ரவாவற்றூர்' எனவிதி முகத்தானும் (உடம்பாட்டாலும்)'மற்றையா ரற்றுக வற்றதிலர்'என எதிர்மறை முகத்தானும்ஆசையற்றவரது மகிமை சொல்லப்பட்டது. இதனுல் ஆசையற்றவர்க்குப் பிறப்பில்லையென்றும் ஆசையுறுதவர்க்குப் பிறப்புண்டென்றும்பெறப்பட்டன, (இக்கு அற்றூர் என்னும் உடம்பாட்டுவினை விதிமுகமாம்; இலர் என்னும் எதிர்மறைவினை மறைமுகமாம்.) ப்ரபுலிங்கலீலை, ''ஆசை யறுதல் வீட்டின்ப நேரே யடையக் காரணமாம், ஆசை யறுத லலதில்லைப் பலனு லனேத்து மாய்ந்திடினும், ஆசை யுறுதலோன் செனுத நிண்ண மெனைன் றறிந்திருந்தும், ஆசை யுறுத லென்கொண்டோ யன்தோ மனித ரறியோ மே'' என்று கூறுவதும், திருமந்திரம் ''ஆசையு மன்பு மறுமி னறுத்த பின், ஈச னிருந்த விடமெளி தாமே'' என்று கூறுவதுமிங்குச் சுவனிக்கத்தக்கனவாம்.

அருதவர்கள், (அவ்வேதுக்க ளற்றமையால் லெதுன்பங்கள் அற்றதல்லா மல்), அற்றகவற்றதிலர் - அவர்போற் பிறவியற்றிலர், (எ - று).

இதனுல் அவாவறுத்தவாது சிறப்பு உடம்பாட்டினுலும் எதிர்மறையி னுலும் சொல்லப்பட்டது.

(க-து.) ஆசையற்றவர்க்குப் பிறவியறும்; மற்றவர்க்கஃதறாது.

5. They are said to be free who are freed from desire; all others who, whatever else they may be free from, are not freed from desire.

சூ. அஞ்சுவ தோரு மறனே யொருவினை
வஞ்சிப்ப தோரு மவா

பரி:—(இ - ள்.) † மெய்யுணர்தல் ஈறகிய காரணங்க ளெல்லாம் எய்தி ‡ அவற்றுன் வீடெய்தற்பாலனைய ஒருவனை $ மறவிவழியாற் புகு நீது பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்கவல்லது அவா; ஆகலான் அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது, (எ - று).

ஒருமென்பன அசைநிலே. அகாதியாய்ப் போந்த அவா ஒரோவழி ¶ வாய்மை வேண்டலே யொழிந்து () பராக்காற்காவாளுயின், †† அஃதிட மாக அவனறியாமற் புகுந்து, பழைய இயற்கையாய்கின்று பிறப்பினை யுண் டாக்குதலான். அதனை 'வஞ்சிப்பது' என்றுர். * காத்தலாவது வாய் மை வேண்டலே இடைவிடாது பயின்று அது செய்யாமற் பரிகரித்தல். இதனுல் அவாவின் குற்றமும் அதனைக்காப்பதே அறமென்பதூஉம் கூறப் பட்டன.

தேனி:—(இ - ள்.) ஒருவினை - (நிலையாமை மூதல் மெய்யுணர்தல் முடிவாயுள்ள காரணங்களெல்லாம் பெற்று அக்காரணங்களால் முத்தியை

† நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தலென்பன வீட டைதற்குக் காரணங்களாம்; இவற்றுள் அவாவறுத்தல் சேர்காரணமாம்; மற்றவை பரம்பரைக் காரணமாம்.

‡ அவற்றுன் - நிலையாமை முதலிய காரணங்களால். $ மறவி - சோர்வு.

¶ வாய்மைவேண்டலே யொழிந்து - பரம்பொருளை யொற்றுமையுற விடைவிடாது பாவித்தலே விட்டு.

() பராக்காற் காவாளுயின் - அஜாக்கிரதையினுல் (ஆசையைப்) பாது காவாளுனல். (பாதுகாத்தல் - ஒழித்தல்).

†† அஃதிடமாக அவனறியாமற் புகுந்து-(அவ்வாசையானது) பாது காவாமை வாயிலாக அவன் தெரிந்துகொள்ளாதபடி பிரவேசித்து.

* காத்தலாவது பரம்பொருளையொற்றுமையுறப்பாவித்தலே யிடைவி டாது அப்பியசித்து வஞ்சித்தல் செய்யாதபடி அவாவை ஒழித்தலாம்.

யடைதற்குரியவனுகிய) ஒருவனே, வஞ்சிப்பது - (மறவிவழியினுல்நழை த்து பின்னும் பிறப்பிலேதள்ளிக்) கெடுக்கவல்லது, அவா - அவாவாம், (ஆதலால்), அஞ்சுவது - (அவ்வவாவை) அஞ்சிக்காப்பதே, அறன் - அற வறமாம், (எ - று).

ஒரு மிரண்டும் - ஆசைகள். அநாதியாய் வந்துள்ள அவா ஒரோவிட த்து வாய்மை வேண்டலே யொழிந்து பராமுகத்தால் காவாதவனுனல், அக்காவாமை இடமாக அவன் அறியாமல்புகுந்து பழைய வியற்கையாய் நின்று பிறப்பினை உண்டாக்குதலால், அவ்வவாவை 'வஞ்சிப்பது' என்ருர். காத்தலாவது வாய்மை வேண்டலே இடைவிடாமற் பழகி அவ்வஞ்சித்தலைச் செய்யாதபடி யொழித்தல். இதனுல் அவாவின் குற்றமும் அவ்வவாவைக் காப்பதே (ஒழிப்பதே)அறமெனபதும் சொல்லப்பட்டன.

(க - து.) வஞ்சித்துக் கெடுக்கவல்லது ஆசை யாதலின், அதனை அஞ்சி யொழிப்பதே அறமாம் என்பது.

6. It is the chief duty of an ascetic to watch against desire with jealous fear; for it has power to deceive and destroy him.

எ. அவாவினை யாற்ற வறப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்ருன் வரும்.

பரி:—(இ-ள்.) ஒருவன் அவாவினை யஞ்சித் துவாக் கெடுக்க வல்ல னுயின், அவனுக்குக் கேடாமைக்கேதுவாகிய வினை தானே விரும்புநெறி யாலே உண்டாம், (எ - று).

கேடாமை - பிறவித்துன்பக்களான் அழியாமை. † அதற்கேதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய ‡ அறவறங்களை. வினை- சாதியொருமை. தான்விரும்புநெறி - () மெய்வருந்தாநெறி. அவாவினைமுற்ற வறத்தானு

† அதற்கேதுவாகிய—கேடாமைக்குக் காரணமான. ‡ அறவறங்கள் —விரதமும் ஞானமும்.

() "வருத்தமொன் றின்றிச் சாரலாம் பிரம மென்றயன் வருத்தகீ தையினு; மைத்த தெற்றினுக்கா யெனிற்பர ஞான மூணர்பவர்க் குண்ணுத லுரைத்த, னிரைத்திலே தொழில்க ளொன்றுமவேண் டாதுநீத்துவா ளாவி ருத் தலினு, லருத்தமற் றதனுக் கோர்ந்ததனு நெளித லாகுமீ தணிந்தனே போலும்" என்பது வைராக்கிய தீபம். "ஆதலா லறிவு மதிவெலாம் கை விட் டறிவினுக் கறிவதாய் நின்ற, பேதமில் பிரம மொன்றுமே யறிவான் பேறுபே றின்பமாம் பிறத்தல், சாதலற் றிருக்கு மதனையோர் வருத்த மின் றியே சாரலா யிருக்க, வாதரித் தறியா தற்பமே விரும்பி யனந்தத்துக் கத் திலே யமைவார்" என்பது பிரமதீபை.

க்கு வேறறஞ் செய்யவேண்டா,¶ செய்தனவெல்லாம் அறமாமென்பதைகருத்து. இதனால் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) அவாவினை - ஆசையை, ஆற்றவறுப்பின் - (அஞ்சி) முழுதும் ஒழித்தால் (வஞ்சித்தும் வாராமற் கெடுக்கவல்ல வனலால்), (அவனுக்கு), தவாவினை - கெடாமைக்கு ஏதுவாகிய செயல், தான்வேண்டுமாற்றால் - தான்விரும்பும் வழியினாலே, வரும் - உண்டாகும், (எ - று).

கெடாமை - பிறவித் துன்பங்களால் அழியாமை. அதற்குக் காரணமாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை. வினை - சாதியொருமைப்பெயர். தான் விரும்பும்வழி - உடல் வருந்தாதவழி. அவாவை முழுதும் ஒழித்தவனுக்கு வேறு அறஞ்செயய வேண்டுகில்லை, அவன் செய்தகருமங்களெலாமே அறமாமென்பது கருத்து. இதனால் அவாவறுத்தலினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) ஆசையை யொழித்தவனுக்குக் கெடாமைக் கேதுவாகிய துறவறம் தானே யுண்டாகும் என்பது.

7. If a man thoroughly cut off all desire, the deeds which confer immortality, will come to him, in the path in which he seeks them.

அ. அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாவது மேன்மேல் வரும்.

பரி:—(இ - ள்.) அவாவில்லாதார்க்கு வாக்கடவதோர் துன்பமும் இல்லை; ஒருவந்தப் | பிறகாரணங்களெல்லாம் இன்றி அஃதொன்றும் உண்டாயின், அதனாலே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும், (எ - று).

உடம்பு ‡ முகந்துகொண்ட துன்பம் முன்பே செய்துகொண்டதாகலின், ஈண்டித்துன்ப மென்றது இதுபொழுது அவாவாற் செய்து கொள்ளவற்றை. 'தவாஅது மேனமேல் வரும்'என்றதனால் மூவகைத் துன்பங்களுமென்பது பெற்றாம். இதனால் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது.

¶ "தட்டீரு மார்க்கா தலிற் றவக்குணப் பெரிய ராகிச,சிட்டராய்த் தீர ராகிச சிவனரு ளுடைய ராளர், கட்டமாம் பிறவி நீரைக் காதலால் வேதஞ் சொல்லப், பட்டதே செய்யா கிற்பர் பரமமாம் பதத்தை யுன்னி" என்பது பிரமதேதை.

† பிறகாரணங்கள்—(துன்பத்திற் கேதுவாகிய) அவாவொழிந்தமற்றைக் காரணங்கள். அவை அருளாசை, பொய்பேசுதல் முதலியன.

‡ முகந்துகொண்ட - (உயிர்) அனுபவிப்பதாகக் கொண்டுகின்ற.

தெளி:—(இ - ன்.) அவாவில்லார்க்கு - ஆசை யில்லாதவர்க்கு, துன் பம் - (வரக்கடவதாகிய) ஒருதுன்பமும், இல்லாகும் - இல்லையாம், (ஒருவனுக்குப் பிறகாரணங்க ளெல்லாம் இல்லாது), அஃதுண்டேல்- அவ்வாசை யொன்று மாத்திரம் உண்டாயின், (அவ்வாசையினுலே எல்லாத் துன்பங்களும்), தவாஅது - முடிவில்லாமல், மேன்மேல் - மேலுமேலும் (இடைவிடாமல்), வரும, உண்டாகும், (எ - று).

உடம்பு மொண்டு கொண்டிருந்த துன்பம் முன்பே (கீழ்ப்போன பிறவிகளில் நல்லன தீயன) செய்து கொண்டதாகலின், இவ்குத் துன்ப மென்றது, இப்போது ஆசையினுல் செய்துகொள்ளுந துன்பங்களை, 'தவாஅது மேன்மேல் வரும்' என்றதனுல் தன்னைப்பற்றி வருவதும், பிற வுயிரைப்பற்றி வருவதும், தெய்வத்தைப்பற்றி வருவதும் ஆகிய மூவகைத் துன்பங்களு மென்பது பெற்றும். இதனுல் ஆசையே துன்பத்திற்குக் காரணமாமென்பது சொல்லப்பட்டது.

(க - து.) ஆசையின்மையினுல்இன்பமும்அஃதுண்மையினுல் துன்பமும் உண்டாகின்றன என்பது.

8. There is no sorrow to those who are without desire but where that is, sorrow will incessantly come more and more.

கூ. † இன்ப மிடையரு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

பரி:—(இ - ள்.) அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின், அவன் வீடு பெற்றவழியே அன்றி உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையறாது, (எ - று).

துன்பத்துட்டுன்பம் - ‡ ஏனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருந் துன்பம். வினைவின் கண்ணே அன்றித் தோற்றத்தின்கண்ணும் துன்ப மாகலின், இவ்வாறு கூறப்பட்டது. ¶ காரணத்தைக் காரியமாக உபசரித்து 'அவாவென்னுந் துன்பத்துட்டுன்பம்' என்றும், அது கெட்டார்க்கு மனந்தடுமாறுது கிரம்பி நிற்றலான் ஈண்டுமின்ப மிடையரு தென்றுங் கூறினர். இனி ஈண்டும் என்பதற்குப் § பெருகுமென்றுரைப் பாருமுளர்.

† "இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந், துன்பத்துட் டுன்பங் கெடின்" என்னுங் குறளுமீண்டுணர்த்தற்பாலதாம்.

‡ ஏனைத்துன்பங்க ளென்றது குட்டம், குன்மம், சூலை முதலிய வற் றுலாயதுன்பங்களை.

¶ அவாவினுல்வரும் துன்பத்தை 'அவாவென்னுந் துன்பத்துட் டுன் பம்' என்ற ஒற்றுமைப்படுத்திக் கூறினமையின், இது காரணங்காரியமாய உபசார வழக்காம். § பெருகும்—(இன்பமிடையரு தி) அதிகரிக்கும்.

இதனால் அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அவாவென்னும் - ஆசையென்ற சொல்லப்படுகிற, துன்பத்துட்டின்பம் - (துன்பங்களுள்ளே) மிகுந்ததுன்பமானது, செடின் - (ஒருவனுக்குக்) கெடுமாயின், (அவன் முத்திபெற்ற விடத்தேயல்லாமல்), ஈண்டும் - உடம்போடுகூடி நின்றவிடத்தும், இன்பம் - பேரின்பமானது, இடையறாது - நடுவே நீங்காது, (எ - று).

துன்பத்துட்டின்பம்-மற்றைத் துன்பங்களெல்லாம் இன்பங்களாய்த் தோன்றும்படி வருங் கொடிய துன்பமாம். ஆசையானது பயனைக் கொடுக்கும்போதே யல்லாமல் தோன்றும்போதும் துன்பந்தருவதாகலால், 'அவாவென்னுந் துன்பத்துட்டின்பம்' என்றிவ்வாறு சொல்லப்பட்டது. அவாவென்னுஞ் சாரணத்தைத் துன்பத்துள் துன்பம் என்னுங்காரியமாக உபசரித்து 'அவாவென்னுந் துன்பத்துட்டின்பம்' என்றும், அவ்வவா கெட்டவர்க்கு மனந் தடுமாறுதலின்றி (பிரஹ்மாநந்தத்திலுள்) நிரம்பி நிற்குமாகையால் ஈண்டும் இன்பம் இடையறாது என்றும் சொல்லினர். இதனால் அவாவறுத்தவர் முத்தியின்பத்தை உடம்போடு கூடி நின்றே யடைவாரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) ஆசையற்றவர்க்குப் பூரணாந்த முண்டாமென்பது.

9. Even while in this body, joy will never depart from the mind in which desire has been destroyed.



கo. † ஆரா வியற்கை யவாநீப்பி னங்கிலையே
பேரா வியற்கை தரும்.

பரி:—(இ - ள்.) ஒருகாலும் ‡ நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந்நீப்பு அவனுக்கு அப்போழ்தே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனும் இயல்பைக் கொடுக்கும், (எ - று).

நிரம்பாமையாவது § தானேயன்றித் தம்பயனும் நிலையாமையின்,

† மனுதரும சாஸ்திரம் ஆறாவதத்தியாயத்தில் "எப்போது பிரமத்தியானத்தினுள் தோஷத்தையே யுண்பெண்ணுவதாய எல்லா விஷயங்களிலும் ஆசையை நீக்குகிறானே அப்போது இம்மையிலும் மறுமையிலும் அழிவற்ற சுகத்தை யடைகிறான்" என்று கூறுவதும், திருமந்திரம் "வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர், வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர், வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம், வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே" என்று கூறுவதுமிங்கியத் தக்கனவாம்.

‡ நிரம்பாத - திருப்தியடைதலில்லாத.

§ தானேயன்றித் தம் பயனும் - பொருள்களே யல்லாமல் அப்பொருள்களால்வரும் (சிற்றின்பப்) பயன்களும்.

வேண்டாதனவாய பொருள்களே வேண்டி மேன்மேல் வளர்தல். ‡ அவ் வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. † களிப்புக் கவற்செலும் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களும்முதலாயினவின்றி உயிர் சிறிதிசைய வின்பத்ததாய் நிற்றலின், வீட்டினைப் 'பேராயியற்கை' என்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒருதலையாகலின், அந்நிலையே தரும் என்றுங் கூறினர். ¶ "கன்றுய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்

---

‡ அல்வளர்ச்சிக்கு அளவின்மையின்-ஆசையின் பெருக்கத்திற்கு அள வில்லாமையால். ஆசையின் பெருக்கத்திற்கு அளவில்லை யென்பது "ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி யாளினுங் கடன்மீதிலே யாணைசெல வேகினவ ரளகேச னிகராக வம்பொன்மிக வைத்தபேரும், நேசித்த ரசவாத வித்தைக் கலைந்திடுவர் நெடுநா ளிருந்தபேரும் நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி நெஞ்சுபுண் ணுவர்' என்று தாயுமானார்வர் கூறுவதனாலுமறியப்படும்.

† "களிப்புங்கவர்வு மற்றப் பிறப்புப் பிணிமூப் பிறப்பற், றெளிக் கொண்ட சோதியுமா யுடன்கூடிவ தென்றுகொலோ" என்பது திருவாய் மொழி.

¶ திருவாய்மொழி, 78 - பதிகம் 6-வது செய்யுள். இதன்பொருள் (ஒருவன்) கன்றுய் - கன்றுக, ஞானம் - சப்தாதி விஷய ஞானங்களே, கட கந்துபோய்-ஒழித்துச்சென்று, நல்லிந்திரிய மெல்லாம்-(சம்மைத் தலைமை யாகவுடையவனைச் சப்தாதிவிஷய வாயிலாகக் கெடுப்பதிற்) றெந்தசெவி யாதி யிந்திரியங்களே யெல்லாம், ஈர்த்து-(சப்தாதி விஷயங்களிற்செல்லா வண்ணம்)கிக்கிரகித்து, ஒன்றுய்க்கிடந்த-(உயிரோடி அதாயே)பொருந்தி க்கிடந்த. அரும் - (மெய்யுணர் வுடையவர்க்கன்றி வேறெவராலும்) கடத் தற்கரிய, பெரும் - (மகத்தத்துவமுதலிய தத்துவங்களே நோக்க) வியாபக மான, உலப்பில் - (மெய்யுணர்வாலன்றி வேறெதனலும்)கெடுதலில்லாத, பரமதனை -.பிரகிருதியை, உணர்ந்து உணர்ந்து - (கேட்டல் சிந்தித்தல்க ளால் சந்தேக விபரீதமில்லாமல் தெளிக்கும் வகையை) கன்றுயறிந்து, ஆங் குச்சென்று - (எவ்வகையாலும் பிரகிருதிக்கு வேறு பட்டுள்ள) ஆத்மா வரையிற்சென்று, இன்பதன்பங்கள் · இன்பதன்பங்களுக்குக் காரண மான தருமாதருமங்களே, செற்றுக்களைந்து - (பின்னும் பிறப்பை யுண் டாக்காதபடி) பற்றறவொழித்து, பசை - (விடப்பட்ட சப்தாதி விஷயங் களில் பழையபழக்க மிருதியால் வருத்தம்பற்றி யுண்டாகும்) ஆசையை, அற்றுல் - (பரம்பொருளே யொற்றுமையுற இடைவிடாது பாவித்தலால்) ஒழித்தால், அன்றே - (அவ்வாசை யொழித்த) அக்ஷணமேயே, அப்போ தே - அம்முகூர்த்தத்திலேயே, வீடும் - காமம் வெகுளி மயக்கங்கள் நீங் கும், வீடதுவே - காமம் வெகுளி மயக்கங்கள் நீங்குமதுவே, வீடாம் - (அவனுக்கு) மோட்சமாம், என்பது. வெகுஞானபோதச் நிற்றலையில் "ஞனியாவது உன்னதமன்று, இல்லதுமன்று, இரண்டுமாவது மன்று, வேறுமன்றெனப்படும் பாழ்" என்று கூறப்பட்டிருக்கிறதால், பாழின் தன் மையுணரப்படும்.

லாமீர்த், தொன்றுய்க் கிடந்த வரும்பெரும்பா முலப்பி லதனே யுணர்ந் துணர்ந்து, சென்றுங் கின்ப தன்பங்கள் செற்றுக் களேந்து பசையற்று, லன்றே யப்போ தேவீடு மதுவே வீடு வீடாமே" என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது. இந்திலைமையுடையவனே வடநூலார் † சீவன் முத்தனென்ப. இதனால் வீடாவது ‡ இதுவென்பதூஉம், அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதாமென்பதூஉங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) ஆராவியற்கை - (ஒருபோதும்) நிரம்பாதலியல் பினையுடைய, அவா-அவாவை, நீப்பின்-(ஒருவன்) ஒழிப்பானாயின், (அவ் வொழித்தல் அவனுக்கு), அந்நிலையே-அப்போதே, பேராவியற்கை-எப் போதும் ஒரு நிலைமையனுக்தன்மையை, தரும் - கொடுக்கும், (எ-று).

அவா நிரம்பாமையாவது தானேயல்லாமல் தம்பயனும் நிலையாமை யால்வேண்டத்தகாதனவாய பொருள்களே வேண்டிமேலுமேலும்வளர்தல், அவ்வவாவின் வளர்ச்சிக்கு அளவில்லாமையால், அதனை யொழித்தலேதக்க தென்பது கருத்து. களிப்புக் கவலைகளும், பிறப்புப் பிணி மூப்பு இறப் புக்களும் முதலாயின வில்லாமல் உயிர் பேரின்பத்தை யுடையதாய் நிற்றலால் வீட்டினைப் 'பேராவியற்கை' என்றும், அவ்வீடு அவாவை யொழித்த விடத்தும் பெறுதல் நிசயமாதலால் அந்நிலையே தரும் என்றும் சொல்லினர். இந்நிலையையுடையவனே வடநூலார் சீவன்முத்தனென் பர். இதனால் வீடாவது இதுவென்பதும், அவ்வீடு அவாவை யொழித்த வர்க்கு அப்போதே உண்டாமென்பதும் சொல்லப்பட்டன.

(க - து.) ஒருவன் அவாவை யொழிப்பானாயின், அஃது அவனுக்குச் சீவன் முத்நிலையைத் தரும் என்பது.

10. The removal of desire, whose nature it is never to be satisfied, will immediately confer a nature that can never be changed.

துறவறவியல் முற்றிற்று.

பரி:—இவ்வாற்றான் இம்மை, மறுமை, வீடென்னு மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறங்கூறினார்; இனிப்பொருளும் இன்பமுங் கூறுவார், ¶ அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

† சீவன்முத்தன்—சீவத்துவம் விடுபட்டவன்.

‡ இது-பேராவியற்கை (எஞ்ஞான்றும் ஒருநிலைமையனாகியல்பு).

¶ "வாழ்வுக ளாலென் மறைகெழி ஞான மதனுலென், கேள்விக ளாலென் கிளர்மணி வாலென் இளையாலென், வேள்விக ளாலென் விண்ணவ ராலென் வீளைவெல்லாம், ஊழ்வினை தானே தருதலி னூழே யிறையென் றான்" என்பது பெருக் திரட்டு.

'அவற்றின் (பொருளின்பங்களின்) முதற்காரணமாகிய ஊழின் வலி கூறுகின்றார்' என்றமையின், ஊழ் பொருளுக்கும் இன்பத்திற்கும்

தெளி:—இவ்விதத்தால் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றை யுந் தருதற் பிறப்புடையதாகிய அறத்தை அருளிச்செய்தார்; இனிப்பொருளும், இன்பமும் அருளிச்செய்யத் தொடங்கியவர், " அப்பொருளின்பங்களின் முதற்காரணமாகிய ஊழினுவலியைச சொல்லுகின்றார்.

ஊழ்—Fate.

பரி:—அஃதாவது * இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய † நியதி. ஊழ், பால், முறை, உசிதமை, தெய்வம்,

முதற்காரணமாமென்பது வெளிப்படையாம். "இயற்றலு மீட்டலும்" என்னுங்குறளின் விசேட வுரையில், "பொருள்களாவன—மணி, பொன், செல் முதலாயின" என்றும், காமத்துப்பாலின் தொடக்கத்தில் "ஈண்டின்பமென்றது ஒருகாலத தொருபொருளான் ஐம்புல னுகர்தற் பிறப் புடைத்தாய காமவின்பத்தினை" என்றும் பரிமேலழகரே கூறியிருத்தலால், ஊழ் பொருளின்பங்களுக்கு முதற்காரணமாகதென்பது தெளிவினு விளங்கும். "முதற்காரணமாவது காரியத்தோ டொற்றுமை யுடையது" என்று கச்சினார்க்கினியார் கூறுதலால், மண் தனது காரியமாகிய கூடத்தில் ஒற்றுமையுடையதாயிருத்தல் போல ஊழ் பொருளிலும் இன்பத்திலும் ஒற்றுமை யுடையதாயிருத்தல் வேண்டும்? மேலும், காரியத்தினெடுக்கம் அதனது முதற்காரணத்தினென்பது வெளிப்படையாமாகலின், பொருளும் இன்பமும் ஊழின்கண் ஒடுங்கல்வேண்டும். மணி, பொன், செல் முதலியன தமது முதற் காரணமான பிருதிவியிலும், இன்பம் தனது முதற்காரணமான மனம் அல்லது உயிர் என்னும் இரண்டினுள் யாதாவ தொன்றிலும் ஒடுங்குவனவாயிருத்தலின், அவற்றிற்கு ஊழ் முதற்காரணமாமென்பது பொருந்தாது. முதற்காரணம் யாண்டும் நிரவியமாயிருத்தல் வேண்டுமென்பது நியமமாதலின், உருவமுதலிய குணங்களுள் ஒன்றிய ஊழ் - (அதிருஷ்டம் - தருமாதருமம்) எக்காரியத்திற்கும் முதற்காரணமாதல் ஒருவாற்றினும் அமையாது. அவ்வாறாயின், பரிமேலழகர் கூறியது தவறோ எனின், கூறுதும்:-ஒருவனிடத்துப் பொருளின்பங்கள் வருவதற்கு ஊழ் காலம் நிக்கு ஆகாயமுதலியனபோலச் சாதாரண காரணமாயிராது அசாதாரண காரணமா யிருக்கின்ற சென்ப தினைத்தற்பொருட்டு, பொருளின்பங்கட்கு ஊழை முதற்காரணமென்றுகூறினர். முதற்காரணமென்பதற்குத் தலைமைக்காரணம் அஃதாவது அசாதாரண காரணமென்னும் பொருள் கொள்ளல்வேண்டும். ஊழ் பொருளின்பங்கள் வருதற்கு நிமித்த காரணமாம். ஒன்றன் உற்பத்தி மாத்திரத்தின் நிமித்தகாரணமாம்.

* "திருவசனம் அல்லது நிருத்தி என்பதாவது ஊழ்; அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய நியதி என ஒருசொற்கு வாக்கியத்தோடாகப் பொருளுணர்த்தவ தென்ச." என்பது பிரயோகவிவேகவுரை.

† "பல்லாவு ணூய்த்தி விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்காடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த, ழிவ னே காடிக் கொளற்கு" என்பது நாலடியார்.

நியதி, விதி என்பன ஒருபொருட் கிளவி. இது பொதுவின்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற் கூறிய † அறத்தோ டியைபுடைமையானும், ‡ அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது நல்வினையின்பயனுகிய இன்பமும், தீவினையின் பயனுகிய துன்பமும், அவ்வவ்வினையைச செய்தவனையே சென்றடைவதற்குக் காரணமாகிய நியதியாம். ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி எனபவை ஒருபொருட் சொற்கள். இவ்வூழ் பொருளின்பகரிரண்டிற்கும் பொதுவாய் ஒன்றனுள்வைக்கப் படாமையாலும், முன் சொல்லிய அறத்தோடு சமபந்தமுடைமையாலும், அதனிறுதியில் வைகுகப்பட்டது.

க. ஆகூழாற் ரேன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் ரேன்று மடி.

பரி:—(இ - ள்.) ஒருவற்குக் $ கைப்பொரு ளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சி உண்டாம்; அஃதிழத்தற்குக் காரணமாகிய ஊழான் மடி உண்டாம், (எ - று).

¶ ஆகூழ் போகூழெனனும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு—மடி † பொ

† இல்லறத்தின் பயனும் துறவறத்தின பயனும் ஊழின் படியிருத்தலின் 'அறத் தோடியைபுடைமையானும்' என்று கூறப்பட்டது.

‡ அதனது இறுதிக்கண்—அறத்துப்பாலின் ஈற்றில் (முடிவில்).

$ கைப்பொருளாதற்கு-கையிற்பொருளுண்டாகிவிருத்தியடைதற்கு.

¶ கைபபொருள ஆதற்குகாரணம் நல்லூழாயும் அப்பொருள் அழிதற்குக்காரணம் நிலூழாயுமிருத்தலால்ஆகூழ் என்பதும் போகூழ் என்பதும் காரணப்பொருளில் வந்த எதிர்கால வினைத்தொகைகளாயின; ஆகூழ்-ஆற்குக் காரணமாகிய ஊழ் எனறும், போகூழ் - போதற்குக் காரணமாகிய ஊழ் எனறும் விரியும். வினைச்சொல்லின்பகுதியும் பெயர்சொல்லும் புணர்ந்து வருவது வினைத்தொகை யெனப்படும். இவ்ரு ஆகுபோகு என்னும் வினைச்சொற்பகுதிகள் ஊழ் என்பதனேடு புணர்ந்து வினைத்தொகைகளாய் நின்றவாறறிக. இலக்கணக்கொத்து "வினைச்சொ லிலக்கணம்" என்னுஞ் சூத்திரத்தினுரையில் "நகரிஞர்கினியார் நன னூலார் முதலாயினேர் இயற்கை முதனிலே ஆபோ என்றே இருக்குமெனறார். திருவள்ளுவர் பரிமேலழகர் முதலாயினேர் இயற்கை முதனிலே ஆகு போகு என்றே இருக்குமெனறார்" என்று கூறியிருத்தலு மிங் கறியதக்கதாம்.

† பொருளின் ஆக்கத்திற்குத் தினைக்காரணம் முயற்சியென்றும், அதனழிவிற்குத் தினைக்காரணம் மடி (சோம்பல்) என்றும் கொள்க.

ருளின் ஆக்க வழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளையும் தானே தோற்றுவிக்கு மென்பது கருத்து.

தெளி:—(இ-ள்.) (ஒருவனுக்கு) ஊக்கப்பொருள்—, ஆகூழால் - ஆவ தற்குக் காரணமாகிய ஊழினால், அசைவின்மை - முயற்சியானது, தோன் றும் - உண்டாகும், போகூழால் (அப்பொருள்) அழிதற்குக் காரணமாகிய ஊழினால், மடி - சோம்பலானது, தோன்றும் - உண்டாகும், (எ - று).

ஆகூழ் போகூழ் என்பன காரணப்பொருளில்வந்த எதிர்கால வினைத் தொகைகள். அசைவு—சோம்பல். ஊழானது பொருளினது ஆக்கவழிவு களுக்குத் துணைக்காரணமாகிய முயற்சி சோர்பல்களையுந் தானே தோன் றச்செய்யு மென்பது கருத்து.

(க-து.) ஆகூழினல் முயற்சியும் போகூழினல் சோம்பலும் உண்டாம் என்பது.

1. Perseverance comes from a prosperous fate and idleness from an adverse fate.

---

2. பேணுப் படுக்கு மீழ்ந்து முறிவற்று
மாகலு முற்ற கடை.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்கு எல்லா அறிவு† உளவாயினும் கைப் பொருளிழத்தற்குக் கேதுவாகிய ஊழ் வந்துற்ற விடத்து, * அஃது அத னைப் பேதையாக்கும்; இனி அவனறிவு சுருங்கி பிறபயினும் கைப்பொரு ளாதற் கேதுவாகிய ஊழ்வந்துற்ற விடத்து † அஃது ‡ அதனை விரிக் கும், (எ - று).

¶ கைப்பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. § இழவூழ் ஆகலு மென்பன இரண்டும் வேற்றுமைத்தொகை. உற்றக்கடையென்பதுமுன் னுங் கூட்டப்பட்டது. இயற்கையோடு அறிவையும் வேறுபடுக்கு மென்ப தாம்.

தெளி:—(இ - ள்.) (ஒருவனுக்கு) அறிவு - எல்லாவறிவும், (உண்டா யிருக்தாலும்), இழவு - (கைப்பொருளை) இழத்தற்குக் காரணமாகிய, ஊழ்- ஊழானது, (வந்து), உற்றக்கடை-பொருந்திய விடத்தில், (அவ்வூழானது),

* அஃது - கைப்பொருளிழத்தற்குக் காரணமாகிய ஊழ்.

† அஃது-கைப்பொருள் விருத்தியாதற்குக் காரணமாகிய ஊழ்.

‡ அதனை - அச்சுருங்கியவறிவை.

¶ "ஆகூழாற்சேறன்றம்" என்னும் குறளிலுள்ள கைப்பொருள் என் பது ஊழென்னு மதிகாரத்தினல் இக்குறளிலும் வந்தது.

§ இழவூழ் ஆகலூழ் என்னு மிரண்டும் இழத்தற்குக் காரணமாகிய ஊழ் என்றும், ஆதற்குக்காரணமாகிய ஊழ் என்றும் முறையே விரியும்.

பேதைப்படுக்கும் - (அவ்வதிகாரி) அறியாமையாக்கும், (இனி அவனுலார் சுருங்கியிருந்தாலும்), ஆகல் - (கைப்பொருள்) ஆவதற்குக் காரணமாகிய ஊழ்-ஊழானது, (வந்து), உற்றக்கடை - பொருந்திய விடத்து, அகற்றும் - (அவ்வூழ்வகிரியினை) பரருசை செய்யும், (எ - று).

கைப்பொருளென்பது ஊழென்னும் அதிகாரத்தால் கருவிக்கப்பட்டது. இரண்டு ஆகலூழ் என்பன நாலகாம் வேற்றுமை யுருபும் பயனு முடன்றொக்க தொகைகள். உற்றக்கடையென்பது இருவூழ் என்பதனே டுங் கூட்டப்பட்டது. ஊழ் இயற்கையாலாகிய அறிவையும் வேறுபடுத்து மென்பதாம்.

(க - து) ஒருவன் அறிவிலியா யிருப்பதற்கும் அறிவுடையவனு யிருத்தற்கும் காரணம் ஊழேயன்பது.

2. An adverse fate produces folly and a prosperous fate produces scholarship.

கூ. நுண்ணிய ராய்பல நூற்பிணு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

பதி:—(கு - சீர்.) பேதைப்படுத்தும் ஊழுடையான் ஒருவன் நுண்ணிய பொருள்களே உணர்த்தும் நூல் பலவற்றையுங் கற்றுரையினும், அவனுக்குப் பிறவினும் தன் னுழாற்றிய பேதைமை யுகரிவே மேற்படும், (எ - று).

| பொருளின் நுண்மை நூலின்மேலேற்றப்பட்டது. மேற்படுதல் - கல்வியறிவைப் பின்னிராகுதற்காகிச் செயலுக்குத தான் முற்படுதல். ‡ "காதன் மிக்குழிக் கற்றவும் கைகொடா, வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" என்பதுமது செயற்கையாலுய அறிவையும் கீழ்ப்படுத்து மென்பதாம்.

† பொருளினது நுட்பத்தை நூலின்மேலேற்றி 'நுண்ணியநூல்' என்று கூறப்பட்டது. நூலினது பொருள் நுட்பத்தை நூலின்மே லேற்றிக் கூறியது இடத்து நிகழ்பொருளி ன குணம் இடத்தின் மேலாய உபசாரவழக்காம்.

‡ சிவகிந்தாமணி கனகமாலையா நிலம்பகம் எசு. இதன்பொருள் காதல் (ஆசை) மிக்கவிடத்து (தன்பத்திற்குத் தானேயன்று) கற்றகல்வியும் (பிறர் குற்றம் நீக்குதற்கு உதவுதலன்றி என்குற்றம் நீக்குதற்கு) உதவா தொழிதல் கண்ணிலுட் கிடந்த அஞ்சனத்தை (மையை) யொக்குமாயிருந்தது என்பது. இதனை வ்சேட வுரையில் நச்சினர்க்கினியர் "கண்ணிலுட்கிடந்த அஞ்சனம் அதற்குப்பயன் கொடாதது போலக்கல்வி நெஞ்சிற்கிடந்தும் பயன் தந்ததில்லை என்றுன்" என்று கூறியிருக்கின்றனர்.

குளிக:தெளி:—(இ - ன்.) (அறியாமையை யுண்டாக்குவதாகிய ஊழுடை தாரிஞருவன்) நுண்ணிய-நுட்பமாய பொருள்களே (அறிவிக்கும்), நூல் பல-நூல்பலவற்றையும், கற்பிலும்-கற்றாலும், (அவனுக்கு), மற்றும்-பின்னும், தன்னுண்மை - தனது ஊழினாலாகிய, அறிவே - பேதைமை யறிவே, மிகும் - மேற்படும், (எ - று).

பொருளின்து நுண்மை நூலின்மேல் ஏற்றப்பட்டது. பேதைமை யறிவு மேற்படுதல் - கல்வியறிவைப் பின்பு கினைந்து இதை யேன் செய்தோ மென்று மனமிரங்கித் தன்பப்படுவதற் காக்கிச் செயலுக்குத் தான் மூற்படுதல். ஊழ் செயற்கையாலாகிய அறிவையும் கீழ்ப்படுத்து மென்பதாம்.

(க - து.) நுட்பமான பொருள்களை நூல்வாயிலாக அறிந்திருப்பவனுக்கும் ஊழினாலாகிய அறிவே மேற்பட்டிருக்கும்.

3. Although a man may study the most polished treatises, the knowledge which fate has decreed to him will still prevail.



சு. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

பரி:—(இ-ள்.) உலகத்து ஊழினாலாகிய இயற்கை இரண்டுகூறு; ஆகலான், செல்வமுடைய ராதலும் வேறு, அறிவுடைய ராதலும் வேறு, (எ - று).


செல்வத்தினைப் படைத்தலும், காத்தலும், பயன்கோடலும் அறிவுடையார்க் கல்லது இயலா அன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையாராதற்காகும் ஊழ் செல்வமுடையாராதற் காகாது, செல்வமுடையாராதற் காகும் ஊழ் அறிவுடைய ராதற் காகா தென்றதாயிற்று. ஆகவே, செல்வஞ் செய்புங்கால் அறிவாகிய தினைக்காரணமும் வேண்டா வென்பது பெற்றாம்.

தெளி:—(இ - ன்). உலகத்து - உலகத்தில், இயற்கை - (ஊழினாலாகிய) இயற்கையானது, இருவேறு - இரண்டு கூறாயிருக்கின்றது, (ஆகலால்), திரு - செல்வமுடையவ ராதலும், வேறு - வேறும், தெள்ளியராதலும் - அறிவுடைய ராதலும், வேறு - வேறும், (எ - று).

செல்வத்தைச்சம்பாதித்தலும், காப்பாற்றலும், பயன் கொள்ளுதலும், அறிவுடையவர்க் கல்லாமல் (ஏனையோர்க்கு) கூடாவன்றே, அவ்விதமல்லாமல்அறிவுடையவர் தரித்திராராகவும் மற்றவர் செல்வராகவும் காணுதலால், அறிவுடைய ராதற்குக் காரணமாகும் ஊழ் செல்வமுடைய ராதற்குக் காரணம் ஆகாது, செல்வமுடைய ராதற்குக் காரணமாகும் ஊழ் அறிவுடையராதற்குக் காரணமாகாதென்ற தாயிற்று. ஆகவே, செல்வத்தைத் தேடும்போது அறிவாகிய தினைக்காரணமும் வேண்டாமென்பது பெற்றாம்.

(க - து.) ஊழின் காரிய மிருவகையாயிருத்தலால் அறிவிலார் செல்வராயும் அறிவுடையார் தரித்திரராயு மிருக்கின்றனர்.

4. There are through fate two different natures in the world ; hence the difference observable in men in their acquisition of wealth, and in their attainment of knowledge.



இ. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

பரி:—(இ - ள்.) செல்வத்தை ஆக்குதற்கு நல்லவை யெல்லாந் தீயவாய் அழிக்கும்; அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும்; ஊழ்வயத்தான், (எ - று).

நல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் † முதலாயவற்றை. ‡ ஊழ்வயத்தா னென்பது அதிகாரத்தாற் பெற்றும் * அழிக்கும் ஊழுற்றவழிக்காலமுதலிய நல்லவாயினும் அழியும்; ஆக்கும் ஊழுற்றவழி அவை தீயவாயினும் ஆகு மென்பதாயிற்று. ஆகவே, காலமுதலிய தினைக்காரணங்களையும் வேறுபடுக்கு மென்பது பெற்றும்.

தெளி:—(இ - ள்.) செல்வம்-செல்வத்தை, செயற்கு-சம்பாதித்தற்கு, நல்லவை யெல்லாம் - நன்மையா யுள்ளவை யெல்லாம், தீயவாம் - தீய வையாய் அழிக்குங், (அதுமாத்திரமல்லாமல்), தீயவும்-தீயவைதாமும், நல்லவாம்-நல்லவையாய் ஆக்கும், (ஊழ்வசத்தால்), (எ-று).

நல்லவை தீயவை என்பன காலமும், இடமும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. ஊழ்வசத்தாலென்பது ஊழென்னும் அதிகாரம் பற்றி வருவிக்கப்பட்டது. அழிக்குமூழ் உற்றவிடத்து காலமுதலாயின நல்லனவா யிருந்தாலும் செல்வம் அழியும், ஆக்கும் ஊழ் உற்றவிடத்து அக்கால முதலாயின தீயனவா யிருந்தாலும் செல்வம் ஆகுமென்பதாயிற்று. ஆகவே, ஊழ் காலமுதலிய தினைக் காரணங்களையும் வேறுபடித்து மென்பது பெற்றும். அழிக்குமூழ் - தீவினை, ஆக்குமூழ் - நல்வினை.

(க - து.) ஊழ்வசத்தால் நல்லவை கெட்டவையாயும் கெட்டவை நல்லவையாயும் மாறும் என்பது.

5. In the acquisition of property, everything favourable becomes unfavourable, and on the otherhand every thing unfavourable becomes favourable, through the power of fate.



† முதலாய என்றதனால் மெய்வருத்தம்பாராமை, பரிகோக்காமை, தித்திரை செய்யாமை, அவமதிப்பைக்கருதாமை முதலியனவுங் கொள்க.

‡ ஊழான் என்றும் பாடமுண்டு.

* தீவினை வந்தபோது பொன்னும் மண்ணும்; நல்வினை வந்தபோது மண்ணும் பொன்னு மென்க.

சு. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினு மோகா தம.

பரி:—(இ - ள்.) தமக்கு ஊழல்லாத பொருள்களை வருந்திக்காப்பினும், தப்பிடந்து நிலைவாம்; ஊழால் தமவாயபொருள்கள், புறத்தே கொண்டுபோய்ச் சொரிந்தாலும், தம்மைவிட்டுப் போகா, (எ-று).

பொருள்களின் நிலையும் போக்கும் ஊழினுன் ஆவதல்லது † காப்பிழ்சிகளால் ஆகா வென்பதாம். இவை ஆறுபாட்டானும் பொருட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.)பால்-ஊழினுல், அல்ல - (தமக் குரியவை) ஆகாத பொருள்கள், பரியினும்-வருந்திக் காப்பாறறினுலும், ஆகாவாம்-(தம்மிடத்து)நில்லாமற்போகும். தம-(ஊழினுல்) தம்முடையனவாகிய பொருள்கள், உய்த்து-(புறதே) கொண்டுபோய், சொரியினும் - பெய்து விட்டாலும், போகா - (தம்மைவிட்டுப்) போகாவாம், (எ - று).

பொருள்களது நிலையும் போக்கும் ஊழினுல் ஆவதல்லாமல் காப்பினுலும் இகழ்ச்சியினுலும் ஆகாவென்பதாம். இவை ஆறுபட்டாலும் பொருளுக்குக் காரணமாயது ஊழின்வலி சொல்லப்பட்டது.

(க - து.) வருந்திக்காக்கும் பொருள் நில்லாமலொழிவதற்கும் அவ்வாறு காவாத பொருள் ஒழியாது நிற்பதற்கும் காரணம் ஊழேயாம் என்பது.

6. Whatever is not conferred by fate cannot be preserved, although it be guarded with most painful care; and that, which fate has made his, cannot be lost although one should even take it and throw it away.

எ. ‡ வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

பரி:—(இ - ள்.) $ ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் ¶ கோடியை முயன்று தொகுத்தார்க்கும் தெய்வம் வகுத்தவகையான் அல்லது நுகர்தலுண்டாகாது, (எ - று).

† காப்பிழ்சி - (பொருள்களைக்) காத்தல் காவாதிகழுதல்.

‡ இலக்கணக்கொத்து "அவைதா - மனமொழி" என்னுஞ்சூத்திரத்தினுரையில் "பரிமேலழகர் பயன்வினை வேறுவினையெ - இரண்டுகொண்டு பயன்வினையைப் பலவிடத்திலும் பலவாகவிரித்து வேறுவினையை 'வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி' என்பதனுட் கொண்டார்" என்று கூறுகின்றது.

$ ஐம்பொறிகள் - செவி முதலிய இந்திரியங்கள்.

¶ கோடியென்பது - (அனுபவிக்கப்படும் பொருள்கள்) பலவற்றை புணர்த்து நின்றது.

ஒருயிர் செய்த வினையின்பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே † வகுத்தலின் 'வகுத்தான்' என்றார்; * "இசைத்தலு முரிய வேறிடத் தான" என்பதனுன் உயர்திணையாயிற்று. ‡ தொகாதார்க்கே யன்றித்தொகுத்தார்க்கும் என்றமையான், உம்மை எச்ச உம்மை. ¶ வேறு முயற்சிகளாற் பொருள்களைப் படைத்தலல்லது தகர்த்தலாகாது, அதற்கு ஊழ் வேண்டுமென்பதாயிற்று.

தேளி:—(இ - ன்.) கோடி - (பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கப் படும் பொருள்கள்) கோடியை, தொகுத்தார்க்கும்-முயற்சிசெய்து சேர்த்த வர்களுக்கும், வகுத்தான்-தெய்வம், வகுத்தவகை யல்லால்-வகுத்தவகையா லல்லாமல், துய்த்தல் - அனுபவித்தல், அரிது - உண்டாகாது, (எ - று).

தெய்வம் ஒருயிர் செய்த வினையின்பயனை மற்றோருயிரி னிடத்துச் செல்லாதபடி அந்த வுயிர்க்கே வகுத்தலால் அதனை 'வகுத்தான்' என்றார்; உயர்திணைப்பொருளை யுணர்த்திய தெய்வமென்னும் அஃறிணைச்சொல் "இசைத்தலு முரிய வேறிடத் தான" என்னும் சூத்திரத்தினுல் வகுத் தான் என உயர்திணையாயிற்று. (இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் பொருள்கள் பலவற்றைத்) தொகாதாரைக்கே யல்லாமல் தொகுத்தார்க்கும் என்றதனுல் (தொகுத்தார்க்கும் என்னும்) உம்மை இறந்ததழீஇய எச்சவும்மையாம். வேறு முயற்சிகளால பொருள்களைச் சேர்க்கலாமே யல் லாமல் அனுபவித்தல் முடியாது, அதற்கு ஊழ்வேண்டு மென்பதாயிற்று.

(க - து.) அனுபவிக்கும் பொருள்கள் பலவற்றைச் சேர்த்து வைத்திருப்பவர்க்கும் ஊழ் வகுத்ததற்குமேல் அனுபவித்தல் முடியாது என்பது.

7. Even those who gather together millions will only enjoy them, as it has been determined by the disposer of all things.

அ. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

பரி:—(இ - ள்.) வறுமையான் நுகர்ச்சியில்லாதார் துறக்குங்கருத்துடையாராவர், ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாதொழியுமாயின், (எ - று).

† வகுத்தலின்-விதித்தலால்.

* தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளவியாக்கம் - நூசு. இதன் பொருள் காலமுதலாகியசொல் உயர்திணையா யிசைத்தலுமுரிய; ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவழி என்பது.

‡ படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்கு மென்றமையின் என்னும் பாடமுண்டு. ¶ வேறு என்னும் பாடமுண்டு.

துறப்பாரென்பது ஆரீற்றெதிர்கால முற்றுச்சொல். *தம்மால்* * *விடப்படுவன தாமே* விடப்பெற்று *வைத்திங்* † *கருத்தி வேறுபாட்டாற் றுன்பமுறுகின்றது* ஊழின் வலியானென்பது *எஞ்சிநிற்றலின்*, ‡ *மன்* ஒழியிசைச்சண் வந்தது.

தேளி:—(இ - ன்.) *துப்புரவில்லார்* - (வறுமையால்) அநுபவித்தலில்லாதவர், *துறப்பார்* - (இல்வாழ்க்கையைத்) துறக்கும் *கருத்தடையவராவர்*, (ஊழ்கள்), *உறற்பால* - அடையுந் தன்மையனவாய *வினைகளே*, *ஊட்டா* - அடைவிக்காமல், *கழியுமெனின்* - நீங்குமாயின், (எ - று).

துறப்பார் என்பது ஆர்விகுதிபெற்ற எதிர்கால வினைமுற்றுச்சொல். (*துப்புரவில்லார்*) *தம்மால்* விடப்படுவன வெல்லாம் *தாமே* விடப்பெற்றிருந்தும், *கருத்திவேறுபாட்டால் துன்பமடைகின்றது* ஊழினது வலியாலென்பது குறைந்து நிற்றலால், *மன* என்னுமிடைசொல் ஒழியிசைப் பொருளில் வந்தது.

(க - து.) *தரித்திரர் துறவறத்தை மேற்கொள்ளாது வருந்துவதற்குக் காரணம் ஊழேயாம் என்பது.*

8. The destitute will renounce desire and become ascetics, if fate do not make them suffer the hindrances to which they are liable and they pass away.

கூ. நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தேவன்.

பரி:—(இ-ள்.) நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந்திறன் நாடாது இவை நல்லவென்று இனைந்தறிவிப்பார் ஏனைத்தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறனுபவியாது துடைக்குந் திறம் நாடி அல்லலுழப்படுவது *என் கருதி*, (எ-று).

தாமே முன்செய்து கொண்டமையானும், *ஊட்டாது கழிபாமையானும்* ¶ *இரண்டும் இயைதனுபவிக்கற்பால*; *அவற்றுள்* § *ஒன்றற்கு*

* விடப்படுவன - விடப்படும் பொருள்கள்

† கருத்தி வேறுபாட்டால் - விடாதனவாக எண்ணிக்கொண்டிருத்தலால்;

‡ மன்னென்னு மிடைசொல் சமசமாய்த 'தம்மால் ..... துன்பமுறுகின்றது ஊழின் வலியான்' என்னும் ஒழிந்து நின்ற சொற் பொருளே புணர்த்ததலால் ஒழியிசைப் பொருளதாயிற்று.

¶ இரண்டும்-நல்வினையின் பயனான இன்பமும், தீவினையின் பயனான துன்பமும்.

§ ஒன்றற்கு - நல்வினையின் பயனான இன்பத்திற்கு.

இயைந்தனுபவித்தி‡* வினையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன் றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் இன்ப துன்பங்கட்குக் காரண மாய ஊழின் வலி கூறப்பட்டது.

தெளி:—(இ ன்.) நன்று-நல்வினை, ஆங்கால்-பயன் தரும்போது, (அந் நல்வினையின பயனை இன்பங்களை நீக்கும் வகையைத்தேடாது), நல்லவர்- (இவ்வின்பங்கள்) நல்லவை யென்றியைந்து, காண்பவர் - அனுபவிப்பவர், அன்று - மற்றைத நீவினை, ஆங்கால் - பயன தரும்போது, (அத்தீவினை யின் பயனை துன்பங்களையும் அப்படி யனுபவியாமல்), அல்லற்படுவது - (நீக்கும் வகையைத்தேடித்) துன்பப்படுவது, எவன்-யாது நினைத்து, (எ-று).

(நல்வினை தீவினைகளை மக்கள்) தாமே முனைபுசெய்துகொண் டமையா லும், (அவை) பயனைக் கொடாமல் கழியாமையாலும் இரண்டும் இயைந்து அனுபவித்தற்கு உரியவையாம்; அவ்விரண்டனுள் ஒன்றற்கு இயைந்து அனுபவித்தல் மற்றதற்கு அது செய்யாமல் வருந்துதல அறிவு அன்று என் பதாம். இவை மூன்று பாட்டாலும் இன்ப துன்பங்களுக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல்லப்பட்டது. இயைபு - உடனபட்டு.

(க - து) நல்வினையின் விளைவை யியைந்தனுபவிப்பவர் தீவி னையின் விளைவை நீக்க முயலுதல அறிவன்றென்பது.

9 How is it that those, who are pleased with good fortune, trouble themselves when evil comes, since both are equally the decree of fate ?



கo. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

பரி.—(இ - ள்) † தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்கு மறு தலையாவதோ ருபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றாலும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்; அத னால் ஊழ்போல மிக்கவலியுடையன யாவையுள, (எ-று).

‡ பெருவலி - ஆதபெயர். சூழ்தல் - பலருடனும் பழுதற எண்ணு தல். செய்தற்கே அன்றிச சூழ்தற்கும் அவதி கொடா தென்றமையின் உம்மை எச்ச உம்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம். இதனுள் ¶ அவவிருவகை ஊழின் வலியும் பொதுவா கக் கூறப்பட்டது.

வினையதற்கு அது செயயாது-தீவினையின் பயனை துன்பத்திற்கு இசைந்தனுபவித்தல் செய்யாமல். † தன்னை - ஊழை.

‡ பெருவலி யென்பது மிக்கவலியையுடைய பொருள்களை யுணர்த்த லால் அடையடுத்த பண்பாகு பெயராம். பெருவலி என்பதில் பெருமை மையின் விகாரமாகிய பெரு என்பது அடை; வலி என்பது பண்பு.

¶ அவ்விருவகை ஊழ்வலியும் - பொருட்குக் காரணமாய ஊழின்வலி யும் இன்ப துன்பங்கட்குக் காரணமாய ஊழின் வலியும். இவ்வதிகாரத்


தெளி:—(இ - ன்.) மற்றொன்று-(தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்குப்)பகையாவதோருபாயத்தை, சூழினும்-ஆராய்ந்தாலும்,தான்-, முந்துறும்-(அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக் கொண்டு வந்து அவ்வாராய்ச்சியின்) முற்பட்டு நிற்கும், (அதனால்), ஊழின் - ஊழ் போல, பெருவலி - மிகுந்த வலிமையுடைய பொருள்கள், யா-எவை, உள-இருக்கின்றன, (எ - று).

பெருவலி-அடையடுத்த பண்பாகு பெயர் சூழ்தல்(உயர்ந்தார்)பலருடனும் (ஐயந்திரிபென்னும்) குற்றமொழிய யோசித்தல். ஊழானது தன்னை விலக்குதற்பொருட்டுத்தனக்குப்பகையாவதோருபாயத்தைச்செய்வதற்கே யல்லாமல் ஆராய்வதற்கும் சமயங்கொடாதென்றமையால் சூழினுமென்ற உம்மை இறந்ததழீஇய எச்சவும்மை. எல்லாம் ஊழ் வழியாக வருதலுடைமையால், ஊழே வலிமை யுடையதென்பதாம். இதனால் அவ்விருவகை ஊழினது வல்லமையும் பொதுவாகச் சொல்லப்பட்டது.

(க - து.) உயிர்களுக்கு வருவதெல்லாம் ஊழ்வழியாக வருதலின், அவ்வூழினும் வலிமையுடைய பொருள்கள் வேறொன்றில்லை என்பது.

10. What is stronger than fate? If we think of an expedient to avert it, it will itself be with us before the thought.

அறத்துப்பால் முற்றிற்று.



அறத்துப்பாலினதிகாரத்தொகை 38; அவற்றுள், பாயிரம் 4; இல்லறம் 20; துறவறம் 13; ஊழ் 1 ஆம்.

"பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக - வாய
வறத்துப்பா லைவகையா வாய்த்தரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து" என்பது திருவள்ளுவமாலை.



நின் ஆருவது குறளின் விசேடவுரையில் "இவை யாறுபாட்டானும் பொருட்குக் காரணமாய ஊழினவலி கூறப்பட்டது" என்றும், ஒன்பதாவது குறளின் விசேடவுரையில் "இவை மூன்று பாட்டானும் இன்பதன் பகுதிக்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது" என்றும் கூறியிருத்தல்பற்றி இருவகை ஊழ் என்பதற்கு ஆகூழ் போகூழ் என்று கூறுதி விட்டாம்.

2. பொருட்பால்—ON PROPERTY

1—அரசியல்—The duties of the King.

பரி:—இனி * இல்லறத்தின்வழிப் படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவானெடுத்துக் கொண்டார். அது தன் துணைக்காரணமாய அரசநீதி கூறவே அடங்கும். அரசநீதியாவது () காவலை நடாத்து முறைமை. அதனை † அரசியல், ‡ அங்கவியல், § ஒழிபியலென மூவகைப்படுத்து, மலர்தலை யுலகிற் ¶ குயிலோனச் சிறந்த அரசனதியல்பு இருபத்தைந் ததிகாரத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

தெளி:—இனி இல்லறத்தின் வழியிற் பொருந்துவனவாகிய பொருளின்பங்களில் இம்மைப்பயனும் மறுமைப்பயனும் தருவதாகிய பொருளைச் சொல்லவெடுத்துக் கொண்டார். அப்பொருள் தனக்குத் துணைக்காரணமாயுள்ள அரசநீதி சொல்லவே அடங்கும். அரசநீதியாவது காவலை நடத்தும் முறைமையாம். அம்முறைமையை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று மூன்று பிரிவாக்கி, பரந்த விடத்தையுடைய வுலகத்திற் குயிற்போற் சிறந்துள்ள அரசனது தன்மையை இருபத்தைந் ததிகாரத்தாற் சொல்லத்தொடங்கி, முதலில் இறைமாட்சி சொல்லுகின்றார். அரசநீதி - ராஜதருமம்.

* பொருளும் இன்பமும் துறவறத்திற் குரியனவல்லவாகலின் 'இல்லறத்தின்வழிப் படுவனவாய பொருளின்பங்கள்' என்று கூறப்பட்டது.

() காவலை - குடிகளை யிரட்சித்தலை.

† அரசியல் - அரசனது தன்மையைச சொல்லும் பிரிவு.

‡ அங்கவியல் - அரசனுக்கு அங்கமாயுள்ள மந்திரி முதலியவர்களது தன்மையைச் சொல்லும் பிரிவு.

§ ஒழிபியல் - அரசியலிலும் அங்கவியலிலும் அடங்காதவற்றைச் சொல்லும் பிரிவு.

¶ அரசன் உலகிற் குயிற் போன்றவனென்பது புறநானூறு "செல்லுமுயி ரன்றே நீருமுயி ரன்றே, மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்" என்றும், இராமாயணம் "தன்னுயி ராமென வுலகிற் றங்கிய, மன்னுயி ரனைத்தையும் புரக்கு மாட்சியோன்" என்றும், பெரியபுராணம் "மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம், கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்" என்றும் கூறுவதனையு மறிதற்பாற்றும்.

முதல் அதிகாரம்.

இறைமாட்சி:—*Kingly Excellence.*

பரி:—அஃதாவது அவன்றன் நற்குண நற்செய்கைகள். * உலக பாலர் உருவாய் நின்று உலகங்காத்தலின் 'இறை' என்றார். ¶¶ "திரு வுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்று ‡ பெரியாரும் பணித்தார்.

தெளி:—அஃதாவது அவ்வரசனது நற்குண நற்செய்கைகள். (அரசன்)உலகபாலர் வடிவாய தினாறு உலகத்தைக் காத்தலால் (அவ்வா)'இறை' எனறு கூறினர். திருமாலினம்சமி அரசாக வைத்து பெரியாரும் கூறி யிருக்கின்றனர். இறை - கடவுள்.

க. படைகுடி கூழமைச்சு நட்பர ணிறு
முடையா னிரசரு ளேறு.

பரி:—(இ - ள்.) படையுங் குடியுங் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமென்று சொல்லப்பட்ட ஆறங்கங்களையும் உடையவன் அரசருள் ஏறுபோல்வான், (எ-று).

ஈண்டுக குடியெனறது அதனை புடைய காட்டினை கூழென்றது அதற்கேதுவாய பொருளை ¶அமைச்சு, நாடு, () அரண், பொருள், [] படை, நட்பெனபதே † முறையாயினும், ணை செயபுள் ஏகாரஞ்சப் பிறழவைத தார். 'ஆறமுடையான்' என்றதனால், அவறறுளு ஒனறு இலவாயினும் அரச னீதி செல்லாதென்பது பெறறாம் வடநூலார் இவறறிறகு அங்கமெனப்

உலகபாலர் உருவாய் தினறு உலகங்காததலின - உலகத்தைக காப் பவராய இந்திரன முதலிய வினையவர்களின் அம்சமாய்தினறு உலகத்தைப் பாதிகாததலால், இது மனுதாமசாஸ்திரம் வழிவதத தியாயம் அரசன சிறப்பில் "இந்திரன், வாயு, யமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரனெனனு மிவாகளி ராமசங்களினுலேயே அரசனுண்டாக்கப்பட்டான்" "இப்படிபபட்ட தேவாகளி னம்சமாகையால அரசன் மக்களியாவரினும் அதிக காந்தியுள்ளவனுகவும் அனவரையும் ஆளத்தக்க வீரியமுள்ளவனுகவு மிருக்கிறான" என்று கூறுவதாலு மறிதறற பாறபரும்

¶¶ திருவாய் மொழி 34-ம் பதிகம் 8-வது செய்யுள். இதன்பொருள் (இப்பெண்) திருவையுடைய அரசரைக் கண்டால் திருமகள் மணாளனை விஷ்ணுவைக் கண்டே னெனறு கூறுவாள் என்பது. திரு என்பது கண்டாரால் விரும்பப படுத்தனமை.

‡ பெரியார் - நம்மாழ்வார். § கூழ் - உணவு. ¶ அமைச்சு - மந்திரி

() அரண்-நாட்டிறகுக் காவலான மதில்முதலியன. [] படை-சேனை.

† அமைசசு, நாடு, அரண், பொருள், படை, நட்பெனபதே முறையாமென்பது அங்கவியலில் 1-வது அதிகாரம் அமைசசாகவும், 11-வது அதிகாரம் நாடாகவும், 12-வது அதிகாரம் அரணுகவும், 13-வது அதிகாரம்

பெயர் கொடித்ததூஉம் அது நோக்கி வதென்பது உபசாரவழக்கு. இதனுல் அரசர்க்குங்மாவன † இவை யென்பதூஉம் இவைமுற்றும் உடைமையே அவன் வெற்றிக் கேது வென்பதூஉங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்) படை - படையும், குடி - குடியும், கூழ் - கூழும், அமைசசு - அமைச்சும், நட்பு - நட்பும், அரண் - அரணும், (என்று சொல்லப்பட்ட), ஆறும் - ஆறுங்கங்களையும், உடையான் - உடையவன், அரசருளேறு - மன்னருள் ஆண்சிங்கம் போல்வானவான், (எ - று).

இவருக் குடியெனறது அக்குடியை புடைய நாட்டினை. கூழ் என்றது அக்கூழிறைக்குக் காரணமான பொருளை. அமைசசு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பு மொலலுவதேதுக்ரமமாயினும், இங்குச செய்யுள் நோக்கி 'படைகுடி கூழமைச்சு நட்பாரண்' என் றம்முறை தவற வைத்தார். 'ஆறுடையான்' என்று கூறியதினுல், அவ்வாறனுள் ஒன்றில் லாதவிடத்தும் அரச னீதி நடவாதெனபது பெறப்பட்டது வடநூலார் இவ்வாறனுக்கும் அங்கமெனப் பெயர கொடித்ததும் அவ்வாறனுள ஒன்றில்லாதவிடத்தும் அரசரீதி கொலலாதென்பது நோக்கி யென்க. ஏறு போன்ற வரசனை ஏறு என்று கூறியது உபசார வழக்காம். இதனுல் அரசனுக்கு அங்கமாவன இவை யெனபதும், இவை முழுதுமுடைத்தா

பொருளா செயல் வகையாகவும், 14-வது அதிகாரம் படைமாட்சியாகவும், 16-வது அதிகாரம் கட்பாகவும் திருத்தலினுலும், 1 - வது அதிகாரத்தின் அவதாரிகையில் ''அவையாறனுள்ளும் 'காவராசாகுகைதற் கண் அவ்வரசற்கினையாய அமைசசுணதியலபு பகதிகாரத்தாற் கூறுவான் முதற்கண் அமைச்சு கூறுகின்றார்'' வனறும, 11-வது அதிகாரத்தின் அவதாரிகையில் ''இனி யவ்வரசனுக்கும் அமைசசனுக்கும் கொண்டு யகப்பவெகாய் வனேயாண முதலிய அங்கவகட்கு இன்றியமையாக பிறப்பிற்குய நாடி ஏதிகாரத்தாற் கூறுகின்றார்'' என்றும், 12-வது அதிகாரத்தின் அவதாரிகையில் ''இனி யநாட்டிறகுப்பா யடங்குமாயினும் பகைவராற் றொலவுகருதி அது தனக்கும அரசன்றனக்கும் எமமாதற் பிறப்புப்பறறிப் பிறிதோராஙகமாக ஓதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகினறார்'' என்றும, 13-வது அதிகாரத்தின் அவதாரிகையில் ''இனிப் பெருமபாண்மையும் நாட்டாலும் அரணாலும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின்றிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்'' என்றும், 14-வது அதிகாரத்தின் அவதாரிகையில் ''இனியப்பொருளினுவதாய் வெல்வதாயபடை இரண்டதிகாரத்தாற கூறுவான் றொடங்கி முதற்கண் படைமாட்சி கூறுகின்றார்'' என்றும், 16-வது அதிகாரத்தின் அவதாரிகையில் ''இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்திதவுவதாய கட்பினை .....கூறுகின்றார் '' எனறும பரிமேலழகர் கூறுதலினுலும் நன்குவிளங்கு மென்க.

† இவை - அமைச்சு முதலிய அங்கங்கள்.

பிருத்தலே அவ்வரசனது வெற்றிக்குக் காரண மென்பதும் சொல்லப் பட்டன. குடி - குடிச்சனங்கள்.

(க - து.) அமைச்சு முதலிய ஆறங்கங்களுங் குறைவின்றி யிருப்பவனே அரசருட் சிறந்தவனுவான் என்பது.

1. He who possesses these six things, an army,a people, wealth, ministers, friends and fortress is a lion among kings.

உ. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

பரி:—[இ - ள்.) அரசனுக்கியல்பாவது * திண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமுமென்னும் இந்நான்கு குணமும் இடைவிடாது நிற்றல், (எ - று).

ஊக்கம் - வினை செய்தற்கண் மனவெழுச்சி. † இவற்றுள், அறிவு ஆறங்கத்திற்கும் உரித்து; ஈகை படைக்குரித்து; ஏனைய வினைக்குரிய. ‡ உயிர்க்குணங்களுள் ¶ ஒன்றுதோன்ற வேனைய அடங்கிவரும்; அவற்றுள், § இவையடங்கின், அரசற்குக் கெடுவென பலவாமாகலின், இவை எப்பொழுதுந் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டுமென்பார் 'எஞ்சாமை வேந்தற்கியல்பு' என்றார்.

தெளி:—(இ - ள்.) வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - திண்மையும், ஈகை - கொடையும், அறிவு - விவேகமும், ஊக்கம் - மனவெழுச்சியும், இந்நான்கும் - (என்னும்) இந்நான்கு குணங்களும், எஞ்சாமை - நெடுவே நீங்காதிருத்தலாம், (எ - று).

ஊக்கம் - மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில் மனவெழுச்சி. இவற்றுள், அறிவு அமைச்சு முதலிய ஆறங்கங்களுக்கும் உரியது; ஈகை படைக்கு உரியது; மற்றையனவாய அஞ்சாமையும் ஊக்கமும் (போர் முதலிய) தொழிலுக்குரியன. உயிர்க்குணங்களுள் ஒன்று தோன்ற மற்றவை அடங்கிவரும்; அவற்றுள், இக்குணங்கள் அடங்கினால், அரசனுக்குக் கெடுவென பலவாம் ஆதலால், இவை எப்பொழுதும் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டுமென்பார் 'எஞ்சாமை வேந்தற்கியல்பு' என்றார்.

* திண்மை—கலங்காமை. † இவற்றுள் - அஞ்சாமை முதலியவற்றுள்.


‡ "அது (உயிர்) சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம், (பாவனை யென்னும்) சம்ஸ்காரம் என்னும் பதினான்கு குணங்களுடையதாம்" என்பது தருக்க சங்கிரகம்.

¶ சுகம் தோன்றியபோது துக்க முதலியனவும், துக்கம் தோன்றிய போது சுகமுதலியனவுந் தோன்றாது நிற்றலுணர்த்தற்பாற்றும்.

§ இவை - அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கமென்பன.

(க-து.) அரசனுக்கு அஞ்சாமைமுதலிய நான்கு குணங்களும் இயல்பாக விருக்கவேண்டும் என்பது.

2. Never to fail in these four things, fearlessness, liberality, wisdom and energy, is the kingly character.



க. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

பரி:—(இ - ள்.) நிலத்தினை ஆளுந் திருவுடையாற்கு * அக்காரியங்களில் விரைவுடைமையும் அவை யறித்தற்கேற்ற கல்வியுடைமையும் ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்றுகுணமும்ஒருகாலும் நீங்கா, (எ-று).

கல்வியது கூறுபாடு † முன்னர்க் கூறப்பட்டமை. ‡ ஆண்மையாவது ஒன்றனையும் பாராது கடிதிற்செய்வதாகலின், அஃது ஈண்டு உபசார வழக்கால் § 'துணிவு'எனப்பட்டது ¶ உம்மை இறந்ததழீஇய வெச்சவும்மை. இவற்றுள், கல்வி ஆறங்கத்திற்கும் உரித்து; () ஏனைய வினைக்குரிய; [] நீங்காவென்பதற்கு மேலெஞ்சாமைக் குரைத்தாங் குரைக்க.

* அக்காரியங்களில்—உலகியலாளுங் காரியங்களில்.

† முன்னர் என்றது இவ்வதிகாரத்தை யடுத்தள்ள கல்வியதிகாரத்தை. ‡ ஆண்மை - ஆளுந்தன்மை; அல்லது ஒன்றற்குந் தளராது நிற்றல்.

§ துணிவிற்குக் காரணமாய ஆண்மையைத் துணிவென்று கூறினமையின் இது காரியங் காரணமாய உபசாரவழக்கு; காரியவாகு பெயரெனினும் ஒக்கும். ஒன்றனையும் கவனியாது விரைந்து ஒரு காரியத்தைத் துணிந்து செயவதற்கு ஆண்மை வேண்டுமாதலால் ஆண்மை காரணமாயும் (ஒன்றனையும் கவனியாது விரைந்து ஒருகாரியத்தைச் செய்யும்) துணிவு காரியமாயு மிருக்கின்றன வென்க.

¶ மூன்றும் எனபதன் உம்மை 'அஞ்சாமை யீகை யறிவுக்க மிக்கான்கும்' என்று மேலே கூறியுள்ள நான்கும் என்பதைத் தழுவி நிற்றலின், இறந்ததழீஇய எச்சவும்மை யாயிறதென்க. அஞ்சாமை யீகை யறிவுக்கமென்னும் இந்நான்கு குணங்களுமேயன்றித தூங்காமை கல்வி துணிவுடைமை யென்னு மிம்மூன்று குணங்களும் அரசனுக்கு நீங்காதிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

() ஏனைய - தூங்காமையும் துணிவுடைமையும்.

[] நீங்கா என்பதற்கு மேலுள்ள 'அஞ்சாமை யீகை' என்னுங் குறளுரையில 'உயிர்க்குணங்களுள், ஒன்றுதோன்ற வேனைய அடங்கிவரும்; அவற்றுள் இவையடங்கின் அரசற்குக் கெடுவன பலவாமாகலின், 'இவை யெப்பொழுதும் தோன்றிநிற்றல் இயல்பாக வேண்டும்' என்று உரைத்தாற்போல வுரைத்துக் கொள்க என்பது. தூங்காமை கல்வி துணிவுடைமை யென்னும் இம்மூன்று குணங்களும் இயல்பாக எப்போதும் அரசனுக்குத் தோன்றி நிற்றல் வேண்டுமென்பது கருத்து.

தெளி:—(இ-ன்.) நிலஞள்பவற்கு - பூமியையாளுந் திருவினையுடை வனுக்கு, தூங்காமை (உடைமை) - (அக்காரியங்களில்) விரைவுடைமை யும், கல்வி (உடைமை) - (அக்காரியங்களே அறிதற்கேற்ற) கல்வியுடை மையும், தாணி வுடைமை - ஆண்மையுடைமையும், (ஆகிய), இம்மூன்றும்- இம்மூன்று குணங்களும், நீங்கா - (ஒருபோதும்) நீங்காவாம், (எ-று).

கல்வியது கூறுபாடு மேலே சொல்லப்படும். ஆண்மையாவது ஒன்றை யும் பாராமல் விரைவாகத் தணிந்து செய்வதாகலால், அமீது இங்கு உப சார வழக்குப்பற்றித் 'தாணிவ'என்று கூறப்பட்டது மூன்று மென்ற வும் மை இறந்தது தழுவிய வெச்ச வும்மை, இமமூன்றனுள், கல்வி ஆறங்கத் திற்கும் உரியது ; மற்றவை தொழிலுக்குரியன. நீங்காவென்பதற்கு முன் னர் எஞ்சாமை யென்பதற்கு உரைத்தபடி உரைத்துக் கொள்க.

(க - து.) தூங்காமை முதலிய மூன்றும் அரசனுக்கு நீங்கா திருக்கத்தக்க குணங்களாம் என்பது.

3, Vigilance, learning and bravery, these three things, should never be wanting in the ruler of a country.

சு. அறனிழுக்கா தல்லமை பக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

பரி —(இ - ளீ.) * தனக்கோதிய அறத்தின் வழுவாதொழுகி அறன் அல்லவை தன்னுட்டின்க ணுஞும் நிகழாமற் கடிந்து வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை யுடையான் அரசன், (எ - று).

அவ்வறமாவது † ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத்தொழிலி னும், ‡ படைக்கலம் பயிறல் பல்லுயிரோம்பல், பகைத்திறத்தெறுதலென் னுஞ் சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றல். ¶ "மாண்ட—அறநெறி முதற்றே யரசின் கொற்றம்" என்பதனுல் () இவ்வறம் பொருட்குக்காரண மாதலறிக. அல்லவை-கொலை, களவு [] முதலாயின. ¶¶ குற்றமாய மான

* தனக்கோதிய—அரசனுகிய தனக்குச்சொன்ன.

† ஓதல், வேட்டல், ஈதலென்னு மூன்று தொழிலும் பிராமணர்முத லியவர்க்கும் உரியனவாக விருத்தல்பற்றி 'ஓதல், வேட்டல், ஈதல் என்னும் பொதுத் தொழிலினும்' என்று கூறப்பட்டது.

‡ "தலைமையுங் கொடையொடு தறுக ணண்மையும், நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுங், கொலைபயில் போர்களிற் புறங்கொ டாமை யுஞ், சிலைமலி தோளினு யரசர் செய்கையே" என்பது பகவத்கீதை.

¶ புறநானூறு - டுடு. இதன்பொருள், மரபுவழுவாமற்பட்ட அறநெறி (தருமவழி)யை முதலாகவுடைத்து, வேந்தரது வெற்றி என்பது

() இவ்வறம் - அரசற்குரிய தருமம்

[] முதலாயின என்றதனுல் சூதாடல், வியபிசாரஞ் செய்தல், மது பானஞ் செய்தல் முதலியவற்றையுங் கொள்க.

¶¶ குற்றமாயமானம்-"அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முன்

நீக்குதற்கு 'மறனிழுக்கா * மானம்'என்றார் ; அஃதாவது † "வீரின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா, னேறண்டவர் நிகாயினும் பிதிர்மிச்சிலென் றெறியான், மாறன்மையின் மறம்வாடுமென் றிலையாயுதமு மெறியா, ஞறன்மையின் முதியாரையு மெறியானயி ழுழவன்" எனவும் ‡ "அழியுங் புறக்கொடை யயில்வே லோசரான்" எனவுஞ் சொல்லப்படுவது. ¶ அரசு - அரசனது தன்மை ; அஃது உபசாரவழக்கால் அவன்றன்மே னின்றது.

தேளி:—(இ - ள்.) அறன் - (தனக்குக்கூறிய) அறத்தில், இழுக்காது - தவறுது (நடந்து), அல்லலவை - அறமலலாதவற்றை, நீக்கி-(தனது காட்டிடத்தும உண்டாகாமல) ஒழித்து, மறன் - வீரத்தினிருந்து, இழுக்கா - தவறுத, மானம் - மானத்தை (தாழுதலில்லாமையை), உடையது - உடையவன், அரசு - அரசனுவான், (எ - று).

அவ்வறமாவது வேதமோதல், வேளவி செய்தல், ஈதல் என்னும் பொதுத் தொழில்களிலும், படைக்கலம் பயிலல, பலலியிரோமபல, பகைதிற மழித்தல் என்னுஞ் சிறபபுத தொழில்களிலும் தவறுது நிற்றல். இவ்வறம் பொருளுக்கு காரணமாதலறிக. அலலவை கொலை களவு முதலான வை. குற்றமாகிய மானத்தினின்று நீங்குதற்கு 'மறனிழுக்கா மானம்' என்றார். அரசு - அரசனது தன்மை ; அஃது உபசாரவழக்கால் அவ்வரசன மேல் நின்றது.

ஞெர் தந்தைதா யென்றிவரை வணங்காமையும், முடிசூடப்படா தாயினும் கருதியது முடிததே விடுதலு முதலாயின". இது "இவறலு மாணபிறந்த மானமும்" என்னும் குறளின் விசேட வுரையிலுளளது.

மானதற்கு இலக்கணம் மானமென்னு மதிகாரத்தின் அவதாரிகையில் 'அஃதாவது எஞ்ஞான்றும் தருகிலையிற ரூழாமையும தெய்வத்தால் தாழ்வு வந்தழி யுமாவாழாமையுமாம்" என்று கூறப்பட் டிருக்கின்றது.

† சீவகசிந்தாமணி மண்மகளிலம்பகம் ஈசுய. இதன்பொருள "(தனக் கெதிர்ப்பாரின்மையின்) வேலுழுவன் மதவேழதை யெறிந்தாலும் வீலங்கை யெறிந்தா னெனபரென்று கினைத்து, அதனுலே வெற்றியின்மையின் வேழத்தையும் வெட்டானுப், முன்பு வெட்டுண்டவர் தனக்கு ஒப்பாராயினும் பிறர்படை தீண்டின எனிலென்று அவரையும வெட்டானுய்த், தனக்கிலேயாரையும் நிகரன்மையின் மறம்வாடுமென்று வெட்டானுய, அறமன்மையிற் றன்னின் மூததோரையும் வெடானுய் நின்றுனென்க என்பது. [இது நச்சினுர்க் கினியருரை].

‡ புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சிப்படலம் உய - வது வெண்பாவின் கொளு (கருதது). இதன்பொருள் (தனகருக) கெட்டோடுவாரது முதுகினிடத்தில கூரியவாலை யெறியாதவீரன் என்பது.

¶ அரசனது தனமையை அரசனென்று கூறுதல் குணம் குணியாய உபசார வழக்கு. தன்மை - குணம். அரசன் - குணி; புண்பாகு பெயருமாம்.

(க - து.) தனக்கோதிய தருமத்திற் றவறுதொழுகித் தீயன வற்றை யொழித்து வீரத்திற் குறையாது மானத்தோ டிருப்பன் அரசனுவான் என்பது.

4. He is a king who, with manly modesty, swerves not from virtue, and refrains from vice.



இ. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

பரி:—(இ - ள்.) தனக்குப பொருளகளை வரும்வழிகளை மேன்மே லுளவாக்கலும், அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித் தொகுத்தலும், தொகுத்தவற்றைப் பிறர் கோள்ளாமற் காத்தலும், காத்தவற்றைஅறம் பொரு ளின்பங்களின் பொருட்டு விடுத்தலும் வல்லவனே அரசன்.

ஈட்டல், காத்தல, வகுத்தலென்றவற்றிற கேற்ப 'இயற்றல்' எனப தற்குச செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன: மணி, பொன, நெல முதலாயின. அவைவரும் வழிகளாவன: பகைவரை யழித்த லும, † திறைகோடலும், தன்னுரி தலையளித்தலும் முதலாயின. பிறரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினரை. கடவுளர், அருதணர், வறியோரென் றிவாகரும் புகழிறகுகொடுத்தலே அறப பொருட்டாகவும, யானை குதிரை படை தேடி அமணன் றிவற்றிற்கும் பகையொடு கூடலிற் பிரிக்கப்படுவார்க்கும் தன்னிற் பிரிதலிற் கூட்டப் படுவார்க்குங கொடுத்தலைப் பொருட் பொருட்டாகவும, மண்டபம் ‡ வாவி $ செய்குன்று ¶ இளமரக்கா முதலிய செயதற்கும ஐம்புலன்களான் துகர்வனவற்றிற்குங் கொடுதலே இன்பப் பொருட்டாகவுங் கொளக. இயற்றன் முதலிய தவறுமற செய்தல அரிதாகலின 'வல்லது' என்றார். இவை நான்குபாட்டாலும் மாட்சியே கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்.) இயற்றலும - (தனகுப் பொருள்கள் வருமவழி களை மேலுமேலும) உண்டாக்கலும், ஈட்டலும - (அவ்வாறுவந்த பொருள களை ஓரிடதுச) சேர்த்துவைத்தலும், காத்தலும - (சேர்த்துவைத்த பொருள்களைப் பிறர கொள்ளாமல்) காதலும், காதல-காத்துள்ளபொருள்களை, வகுத்தலும் - (அறம் பொருளின்பங்களின் பொருட்டுச்) செலவு செய்த லும், வல்லது - வல்லவனே, அரசு - அரசனுவன், (எ - று).

'* "அரசன அடையப்படாத பொருளைச் சம்பாதிக்க விரும்பவேண் டும்; சம்பாதித்த பொருளை முயற்சியோடு காப்பாற்ற வேண்டும்; காப்பா ற்றியபொருளை விருத்திசெய்ய வேண்டும்; விருத்திசெய்த பொருளைச சற் பாத்திரத்தில் செலவு செய்யவேண்டும்" என்பது மதுதர்ம சாஸ்திரம், எழாவதத்தியாயம். † திறை - ஓரி. ‡ வாவி - குளம்.

$ செய்குன்று - செயற்கை மலை. (மலைபோல் கட்டப்பட்டது).

¶ இளமரக்கா - இளமையாய மரங்களை யுடைய சோலை (சந்தவணம்).

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்பவற்றிற்குப் பொருந்த 'இயற்றல்' என்பதற்குப் பொருள்கள் வரும் வழிகளே என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன: மணி, பொன், நெல் முதலான வை. அப்பொருள்கள்வரும் வழிகளாவன: பகைவரை யழித்தலும், நிறை கொள்ளலும், தன்னுட்டைக்காத்தலும் முதலானவை. பிறரென்றதுபகை வர், கள்வர், சுற்றத்தார், தொழில்செய்வோர் முதலானவரை. கடவுளர் அந் தணர் வறியோர் என்கிற இவர்க்கும் புகழிற்கும் கொடுத்தலே அறத்தின் பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்கிற இவற்றிற் கும் பகைவரோடு கூடுதலினின்றும் பிரிகைப்படுவாக்கும் தன்னை விட்டுப் பிரிதலினினறும் கூட்டப்படுவாகாகும் கொடுத்தலைப் பொருளின் பொ ருட்டாகவும், மண்டபம் வாவி செய்குளறு இனமாக்கா முதலாயினவற் றைச்செய்தற்கும் ஐம்பொறிகளால அனுபவிப்டனவற்றிகும் கொடுத் தலே இன்பத்தின் பொருட்டாகவும் கொள்க. இயறமுதல் முதலாயின வற்றைத தவறுமற் செய்தல் அரிதாகலால் 'வல்லது' என்றார். இவை கான் கு பாட்டாலும் அரசனது நறகுண நற்செய்கைகளாகிய மாட்சிமேய சொல் லப்பட்டது.

(க - து.) இயற்றல் முதலியவறுள், நிறைமையுள்ளவன் அரசனுவான் என்பது.

5. He is a king who is able to acquire wealth, to lay it up, to guard and to distribute it.

ரு. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்

பரி:—(இ - ள்.) முறைவேண்டினார்க்குங் குறை வேண்டினார்க்குங் காண்டற்கெளியனாய யாவர் மாட்டுங் கடுஞ்சொல்ல னல்லனுமாயின், அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக்கூறும் உல கம், (எ - று).

முறைவேண்டினர்-* வலியரானகலிவெய்தினர். குறைவேண்டினர்-வறுமையுற்றிரந்தார். காண்டற் கெளிமையாவது பேரத்தாணிக்கண் அந் தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செல்வியுடையனாயிருத்தல். கடுஞ் சொல் - † கேள்வியினும், ‡ வினையினுங் கடியவாய சொல். §நிலம் மீக்

* வலியரானகலிவெய்தினர்-தமமின் வலியவரால் வருததமடைத்து வந்தவர்.

† கேள்வியினும் வினையினும் கடியவாயசொல் என்பதில் கேள்வியிற் கடியவாயசொல்—கேட்பதற்குப் பிரியமாகாத சொல் எனவும், வினையிற் கடியவாய சொல்—தொழிலில் நிமையைத் தருவதாயசொல் எனவும் கொள்க.

‡ வினைவினும் என்றும் பாடமுண்டு.

§ நிலத்தை யென்றும் பாடமுண்டு.

கூறும் எனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று. மீக் கூறுதல் இவன் காக்கின்ற நாடு பகை, பிணி, பசை முதலிய வின்றி யாவர்க்கும் பேரின்பந் தருதலின் தேவருலகினும் நன்றென்றல். உலகமென்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

தெளி:—(இ - ள்.) காட்சிக்கெளியன்- (அரசன் முறைவேண்டினர்க்கும் குறைவேண்டினர்க்கும்) காணுதற்கு எளியவனும், கடுஞ்சொல்லனல்லனேல் - (யாவரிடத்தும்) கடுஞ்சொல்கூறுபவனல்லாதவனுமா யிருந்தால், நிலம் (அவ்வரசனது) நிலத்தை, (உலகம்), மீக்கூறும் (எல்லா வுலகங்களிலும்) உயர்த்திச்சொல்லும், (எ - று).

முறைவேண்டினர்.—வலியவரால் துன்பமடைந்தவர். குறைவேண்டினர்.— தரித்திரமடைந்து யாசித்தவர். காணுதற்கெளிமையாவது(முறை வேண்டினருங் குறைவேண்டினருங் காணபதற்குப்) பெரிய அரசாட்சி மண்டபத்தில் அந்தணர் சான்றோர் முதலாயினோரோடு சமயமுடையவனு யிருத்தல். கடுஞ்சொல் - கேள்வியிலும் தொழிலிலும் கடுமையாகிய சொல். நிலமீக்கூறும் (நிலத்தை உயாத்திச சொலலும்) எனவே, மன்னனை மீக்கூறுதல (உயாத்திச்சொலலுதல்) சொல்ல வேண்டுவதில்லையாயிற்று. உலக மீக்கூறுதல் (உயர்ந்தோர உயர்த்திச சொல்லுதல்) இவன் காக்கின்ற நாடு பகை, பிணி, பகை முதலாயின வில்லாமல் யாவர்க்கும் மிகுத வீன்பந்தருதலால் சுவாககத்திலும் சிறந்ததென்று சொல்லுதல். மீக் கூறும் என்னும் பயனிலைகோறப உலகம் என்னும் எழுவாய் வருவிகைப் பட்டது.

(க - து) காணுதற் கெளியனாயும் இன்சொற் சொல்பவனாயு மூள்ள அரசன் உயர்ந்தோராற் புகழப் படுவான் என்பது

6. The whole world will exalt the country of the king who is easy of access, and whose words are free from harshness.

எ. ‡ இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றுன்கண் டனைத்திவ் வுலகு.

பரி:—(இ - ள்.) இனியசொல்லுடனே ஈதலைச்செய்து அளிக்க வல்ல அரசனுக்கு இவ்வுலகந் தன் புகழோடு மேவித் தான் நந்திய அளவிற்றும், (எ - று).

‡ இன்சொலால் தன்சொலால் என்பனவற்றின் ஆல் உருபு "அறத்தான் வருவதே இன்பம்" என்றதுபோல உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது.

இன்சொல் - * கேள்வியினும் † வினையினும் இனியவாய சொல். ஈதல் - வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்தல், அளித்தல் - தன்பரிவாரத்தானும் பகைவரானும் கலிவுபடாமற்காத்தல். இவை அரியவாகவின் 'வல்லாற்கு' என்றும், அவன மண்முழுதும் ஆளுமாகலின் 'இவ்வுலகு' என்றுங் கூறினர். கருதிய அளவிற்றாதல் - கருதிய பொருளெல்லாஞ் ‡ சுரத்தல்.

தேவி:—(இ - ன்.) இன்சொலால் - இனிய சொல்லுடனே, ஈத்து-ஈதலைச் செய்து, அளிக்க—, வல்லாற்கு - வல்ல அரசனுக்கு, இவ்வுலகு - இந்தவுலகமானது, தனசொலால் - தன்புகழோடு, (பொருந்தி), தான்கண்டனைத்தி - தான் நினைத்த அளவினதாகும், (எ - று).

இன்சொல் - கேள்வியிலும் தொழிலிலும் இனிமையாகிய சொல். ஈதல் - வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தல். அளித்தல் - (குடிகளை) தன் பரிஜனத்தாலும் பகைவராலும் வருத்தமடையாவாறு காத்தல் (இன்சொல்லுடனே ஈதலுமளித்தலுமாகிய) இவைசெய்தல் அரியனவாகலால் 'வல்லாற்கு' என்றும், அவன் பூமி முழுதும் ஆளுவானாகலால் 'இவ்வுலகு' என்றும் சொல்லினர். நினைத்த வளவினதாதல் - நினைத்த பொருளெல்லாம் கிடைக்கப்பெறுதல.

(க - து) இனிய சொல்லுடன் ஈதலைச் செய்து குடிகளைக் காத்தளிக்கவல்ல அரசனுக்கு நினைத்தவையெல்லா முண்டாகும்.

7. The world will praise and submit itself to the mind of the king who is able to give with affability, and to protect all who come to him.

அ. $ முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

பரி:—(இ - ள்.) தான் முறைசெயது பிறரை நலியாமற் காத்தலேயுஞ் செயயும் அரசன் பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்கு 'கடவுளென்று வேறு வைக்கப்படும்', (எ - று).

முறை - ¶ அறநூலும் நீதிநூலுஞ் சொல்லும் நெறி பிறறென்றது

கேள்வியினும் வினையினும் இனியவாய சொல் என்பதில் கேள்வியினியவாய சொல்—கேட்பதறகுப் பிரியமான சொல் எனவும், வினையினியவாய சொல்—தொழிலில் நன்மையைத் தருவதாயசொல் எனவும் கொள்க.

† வினையினும் என்றும் பாடமுண்டு. ‡ சுரத்தல் - மேன்மேலுண்டாதல்.

$ நீதிநெறிவிளக்கம் (உ எ - வது செய்யுள்) "அனைவோர்க்குந் தெய்வம், இலமுகப் பைம்பூணினை" என்று கூறுகின்றது.

¶ அறநூல் - மனு தரும சாஸ்திர முதலியன ; நீதிநூல் - சுக்கிரநீதி முதலியன.

* மேற்சொல்லியாரை. , வேறுவைத்தல் - மக்களிற்பிரித்து உயர்த்து வைத்தல்.

தேளி:—(இ - ன்) முறைசெய்து - (தான்) முறைசெய்து, காப்பாற் றும் - (பிறர் வருத்தாமற்) காத்தலேயுஞ் செய்யும், மன்னவன் - அரசன், (பிறப்பினுல் மனிதனேயாயினும்), மக்கட்கு - மனிதர்களுக்கு, இறையென் றும்-(செயலினுல்) கடவுளென்று, வைக்கப்படும் - (வேறு) வைக்கப்படு வான், (எ - று).

முறை - அறநூலும் நீதிநூலும் சொல்லும் வழி. பிறரென்று கூறி யது முன்னர்க்கூறியவரை. வேறு வைத்தல் - (முறைசெய்து காப்பாற்று மன்னவனே) மனிதரிற் பிரித்து உயர்த்தி வைத்தல்.

(க - து) முறைப்படி குடிகளைக்காக்கும் அரசன் அக்குடி களுக்குத தெய்வமென் றுரைக்கப்படுவான் என்பது.

8. That king will be esteemed a God among men, who performs his own duties and protects his subjects.

கூ. † செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கு முலகு

பரி.—(இ - ள்) ‡ இடிக்குந் தூணேயாயினுர் சொற்களைத் தன் செவி பொறுத்தாகவும் விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது குடைநிழற்கண்ணே தங்கும் உலகம், (எ - று).

செவிகைப்ப என்றதற்கேற்ப § இடிக்குந்தூணேயாயினு ரென்பது வருவிக்கப்பட்டது. ¶ காவின் புலத்தைச் செவிமேலேற்றிக் 'கைப்ப' என்

* மேற்சொல்லியாரை என்றது இவ்வதிகாரத்தின எ - வது குற ளின் விசேட வரையில "தன் பரிவாரத்தாலும் பகைவராலும்" என்று கூறப்பட்டவர்களே.

† செவிவெறுப்ப என்னுது செவிகைப்ப என்றது பண்பு புலன்மா றிய உபசார வழக்காம். "மருளறுகாரணம்" எனனுஞ் செய்யுளினுரையில் பிரயோக விவேக நூலார் "இன்சொல், வன்சொல், மதுரகவி, செவிகைப் பச் சொற்பொறுக்கும் என்னும் உபசாரங்களெல்லாம் பண்பு புலன்மாறி வந்தன" என்றனர்.

‡ இடிக்குந்தூணேயாயினுர் - பாவங்களும் நீதியல்லனவுமாய செயல் களைக் கண்டவிடத்து நெருங்கிக்கண்டித்துப் புதுதி சொல்லும் தூணேயாக தன்மையா யிருப்பவர்.

§ இடிக்குந்தூணே என்றும் பாடமுண்டு.

¶ காவின்புலத்தைச் செவிமேலேற்றிக் 'கைப்ப' என்றார் - காவிக் கிரியத்திற்கு விஷயமான கைப்பினை (கசப்பை)ச் செவியிற்கிரியத்தின் மீதேற்றிச் 'செவிகைப்ப' என்றார் என்பது. இங்கு காவின் விஷயம்

ரூர். பண்புடைமை—வீசேடவுணர்வினஞதல். † அறநீதிகளிற் றவறுமை யின் மண்முழுதுந் தானேயாளு மென்பதாம்.

தேனி:—(இ - ள்.) சொல் - (கண்டித்துப் புத்திசொல்லுந் தணை யாயினவரது) சொற்களை, செவிகைப்ப - (தன்) செவி பொறுதாகவும், பொறுக்கும் - (அச்சொற்களின் பயனேநோக்கிப்) பொறுக்கும், பண்புடை - நற்குணமுடைய, வேந்தன் - அரசனது, கவிகைக்கீழ் - குடையின் நிழ லிலே (அரசாட்சியின் கீழே), உலகு - உலகமானது, தங்கும் - நிலைபெறும்.

செவிகைப்ப என்பதற்குப்பொருந்தக் கண்டித்துப் புத்திசொல்லுந் தணையாயினவர் என்பது வருவிக்கப்பட்டது. நாவின் விஷயமான கைப் பைச் செவியின்மே லேற்றிச 'செவிகைப்ப' என்றார். பண்புடைமை - சிறப்பறிவுடையவனுதல். அறநூல் நீதிநூல் கூறியவழியில் தவறு தொழு குதலால், பூமிமுழுதும் தானே ஆளுவானெனபதாம்

(க - து.) அமைசசர் முதலாயினோர் கண்டித்துச் சொல்லும் புத்திபைக் கேட்குமரசன் உலகமுழுதும் ஆளுவான் என்பது.

9 The whole world will dwell under the umbrella of the king who can bear words that embitter the ear.

க0. கோடையளி சேங்கோல் குடியோம்ப ஞன்கு
முடையானும் வேந்தர்க் கோளி.

பரி:—(இ - ள்.) வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும் யாவர் மாட்டுந் தலையளி செய்தலும், முறைசெய்தலும், தளர்ந்த தடிகளைப் போலுமாகிய இரு நான்கு செயலையும் உடையவன் வேந்தர்க்கெல்லாம் விளக்காம், (எ - று).

தலையளி - முகமலர்ந்தினிய கூறல் ‡ செவ்விய கோலிபோறலின் 'செங்கோல்' எனப்பட்டது. குடியோமபலென எடுத்துக் கூறினமையால்

செவியின் விஷயமாகச சொல்லப்பட்டது ஓரிந்திரியத்தின் விஷயத்தை மற்றோரிந்திரியத்தின் விஷயமாகக்கூறுதல 'கண்ணிற் சொலிசசெவியி னுக்கு மிறைமாட்சி'' ''நாற்றங கேட்டலுந் தின்ன யப்பது'' என்று வரும் பிரயோகங்களாலு மறிதற் பாற்றும்.

† அறநீதிகளிற் றவறுமையானும் இடிக்குந்தணையாயினர் தணை யுடைமையானும் என்றும் பாடமுண்டு.

* யாவர்க்கும் என்றும் பாடமுண்டு.

‡ செவ்வியகோல் போறலின்—கோணுதலில்லாத கோல் போன் றிருத்தலால். செவ்வியகோல்போன்ற முறை(நீதி)யைச் செங்கோலென் றது உவமையாகு பெயராம்.

தளர்ச்சி பெற்றும். () அஃதாவது † ஆறிலொன்றாய பொருடன்னையும் ‡ வறுமை நீங்கியவழிக் கொள்ளல் வேண்டின் அவ்வாறு கோடலும் ¶ இழத்தல் வேண்டின் இழத்தலுமாம். § சாதிமுழுதும் விளக்கலின் * 'விளக்கு' என்றார். [] ஒளி—ஆகுபெயர். இவ்வையந்து பாட்டானும் (†) மாட்சியும்பயனும் உடன் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) கொடை - (வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றைக்) கொடுத்தலும், அளி - (யாவரிடத்தும்) முகமலர்ந்து இன்சொற் சொல்லுதலும், செங்கோல் - முறைசெய்தலும், குடியோம்பல் -(தளர்ந்த) குடிகளைப் பாதுகாத்தலும், (ஆகிய), நான்கும் - இந்நான்கு செயல்களையும், உடையான் - உடையவன், வேந்தர்க்கு - அரசர்க்கெல்லாம், ஒளியாம் - விளக்காம், (எ - று).

செவ்வியகோல் போலுதலால் முறை செய்தல் 'செங்கோல்' என்று கூறப்பட்டது. குடியோம்பல் என்று எடுத்துச் சொல்லியதால் குடிகளின் தளர்ச்சி பெறப்பட்டது. அஃதாவது குடிகளிடத்து ஆறிலொன்றாகியபொருளையும் வறுமை நீங்கிய விடத்து வாங்கவேண்டினால் அப்படி வாங்கலும் விட்டுவிட வேண்டினால் விட்டு விடுதலுமாம். தானரசசாதி முழுதும் விளக்கலால் 'விளக்கு' என்றார். ஒளி - பண்பாகு பெயர். இவை ஐந்து பாட்டாலும் அவ்வரசனது மாட்சியும் பயனும் உடன் சொல்லப்பட்டன.

() குடியோம்பலாவது.

† குடிகளுக்குக் கிடைக்கும் பொருள்களுள், ஆறிலொரு பாகமே அரசனுக்குரிய பொருளாமென்பது இலவாழ்க்கை அதிகாரம் 3-வது குறளின் விசேடவுரையில் (தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும்)"ஐவகையும் அறஞ்செய்தற்கிடனுகலின் 'ஐம்புலம்' என்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று ; இவ்வைம் புலத்திற்கும் ஐந்து கூறுவேண்டுதலா னென்பதறிக" என்று கூறியிருத்தலா லறிதற் பாற்றுமென்க.

‡ விநாயகபுராணம் 'குடிதளர் வுற்றகாலைக் கொள்பொரு ளாறிலொன்றும் விடுவது செயது" என்று கூறுவதும் இங்ஙனியைத தக்கதாம்.

¶ வறுமை நீங்காவழி இழத்தல் வேண்டின என்றும் பாடமுண்டு.

§ பலவற்றினூடு தொடர்ந்து ஒன்றாய்த் தோன்றுந் தன்மையது சாதியெனப்படும். இங்குச்சாதி அதனோடுடைய பொருளுக்கு இலக்கணநூலார் கொண்கைப்படி பண்பாகு பெயராம.


* ஒளி' என்றார் என்றும் பாடமுண்டு.

ஒளியென்னும் பண்புப்பெயர் அதனோடுடைய விளக்கிற் காதலால் பண்பாகு பெயராம்.

(†) காட்சிகெளியன் கடுஞ்சொல்ல னல்லனுதல், இன்சொலா லீத்தளித்தல், முறைசெய்து காப்பாற்றல், செவிகைப்பச் சொற்பொறுத்தல், கொடையளி செங்கோல் குடியோம்பல் என்பன மாட்சியாம்; மீக்கூறுதல், தான்கண் டனைத்தில்வு வுலகு, மக்கட் கிறைபென்று வைக்கப்படும், கவிகைக்கீழ்த் தங்குமுலகு, வேந்தர்க் கொளியா மென்பன பயனும்.

(க - து.) கொடைமுதலிய நான்கு செயல்களையு முடைய வரசன் அரசர்க்குள் விளக்குப்போன்று விளங்குவான் என்பது.

10. He is the light of kings who has these four things, beneficence, benevolence, rectitude, and care for his people.



இரண்டாம் அதிகாரம்.

கல்வி—On Learning.

பரி:—அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அந்நூல்களாவன அறநூலும் நீதிநூலும், யானை, குதிரை, தேர், ‡ படைக்கல மென்றிவற்றி னூல்களும் முதலாயின அரசன் அறிவுடையனாயக்கால் தன்னை யிரக்கையன்றி [] மன் னுயிர்க்கும் பயன்படுதலைக்கி, இஃதரசியலுள் வைக்கப்படாதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமைபிற்போ நுபடக் கூறுகின்றார் மேல் ¶ "தூங்காமை கல்வி" எனத்தோற்றுவாய செயதமாட்சி யை விரித்துக்கூறுகின்றமை யின், இஃதிதை மாட்சியின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அவ்வரசன் தான் கற்றறகுரிய நூல்களைக் கற்றல். அந்நூல்களாவன அறநூலும் நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலம் எனப்பட்ட இவற்றி னூல்களும் முதலானவையும் அரசன் அறிவுடையவனாயிருக்கால் தன்னையிரக்கையன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல குறித்து, இக்கல்வி அரசியலுள் வைக்கப்பட்ட தாயினும், யாவர்க்கும் கண்மையைத்தருவதாகிய சிறப்புடைமையைஞ் (அதனை)பொதுப்படச் சொல்லுகின்றார். முன்னை சூத்திரத்தில் "தூஙகாமை கல்வி" என்று தொடக்கஞ் செயத மாட்சியை விரித்துச் சொல்லுதலால், இஃது (கல்வி) இறைமாட்சியின்பின வைக்கப்பட்டது.

க. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

பரி:—(இ - ள்) ஒருவன் கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்க; அங்ஙனங்கற்றல் அக்கல்வித்துந்தக அவை சொல்லுகின்ற நெறிக்கண் ணே நிற்க, (எ - று).

† "தவமுயன றரிதிற பெற்ற தனிபிரவ நுமரு ளுளரு, சிவழுபன் றடையுங் தெய்வக் கலைபல திருந்த வோதிக, கயனமாம புரவி யானை தேர் படைத் தொழில்கள் கற்றுப், பலமுபன் றதுவும் பேறே பெனவரும் பண்பின் மிக்கான்" என்று பெரிய புராணம், திருவாரூர்ச் சிறப்பில் மனு நீதிகண்ட சோழனது மகன் ஒதியது பற்றியும் கறறதுபற்றியுங் கூறியிருப்பதிற்கு நன்குணர்தற்பாலதாம்.

‡ படைக்கலம் - ஆயுதம். [] தன்னாசாட்சியின் கீழ்வாழுமியிர்க்கும்.
¶ இறைமாட்சி கூ.

'கற்பவை' என்றதனுல், † அறம் பொருள் இன்பம் வீடென்னும் ‡ உறுதிப்பொரு ளுணர்த்துவன வன்றிப் $ பிறபொரு ளுணர்த்துவன வென்னுட் பல்பிணிச் சிற்றறிவினர்க் காகாவென்பது பெற்றும். கசடறக் கற்றலாவது விபரீத ஐயங்களை நீக்கி மெய்ப்பொருளே நல்லோர் பலருட னும் பலகாலும் பயிறல். சிற்றலாவது இல்வாழ்வுழிக் ¶ ''கருமமு முள்ப டாப் போகமுந் தல்வாத், தருமமுந் தக்கார்க்கே செய்'' தலினும், துறந் தழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும் வழுவாமை. () சிறப் புடை மகற்காயிற் கற்றல்வேண்டு மென்பதூஉம், அவனுற் [] கற்கப்படு நூல்களும், அவற்றைக் †† கற்குமாறும், கற்றதனுற் ‡‡ பயனும் இதனுற் கூறப்பட்டன.

தேளி:—(இ - ள்.) (ஒருவன்) கற்பவை - கற்பதற்குரிய நூல்களை, கசடற - குற்றமொழிய, கறக - கற்றக்கடவன், கற்றபின - (அவ்வாறு) கற் றூல், அதற்கு - அகலல்வீக்கு, தக - தகுதியாக, நிற்க - (அந்நூல்கள் சொ ல்லுகின்ற வழியிலே) நிற்கக்கடவன், (எ - று).

† ''கல்வி கரையில கற்பவர் நாள்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல- தெள்ளிது, ஞராய்ச் தமைவுடைய கற்பவே நீரொழியப், பாலுண் குருகிற் றெரிந்து'', ''அலகுசால் கற்பி னறிவு நூல்கல்லா, தலகநூ லோதுவ தெ ல்லாம் - கலகல, கூஉக் துணையல்லாற் கொண்மி தமிமாற்றம், போஒக் துணையறிவா ரில்'' என்பு நாலடியார் கூறுவதாலும் ' அறம் பொருளின் பம் வீடென்னு முறுதிப் பொருளுணர்த்துவன வன்றிப் பிறபொருளுணர் த்துவன வென்னுட் பல்பிணிச் சிற்றறிவினாக் காகா என்பது பெற்றும் ' என்பது நனகு விளங்கும்.

‡ உறுதிப்பொருள்-புருஷார்த்தங்கள். புருஷார்களினிச்சைக்கு விஷ யமாவது புருஷார்த்தமாம்.

$ பிறபொரு ளுணர்த்துவன - களவுநூல் காமநூல் முதலாயின.

¶ நாலடியார் அறிவுடைமை - ய. இதன் பொருள் (அறம் பொருள் களுக்குக் காரணமான) முயற்சிகளேயும் உடன்பட்டுச் செயதி, (அவ்வறம் பொருள்களா லுண்டாகும்) இன்பத்தையு மனுபவித்து, (சான முதலாய) வறங்களைக் (கல்வியறிவு ஒழுக்கங்களால்) தகுதி யுடையவரா யிருப்பார் களுக்கே செய்து என்பது.

() சிறப்புடை மகற்காயின் - முத்தியடைதற் குரிமை யுடைய மக னுக்காஞல்.

[] கற்கப்படு நூல்கள் - அறம் பொரு ளின்பம் வீடென்னும் உறுதிப் பொருள்களே யுணர்த்தும் நூல்கள்.

†† கற்குமாறும் - பழுதறக் கற்கும் வகையும்.

‡‡ பயனும் - அறமுதலிய வுறுதிப் பொருளே யுணர்த்தும் நூல்கள் கூறும் வழியிலே நிற்றலும்.

'கற்பவை' என்றதனால் அறம் பொருள் இன்பம் வீடு என்கிற உறுதிப் பொருள்களே உணர்த்தும் நூல்களல்லாமல் வேறு பொருளுணர்த்தும் நூல்கள் சில வாழ்க்கையும் பல தோணியும் கிற்றறிவையு முடைய மக்களுக்கு ஆகா என்பது பெறப்பட்டது. கசடறக் கற்றலாவது விபரீத சந்தேகங்களே நீக்கி மெய்ப்பொருளே கல்லோர் பலரோடும் பலதரமும் பழகுதல். நிற்றலாவது இல்வாழ்க்கையிலே நின்று கருமங்களைச் செய்து இன்பத்தையனுபவித்து யோக்கியருக்குத் தருமஞ்செய்தலிலும் துறவறத்தை மேற்கொண்டவிடத்தித தவத்தால் மெய்யுணர்ந்து அவாவறுதலிலும் தவறுமை. இதனால் நிறப்புடைய புருஷனுக்கானால் கற்கவேண்டு மென்பதும், அவனால் கற்கப்படும் நூல்களும், அந்நூல்களைக் கற்கும் விதமும், கற்றதனாற் பயனும் சொல்லப்பட்டன.

(க - து.) ஒருவன் கற்கவேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்றுப் பின் அககல்வியறிவுக்குத் தக்கவாறு, அவை கூறும் வழியில் நிற்கக்கடவன்.

1. Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning.

உ. † எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழ முயிர்க்கு.

பரி:—(இ - ள்.) அறியாதார் எண்ணே ரென்று சொல்லுவனவும் மற்றையெழுத்தேரென்று சொல்லுவனவுமாகிய விவ்விடங்களிலுள்ளனவும் அறிந்தார் சிறப்புடைய உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர், (எ - று).

‡ எண்ணென்பது கணிதம் ; அது ¶ கருவியுஞ் செய்கையுமென

† ஔவையார் ஆத்திசூடியில் "எண்ணெழுத் திகழேல்" எனறும், கொன்றை வேந்தனில "எண்ணும் மெழுத்துங் கண்ணெனத தகும்" என்றும் அருளியிருத்தலும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

எண் என்பது கணிதமும் அதனோடொற்றுமையுடைய தருக்கமுமாம். எழுத்தென்பது எழுத்தும் அதனோடொற்றுமையுடைய சொல்லுமாம்

‡ "சர்வசாஸ்திரத்தின் பொருளேயு மறிதற்குத் தர்க்கமும்இலக்கணமும் மிகு உபகாரமா யிருக்கின்றன" என்றும், "தருக்கமும் இலக்கணமுமே மக்களுக் கிருகண்ணுகும்" என்றும் சொல்லப்பட் டிருப்பினும், பரிமேலழகர் தருகத்தைக் கணிதத்தி லடக்கி (எண் என்பது தருக்கமென்று கூறுதி) எண் ணென்பது கணிதம் என்று கூறினு ரென்க. தருக்க சாஸ்திரம் கணித சாஸ்திரத்தினே ருறுபா யடங்குவது உய்த்துணர்வார்க்கு நன்கு விளங்கும். எண் என்பதி தருக்கதை யுணர்த்திதல் "காண்ட லனுமானக கதையருத்தா பத்தியிவை, யீண்டிசைத்த வெண்ணெனவே யெண்" என்பதனு லறிக.

¶ கருவியும் செய்கையும் - காரணமும் காரியமும். தொல்காப்பியச்

விருவகைப்படும். அவை ஏரம்ப முதலிய நூல்களுட்காண்க. எழுத்தென வே, அதனே டொற்றுமை யுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விரு திற மும் அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின் 'கண்' எனப்

சூத்திர விருத்தி '' இப்படலத்துள் வீதிக்கப் படுவனவெல்லாம் கரு வியும் செய்கையுமென விருவகைப்படும். அவற்றுள், கருவி நூன்மரபு முதலிய நான்கோத்தானும், செய்கை தொகை மரபு முதலிய வைந்தோத் தானும் கூறப்படும்'' என்று கூறுவதனலும் கருவியும் செய்கையும் இன்ன வென வன்கு புலப்படும்.

கருவியுஞ் செய்கையும் வருமாறு:—

1. (1) புவியென் னுஞ் சொல்லுண்டாவதற்கு, பு - வி - என்னுமெழு த்துக்கள் கருவியாக விருத்தலின், பு - வி - என்னுமெழுத்துக்கள் கருவி யாம்; புவியென் னுஞ் சொல் செயலாகாம். ''சொலலென்னது எழுத தினை ஏக்கப்பட்டு இருதிணைப பொருட்டன்மையும் ஒருவஹுணர்த்தற்குக் கருவியா மோசையாகிய பெயர், வினை, இடை, உரி யென னூல்வகைச சொல்லும் பிறவுமாம்'' என்று சங்கரநமச்சிவாயப்புலவர்தன்னூல் விருத்தி யுரையிற்கூறியிருப்ப தீண்கினைத்தற் பாலதாம.

(2) யான் அச்சுதனைத் தொழுதேன் என்னும் வாக்கிய முண்டாவ தற்கு, யான் - அச்சுதன்-ஐ-தொழுதேன் என்னுஞ் சொற்கள் கருவியாக விருத்தலின், யான் - அச்சுதன் - ஐ - தொழுதேன் என்னுஞ் சொற்கள் கருவியாம்; யான அச்சுதனைத் தொழுதேன் என்னும் வாக்கியம செய் கையாம்.

2. (1) பத்து முதலிய பேரெண்க ளுண்டாவதற்கு, ஒன்று முதலிய சிற்றெண்கள் கருவியாக விருத்தலின, ஒன்று முதலிய சிற்றெண்கள் கருவியாம், பத்து முதலிய பேரெண்களன செய்கையாம ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், அயுதம், இலக்கம், நியுதம், கோடி, அர்ப்புதம், விருந்தம், கருவம, கிகருவம், சங்கம், பதுமம், சமுதாரிம, அந்தியம், மதாந்தியம், பரா ர்த்தமென எண்களின் ஸ்தானம் பகினெட்டாம்; மூப்பத்தாறென்று கூறு தலுமுண்டு. பத்து ஒன்றுலுறழ்ந்தது பத்தி, பத்துப் பத்தாலுறழ்ந்தது நூறு என்றற் றொடக்கதனவாக வுணர்தல் வேண்டும். பின்பின் உள்ள எண்கள் பேரெண்ணை; முன்முன் உள்ள எண்கள சிற்றெண்ணும். இரண்டு மூன்று முதலிய வெண்கள் அகேக வொருமை யெண்களின் அபேட்சா புத்தியாற் ரோன்றி, அதன் நாசத்தாற் கெடுவனவாமென் றிங்குணர்தல் வேண்டும்.

(2) மலை முதலிய விடங்களில் புகையைக் கண்டவிடத்து இம்மலை நியுடையதெனலும் அநுமிதி ஞானமுண்டாவதற்கு, யாண்டுப்புகை ஆண் டுத் தீ யென்னும் நியதமான வுடனிகழ்ச்சிப் பிரத்தியட்ச ஞானம் கருவி யாக விருத்தலின், யாண்டுப்புகை ஆண்டுத் தீ யென்னும் நியதமான வுட னிகழ்ச்சிப் பிரத்தியட்ச ஞானம் கருவியாம்; இம்மலை நியுடையதென்னும் அநுமிதி ஞானம் செய்கையாம். இவ்வாறே பிறவற்றையு மூய்த்துணர்க.

பட்டன. † அவை கருவியாதல் ‡ "ஆதி முதலொழிய வல்லா தனவெண் ணீ, னீதி வழுவா நிலைமையவான்-மாதே,யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின், நிறமாமோ வெண்ணிறத்தாற் செப்பு", ¶ "எழுத்தறியத் தீரு மிழிதகைமை நீர்த்தான், மொழித்திறத்தின் முட்ட றுப்பா ஞகு-மொழித் திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதலூற் பொருளுணர்ந்து, கட்டறு தது வீடு பெறும்" இவற்றுணர்க. என்ப என்பவற்றுள், முன்னைய இர ண்டும் அஃறிணைப் பன்மைப் பெயர்; பின்னையது உயர்திணைப் பன்மை விணை. அறியாதார் அறிந்தா ரென்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயி ரென்றது மக்களுயிருள்ளும் உணர்வு மிகுதி யுடையதனை. இதனுற் கற்

† அவை - எண்ணும் எழுத்தும்.

‡ (இதன்பொருள்) மாதே - பெண்ணே, ஆதி-சிருட்டியினாரம்பத் தில், (சீவர்களுய்யுமாற கடவுளால் எடுத்துச் சொல்லப்பட்ட), முதலொ ழிய - (தருமார்த்த காமமோட்சங்களை யுணர்த்தும்) முதல் நூலாகிய வேதம் தவிர, அல்லாதன - (வேதத்திற்கு மாறுபட்ட) மற்ற நூல்கள், எண்ணின் ஆராய்ந்து பார்த்தால், நீதி வழுவாம் நிலைமைய - (தருமார்த்த காமமோட்சங்களை யுணர்த்துவதில்) முறைமைதவறிய நிலை மையினையுடையனவாம், எண்ணிறத்தால் - (முதல் நூற்பொருளை) கணித நூலோடுமாறுபட அறிந்தால், அறமார் பொருளின்பம் வீடென்றிவற்றின் நிறம் - தருமார்த்த காமமோட்சமென்று சொல்லப்படும் இவற்றின் பாகு பாடு, ஆமோ - (ஒருவனுக்கு) சித்திக்குமோ (சித்திக்காதென்றபடி), செப்பு - (நீ) சொல்லு, (எ - று). ஆல் - அசை.

¶ (இதன்பொருள்). (ஒருவன்) எழுத்தறிய - இயற்றமிழை யறிந் தால், இழிதகைமை நீரும் - (அசுண மவனுக்கு) பேசுதைமையான து ஒழி யும், நீர்ந்தால் - (அப்பேதைமையான தி) ஒழிந்தால், மொழித்திறத்தின் மூட்டு - (அவன்) சொற்பகுப்பிற்றேன்றும் மாறுபாட்டை, அறுப்பாளு கும் - ஒழிக்குந்தன்மையை யுடையவனவான், மொழித்திறத்தின் முட் டறுத்த நல்லோன் - சொற்பகுப்பிற் றேன்றும் மாறுபாட்டை யொழித்த நல்லறிவுடையவன், முதனூற் பொருளுணர்ந்து - முதல்நூலின்பொருளை (ஐம்திணிபற) அறிந்து, கட்டறுத்து - பந்தத்தை யொழித்து, வீடுபெறும்- மோட்சத்தை யடைவான். (எ - று).

[ரன்னூல் சிறப்புப் பாயிரத்தினுரையில் "எழுத்தென்றது இயற்றமி ழை. அது 'எண்ணென்பவேனை யெழுத்தென்ப' என்பதனலு முணர்க இசைத்தமிழும் நாடகத்தமிழும் இவ்வியற்றமிழ்போல முதல்நூற் பொரு ளுணர்தற்குக் கருவியன்மையின் இயற்றமிழ் ஒன்றுமே கூறினர்" என்று சங்கர நமச்சிவாயப்புலவர் கூறியிருக்கின்றனர்].

"கற்பக் கழிமட மஃகு மடமஃப், புற்கற்கீர்ந் தில்வுலகிற் கோளு ணரும் கோளுணர்ந்தால், தத்துவ மாய தெறிபடரு மக்தெறி, இப்பா லுல கத் திசைநிறீஇ யப்பால், உயர்ந்த வுலகம் புகும்" என்று ான் மணிக்கடி கை கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

பயன நூல்கட்குக் கருவியாவனவும் அவற்றது இன்றியமையாமையும் கூறப்பட்டன.

தேவி:—(இ - ன்.) (அறியாத்தவர்) எண்ணென்ப - எண்ணென்று சொல்லுவனவும், ஏனை யெழுத்தென்ப-மற்றையெழுத்தென்று சொல்லுவனவும், இவ்விரண்டும் - (ஆகிய) இக்கலைகளிரண்டையும், (அறிந்தார்) வாழுயிர்க்கு - வாழ்தற்குரிய (சிறப்புடைய) மனிதர்க்கு, கண் - கண்களாகும், என்ப - என்று சொல்லுவார், (எ - று).

எண் என்பது கணிதம்; அக்கணிதம் கருவியும் செய்கையுமென்றிருவகையாம். அக்கருவி செய்கைகளின் தன்மையை ஏரம்ப முதலிய நூல்களிற் காண்க. எழுத்தெனவே அவ்வெழுசதோடு ஒருமைப்பா டுடைய (எழுத்தாலாகிய) சொல்லும் அடங்கிற்று. இவ்விருவகையான எண்ணும் எழுத்தும் தருமார்த்த காம மோட்சமென்னும் நால்வகைப் பொருளையும் ஐயந்திரிபில்லாது கண்டுணர்தற்குக் காரணமா யிருத்தலால் 'கண்' என்று சொல்லப்பட்டன. இக்குறளிலுள்ள என்ப என்னும் மூன்றனுள், முன்னுள்ள இரண்டும் அஃறிணைப் பன்மைவினையாலணையும் பெயர்; மற்றது உயர்திணைப்பன்மை யெதிர்கால வினைமுற்று. இவைபு நோக்கி அறியாதவர் அறிந்தார் என்பன வருவித்துச் சொல்லப்பட்டன. சிறப்புடைய உயிரென்று கூறியது மனிதருயிருளளும் அறிவு மிகுந்திருப்பதனே. இதனால் கற்கப்படு நூல்களுக்குக் காரணமாவனவும் அவற்றினது அவசியமும் சொல்லப்பட்டன கலைகள் - நூல்கள்.

(க - து) மக்களுக்குக் கண்போன்றிருப்பன எண்ணும் மொழித்துமாம் என்பது.

2. Numbers and Letters are the two eyes of man.



கூ. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே; மற்றைக் கல்லாதவர் முகத்தின் கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர் (எ - று).

† தேய மிடையிட்ட வற்றையும் ‡ கால மிடையிட்ட வற்றையுங் காணும் ஞானக்கண்ணுடைமையின், கற்றாரைக் 'கண்ணுடையர்' என்றும், அஃதின்றி நோய் முதலியவற்றுன் தின்பஞ்செய்யும் ஊனக்கண்ணே

† தேயமிடையிட்டவற்றையும் - தாமிருக்கும் தேசத்தன்றி வேறு தேசத்திருப்பனவற்றையும்.

‡ காலமிடையிட்ட வற்றையும் - நிகழ்காலத்தன்றி யிறந்தகாலத்திலிருந்தனவற்றையும் எதிர்காலத்தில் இருப்பனவற்றையும்.

உடைமையிற் கல்லாதவரைப் 'புண்ணுடையர்' என்றுங் கூறினர். † மேற் கண்ணின்மை யுரைகின்ற வூனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றான், § பொருணூல்களோடு ‡ கருவிநூல்களோடு கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் இதனாற் பெறுதுதுங் கூறப்பட்டன

தெளி:—(இ - ள்) கண்ணுடைய ரென்பவர் - கண்ணுடையவரென்று உயர்த்திச் சொல்லப்படுவார், கற்றோர் - கற்றவரே, கலலாதவர் - மற்றைக் கற்றிலாதவர், முகத்து - முகத்தினிடத்து, இரண்டு புண்ணுடையர் - இரண்டு புண்களுடையவர் (கணணிலார்), (எ - று)

எல்லா இடங்களிலும் எல்லாகாலங்களிலும் உளவாற்றைக்காணும் ஞானக்கண்ணுடைமைபால கற்றோரைக் 'கண்ணுடையர்' என்றும், அந்த ஞானக்கண் இலவாமல நோய முதலாய வற்றால தானபஞ்சேப்பும் ஊன (மாமிச) க கண்ணே யுடைமையால கல்லாதவரைப 'புண்ணுடையர்' என்றும் சொலலினர் முறைகூறிய குறளில கணணிலாமை அறியுமாறிருந்த வூனக்கண்ணினது மெய மனையாகிய சொருபதைக்க சொலலிய லிதனி னால, பொருள்நூல்களோடு கருவிநூல்களோடு கற்றாரது உயர்வும் கல்லாதவர்களது இழிவும் இதனால் தொகுத்தார சொலலப்பட்டன

(க - து) கற்றவர் கண்ணுடையவருமம் மற்றவர் குருடரு மாவ ரென்பது

3. The learned are said to have eyes, but the unlearned have merely two sores in their face

ச. உலப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்

பரி.—(இ - ள்.) யாவரையும் அவர் உலக்குமாறு தலைப்பெயித்து இனி இவரை யாம் எங்ஙனங் கூடுதுமென நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து கற்றறிந்தாரது தொழில், (எ - று)

தாம் நல்வழியொழுகல பிறாகுதுதி கூறலென்பன இரண்டுந் தொழிலென ஒன்று படுதலின 'அனைத்து' என்றார அத்தனமை - அப்பயனைத் தருதன்மை, கலலாழுகுகு காரணடலாலும், தமகு மதுர

† மேற்கணணின்மை யுரை கின்ற-'எணணென்ப' என்றுமேலுள்ள குறளில எணணுமெழுத்து மறியாதவரது கணகள கணகளல்லவென அறியுமாறிருந்த

§ பொருள்நூல்கள் - தருமாராத காமமோடசங்களை யுணர்த்து நூல்கள.

‡ கருவிநூல்கள-கணிதமும இலக்கணமும். தாம் என்றது கற்றறிந்தாரை

மும் உறுதியுமாய கூற்றக்கள் நிகழ் வெதிர்வுகளின் இன்பம் பயத்தலா னும், கற்ருர்மாட்டு எல்லாரும் அன்புடையராவ ரென்பதாம். இதனுற் கற்ருரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) புலவர் - கற்றறிந்தவரது, தொழில் - தொழி லாவது, உவப்ப - (யாவரையும் அவர்) மகிழும்படி, தலைக்கூடி - சேர்ந்து, உள்ள - (இனி இவரை நாம் எவ்வாறு கூடுவோமென்று) நினைக்கும்படி, பிரிதல் - நீங்குதலாகிய, அனைத்து - அத்தன்மையதாம், (எ - று).

தாம் சன்மார்க்கத்திற் செல்லுதல் பிறர்க்கு உறுதிதருவனவற்றைக் கூறுதலென்னு மிரண்டும் தொழிலென ஒன்ருயடங்குதலால் 'அனைத்து' என்று அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்ருகக் கூறினர். அத் தன்மை - உவப்பத்தலைக்கூடி யுள்ளப்பிரிதலாகிய அப்பயனைத்தரும் தன் மை. சன்மார்க்கத்தி லொழுகுதலைக காண்பதனலும், தங்களுக்கு இனி மையும் உறுதியுமான சொற்கள் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இன் பத்தைத் தருதலினலும், கற்ருரிடத்து யாவரும் அன்புடையராவ ரென்ப தாம். இதனல் கற்றவரது உயர்வு பிரிதற்கு கூறப்பட்டது.

(க - து.) தமது சேர்க்கையால் மகிழ்ச்சியுற்ற யாவரும் இவரை யினியெவ்வாறு காண்போமென்று நினையுமாறு அவரைப் பிரிதலே கற்றறிந்தாரது செய்கையாம் என்பது.

4. It is the part of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think Oh! when shall we meet them again.



9. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்ருர்
கடையரே கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) ‡ "பிறிற்றை நிலை முனியாது கற்றல் நன்" றதலா ன், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஆசிரியர் முன் எக்கற்று நின்றுங் § கற்ருர் தலையாயினர்; அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரேயாவர், (எ - று).

உடையார் இல்லாரென்பன உலகவழக்கு. எக்கறதல் - ஆசையாற்ரு ழ்தல்.'கடையர்'என்றதனன் அதன் † மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது.

‡ புறநானூறு ஈஅக. இதன்பொருள் வழிபாட்டு நிலைமையை வெரூஉ (வெறுக்காது) கற்றல் ஒருவற்கு அழகிது என்பது.

§ கற்ருர் தலையினர் என்பது நாலடியார் "கடைநிலத்தோ ராயி னுங் கற்றணர்ந தோரைத், தலைநிலத்து வைக்கப்படும்" என்றும், புறநா னூறு "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும், கீழ்ப்பா லொருவன் கற் பின், மேற்பா லொருவனு மவன்கட் படுமே" என்றும் கூறுவதாலு முண ரப்படும். † கடையர்க்கு மறுதலைப் பெயர் தலையினரென்பது.


பொய்யாய மான நோக்கி மெய்யாய கல்வியிழந்தார் பின்னெரு ஞான்றும் அறிவுடைய ராகாமையின் ' கடையரே ' என்றார். இதனற் கற்றாரது உயர்வுங் கல்லாதாரது இழிவுங் கூறப்பட்டன.

தெளிஃ—(இ - ள்.) உடையார்முன் (வழிபடுதலே வெறுக்காது கற்றல் கல்லதாகலால்) செல்வர்முன்னே, இல்லார்போல் - வறியவர் (கீற்கும் விதம்) போல, எக்கற்றும் - (தாமும் ஆசிரியர்முன்) (படிக்கவேண்டும் என்னும்) ஆசையினால் தாழ்த்து நின்றும், கற்றார் - கற்றவர், (உயர்ந்தவராவார்), கல்லாதவர் - (அவ்வழிபடுதலுக்கு வெட்கமுற்றுக்) கல்லாதவர், கடையரே-(எப்போதும்) இழிந்தவரே யாவர், (எ - று).

பொருளுடையாரை உடையாரென்பதும் பொருளில்லாதாரை இல்லாரென்பதும் உலகவழக்காம். எக்கறுதல் - ஆசையினால் தாழ்தல். கடையர் என்றதனால் அதன் மறுதலைப் பெயராகிய உயர்ந்தவ ரென்பது வருவிக்கப்பட்டது. பொய்யாகிய மானத்தைநோக்கி மெய்யாகிய கல்வியை இழந்தவர் பின்னெருநாளும் அறிவுடைய ராகாமையால் ' கடையரே ' என்றார். இதனால் கற்றவர்களது உயர்வும் கல்லாதவரது இழிவும் சொல்லப்பட்டன. மறுதலை - எதிர்.

(க - து.) ஆசிரியர்முன் தாழ்ந்து நின்று கற்றோர் உயர்ந்தவராவர்; மற்றவர் தாழ்ந்தவராவர் என்பது.

5. The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy.



ச. தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

பரி:—(இ - ள்.) மணலின்கட் * கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும்; அதுபோல மக்கட் கறிவு † கற்ற அளவிற்றாக ‡ ஊறும், (எ-று).

ஈண்டுக் கேணி யென்றது அதன்கண் நீரை. அளவிற்றாக என்றது $ அதனளவுஞ்செல்ல வன்றவாறு. சிறிதுகற்ற துணையான் அமையாது மேன்மேற் கற்றல்வேண்டு மென்பதாம். ¶ இஃது ஊழ் மாறுகொள்ளா வழி யாகலின், மேல் 'உண்மையறிவே மிகும்' என்றதனோடு மலையாமையறிக.

கேணி - சிறுகுளம் இது திசைச்சொல். கேணி யென்பது, அதன்க ணுள்ள நீருக்காதலால் இடவாகு பெயராம்.

† "தாங்கற்ற, நூலளவே யாகுமா தண்ணறிவு" என்பது மூதுரை.

‡ ஊறும் - உண்டாகும் $ அதனளவும் - நீர் வெளிப்படு மளவும்.

¶ இஃது (மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு என்பது) ஊழ்மாறு கொள்ளாவழி (ஊழ்வினோதப் படாத விடத்து) ஆகலின்மேல் (ஊழினோ

தெளிவு:—(இ - ள்.) மணல் - மணலினிடத்து, கேணி - கேணியானது, தொட்ட அனைத்து - தோண்டிய அளவினதாக, ஊறும் - சுரக்கும், (அதுபோல), மாந்தர்க்கறிவு - மனிதருக்கு அறிவானது, கற்ற அனைத்து - கற்ற அளவினதாக, ஊறும் - சுரக்கும், (எ - று).

இங்குக் கேணி யென்றது அக்கேணியிலுள்ள நீரை. அளவினதாக என்றது அக்கேணியில் நீர் வெளிப்படுமளவும தோண்டிக் கொண்டுபோக என்றபடியாம். சிறிது கற்றவளவினுல் கற்றது போதுமென்று விடாமல் மேலும் மேலும் கற்றல்வேண்டு மென்பதாம். இக்கல்வியறிவு மிகுதல் ஊழ் மாறுகொள்ளாவிடத் தாகலால், மூன்ரு 'உண்மையறிவேமிகும்' என்றதனுல் விரோதப்படாமை யறிக.

(க - து.) மனிதர்கு அறிவு அவர்கற்ற கல்வியி னளவாக வுண்டாம என்பது.

6. Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning.



எ. † யாதானு நாடாமா லூராமா லேன்னுருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

பரி:—(இ - ள்.) கற்றவனுக்குத் தன்னுடைத் தன்னூருமேயன்றி யாதானு மோருநாடும் நாடாம், யாதானுமோருரும் ஊராம்; இங்ஙனமாயின், ஒருவன்தானிறக்குமளவுங் கல்லாது கழிகின்றது என்கருதி, (எ-று).

உயிரோடு சேறலின் 'சாந்துணையும்' என்ரு. பிறர்காகளும் ஊகஞ் தமபோலே உற்றுப் பொருட் கொடையும் பூசையும் உவந்து செய்தற் கேதுவாகலின், கல்விபோலச் சிறந்தது பிறிதில்லை; அதனையே எப்பொழுதுஞ் செய்க வென்பதாம்.

ரத்தின் மூன்ருவது குறளில்)'உண்மை யறிவே மிகும்'(ஊழானுய பேதைமை யுணர்வே மேற்படும்)என்றதனுல் மலையாமை (மாறுபடாமை) யறிக.

இதனுல் ஊழ் (விதி) விரோதப்படாதவிடத்துக் கற்ற அளவினதாக அறிவுண்டாகு மென்றும், அது விரோதப்பட்ட விடத்துக் கற்ற வளவினதாக அறிவுண்டாகாதெனறும் பெற்ரு மென்க. மாறுகொள்ளா ஊழ் - கல்வினை எனறும், மாறுகொண்ட ஊழ்-தீவினை என்றும் கொள்க.

† மூதுரை "மன்னனுக்குத், தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்ரோர்க்குச், சென்றவிட மெல்லாஞ் சிறப்பு" என்று கூறுவதும், பழமொழி 'ஆற்றவுங் கற்ரு ரறிவுடையா ரஃதுடையார், சாற்றிசை யுஞ் செல்லாத நாடில்லை - யக்நாடு, வேற்றுரா டாகா தமவேயா மாயினுல், ஆற்றுணை வேண்டுவ தில்" என்று கூறுவதும் மிக்கறியத்தக்கனவாம்.

தெளி:—(இ - ன்.) (கற்றவனுக்குத் தன்னூரும் தன்னூருமேயல்லாமல்) யாதானும்-யாதாயினு மொருநாடும், நாடாம்-நாடாகும், (யாதானும்-யாதாயினுமோரூரும்), ஊராம்-ஊராகும், (இப்படியானால்), ஒருவன் சாந்துணையும்-ஒருவன்தான் இறக்குமளவும், கல்லாதவாறு - கல்லாமற் கழிகினறது, என் - என்னநினைத்து, (எ - று).

ஆல் - அசைகள். இறந்த பிறகுங் கல்வி உயிரோடுசெல்லுதலால் 'சாந்துணையும்' எனறார். பிறர்நாடுகளும் ஊர்களும் தம்நாடும் தம்மூரும் போலவிருந்து பொருள் கொடுத்தலும் பூசையும் மகிழ்ந்து செய்வதறகுக் காரணமாகலால், கலவிபோலச் சிறநதது வேறொன்று இல்லை, அக்கல்வியையே எப்போதும் கற்கவேண்டுமெனபதாம்.

(க - து.) எவ்விடத்துஞ் சிறபபைத்தருவது கல்வியாயிருத்தலின், அதனையொருவன் சாகுமளவும் கற்காமலிருப்பது பெருமடைமையாம் என்பது.

7. How is it that anyone can remain without learning even until his death, when to the learned man every country, is his own country, and every town his own town.

அ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்குத் தானெநத பிறப்பின்கட கற்ற கல்வி எழுபிறபபினுஞ் சென்று உதவுதலை யுடைத்து, (எ - று).

† வினைகள்போல உயிரின்கட்கிடநது அதபுக்குழிப் புகுமாகலின் 'எழுமையு மேமாப புடைத்து'என்றார். ‡ எழுமை மேலே கூறப்பட்டது. உதவுதல் - நன்னெறிக்கண உய்த்தல்.

தெளி:—(இ - ன்.) ஒருவற்கு-ஒருவனுக்கு, தான்—, ஒருமைக்கண்-ஒரு பிறப்பினிடத்தது, கற்றகல்வி - கற்ற கல்வியானது, எழுமையும்-எழுபிறப்பிலும், எமாப்பு - (போய்) உதவுதலை, உடைதது - உடையதாம.

கல்வியானது இருவினைகள்போல உயிரினிடத்துப்பொருந்தி அவ்வுயிர் சென்றவிடத்தெ செல்லுமாகலால் 'எழுமையுமேமாப்புடைத்து' என்

† கல்வினை தீவினைகளின் காரியமாகிய தருமாதருமங்கள் உயிரினிடத்து (உயிர்க்குத் தடையாயுள்ள அந்தக காரணத்திடத்து) அதற்பூதமாய் (வெளிப்பாடின்றி) இருப்பது போலக் கல்வியறிவின் சம்ஸ்காரமும் உயிரினிடத்திருக்குமெனபதிங் குணாத்தக்கதாம்.

‡ எழுமைமேலே கூறப்பட்டது - எழுபிறப்பின்வகை செய்ந்நன்றியறிதலதிகாரம் எ-வது குறளினுரையிற் சொல்லப்பட்டது எனபது. எழுவகைப் பிறப்பு-தேவர், மனிதர், விலங்கு (மிருகம்), பறவை, ஊர்வன (தவழ்வன),நீர்வாழ்வன, தாவரம் (மரமுதலியன) என்பனவாம்.

ரூர். எழுபிறப்பின்வகை முன்னே சொல்லப்பட்டது. (தான் கற்ற கல்வி) உதவுதல் - நல்வழியிற் சேர்த்தல்.

(க - து.) ஒருவன் ஒருபிறப்பிற் கற்ற கல்வி அவனுக்கு எழுபிறப்பிலு முதவியாம் என்பது.

8. The learning, which a man has acquired in one birth, will yield him pleasure during seven births.

கூ. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

பரி:—(இ - ள்.) தாமின்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகமின் புறுதலால், அச்சிறப்பு நோக்கிக் கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர், (எ - று).

* தாம் இன்புறுதலாவது † நிகழ்வின்கட் () சொற்பொருளின் சுவை நுகர்வானும், புகழ் பொருள் பூசை பெறுதலானும், § எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலானும், ‡ அதனுன் இடையருத இன்பமெய்துதல். உலகின் புறுதலாவது இம்மிக்காரோடு தூலப்பெய்து ¶ அறியாதன வெல்லாம் அறியப்பெற்றே மென்றும், [] யாண்டு பலவாக நரையில மாயினே மென்

* தாம் எனறது - கற்றறிந்தாரை. † கற்றம்போது.

()(1) சொல்வில் தொடைமுதலியவற்றி னமைப்புப்பற்றி வருமின்ப ம் சொற்சுவையாம். (2) பொருளில் தன்மை உவமை முதலியவற்றி னமைப்புப்பற்றிவருமின்பம் பொருட்சுவையாம். § கற்றபிறகு.

‡ அதனுன் - நுகர்தல் பெறுதல் பயத்தலென்னுங் காரணத்தினுல்.

¶ அறியாதன வெல்லாம் அறியப்பெற்றேம்—அறிதற் கருமையான யோகாப்பியாச முதலிய விஷயங்களேயெல்லாம் தெரியப்பெற்றோம்.

[]யாண்டு பலவாக நரையில மாயினேம் - (யோகாப்பியாசத்தை யப் பியசிக்கும் வகையை நன்கு தெரிந்துகொண்டதனுல் நமக்கு) வருஷம் பல வாகவும் (நரைத்தற்குரிய வயதுவந்தும்) நரைத்தலில்லாம லிருக்கிறோம். விசாரசாகரம் 5-வது தாங்கத்தில் "பிந்து எவரிடத் திதிகமாகவுண்டோ அவரது சரீரத்தில் அழகுங் காந்தியுமுண்டாம். பிந்துவே சரீரத்தில் விளக் கமானது. பிந்து நஷித்தால் சரீரமும் மனமும் நஷிக்கின்றன. எவனுக்குப் பிந்து ஒருபோதும் நாசமடைவதில்லையோ அவனது சரீரம் நரையின்றி வினங்கும்" என்று கூறுவதும், திருமந்திரம் "அஞ்ஞம்ம் போன்றுட லே யது மரணியில்,வஞ்சக வாத மறுமத்தியானத்திற்,செஞ்சொ காலியிற் செய் திடிற் பித்தறும்,நஞ்சதச் சொன்னேம் நரைதிரை நாசமே","நரையருகே நின்ற கான லுவரி, வரைவரை யென்பர் மதியிலாமாந்தர், நரைதிரை நீக்கி நகரவல் லார்க்கு, நரைதிரை மாறு நமனுமங் கில்லையே" என்று கூறுவது மிங்குணர்த்தப்பாலவாம். புறநானூறு "யாண்டு பலவாக நரை

றும் உவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென்றிவற்றுற் றன்புறுதலும், பலரையும் பகையாக்கலும் உடைத்தென அறிந்து அத னைக் காமுறுமையிற் 'கற்றறிகார்' என்றும், கரும்பு அயிறற்குக் கூலி போலத் தாமின்புறுதற்கு உலகின்புறுதல் பிறவாற்றுன் இன்மையின் அதனையே 'காமுறுவர்' என்றுங் கூறினர்.

தேளி:—(இ-ள்.) தாம்—, இன்புறுவது - இன்பமடைவதற்குக் கார ணமாகிய கல்விக்கு, உலகு - உலகமானது, இன்புற - இன்பமடைதலால், கண்டு-(அச்சிறப்பு) நோக்கி, கற்றறிந்தார் - கற்றறிந்தவர்கள், காமுறுவர் - (பின்னுங் அக்கல்வியையே) விரும்புவார், (எ - று).

தாம் இன்புறுதலாவது (கல்வியால்) நிகழ்காலத்தில் சொற்பொருள்க ளின சுவையை யனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறு தலாலும், எதிர்காலத்தில் (கல்வி) ஊறுதையும் வீட்டையுந் தருதலாலும், அதனுல் இடையறுத இன்பததை அடைதல். உலகு இன்புறுவதாவது இப் பெரியவரோடுகூடி அறியாதவற்றை யெலலாம் அறியப்பெற்றே மென் றும், வருஷங்கள பலவாக நரையில்லாம லாயினுமென்றும் மகிழ்தல். செல்வமானுல், (அச்செல்வத்தை) சம்பாதித்தல் காப்பாற்றல் இழத்தல் என்கின்ற இவற்றுல் துன்பமடைதலும், (செல்வம்) பலரையும் பகையாக் கலும் உடையது எனதெரிந்து அச்செல்வத்தைவிரும்பாமையின் 'கற் றறிந்தார்' எனறும் கரும்பு தின்பதற்குக் கூலி பெறுவதுபோலத் தாம் இன்பமடைதற்கு உலகின்பமடைவது மற்றொரு வழியால் இல்லாமை யால் அக்கல்வியையே 'காமுறுவர்' என்றும் சொல்லினர்.

(க - து.) கற்றவர் தாங்களின்பமடையுங் கல்விக்கு உலகத் தாரின்பமடைதலைக் கண்டு அதனையே மேலுமேலும விரும்புவர்.

9, The learned will long for more learning, when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it.

கo. † கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

யிலவாகுதல், யாங்கா னியென வினவுதி ராயின், மாண்டவென் மனைவியொடு மக்களு நிரமபினா, யான்கண டனையரென் னினையரும் வேந்தனும், அல்லவை செய்யான் காக்கு மதன்றலை, யன்றவிர் தடவிய கொள்கைச், சான்றோர் பலர்யான் வாழு மூரே'' என்று கூறுவது மிங்கறி யத்தக்கதாம்.

† இலக்கணக்கொதது ''சூத்திரஞ் சிலசில நோக்குதற் கரிதேல்'' என் னும் சூத்திரவுரையில் '' கலித்தொகையின் ஓர்காரணநோக்கி கிதிப் பொருளைக் கேடில்விழுச செல்வம் என்றார். இவ்வடை (கேடில் விழு என் னும் அடை) கல்விக்குரித்தன்றிப் பிறவற்றிற்கு முரித்தோவென்பாரை

பரி:—(இ - ள்.) ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி; அஃதொழிந்தமணியும் பொன்னுமுதலாயின செல்வமல்ல, ()


அழிவின்மையாவது * தாயத்தார், கள்வர், வலியர், அரசரென் றிவ ராற் கொள்ளப்படாமையும், $ வழிபட்டார்க்குக் கொடுத்தழிக் குறையா மையுமாம். சீர்மை - தக்கார்கண்ணே நிற்றல். மணி பொன் முதலியவற் றிற்கு ‡ இவ்விரண்டும் இன்மையின், அவற்றை 'மாடல்ல' என்றார். இவையைந்து பாட்டானுங் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, கேடில் - அழிவில்லாத, வீழு - சிறந்த, செல்வம் - செல்வமாவது, கல்வி - வித்தையாம், மற்றைய வை - அதுநீங்கலாகிய மணியும் பொன்னும் முதலானவை, மாடல்ல-செல் வமல்ல, (எ - று)

(கல்விச்செல்வத்திற்கு) அழிவில்லாமையாவது பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்று சொல்லப்படும் இவர்களால் கொள்ளப்படாமை யும், வழிபட்டவர்க்குக்கொடுத்தக்கவிடத்துக் குறையாமையுமாம். சிறப்பு - யோக்கியரிடத்தே நிற்றல். மணி பொன் முதலாயினவற்றிற்கு இவ்விரண் டும் இல்லாமையால் அவற்றை 'மாடல்ல' என்றார். இவை ஐந்து பாட்டா லும் கல்வியது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து) ஒருவனுக் கழியாத செல்வம் கல்வியன்றி மற்றை யனவல்ல எனபது.

10. Learning is the true imperishable riches; all other things are not riches.



மூன்றும் அதிகாரம்.

கல்லாமை—*On the neglect of learning.*

பரி:—அஃதாவது கற்றலிற் செய்யாமை; என்றது, அதனின்ஆய இழிபினை. கல்விச்சிறப்பு † மேல் விதிமுகத்தாற் கூறியதுணையான் முற்றுப்பெறுமை நோக்கி, எதிர்மறைமுகத்தானும் கூறுகின்றதாகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

நோக்கி, வழு வமைத்தார் நச்சினார்க்கினியார்" என்று கூறுகின்றது. இதனால் கேடில்வீழு என்னும் விசேஷணம் கல்விக்கன்றிப் பிறவற்றிற் கின் றென்பது பெற்றாம்.

நாலடியார் "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை, மிக்க சிறப்பினரசர் செறின்வவ்வார்" என்று கூறுகின்றது. $ கற்கு மாறு வழிபாடு செய்கின்றவர்க்கு.

‡ இவ்விரண்டும் - தாயத்தார் முதலியவர்களால் கொள்ளப்படாமை யும் கொடுத்தழிக் குறையாமையும்.

† மேல் - கல்வியதிகாரத்தில்.

தெளி:—அஃதாவது கற்றலைச் செய்யாமை; கற்றலைச் செய்யாமை யென்றது. அக்கற்றலைச் செய்யாமையினுலாகிய இழிவை. கல்வியது சிறப்பை முன்னர் உடன்பாட்டி வாயிலாகச சொல்லியவளவால் மூடிவு பெறுமையை நோக்கி (கல்லாமையென) எதிர்மறை வாயிலாகவுஞ் சொல்லுகின்றதாகலால், இது (கல்லாமை) கல்வியின் பின் வைக்கப்பட்டது.

க. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

பரி:—(இ - ள்.) அரங்கினை யிழையாது வட்டாடினும் போலும், தான் நிரம்புதற் கேதுவாகிய நூல்களைக்கல்லாது ஒருவன் அவையின் கண் ஒன்றனைச் சொல்லுதல், (எ - று).

அரங்கு - * வகுத்த தானம. வட்டாடல் - † உண்டை யுருட்டல். ‡ இவை §"கட்டளை யனை வட்டரங் கிழைத்துக்,கல்லாச சிறுமா கெல்லி வட்டாடும்" என்பதனுணர்க. நிரம்புதல் - அறியவேண்டுவனவெல்லாமறிதல். § கோட்டி யென்பது ஈண்டாகுபெயர்; ¶"புல்லா வெழுதகிற் பொருளில் வறுங்கோட்டி" என்புழிப்போல. சொல்லும் பொருளும் தெறிப்படாவென்பதாம்.

தெளி:—(இ - ள்.) நிரம்பிய—(தான்) நிரம்புதற்கு ஏதுவாகிய,நூல்-நூல்களே, இன்றி - கற்றலின்றி, (ஒருவன்), கோட்டி கொளல் - சபையினிடத்தி (ஒன்றைச) சொல்லுதல், அரங்கு - வகுப்பிடத்தை, இன்றி - ஏற்படுத்தாது, வட்டாடியற்று - உண்டையுருட்டினற் போலும், (எ - று).

* வகுத்ததானம் - சூதாடுதற்கு வகுத்த அறை (வீடு).

† உண்டை - சூதாடு கருவி.

‡ இவை - அரங்கு (வகுத்த தானம்), வட்டாடல் (உண்டை யுருட்டல்).

§ கற்றினை - இதன்பொருள்: அரசனது கட்டளை தவறுமை போல (உருட்டிய)உண்டை (சென்று நிற்றற்குரிய) வகுப்பிடத்தை யேற்படுத்திப் படியாத சிறுபிள்ளைகள் நெல்லிகாயை (சூதாடுதற்குரிய) உண்டையாகக்கொண்டு விளையாடும் என்பது. இசசெயலில் அரங்கு என்பது வகுத்ததானம் (இடம்) எனவும், வட்டு என்பது உண்டை யென்றும் பொருள் பட்டவாறறிக.

§ கோட்டி-அவை (சபை), அஃது அங்கு நிகழும் சொல்லியுணர்த்தலின் இடவாகு பெயராம்.

¶ காலடியார் மேன்மக்கள், (5) இதனபொருள்: இலக்கணத்தினமைவு பொருந்தாதபொருள் விசேடமில்லாத பயனற்றசபை என்பது. புல்லாத கோட்டி, பொருளில்கோட்டி என்றியைத்துகொள்க இங்குக் கோட்டி (சபை) என்பது அவ்விடத்து நிகழும் சொல்லை யுணர்த்திநிலறிக.

நிரம்புதல் - அறியவேண்டுவனவற்றை யெல்லாம் அறிதல். கோட்டி யென்பதிங் காகுபெயர். நிரம்பிய நூலறிவில்லான் சபையில்ஒன்றைச்சொ லின், அது சொல்லும் பொருளும் ஒரு வழிப்படாமற் போமென்பதாம்.

(க - து.) கல்வியறிவில்லாதவன் சபையிற் பேசுதல் ஒழுங் கில்லாதொழியும் என்பது.

1. To speak in an assembly of the learned without fullness of knowledge, is like playing at chess on a board without squares.

உ. " கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

பரி:—(இ - ள்.) கல்வியில்லாதா னொருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல் இயல்பாகவே முலையிரண்டும் இல்லாதா னொருத்தி பெண்மையை அவாவினாற் போலும், (எ - று).

† இனைதென அறிந்தசினையாகிய, தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிதும் இல்லாதா னென்பதாம். ‡ அவாவியவழிக் கடை போகாது, போகினும் நகை விளைக்கு மென்பதாயிற்று.

தெளி:—(இ - ள்.) கல்லாதான் - கல்வியில்லாதவனொருவன், சொல்- -(சபையினிடத்து ஒன்று) சொல்லுதலை, காமுறுதல் - விரும்புதல், முலை யிரண்டும் - (இயல்பாகவே) இரண்டு முலைகளும், இல்லாதாள் - இல்லா தவனொருத்தி, பெண் - பெண்மையை, காமுறற்று - விரும்பினாற்போ லும், (எ - று).

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானு மதுவாகப் பாவித் திதற் - தானுந்தன், பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே, கல்லா தான் கற்ற கவி" என்பது மிங்கறியத் தக்கதாம்

† முலை யென்பது இவ்வளவினது (இரண்டு) என்று அறிந்த சினைப் பொருளாதலால், இரண்டென்னும் தொகையுடனே முற்றும்மைகொடுத்து 'முலை யிரண்டும்' என்று கூறப்பட்டது. "கண்ணிரண்டுங் குருடு" "காலி ரண்டும் நொண்டி" என்றாற் போலே தொடக்கத்தனவாக வரும்பிரயோகத்தாலுமிது நன்கு விளங்கும். "இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு,மினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்" என்பது தொல்காப்பியம், சொல்லதி காரம், இளவியாக்கம்.

‡ முலையிரண்டும் சிறிதுமில்லாத பேடி பெண்தன்மையை விரும்பிய விடத்து அது முடிவுபெறுதல் போலும், முடிவுபெற்றாலும் அஃது இழுதி யில் சிரிப்பையுண்டாக்கும்; அதுபோல, கல்வி யறிவு சிறிதுமில்லாதவன் சபையில் ஒன்றைச் சொல்லியவிடத்து அது முடிவுபெறுதலோ, முடிவு பெற்றாலும் அஃது இழுதியில் சிரிப்பை யுண்டாக்கு மென்பதாம்.

மூலியிரண்டும் என்றவும்மை இனைத்தென் றறிபொருளில் வந்தமுற் றும்மை. மூலியிரண்டு மில்லாதான - மூலை சிறிது மில்லாதவனென்பதாம். (கல்லாதான் சபையில் ஒன்றைச சொல்லுதலை) விரும்பிய விடத்து (அது) முடிவுபெறாது, முடிவுபெற்றாலும் நலகையை யுண்டாக்கு மென்பதாம்.

(க - து.) கல்வி யறிவில்லாதவன் சபையி லொன்றைச்சொல் லின் அஃது அவனுக் கவமானத்தை யுண்டாக்கும் என்பது.

2. The desire of the unlearned to speak in an assembly, is like a woman without breasts desiring the enjoyment of womanhood.

கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

பரி:—(இ - ள்.) † கல்லாதாரும் மிக நல்லவராவர் தாமே தம்மை யறிந்து கற்றார் அவையின்கண் ஒன்றுனையுஞ் சொல்லாதிருத்தல் கூடு மாயின், (எ - று)

உம்மை இழிவு சிறப்பும்மை. ‡ தமமைத்தாம அறியாமையின் $ அது கூடாதென்பார் * 'பெறின்' என்றும், ¶ கூடின் ஆண்டித் தம்மை வெளிப் படுதாமையானும், பின்கல்வியை விரும்புவாராகலானும் 'நனிகல்லர்' என் றும் கூறினர். இவை மூன்றுபாட்டானும் கல்லாதார் அவைக்கட் சொல்லு தற் குரியர் அன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கல்லாதவரும் - படிக்காதவர்களும், நனிநல்லர் - மிகவும் நலலவராவர், (தாமே தம்மையறிந்து), கற்றாமுன் - கற்றோர் சபையிடத்து, சொல்லாதிருக்கப் பெறின்—(ஒன்றையுஞ) சொல்லாம லிருத்தல் கூடுமாஞல், (எ - று).

கல்லாதவரும் என்ற உம்மை இழிவு சிறப்புமை. (கல்லாதவர்) தம் மைத்தா மறியாமையால் அப்படியிருத்தல் கூடாதென்பார் 'பெறின்' என் றும், கூடுமாஞல் அங்ஙந் தமமை வெளிப்படுத்தாமையாலும், பின்பு கல் வியை விரும்புவாராகலாலும் 'நனிகல்லர்' என்றும் சொல்லினர். இவை மூன்றுபாட்டாலும் கல்லாதவர் சபையினிடத்துப் பேசுதற்கு உரியவரல்ல ரென்பது சொல்லப்பட்டது.

† "கல்லாது முதிர்ந்தவன் கண்ணிலில்லா நெஞ்சம்போற்
புல்லிருள் பாத்தரூஉம் புலம்புகொண் மருண்மாலை" என்று கலித் தொகை கூறுவதிங்கு நன்குணர்தற் பாலதாம்.

‡ தம்மைத்தாம் அறியாமையின் - கல்லாதவர் தமக்குக் கல்வியறிவில் லாமையையத் தாம் அறியாதிருத்தலால்.

$ அது - சபையில் ஒன்றையுஞ் சொல்லாதிருத்தல்.

* பெறின் என்பது பெறுதலின் அருமையை யுணர்த்தி நின்றது.

¶ கூடின் - சபையில் ஒன்றையுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாஞ

(க - து.) கற்றாரது சபையில் யாதொன்றையும் பேசா தடங்கியிருக்குங் கல்வியறிவில்லாதவர் மிகவும் நல்லவராவர் என்பது.

3. The unlearned also are very excellent men; if they know how to keep silence before the learned.

ச. கல்லாதா ரெனைப்பங் கழியநன் ருயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

பத:—(இ - ள்.) கல்லாதவனது ஒண்மை ஒரோவழி மிக நன்றாயிருப்பினும் அறிவுடையார் *அதனை ஒண்மையாகக் கொள்ளார்,(எ-று).

ஒண்மை - அறிவுடைமை. அது நன்றாகாது; ஆயிற்றாயினும் † எரலெழுத்துப் போல்வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கல்லாதான் - கல்லாதவனது, ஒப்பம் - அறிவுடைமையானது, கழியநனறாயினும் - (ஒரோவிடத்து) மிக நன்றாயிருப்பினும், அறிவுடையார் - விவேகமுடையவர், கொளளார் - (அதனை அறிவுடைமையாக) கொள்ளமாட்டார், (எ - று).

கல்லாதவனது அறிவுடைமை நன்றாகாது; நன்றாயிற்றாயினும் (அது) எரலெழுத்துப்போல்வ தொருவகையுடையதாகலால், நிலைபெற்ற நூலறிவினையுடையவர் அவ்வறிவுடைமையை மதியாரென்பதாம்.

(க - து.) கல்விபறிலில்லாதவனது அறிவுடைமை ஒரோவிடத்து நன்றாக விருப்பினும், அதனைக் கலியறிவுடையா மதியார்.

4. Although the knowledge of an unlearned man may be very good at times, the wise will not accept it for true knowledge.

ரு: ‡ கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

அதனை - ஒண்மையென்னும் அறிவுடைமையை.

† எரல்-நத்தை. எரலெழுத்தாவது நத்தை மணலிற்செல்லும்போது தற்செயலாகத் தோன்று மெழுத்தாம். எரலெழுத்துப் போல்வதெனபதனை வடநூலார் குணட்சர நியாயமென்பர். கல்லாதானெழுப்பம் எரலெழுத்துப்போல்வதாகலின், அதனை அறிவுடையார் கொள்ளாரென்பதாம்.

* "நீர்மேலெழுத்துப் போல்வதோர்" என்றும் பாடமுண்டு. இப்பாடத்திற்குக் கல்லாதான் ஒட்பம் நீர்மேலெழுதிய எழுத்துப்போல மிக விரைந்தழியுமென்று பொருளாம். "ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீத்த வுபகாரம், நீர்மே லெழுத்திற்கு சேர்" என்று ஔவைப் பிராட்டியார் மூதுரையிலருளியிருப்பது மிக குணர்தற் பாலதாம்.

‡ "எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும், எழுத்தறிவார் காணினிலையாம்" என்பது நன்னெறி.

பரி:—(இ - ள்.) நூல்களைக் கல்லாதவொருவன் யான் அறிவுடையேனெனத் தன்னை மதிக்கும் மதிப்பு $ அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக்கெடும், (எ - று).

கற்றவனென்பது வருவிக்கப்பட்டது. யாதானுமோர் வார்த்தை சொல்லுந்துணையுமே நிற்பது, சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்து விடுமென்பதாம். இவையிரண்டு பாட்டாலுங் கல்லாதாரது இயற்கையறிவின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) கல்லாவொருவன் - (நூல்களைக்) கல்லாதவொருவன், தகைமை - (யான் அறிவுடையேனென்று தன்னை மதிக்கும்) மதிப்பானது, தலைப்பெய்து - (அவற்றைக்கற்றவன்) கண்டு, சொல்லாட-பேச, சோர்வுபடும் - கெடும், (எ - று).

'சொல்லாட' எனபதற்கேற்பக் கற்றவனென்பது வருவிக்கப்பட்டது. (கல்லாத வொருவன் யானறிவுடையேனென்று தன்னை மதிக்கும்மதிப்பானது அவன்) யாதாயினும் ஒருவார்த்தை சொல்லுமட்டுமே நிற்பது, சொல்லியவிடத்துக் குற்றப்படுதலால், அழிந்துவிடுமென்பதாம். இவை இரண்டு பாட்டாலுங் கல்லாதவரது இயற்கை யறிவின் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) கல்லாதவன் தன்னைக் கற்றவனென்று மதிக்கும் மதிப்பானது அவன் கற்றவன்முன் பேசக்கெடும் என்பது.

5. The self - conceit of an unlearned man will fade away, as soon as he speaks in an assembly of the learned.



கூ. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) கல்லாதவர் காணப்படுதலான் இலரல்லர் உளரென்று சிலர்கொல்லு மளவினாதல் அன்றித் தமக்கும் பிறர்க்கும் பயன் படாமையால் விளையாத † களர் நிலத்தோ டொப்பர், (எ - று).

களர் தானும் பேணற்பாடழிந்து உயிர்கட்கும் உணவு முதலிய உதவாதது போலத் தாமும் நன்கு மதிக்கற்பாடழிந்து பிறர்க்கும் அறிவு முதலிய உதவா ரென்பதாம். இதனாற் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கல்லாதவர் - கல்லாதவர்கள், (காணப்படுதலால்), உளரென்னுமாத்திரையரல்லர் - (இல்லாதவரல்லர்) உளரென்று (சிலர்)

$ அவற்றை - நூல்களை.

† களர்நிலம் - செல்முதலியன விளைதற் குரியதாகாத நிலம்.

சொல்லும் அளவினாதலன்றி, (தமக்கும்பிறர்க்கும் பயன்படாமையால்), பயவாக்களரினையர் - விளையாத களர்நிலத்தோ டொப்பாவார், (எ - று).

களர்நிலம் தானும் விரும்பப்படுவதழிந்து உயிர்களுக்கும் உணவு முதலியவற்றை உதவாததுபோன்று கல்லாதவர் தாமும் நன்குமதிக்கப்படுவதழிந்து பிறர்க்கும் அறிவுமுதலியவற்றை உதவாரென்பதாம். இதனால் கல்லாதவராதி பயன்படாமை சொல்லப்பட்டது.

(க - து) கல்லாதவர் களர் நிலம்போலத் தமக்கும் பிறர்க்கும் பயன்படுவதிலர் என்பது.

6. The unlearned are like worthless barren land : all that can be said of them is, that they exist.

எ. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

ப:—(இ - ள்.) நுணீணிதாய் மாட்சிமைப்பட்டுப் பலநூல்களினுஞ் சென்ற அறிவிலாதவனுடைய †எழுச்சியும் அழகும் சுதையான் மாட்சிமைப்படப் புனைந்தபாவையுடைய எழுச்சியும் அழகும்போலும், (எ - று).

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற்காண்டலும் மறவாமையும் ‡ முதலாயின. பாவை ஆகுபெயர். $ "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிது" ஆகலான் எழினலங்களும் ஓர்பயனேயெனினும், நூலறிவில்வழிச் சிறப்பிலவென்பதாம். இதனால் அவர் வடிவழகாற் பயனின்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நுண் - நுட்பமுடையதாய் மாண் - மாட்சிமைப்பட்டு, நுழை - (பலநூல்களிலும்) சென்ற, புலம் - அறிவு, இல்லான் - இல்லாதவனது, எழில் - எழுச்சியும், நலம் - அழகும், மண் - சுண்ணச்சாந்தினால், மாண் - மாட்சிமைப்பட, புனை - அலங்கரித்த, பாவையற்று - பாவையினது எழுச்சியும் அழகும்போலும், (எ - று).

† "ஒப்புமூருவும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் "ஏராவது எழுச்சி; அஃது எழுகின்ற நிலைமையென நிகழ்காலமே குறித்து நிற்கும். எழிலாவது அங்ஙனம்வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்துமாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்" என்றனர் நச்சினார்க்கினியர். "இல்ல மிளமை எழில்வனப்பு" என்று நாலடியார் கூறுவது மிங்குணர்தக்கது.

‡ முதலாயின என்றதனால் பிறர்க்குப்போதித்தல் பயன்படுநூல்களியற்றுதல் முதலியவற்றையுங் கொள்க.

$ சிவக சிந்தாமணி முத்தியிலம்பகம், (154) இதன்பொருள் (கல்வியினின் கட்டளையாலே) உருவான் மிக்கதோ ருடம்பை (அம்மக்கள் யாக்கையை) பெறுதலுமரிது என்பது.

அறிவிற்கு மாட்சிமையாவது நூல்களின் பொருள்களே விரைவாகவுணர்தலும் மறவாமையும் முதலானவை. பாவை யென்பது அதன் எழுகையழகுகளையுணர்த்துதலால பொருளாகுபெயராம். உருவினுல்மிகுந்தோர் உடம்பைப் பெறுதலும் அரிது ஆகலால் எழில் கலைகளும் ஒருபயனேயாகலும், அவை நூலறிவில்லாதவிடத்துச் சிறப்பில்லனவா மென்பதாம். இதனுல் நூலறிவில்லாதவரது வடிவழகினுல் பயனில்லாமைசொல்லப்பட்டது.

(க - து.) நூலறிவில்லாதவனது எழுச்சியும் அழகும் சிறப்புடையனவாகா என்பது.

7. The beauty and goodness of one who is destitute of knowledge, gained by the study of great and exquisite works, is like the beauty and goodness of a painted earthen doll.

ச. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு

பரி:—(இ - ள்) கற்றோர்மாட்டுநின்ற வறுமையினும் இன்னது கல்லாதார்மாட்டு நின்ற செல்வம், (எ - று).

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் ரொக்கது. * தத்தங்கேலையின் அன்றி மாறி நிற்றலான தா † மிடுக்கட்படுதலும் ‡ உலகிற்குத் துன்பஞ் செய்த

தத்தங்கேலையின அன்றி - (செல்வமும் தரித்திரமும் முறையேகற்றோரிடத்தும் கல்லாதாரிடத்தும் நிற்றலிலலாது), மாறிநிற்றலான் - (செல்வம் கல்லாதாரிடத்தும் தரித்திரம் கற்றோரிடத்தும்) மாறுபட்டு நிற்றலால், தா மிடுக்கண்படுதலும்-(செல்வமும் தரித்திரமும் துன்பப்படுதலும்), உலகிற்குத் துன்பஞ்செய்தலும்-இரண்டற்கும்- (செல்வத்திற்கும் தரித்திரத்திற்கும்), ஒக்குமாயினும் என்பது.

† மிடுக்கண்படுதலாவது - செல்வங் கல்லாதாரிடத்திருந்து பிறர்க்குபகாரஞ் செய்தற்குரியதாகாது போதலும், தரித்திரம் கற்றோரிடத்திருந்து அவரை வருத்துவதுமா மென்க

‡ உலகிற்குத்துன்பஞ் செய்தலாவது கல்லாதவர் செல்வமுடையவராஞல் அவர் அச்செல்வத்தைக்கொண்டு நியாய அநியாயமறியாது பிறர்க்குத் தீமைசெய்வாரென்பதும், கற்றவர் தரித்திரமுடையவராஞல் அவர் அத்தரித்திரத்தினுல் உலகிற்குபகாரஞ் செய்தற்குரியவராகாது போவரென்பதுமா மென்க.

"எனைத்துணைய வேனு மிலமாட்டார் கல்வி, தினைத்துணையுஞ் சீர்ப் பாடிலவாம்" என்றும், 'வாளாண்மை யில்லாதான செல்வத்தின் மற்றை யோன், கல்குரவே போலும் களர்கல்ல" என்றும் நீதிநெறி விளக்கம் கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

லும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திருக் கல்லாரைக்கெடுக்க வறுமை கல்லாரைக் கெடாது நிற்றலான், () வறுமையினுந் திரு இன்னாது என்றார். இதனால் அவர் திருவின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கல்லார்கண் - கல்லாதவரிடத்து, பட்ட - நின்ற, திரு - செல்வமானது, கல்லார்கண் - கற்றவரிடத்து,பட்ட- நின்ற,வறுமை யின்-வறுமையினும், இன்னாது - துன்பஞ் செய்வதாம், (எ - று).

வறுமையினும் என்ற இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. செல்வம் தனக்குரிய கற்றவரையும், வறுமை தனக் குரிய கல்லாதவரையும் விட்டு மாறி நிற்றலால் தாம் இடுக்கண்படுதலும் உலகிற்குத் துன்பஞ்செய்தலும் (செல்வம் வறுமை யென்னும்) இரண்டற் கும் ஒக்குமாயினும், செல்வம் கல்லாதவரைக்கெடுக்க, வறுமை கற்றாரைக் கெடுக்காது நிற்றலால் வறுமையினும் திரு இன்னாது என்றார். இதனால் கல்லாதவரது செல்வத்தின் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) கல்லாதவரிடத்துண்டாகிய செல்வம் கற்றவரிடத் துண்டாகிய தரித்திரத்தினும் மிகக் கொடியதாம் என்பது.

8. Wealth, gained by the unlearned, will give more sorrow than the poverty which may come upon the learned.

கூ. $ மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ற ரனைத்திலர் பாடு.

பரி:—(இ - ள்.)கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தாரா யினும் தாழ்ந்த சாதிக்கட் பிறந்துவைத்துங் கற்றாரது பெருமை அளவிற்றய பெருமை யிலர், (எ - று).

† உடலோடொழியுஞ் ¶ சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும்

() வறுமையின் என்றும் பாடமுண்டு.

$ "ஆக்கு மறிவா னலது பிறப்பினுல், மீக்கொ ளுயர்விழிவு வேண் டற்க" என்று நன்னெறிகூறுவதும், "ஈற்பாற் குலதனின் மேற்பா லொ ருவன், கற்றில னாயிற் கீழிருப் பவனே, எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும், அக்குடிக் கற்றோரை மேல்வருகென்பர், அறிவுடை யொருவனே யரசனும் வீரும்பும்" என்று வெற்றிவேற்கை கூறுவது மிங்கறியத்தக் கனவாம்.

† உடம்பின்கண் கற்பிக்கப்பட்டசாதி யுடம்பொழித்த போது தான் சொல்லாமலே ஒழிதலால் 'உடலோடொழியுஞ்சாதி'என்று கூறப்பட்டது.

¶ நச்சினர்க்கினியார் தொல்காப்பியம், சொல்லதிகாரம்,வேற்றுமையியல் "பொருண்மை சுட்டல்" என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில் "பொ ருடன்மையாவது அப்பொருள்களின் சாதித்தன்மை. ஆ - (பசு) வென் னும் பொருள் கேட்டதேனும் அவ்வாவினது சாதித்தன்மை எக்காலத்தும்

† கல்வியுயர்ச்சி சிறப்புடைத் தென்பதாம். இதனுல் அவர் சாதியுயர்ச்சி யாற் பயனின்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கல்லாதார் - கல்வியில்லாதவர், மேற்பிறந்தாராயினும் - உயர்ந்தசாதியில் பிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் - தாழ்ந்தசாதியில் பிறந்திருந்தும், கற்றாரனைத்து - கற்றவரது பெருமையனவினதாகிய, பாடு - பெருமை, இலர் - இல்லாதவராவர், (எ - று).

உடம்போடு ஒழியும் சாதியுயர்ச்சியிலும் உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி சிறப்புடையதென்பதாம். இதனுல் கல்லாதவரது சாதியுயர்ச்சியால் பயனில்லாமை சொல்லப்பட்டது.

(க - து.) கற்றவர் தாழ்ந்தசாதியாராயினும், அவர் யாவரினும் மேம்பட்டவராவர் என்பது.

9. The unlearned, though born in a high caste, are not equal in dignity to the learned, though they may have been born in a low caste.

60. ‡ விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

பரி:—(இ - ள்.) ¶ விலங்கொடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத்தீமையுடையர் விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர், (எ - று).

இலங்கு நூலென்பது சாதியொருமைப்பெயர். விளங்குதல் - மேம்படுதல். விலங்கின் மக்கட் கேற்றமாய உணர்வுதிருந்தி காணப்படுவது கற்கெடாது நிற்கு மென்பது உணர்த்துதற்கு ஆவுண்டு என்றார்'' என்றனர். பொருள் கெட்டாலுஞ்சாதி கெடாதிருக்குமென்பது தார்க்கிகமது கொள்கை. தருக்கசங்கிரகம் சாதிக்கிலக்கணம் ''சாமானியமாவது நித்தமாய், ஒன்றாய், பலவற்றின் ஒருங்குசேறலே யுடையசாதி'' என்று கூறுகின்றது.

† கல்வி யுயிரோடு செல்வதென்பது ''ஒருமைக்கட் டாங்கற்ற கல்வியொருவற், கெழுமையு மேமாப் புடைத்து'' என்னுங்குறளாலறிக.

‡ விலங்கொடு மக்க ளனையர் என்ற விடத்து ஒப்பல்லாத விலங்கு (மிருகம்) ஒப்பாகச் சொல்லப்படுதலால் விலங்கு ஒப்பலொப்புப் பொருளதாயிற்று. இலக்கணக்கொத்து நூலார் ''கருவிகருத்தா'' என்னுஞ் சூத்திரவுரையில் ''விலங்கொடு மக்க ளனையர் ஒப்பலொப்பு'' என்றனர்.

¶ விலங்கைநோக்க மக்கள் நன்மையுடையவராயும் அவ்விலங்குதீமையுடையதாயுமிருத்தல் போன்று, கல்லாதவரை நோக்கக் கற்றவர் நன்மையுடையவராயும் அக்கல்லாதவர் தீமையுடையவராய மிருக்கின்றாரென்பதாம். ''தக்க வின்ன தகாதன வின்னவென், றெக்க வண்ண ராயி னுயர்ந்தனர், மக்களும் விலங்கே'' என்பது இராமாயணம்.


ரூர் கண்ணே யாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்தபிறப்பினரல்லரென்ப தாம். ¶ மயக்கிரனிறை. இதனால் அவர் மக்கட் பிறப்பாற் பயனெய்தா மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) இலக்குநூல் - விலங்கிய நூலே, கற்றோடு - கற்றவரோடு, (ஒப்பிட்டு) (நோக்க), ஏனையர் - கல்லாதவர், விலங்கொடு-மிருகங்களோடு, (ஒப்பிட்டு) (நோக்க), மக்களனையர் - மனிதர் எவ்வளவு ருண்மையுடையவர் அவ்வளவு நீமையுடையவராவர், (எ - று).

இலக்குநூலென்பது (வருமொழி நோக்காது பண்மைப்பொரு ளுண ர்த்திதலின்)சாதி பொருமைப்பெயர். விளக்குதல்-மேம்பட்டதேதான்றுத ல். விலங்கைப்பார்க்கிலும் மனிதர்க்குமேலான அறிவு மிகுதி காணப்படுவது கற்றவரிடத்தே யாதலால், கல்லாதவரும் அக்கற்றவரும் சமானமான பிறப் பினரல்லரென்பதாம் இஃது எதிர் நிரனிறைப் பொருளாகோள். இதனால் கல்லாதவர் மனிதப்பிறப்பினால் பயனடையாமை சொலலப்பட்டது.

(க-து.) *கற்றவர மக்களாவர்; கலலாதவர் மிருகங்களாவர்.*

10. As beasts by the side of men, so are other men by the side of those who are learned in celebrated works



நான்காம் அதிகாரம்.

கேள்வி.—*On Hearing (Instruction).*

பரி:—அஃதாவது கேடகப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந் தார் கூறக்கேட்டல், கற்றவழி அதனின் ஆய அறிவை வலியுறுத்தலானு ம், கல்லாதவழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி கல்லா மைகளின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—*அஃதாவது கேட்கப்படுமெநூலின் பொருள்களைக்கற்றறிந்த வர் சொல்லக்கேட்டல். கற்றவிடத்து அக்கல்வியினாலாகிய அறிவை*

¶ வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ள வற்றை யம்முறையே சொல்லுதல் நிரனிறையாம். அதில் மாறிவருவது மயக்க நிரனிறையாம். மயக்கிரனிறையெனினும எதிர் நிரனிறை யெனி னும் ஒக்கும்.

விலங்கு ஏனையவர் (கல்லாதவர்),மக்கள் கற்றார் எனமுறையேவையா து விலங்கு கற்றார், மக்கள் ஏனையவர் எனமாறிவைத்தமையின, இது மய க்க நிரனிறையாயிற்று கற்றார் மக்களாவர், ஏனையவர் விலங்காவர் என்று கொள்க "களிறங் கந்தம் போல, களிகடற் கூம்புங கலனுக் தோ ன்றம், தோன்றன மறந்தோர் துறைகெழு நாட்டே" என்னுந்ணலிலிரு த்திபுரையில் எதிர்நிரனிறைக்குக்காட்டிய செய்யுளும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

உறுதிப்பயத்தலாலும், கல்லாதவிடத்தும் அக்கல்வியறிவை உண்டாக்குதலாலும் இது (கேள்வி) கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

க. † செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளில்லாந் தலை.

பரி:—(இ-ள்.) ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான் வருஞ்செல்வம்; அச்செல்வம் பிறசெல்வங்களெல்லாவற்றினுந் தலையாகலான், (எ-று).

செவியான் வருஞ்செல்வம் - கேள்வியான் எல்லாப்பொருளையு மறிதல். ‡ பிறசெல்வங்கள் பொருளான் வருவன; ¶ அவை நிலையா வாகலானும், தன்பவிஞ்வினவாகலானும் இது தலையாயிற்று. $ அவற்றை ஒழித்து இதனையே செய்கவென்பது * குறிப்பெச்சம்.

தெளி:—(இ - ள்.) (ஒருவனுக்கு) செல்வதனுட் செல்வம் - செல்வங்களுள் (சிறப்புடைய) செல்வமாவது, செவிச்செல்வம்-செவியால்வருஞ் செல்வமாம், அசசெல்வம் - அச்செல்வமானது, செல்வத்துளெல்லாம்-பிற செல்வங்களெல்லாவற்றினும், தலை-தலைமையாயதாம், (ஆதலால்), (எ-று).

செவியால்வருஞ் செல்வம்-கேள்வியினால் நூற்பொருளெல்லாவற்றையும்அறிதல். பிறசெல்வங்கள் பொருளால் வருவன; அவை நிலையில்லாதனவாகலாலும், துன்பந்தருவன வாகலாலும் இக்கேள்விச்செலவம் தலையாயிற்று. அவற்றைவிட்டு இக்கேள்வி-செல்வதனையே சம்பாதிக்கவேண்டுமென்பது குறிப்பெசசம்.

(க-து)செல்வங்களுள் சிறந்த செல்வம் கேள்விச்செல்வமாம்.


† செல்வத்துட் செல்வம் - மற்றைச செல்வங்களெல்லாழு வுறுமையாமாறுவருஞ் செல்வம். "இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுந், துனபத துட் டுன்பங் கெடின்" எனனுங் குறளின் விசேடவுரையில் "துன்பத்துட் டுன்பம் எனனத்தன்பங்களெல்லாம இன்பமாகவருந துன்பம்" என்று கூறியிருத்தலு மிங்கறிதற்பாற்றும்.

‡ பிறசெல்வங்கள் - உண்டி உடைமுதலியன. ¶ அவை-பிறசெல்வங்கள்.

$ அவறறையொழித்து இதனையே செய்க-பிறசெல்வங்களை யொழித்துக் கேள்வியால் வருஞ்செல்வத்தையே சம்பாதிக்கக்கடவர்.

குறிப்பாலுணரப்படுவது குறைந்து நிற்பது குறிப்பெச்சமெனப் படுமெ. "தத்தங் குறிப்பி னெசசஞ் செப்பும்" என்னும் தொல்காப்பியசூத்திரத்தின் விசேடவுரையில் "கற்கறிக்க வென்கட்டான் என்றால் நீங்கட்டானென்னுங் குறிப்புத் தோன்றிய எஞ்ஞ பொருளினைத்தானே கூறினமது" என்று நச்சினார்க்கினியார் கூறியது மிங்கறியத்தக்கதாம்.

1. Wealth gained by the ear is wealth of wealth; that wealth is the chief of all wealth.



2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

பரி:—(இ - ள்.) செவிக்குணவாகிய கேள்வியில்லாத பொழுது வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும், (எ - று).

சுவை மிகுதியும் பிற்பயத்தலும் உடைய கேள்வி யுள்ளபொழுது வெறுக்கப்படுதலான் 'இல்லாத போழ்து' என்றும், ¶ பெரிதாயவழித் தேடற்றன்பமே யன் றி நோயுங் காமமும பெருகுதலாற் 'சிறிது' என்றும், அது தானும் பின்னிருந்து கேட்டற்பொருட்டாகலான் 'ஈயப் படும்' என்றுங் கூறினர் ‡ ஈதல வயிற்றது இழிவுதோன்ற நின்றது. இவையிரண்டு பாட்டானும கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள.) செவிக்கு - காதுக்கு, உணவு - உணவாகிய கேள்வி, இல்லாதபோழ்து-இல்லாதகாலத்து வயிற்றிற்கும்-வயிற்றினுக்கும, சிறிது-சிறிதுணவு, ஈயப்படும் - இடப்படும, (எ - று).

மிகுந்தசுவையையும் பின்னே பயன் தருதலுமுடைய கேள்வி உளள போது வயிற்றுணவு வெறுக்கப்படுதலால் 'இல்லாதபோழ்து' என்றும், உணவு அதிகமானவிடத்து அவ்வுணவையே சமபாதிக்கும் தனமையலலா மல் (அவ்வுணவால்) நோயும் காமமும் அதிகரிக்குதலால் 'சிறிது' என்றும், அச்சிறிதுணவு கொடுத்தலும் பின்னை பிழைத்திருந்து (ஞற்பொருளைத் தக்காரிடத்துக்) கேட்டறபொருட்டாகலால் 'ஈயப்படும்' என்றும், சொல்

¶ பெரிதாயவழி (வயிற்றிற்கு உணவு அதிகமான விடத்து) தேடற் றுன்பமே யன்றி (உணவிறகாகப் பொருளைத்தேடுந் தன்பமேயல்லாமல்) நோயும் காமமும (அவ்வுணவால வியாதியும மாதாபால விருப்பமும்) பெரு குதலால் (அதிகரித்தலால்) என்பது அதிகமாகவுணவுதலால் நோயும் காமமும் பெருகுமென்பது "இழிவறிந் தன்பாக வீன்பமபோ னிற் கும், கழிபே ரிரையாக வேண்டும்" என்று திருக்குறளும "தயிற்சுவை யுந தாகல்லார் தோட்சுவையு மெல்லா, மயிற்சுவையி னுதவ" என்று நீதி நெறி விளக்கமும் கூறுவதாலுமறிதற்பாற்றும்.

‡ ஈதல் இழிந்தோனுக்கல்லாமல் ஒப்போனுக்கும மிக்கோனுக்கு மின் மையின் 'வயிற்றுக்கு மீயப்படும்' எனப்தன்கணுள்ள ஈதல வயிற்றினது இழிவு தோன்றுமாறு நின்றது. வயிறு இழிவுள்ளதென்பது "ஒருநா ளுணவை யொழியென்ற லொழிபா, யிருநாளைக் கேலென்ற லேலாய் - ஒருநாளும், என்னை வறியா விடும்பைகூ டெனவயிறே, உன்னைவே வாழ்த்தலரிது" என்றும் நல்வழி கூறுவதாலுமறிதற் பாற்றும். ஈதல் இழிந்தோனுக் கென்பது "ஈயென் னெலி யிழிந்தோன் கூற்றே" என்னுந் தொல்காப்பி யச் சூத்திரத்தா லறிக.

லினர், 'ஈயப்படும்' என்றது வயிற்றினது இழிவுதோன்ற நின்றது. இவை இரண்டுபாட்டாலும் கேள்வியது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து.) கேள்வியுணவு வயிற்றுணவிலும் சிறந்தது என்பது.

2. When there is no food for the ear, give a little also to the stomach.

கூ. ¶ செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னுண்ருரோ டொப்பர் நிலத்து.

பரி:—(இ - ள்.) செவியுணவாகிய கேள்வியினையுடையார் நிலத்தி னீங்கண்ணராயினும், $ அவியுணவினையுடைய தேவரோ டொப்பர்.

செவியுணவு - செவியானுண்ணு முணவு ‖ அல்வழிக்கண்வந்த இன் சாரியையது னகரம் வலிந்து நின்றது. † அவியுணவு-தேவர்க்கு வேள்வித் தீயிற் கொடுப்பன. அறிவான் நிறைந்தமையான 'ஆன்ரூர்' என்றும், தன் பமறியாமையான ‡ 'ஆனருரோ டொப்பர்' என்றுங் கூறினர். இதனால் அதனை யுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) செவியுணவின் - செவியுணவாகிய, கேள்வி - கேள்வியினை, உடையார்-உடையவர், நிலத்து - பூவுலகத்து, (இருப்பவராயினும்), அவியுணவின - அவியாகிய வுணவினையுடைய, ஆன்ருரோடு-தேவரோடு. ஒப்பர் - ஒப்பாவார், (எ - று)

செவியுணவு - செவியாலுண்ணும் (கேட்கும்) உணவு (கற்கேள்வி). செவியுணவின் எனபதன்கண் அல்வழிப் பொருளில் வந்த இன்சாரியையி

¶ நாக்கிந்திரியத்திற்குரிய வுணவைக் காதிந்திரியத்தின்மீதேற்றிச் 'செவியுணவு' என்று கூறப்பட்டது. இஃது ஒரிந்திரியத்திற்குரிய விஷயத்தை மற்றோரிந்திரியத்தின்மீ தேற்றிக்கூறிய உபசாரவழக்காம். தொல்காப்பியம், பொருளதிகாரம் பொருளியலில் "உண்டற் குரிய வல்லாப் பொருளே, யுணடனை போலக் கூறலு மரபே" என்று கூறுதலு மிங் கறிதற்பாற்றும்.

$ அவி - நெய், பொரி, சமித்து முதலியன.

‖ உணவிற்கேள்வி என்பது சாரைப்பாம்பு என்பதுபோல இருபெய ரொட்டுப் பண்புத்தொகையா யிருத்தலால் இன் என்பது அல்வழிக் கண்வந்த சாரியையாயிற்று. அஃது உணவாகிய கேள்வியெனலினியும். இன் என்னும சாரியையிடைசொல்லி னீற்றுனகரம் றகரமாகத் திரிதற்கு விதியில்லாமையால் னகரம் றகரமாகத்திரிந்து வந்தது செயயுள் விகார மாமென்க.

† அவியாகிய வுணவு என்றும் பாடமுண்டு.

‡ தேவரோ டொப்பர் என்றும் பாடமுண்டு.

னது னகரம் றகரமாக வலித்தல் விகாரம் பெற்று நின்றது. அவி யுணவு-தேவர்களுக்கு யாகாக்கினியிற் கொடுக்கும் நெய் முதலியன. அறிவால் நிறைந்தமையால் 'ஆன்றார்' என்றும், துன்பமறியாமையால் 'ஆன்றோர் டொப்பர்' என்றும் சொல்லினர் இதனுல் கேள்வியையுடையவரது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) கேள்வியறிவுடையவர் தேவருக்கொப்பாவர்.

3 Those who in this world enjoy instruction which is the food of the ear, are equal to the Gods, who enjoy the food of the sacrifice.

ச. கற்றில னயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுங் துணை.

பரி:—(இ - ள்.) † உறுதி நூல்களைத் தான் கற்றிலனாயினும், அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்க: அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்துழிப் பற்றுக் கோடாந் துணையாகலான், (எ-று).

‡ உம்மை கற்கவேண்டுமென்பதுபட நின்றது. தளர்ச்சி-வறுமையானதல் அறிவின்மையானதல் ¶ இடுக்கட்பட்டுழி மனந்தளர்தல். அதனைக் கேள்வியின் ஆய அறிவு நீக்குமாகலின், 'ஊற்றுந் துணை' என்றார். $ ஊன்றென்னு மாகுபெயரின் னகரம் திரிந்து நின்றது

"உணற்கினிய" எனனுஞ் செய்யுளில் பழமொழி "கற்றலிற் கேட்டலே நன்று" எனறு கூறுகின்றது

† உறுதி நூல்கள் - புருஷார்த்தங்களைக் கூறும் சாஸ்திரங்கள்.

‡ கற்றிலனாயினும் என்றவும்மை "மறப்பினும்" என்பதன் உம்மையைப் போன்று எதிர்மறைப் பொருளதாய் நின்றது. "மறப்பினு மோத்தக் கொளலாகும்" என்னுங் குறளின் விசேடவுரையில் "மறந்தவழி இழிகுலத்தனு மாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான் மறப்பினும் என்றார்" என்று கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

¶ "ஆங்கவையொருபால்" என்னுந் தொல்காப்பியச் சூத்திர விசேடவுரையில் "இடுக்கண் என்பது மலர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கம்பட வரும் இரக்கம்" என்றனர் நச்சினர்க்கினியார்.

$ ஊன்று என்னும் முதனிலைத் தொழிலாகு பெயரின் னகரம் புணர்ச்சிவிகாரத்தால் றகரமாகத் திரிந்து ஊற்று என நின்றது.

ஊன்றுத (நாட்டுத) லென்னும் பொருளை யுணர்த்தும் ஊற்று என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர் அதனையுடைய கோலை உணர்த்தலால் முதனிலை திரிந்ததொழிலாகு பெயராம்.

தெளி:—(இ - ள்.) கற்றிலனெயினும் - (உறுதி பயக்கும் நூல்களைத் தான்) கல்லாதவனெனினும், கேட்க - (அந்நூல்களின் பொருள்களைக் கற்றறிந்தவர்சொல்லக்) கேட்கக்கடவன், அஃது - அக்கேள்வியானது, ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒற்கத்தின் - தளர்ச்சிவந்தவிடத்து, ஊற்றுத்தூணே - பற்றுக்கோடாந்தூணேயாம், (ஆதலால்), (எ-று).

'கற்றிலனெயினும்' என்ற உம்மை கற்கவேண்டுமென்பது தோன்ற நின்றது. தளர்ச்சி-வறுமையாலாவது அறிவில்லாமையாலாவது துன்ப மடைந்த விடத்து மனந்தளர்தல். அத்தளர்ச்சியைக் கேள்வியாலாகிய அறிவு நீக்கு மாதலால் 'ஊற்றுத்தூணே' என்றார், ஊன்று என்பது ஊற்று எனத்திரிந்து ஆகுபெயராய் நின்றது.

(க - து.) ஒருவன் கல்லாதவனெயிருப்பினும், அவன் உறுதிப் பொருள்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்கவேண்டும்; அக் கேள்வி அவனுக்குத் துன்பமேர்ந்தவிடத்துப் பேருதவிசெய்யும்.

4. Although a man be without learning, let him listen to the teaching of the learned; that will be to him a staff in adversity.

ரு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

பரி:—(இ-ள்.) வழுக்குதலை யுடைய சேற்று நிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல்போலுதவும்; ‡ காவற்சாகாடு உகைப்பார்க்கு ஒழுக்க முடையார் வாயிற் சொற்கள், (எ-று).

¶ அவாய் நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்

‡ ''காவற் சாகா டுகைப்போன் மாணின், ஊறின் றுயி யாறினிது படுமே'' என்பது புறநானூறு.

¶ ஒருபதம் தன்னை முடிப்பதொருபதம் இல்லாத விடத்து முடிவு பெறுதுநிற்றலென்னும் அவாய் நிலையால் 'இழுக்க லுடையுழி யூற்றுக்கோல்' என்பதில் வந்த இயங்குவார்க்கு என்னும் உவமை யடையினால் 'ஒழுக்க முடையார்வாய்ச் சொல்' என்பதில் காவற்சாகாடு உகைப்பார்க்கு என்னும் பொருளடை வருவிக்கப்பட்டது.

உவமான மெனினும் உவமையெனினும்ஒக்கும் உவமேய மெனினும் பொருளெனினும் ஒக்கும். 'இழுக்க லுடையுழி யூற்றுக்கோல்' என்னும்உவ மானத்திற்கு இயங்குவார்க்கு என்பது அடை (விசேஷணம்) என்றும், 'ஒழுக்க முடையார்வாய்ச் சொல்'என்னும் உவமேயத்திற்குக் காவற்சாகாடு உகைப்பார்க்கு என்பது அடை யென்று மறிக.

கப்பட்டது. ஊற்றுக்கோல்போ லுதவுதல்-† தளர்ந்துழி அதனை நீக்குதல். ‡ கல்வியுடையரேனும ஒழுக்க மில்லாதார் அறிவிலராகலின், அவர் வாய்ச்சொற் கேட்கப்படாதெனபது தோன்ற 'ஒழுக்க முடையார்வாய்ச் சொல்' என்றார். வாயென்பது தீசசொ லறியாமையாகிய சிறப்புணர் நின்றது. ¶ அவற்றைக் கேடகவென்பது குறிப்பெசசம்.

தெளி:—(இ-ள்.) இழுக்கலுடையுழி-வழுக்குதலையுடைய சேற்று நிலத்தில், ஊற்றுக்கோலற்று - (நடப்பவர்க்கு) ஊன்றுகோல்போ லுதவிசெய்யும், ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் - (ஆக்கிஞ சக்கரத்தைச செலுத்தும் அரசருக்கு) ஒழுக்கமுடையவரது வாயிற் பிறக்குஞ்சொற்கள், (எ-று).

அவாய் நிலையால் வந்த நடப்பவர்க்கு என்னும் உவமான அடையினால் ஆக்கிஞசக்கரத்தைச செலுத்தும் அரசருக்கு என்னும் உவமேயஅடை வருவிக்கப்பட்டது. ஊனறுகோல்போ லுதவுதல் - தளர்ந்தவிடத்து அத் தளர்சசியை நீக்குதல். கல்வியுடையவராயினும் ஒழுக்கமில்லாதவர் அறிவில்லாராகலால், அவர் வாய்சசொல் கேட்கப்படாதென்பது தோன்ற ஒழுக்க முடையார்வாய்ச் சொல்' என்றார். வாய என்பது தீயசொல் அறியாமையாகிய சிறப்பு அறியுமாறு நின்றது. அசசொறகளைக் கேட்கக்கடவ ரென்பது குறிப்பெச்சம். வழுக்குதல் - சறுக்குதல்.

(கு-து). நல்லொழுக்க முடையவரது சொல் ஆபத்துண்டான போது ஊன்றுகோல்போ லுதவிசெய்யும் எனபது.

5. The words of the good are like a staff in a slippery place.



கூ. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

* ஒழுக்கமுடையாரது வாய்சசொல் ஊன்று கோல்போ லுதவிசெய்தல்.

† தளர்ந்துழி அதனை நீக்குதல்—வறுமையிஞலாவது அறிவில்லாமையிஞலாவது துன்பம் சேர்ந்தவிடத்து மனத தளர்ந்தபோது அத்தளர்சசியை யொழித்தல்.

‡ "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங், கல்லா ரறிவிலா தார்" என்னுங் குறளின் விசேட வுரையில் "கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமு மாகலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்று மறிவிலா தார் என்னுங் கூறினர்" என்று கூறியிருத்தலு மிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

¶ அவற்றை - ஒழுக்கமுடையாரது சொற்களை.

பரி:—(இ - ள்.) ஒருவன் சிறிதாயினும் உறுதிப் பொருள்களைக் கேட்க, அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத் தரும் ஆகலான், (எ - று).

† எனைத்து அனைத்து என்பன கேட்கும் பொருண்மேலுங் காலத்தின்மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்தீண்டி எல்லா அறிவுகளையும் உளவாக்கலின், சிறிதென்று இழற்கவென்பதாம்.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) எனைத்தானும் - எவ்வளவு சிறிதானலும், நல்லவை - உறுதிபயக்கும் பொருள்களை, கேட்க-கேட்கக்கடவன், (அக்கேள்வியானது), அனைத்தானும்-அவ்வளவானலும், ஆன்றபெருமை-நிறைந்த பெருமையை, தரும - கொடுக்கும், (ஆதலால்) (எ - று).

எனைத்து என்பது கேட்கும்பொருண்மேலும் அனைத்து என்பது கேட்குங் காலத்தின்மேலும் நின்றன. அசிறிய கேள்வி மழைத்துளி போல வந்து உளவே நிறைந்து எல்லாவறிவுகளையும் உண்டாக்கலால், (அக்கேள்வியைச்) சிறிதென்று இகழ்ச்சிசெய்யாதொழிக என்பதாம்.

(க - து.) ஒருவன் சிறிதாயினுமஉறுதிப்பொருள்களைக் கேட்கக்கடவன்; அஃதவனுக்கு நிறைந்த பெருமையைக் கொடுக்கும்.

6. Let a man listen, never so little, to good instruction even that will bring him great dignity.



எ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந் தீண்டிய கேள்வி யவர்.

பரி:—(இ - ள்.) பிறழ வுணரீந்த வழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ் சொற்களைச் சொல்லார், பொருள்களைத் தாமும் நுண்ணிதாக ஆராயந்தறிந்து அதன்மேலும் ஈண்டிய கேள்வியினை யுடையார்.

பிழைப்பவென்பது திரிக்கின்றது. பேதைமை-ஆகுபெயர். ஈண்டுதல் - ‡ பலவாற்றான் வந்து நிறைதல். பொருளகளின மெய்ம்மையைத்

† எனைத்து என்பது கேட்கும் உறுதிப்பொருண்மேலும் அனைத்து என்பது உறுதிப்பொருளைக் கேட்கும் காலத்தின்மேலும் நின்றன.

‡ பலவாற்றான் வந்து நிறைதலாவது—தன்னுசிரியனெடு பழகுதலாலும், தன்னே யொத்தவரோடு பழகுதலாலும், வேறு ஆசிரியர்களோடு பழகுதலாலும் வந்த கேள்வியறிவு நிறைதலாமென்க "ஒருகுறி கேட்போனிருகாற் கேட்பிற், பெருக நூலிற் பிழைபா டிலனே" "மூக்காற் கேட்பின் முழையறிந் தாரைக்கும்" "ஆசா னுரைதத தமைவரக் கொளினும், காற்கூ றல்லது பற்றல னாகும்" "அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற், செவ்வி னுரைப்ப வவ்விரு காலும், மையற புலமை மாண்புடைத் தாகும்" என்புள்ள தன்னூற் குத்திரங்களும் இக்கருத்தைத் தக்கனவாம்.

தாமும் அறிந்து அறிந்தாரோடு ஒப்பிப்பதுஞ் செய்தார் † தாமதகுணத் தான் மயங்கினராயினும், ‡ அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவை காண்கு பாட்டாலுங் கேட்டார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இழைத்தணர்ந்து - (பொருள்களைத் தாமும்) நுட்பமாக ஆராய்ந்தறிந்து, ஈண்டிய - (அதன்மேலும்) நிறைந்த, கேள்விய வர்-கேள்வியினையுடையார், பிழைத்தணர்ந்தும்-(நூற்பொருள்களைத்தாம) மாறுபாடாக அறிந்தவிடத்தும், பேதைமை - (தமக்குப்) பேதைமையை உண்டாக்குஞ் சொற்களை, சொல்லார்-சொல்லமாட்டார். (எ - று).

பிழைப்பவென்பது பிழைத்து எனத்திரிந்து நின்றது. பேதைமை யென்பது பேதைமையையுண்டாக்குஞ் சொல்லையுணர்த்துதலால் காரிய வாகுபெயரம். ஈண்டுதல்-(கேள்வி யறிவு) பலவழிகளால்வந்து நிறைதல். நூற் பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் அறிந்து அறிந்தவருடன் கூடி அவர சொல்லகேட்டு ஒப்புப்பார்த்தலும் இருப்பவர் தமோகுணத்தால் மயங்கினராயினும், அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவை காண்கு பாட்டாலும் கேள்வியுடையவர்க்கு வரும் நன்மை சொல்லப்பட்டது.

(க - து.) கேள்வியறிவினை யுடையார் அறிவினமான சொற் களைச் சொல்லார் என்பது.

7. Not even when they have imperfectly understood a matter, will those men speak foolishly, who have profound - ly studied, and diligently listened to instruction.

அ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றேற்கப் படாத செவி.

பரி:—(இ - ள்.) தம்புலமாய ஓசைமாத்திரத்தைக் கேட்குமாயி னுஞ் செவிடாந் தன்மையவேயாம், கேள்வியால் துணிக்கப்படாத செவிகள், (எ - று).

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதியெய் தாமையிற் 'கேளாத் தகைய' என்றும், மனத்தின்கண் நூற்பொருள் தழைதற்கு ¶ வழியாகலிற் கேள்வியைக கருவி யாக்கியுங் கூறினர். பழைய தூள தூள அன்றெனபதாம்.

† மந்தமாய், உணமத்தமாய், மதிமமாயிருப்பது தாமதகுண மெனப் படும். ஈசுவரகீதை "தமம் அஞ்ஞானமாம்" என்று கூறுகின்றது.

‡ அவ்வாறல்லது சொல்லாரென்பதாம் (தாமதகுணத்தால்) அப்படி மயங்கியதேயல்லாமல் (தமக்குப் பேதைமையைத்தருஞ் சொற்களை)சொல் லாரென்பதாம். "இம்மூ வுலகி னிருள்கடியு மாய்கதிர்போல், அம்மூன்று மூற்ற வறிதலால் - தமின், உறழா மயக்கி யுறழினு மென்றும், பிறழா பெரியோர்வாய்ச சொல்" என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.


¶ வழியாக்கலின் - காதில் வழியை யுண்பெண்ணுகின்றமையின்.

தெளி:—(இ - ள்.) கேள்வியால் - கேள்வியினால், தோட்கப்படாத திளக்கப்படாத, செவி - காதுகள், கேட்பினும் - (தமக்கு விஷயமான ஓசைமாத்திரத்தைக்) கேட்குமாயினும்; கேளாத்தகையவே - செவிடாந் தன்மை யுடையனவேயாம், (எ - று).

தகையவே என்னும் ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. (செவிகள்) ஓசைமாத்திரத்தால் நன்மையை யடையாமையால் 'கேளாத்தகைய' என்றும், மனத்தில் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலால் கேள்வியைக் 'கேள்வியால்' எனக் காரணமாக்கியும் சொல்லினர். காதினது பழைய திளை தினேயன்றென்பதாம்.

(க-து.) கேள்வியால் திளக்கப்படாத காதுகள் செவிடே யாம் என்பது.

8. The ear which has not been bored by instruction, although it hears, is deaf.



கூ. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

பரி:—(இ - ள்.) நுண்ணிதாகிய கேள்வியுடைய ரல்லாதார் பணி நீத மொழியினையுடையராதல் கூடாது, (எ - று).

† கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்வியே லேற்றப் பட்டது. வாய் ஆகுபெயர். பணிந்தமொழி ‡ பணிவைப் புலப்படுத்திய மொழி. ¶ கேளாதார் உணர்வின்மையாற் றம்மை வியந்து கூறுவரென்ப தாம். [] அல்லாலென்பதூஉம் பாடம்.

தெளி:—(இ - ள்.) நுணங்கிய-நுட்பமானதாகிய, கேள்வியரல்லார்-கேள்வியை யுடையவரல்லாதவர், வணங்கிய - வணக்கத்தைக் காட்டுகிற, வாயினராதல் - சொல்லையுடையவராதல், அரிது - கூடாது, (எ - று).

† கேட்கப்படுகின்ற பொருளினது நுட்பத்தைக் கேள்வியின்மே லேற்றி 'நுணங்கிய கேள்வி' என்று கூறினமையின், இஃது இடதது கிழ்பொருளின் குணம் இடத்தின் மேலாய உபசார வழக்காம்.
‡ பணிவைப்புலப்படுத்தியமொழி-அடக்கத்தை வெளிப்படுத்தியசொல்.

¶ நுட்பமாகிய பொருள்களை யறிவுடையோ ரிடத்துக் கேட்டறியாத வர் "உண்கினிய வின்னீர் பிறிதுழியில் லென்னும், நிணற்றகத்துத் தேரைபோல்" (இதுபழமொழி) அறிவில்லாமையினால் தம்மைத்தாமே வியந்து சொல்லுவாரென்பதாம். இதனால் தம்மைத்தாமே வியந்து கொள்பவர் கேள்வி யறிவில்லாதவ ராவரென்பது பெறப்பட்டது.

[] இப்பாடத்திற்கு நுணங்கிய கேள்வியரல்லாமல் எனைவோர் வண ங்கிய வாயினராத லரிது என்று பொருளாம்.

கேட்கப்படுகின்ற பொருளினது நுட்பம் கேள்வியின் மேல் ஏற்றப் பட்டது. வாய் - வாயிலுண்டாகுஞ் சொல்லே யுணர்த்துதலால் கருவியாகு பெயராம். கேளாதார் அறிவில்லாமையால் தம்மைத்தாமே வியந்து சொல் லுவாரென்பதாம்.

(க - து.) கேள்வியறிவில்லாதார் வணக்கமான சொற்களைச் சொல்லார் என்பது.

9. It is a rare thing to find modesty of speech, with those who have not received choice instruction.



60. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் † மாக்க ளவியினும் வாழினு மேலு.

பரி:—(இ - ள்.) செவியான் நுகரப் படுஞ் சுவைகளை யுணராத வாயுணர்வினையுடைய மாந்தர் சாவினும் வாழினும் உலகிற்கு வருவ தேன்னை, (எ - று).

செவியான் நுகரப்படுஞ் சுவைகளாவன:—‡ சொற்சுவையும், ¶ பொ ருட்சுவையும். அவற்றுள் சொற்சுவை (), குணம், [] அலங்காரமென இருவ

† மாக்கள் - மனவுணர்ச்சி யில்லாதார்.

‡ சொற்சுவை - சொல்லின்கண் தோன்று மின்பம்.

¶ பொருட்சுவை - பொருளின்கண் தோன்று மின்பம்.

() குணம் - தொடைகளைப்பற்றி நின்று காப்பியத்திற்கழகு செய்வ தாம். (பல வடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்களொன்றி வரு வது தொடை.)

அக்குணம் செறிவு, தெளிவு, சமதிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில்பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனப்பத்து வகையாம். (இக்குணங்களில்லாதது கைகால் முதலிய உறுப்புக்களிருந்தும் பதுமை உயிரின்மையால் மனிதனெனக் கொள்ளப்படாததுபோலச் செய்யுளென் றும் கொள்ளப்படாதாம்.)

[] அலங்காரம் - சொல்லையும் பொருளையும் பற்றி நின்று அழகுசெய் வதாம்.

சொல்லலங்காரம் - மடக்கு, கோமூத்திரி, கூட சதிர்த்தம் முதலிய னவாகப் பலவகையாம்.

'பொருளலங்காரம் - தன்மை, உவமை, உருவகம் முதலியனவாகப் பலவகையாம்.

குணங்கள் இளமை முதலியன போல ஒற்றுமை நயத்தினின்று அழகு செய்வன; அலங்காரம் - கடகமுண்டலாதிகளைப்போல வேற்றுமை நயத்தினின்று அழகு செய்வன என்றும், காப்பியத்திற் கழகு செய் வனகுணங்கள்; அதற்கு அதிசயத்தைச் செய்வன அலங்காரங்கள் என்றும், கூறுவர்.

கைத்து. பொருட்சுவை † காமம், ‡ நகை, $ கருணை, ¶வீரம் * உருத்திரம், () அச்சம், [] இழிப்பு, †† வியப்பு, ‡‡ சாந்தமென ஒன்பது வகைத்து $$அவை யெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். வாயுணர்வென்பது இடைப்பதங்கள் ¶¶ தொக்கு நின்ற மூன்றும் வேற்றுமைத்தொகை அது வாயாயின் நகரப்படுஞ் சுவைகளேயுணரு உணர்வெனவிரியும் சுவை-கைப்பு,

† காமம் - புணர்ச்சிபற்றிய விருப்பமாம். உவகை யெனினும், காதலெனினும், சிங்காரமெனினும் ஒக்கும்.

‡ நகை - அங்கவிகார முதலிய வற்றால் தோன்றுவதொரு களிப்பு.

$ கருணை-இஷ்ட ஜனமரண முதலிய வற்றாலுண்டாகும் அழுகை.

¶ வீரம - செய்வினையில் மனத்துணிவு. பெருமிதம் எனினும், உற்சாகமெனினும், வீரமெனினும் ஒக்கும்.

* உருத்திரம - பிறர் செய்யும் தீங்கினாலாகும் மனக்கொதிப்பு. குரோதமெனினும், உருத்திரமெனினும், வெகுளியெனினும் ஒக்கும்.

() அச்சம - தெய்வம், விலங்கு, கள்வர் முதலானவர்களால் உண்டாகும் பயம்.

[] இழிப்பு-மூப்பு, பிணி, வருத்தம் முதலாயினவற்றை யறிதலாலுண்டாகும அருவருப்பு. இளிவரல் எனினும், இழிப்பெனினும், இழிபெனினும், அருவருப் பெனினும் ஒக்கும்.

†† வியப்பு - புதியனவும், மிகப் பெரியனவும், மிகச் சிறியனவும் ஆகியவற்றை யறிதலாலுண்டாகும மனப்பரப்பு. அற்புதமெனினும், வியப்பெனினும், மருட்கை யெனினும் ஒக்கும்.

‡‡ சாந்தம - யான் எனதென்னும் பற்றற்றிருக்கும் நிலை, சமநிலையெனினும், சமமெனினும், சாந்தமெனினும் ஒக்கும். "நகையே யழுகை" எனனுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் " அதற்கு (சமநிலைக்கு) ஓர் விகாரமின்மையின், ஈண்டுக்கூறியதிலதெனின்பது; அதற்கு விகாரமுணடெனின் முன்னிய வெட்டனுள்ளுஞ் சார்த்திக்கொள்ளப்படும். அஃதல்லதூஉம், அஃதலதியல் நிகழ்ந்தாற்பெற்றியாகலின், ஈண்டு உலகவழக்கினுட் சொல்லியதிலதெனன்பது' என்று கூறியிருப்பதிங் குணர்தற் பாலதாம்.

$$ அவையெல்லாம் (சொற் சுவை பொருட் சுவைகளே யெல்லாம்) இங்குச் சொன்னால் விரியும். சொற்சுவை பொருட்சுவைகளின் பரிஷ்பதண்டி யலங்கார சாரம், தண்டி யலங்காரம், தொல்காப்பியம் முதலிய நூல்களிற் காண்க.

¶¶ தொக்கு நின்ற இடைப்பதங்கள்—நகரப்படுஞ் சுவைகளே யுணரும் என்பன.

இடைப்பதங்கள் தொக்கு நிற்பதனைப் பிரயோக விவேக நூலார் மத்தியபதலோபன் என்பர்.


காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இத்திப்பென ஆறும். * செத்தாலி ழப்பதும் வாழ்ந்தாற் பெறுவதும் இன்மையின், இரண்டும் ஒக்குமென்பதா ம். () வாயுணவின் என்பு பாடமோது வாருமுளர். இவை மூன்றுபாட்டா னுங் கேளாதவழிப்படுக் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) செவியிற்சுவை-காதுகளால் அனுபவிக்கப்படுஞ் சுவைகளை, உணரா-அறியாத, வாயுணர்வின்-வாயால் உண்ணப்படும் சுவை களை அறியும் அறிவினையுடைய, மாக்கள் - மனிதர், அவியினும் - இறந்தா லும், வாழினும் - வாழ்ந்தாலும், என் - (உலகத்திற்கு வருவது) யாது,

காதுகளால் அனுபவிக்கப் படுஞ் சுவைகளாவன:—சொற்சுவையும், பொருட்சுவையும்ஆம். அவற்றுள், சொற்சுவை குணம் அலங்காரமென்றிரு வகையாம். பொருட்சுவை காமம் முதலாக ஒன்பது வகையாம். அவற்றை யெல்லாம் இங்குச் சொன்னால் விரியும்; அதுபற்றி அவை சொல்லாமல் விடப்பட்டன. வாயுணர்வென்பது இடையிலே பதங்கள் தொக்கு நின்ற மூன்றும் வேற்றுமைத் தொகை. இஃது உருபும் பொருளும் உடன் தொ க்கதொகை யெனப்படும். வாய்ச்சுவைகள் கைப்பு முதல் அறுவகையாம். செவியிற் சுவையுணரா வாயுணர்வின்மாக்கள் செத்தால் இழப்பதும், வா ழ்ந்தால் பெறுவதும் இல்லாமையால் அவர்க்கு (சாவது வாழ்வ தென்னும்) இரண்டும் சமமென்பதாம்.) இவை மூன்று பாட்டாலுங் கேளாதலிடத்து உண்டாகுங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) சொற்சுவை பொருட்சுவைகளை யறியுந் திறமில் லாதவர் செத்தாலும் இருந்தாலும் பயனில்லை என்பது.

10. What does it matter whether those men live or die, who can judge of tastes by the mouth, and not by the ear.



ஐந்தாம் அதிகாரம்.

† அறிவுடைமை—On Wisdom.

பரி:—அஃதாவது கல்வி கேள்விகளின் தூய அறிவோடு உண்மை அறிவுடையனாதல். ‡ அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

* செவியால் சொற்சுவை பொருட்சுவைகளை யுணராது மிருகமொத் து உண்பதொன்றையே கருதியிருப்பவர் செத்தாலிழப்பதும் வாழ்ந்தாற் பெறுவதுமின்றி யொழிவரென்பதாம். () வாயுணவின்மாக்கள் என்னும் பாடத்திற்கு வாயினுணவை யுண்ணும் மாந்தர் என்று பொருளாம்.

† "ஒப்புமுருவும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின்விசேட வுரையில் "அறிவாவது கல்லாதனலனும் கீயதன் நிமையும் உள்ளவாறு ணர்தல்" என்றனர் நச்சினர்க்கினியர்.

‡ அதிகார முறையும். கேள்வி பென்னு மதிகாரத்தின்பின் அறிவு டைமையென்னு மதிகாரம் வைத்த முறையும்.

தேனி:—அஃதாவது கல்வி சென்விகளிஞலாகிய அறிவோடெண்ணை யறிவுடையவனுதல். அதிகாரமுறைமையும் இதஞலே விளங்கும்.

க. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

பரி:—(இ - ள்.) அரசர்க்கு அறிவென்பது இறுதிவாராமற் காக்குங் கருவியாம்; அதுவேயும் அன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள் ளரணுமாம், (எ - று).

காத்தல் - ! முன்னறிந்து பரிகரித்தல். உள்ளரண் - உள்ளாயஅரண்; ‡ உள்புக்கழிக்கலாகா § அரணென்றுமாம். இதஞல் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

தேனி:—(இ - ள்) அறிவு - (அரசர்க்கு) அறிவென்பது, அற்றம் - முடிவு, (வராமல்), காக்கும்—பாதுகாக்கும், கருவி - படையாம், (அதுவே யும அல்லாமல்) செறுவார்க்கு - பகைவர்க்கு, அழிக்கலாகா —அழிக்க முடி யாத, உள்அரண - உன் அரணுமாம், (எ - று).

(அற்றத்தைக்) காத்தல் - (அதனை) முன்பறிந்து நீக்குதல்.உள்ளரண் - உள்ளாகிய அரண்; உள்ளேபிரவேசித்தழிக்க முடியாத அரணென்றுமாம். இதஞல் அறிவினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவரையடங்கி அரசர்க்கு முடிவுவராமற்காக்கும் கருவி அறிவேயாம எனபது.

1. Wisdom is a weapon to ward off destruction; it is an inner fortress which enemies cannot destroy.

உ. சென்ற விடத்தாற் செலவிடா தீதோரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

பரி:—(இ - ள்.) மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்ல விடாது அப்புலத்தின் நன்மை கீமைகளே ஆராய்ந்து தீயதனினீக்கி நல்லதன்கட செலுத்துவது அறிவு, (எ - று).

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ¶ ஓசை,ஊறு, ஒளி, சுவை, காற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்

† முன்னறிந்து பரிகரித்தல் - அற்றத்தை (சோர்வினுல்வருங் கெடு தியை) முன்னறிந் தொழித்தல்.

‡ (பகைவர்) உளளே பிரவேசித்து அழிக்க முடியாத அரண் (கோட் டை) என்றும் உள்ளழிக்கலாகாவரண் என்பதற்குப் பொருள் கொள்ளலா மென்பது.

§ அரண் (காவல்)—மலையரண், காட்டரண், மதிலரண், கடலரண் என நால்வகைப்படும்.

¶ மனம் ஒரு காலத்தில் ஒரு விஷயத்தில் செல்லுவதன்றிப் பல விஷயங்களில் செல்லாதென்பது கருத்து.

கண் அல்லது செல்லாமையின் 'இடத்தால்' என்றார். † விடாது என்பதை கடைக்குறைத்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் போல ‡ வேறுக்கி மனதைப் புலமறிந்து செலுத்துவது 'அறிவு' என்றார்; அஃது உயிர்க்குண மாகலின்.

தெளி:—(இ - ள்.) (மனத்தை) சென்றவிடத்தால் - (அது) போன விஷயத்தில், செலவிடா-போகவிடாமல், (அவ்விஷயத்தின் நன்மைதீமை களை ஆராய்ந்து), தீது - தீயதிலிருந்து, ஒரீஇ - நீக்கி, நன்மின்பால் - நல்ல தனிடத்து, உய்ப்பது - போகவிடுவது, அறிவு - அறிவாம், (எ - று).

செலவிடாது என்னும் வினைக்கு எற்க மனத்தையென்னும் செயப் படுபொருள் வருவிதிதரைக்கப்பட்டது. சப்த பரிச ரூப ரச கந்தமென விஷயங்கள் ஐந்தாயிருந்தாலும், மனமானது ஒரு காலத்தில் ஒரு விஷயத் தில் செல்லுவதல்லாமல் எனைய விஷயங்களில் செல்லாமையினால் (இடங் களாலெணப்பண்மையாற் கூறுது) 'இடத்தால்' என ஒருமையாகக் கூறி னார். விடாது என்பது கடைக்குறைந்தது விடாஎன நின்றது. குதிரை யை நிலமறிந்து செலுத்தும் பாகன்போல வேறுக்கி மனத்தை விஷய மறிந்து செலுத்துவது 'அறிவு' என்றார்; அஃது (அறிவு) உயிர்க்குண மாகலால். இடமென்றது (சப்தமுதலிய) விஷயத்தை.

(க - து.) மனத்தை அது போனவழியே போகவிடாது வேறுபடுத்தி நல்வழியிற் செலுத்துவதே அறிவாம் என்பது.

2. Not to permit the mind to go where it lists, to keep it from evil, and to employ it in good, this is wisdom.

கூ. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ - ள்.) யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும் அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு.

§ குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யார்க்கும் உண்மை யின், உயர்ந்தபொருள் இழிந்தார்வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார்

† விடாது என்பது செய்யுள் விகாரத்தால் கடைக் (குவ்விகுதி) குறைந்து விடா என நின்றது.

‡ வேறுக்கி - தன்னிஷ்டப்படி போகாவண்ணம் வேறுபடுத்தி

§ குணங்கள் மூன்று - சாத்வீகம், இராசதம், தாமதம் என்பனவாம். அடக்கம், அன்பு, அருள், ஞானம் முதலியவற்றில் நாட்டங் கொண்டிருப் பது சாத்வீகம்; அகங்கார முதலியவற்றில் நாடங்கொண்டிருப்பது இரா சதம்; மந்தமாயிருத்தல் முதலியவற்றில் நாட்டங்கொண்டிருப்பது தாம தம். "சத்துவம் ஞானமாம் தமமஞ் ஞானமாம் மத்திமம் (இராசதம்) கலப்ப தாம்" என்று ஈசுவரகீதை கூறுகின்றது.

வாயினும், உறுதிப்பொருள் பகைவர்வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும் ஒரோவழிக் கேட்கப் படுதலான் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்றார், அடுக்குப் பன்மைபற்றி வந்தது. வாயென்பது ‡ அவர் அப்பொருளின்கட் பயிலாமை † யுணர்த்திநின்றது. மெய்யாதல் - நிலைபெறுதல். சொல்லுவாரது இயல்பு நோக்காது அப்பொருளின் பய னெஞ்சிற் கொள்ளுதல் ஒழிதல் செய்வதறி வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) எப்பொருள் - யாதொரு பொருளை, யார்யார் வாய் - யாவர்யாவர் சொல்ல, கேட்பினும் - கேட்டாலும், அப்பொருள் அப்பொருளினது, மெய்ப்பொருள் - மெய்யாகிய பயனை, காண்பது காணவல்லது, அறிவு - அறிவாம் (எ - று).

சத்துவம் ரசசு தமசு என்னு மூக்குணங்களும் மாறிமாறி வருதல் யாவர்க்கு மிருத்தலால், உயர்ந்த பொருளை இழிந்தார் வாயிலும், இழிந்த பொருளை உயர்ந்தார் வாயிலும், உறுதிப் பொருளைப் பகைவர்வாயிலும், கெடுபொருளைச் சிநேகர்வாயிலும் ஒரோவிடத்துக் கேட்கப் படுதலால் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்றார், யரியார் என்னும் அடுக்குப் பன்மைப்பொருளில் வந்தது. வாய என்பது அவர் அப்பொரு ளினிடத்துப் பழகாமையையறிவித்து நின்றது. மெய்யாதல் - நிலைத்தி ருத்தல். சொல்லுவாரது இயல்பு நோக்காமல் அப்பொருளின் பயனே நோ க்கி நல்லதைக் கொள்ளுவதையும் தீயதை விடுவதையுஞ் செய்வது அறி வென்பதாம். ஒரோவிடம் - சிலவிடம்.

(க - து.) பிறர்சொல்லுவதில் உண்மைப் பொருளையறிவதே அறிவாம் என்பது.

3. To discern the truth in everything, by whomsoever spoken, this is wisdom.

ச. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ- ள்.) தான் சொல்லுஞ் சொற்களை $ அரிய பெரிய

‡ அவர் (இழிந்தார் உயர்ந்தார் பகைவர் நட்டார் என்னுமவர்கள்) அப்பொருளின்கண் (உயர்ந்தபொருள் இழிந்தபொருள் உறுதிப்பொருள் கெடுபொருள்களி னிடத்தைப்) பயிலாமை (அப்பியசித்திராமையை) யுண ர்த்தி (அறிவித்து) நின்றதென்பது. இழிந்தார்வாய் உயர்ந்த பொருளை யும், உயர்ந்தார்வாய் இழிந்தபொருளையும், பகைவர்வாய் உறுதிப்பொருளை யும், நட்டார்வாய் கெடுபொருளையும் பழகி யிராவென்பது கருத்து.

† உணரநின்றது என்றும் பாடமுண்டு.

$ அரிய பொருளாயினும்—அறிந்து கொள்ளுதற்கு அருமையான விஷயங்களை யுடையனவா யிருந்தாலும்.

வாயினும் கேட்பார்க்கு எளிய பொருவைாமாறு † மனங்கொளச்சொல் லிப் பிறர் வாய்க்கேட்குஞ் சொற்களின் நுண்ணியபொருள் காண அரிதாயினும் ‡ அதனைக் காணவல்லது அறிவு, (எ - று).

§ உடையவன் தொழில் அறிவின்மே லேற்றப்பட்டது. சொல்லு வன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுகவென்பார் சொன்மேல் வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக் கொண்டொழிக வென்பார் பொருண்மேல் வைத்துங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) (தான் சொல்லுஞ் சொற்களை அரியபொரு ளனவா யிருந்தாலும்) எண்பொருளவாக - (கேட்பவாக்கு) எளியபொரு ளன வாம்படி, செல - (மனங்) கொள்ள, சொல்லி - கூறி, தான் —, பிறர் வாய்-பிறர துவாயில் (கேட்குஞ் சொற்களின்), நுண்பொருள்-நுட்பமாகிய பொருளை, காண்பது - (காணபதற்கு அருமையாயிருந்தாலும் அதனைக்) காணவல்லது, அறிவு - அறிவாம, (எ-று).

அறிவுடையவனது (சொல்லிக் காண்பதாகிய) தொழிலை அறிவின் மேல் ஏற்றிச் சொல்லிக்காண்பது அறிவு என்று கூறினர். தான் சொல்லு வனவற்றை வழுவில்லாமல் நன்று + விளங்கச் சொல்லவேண்டு மென்பார் (எண் பொருளவாகச செலச்) சொல்லி எனச சொல்லின்மேல் வைத்தும், பிறர்சொல்லைக் கேட்பன வழுவாயிருப்பினும் நன்றாக விளங்காமலிருப்பி னும் அவற்றின் பயனைக்கொண்டு விடவேண்டு மென்பார் (பிறர்வாய்) நுண்பொருள் காண்பது' எனப் பொருளின்மேல்வைத்துஞ் சொல்லினர்.

(க - து.) பிறர்க்குத்தான் சொலலும் விஷயம் அருமையாக இருப்பினும்அதனை யெளிதாகச் சொல்லிப்,பிறர் சொல்லும் விஷ யம் வழுவாகவேனும, விளங்காதாகவேனு மிருப்பினுப அதனை யறியவல்லதே ஒருவனுக்கறிவுடைமையாம் என்பது.

4. To speak so as that the meaning may easily enter the mind of the hearer; and to discern the subtlest thought which may lie hidden in the words of others; this is wisdom.

குறள். உலகந் தழீஇய தோட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

† மனங்கொள - மனத்திலமையுமாறு. ‡ அதனை—நுட்பமான பொருளை.

§ அறிவுடையவனது (சொல்லுதல் காணுதல் ஆகிய) தொழிலை அவனது அறிவின்மேலேற்றிச் சொல்லிக் காண்பது அறிவு என்று கூறினர். அறிவுடையவனது தொழிலை அறிவின்மேலேற்றிக் கூறினமையின், இது குணி (அறிவுடையவன்) வினை குண (அறிவு) வினையாய உபசார வழக்காம்.

பரி:—(இ - ள்.) உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்; அந்நட்பின்கண் முன்மலர்தலும் பின் கூம்புதலுமின்றி † ஒரு நிலைய னாவது அறிவாம், (எ - று.)

‡ தழீஇயது இல்லது என்பன அவ்வத் தொழின்மேனின்றன. $ உலகமென்றது ஈண்டையோர்தோரை. அவரோடு ¶ கயப்பூப்போல வேறு படாது கோட்பெப்பூப்போல ஒரு நிலையே நட்பாயினுன் எல்லா இன்பமும் எய்துமாகலின், அதனை 'அறிவு' என்றார். () காரியங்கள் காரணங்க ளாக உபசரிக்கப்பட்டன. o இதனைச் செல்வத்தின் மலர்தலும் கல்குரவிற் கூம்பலு மில்லதென்று உரைப்பாருமுளர்.

தெளி:—(இ-ள்) (ஒருவனுக்கு) உலகம் - உயர்ந்தோரை, தழீஇயது-நட்பாக்குவது, ஒட்பம்-அறிவுடைமையாம், மலர்தலும் - (முன்னே) விரிதலும், கூம்பலும்-(பின்னே) குவிதலும், இல்லது-(அந்நட்பினிடத்து) இல்லாது ஒருதன்மையனுவது, அறிவு-அறிவாம், (எ-று).

தழீஇயது இல்லது என்னும் முற்றுக்கள் தழுவுதல் இல்லாதிருத்தலென அவ்வத் தொழிற்பெயர்ப் பொருளனவாய் நின்றன. உலகம்என்பது

† ஒரு நிலையனுவது—எப்பொழுதும் ஒரு தன்மையையுடையவனுயிருத்தலாம்.

‡ தழீஇயது இல்லது எனபன அவ்வத்தொழில்மேல் நின்றன-தழீஇயது என்பது (தனது தொழிலான) தழுவுதல்மேலும் இல்லது என்பது (தனது தொழிலான) இல்லாதிருத்தல் மேலும் நின்றன வென்பது. தழீஇயது என்னுந் தெரிநிலை வினைமுற்றும் இல்லது என்னுங் குறிப்பு வினை முற்றும் தொழிற்பெயர்ப் பொருளில் வந்தனவென்பது கருத்து.

$ "அவனி திசையா காய முயர்ந்தோர், சூலமிவை யுலகெனக் கூற லாகும்" என்று (பிங்கலநிகண்டு) சுத்திரமிருத்தல்பற்றி 'உலகமென்றது ஈண்டையோர்தோரை' என்று கூறப்பட்டது.

¶ "கோட்பெப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது, வேட்டதே வேட்ட தோ நட்பாட்சி—தோட்ட, கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை, கயப்பாரு நட்பாரு மில்" என்பது காலடியார்.

அதனை - மலர்தலுங் கூம்பலுமில்லாததை.

() உலகத்தைத்தழுவுதற்குக் காரணமான அறிவை 'உலகந்தழீஇய தொட்பம்' என்றும், மலர்தலும் கூம்பலுமில்லாதிருத்தற்குக் காரணமான அறிவை 'மலர்தலுங், கூம்பலு மில்ல தறிவு' என்றும், கூறினமையின், 'காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன' என்று கூறப்பட்டது.

தழீஇயது காரியம், ஒட்பம் காரணம்; மலர்தலுங் கூம்பலு மில்லாமை காரியம், அறிவு காரணம்.

o இதனை (மலர்தலும் கூம்பலுமில்லது, என்பதற்கு) செல்வம் வந்தவிடத்து மகிழ்ந்திருத்தலும் தரித்திரம் வந்தவிடத்து வருந்தியிருத்தலு மில்லாததென்று சொல்லுவாரு முண்டென்பது.

இக்கு உயர்ந்தோரை யுணர்த்திற்று; அவ் வுயர்ந்தோரோடு நீர்ப்பூப்போல வேறுபடாமல் கோட்டுப்பூப்போல ஒரு நிலையே நட்பாயினுன் எல்லா வின்பமுமடைவானுதலால், அதனை 'அறிவு' என்றார். தழுவுதல் என்னும் காரியமும் மலர்தலும் கூம்பலு மில்லாமை என்னும் காரியமும் ஒப்பம் அறிவு என்னுங் காரணமாக வுபசரிக்கப்பட்டன. நீர்ப்பூ-நீர் நிலையிலுள்ள பூ; அது தாமரைமலர் முதலாயினவாம். கோட்டுப்பூ-கொப்பூ; அது புன்னைமலர் முதலாயினவாம்.

(க - து.) முன்னே விரிதலும் பின்னே குவிதலு மின்றி என்றும் ஒருதன்மையதாக யுயர்ந்தோரை நேசிப்பதே அறிவாம்.

5. To secure the friendship of the great is true wisdom; it is also wisdom to keep that friendship unchanged and not opening and closing like the lotus-flower.

சு. † எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

பரி:—(இ - ள்.) உலகம் யாதொருவாற்றுன் ஒழுகுவதாயிற்று அவ் வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றுலொழுகுவது அரசனுக்கறிவு.

உலகத்தையெல்லாம் யான் ‡ நியமித்தலான் என்னை நியமிப்பாரில்லை யெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகிற் பாவமும் பழியுமாமாகலான், அவ்வாறொழுகுதல் அறிவன்றென விலக்கியவாருயிற்று. இவையைந்து பாட்டாலும் அதனது இலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உலகம்-உலகமானது, எவ்வது-எவ்விதத்தினுல், உறைவது-நடப்பதா யிருக்கின்றது, உலகத்தோடு - அவ்வுலகத்துடன், (பொருந்தித்தானும்), அவ்வது-அவ்விதத்தால், உறைவது-நடப்பது, அறிவு-(அரசனுக்கு) அறிவாம், (எ - று).

உலகத்தை யெல்லாம் யான் நியமித்தலால் என்னை நியமிப்பவர் (ஒருவரும்) இல்லையென்று நினைத்துத் தான் நினைத்தபடியே நடந்தால் பாவமும் பழியுமா மாதலால், அப்படி நடத்தல் அரசனுக்கு அறிவன்றென்று விலக்கியபடியாயிற்று. இவை ஐந்துபாட்டாலும் அறிவுடைமையி னிலக்கணம் சொல்லப்பட்டது.

(கு-து.) உலகத்தோ டொத்தொழுகுதலே அரசனுக் கறிவாம் என்பது.

6. To live as the world lives, this is wisdom.

† "உலகத்தோ டொட்ட வொழுகல்" என்னுங் குறளும் அரசனுரையும் இங்குக் கவனிக்கத்தக்கனவாம்.

‡ நியமித்தலான்-ஒழுங்குபடுத்தியாளுதலால்.

எ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) அறிவுடையராவார் வரக்கடவதனை முன்னறிய வல்லார்; அறிவிலராவார் அதனை முன்னறியமாட்டாதார், (எ - று).

முன்னறிதலாவது முன்னேயெண்ணியறிதல். அஃதறிகல்லாமை யாவது வந்தாலறிதல். இனி ஆவதறிவாரென்பதற்குத் தமக்கு நன்மை யறிவாரென் றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) ஆவது-வரக்கடவதனை, அறிவார் - (முன்னே) அறியவல்லவர், அறிவுடையார் - அறிவுடையவராவர், அஃது - அவ்வாக் கடவதனை, அறிகல்லாதவர்-(முன்னே) அறியமாட்டாதவர், அறிவிலர்-அறிவில்லாதவராவார், (எ-று).

முன்னறிதலாவது வரக்கடவதனை முன்னே யாலோசித்தறிதல். அஃ தறிகல்லாமையாவது வரக்கடவதனை முன்னே யாலோசித்தறியாது அது வந்தாலறிதல்.

(க-து.) வரக்கடவதனை முன்னே யறியவல்லவர் அறிவுடை யாராவர்; அறியாதவராயிலா ராவர் என்பது.

7. The wise are those who know beforehand what will happen; those who do not know this are the unwise.

அ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

பரி:—(இ - ள்.) அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்; அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம், (எ - று).

பாவமும பழியுங் கேடு முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், † சாதி யொருமைபற்றி 'அஞ்சுவது' என்றார். அஞ்சாமை-எண்ணுது செய்துகிற் றல். அஞ்சுதல்-எண்ணிதவிர்தல். அது சாரியமன்றென்று இகழப்படா தென்பார் 'அறிவார் தொழில்' என்றார். ‡ அஞ்சாமை இறைமாட்சியாகச்

† இலக்கணக்கொத்து "உயர்திணையியற் பெயர்" என்னுஞ் சூத்திரத்தி னுரையில் "நூலெனப்படுவது முலகுங்காலே 'அஞ்சுவ தஞ்சாமை பேதை மை யஞ்சுவ,தஞ்ச லறிவார் தொழில்'.....இவை வருமொழியை நோக் காமலே தனக்குரிய ஒருமைப்பாலே விட்டுப் பன்மைப்பாலையே விளக் குதலால் அஃறிணைச்சாதி யொருமையாயிற்று" என்று கூறுகின்றது.

‡ இறைமாட்சியதிகாரத்தில் "அஞ்சாமை யீகை யறிவுக்க மிக்கான் குடிமெஞ்சாமை வேந்தற் கியல்பு" என்னுங் குறளில் அஞ்சாமையையும் அரசருக்குச் சிறந்தகுணமாகச் சொல்லியிருக்கின்றமையின், இங்கு அவ்வா சர் (அஞ்சப்படுவதனை) அஞ்சவேண்டும் இடம் சொல்லியபடியாமென்பது

சொல்லப்பட்டமையின், ஈண்டஞ்சவேண்டுமிடங் கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் அதனையுடையாரது இலக்கணம் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அஞ்சவது-அஞ்சப்படுவதனை, அஞ்சாமை-அஞ்சாதிருத்தல், பேதைமை-அறியாமையாம், அஞ்சுவது-அவ்வஞ்சப்படுவதனை, அஞ்சல்-அஞ்சுதல், அறிவார் தொழில் - அறிவுடையவரது தொழிலாம்.

பாவமும் பழியும் கேடுமுதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதியொருமைபற்றி 'அஞ்சுவது' என்று கூறினர். அஞ்சாமை-(அஞ்சப்படுவதனை) ஆலோசியாது செய்து நிற்றல். அஞ்சுதல் (அதனை) ஆலோசித்துச் செய்யாது விடுதல். அவ்வஞ்சுதல் காரியமல்லவென்று இகழ்ச்சி செய்யப்படாதென்பார் 'அறிவார் தொழில்' என்றார். அஞ்சாமை இறைமாட்சியாக முன்னே சொல்லப்பட்டமையின், இங்கு அஞ்சவேண்டுமிடம் சொல்லிய படியாம். இவை இரண்டு பாட்டானும் அவ்வறிவையுடையவரது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க-து.) அஞ்சப்படுவதற் கஞ்சாமை யறியாமையாம்; அதற் கஞ்சுதல் அறிவுடைமையாம்.

8. Not to fear what ought to be feared is folly; it is the work of the wise to fear what should be feared.

கூ. எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

பரி:—(இ - ள்.) வாக்கிடவதாகிய † அதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு அவர் நடுங்க வருவதொரு துன்பமில்லை.

† நோயென வருகின்றமையின், வாளா 'எதிரதா' என்றார். இதனைக் காக்கலாங் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல்-அதன்காரணத்தை விலக்குதல். ¶ அவர்க்குத் தன்பின்மை இதனைக் கூறப்பட்டது.

இதனால் பாவமுதலியவற்றைத் தாராதகாரியங்களே அரசர் அஞ்சாது செய்யவேண்டுமென்றும், அவற்றைத் தருங்காரியங்களைச் செய்வதற்கு அஞ்சவேண்டுமென்றும் பெறப்பட்டன வென்க.

† அதனை - நோயை (துன்பத்தை).

‡ பின்னே 'அதிரவருவதோர் நோய்' எனவருகின்றமையின் முன்னேயாதொரு விசேஷணமும் தாராது வாளா (சும்மா) 'எதிரதா' என்று கூறினர். பின்னே நோய் என்பது வாராதிருந்தால் முன்னே நோய் எதிரதா என்று வரவேண்டுமென்க.

¶ அவர்க்கு-(நோயையெதிரதாக் காக்கும்) அறிவுடையவர்க்கு.

தெளி:—(இ-ன்.) (வரக்கடவதாகிய துன்பத்தை) எதிரதாக்காக்கும்-முன்னே அறிந்து காக்கவல்ல, அறிவினர்க்கு - அறிவினையுடையார்க்கு, அதிர—(அவர்) நடுங்கும்படி, வருவதோர் கோய்-வருவதாகிய ஒரு துன்பமும், இல்லை—, (எ-று).

பின்னே கோயெனவருகின்றமையின், வாளா 'எதிரதா' என்றார். இதனால் வரக்கடவதாகிய துன்பத்தைக் காத்தற்குரிய காலம் அறிவிக்கப்பட்டது. காத்தல்-அத்துன்பத்தின் காரணத்தை விலக்குதல். அவ்வறிவுடையவர்க்குத் துன்பமில்லாமை இதனால் சொல்லப்பட்டது.

(க-து.) வரக்கடவதாய துன்பத்தை முன்னறிந்து நீக்கும் அறிவுடையவர்க்குத் துன்பமுண்டாகாது என்பது.

9. No terrifying calamity will happen to the wise who foresee and guard across against coming evils.

க○. ‡ அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரேன்னுடைய ரேனு மிலர்.

பரி:—(இ - ள்.) அறிவுடையார் † பிறிதொன்றும் இலராயினும் எல்லாமுடையாராவர்; அறிவிலாதார் எல்லாமுடையராயினும் ஒன்றும் இலராவர், (எ-று).

செல்வங்களெல்லாம் அறிவாற்படைக்கவும் காக்கவும்படுதலின், அஃதுடையாரை 'எல்லாமுடையார்' என்றும், அவையெல்லாம் மூனையமை தது கிடப்பினும் அழியாமற் காத்தற்கும் † தெய்வத்தானழிதுழிப்படைத்தற்கும் கருவியுடைய ரணமையின், அஃதில்லாதாரை 'எனனுடையரேனு மிலர்' என்றுங்கூறினர். ¶ என்னுமென்புழி உமமை விகாரத்தாற்றொக்கது. இதனால் அவரது உடைமையும் எனையாரது இன்மையுங் கூறப்பட்டன.

தெளி:—(இ-ன்.) அறிவுடையார்-அறிவினையுடையார், எல்லாமுடையார்-(வேறொன்றும் இல்லாதவராயிருந்தாலும்) எல்லாமுடையராவர், அறிவிலார்-அறிவிலாதவர், என்னுடையரேனும்-எல்லாமுடையவராயிருந்தாலும், இலர்-(ஒன்றும்) இல்லாதவராவர், (எ-று).

‡ "நூண்ணுணர் வின்மையறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்பது நாலடியார்.

† பிறிதொன்றும் இலராயினும்-அறிவொழிய வேறொன்று மில்லாதவராயிருந்தாலும்.


† தெய்வத்தான் - நிவினையால்.

¶ எல்லாம் என்னும் பொருளை யுணர்த்திவந்த (எவன் என்னும் வினாவிடைச்சொல்லின் விகாரமாகிய) என்னும் என்ற உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

செல்வங்களெல்லாம் அறிவினால் சம்பாதிக்கவும் காக்கவும்படுதலால், அவ்வறிவினையுடையவரை 'எல்லாமுடையார்' என்றும். அச்செல்வமெல்லாம் முன்னரே அமைந்திடந்தாலும் (அவற்றை) அழியாமற் காத்தற்கும் ஊழால் அழிந்தவிடத்துச்சம்பாதித்தற்கும் கருவியாகிய அறிவில்லாதவராதலால், அவ்வறிவில்லாதவரை 'என்னுடையோனுமிலர்' என்றும் சொல்லினர். என்னும் என்பது உம்மை தொக்கு எண் என வந்தது. இதனால் அறிவுடையவரது உடைமையும், மற்றவரது இல்லாமையும் சொல்லப்பட்டன.

(க - து.) அறிவுடையார் எல்லாமுடையராவர்; அறிவிலார் ஒன்றுமிலராவர் என்பது.

10. Those who possess wisdom, possess everything; those who have not wisdom, whatever they may possess, have nothing.



ஆறும் அதிகாரம்.

குற்றங்கடிதல்.—On The Correction of Faults.

பரி:—அஃதாவது () காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனபபட்ட தும்மங்களாறனையும் அரசன் தன்கண் நிகழா

() (1) சிறுமை (காமம்), (2) சினம் (வெகுளி), (3) இவறல் (கடும் பற்றுள்ளம்), (4) மாண்பிறந்த மானம் (மானம்), (5) மாணுவுவகை (உவகை), (6) செருக்கு (மதம்) என்பன அரிவர்க்கமாம். இவற்றை இவ்வதிகாரத்தின் முதலிரண்டு குறளாலுமுணர்க. "கூறிடுங் கொடிய காமங் குரோதமே யுலோப மோகம், பாறிய மதங்க ளேமாற் சரியமுட் பகையா றென்ப" என்பது நிகண்டு.

1 காமம்-புத்திர (பிள்ளை) மித்திர (சிநேகர்) களத்திர (மனைவி) திருக்கி (வீடு) ஸ்ராம கேஷேத்திர தனதான்யாதிகள் மேலும் மேலு முண்டாக வேண்டுமென்று விகற்பித்தெழுகின்ற சித்தவிருத்தி.

2 வெகுளி - தனக்குவேண்டிய காரியங்களை ஒருவன் விக்கினஞ் (தடை) செய்தால் அவனிடத்தில் ஆக்கிரகமாக விகற்பித்தெழுகின்ற சித்த விருத்தி.

3 கடும்பற்றுள்ளம் (லோபம்) - தான் சம்பாதித்த பொருள்களில் ஒருவருக்கும் ஒருகாசவும் செலவு பண்ணலாகாதென்று விகற்பித்தெழுகின்ற சித்த விருத்தி.

4 மானம் (மற்சரம்) - அன்னியர் சுகமாயிருந்தாலவர்களைப்பார்த்துச் சகியாமல் விகற்பித்தெழுகின்ற சித்தவிருத்தி.

5 உவகை (மோகம்) - தான் சம்பாதித்த பொருள்களின் மேல் பிரிய மோதப் பிரமோதமாய் விகற்பித்தெழுகின்ற சித்தவிருத்தி.

(இஷ்ட விஷயத்தைக் காண்டலாலுண்டாவது பிரியம்; அதனையடைதலாலுண்டாவது மோதம்; அதனை யநுபவித்தலாலுண்டாவது பிரமோதம்.)

6 மதம் - ஐசுவரியத்தின் பெருக்கத்தினுல கருவங்கொண்டு செய் காரியம் தவிர் காரியமறியாமல் விகற்பித் தெழுகின்ற சித்தவிருத்தி. என்று சப்தப் பிரகாணங் கூறுகின்றது.

1 காமத்திற் கிலக்கணம் "தாதவிழ்பூங் குழற்கனிவாய்த் தத்தை மொழி முத்தாகைத்தையலார்மேல்,காதலுறப் புரிசெயலே யென்வடிவு" என்றும், 2 வெகுளிகிலக்கணம் "சாற்றமுன் ஞறும்விருப் பந்தடைப் படிலெழுஞ், சீற்றமே யுருவமாம்" என்றும், 3 உலோபத்திற்கிலக்கணம் "உற்றபொருள் பற்றியுத வாமையுருவாம்" என்றும், 4 மானத்திற் கிலக் கணம், "வணங்குவதெத தகையோர்க்கு மாற்றுவதே யொருவடிவு" என்றும், 5 மதத்திற் கிலக்கணம் "செடியசெல்வ முடைமை கண்டு செஞ் சிடைக் களிப்பதே,வடிவமாகும்" என்றும் பிரபோத சந்திரோதயங் கூறு கின்றது.

"தோஷம்: இராகம், துவேஷம், மோகமென மூவகைத்து. அவற்றுள், [1] இராகம், காமம் (மைதுண விசை), மற்சரம் (தன் பயனே விசாரியா மலே பிறன் விரும்பியதைத் தடுக்க விரும்புதல்), ஸ்புருகை (தர்மவிரோத மின்றிய பொருளேயடைய விரும்புதல்), திருஷ்ணை (இம்மைதென்னுடை யது ஒருகாலுமே கெடலாகா தென்னும் விருப்பம்), உலோபம் (தர்மவிரோ தமாகப் பிறாபொருளேயடைய விரும்புதல்), மாயை (பிறரை வஞ்சிக்க விரும்புதல்), இடம்பம் (உள்ளே தர்மமுடைமை யில்லாதிருந்தும் வெளியில் தர்மமுடையவனுகதனது மேண்மையை யறிவிக்கவிரும்புதல்) என ஏழாம். [2] துவேஷம், குரோதம்(கண்ணிவத்தல் முதலியவற்றிற்குக் கா ரணமாகிய துவேஷ விசேஷம்), ஈர்ஷை (ஒரு சாதாரண வஸ்துவில் பிற னுடைமையாக அவ்வஸ்துவைக் கிரகிக்கும் புருஷனிடத் தண்டாவது), அசூயை (அந்தியபுருஷர்களது வித்தை முதலிய குணங்களிலுண்டாவது), துரோகம் (அந்தியரைக் கெடுக்கும்பொருட் டுண்டாவது) அமர்ஷம் (குற் றஞ்செய்வோனைத்தண்டிப்பதற்குச்சாமர்த்தியமின்றிய புருடனுக்குண்டா வது), அபிமானம் (அபகாரஞ் செய்தவனுக்கு அற்பமும் தன்பத்தைசெ ய்யச்சாமர்த்திய மில்லாதவனுகுக் தனது ஆதமாலிடத் தண்டாகும் து வேஷம்) என ஆறும். [3] மோகம், விபரியயம் (மித்தையாலாய வுணர்வு), சம்சயம் (ஒரு தர்மியின் மாறுபட்ட பல தருமங்களால் விசேடிக் கப்பட்ட வுணர்வு), தருக்கம் (வியாப்பியதை யாரோபித்தலால் வியா பகத்தை யாரோபிப்பது), மானம் (தன்னிடத்தி லில்லாத குணங்களே யாரோபித்துக்கொண்டு உயர்வாகக கருதும் புத்தி), பிரமாதம் (முன் கர்த் தவ்வியஅகர்த்தவ்வியஙகளாக நிச்சயித்தவற்றி லுண்டாகும அகர்த்தவ்வீய கர்த்தவ்வியத்தன்மையாகிய வுணர்வு), பயம்(அநிஷ்டஞ் செய்பவன் யாதே னும் ஒரு காரணம் வாய்த்தகாலத்தி அதனே விடுதற்குத தகுதியில்லாமை யை யறிதல்), சோகம் (இஷ்டவஸ்து பிரிக்தகாலத்தி அது மீண்டும் கிடைத்தற்குரிய தாகாமையை யுணர்தல்) என ஏழாம்" என்று நியாயப் பிரகாசம் முதற்பரிச்சேதத்திற் கூறுகின்றது.

மற் கடிதல். இவற்றைவடநூலார் * அரிவர்க்கமென்ப. இவற்றைக் குற்ற மென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க் கல்லது கூடாமையின் † அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது காமம், குரோதம், உலோபம், மானம், உவகை, மதம் என்னப்பட்ட ஆறு குற்றங்களையும் அரசன் தன்னிடத்துத் தோன்றுமல் ஒழித்தல். இவ்வாறையும் வடநூலார் அரிவர்க்க மென்பர். இவற்றைக் குற்றமென்றறிதலும் ஒழித்தலும் அறிவுடையார்க்கல்லது மற்றவர்க்குக் கூடாமையால், இது (குற்றங்கடிதல்) அதன்பின வைக்கப்பட்டது. அரி-பகை; வர்க்கம்-கூட்டம்.

க. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

பரி:—(இ - ள்.) மதமும் வேதனியுங் காமமுமாகிய குற்றங்களில் லாத அரசரது செல்வம் ‡ மேம்பாடு நீர்மையினையுடைத்து, (எ-று).

() மதம் - செல்வக்களிப்பு. § சிறியோர்செயலாகலின, ¶ அளவிறந்த காமஞ் 'சிறுமை' எனபபட்டது. இவை நீதியல்லன செயலிதலான், ‖ இவற்றைக் கடிந்தார்செலவம் கல்வழிப்பாடும் கிலேபேறும் உடைமையின், மதிப்புடைத் தென்பதாம். 0 மிகுதிபற்றி இவை முற்கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) செருக்கும் - மதமும், சினமும் - குரோதமும், சிறுமையும் - காமமும், (ஆகிய குற்றங்களே) இல்லார் - இல்லாத அரசரது, பெருக்கம் - செல்வமானது, பெருமிதநீர்த்து-மேம்பாட்டுத் தன்மையினையுடையதாம், (எ - று).

* பகைவர்க்கமென்ப என்றும் பாடமுண்டு.

† அதன்பின் - அவ்வறிவுடைமையினபின்,

‡ மேம்பாட்டு நீர்மை - கம்பீரமான தன்மை.

() குலமதம், சீலமதம், தனமதம், அழகுமதம், யௌவனமதம், கல்வி மதம், தவமதம், இராஜ்யமத மென மதம் எட்டுவகையாம். குலமதம்-குலத்தாலுண்டாகுங்களிப்பு. ஏனையவற்றிற்கு மிங்ஙனமே பொருள்கொள்க

§ சிறியோர் - கல்வி கேள்வி யறிவு ஒழுக்கங்களில்லாதவர்.

¶ அளவிறந்தகாமம் - அளவுகடந்த ஆசை (கொள்ளுதல்).

‖ இவற்றை - மதம், வெகுளி, காமங்களே.

0 காமம், வெகுளி, உலோபம், மானம், உவகை, மதமெனப்படும் ஆறு குற்றங்களுள், ஒருவனைக் கெடுத்தற்கு மிகுதியும் முற்பட்டுள்ள குற்றங்கள் மதமும் வெகுளியும் காமமுமாதலால், அம் மிகுதிபற்றி மதம் வெகுளி காமங்கள் முன்னே சொல்லப்பட்டன வென்பது.

மதம் - செல்வத்தாலுண்டாகுங் களிப்பு; இது தனமதமெனப்படும். அளவுகடந்த காமங்கொள்ளுதல் சிறியவாதசெயலாதலால், அதி'சிறுமை' என்று கூறப்பட்டது. மதம் வெகுளி காமமென்னு மிக்குற்றங்கள் அரீதிக ளாச்செய்வித்தலால், இக்குற்றங்களோ நீக்கினவராது செல்வம் நல்வழிப்படுதலும் மிகை பெறுதலுமுடைமையால், மதிப்புடையதாகுமென்பதாம். மிகுதி பற்றி இக்குற்றங்கள் முன்னே சொல்லப்பட்டன. மதிப்பு-கௌரவம்.

(க-து.) மதமும் கோபமும் காமமு மில்லாத அரசரது செல்வம் மதிப்புடையதாகு மென்பது.

1. Truly great is the excellence of those kings who are free from pride, anger and lust.

உ. இவறலு மாண்பிறந்த மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு.

பரி:—(இ-ள.) வேண்டியவழிப் பொருள்கெடாமையும் நன்மையி னீங்கிய மானமும் அளவிறந்த வுவகையும் அரசனுக்குத் தூற்றம், (எ-று).

† மாட்சியான மானத்தினீக்குதற்கு 'மாண்பிறந்தமானம்' என்றார். அஃதாவது ‡ அந்தணர் சான்றோர் அருந்தவதபோர் தம்முன்னோர் தந்தை தாய் என்றிவரை $ வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தேதவிடுதலும் முதலாயின. அளவிறந்தவுவகையாவது கழிகண்ணோட்டம். பிறருஞ் ¶ 'சினனே காமங் கழிகண் ணோட்டம்'' என்றிவற்றை * ''அறந்தரு நெறிக்கு வழியடையாகுந், தீது'' என்றார். இவையிரண்டு பாட்டானுங் குற்றங்களாவன இவையென்பது கூறப்பட்டது.

† மாட்சியான மானம் - எஞ்ஞான்றும் தக்கிலேயிற் சூழாமையும், செய்வததாற் சூழ்வுவாதழி உயிர் வாழாமையுமாம.

‡ ''அந்தணர் சான்றோ ரருந்தவதபோ தம்முன்னோர், தந்தையா யென்றிவர்க்குத் தாரவேந்தே - முந்தை, வழிகின்று பின்னே வயங்குநீர் வேலி, மொழிகின்று கேட்டன் முறை'' என்பது புறப்பொருள் வெண்பா மாலை.

$ ''அரச னுவாத்தியான சூழ்தருதை தம்முன், நிகரில் குரவ ரிவ ரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே, யாருங் கண்ட நெறி'' என்று ஆசாரக்கோவை கூறுவதனால் வணங்கவேண்டியவர்க ளின்னாரென்பது நன்கு விளங்குமென்க.

¶ பதிற்றுப்பத்து, 22 - இதன்பொருள். கோபமும் காமமும் மிகுந்த தாட்சண்ணியமும் என்பது.

* இதன்பொருள். தருமத்தை யுண்டாக்கும் ஆக்கினை சக்கரத்திற்கு (அது சொல்லும்) வழியைத் தடுப்பதான குற்றம் என்பது. ''சினனே காமங் கழிகண் ணோட்டம், அச்சம் பொய்ச்சொ லன்புமிக வுடைமை, தெறல்கடி மையொடு பிறவுமிவ் வுலகத், தறந்தரு நெறிக்கு வழியடை யாகும், தீது'' என்பது பதிற்றுப்பத்து.

தெளி:—(இ-ன்.) இவறலும்-வேண்டியவிடத்துப் பொருள்கொடாமையும், மாண்பிறந்தமானமும்-நன்மையினீங்கிய மானமும், மாணுவுவகையும்-அளவிறந்தவுவகையும், இறைக்கு - அரசனுக்கு, ஏதம் - குற்றங்களாம்.

மாட்சி (பெருமை) யான மானத்தினின்று நீக்குதற்கு 'மாண்பிறந்த மானம்' என்றார். அம்மாண்பிறந்த மானமாவது அந்தணர் சான்றோர் அருந்தவர் தமதுமுன்னோர் தந்தைதாய்என்ற இவரைவணங்காமையும், (செய்து) முடிக்கத்தகாததாயினும் நினைத்ததை (செய்து) முடித்தே விடுதலும், முதலானவை. அளவிறந்தவுவகையாவது மிகுந்த தாட்சண்யம். இவைஇரண்டு பாட்டாலும் குற்றங்களாவன (காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமென்னும்) இவை யென்பது சொல்லப்பட்டது.

(க-து.) அரசனுக்குக் குற்றமாயுள்ளவை உலோபமும், நன்மையினீங்கியமானமும், அளவுகடந்த உவகையுமாமென்பது.

2. Avarice, undignified pride, and low pleasures, are faults in a king.

ஈ. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கோள்வர் பழிநாணு வார்.

பரி:—(இ-ள்.) பழியை யஞ்சுவார் தங்கண் தினையினளவாங் குற்றம் வந்ததாயினும் * அதனை அவ்வளவாக வன்றிப் பனையினளவாகக் கோள்வர், (எ - று).

† குற்றம்—சாதியொருமைப்பெயர், தமக்கேலாமையிற் றிறென்று ‡ பொருர்; பெரிதாகக்கொண்டு வருந்திப் பின்னும் அதுவராமற் காப்ப ரென்பதாம்.

தெளி:—(இ-ன்.) பழிநாணுவார் - பழிக்கு அஞ்சுவோர், தினைத் துணையாங் குற்றம்-தினையினளவான (சிறிய) குறறமானது, வரினும்-(தம்மிடத்து) வந்ததாயினும், (அக்குற்றத்தை அவ்வளவாக வல்லாமல்) பனைத் துணையா-பனையினளவாக, (பெரிதாக), கொள்வர்-கொள்ளுவார், (எ-று).

குற்றம் ஈறுதோன்றுத சாதியொருமைப்பெயர். சிறியகுற்றமும் தமக்கு வற்காமையால் அதனைச் சிறிதென்று பொறுக்கார்; பொறுக்காது பெரிதாகக்கொண்டு வருந்திப் பின்னும் அக்குற்றம் (தம்மிடத்து) வராமல் காப்பர் (அக்குற்றத்தை யொழிப்பர்) என்பதாம்.

(க-து.) பழிக்கஞ்சுபவர் தமக்குத் தினையளவு குற்றம் வந்தாலும் அதனைப்பனையளவு குற்றமாகக் கருதுவரென்பது.

---

* அதனை அவ்வளவாக வன்றி - அத்தினையளவாங்குற்றத்தை அத் தினையளவு குற்றமாகக் கொள்ளாமல்.

† குற்றம்-காமம் வெகுளி முதலியன.

‡ தேருர் (தெளியார்) என்றும் பாடமுண்டு.

3. Those who fear guilt, if they commit a fault small as a millet seed, will consider it to be as large as a palmyra tree.

சு. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருஉம் பகை.

பரி:—(இ - ள்.) தனக்கிறுதி பயக்கும் பகை குற்றமே, ஆகலான், அக்குற்றம் தன்கண்வாராமையே பயனுகக்கொண்டு காக்கவேண்டும்.

இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமையின் இவையே பகையாவனவென்னும் வடநூலார் மதம் பற்றிக் 'குற்றமே யற்றந் தருஉம் பகை' என்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக் கொண்டென்பார் 'பொருளாக' என்றுங் கூறினர். குற்றமேகாக்கவென்பதி * "அரும்பண்பி னுற்றீமை காக்க" என்பதுபோல நின்றது.

தேவி:—(இ-ள்.) அற்றம்-முடிவை, தருஉம்பகை - (தனக்குத்) தரும் பகை, குற்றமே-குற்றமேயாம், (ஆதலால்), குற்றமே-அக்குற்றம் (தன்னிடத்தி வாராமையையே), பொருளாக - பயனுக, (கொண்டு), காக்க-காக்க வேண்டும், (ஏ-று).

காமம் வெகுளி முதலிய நீக்குணங்களைப்பற்றி யல்லாமல் பகைவர் தனக்கு முடிவைச செய்யாமையின் இக்குற்றங்களே பகையாவன என்று கூறும் வடநூலாரது கொள்கை பற்றிக் 'குற்றமே யற்றந்தருஉம்பகை' என்றும, இத்நீக்குணங்களது இல்லாமையே நற்குணங்களினது இருப்பாகக் கொள்ளவேண்டுமென்று சொல்லவந்தவர் 'பொருளாக' என்றும் கூறினர். காத்தல்-ஒழித்தல்.

(கு-து.) ஒருவனுக்கு முடிவைத்தரும் பகை குற்றமாகலின், அதனை யவன் தன்னிடத்து வாராமற் காக்கக் கடவன் என்பது.

4. Guard against faults as a matter of great consequence; for faults are a deadly enemy.



ரு. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

பரி:—(இ - ள்.) குற்றம் வாக்கடவதாகின்ற முற்காலத்திலே † அதனைக் காவாத அரசன் வாழ்க்கை ‡ அது வந்தால் ¶ எரிமுகத்துநின்ற வைக்கூவைபோல அழிந்துவிடும், (எ-று).

* இதன்பொருள். (ஒருவன்) கெட்டெதற்கரிய நற்குணங்களைச் சம்பாதிப்பதனால் (தன்னிடத்தில்) நீமை (வராதபடி அத்நீமையைக்) காக்கக் கடவன் என்பது.

† அதனைக்காவாத - குற்றத்தைத்தடுக்காத. ‡ அது - குற்றம்.

¶ எரிமுகத்துநின்ற - நீமுன்பட்ட.

குற்றமென்பது அதிகாரத்தான் வந்தது. முன்னென்றதனீற்றது பகுதிப்பொருள்விகுதி. வருமென்னும் பெயரெச்சம் * முன்னென்னுங் காலப்பெயர்கொண்டது, † அதனைற் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றஞ் சிறிதாயினும் அதனைற் பெரிய செல்வம் அழிந்தேவிடுமென்பது ‡ உவமையாற் பெற்றும்.

தேவி.—(இ-ள்.) வருமுன்னர் - (குற்றம்) வருவதன்முன்னே, காவாதான் (அக்குற்றதனை) காவாத அரசனது, வாழ்க்கை - வாழ்க்கையானது, (அது வந்தால்), எரிமுன்னர் - தீமுகத்து, (நின்ற), வைத்தூறுபோல-வைக்கோலின் கூட்டம்போல, கெடும் - அழிந்தவிடும், (எ - று).

குற்றமென்பது குறைறங் கடிதலென்னும் அதிகாரநோக்கி வருவிக்கப்பட்டது. முன்னரென்பதன் ஈற்றிலுள்ள ஆரென்பது பகுதிப்பொருளே யுணர்த்தியவிகுதி. வரும் என்னும் எதிர்காலப பெயரெச்சம முன்னர் என்னும் காலபபெயரைக்கொண்டு முடிந்தது முன்னரென்றதனால (குற்றத்தை)காத்தலாங் காலம் பெறபபட்டது. குற்றம் சிறியதாயிருந்தாலும் அதனால் பெரிய செல்வம அழிந்தே விடுமென்பது 'எரிமுன்னர் வைத்தூறு போல' என்னும் உவமானதினால் பெறப்பட்டது.

(க-து.) குற்றம் வருமுன்னே அதனைக் காத்துக்கொள்ளாதவனது வாழ்வு அது வந்தபோது ஒருமிக்கக் கெடுமென்பது.

5. The prosperity, of him who does not timely guard against faults, will perish like straw before fire.

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

பரி:—(இ - ள்.) முன்னரீத் தன்குறற்றத்தைக்கண்டு கடிதீத்து பின்னர்ப் பிறர்குறறங் காணவல்லரெயின் அரசனுக்கு யாதற்றமாயது?

அரசனுக்குத் தன்குற்றங் கடியாவழியே பிறர் குற்றங்கடிதல் குறறமாம்; அதிகடிந்தவழி முறை செய்தலாமென்பார் 'என் குற்றமாகும்' என்றார். எனவே, தன்குற்றங் கடிந்தவனே முறைசெய்தற் குரியவனென்ப

காலப்பொருளையும் இடப்பொருளையு முணர்த்தும் முன் என்னும் இடைச்சொல் இங்குக் காலப்பொருளை யுணர்தலிப் பெயர்த்தன்மைப் பட்டு நின்றது.

† அதனைற் காக்கலாங்காலம் பெறப்பட்டது-முன்னர் என்னுமதனால் குற்றம் வாராமல் காக்கும் காலமபெறப்பட்ட தென்பது. [குற்றம் வருவதற்கு முன்னே அதுவாராமல் முயலவேண்டுமென்பது கருத்து.]

‡ ஒருப்புச் சிறிதாயிருந்தாலும் அதனைற் பெரிய வைக்கோற்போர் அழிந்து விடுவதுபோன்று குற்றம் சிறிதாயிருந்தாலும் அதனைற் பெரிய செல்வமும் அழிந்துவிடுமென்பதாம்.

தாயிற்று. இவை நான்குபாட்டானும் * அவற்றது கடிதற்பாடு பொது வகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப.

தேவி:—(இ - ள்.) தன்குற்றம்-(முன்னே) தனதுகுற்றத்தை, நீக்கி-(கண்டு) ஒழித்து, பிறர்குற்றம்-(பின்னே) பிறரதுகுற்றத்தை, காண்கிற் பின் - காண வல்லவனுனல், இறைக்கு - அரசனுக்கு, ஆகும்-ஆகக்கடவ தாகிய, குற்றம்—,என் - யாது, (ஒன்றுமில்லை), (எ - று).

அரசனுக்குத் தன்குற்றத்தை யொழிக்காத விடத்தே பிறரதுகுற்றத் தை யொழித்தல் குற்றமாகும்; அக்குற்றத்தை யொழித்தவிடத்து முறை செய்தலாகு மென்பார் 'என் குற்றமாகும்' என்றார் எனவே, தன் குற்றத் தை யொழித்தவனே முறைசெய்தற்கு உரியனெனபதாயிற்று. இவை நான்கு பாட்டாலும் அக்குற்றங்களை யொழித்தலின் தன்மை பொதுவகை யினுல் சொல்லப்பட்டது. இனிச்சிறப்புவகையாற் கூறுவார். முறை-நீதி.

(க - து.) தனது குற்றத்தைக் கண்டொழித்துப்பிறரது குற் றத்தைப் பார்ப்பவனுக்கு யாதொரு குற்றமு முண்டாகாது.

6. What fault will remain, in the king who has put away his own evils, and looksafter the evils of others.

எ. செபற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

பரி:—(இ - ள்.) பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படு மவ ற்றைச் செயதுகொள்ளாது அதன்கட பற்றுள்ளஞ் செய்தானது செல் வம் பின் உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும், (எ - று).

செயற்பாலவாவன :- அறம் பொருளின்பங்கள். பொருளாற்பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது † "பொன்னி னுகும் பொரூபடை யப் படை, தனனி னுகுந் தாரணி தாரணியிற். பின்னே யாதும் பெரும்பொரு ளப்பொரு, ளென்னுங் காலைத்தன் னுதன வில்லையே" என்பதனுனறிக.

* அவற்றது - காமம் வெகுளி முதலிய குறறங்களது, கடிதற்பாடு- நீக்குதலின் தன்மை.

† சிவஞானசாமணி விமலையாரிலம்பகம், 35. இதன்பொருள். பொரு ளினுல் போர் செய்தற்குரிய சேனை லிருதத்தியாகும்; அசேனையினுல் இராஜ்ஜியம் விருத்தியாகும்; அவ்விராஜ்ஜியத்தினுல் பிறகு மிகு பொருள் விருத்தியாகும்; அப்பொருள் கைகூடுமளவில் அடையாதன வையுமில் லை என்பது "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியுமென" என்று திருக்கோவையார் கூறுவதாலும், பொருளே அறமுதலிய வெல்லா வற்றிற்குங் காரணமா யிருக்கின்றதென்பது இனிதுவிளங்கும். முதலிபெ றுவதற்குப் பொருளே விதையு மொருகாரணமா மென்பதிங் கூகித்துணர் தற் பாலது.

அறஞ் செய்யாமையாலும் பொருள் பெருக்காமையாலும் 'உயற்பால தன்றி' என்றும், இன்பப்பயன் கொள்ளாமையாற் 'கெடும்' என்றும் கூறினர். † உயற்பாலதின்றியென்று பாடமோதுவாரு முளர்.

தெளிவுரை:—(இ-ள்.) செயற்பால - (பொருளால் தனக்குச்) செய்து கொள்ளப்படுவனவற்றை, செய்யாது - செய்துகொள்ளாமல், இவறியான்-(அப்பொருளினிடத்து) உலோபஞ் செய்தவனது, செல்வம்-செல்வமானது, உயற்பாலதன்றி-(பின்) உள்ளதாகும் பகுப்பினதன்றி, கெடும் - (வீணாகக்) கெடும், (எ-று).

செய்துகொள்ளப்படுவனவன:- அறம் பொருளின்பங்கள். பொருளால் பொருள் செய்தலாவது பொருளை விருத்தியாக்குதல். செல்வமானது அறத்தைச் செய்யாமையாலும் பொருளை விருத்தி செய்யாமையாலும் 'உயற்பாலதன்றி' என்றும், இன்பப்பயனை யநுபவியாமையால் 'கெடும்' என்றும், சொல்லினர்.

(க-து) தனக்குச் செய்துகொள்ளப்படுவனவற்றைச் செய்யாது உலோபஞ்செய்தவனது செல்வம் விரைவிலழியும் என்பது.

7. The wealth of the avaricious man, who does not expend it for the purposes for which he ought to expend it, will waste away and not continue.

அ. பற்றுள்ள மென்னு மிவறன்மை யேற்றுள்ளு
மேண்ணப் படுவதோன் றன்று.

பரி:—(இ- ள்.) பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யு மழுக்காறாகிய உலோபத்தினது தன்மை தூற்றத்தன்மைகளை யெல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவதொன்றன்று, மிகக்கடியது, (எ-று).

(செல்வம்) அறஞ்செய்யாமையாலும் (இம்மைப்பயன் மறுமைப் பயன் வீடு என்னும் மூன்றையும் தரும் தருமத்தைப் பொருளைக்கொண்டு செய்யாமையாலும்) பொருள் பெருக்காமையாலும் (பொருள் சம்பாதித்தற்குரிய முயற்சிசெய்து பொருளை விருத்திசெய்யாமையாலும்) 'உயற்பாலதன்றி' (பின்னுளதாகும் பான்மையதல்லாமல்) என்றும், இன்பப் பயன் கொள்ளாமையால் (பொருளால் இவ்வுலகத்திற்குரிய இன்பமாகிய பயனை யநுபவியாமையால்)(வீணே) 'கெடும்' என்றும் கூறினரென்பது. அறஞ்செய்யாதவர்களது பொருள் பின்னுளதாகாது பலவழியாலும் ஒழிவதாயிருத்தல் பற்றி 'அறஞ்செய்யாமையானும்' என்றும் கூறப்பட்டது. இதனால் பொருளினால் தனக்கு அறம் பொருளின்பங்களைச்செய்துகொள்ளாதவனுக்கு யாதொரு புருஷார்த்தமு மில்லையென்பது பெற்றமென்க.

† உயற்பாலதன்றி என்பதற்குப் பிரதியாக உயற்பாலதின்றி என்றும் பாடமுண்டு; அதற்குப் பொருள், பின்னுளதாகும்பான்மைய தில்லாமல் என்பது.

இவறலது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்தித் தான் மேற்படவல்ல வியல்பு. † ஒழிந்தன அதுமாட்டாமையின் 'எற்றுள்ளு மெண்ணப் படுவதொன் றன்று' என்றார். ‡ எவற்றுள்ளு மென்பது இடைக்குறைந்து நின்றது. இவை யிரண்டு பாட்டானும் உலோபத்தின் நீமை கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) பற்றுள்ளமென்னும்-(பொருளே விடத்தகுமிடத்து விடாது) பற்றுதலேசெய்யும் உள்ளமாகிய, இவறன்மை-உலோபத்தினது தன்மையாவது, எற்றுள்ளும்-குற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும், எண்ணப்படுவது - (வைத்தி) எண்ணப்படுவது, ஒன்றன்று-ஒன்றல்ல, (மிகுந்தாம்), (எ-று).

உலோபத்தின தன்மையாவது நற்குணங்களெல்லாம் ஒருமித்திருப்பனவாஞலும் அவற்றைக் கீழ்ப்படுத்தித் தான்மேற்படவல்ல வியல்பு. ஒழிந்த தீக்குணங்கள் அது செய்யமாட்டாமையால் 'எற்றுள்ளு மெண்ணப் படுவதொன் றன்று' என்றார் எவற்றுள்ளு மென்பது எற்றுள்ளும் என்றாயது இடைக்குறை விகாரம். இவை பிரண்டுபாட்டாலும் உலோபத்தினது நீமை சொல்லப்பட்டது

(க-து.) தீக்குணங்களிற் சிறந்தது உலோபமாம் என்பது.

8. Griping avarice is not to be reckoned as one among other faults; it stands alone—greater than all.

¶ வியவற்க வெஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

பரி:—(இ-ள்.) தான் இறப்ப வுயர்நீதருவான்றும் மதத்தாற் றன்னை நன்குமதியாதொழிக; தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாதொழிக, (எ - று).

தன்னைவியத்தலி னிடமுங் காலமும் வலியும் அறியப்படாமையாலும், அறனும் பொருளு மிகழப்படுதலாலும், எஞ்ஞான்றும் வியவற்க எனலும், கருதியது முடிதலே விவேகமென்று அறம் பொருளின்பங்கள்

† ஒழிந்தன அதுமாட்டாமையின் - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமென்னப்பட்ட தீக்குணங்களாதலுள், உலோபம் ஒழிந்த மற்றைய குணவகள் நற்குண மெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித் தாம் மேற்படும் தன்மையைச் செய்யமாட்டாமையினால்.

‡ எவற்றுள்ளும் என்பது எற்றுள்ளும் என இடையிலே வகரங் குறைந்து நின்றது.

¶ "தன்னை வியப்பிப்பான் றாழ்புகழ்த நீச்சுடர், தன்னீர் சொரிந்து வளர்த்தற்றுற்-றன்னை, வியவாமை யன்றே வியப்பாவ தின்பம், வியவாமை யன்றே யிவம்" என்பது நீதிநெறிவிளக்கம்.

பயவாவினைகளை யேப்பின் அவற்றுற் பாவமும் பழியுங் கேடும் வருமாக லின், அவற்றை 'நயவற்க' என்றுங் கூறினர். இதனுள் † மதமானங் களின் தீமை கூறப்பட்டது.

நேளி:—(இ-ன்.) எஞ்ஞான்றும் - ஏக்காலத்திலும், (தான் மிகவும் உயர்ந்த காலத்திலும்), தன்னை வியவற்க - (மதத்தினால்) தன்னை நன்கு மதியாதிருக்கக் கடவன், நன்றி-(தனக்கு) நன்மையை, பயவாவினை-தாராத தொழில்களை, நயவற்க (மானத்தினால்) விரும்பாதிருக்கக் கடவன், (எ-று).

தன்னை நன்கு மதித்தவிடத்து இடமும் காலமும் வலியும் அறியப் படாமையாலும், அறமும் பொருளும் இகழப்படுதலாலும், எஞ்ஞான்றும் வியவற்க என்றும், நினைத்தகாரியதை முடித்தே விடுவேனென்ற அறம் பொருளின் பக்கலில் தாராததொழில்களை விரும்பினால் அத்தொழில்களால் பாவமும் பழியும் கேடும் வருமாகலால், அத்தொழில்களை 'நயவற்க' என்றும் சொல்லினர். இதனால் மதமானங்களினது தீமை சொல்லப்பட்டது.

(க-து.) தன்னை நன்கு மதித்தலையும் நன்மையைத்தாராத தொழில்களைச் செய்தலையும் ஒழிக்கவேண்டும் என்பது.

9 Let no king praise himself at any time; let him not desire to do useless things.

கo காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்

பரி:—(இ - ள.) தான் காதலித்த பொருள்களை ‡ அவர் அக்காத லறியாமல் அனுபவிக்க வல்லராயின், பகைவர் தன்னை வஞ்சித்துத் கெள்ளும் எண்ணம் பழுதாம், (எ-று).

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாம லுய்த்தால் வாயிலின்மையின் § வஞ்சிக்கப்படா னென்பதாம் ¶ காமம

† தன்னைவியத்தல் மதமாம்; நன்றிபயவாவினையை நயத்தல் மான மாம். ‡ அவர் - பகைவர்.

§ தான்விரும்பிய பொருள்களை யரசன் பகைவரறியாமல் அனுபவிப் பானுனல் அவ்வரசன் அப்பகைவரால் வஞ்சிக்கப்படானென்பது.

¶ காமம் வெகுளி உவகை யென்பன அரசருக்கு முழுது மொழிக்க தக்க குற்றங்க ளல்லாமையால் இக்குறளால் அவர் பெரும்பான்மைய தாகிய காமத்தைப் பகைவரறியாம லனுபவிக்கும் வகையைக் கூறி மற்றைச் சிறுபான்மையாகிய வெகுளி உவகைகளுக்குத் 'தினைத்தினையாங் குற்றம் வரினும்' என்னும் குறள் முதல் 'தன்குற்ற நீங்கி' என்னும் குறள் பரியந்தம் கூறியபொதுவகை விலக்கினையே மேற்கொண்டு விட்டாரென்ப தாம். இதனுல் அரசன் பெரும்பான்மையும் காமத்தைப் பகைவ ரறியாம லனுபவிக்கவேண்டு மென்பதும், வெகுளி உவகைகளைப் பெரும்பான்மை யும் ஒழிக்கவேண்டு மென்பதும் பெறப்படுகின்றன வென்க.


வெகுளி உவகை யென்பன முற்றக்கடியும் குற்றம் அன்மையின், இதனைப் பெரும்பான்மைத் தாகிய காமம் நுகருமாறு கூறி, ஏனைச் சிறுபான்மை யவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

தெளி:—(இ-ள்) காதல - (தான்) விரும்பியபொருள்களே, காதல் - (அவர்) அவ்விருப்பத்தை, அறியாமை-அறியாமல், உய்க்கிற்பின் - அனுபவிக்கவல்லவனுயின், ஏதிலார்-பகைவர், தூல்-(தன்னை வஞ்சிததற்கு எண்ணும்) எண்ணமானது, ஏதில-பழுதாம், (எ-று).

பகைவர் தான்விரும்பிய பொருள்களை அறிந்த விடத்து அவ்விரும்பிய பொருள்கள் வழியாகப் பிரவேசித்து (தன்னை) வஞ்சிப்பாராதலால், (அவர்) அப்பொருள்களை அறியாம லனுபவிததால் அப்பகைவர் பிரவேசிப்பதற்கு வழி யில்லாமையிஞல அரசன் அவரால் வஞ்சிக்கப்படாணெண்பதாம்.காமம் வெகுளி உவகை என்பன முழுதுமொழிகளுங் குற்றமல்லாமையிஞல், இதனுல் பெரும்பான்மையதாகிய காமத்தை யனுபவிக்கும் வகையைச சொல்லி,மற்றைச் சிறுபான்மையாகிய வெகுளி உவகைகளுக்குப் பொதுவகையாகக் கூறிய விலக்கினையே மேற்கொண் டொழிந்தார். வஞ்சித்தல்-கெடித்தல்.

(க-து) தான் விரும்பிய வற்றைப் பகைவரறியாம லனுபவிக்கு மரசன் அப்பகைவரால் வஞ்சிக்கப்படான் என்பது.

10. If a king enjoys privately the things which he desires, the designs of his enemies will be useless



ஏழாம் அதிகாரம்.

பெரியாரைத் துணைக்கோடல்.

On Procuring the Aid of Great Men

பரி:—அஃதாவது ழவிருதுற்றழும் முறைமையிற் கடிதலிற் காவற் சாகாடு உகைத்தற்தூரியறைய அரசன் நீநெறிவிலக்கி நன்னெறிச்செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக்கோடல். † அதிகார முறைமையும் இதனுனே விளங்கும் பேரறிவுடையாராவார் அரசர்க்கும் ‡ அங்கங்கட்கும் ¶ மாணுடத்தெய்வகீ குற்றங்கள் வாராமற் காத்தற்

† அதிகார முறையும-குற்றங்கடிதலின் பின் பெரியாரைத் துணைக் கோட லென்னும் அதிகாரம் வைதத முறையும்.

‡ அங்கங்கள் - அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென் பன.

¶ தெய்வமானுடக் குற்றங்கள் என்றும் பாடமுண்டு. தெய்வத்தாலும் மானுடராலும் வருங் குற்றங்களே இவ்வதிகாரதின் இரண்டாவது குறளி னுரையிற் காண்க,

தரிய † அமைச்சர், ‡ புரோகிதர்.

தெளி:—அரீதாவது காமம் வெகுளி கடும்பற்றுள்ளம் மானம் உவகை மதமெனப்படும் மூவிரு (அறுவகைக்) குற்றங்களேயும் முறைமைப்படியொழித்தலால் ஆக்கினை சக்கரத்தைச் செலுத்துதற் குரியவனுன அரசன் தன்னைத் தீயவழியிற்செல்லாவாறு விலக்கி நல்வழியிற் செலுத்தும் பேரறிவுடையவரைத்தனக்குத் துணையாகக் கொள்ளுதல். அதிகாரமுறைமையும் இதனுலேவிளங்கும். பேரறிவுடையவராவார் அரசருக்கும் அங்கங்களுக்கும் மாதாடாலும் தெய்வத்தாலும் குற்றங்கள் வாராமல காத்தற்குரிய அமைச்சர், புரோகிதர். முறை-நீதிநூல்.

க. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

பரி:—(இ - ள்.) அறத்தினது நுண்மையைய அறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை அரசன் அதனது அருமையை ஓர்ந்து கொள்ளுந் திறமறிந்து கோள்க, (எ - று).

அறதுண்மை நூலானேயனறி உய்த்துணாவாலும் அறியவேண்டுதலின் 'அறனறிந்து' என்றார். மூத்தல் - அறிவாலும் சீலத்தாலும் காலத்தாலும் முதிர்தல். அறிவுடையார் - நீதியையும் உலகியலேயும் அறிதலேயுடையார். திறனறிதலாவது ஒன்தமதிதல், உயரச்செய்தல் - ¶ அவரவரை நிற்றலென்பன $ முதலாக () அவர் பிணிப்புண்ணுந் திறனறிந்து செய்தல்.

தெளி:—(இ - ள்.) அறனறிந்து - அறத்தினது நுட்பத்தையறிந்து, மூத்த - (தன்னின்) மூத்த, அறிவுடையார் - அறிவுடையாரது, கேண்மை - நட்பை, தேர்ந்து - (அரசன் அரசுட்பிலது அருமையை) ஆராய்ந்தறிந்து, திறனறிந்து-(கொள்ளுந்) திறத்தையறிந்து, கொளல் - கொள்க்கடவன்.

தருமத்தினது நுட்பத்தை சாஸ்திரங்களின் வாயிலாக வறிதலேயல்லாமல் உலகநடையை யாராய்ந்தறிதலாலுமறியவேண்டுதலால் 'அறனறி

† அமைச்சர் - மந்திரிகள்.

‡ புரோகிதர் - பின்வருவன வற்றை முன்னறிந்து சொல்பவரும் ஈருத்தியஞ் செயவிப்பவருமாகிய பிராமணர்கள். "மந்திரியர் புரோகிதர் சேனை பதியர், தந்திரத் தூதர் சாரண ரென்றிவர், அந்தமி லாசாக் கைம்பெருங் குழுவே" என்பது பிங்கலகண்டை.

¶ அவரவரை நிற்றல் - அறிவுடையார் கூறிய எல்லையில் இருத்தல்.

$ முதலாக என்றதனுல் தவறியபோது அவரால் கண்டிக்கப்படுதலே யேற்றுக்கொள்ளுதல், என்றும வணக்கமுடையனுயிருத்தல் முதலிய வற்றையும் கொள்க.

() அவர் பிணிப்புண்ணுந் திறனறிந்து செய்தல் - அறிவுடையார் தனக்குக் கட்டுப்படும் வகையைத் தெரிந்து செய்தல். [பிணிப்புண்டல் - அன்பினுல் நீங்காமலிருத்தல்.]

ந்து' என்றார். மூத்தல் - அறிவாலும் சீல (ஆசார)த்தாலும் காலத்தாலும் முதிர்தல். அறிவுடையார் - நீதியையும் உலகியலையும் அறிதலையுடையவர். திறனறிதலாவது (அரசன் அவரை) நன்கு மதித்தல், உயர்செய்தல், அவர் சொல்வழி நடத்தல் என்பன முதலாக வுள்ளவற்றை அவர் தனக்கு வசமாகுந்திறத்தையறிந்து செய்தல்.

(க-து.) அரசன் அறத்தினது மாட்சிமைத்தை ஆராய்ந்தறிந்து, கன்னின் மூத்த அறிவுடையாரை நெருங்கத்தைக்கொள்ளும்வகையைத் தெரிந்து கொள்ளக்கடவன் என்பது.

1. Let a king ponder well its value, and secure the friendship of men of virtue and of mature knowledge.

௨. உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்.

பரி:—(இ - ள்.) தெய்வத்தாலாகிய மக்களாலாகத் தனக்குவந்ததுன்பங்களை நீக்கியும் நேர்ந்து நீக்கிய பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை அரசன் அவருவப்பன செயது துணையாகக் கொள்க, (எ - று).

தெய்வத்தான்வருந் துன்பங்களாவன: மழையின் இன்மை மிகுதிகளாலும், நாற்றுத † தீப்பிணி யென நிலவற்றினும் வருவன. அவை கடவுளரையும் ‡ தக்கோரையும் நோக்கிச செய்புஞ் ¶ சாந்திகளான் நீக்கப்படும். மக்களான்வருந் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெயவாரென்றிவர்களான் வருவன அவை $ சாமம் () பேதம் [] தானம் ‖ தண்டங்களாகிய நால்வகை உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை * உற்பாதங்களாலறிந்து அச்சாந்திகளாற காத்தலும், மக்களால் வருவனவற்றை அவர் குணமை, இங்கிதம், ஆகாரம், செயலென்பனவற்றுன் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றுற் காத்

† தீப்பிணி - நெருப்பும் நோயும்.

‡ தக்கோர் - கல்வியறிவு ஒழுக்கங்கள் நிரம்பிய அந்தணர் முதலியோர்.

¶ சாந்தி - தோஷநிவாரண கர்மம்; அஃது ஓமம், ஜபம், அர்ச்சனை, நமஸ்கார முதலாயினவாம்.

$ சாமம் - சமாதானத்தினுல் காரியங்கொள்ளுதல்.

() பேதம் - ஒருவருடன் மற்றொருவரைச் சேராவாறு பிரித்துக் காரியங் கொள்ளுதல.

[] தானம - பொருள்கொடுத்துக் காரியங்கொள்ளுதல்.

‖ தண்டம் - படைகொண்டு வருத்துதலால் காரியங்கொள்ளுதல்.

உற்பாதம் - துர்நிமித்தம்; அஃதாவது பின்னிகழும் நிங்கை முன்னறிவிக்கும் குறி.

தலுமாம். † ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவாறுயிற் று. இவ்விதம் ‡ குறிப்பான் நிகழும் உறுப்பின் தொழில். ஆகாரம் - குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன - ன்குமதித்தன் ¶ முதலிய ன. இவை யிரண்டுபொட்டாலும்பெரியாரதி இலக்கணமும், அவரைத்துணை யாகக் கோடல் வேண்டுமென்பதனாலும், கொள்ளுமாறுங் கூறப்பட்டன.

தெளி:—(இ-ன்.) உற்ற - (தெய்வத்தாலாவது மனிதராலாவது தன க்கு) வந்த, நோய் - தின்பங்களே, நீக்கி - (நீக்கும்விதத்தையறிந்து) நீக்கி, உறுஅமை - (பின் அத்தன்மையனவாய தின்பங்கள்) வாராதபடி, முற்காக் கும் - முன் (அறிந்து) காக்கவல்ல, பெற்றியார் - தன்மையினையுடையா ரை, பேணி - (அவர்) மகிழத்தக்கனவற்றைச் செய்து, கொளல் - (அரச ன் துணையாகக்) கொள்ளக்கடவன், (எ-று).

தெய்வத்தால்வருந் தின்பங்களாவன: மழையில்லாமையாலும், அதிக மழையாலும், காற்று, தீ, பிணி என்ற இவற்றாலும் வருவன. அத் தின்பங்கள் கடவுளரையும் தக்கோரையுட் தோக்கிச் செய்யுஞ் சாந்திகளால் நீக்கப்படும். மக்களால்வருந் தின்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், தொழில் செய்வார் என்ற இவர்களால் வருவன. அத்தின்பங்கள் சாமபேத தான தண்டங்களாகிய நால்வகை யுபாயத்தின் தக்கவுபா பத்தால்நீக்கப்படும். மூற்காத்தலாவது தெய்வத்தால் வருந்துன்பங்களே உற்பாதங்களால் அறிந் து அச்சாந்திகளால் காத்தலும், மனிதரால் வருந்தின்பங்களே அவர தி குணம் இன்னிதம் ஆகாரம் செயல் என்பனவற்றால் அறிந்து அந்நால்வகை யுபாயங்களுள் ஒன்றால் காத்தலும் ஆம். ஆகவே, புரோகிதரையும் மந்திரி களையும் சொல்லியபடியாயிற்று. இவ்விதம் - குறிப்பால் உண்டாகும் அவ யவத்தினது தொழில், ஆகாரம்-குறிப்பில்லாது உண்டாகும் (உடம்பின்) வேறுபாடு. மகிழத்தக்கன-ன்குமதித்தல் முதலாயின. இவையிரண்டு பா ட்டாலும் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கொள்ள வேண்டுமென்பதும், துணைக்கொளலும் விதமும் சொல்லப்பட்டன. காத் தல் - நீக்குதல்

(க-து) தின்பங்களே நீக்கும்விதமறிந்து நீக்கி, பின் அத்துன் பங்கள் வாராமல் தன்னைக் காக்கவல்ல பெரியாரை அரசன் துணை யாகக் கொள்ளக் கடவன்என்பது. (உ)

† தெய்வத்தால் வரும் தின்பங்களைச் சாந்திசெய்து நீக்குபவர் புரோகிதராயும், மக்களால் வரும் தின்பங்களே நால்வகையுபாயத்தின் ஒன்றால் நீக்குபவர் அமைச்சராயும் இருத்தலால் 'ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறுயிற்று' என்று கூறப்பட்டது.

‡ குறிப்பான் நிகழும் உறுப்பின்தொழில் - தனது கருத்தைத் தன் னுடு சேர்த்தவர் குறிப்பாகவறிந்து கொள்ளுமாறுண்டாகும் கண்முதலிய அவயவங்களின் தொழில். அஃதாவது கண்சிமிட்டல், தலையைச்சொரி தல் முதலியனவாம்.

¶ முதலியன என்றதனால் - உயரச்செய்தல், அவர்வரை நிற்றல் முதலியவற்றையுங் கொள்க.

2. Let a king procure and kindly care for men who can overcome difficulties when they occur and guard against them before they happen.

ஈ. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பரி:—(இ - ள்.) அப்பெரியவர்களே அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல் அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது, (எ - று).

உலகத்து அரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு † இப்பேறு சிறந்த தென்றது, ‡ இதனால் ஆவையெல்லாம் உளவாதலுணர்த்தி.

தெளி:—(இ - ள்.) பெரியாரை-அப்பெரியவர்களே, பேணி - (அவர்) மகிழத்தக்கனவற்றை யறிந்து செய்து, தமரா - தமக்குச் சிறந்தவராக, கொளல் - கொள்ளுதல், (அரசர்க்கு), அரியவற்றுளெல்லாம் - அரியபேறுகள் எல்லாவற்றுள்ளும், அரிது - அருமையுடையதாம், (எ - று).

உலகத்துள்ள அரிய பொருள்களெல்லாவற்றையும் பெறுதற்குரிய அரசர்க்கு(பெரியாரைப் பேணித்தமராகக் கொள்ளும்)இப்பேறு சிறந்ததென்று கூறினது, இதனால் அவையெல்லாம் உண்டாதலைக் குறித்தென்க.

(க - து.) அரசர் பெரியவர்களே அவர் மகிழத்தக்கனவற்றைச் செய்து தமக்குச் சிறந்தவராகக்கொண்டொழுகுதல் அவர் பெறும் பேறுகளெல்லாவற்றுள்ளும் சிறந்ததாம் என்பது.

3. To cherish great men and make them his own, is the most difficult of all difficult things.

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

பரி:—(இ - ள்.) அறிவு முதலியவற்றால் தம்மின்மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்றொழுகுதல் அரசர்க்கு எல்லா வலியுடைமையினுந் தலை, (எ-று).

¶ பொருள், படை, அரண்களாலுள்ள வலியினும் இத்துணைவலி

† இப்பேறு-இதனைப் பெறுவது.

‡ இதனால் அவையெல்லாம் - பெரியாரைப் பேணித்தமராகக்கொள்ளும் பேற்றினால் உலகத்து அரியனவெல்லாம்.

¶ பெரியவர் பொருள் படை அரண்களால் நீக்கப்படாத தெய்வத்தன்ப முதலியவற்றையும் நீக்குதற்குரியவரா யிருத்தலால். அரசருக்குப் பொருள் படை முதலியவற்றாலுண்டாகும் வலியினும் பெரியவரைத் துணைக் கொள்ளுதலாகிய துணைவலி சிறந்ததென்பதாம்.

சிறந்ததென்றது, இவர் அவற்றுளீக்கப்படாத † தெய்வத்தன்ப ‡ முதலி யனவும் நீக்குதற்கு உரியராகலின்.

தெளி:—(இ - ன்.) தமிற்பெரியார் - (அறிவு முதலியவற்றால்) தம் மைப்பார்க்கிலும் மிகுந்திருப்பவரை, தமரா - தமக்குச் சிறந்தவராக, (கொ ண்டு), ஒழுகுதல்-(தாம் அவர் வழியில்நின்று) நடத்தல், (அரசர்க்கு), வன் மையுமெல்லாம் - வலியுடைமை யெல்லாவற்றிலும், தலை - முதன்மை யானதாம், (எ - று).

பொருள், படை, அரண்களாலாகிய வலியிலும் (பெரியாரைத்துணைக் கொள்ளுதலாகிய) இதுதுணைவலி சிறந்ததென்றது, இப்பெரியார் பொரு ள் முதலியவற்றால் நீக்கப்படாத தெய்வத்தன்ப முதலியவற்றையும் நீக்கு தற்கு உரியவராதலாலெனக.

(க - து.) அரசர் தம்மைப்பார்க்கிலும் அறிவுமுதலியவற்றால் மேம்பட்டுள்ள பெரியோரைத் தமக்குச் சிறந்தவராக நினைந்து நடாயுகுதல் அவர்க்குச் சிறந்த துணையாம்என்பது.

4 So to act as to make those men, his own, who are greater than himself, is of all power the highest.

---

9. சூழ்வார் கண்ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

பரி:—(இ - ள்.)¶ தன்பாரம் §அமைச்சரைக் கண்ணுக்கொண்டு நடத்தலான், அரசன் அத்தன்மையராய அமைச்சரை பாராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க, (எ-று).

இரண்டாவது விகாரதத்தாற்சொல்லுகது. தானே சூழ வல்லனாயினும், அளவிறந்த தொழில்களான் ஆகுலமெய்தும் அரசன்பாரம், அதுவீவ தொ ழிலாய அமைச்சரான் அல்லது இனிது நடவாமை பற்றி, அவரைக் கண்

† தெய்வத்தன்பம் - தெய்வத்தால் வரும்துன்பம்.

‡ முதலியன என்றது - மக்களால்வரும் துன்பத்தை.

¶ தன்பாரம் - தனதரசுரிமைப் பொறுப்பு (தனது ராஜ்யபாரம்).

§ அமைச்சர் அரசனுக்குக் கண்போலிருந்து அவனைக்காத்தலால், அர சன், அல்லமைச்சரைக் கண்ணுக்கொள்ளவேண்டியதாயிற்று. கண்ணில் லாதவன் ஒன்றையும் பார்க்க முடியாமைபோல அமைச்சரைக் கண்ணுக்கொள்ளாத அரசன் தனது இராஜ்ய விஷயங்களிலொன்றையும் செவ்வை யாக அறியாதவனுவனென்க. 'ஒற்றர் தங்கோ'' என்னுஞ் சிவஞ்ஞா மணிச் செய்யுளிலுள்ள 'கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்'' என் னு மடிக்கு நச்சினார்க்கினியர் 'நீதிநூல்கற்ற அமைச்சரைக் கண்ணென்று கோடலும்'' என்று பொருளுரைத்திருப்பது மிகுதியுத்தக்கதாம்.

ணைக் கூறினர். ஆராய்தல் - அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கண த்தின சொன்பதனேயாராய்தல். இவை மூன்று பாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) சூழ்வார் - மந்திரிகளே, கண்ணுக - கண்ணுகக் (கொண்டு), ஒழுகலால் - (தனபாரம) நடத்தலால், மன்னவன்-அரசன், சூழ் வாரை - அத்தனமையராய மந்திரிகளே, சூழ்ந்து - ஆராய்ந்து, கொளல்- (தனக்குத் துணேயாகக்) கொள்ளக்கடவன், (எ - று).

சூழ்வாரை யென்னும (ஐயென்னும்) இரண்டனுருபு செய்யுள் விகா ரத்தால் தொக்குநின்றது. தானே ஆராயவல்லவனுயிருந்தாலும், அளவில் லாத தொழில்களால் வருத்தமடையும அரசனதுபாரம, அவ்வாராய்த லொ னறையே தொழிலாகவுடைய மந்திரிகளால் அல்லாமல் இனிது நடவா மைபற்றி, அமமந்திரிகளேக் கணணுகச் சொல்லினர். ஆராய்தல்-அமைச் சியலில் சொல்லப்படுகிற இலக்கணமுடையவரென்பதனே ஆராய்தல். இவை மூன்று பாட்டாலும் பெரியாரைத் துணேக்கொள்ளுதலின் சிறப்புக சொலலப்பட்டது.

(க - து.) அரசன் மந்திரிகளேத் தனக்குக் கண்ணுகக்கொண்டு இராஜ்யபாரத்தையறிந்துநடத்தவேண்டியவனுயிருக்தலின், அவர் களேயாராய்ந்து தனக்குக தகதுணேயாகக் கொள்ளகடவன்என்பது.

5. As a king must use his ministers as eyes in managing his kingdom, let him well examine their character and qualifications before he engages them.



சு. தக்கா ரினத்தனேய்த் தானெழுக வல்லானேச்
செற்றூர் செயக்கிடந்த தில்.

பரி:—(இ- ள்.) தக்காராகிய வினத்தை யுடையனுமித் தானும் அறிந்தொழுகவல்ல அரசனேப் பகைவர் செய்யக் கிடந்ததோரு துன்ப மும் இல்லே, (எ - று).

தக்கார் - அறிவொழுக்கங்களால் தகுதியுடையார். ஒழுகுதல்-‡ அற நூல்களின்நெறி வழுவாமல் நடத்தல். $ வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வேறு பகைவிளேத்தலென் றிவற்றுனும், வலியானும், பகைவர் செய்யுந் தண்பங்கள் பலதிறத்தவாயினும், தானுமறிந்து அறிவார்சொல்லுங் கொ ண்டொழுகுவான்கண அவற்றுள் ஒன்றும் வாராதென்பார் 'செற்றூர் செ யக்கிடந்த தில்' என்றார்.

† அமைசசதிகார முதல் அலையஞ்சாமை யதிகார மீறுயுள்ள பத ததிகாரக்களில் அமைசசியல் சொல்லப்பட்டிருக்கின்றது.

‡ அறம் - தருமசாஸ்திரம.

$ வஞ்சித்தல் - தனது பொருளே வஞ்சனேயாகக் கவருதல்.

தெளி:—(இ - ள்.) தக்காரினத்தனும் - யோக்கியராகிய இனத்தினை யுடையவனும், தானுமுக - தானும் (அறிந்து) நடக்க, வல்லானை - வல்ல அரசனை, செற்றார்-பகைவர், செயக்கிடந்தது-செய்யக்கிடந்த தொருதன் பமும், இல் - இல்லை, (எ - று).

தக்கார்-அறிவொழுக்கங்களால் தகுதியுடையவர். ஒழுகுதல்-அதனால் நீதிநூல்கள் கூறியவழியில் தவறுத நடத்தல். வஞ்சித்தல், கூடினவரைப் பிரித்தல், வேறுபகையுண்டாக்குதல் என்ற இவற்றாலும், வலிமையாலும், பகைவர் செய்யும் தின்பங்கள் பல கூறுபாடுடையனவானாலும், தானும் அறிந்து அறிந்தோரது சொல்லையும் உட்கொண்டு நடக்கு மரசனிடத்து அத்தின்பங்களுள் ஒன்றும் வாராதென்பார் 'செற்றார் செயக்கிடந்த தில்' என்றார்.

(க - து.) பெரியோரினத்தை யுடையவனும், தானும் ஆராய்ந்தொழுகவல்ல அரசனைப் பகைவர்வெல்லுதல்கூடாது என்பது.

6. There will be nothing left for enemies to do against him who has the power of acting so as to secure the fellowship of worthy men.

எ. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

பரி:—(இ - ள்.) தீயன கண்டால் நெருங்கிச்சொல்லுந் துணையாந் தன்மையை யுடையாரை இவர் நமக்குச் சிறந்தாரென்றறும் அரசரைக் கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தியாவர், (எ-று).

தீயன-† பாவங்களும் ‡ நீதி யல்லனவும். துணையாந் தன்மையாவது தமக்கு அலையின்மையும் அரசன்கண் அன்புடைமையுமாம். ¶ அத்தன்மையுடையார் நெறியினீங்க விடாமையின், அவரையாளும் அரசர் ஒருவரானுங் கெடுக்கப்படா ரென்பதாம். § தெருவகை சொல்லும் அளவினையை யென்றுரைப்பாரு முளர். இவை யிரண்டு பாட்டானும் (|) அதன் பயன் கூறப்பட்டது.

† பாவங்கள் - பாவத்தையுண்டு பண்ணுஞ் செயல்கள்; அவை மதுபானஞ் செய்தல், சூதாடல், பொய்பேசுதல் முதலியனவாம்.

‡ நீதியல்லன - தருமசாஸ்திரங்கள் சொல்லியவற்றுள் இக்காலத்திற்குப் பொருந்தாதனவற்றை யொழித்துச் சொல்லாதனவற்றுள் பொருந்துவனவற்றை மேற்கொண்டு உலகத்தோடு பொருந்த ஒழுகாது தான் விரும்பியவாறு செய்யுங் காரியங்கள்.

¶ அத்தன்மை யுடையார் - தீயனவின்மையும் அரசனிடத்து அன்புடைமையுமுடையார்.

§ இடிக்குந் துணையாரை என்பதற்கு நெருங்கிச் சொல்லும் அளவினையை யென்ற பொருள் கூறவாரு முண்டென்பது.

(|) அதன் பயன் - பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் பிரயோஜனம்.

தெளி:—(இ - ள்.) (தீயனவற்றைக் கண்டால்) இடிக்கும் - நெருங்கிச் சொல்லும் (மிட்டிக் கோபித்துப் புத்திசொல்லும்), துணையாரை - துணையாந் தன்மையை யுடையவரை, ஆன்வாரை - (இவர் நமக்குச் சிறந்தவரென்று கொண்டு) ஆளுகின்ற அரசரை, கெடுக்கும் தகைமையவர்-கெடுக்கும் பெருமையையுடைய பகைவர், யார் - (உலகத்தில்) யாவர், (ஒருவருமில்லை), (எ - று)

தீயன-பாவங்களும் நீதியல்லாதனவுமாம். துணையாந் தன்மையாவது தமக்கு அத்தீயன வில்லாமையும் அரசனிடத்து அன்புடைமையும் ஆம். அத்தன்மையுடையவர் (அரசனை) நல்வழியி னீங்கவிடாமையால், அவரை யாளுகின்ற அரசர் ஒருவராலும் கெடுக்கப்படா ரென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் அதன் பயன சொல்லப்பட்டது.

(க - து.) தீயனவற்றைக் கண்டால் அஞ்சாது நெருங்கிக் கண்டித்துப் புத்திசொல்லும் மந்திரிகளைத் துணையாகக்கொண்டு அரசாளும் அரசரைக் கெடுக்கும் பகைவரொருவருமில்லை என்பது.

7. Who are great enough to destroy him who has as his advisers those that have power to rebuke him?

அ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கேடும்.

பரி.—(இ - ள்.) † கழறுதற்குரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையிற் காவலற்ற அரசன் பகையாயிக் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும், (எ - று).

‡ இல்லாத எமரா என்பன பெயரெச்சவடுக்கு. கெடுப்பார் உளராவ ரென்பது தோன்ற, 'இலானும்' என்றார். தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச்சென்று கெடுதல்.

தெளி:—(இ - ள்.) இடிப்பாரை - கண்டித்துப் புத்தி சொல்லுதற்குரியவரை, இல்லாத--(தனக்குத் துணையாகக்) கொள்ளாமையால், எமரா-

† கழறுதல் - இடித்துக் கூறல்; அஃதாவது உறுதிசொல் லுரைத்தல்.

‡. இல்லாத என்னும் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமும் எமரா என்னும் எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சமும் "மூவா முதலாவுலகம்" "கற்ற கேட்ட பெரியோர்" என்றாற்போல அடுக்கி மன்னன என்னும் கருதாப் பெயர்கொண்டு முடிந்தன. "கழாக்கால்" என்பதனுள் கழுவாத என்னும் பெயரெசசம் கழா என்றும், தழாத்தொடர் என்பதனுள் தழுவாத என்னும் பெயரெச்சம தழா என்றும் வந்தாற்போன்று எமம்மருவாத என்னும் பெயரெச்சம எமரா என்று வந்ததென்க. [எமம்மருவாத என்பதற்குக் காவல் பொருந்தாத என்பது பொருள்.] இல்லாத எமரா என்னும் பெயரெச்ச மிரண்டனுள் இல்லாத என்பது கொள்ளாமையின் எனவினையெச்சப் பொருளில் வந்தமை யிங்குணர்தற் பாலதாம்.

காவலற்ற, மன்னன் - அரசன், கெடுப்பாரிலானும் - (பகையாகக்) கெடுப்பவர் இல்லையானாலும், கெடும் (தானே) கெடுவான், (எ - று).

இல்லாத என்னும் எதிர்மறைக குறிப்புப் பெயரெச்சமும் மை என்னும் ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெசசமும் அடுக்கி நின்றன. கெடுப்பார் உண்டாயிருப்ப தென்பது தோன்ற 'இலானும்' என்றார். (அரசன்) தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல வழியல்லாதவழியிற் சென்று கெடுதல்.

(க - து.) இடித்துரைக்கும் மந்திரிகளைத் தனக்குத் துணையாகக் கொள்ளாத அரசன் கெடுக்கும் பகைவரில்லாமற் போனாலும் தானே கெடுவான் என்பது.

8. The king, who is without the guard of men who can rebuke him, will perish, even though there be no one to destroy him.

கூ. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

பரி:—(இ - ள்.) முதற்பொரு ளில்லாத வணிகர்க்கு † அதனால் வரும் ஊதியம் இல்லையாம், அதுபோலத் தம்மைத்தாங்குவதாந் துணையில்லாத அரசர்க்கு ‡ அதனால் வரும் நிலையில்லை, (எ - று).

முதலைப் பெற்றே இலாபம்பெற வேண்டுமாறு போலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெற வேண்டுமென்பதாம். நிலை - அரசர் ¶ பாரத் தோடு சலியாது நிற்றல்.

தெளி:—(இ - ள்.) முதலிலார்க்கு - முதற்பொரு ளில்லாத வணிகர்களுக்கு, ஊதியம் (அதனால் வரும்) இலாபமானது, இல்லை - இல்லையாம், (அதுபோல்), மதலையாம் - (தம்மைத்) தாங்குவதாகிய, சார்பிலார்க்கு - துணையில்லாத அரசர்க்கு, நிலை - (அதனால் வரும்) நிலையானது, இல்லை.

முதற்பொருளைப் பெற்றே வணிகர் இலாபம்பெற வேண்டுமிதம் போலத் தாங்குவாரைப் பெற்றே அரசர் நிலைபெற வேண்டுமென்பதாம். நிலை-அரசர் தமது அரசாட்சியின் பாரத்தோடு அசையாது நிற்றல்.

(க - து.) தம்மைப் பாதுகாக்கும் மந்திரிகளைத் துணையாகப் பெறாத அரசருக்கு நிலைபெறுதலுண்டாகாது என்பது.

9. There can be no gain to those who have no capital ; and there can be no permanence to those who are without the support of adherents.

† *அதனால் - முதற்பொருளால்.* ‡ *அதனால் - துணையால்.* ¶ *பாரம் அரசுரிமைப் பொறுப்பு.*

கo. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பரி:—(இ-ள்.) தான் தனியனுயிவைத்துப் பலரோடும் பகை கொள்ளுதலிற் பதிற்றுமடங்கு தீமையுடைத்து ; அரசன் பெரியாரோடு நட்பினைக் கோள்ளா தொழிதல், (எ-று).

† பலர் பகையாயக்கால் ‡ "மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல், பேதசெய்து பிளந்திடல" என்பவையல்லது ஒருவகு வினையாக்குதல் நீது ; செய்தாலும் ஒருவாறாறு னுய்தல் கூடும், நல்லார் தொடர் கைவிட்டால ஒருவாற்றுனும் உயதல் கூடாமையின், இது செய்தல் அதனினும் தீதென்பதாம. இவை மூனறு பாட்டானும் ¶ அது செயயாதவழிப் படுகுற்றங கூறபபட்டது

தெளி:—(இ-ள்) (அரசன்) நலலா - பெரியவரோடு, தொடர் - நட்பினை,கைவிடல,கொளளா தொழிதல,(தான் தனியனுயிருந்துகொண்டு), பல்லார் - பலரோடும, பகைகொளலின் - விரோதங கொள்ளுதலைப்பார்க்கிலும, பதகெதித - பததுபபடுகு அதிதத, நீமைத்து - நீமையை யுடைய தாம், (எ - று).

பலர் பகையாய் ஒரு முகமாயெதிர்த்த காலதத்தித் தனக்குப் பகைவரா யுறவா யிருப்பாரிருவரைத தமமுன் வேற்றுமை யுண்டாக்கி ஒருவரைக் கொணடு மற்றவரை வெல்லுதல், தம்முள் வேறுபாடின்றிக கூடிவந்து போபுரிவாரைத தம்முளளே பிரித்து, ஒருவரைத்தன்னுடு சேர்ததுக் கொள்ளுதலென்பவை யல்லாமல், ஒருமிகுகப்போர் புரிதல் நீயதாம் ;

† அரசன தனக்குப்பலா பகைவரான காலத்தில் முன்னேக்கொண்டு முள்ளே யொழிப்பதுபோன்று தனக்குபபகைவரா யுறவாயிருப்பாரிருவரைத் தமமுனளே வேற்றுமையுண்டாமாறு செயது ஒருவரைககொணடு மற்றவரை யழித்தல், தம்முள்வேறறுமை யின்றிக கூடிவந்து போர்புரிவாரைத தம்முன்னே பிரித்து ஒருவரைததனனுடு சேர்த்துக் கொள்ளுதல் என்பவையல்லாமல் ஒருமிக்க எலலாரோடும் போர்புரிதல் கொடியதாம் ; போர்புரிந்தாலும் ஒருவிதத்திலுல தப்பிப்பிழைகவும் கூடும் ; நல்லவர்க ளது நிநேகத்தை விட்டுவிடடால் ஒருவிதத்திலும் தப்பிப்பிழைத்தல் கூடாமையால், நல்லார் நிநேகதைத விட்டுவிடல பலரோடும் பகைகொள்ளுதலினுங் கொடிய தென்பதாம்.


‡ சிவகசிந்தாமணி விமலையாரிலம்பகம் கூஉ. இதன்பொருள்:முன்னேக் கொண்டு முளளேக்களேயுமாறு போலத் தமக்கு ஒன்னராய் (பகைவராய்) உறவாயிருப்பவரிருவரைத் தம்மிற் பேது (கலகம) செய்து ஒருவரைக்கொணடு ஒருவரை மோதியிடுதல், தம்மிற்கூடிவந்து வினைசெய்வாரை(போர் புரிவாரை)ப் பிரித்துத் தம்மோடே கூட்டிக் கோடல் (கொள்ளுதல்) என்பது. (இது நச்சினர்க்கினியருரை).

¶ அது - பெரியாரைத துணைக்கொள்ளுதல்.

போர் புரிந்தாலும் ஒருவிதத்தால் பிழைத்தல் (கூடினும்) கூடும், நல்லார் தொடர் கைவிட்டால் ஒருவிதத்தாலும் பிழைத்தல் கூடாமையால், இது செய்தல் அதுசெய்தலிலும் தீயதென்பதாம். இவை மூன்று பாட்டாலும் அது செய்யாதலிடத்து உண்டாகுங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் பெரியாரது சிநேகத்தை விடுதல் பலாது பகையைக் கொள்ளுதலிலும் தீயதாம் என்பது.

10. It is ten-fold more injurious to abandon the friendship of the good, than to incur the hatred of many.



எட்டாம் அதிகாரம்.

சிற்றினஞ் சேராமை—

Against associating with evil persons.

பரி:—(இ - ள்.) அஃதாவது சிறிய வினத்தைப் பொருந்தாமை. சிறிய வினமாவது † நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லேன் போரும் ‡ விடரும் $ தூர்த்தரும் ¶ நடரும் * உள்ளிட்ட தழு. அறிவைத் தீரித்து இருமையுங் கெடுக்கும் இயல்பிற்றாய () அதனைப் பொருந்திற் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்றென்ப துணர்த்தற்கு [] இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது சிறியஇனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது நல்லினையின் பயனுக்சுகமும் தீவினையின் பயனுகத் துக்கமும் இல்லையென்றுகூறும் லோகாயதரும், விடரும், தூர்த்தரும், நடரும்உள்ளிட்டுள்ள கூட்டம். அறிவை வேறுபடுத்தி (இம்மை மறுமையென்னும்) இருமையுங்கெடுக்குமியல்பினதாகிய அதனைப்பொருந்தினுல்பெரியாரைத் துணைக்

† "நல்ல வினைக்கு நற்பயனுந் தீய வினைக்குத் தீப்பயனும், இல்லையெனும்வல் லிழுதையரு மெள்ளும் விடருந் தூர்த்தர்களும்,சொல்லு நடருமுதலாகத் தொக்க குழுவைச் சார்ந்தொழுகின், புல்லு மறிவைத் திரித்திருமைப் பொருளுங் கெடுக்கும் புகழோடே" என்பது விகாயக புராணம்.

‡ விடர்—காமுகர் [பெண்கள் பலரைப் புணரவிரும்பியலையுங் காமரோகிகள்.]

$ தூர்த்தர்—வஞ்சகர் [உள்ளேபகையும் உதட்டில் உறவுமாயிருப்பவர்.]

¶ நடர்—கூத்தாடிகள்.

உள்ளிட்டகுழு—உட்கொண்டுள்ள கூட்டம்.

() அதனை—நல்லதன் நலனும் தீயதன் தீமையுமில்லென்போர் முதலியோர் சேர்ந்துள்ள கூட்டத்தை.

[] இஃது—சிற்றினஞ் சேராமை; அதன்பின்-பெரியாரைத் துணைக்கோடலின் பின்.

கொள்ளுதல் பயனில்லையென்பது அறிவித்தற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

க. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பரி:—(இ - ள்.) பெரியோரியல்பு சிறிய இனத்தை அஞ்சாநிற்கும்; ஏனைச்சிறியோரியல்பு அது சேர்ந்தபொழுதே † அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும், (எ - று).

‡ *தத்தம் அறிவு திரியுமாறும் ¶ அதனால் தமக்குவருந் தன்பமும் நோக்கலின் $ பெருமை அஞ்சும் என்றும், அறிவொற்றுமையாற் பிறிது நோக்காமையின் () 'சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும்' என்றுங்கூறினர்.* [] *பொருளின் தொழில்கள் பண்பின்மேனின்றன. இதனாற் சிறிய இனம் பெரியோர்க் காகாதென்பது கூறப்பட்டது.*

தேளி:—(இ - ள்.) பெருமை - பெரியோரியல்பு, சிற்றினம் - சிறிய இனத்தை, அஞ்சும் - அஞ்சாநிற்கும், சிறுமைதான் - மற்றைச் சிறியோரியல்பு, (அது சேர்ந்த பொழுதே அதனை), சுற்றமா - (தனக்கு) உறவாக, சூழ்ந்துவிடும் - எண்ணித் துணியும், (எ - று).

தம்தம் அறிவு வேறுபடும் விதமும் அதனால் தமக்குவரும் தன்பமும் நோக்குதலால் பெருமை அஞ்சும் என்றும், அறிவு ஒற்றுமைப்பட்டு நிற்கையால் வேறு நோக்காமையால் 'சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும்' என்றும் சொல்லினர். பெரியோரும் சிறியோரும் ஆகிய பொருள்களினது அஞ்சுதலும் சுற்றமாச் சூழ்ந்துவிடுதலுமாகிய தொழில்கள் பெருமையுஞ் சிறுமையும் ஆகிய குணங்களின்மேலேற்றிச் சொல்லப்பட்டன. இதனால் சிறியவினம் பெரியோர்க்கு ஆகாதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) *சிற்றினத்திற் கஞ்சுதல் பெரியோரியல்பாம்; அதனைச் சுற்றமாகக் கொள்ளுதல் சிறியோரியல்பாம் என்பது.*

1. True greatness fears the society of the base; it is only the low-minded who will regard them as friends.

---

* *அது—சிற்றினம்.* † *அதனை—சிற்றினத்தை.* ‡ *தத்தம்—தமது தமது.* ¶ *அதனால்—தம்மறிவு வேறுபடுதலால்.*

$ *அறிவுடையாரஞ்சுவர் என்றும் பாடமுண்டு.*

() *அறிவிலாதார் தமக்குச்சுற்றமாகத் துணிவர் என்றும்பாடமுண்டு.*

[] *பெரியோர் சிறியோரென்னும் பொருள்களது அஞ்சும் சுற்றமாச் சூழ்ந்துவிடும் என்னும் தொழில்கள் பெருமை சிறுமை யென்னும் குணங்களின் மேல் நின்றன என்பது. "சிற்றின மஞ்சும் பெருமை, இது குணவினை குணவினையானது" என்பர் பிரபோத விவேக தூலார்.*

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

பரி:—(இ - ள்.) தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன் தன்மை திரிந்து அந்நிலத்தின் தன்மைத்தாம்; அதுபோல, மாந் தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தினது இயல்பானே அறிவுந் தன்தன்மை திரிந்து அவ்வினத்தின் தன்மைத்தாம், (எ - று).

† எடுத்துக் காட்டுவமை. விசும்பின்கண் ‡ தன்தன்மைத்தாய § நீர் நிலத்தோடு சேர்ந்தவழி, நிறம் சுவை ¶ முதலிய பண்புகள் திரிந்தாற்போ லத் () தனிநிலைக்கண் தன் தன்மைத்தாய அறிவு [] பிற வினத்தோடுசேர் ந்தவழிக் | காட்சி ‡‡ முதலிய தொழில்கள் திரியுமென ‖ இதனால்அத னது காரணம் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) நீர் - நீரானது, நிலத்து - (தான் சேர்ந்த) நிலத் தினது, இயல்பான் -இயல்பினாலே, திரிந்து - (தனது தன்மை) வேறு பட்டு, அற்றாகும் - அந்நிலத்தினது தன்மையதாகும், (அதுபோல), மாந் தர்க்கு - மனிதர்க்கு, அறிவு - அறிவும், இனத்து - (தாம சேர்ந்த)இனத்தி னது, இயல்பு - இயல்பினாலே, [திரிந்து - (தனது தன்மை) வேறுபட்டு,] அதாகும் - அவ்வினத்தினது தன்மையதாகும, (எ - று).

"நிலத்தின வண்மையே நீரெனு மியற்கையா னீசக்,-குலத்தின் வண்மையாற கொலதெதாழிற் காலய மானேன" என்று பாரதம் அரச நீதிச் சருக்கத்திற் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

† நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகும் என்னும் வாக்கியத்திற்கும்,மாந் தர்க் கினதியல்ப தாகு மறிவு என்னும் வாக்கியத்திற்கு மிடையே அது போல என்னும் சொல் தொக்கு நினறமையின், இஃதெடுத்துக்காட் டெ மையாயிற்று.

‡ தன் தன்மைத்தாய—நிலதத்தின் சம்பந்தமின்றி யிருக்த.

§ "அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கர் நிலத்தியல்பாய்த், தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினால்" எனறு பட்டினத் தடிகள் கூறியிருத்தலு மிங்கறியத் தக்கதாம.

¶ முதலிய எனறதனால் கனம், பரிசம் முதலியவற்றையுங் கொள்க.

() தனிநிலைக்கண்—ஒருவரிடத்துஞ் சேராது தனித்திருக்குமிடத்து.

[] பிறவினத்தோடுசேர்ந்த வழி—வேறு கூட்டத்தோடு சேர்ந்தவிட த்து.

| "ஒட்டிய, காட்சி திரியி னறந்திரியு மென்றுரைப்பர்" என்று அறநெறிச்சாரங் கூறுகின்றது. காட்சி - காணுதல்.

‡‡முதலிய என்றதனால், கருதுதல் (எண்ணுதல்) ஒழுகுதல்முதலிய வற்றையுங் கொள்க.

‖ இதனால் (இக்குறளால்) அதனது காரணம் (அறிவு மாறுபடுதலின் காரணம்) கூறப்பட்டது.

இஃது எதுத்துக்காட் டெவையணி. ஆகாசத்தில் தனது தன்மைய தாயிருந்த நீர் பூமியோடு சேர்ந்தவிடத்து, நிறம சுவை முதலிய குணங் கள் வேறுபட்டாற் போலத், தனித்திருக்கையில் தனது தன்மையதா யிருந்த அறிவு பிறவினத்தோடு சோந்தவிடத்துக் காட்சி முதலிய தொ ழில்கள் வேறுபடு மென்று இதனால் அதனது காரணம் சொல்லப்பட்ட தி.

(க - து.) மக்கட்கறிவு அவர் சேர்ந்த இனத்திற் கேற்ற வாறுகத் திரியுமென்பது.

2. As water changes its nature from the nature of the soil in which it flows, so will the character of men resemble the character of their associates.

உ. மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்னு னெனப்படுஞ் சொல்.

பரி:—(இ - ள்.) மாந்தர்க்குப் ! பொதுவுணர்வு தம்மனங் காரண மாக வுண்டாம்; இவன் இந்தன்மையனென்று உலகத்தாராற் சொல் லப்படுஞ் சொல் இனங் காரணமாக வுண்டாம், (எ - று).

இயற்கையாய ‡ புலனுணர்வு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமை யின், ¶ அதனை 'மனத்தானும்' என்றும், செயற்கையாய விசேட வுணர்வு பற்றி கல்லனென்றுகத தீயனென்றுக கிகழுஞ்சொற்கு இனம் வேண்டி தின், () அதனை 'இனத்தானும்' என்றுங் கூறினர் § உலகமயலைகொ

† பொதுவுணர்வு—இயற்கையறிவு.

‡ புலனுணர்வு—சப்த முதலிய விஷயங்களை யறியும் அறிவு.

¶ அதனை-புலனுணர்வை(பொதுவுணர்வை). () அதனை-அச்சொல்லை.

§ மாந்தர்க்கு அறிவு இனத்தியல்ப தாகுமென்பதை "கிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகும்" என்று உவமான வாயிலாக விளக்கியதை யொப்புக் கொள்ளாது பொதுவுணர்வேயல்லாமல் அதிரிபும் (அறிவு தன் தன்மை திரிதலும்) மனங்காரணமாகவே யுண்டாகும் என்று கூறும் வாதியை நோக்கி இக்குறளால் அக்கொள்கை மறுத்துக் கூறப்பட்ட தென்பது.[அம்மறு ப்பு:—இன்ன னெனப்படுஞ் சொல் இனத்தானும் என்பது.]

இயற்கையறிவு மனங் காரணமாக வுண்டாகின்றது, அதற்கு இனமா கிய காரணம் வேண்டுவதில்லை; செயற்கையாகிய சிறப்பறிவுபற்றி ஒரு வனை கல்லவனென்றுவது தீயவ னென்றுவது சொல்லுஞ் சொல்லுக் குக் காரணம் முறையே கல்லவர்களின் சேர்க்கையும் தீயவர்களின் சேர்க்கையும் என்று கொள்ளவேண்டி யிருத்தலால், செயற்கையாகியசிறப் பறிவு இனத்தின் சம்பந்தமில்லாமலே மனங்காரணமாக வுண்டாகுமென்ப தை பொருந்தா தாயிற்று; பொருந்தாதாகவே, இனங்காரணமாகவுண்டா கும் செயற்கையாய சிறப்பறிவை விளக்குவதற்கு இன்றியமையாது 'கிலத்

ள்ளாத அத்திரியும் மனத்தாலு மென்பாரை நோக்கி இதனுள்அது மமுத்தக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மாந்தர்க்கு - மனிதர்க்கு, உணர்ச்சி-பொது வறிவானது, மனத்தான் - (தம்) மனங்காரணமாக, ஆம்-உண்டாகும், இன்னு னெனப்படும் - (இவன்) இப்படிப்பட்டவனென்று (உலகத்தாரால்) சொல்லப்படுதிற, சொல் - சொல்லானது, இனத்தான் - இனங்காரணமாக, ஆம்-உண்டாகுமு, (எ - று).

இயற்கையாகிய ஐம்புலவறிவு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமையால் அதனை 'மனத்தானும்' என்றும், செயற்கையாகிய ,நிறப்பறிவுபற்றி நல்லவனென்றுவது தீயவனென்றுவது உண்டாகுஞ் சொல்லுக்கு இனம் வேண்டுதலால் அதனை 'இனதானும்' என்றுஞ் சொல்லினர். உபமானப் பிரமாணத்தை அங்கீகரியாமல் அவ்வறிவு வேறபடுதலும் மனத்தாலா மென்பாரை நோக்கி இதனுல் அது மறுதலைக் கூறப்பட்டது.

(க - து.) உலகத்தாரால் ஒருவன் நல்லவனென்றுவது தீயவனென்றுவது சொல்லப்படுதல் அவன் சேர்ந்துள்ள இனத்தினுலேயாம என்பது.

3. The power of knowing is from the mind; but from a man's associates will be determined what sort of a man he is.

ச. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

பரி:—(இ - ள்.) அவ்விசேடவுணர்வு ஒருவனுக்கு மனத்தின் கண்ணே உளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி அவன் சேர்ந்த இனத்தின் கண்ணே உளதாம், (எ - று).

† மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும் ‡ பின்னுக்கியவழிப் பயின்ற இனத்துளதாயும் இருத்தலின், 'காட்டி' எனஇறந்த காலத்தாற் கூறினர். ¶ விசேடவுணர்வுதானும் மனத்தின் கண்ணே அன்

றியல்பா னீர்திரிந் தற்றாகும்' என்னும் உவமானப் பிரமாணம் வேண்டிய தாயிற் றென்க.

† மெய்ம்மை நோக்காமுன் - உண்மையை விசாரித்துப்பார்ப்பதற்கு முன்னே.

‡ பின்னுக்கியவழி - பின்பு விசாரித்துப்பார்த்த விடத்து.

¶ நிறப்பறிவுதானும் பொதுவறிவு உண்டாதற்குக் காரணமான மனத்தினிடத்தல்லவா உண்டாகின்றதென்பாரை நோக்கி, ஆண்டுப்புலப்படுதலேயே யுள்ளது (அம்மனத்தில் நிறப்பறிவு வெளிப்படுமளவே இருக்கிறது),அந்நிறப்பறிவிற்குக்காரணம் இனமென்பதை இக்குறளால் சொல்லப்பட்ட தென்பது. இதனுல் நிறப்பறிவு உண்டாதற்குக் காரணம் இனமென்றும் அந்நிறப்பறிவு வெளிப்படுதற் கிடம் மனம் என்றும் பெற்றுமென்க.

றே உளதாவ தென்பாரை நோக்கி, ஆண்டுப்புலப்படுங் துணையேயுள்ளது, அதற்கு மூலம் இனமென்பது இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) அறிவு - அச்சிறப்பறிவு, ஒருவற்கு - ஒருவனுக்கு, மனத்து - மனத்தினிடத்தே, உளதுபோல - உண்டாவதுபோல, காட்டி- (தன்னை) வெளிப்படுத்தி, இனத்து - (அவன்சேர்ந்த) இனத்தினிடத்தே, உளதாகும் - உண்டாகும், (எ - று).

சிறப்பறிவு உண்மையை நோக்கி யறியாததற்கு முன்பு மனத்துள்ளது போலக்காட்டியும் பின்பு நோக்கியவிடத்துப் பழகிய இனத்துள்ளதாகியும் இருத்தலால், '(அறிவுமனத்துளதுபோலக்) காட்டி' என இறந்த காலத்தினுற் சொல்லினர். சிறப்பறிவும் மனத்தினிடத்தே அல்லவா உண்டாவதென்பாரை நோக்கி, அங்கு வெளிப்படுமனவேயுள்ளது, அவ்வறிவிற்குக் காரணம் இனமென்பது இதனுல் சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனுக்குச் சிறப்பறிவானது அவன் சேர்ந்துள்ள இனத்தினுலுண்டாகும் என்பது

4. The knowledge of a man, while it appears to be from his mind, is really from his associates.

நி. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டே
மினந்தூய்மை தூவா வரும்.

பரி:—(இ - ள்.) அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கிடனாய மனந்தூயனுதற் றன்மையும் செய்யும்வினை தூயனுதற் றன்மையுமாகிய இரண்டும் ஒருவற்கு இனந்தூயனுதற்றன்மை பற்றுக்கோடாக உளவாம், (எ - று).

மனந்தூயனுதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின் நீங்குதல். செய்வினை தூயனுதலாவது மொழிமெய்களாற் செய்யும் நல்வினை யுடையனுதல். தூவென்பது † அப்பொருட்டாதல் ‡ "தூவறத் துறந்தார்" என்பதனு மறிக. ஒருவன் இனந்தூயனுகவே அதனேடுபயிற்சி வயத்தான் மனந்தூயனுய் அதன்கண் விசேட வுணர்வு புலப்பட்டு அதனுற் சொல்லுஞ் செயலுந் தூயனுமென, இதனுல் () இனத்துள்ளவாமாறு கூறப்பட்டது.

† அப்பொருட்டாதல் - பற்றுக்கோடெனலும் பொருளையுடையதாதல்.

‡ கலித்தொகை—நெய்தற்கலி, க. இதன்பொருள். பற்றுக்கோடொழிய நீங்கினவரை என்பது.உசனெர்க்கினியார் 'தாவறத் துறந்தார்'என்னும் பாடங்கொண்டு "வலியில்லேயாம்படி கம்மைத்துறந்தவரை"எனப் பொருளுரைத்திருக்கின்றனர்.

() இனத்துள்ளவாமாறு-நல்லினத்தினுல் மனம் வாக்குக் காய மென்னவற்றிற்குப் பரிசுத்தத்தன்மை யுண்டாகும் வகை.

தெளி:—(இ - ள்) மனம் - (அச்சிறப்பறிவு வெளிப்படுவதற்கு இடமாகிய) மனம், தூய்மை - பரிசுத்தஞ்தல் தன்மையும், செய்வினை-செய்யுந்தொழில், தூய்மை - பரிசுத்தஞ்தல்தன்மையும், (ஆகிய),இரண்டும்—, இனந் தூய்மை - (ஒருவனுக்கு) இனம் பரிசுத்தஞ்தல் தன்மை, தூவா - பற்றுக்கோடாக, வரும் - உண்டாகும், (எ - று).

மனம்பரிசுத்தஞ்தலாவது சிறப்பறிவு வெளிப்படும்படி இயற்கையாகியஅறியாமையினின்றும் நீங்குதல். செய்வினைபரிசுத்தஞ்தலாவது சொல்லாலும் உடம்பாலும் செய்யும் நல்லதொழிலுடையவஞ்தல். தூ எனபது பற்றுக்கோடென்னும பொருளில் வந்தது. ஒருவன் இனத்தாற் பரிசுத்தஞ்தவே அவ்வினத்தோடு பழக்க வசத்தால் மனம் பரிசுத்தஞ்தஞ்தி அம்மனத்தினிடதஞ்த சிறப்பறிவு வெளிப்பட்டு அவ்வறிவால் சொல்லும் செயலும் பரிசுத்தமுடையவஞ்தவனை, இதஞ்தால் இனத்தால் உண்டாகும் விதம்சொல்லப்பட்டது.

(க - து.) மனச்சுத்தமும் செய்தொழிற் சுத்தமும் ஒருவனுக்கு அவன் சேர்ந்துள்ள இனசுத்தத்தினு லுண்டாகும்.

5. Chaste company is the staff on which come, these two things, purity of mind and purity of conduct.

கூ. மனந்தூயார்க் கேச்சநன் ருகு மினந்தூயார்க்
கில்லாநன் ருகா வினை

பரி:—(இ - ள்.) மனந்தூயாராயி ருர்க்கு ¶ மக்கட்பேறு நன்றதும்; இனந்தூய ராயினுர்க்கு நன்றுகாத் வினை யாதும் இல்லை, (எ - று).

‡ காரியங் காரணத்தின் வேறுபடாமையின் 'எச்சநன் ருகும்' என்றும, நல்லினத்தோடெண்ணிச் செயப்படுதலின் † நன்ருகா வினையில்லை என்றுங கூறினர்.

¶ மக்கட்பேறு - மக்களைப் பெறுதல்.

‡ நிமித்தகாரணம் என்றுங் காரியத்திற்கு வேறுபட்டதாக விருத்தலால் இவருக்காரண மென்றது முதற்காரணத்தை. காரியத்தோடு ஒற்றுமைச் சம்பந்தமுடையது முதற்காரண மாம். மனந்தூயராயினுரைக் காரணமாகவும் மக்கட்பேற்றைக் காரியமாகவுங கொண்டு 'மனந்தூயார்க் கேச்சநன் ருகும்' என்று கூறியது மனுதருமு சாஸ்திரம் ஒன்பதாவது அத்தியாயம் புத்திர விஷயதஞ்தில் 'ஒரு தானியத்தை விதைத்தால் மற்றொரு தானியமாக வினைவதை தென்பதில்லை; எந்தவிதமை விதைக்கிறேமோ அந்தப் பயிர்தான் முளையும்" என்றும், எங்கூற கூறுமிடதஞ்தில் "தன்னுத்மாவிற்கும் பின்னைக்கும் வேற்றுமையில்லை" என்றும் கூறுவதாலும் நன்கு வினங்கும். இங்குத்"தக்கார்தகவிலர்" என்னுங் குறளின் விசேட வுரையும் அதன் குறிப்புரையும் கவனிக்கதக்கனவா மென்க. முதற்காரணத்தின் பொதுக்குணம் அதன் காரியத்திலு மிருக்குமென்பது இங்குணர்தற் பாற்றும்.

† எல்லாவினையு நல்லவாம் என்றும் பாடமுண்டு.

தெளி:—(இ - ள்.) மனந்தூயார்க்கு - மனம் பரிசுத்தமானவர்க்கு, எசசம் - மக்கட்பேறு, நன்ருகும் - நல்லதாகும், இனந்தூயார்க்கு - இனம் பரிசுத்தமானவர்க்கு, நன்ருகாவினை - நல்லதாகாத செயல், இல்லை - (யாதும்) இல்லை, (எ - று).

காரியம காரணத்திலும் வேறுபடாமையின் (மைந்தன் தந்தையினும் வேறுபடா னென்பதனுல்) 'எச்ச நன்ருகும்' என்றும், (இனந்தூயாரால் வினை) நல்லனதோடு எண்ணிச் செய்யப்படுதலால் (அவாக்கு) நன்ருகா வினையில்லை எனறும சொல்லினர்.

(க - து) இனசுத்த முள்ளார்க்கு எல்லா நன்மையு முண்டாம் என்பது.

6. To the pure-minded there will be a good posterity; by those whose associates are pure, no deeds will be done that are not good.

எ. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

பரி:—(இ - ள்.) நிலைபெற்ற உயிர்கடகு மனத்தது நன்மை கெல்வத்தைக் கொடுக்கும்; இனத்தது நன்மை அதனேடு எல்லாப்புகழையுங் கொடுக்கும், (எ - று).

† மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேனினறது ‡ தருமென்னும இடவழுவமைதிச்சொல் முன்னுங் கூட்டப்பட்டது. ¶ உமமை-இறந்தது தழீஇய எசசவுமமை. § மனநன்ருதல்தானே அறமாகலின், அதனே

† மனத்தினது நன்மையையும் இனத்தினது நன்மையையும் உடைத்தா யிருத்தல் அஃறிணையுயிராக இல்லாமையினுல் 'மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேனின்றது' என்று கூறப்பட்டது.

‡ தனக்குரிய தன்மை முன்னிலே யிடத்துசசொற்களேவிட்டு இனநலம் எனனும படர்கைமையிடதது சொல்லோகூடி வழுவமைதியாய்வந்ததரும் என்னும் வினைச்சொல் மனநலம் என்பதனேடுங் கூட்டப்பட்டது. "அவற்றுள்—தருசொல் வருசொல் லாயிரு இளலியும், தன்மை முன்னிலே யாயிரிடத்த" என்னுந் தொல்காப்பியச சூதத்திரம் இங்குக் கவனிக்கத் தகுகதாம்.

¶ புகழும் என்னும் உம்மை இனநலம் செல்வத்தைத் தருவதல்லாமல் என்னும் பொருளே புணர்த்துதலால் இறந்தது தழுவிய எசச வும்மை யாயிற்று.

§ "மனத்துக்கண் மாசில னுதல் லனைத்தறன்" என்று அறன் வலியுறுத்த லதிகாரத்திலிருப்பதும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

ஆக்கந்தரும் என்றும், ‡ புகழ் கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலின் 'இனகல மெல்லாப் புகழுந் தரும்' என்றுங் கூறினர். † மேல் * மனநன்மை இனநன்மை பற்றிவரு மென்பதனை உட்கோண்டு அஃறிணையல் பாகவே உடையார்க்கு அவ்வினநன்மை வேண்டா வென்பாரை நோக்கி § அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையுந்தருமென அவர்க்கும் அது வேண்டுமென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி: —(இ - ன்.) மண்ணுயிர்க்கு - நிலைபெற்றவுயிர்களுக்கு, மனகலம் - மனத்தினது நன்மையானது, ஆக்கம் - செல்வத்தை, தரும்—கொடுக்கும், இனகலம் - இனத்தினது நன்மையானது, எல்லாப்புகழும், (அச்செல்வத்தோடு) எல்லாப் புகழையும், தரும் - கொடுக்கும்,(எ - று).

மண்ணுயிரென்னும் அஃறிணைப்பெயர் இங்கு (மக்களென்னும்) உயர்திணைப் பொருள்மேல் நின்றது. தரும் என்னும் இடவழுவமைதிச் சொல் மனகலம் என்பதனோடுங் கூட்டப்பட்டது. புகழும் என்ற உம்மை ஒ இறந்ததழுவிய எச்சவும்மை. மனம் நன்றுதலாலே அறமாகலால் அமமனகலத்தை ஆக்கந்தரும் என்றும், புகழ்கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலால் 'இனகல மெல்லாப் புகழுந் தரும்' என்றும் சொல்லினர். மூன்றே மனத்தூய்மை இனத்தூய்மை தூவாவருமென்பதனை யஃதேயன்றித் அம்மன நன்மையை இயல்பாகவே யுடையவர்களுக்கு அவ்வின நன்மைவேண்டாமென்பாரை நோக்கி, அச்செல்வத்தையே யல்லாமல் அப்படிப்பட்ட பலவற்றையும்தருமென்று அவர்க்கும் அவ்வினநன்மை வேண்டுமென்பது இவ்விரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து.) இனகலமானது மனகலத்தால்வருஞ்செல்வத்தோடு எல்லாப் புகழையுந் தருமென்பது.

7. Goodness of mind will give wealth, and good society will bring all praise, to men.

---

‡ அறநெறிச்சாரம் "இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி, யும்மை யுயர்கதிக் குய்த்தலால் - மெய்ம்மையே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே, கட்டா ரெனப்படு வார்" என்று கூறியிருத்தலு மிங்கறியத் தக்கதாம்.

† மேல் - இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளில்.

* மனத்தூய்மை யினத்தூய்மை தூவாவரும் என்றும் பாடமுண்டு.

§ அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையும் தருமென அவர்க்கும் அது வேண்டுமென்பது - மனநன்மை தருஞ் செல்வத்தையே யல்லாமல் அச்செல்வம் போன்றனவாய பலபுகழையும் தருமென்று மனநன்மையை யியல்பாகவே யுடையார்க்கும் இனநன்மை வேண்டுமென்பது.

அ. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

பரி:—(இ - ள்.) மனநன்மையை முன்னைநல்வினையால் தாமே உடையராயினும் அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலை யுடைத்து, (எ - று).


† நன்காலென்னும் மூன்றனுருபு விகாரத்தாற்றொக்கது. அந்நல்வினை உன்வழியும் மனநலத்தை வளர்த்தலருதலின், அதற்கு மேமாப் புடைத்தாயிற்று.

தெளி:—(இ - ள்.) மனநலம் - மனநன்மையை, நன்கு - (முன்னை) நல்வினையினால், உடையராயினும் - (தாமே) உடையவராயிருந்தாலும், சான்றோர்க்கு -(குணங்கள் பலவற்றாலும்)நிறைந்தோர்க்கு, இனநலம்-இன நன்மையானது, ஏமாப்பு-(அம்மனநன்மைக்கு) வலியாதலை, உடைத்து - உடையதாம், (எ - று).

நன்கால் என்னும் மூன்றனுருபு செய்யுள் விகாரத்தினால் தொக்கு (நன்கு என) நின்றது. அந்நல்வினைஉன்னைவிடத்தும் மனநலத்தை வளர்த்து வருதலால், அம்மனநலத்திற்கு இனநலம் வலியாத லுடையதாயிற்று.

(கு.- து.) மனநன்மையை யுறுதிசெய்வது இனநன்மையாம்

8. Although they may have great natural goodness of mind, yet good society is an advantage to the wise.



கூ. மனநலத்தி னூங்கு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

பரி:—(இ - ள்.) ஒருவற்கு மனநன்மையானே மறுமையின்பம் உண்டாம்; ‡ அதற்கு அச்சிறப்புத்தானும் இனநன்மையான் வலிபெறுத லை யுடைத்து, (எ - று).

¶ 'மனநலத்தி னூங்கு மறுமை' என்றது மறுமை பயப்பது மனநன்மை தானே பிறிதொன்றன்றென்னும் மதத்தை § உடம்பட்டுக் கூறியவாறு

† நன்கால் எனக்கருவிப்பொருளில் வந்த மூன்றனுருபு செய்யுள் விகாரத்தால்தொக்கு நின்றது. நன்கு என்பது நல்வினையை (நன்மைக்கே துவாய வினையை) யுணர்த்துதலின், காரியவாகு பெயராம்.

‡ அதற்கு அச்சிறப்புத்தானும் - மனநன்மைக்கு மறுமை யின்பத் தைத்தரு மச்சிறப்பும்.

¶ "கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை, யெடுக்க வல்லது மிம் மன மென்றதை, யடக்க வல்லவ ரேய பவக்கடல், கடக்க வல்லவ ரவன் கடிதரோ" என்பது பிரபுலிங்கலீலை. § உடம்பட்டு - ஏற்றுக்கொண்டு.

† மற்று - வினைமாற்று. ‡ உம்மை - இறந்ததுதழீஇய எச்சவும்மை. ஒரோ வழித் தாமதகுணத்தான் மனநலத்திரியினும் நல்லினம் ¶ ஒப்ப நிறுத்தி மறுமையப்பிக்குமென நிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவை யைந்து பாட்டானும் $நிற்றினஞ் சேராமையது நிறப்பு நல்லினஞ்சேர்தலாகிய எதிர்மறை முகத்தாற் கூறியவாறறிக.

கேளி:—(இ - ள்.) (ஒருவனுக்கு) மனநலத்தின் - மனநன்மையா லே, மறுமை - மறுமையின்பம், ஆகும்-உண்டாம், மற்றஃதும் - (அம்மன நன்மைக்கு) அச்சிறப்புத்தானும், இனநலத்தின் - இனநன்மையால், ஏமாப்பு - வலி பெறுதலே, உடைத்து - உடையதாம, (எ - று).

'மனநலத்தினுகு மறுமை' என்றது மறுமையின்பத்தைத்திருவுதுமன நன்மையே,மற்றொன்று அன்று என்கிற மதத்தை உடன்பட்டுச் சொல்லிய படியாம். மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்தது. அஃதும் என்ற உம் மை - இறந்தது தழுவிய எச்சவும்மை. ஒரோவிடத்துத் தாமதகுணத்தி னால் மனநலம் வேறுபட்டாலும் அதனை நல்லினம் சிறபெறத் திருத்தி மற மையின்பத்தையடைவிக்குமென்ற இனநலம் மனநலத்தை நிலைபெறச் செய்யும் வகை சொல்லப்பட்டது. இவை ஐந்துபாட்டாலும் நிற்றினஞ் சேராமையினது நிறப்பு நல்லினம் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற்சொ ல்லியவாறறிக.

(க - து.) இனநன்மை மனநன்மையால் வரும் மறுமை யின் பத்தை நிலைபெறச் செய்யும் என்பது.

9. Future bliss is the result of goodness of mind; and even this acquires strength from the society of the good.

† மனநலம் இனநலத்தினால் மாப்புடைய தாதலின்றாயின், அம்மன நலத்தினால் மறுமையின்பமுண்டாகாது என்று ஆகும் எனனும் வினையை ஆகாதென்னும்வினையாக மாற்றியதினால், மற்று வினைமாற்றுப்பொருளதா யிற்று.

‡ அஃதும் என்னும் உம்மை இனநலம் மனநலவாயிலாக மறுமை யின்பத்தைத் தருதலேயல்லாமல் என்னும் பொருளேயுணர்த்துதலின், இற ந்தது தழுவிய எச்சவும்மையாயிற்று.

¶ ஒப்பநிறுத்தி மறுமையப்பிக்கும் - பொருந்துமாறு (சரியான நிலை யில்) நிறுத்திச்செய்து (மனநன்மை வாயிலாக) மறுமையின்ப முண்டாகச் செய்யும்.

$ நல்லினஞ் சேர்தல் நிற்றினஞ் சேர்தலுக்கு எதிர்மறையாகவிருத்த லால் 'நிற்றினஞ்சேராமையது நிறப்பு நல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறை முகத்தாற் (வாயிலாகக்) கூறியவாறறிக' என்று கூறப்பட்டது. எதிர்மறை-விரோதம்.

கo. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

பரி:—(இ - ள்.) ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையும் இல்லை; தீயவினத்தின் மிக்க பகையும் இல்லை, (எ - று).

† ஐந்தனுருபுகள் ‡ உறழ்பொருளிலைகண் வந்தன. ஊங்கென்பது பின்னுங்கூட்டி உம்மை மாற்றியுரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையின் நீக்கித் தயருறுமற் காத்தலின் அதனைத் 'துணை' என்றும், தீயினம் அறிவின் நீக்கித் தயருறுவித்தலின் அதனை ¶ 'அல்லற்படுப்பதூஉம்' என்றுங் கூறினார். § அல்லற்படுப்ப தென்பது எதிப்பெயர். இதனுள் * விதியெதிர்மறைகள் உடன் கூறப்பட்டன.

தேவி:—(இ - ள்.) (ஒருவனுக்கு) நல்லினத்தினூங்கு - நல்ல இனத்தின் மிக்க, துணை(யும்) இல்லை-துணையும் இல்லை, தீயினத்தின் (ஊங்கு) தீயினத்தின் மிக்க, அல்லற்படுப்பதூஉம்-பகையும், இல் - இல்லை,(எ-று)

நல்லினத்தினை, தீயினத்தின் என்னும் ஐந்தாம் வேற்றுமை யுருபுகள் உறழ்பொருளில வந்தன. ஊங்கு என்பது தீயினத்தின் என்பதனோடும் கூட்டி ஊங்கும் எனனும் உம்மையைப் பிரிசதத் துணையென்பதனோடு சேர்த்துச் சொல்லப்பட்டது. (ஒருவனை) நல்லினம்அறியாமையினின்றும் நீக்கித் தன்பமடையாவா று காத்தலால் அதனைத் 'துணை' என்றும் தீயினம் அறிவினின்றும் நீக்கித் தன்பமடையச் செய்தலால் அதனை 'அல்லற்படுப்பதூஉம்' எனறும் சொல்லினார். அல்லற்படுப்பது என்பது காரணப்பெயர். இதனுள் விதியும் எதிர்மறையும் சேர்த்துச்சொல்லப்பட்டன.

(க - து.) ஒருவனுக்கு நல்லினத்தின் சிறந்த துணையும் தீயினத்தின் மிகுந்த பகையுமில்லை என்பது.

† நல்லினத்தின் தீயினதின் என்பவற்றிலுள்ள இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை யுருபுகள்..


‡ ஒன்றினொன்று மிக்கு (சமானமாகாது) மாறபடுவது உறழ் எனப்படும். நச்சினார்க் கினியார் "உறழ்தல் ஒன்றனன் ஒன்றை மிகுத்தல்" என்பர்.

¶ பகை என்றும் பாடமுண்டு.

§ அல்லற்படுப்பது (துன்பத்தை யுண்டாக்குவது) ஒருவனுக்குப் பகையா யிருத்தலால், பகையை அல்லற்படுப்பது என்று கூறியது எது, (காரண)ப் பெயராமென்க. எதிப்பெயர் - ஒரு நிமித்தம்பற்றி வரும்பெயர்.

'நல்லினத்தினூங்குத் துணையில்லை' என்று விதியும் (உடம்பாடும்) 'தீயினத்தினல்லற் படுப்பதூஉ மில்'என்று எதிர்மறையும்உடன்சொல்லப் பட்டன. நல்லினத்திற்குத் தீயினம் எதிர்மறையா யிருத்தலால், நல்லினம் உடம்பாடும் தீயினம் எதிர்மறையு மாயின.

10. There is no greater help than the company of the good; there is no greater source of sorrow than the company of the wicked.



ஒன்பதாம் அதிகாரம்.

தெரிந்து செயல்வகை—

On Acting with Fore-thought.

பரி:—அஃதாவது அரசன் தான்செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத்துணைக்கோடல் பயனுடைத் தாயவழி அவரோடுஞ் செய்யப்படுவதாகலின், இது சிற்றினஞ்சேராமை யின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அரசன் தான்செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைகொள்ளுதல் பயனுடைய தாயவிடத்து அவரோடுஞ் செய்யப்படுவதாகலால், இது (தெரிந்து செயல் வகை) சிற்றினஞ் சேராமையின்பின் வைக்கப்பட்டது.

க. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

பரி:—(இ - ள்.) வினை செய்யுங்கால் அப்பொழுது அதனுல் அழிவதனையும் அழிந்தாற்பின் ஆவதனையும் ஆய்நின்று பிற்பொழுது தரும் ஊதியத்தையுஞ் சீர்தூக்கி உறுவதாயிற் செய்க. (எ - று).

உறுவதாவது ‖ நிகழ்வின்கண அழிவதனில் ஆவது மிக்கு எதிர்வினும் அது வளர்ந்துவருதல். ‡ அழிவதின்மையின் எதிர்வின்கண்வரு மாக்கத்தை 'ஊதியம்' என்றார். எனவே, ¶ அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண் அழி

"செய்யும் பொழுதே யழிவுபருளிற் றெப்ப நிரண்டினு ளொன், றைய வுதவி வழிபயக்கு மொண்மை வினையைத் தேர்ந்தனத லில், ஐய மகன்ற வினத்தோடு மாய்ந்தந் தனித்தும் புரிந்திடுக, வெய்ய வாக்கங் கருதுமுதல் விளிக்கும் வினையைப் புரியற்க" என்பது விராய புராணம்.

† நிகழ்காலத்தில் அழியும் பொருளினும் ஆகும் பொருள் அதிகமாகி எதிர்காலத்தினும் அப்பொருள் விருத்தியடைந்து வருதல்.

‡ (காரியமுற்றப் பெற்றபின் வரும்பொருளுக்கு) அழிவில்லாமை யினுல், எதிர்காலத்தில்வரும் பொருளை 'ஊதியம்' என்று கூறினர். (தொழில் செய்யும்போது வரும்பொருளை ஆவது என்றும், தொழில் முடிந்த பின்வரும் பொருளை ஊதியம் என்றும் கூறினர்.)

¶ எதிர்காலத்தில் பொருளைப் பெறவதா யிருந்தால், நிகழ்காலத தில் அழியும் பொருளும் ஆகும்பொருளும் தம்முள் ஒத்திருந்தாலும்

வதும் ஆவதிற் தம்மூனொத்தாலும் ஒழிதற்பாற்றன்றென்பது பெற்றும். † இரண்டு காலத்தும் பயனுடைமை தெரிந்து செய்கவென்பதாம்.

தெளி:—(இ - ன்.) (தொழில் செய்யுமிடத்தி) அழிவதூஉம் - (அப்போது அத்தொழிலால்) அழிவதையும், ஆவதூஉம் (அழிந்தால் பின்னே) ஆவதையும், ஆ-ஆய், (நின்று), வழிபயக்கும்-பிற்காலத்துத் தரும், ஊதியமும் - இலாபத்தையும், சூழ்ந்து - சீர்தூக்கி, (உறுவதாயின்), செயல் - செய்யக்கடவன், (எ - று).

உறுவதாவது நிகழ்காலத்தில் (செய்கிறபோது) அழிவதில் ஆவது மிருந்து பிற்காலத்தும் அவ்வாவது வளர்ந்துவருதல். அழிவதில்லாமையால் பின்வரும் ஆக்கத்தை 'ஊதியம்' என்றார். எனவே அவ்வூதியத்தைப் பெற்றால் நிகழ்காலத்தில் (செய்கிறபோது) அழிவதும் ஆவதும தம்மூன் ஒத்திருந்தாலும் ஒழியும் பான்மையதன் றென்பது பெறப்பட்டது. இரண்டு காலத்திலும் பயனுடைமையை யறிந்து செய்யவேண்டு மென்பதாம். சீர்தூக்கல் - ஆராய்தல். ஒழியும்பான்மையதன்று - விடலாகாது.

(க - து.) அழிவதையும் ஆவதையும் இலாபத்தையும் ஆராய்ந்து தொழில் செய்யவேண்டும் என்பது.

1. Let a man reflect on what will be lost, what will be acquired, and from these what will be his ultimate gain, and then, let him act.



உ. தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

பரி:—(இ - ள்.) தாம்தெரிந்துகொண்ட ‡ இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின்தாமேயும்எண்ணிச்செய்து முடிக்க வல்லஅரசர்க்கு எய்துதற் கரியபொருள் யாதொன்றும்இல்லை,(எ-று).

(தொடங்கிய காரியத்தை) விடுதல் கூடாதென்பது பெறப்பட்டது; படவே, நிகழ்காலத்தில் அழியும்பொருள் அதிகமாயும் ஆகும்பொருள் குறைவாயுமிருந்தால் அத்தகைய காரியத்தை விட்டுவிடவேண்டுமெனபதாயிற் றென்க. இதனால் ஒரு தொழிலைச் செய்யுமிடத்து அதி காரணமாக அழியும் பொருள் குறைவாகவும் அப்போதாகும் பொருள் அதிகமாகவும், பின் வரும் பொருள்விருத்தியடைவதாகவும் இருக்கவேண்டுமென்றும், அவ்வாறன்றிப் பின்வரும் பொருளோடு அழியும்பொருளும் அப்போது ஆகும் பொருளும் சமமாகவாவது இருக்கவேண்டுமென்றும் பெற்றாமென்க.

† இரண்டுகாலத்தும் - நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும்.

‡ இனம் - புரோகிதரும் அமைச்சரும். பெரியாரைத் துணைக்கோடலதிகாரம் இரண்டாங் குறளின் விசேடவுரையில் "புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறு [illegible] கூறியதக்கதாம்.

ஆராயப் படுவனவெல்லாம் ஆராய்ந்து போக்த இனமென்றுமாம். 'செய்வார்க்கு' என்றதனால், வினையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது † மேற்சேறன் முதல் வேறல் ஈறுயதொழில். பொருள்கட் கேதுவாய ‡ அதனிற் றவறுமையின், அரியபொருள்களெல்லாம் எளிதினெய்தல என்பதாம். இவை யிரண்டுபோட்டானுஞ் செய்யத் தகும் வினையும் அது செய்யுமாறும் கூறப்பட்டன.

தெளி:—(இ-ள்.) தெரிந்த - (தாம்)தெரிந்துகொண்ட, இனத்தொடு-இனத்துடனே, தேர்ந்து - (செய்யத்தகுந்தொழிலை) ஆராய்ந்து, எண்ணி-(பின்னேதாமேயும்) எண்ணி, செய்வார்க்கு - செய்துமுடிக்கவல்ல அரசருக்கு, அரும்பொருள் - பெறுதற்கரியபொருள், யாதொன்றும்—, இல்-இல்லை, (எ - று).

'தெரிந்த இனம்' என்பதற்கு ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்து வந்த இனம் என்று பொருளுரைப்பினும் பொருந்தும். 'செய்வார்க்கு' என்று கூறியதினால் செய்யத்தகுந்தொழில் என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. தொழிலாவது போர்க்குச் செல்லுதல், தம் மதிலைக் காத்தல், பகைவருடைய மதிலை வளைத்துக்கொள்ளுதல், பகைவரோடு போர் செய்தல், பகைவரை வெல்லுதல் என்னுந் தொழிலாம். பொருள்களுக்கேதுவாகிய அத்தொழிலில் தவறுமையால், அரியபொருள்களெல்லாம் (தெரிந்த வினத்தொடு தேர்ந் தெண்ணிச செய்வார்) எளிதிற் பெறுவாரொன்பதாம். இவை யிரண்டுபோட்டாலும் செய்யத்தகுந தொழிலும் அததொழில் செய்யும் விதமும் சொல்லப்பட்டன.

† மேற்சேறன முதல் வேறல் ஈறுயதொழில் என்றுகூறினமையின், இடைநின்றன தம்மதிலைக்காத்தல், பகைவருடைய மதிலை வளைத்துக் கொள்ளுதல், பகைவரோடு போர்செய்த லென்பனவாம்

மேற்சேறல் வஞ்சித்தினையாம்; தம்மதிலைக் காத்தல் நொச்சித்தினையாம்; பகைவருடையமதிலை வளைத்திக்கொள்ளுதல் உழிஞைத்தினையாம்; பகைவரோடு போர்செய்தல் தும்பைத்தினையாம்; பகைவரை வெல்லுதல் வாகைத்தினையாம்.

" மழிஞ்சிரைகொள் வதுவெட்சி காஞ்சை மீட்டல் மாற்றார்பாற் செலல்வஞ்சி யூணுதல் காஞ்சி, பகர்மதிலைக் காக்குமது நொச்சி சுற்றிப் படைவளைத்த லுழிஞைபோல் தும்பை வென்று, புகழ்படைத்தல் வாகை" என்று சிதம்பரப்பாட்டியல் கூறுவதும், "மாற்றார் மேற்செலல் வஞ்சி யாகுமே", "காமரு தன்னரண் காப்பது தொச்சி", "பகைஞ ராணைப் பற்றுத லுழிஞை","அதிரப் பொருவது தும்பை யாகும்","மாற்று சோட வருத்தி வெல்வது, வாகை யெனப்பெயர் வைக்கப் படுமே" என்று முத்து வீரியங் கூறுவதும் இவ்குணர்த்தற் பாலனவாம்.

‡ அதனிற்றவறுமையின் - பகைவருடைய நாட்டைக்கொள்ள வினைத்துப் போர்செய்தற்கு அப்பகைவர்மேல் செல்லுதல் முதலிய தொழில்களில் சிறிதும் தவறிப்போத லில்லாமையால்.

(க - து.) நல்லினத்தோடாராய்ந்து பின்னர்த்தாமு மாலோசித்துத் தொழில் செய்வார்க்குப் பெறுதற்கரிதான பொருள் ஒன்றுமில்லை என்பது.

2. There is nothing too difficult to be attained by those who, before they act, reflect well themselves, and thoroughly consider the matter with chosen friends.

ச. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

பரி:—(இ - ள்.) மேல் எய்தக்கடவ ஊதியத்தினை நோக்கி முன்னெய்தி நின்ற முதல் தன்னையும் இழத்தற்கேதுவாய செய்வினையை அறிவுடையார் மேற்கோள்ளார், (எ - று).

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினை கொண்டது. * எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ஆக்கமே அன்றி முதலையும் இழக்கும் வினைகளாவன: வலியுங் காலமும் இடனும் அறியாது பிறர்மண் கொள்வான சென்று தம்மண்ணும் இழத்தல் போல்வன. முன் செய்து போந்த வினையாயினுமென்பா 'செய்வினை' என்றார்

தெளி:—(இ - ள்.) ஆக்கங்கருதி (பின்பெறக் கடவதாகிய) இலாபத்தை நோக்கி, முதல் - (முன்பெற்றுள்ள) முதலையும், இழக்கும் - இழத்தற்கு ஏதுவாகிய, செய்வினை - செய்தொழிலை, அறிவுடையார் - அறிவுடையவர், ஊக்கார் - மேற்கொள்ளார், (எ - று).

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்ச வினை கொண்டு (கருதி யிழக்கும் என) முடிந்தது. முதலும் என்னும் எதிரது தழுவிய எச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. ஆக்கத்தையே யன்றி முதலையும் இழக்குந் தொழில்களாவன: வலியும் காலமும் இடமும் அறியாமல் பிறர் தேசத்தைப் பிடிக்கப்போய்த் தந்தேசத்தையும் இழத்தல் போல்வன. முன் செய்தவாத வினையாயினு மென்பார் 'செய்வினை' என்றார்.

(க - து.) அறிவுடையார் இலாபத்தை நினைத்து முதலையு மிழத்தற்கேதுவாய தொழிலைச் செய்யார் என்பது.

3. Wise men will not, for the sake of profit, undertake works that will consume their principal.

ச. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

* ஆக்கமேயன்றி முதலும் என்னும் எதிரதழீய வெச்சவும்மை.

பரி:—(இ - ள்.) இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து துணிதலில் லாத வினையைத் தொடங்கார், தமக்கு இளிவாவென்னும் குற்றமுண் டாதலே அஞ்சுவார், (எ - று).

தொடங்கின் இடையின் மடங்லாகாமையின் † 'தொடங்கார்' என் றார். இளிவரவு - அவ்வினையாற் பின்னழி வெய்தியவழி ‡ அதன்மேலும் அறிவும் மானமும் இலரென்ற உலகத்தார் இகழும் இகழ்ச்சி. அஃதுண் டாதல் ஒருதலே யாகலின், ¶ தெளிவுள்வழித் தொடங்குக வென்பதாம்.

தேளி:—(இ - ள்.) இளிவென்னும் - (தமக்கு) இளிவாவென்னும், ஏதப்பாடு - குற்றமுண்டாதலை, அஞ்சுபவர் - அஞ்சுவோர், தெளிவிலதனை - (இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து) நிச்சயித்தலில்லாத தொழிலை, தொடங்கார் - ஆரம்பித்துச் செய்யார், (எ - று).

(ஒரு தொழிலைச் செய்யத்) தொடங்கினால் (அதனை) நடுவிலே மடங் குதல் (விடுதல்) கூடாமையால் 'தொடங்கா' என்றார். இளிவரவு - அத் தொழிலால் பின்னே அழிவை அடைந்த விடத்து அதன்மேலும் அறி வும் மானமும் இலரென்ற உலகத்தார் இகழும் இகழ்ச்சியாம். அவ்விகழ்ச் சியுண்டாதல் நிச்சயமாதலால், தெளிவுள்ள விடத்துத் (தொழில்செய்யத்) தொடங்குக என்பதாம். இளிவரவு - அவமானம்.

(க - து.) குற்றத்திற் கஞ்சும் அரசர் ஆராய்ந்து துணிந்த லில்லாத தொழிலைத் தொடங்கிச் செய்யார் என்பது.

4. Those who fear reproach will not commence any thing which has not been thoroughly considered and made clear to them.

நி. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

பரி:—(இ-ள்.) சென்றால் நிகழும் திறங்களையெல்லாம் முற்ற வெண் ணாது சில எண்ணிய துணையானே அரசன் பகைவர்மேற் § செல்லு தல் அவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வ தோரு நெறியாம்.

---

† ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் நடுவே அக்காரியத்தை விட்டு நீங்குதல் தகாதாகலின் 'தொடங்கார்' என்றார் என்பது.

‡ அதன்மேலும் - அவ்வழிவின்மேலும்.

¶ செய்யலாமென்னும் நிச்சயமுண்டாய விடத்து.

§ செல்லுதல் பயனில்லாத காரியமழிய் முடிதலினால், பகைவர் விழி புடையராய், வளரு நிலத்திலே பயிர் விருத்தியடைவது போன்று கால் வகைச் சேனையாலும் விருத்தி யடைந்து, தம்மை யெதிர்க்கு மரசனை யெ திர்க்கும் மனவெழுச்சியோடு இருப்பாரென்பதாம். அப்பகைவர் ஊக்க முடையவராய் விருத்தி யடைந்து எதிர்ப்பதற்குக் காரணம் வகையற சூழாதெழுதலா மென்க.

அத்திறங்களாவன: வலி காலம் இடனென்றிவற்றால் தனக்கும் பகைவர்க்கு மூளவாம் நிலைமைகளும், வினைதொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும, வெல்லுமாறும், அதனாற் பெறுமம்பயனும் முதலாயின. அவற்றுள், சில எஞ்ஞான்றும பகைவர்க்கு இடனும் ஆலான், முற்றப்பெற எண்ணவேண்டு மென்பதாம். இவைமூன்று பாட்டானும் ஒழியத்தகும் வினையும் ஒழியாவழிப்படும் இழுக்குங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) வகை - (சென்றால் நடக்கும்) வகைகளை (எல்லாம்), அறச்சூழாது - முற்றவெண்ணுமல், [சில வெண்ணிய வளவாலே], எழுதல் - (அரசன் பகைவர்மீது போர்க்குச) செல்லுதல், பகைவரை - அப்பகைவரை, பாத்தி - வளருநிலத்திலே, பயிப்பது - நிலைபெறச் செய்வதாகிய, ஓராறு - ஒருவழியாம, (எ - று).

அவ்வகைகளாவன: வலி காலம் இடம் என்னும் இவற்றால் தனக்கும் பகைவர்க்கும் உண்டாகும நிலைமைகளும், தொழில்தொடங்கும் விதமும், அத்தொழிற்கு வரும் தடைகளும், அத்தடைகளை யொழிக்கும வகையும், பகைவரை வெல்லும் விதமும், அவ்வெல்லுதலினு லடையும் பயனும் முதலானவை. அவ்வகைகளுன், சில குறைந்தாலும் பகைவர்க்கு இடமாம் ஆதலால் முற்றப்பெற எண்ணவேண்டு மென்பதாம். இவை மூனறுபாட்டாலும் விடத்தகுந் தொழிலும அதனை விடாத விடதண்டாகும் குற்றமும் சொல்லப்பட்டன

(க - து) அரசன் நன்கு யோசிபாது பகைவர்மேற் போர்க்குச் செல்லுதல் அப்பகைவரை அவர் உள்ளவிடத்திலேயே யுறுதிப்படுத்துந தன்மையினதாம் என்பது.

5. One way to promote the prosperity of an enemy, is for a king to set out to war without having thoroughly weighed his ability to cope with its chances.

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

பரி:—(இ - ள்.) அரசன் தன்வினைகளுள் செய்யத்தக்கன அல்லவற்றைச் செய்தலாற்கெடும்; இனி அதனுனே அன்றிச் செய்யத்தக்கன வற்றைச் செய்யாமை தன்னுனுங் கெடும், (எ - று).

† "வலியே காலம் வினையிவற்றுன மாற்றுன் றனக்கு மூனக்குமுள, பலவா நிலையும் வினைதொடங்கும் பண்பு மதற்கா மிடையூறும், விலகா ததனை விலக்குவதும் வெல்லு மாறும் வென்றதனுல், உலவாப் பயனு முதலனைத்து மோர்ந்து தெளிந்தே வினைசெய்க" என்பது விராடபுராணம்.

செய்யத்தக்கனவல்லவாவன: பெரிய முயற்சியினவும், செய்தாற் பயனில்லனவும், அது சிறிதாயினவும், † ஐயமாயினவும். பின் துயர்விளைப் பனவுமென இலை. செய்யத்தக்கனவாவன: ‡ அவற்றின மறுதலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான் அறிவு ஆண்மை பெருமை யென்னும் மூவகை யாற்றலுள் பொருள் படையென இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனும் ஆகலான் ¶ இரண்டுங் கேட்டிற் கேதுவா யின. இதனாற் செய்வன செய்தது ஒழிவனவொழிகவென இருவகையன வும் உடனகூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) (அரசன் தனது தொழில்களுள்)செய்தக்கவல்ல-செய்யத்தாத காரியங்களே, செய - செய்தலால், கெடும் - கெடுவான், (இனி அதனலேயல்லாமல்), செய்தக்க - செய்யதத்க காரியங்களே, செய் யாமையானும் - செய்யாமையினாலும், கெடும் - கெடுவான், (எ - று).

செய்யத்தகாத காரியங்களாவன: - பெரிய முயற்சியை யுடையனவும், செய்தாற் பயனில்லாதனவும், அப்பயன் சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்னே துயரம் விளைப்பனவுமென்னும் இவையாம். செய்யத்தக்க காரி யங்களாவன: அவற்றிற்கு மாறுபிருப்பன. இச்செய்தல் செய்யாமைகளால் அறிவு ஆண்மை பெருமை என்னும் மூன்றுவகை ஆற்றல்களுள் பொரு ளும் படையும் என விருவகையினதாய பெருமையானது சுருங்கிப் பகை வர்க்கு எளியனுவான் ஆதலால் இரண்டும் கேட்டிற்குக் காரணமாயின. இதனுல் செய்யத் தக்கவற்றைச் செய்து விடத்தக்கவற்றை விடுகவென்று இருவகைச்செயல்களும் உடன் சொல்லப்பட்டன. ஆற்றல் - வல்லமை.

(க - து.) அரசன் செய்யத்தகாதவற்றைச் செய்வதாலும், செய்யத்தகவற்றைச செய்யாமையாலும் கெடுவான் என்பது.

6. He will perish who does what it is not fit to do; and he also will perish who does not do what it is fit to do.

எ. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

பரி:—(இ - ள்) செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை யெ ண்ணித்தொடங்குக; § தொடங்கிவைத்துப் பின்னெண்ணக் கடவோம் என்றெழிதல் குற்றமாதலான், (எ - று).

† முடிவனவோ முடியாதனவோ வென்று சந்தேகத்திற்கிடமா யிரு ப்பனவும்.

‡ அவற்றின் மறுதலையாயின - சிறிய முயற்சியினவும், செய்தாற்பய னுள்ளனவும், பயன் பெரிதாயினவும், ஐய (சந்தேக) மில்லாதனவும், பின்பு இன்பம் விளைப்பனவுமா மென்னுமிவை.

¶ இரண்டும் - செய்தக்கவல்ல செயலும், செய்தகக செய்யாமையும்.

§ தொடங்கிவைத்துப் பின்னெண்ணக் கடவோம் என்றெழிதல்—. ஆரம்பித்த பிறகு ஆலோசிப்போமென்று ஆலோசியாமல் விடுதல்.

தணிவுபற்றி நிகழ்தலின், தணிவெனப்பட்டது. சிறப்புமை விகாரத்தாற் றொக்கது. உபாயமென்பது ‡ அவாய் நிலையான் வந்தது. அது கொடுத்தல், இன்சொற்சொலலல், வேறுபடுத்தல், ஒறுத்தலென நால் வகைப்படும். இவற்றை வடநூலார் ¶ தான சாம பேத தண்ட மென்ப. அவற்றுள், $ முன்னைய இரண்டும் ஐவகைய; [] ஏனைய மூவகையு; அவ் வகைகளெல்லாம் ஈண்டுரைப்பிற பெருகும். இவ்வுபாயமெல்லாம் எண் ணுது தொடங்கின், அவ்வினை மாற்றாரால் விலக்கப்பட்டு முடியாமை யானும், இடையின் ஒழிதலாகாமையானும் அரசன் துயருறுதலின், அவ்வெண்ணுமையை ‘இழுக்கு’ என்றார். செய்வனவற்றையும் உபாயமறி ந்தே தொடங்குக வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கருமம் - (செய்யத்தக்க) தொழிலும், எண்ணி - (முடிக்கும் உபாயத்தை) எண்ணி, துணிக - தொடங்கக்கடவன், துணிந்த பின் - தொடங்கிவைததுப் பிறகு, எண்ணுவம் என்பது - எண்ணக்கட வோ மென்றொழிதல், இழுக்கு - குற்றம், (ஆதலால்), (எ - று).

† தொடங்குங் கருமம் துணிவினாலாதலால் ‘துணிவுபற்றி நிகழ்த லின் (நடைபெறுதலின்) தணிவெனப்பட்டது’ என்று கூறப்பட்டது. தணிவு காரணமாகத் தொடங்குங் கருமத்தைத் தணிவு என்று கூறின மையின், இது கருவியாகு பெயராம் இங்குத தணிவு என்றது துணிந்த என்றதனை.

‡ எண்ணி யென்னும்வினை உபாயதனை யெனனும் செயப்படுபொ ருளை அவாவி (விரும்பி) நின்றது.

¶ சாமம்—இனிதாகக்கூறல்; பேதம் — மெண்மையாலும் வண்மை யாலும் மனத்தினைப் பேதித்தல்; தானம—பகைவர் மனமகிழ (அவர்க்கு வேண்டிய வற்றைக்) கொடுத்தல்; தண்டம்—பினபு அவர் ஆகாமலழித்தே விடுதல். இவ்வாறு நச்சினார்க் கினியர் ‘ பண்ணியல் யானை மேலான” என் னுஞ் சீவகசிந்தாமணிச செய்யுளி னுரையில வரைந்திருக்கின்றனர்.

$ முன்னைய இரண்டும ஐவகைய—முனனுள்ள தானம் சாமமென்னு மிரண்டனுள் ஒவ்வொனறும் ஐந்தைந்து வகைபபடும். அவை வருமாறு:— 1 கிடைத்தற் கரிய பொருளைக் கொடுத்தல், 2 தனகுத தரும்பொருளை வாங்காது விடுதல், 3 கொடுக்க வேண்டிய பொருளைக் கொடுத்தல், 4 பிறன்பொருள் கொடுத்தல், 5 கபபம் வாங்கா தொழிதலென்ன தானம் ஐவகையாம். 1 வணங்கல், 2 புகழ்தல், 3 எதிர்கொள்ளல, 4 கட்புக் கூறல், 5 உறவுகூறல் எனச்சாமம் ஐவகையாம்.

[]ஏனைய மூவகைய—மற்றைய பேதம் தண்டமென்னுமிரண்டனுள் ஒவ்வொன்றும் மும்மூன்று வகைப்படும். அவை வருமாறு:—1 கட்பொழி தல், 2 கூடினவரைப் பிரித்தல், 3 வேறுபகை வினைத்தல் எனப் பேதம் மூன்றுவகையாம். 1 தின்பஞ் செய்தல், 2 பொருளைக்கொள்ளுதல், 3 கொ ல்லுதல் எனத்தண்டம் மூன்றுவகையாம்.

துணிவு காரணமாக நிகழுதலால் கருமம் துணிவு என்று கூறப்பட்டது. கருமமும் என்னும் உயர்வு சிறப்புமை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. உபாயமென்பது அவாய்நிலையால் வந்தது. அவ்வுபாயம் கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால் வகைப்படும். இவற்றை வடநூலார் தானம் சாமம் பேதம் தண்டம் என்பர். அந்கான்களுள்,முன்னுள்ள இரண்டனுள் ஒவ்வொன்றும் ஐந்தைந்து வகையதாம்; பின்னுள்ள இரண்டனுள் ஒவ்வொன்றும் மும்மூன்று வகையதாம். அத்தவகைகளையெல்லாம் இங்குச்சொன்னால் விரிந்துபோம். இவ்வுபாயங்களெல்லாவற்றையும் எண்ணுது தொடங்கினால், அதிதொழில் பகைவனால் விலக்கப்பட்டு முடியாமையாலும், நடுவேவிடுதல் கூடாமையாலும் அரசன் தயாரத்தை யடைவானுதலால், அவ்வெண்ணுமையை 'இழுக்கு' என்றார். செய்யத்தக்கன வற்றையும் உபாயம் அறிந்தே தொடங்கவேண்டுமென்பதாம்.

(க - து.) அரசன்செய்யுமாறு தான்மேற்கொண்ட தொழிலை நன்றாக ஆலோசித்துத் தொடங்கக்கடவன் என்பது.

7. Think first, and then begin a work; after you have begun it, to say, "we will consider," is a reproach.

அ ஆற்றின் † வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்

பரி:—(இ - ள்.) முடியும் உபாயத்தாற் கருமத்தை முயலாதமுயற்சி, துணைவர்பலர் நின்று புரைபடாமற் காப்பினும் புரைபடும், (எ - று).

முடியும் உபாயத்தான் முயறலாவது கொடுத்தலைப் பொருணசையாளன் கண்ணும்; இன்சொல்லைச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது கொந்தவனென இவர் கண்ணும்; வேறுபடுத்தலைத் துணைப்படையானன், ‡ தன் பகுதியோடு பொருந்தாதானென இவர் கண்ணும்; ஒறுத்தலை ¶ இவற்றின் வாராதவழி இவர்கண்ணும் தேறப்படாத இழுக்கங்கள் கண்ணுஞ் செய்தி, வெல்லுமாற்றான் முயறல். புரைபடுதல் - கருதிய நன்மையன்றிக் கருதாத தீமை பயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.

தெளி:—(இ - ள்.) ஆற்றின் - முடியும் உபாயத்தால், வருந்தா வருத்தம் - (மேற்கொண்ட கருமத்தை முடிக்க) முயற்சிசெய்யாத முயற்சியா

---

† வருந்தா வருத்தம் என்பது பிரயாசமின்மையை யுணர்த்துவதாம்.

‡ தன் பகுதியோடு - தன தபிப்பிராயத்துடன்.

¶ இவற்றின் வாராதவழி—கொடுத்தல், இன்சொற் சொல்லுதல், வேறுபடுத்தலென்னும் இவற்றின் வழி வாராதவிடத்து.

னது, பலர் கின்று - (துணைவர்) பலர்கின்று, போற்றினும் (புரைபடாமல்) காப்பினும், பொத்தப்படும் - புரைபடும், (எ - று).

முடியும்உபாயத்தால்முயலுதலாவதுகொடுத்தலேப்பொருளாசையுடையானிடத்தும்; இன்சொற்சொல்லுதலே நல்விஷியோனன்,சோம்பலாளன், முன்னே பிறரோடுபோர் செய்து தொந்தவன் என்னும் இவர்களிடத்தும்; வேறுபடுத்தலேத் துணைப்படையாளன், தன்பகுதியோடு பொருந்தாதவன் என்னும் இவர்களிடத்தும்; ஒறுத்தலே இவற்றின் வழிவராதவிடத்து இவர்களிடத்தும் நம்பப்படாத கீழ்மக்களிடத்தும் செய்து, (பகைவரை)வெல்லும் வழியால் முயற்சி செய்தலாம். புரைபடுதல் - தானெண்ணிய நன்மையைத் தாராது எண்ணுத நீமையைத் தருதல். நால்வகை *யுபாயத்தின் பிறப்புக்கூறியவாறும். புரைபடுதல்-மேற்கொண்ட கருமம் முடியாதொழிதல்.

(க - து) மேற்கொண்ட கருமம் முடியுமுபாயத்தை யெண்ணுத முயற்சியானது துணைவர் பலர் கின்றுகாத்தாலும் குற்ற முடையதாம் என்பது.

8. The work, which is not done by suitable methods, will fail, although many stand up to protect it.

கூ. நன்றுற்ற வுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

பரி:—(இ - ள்.) வேற்று வேந்தர்மாட்டுநன்றனவுபாயஞ்செய்தற் கண்ணுங் குற்றமுண்டாம்; † அவரவர்துணங்களே ஆராயந்தறிந்து அவற்றிற் கியையச் செய்யாவிடின், (எ - று).

நன்றன வுபாயமாவது கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாம் அவை யாவர்கண்ணும் இனியவாதற பிறப்புடைமையின், உம்மை பிறப்புமை. ‡ அவற்றை அவரவர் பண்பறிந் தாற்றுமையாவது ¶ அவற்றிற்குரியரல்லாதார்கண்ணே செய்தல். தவறு - அவ்வினை முடியாமை.

தெளி:—(இ - ள்). (வேற்றரசரிடத்து) நன்று - நல்ல வுபாயத்தை ஆற்றலுள்ளும் - செய்தலுள்ளும், தவறு - குற்றம், உண்டு - உண்டாம்,

† அவரவர்—அந்தந்த வேற்று வேந்தர்களுடைய.

‡ அவற்றை—கொடுத்தலென்னுந் தானத்தையும் இன்சொற்சொல்லுதலென்னுஞ் சாமத்தையும்.

¶ பேதத்திற்கும் தண்டத்திற்கும உரியவரிடத்தே தானமும் சாமமும் செய்தலாகாதென்பது. எனவே, எவரெவர்க்கு எது எது செய்யவேண்டுமோ அவரவர்க்கு அது அதுவே செய்யவேண்டும்; மாறிச்செய்தால் கெடுதியுண்டாமென்பது பெறப்பட்டது.

அவரவர்-அவரவருடைய, பண்பு-குணங்களை, அறிந்து - (ஆராய்ந்து) அறிந்து, ஆற்றுக்கடை - (அக்குணங்களுக்குப் பொருந்த) செய்யாவிடத்து.()

நல்லவுபாயமாவது கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாம். கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும் யாவரிடத்திலும் இனியனவாகும் சிறப்புடைமையினால், ஆற்றலுள்ளும் என்றவும்மை உயர்வு சிறப்பும்மை. அவற்றை அவரவர்குணங்களை யறிந்து செய்யாமையாவது அவற்றிற்கு உரியரல்லாதவரிடத்தே செய்தல். தவறு - அத்தொழில் முடியாமை.

(க - து.) செய்யவேண்டியவற்றை வேற்று வேந்தரது குணங்களை யறிந்து அவரவரது தகுதிக்கேற்பச் செய்யவேண்டும்.

9. There are failures even in acting well, when it is done without knowing the various dispositions of men.

கo. எள்ளாத வேண்ணிச் செயல்வேண்டுந் தம்மோடு
கொள்ளாத கொள்ளா துலகு.

பரி:—(இ - ள.) அரசர் வினைமுடித்தற் பொருட்டுத் தந் நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வாராயின் $ உலகந் † தம்மை இகழா நிற்கும்; ஆகலான், அஃது இகழா வுபாயங்களை நாடிச் செய்க, (எ - று).

தம்மென்பது ஆகுபெயர் தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொடுத்தன் முதலிய மூன்றனைச்செய்தலும், மெலியராய்வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். ‡ இவையிரண்டும் அறிவிலார் செய்வன வாகலின் உலகு கொள்ளாது என்றார். அஃது எள்ளாதன செய்தலாவது அவற்றைத் தத்தம் வண்மை மென்மைகட்கேற்பச செய்தல். ¶ மேல் இடவகையான் உரிமைகூறிய உபாயங்கட்கு வினைமுதல் வகையான் உரிமைகூறிய

$ உலகம்-மேன்மக்கள். † தம்மை—அரசராகிய தம்மை.

‡ இவையிரண்டும்—வலியாரானதாம் மெலியார்க்குரிய கொடுத்தல் முதலிய மூன்றனைச் செய்தலும், மெலியரானதாம் வலியார்க்குரிய தண்டத்தைச் செய்தலும்.

¶ மேல் (இவ்வதிகாரத்தின் எட்டாவதுகுறளில்)(இன்னின்ன உபாயங்களைச் செலுத்துவதற்கு இனனின்னார் தக்கவரென்று) இடவகையால் உரிமைகூறிய உபாயங்களுக்கு (இன்னின்னார் இன்னின்ன உபாயங்களைச செய்வதற்கு உரியரென்று) வினைமுதல் வகையால் உரிமை சொல்லிய படியா மென்க. வினையைச செய்வதற்கு முதலாயுள்ளது வினைமுதலெனப்படும். வினைமுதலெனினும், செய்பவனெனினும், கருத்தா எனினும் ஒக்கும்.


வாறு. இவை நான்கு பாட்டானுஞ் செய்வனவற்றிற்கு உபாயமும் அத னது உரிமையும் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) தம்மொடு - (அரசர் தொழில் முடித்தற்பொரு ட்டு) தமது நிலைமையோடு, கொள்ளாத - பொருந்தாத உபாயங்களை, (செ ய்வாராயின்), உலகு-உலகமானது, கொள்ளாது - அங்கீகரியாது, (தம்மை இகழும்), (ஆதலால்), எள்ளாத (அவ்வுலகம்) இகழாத உபாயங்களை எண்ணி-ஆராய்ந்து, செயல்வேண்டும் - செய்யக்கடவர், (எ - று).

தம் என்பது தமது நிலைமையையுணர்த்துதலால்பொருளாருபெயராம். தமது நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியவராயிருந்தும் மெலியார் செய்தற்குரியதான சாமபேதங்களென்னும் மூன்றனைச் செய்தலும், மெலியவரா யிருந்தும் வலியார் செய்தற்குரிய தண் டத்தைச் செய்தலுமாம். இவை யிரண்டும் அறிவில்லாதவர் செய்வன ஆத லால் உலகுகொள்ளாது என்றார். அவ்வுலகம் இகழாத வுபாயங்களைச் செய் தலாவது அவ்வுபாயங்களைத் தமது தமது வன்மைக்கும் மென்மைக்குமேற் பச் செய்தல். மூனனர் இடவகையால் உரிமைகூறிய வுபாயங்களுக்குச் செய்பவன் வகையால் உரிமை சொல்லியபடியாம். இவை நான்குபாட்டா லும் செய்யும் தொழில்களுக்கு உபாயமும் அவ்வுபாயத்தினது உரிமை யும் சொல்லப்பட்டன. வன்மை - வல்லமையுடைமை; மென்மை-அஃதில் லாமை.

(க - து.) அரசர் தங்காரியம் முடிதற் பொருட்டுத் தமது நிலைமையோடு பொருந்தாதவற்றைச் செய்வாரானால், அவற்றை யுலகம் ஏற்றுக்கொள்ளாது என்பது.

10. Let a man reflect, and do things which bring no reproach; the world will not approve, with him, of things, which should not be approved of.



பத்தாம் அதிகாரம்

வலியறிதல்—*On the Knowledge of Resources.*

பரி:—அஃதாவது அவ் ¶ வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்த அர சன் ‡ நால்வகை வலியையும் $ அளந்தறிதல். † அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

¶ உபாயங்களுள் - தானமுதலிய நால்வகையுபாயங்களில் [உபாயம் சூழ்ச்சி].

‡ நால்வகைவலி - வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணைவலி.

$ அளந்தறிதல் - வரையறுத்தறிதல்.

† தெரிந்து செயல்வகை என்னும் அதிகாரத்தின் பின் வலியறிதல் என்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

தெளி:—அஃதாவது அவ்வுபாயங்களுள் தண்டஞ்செய்யக் கருதிய அரசன் நால்வகை வலியையும் அளந்து அறிதலாம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

க. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

பரி:—(இ - ள்.) தான்செய்யக்கருதிய வினைவலியையும் அதனைச் செய்து முடிக்கும் தன்வலியையும் அதனை விலக்கவுறும் மாற்றான்வலியையும் † இருவர்க்குந் துணையாவார் வலியையும் சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின், அவ்வினையைச் செய்க, (எ - று).

‡ இந்நால்வகைவலியுள் வினைவலி அரண்முற்றலும் கோடலும் ¶ முதலியதொழிலானும், $ ஏனைய மூவகையாற்றலானுங் கூறுபடித்தது தூக்கப்படும். தன்வலி மிகவின்கட் செய்கவென்ற விதியால், தோற்றல் ஒரு தலையாய குறைவின் கண்ணும் வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றாம்.

தெளி:—(இ - ள்.) வினைவலியும் - (தான் செய்யக்கருதிய) தொழிலது வலியையும், தன்வலியும் - (அத்தொழிலைச்செய்து முடிக்கும்) தனது வலியையும், மாற்றான்வலியும் - (அதனைத்தொழிலை விலக்கும்) பகைவனது வலியையும், துணைவலியும் - (இருவர்க்கும்) துணையாவாரது வலியையும், தூக்கி - ஆராய்ந்து, (தனது வலி மிகுமாயின்), செயல் - (அத்தொழிலைச்) செய்யக்கடவன், (எ - று).

இந்நால்வகைவலியுள் வினைவலியானது கோட்டையை வளைத்தலும் பிடித்தலும் முதலிய தொழில்களாலும், மற்றையன மூவகையாற்றல்களாலும் கூறுபடுத்தி ஆராயப்படும். (அரசன் பகைவரோடு போர்செய்தலைத் தன்வலி மிகுந்த விடத்துச் செய்க என்ற விதியினால் தோற்றல் நிச்சயமாகிய குறைவினிடத்தும், வெல்லுதல் சந்தேகமாகிய சமநிலையிலும் அத்தொழிலை விடக்கடவனென்பது பெற்றாம்.

(க - து.) அரசன் வினைவலி முதலிய நான்கு வலியையும் ஆராய்ந்தறிந்து செய்காரியத்தைச் செய்யக்கடவன் என்பது.

† இருவர்க்கும் - தனக்கும் தன் பகைவனுக்கும்

‡ இந்நால்வகைவலியுள் - வினைவலிமுதலிய நால்வகை வலிகளில்.

¶ முதலிய என்றதனால் தம்மதிலைக்காத்தல், பகைவரது சூழ்ச்சி தலையெடுக்காவண்ணஞ் செய்தல் முதலியவற்றையுங் கொள்க.

$ ஏனைய மூவகையாற்றலானும் கூறுபடித்து-மற்றையன(தன்வலி,மாற்றான்வலி, துணைவலிகளை) அறிவு, ஆண்மை பெருமையென்னும் மூவகையாற்றலாலும் பகுத்து.

1. Let a king weigh well the strength of the deed he purposes to do; let him consider his own strength, the strength of his enemy, and the strength of the allies of both, and then let him act.

உ. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

பரி:—(இ - ள்.) தமக்கியலும் வினையையும் † அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து எப்பொழுதும் ‡ மன மொழி மெய்களை அதன்கண்வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு முடியாத பொருளில்லை, (எ - று).

'ஒல்வது' எனவே ¶ வினைவலி முதலாய மூன்றும் அடங்குதலின், ஈண்டறிவதென்றது § தினைவலியேயாயிற்று.எல்லாப்பொருளுமெய்துவ ரென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் வலியின் பகுதியும் அஃதறிந்து மேற்செல்வாரெய்தும் பயனுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) ஒல்வது - (தமக்குப்) பொருந்துந் தொழிலையும், அறிவது - (அதற்கு) அறிய வேண்டுவதாயவலியையும், அறிந்து - தெரிந்து, அதன்கண் - அத்தொழிலினிடத்து, தங்கி - (மன மொழி மெய்களை எப்போதும்) வைத்து, செல்வார்க்கு - (பகைவர்மேல்) செல்லும் அரசருக்கு, செல்லாதது - முடியாதபொருள், இல் - இல்லை, (எ - று).

'ஒல்வது' என்ற கூறவே வினைவலிமுதலியமூன்றும் அடங்குதலால், இங்கு அறிவதென்றது தினைவலியேயாயிற்று. (காலவகை வலியுமுடையார் எளிதிலே) எல்லாப் பொருள்களையும் அடைவாரென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் வலியின்பகுப்பும், அவ்வலியினை அறிந்து பகைவர் மேற் செல்வார்பெறும் பயனும் சொல்லப்பட்டன.

(க - து) தமதுவலியையும் அதற்கு வேண்டுவதாய தினை வலிபையுமறிந்து செய்யத்தக்க தொழிலைச் செய்வார்க்கு முடியாத காரியமில்லை யென்பது.


† அதற்கு - அவ்வினைக்கு.

‡ மன மொழி மெய்களை யதன்கண் வைத்து - மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணங்களையும் அத்தொழிலிற்செலுத்தி. (செலுத்தலாவது அதுபற்றி யாலோசித்தலும் புரோகிதர் அமைச்சர்களுடன் கலந்து பேசுதலும் அதற்குதவியாவாரைக் காணலுமாம்).

¶ வினைவலி, தன்வலி, மாற்றான் வலி என்னு மூன்றும்.

§ தினைவலி-தமக்கும் பகைவர்க்கும் தினை (உதவி) யாயுள்ளவாது வலிமை.

2 There is nothing which may not be accomplished by those who, before they attack an enemy, make themselves acquainted with their own ability, and with whatever else is needful to be known, and apply themselves wholly to their object.



உ. உடைத்தம் வலியறியா ருக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

பரி:—(இ - ள்.) கருத்தாவாதலையுடைய தம்வலியின் அளவறியாதே † மனவெழுச்சியால் தம்மினவலியாரோடு ‡ வினைசெய்தலைத் தோடங்கி ¶ அவர் அடர்த்தலான் [] அது செய்து முடிக்கப்பெறாது இடையே கெட்ட () அரசர் உலகத்துப் பலர், (எ - று).

†† உடைய வென்பது அவாய் நின்றமையின், செயப்படுபொருள்வருவிக்கப்பட்டது. மூவகையாற்றலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின் 'முரிந்தார் பலர்' என்றார். அதனால் தம்வலியறிந்தே தொடங்குக வென்பது எஞ்சி நின்றது.

தெளி:—(இ - ள்.) உடை - (தலைவனுதலை) உடைய, தம்வலி - தமதுவலியினளவை, அறியார் - தெரிந்து கொள்ளாதவ ராகியே, ஊக்கத்தின் - மனவெழுச்சியால், ஊக்கி - (தம்மின் வலியாரோடு)போர்செய்தலைத்தொடங்கி, (அவர்வருத்தாதலால் அது செய்து முடிக்கப்பெறாமல்), இடைக்கண் - நடுவிலே, முடிந்தார் - கெட்டவரசர், பலர் - (உலகத்தில்) பலராவார், (எ - று).

உடைய என்பது தலைவனுதலை என்னும் செயப்படுபொருளை யாவி (வீரும்பி) நின்றமையின், அது வருவிக்கப்பட்டது. அறிவு, ஆண்மை, பெருமை என்னு மூவகையாற்றலு (வல்லமையு)ள்ளும் சிறப்புடைய, அறிவையுடையவர் சிலராதலால் 'முரிந்தார் பலர்' என்றார். அதனால் தம்வலி அறிந்தே (போர்செய்தலைத்) தொடங்குக வென்பது குறைந்து நின்றது.

† மனவெழுச்சி - உற்சாகம்.

‡ வினைசெய்தலை - போர்செய்து வெல்லுந் தொழிலை.

¶ அவர் - தம்மிலும் வலியவரான பகையரசர்.

[] அதுசெய்து முடிக்கப் பெறாது - தாந் தொடங்கிய போர்த்தொழிலைச் செய்து முடித்தற்கியலாமல்.

() அரசர் என்றது இராவணன் துரியோதனன் முதலாயினோரை.

†† ஈறுகுறைந்து நின்ற உடையென்னும் குறிப்புப் பெயரெச்சம் செயப்படுபொருளை யாவி (வேண்டி) நின்றமையின், கருத்தாவாதலை என்பது வருவிக்கப்பட்டது.

(க - து.) தமது வலியறியாது வலியாரோடு போர்புரிந்து புறங்கொடுத்தோடிய வரசர் பலர் என்பது.

3. There are many who, ignorant of their want of power to meet it, have haughtily set out to war, and broken down in the midst of it.



சு. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னே
வியந்தான் விரைந்து கெடும்.

பரி:—(இ - ள்.) அயல் வேந்தரோடு பொருந்தி ஒழுதுவதுஞ் செய்யாது தன் வலியளவறிவதுஞ் செய்யாது * தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன் விரையக் கெடும், (எ - று).

† காரியத்தைக் காரணமாக உபசரித்து 'வியந்தான்' என்றார். ‡ விரையவென்பது திரிந்து நின்றது. நட்பாயொழுகுதல் வலியறிந்து பகைத்தலென்னும் இரண்டனுள், ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது; ¶ இவையன்றித் தான் மெலியனுய்வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு § ஒருபொழுதும் நிலையின்மையின் 'விரைந்துகெடும்' என்றார். இவையிரண்டுபோட்டானுந் தன்வலி யறியா வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது

தெளி:—(இ - ள்.) ஆங்கு - அயல்வேந்தருடன், அமைந்து - பொருந்தி, ஒழுகான் - ஒழுகுவதுஞ் செய்யாமல், அளவு - (தன்வலி) அளவை,

* தன்னை வியந்து - தன்னை மற்றை யரசரிலும் மேம்பட்டவனுக மதித்து.

† வியத்தலா லுண்டாகும் பகையை வியந்தான் என்று கூறினமையின், இது காரியங் காரணமாய உபசார வழக்காம்.

[அயல்வேந்தருடன் பகைத்தல் காரியம்; அதற்குக் காரணம் தன்னை வியத்தல். பகைத்தான் என்று கூறாது வியந்தான என்றுகூறினமையால் காரியத்தை (பகைத்தலை)க் காரணமாக (வியத்தலாக) உபசரித்து 'வியந்தான்' என்றார் என்று கூறப்பட்டது]

‡ கெடும் என்னும் (நிகழ்கால அல்லது எதிர்கால) செய்யுமென்னும் வினைமுற்றே டீண்டடன் நிகழ்வது செயலென்னும் வாய்பாட்டு வினையெசமாதலால், 'விரைய என்பது (விரைந்து எனத்) திரிந்து நின்றது' என்று கூறப்பட்டது. விரைந்து என்பது செய்தென்னும் வாய்பாட்டிறந்த கால வினையெச்சம்.

¶ இவையன்றி - நட்பாயொழுகுதல் வலியறிந்து பகைத்தலென்னும் இரண்டு மல்லாமல்.

§ ஒருபொழுதும் நிலையின்மையின் - சிறிது பொழுதுகூட அழியாது நிற்கும் நில்லாமையினால்.

அறியான் - அறிவதஞ் செய்யாமல், தன்னை வியந்தான் - தன்னை மெச் சிக்கொண்டு (அவ்வயல் வேந்தரோடு பகைத்த) அசசன், விரைந்து -விரை வாக, கெடும் - கெடுவான், (எ - று).

பகைத்தான் என்னும் காரியத்தை (வியந்தானென்னும்)காரணமாக வுபசரித்து 'வியந்தான்' என்று கூறினர். விரையவென்பது விரைந்து எனத்திரிந்து நின்றது. கட்பாயொழுகுதல் வலியையறிந்து பகைத்தல் என்னும் இரண்டனுள், ஒன்றல்லவா வேற்றரசரோடு செய்யத்தக்கது; இ வையல்லாமல் தான் மெலியவனு யிருந்தும் அவ்வேற்றரசரோடு பகை யைக் கொண்டவரசனுக்கு ஒருபோதும் நிலைத்திருத்த லில்லாமையால் விரைந்து கெடும்' என்றார். இவை யிரண்டொட்டாலும் தன்வலியை யறியாதவிடத்தண்டாருங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) அயல் வேந்தருடன் அமைந்தொழுகுவதும் தன் வலியளவையறிவதுஞ்செய்யாது தன்னைப் புகழ்ந்துகொண்டு அவ் வேந்தரோடு பகைத்த அரசன் விரைவாகக் கெடுவான் என்பது.

4. He will quickly perish who, ignorant of the measure of his resources flatters himself with an idea of his greatness and does not live in peace with his neighbours.



ரு. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பேயின்.

பரி:—(இ - ள்.) பீலியேற்றிய சகடமும் * அச்சுமுறியும்; அப்பீலி யை அது பொறுக்கு மளவின்றி மிகுத்தேற்றின், (எ - று).

† உம்மை சாகாட்டது வலிசறிப்பே அன்றிப் பீலியதுகொய்ம்மை சறிப்புந்தோன்ற நின்றது. ‡ இறமென்னுஞ் சினைவினை முதன்மேனின் றது. ¶ எளியனென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயி

* அசசு - உருள் (சக்கரம்) கோத்தமரம்.

† சாகாடும் என்னும் உம்மை உயர்வு சிறப்புப் பொருளையும் இழிவு சிறப்புப் பொருளையும் உணர்த்தி நின்றது.

§ கொய்ம்மை - மிகவிலேசாக விருக்குந் தன்மை.

‡ அச்சிறும் என்பதனுள், அச்சு என்பது சினை; அதனது வினை இறுதல். "சினைவினை சினையோடு முதலொடுஞ் செறியும்" என்று தன் னூல் கூறுவது மிக்கறியத்தக்கதாம்.

சினை யெனினும் உறுப்பெனினும் அவயவமெனினும் ஒக்கும். முத லெனினும் பொருளெனினும் ஒக்குமே. சினையும், குணமும், தொழிலும், சாதியும் என்றும் தனித்திராது ஒருமுதலையேபற்றி நிற்கு மென்க.

¶ "குறைந்த வலிய ராயிடினுங் கொற்ற மைந்தர் பலர்கூடின், நிறை ந்த வலியென் னுமதனு னோரா தொழிக பலரோடு" என்று விராடபுரா ணங் கூறுவது மிக்கறியத்தக்கதாம்.

ணும், அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருள்தோன்ற நின்றமை யின், இது * பிறிது மொழிதலென்னும் அலங்காரம். ஓதினே நுவலாது வற்றி யென்பாரும் ஒட்டென்பாருமுளர். ஒருவன் தொகுவார் பலரோடு பகைகொள்ளற்க வென்றமையின், இதனுள் மாற்றான் வலியும் அவன் துணைவலியும் அறியாவழிப்பயம் இழுக்குக் கூறப்பட்டது.

தேவி:—(இ - ன்.) பீலி - மயிலிறகை, பெய் - ஏற்றிய, சாகாடும் - பண்டியும், அச்சிறும் - அச்சு முறியும், அப்பண்டம் - அம்மயிலிறகை, (அப்பண்டி சுமக்கு மளவி னல்லாமல்), சால மிகுத்து-மிகவும் அதிகப்படுத்தி, பெயின் - ஏற்றினால், (எ - று).

சாகாடும் என்னும் உம்மை பண்டியினது வலியின் சிறப்பே யல்லா மல் மயிலிறகினது மெலிமைச் சிறப்புந் தோன்ற நின்றது. அச்சிறும் என்னும் சினவினே அச்சினேயினது முதலாகிய பண்டியின்மேல் நின் றது. எளியரென்ற பலரோடு பகையைக் கொள்வான் தான் வலியவனுக வே யிருந்தாலும் அவ்வெளியவர் பலர் கூடியவிடத்து வலி யழிவாகென் னும் பொருள்பட நின்றமையால், இது பிறிது மொழிதலென்னும் அல ங்காரமாம். ஒருவன் கூடுவார் பலருடன் பகைகொளலற்க வென்றமையின், இதனால் பகைவன் வலியையும் அவன் துணைவலியையும் அறியாதவிடத் தண்டாகுக குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) தான் வலியவனென்று கருதி எளியார் பலரோடு பகைக்கும் அரசன் அவர் கூடி யெதிர்த்தபோதுதவறுது கெடு வான் என்பது.

5. The axletree of a bandy loaded only with peacock's feathers will break, if it be greatly overloaded.

ஒருபொருளைப் புலப்படுத்தற்கு அதனேடொத்த மற்றொரு பொரு ளைக்கூறுதல் பிறிதுமொழிதலெனனும் அலங்காரமாம்; அஃதாவது உவமா னத்தைமாத்திரங்கூறி அதுவாயிலாக உவமேயத்தைப் பெறவைத்தலாம். இங்குப்'பீலிபெய் சாகாடு மச்சிறுமப்பண்டம்,சால மிகுத்துப் பெயின்'என் றுவமானத்தை மாத்திரம் கூறி அது வாயிலாக எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனே யாயினும்,அவர் தொக்கவழிவலியழியும் என்னும் உவமேயத்தைப் பெறவைத்திருத்தலைக்காண்க. பண்டியின் அச்சு பலமுடையதாயிருந்தாலும் பலமில்லாத மயிலிறகை யளவுகடந்தேற்றிய விடத்து அதுமுறிவதுபோல, ஒருவன் எவ்வளவு பலமுடையவனுயினும்தா னும் பலவீனர் பலர்கூடி எதிர்த்தவிடத்து அவன் அழிவான என்பது இர ண்ட பொருளாமென்க. இலக்கண விளக்கம் 'கருதிய பொருடொகுத லதுபுலப் படுத்தற், தொகுதலொண் முரைப்ப தொட்டா மதுவே'' என்னு ஞ்சூத்திரத்தினுரையில் "ஒட்டெனினும், உள்ளுறையுவமமெனினும், உவ மப்போலியெனினும், பிறிது மொழிதலெனினும், நுவலாநுவற்சி யெனி னும் ஒக்கும்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

நுனிக்கோம்ப ரேறினு ரஞ்திறங் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

பரி:—(இ - ன்.) ஒருமரக்கோட்டினது நுனிக்கண்ணே ஏறி நின்றார் தம் ஊக்கத்தால் * அவ்வளவினைக்கடந்து மேலும் ஏற † ஊக்குவாராயின், ‡ அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாயி முடியும், (எ - று).

¶ நுனிக்கொம்பரென்பது கடைக்கணெண்பதுபோலப் பின்முன்னாகத் தொக்க ஆரும் வேற்றுமைத் தொகை. § பண்மை அறிவின்மை பற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கேதுவாவதனை () 'இறுதி' என்றார். பகைமேற் செல்வான் தொடங்கித் தன்னுற் செல்லலாமளவுஞ் சென்று நின்றான், பின் அவ்வளவின் நில்லாது மனவெழுச்சியான் மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினைமுடிவிற் கேதுவாகாது அவன் உயிர்முடிவிற் கேதுவாமென்னும் பொருள் தோன்ற நின்றமையின், இதுவும் மேலை அலங்காரம். அளவறிந்து நிற்றல்வேண்டுமென்றமையின், இதனால் வினைவலி யறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) கொம்பர் - (ஒருமரக்) கொம்பினது, நுனி-நுனியிலே, ஏறினார் - ஏறி நின்றவர், (தமது மனவெழுச்சியால்), அஃதி - அவ்வளவினை, இறந்து - கடந்து, ஊக்கின் - (மேலும் ஏற) மனவெழுச்சி கொள்ளுவாராஞல், (அவ்வெழுச்சி), உயிர்க்கு - (அவர்) உயிர்க்கு, இறுதியாகி விடும் - முடிவாகிவிடும், (எ - று).

அவ்வளவினைக்கடந்து - ஒரு மரக்கொம்பினது நுனியிலே ஏறி நின்ற அவ்வளவினைக்கடந்து.

† ஊக்குவாராயின் - முயலுவாராஞல். ‡ அவ்வூக்கம்-அந்த முயற்சி.

¶ கண்ணின்கடை யென்னும் ஆரும் வேற்றுமைத தொகை பின்முன்னுகமாறிக் கடைக்கண் என நின்றாற்போன்று கொம்பர் நுனியென்னும் ஆரும் வேற்றுமைத் தொகை பின்முன்னுகமாறி நுனிக்கொம்பர் என நின்றது. இவ்வாறு நுனிநா இடைகா முதலு மீகண் எனவருதலையுங் காண்க. இங்ஙனம் பின்முன்னுக மாறிவருவன வெல்லாம் இலக்கணப்போலியாம். கொம்பர் என்பது இடக்கர் வண்டர் என்பன போன்று கடைப்போலி மொழியாம்.

§ ஏறினார் என்னும்பன்மை(பலர்பால்)இங்கிழித்தது (கீழ்ப்படுத்தி)க் கூறும் பொருளில் வந்தது. தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளவியாக்கம் "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்" என்னுஞ் சூத்திரத்தின் விசேட உரையில் சேனாவரையர் "தாம்வந்தார் தொண்டனூர் எனப்பன்மைக் கிளவி இழித்தற்கண்ணும் வந்ததாலெனின், ஆண்டு உயர் சொற்றானே குறிப்பு நிலையால் இழிபு விளக்கிற்றென்பது" என்று கூறுதல் மிக்கறியத்தக்கது.

() இறுதிக்குக் காரணமாய ஊக்கத்தை இறுதி என்று கூறினமையின், இது காரியவாகு பெயராம்; காரியன் காரணமாய வுபசாரவழக்குமாம்.

கண்கடை என்பது கடைக்கண் என முன்பினனுயது போலக் கொம் பர்நுனியென்பது நுனிக்கொம்பர் என்முயது. இஃது ஆரும் வேற்றுமை த்தொகை. வறிஞர் என்னும் பன்மை அறிவில்லாமை பற்றி இழித்துக் கூறுதலில் வந்தது. இறுதிக்குக் காரணமாகும் ஊக்கத்தை 'இறுதி' என்முர். பகைவர்மேற் போர்க்குச் செல்லத்தொடங்கித் தன்னுற் செல்லுதற்குரிய வளவுஞ் சென்று நின்றவன், பின் அவ்வளவிலே நில்லாமல் மனவெழுச்சி யினுல் மேலுஞ் செல்லுவானுயின், அவ்வெழுச்சியானது தொழில் முடி தற்குக் காரணமாகாமல் அவனுயிர் முடிதற்குக் காரணமாம் என் னும் பொருள் தோன்ற நின்றமையின், இக்குறளும் மேற் கூறிய பிறிதுமொழிதல் என்னும் அலங்காரமாம். அளவறிந்து நிற்றல்வேண்டு மென்றமையின், இதனுல் வீண வலியை அறியாதவிடத்தண்டாகும் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து) அரசன் தான்மேற்கொண்ட வினைக்குத் தக்க அள வைக் கடந்து நடப்பானுயின், அவ்வினை அவனுக்குக் கேட்டைத் தரும் என்பது.

6. There will be an end to his life who having climbed out to the end of a branch ventures to go further.

எ. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

பரி:—(இ - ள்.) ஈயுநெறியானே தமக்குள்ள பொருளின் எல்லை யை யறிந்து அதற்கேற்ப ஈக; அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக் கொண்டொழுகும் நெறியாம், (எ - று).

ஈயும் நெறி மேல் * இறைமாட்சியுள் "வகுத்தலும் வல்லதரசு" என் புழி உரைத்தாம். எல்லைக்கேற்ப ஈதலாவது † ஒன்முன வெல்லையை

* இறைமாட்சி யென்னுமதிகாரம் ஐந்தாவது குறளிலுள்ள 'வகுத்த லும் வல்லதரசு[(காப்பாற்றியபொருளை) அறம் பொரு ளின்பங்களின் பொ ருட்டுச் செலவு செய்தலும் வல்லவனே அரசன்]' என்ற வீடத்துக் கூறினும் என்பது. அங்குப் பரிமேலழகர் "கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க்கும் புகழிற்குங் கொடுத்தலே அறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்றிவற்றிற்கும் பகையோடு கூட்டலிற் பிரிக்கப்படுவோர்க்கும் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவோர்க்குங்கொடுத் தலேப் பொருட் பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இள மரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களா னுகர்வனவற்றிற்குங் கொடு த்தலே இன்பப் பொருட்டாகவுங் கொள்க" என்று கூறியிருக்கின்றனர்.

† ஒன்முன வெல்லையை காண்கு கூறுகின் - ஓரளவுபட்டுத் தமக்குரி த்தாயுள்ள பொருளே காண்கு பாகமாக்கி.

ான்கு கூறுக்கி அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி ஒன்றனை மேல் இடர்வந்துழி அது நீக்குதற் பொருட்டே * வைப்பாகி மின்றவொன்றனை யீதல். † பிறரும் ‡ "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்றார். பேணிக் கொண்டொழுகுதல் ¶ ஒருவரோடு நட்பிலாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டொழுகுதல். $ முதலிற் செலவு சுருங்கிற் பொருள் ஒருகாலும் நீங்கா தென்பதாம்.

தெளி:—(இ - ன்.) ஆற்றின் - (கொடுக்கும்) வழியினாலே, அளவு - (தமக்குள்ளபொருளின்) அளவை, அறிந்து—தெரிந்து, ஈக - (அப்பொருளைவிற்கு ஏற்பக்) கொடுக்கக்கடவன், அது - அவ்வாறு கொடுத்தலானது, பொருள்—பொருளே, போற்றி வழங்குநெறி - காப்பாற்றிக்கொண்டு நடக்கும் வழியாம், (எ - று).

கொடுக்கும் வழி மூன்றே இறைமாட்சி யதிகாரத்தில் "வகுத்தலும் வல்லதரசு" என்றவிடத்திற் கூறினும். பொருளின் அளவிற்கேற்பக் கொடுத்தலாவது ஒன்றன வளவை கான்கு பாகஞ் செய்து அவற்றுள் இரண்டு பாகத்தைத் தன் செலவுக்காக்கி ஒரு பாகத்தைப் பின்னே ஆபத்து வந்தவிடத்து அவ்வாபத்தை நீக்குதற் பொருட்டு இருப்பாக்கி மின்ற ஒரு பாகத்தைக் கொடுத்தல். காப்பாற்றிக்கொண்டு நடத்தலாவது ஒருவரோடு நட்பில்லாத அப்பொருளைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டு நடத்தல். வரவிற் செலவு சுருங்கினால் பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம்.

(க - து.) அளவறிந்து கொடுக்கும் அரசனிடத்துப் பொருள் மிகவே பெறும் என்பது.

---

* வைப்பாக்கி-ஆஸ்தியாக்கி.

† பிறரும் என்றது திரிகடுகமியற்றிய நல்லாதனாரை.

‡ திரிகடுகம், உக. இதன்பொருள். (தமக்கு) வரும் பொருள்களுள் கான்கினொரு பாகத்தை (அறத்தின் பொருட்டுச்) செலவு செய்து வாழ்த்தலென்பது "வந்த பொருளிற் காற்கூறு வருமே லிடர்நீக் குதற்க மைத்து, மைந்த ரிருகா னினைக் காக்கி மற்றைக் காலே வழங்கிடுக" என்று விகாயக புராணங் கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

¶ ஒருவரோடு நட்பில்லாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டொழுகுதல் - எத்தன்மை யாரோடும் சிநேகங்கொள்ளுதலில்லாதபொருளைத் தம்முடன் சிநேகமாக்கிக்கொண்டு தம்மைவிட்டு நீங்காவாறுசெய்து நடத்தலாம். பொருள் ஒருவரோடும் நட்புக்கொள்ளுதலின்றென்பது "திருமக ணிலைமையுஞ் செல்வர் கேட்டிசேண், மருவிய மனிதரை யிகந்த மற்றவன், பொருவற புகழினர் புதிய காமுறு, மொருவர்கண் ணுறவில ளுணர்ந்து கொண்மினே" என்று சூளாமணி கூறுவதாலும் பிறவாற்றாலு முணர்தற்பாற்றும்.

$ (தமக்கு வரும்) முதற் பொருளினும் செலவாகும் பொருள் குறைவாக விருந்தால் பொருள் ஒருகாலும் தம்மைவிட்டு நீங்கா தென்பதாம்.

7. Let a man know the measure of his ability to give, and let him give accordingly; such giving is the way to preserve his property.

அ. ஆகா ளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

பரி:—(இ - ள்.) அரசர்க்குப் * பொருள் வருகின்ற நெறி யளவு சிறி தாயிற்றாயினும் † அதனற் கேடில்லையாம்; ‡ போகின்ற நெறியளவு [] அதனிற் பெருகாதாயின், (எ - று).

¶ இட்டிதெனவும் அகலாதெனவும் வந்த § பண்பின் தொழில்கள் () பொருண்மேனின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து அளவென்பது பின்னுங் கூட்டி உரைக்கப்பட்டன. முதலுஞ் செலவுந் தம்முள் ஒப்பினுங் கேடில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ன்.) ஆகாதளவு - (அரசர்க்குப் பொருள்) வரு கின்ற வழியளவு, இட்டிதாயினும் — சிறிதாயிற்றாயினும், கேடி - (அத னால்) கெடுதல், இல்லை—இல்லையாம், போகாறு (அளவு) - போகின்றவழி அளவு, அகலாக்கடை - (அதனில்) விரியாதாயின், (எ - று).

இட்டிது எனவும் அகலாது எனவும் வந்த அளவு என்னுங் குணத் தின் தொழில்கள் வழியெனனுங் குணியின்மேல் நின்றன. பொருளென்ப தவலியறிதலென்னும் அதிகாரத்தினால் வருவித்து அளவு என்பது போகாறு என்பதனோடுங் கூட்டிச சொல்லப்பட்டன. வரவும் செலவும் தம்முள் ஒத்திருந்தாலும் கேடில்லை யென்பதாம்.

(க - து.) அரசருக்குப் பொருட்செலவு பெருகாதாயின், அப் பொருளின்வரவு சிறிதாயிருப்பினும் அதனால் கெடுதியில்லையாம்.

* பொருள வருகின்ற நெறியளவு - திரவியங் கிடைப்பதற்கு எதுவா யுள்ள மார்க்கத்தினளவு.

† அதனால் - பொருள் வருகின்றவழி சிறிதா யிருப்பதனால்

‡ போகின்ற நெறியளவு-பொருள் செலவாகின்ற மார்க்கத்தினளவு.

[] அதனிற் பெருகாதாயின் - பொருள வருகின்ற வழியளவினும் அதிகரிக்காதிருக்குமாயின்.

¶ ஆகாறு அளவு இட்டிது ஆயினும் என்றும், போகாறு அளவு அகலாக்கடை என்றும் உள்ளவற்றில் இட்டிது என்னும் தொழிலும் அகலாது (அகலாக்கடை) என்னுந் தொழிலும் அளவென்னும் பண்பி (குணத்தி)ற்குரியனவாயிருந்தாலும், அததொழில்கள் அளவென்னும் பண் பையுடைத்தாயிருக்கின்ற நெறியென்னும் பொருளின்மேல் நின்றன என் பதாம். இது குணவினை குணிவினையாய உபசாரவழக்காம்.

§ பண்பின் - அளவென்னுங்குணத்தின்.

() பொருண்மேல் - நெறி (வழி) யின்மேல்.

8 Even though the income of a king be small it will be no loss to him if his outgoings be not large.

கூ அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும்.

பரி:—(இ - ள்.) தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள் உள்ளனபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இன்றிக்கெட்டுவிடும். (எ - று).

‡ அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனிற் சுருங்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈததிற் தீய்த்தும் வாழ்தல். தொடக்கத்திற் கேடு வெளிப்படாமையின் † உளபோலத தோன்று என்றார். ¶ முதலிற், செலவு மிக்கால்வரும் ஏதங் கூறியவாறு

தெளி:—(இ - ள்.) அளவு - (தனக்குள்ள பொருளின்) அளவை, அறிந்து-தெரிந்து (அவ்வளவிற்குப்பொருந்த),வாழாதான்-வாழமாட்டாதவனது, வாழ்க்கை - வாழ்க்கைகள். உளபோல - உள்ளனபோல, தோன்று-தோன்றி, இல்லாய் - (மெய மமையால்) இல்லையாகி, (பின்பு அத்தோற்றமும் இல்லாமல்), கெடும் - கெட்டுவிடும், (எ-று).

அவ்வளவிற்குப் பொருந்த வாழதலாவது அவ்வளவிற் சுருங்கக் கூடாமலிருத்தால் அவ்வளவிற்கு சமமாகவாயினும் கொடுத்தும அனுபவித்தும் வாழ்தல். ஆரம்பதத்தில் வாழ்க்கையின் கேடு வெளிப்படாமையால் உளபோலதத்தான்று என்றார். வரவிற் செலவு மிகுந்தால் வருங்குற்றம் சொலலியபடியாம்.

(க - து) தனக்குள்ள பொருளினளவை யறிந்து வாழாத அரசனது வாழ்க்கை விரைந்து கெடும் என்பது.

9. The prosperity, of him who lives without knowing the measure of his property, will vanish away and perish even while it seems to continue.

கo. உளவரை தூக்காத வோப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

* அதற்கேற்ப - அப்பொருளளவிற் கேற்குமாறு.

‡ அவ்வெல்லைக்கேற்ப - அப்பொருளினளவிற்குப் பொருந்த

† உளபோலத் தோன்றி என்றும் பாடமுண்டு.

¶ இங்கு "ஆன முதலி லதிகஞ் செலவானுல், மான மழிந்து மதி கெட்டுப்-போன திசை, எல்லார்க்குங் கள்ளனு மேழ்பிறப்புந் தீயனுய், நல்லார்க்கும் பொல்லனு நாடு" என்று நல்வழி கூறுவது மறியத்தக்கதாம்.

பரி:—(இ - ள்.) தனக்குள்ள அளவு தூக்காமைக் கேதுவாய † ஒப்புரவாண்மையால் ஒருவன் செல்வத்தினேல்லே விரையக்கெடும்.

ஒப்புரவேயாயினும் ‡ மிகலாகாதென்றமையான், ¶ இதுவுமது. இவை ரான்குபாட்டானும் $ மூவகையாற்றலுள் பெருமையின் பகுதியாய பொருள் வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக் கூறப்பட்ட

தெளி:—(இ - ள்,) உளவரை - (தனக்கு) உள்ளவளவை, தூக்காத—ஆராயாமைக்குக் காரணமாகிய, ஒப்புரவாண்மை-உபகாரமுடைமையால், வளவரை - (ஒருவனது) செல்வத்தினளவு, வல்லேக்கெடும் - விரைவாகக் கெடும், (எ - று)

உபகாரமேயாயினும் மிகலாகாதென்று கூறினமையால், இதுவும் அது. இவை ரான்கு பாட்டாலும் மூவகை ஆற்றலுள் பெருமையின் பகுதியாகிய பொருள் வலியறிதல் சிறப்புநோக்கி வகுத்துச் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் தனக்குள்ள பொருளினளவை யாராயாது அளவு கடந்து செலவு செய்தால் அவனது செல்வம் விரைவாகக் கெடும் என்பது.

10. The measure of his wealth will quickly perish, whose liberality weighs not the measure of his property.

பதினேன்றும் அதிகாரம்.

காலமறிதல்—

On the discernment of a suitable time.

பரி:—அஃதாவது () வலியான் மிகுதியுடையனுய்ப் பகைமேற்சே

* அளவு - பொருளினளவு.

† ஒப்புரவு - உலக டையை யறிந்துதவி செய்தல். ஒப்புரவாண்மை - ஒப்புரவை யாளுந் தன்மை.

‡ மிகலாகாது - பொருளளவிற்கு மேற்படலாகாது.

¶ இதுவுமது - இக்குறளும் 'அளவறிந்து வாழாதான்' என்னுங் குறளிற் கூறியதுபோல என்பது; அஃதாவது முதலிற் செலவுமிக்கால் வரும் ஏதங்கூறியவாறு என்பதாம்.

$ அறிவு ஆண்மை பெருமை யென்னு மூவகையாற்றல்களுள் பொருள் படை யென்றிருவகைத்தாய பெருமையின் பகுதியாய பொருள், வலியறிதல் மற்றைய ஆற்றல்களோ யறிதலிலும் சிறப்புடையதாயிருத்தல் பற்றி வகுத்துச் சொல்லப்பட்டதென்க.

() வலியான் மிகுதியுடையனுய் - வினைவலி தன்வலி மாற்றுன்வலி தினைவலி யென்னும் ரான்கனுள் தன்வலியும் தினைவலியும் மிகுதியாக உடையவனுய்.

றலுற்ற அரசன் * அச்செலவிற் கேற்ற காலத்தினையறிதல். † அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி:—அஃதாவது வலியினால் மிகுதியுடையவனுப்ப் பகைவர் மேல் போருக்குச் செல்லத்தொடங்கிய அரசன் அச்செல்லுதலுக்கேற்ற காலத்தினை யறிதல். அதிகாரமுறைமையும் இதனுளே விளங்கும்.

க. ‡ பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

பரி:—(இ-ள்.) தன்னின் வலிதாய ¶ கூகையைக் காக்கை () பகற் பொழுதின்கண் வெல்லாநிற்கும். ‖ அதுபோலப் பகைவாது [] இகலே வெல்லக்கருதும் அரசர்க்கு அதற்கேற்ற †† காலம் இன்றி யமையாது

§ எடுத்துக்காட்டுவமை, காலமல்லாவழி வலியாற் பயனில்லே யென்

அச்செலவிற் கேற்ற காலத்தினை யறிதல் - அவ்வாறு பகைவர்மேற் போர்க்குச் செல்லுவதற்குத தருதியாயமைந்த காலத்தினே யாராய்ந்தறி தல்.

† வலியறிதலென்னும் அதிகாரத்தின்பின் காலமறிதலென்னும் அதி காரம்வைத்த முறைமையும்.

‡"இடத்தொடு பொழுது நாடி யெவ்வினைக் கண்ணு மஞ்சார், மடப் படலின்றிச சூழு மதிவல்லார்க் கரிய தணேடோ, தடத்திடைக் காக்கை யொன்றே யாயிரங் கோடி கூகை, யிடத்திடை யழுங்கச் சென்றுங் கின்னுயிர் செகுத்த தன்றே" என்பது சிவகசிந்தாமணி.

¶ "மரம்பயில் கூகையைக் கோட்டா னென்றலும்" என்பது தொல் காப்பியம் மரபியல்.

() பகற்காலத்தில் கூகைக்கு (கோட்டானுகு) க்கண்தெரியாமையால் அக்கூகையை வெல்லக்காக்கைக்கு அப்பகல் தக்க காலமாயிற்றென்க.

காக்கைக்கிரவிலும் கூகைக்குப் பகலிலும் கண்தெரியாதென்பதிங் குணர்தற் பாலதாம்.

‖ ஆதலால் என்றும் பாடமுண்டு.

[] இகல் -இருவர் தம்முள்ளே போர்செய்து வலிமை தொலைதற்குக் காரணமாய மாறுபாடு.

†† "சில மல்லன நீக்கிச்செம் பொற்றூலைத், தால மன்ன தனிகிலே தாங்கிய, ஞால மன்னற்கு நல்லவர் சோக்கிய, கால மல்லது கண்ணுமுண் டாகுமோ" என்பது இராமாயணம்.

§ பகல்வெல்லுங் கூகையைக் காக்கை ; இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது என் றிரண்டொவ்வாயெம் வற்றிடையே அதுபோல என் னும்உவமவுருபு தொக்கு நின்றமையின், இக்குறள் எடுத்துக் காட்டுவமை யாயிற்றென்க.

பது வினக்கி கின்றது. * இனிக் காலமாவது வெம்மையுங் குளிர்ச்சியுந் தம்முள் ஒத்தி நோய் செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத் தாய்த் தானே வருந்தாது செல்லும் இயல்பினதாம். இதனுற் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) காக்கை - காக்கையானது, கூகையை - (தன்னிலும் வலியுடையதாகிய) கோட்டானை, பகல் - பகற்பொழுதில், வெல்லும்-வெல்லா நிற்கும்,(அதுபோல),இகல்-(பகைவரது)மாறுபாட்டை, வெல்லும் - வெல்லக்கருதுகின்ற, வேந்தர்க்கு - அரசர்க்கு, பொழுது - (அவ்வெல்லுதற்கேற்ற) காலம், வேண்டும் - (அவசியமாய்) வேண்டும். ()

இக்குறள் எடுத்துக்காட்டுவமையணி. இது காலமல்லாதவிடத்து வலியினுல் பயனில்லை யென்பதை வினக்கி கின்றது. இனிக்காலமாவது வெம்மையும் குளிர்ச்சியும் தமமுள்ளே சமமாய் நோய் செய்யாமல் தண்ணீரும் உணவும் முதலியனவுடையதாய்ச் சேனை வருந்தாமல் செல்லும் தன்மைய தாம். இதனுல் காலத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து.) அரசர் பகைவரைக் காலமறிந்து கொல்லல்வேண்டும்.

1, A crow will overcome an owl in the day time: the king who would conquer his enemy must have a suitable time.

உ. பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

பரி:—(இ - ள்.) அரசன் காலத்தோடு பொருந்த் வினை செய்து ஒழுகுதல் ஒருவர் கண்ணும் நில்லாது நீங்குந் செல்வத்தைத் தன்னின் நீங்காமற் பிணிக்குங் கயிறும், (எ - று).

காலத்தோடு பொருந்துதல்—காலச் சப்பாமற் செய்தல். † 'தீராமை' என்றதனுல் தீர்தண்மாலையதென்பது பெற்றும். வினை வாய்தது வருதலான் ‡ அதனின் ஆருஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காதென்பதாம்.

தெளி.—(இ - ன்.) (அரசன்) பருவத்தோடொட்ட - காலத்தோடு பொருந்த, ஒழுகல்-(தொழில் செய்து) நடத்தல், திருவினை - (ஒருவரிட

* மனுதருமசாஸ்திரம் ஏழாவதத்தியாயத்தில் "சுபமான மார்கழிமாதத்தில் அரசன் சண்டைக்குப் போகவேண்டும்; தனக்குப் பலக்குறைவில்லாதிருந்து பலகாலத்திலேயே சத்துருவின் தேசத்தை யெதிர்க்கவேண்டுமென்று மனமிருந்தால் பங்குனித்திங்களை மாதங்களிலும்போகலாம்." "மற்ற மாதங்களிலும் தனக்கு நிசசயமாகவெற்றியுண்டாகு மென்றும், தன் சத்துரு சதுரங்கபல மில்லாமல் தன்பப்படுகிறானென்றும், தோன்றினுல் போகலாம்." என்று கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

† (செல்வம்) தீராமை (நீங்காமல்) என்றதனுல் (அது)தீர்தண்மாலைய (நீங்குந் தன்மைய) தென்பது பெற்றும்.

‡ அதனின் - வினைவாய்த்து (தொழில் கைகூடி) வருதலால்.

த்தும் நில்லாது நீங்குஞ்) செல்வத்தை, நீராமை - (தன்னிடத்தினின்று) நீங்காமல், ஆர்க்கும் - கட்டும், கயிறு - கயிறாகும், (எ - று).

காலத்தோடு பொருந்துதல்—(மேற்கொண்ட தொழிலை) காலத்தப் பரமற் செய்தலாம். 'நீராமை' என்றதனால் செல்வம்நீருந்தன்மையதென் பது பெறப்பட்டது. தொழில் கைகூடிவருதலால் அதனாலுண்டாகும் செல்வம் எக்காலும் நீங்காதென்பதாம்.

(க - து.) காலமறிந்து தொழில் செய்பவரிடத்துச் செல்வம் நீங்காதென்பது.

2. Acting at the right season, is a cord that will immoveably bind success to a king.



௬. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

பரி:—(இ - ன்.) அரசரால் செய்தற்கரிய வினைகளென்று சொல் லப்படுவன * உளவோ, † அவற்றை முடித்தற்காங் கருவிகளுடனே செய்தற்காங்காலம் அறிந்து செய்வாராயின், (எ - று).

கருவிகளாவன ‡ மூவகையாற்றலும் ¶ நால்வகை உபாயங்களுமாம். அவை உளவாயவழியுங் காலம் வேண்டுமென்ப தறிவித்தற்கு † 'கருவி யான்' என்றார். எல்லாவினையும் எளிதின் முடியு மென்பதாம்.

தெளி:—(இ - ன்.) அருவினை யென்ப - (அரசரால்) செய்தற்கரிய தொழில்களென்று சொல்லப்படுவன, உளவோ - உண்டோ, கருவியான் - (அத்தொழில்களை முடித்தற்காகும்) சாதனங்களுடனே, காலம் - (செய் தற்காகும்) காலத்தை, அறிந்து செயின் - தெரிந்துசெய்வாராஞல், (எ - று).

கருவிகள் - மூவகையாற்றல்களும் நால்வகை உபாயங்களுமாம். அவை உண்டாகியவிடத்தும் காலம் வேண்டுமென்பது அறிவித்தற்குக் 'கருவி யான்' என்றார். இவ்வாறு செய்வார்க்கு எல்லாத் தொழில்களும் எளிதாக முடியுமென்பதாம்.

(க - து.) தாமேற்கொண்ட தொழிலைச் செய்தற்குரியகால மறிந்து அதற்குத்தக்க சாதனங்களுடனே செய்தால் அருமை யான தொழில் யாதொன்றுமில்லை என்பது.

---

* உளவோ என்பது இல்லை யென்னும் பொருளை யுணர்த்திநின்றது. (ஓகாரம் எதிர்மறைப்பொருளது.)

† அவற்றை - செய்தற்கரியவினைகளை.


‡ மூவகையாற்றல் - அறிவு, ஆண்மை, பெருமை.

¶ நால்வகை யுபாயம் - தான சாம பேத தண்டம்.

* அவை - மூவகையாற்றல், நால்வகையுபாயம்.

† கருவியாற் காலமறிந்து செயின் என்றும் பாடமுண்டு.

3. Is there anything difficult for him to do, who acts with the right instruments, at the right time?



ச. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

பரி:—(இ - ள்.) ஒருவன் ஞாலமுழுதுந் தானே ஆளக்கருதினுன் ஆயினும் * அஃது அவன் † கையகத்ததாம்; ‡ அதற்குச்செய்யும் வினையைக் காலமறிந்து இடந்தோடு பொருந்தச் செய்வனுயின், (எ-று).


இடத்தான் என்பதற்கு ¶ மேற் கருவியான் என்பதற்கு உரைத்தாங் குரைக்க. கைகூடாதனவும் கைகூடுமென்பதாம். இவை மூன்று பாட்டானுங் காலமறிதற்பயன் கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்.) (ஒருவன்) ஞாலம் - பூமிமுழுதும், கருதினும் - (தானே ஆள) நினைதலானுலும், (அது), கைகூடும் - (அவன்)கைக்குள்ளாம், (அதற்குச் செய்யுந்தொழிலை), காலம் - காலத்தை, கருதி-அறிந்து, இடத்தான - இடத்தோடு, (பொருந்த), செயின் - செய்வானுயின், (எ-று).

இடத்தான் என்பதற்கு மேலுள்ள குறளில் கருவியான் என்பதற்குச் சொல்லியவாறு சொல்லிக்கொள்க. இவ்வாறு செய்வார்க்குக் கைகூடாதனவும் கைகூடுமென்பதாம இவைமூன்று பாட்டாலும் காலமறிதலின் பயன் சொல்லப்பட்டது. கைகூடுதல்-பெறப்படுதல்.

(க-து) காலம பார்த்து இடத்திற்குத் தக்கவாறு தொழில் செய்யும் அரசன் உலகமுழுதும் ஆளுவான் என்பது.

4. Though a man should meditate the conquest of the world, he may accomplish it, if he acts in the right time, at the right place.



ஞ. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

பரி:—(இ - ள்.) தப்பாது ஞாலமெல்லாங் கொள்ளக்கருதும் அரசர் தம் வலி மிகும்ஆயினும் * அதுகருதாது † அதற்கேற்றகாலத்தையே

அஃது - உலகமுழுதும். கையகத்ததாம்-வசத்ததாம்.

‡ அதற்கு-உலகமுழுதுந் தானே ஆளுதற்கு.

¶ மேல் ('அருவினையென்ப' என்னுங்குறளில்) மூவகையாற்றலும் கால்வகை யுபாயங்களுமாகிய கருவிக ளுண்டாயவிடத்தும் காலம் வேண்டுமென்றுரைத்தாற் போல இடம் உண்டாயவிடத்தும காலம் வேண்டுமென்றுரைத்துக் கொள்க என்பது.

* அது கருதாது - தம் வலிமிகுதியை முக்கியமாக எண்ணுமல்.

அதற்கேற்ற - உலகத்தைக் கைக்கொள்ளுதற்குத் தக்க.

கருதி அது வருந்துணையும் பகைமேற் செல்லார், (எ - று).

தப்பாமை - † கருதியவழியே கொள்ளுதல். வலி மிகுதி 'காலங்கருதி' என்றதனாற் பெற்றாம். ‡ அது கருதாது செல்லின் இருவகைப் பெருமையுந் தேய்த்து வருத்தமும் உறுவராகலின் 'இருப்பர்' என்றார். இருத்தலாவது ¶ கட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறுவகைக் குணங்களுள் மேற்செலவிற்கு மாறுயது. இதனாற் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கலங்காது - தப்பாமல், ஞாலம் - பூமியெல்லாம், கருதுபவர் - (கொள்ள) நினைக்குமரசர், (தம்வலி மிகுமாயினும் அதனை நினையாமல்), காலம் - (அதற்கு ஏற்ற) காலத்தையே, கருதி - நினைத்து, இருப்பர்-(அது வருமளவும் பகைவர்மேற்செல்லாது) இருப்பார், (எ - று).

தப்பாமை - நினைத்தபடியே கொள்ளுதல். வலிமிகுதி 'காலங்கருதி' என்றதனால் பெறப்பட்டது. அதை நினையாமற் (பகைவர் மீது போர்க்குச்) சென்றால் பொருளும் படையும் ஆகிய இருவகைப்பெருமையும் குறைந்து வருத்தமுமடைவராகலால் 'இருப்பர்' என்றார். இருத்தலாவது கட்பாக்கல், பகையாக்கல், பகைவர்மேற் செல்லுதல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுவகைக் குணங்களுள் பகைவர்மேற் செல்லுதற்கு மாறுயது. இதனாற்காலம் வாராதவிடத்துச் செய்வது சொல்லப்பட்டது.

(க - து.) பூமி முழுதும் ஆளநினைக்கும் அரசர் அதற்குரிய காலத்தை யெதிர்பார்த்திருப்பர் என்பது.

5 They who thoughtfully consider and wait for the right time for action, may successfully meditate the conquest of the world.

அது வருந்துணையும் - (உலகத்தைக் கைக்கொள்ளுவதற்குத் தக்க) அக்காலம் வருமளவும்.

† கருதியவழியே கொள்ளுதல் - தாமெண்ணியபடியே உலகத்தைக் கைக்கொள்ளுதல்.

‡ அது கருதாது செல்லின் - அக்காலத்தை யறியாது நினைத்தபோது பகைவர்மீது போர்க்குச் சென்றால்.

¶ மனுதருமசாஸ்திரம் ஏழாவதத்தியாயத்தில் "சத்துருவுடன் சமாதானமாதல், யுத்தஞ் செய்தல், யுத்தத்திற்குப் போதல், போகாமலிருத்தல், தன்சேனையை யிரண்டாகப் பிரித்தல், பலமுள்ள மற்றொருவனைத் தானடைதல் இவ்வாறனையும் ஆலோசிக்கவேண்டும்."

"இவ்வாறு யோசித்துப்பார்த்து எந்தெந்தக் காரியங்களுக்கு எதையெதைச் செய்யவேண்டுமோ அதையதைச் செய்யவேண்டும்."

"இவ்வாறு குணங்களுள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு விதமாகுமென்று சொல்லுகிறார்கள்." என்று கூறலது மிங்கறியத்தக்கதாம். ஒவ்வொரு குணமும் இரண்டிரண்டு வகையாமென்பதை ஆண்டேக்கண்

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

பரி:—(இ - ள்.) வலிமிகுதியுடைய அரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொருகின்ற தகர் † தன்பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்குந் தன்மைத்து, (எ - று).

‡ உவமைக்கண் 'தாக்கற்கு' என்றதனால் பொருளினும் வென்றி யெய்தற் பொருட்டென்பது கொள்க. இதனால் ¶ அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது.

தேளி:—(இ-ள்.) ஊக்கமுடையான்-வலிமி குதியுடைய அரசன், ஒடுக் கம் - (பகைவர்மேற் செல்லாது) காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொருதகர் - போர்செய்கின்ற ஆட்டுக்கடா, தாக்கற்கு - (தன்பகை கெடப்) பாய்தற்பொருட்டு, பேருந்தகைத்து - பின்னே கால்வாங்குந் தன் மையதாம், (எ-று).

உபமானத்தில் 'தாக்கற்கு' என்று கூறியிருத்தலால் உபமேயத்திலும் வெற்றியடைதற் பொருட்டு என்பது கொள்க. இதனால் அவ்விருத்தலின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து). வலிமையுள்ள அரசன் பகைவர்மேற் போர்க்குச் செல்லா தொடுங்கிக காலம்பாராத்திருத்தல் வெற்றி பெறுதற் பொருட்டாம் என்பது.

6 The self-restraint of the energetic while waiting for a suitable time to act, is like the drawing back of the foot of a fighting-ram in order to butt

எ. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

பரி:—(இ - ள்.) அறிவுடைய அரசர் பகைவர் மிகைசெயித பொழு

† தன்பகைகெட - தனதுபகையான மற்றோர் ராட்டுக்கடா அழி யும்படி.

‡ பொருதகர் தாக்கற்குப் பேருந்தகைத்து என்னும் உவமானத்தில் தாக்கற்கு என்று கூறியதினால் ஊக்கமுடையானொடுக்கம் என்னும் பொரு ளினும (உவமேயத்திலும்) வென்றி யெய்தற் பொருட்டு (ஜயமடையும் நிமித்தம்) என்பது கொள்க என்பது. வலிகுதியுடைய அரசன் பகைவர் மேற் செல்லாது வென்றி யெயதற்பொருட்டுக் காலம் பார்த்திருக்கின்ற இருப்பு என்பது ஊக்கமுடையா னொடுக்கம் என்பதற்குப் பொருளா மென்க.

¶ அவ்விருப்பின் சிறப்பு - வெற்றியடையுமாறு பகைவர்மேற் செல் லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பின் பெருமை.

தே அவரறியப் * புறத்து வேகுளார் ; தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தினையறிந்து † அது வருந்துணையும் உளவே வேதுள்வர்.(எ-று).

பொளனென எனபது குறிப்புமொழி ‡ வேரா வோபபரெனக் காரணதைதக் காரியமாக வுபசரிததார. அறிய வெகுணடெழிதத தம்மைக காப்பராகலிற் 'புறம்வேரார்' என்றர, ¶ வெகுளி ஒழிந்துழிப பின்னும மிகை செய்யாம லடக்குதல கூடாமையின் 'உளவேர்ப்பர்' என்றன கூறினர்.

தெளி —(இ - ன்.) ஒள்ளியவர் - அறிவுடைய வரசர், ஆங்கே - (பகைவர் தவறுசெய்த) உப்பொழுதே, (அபபகைவரறிய),பொள்ளென - விரைவாக, புறம்வேரார் - புறத்திற கோபஞ்செய்யா, காலம் - (தாம அப்பகைவரை வெல்லுதறகேற்ற) காலத்தை, பாரதது - அறிந்து, (அக காலம்வருமனவும), உளவேர்ப்பர் - உள்ளே கோபஞ செய்வார், (எ - று).

பொளளென என்பது விரைவுப் பொருளுணர்த்திய குறிப்பிடைச சொல். கோபஞ்செய்யா கோபஞசெய்வா என்னுங காரணததை வேரார் வேர்ப்பர் என்னுங காரியமாக வுபசரிததிகூறினா பகைவரறியக் கோபஞ்செய்த விடத்து அவர்தம்மைக் காதலிக்கொளளுவாராகலால் 'புறம்வேரார்' என்றும், கோபம ஒழிந்த விடததுப் பினனுந தவறு செய்யாமல அவரை அடக்குதல கூடாமையால 'உள்வேர்ப்பர்' என்றும சொல்லினர்.

(க - து) அறிவுடைய அரசா வெலலுதறகேறற காலம் வருமளவும் பகைவர்மேற கொண்ட கோபததை யடககியிருபபர்

7. The wise will not immediately and hastily show their anger, they will watch their time, and restrain their angei within

விரைவாகப் புறத்து வெகுளா என்றும் பாடமுண்டு.

† அது வருந்துணையும் - பகைவரை வெலலுதற்கேறற காலம் வருமளவும்.

‡ வெகுளா வெகுள்வர் எனக்கூறுது வேரார் வேர்ப்பர் எனககூறினமையால், 'வேராவோப்பர் எனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தா' என்று கூறப்பட்டது. வேர்தல்-உடம்பில் வேர்வை யுண்டாதல. வேர்தலுக்குக்காரணமான கோபததை வேர்த்தல் எனக கூறினமையால், இது காரியவாகுபெயராம். இங்கு வெகுளுதலும் வெகுளாமையுங்காரணம்; வேர்த்தலும் வேர்க்காமையுங காரியமாம்.

'¶ வெகுளி யொழிந்துழிப் பின்னும் மிகைசெய்யாம லடக்குதல் கூடாமையின் - அரசர் கோபததை விட்டவிடத்துப் பகைவர்பின்னும் தவறுசெய்யாதபடி அப்பகைவரை யடக்குதல் கூடாதபடியால். "மிகை மிக் கியற்றித் திரிந்திடினும் வெல்லுங் காலம வருமனவும், பகைமை புறத்திற் றேற்றுமற் பகைவர் தம்மைப் பண்போடு, நகைசெய் தமர்போற் சுமந்திகே" என்பது விசாய புராணம். ஒன்றுஞ்செய்யாமல் அடக்குதல் கூடாமையின் என்றும் பாடமுண்டு.

அ. சேறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

பரி:—(இ - ள்.) தாம் வெல்லக் கருதிய அரசர் பகைவர்க்கு இறுதிக்காலம் வருந்துணையும் அவரைக் கண்டாற் பணிக; † பணியவே, ‡ அக்காலம் வந்திறும்வழி ¶ அவர் தகைவின்றி யிறுவர், (எ - று).

o பகைமை ஒழியும் வகை மிகவுந் தாழ்தலென்பார் 'சுமக்க' என்றும், அங்ஙனந் தாழலே | அவர் தம்மைக்காத்த லிகழ்வராகலின் தப்பாமற் கெடுவ ரென்பார் || அவர்தலை யிழக்காம் என்றுங் கூறினர். § தலைமேற் கொண்ட தொருபொருளைத் தன்னுங்கால் அது தன்தலை யிழாத வீழுமாறு போன்ற அவ்வியல்பு பெறப்பட்டது. இவை இரண்டு பாட்டானும் இருக்கும் வழிப் பகைமை தோன்றுமலிருக்க வென்பதுகூறப்பட்டது.

* சுமத்தல் - தலைமேற் கொள்ளுதல்; அஃதிங்கு இலக்கணையால் பணிதலுக்காயிற்று.

† பணியவே - அவ்வாறு பணிந்திருக்கவே.

‡ அக்காலம் வந்திறும் வழி - பகைவர்க்கு முடிவுக்காலம் வந்தமுடியுமிடத்து.

¶ அவர் தகைவின்றி யிறுவர் - அப்பகைவர் தடையில்லாம லழிவர்.

o பகைமையொழியும்வகை—தம்மீதுபகைகொள்ள வில்லை யென்ற பகைவர் நம்பிப் பகையொழியும்படி.

| அவர் தம்மைக்காத்த லிகழ்வராகலின் - அப்பகைவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதலே யவமதிப்பாராதலால்.

|| அவர் தலையிழாம் என்றும் பாடமுண்டு. இங்குக் கிழக்கு என்பது திசையையுணர்த்தாது கீழ் என்பதை யுணர்த்தி நின்றது. "கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்" என்னும் தொல்காப்பியம் உவமவியற் சூத்திரத்தின் வீசேடவுரையில் நச்சினார்க்கினியர் "கிழக்கிடு பொருளென்பது கீழ்ப்படுக்கப்படும் பொருள்" என்றுகூறியிருத்தலிங்குணர்தற் பாலதாம்.

§ தலையின்மேற் கொண்டதொரு சுமையைத் தன்னும்போது (போம்போது) அச்சுமை தனது தலை (மேலிடம்) கீழாகுமாறு வீழுமாதலால், அத்தன்மை பகைவர்க்கும் பெறப்பட்டது. அஃதாவது ஒருசுமையை வெளிப்படுத்த விரும்பியவன் அச்சுமையைத் தன் தலையின்மேற் சுமந்து சென்று அதனைப் போமிடத்தை யடைந்தபோது அச்சுமையைத் தலை கீழாகப் போடுதல்போல, பகைவரை யழிக்க விரும்பியவர் அதற்குத் தக்க காலம் வருமளவும் அவர்களைத் தலைமேற் கொண்டு லாலித்தி அழித்தற் குரியகாலம் வந்தபோது அப்பகைவரைத் தலைகீழாகத் தன்னியழிப்ப ரென்பதாம். இழக்காந்தலை என்பதற்குத் 'தகைவின்றி யிறுவர்' என்று பொருள்கூறி யிருத்தலால், அவர் தலை யுருண்டுவிழச் சாவர்என்பதுபெறப் படு கின்றதென்க.

தெளி:—(இ - ன்.) (தாம் வெல்லக்கருதிய அரசர்) செறுநரை பகைவரை, காணின்-கண்டால், சுமக்க-(அப்பகைவர்க்கு முடிவுக்காலம் வரு மளவும்) பணியக்கடவர், (பணியவே), இறவரைகாணின் - அம்முடிவுக் காலம் வந்து முடியுமிடத்து, தலை-(அவரது) தலை, (தடையில்லாது), கிழக் காம்-கீழ்விழும், (எ - று).

பகைமை நீரும்படி மிகவும் வணங்குக வென்பார் 'சுமக்க' என் றும், அவ்வாறு வணங்கவே அவர் தம்மைக் காத்துக்கொள்ளுதலேயிகழுவா ராதலால் தப்பாமல் கெடுவாரென்பார் 'கிழக்காந்தலை' என்றும் சொல்லி னர். தலைமீதுகொண்டதொரு பொருளைத் தள்ளும்போது அப்பொருள் தனது தலைகீழாக வீழுமாதலால், அவ்விழுமியல்பு பெறப்பட்டது. இவ் விரண்டு பாட்டாலும் அரசர் காலம் பார்த்திருக்கு மிடத்துப் பகைமை தோன்றுமல் இருக்கவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

(க - து.) அரசர் பகைவரைக் கண்டால் அவர்க்கு முடிவுக் காலம் வருமளவும் பணிந்தொழுகி, அது வந்தபோதவரைவெல் லக்கடவர் என்பது.

8. If a king meets his enemy, let him show him all respect, until the time for his destruction is come; when that is come, his head will be easily brought low.



கூ. எய்தற் கரிய தியைந்தக்கா லங்னிலேயே
செய்தற் கரிய செயல்.

பரி:—(இ - ள்.) பகையை வெல்லக்கருதும் அரசர் தம்மாலெய்து தற்கரியகாலம் வந்துகூடியக்கால், அது கழிவதற்கு முன்பே † அது கூடாவழித் தம்மாற்செய்தற்கரிய வினைகளைச் செய்க, (எ - று).

‡ ஆற்றன் முதலியவற்றுற் ¶ செய்து கொள்ளப்படாமையின் 'எய் தற்கரியது' எனறும், அது தானேவந் தியைதல் அரிதாகலின் 'இயைந் தக்கால்' என்றும், இயைந்தவழிப் பின்னில்லாது ஒடுதலின் 'அங்னிலேயே' என்றும், அது பெருவழிச் செய்யப்படாமையின் 'செய்தற்கரிய' என்

* அதுகழிவதற்கு முன்னே - (தம்மாலடைதற்கரிதான) காலம் நீங் குவதற்கு முன்பே (அக்காலம் வாய்த்தபோதே).

† அது கூடாவழித் தம்மாற்செய்தற் கரியவினைகளை - அக்காலம் வந்து கூடாதபோது தம்மால் செய்துமுடித்தற் கியலாதகாரியங்களை.

‡ ஆற்றன் முதலிய என்றதனால் அறிவு ஆண்மை பெருமை யென் னும் மூவகையாற்றல்களே யன்றி நால்வகை உபாயமும், நால்வகை வலி யும், ஐவகைத் தொழிலும், அறவகைக் குணமும், பிறவும் கொள்க.

¶ செய்துகொள்ளப் படாமையின் - (தம்மாலடைதற்கரியகாலத்தை) வருவித்துக்கொள்ளக் கூடாமையால்.

றங் கூறினர். இதனாற் காலம் வந்துழி விரைந்து செய்கவென்பது கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) (பகைவரைவெல்ல நினைக்கின்ற அரசர்) எய்தற் கரியது - (தம்மால்) பெறுதற்கரியகாலம், இயைந்தக்கால் - வந்துகூடினால், அக்காலமே - அக்காலம் நீங்குவதற்குமுன்னே, செய்தற்கரிய - (அக்காலம் கூடாதபோதுதம்மால்), செய்தற்கு அரிய தொழில்களை, செயல் - செய்யக்கடவர், (எ - று).

ஆற்றல் முதலாயினவற்றால் செய்துகொள்ளப்படாமையால் 'எய்தற் கரியது' என்றும், அக்காலம் தானே வந்து கூடுதல் அரிதாகலால் 'இயைந்தக்கால்' என்றும், கூடியவிடத்துப் பின்னில்லாது ஒடுதலால் 'அக்காலமே' என்றும், அக்காலம் பெறுத விடத்துச செயயப்படாமையால் 'செய்தற்கரிய' என்றும் சொல்லினர். இதனால் பகைவரை வெல்லக்கருதுமரசர் அதனைக் காலம் வந்தவிடத்து விரைந்துசெயயக்கடவரெனபதுசொல்லப்பட்டது.

(க-து.) பகைவரை வெல்லக்கூடிய காலம்வாய்த்தால், அக்காலத்திலேயே அவரைவெல்லல் வேண்டும் என்பது.

9. If a rare opportunity occurs, while it lasts, let a man do that which is rarely to be done, but for such an opportunity.

கo * தொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

பரி:—(இ - ள்.) வினைமேற் செல்லாதிருக்குங்காலத்துக் கொக்கு இருக்குமாறுபோல இருக்க; மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற்செய்து முடிக்க,(எ - று).

மீன்கோடற்கு இருக்கும் வழி அது வகையுந்தூண்டியும் முன்னறிந்து தப்பாமற்பொருட்டே உயிரில்லதுபோன் றிருக்குமாகலானும், எய்தியவழிப் பின் தப்புவதற்கு முன்பேவிரைந்து குத்துமாகலானும், இருப்பிற்குஞ் செயலிற்குங் கொக்கே † உவமையாயிற்று. ''கொகொக்க' என்றுராயினும் ‡ அது கூம்புமாறுபோலக் கூம்புகவென்றும, 'குதொ

* ''அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக், கடக்கக் கருதவும் வேண்டா-மடைத்தலையில், ஓடுமீ னோட வுழுமீன் வருமளவும், வாடி யிருக்குமாங் கொக்கு'' எனபது மூதுரை.

† கொக்கொக்க என்பது இருப்பிற்குவமானமாம்; அதன்குத்தொக்க என்பது செயலிற்கு உவமானமாம்.

‡ அது கூம்புமாறுபோலக் கூம்புக - அக்கொக்கு அடங்கியிருக்கும் விதம்போல அடங்கி யிருக்கவேண்டும்.

(க - து.) பகைவரோடு போர்புரிவதற்கேற்ற விடத்தைப் பெறுதற்கு முன் அவரையெதிர்க்காதும் இகழாதும் இருத்தல் வேண்டும் என்பது.

1. Let not a king despise an enemy, nor undertake any thing against him, until he has obtained a suitable place for beseiging him.



2. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

பரி:—(இ - ள்.) மாறுபாட்டோடுகூடிய வலியினையுடையார்க்கும் அரணைச்சேர்ந்த தாகின்ற வாக்கம்பலபயன்களையுங்கொடுக்கும்,(எ-று).

மாறுபாடாவது ஞாலம் பொதுவெனப் பொரு அரசர் மனத்தின் கண் நிகழ்வதாகலானும், † வலியுடைமை கூறியவதனானும், ‡ இது பகை மேற்சென்ற அரசர்மேற்றாயிற்று. உம்மை-சிறப்பும்மை. ¶ அரண்சேராதா மாக்கமும் உண்மையின், ○ ஈண்டாக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது | அதற்கேதுவாய முற்றினை. ‖ அது தொடுக்கும் பயன்களாவன: பகைவரால் தமக்கு §கலிவின்மையும், தாம் நிலைபெற்று நின்று () அவரை கலிதலும் முதலாயின.

"மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்காடு முடைய தரண்" என்ற அரண் அதிகாரத்துக் கூறுவதிங்குணர்தற்பாற்றாம்.

† மொய்ம்பினவர்க்கும் என்று வலியுடைமை கூறியவதனானும்.

‡ இது - மாறுபாடு (விரோதம்).

¶ அரண் சேராத ஆம் ஆக்கமும் இருத்தலால்'அரண் சேர்ந்தாம் ஆக்கம்' என்று கூறப்பட்டதென்க. இதனால் அரண் (காப்பு) இல்லாமல் தமது வலிமையினால் பகைவரை வளைத்தலும், அரணை கூடிப் பகைவரை வளைத்தலும் என இருவகை முற்றுகை பெற்றாமென்க.

○ ஆக்கம் என்பது அரண்சேர்ந்தாம் என்னும் விசேஷணத்தோடு (அடையோடு) கூடிவந்தமையின், 'ஈண்டாக்கம் விசேடிக்கப்பட்டது' என்று கூறப்பட்டது. விசேடிக்கப்படல் விசேஷணத்திடன்கூடிவருதல். இங்கு ஆக்கமென்பது அரண்சேர்ந்தாம் என்னும் விசேஷணத்துடன் கூடி 'அரண்சேர்ந்தாம் ஆக்கம்' என்று வந்திருத்தலைக் காண்க.

| அதற்கேதுவாய முற்றினை-ஆக்கத் (செல்வத்) திற்குக்காரணமான வளைத்தலை. ஆக்கத்திற்குக்காரணமான முற்றினை ஆக்கமென்றது காரிய வாகு பெயராம்.

‖ அது—தாம் அரணேறி கூடிப்பகைவரை வளைத்தல்.

§ கலிவின்மையும் - வருத்தமில்லாமையும்.

() அவரை கலிதலும் - பகைவரை வருத்துதலும்.

தெளி.—(இ - ள்.) மூரண் - மாறுபாட்டோடு, சேர்ந்த—கூடிய, மொயம்பினவர்க்கும் - வலியினே யுடையவருக்கும், அரண் - அரணை, சேர்ந்து - கூடி, ஆம் - ஆகின்ற, ஆக்கம் - பெருக்கமானது, பலவும் - பல பயன்களேயும், தரும் - கொடுக்கும், (எ - று).

மாறுபாடாவது பூமி பலவரசர் ஆளுவதற்குப் பொதுவாயுள்ளதென்று பொறுக்காத அரசரது மனநிலேதோன்றுவதாதலாலும், வலியுடைமை சொன்னவதனுலும், இது பகைவர்மேற் போர்க்குச்சென்ற அரசர்மேல தாயிற்று. மொய்ம்பினவர்க்கும் என்ற வும்மை உயர்வு சிறப்பும்மை அரண்சேராதஆகின்ற ஆகமும் இருத்தலால்,இவ்கு ஆக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றதி அவ்வாக்கத்திற்கு வதுவாகிய வளேத்தலே. அது கொடுக்கும் பயன்களாவன: பகைவரால தமகு கலிவில்லாமையும், தாம நிலே பெற்று நின்று அவரை கலிவுசெய்தலும முதலானவை.

(க-து.) பகைவரரணே யடைந்துவஞக்கும் வலியுடைய வரசர்க்கு, அது பலபயன்களேயுங கொடுக்கும் என்பது.

2. Even to those who are men of power and expedients, an attack in connection with a fortification will yield many advantages

ஈ. ஆற்றரு மாற்றி யடுப வினனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

பரி:—(இ - ள்.) வலியர் அல்லாதாரும் வலியராய வேல்வர், அதற்கேற்ற இடத்தினேயறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாடுவினை செய்வாயின், (எ - று).

† தம்மை யெனபதனுலும் வினேயென்பதனுலும அவாய நிலேயான் வந்தன. காததல் - பகைவரான் ‡ கலிவு வாராமல ¶ அரணுஞ்படையானுங் காத்தல் - o இவ்வாறரண் வினை செய்வாராயின் ‖ மேற்சொல்லிய வலியின்றியும வெலவரென்பதாம்.

தெளி —(இ - ள்.) ஆற்றரும் - வலியரல்லாதவரும், ஆற்றி - வலியுடையவராய், அடுப - வெல்வார, இடன் - (அதறகேற்ற) இடத்தை,

அதற்கேற்ற - (பகைவரை) வெல்லுதற்குத் தகுந்த.

† போற்றியென்னும் வினேயும் செயின் என்னும வினேயும் செயப்படு பொருளே வேண்டி நிற்றலின், அதற்கேற்ப முறையே தம்மையென்பதும் வினேயென்பதும வருவித்துரைக்கப்பட்டன.

‡ கலிவு - கெடுதி. ¶ அரண் - மதில்முதலியன.

o இவ்வாற்றரண்—பகைவரை வெல்லுதற்குரிய இடத்தினேயறிந்து தம்மைக் காத்துக்கொள்ளும் இவ்வழியால்.இவ்வாறரசர் என்றும் பாடமுண்டு.

‖ மேற்சொல்லிய—இவ்வதிகாரத்தின் இரண்டாவதகுறளிற் கூறிய.

அறிந்து - தெரிந்து, போற்றி - (தம்மைக்) காத்துக்கொண்டு, போற்றார் கண்—பகைவரிடத்து, செயின் - (தொழிலைச்) செய்வாராயின், (எ - று).

தம்மையென்பதும் தொழிலை யென்பதும் அவாய் நிலையால் வந்தன. காத்தல் - பகைவரால் கலிவுவாரா, திருக்கும்படி அரணும் படையாலும் காத்தல். இவ்வாறுகத் தொழில் செய்வாராயின், முற்கூறிய வலியில்லா திருந்தாலும் அவர் பகைவரை வெல்வரென்பதாம்.

(க - து.) வலியில்லாத அரசரும் இடமறிந்து போர்புரிந்தால் வலியுடையவராய்ப் பகைவரை வெல்வர் என்பது.

3. Even the powerless will become powerful and conquer, if they select a proper field of action, and guard themselves, while they make war on their enemies.



ச. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

பரி:—(இ - ள்.) தாம் வினைசெய்தற்கேற்ற இடத்தினை யறிந்து சென்ற அரசர் அரணைப் பொருந்திநின்று அதனைச் செய்வாராயின் * அவரை வெல்வதாக எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர், (எ - று).

† அரணென்பது அவாய்நிலையான் வந்தது. ‡ எண்ணமென்றது எண்ணப்பட்ட தம்வெற்றியை. ¶ 'எண்ணமிழப்பர்' என்றார்; o அவர் வினைசெய்யாமல் தம்மைக் காத்தமையின்.இதனால் | அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவை மூன்குபாட்டானும் ‖ பகைவராணின் புறத்திறுப்பார் அதற்காமிடம் அறிதல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இடன் - (தாம்தொழில் செய்தற்கேற்ற) இடத்தினை, அறிந்து - தெரிந்து, துன்னியார் - சென்றவரசர், துன்னி - (அரணைப்) பொருந்தி, (நின்று), செயின் - (அத்தொழிலைச்) செய்வாராயின்,

---

* அவரை - அவ்வரசரை.

† துன்னி என்னும் வினை செயப்படுபொருளை வேண்டி நிற்றலால், அதற்கேற்ப அரண் என்பது வருவிக்கப்பட்டது.

‡ எண்ணமென்பது எண்ணப்பட்ட தம் வெற்றியையுணர்த்துதலால், தொழிலாகு பெயராம். எண்ணம் என்பது அம்ஈற்றுத்தொழிற்பெயர்.

¶ அதனை யிழப்பர் என்றும் பாடமுண்டு.

o அவர்வினை செய்யாமல் - பகைவர் போர்செய்யாது.

| அவர்—இடமறிந்து போர்க்குச் சென்ற அரசர்.

‖ பகைவரது கோட்டையின் புறத்தே (வெளியே) தங்குவார் தங்குதற் காகுமிடமறிதல் சொல்லப்பட்டது.

எண்ணியார் - (அவ்வரசரை வெல்வதாக) எண்ணிபிருந்த பகைவர், எண்ணம் - அவ்வெண்ணத்தை, இழப்பர் - இழந்துவிடுவர், (எ - று).

அரண் என்பது அவாய்நிலையால் வந்தது. எண்ணமென்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை. பகைவர்போர்செய்யாமல் தம்மைக் காத்துக் கொள்ளுதலால் 'எண்ணமிழப்பர்' என்றார். இதனுல் அவர் பகைவர்தோற் பரென்பதாயிற்று. இவை நான்குபாட்டாலும் பகைவரது அரணின்புறத்தித் தங்குவார் தங்குவதற்கு ஆகுமிடமறிதல் சொல்லப்பட்டது.

(க-தி.) அரசர் இடமறிந்து சென்று போர்புரிந்தால், அவரை வெல்ல எண்ணியபகைவரது எண்ணம் முற்றுப்பெறுதென்பது.

4. If they who draw near to fight choose a suitable place to approach their enemy, those who have thought they will conquer them, will lose that thought.

நி. நேமேம்புனலுள் வேல்லு முதலே யமேம்புனலி னீங்கி னதனேப் பிற.

பரி:—(இ - ள்.) முதலே ஆழமுடைய நீரின்கண் ஆயின் † பிறவற்றை யெல்லாந் தான் வேல்லாநிற்கும்; அப்புனலின் நீங்குமாயின் அதனேப் ‡ பிறவெல்லாம் வெல்லாநிற்கும், (எ - று).

எனவே, எல்லாரும் தங்கிலத்து வலியரென்பது கூறப்பட்டது. பிற என்பது முன்னுங் கூட்டப்பட்டது. நிலப்படா நீரின்கண் பிறநிற்றல் ஆற்றுமையின், அவையெல்லாம் முதலேக்கெளியவாம்; அவை இயங்குதற்குரிய நிலத்தின்கண் அஃதியங்கல் ஆற்றுமையின் அஃதவற்றிற் கெல்லாம் எளிதாமென்றது, மேற்செல்லும் அரசா பகைவர் நிற்றல் ஆற்றுவிடனறிந்து செல்வராயின் அவர் தமக் கெளியராவர்; அன்றித் தாம் நிற்றல் ஆற்றுவிடத்துச் செல்வராயின் அவர்க கெளியராவரென்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதலென்னும் அலங்காரம். அவரை அவர்நிற்றல் ஆற்றுவிடத்தை சென்றுவெல்க வென்பதாம்.

தேளி:—(இ - ள்.) முதலே—நேமேம்புனலுன் - ஆழமுடைய நீரில், (ஆனல்), பிற - பிறவுயிர்களேயெல்லாம், வெல்லும் - (தான்) வெல்லாநிற்கும், புனலின்-அந்நீரினின்றும், நீங்கின் - நீங்குமாளுல், அதனே - அம்முதலேயை, பிற-பிறவுயிர்களெல்லாம், அடும் - வெல்லாநிற்கும், (எ - று).

எனவே, எல்லாரும் தமதிடத்தில் வலியராயிருப்பாரென்பது சொல்லப்பட்டது. பிற என்பது வெல்லுமென்பதற்கு முன்னுங் கூட்டப்பட்டது. நிலப்படாத நீரினிடத்துப் பிறவுயிர்கள் நிற்றல் முடியாமையால் அவையெல்லாம் முதலேக்கு எளியனவாகும்; அவை சஞ்சரித்தற்குரிய நில

† பிறவற்றை - யானே முதலிய பிராணிகளே.

‡ பிறவெல்லாம் - நரி முதலிய பிராணிகளியாவும்.

நீரினிடத்து அம்முதலை சஞ்சரித்தல் முடியாமையால் அஃது அந்த உயிர் கட்கெல்லாம் எளிதாமென்றது, பகைவர் மேற் போர்க்குச் சென்ற அரசர் பகைவர் கிற்றல் முடியாதவிடத்தையறிந்து செல்லுவாரானல் அப்பகைவர் தமக்கு எளியவராவார்; அவ்வாறல்லாமல் தாம் கிற்றல்முடியாதவிடத்துச் செல்லுவாரானல்அப்பகைவருக்கு எளியவராவர்என்னும் பொருள்தோன்ற கின்றமையால், இது பிறிது மொழிதலென்னு மலங்காரமாம். அப்பகை வரை அவர் கிற்கமாட்டாத விடத்துச் சென்று வெல்ல வேண்டுமென்ப தாம்.

(க - து.) தமக்கு வாய்ப்பான விடத்தைவிட்டுப் போர்புரி யும் வலியவர், வாய்ப்பானவிடத்திலுள்ள எளியவரிடத்துத்தோ ல்வியடைவர் என்பது.

5. In deep water, a crocodile will conquer all other animals; but if it leave the water, other animals will conquer it.

கூ. கடலோடா கால்வ னெடுந்தேர் கட்லோடு
நாவாயு மோடா நிலத்து.

பரி:—(இ - ள்.) நிலத்தின்கண் ஓடுங் * கால்வலிய நெடிய தேர் கள் கடலின்கண் ஓடமாட்டா; இனி அக்கடலின்கண் ஓடும் † நாவாய்க ளும் நிலத்தின்கண் ஓடமாட்டா, (எ - று).

‡ 'கடலோடா' என்ற மறுதலையடையான் நிலத்தின்கண் ஓடுமென் பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேரென்பது ¶ ஓடுதற்கேற்றகாலும் பெருமையு முடையவாயினு மென்பதுபடநின்றது. மேற்சென்றூர் பகைவ ரிடங்களே யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினை செய்க வென் பது தோன்றநின்றமையின், இதுவும் மேலை அலங்காரமாயிற்று.

தெளி:—(இ - ள்) கால்வல் (நிலத்தில் ஓடும்) வலிமை பொருந்திய உருளைகளையுடைய, நெடுந்தேர் - பெரிய தேர்கள், கடல் - கடலில், ஓடா - ஓடமாட்டாவாம், கடலோடும் - (இனி) அக்கடலில் ஓடும், நாவாயும் - மரக் கலங்களும், நிலத்து - நிலத்தில், ஓடா - ஓடமாட்டாவாம், (எ - று).

'கடலோடா' என்ற எதிர்மறையடையால் (கால்வனெடுந்தேர்) நில த்தில் ஓடும் என்பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேர் என்பது

* கால் - சக்கரம். † நாவாய்கடலாமும் - மரக்கலங்களும்.

‡ கால்வல் நெடுந்தேர் என்பது கடலோடா என்னும் மறுதலை அடை யோ (விசேஷணத்தோ)டு கூடிவந்தமையின், நிலத்தின்கண் ஓடும் என்பது வருவிக்கப்பட்டது. [மறுதலையடை - எதிர்மறையாகவந்த விசேஷணம்.]

¶ (தேர்கள்) ஓடுதற்குத்தக்க சக்கரமும் உறுப்புக்களின் அமைப்பால் பெருமையு முடையனவாஞலும்.

ஒதற்கேற்ற காலும் பெருமையும் உடையனவா யிருப்பினுமென்பது தோன்ற நின்றது. பகைவர் மீது போர்க்குச் சென்றவர் பகைவரிடங்களையறிந்து அவ்விடங்களுக்கு ஏற்ற சாதனங்களால் தொழில் செய்யவேண்டுமென்பது தோன்ற நின்றமையின், இக்குறளும் பிறிது மொழிதலென்னும் அலங்காரமாம். கால்வல் என்பது வல்கால் என்றன்வயிக்கப்பட்டது.

(க - து.) மிகமேன்மையுடையாரும் தமக்குரிய இடத்தை விட்டுச்சென்றால் ஒரு காரியமுஞ் செய்தல்முடியாதென்பது.

6. The strong-wheeled, lofty charriot cannot run on the sea; and ships, which sail on the sea, cannot run on the land.

எ அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வேஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

பரி:—(இ - ள்.) பகையிடத்து வினைசெய்யுந் திறங்களையெல்லாம் ஒழியாதெண்ணி † அவற்றை அரசர் இடத்தோடு பொருந்தச் செய்வாராயின், ‡ அச்செயற்குத் தந்நிண்மையல்லதுபிறிதோரு துணை வேண்டுவதில்லை, (எ - று).

¶ நிண்ணியராய் நின்று செய்துமுடித்தலே வேண்டுதல்லது 'துணை வேண்டா' என்றார்; அவ்வினை தவறுதற் கேதுவின்மையின். இவை மூன்றுபாட்டாலும் வினைசெய்தற்காம் இடனறிதல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) (அரசர்) எஞ்சாமை - (பகைவரிடத்துத் தொழில்செய்யும் விதவகளை யெல்லாம்) குறையாமல், எண்ணி - ஆலோசித்து, (அவற்றை), இடத்தால் - இடத்தோடு, (பொருந்த), செயின - செய்வாராயின, (அச்செயலுக்கு), அஞ்சாமையல்லாமல் - (தமது) தைரியமல்லாமல், துணை - (வேரொரு) துணை, வேண்டா - வேண்டுவதில்லை, (எ - று).

அத்தொழில் தவறுதலுக்குக்காரணம் இல்லாமையால், தைரியமுடையவராய் நின்று செய்துமுடித்தலே வேண்டுதல்லாமல் 'துணைவேண்டா' என்றார். இவை மூன்றுபாட்டாலும் போர்செய்தற்கு ஆகிடமறிதல் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவரிடத்துச் செய்யவேண்டுந் தொழில்களைக் குறைவிலா தாலோசித்து இடத்தோடுபொருந்தச் செய்யவல்ல அரசர்க்குத் தைரியத்தையிட வேறுதுணை வேண்டுவதில்லை.

† அவற்றை - பகைவரிடத்து வினைசெய்யுந்திறங்களை.

‡ அச்செயற்கு - இடத்தோடு பொருந்தச் செய்தற்கு.

¶ நிண்ணியராய்நின்று செய்துமுடித்தலே வேண்டுதல்லது - கலங்காத மனமுடையவராய் எதிர்த்துநின்று போர்செய்து பகைவரை முடிக்க வேண்டியதே யல்லாமல்.

7. You will need no other aid than fearlessness, if you thoroughly reflect on what you are to do, and select a suitable place for your operations.

அ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

பரி:—(இ - ள்.) பெரும்படையுடைய அரசன் ஏனைச் சிறுபடை யுடையானை அழித்தல் கருதி † அவன் புகலிச்சென்று சாருமாயின் ‡ அவனும் றன்பெருமை யழியும், (எ - று).

செல்லிடம் - அவனுக்குச் செல்லுமிடம். ¶ அழிந்துவிடு மென்பது எழுந்திருக்கு மென்றாற்போல ஒரு சொல். 0 ஊக்கத்தின் அழிவு உடை யான்மே லேற்றப்பட்டது. தன் $ படைப்பெருமைநோக்கி இடநோக்காது செல்வனுயின், அஃது அப்படைக ளொருங்குசென்று வினைசெயல் ஆகா மையானுஞ் பயிற்சியின்மையானுஞ அப்பெருமையாற் பயனின்றித்தானழி ந்து விடுமென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உறுபடையான் - பெருஞ்சேனையை யுடைய அரசன், சிறுபடையான் - (மற்றைச) சிறிய சேனையுடையவனை, (அழிக்க நினைத்து), செல்லிடம் - (அவனுக்குப்) புகலாயுள்ள விடத்தை, சேரின் - போய்ச் சேர்வானுனால், (அவனால்), ஊக்கம்-(தன்)பெருமை, அழிந்துவிடும்- அழியும், (எ - று).

செல்லிடம் - அச்சிறுபடையானுக்கு நகரஞ் செல்லுமிடம். அழிந்து விடுமென்ப தொருசொல். ஊக்கத்தினழிவு ஊக்கமுடையான்மேல்ஏற்றப் பட்டது.(உறுபடையான்)தன்சேனையின் பெருமையை நோக்கிஇடம்நோக காமல்செல்வானுயின்,அச்செலவு அச்சேனைக்கு ஒருமித்தச்சென்றுபோர்த் தொழில் செய்தல் கூடாமையாலாவது பழக்கமில்லாமையாலாவது அப்பெரு மையாற் பயனில்லாமல் தான் அழிந்துவிடுவா னென்பதாம்.

உறு - மிகுதிப்பொருளை யுணர்த்தும் உரிச்சொல்.

† அவன்புகலி - சிறுபடையான் தங்கியிருக்கும் இடத்தை.

‡ அவனும் - அச்சிறுபடையானும்.

¶ எழுந்திருக்கும் என்பது எழும் என்று பொருள்பட்டு ஒரு சொல் லாய் நின்றாற்போன்று, அழிந்துவிடும் என்பது அழியும் என்று பொருள் பட்டு ஒரு சொல்லாய் நின்றதென்க.

0 ஊக்கத்தின் (பெருமையின்) அழிவு ஊக்கமுடையான்மேல் ஏற் றிச் சொல்லப்பட்டது. உறுபடையான் ஊக்க மழிந்து விடும் என்பது நம்பி பொன் பெரியன் என்றாற்போன்று நிகழ்வழு வமைதியாம்.

$ படைப்பெருமை - சேனையின் மிகுதி.

(க - து.) சிறியசேனையுள்ள அரசன்மீது அவனது இடத்தே போர்செய்யக் கருதிச்செல்லும் அரசன் பெருஞ்சேனையுள்ளவனு யிருந்தாலும் அவனுலழிவான் என்பது.

8. The power of one who has a large army will perish, if he goes into ground where only a small army can act.

கூ. சிறைநலனுஞ் சீரு மிலரேனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

பரி:—(இ - ள்.) † அரண் அழித்தற் கருமையும் ‡ பெருமையாகிய ஆற்றலும் உடையர் அல்லராயினும், ¶ வினைக்குரிய மாந்தரை அவரு றைகின்ற நிலத்தின்கட் சென்று § தாக்குதலரிது, (எ - று).

0 நிலத்தோடென்பது வேற்றுமை மயக்கம். ஆண்மை யுடையாரைச் § சிறுமை நோக்கி இருப்பின்கட்சென்றுதாக்கின், * அவர்அவ்விடப்பிபோ தற்றுணிவினர் அன்றிச் சாதற்றுணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரு ம்படை உடையு மென்பதாம்.

தெளி:—(இ - ள்) சிறைநலனும் - அரண்முழித்தற் கருமையையும், சிரு ம் - பெருமையாகிய ஆற்றலும், இலரெனினும் - (உடையர்) அல்லராயி னும், மாந்தர் - (தொழில் செயதற்குரிய) மனிதரை, உறைநிலத்தோடு - (அவர்) வசிக்கின்ற இடத்தில், (சென்று), ஒட்டல் - தாக்குதல், அரிது - முடியாது, (எ - று).

நிலத்தோடென்பது நிலத்திலென்னும் பொருளில் வந்தமையின், வேற்றுமை மயக்கமாம். ஆண்மை யுடையவரைச் சிறுமை நோக்கி அவரி ருப்பிடத்திற் சென்று தாக்கினால், அவர் அவ்விடத்தைவிட்டுப்போவதற்குத் துணிவினராகாமல் சாவதற்குத் துணிவு கொண்டவராய்ப் போர்செய்வாரா வர்; ஆகவே, அவர்க்குப் பெரியசேனை தோற்றோடிப் போமென்பதாம்.

† அரண் - கோட்டை. ‡ பெருமையாகிய ஆற்றல் - பொருளும் சே னையும்.

¶ வினைக்குரியமாந்தர் - போர் செய்தற்குரிய வீரர். § தாக்குதல் வெல்லுதல்.

0 நிலத்தோடு என்பதன் மூன்றனுருபு தனக்குரிய பொருளைவிட்டு (நிலத்தின் கண் என) வழாம்லேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்த மையின் வேற்றுமை மயக்கமாயிற்று.

§ சிறுமை நோக்கி - சிறைநலனுஞ் சிரு மில்லாமையைப்பார்த்து.

ஆண்மை (பராக்கிரமம்) உடையவர் தாமிருக்கும் இடத்தைவிட்டுப் போகும் நிச்சயமுடையவராகாமல் சாகும் நிச்சயமுடையாராவர்; ஆகவே, அவ்வாண்மை யுடையார்க்குப் பெருஞ்சேனை தோற்கும் என்பதாம்.

(க - து.) போர்செய்தற்குரிய பகைவர்ஆண்வலியும் பெருமையும் இல்லாதவராயிருப்பினும், அவரை அவரிருப்பிடத்திற் சென்று வெல்லுதல் அரிதாம் என்பது.

9. It is an hazardous thing to attack men in their own country, although they may neither have power nor a good fortress.



கo. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

பரி:—(இ - ள்.) பாகர்க் கடங்காவுமாய் † வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய ‡ களிறுகளை, அவை காலாழும் இயல்பிற்றய சேற்று நிலத்துப் பட்டுழி நரி கோல்லும், (எ - று).

முகம்—ஆகுபெயர். ஆண்மையும் பெருமையும் உடையாரும் ¶ தமக்கேலா நிலத்திச் செல்லின் அவற்றுற் பயனின்றி மிகவும் எளியரால் அழிவரென்பது தோன்ற நின்றமையின், இதுவும் அவ்வலங்காரம் வேலாழ் முகத்த என்ற பாடமோதுவாருமுளர். § வேற்படை குளித்த முகத்தவாயின் 0 அதுவும் கரியதற்கேதுவாய் முடிதலின், அது பாடம் அன்மையறிக. இவை மூன்று பாட்டானும் பகைவரைச் சார்தலாகாவிடனும் சார்ந்துழிப் படும் இழுக்குங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) கண்ணஞ்சா - பாகர்க்கு அடங்காதனவுமாய், வேலாண்முகத்த - வேலேயுடைய ஆள்களைக்கோத்த கொம்பை யுடையனவும் ஆய, களிறு - யானைகளை, (அவை), காலாழ் - கால்புதையும் (இயல்பினதாகிய), களரில் - சேற்று நிலத்தில், (அகப்பட்டவிடத்து), நரி - நரிகள், அடும் - கொல்லும், (எ - று).

முகமென்னும் முதற்பொருளின் பெயர் அதன் சினைப்பொருளாகிய கொம்பை யுணர்த்துதலின், பொருளாகுபெயராம். ஆண்மையும் பெருமை

† வேலாட்கள் - வேற்படையையுடையவீரர்.

‡ களிறு - களிப்பையுடையது (யானை); களிப்பு - மதமயக்கம்.

¶ தமக்கேலா நிலத்துச்செல்லின் - தமக்குப் போர்செய்தற் குரிய தாகாத விடத்துப்போனால். "தமக்குரிய வல்லா நிலத்துச்செல்லின்" என்றும் பாடமுண்டு.


§ வேற்படை தைத்த முகமுடையனவானால்.

0 அதுவும் நரி அதற்கேதுவாய் முடிதலின் - வேற்படை முகத்திற் குளித் (தைத்) திருத்தலும் நரி யானையைக் கொல்லுவதற்குக் காரணமாய் முடிதலால். [வேற்றைத்துப் பலவீனப்பட்டுப்போன யானையை நரி சேற்று நிலத்தில் கொல்லும் என்ற கூறுவதில் யாதொரு நெருப்புமின்மை மென்பது.]

யும் உடையவரும் தமக்குத் தகாத இடத்திற்சென்றால் அவ்வாண்மைபெரு மைகளால் பயனின்றி மிகவும் எளியவரால் அழிவுசெய்யப்படுதல் தோன்றிற் றமையால், இக்குறளும் பிறிதுமொழிதலணியாகாமாம். இவை மூன்றுபாட் டாலும் பகைவரைச சார்தலாகாத இடமும் சார்ந்தவிடத்தி லுண்டாகும் குற்றமும் சொல்லப்பட்டன

(க - து.) வலிமையுடையவர் தமக்குப்பொருந்தாத இடத்திற் போர்க்குச்செல்லுவாராயின், எளியவரால் தோல்வியடைவார்.

10. A fox can kill a fearless, warrior-faced elephant if it go into mud in which its legs sink down.



பதின்மூன்றும் அதிகாரம்.

தெரிந்து தெளிதல்—On Reflection Before Decision.

பரி:—அஃதாவது அமைச்சர் † முதலாயினரைப் பிறப்புக்குணம் அறிவென்பனவற்றையும் செயலையும் ‡ காட்சி, கருத்து, ஆகமமென்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல். ¶ வலிமுதன் மூன்றுமறிந்துபகை மேற் செல்வானுக்குத் § தானே வினையுற்றுச் செய்தற் பொருட்டும் $ அறைபோகாமைப பொருட்டும் 0 இது வேண்டுதலின் [] அவற்றின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மந்திரிமுதலாயினரைப் பிறப்புக் குணம் அறிவு என்பனவற்றையும் செய்கையையும் காட்சி, கருத்தி, ஆகமம் என்னும் பிர மாணங்களினால் ஆராய்ந்து தெளிதல். வலிமுதலாகிய மூன்றையும்அறிந்து பகைவர்மேற் போர்க்குச் செல்லுவானுக்குச் சேனை போர்த்தொழிலை மன மொத்துச் செய்தற் பொருட்டும், அறைபோகாமைப் பொருட்டும் இது வேண்டுதலால் அவற்றின் பின் வைக்கப்பட்டது.

முதலாயினர் - புரோகிதர், சேனைபதியர், தூதர், சாரணர்முதலான வர்

‡ பிரத்தியட்சம், அனுமானம், சப்தமென்னும் பிரமாணங்களினால்.

¶ வலி முதன் மூன்றுமறிந்து - வலி, காலம், இடமென்னு மூன்றை யுந்தெரிந்து. § தான் என்றும் பாடமுண்டு.

$ அறைபோகாமற் பொருட்டும் என்றும் பாடமுண்டு.

அறைபோதல் - கீழறுத்துச் செல்லுதல். அஃதாவது சத்துருவிற்குப் பயந்து மேறைவால்(சுரங்கவழியால்)செல்லுதல். அறைபோகாமை—கீழறு த்துச்செல்லுதலின்மை, அஃதாவது பின்வாங்காது நிற்றல்.

0 இது—தெரிந்து தெளிதல்.

[] அவற்றின்பின் - வலியறிதல் முதலியவற்றின்பின்.

க. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
நிறந்தெரிந்து தேறப் படும்.

பரி:—(இ - ள்.) அரசனும் தெளியப்படுவோன் ஒருவன் அறமும், பொருளும், இன்பமும், உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் என்னும் உபதை நான்கின் திறத்தான் மனவியல்பு ஆராய்ந்தால் பின்புதெளியப் படும், (எ - று).

அவற்றுள், † அறவுபதையாவது புரோகிதரையும் ‡ அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப்போக்கி அறனும் ¶ உரிமையு முடையான் ஒருவனை வைத்தற்கெண்ணினம்; இது தான் மாவர்க்கும் இயைந்தது, நின்கருத்து என்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும் அவனை

[அறவுபதை - அறமெறியைக் கூறிச சோதித்தல்.]

† "அறவோர் புரோகி தரைவிடுதிட் டவரா லித்தவரசன்றன்
அறவோ னல்ல னிவற்போக்கி யறனு மிரிமை யுடையானை
உறவே வைதற்கெண்ணினமீ தொத்த தெவர்க்கு நினகருத்தென்
உறவா தெனச்சூ ளுறவோடு மோர்ந்தே யொருவன் றனைத்தெளிக.

[பொருளுபதை - பொருள் நெறியைக் கூறிச சோதித்தல்.]

சேனைத் தலைவ னெமக்கமைச சேர்ந்தா ரையுரவிட் டிவ்வரசன்
ஈனப் பொருளா சையனிவனை யிழுக்கிக் கொடையோ மிரிமையுடை
யானைப் புரத்தற் கெண்ணினமீ தமைத்த தெவர்க்கு நின்கருத்தென்
ஊனப் படாமை யுரைத்திடெனச் சூளோ டுரைப்பித் தேதெளிக.

[இன்பவுபதை--இன்பநெறியைக் கூறிச சோதித்தல்.]

"தொன்று தொட்ட வுரிமையொடு சூழ்ந்த தவமூ தாட்டியைவிட்
டொன்று முரிமை தனிலின்ப வுணர்க்கண் மெய்நி யெனைவிடுத்தான்
சென்றங் கவனைக் கூடுதியேற் சிறந்த பொருளுங் கூடுனைக்
கென்று தெளிய சூளுறவோ டிசைப்பித் திதனு ணர்ந்தெளிக.

[அச்சவுபதை—அச்சமுண்டாம் வழியைக் கூறிச் சோதித்தல்.]

ஒருமித்த மேலிட்டே யோரமைசசா லவன்மனையிலேனையோரை [காவல்
யொருமையுற வழைப்பித்திங் கிவர்பிழைப்பக் குழீஇயினரென் றுறுத்திக்
ஒருவனிலிவ் வரசனமை யொறுக்குமுயன் றுனிவினை யொறுத்து வேறே
ஒருவனைவைப் பதற்கிசைந்தே முன்கருத்தென் னெனச்சூளோ டுரைப்பித்
[தோர்க."

என்று அறமுதலிய நால்வகைச் சோதனைகளைப்பற்றி வியாசபுரா ணங் கூறுவது மிங்குறியத்தக்கதாம்.

‡ அறவோர் - முனிவர். ¶ உரிமை - சுதந்திரம்.

டியைத்தாரையும் விட்டு, அவரான் இவவரசன் இவறன் மாலேயன் ஆ
லின் இவனேபபோக்கிக் கொடையும் உரிமையு முடையான் ஒருவனேவைத்
தற கெணணினம், இதுதான யாவாகதும் இயைநதது, நினகருச்தென்னே
யெனச சூளுறவோடு சொலலுவிதகல் இன்பவுபதையாவது தொண்டு
தொட்டு உரிமையோடு பயின்றுள் ஒரு † தவமுதுமகளேவிட்டு, அவனால்
‡ உரிமையுள இன்னுள் நின்னேகணடு $ வருததமுற்றுக் ¶ கூடலிக்கவே
ணடுமெனறு எனனே விடிதாள்; அவளேக கூடலையாயின் நினக்குப பேரி
ன்பமேயன்றிப் பெருமைபொருளுங லகுகூடுமெனச சூளுறவோடு சொல்லு
விதகல அரச வுபதையாவது ஒரு நிமிதகதகதினு மேலிடடு ஓனமைசசனுல்
ஏனேயோரை அவன் இல்லின்கண் அழைப்பிதது இவா () அறை போ
வான் எணணறகுக் குழீஇயினுரென்று தான் காவல செயது ஒருவனுல்
இவவரசன நம்மைக் கொல்வான் சூழ்ந்தமையின் அதனே நாமுறபடச்
செயது நமகினிய அரசனுருவனே வைததல எணடை யாவாக்குமஇயை
நதது, நின்கருததெனனே யெனச சூளுறவோடு சொல்லுவித்தல. இகான்
கினுர திரிபிலனுயவழி எதிர்காலதது திரிபிலனெனக கருத்தாவையாற்
றெளியப்படுமென்பதாம் § இவவடனூற் பொருணமையை யுட்கொணடு
இவரோதிய தறியாது பிறரெலலாம இதனே உயிரெசசமெனப் பாடட
திரிதது ததகமகுத தோனறியவாறே உரைததார.

தேளி:—(இ - ள) (அரசனுல தெளியப்படுவானுருவன) அறம் -
அறமும், பொருள - பொருளும, இன்பம் - இனபமும், உயிரசசம - உயி
ரப் பொருடடால வரும அசசமும நானகின் - (எணணும் உபதை) நானகி
னது, திறம் - திறததினுல், தெரிநது - (மனவியல்பு) ஆராய்நதால, தேறப
படும-(பின்பு) தெளியப்படுவான், (எ - று)

அநநான்கு உபதைகளுள, அறவுபதையாவது புரோதிதரையும் அற
வோரையும் அணுப்பி அவரால் இவவரசன அறமில்லாதவனு பிருததலால்
இவவரசனை நீககி அறமும உரிமையும உடையா னொருவனே வைதததற்கு

தொன்று தொட்டு-பழைமைதொடஙகி அஃதாவது வெகுகாலமாக

† தவமுதுமகள - தவமூதாட்டி [மூதாட்டி - வயதுசென்றவள]

‡ உரிமையுள் என்றும் பாடமுணடு உரிமையுள-மனேவியருள்.

§ வருததமுற்று-காமவேதனையடைந்து.

¶ கூட்டுவிக்க என்றும் பாடமுண்டு.


() அறைபோவானெண்ணற்கு - கீழறுதற்குச செல்லயோசிததற்கு (நம
க்குத நீமை செயய ஆலோசிததற்கு).

§ இவ்வடனூலி னருளுததனதை யுட்கொணடு திருவளளுவநாயனுர
கூறியதறியாமல், மற்றவரெல்லாம உயிரசசமென்பதனே உயிரெசசமெனத
திரிததுப் பாடஙகொணடு தமகுத தமகுத தோன்றியபடியே பொருள்
கூறினுரென்பதாம்.

எண்ணினேனும் ; இதுதான யாவர்க்கும் சம்மதம், உன்கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும், அவனோடு சம்பந்தமானவரையும் அனுப்பி, அவரால் இவ்வரசன் உலோபகுணமுடையவனுயிருத்தலால்இவனை நீக்கி ஈகையும் ஊரிமையும் உடையானொருவனை வைத்தற்கு எண்ணினேனும் ; இதுதான் யாவர்க்கும் சம்மதம், உன் கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது தொன்றுதொட்டு உரிமையோடு பழகியவளாகிய ஒரு தவமுதுமகளை அனுப்பி, அவளால் (அரசனுக்கு) உரிமையுள்ளஇன்னுள உன்னைக்கண்டு வருத்தமுற்றுக்கூட்டவேண்டுமென்று என்னை அனுப்பினன்; அவனைக் கூடுவையாளுல் உனக்குப்பெருஞ் சுகமேயல்லாமல் பெருந்திரவியமும் கிடைக்குமென்று சபதத்தோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேல்வைத்து ஒரு மந்திரியினுல் மற்றவரை அவன் வீட்டில் அழைப்பித்து இவர் அறைபோதலைப்பற்றிஎண்ணுதற்குக் கூடினரென்று தான காவல்செய்து ஒருவனுல் இவ்வரசன் நம்மைக்கொல்ல வெண்ணுகின்றமையால் அக்கொல்லுதலை நாம் முற்படச் செய்து நமக்கு இனிய அரசனொருவனைவைத்தல் இவரு யாவர்க்கும் சமமாதம், உன்கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல்.இக்காலத்து உபதையினுலும் வேறுபடாதவனுயிருந்த விடத்திப்பிற்காலத்திலும்வேறுபடானென்று அனுமானப் பிரமாணத்தினுல்தெளியப்படுவானென்பதாம்.

(க - து.) அரசனைத் தெளியப்படுவானெனுவன் அற் முதலிய நான்குபதைகளாலும் ஆராய்ந்து தெளியப்படுவான் என்பது.

1. Let a minister be chosen, after he has been tried by means of these four things, his virtue, love of money, love of sexual-pleasure, and fear of loosing his life.



2. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

பரி:—(இ - ள்.) உயர்நீத்ததடியிற்பிறந்து குற்றங்களினின்று நீங்கி நமக்கு வடு வருங்கொலென்று அஞ்சா நிற்கும் நாணுடையவனிடத்தே அரசனது * தெளிவு, (எ - று).

குற்றங்களாவன: மேல் அரசனுக்குச்சொல்லிய † வகையாறும்,‡ மடி,

* தெளிவு - நம்பிக்கை.

† ஆறுவகைக் குற்றமாவன - காமம், வெகுளி, லோபம், மானம், உவகை, மதமென்பனவாம்.

‡ மடி - செய்தொழிலில் ஊக்கமின்றிச் சோம்பிக்கிடத்தல்.

மறப்பு, பிழைப்பு என்றிவை † முதலாயவுமாம். ‡ நாண - இழிதொழிலகளின் மனஞ்செல்லாமை ¶இவை பெருமபான்மையும் தகுகோவாய்க கேடடலாகிய ஆகமவளவையாற் றெரிவன. $ இக்நாணகுமுடையவனே தெளிகவெனபதாம்

தேளி·—(இ - ள்) தெளிவு - (அரசனது) தெளிவாவது, குடிபபிறந்து - (உயாந்த) குடியிறபிறந்து, குற்றததின் - குற்றங்களினின் றும், நீஙகி - விலகி, வடி - (நமககுப்) பழுது, (வருமாவெனறு), பரியும - அஞசாகிற்குமு, நாணுடையான் கட்டே - நாணமுடையவனிடதததே,(எ - று)

குற்றஙகளாவன. மூன்னா (குற்றஙகடிதலெனனு மதிகாரததில்) அரசனுககுச சொல்லிய ஆறுவகையும, சோமபல, மறதி, தவறு என்ற இவை முதலியனவுமாம நாணம - இழிதொழிலகளில மனஞசெல்லாமை இவை பெரும்பானமையும் யோகஙகியா வாயிற்கேடடலாகிய ஆகமப்பிரமாணததினுல் தெரிவன இநநாணகு முடையவனேயே தெளிக என்பதாம

(க - து.) அரசன நமகுடியிறபிறகது குறறமிலலாது தனகு வருஙகுறறதகிறகஞசுமு நாணமுடையவனைத தனககுரியவனுகத தெரிநது கொளளல வேணடுமு எனபது

2 The king's choice should fix on him, who is of good family, who is free from faults, and who has the modesty which fears the wounds of sin

அரியகற றுசறறா கண்ணுந தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு

பரி:—(இ - ள்) கற்றற்கரிய நூல்களைக கற்று o மேற்சொல்லிய குற்றஙகள் § அஞ்றூர்மாடடும் நுணணிதாக ஆராயுமிடதது வேணமை யில்லாமை அரிது, (எ - று)

பிழைபபு - செயதொழிலை முறையாகசசெயயாது தவறுதல்.

† முதலாய என்றதனுல் கூடாநடபு, கூடாவொழுகக, சிறறினஞ சேருதல், ஒப்புரவறியாமை முதலியவற்றையுங கொளக

‡ கசினொகனியார "ஒப்புமுருவும்" என்னுந தொலகாபபியச சூதிரதினுரையில் "நாணுவது செயததகாதனவற்றினகண உளளமொலுகுதல்" என்றனர்.

¶ இவை - குறறமாறறம மடி முதலியனவுமாம.

$ இக்நாண்கும் - குடிப்பிறபதனுலும், குறறதினினுகுதலும, வடுப்பரிதலும், நாணுடைமையுமெனனு மிக்நாண்கும்.

o இவ்வதிகாரததின் இரண்டாவது குறளில் கூறிய குற்றங்கள.

§ அஞ்றூர் - இல்லாதவர்.

வெண்மை - அறியாமை ; † இஃது இவ்வாட் னெதாவது மனத்தது ‡ நிலையாமையான் ஒரோவழியாகலின் 'தெரியுங்கால்' என்றார். காட்சியளவையாற் தெரிந்தால் அதுவும் இல்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சம். ¶ இவ்வளவைகளான் இக் § குணமும் o குற்றமும் தொன்றி குணமுடையாரைத் தெளிகவென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) அரிய - (கற்றற்கு) அருமையாகிய நூல்களைக் கற்று - படித்தி, ஆசு - (முற்கூறிய) குற்றங்கள், அற்றார்கண்ணும் - அற்றவரிடத்தும், தெரியுங்கால் - (நுட்பமாக) ஆராயுமிடத்தி, வெளிறு - அறியாமையானது, இனமை-இல்லாதிருத்தல், அரிது-அருமையாம், (எ-று).

வெளிறென்னும் அறியாமை இவரிடத்த மனததினது நிலையாமையால் ஒரோவிடத்து உண்டாவதாதலால், 'தெரியுங்கால்' என்றார். பிரத்தியட்சப் பிரமாணத்தினுல் தெளிந்தால் அவ்வெளிறும் இல்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெசமாம். இத்தப் பிரமாணங்களால் இக்குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையவரைத தெளிகவென்பதி இம் மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து.) பேரறிவாளரிடத்தும் அறியாமை யுண்டென்பது.

3. When even men, who have studied the most difficult works, and who are free from faults, are carefully examined, it is a rare thing to find them without ignorance.

வெண்மைப்பண்பு வெண்கரும்பென இனம்பற்றியும், வெண்டிங்களென இனம்பற்றுமலும், வெண்டாமரையெனத தனக்குரிய நிலையை விட்டு உரிமையில்லாத முதலைப்பற்றியும், வெள்ளாடென வெதிர்வுபற்றியும், 'வில்லங்கன்னர் வெள்ளறிவினர்' என இழிபுபற்றியும், வெண்களம வெள்ளாளர் எனச் சாதிபற்றியும், வெள்ளோட்டமெனப் புதுமைபற்றியும், வெண்டேர் எனப்பொய்பற்றியும், வெளிற்றுமரமென உள்ளீடின்மை பற்றியும், வெளியார் முன்னென இயல்புபற்றியும், இனனும்பிறவற்றைப் பற்றியும் வரும்.

† இஃது இவ்வாட் னெதாவது-அறியாமை அரியகற் ருசற்ருரிடத் தண்டாவது.

‡ நிலையாமையான்-தம்மாற்றத்தால்.

¶ அனுமானம், ஆகமம், பிரத்தியட்சமென்னும் பிரமாணங்களினுல்.

§ குணம் - குடிப்பிறத்து குற்றத்தினீக்குதல் முதலியன.

o குற்றம் - காமம், வெகுளிமுதலியன.

ச. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

பரி:—(இ - ள்.) குணங்குற்றங்களுள் ஒன்றே உடையார் உலகத்தின்மையின், ஒருவன் குணங்களை ஆராய்ந்து ஏனைக்குற்றங்களையும் ஆராய்ந்து பின் அவ்விருபதுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து அவனை அம்மிக்கவற்றானே அறிக, (எ - று).

† மிகையுடையவற்றை 'மிகை' என்றார். அவையாவன:—‡ தலைமையாலுஞ் பண்மையாலுக உயர்த்தன. அவற்றுள் அறிதலாவது குணமிக்கதாயின் வினைக்குரியனெனறும், குற்றமிக்கதாயின் தல்லனென்றும் அறிதல். குணமே உடையார் உலகத்தரியராகலின், இவ்வகை யாவரையுந் தெளிகவென்பது இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (குணங்குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்தில்லாமையால் ஒருவனது) குணம் - குணங்களை, நாடி - ஆராய்ந்து, குற்றமும் - (மற்றைய) குற்றங்களையும், நாடி - ஆராய்ந்து, அவற்றுள் - (பின்பு) (குணமு குற்றமென்னும்) அவ்விருவகையுள்ளும், மிகை - மிகுந்தவற்றை, நாடி - ஆராய்ந்து, மிக்க-அம்மிகுந்தவற்றாலே, கொளல்-(அவனை) அறியக்கடவன், (எ - று).

மிகையுடையவற்றை 'மிகை' என்று கூறினார். அம்மிகையாவன:—தலைமையினுலாவது பண்மையினுலாவது உயர்ந்தவை. அம்மிகுந்தவற்றால் அறிதலாவது (ஒருவனிடத்து) குணமிகுந்திருந்தால் (அவன்) தொழிலுக் குரியவனென்றும், குற்ற மிகுந்திருந்தால் தொழிலுக் குரியவனல்லனென்றும் அறிதல். குணமாத்திரமுடையவர் உலகத்தில் அரியராகலால், இவ்வகையாக யாவரையும் தெளிக என்பது இதனுற் சொல்லப்பட்டது.

(க-து.) அரசன் ஒருவனிடத்துள்ள குணங்குற்றங்களை யாராய்ந்து, குணமிகுந்திருந்தால் அவனைத் தொழிலுக் குரியவனென் றறியக்கடவன் என்பது.

" குற்றமு மேனைக் குணமு மொருவணை, கட்டபி ஞடித் திரிவே னேல்-கட்டான், மறைகாவா விட்டவன் செல்வுழிச செல்க, அறைகடல் சூழ் வைய கம்" என்பது நாலடி.

† மிகையென்னும் தருமத்தின் பெயர் மிகையுடைய தருமியை யுணர்த்தி நின்றது. தரு மி-குணங்குற்றங்கள்.

‡ தலைமையால் உயர்தல் பண்மையால் உயர்தல்களைப்பற்றி "ஒரு பெயர்ப் பொதிச்சொல்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தினுரையில் நச்சினர்க்கினியார் "பிறரும் வாழ்வாருளரேனும பார்ப்பனச்சேரி யென்றல் உயர்திணைக்கண் தலைமை பற்றியவழக்கு; எயினர் சாடென்பது அத்திணைக்கண் பண்மைபற்றிய வழக்கு. பிற புல்லும்மரனும் உளவேனும் கழுகுகர்தோட்டமென்றல் அஃறிணைக்கண் தலைமைபற்றிய வழக்கு; ஒவெக்கா டென்பது அத்திணைக்கண் பண்மைபற்றிய வழக்கு." என்று கூறியது மிகவுரியதக்கது.

4. Let a king consider a man's good qualities, let him also consider his faults, and then let him consider which of these are the greatest, and let him judge of his character by that which prevails.



நி. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

பரி:—(இ - ள்.) பிறப்புக் குணம் அறிவென்பனவற்றுள் மக்கள் எய்தும் † பெருமையாகிய பொன்னினவறிதற்கும் மற்றைச் சிறுமையாகிய பொன்னினவறிதற்கும் உரைகல்லாவது தாம் தாம் செய யுங் கருமமே, பிறிதில்லை, (எ - று).

இஃத ‡ ஏகதேசவுருவகம். மக்களது பெருமையும் சிறுமையும் தப் பாமல் அறியலுறுவார்க்குப் ¶ பிறகருவிகளும் உளவாயினும், $ முடிந்த கருவி செயலென்பது தேற்றேகாரத்தாற் பெற்றாம். இதனாற் குணங்குற் றங்கள் காடற்குக் கருவி கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (குடிப்பிறப்பு, குணம் அறிவு என்பனவற்றுள் மனிதரிடையும்) பெருமைக்கும்-பெருமையாகிய பொன்னின் மாற்றறிதற் கும், ஏனைச்சிறுமைக்கும் - மற்றைச்சிறுமையாகிய பொன்னின் மாற்றறி தற்கும், கட்டளைக்கல் - உரை கல்லாவது, தத்தங்கருமமே-தாம் தாம்செய் யும் செயல்களே, (மற்றொன்றில்லை), (எ-று).

இக்குற ளேக தேச உருவகவணி. மனிதருடைய பெருமையையும் சிறுமையையும் தப்பாமல்அறியத்தொடங்கியவர்களுக்குவேறுசாதனங்களு மிருப்பனவாயினும், முடிவான சாதனம் அவர் செயல் என்பது 'கரு மமே' என்னும் தேற்றேகாரத்தாற் பெறப்பட்டது. இதனாற் குணங்குற் றங்களை அறிதற்குச் சாதனம் சொல்லப்பட்டது.

(க - து.) ஒவ்வொருவரிடத்து முள்ள பெருமையையும் சிறுமையையும் அறிதற் கு முடிவானசாதனமாயுள்ளது அவரவ ரது செய்கைகளேயாம் என்பது.

5. A man's deeds are the touch-stone of his greatness and littleness.



† பெருமைக்கும் மற்றைச்சிறுமைக்கும் என்றும் பாடமுண்டு.

‡ கருமத்தைக்கட்டளைக்கல் (உரைகல்) என்றுருவகஞ் செய்தவர் பெருமை சிறுமைகளைப் பொன்னென்றுருவகஞ்செய்யாமையின், இக் குறள் ஏகதேசவுருவகமாயிற்றென்க.

¶ பிறகருவிகள் - இடம் பொருள் ஏவல் முதலியன.

$ முடிந்த கருவி - தேர்ந்த சாதனம்.

கூ. அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

பரி:—(இ - ள்.) சுற்றமில்லாதாரைத் தெளிதலே யொழிக; அவர் உலகத்தோடு தொடர்பிலர்; ஆகலாற் பழிக்கஞ்சார், (எ - று).

'பற்றிலர்' என்பதனால் சுற்றமென்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன வொழிதற்கும் புகழ்வன செய்தற்கும் எதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படாரென்பதாம்.

தேளி:—(இ-ள்.) அற்றுரை - (சுற்றம்) இல்லாதவரை, தேறுதலோம்புக - தெளிதலே யொழியக்கடவன். அவர்-(சுற்றமில்லாத) அவர், மற்றப் பற்றிலர் - உலகத்தோடு சம்பந்தமிலர், (ஆதலால்), பழி - பழிக்கு, நாணர்-அஞ்சார், (எ-று).

சுற்றம் என்பது 'பற்றிலர்' என்று கூறியதினால் வருவித்துரைக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பனவற்றை யொழிதற்கும், புகழ்வனவற்றைச் செய்தற்கும் காரணமாகிய உலகநடையினியல்பு சுற்றமில்லாதவர்க்கு இல்லாமையால், அவர் தெளியப்படாரென்பதாம். சுற்றம் - உறவினர்.

(க - து.) சுற்றமில்லாதவர் பழிக்கஞ்சாமையின், அவரை அரசன் தனக்குரியவராகத்தெளிதலொழியக்கடவன் என்பது.

6. Let a king avoid choosing men who have no relations ; such men have no attachments, and therefore have no fear of crime.

எ. காதன்மை கந்தா வறிவழியார்த் தேறுதல்
† பேதைமை யெல்லாந் தரும்.

பரி:—(இ - ள்.) அன்புடைமை ‡ பற்றுக்கோடாகத் தமக்கியைய வேண்டுவன அறியாதாரைத் தெளிதல் அரசனுக்கு எல்லா அறியாமையையுங் கொடுக்கும், (எ - று).

தன்னெஞ்சு § அவரிடைநின்ற அன்புபற்றி $ அரசன் அறிவிலார்மேல் வினையைவைப்பின், அஃது அவரறிவின்மையாற் கெடும்; கெட்டால்

* "சுற்ற மிலரா னவர்சம்மைச் சூழேல் பழிபா வமுநாணர், பற்று மிலரா குவர்விகே" என்பது விநாயகபுராணம்.

† பேதைமை - யாதுமறியாமை.

‡ பற்றுக்கோடு - ஆதாரம். § அவரிடை - அறிவறியாரிடத்து.

$ "உடைப்பெருஞ் செல்வத் துயர்ச்சி பெருமை, அடக்கமு ளுள்ளத் தவுகி - டக்கையின், ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கினைக், கொள்ளி கொடுத்த விடல்" என்பது பழமொழி.

கருத்துவகையால் சகாதேகத்தினது விலக்கின்மேல் நின்றது. தேறும் பொருள் என்றது அவரவர் வல்லமைக்கு ஏற்றதொழில்களே. பொருள்-காரியவாகுபெயர்.

(க - து.) *அரசன் ஆராய்வதற்குமுன் எவரையுந் தனக்குரியவராகத் தெளியாது நன்றாய் ஆராய்ந்தபிறகு தெளியக்கடவன் என்பது.*

9. Let a king choose no one without previous consideration; after he has made his choice, let him unhesitatingly select for each such duties as are appropriate.

கo. தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

பரி:—(இ - ள்.) அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும் ஆராய்ந்து தெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும் அவனுக்குத் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும், (எ - று).

*வினை வைத்தபின் ஒருதலைமை காணுதலைத்தான் ஐயுறுமாயின், * அதனை யவனறிந்து இனி இது நில்லாதென்னுங் கருத்தான் அவ்வினையை கெடுத்துவிடும்; அதுவே யன்றிப் பகைவரால் எளிதிற் பிரிக்கவும் படும். ஆகலான் 'தெளிந்தான்க ணையுறவும்' ஆகாதாயிற்று தெளிவிற கெல்லை கூறியவாறு. இவை ஐந்தபாட்டானும் தெளியப்படாதார் இவரென்பதூஉம், அவரைத் தெளிந்தாற்படும இழுக்கும், தெளிவிற்கெல்லையுங் கூறப்பட்டன.*


தெளி:—(இ - ள்.) (அரசன்) தேரான் - (ஒருவனை) ஆராயாது, தெளிவும் - தெளிதலும், தெளிந்தான்கண் - ஆராய்ந்து தெளிந்தவனிடத்து, ஐயுறவும் - சகாதேகப்படுதலும், (இந்த இரண்டும் அவ்வரசனுக்கு), தீராவிடும்பை - நீங்காததுன்பத்தை, தரும் - கொடுக்கும், (எ - று).

அரசன் ஒருவனிடத்து ஒருதொழிலை வைத்தபின் ஒருதலைமை காணுதிருந்தும் (அவனிடத்தில்) சந்தேகமுமுளனாயின், அதனை அவன் அறிந்து இனி இது நில்லாதென்னுங் கருத்தால் அத்தொழிலைத் தளரவிடுவான்; அதுவேயல்லாமல் பகைவரால் எளிதிற் பிரிக்கவும் படுவான். ஆதலால் 'தெளிந்தான்க ணையுறவும்' ஆகாதாயிற்று. தெளிவிற்களவு கூறியவாறும். இவை ஐந்தபாட்டாலும், தெளியப்படாதவர் இவரென்பதும், அவரைத் தெளிந்தால் உண்டாகும் குற்றமும், தெளிவிற் களவும்சொல்லப்பட்டன.

** அதனை யவனறிந்து இனி இது நிலலாதென்னுங் கருத்தான் - சந்தேகப்படுதலைத் தொழிலை (உத்தியோகத்தை) யேற்றுக் கொண்டவன் தெரிந்துகொண்டு இனி இத்தொழில் நம்மிடத்து நிலைபெறுதென்னும் அபிப்பிராயத்தால்.*

(க - து.) *ஆராயாம லொருவனைத் தெளிதலும் தெளிந்தவனிடத்துச் சகேதகமுறுதலுமுடைய அரசனுக்கு அவை நீங்காத துன்பத்தைத்தரும் என்பது.*

10. To make choice of one who has not been examined, and to entertain doubts respecting one who has been chosen, will produce irremediable sorrow.



பதினன்காம் அதிகாரம்.

தெரிந்து வினையாடல்—

On deliberation in the employment of servants.

பரி:—அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்ய வல்ல வினைகளே அறிந்து அவற்றின்கண்ணே ஆளுந்திறம். * அதிகாரமுறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி:—*அஃதாவது அத்தெளியப்பட்டவரை அவர் செய்யவல்லதொழில்களே அறிந்து அத்தொழில்களிலே ஆளுந்திறம். அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.*

க. † நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளளப் படும்.

பரி:—(இ - ள்.) அரசன் முதற்கண் ஒருவினையைத் தன்கண்வைத்தால், அதன்கண் ‡ ஆவனவும் ¶ ஆகாதனவும் ஆய செயல்களே ஆராயந்தறிந்து () அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய இயல்பினையுடையான் பின் அவனும் சிறந்த வினைகளிலே ஆளப்படும், (எ - று).

தன்னே o உரிமை அறிதற் பொருட்டு அகம் புறங்கட்கு நடுவாய தோர் வினையை அரசன் தன்கண வைத்தவழி அதன்கண் ஆம்செயல்களே யே செய்தவன் பின்னும் அவ்வியல்பின ஞதலபற்றி அகமாய வினைக் கண்ணே ஆளப்படுவனென்பதாயிற்று. † 'புரிந்த' என்ற இறந்தகாலத்தான் முன் உரிமை அறிதற்பொருட்டு வைதத வினையாதல் பெற்றும்.

** தெரிந்து தெளிதல் தெரிந்து வினையாடற் கேதுவா யிருப்பதபற்றித் தெரிந்து தெளிதற்குப்பின் தெரிந்து வினையாடல் வைக்கப்பட்டது.*

† *"முன்னர்ப் பொதுவா யெவினையின் மூள விடுத்துத் நிதகற்றி, நன்மை புரிந்து வருமாயி னுடி யவனைச் சிறந்தவினை, தன்னில் விடுக்க" என்பது விநாயகபுராணம்.*

‡ *ஆவன - நன்மைதருவன.* ¶ *ஆகாதன - நிமைதருவன.*

() *அவற்றுள் - ஆவன ஆகாதனவாகிய செயல்களில்.*

o *உரிமை - உடைத்தும் வகை.*

† *புரிந்த என்பது இறந்தகாலத் தெரிநிலே யுடன்பாட்டுப் பெய செச்சம்.*

தெளி:—(இ - ள்.) (அரசன் முதலில் ஒரு தொழிலைத் தன்னிடத்து வைத்தால்) நன்மையுந் தீமையும் - (அத்தொழிலில்) ஆவனவும் ஆகாதனவும், (ஆகிய செயல்களை), நாடி - ஆராய்ந்தறிந்து, நலம் - (அச்செயல்களுள்) ஆவனவற்றையே, புரிந்த - விரும்பிய, தன்மையான் - இயல்பினையுடையவன், (பின்னே அவ்வரசனால்), ஆளப்படும் - (சிறந்த தொழில்களிலே) ஆளப்படுவான், (எ - று).

தன்னே உரிமை அறிதற்பொருட்டு அகத்திற்கும் புறத்திற்கும் உடலாகிய ஒருதொழிலை அரசன் தன்னிடத்து வைத்தவிடத்து அத்தொழிலில் ஆகுஞ் செயல்களேயே செய்தவன் பின்னும் அத்தன்மையனுவது பற்றி அகமாகிய தொழிலிலே ஆளப்படுவா னெனப்தாயிற்று, 'புரிந்த' என்று இறந்தகாலத்தால் கூறியதால் முன்னர் உரிமையை அறிதற்பொருட்டு வைத்த தொழிலாதல் பெறப்பட்டது. அகம்-உள். புறம்-வெளி.

(க - து.) தான் செய்யுந்தொழிலில் நன்மை தீமைகளை யாராய்ந்தறிந்து ஆவனவற்றைச்செய்ய விரும்புகின்றவனே அரசனுலாளப்படுவான் என்பது.

1. He should be employed by a king, whose nature leads him to choose the good, after having considered both the evil and the good.

* வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை.

பரி:—(இ - ள்.) பொருள் வருவாயில்களை † விரியச்செய்து அப்பொருளாற் செல்வங்களை வளர்த்து அவ்வாயில்கட்கும் பொருடகுஞ் செல்வங்கட்கும் உற்ற ‡ இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்க வல்லவன் அரசனுக்கு வினை செய்க, (எ - று).

வாயில்களாவன: மேல் இறைமாட்சியுள் ¶ 'இயற்றலும்' என்புழி

வாரி - இகரவீற்றுத் தொழிலாகுபெயர்.

† விரியச்செய்து - அதிகப்படுத்தி.

‡ இடையூறு - விக்கினம் (தடை). [ஒரு காரியம் செயயும்போது அதற்கிடையிற்றடையுண்டாவது இடையூறெனப்படும்.]"பரிசனம் பகைவர் கள்வர் படர்தரு முயிர்க டாமென, முரைசெயைத் திடத்தி னலு முலகிடை யிடையூ றெய்தா, வரிசையிற் காத்து நீதி வழுக்கினர் தம்மை மொத்திக், கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தரும மைந்தா" என்பது விநாயகபுராணம்.

¶ 'இயற்றலும்' என்பதற்குத் தனக்குப்பொருள்கள் வரும் வழிகளை மேன்மே லனவாக்கலும் என்பது பொருள்.

* உரைத்தனவும், † உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் வார்த்தையுமாம். செல்வங்களாவன: ‡ ஆண்டுப் ¶பொருளும் இன்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன: † அரசன் வினைசெய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வ ரென்று இவரான் வரும் நலிவுகள்.

தெளி:—(இ - ள்.) வாரி - (பொருள்) வரும் வழிகளை, பெருக்கி - விரியச்செய்து, வளம்படுத்து - (அப்பொருளால்) செல்வங்களை வளர்த்து, உற்றவை - (அப்பொருள் வரும் வழிகளுக்கும் பொருளுக்கும் செல் வங்களுக்கும்) வந்த இடையூறுகளை, ஆராய்வான் - (தினந்தோறும்) ஆரா ய்ந்து நீக்கவல்லவன், (அரசனுக்கு), வினைசெய்க - தொழில் செய்யக்கட வன், (எ - று).

வரும் வழிகளாவன: முன் இறைமாட்சி அதிகாரத்தில் 'இயற்றலும்' என்றவிடத்து உரைத்தனவும், உழவு, பசுக்காவல், வாணிகம் என்னும் வார்த்தையுமாம். செல்வங்களாவன: அங்குப் பொருளும் இன்பமும் ஆகச்சொல்லப்பட்டவை. இடையூறுகளாவன: அரசன் தொழில் செய் வார், சுற்றத்தார், பகைவர், கள்வர் என்று இவர்களால் வரும் துன்பங்கள்.

(க-து) பொருள்வரும் வழிகளை விருத்திசெய்து அவ்வரும் வழி முதலியவற்றிற்கு வந்த இடையூறுகளை யாராய்ந்து நீக்க வல்லவன் அரசனுக்குத்தொழில் செய்யக்கடவன் என்பது.

2. Let him do the king's work who can enlarge the sources of revenue, increase wealth, and consider and prevent the accidents which would destroy it.

"பொருள்களாவன: மணி, பொன், செம்முதலாயின. அவைவரும் வழிகளாவன: பகைவரை யழித்தலும், நிறைகோடலும் (கப்பம் வாங்குத லும), தன்னுதலியளித்த (காத்த)லும் முதலாயின" என்றுரைத்தனவும்.

† உழவு, பசுக்காவல், வாணிகமென்பனவற்றைப்பற்றிக் கூறும் வார்த்தையு (தருமசாஸ்திரமு)மாம். வார்த்தையாவது இது நன்மை பயப்பது இது தீமைபயப்பதென்றவற்றை விளக்கிக்கூறும் சாஸ்திரமாம். உழவினை விருத்தி செய்தலும், பசுக்களைப் பாதுகாத்தலும் வர்த்தகத்தை விருத்திசெய்தலும் அரசனுக்குப் பொருள்வரும் வழிகளாமென்பதீண் டுணர்த்தற் பாலதாம். மனுதர்மசாஸ்திரம் வைசியாத்தியாயத்துள்ள நீர் வைவிதி யிங்குக் கவனிக்கத்தக்கது.

‡ ஆண்டு - 'இயற்றலும்' என்னுங்குறளின் விசேடவுரையில்.

¶ "யானை, குதிரை, படை, நாடு, அரணென்றிவற்றிற்கும்,' பகை யொடு கூடலிற்பிரிக்கப்படுவார்க்கும், தன்னிற்பிரிதலிற் கூட்டப்படுவார் க்கும் கொடித்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய் குன்று, இளமரக்கா (சுத்தவனம்) முதலியசெய்தற்கும், ஐம்புலன்களானுகர வன (செவி முதலிய ஐந்திந்திரியங்களால் அனுபவிக்கப்படுவென) வற் றிற்கும் கொடித்தலை இன்பப்பொருட்டாகவுங் கொள்க" என்றுரைக்கப் பட்டனவு. † ராஜகாரியஞ் செய்வார்.

கூ. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

பரி:—(இ - ள்.) அரசன்மாட் டன்பும் அவனுக் * காவன அறியு மறிவும் அவை செய்தற்கட் கலங்காமையும் அவற்றற் பொருள் கையுற் றவழி அதன்மேல் அவாவின்மையுமாகிய இந்நான்கு குணங்களையும் நிலைபெற வுடையான்மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு,(எ - று).

† இந்நான்கு நன்குடைமை இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் ஆராய வேண்டுவதில்லை யென்று அரசன் தெளிதற் கேதுவாகலின், ‡ அவனே அதன் பிறப்பிடனுக்கிக் ¶ கூறினர். இவை மூன்றுபாட்டானும் ஆடற்குரியானது இலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அன்பு-(அரசனிடத்து) அன்பும், அறிவு-(அவ்வரசனுக்கு ஆவனவற்றை யறியும்) அறிவும், தேற்றம் - (அவ்வாவனவற்றைச் செய்யுமிடத்துக்) கலங்காமையும், அவாவின்மை - (அவ்வாவனவற்றைச் செய்வதால் பொருள் கைகூடியவழி அப்பொருளின்மேல்) ஆசையில்லாமையும், (ஆகிய), இந்நானகும் - இந்நான்கு குணங்களையும், நன்குடையான கட்டே - நிலைபெற வுடையவனிடத்தே, தெளிவு-(தொழிலில்விட்டிருக்கும்) தெளிவு, (எ - று).

இந்நான்கு குணமும் நன்குடைமை இவன் செய்கின்ற தொழிலில் சிறிதும் ஆராய வேண்டுவதில்லை யென்று அரசன் தெளிதற்குக் காரணமாதலால், அவனை அத்தெளிவின் பிறப்பிடமாக்கிச் சொல்லினார். இவை மூன்று பாட்டாலும் ஆடுதற்குரியவனது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) அன்பு அறிவு தேற்றம் ஆசையில்லாமை யென்னு மிந்நான்கு முடையவனிடத்தே அரசனுக்குத் தெளிவுண்டாகும்.

3. Let the choice of a king fall upon him who largely possesses these four things, love, knowledge, a clear mind and freedom from covetousness.



கூ. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுசெ மாந்தர் பலர்.

பரி:—(இ - ள்.) எல்லாவகையானும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்த பின்னும் அவ்வினையின் இயல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப் பலர், (எ - று).

* ஆவன - அனுகூலமானவற்றை.

† இந்நான்கு நன்குடைமை - அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை யென்னும் இந்நான்கு குணங்களும் நிலைபெறவுடையவனுடைமை.

‡ அவனே - அன்பு முதலிய குணங்களுடையவனே.

¶ 'நன்குடையான் கட்டே தெளிவு' என்று கூறினர்.

கட்டியங்காரன்போல அரச இன்பத்தினை வெஃகி விகாரப்படுவ தல்லது அதனைக் குற்றமென் றெழிந்து தம்மியல்பி னிற்பார் அரியராக லின் 'வேறுரு மாந்தர் பலர்' என்றார். வினை வைப்பதற்கு முன் எல்லாக் குணங்களும் உடையராய் வைத்தபின் விகாரப்படுவாரை இடையாயதொரு வினையை வைத்தறிந்து ஒழிக்க வென்பதாம். இதனுள் ஒருவகையா லொழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) *எவ்வகையால் - எல்லாவகையாலும், தேறியக் கண்ணும் - (ஆராய்ந்து) தெளிந்து தொழிலே வைத்த, பின்னும், வினை வகையான் - அத்தொழிலினியல்பினுளே, வேறுரும் - வேறுபடுகின்ற, மாந்தா - மனிதர், பலர் - (உலகத்தில்) பலர், (எ - று).*

கட்டியங்காரன்போல அரச வின்பத்தினை விரும்பி வேறுபடுவதல்லா மல் அவ்வரச வின்பத்தினைக் குற்றமென்றெழிந்து தம் மியல்பில் நிற்ப வர் அரியராதலால் 'வேறுரு மாந்தர் பலர்' என்றார். தொழிலே வைப்பதற்கு முன்னர் எல்லாக்குணங்களு முடையவராய் வைத்த் பின் வேறுபடுவா ரை அகத்திற்கும் புறத்திற்கும் நடுவானதொரு தொழிலேவைத்து அறிந்து ஒழிக்கவேண்டு மென்பதாம். இதனுள் ஒருவகையால் ஒழிக்கப்படுவார் இவ ரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) *ஆராய்ச்சிவகையால் வேறுபடாதிருந்து தொழில் வகையால் வேறுபடு மனிதர் பலராவரென்பது.*

4. Even when a king has tried them in every possible way, there are many men who change, from the nature of the works in which they may be employed.



நு. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

பரி:—(இ - ள்.) *செயியும் உபாயங்களை அறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களைப் பொறுத்து முடிவுசெய்ய வல் லானே அல்லது வினைதான் இவன் நம்மாட்டு அன்புடையனென்று † பிறனெருவனையேவும் இயல்புடைத்தன்று, (எ - று).*

கட்டியங்காரனென்பான் சிவகனது தந்தையான சச்சந்தனது மந் திரிகளுள் ஒருவன். இவன் சச்சந்தன் தன் மனைவியான விசையையிடத்து மிருந்த காதல்கொண்டு அரசாட்சியைக் கவனியாது போகமனுபவித்திருக் கும்போது அச்சச்சந்தனைக் கொன்று அரசாட்சியைக் கவர்ந்து கொண்டா னென்பது கதை. இதன் விரிவைச் சிவகசிந்தாமணி நாமகளிலம்பகத்திற் காண்க.

† *பிறன் - செய்யு முபாயங்களை யறிந்து செயலாலும் இடையூறுக ளாலும் வரும் துன்பத்தைப் பொறுத்துத் தொழிலை முடிவுசெய்ய வல்ல மை யில்லாதவன்.*

செய்கிற்பாற் கென்பது வேற்றுமை மயக்கம். அறி ‡ வாற்றல்க ளான் அல்லது அன்பான் முடியாதென இதனுல் வினையின தியல்பு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வினைதான் - தொழில்தான், அறிந்து - (செய்யும் உபாயங்களை) அறிந்து, ஆற்றி - (செயலாலும் இடையூறுகளாலும் வருந்துன்பங்களைப்) பொறுத்து, செய்கிற்பாற்கல்லால் - (முடிவு) செய்ய வல்லவனை யல்லது, சிறத்தானென்று - (இவன் நம்மிடத்து) அன்புடையவனென்று, ஏவற்பாற்றன்று - (வேறொருவனை) ஏவுதல் தன்மையையுடையதன்று, (எ - று).

செய்கிற்பாற் கென்பது செய்கிற்பானெயெப் பொருள்பட்டமையின் வேற்றுமை மயக்கமாம். அறிவாற்றல்களா லல்லது அன்பினுல் முடியாதென்று இதனுல் தொழினது இயல்பு சொல்லப்பட்டது.

(க - து.) செய்யுமுபாயங்களை யறிந்து முடிப்பவரிடத்தல்லாமல் மற்றவரிடத்துத் தொழிலைவைத்தல்கூடாது என்பது.

5. A king's works can only be accomplished by a man of wisdom and patient endurance; it is not of a nature to be given to another from mere personal attachment.



கூ. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

பரி:—(@ - ள்.) முதற்கண்ணே செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து பின் செய்யப்படும் வினையினது இயல்பை ஆராய்ந்து பின் அவனையும் அதனையுங் காலத்தோடு படுத்துப் பொருந்த அறிந்து அவனை அதன்கண் ஆடலே செயக, (எ - று).

¶ செய்வானது இலக்கணமும் வினையினது இயல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோ டெய்த உணர்தலாவது இக்காலத்தி இவ்விலக்கண முடையான் செய்யின் இவ்வியல்பிற்றாய வினை முடியுமென்று கூட்டியுணர்தல்.

தெளி:—(இ - ள்). செய்வானை - (முன்னே) செய்பவனிலக்கணத்தை, நாடி - ஆராய்ந்து, (பின்னே), வினை - (செய்யப்படுங்) தொழிலினியல்பை, நாடி - ஆராய்ந்து, (பின்பு அச்செய்வானையும் அத்தொழிலையும்),

*செய்கிற்பாற்கு என்னும் நான்கனுருபு தனக்குரிய பொருளேவிட்டுச் செய்கிற்பானெயென இரண்டனுருபின் பொருளில் வந்தமையின், வேற்றுமை மயக்கமாயிற்று. ‡ ஆற்றல் - பொறுமை.

¶ செய்வானது இலக்கணம் இவ்வதிகாரத்தின் முதல் மூன்று குறளிலும், வினையினது இயல்பு 'அறிந்தாற்றி' என்னும் ஐந்தாவது குறளிலும் சொல்லப்பட்டன.

காலத்தோடு - காலத்திடனே, (சேர்த்து), எய்த - பொருந்த, உணர்ந்து அறிந்து, செயல் - (அச்செய்வானே அத்தொழிலி னிடத்து ஆளுதலைச்) செய்யக்கடவன், (எ - று).

செய்வானது இலக்கணமும் தொழிலினது இயல்பும் முன்னே சொல்லப்பட்டன. காலத்தோடு பொருந்த அறிதலாவது இக்காலத்தில் இவ்விலக்கணமுடையவன் செய்தால் இத்தன்மையதாகிய தொழில் முடியுமென்று கூட்டி அறிதல்

(க - து.) அரசன் முன்னர்த் தொழில்செய்பவனே யாராய்ந்தறிந்து, பின்னர்த் தொழினியல்பை யாராய்ந்தறிந்து, அப்பால் அவனே அத்தொழில்வைத் தாளக் கடவன் என்பது.

6. Let a king act, after having well considered the agent whom he is to employ, the deed he desires to do, and the time which is suitable to it.

எ. இதனே யிதனு லிவன்முடிக்கு மென்றாய்ந்
தகனே யவன்கண் விடல்.

பரி:—(இ - ள்.) இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்கவல்லனெனக் கூறுபடுத்தாராய்ந்து, * மூன்றுந்தம்முள் இயைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக, (எ - று).

கருவி - தானேவரும் பொருளும் † முதலாயின. வினைமுதலும், ‡ கருவியும், வினையுந் தம்முள் இயைதலாவது ¶ ஒரொன்றோடு ஏனைய இரண்டற்கும் பொருத்தமுண்டாதல். விடுதல - அதற்கு அவனே உரியனுக்குதல்.

தெளி:—(இ - ள்.) இதனே - இத்தொழிலை, இதனுல் - இச்சாதனத்தால், இவன் முடிக்குமென்று—இவன் முடிக்கவல்லவனென்று, ஆய்ந்து - (கூறுபடுத்தி) ஆராய்ந்து, (மூன்றும் தம்முள் ஒத்திருந்தவிடத்து), அதனே - அத்தொழிலை, அவன்கண் - அவனிடத்தே, விடல் - விடக்கடவன், (எ - று).

* *மூன்றும் - தொழில் கருவி செய்பவனென்னும் மூன்றும்.*

† *முதலாயின என்றதனுல் காலம், இடம், படை முதலியவற்றையுங் கொள்க.*

‡ *வினைமுதலின் (செய்பவனின்) தொழிற்பயனைச் செயப்படுபொருளிற் சேர்ப்பது கருவியெனப்படும். கருவியெனினும் காரகமெனினும் காரணமெனினும் ஏதுவெனினும் சாதனமெனினும் ஒக்கும்.*

¶ *தொழிலோடு கருவிக்கும் செய்பவனுக்கும், கருவியோடு தொழிலுக்கும் செய்பவனுக்கும், செய்பவனோடு தொழிலுக்கும் கருவிக்கும் பொருத்த முண்டாதல்.*

சாதனம் - தினைவரும் பொருளும் முதலானவை. செய்பவனும், சாதனமும், தொழிலும் தம்முள் ஒத்திருத்தலாவது ஒவ்வொன்றோடு மற்றைய இரண்டற்கும் பொருத்தம் உண்டாகுதல். விதித்தல்—அத்தொழில் செய்தற்கு அவனை உரியவனுக்குதல்.

(க - து.) அரசன் எத்தொழில் எவனால் முடியுமோ அத்தொழிலை அவனிடத்து வைக்கக்கடவன் என்பது.

7. After having considered, "this man can accomplish this, by these means," let the king leave with him the discharge of that duty.

அ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

பரி:—(இ - ள்.) ஒருவனை அரசன் தன்வினைசெய்தற் குரியனாக ஆராய்ந்து துணிந்தால், பின் அவனை * அதற்குரியனாறு உயர்ச்செய்க, (எ - று).

உயர்ச்செய்தலாவது அதனைத் தானே செய்து முடிக்கும் ஆற்றலுடையானாக்குதல். † அது செய்யாக்காலுங் கெடுமென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) (ஒருவனை அரசன்) வினைக்கு - (தனது) தொழில் செய்தற்கு, உரிமை - உரியவனாக, நாடியபின்றை - ஆராய்ந்து துணிந்தால் பின்பு, அவனை—, அதற்கு - அத்தொழில் செய்தற்கு, உரியனாக—உரியவனாகும்படி, செயல் (உயர்ச்) செய்யக்கடவன், (எ - று).

உயர்ச்செய்தல் - அத்தொழிலைத் (அவன்) தானே செய்துமுடிக்கும் வல்லமையுடையவனாக்குதல். அது செய்யாதவிடத்துங் கெடுமென்பது கருத்து.

(க - து.) அரசன் ஒருவனைத் தன் தொழிற்குரியவனா யிருத்தலை யாராய்ந்தறிந்து, பிறகு அவனை அத்தொழிற்கு உரியவனாகச் செய்யக்கடவன் என்பது.

8. Having considered what work a man is equal to, let the king employ him in that work.

கூ. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ரூக
நினைப்பானை நீங்குந் திரு.

பரி:—(இ - ள்.) எப்பொழுதுந் தன்வினையின் கண்ணே முயறலை

** அதற்குரியனாறு—அத்தொழில்செய்தற்குச் சுதந்தரனாகும்படி*

† அது செய்யாக்காலுங் கெடும் - அத்தொழில்செய்தற்கு அவனைச் சுதந்தரனாக்காவிடத்தும் (தொழில் முடிவின்றிச்) கெட்டொழியுமென்பதாம்.

யுடையான் ¶ அவ்வுரிமையாற் றனக்குக் கேளாய் ஒழுகுகின்ற தன்மை யை * அது பொறதார் சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு நீங்தும், (எ - று).

கேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனுய்கில்லாது கேளிர் செய்யும் உரிமையெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அவமதிப்பாகக் கொண்டு செறக்கருதுமாயின், பின் ஒருவரும் உட்பட்டு முயல்வாரில்லே யாம்; ஆகலே, தன்செல்வங் கெடுமென்பது கருத்து. இக்கான்கு பாட்டா னும் ஆடற்குரியானை ஆளுக்திறங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வினைக்கண் - (தனது) தொழிலினிடத்தே, வினை யுடையான் - (எப்போதும்) முயற்சி செய்தலே யுடையவன், (அவ்வுரிமை யால்), கேண்மை - (தனக்குச்) சுற்றமாய் நடக்கின்ற தன்மையை, (அது பொருதலாது சொல்லிக் கேட்டு), வேருக - மாறுபட, (அரசன்), தினைப் பானை - தினைப்பானலை, நிரு - சீதேவி, நீங்கும் - (அவ்வாசனை) விட்டு நீங்குவான், (எ - று). (திரு-செல்வம்).

சுற்றமாய் நடக்கின்ற தன்மையாவது (வினையுடையான் அரசனுக்குத்) தான் பிறனுய் கில்லாமல் சுற்றத்தார் செய்யும் உரிமையை யெல்லாம் செ ய்து நடத்தல். (அரசன்) அவனை அவமதிப்பாகக்கொண்டு கோபிக்க தினைப் பானையின், பின் ஒருவரும் உட்பட்டு (தொழிலில்) முயல்வாரில்லையாம்; இல்லேயாகலே, தன் செல்வம் கெடுமென்பது கருத்து. இக்கான்கு பாட் டாலும் (அரசன்) ஆளுதற்கு உரியவனை ஆளும்வகை சொல்லப்பட்டது.

(க - து.) தனது காரியத்தில் முயற்சி யுடையவனு யிருப்பவ னைமாறுபடநினைக்கும் அரசனதுசெல்வம் அழிந்துபோமென்பது.

9 Prosperity will leave the king who doubts the friendship of the man who steadily labours in the discharge of his duties.

கo. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

பரி:—(இ - ள்.) வினைசெய்வான் † கோடாதொழிய ‡ உலகங் கோடாது; ஆதலான், அரசன் ¶ அவன்செயலை நாடோறும் ஆராய்க.

¶ அவ்வுரிமையால்—தன்தொழிலேச்செய்யுஞ் சுதந்தரத்தினுல்.

* அது பொருதார்—கேளா யொழுகுகின்ற (சுற்றமாய் நடக்கின்ற) தன்மையைப் பொறுக்கமாட்டாதவர்.

† கோடாதொழிய—எண்ணம், சொல், செயல் என்பனவற்றுள் மாறுபடாதிருக்க.

‡ உலகங் கோடாது—உலகியல்பு மாறுபடாது. ¶ அவன்—வினை செய்வான்.


அஃதொன்றனையும் ஆராயவே † அதன்வழித்தாய உலகமெல்லாம் ஆராய்ந்தானும்; ‡அதனால் அவனறிமை அழியாமற் றன்னுள்ளே ஆராய்ந்து போதல வென்பதாம். இதனுள் ¶ ஆண்டவழிச் செய்வது கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) வினை செய்வான் - தொழில் செய்பவன், தோ டாமை - மாறுபடாதிருக்க, உலகு - உலகமானது, தோடாதி-மாறுபடாது, (ஆகலால்), மன்னன் - அரசன், நாடோறும் - தினந்தோறும், நாடுக - (அவன் செயலை) ஆராயக்கடவன், (எ - று).

(அரசன்) அஃதொன்றனையும் ஆராயவே அதன் வழிப்பட்ட உலக மெல்லாம் ஆராய்ந்தவனவன்; அதனால் அவனறிமை அழியாமல் தன்னுள் ளே ஆராய்ந்துகொண்டு வரக்கடவ னென்பதாம். இதனுல் (அரசன் வினை செய்வானை) ஆண்டவிடத்துச் செய்வது சொல்லப்பட்டது.

(க - து.) தனது தொழில் செய்பவன் மாறுபடாதுதொழில் செய்வதனால் உலகம் மாறுபடா திருத்தலால், அவனை அரசன் நாள்தோறும் ஆராய்ந்து வரக்கடவன் என்பது.

10. Let a king daily examine the conduct of his servants; if they do not act crookedly,the world will not act crookedly.



பதினேந்தாம் அதிகாரம்.

சுற்றந்தழால்—On Kindness to relatives.

பரி:—அஃதாவது அரசன் தன்கீழ்னைஞரைத் தன்னினீங்காமல்அணை த்தல். வினைசெய்வாரைக் கூறி ஏனைச்சுற்றங் கூறுகின்ற ராகலின், இது தெரிந்து வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

தேளி:—அஃதாவது அரசன் தனது சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காதிருக்குமாறு தழுவுதல். தொழில் செய்வாரைச் சொல்லி மற்றைச் சுற்றத்தாரைச் சொல்லுகின்றார் ஆதலால், இது (சுற்றந்தழால்) தெரிந்து வினையாடலின்பின் வைக்கப்பட்டது.

க. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

* அஃதொன்றனையும்—வினைசெய்வான் செயலொன்றைமாத்திரம்.

† அதன்—அச்செயலினது.

‡ அதனால் - அச்செயலினால்.

¶ ஆண்டவழிச் செய்வது—அரசன் ஒருவனை யொருதொழிற்கு உரி யவனுக ஏற்படுத்திய விடத்து அவனது செயலைத் தினந்தோறும் ஆராய்ந்து வரவேண்டு மென்பது.

பரி:—(இ - ள்.) ஒருவன் செல்வந்தொலைந்து வரியறைய வழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக்கொண்டாடும் இயல்புகள் சுற்றத்தார்மாட்டே உளவாவன, (எ - று).


* சிறப்பும்மை வரியளவழிப் பாராட்டப் படாமை விளக்கின்றது. பழைமை - பற்றருக் காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிற செல்லாம் அவன் பற்றற்றபொழுதே தாமும் அவனெடு பற்றறவராக லின், ஏகாரத்தேற்றத்தின்கண் வந்தது. இதனால் † சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) பற்றற்றகண்ணும் - (ஒருவன்) செல்வந்தொலைந்து தரித்திரனான விடத்தும், பழைமை - (விடாமல் தம்மோடு அவனிடத்தின்ள) பழைமையை, பாராட்டுதல் - எடுத்துக் கொண்டாடு மியல்புகள், சுற்றத்தார்கண்ணே - சுற்றத்தாரிடத்தே, உள - உளவாவனவாம், (எ-று).

பற்றற்றகண்ணும்என்றசிறப்பும்மைதரித்திரனவிடத்து(தம்மோடு அவனிடத்தின்ள பழைமையைப்) பாராட்டுத லில்லாமையை விளக்கின்றது. பழைமை - (அவன்) செல்வமொழியாத காலத்தில் தமக்குச்செய்த உபகாரம். (சுற்றத்தாரல்லாத) மற்றவரெல்லாம் அவன் செல்வ மொழிந்த பொழுதே தாமும் அவனெடு சிநேகம் விட்டு நீங்குவாராதலால் 'சுற்றத்தார் கண்ணே' என்னும் ஏகாரம் (சுற்றத்தார் பழைமை பாராட்டுதலைத் தெளிவிக்கத்) தேற்றப்பொருளில்வந்தது. இதனால் சுற்றத்தினது சிறப்புச்சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனது செல்வம் நீங்கிய விடத்தும் அவனை விடாதிருந்து கொண்டாடுதல் சுற்றத்தாரிடத்துண்டு என்பது.

1. Even when a man's prosperity is all gone, relatives will act towards him with their ancient kindness.



2. விருப்பறுச் சுற்ற மிவையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும்.

பரி:—(இ - ள்.) அன்பறுத சுற்றம் ஒருவற்கெய்துமாயின் அஃது அவற்குக் ‡ கிளைத்தலறுத செல்வங்கள் பலவற்றையுங் கொடுக்கும்.

* இழிவு சிறப்பும்மை.

† "அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல், உற்றுழித் தீர்வா ருறவல்லர், அக்குளத்தில், கொட்டியு மாம்பலு செய்தலும் போலவே, ஒட்டி யுறுவா ருறவு" என்பது மூதுரை.

‡ கிளைத்தலறுத-மேலுமேலும் விருத்தியாதலொழியாத.

உட்பகையி னீக்குதற்கு 'விருப்பருச்சுற்றம்' என்றும், † தானே வளர்க்கும் ஒருதலையாய செல்வத்தி னீக்குதற்கு 'அருப்பருவாக்கம்' என்றும், ‡ விசேடித்தார். ¶ தொடைநோக்கி விகாரமாயிற்று. 'இயையின்' என்பது அதனது அருமை விளக்கி நின்றது. § ஆக்க மென்பது ஆகுபெயர். பலவுமென்றது () அங்கங்கள் ஆறனையும் நோக்கி. பலர் கூடி வளர்த்தலின் ○ அவை மேன்மேற் கிளைக்கு மென்பது கருத்தி.

தெளி:—(இ - ன்.) விருப்பரு - அன்பு நீங்காத, சுற்றம் - சுற்றமானது, இயையின் - (ஒருவனுக்குக்) கிடைக்குமாயின், (அச்சுற்றமானது), அருப்பரு - கிளைத்தல் நீங்காத, ஆக்கம் பலவும் - செல்வங்கள் பலவற்றையும், தரும் - (அவனுக்குக்) கொடுக்கும், (எ - று).

உட்பகையி னின்றும் நீக்குதற்கு 'விருப்பருச் சுற்றம்' என்றும், தானே வளர்க்கும் உறுதியுடையதாய செல்வத்தி னினறும் நீக்குதற்கு 'அருப்பரு வாக்கம்' என்றும் அடை கொடுத்துச் சொல்லினர் அரும்பு என்பது தொடை நோக்கி அருப்பு என விகாரமாயிற்று. 'இயையின்' என்பது அச் சுற்றம் கிடைத்தலினது அருமையை விளக்கி நின்றது. ஆக்கம்-காரியவாகு பெயர். பலவு மென்றது அங்கங்கள் ஆறனையும் நோக்கியாம். சுற்றத்தார் பலர்கூடி வளர்த்தலால் அவை மேன்மேலும் கிளைக்குமென்பது கருத்து.

உட்பகையாவது புறப்பகைக்கு இடமாக்கிக் கொடுத்து அப்புறப் பகையானது வெல்லு மளவும் உள்ளாய் நிற்கும் பகை. அஃதாவது வெளியே நட்பா யிருந்து உள்ளே பகை கொண்டிருப்ப தென்பதாம். இதனை நீதிநெறி விளக்க நூலார் "புறமட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை" என்றனர்.

† "நூற்றுக்குமேல் ஊற்று" என்னும் பழமொழிப்படி வேறு செல்வங்களைப் பெருகச்செய்தற்கு உறுதியுடையதா யிருக்கும் செல்வதினினறும் நீக்குதற்கு 'அருப்பருவாக்கம்' என்று கூறப்பட்டது.

‡ சுற்றம் என்பது விருப்பரு என்னும் விசேடணத்தோடும், ஆக்கம் என்பது அருப்பரு என்னும் விசேடணத்தோடும் கூடிவந்தமையின், சுற்றம் ஆக்கம் என்னு மிவ்விரண்டும் முறையே விருப்பரு அருப்பரு என்னும் விசேடணங்களால் விசேடிக்கப்பட்டனவாயின.

¶ அரும்பு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் தொடைநோக்கி அருப்பு என விகாரப்பட்டு நின்றது. [அரும்பரு என்பது விருப்பரு என்பதற்கியைய அருப்பரு என்று தொடைநோக்கி விகாரப்பட்டது. பல வடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்களொன்றி வருவது தொடையெனப்படும்.]

§ ஆக்கத்திற்கு (மேலும் மேலு மூயர்தற்குக்) காரணமாய செல்வத்தை ஆக்கமென்றது காரியவாகு பெயராம்.

() அங்கங்கள் (உறுப்புக்கள்)—அமைச்சு, நாடு, அரண், போருன் படை, நட்பு. ○ அவை—செல்வங்கள்.

(க - து.) ஒருவனுக்கு அன்புள்ள சுற்றம் கிடைக்கு மானால், அஃதவனுக்குப் பல செல்வங்களையுந் தரும் என்பது.

2. If a man's relatives remain attached to him with unchanging love, it will be a source of ever-increasing wealth.

கூ. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

பரி:—(இ - ள்.) அச்சுப்பற்றத்தோடு நெஞ்சு கலத்தல் இல்லாதவன் வாழ்க்கை * குளப்பரப்புக் கையின்றி நீர்நிறைந்தாற்போலும், (எ - று).

சுற்றத்தோடென்பது † அதிகாரத்தான்வந்தது. நெஞ்சுகலப்புத்தன் ‡ னளவும் அதனளவும் உசாவுதலான் வருவதாகலின், ¶ அளவளா என் பது ஆகுபெயர். வாழ்க்கை யென்றதூடம் அதற்கேதுவாய செல்வங்களே. () கிறைதலென்னும் இடத்து கிகழ் பொருளின் தொழில் இடத்தின்மே னின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் ○ தாங்குவார் இன்மையிற் புறத் தப்போ மென்பதாம்.

தேவி:—(இ - ள்.) அளவளாவில்லாதான் - (அச்சுற்றத்தோடு) நெ ஞ்சு கலத்தலில்லாதவனது, வாழ்க்கை - வாழ்க்கையானது, குளவளா-குள

குளப்பரப்பு - குளத்தின் விரிவான இடம்.

† சுற்றத்தழால் என்னும் இவ்வதிகாரத்தால். ‡ அளவு - யோகக்ஷே மம். முன்புகிடையாதபொருள் கிடைப்பது யோகம்;கிடைத்தபொருளைப் பரிபாலித்தல் க்ஷேமம்.

¶ அளவளாதல் (யோக க்ஷேமங்களின் எல்லையை விசாரித்தறிதல்) என்பது அளவளா எனகின்றது. அளவளா என்பது முதனிலைத் தொ ழிற்பெயர். அளவளா என்பது அதன் காரியமான நெஞ்சுகலப்பை யுணர் த்துதலால் கருவியாகுபெயராம். (ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களை விசாரித்தறிவதால் மனக்கலப்புண்டாகு மென்பது திரண்டபொருள்).

() குளத்திலுள்ள நீரினது தொழிலான நிறைதலைக் குளத்தின் மே லேற்றிக் 'குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று' என்ற கூறினமையின், 'நிறைதலென்னும் இடத்தி (குளத்தி) கிகழ் (இருக்கும்) பொருளின் (நீரின்) தொழில் இடதினின் (குளத்தின்) மேனின்றது' என்று கூறப்பட் டது. பிரயோக விவேகநூலார் "மருளற காரணம்" என்னுஞ் செய்யுளி னுரையில் "குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று, இத்தப்பாமே காஞ்ஞி யனிசி பொங்கும். இவை புலமென்னும் இடத்து கிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றன" என்றனர்.

○ தாங்குவாரின்மையின் - வெளியிற் போகவண்ணம் விழிப்போடு காப்பவரில்லாமையினால்.

ப்பரப்பானது, கோடின்றி - கரையில்லாமல், நீர்நிறைந்தற்று - நீர்நிறைந் தாற்போலும், (எ - று).

*சுற்றத்தோடு என்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. நெஞ்சு கலப்புத் தண்ணளவும் அச்சுற்றத்தினளவும் விசாரித்தறிதலால் வருவதாக லின், அளவளா என்பது கருவியாகுபெயர். * வாழ்க்கை யென்றதும் வாழ் க்கைக்குக்காரணமானசெல்வங்களே. நிறைதல் என்னும் இடத்து நிகழ் பொருளான நீரினது தொழில் இடத்தின்மேல் நின்றது. சுற்றமில்லா தவனது செல்வங்கள் தாங்குவாரில்லாமையால் வெளியே போய்விடு மென்பதாம்.*

(க - து.) சுற்றத்தாரோடு மனங்கலந்து வாழாதவனது செல் வம் பாதுகாப்பவரில்லாமையால் அழிந்துபோம் என்பது.

3. The wealth of one who does not mingle freely with his relatives, will be like the full waters of a spacious tank, that has no banks.

சு. † சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

பரி:—(இ - ள்.) செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்ற பயனா வது தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் ‡ தழீஇ யொ ழுகுதல், (எ - று).

¶ பெற்ற என்பதனுள் அகரமும் அதனென்பதனுள் அன்சாரியை யும் தொடைநோக்கி விகாரத்தாற்றொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாட்சி கேதுவாகலின், இதனைச் செல்வத்திற்குப் 'பயன்' என்றார். இவை மூன்றுபாட்டானும் சுற்றத்தால் செல்வத்திற் கேதுவும் அரணும் பயனுமா மென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) செல்வம் - செல்வத்தை, பெற்றத்தால் - பெற்ற அதனால், பெற்றபயன் - (ஒருவன்) பெற்றபயனாவது, சுற்றத்தால்-(தனது) சுற்றத்தினால், தான் சுற்றப்பட - தான் சூழப்படும்வகை, ஒழுகல் - (அச் சுற்றத்தைத் தழுவி) ஒழுகுதலாம், (எ - று).

** வாழ்க்கையென்பது வாழ்க்கைக்குக் காரண மாய செல்வங்களே யுணர்த்துதலால் காரியவாகுபெயராம்.*

† "சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்" என்பது கொன்றைவேந்தன்.

‡ தழீஇயொழுகுதல் - உபசரித்து நடத்தல்.

¶ பெற்றத்தால் என்பதனைப் பெற்ற அதனால் எனப்பிரித்துப் 'பெ ற்ற என்பதனுள் அகரமும் அதனால் என்பதனுள் அன்சாரியையும் தொடைநோக்கி(செய்யுள்) விகாரத்தாற் றொக்கன' என்று கூறப்பட்டது.

பெற்றவதனால் என்பது சுற்றத்தால் என்னும் தொடைமோனைச்செய்யுள் விகாரத்தால் பெற்றத்தால் எனவந்தது. (சுற்றத்தாற் சுற்றப்படவொழுகும்) இவ்வொழுக்கம் (அரசன்) பகையில்லாமல் அரசாளுதற்குக் காரணமாகலால், இவ்வொழுக்கத்தினைச் செல்வத்திற்குப்'பயன்'என்றார். இவை மூன்றுபாட்டாலும் சுற்றத்தைத் தழுவுதல் முறையே செல்வத்திற்குக் காரணமும்,அரணும்,பயனும் ஆமென்பதுசொல்லப்பட்டது அரண்பாதிகாப்பு.

(க - து.) ஒருவன்தான் அடைந்த செல்வத்தால் அடையும் பயன் தன் சுற்றத்தாரோடு மனங்கலக்து வாழ்தலேயாம்.

4. To live surrounded by relatives, is the advantage to be derived from the acquisition of wealth.

கு. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

பரி:—(இ - ள்.) ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் வல்லனாயின் தம்மிற் § நெடுந்தூர பல வகைச் சுற்றத்தானே சூழப்படும், (எ - று)

* இரண்டும் ¶ அளவறிந்தாற்றுதல் அரிதென்பது தோன்ற 'ஆற்றின்' எனறார். தம்மிற்றொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் ‡ அவற்றுற் பிணிப்புண்டிவருதல். இவ்வுபாயங்களேவடநூலார் தானமுஞ் சாமமுமென்ப.

தெளி:—(இ - ன்.) (ஒருவன் சுற்றத்திற்கு) கொடுத்தலும் - (வேண்டுவனவற்றைக்) கொடுத்தலையும், இன்சொலும் - இன்சொற் சொல்லுதலையும், ஆற்றின் - செய்ய வல்லவனுயின், அடுக்கிய - தம்மில் தொடர்ந்த, சுற்றத்தால் - (பலவகைச) சுற்றத்தாலே, சுற்றப்படும் - சூழப்படுவான், (எ - று).

இரண்டும் அளவறிந்து செய்தல் அரிதென்பது தோன்ற 'ஆற்றின்' என்றார். தம்மில் தொடர்தலாவது உறவினது உறவும் அதனது உறவும் ஆய் அவ்வுறவுகளால் சம்பந்தப்பட்டிவருதல் கொடுத்தலுமின்சொலுமாகிய இவ்வுபாயங்களே வடநூலார் தானமும் சாமமும் என்பர். கொடுத்தல்-தானமாம்; இன்சொற் சொல்லுதல்-சாமமாம்.

§ தொடர்தல் - உறவின் முறையாகத் தொடர்ந்திருத்தல்.

† இரண்டும் - சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும்.

¶ அளவறிந்தாற்றுதல்-(செல்வமுதலியவற்றில்) தனதளவையும் சுற்றத்தினளவையும் தெரிந்து அவ்வளவிற்கேற்பச் செய்தல்.

‡ அவற்றுற் பிணிப்புண்டு - சுற்றமும் அதனது சுற்றமும் அதனது சுற்றமுமாய அவற்றுல் நெருங்கச் சூழப்பட்டு.

(க - து.) சுற்றத்தாரிடத்து ஈதலியும் இன்சொற் சொல்லு தலியும் உடையவன் அச்சுற்றத்தாரோடு என்றும் பிரிவின்றி வாழ்வன் என்பது.

5. He will be surrounded by numerous relatives who manifests generosity and affability.



கூ. பெருங்கொடையான் பேணுன் வெகுளி யவணின்
மருங்குடையார் மாநிலத் தில்.

பரி:—(இ - ள்.) ஒருவன் மிக்ககொடையை யுடையனுமாய் வெகுளியை விரும்பானும் ஆயின் அவன்போலக் கிளையுடையார் இவ்வுலகத்தில்லை, (எ - று).

மிக்ககொடை - ஒன்றானும் வறுமை யெய்தாமற் கொடுத்தல். விரும்பாமை-† இஃது அரசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) பெருங்கொடையான் - மிகுந்த கொடையை யுடையவனுமாய், வெகுளி - கோபத்தை, பேணுன் - விரும்பாதவனும், (ஆனால்), அவனின் - அவனைப்போல, மருங்குடையார் - சுற்றமுடையவர், மாநிலத்து - (இப்)பெரிய உலகத்தில், இல்-இல்லை, (எ-று).

மிகுந்த கொடை - (சுற்றத்தார்) ஒன்றானும் வறுமை யடையாவாறு (அவர்க்கு வேண்டுவனவற்றைச்) கொடுத்தல். கோபத்தை விரும்பாமை—இஃது (கோபம்) அரசனுக்கு (அவசியமாய்) வேண்டுவ தொன்றென்று (கொண்டு அதனை) அளவுகடந்துசெய்யாமை.

(க - து.) வரையாது கொடுத்தலியும் கோபத்தை யடக்குதலியும் உடையவனைப்போலச் சுற்றத்தாரை யுடையவர் உலகத்தில் ஒருவருமில்லை என்பது.

6. No one, in all the world, will have so many relatives about him, as he who makes large gifts, and does not give way to anger.



† இஃதாதற்கு (இக்கோபம் செல்வம் விருதகி யடைவதற்கு) என்றும் பாடமுண்டு.

'இஃது அரசற்கு வேண்டுவ தொன்றென்று அன்விறக்தி செய்யாமை' என்றதனால் அரசன் கோபத்தையளவறிந்து செய்யவேண்டுமென்பது பெறப்படுவதாம்; படவே, கோபம பற்றற ஒழிக்கவுங் குற்றமன்றென்றுமிற்று. குற்றங்கடிதல் அதிகாரம் பத்தாவது குறளின் விசேடவுரையில "காமம் வெகுளி உவகையென்பன முற்றக்கடியுங் குற்றமன்மையின" என்றும், பேதைமை யதிகாரத்தின் அவதாரிகையில் "அப்படிகளான் மூற்றக்கடியுங் குற்றமன்மையி னினவாய வெருளியானுங் காமத்தானும் வருவதாம்" என்றும் கூறியிருத்தலுமிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

எ. † காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னரீ ரார்க்கே யுள.

பரி:—(இ - ள்.) காக்கைகளீ தமக்கிரையாயின கண்டவழி மறையாது இனத்தை யழைத்து அதனோடுங்கூட வுண்ணநிற்கும்; ‡ சுற்றத்தான் எய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினை யுடையார்க்கே உளவாவன, (எ - று).

அவ்வாக்கங்களாவன: பகையின்மையும் பெருஞ்செல்வமுடைமையும் * முதலாயின. எச்சவும்மையான் அறமும் இன்பமுமே யன்றிப் பொருளும் எய்துமென்பது § பெறுதும். அப்பெற்றித்தாய வியல்பென்றது தாம நுகாவனவெல்லாம அவரும் நுகருமாறு வைத்தல்.

தெளி:—(இ - ள்.) காக்கை - காகங்கள், (தமக்கு இரையாயுள்ளவற்றைக்கண்ட விடத்து), கரவா-மறையாது, கரைந்து - (தம்மினத்தை) அழைத்து, உண்ணும் - (அவ்வினத்தோடுங்கூட) உண்ணநிற்கும், ஆக்கமும் - (சுற்றத்தினுடையும்) பெருக்கங்களும், அன்னரீராரக்கே - அத்தன்மையதாய இயல்பினையுடையவர்க்கே, உள - உளவாகும், (எ - று).

அப்பெருக்கங்களாவன: பகையில்லாமையும் பெருஞ்செல்வமுடைமையும் முதலாணவை ஆக்கமும் என்ற இறந்ததழுவியவெச்சவும்மையால் அறமும் இன்பமுமே யல்லாமல் பொருளும் வந்தடையுமென்பது பெறப்படும் அத்தன்மையதாய வியல்பென்றது தாம் அனுபவிப்பன வெல்லாம் அச்சுற்றதாரும் அனுபவிக்கும்படி வைத்தல்.

(க - து) தாம் அனுபவித்தற் குரியவற்றைச் சுற்றத்தாரோடு கூடியனுபவிப்பவர் பகையின்றிப் பெருஞ்செல்வராக வாழ்வார் என்பது.

7. The crows do not conceal their prey, but will call out for others to share with them while they eat it; wealth will be with those who show a similar disposition towards their relatives.

அ. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

பரி:—(இ - ள்.) எல்லாரையும் ஒருதன்மையாக நோக்காது அரசன் தத்தந் தகுதிக்கேற்ப ¶ நோக்குமாயின், அச்சிறப்புநோக்கி அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் பலர், (எ - று).

† "காக முறவு கலந்துண்ணக் கண்டீர்" என்றார் தாயுமானவர்.

‡ சுற்றத்தான் எய்தும் ஆக்கங்கள் - உறவின் முறையாரால் அடையும் பேறுகள்.

முதலாயின என்றதனால் கல்வரால் நலியின்மை, வினை செய்வாரால் கெடுதியின்மை முதலியவற்றையுங் கொள்க. § பெறுதும் - பெறுவோம். ¶ நோக்குமாயின் - உபசரித்து நடப்பானாயின்.

† உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடா தொழுகுதல் நோக்கி வரிசைநோக்கை விதித்தார். இந்நான்கு பாட்டானுஞ் சுற்றம் தழுவும் உபாயங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வேந்தன் - அரசன், பொதுநோக்கான் - எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காமல், வரிசையா - (அவரவர்) தகுதிக்கு ஏற்ப, நோக்கின் - நோக்குவானுயின், அது நோக்கி—அச்சிறப்பு நோக்கி, வாழ்வார் பலர்-(அவ்வரசனே விடாது) வாழுஞ்சுற்றத்தார் பலர், (எ - று.)

உயர்ந்தார் நீங்குதலைக் குறித்துப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடாதொழுகுதலைக் குறித்து 'வரிசையாநோக்கி' என வரிசை நோக்கை விதித்தார். இவை நான்கு பாட்டாலும் சுற்றத்தைத்தழுவும் உபாயம் சொல்லப்பட்டது. வரிசை - கிரமம்.

(க - து.) அரசன் பொதுநோகலை விட்டுச் சிறப்பு நோக கோடி ஒழுகுவானுயின, அவனைச சுறறதகதார் விடாதிருபபார.

8. Many relatives will live near a king, when they observe that he does not look on all alike, but that he looks on each man according to his merit.



கூ. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

பரி:—(இ - ள்.) முன்தமராய் வைத்துத் தன்னோடு ‡ அமராது யாதானுமொரு காரணத்தால் தன்னைப் பிரித்துபோயவர் பின்னும் வந்து சுற்றமாதல் அவ்வமராமைக் காரணம் தன்மாட டில்லையாகத் தானே யுளதாம், (எ - று).

'அமராமைக் காரண மின்றி' என்றதனுல், முன அஃது

† அரசன் உயர்ந்தா ரிழிந்தாரென்று கருதாது யாவரையும் ஒரு தன்மையராகக் கருதி நடந்தால், அந்நடக்கையை நோக்கி உயர்ந்தார் தம்மை யிழிவுபடுத்தியதாகவெண்ணி நீங்கிவிடுவது பற்றி அரசனுக்குப் பொது நோக்குக் கூடாதென்றுவிலக்கிச் சிறப்பு நோக்கு விதிக்கப்பட்டது. சிறப்பு நோக்காவது உயர்ந்தா ரிழிந்தா ரென்றறிந்து அவரவரது தகுதிக்கேற்ற வண்ணம் நடத்தல். மலையமான் திருமுடிக்காரி யென்னுமரசனை நோக்கிக் கபிலர் என்னும் புலவர்(புறநானூற்றில்)"ஒருதிசை யொருவனை யுள்ளி காற்றிசைப், பலரும் வருவர் பரிசின் மாக்கள்,வரிசை யறிதலோ வரிதே பெரிது, மீத லெளிதே மாவண் டோன்றல், அதனுற் கறிந்தனை யாயிற், பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே" என்று கூறியது மிங்கறியத்தக்கதாம்.

‡ அமராது - மனங்கலவாது.

* அஃது - அமராமைக் காரணம் (மனங்கலவாமைக்குரிய தது).

† உண்டாய்த் திறத்தல்பெற்றும். அஃதாவது அரசன் தான் ‡ நெறிகெட வொழுகல் * வெறுப்பன செய்தலென்றிவை $ முதலியவற்றான் வருவது. ¶ ஆக்கம் வருவிக்கப்பட்டது. (ரு) இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் o செயற்கையான் வந்த நீக்கம் அதனை ஒழிய ஒழியும்; ஒழிந்தால் அவர்கண்பு செய்துகொள்ளவேண்டாம்: பழைய இயல்பாய் நிற்கு மென்பார் 'வரும்' எனறார்.

தெளி:—(இ - ள்.) தமராஇ - (முன்னே) சுற்றத்தாராயிருந்து, தற்றுறந்தார் - (தனனெடு பொருந்தாமல் யாதாயினும் ஒரு காரணத்தால்) தன்னைப் பிரிந்துபோனவர, சுற்றம் - {பின்னும்வந்தி} சுற்றத்தார் (ஆகுதல்), அமராமைக்காரணம் - அபபொருந்தாமையின் காரணம், இன்றி - (தன்னிடத்தி) இல்லையாக, வரும் - (தானே) உண்டாகும், (எ - று).

'அமராமைக் காரணமின்றி'என்று கூறினமையால், முன்பு அஃதிருந்து நீங்குதல் பெறப்படும். அவ்வமராமைக் காரணமாவது அரசன்தான் வழிதப்பி நடத்தல வெறுப்பனவற்றைச் செய்தலென்றஇவை முதலியவற்றால் வருவது. ஆகுதல் என்னும ஆக்கச்சொல் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடையராகிய சுற்றதத்தார்களுச செயற்கையால் வந்த பிரிவு அச்செயற்கையை ஒழிய ஒழியும; (அப்பிரிவு) ஒழிந்துபோனால் அச்சுற்றதத்தார்க்கு அன்பு செய்துகொள்ளவேணடாம்;(அன்பு) பழைய இயல்பாய் நிற்குமென்பார 'வரும்' என்றார.

(க - து.) முன்சுற்றத்தாராயிருந்து பிரிந்தவர பின்னுஞ் சுற்றத்தாராகுதல் அப்பிரிவின் காரணம் ஒழியததனாலே யுண்டாம்.

† உண்டாய்த் திறத்தல் - தன்னிடத்து உண்டாயிருத்தலால் சுற்றத்தார் தன்னை விட்டு நீங்கிபபோகுதல்.

‡ நெறிகெட வொழுகல் - அறநூல், பொருள்நூல், நீதிநூல் கூறிய வாறு நடவாது தான் விரும்பியவாறு நடததல்.

* வெறுப்பன செய்தல் - அறிவுடையாரியாவரும் வெறுக்கத்தக்க காரியஙகளைச் செய்தல்.

$ முதலிய என்றதனால் பற்றறவொழிக்கும் குற்றமல்லாத காமம் வெகுளி யுவகைகளை அளவு கடந்து செய்தல், தீயகாரியங்கள் செய்வதைக் கண்டால் கண்டித்துப் புத்திசொல்லும் அமைச்சர் புரோகிதர்களை யாதரியாமை முதலியவற்றையுங் கொள்க.

¶ சுற்றம் என்பதனிறுதியில் ஆதல் என்னும் ஆக்கச்சொல் வருவித்துரைக்கப்பட்டது. (ரு) இயற்கையாகவே - சுபாவமாகவே.

o நெறிகெடவொழுகல் வெறுப்பன செய்தல்முதலிய செயற்கையால் வந்தபிரிவு அதனை (நெறிகெட வொழுகல் முதலியசெயற்கையை)நீங்க நீங்கும்; நீங்கினால் அவர்க்கு (சுற்றத்தார்க்கு) அரசன் அன்புசெய்து சுற்றமாக்கொள்ளவேண்டாம்; அச்சுற்றத்தார் பழைய சுபாவமாகவேஅன்புடையராயிருப்பார் என்பதாம்.

9. Those who have been friends and have afterwards forsake nhim will return and join themselves to him, when the cause of disagreement is taken away.



௮௦. † உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானே வேந்த
னிழைத்திருந் தெண்ணிக கொளல்.

பரி:—(இ - ள்.) காரணமின்றித் தன்னிடத்துநின்றும் பிரிந்துபோயப் ‡ பின்காரணத்தான் வந்த சுற்றத்தானை அரசன் அக்காரணத்தைச் * செய்து வைத்து ஆராய்ந்து தழுவிக்கோள்க, (எ - று).

§ வாளா 'உழைப்பிரிந்து' என்றமையின், பிரிதற்குக் காரண மின்மை பெற்றும், ¶ வருதற்காரணததைச செயயாதவழிப் பினனும் பிரிந்து போய்ப் பகையோடு கூடுமாகலின் 'இழைதிருந்து' என்றும், () அன்பினறிப் போய்ப் பின்னுங காரணததான் வந்தமையின் 'எணணிக்கொளல்' எனறுங் கூறினர். பிரிந்துபோய சுற்றத்தாருள் ○ நீமை செயயப்போய ‖ அதனை ஒழியவருவானும் × அது செயயாமற்போயப் பின் ÷ நன்மை செய்யவருவானும் தழுவப்படுமாகலின், [] தழுவுமாறுமுறையே இவ்விரண்டு பாட்டானுங கூறப்பட்டது

தெளி:—(இ - ள்.) உழை - (தன்) இடத்தினின்றும, பிரிந்து-(காரணமில்லாமற்) பிரிந்துபோய், காரணததின - (பினபு) காரணததினால், வந்தானை - வந்தசுற்றத்தானை, வேந்தன - அரசன், இழைதிருந்து - (அக் காரணத்தைச்) செய்துவைத்து, எணணி - ஆராய்ந்து, கொளல் - (தழுவிக்) கொள்ளக்கடவன், (எ - று)


சும்மா 'உழைப்பிரிந்து' என்றகூறினமையால், பிரிதற்குக் காரணமில்லாமை பெறப்பட்டது. வருதறகுக்காரணததைச செயயாதவிடத்திப் பின்னும் பிரிந்துபோய்ப் பகைவரோடு கூடுவானுதலால் 'இழைதிருந்து' என்றும், அன்பில்லாமற்போய்பபின்னுங காரணததால்வந்தமையால 'எணணிக்கொளல்' என்றும் சொல்லினர். பிரிந்துபோன சுற்றத்தாருள நீமை

† உழை - இடம். ‡ பின் காரணத்தான - பின்பொரு நிமித்தத்தால்
* செய்து வைதது - பூர்த்திசெய்து (நிறைவேற்றி).
§ வாளா - அடை கொடுக்காது சும்மா.
¶ வருதற் காரணததைச் செய்யாதவழி - காரணமின்றித் தன்னிடததினின்றும் பிரிந்துபோனவன் தன்னிடத்தி வருவதற்குரிய காரணததைச் செய்யாதவிடத்தில.
() அன்பின்றிப்போய் - தன்னிடத்தி அன்பில்லாது பிரிந்தசென்று.
○ நீமைசெய்ய - அரசனுகியதான் தீயகாரியங்களைச செய்ய.
‖ அதனை-தீய காரியங்களை. × அது - நீமை.
÷ நன்மை செய்ய - நன்மையான காரியங்களைச் செய்வதனால்.
[] தழுவுமாறு - அணைக்கும் வகை.

செய்யப்போய் அதனை விடவருவானும், அது செய்யாமற்போய்ப் பின்பு நன்மைசெய்ய வருவானும் தழுவப்படுமாதலால், (சுற்றத்தாரைத்)தழுவு மாறுமுறையே இவ்விரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து) காரணமில்லாமற் பிரிந்துபோய்ப் பின்பொரு காரணம்பற்றி வந்து கூடியவனை அரசன் ஆராய்ந்து கொள்ளக் கடவனென்பது.

10. When one may have left him, and for some cause has returned, let the king fulfil the object for which he has come back and thoughtfully receive him again.



பதினாறும் அதிகாரம்.

* போச்சாவாமை—*Against Forgetfullness.*

பரி:—அஃதாவது † உருவுந் திருவும் ‡ ஆற்றலும் ¶ முதலாயவற்றுள் மகிழ்ந்து தங்காற்றலினும் பகையழித்தன் o முதலிய காரியங்களினும் சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச்சோர்வில்வழி யாகலின், இது சுற்றந்தழாலின்பின் வைக்கப்பட்டது.

---

* போச்சாப்பு-மறவி. போச்சாவாமை - மறவாமை. போச்சாப்பென்பதும் மறவியென்பதும் ஒரு பொருட்கிளவிகளாமென்பது "வழுக்கொடி மறவி புன்மை மறலொடு பொல்லாங் கேகீழ், இழுக்கொடு சோர்வு பொசசாப் பிகழ்ச்சியு மறத்த லினபேர்" என்று சூடாமணி நிகண்டு கூறுவதால் நன்குவிளங்கும். நன்னூலார் போச்சாப்பு வேற, மறவிவேறு எனறு கொண்டு, உரியியலின் " அறிவருளாசை " என்னுஞ் சூத்திரத்தில் "போச்சாப் பூக்க மறமத, மறவி" என்று கூறுகின்றனர். நச்சினார்க்கினியார் "ஆங்கவையொருபால்" என்னுந் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியற் சூத்திரவுரையில் "போச்சாப்பென்பது அற்றப்படுதல்; அஃதாவது பாதுகாதத்தச் செல்கின்ற பொருட்கண் ஊதாணுமோ ரிசழ்ச்சியான் இடையறவு படுதல்" என்று கூறியிருக்கின்றனர்.

† "குலமு முருவுங் குணமுந் திருவு,நலவுமுடர் கல்வி நயமும்-வலமுஞ், செருக்கைவிளக் கினறனவிச் செம்மற்கு நாளுந், திருக்கறுகண் மாண்பிற் செறிந்து" என்னுஞ்செய்யுளிலுள்ள சுவனித்தற் குரியதாம். உருவு - வடிவழகு.

‡ ஆற்றல் - அறிவு, ஆண்மை, பொருள்படை யென விருவகைத்தாய பெருமை.

¶ முதலாய என்றதனால் நாடு, அரண் முதலியவற்றையுங் கொள்க.

o முதலிய என்றதனால் தனது சேனை பகைவர் வசமாகாவாறு செய்தல், அமைச்சர் புரோகிதர்களோடு கலந்தாலோசித்தல் முதலியவற்றையுங் கொள்க.

தேளி:—அஃதாவது அழகும் செல்வமும் ஆற்றலும் முதலாயவற்றால் மகிழ்ந்து தன்னைக் காதலிக்கொள்ளுதலினும், பகைவரை யழித்தல் முதலிய காரியங்களினும் மறத்தலைச் செய்யாமையாம். முற்கூறிய சுற்றத்தாரால் பயனுள்ளது இம்மறதி யில்லாதவிடத்தாகலால், இது (பொச்சாவாமை) சுற்றந்தழாலின்பின் வைக்கப்பட்டது.

க. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

பரி:—(இ - ள்.) * மிக்க வுவகைக் களிப்பான் வரும் மறவி அரசனுக்கு அளவிறந்த வெகுளியினும் தீது, (எ-று).

† மிக்கவுவகை-பெருஞ்செல்வம், ‡ பேரின்பம், ¶ பெருமிதமென் றிவற்றுள்வருவது. ○ அளவு பகைவரை யடர்த்தற்கும் கொடியோரை யொறுத்தற்கும் வேண்டியது. இறந்தவெகுளி ஒரோவழிப் பகைவரையுங் கொல்லும்; () இஃது அன்னதன்றித் தன்னையே கோறலின் அதனினும் தீதாயிற்று.

தேளி:—(இ - ள்.) சிறந்த வுவகைமகிழ்ச்சியின் - பெருஞ் சந்தோஷக் களிப்பால், (வரும்), சோர்வு-மறதியானது, இறந்தவெகுளியின்-அளவு கடந்த கோபத்தினும், நீ தே-(அரசனுக்குத்) தீயதாம், (எ-று).

பெருஞ்சந்தோஷம் - பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதம் என்ற இவற்றால் வருவது. அளவு பகைவரை வெல்லுதற்கும் கொடியோரைத் தண்டித்தற்கும் வேண்டியது. அளவுகடந்தகோபம் ஒரோவிடத்துப் பகைவரையும் கொல்லும்; இஃது அத்தன்மையதல்லாமல் தன்னையே கொல்லுதலால் அதனினும் தீயதாயிற்று.

(க - து.) அரசனுக்கு மிகுந்த வுவகைக்களிப்பால் வரும் மறதியானது அளவுகடந்த கோபத்தினும் தீயதாம்.

மிக்க உவகைக்களிப்பு-பெருஞ்சந்தோஷத்தாலுண்டாகும் மதிமயக்கம். "உள்ளக்களித்தலும்" என்னுங் குறளின் விசேடவுரையில் பரிமேலழகர் களித்தல் - உணர்வழியாதது; மகிழ்தல் - அஃதழிந்தது என்று கூறியிருக்கின்றனர்.

† மிக்கவுவகை - அளவுகடந்த மகிழ்ச்சி. ‡ பேரின்பம்-மிகுசுகம்.

¶ பெருமிதம் - படை, அரண்முதலியன வாய்ப்பா யிருக்கின்றன வென்னுங் கர்வம். ○ அளவு-கோபத்திற்கு அளவு.

() இஃது (மிக்கவுவகைக் களிப்பான் வரும் மறவி) அன்னதன்றி (அளவுகடந்த கோபம் ஒரோவிடத்துப்பகைவரையுங் கொல்லுவதுபோலாகாமல்) தன்னையே கொல்லுதலால் அதனினும் (அளவுகடந்த கோபத்தினும்) கொடியதாயிற்று.[அளவுகடந்த கோபம் தன்னையும் ஒரோவிடத்துப் பகைவரையும் கொல்லும்;அளவுகடந்த வுவகைக் களிப்பால்வரும்மறதியோ தன்னையேகொல்லும்; ஆதலால் அளவுகடந்த கோபத்தினும் அளவுகடந்த வுவகைக்களிப்பால் வரும் மறதி மிகக்கொடியதாமென்க.]

1. More evil than excessive anger, is the thoughtlessness which springs from the intoxication of great joy

2. போச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் ருங்கு

பரி:—(இ - ள்.) ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும்; * அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறுபோலவு (எ - று).

நிசசநிரப்பு-தான்தோறும் இரவான வருகதித் தன்வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கணுண்டாயின் அவற்கு † இளிவரவாணும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் ¶ ஈண்குமதிப்பினை அழிக்கும்; அதுபோல மறவியும் புகழுடையான்கணுண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக் கேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் ஈண்கு மதிப்பினை அழிக்குமென்பதாயிறறு. இவை யிரண்டு பாட்டானும் பொசசரப்பினது குற்றங கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) நிசசநிரப்பு - நித்தியவறுமையானது, அறிவினை-அறிவை, கொண்ருங்கு-கெடுக்கும் விதம்போல, புகழை (ஒருவனது) கீர்த்தியை, பொச்சாப்பு-(அவன்) மறதியானது, கொல்லும்-கெடுக்கும்,(எ-று).

நித்தியவறுமை-தினந்தோறும் யாசகத்தால் வருந்தித் தன் வயிற்றை நிறைத்தல். அந்நித்தியவறுமை அறிவுடையவனிடத்து உண்டாயின் அவனுக்கு இளிவரவாலும் பாவத்தாலும் இகழப்படுதலே உண்டாகி அவனது ஈண்குமதிப்பை அழிக்கும்; அதுபோல மறதியும் புகழுடையவனிடத்து உண்டாயின் அவனுக்குத் தன்னைக்காதலை கொள்ளாமையாலும் காரியக்கெடுதியாலும் இகழப்படுதலே உண்டாகி அவனது ஈண்குமதிப்பை அழிக்குமென்பதாயிற்று. இவ்விரண்டு பாட்டாலும் மறவியினது குற்றம்கொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனது கீர்த்தியைக் கெடுப்பது அவனது மறதியேயாம் என்பது.

2. Forgetfulness will destroy fame, even as constant poverty destroys knowledge.

---

* தரித்திரம் அறிவினைக் கெடுக்குமென்பது "நீர்மையே யன்றி நிரம்ப வெழுத்ததனுங், கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின், முல்லே யலைக்கு மெயிற்றிய நிரப்பென்னும், அல்ல லடையப்பட் டார்" என்று காலடியார் கூறுவதாலு மறிதற்பாற்றும்.

† அஃது - நிச்சநிரப்பு. நிரம்புதல் என்னுந் தொழிற்பெயரின் விகாரமாய நிரப்பு என்னும் முதனிலேத் தொழிற்பெயர் எதிர்மறை யிலக்கணையால் நிரம்பாமை (தரித்திரம்) என்னும் பொருளேயுணர்த்தி நின்றது. ‡ இளிவரவு - இழிவு (அவமானம்). ¶ ஈண்குமதிப்பு - கௌரவம்.

கூ. போச்சாப்பார்க் கில்லே புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு லோர்க்குந் துணிவு.

பரி —(இ - ள்.) போச்சாத் தொழுவார்க்குப் புகழுடைமை யில்லே; * அவ்வின்மை † இந்நீதிநூ லுடையார்க்கே யன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது, (எ - று).

அரசர்க்கே யன்றி ‡ அறமுதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் ¶ அவை கைகூடாமையின் புகழில்லேயென்பது தோன்ற 'எப்பாலு லோர்க்குந் துணிவு' என்றார்.

தெளி:—(இ - ள்.) புகழ்மை - புகழுடையவராயிருத்தல், போச்சாப் பார்க்கு - மறந்து நடப்பவர்க்கு, இல்லே—, அது - அவ்வில்லாமையானது, (இந்நீதிநூலுடையார்க்கேயல்லாமல்), உலகத்து - உலகதத்தில், எப்பாலு லோர்க்கும் - எப்படிப்பட்ட நூலுடையவர்க்கும், துணிவு - ஒப்புமுடிந் தது, (எ - று.)

அரசருக்கேயல்லாமல் அறமுதலாயநான்கினும் முயல்பவர் யாவர்க கும் அவை கைகூடாமையினால் புகழில்லே யென்பது தோன்ற 'எப் பாலு லோர்க்குந் துணிவு' என்றார். துணிவு - நிச்சயம்.

(க - து.) புகழுடையவராயிருத்தல மறதியுடையார்க்கில்லே.

3. The thoughtless will never acquire fame ; this is the clear decision of all the books in the world.

சு. அச்ச முடையார்க் கரணில்லே யாங்கில்லே
போச்சாப் புடையார்க்கு நன்கு.

பரி:—(இ - ள்.) காடு மலே $ முதலிய அரண்களுள்ளே நிற்பினும், மனத்தின்கண் அச்சமுடையார்க்கு () அவற்றுப் பயனில்லே; அதுபோலச் செல்வமெல்லாம் உடையராயினும் மனத்தின்கண் மறவியை உடை யார்க்கு அவற்றுப் பயனில்லே, (எ - று)

o நண்மைக்கேதுவாகலின் 'நன்கு' என்றார். அச்சமுடையார் நின்ற அரணழியுமாறுபோல மறவியுடையாருடைய செல்வங்களும்அழியுமென்ப தாயிற்று.

* அவ்வின்மை-புகழுடைமையில்லாமை.

† 'போசசாப்பார்க் கில்லே புகழ்மை'என்னும் நீதிநூலுடையவர்க்கே யல்லாமல்.

‡ அறமுதலிய நான்கு-தருமார்த்த காமமோட்சம். ¶ அவை-அறமுத லிய நான்கும்.

$ முதலிய என்றமையின், மதிலும் கடலும் கொள்க. () அவற்றுல்-அவ்வரண்க (பாதிகாவல்க) னால்.

o நண்மைக்கேதுவாய செல்வத்தை நன்கு என்றது காரியவாகுபெய ராம்.

தெளி:—(இ - ள்.) அரண் - (காடு மலை முதலிய) அரண்களுள் ளே, (இருந்தாலும்), அச்சமுடையார்க்கு - (மனத்தில்) அச்சத்தை யுடை யவர்களுக்கு, இல்லே - (அவ்வரண்களால் பயன்) இலலே, ஆங்கு - அதி போல, ஙன்கு - செல்வமெல்லாம், (உடையவராயிருந்தாலும்), பொசசாப் புடையார்க்கு - (மனத்தில்) மறதியையுடையவர்க்கு, இல்லே - (அச்செல் வங்களால் பயன்) இல்லே, (எ - று).

செல்வம் ஙன்மைக்குக் காரணமாயிருத்தலால் அதனே 'ஙன்கு' என் ருர். அச்சமுடையவரிருக்கும் அரண் அழியும் விதம்போன் றுமறதியுடை யவரது செல்வஙகளும் அழியுமென்பதாயிற்று.

(கு-து.) செல்வங்களால் வரும் பயன் மறதியுடையவர்க்கில்லே.

4. Just as the coward has no defence by whatever fortifications he may be surrounded, so the thoughtless has no good whatever advantages he may possess.

நி. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னு நிரங்கி விடும்

பரி:—(இ - ள்.) தன்னுற் காக்கப்படுந் தன்பங்களே அவை வரு தற்கு முன்னே அறிந்து * காவாது மறந்திருந்தான் பின்வந்து உற்றகால ந்துக் † காக்கலாகாமையின் ‡ அப்பிழைபபினே நினேந் ¶ திரங்கி விடும், (எ - று).

காக்கப்படுந் தன்பங்களாவன: சோர்வு பார்த்துப் பகைவர் செய்வன $ ஊற்றின்கண் என்புழி உருபுஞ்சாரியையும் உடன்றொக்கன o உற்ற காலத்துக் காக்கலாகாமையின் 'இரங்கிவிடும்' என்ருர். இவை மூன்று பாட்டானும் பொச்சாப்புடையாாக்கு வரும் எதங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (தன்னுல் வாராமற் காக்கப்படுந் தன்பங்களே) முன்னுற - (அவைவருவதற்கு) முனனே, காவாது - (அறிந்து) காவாமல்,

* காவாது - தடுக்காது. † காக்கலாகாமையின் - தடுத்தல் முடியா மையால்.

‡ அப்பிழைப்பினே - தன்னுற்காக்கப்படுந் தன்பங்களே அவை வருவ தற்கு முன்னேயறிந்து காவாது மறந்திருந்த தனது தப்பிதத்தை.

¶ இரங்கிவிடும் - அனுதாபப்படுவான்.

$ உறுதல் என்னும் பொருளேயுணர்த்தலும் ஊறு என்னும் மூதனிலே திரிந்த தொழிற பெயரினிடத்து ஏழனுருபும் இன்சாரியையும் உடன் றொக்கு நினறன இவ்வு ஊறு என்பது உற்றகாலத்தை யுணர்த்தினமை யின் தொழிலாகு பெயராம்

o உற்றகாலத்துக் காக்கலாகாமையின் - (மறதிகோக்கிப்பகைவர்செய் யுந் தன்பங்கள்) சோர்த்தகாலத்தில் (அவற்றைத்) தடுத்தல் முடியாமை யால்.

இழுக்கியான் - மதந்திருந்தவன், பின - பிறபு, (வந்து), ஊறு - உற்ற காலத்தில், (காத்தல் கூடாமையால்), தனபிழை - தன்னுடைய அத் தப்பிதத்தை, (நினைந்து), இரங்கி விடும் - இரங்கிவிடுவான், (எ - று.)

காக்கப்படுக் தன்பங்களாவன: மறதிபார்த்துப் பகைவர் செய்யுக்தின் பங்கள். ஊற்றின்கண் என்றவிடத்துக் கண்ணுருபும் இன்சாரியையும் உடன் தொக்கு நின்றன. ஊற்றின்கண் என்பது கண்ணெனலும் உருபும் இன்னென்னும் சாரியையும் தொக்கு ஊறு என நின்றதென்பதாம். தின் பம் உற்றகாலத்தில் காத்தல்கூடாமையால் 'இரங்கிவிடும்'என்றார். இவை மூன்று பாட்டாலும் மறதியுடையவர்க்கு வரும் தின்பம்சொல்லப்பட்டது.

(க-து.) தின்பங்களை வருமுன் காக்காமல் மறந்திருந்தவன் பின்பு தனது குற்றத்தைக்குறித்து விசனப்படுவான் என்பது.

5. The careless man, who provides not against the calamities that may happen, will afterwards think with sorrow of his fault.



சு. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதொப்ப தில்

பரி:—(இ - ள்.) அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக் காலத்தும் ஒழிவின்றி வாயக்குமாயின் * அதனை ஒக்கும் நன்மை பிறி தில்லை, (எ - று).

† வினைசெய்வார் சுற்றத்தாரென்னுக் தம் பாலார்கண்ணும் ஒப்ப வேண்டுதலின் 'யார்மாட்டும்' என்றும், ‡ தாம் பெருகியஞான்றும் சுருங் கிய ஞான்றும் ஒப்பவேண்டுதலின் 'என்றும்' என்றும், எல்லாக்காரியங களினும் ஒப்பவேண்டுதலின் 'வழுக்காமை' எனறுங் கூறினர். ¶ வாயினை ன்பது முதனிலைத் தொழிற்பெய ரடியாக வந்த வினையெச்சம் வாயத்தல்- § நேர்படுதல்.

தெளி:—(இ - ள்.) (அரசர்க்கு) இழுக்காமை - மறவாமைக்குணமா னது, யார்மாட்டும் - யாவரிடத்தும், என்றும் - எக்காலத்திலும், வழுக்கா

அதனை - மறவாமைக்குணத்தை.

† பகைவரிடத்து மாத்திரமேயன்றி வினைசெய்வார் (இராஜகாரியஞ் செய்வார்) சுற்றத்தாரென்னுந் தம்பாலார்கண்ணும் என்றும் பாடமுண்டு.

‡ தாம் செல்வமுதலியவற்றால் விருத்தியடைந்த காலத்திலும் அவை யின்றிச சுருங்கிய (குறைவடைந்துள்ள) காலத்திலும் சமமாக வேண்டுத லால் 'என்றும்' என்று கூறப்பட்டது.

¶ வாயின் என்பது வாய் (வாய்தல்) என்னும் முதனிலைத் தொழிற் பெயரடியாகப் பிறந்த செயின் என்னும் வாய்பாட்டு (எதிர்கால) வினை யெச்சம். § நேர்படுதல் - பொருந்துதல்.

மை - ஒழிவில்லாமல், வாயின் - நேர்படுமாயின், அஃது - அதனை, ஒப்பது - ஒக்கும் நன்மையானது, இல் - (வேறொன்று) இல்லை, (எ - று).

தொழில் செய்வார் சுற்றத்தார் என்னும் தம்மவரிடத்தும் (இழுக்காமை) சமமாக வேண்டுதலால் 'யார்மாட்டும்' என்றும், (செல்வ முதலிய வற்றால்) தாம் பெருகிய காலத்திலும் சுருங்கியகாலத்திலும் சமமாகவேண்டுதலால் 'என்றும்' என்றும், எல்லாக்காரியங்களிலும் சமமாகவேண்டுதலால் 'வழுக்காமை' என்றும் சொல்லினார். வாயின் என்பது வாய் என்னும் முதனிலைத் தொழிற்பெயரடியாகப் பிறந்த வினையெச்சம்.

(க - து.) யாவரிடத்தும் எக்காலத்தும் மறதியில்லாமை அரசனுக்கு இருக்குமாறால், அதனையொத்த நன்மை அவனுக்குப் பிறிதொன்றில்லை என்பது.

6. There is nothing to be compared with unfailing thoughtfulness, at all times, and towards all persons.

எ. அரியவென் றுகாத வில்லை பொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

பரி:—(இ - ள்.) இவை செய்தற்கரியனவென்று சொல்லப்படும் ஒருவற்குத் முடியாத காரியங்களில்லை, மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின், (எ - று)

பொச்சாவாத என்பதன் † இறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. ‡ அத்தக் காரணமாகின் 'கருவி' என்றார். இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம எளிதின முடியுமென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) அரியவென்று - (இவை செய்தற்கு) அரியன வென்று சொல்லப்பட்டு, ஆகாத - (ஒருவனுக்கு) முடியாத காரியங்கள், இலவே—, பொச்சாவா - மறவாத, கருவியால் - மனத்தாலே, போற்றி - எண்ணி, செயின் - செய்யப்பெற்றால், (எ - று).

பொச்சாவாக் கருவி எனபதுபற்றி "நிலனும் பொருளும்" என்னும் (தொல்காப்பியச்) சூத்திரவுரையில் சேனாவரையர் "நின்மூகங் காணு மருந்தினே னென்னுமால்' என்புழிக் காட்டியை மருந்தென்று ஞதலின், காணு மருந்தென்பது வினைப்பெயர் கொண்டதாம். 'பொச்சாவாக் கருவியாற் போற்றிச்செயின்' என்புழிப் பொச்சாவாக் கருவி யென்பது மதி" என்றும், நச்சினார்க்கினியர் "பொச்சாவாக் கருவியாற் போற்றிச செயின்' என்பது கருவிக்கண் அடங்கும்" எனறும் கூறியிருக்கின்றனர்.

† இறுதிநிலை (தகர எழுத்துப்பேற்றோடு கூடிய அகரவிகுதி) விகாரத்தால் (செய்யுள் விகாரத்தால்) தொக்கு நின்றது.

‡ அந்தக்காரணம் - உட்கருவி; மனமென்பது அந்தக் காரணத்துள் ஒன்றும்.

பொச்சாவா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அத்தச் காரணமாதலால் மனத்தைக் 'கருவி' என்றார். இடைவிடாத நினைவும் தவ றீத உபாயமும் உடையவர்க்கு எல்லாக்காரியமும் எளிதில் முடியுமென் பதாம். இவை இரண்டு பாட்டாலும் மறவாமையினது சிறப்புச் சொல்லப் பட்டது.

(க - து.) மறவாது கன்காலோசித்துச் செய்யும் அரசனுக் குச் செய்தற்கருமையான காரியம் ஒன்றுமில்லை என்பது.

7. There is nothing too difficult to be accomplished, if a man set about it carefully, with a thoughtful mind.

அ. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

பரி:—(இ - ள்.) நீதிநூலுடையார் இவை அரசர்க்குரியனவென்று உயர்த்துக்கூறிய செயல்களைக் * கடைப்பிடித்துச் செய்க, † அங்ங னஞ் செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நன்மையில்லை ஆகலான்.

‡ அச்செயல்களாவன: ¶ மூவகையாற்றலும், § நால்வகையுபாயமும், o ஐவகைத்தொழிலும், () அறுவகைக் குணமும் | முதலாய செயல்கள்.

* கடைப்பிடித்து - மறவாது உறுதியாகக்கொண்டு.

† அங்ஙனம் செய்யாது - கடைப்பிடித்தல் செய்யாமல்.

‡ "உற்றிடு மாற்றன் மூன்று முபாயங்க ளுன்கு கண்மை, பற்றிய தொழில்க ளேந்தும் பண்புறு குணங்க ளாறு, மற்றைய வகைத்தின் கேடாம் வளர்பிறப் பேழுண் காறும், பற்றிடு கன்மை யின்றும் பாழ்த்தபொச் சாப்புச் சாரின்" என்பது லிங்காயக புராணம்.

¶ மூவகையாற்றல் - அறிவும், ஆண்மையும், பொருள்படையென இரு வகைத்தாய பெருமையும் ஆம்.

§ நால்வகையுபாயம் - கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத் தல், ஒறுத்தலாம்.

o ஐவகைத்தொழில் - எளியமுயற்சியுடையது, செய்தாற் பயனுள் ளது, பெரும்பயன் தருவது, ஐயமில்லாதது, பின்பு இன்பம் தருவதாகிய தொழில்களாம். இவ்வாறு கொள்ளாது "பொருள்கருவி காலம் வினையிட னொடைந்து,மிருடீர வெண்ணிச் செயல்" என்னுங் குறளிற் கூறிய ஐவ கைத்தொழிலைக் கொள்ளினுமொக்கும். நச்சினர்க்கினியார் "அறுவகைப் பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுந்தொல்காப்பியச் சூத்திரவுரையில் அர சரின் ஐவகைத்தொழில் ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ்செய் தல் என்று கூறுவர்.

() அறுவகைக் குணம் - நட்பாக்கல், பகையாக்கல், பகை மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலாம்.

முதலாய என்றதனால் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்ட முதலி யவற்றையுங் கொள்க.


சாதிதருமமாகிய இவற்றின் † வழீஇயோர்க்குள்ளது நிரயத்தின்ப மேயாகலின் 'எழுமையுரில்' என்றார். ‡ எழுமை ஆகுபெயர். இதனற் பொச்சாவாதி செய்யவேண்டுவன கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) புகழ்த்தலை - (நீதிநூலுடையார் இவை அரசர்க்கு உரியனவு யென்று) உயர்த்திச்சொல்லிய செயல்களை, போற்றி - கடைப்பிடித்து, செயல்வேண்டும் - செய்யக்கடவர், செய்யாது - (அப்படி) செய்யாமல், இகழ்ந்தார்க்கு - மறந்தவர்க்கு, எழுமையும் - எழுபிறப் பிலும், (கண்மையானது), இல் - இல்லை, (ஆதலால்), (எ - று).

அச்செயல்களாவன ; மூவகை யாற்றலும், நால்வகையுபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும் முதலான செயல்கள். (அரசு) சாதிதருமமாகியஇவற்றினின் றும்வழுவியதரசர்க்குவருவதுநரகத்திற்கேமேயாதலால் 'எழுமையுரில்' என்றார். எழுமை-எண்ணலளவை யாகுபெயர். இதனுல் மறவாது செய்யவேண்டுங்காரியங்கள் சொல்லப்பட்டன.

(க - து.) நீதிநூலுடையார் உயர்த்திக் கூறியசெயல்களைச் செய்யாது பறந்திருந்த அரசருக்கு எழுபிறப்பிலும் நன்மையில்லை என்பது.

8. Let a man observe and do those things which have been praised by the wise ; if he neglects, and does not perform them, for him there will be no happiness throughout the seven births.



சு. ¶ இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

பரி:—(இ - ள்.) அரசர் தம்மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்போழ்து முற்காலத்து அதனின் ஆய சோர்வாற் § கெட்டவர்களை நினைக்க

o காரணங்களோடு அவாக்குளதாய உரிமையை மகிழ்ச்சியிமே லேற்

இவற்றின் - மூவகையாற்றல் முதலியவற்றில்.

† வழீஇயோர்க்கு முள்ளது என்றும் பாடமுண்டு.

‡ எழு என்னும் எண்ணுப் பொருளேயுணர்த்தும் எழுமையென்பது எழுவகைப் பிறப்பினை யுணர்த்துதலால எண்ணலளவை யாகுபெயராம்.

¶ "இகழ்ச்சி யிற்கெடு வார்களே யெண்ணுக, மகிழ்ச்சி யின்பத்தின் மைந்துறும் போழ்தெனப்,புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூலியுட்,டிகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே" என்பது சூளாமணி.

§ கெட்டவர்கள் - இராவணன், துரியோதனன், சச்சந்தன் முதலாயினோர்.

o காரணங்கள் - மகிழ்ச்சியடைதற்குக் காரணமாயுள்ள பொருள், படை, அரண், வலி, துணை முதலியவை.


றித் 'தம்மகிழ்ச்சியின்' என்றும், * இகழ்ச்சியுங் கேடும் உடன் தோன்று மாகலின் 'மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து' என்றுங் கூறினர். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதிமென்று அதன்கண் மைந் திறு சென்பது கருத்து. † எண்ணு வென்று பாடமோதுவாருமுளர்.

தெளி:—(இ - ள்.) (அரசர்) தம்மகிழ்ச்சியின் - தமது மகிழ்ச்சியினி டத்து, தாமைந்துறும்போழ்து - தாம் செருக்குறும்பொழுது, இகழ்ச்சி யின் - (முற்காலத்தில் அமமகிழ்ச்சியினல் ஆகிய) மறதியினல, கெட்டா ரை யுள்ளுக - கெட்டவர்களே நினைக்கக்கடவா, (எ - று).

மகிழ்சனிக்குக்காரணமாயுள்ளவற்றேடு அவர்க்கு உண்டாகிய உரிமை யை மகிழ்ச்சியினமே லேற்றித் 'தம்மகிழ்ச்சியின' என்றும், இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்றுமாகலால் 'மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து' என்றும் சொல்லினர். கெட்டாரை நினைக்கவே நாமும் அப்படியே கெடுவோமென்று அமமகிழ்ச்சியினிடத்துச் செருக்குறுரென்பது கருத்து.

(க - து.) அரசர் மகிழ்சசியினுற கருவமடையும்போது மறதியினுற கெட்டவர்களே நினைக்கக்கடவர் என்பது.

9. Let a king reflect on those who have been ruined by neglect, when his mind is elated with joy.



கo உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

பரி:—(இ - ள்.) அரசனுக்குத் தான் எய்த நினைத்த பொருளை அந்நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம், பின்னும் அதனையே நினை க்கக்கூடுமாயின், (எ - று).

‡ அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன ஒழியிசைக் கண் வந்தது. அதனையே நினைதலாவது மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை யிரண்டுபாட்டானும் பொச்சாவாமைக்கு உபாயங கூறப் பட்டது.

மகிழசனிக்குக்காரணமாயுளவற்றுடன் அரசர்க்குளதாய உரிமையை (சுதந்தரத்தை) மகிழ்சசியின் மேலேற்றிக்கூறியது காரணதனிலுரிமை காரி யத்தின் மேலாய உபசாரவழக்காம். பொருள் முதலியன - காரணம் - மகி ழ்ச்சி - அதன் காரியம்.

* மகிழ்ச்சியினல் செருக்குறும்போது இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்று மென்க.

† உள்ளுக என்பதற்குப் பிரதியாக எண்ணுக என்றும் பாடமுண்டு.


‡ அது கூடாது (தானடைய நினைத்தபொருளே யிடைவிடாதுநினை த்தல் முடியாது) என்னும் ஒழிந்த சொற்பொருளே யுணர்த்தினமையின் மன் ஒழியிசைப் பொருளில் வந்தது.

தெளி:—(இ-ன்) (அரசனுக்கு) தான்—,உள்ளியது-(அடைய) நினைத்த பொருளை, எய்தல் - (அந்நினைத்தபடியே) அடைதல், எளிதுமன் - எளிதாகும், மற்றும் - பின்னும், உள்ளியது - அந்நினைத்தபொருளையே, உள்ளுப் பெறின் - நினைக்கக்கூடுமாஞல், (எ - று).

அதி கூடாதென்பது ஒழிந்தநின்றமையின் மன் ஒழியிசைப் பொருளில் வந்தது. அந்நினைத்த பொருளைய நினைத்தலாவது மறதியில்லாமல் அந்நினைத்த பொருளினிடத்தே முயற்சிசெய்தல். இவை இரண்டுபோட்டாலும் மறவாமைக்கு உபாயம் சொல்லப்பட்டது

(க - து.) அரசன் மறதியின்றி முயற்சியுடையவனாயிருந்தால் அவன் தான் நினைத்தபொருளை எளிதிலடைவான் என்பது.

10. It is easy for a king to obtain whatever he may think of, if he thoughtfully pursue it.



பதிஞ்ஞாம் அதிகாரம்.

† செங்கோன்மை—*On upright Government.*

பரி:—அமைதாவது அரசனுற் செய்யப்படும் ‡ முறையினது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது ¶ செவ்விய கோல் போலுஞ் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் $ தண்டமென்றார். அது கோரிலாத அரசனுற் செயற்பாலதாகலின், ஈண்டு பொச்சாவாமையின் பின் வைக்கப்பட்டது.

தெளி.—அமைதாவது அரசனுல் செய்யப்படும் முறையினதன்மை. அந்த முறையானது ஒரு பக்கத்திற் சாயாமற் செவ்வையாகிய கோல்போலிருத்தலால் செங்கோலெனப்பட்டது. இதனை வடநூலார் தண்டமென்றனர். அம்முறை மறதியில்லாத அரசனுல் செய்யத்தக்கதாகலால், இது (செங்கோன்மை) பொச்சாவாமையின் பின் வைக்கப்பட்டது.

† "படையுங் கொடியுங் குடையு முரசு, நடைகவி புரவியுங் கவிறுந் தேரும், தாரு முடியு மேர்வன பிறவுஞ், தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய" என்பது தொல்காப்பியம் மரபியல்.

‡ முறை - நீதி. ¶ செவ்வியகோல் என்பது செவ்விய கோல்போன்ற நீதியை யுணர்த்துவதால் உவமையாகு பெயராம்.

$ தண்டம் - கோல். ஒருபக்கத்திலும் கோணுதலில்லாத கோல்போன்ற நீதியை யுணர்த்துதலால் இதுவும் உவமையாகு பெயராம்.

† ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே ‡ முறை.

பரி:—(இ - ள்.) தன்கீழ் வாழ்வார் தும்மதீச்செய்தால் அக்குற்றத் தை நாடி யாவர்மாட்டுங் †† கண்ணோடாது ‡‡ நடுவுநிலைமையைப்பொ நுந்தி அக்குற்றத்திற்குச் சொல்லிய¶தண்டத்தை $ நூலோரோடும்ஆரா யிந்து அவ்வாவிதிறுகச் செய்வதே முறையாம், (எ - று).

நடுவுநிற்றல் இறைக்கியல்பாகலின் () அதனை ‖ 'இறை' என்றும், உயிரினுஞ் சிறந்தார்கண்ணும் என்பார் 'யார்மாட்டும்' என்றுங் கூறினார். o இறைமை இறையெனவும் செய்வது செய்வஃதெனவும் நின்றன. இதனாற் செங்கோன்மையது இலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத் தை) ஓர்ந்து - நாடி, யார்மாட்டும் - யாவரிடத்தும், கண்ணோடாதி - முகங் கொடாமல், இறைபுரிந்து - நடுவுநிலைமையைப் பொருந்தி, தேர்ந்து-(அக் குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும்) ஆராய்ந்து, செய் வஃதே - (அவ்வாவினதாகச்) செய்வதே, முறை-நீதியாம், (எ - று).

நடுவுநிலைமையைப் பொருந்துதல் இறை என்னும் அரசனுக்கு இயல் பாகலால் அதனை 'இறை' என்றும், உயிரினும் சிறந்தவரிடத்தும் என்பார் 'யார்மாட்டும்' என்றும் சொல்லினார். இறைமை - இறை என்றும், செய் வது - செய்வஃது என்றும் விகாரப்பட்டு நின்றன. இதனால் செங்கோ லின் இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் தன் கீழ்வாழ்வார் செய்யுங்குற்றத்தை யாராய்ந்து யாவரிடத்திலும் நடுவுநிலைமையைப்பொருந்தியரசாள் வதே செங்கோலாம் என்பது.

† "எய்திய குற்றத் தோர்கள் யாவரா யினுங்கண் ணோடா, தைதென நாடி நீதி யறத்திலைப் பிழையாத் தண்டம், செய்தலே செங்கோ லாகும்" என்பது விநாயக புராணம்.

‡ "முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வெளவல்" என்பது கலித்தொகை செய்தற்கலி.

†† தன்னுடன் பழகியவகைக் கண்டால் அவர் கூறியவற்றை மறுக்க மாட்டாமை கண்ணோட்டமெனப்படும். இது நாட்சண்ணியம் என்றும் முகங்கொடுத்தலென்றும் சொல்லப்படும்.

‡‡ பகைவர் அயலோர் நட்பினர் என்னு மிம்மூவகையோரிடத்தும் அறத்தினின் வழுவாமல் ஒப்பநிற்கும் நிலைமை நடுவுநிலைமையெனப்படும்.

¶ தண்டம் - தண்டனை. $ நூலோர் என்றது அமைச்சர் புரோகிதர் களை. () அதனை - நடுவுநிற்றலை.

‖ இறையென்னும் பொருட்பெயர் அதன்பண்பாகிய நடுவுநிற்றலை யுணர்த்தவதால் பொருளாகு பெயராம். இறை - அரசன்.

o இறைமை இறையென்றுமது கடைக்குறைவிகாரமாம்; செய்வது செய்வஃது என்றுமது விரித்தல் விகாரமாம்.

1 To examine into the crimes which may be committed, to show no favor to any one, to desire to act with impartiality towards all, and to inflict such punishments as may be wisely resolved on, this is rectitude.

உ. † வானேக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனேக்கி வாழுங் குடி.

பரி:—(இ - ள்.) உலகத்துயிரெல்லாம் மழையுளதாயின் உளவாகாநிற்குமே எனினும் குடிகள் அரசன் செங்கோலுளதாயின் உளவாகாநிற்கும், (எ - று).

‡ கோக்கிவாழ்தல்-இன்றியமையாமை. ¶ வானிலையவணவை 'வான்' என்றும், கோலிலுள்ள தண்டத்தைக் 'கோல்' எனறும் கூறினர். அவ்வேவமம் இல்வழி உணவுளதாயினும் குடிகட்கு அதனாற் பயனில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உலகெல்லாம் - உலகத்துயிர்களெல்லாம், வானேக்கி, (மழைபெய்யுமாயின) அம்மழையைநோக்கி, வாழும் - உளவாகாநிற்கும், (என்றவுரை), குடி - குடிகள், மன்னவன் - அரசனது, கோனேக்கி — (செவ்வேலுண்டானால்) அச்செங்கோலை நோக்கி, வாழும் - உளவாகாநிற்கும், (எ - று).

நோக்கிவாழ்தல் - இலலாமல கூடாமை வானிலுலாகிய வுணவினை 'வான்' என்றும், கோலிலுலாகிய காவலைக் 'கோல்' என்றுங் கூறினர். அக காவல் இல்லாவிடத்து உணவு உண்டாயிருந்தாலும் குடிகளுக்கு அவ்வுண வாற் பிரயோசனமில்லை என்பதாம்

† "தளிபின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தனினியின்மை வாழு முயிர்க்கு" எனற பின் கொடுங்கோணமையிற் கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ உயிர்கள் மழையையும் குடிகள் செங்கோலையும் நோக்கிவாழ்தல் இன்றியமையாதெ (அத்தியாவசியகமாமெ)ன்பது "மழையிண்றி மாசிலத்தார்க்கில்லை" "கோனேக்கி வாழுங் குடியெல்லாம்" "வானத்தினி நோக்கி வாழு முலகம்" என்றுள்ள பிரயோகங்களாலும் அறிதற்பாற்றும். நோகுகுதலென்பது இங்கு மனவெழுச்சியின்மேல் நின்றது; அஃதாவது கண்ணுல் நோக்கும் நோக்கமின்றி மனததால் நோக்கும் நோகுகமாம்.

"தானெங்கா தெத்தியரஞ் செய்திடினுந் தார்வேந்தன், கோனேக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே" என்று குலசேகர ஆழ்வார் கூறுவது மிங்குணர்தற்பாலதாம்.

¶ வான் வானுலாகிய வுணவையும், கோல் கோலாலாகிய காவலியும் உணர்த்துவதால் அவை கருவியாகு பெயர்களாம். வான் என்னும் இடப் பெயர் முன்னர் மேகத்தையும் பின்னர் அமேகம் பொழியும் மழையையும் அப்பால்அதனுலாகிய வுணவையும் உணர்த்துவதால் மும்மடியாகுபெயராகும்.

(க - து.) மழைபெய்வதால் உயிர்கள் இருத்தல்போன்று செங்கோல் நடைபெறுவதால் குடிகள் இருக்கும் என்பது.

2. When there is rain, the world enjoys prosperity; and when the king rules justly, his subjects prosper.

ரூ. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

பதி:—(இ - ள்.) † அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் அதனோடு சொல்லப்பட்ட அறத்திற்குங் காரணமாய் நிலைபெற்றது அரசனும் செலுத்தப்படுகின்ற செங்கோல், (எ - று).

அரசா வணிகரென்னும் வேளாளர்க்கும் உரிதாயினும், ○ தலைமை

† அந்தணரென்பது இங்குச் சாதிப்பெயர் மாத்திரமாய் நின்றது.

○ அந்தணர்க்கு வேதாதனை யோதுதலிலுண்டி யோதுவிக்கலு முரியதாயிருத்தலின், 'தலைமைபற்றி அந்தணர் நூல் என்றார்' என்று கூறப்பட்டது. நூலாவன - மூதின்னை. அரசர்க்கும் வணிகர்க்கும் வேதாத்தைப் பிறர்க்கு ஓதுவித்தலில அதிகாரமின்றி ஓதுதலில் அதிகாரமுண்டென்பது மனுதருமசாஸ்திரம் பதினாவதத்தியாயத்தில் "கூததிரியனுக்குக் கத்தி பாண முதலிய ஆயுதங்களைத் தரித்து உலகாள்வதும், வைசியனுக்கு வர்த்தகஞ் செய்வது பசுவைக்காப்பது பயிரிடுவது என்னுமிவையும் நீவனோபாயமாம் மேற்சொல்லிய யாகஞ்செய்தல் தானங்கொடுத்தல் (வேதம்) ஓதல் இவை தர்மோபாயமாம்" என்று கூறுவதாலறிக. சூத்திரனுக்கு வேதத்தையோதுவதற்கதிகாரமின்மையால் அவனுக்கு முதநூற்றியாதோ வெனின், வேதமும் வேதத்தின் பொருளை யையந்திரிபின்றி யெடுத்துக் கூறும்பாரதமுதலிய நூல்களும்ஞானமாயிலாக முத்திக்குக்காரணமாயிருத்தலால் வேதம ஓதினவர்களுக்கே முதநியுண்டாமென்பது பொருந்தாதாயிற்று; ஆகலில, வேதத்தின் பொருளை யையந்திரிபின்றி யெடுத்துக்கூறும் பாரதமுதலிய நூல்களைத்தகவாறு படிப்பவரியாவர்க்கும் ஞானவாயிலாக முதநியுண்டாதற்குத் தடையின்மு மென்க.

மனுதருமசாஸ்திரம் பத்தாவதத்தியாயத்தில் " ஹிம்சை செய்யாமை, சத்தியம், தீவினையாற் பொருள் சம்பாதியாமை, ஒழுக்கம், இந்திரிய நிக்கிரகம்...(பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய குத்திரரென்னும்)நான்குவருணத்தார் (சாதியார்)க்கும் முக்கியமான தருமமாமென்று சுருக்கமாய் மனு சொல்லியிருக்கிறார். அவை சங்கரசாதிகளுக்கும் இருக்கவேண்டியவை" என்றும், ஆறுவதத்தியாயத்தில் "இந்திரிய நிக்கிரகத்தாலும், இராகத்து வேஷ மில்லாமையாலும், ஜீவஹிம்சை செய்யாமையாலும மோட்சமடைதற்கு யோக்கியனுவான்" என்றும் கூறுவதும் இங்குக் கவனிக்கத் தக்கதாமென்க.

பற்றி 'அந்தணர்நூல்' என்றார். ‡ மாதவர் நோன்பு மடவார் கற்பும், காவலன்

‡ இதன் பொருள்-சிறந்த தவசிகளது விரதமும் பெண்களது கற்பும் அரசனது காவலில் தங்குமாட்டா என்பது மாதவர் நோன்பு மடவார் கற்பும், காவலன் காவலன்றித் தங்கா என்றும் பாடமுண்டு ''காவலன்றித் தங்காவலா னுலின்'' என்றும் பாடமுண்டு. இதுபொருந்தும்.

''நிறைகாக்குங காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலே'' [நிறையாவது மறைபிறரறியாமல ஒழுகுதல் என்றனர் நச்சினர்க் கினியர்.] என்றும், ''உற்றசிகாய நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு'' என்றும் உள்ள குறன்களாலும், வான் சிறப்பு ஒன் பதாவது குறளின் விசேடவுரையில் ''தவமாவது மனம் பொறிவழிபோ காது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின'' என் றும், கள்ளாமை யதிகாரத்தின் அவதாரிகையில் ''புறத்துப்போகாதடக்கி யொருதலேபபட்டு உயிரைகையேநோக்கற்பாலதாய அவா (தூறவிகளின்) மன மும்'' என்றும் பரிமேலழகர் கூறுவதாலும், மணிமேகலை உதையகுமரன் அம் பலம் புக்காதையில் ''கன்னிக் காவலும் கடிபிற் காவலும், தன்னுயி ணவ ண் காவலிற் காவலும், நிலையிற் காத்துப பதார்பிறக் காணது'' என்று கூறுவதாலும், மணிதருமசாலை புரம் ஒன்பதாவதத்தியாயத் தில் ''தாதர்கள் தங்கோதாமே காகஞ்செய்வணகம்; அதுபின் அவாகருக்கு கல்லகாப்பாகும் கல்லகாவலரை லைவதை வெளியிற பீபாக வொட்டாமல வீட்டிலேய்ய னருகுகாப்பார்நிஞலும் (அவர்கள்) காக்கப்படமாட்டார் கள்'' என்றும், பண்ணிரண்டாவகத்தியாயத்தில் ''கண்ணுக்குத்தெரிகிறதா யும் தெரியாததாயுமிருக்கிற எல்லாப்பதார்த்தமும் பரமாத்மாவினிடத்து வாசஞ்செயவதாக யோகத்தியானத்தால் பார்த்துமேறிடத்தில் மனம் வை யாதிபிரஹ்மசாட்சாத்காருஞ்செய்கிறவன் அசாமத்தில்மனதை வைக்கமா ட்டான்'' என்றும், ஆருவதத்தியாயத்தில் ''பிரஹ்மசாட்சாத்காரஞ் செய்கி றவனுக்குக் காமசம்பந்தம் வரமாடடாது. அஃதாவது ஜனன மரண ரூப மான சம்சார சக்கரத்தில் திண்பப்படமாட்டா னென்பது கருத்து'' என் றும் கூறுவதாலும், மாதவர் நோன்பும் மடவார்கற்பும் [சுற்பாவது தனக ணவனைத் தெய்வமென்று உணர்வதோர்மேற்கோள் எனறனர் நச்சினர்க் கினியர்] மனவொழுக்கமாயிருத்தலின அவை அரசனது காவலில்தங்கமா ட்டாவாயினவென்க. ஆகவே மாதவர நோன்பு மடவர் கற்பும், காவலன் காவலன்றித் தங்கா என்று கொளுதல் இக்குறத்தகுதியுடையதாகாது; எனினின், ''ரண்டறமென்றது அவை யொழிந்தவற்றை'' என்று கூறுத லாலென்க. மாதவரது விரதமும பெண்களது கற்பும் அரசனதிகாவலி னுலன்றித் தங்கமாட்டா என்பது அதனபொருளாதலினுலும், இதன்படி அரசனது காவலினுலன்றித்தங்கமாட்டாத மாதவரது நோன்பையும்மட வாரது கற்பையும் ஒழித்துக் கூறுவது முரணுதலாலும் காவலனறித் தங் கா என்பது பொருந்தாது. மாதவரது விரதமும் மகளிரதுகற்பும் அவர வரது மனவொழுககத்தினுலேயே மனத்தில் நிலைபெறுவனவாயும் அரச னது பாதுகாவலில் தங்காதனவாயும் இருந்தாலும் அவைநிலைபெறுவதற்கு

காவலிற் றங்கா ஆகலின், ஈண்டறமென்றது † அவை யொழிந்தவற் றை. ¶ வேதமும் அறனும் அநாதியாயினுஞ் செங்கோல் இல்வழி நடவா ஆகலின் அதனை அவற்றிற்கு 'ஆதி' என்றும், o அப் பெற்றியே தனக்கா தியாவது பிறிதில்லையென்பார் 'நின்றது' என்றுங் கூறினார். ஆலையிர ண்டுபோட்டாலுஞ் செங்கோலது நிறபுக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) மன்னவன்கோல்-அரசனுற் செலுத்தப்படுகின்ற செங்கோலானது, அந்தணர் நூற்கும்—அந்தணர்க்கு உரியதாகிய வேதத் திற்கும், அறத்திற்கும்—(அவ்வேதத்தாற் சொல்லப்பட்ட) அறத்திற்கும், ஆதியாய் - காரணமாய், நின்றது-நிலைபெற்றது, (எ-று).

அரசனது காவல் பாலியதனில் உதவியாயிருப்பதுபற்றி மணிமேகலை நிறைசெய்காதையில் ''மாதவர் நோன்பு மடவார் கற்புங், காவலன் காவ லினறெனி லின்றும்'' என்றும், நான் மணிக்கடிகை நாற்பத்தொன்பதாவது செய்யுளில் 'தவமும் அரசிலா னில்வழி யில்லை' என்றும் கூறினவென்க. இதுவேயுமன்றி இராமாயணம் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் தசாத சக்கரவர்த்தியை நோக்கி '' எண்ணிய முணிவரு மிமையவரு மிடைபூ ருன் முடைய நாளுல்,பண்ணமை நதுவெள்ளிப் பனிவரையையும் பாற்கடலு ம் பதும பீடத், தங்கருங் கறபகாரட் டணிகரு மணிமாட வயோத்தி யென்னும், பொன்னகரு மல்லாது புகலுண்டோ வினகடக்த புலவு வேல் லோய்'' என்றும், ''தருவனத்தின் யாளியற்றுந் தவவேள்விக் கிடையூறு தவஞ்செய் வோர்கள், வெருவரசென் றடைகாம வெகுளியென நிருதரி டை விலக்கா வண்ணம், செருமுகத்துக் காத்தியென வினைமுவர் நால்வரி னுங் கரிய செமமல், ஒருவனைத் தத்திடுதி'' என்றும் கூறியது மிங்குக்வ னிக்கத் தக்கதாம்.

† அவை - மாதவர் நோன்பும் மடவார்கற்பு.

¶ சீவர்கள் அநாதியா (உற்பத்தியில்லாதவரா)யிருத்தலால் அவர்களு க்குத் தர்மோபாயமா யுள்ள வேதமும் அதனுற் சொல்லப்பட்ட அறமும அநாதியாயிருக்கின்றன வெனக. மனுதருமசாஸ்திரம் பன்னிரண்டாவதத் தியாயத்தில் ''அந்த வேதசாஸ்திரமானது சுயம்புவேயல்லது ஒருவரால் செய்யப்பட்டதன்று'', '' அநாதியான வேதசாஸ்திரமானது ஜங்கம தாவர ரூபமான சகலபூதங்களையுங் காப்பாற்றுகிறது'' என்றும், பராசரஸ்மிருதி முதலத்தியாயத்தில் ''ஒருவரும் வேதத்தைச்செய்தவர்களல்லர். பிரஹ்மா வேதத்தைக்கேட்டு அப்படியே ஸ்மிருதிகளைச்செய்திருர். கற்பங்களுக் கிடையிடையில் மனுவும் ஸ்மிருதிகளைச்செய்திருர்'' என்றும்கூறியுள வையும் இங்கு அறியத்தக்கனவாம்.

o அப்பெற்றியே தனக்காதியாவது பிறிதில்லை-[வேதத்தையும் வேத த்தாற்கூறப்பட்ட அறத்தையும் நடத்திதலாகிய] அத்தன்மையே (செங் கோலாகிய) தனக்குக் காரணமாவது வேறொருவகையாலன்றென்பதாம். செங்கோல் வேதத்தையும் அதனுற்கூறப்பட்ட அறத்தையும் நடைபெறச் செய்வது பற்றி அவற்றிற்குக்காரணமென்று சொல்லப்பட்டதென்க.

வேதமானது அரசர் வணிகரென்னும் மற்றையோர்க்கும் உரியதாயினும், தலைமைபற்றி அதனை 'அந்தணர்தூல்' என்றார். துறவிளது விரதமும் பெண்களது கற்பும் அரசனது காவலில் தங்குவனவன் றாதலால், இங்கு அறமென்றது அவையொழிந்தவற்றை. வேதமும் அறமும் அநாதியாயிருந்தாலும் செங்கோல் இல்லாதவிடத்து இடைபெருவாகலால் அச் செங்கோலை அவ்வேகத்திற்கும் அறத்திற்கும் 'ஆதி' என்றும், அத்தன்மையே தனக்கு ஆகியாவது வேறில்லையென்பார் 'கின்றது' என்றும் சொல்லினர். இவை இரண்டுபோட்டாலும் செங்கோலது சிறப்புச்சொல்லப்பட்டது.

(க - து.) அரசனது செங்கோல் வேதமும் அதனால் சொல்லப்பட்டதருமமும் நிலைபெறுவதற்குக் காரணமாயிருக்கின்றது.

3. The sceptre of the king is the firm support of the Vedas of the Brahmin, and of all virtue.



ச. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

பரி:—(இ - ள்.) தன்குடிகளையும் அணைத்துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருநில வேந்தனடியைப் பொருந்தி விடார் உலகத்தார்.

அணைத்தல் - இன்சொற் சொல்லுதலும் தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் * முதலாயின. இவ்விரண்டினையும் வழுவாமற் செய்வான் நிலமுழுதும் ஆளுமாகலின் அவனை 'மாநிலமன்னன்' என்றும், அவன் மாட்டியாவரும் நீங்கா அன்பினராவராகலின் 'அடிதழீஇ நிற்கு முலகு' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ன்.) உலகு - உலகத்தார், குடிதழீஇ-(தன்) குடிகளையும் அணைத்து, கோலோச்சும் - செங்கோலையுஞ் செலுத்தும், மாநிலமன்னன் - பெருநிலவேந்தனது, அடிதழீஇ - அடியைப்பொருந்தி, நிற்கும்—(விடாது) நிற்பார், (எ - று).

அணைத்தல் - இன்சொற் சொல்லுதலும் (குடிகள்) தளர்ந்தவிடத்து (அவர்களுக்கு) வேண்டுவனவற்றைக் கொடுத்தலும் முதலானவை. இவ்விரண்டையும் தப்பாமற் செய்பவன் நிலமுழுதும் ஆளுவானாகையால் அவனை 'மாநிலமன்னன்' என்றும், அவனிடத்து யாவரும் நீங்காத அன்புடையவராவராகலால் 'அடிதழீஇ நிற்கு முலகு' என்றும் சொல்லினர்.

(க - து.) தனதுகுடிகளை யன்புடன் பாதுகாத்துச் செங்கோல்செலுத்தும் அரசனை யுலகத்தார் விடாதுபற்றுவர்என்பது.

---

* முதலாயின என்றமையின் கன்வர் முதலாயினோரால் கெடுதி யுண்டாகாதவாறு காத்தலையுங் கொண்க.

4. The world will constantly embrace the feet of the great king who rules his subjects with love.

நி. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னுட்ட
பெயலும் விளையுளுந் தோக்கு.

பரி:—(இ-ள்.) * பருவமழையுங் குன்றாதவிளைவும் ஒருங்கு கூடி நூல்கள் சொல்லிய இயல்பாற் செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டின் கண்ணவாம், (எ- று).

† உளியென்பது மூன்றாவதன் பொருள்படுவதோ ரிடைச்சொல். ‡ வானும் நிலனுஞ் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம்.

தெளி:—(இ - ன்) பெயலும் - பருவமழையும், விளையுளும் - (குன்றாத) விளைவும், தொக்கு - (ஒருங்கித்து) கூடி, இயல்புளி - (நூல்கள்சொல்லிய) இயல்பால், கோலோச்சும் - செங்கோலைச் செலுத்தும், மன்னவன் - அரசனது, நாட்டு - நாட்டிலுள்ளனவாம், (எ - று)

உளியென்பது மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. (இவ்வுளிக் கோலோச்சும் மன்னவனது நாட்டில்) வானமும் நிலமும் சேரத்தொழிற் பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம்.

(கு-து) நீதிபுள்ள அரசனது நாட்டில் காலமழையும் குறையாத விளைவும் உளவாகுமென்பது.

5. Rain and plentiful crops will ever dwell together in the country of the king who sways his sceptre with justice.

சு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

* பருவமழை - பெய்யவேண்டுங்காலத்தில் தவறாது பெய்யுமழை

† உளியென்னு மிடைச்சொல் மூன்றாம் வேற்றுமையின் கருவிப் பொருளில் வந்தது. இலக்கணகொத்து "எழுவாய் வேற்றுமைக் குருபே யின்று" என்னுஞ்சூத்திரத்தினுரையில் "தொண்டி, பொருட்டு, உடை ய, உளி, மாறு, ஒடு, ஓடு, கண்முதலியனவும் உவமவுருபுகளும் சொல்லே யுருபாஞற் போல வென்க" என்று கூறியிருத்தலு மிங்குக்வனிக்கத்தக் கது.

‡ வான் தொழிற்பட்டு வளஞ்சுரத்தல்-மேகம் பெய்யவேண்டுங்கால த்தில் தவறாது மழைபெய்தல். நிலம் தொழிற்பட்டுவளஞ்சுரத்தல் - விளை நிலங்கள் விளையவேண்டுங்காலத்தில் ஒன்றாலுங் குறைவின்றி விளைதல்.

பரி:—(இ - ள்.) மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவன் எறியும் வேலன்று, கோல்; அஃதும் * அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின், (எ - று).

கோல் செவ்விதாயவழியே வேல் வாய்ப்பதென்பார் 'வேலன்று' என்றார். † "மாண்ட—வறநெறி முதற்றே யரசின் கொற்றம்" என்றார் பிறரும். ‡ கோடாணென்பது பாடமாயின், கருவியின்தொழில் வினைமுதன்மேனின்றதாக வுரைக்க.

தெளி:—(இ-ள்.) மன்னவன் - அரசனுக்கு, வென்றிதருவது - (போரில்) வெற்றியைக்கொடுப்பது, வேலன்று-(அவனெறியும்) வேற்படையன்றும், கோல் - (அவனது) செங்கோலாம், அதனஉம் - அச்செங்கோலும், (அத்தன்மையதாவது), கோடாதெனின் - (தான்) கோணுதிருக்குமாயின்.

கோல் செவ்விதாயவிடத்தே வேல் பயன்படுவதென்பார் 'வேலன்று' என்றார். கோல்-நீதி. செவ்விதாதல் - ஒரு பக்கத்திற் சாயாதிருத்தல்.

(க-து.) அரசனுக்கு வெற்றியைக்கொடுப்பது அவனது செங்கோலேயன்றி அவனெறியும் வேற்படையன்று என்பது.

It is not the javelin that gives victory, but the king's sceptre, if it do no injustice.

எ. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

பரி:—(இ - ள்.) வையகத்தையெல்லாம் அரசன் காக்கும்; அவன்தன்னை அவனது செங்கோலே காக்கும், $ அதனை () முட்டுவத்தழியும் முட்டாமற் செலுத்துவனையின், (எ - று).

முட்டாமற் செலுத்திபவாறு ¶ மன்னை முறைசெய்தான் றண்ணும்,

அப்பெற்றித்தாவது - வெற்றியைக்கொடுப்பதாவது.

† புறநானூறு முரு. இதன்பொருள் மாட்சிமைப்பட்ட வறநெறியை முதலாகவுடையது அரசரது வெற்றி என்பது.

‡ கோடான் என்பது பாடமாஞல் செங்கோலாகிய கருவியின் தொழில் மன்னவனுகிய வினைமுதல் (எழுவாய்) மேல் நின்றதாக வுரைத்துக்கொள்க என்பதாம். தொழிலென்றது கோணுதலை.

$ அதனை - செங்கோலை.

() முட்ட (தடைப்பட) வத்தழியும் என்பதும் பாடமுண்டு.

¶ திருவாரூரில் அரசு செலுத்திய மனுநீதிச்சோழன் தனது புத்திரனை வீதி விடங்கன் தேரேறிச் சென்றபோது அறியாது பசுவின் கன்றைக் கொன்றதற்காக, அப்புத்திரனைத் தேரே கிடத்தித் தேரை யவன் மேற் செலுத்திக்கொன்று மீண்டும் கடவுளருளால் அப்புத்திரனுயிர் பெற்று வாழ்ந்தானென்பது கதை. "ஒருமைசான் றன்குலத்துக் குள்ளா

தண்கை குறைத்தான் கண்ணும் காண்க. ‡ முட்டாதென்பதன் இறுதி நிலை விகாரத்தாற் றொக்கது. இவை நான்குபாட்டாலும் அதனைச் செலுத்தினுன் எய்தும் பயன் கூறப்பட்டது.

தெளிவு:—(இ - ன்.) இறை-அரசனுவன், வையகமெல்லாம்-பூமியையெல்லாம், காக்கும்-காபபாற்றுவான், முறை - (அவனது) செங்கோலே, அவனை—,காக்கும்-காப்பாற்றுவதாகும், முட்டாச்செயினு-(அதனைத்தடை சேரிட்டவிடத்தும்) தடை சேரிடாமற் செலுத்தவானுயின், (எ - று).

செங்கோலை முட்டாமல் செலுத்திய விதத்தைத் தன்மகனைத் தேர்க் காலில் வைத்தூர்ந்த சோழனிடத்தும், அயலார்வீட்டுக் கதவைத்தட்டிய தன்கையைக் குறைத்த பாண்டியனிடத்துங் காண்க. முட்டாது எனபது விகுதிதொக்கு முட்டா எனவந்தது. இவை நான்குபாட்டாலும் செங்கோலைச் செலுத்தினுன் அடையும பயன் சொல்லப்பட்டது.

(க - து.) நீதிதவறு நு லகத்தைக் காக்கும் அரசனை அவனது செங்கோலே காக்கும் என்பது.

னென் பதுமுணரான், தருமத்தன் வழிச்செல்லை கடனென்று தன்மைத் தன், மருமத்தன் தேரூழி யுறவூர்ந்தான் மனுவேந்தன், அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்" என்று பெரிய புராணம் கூறுவது மிங் கறியத்தக்கதாம். இக்கதையின விரிவைப் பெரிய புராணம் திருவாரூர்ச் சிறப்பிற் காண்க. முறை - நீதி.

* மதுரையில் அரசு செலுத்திய பாண்டியர்களுள் ஒருவன் தன்பாலடைக்கலமாக வைத்துச் சென்ற ஒருவேதியனது மனைவியைப் பாதுகாத்துவரும் காவலில், ஓரிராதரிரி நகர்சோதனை வரும்போது தன்பாலடைக் கலமாகவுள்ள வேதியனது மனையாளவீட்டில் ஆண்குரல்கேட்டுச் சந்தேகங்கொண்டு, உன்னே யார் என்று கதவைத்தட்டினுன்; தட்டவே, அன்று வந்து சேர்ந்த அவ்வேதியன் தட்டுபவன் யார் என்று கேட்க, அரசன் அச்சங்கொண்டு அங்குள்ள வீதெனின் கதவுகளை யெல்லாம் தட்டிக்கொண்டே போய் அரண்மனை சேர்ந்து, விடிந்தவுடன் காலைக்கடனை முடித்துச் சபைக்குச் சென்று மந்திரி புரோகிதர்களோடு கூடியிருக்கும் மகளிருள்ள வீட்டின் கதவை மோதத்திரியிற சென்று தட்டினவனை யென்ன செய்யலாமென்று கேட்டான். அதற்கு அவர்கள் அவனது கையை வெட்டிவிட வேண்டுமென்றனர். உடனே அரசன் தன்கையை வாளால் வெட்டிக்கொண்டு நடந்த சமாச்சாரத்தைக் கூறிப் பொன்னுற்கை யொன்று செய்து தரித்துக்கொண்டு பொற்கைப்பாண்டியன் என்னும் பெயரோடு விளங்கினனென்பதுகதை. இவனது இயற்பெயர் குலசேகரப்பெருமான் என்று கூறப்படுகின்றது "எனக்குத் தகவன்று லென்பதே நோக்கித், தனக்குக் கிரியாவான் ருனுய்த் தவற்றை, தினேத்துத்தன் கைகுறைத் தான் தென்னவனு(பாண்டியனு)ங் காணுர், எனச்செய்யார் மாணு வினே" என்று பழமொழி கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ முட்டாது என்னும் எதிர்மறை வினையெச்சத்தின் இறுதி நிலை (தல்விகுதி) செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

7. The king defends the whole world; and justice, when it is administered without defect, defends the king.

அ. எண்பதத்தா னெஞா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் ருனே கெடும்.

பரி:—(ஞ - ள்) * முறைவேண்டினர்க்கு † எளிய செவ்வியை யுடையனுய் ‡ அவர் சொல்லியவற்றை () நூலோர் பலரோடும் ஆராய்ந்து நின்ற வுண்மைக்கோப்ப முறைசெய்யாத அரசன் தாழ்ந்த பதத்தி லே நின்று தானே கெடும், (எ - று).

$ எண்பதத்தான என்னும் முற்றுவினையெச்சமுர, ஓராவென்னும் வினையெச்சமும் செய்யாவென்னும் பெயரெச்ச எதிர்மறையுட் செயதல் வினை கொண்டன தாழ்ந்தபதம் - பாவமும் பழியும் எய்துதற்கு நிலை. ¶ "அல்லவை செயதார்க் கறவுகூற்றம்' ஆகலின் பகைவர இன்றியுங 'கெடும்' என்ருர். இதனுன் § முறை செலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) (முறைவேண்டி வழக்குதீர்விப்பவர்க்கு) எண்பதத்தான் - எளிய சமயத்தை யுடையவனுய், ஓரா - (அவர் சொல்லியவற்றை நூலோர பலரோடும்) ஆராய்ந்து, முறைசெயயா - (நின்ற உண்மைக்குப் பொருந்த) முறைசெய்யாத, மன்னவன - அரசன், தண்பதத்தால - தாழ்ந்தபதத்திலே, (நின்று), தானேகெடும் - தானே கெடுவான், (எ - று).

வினையெச்சப் பொருளில வந்த எண்பதத்தானென்னு முறுமும், ஓராவென்னும் வினையெச்சமும், செய்யாவெனனும ாறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் செய்தலெனனும முதனிலே கொண்டு முடிந்

முறைவேண்டினர்க்கு - பிறர் தமக்குச செயத நீமையைகூறி நீதியை விரும்பினவருகு.

† எளிய செவவியை யுடையனுதல் - கொலுமண்டபத்தில் அந்தணர் சான்ருர் முளளிட்டாரோடு யாவருங்கண்டு தங்குறைகளைச சொலலுவதற்கு எளிய சமயத்தை யுடையவனுயிருத்தல் ‡ அவர - முறைவேண்டினுர.

() நூலோர் - அமைசசர் முதலாயினுர.

$ எண்பதத்தான் என்னும முற்று வினையெச்சமும் (எண்பதத்தானென்னனுங குறிப்புவினைமுற்று இஃது வினையெச்சப் பொருளில வந்தது), ஓரா என்னும் (செய்யா எனனும வாயாபாட்டிறத்தால) வினையெசசமும், செய்யா என்னும (எமுகெட்ட எதிர்மறைத தெரிநிலைப்) பெயரெசசத்தின் முதனிலையான செய்தல் எனபதனைக கொண்டன எனபது வினைப்பகுதியெலலாம் தொழிற் பெயரா மெனபது முன்னரே எழுதப்பட்டிருக்கினறது.

¶ நான்மணிக்கடிகை. 85. இதன் பொருள். அறமல்லாத காரியங் களைச செய்தலருக்கு அறம் யமனுகும் எனபது.

§ முறை செலுத்தாதானது - நீதியைச் செலுத்தாத அரசனது.

தண. தாழ்ந்தபதம்-பாலமும் பழியும் அடைத்து நிற்கும் நிலை. நியாரியங் களைச் செய்தவர்க்குத் தருமம் யமனுயிருத்தலால் பகைவரில்லா திருந்தா லும் (முறைசெய்யா மன்னவன்) 'தானே கெடும்' என்றார். இதனுல் முறைசெலுத்தாதவனது கேடு சொல்லப்பட்டது.

(க - து.) முறைவேண்டினார்க்கு எளிய சமயத்தை யுடை யவனுய் நூலோர் பலரோடு மாராய்ந்து முறைசெய்யாத அரசன் ஒருவர் கெடுகவேண்டாது தானேகெடுவான் என்பது.

8. The king who gives not facile audience to those who approach him, and who does not examine and pass Judgment on their complaints, will perish in disgrace



கூ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடவேன்று வேந்தன் ருெழில்.

பரி:—(இ - ள்.) குடிகளைப் † பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாது பேணி, ‡ அவர்மாட்டுக் குற்ற நிகழின் (1) அதனை ஒறுப்பான் ஒழித்தல் வேந்தனுக்குப் பழியன்று, தொழில் முகலான், (எ - று).

தண்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறலென ஒறுப்பு மூன்று ; அவற்றுள், ஈண்டைக்கெய்துவன மூன்றையவென்பது 'குற்றங்கடிதல்' எனபதனுற்பெற்றும், தன்கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறனன்மையின் வடவாமென்பதனை ஆசங்கித்து, § அஃதாகாது, அரசனுக்கு அவரை அக் குற்றத்தினீங்கித் தூயராக்குதலுஞ் ¶ சாதிதரும மென்றார்.

தெளி:—(இ - ள்., குடி - குடிகளை, புறங்காத்து-(பிறர்வருத்தாமற்) காத்து, ஓம்பி - (தானும்வருத்தாமல்) ஆதரவுசெய்து, குற்றம் - (அவரிட த்தில்) குற்றம் (உண்டானுல்), கடிதல் - (அக்குற்றத்தைத் தண்டத்தால்) ஒழித்தல், வேந்தன்ருெழில் - அரசனதுதொழிலாம், (ஆதலால் அஃதவ னுக்கு), வடவன்று - பழியாகாது, (எ - று).

தண்பஞ்செய்தல், பொருளைக் கொள்ளுதல், கொல்லுதல் என ஒறு ப்பு(தண்டம்) மூன்றும்; அம்மூன்றனுள் இவ்விடத்திற்குப் பொருத்தவன மூன்னுள்ள தண்பஞ் செய்தல் பொருளைக் கொள்ளுதலென்னு மிரண்டு மென்பது 'குற்றங்கடிதல்' என்று கூறியதினுல் பெற்றும். தன்கீழ்வாழ்

† பிறரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முத லாயினோரை. ‡ அவர்மாட்டு - குடிகளிடத்து.

(1) அதனை யொழிப்பா னெறுத்தல் என்றும் பாடமுண்டு.

§ அஃதாகாது - ஒறுத்தல் (குற்றஞ்செய்தவரைத்தண்டித்தல்) பழிப் பாகாது.

¶ சாதிதரும மென்பார் 'வடவென்று வேந்தன் ருெழில்' என்றார் என் றும் பாடமுண்டு.

வாரை ஒறுத்தல் அறமாகாமையால் வடுவாமென்பதனை ஆட்சேபமாக் கிக்கொண்டு, அது வடுவாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினின்று நீக்கிப் பரிசுத்தராக்குதலுஞ் சாதிதருமமென்பார் 'வடுவன்று வேந்தன் தொழில்' என்றார்.

(க - து.) அரசனது தொழில் குடிகளைப்பாதுகாத்து அவர் களிடத்துண்டாகுங் குற்றங்களை அவர்களைத் தண்டித்தொழித் தலாம என்பது.

9. In guarding his subjects against injury from others, and in preserving them himself, to punish crime is not a fault in a king, it is his duty.

---

௯. † கோலியிற் கொடியாரை வேந்தோறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்.

பரி:—(இ - ள்.) அரசன் கொடியவர்களைக் () கோல்லான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், உழவன் களையைக் களைந்து பைங் கூழைக் காத்ததனோடொக்கும், (எ - று).

கொடியவரென்றது ‡ நிகமகாஞவுவார், கஞ்சிவிவார், கருவியிற்கொல் வார், கள்வர், ஆலேப்பார், சூறைகொள்வார், பிறனில்வீழைவாரென்றிவர் முதலாயினரை. இவரை வடதூலார் ஆததாயிகளெனப. ¶ இப்பெற்றியா ரைக் கண்ணேடிக் கொல்லாவழிப் புற்களைக்கு அஞ்ஞாகின்ற பைங்கூழ் போன்ற கலிவுபலவெய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதரும மென்பதாயிற்று. இவை யிரண்டொட்டானுஞ் செங்கோல் செ

† "பயிரிடுகின்றவன் பயிருடனுண்டாய புல்முதலியவற்றைப் பிடுங்கி விட்டுப் பயிர்களைக்காப்பற்றுவதுபோல அரசன தன் தேசத்திலுண்டான துஷ்டர்களைத் தாத்திவிட்டு கல்லோர்களைக் காப்பற்றல்வேண்டும்" என் பது மனுதர்மசாஸ்திரம் ஏழாவதத்தியாயம்.

() கொலையான் ஒறுத்து - கொலைசெய்தலால் தண்டித்து.

‡ "(வீட்டுக்கு) நெருப்புவைத்தவன், (அன்னத்தில்) விஷங்கலந்த வன், ஆயுதத்தினுல் கொல்லவந்தவன், பொருளையபகரித்தவனை, பூமியை யபகரித்தவன், மனைவியையபகரித்தவனென்னும் இவ்வறுவரும் ஆததாயிக ளென்று சொல்லப்படுவர். எதிர்ப்பட்ட ஆததாயிகளை விசாரிக்காமலே கொல்லல்வேண்டும். ஆததாயிகளைக் கொன்றவனுக்கு யாதொருதோஷமு மில்லை" என்று பத்ம புராணம் சிருஷ்டிகாண்டத்தில் கூறுகின்றது.

¶ "மாகிலங்கா. வலனுவான் மன்னுயிர்களைக் குங்காலத், தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால், ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வ ரா லுயிர்த்தம்மால், ஆனபய மைத்துநீர்த் தறங்காப்பா னல்லனே" என்று பெரியபுராணங் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.


லுத்தும் † வெண்குடை வேந்தற்குத் ‡ தீயார்மாட்டு மூவகையொறுப்பும் ஒழியற்பாலவல்ல வென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வேந்து - அரசனுவன், கொடியாரை - கொடியவர்களை, கொலையின் - கொலையினும், ஒறுத்தல் - தண்டித்தல், (தண்டித்தல் கல்லோரைக் காப்பாற்றல்), (உழவனுவன்), பைங்கூழ் - பயிரை, களைகட்டதனெடு - களையைக் களைந்து காப்பாற்றலோடு, சேர் - ஒக்கும்.

கொடியவ ரென்றது நீக்கொளுவுவார், நஞ்சிவர், படையிற் கொல்வார், கள்வர், வழியலைப்பார், கொள்ளையிடுவர், பிறனில்லாளை விரும்புவார் என்ற இவர் மூதலாயினேரை. இவரை வடநூலார் ஆதாயிகளென்பர். இத்தண்டமை யுடையவரைத் தாட்சண்யஞ் செய்து கொல்லாத வீடத்துப் புலலுக்களுக்கு அஞ்சாகின்ற பயிரைபோன்று வருத்தம் பலவற்றை யடைந்து உலகத்தார் தின்பப்படுவாராதலால், கொல்லுதலும் அரசனுக்குச் சாதி தருமமென்பதாயிற்று. இவை இரண்டுபாட்டாலும் செங்கோல் செலுத்தும் வெண்கொற்றக் குடையையுடைய அரசனுக்குத் தீயோரிடத்தி மூவகைத் தண்டமும் ஒழிக்கத்தக்கனவல்ல வென்பது சொல்லப்பட்டது. களைகட்டல் - புல் முதலிய களைகளைப் பிடுங்கியெறிதல்.

(க - து.) அரசன் கொடியவரைத் தண்டித்து நல்லவரைக் காப்பது உழுது பயிர் செய்வான் களையைப்பிடுங்கிப் பயிரைக் காபபதுபோலவாம் என்பது.

10. For a king to punish criminals with death, is like pulling up the weeds in the green corn.



பதினேட்டாம் அதிகாரம்.

கொடுங்கோன்மை—On Unjust Government.

பரி:—அஃதாவது ¶ அம்முறையினது கோடுதற் றன்மை. ஈண்டும்

† வெண்குடை - அரசனது வெற்றிக்கு அடையாளமாயுள்ளவற்றுள் ஒன்று. இது கலிங்கத்துப்பரணி அவதாரத்தில் "குலிசகேது டாசர் சுற்றிய குலாசழ லபயன முத்தணி, கலிங்கயினில வெறித்தது கலியெனுமிரு ளொளித்ததே" என்று கூறுவதாலு முணரப்படும்.

‡ கொடியவர்களிடத்தில் தண்டஞ்செய்தல், பொருளைக்கொள்ளுதல், கொல்லுதல் என்னும் மூவகைத்தண்டமும் ஒழிக்கத்தக்கனவல்லவென்பது சொல்லப்பட்டது என்பதாம்.

¶ அம்முறையினது - அச்செங்கோலினது. (முறை-நீதி).

உவமையின் பெயர் * பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலின், † இஃது ¶¶ அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அம்முறையினது தோணுதற்றன்மையாம். இங்கும் உவமானமான கொடுங்கோலின் பெயர் உவமேயமான அரசியின் மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலால், இஃது அதன்பின்வைக்கப் பட்டது.

சு. கோலமேற்கோண் டாரிற் கொடிதே யலமேற்கோண் டல்லவை செய்தொழுகும் வேந்து.

பரி:—(இ - ள.) பகைமைபற்றிக் கொல்லுதற்றெழிலைத் தம்மேற் கொண்டொழுகுவாரினுங் கொடியன், பொருள் வெஃகிக் குடிகளை ‡ அலைத்தற் றெழிலைத் தன்மேற்கொண்டு ¶ முறையல்லவற்றைச் செய் தொழுகும் வேந்தன், (எ - று).

0 அவர் செய்வது ஒருபொழுதைத் தின்பம், †† இவன் செய்வது எப் பொழுதுந் துன்பமாமென்பது பற்றி () 'கொலமேற்கொண் டாரிற்கொ டிதே' என்றார். ‡‡ டாண்மயக்குறழ்ச்சி. வேந்தென்பது உயர்திணைப் பொருட்கண் வந்தஃறிணைச் சொல் அலை கொலையினும் கொடிதென்ப தாயிற்று.

தெளி:—(இ - ள்.) அலை - (பொருளை விரும்பிக் குடிகளை) அலைத் தற் றெழிலை, மேற்கொண்டு - (தன்) மேற்கொண்டு, அல்லவை - முறை

---

* பொருள் உவமேயம்.

† இஃது - கொடுங்கோன்மை. ¶¶ அதன்-செங்கோன்மையின்.

‡ அலைத்தல் - வருத்துதல். ¶ முறையல்லவற்றை - அநீதிகளை.

0 அவர் - பகைமைபற்றிக் கொல்லுதற் றெழிலைத் தம்மேற்கொண்டு நடப்பவர். †† இவன் - அரசன்.

() அவரினுங் கொடியன் என்றார் என்றும் பாடமுண்டு.

‡‡ அலைமேற்கொண் டல்லவை செய்தொழுகும் வேந்து என்னும் ஒரு மைப்பாலுக்குக்கொலைமேற்கொண்டாரென்னும் பன்மைப்பால் உவமான மாகவந்து உறழ்ந்து நின்றமையின், பால்மயக் குறழ்ச்சியாயிற்றென்க. [ஒரு மைப்பாலுக்கு ஒருமைப்பாலே உவமானமாகவாராது பன்மைப்பால் உவ மானமாக வந்தும், கொண்டாரின என்பதன்கணுள்ள (ஐந்தாம் வேற் றுமை) இன்னுருபு போலஎன்று ஒப்புப்பொருளில் வாராது காட்டிலும் என்னும் உறழ்ச்சிப்பொருளில் வந்தும் நின்றமையின், ஒருமைப்பாற் பன் மைப்பாலோடு மயங்கியதாயும் இன்னுருபு உறழ்ச்சியதாய் முடிவதென்க. ஒன்றினொன்றுமிக்கு (சமமாகாது) மாறுபடுவது உறழ்ச்சியெனப்படும். உறழ்ச்சியெனினும் உறழ்பொருள் எனினும் ஒக்கும்]. "முதலுஞ் சிலை யுமென் றாயிரு பொருட்கு" என்னும் (தொல்காப்பியச்) சூத்திரத்தின் விசேடவுரையில் "டம்பமர் தெவ்வே ளென்ன மீளி, யுடம்படித் தடக்கை யோடா வம்பலர்' என்பது ஒருமைப் பன்மை மயங்கிற்று" என்று நச்சி னார்க்கினியார் கூறியது மிக்கறியத்தக்கதாம்.

யல்லாதவற்றை, செய்தொழுகும் - செய்து நடக்கும், வேந்து - அரசனுவன், கொலை - (பகைமைபற்றிக்) கொல்லுதற்றொழிலை, மேற்கொண்டாரின்-(தம்) மேற்கொண்டு நடப்பவரினும், கொடியதே - கொடியனுவன்.

அவர் செய்வது ஒரு காலத்தன்பம், இவன் செய்வது எந்நாளும் துன்பமாமென்பது பற்றிக் 'கொலைமேற்கொண்டாரிற் கொடியதே' என்றார். இது பண்மைப்பா லுவமானத்திற்கு ஒருமைப்பா லுவமேயமாகவந்த பால் மயக்குறழ்சி. கொண்டாரின் என்னும் இன் உருபு உறழ்சிப் பொருளில் வந்தது. வேந்து என்பது உயர்திணைப்பொருளில்வந்த அஃறிணைச் சொல். அலைத்தல் கொலையினுங் கொடியதெனபதாயிற்று.

(க - து.) அரசு செய்தொழுகு மரசன் பகைமைபற்றிக் கொலைசெய்பவர்களிலுங் கொடியவனுவன் என்பது.

1. More cruel than the man who lives the life of a murderer, is the king who gives himself to oppress and act unjustly towards his sujects.

உ. † வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு.

பரி:—(இ - ள்.) ஆறலைக்குமிடத்துத் தனியே வேல்கொண்டு நின்றகள்வன் ஆறுசெல்வானை நின்கைப் பொருள் தாவென்றுவேண்டுதலோடு ஓக்கும், ஒறுத்தற்றெழிலோடு நின்ற அரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல், (எ - று).

'வேலொடு நின்ருன்' என்றதனைத் ‡ பிறரொடு நில்லாமையும், ¶ 'இரவு' என்றதனால் †† இறைப்பொருள் அன்மையும் பெற்றும். தாராக்கால் ஓறுப்பலென்னுங் குறிப்பினுலின், இரவாதகோடலுங் கொடுங்கோன்மையாயிற்று. இவை யிரண்டொட்டானுங் கொடுங்கோன்மையது குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கோலொடு-தண்டித்தற்றொழிலோடு, நின்ருன்-நின்றவரசன், இரவு - (குடிகளைப்பொருள்) வேண்டுதலானது, (வழியில் அலைத்துப் பொருள் பறிக்குமிடத்துத் தனியே), வேலொடு - வேற்படைகொண்டு, நின்ருன்-நின்றகள்வன், இடுவென்றதுபோலும்—(வழிப்போக்கனை யுன்னைப்பொருளைத் தாவென்று வேண்டுவதோடு ஒக்கும், (எ-று).

'வேலொடு நின்ருன்' என்றதனால் பிறரொடு நில்லாமையும், இரவு' என்றதனால் இறைப்பொருளல்லாமையும் பெறப்பட்டன.(பொருள்)தாரா

† "உறையில் வாளொடு மாவழங் குறுவனத் தோடி, மறவ னேர்பொரு டருகென வீரத்தலை மானும், இறைவன் வாழ்குடி தன்னிலொன்றெரு பொரு ளிரத்தல்" என்று பிரபுலிங்கலீலை கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

‡ பிறர் என்றது அமைச்சர் புரோகிதர்களை. ¶ இரவு - யாசகம்.

†† இறைப்பொருள் - வரிப்பணம்.

வீட்டால் தண்டிப்பேனென்னுங் குறிப்புடையவனதலால் இரத்தலினும் (பொருளை) வாங்குதலும் கொடுங்கோன்மையாயிற்று. இவையிரண்டுபோட்டாலுங் கொடுங்கோன்மையினது குற்றஞ் சொல்லப்பட்டது. அலைத்தல்-அடித்து வருத்துதல்

(க - து.) கொடுங்கோலரசன் குடிகளிடம் பொருள்வேண்டுதல் திருடன் வழிப்போக்கனிடம் பொருள்வேண்டுதலை யொக்கும்.

2. The request for money of him who holds the sceptre is like the word of a robber who stands with a weapon and says "give up your wealth".

கூ. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னெடொறு நாடு கெடும்

பரி:—(இ - ள்.) தன்னுடைய நிகழ்ந்த தீமைகளை நாடோறும் ஆராய்ந்து * அதற்கேற்ற முறைமையைச் செய்யாத அரசன் நாடோறும் நாடியழிந்தும், (எ - று)

அரசனுக்கு நாடி † உறுப்பாகலின், ‡ அதன்மேனி அவன்மேனின்றது. இழத்தல் - பயனெய்தாமை. ¶ மன்னவனெடொறுங் கெடுமென்றுரைப்பாரும் உளர்.

தெளி:—(இ - ன்) நாடொறும் - தினந்தோறும், நாடி - (தன்னுட்டில் உண்டாகுந் தீமைகளை) ஆராய்ந்து, (அகற்று ஒக்கை), முறை - முறைமையை, செய்யா - செய்யாத, மன்னவன் - அரசன், நாடொறும்—தினந்தோறும், நாடுகெடும் - நாடியழிப்பான், (எ - று).

அரசனுக்கு நாடி உறுப்பாகலால், அந்நாட்டின் கெடுதற்கேழில் அவன்மேல் நின்றது. இழத்தல் - (நாட்டினை) பயனடையாமை.

---

* *அதற்கேற்ற - அவ்வாறாய்நடைக்குப்பொருந்த.*

† *அமைச்சு நாடி அரண் பொருள் படை நட்பென்னும் ஆறங்கத்து ளொன நாடும் முறுப்பா யிருத்தல் காண்க*

‡ *அதன்மேனி (நாட்டினது கேடு) அவன்மேனின்றது (அரசன்மேல் நின்றது). மன்னவன் நாடு கெடுமென்பது நம்பி நாடு பெரியன என்றற் போன்ற திணைவழுவமைதியா.* இங்கு நாடாகிய வுறுப்பினது கெடுதலாகிய தொழில் முதலாகிய அரசன் மேல் நின்றதெனக. மன்னவன் நாடு கெடும் என்பதற்கு அரசன் நாட்டினபயனை யடையாட்டானென்பது கருத்தாமென்க.

¶ *அரசன் நாடு தினந்தோறும் இழக்கும் என்று (மன்னவ னெடொறு நாடு கெடும் என்பதற்குப்) பொருளுரைப்பாரு முண்டென்பது. இதற்கு அரசன் தனது நாட்டினைத் தினந்தோறுஞ் சிறிது சிறிதாக இழக்கப்பெறுவான் என்பது கருத்தாம்.*

(க - து.) தன்னுட்டி லுண்டாகுங் தீமைகளை நாள்தோறு மாராய்ந்து செங்கோல் செலுத்தாத அரசன் ஒவ்வொருகாலுந் தனது நாட்டினை யிழப்பான் என்பது.

3. The country of the king will daily fall to ruin, who does not daily examine into and punish crimes.

ச. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

பரி:—(@ - ள்.) † மேல்வினைவது எண்ணாது முறை தப்பச் செய்யும் அரசன் ‡ அச்செயலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற் கேதுவாகிய குடிகளையுந் சோ விழக்கும், (எ - று).

¶ கோடவென்பது திரிந்து நின்றது. முன்னீட்டிய பொருள் இழத் தற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

தெளி:—(இ - ன்.) சூழாது - (மேல்வினைவை) எண்ணாமல், கோல் கோடி - முறைதப்ப, செய்யும்—, அரசு - அரசனுனவன், (அச்செயலால்), கூழும் - (முன் சம்பாதித்த) பொருளையும், குடியும் - (பின் அப்பொரு ளைச் சம்பாதித்தற்குக் காரணமாகிய) குடிகளையும், ஒருங்கு-ஒருசேர, இழக் கும்-இழப்பான், (எ - று.)

கோடவென்னும் வினையெச்சம் கோடியெனத் திரிந்து நின்றது. முன் சம்பாதித்த பொருளை இழத்தற்குக் காரணம் வருகிறபாட்டாற் சொ ல்லுவார்.

(க - து) பின்வருவதைக்கருதாது முறைதப்ப நடக்குமர சன் பொருளையுங் குடிகளையும் இழப்பான் என்பது.

4. The King, who, without reflecting on its evil consequences, perverts justice, will lose at once both his wealth and his subjects.

நி $ அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

* கூழ் - உணவு. கூழிற்குக்காரணமாய பொருளைக் கூழ் என்றது காரியவாகு பெயராம் † மேல்வினைவது - பின்னுண்டாவது.

‡ அச்செயலான் - முறை (நீதி) தப்ப (தவற)ச் செய்தலால்.

¶ கோலினது வினையாகிய கோடி யென்னும் (செய்து என்னும் வாய்பாட்டு வினை) எச்சம் அரசனது வினையாகிய செய்யும் என்பதைக் கொண்டு முடிதற்கு விதியில்லாமையின், 'கோட வென்பது (கோடியென த்) திரிந்து நின்றது' என்று கூறப்பட்டது

$ "இருவர்தஞ் சொல்லையு மெழுதாங் கேட்டே, இருவரும பொருந்த வுரையா ஞபின், மறுமுறை நெறியின் வழக்கிழக் தவர்தாம், மனமுற மறு

பரி:—(இ - ள்.) அரசன் முறைசெய்யாமையாற் குடிகள் துன்ப முற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீர் † ரன்றே அவன் செல்வத்தைக் குறைக்குங் கருவி, (எ - று).

அழுதகண்ணீர் - அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை யென்ஞமையின், இஃது வகதேசவருவகம். ‡ அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கேதுவாகிய கண்ணீரமேனின்றது. அக்கண்ணீரிற் கொடிது பிறிதின்மையின், செல்வங் கடிதிற் றேயுமென்பது கருத்து.

தெளி:—(இ - ள்) செல்வத்தை - (அரசனது) செல்வமாகிய மரத்தை, தேய்க்கும் - குறைக்கும், படை - வாளாவது, (அஃன் முறைசெய்யாமையினல்), அல்லற்பட்டு - (குடிகள்) துன்பமடைந்து, ஆற்றாது - (அத்துன்பதனைப்) பொறுக்கமாட்டாமல், அழுதகண்ணீரன்றே - அழுகையால் வந்த கண்ணீரல்லவா, (எ - று).

கண்ணீரைப் படையாக உருவகஞ் செய்தவர் அதற்கேற்ப செல்வத்தை மரமென்றுருவகஞ் செய்யாமையின், இஃதேகதேசவுருவகவணியாம். அல்லற்படுத்திய பாவத்தினது தொழில் அதற்குக் காரணமாகிய கண்ணீர் மேல் நின்றது அக்கண்ணீரைக்காட்டிலும் கொடியது வேறில்லாமையால், செல்வம் விரைந்து கெடுமென்பது கருத்து.

(கு - து) கொடியகோலரசனது செலவத்தை யிழவாக ஒழிபபது அவனது குடிகள் அழுத கண்ணீராம் எனபது.

5. Will not the tears, shed by a people who cannot endure the oppression which they suffer from their king become a saw to waste away his wealth?

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

பரி:—(இ - ள்) அரசர்க்குப் புகழ்களாம் நிலைபெறுதல் செங்கோன்மையான் லும்; அச்செங்கோன்மை யில்லையாயின், அவர்க்கு அப்புகழ்களாம் உளவாகா, (எ-று).

இதின முழுத கண்ணீர், முறைபுரத் தேவர் மூவர் காப் பினூடம், வழியழி யீர்வதோர் வாளா குமேல்" என்று வெற்றிவேற்கை கூறுவது மிங்கறியத் தக்கதாம்

† அன்றே என்பது நிச்சயதையுணர்த்தி நின்றது,

‡ துன்பப்படுத்திய பாவத்தினது தொழில் அபபாவத்தொழில் வெளிப்படுவதற்குக்காரணமான கண்ணீர்மேல் நின்றது. துன்பப்படுத்திய பாவத்தினது தொழிலே அத்தொழில் வெளிப்படுவதற்குக் காரணமாய கண்ணீர் என்று கூறியது ஒருபொருளின் வினை (பாவத்தினது தொழில்) மற்றொரு பொருளா (கண்ணீரா) ன உபசாரவழக்கம்.

விகாரத்தாற்றொக்க மூன்றுவது விரித்தி ஆக்கம் வருவித்துரைக் கப்பட்டது. மன்னுதற்கேது புகழாதலை † 'இந்திலதி மன்னுதல் வேண்டி னிசைகெடுகே" என்பதனானும் அறிக. மன்னுமை - ‡ ஒருகாலும் நிலையா மை. * பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாரு; ஆகலே, தாமும் மன்னு ரென்ப தாயிற்று. வென்றி, கொடை ¶ முதலிய வதிக்களாற் புகழ்பகுதிப்படுதலின். பண்மையாற் கூறினர். அவையெல்லாம் செங்கோன்மை யில்வழி இலவாமென்பதாம். இவை நான்கு பாட்டானும் கோடுங்கோலனையினன் எய்துங் குற்றங்கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மன்னர்க்கு - அரசர்க்கு, மன்னுதல் - (புகழ்கள் தாம்) நிலைபெறுதல், செங்கோன்மை - செங்கோன்மையால் (ஆம்), அஃது - அச்செங்கோன்மை, இன்றேல் - இல்லையாயின், மன்னர்க்கு - அவ்வரசர்க்கு, ஒளி - அப்புகழ்கள் தாம், மன்னுவாம் - உண்டாகாவாம்,

செங்கோன்மை யெனபதனகண் செய்யுள்விகாரத்தாற்றொக்கு நின்ற ஆல் என்னும் மூன்றும் வேறுபுணர்மையுருபை விரித்து ஆம் என்னும் ஆக்கச்சொல் வருவித்ததுச சொல்லப்பட்டது அரசர் பூமியில் நிலைபெறு தற்குக் காரணம் புகழாம். மன்னுமை (புகழ்கள்) ஒரு போதும் நிலைத் திராமை. (குடிகளால் அரசர்) பழிக்கப்பட்டால், (அவர்க்கு) ஒளி (புகழ்கள்) நிலைபெறாமாம்; நிலைபெறுவாகலே, தாமும் (அரசரும்) நிலை பெறுரென்பது பெறப்பட்டது வெறறி, கொடை முதலாகிய வதிக்களால் புகழ் பலவகைப படுதலால ஒளி மன்னுவாம் எனப்பன்மையாற் சொல்லி னார். அப்புகழ்களெல்லாம் செங்கோன்மை (நீதி) யில்லாதவிடத்து இல்லை யாமென்பதாம். இவை நான்குபாட்டானும் கொடுங்கோன்மை யுடைய அரசனையுங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து) புகழ் செங்கோலுடைய அரசர்க்கன்றிக் கொடுங் கோலுடைய அரசர்க்குண்டாகாது என்பது.

6. Righteous government gives permanence to the fame of kings; without that their fame will have no endurance.

எ. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த னளியின்மை வாழு முயிர்க்கு.

---

* செங்கோன்மையென்பது ஆன் என்னும் மூன்றும் வேற்றுமை யுருபு தொக்கு நின்றமையின், அதனை (செங்கோன்மையான் என) விரி த்து ஆம் என்னும் ஆக்கச்சொல் வருவித்துச் சொல்லப்பட்டது.

† நான் மணிக்கடிகை 15. இதன்பொருள். இந்தப்பூமியில் நிலைபெறு தலே விரும்பினால் கீர்த்தியை ஸ்தாபிக்கக்கடவன் என்பது.

‡ ஒருகாலும் நிலையாமை - சிறிதுபோதும் நிலைத்திராமை.

¶ முதலிய என்றமையின், கல்வி ஆண்மைமுதலியவற்றையுங்கொள்க.

பரி:—(இ - ள்.) மழை யில்லாமை வையத்து வாழும் உயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும், அவ்வகைத் துன்பம் பயக்கும் அரசன் ○ தண்ணளி யில்லாமை அவனுட்டோ வாழுங் குடிகட்கு, (எ - று).

† சிறப்புப் பற்றித் தளியென்பது மழைமேனின்றது; ‡ உயிரென்பது குடிகண்மேனின்றது. மேல் ¶ 'வாழுங்கோவாழும்" என்றதனை $ எதிர்மறைமுகத்தாற் கூறியவாறு.

தெளி:—(இ - ள்.) வேந்தன் - அரசனது, அளியின்மை - அருளில்லாமையானது, வாழும் - (அவனுட்டில்) வாழும், உயிர்க்கு - குடிகளுக்கு, தளியின்மை - மழை இல்லாமையானது, ஞாலதலிற்கு - பூமியில் வாழுமுயிர்களுக்கு, எற்று - எவ்வகைத் தன்பந்தருமோ, அற்று - அவ்வகைத் தன்பந் தரும், (எ - று).

தளியென்பது சிறப்புப்பற்றி மழைமேல் நின்றது; உயிரென்பது குடிகள்மேல் நின்றது. முன் 'வாழுங்கோ வாழும்' என்றதனை எதிர்மறை முகத்தாற் சொல்லியபடியாம்.

(க - து.) உயிர்களுக்கு மழை பெய்யாமையால் எவ்வளவு துன்பமுண்டாகுமோ அவ்வளவு துன்பம் அருளில்லாத அரசன் கீழ் வாழுங் குடிகளுக்குண்டாம் என்பது.

7. As is the world without rain, so live a people whose king is without kindness.

அ. இன்மையி னின்னு துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

பரி:—(இ - ள்.) முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின் கீழ் வாழின்,யாவர்க்கும் பொருளினதுஇன்மையினும் ()உடைமை இன்னாது.

[] தனக்குரிய பொருளோடமையாத மேலும் வெஃகுவோனதுகாட்சே†† கைக்கோவாப்புண்டல் * முதலிய வருவது பொருளுடையார்க்கே

○ தண்ணளி - பெருங்கருணை.

† பல பொருள் குறித்த தளியென்னுஞ் சிறிசொல் ஞாலத்திற்கு என்ற சிறப்பால் மழையை யுணர்த்தி நின்றது. பால்தளி, நெய்தளி என்பவரும் பிரயோகமும் மிக்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ உயிரென்றது அதிகாரம் நோக்கி அரசனது ஆறங்கங்களுள் ஒன்றாகிய நாட்டில் வாழுங் குடிகளே யுணர்த்தி நின்றது.

¶ செங்கோன்மை - உ.. $ எதிர் மறை - தளியின்மை, அளியின்மை யென்பன. () உடைமை - பொருளே யுடைத்தா யிருத்தல்.

[] தனக்குரிய பொருளோடமையாது - பதமுதலிய நூல்களில் தனக்கு விதித்துள்ள ஆறிலொருபங்குப் பொருளோடு திருப்தியடையாமல்.

†† கைக்கோவாப்புண்டல் - கைகள் வருந்துமாறு கட்டப்படுதல்.

முதலிய என்றமையின், அடித்தல், குத்தல், உதைத்தல், சிறைச்சாலையிலடைத்தல் முதலியவற்றையுங் கொள்க.

யாகலின், அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று. இவை யிரண்டு பாட்டாலும் அவனுட்டி வாழ்வார்க்கு வருங் குற்றங்கூறப்பட்டது.

நேரி:—(இ - ள்.) முறை செய்யா - முறையைச் செய்யாத, மன்னவன் - அரசனது, கோற் கீழ் - கொடுங்கோலின் கீழ், படின் - வாழின், (யாவர்க்கும்), இன்மையின் - (பொருளின்மை) இல்லாமையினும், உடைமை - (பொருள்) உடைமையானது, இன்னாது - பெருந்துக்கந் தருவதாம்.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் (பொருளை) விரும்பு மரசனது கோட்டில் கைக்கோவக் கண்டிண்டல் முதலாயின வருவது பொருளுடையார்க்கே ஆதலால், அவ்வுடைமை இல்லாமையினும் துன்பந்தருவதாயிற்று. இவை இரண்டு பாட்டாலும் அவனுட்டில் வாழ்வார்க்கு வருங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) நீதிதப்பிய அரசன்கீழ் வாழுஞ்செல்வர்க்குண்டாகுந்துன்பம் வறுமையாலுண்டாகுந் துன்பத்தினும் கொடியதாம்.

8. Property gives more sorrow than poverty, to those who live under the sceptre of a king without justice.

கூ. † முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
பொல்லாது வானம் பெயல்.

பரி:—(இ - ள்.) மன்னவன் தான் செய்யும் பொருளை ‡ முறைதப் பச் செய்யுமாயின், அவ்வாட்டுப் ¶ பருவமழை இன்றும்வகை மேகம் பொழிதலைச் செய்யாது, (எ - று).

o இரண்டிடத்தும் கோட வென்பன திரிந்து நின்றன. உறைகோ

* அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று-அப்பொருளுடைமை தரித்திரத்தினும் கொடியதாயிற்று.

† "கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும், கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும், மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை" என்று மணிமேகலை கூறுவதும், "கோணிலை திரிந்து தாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி, நீணில மாரியின்றி வீளைவஃ்கப் பசியு நீடிப், பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழித் தறங்கண் மாறி, யாணிலை வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான்" என்று சீவகசிந்தாமணி கூறுவது சிந்தியத் தக்கனவாம் ‡ முறைதப்ப - நீதிகெட.

¶ பருவமழை - பெய்யவேண்டிய காலத்தில் பெய்யுமழை

o மூறைகோடி உறைகோடி என்னு மிரண்டிடத்து முள்ள கோடியென்பன வேறு வினைமுதலின் வினைபற்றொண்டு முடிதற்கு விதியில்லாமையின், 'இரண்டிடத்தும் கோடவென்பன (கோடியென்பன்) திரிந்து நின்றன' எனவு கூறப்பட்டது. இந்த வேறு வினைமுதலின் வினை செய்யின் என்பதும் ஒல்லாது என்பதாம். "அவற்றுள்-முதலி னொருகு மீற்றின் மூன்றும், வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற". "சொற்றிரி பினும் பொருடிரியா வினைக்குறை" என்னும் நன்னூற் சூத்திரங்கள் இங்குக் கவனிக்கத் தக்கனவாம்.


தேலாவது பெய்யுங்காலத்திற் பெய்யாமை. அதற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

தேளி:—(இ - ள்.) மன்னவன் - அரசன், (தான் சம்பாதிக்கும் பொருளை), முறைகோடி-முறை தப்ப, செய்யின்-சம்பாதிப்பானாயின், (அவனது நாட்டில்), உறை - பருவமழையானது, கோடி - இல்லாமற் போம படி, வானம் - மேகமானது, பெயல் - பொழிதலை, ஒல்லாது - பொருந்தாது, (செய்யாது), (எ-று)

இரண்டிடத்திலுங் கோட என்பன கோடியெனத் திரிந்துநின்றன. பருவமழை கோடுதலாவது பெய்யவேண்டுங்காலத்தில் பெய்யாதொழிதல். பருவமழையில்லாமைக்குக்காரணம் வருகின்ற பாட்டாற்சொல்லுவார்.

(க - து.) நீதிதப்பிய அரசனது நாட்டில் பருவமழை பெய்வதில்லை யாம்.

9. If the king acts contrary to justice, rain will become unseasonable, and the heavens will withhold their showers.



கo ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

பர:—(இ - ள்.) காத்தற்குரிய அரசன்உயிர்களைக் காவாளாயின் அறனில்லாத அவரிடத்துப் பசுக்களும் பால்குன்றும், அந்தணரும் நூல்களை மறந்து விடுவார், (எ - று).

ஆபயன் - ஆவாற் கொள்ளும் † பயன். அறுதொழிலாவன:—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ‡ ஈதல், ¶ ஏற்றல என இவை. பசுக்கள் பால் குன்றிய வழி 0 அவியின்மையானும், $ அது கொடுத்தற்குரியார் ‡‡ மாதிரம் (|) கற்பமென்ப ஒத்தமையானும் [] வேள்வி கடவாதாம்; ஆக

---

* காவலன் - காவலை யுடையவன் இது காரண விகுறிப் பெயரா யரசனை யுணர்த்தி நின்றது.

† பயன் - பால. ‡ ஈதல் - கொடுத்தல். ¶ ஏற்றல் - வாங்குதல்.

0 அவி - நெய் முதலிய தேவருணவு $ அது - அவி.

‡‡ "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப" என்பது தொல்காப்பியம்

(|) கற்பம் வேதாங்கமாறனுள் ஒன்று; இது வேதத்தில் விதித்துள்ள வேள்வி முதலியவற்றை நடத்தும் வகையைக் கூறும். போதாயநீயம், பாரத்வாசம், ஆபஸ்தம்பம் முதலிய நூல்கள் கற்பமாம்.

[] "தேவர்களை நோக்கி யக்கினியிற செய்யுமோம (யாக)ங்கள் சூரியனை யடைகின்றன; அசுரரிய னிடத்தினின்றும் மழை யுண்டாகின்றது; அதனால் தானியங்க ளுண்டாகின்றன; அவற்றால் ஜீவகோடிகள் விருத்தி யடைகின்றன வென்று வேதத்திற் சொல்லப்பட் டிருக்கின்றது" என்று


வே, † வானம் பெயலொல்லா தென்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் அவனுட்டின்கண் நிகழுங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) காவலன் - காப்பாற்றற்குரிய அரசன், காவானெனின் - (உயிர்களைக்) காப்பாற்றானாயின், (தருமமில்லாத அவனது காட்டில்), ஆ - பசுக்களும், பயன் குன்றும் - பால் (தருவது) சுருங்கும், அறு தொழிலோர் - அந்தணரும், நூல் - நூல்களை, மறப்பர் - மறந்திலிவிடுவர்.

ஆபயன் - ஆவி னின்றுங் கொள்ளும் பயன். (அந்தணர்க்குரிய) அறு தொழிலாவன:—வேதமோதல், ஓதுவித்தல் யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்பவை. பசுக்கள் பால் கறவாது குன்றியவிடத்து அவிர்ப்பாகமில்லாமையாலும், அது தொடர்ந்தற் குரிய அந்தணர் மந்திரம் கற்ப மென்பனவற்றை யோதாமையாலும், யாகம் நடவாதாம்; நடவாதாகவே, மேகம் மழை பொழிதலைச் செய்யாதென்பதாயிற்று. இவை இரண்டுபாட்டாலும் அவன் காட்டினிடத்து உண்டாகுங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து) உயிர்களைக் காப்பாற்றாத அரசனது காட்டில் பசுகளிடத்தும் அந்தணரிடத்தும்பெறத்தக்கபயன் குறைந்துபோம்.

10. If the guardian of the country neglects to guard it the produce of the cows will fail, and the men of six duties will forget the Vedas.



பத்தொன்பதாம் அதிகாரம்.

வெருவந்த செய்யாமை:—

Against acting with a reign of terror.

பரி:—அஃதாவது குடிகள் அஞ்சுவதும், பகுதி அஞ்சுவதும், தான ஞ்சுவதும் அயதொழில்களைச் செய்யாமை அவை செயித்தல் கொடுங் கோன்மைப்பாற் படுதலின், இஃது ‡ அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது குடிகள் அஞ்சுவதும், பகுதி (மந்திரி முதலாயிய அங்கங்கள்) அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆயிய தொழிலகளைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மையிற் சேர்தலால், இஃது (வெருவந்த செய்யாமை) அதன்பின் வைக்கப்பட்டது.

மறுதாம சாஸ்திரம் மூன்றாவ தத்தியாயத்திற் கூறுவதும்,'' பிரஹ்மா யக்ஞத்தோடுகூடிய ஜனங்களை யாதிகாலத்திற் சிருஷ்டித்து, இந்த யக்ஞத னாலே (நீங்கள்) விருத்தியடையுங்கள். இந்த யக்ஞ முங்கட்கு விரும்பிய போகத்தைத் தரக்கடவதாக வென்ற கூறினர்'' என்ற பகவத்கீதை மூன்றாவ தத்தியாயத்திற் கூறுவது மீண்டுணர்தற் பாலனவாம்.

† ''மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும், தவமிலா ரில்வழி யில்லை தவமும், அரசிலா ரில்வழி யில்லை யரசனும், இல்வாழ்வா ரில்வழி யில்'' என்ற நான்மணிக் கடிகை கூறுவது மீண்டுரியத்தக்கதாம்.

‡ அதன்பின் - கொடுங்கோன்மையின்பின்.

க. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லோக்காங் கொறுப்பது வேந்து.

பரி.—(இ - ள்.) ஒருவன் தன்னின் * மெலியார்மேற் சென்றவழி † அதனை நடுவாக நின்று ஆராய்ந்து பின்னும் அது செய்யாமற் பொ நட்டு ‡ அவனை அக்குற்றத்திற்கோப்ப ஒறுப்பானே அரசனுவான். ()

¶ தக்காங்கு ஒத்தாங்கென்பன ஒருசொல். தகுதியென்பது நடுவுநிலை யாதல் § 'தகுதி யெனவொன்று கல்லேறு' என்பதனுனும் அறிக. இத னுனே தக்காங்கு நாடாமையும், பிறிதோர் காரணம்பற்றி மிகவொறுத்த லும், குடிகளஞ்சும் வினையாதல் பெற்றும்.

தேவி:—(இ - ள்.) (ஒருவன் தன்னிலும் மெலியவன்மீது சென்ற விடத்து) தக்காங்கு-நடுவு நிலைமையாக, (பின்று), நாடி-(அதனை) ஆராய்ந்து, தலைச்செல்லாவண்ணத்தால் - (பின்னும்) அக்குற்றமான செயலை செய் யாமற்பொருட்டு, ஒத்தாங்கு - (அக்குற்றத்துக்கு) ஏற்ப, ஒறுப்பது - (அவ னைத்) தண்டிப்பவனே, வேந்து - அரசனுவான், (எ - று).

தக்காங்கு ஒத்தாங்கு என்பன ஒருசொல். தகுதி - நடுவுநிலைமை. இதனுலே தக்காங்கு ஆராயாமையும் வேறொரு காரணம்பற்றி அதிக மாக தண்டித்தலும், குடிகள் அஞ்சுந்தொழிலாதல் பெற்றும்.

(க - து) ஒருவனது குற்றத்தை நடுவுநிலைமையாக விருந் தாராய்ந்து, அவன்பின்னுங்குற்றஞ்செய்யாவாறு அவனை அக்குற் றத்திற்குத் தக்கவாறு தண்டிப்பவனே அரசனுவான் என்பது.

1. He is a king who having equitably examined any injustice which has been brought to his notice, suitably punishes it, so that it may not be again committed.

உ. கடிதோச்சி மெல்ல வெறிக, நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்

* மெலியார் மேற்சென்றவழி - பலஹீனர்களிடத்துக் குற்றமான செயலைச்செய்தலிடத்து.

† அதனை - அக்குற்றமான செயலை ‡ அவனை-குற்றஞ்செய்தவனை.

¶ தக்காங்கு ஒத்தாங்கு என்பன தொடர்மொழியாகாமல் ஒரு மொழி யாய நின்றன என்பது

§ இருக்குறள் நடுவுநிலைமை, 1. இதன்பொருள்.நடுவுநிலைமை என்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று என்பது. நடுவுநிலைமையாவது பகைவர் அயலார் நட்பினென்னு மூவரிடத்தும் அறத்தினின்றும் வழுவாதி ஒப்ப நிற்கும் நிலைமையாம்.

பரி:—(இ-ள்.) அவ்வோத்தாங்கு ஒழுத்தல் தோடங்குங்கால் அள விறப்பச் செய்வார்போற்றெடங்கி, செய்யுங்கால் அளவிறவாமற் செய்க, ஆக்கந் தங்கண் நெடுங்காலம் நிற்றலவேண்டுவார், (எ - று).

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் * அதனை யஞ்சுதற் பொருட்டும், மெல்லவெறிதல் யாவரும் வெருவாமைப்பொருட்டும் ஆம். தொடங்கின அளவிற்குறைதல்பற்றி மென்மைகூறப்பட்டது. † ஓச்சுதல் எறிதலென்பன இரண்டும் உவமைபற்றிவந்தன. இவையிரண்டு பாட்டானுங் குடிகள் வெருவந்த செய்யாமையது இயல்பு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஆக்கம் - செல்வமானது, நெடிது - நெடுங்காலம், நீக்காமை - (தம்மிடத்து) நீக்காமையை வேண்டுபவர் - விரும்புவோர், கடிதோச்சி - (அக்குற்றத்திற் கேற்பத் தண்டஞ் செய்யத்தொடங்கும் போது) அளவு கடக்கச் செய்வார்போலத் தொடங்கி, மெல்லவெறிக - (செய்யும்போது) அளவுகடவாமற் செய்யக்கடவர், (எ - று).

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அதனை அஞ்சுதற்பொருட்டும், மெல்ல வெறிதல் யாவரும் அஞ்சாமைப்பொருட்டும் ஆம். தண்டனை தொடங்கினவளவில் குறைதல்பற்றி 'மெல்ல' என அதற்குமென்மை கூறப்பட்டது. ஓச்சுதல் எறிதலென்னு மிரண்டும் போலென்னும் உவமைபற்றி வந்தன. இவை இரண்டு பாட்டானுங் குடிகள் அஞ்சுவன வற்றைச் செய்யாமையினது இலக்கணஞ் சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனை அவனது குற்றத்திற்குத்தக்கவாறு தண்டிக்கும்போது அத்தண்டனையைத் தொடக்கத்திற் பெரிதுபோற் காட்டி, முடிவில் எளிதாகச் செய்யும் அரசனிடத்துச் செல்வம் நிலைபெறும் என்பது.

2. Let the king, who desires that his prosperity may long remain with him, make enquiries with strictness, and then punish with mildness.

கூ. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மில்லாக் கெடும்.

பரி:—(இ - ள்.) குடிகள் வெருவிய செயல்களைச்செய்து நடக்கும் வெங்கோலனுமாயின் அரசன் ஒருதலையாகக்கெடுதிற் கெடும், (எ-று).

அதனை - அத்தண்டனையை

† (தண்டனை செய்வது தோலை) ஓச்சுதல் (உயரத்தூக்குதல்) போலவும் எறிதல் (வீசுதல்) போலவும் இருத்தல்பற்றி 'ஓச்சுதல் எறிதல் என்பன இரண்டும் உவமைபற்றி வந்தன' என்று கூறப்பட்டது.


'வெங்கோலன்' என்பது ஈண்டு † வாளா பெயராய்நின்றது. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒருபொருட்கிளவி. ‡ அச்செயல்களுங் ¶ கேடுகளும் முன்னர்க் கூறப்படும்.

தெளி:—(இ - ன்.) (அரசன்) வெருவந்த - (குடிகள்) அஞ்சிய செயல்களை, செய்தொழுகும் - செய்து நடக்கும், வெங்கோலனுயின் - கொடுங்கோலனுயிருந்தால், ஒருவந்தம் - நிச்சயமாக, ஒல்லை - கடிதில், கெடும் - கெடுவான், (எ - று).

'வெங்கோலன்' என்பது இங்கு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தமென்பன (நிச்சயமென) ஒரு பொருளுணர்த்திஞ் சொற்கள். அச்செயல்களும் கேடுகளும் பின்னே சொல்லப்படும.

(க - து.) குடிகள் அஞ்சத்தக்க காரியங்களைச் செய்துவரும் அரசன் விரைவில் கெடுவான் என்பது.

3. The cruel-sceptred king, who acts so as to put his subjects in fear, will certainly and quickly, come to ruin.



ச. இறைகடிய னென்றுரைக்கு மின்னுச்சொல் வேந்த
னுறைகடுகி யோல்லைக் கெடும்.

பரி:—(இ - ள்.) குடிகளான் நம்மிறைவன் கடியனென்று சொல்லப்படும் இன்னுத சொல்லையுடைய வேந்தன் ஆயுளுங்துறைந்து கெல்வழங் \$ கடிதின் இழக்கும், (எ - று).

நெஞ்சுகொதி சொல்லுதலான், இன்னுமை பயப்பதாய சொல்லை

* வெருவந்தசெய்தொழுகும் வெங்கோலன் என்பதன்கண் வெருவந்த செய்தொழுகும் என்னும் அடை (விசேஷணம்) கொடுங்கோன்மையைக் குறித்தலாலே வெங்கோலன் என்பது யாதொரு விசேடமும் மூணர்த்தாது அரசன் என்னும் பெயர் மாத்திரமாய் நின்றது. "பெயர்நிலைக் கிளவியு அகுவும்" என்னுந்தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியற் சூத்திரவுரையில் நச்சினர்க்கினியார் "ஒல்வாள் - கறையடி யானைக் கல்ல, திறைகழிப் பறியா வேலோ னூரே" என்புழிவேலோனென்பது வேலையுடையோனென்னும் பொருள் பெயர்ந்து ஒருபெயர்த்தன்மையாய் நின்றது. 'செழுந்தா மரையன்ன வாட்கண்' என்பதாஉம் அது" என்று வரைந்திருப்பது மிகுணர்தற் பாலதாம்.

† வாளா - சும்மா.

‡ அச்செயல்களும் - குடிகள் அஞ்சதத்தக்க செயல்களும். ¶ கேடுகள் - குடிகளஞ்சத்தக்க செயல்களைச் செய்யுமவனுக்குண்டாகுங் கெடுதிகள்.

\$ கடிதின் - விரைவில்.


'இன்னுச்சொல்' என்ருர். * உறையென்பது முதனிலைத்தொழிற் பெயர். அஃது ஈண்டு † ஆகுபெயராய் உறைதலேச்செய்யும் நாண்மேனின்றது. ‡ அது குறைதலாவது, அச்சொல்லில்லாதார்க்கு உள்ளதிற் சுருங்குதல்.

தெளி:—(இ - ள்.) இறை - (கம்) அரசனுனவன், கடியனென்று - பொல்லாதவனென்று, உரைக்கும் - (குடிகளால்) சொல்லப்படுகிற, இன்னுச் சொல் - இன்பந்தருஞ் சொல்லேயுடைய, வேக்தன் - அரசன், உறைகடுகி - ஆயுளுங்குறைந்து, ஒல்லைக்கெடும் - (செல்வமும்) கடிதினிழப்பான், (எ - று).

(குடிகள்) மனம் வருந்திச் சொல்லுதலால், இன்னுமையை (துன்பத்தை) தருவதாயசொல்லே 'இன்னுச்சொல்' என்ருர். உறையென்பது முதனிலேத் தொழிற்பெயர். அஃது இந்த ஆகுபெயராய் உறைதலேச்செய்யும் நாள்மேல் நின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லாதவர்க்கு உள்ளவளவில் குறைதல்.

(க - து.) குடிகளால் கொடி பவனென்று சொல்லப்படுமரசன் ஆயுளுங்குறைந்துசெல்வத்தையும் விரைவிலிழப்பான் என்பது.

4. The life of that king who is spoken of by his subjects as cruel will be shortened, and he will lose his wealth quickly.



கு. அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து

பரி:—(இ - ள்.) தன்னைக் காணவேண்டுவார்க்குக். ¶ காலமும் அரியனுய்க் கண்டால் ‖ இன்னுத முகத்தினேயுடையானது பேயகண்ட பெரியசெல்வம் பேயாற் காணப்படாற் போல்வதொரு தும்மம் உடைத்து, (எ - று).

உறையென்னும் பகுதி (முதனிலை) உறைதல் (இருத்தல்) என்னுஞ் சொழிலே புணர்த்ததலால் முதனிலைத்தொழிற்பெயராயிற்று. பகுதியளவாய் நின்று தொழிற் பெயர்ப்பொருளே புணர்த்துவது முதனிலைத் தொழிற் பெயரெனப்படும்.

† உறை யென்னும் முதனிலைத் தொழிற்பெயர் உறை (வசித்) தலேசெய்யும் நாளே (ஆயுளே) புணர்த்தினமையின், முதனிலைத்தொழிலாகுபெயராம்.

‡ அது (உறைதலேசெய்யும் நாள்) குறைதலாவது அச்சொல்லில்லாதார்க்கு (பொல்லாதவனென்னுஞ் சொல்லில்லாத அரசர்களுக்கு) உள்ளதிற் சுருங்கல் (உள்ள ஆயுள்நாளில் குறைதல்). பொல்லாதவனென்று குடிகளால் சொல்லப்படுகின்ற அரசன் விரைவிற் கெடுவானென்பது இரண்டாம் பொருளாம்.

¶ காலம் - காணுஞ்சமயம்.

‖ இன்னுதமுகத்தினேயுடையானது - வெறுப்பைக்காட்டுகின்ற முகத்தையுடைய அரசனது.

எனவே, * இவை யிரண்டும் வெருவந்த செய்தலாயின. † இவை செய்வானைச் சாராவார் இன்மையின், ‡ அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன் படாதென்பதுபற்றிப் 'பேஎய்கண் டன்ன திடைத்து' என்றார். காணுதல் - தன்வயமாக்குதல்.

தெளி:—(இ . ள்.) அருஞ்செவ்வி - (தன்னைக்காணவேண்டு வார்க்கு) அரிதாகிய சமயத்தை,(உடையனாய்), இன்னுமுகத்தான் - (கண்டால்) இனிமையில்லாத முகத்தினையுடையவனது, பெருஞ்செல்வம் - பெரிய செல்வமானது, பேய் - பேயால், கண்டன்னது - காணப்பட்டாற் போல்வ தொரு குற்றத்தை, உடைத்து - உடையதாம், (எ - று).

எனவே, இவை இரண்டும் அஞ்சுவனவற்றைச் செய்தலாயின. இவை செய்வானைச் சார்வாரில்லாமையால், அவனதுசெல்வம் தனக்கும் பிறர்க்கும்பயனபடாதென்பதுபற்றிப் 'பேஎய்கண் டன்ன திடைத்து' என்றார். காணுதல் - (பேய் பிருஞ்செல்வத்தைத) தன்வசமாக்குதல்.

(க - து.) குடிகள் தன்னைக் காண்பதற்குச சமயங் கொடாத வனையும், கண்டால் கடுகடுத்த முகத்தையுடைவனுமுள்ள அரசனது செல்வம் பேய்கண்ட செல்வம்போலப் பயன்படாதொழியும் என்பது.

5. The great wealth of him who is difficult of access and stern of countenance, is like that which a devil has obtained

கூ. கடுஞ்சொல்லன் கண்ணில னுயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

பரி:—(இ - ள்.) அரசன் கடியசொல்லையும் உடையனாயக் கண்ணோட்டமும் இலனாயின், அவனது பெரியசெல்வம் நீடுதலின்றி அப்போழ்தே கெடும், (எ - று).

¶ "வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு, ளீட்டங்கட் காமமோ டேழு" எனப்பட்ட விதனங்களுட் கடுஞ்சொல்லையும் மிகுதண்

இவையிரண்டும் - அருஞ் செவ்வியும் இன்னுமுகமும்.

† இவைசெய்வானை - அருஞ்செவ்வியும் இன்னுமுகமுமாயிருக்கின்றவனை.

‡ பொன்காக்கும் பூதம் அப்பொன்னைத் தானுமனுபவியாது பிறர்க்குங்கொடாதது போன்று அருஞ்செவ்வியும இன்னுமுகமுமுடையவரசன் பெருஞ் செல்வத்தைத் தானும் அனுபவியாது பிறர்க்குங் கொடாது வீணே யொழிவான் என்பதாம்.

¶ இதன்பொருள். வேட்டையாடுதல்,கடுஞ்சொற்களைச் சொல்லுதல், அளவுகடந்த தண்டனைசெய்தல், சூதாடுதல், (அதிபாயமாகப்பிறர்) பொரு

டத்தையும் இவர் இவ்வெருவக்த செய்தலுள் அடக்கினர். * கண்-ஆகுபெயர். † இவை செய்தபொழுதே கெடுஞ்சிறுமைத் தன்றாயினுமென்பார் கெடுஞ்செல்வம்' என்றார். நீடுதல் - நீட்டித்தல்.

தெளி:—(இ - ன்.) (அரசன்) கடுஞ்சொல்லன் - கடியசொல்லையும் உடையவனாய், கண்ணிலனாயின் - கண்ணோட்டமும் இல்லாதவனாயின், கெடுஞ்செல்வம் - (அவனது) பெரியசெல்வமானது, நீடின்றி - நீடுதலில்லாமல், ஆங்கே - அப்பொழுதே, கெடும் - அழியும், (எ - று).

''வேட்டம் கடுஞ்சொல் மிகுதண்டஞ் சூதுபொரு, ளீட்டங்கட் காம மோ டேழு'' எனப்பட்ட சப்த விசனங்களுள் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவக்தசெய்தலுள் அடக்கி 'கடுஞ்சொல்லன் கண்ணிலனாயின்' என்றுகூறினர். கண் - கருவியாகு பெயர். இவை செய்தபொழுதே கெடுஞ்சிறுமைய தன்றாயினுமென்பார் 'கெடுஞ்செல்வம்' என்றார். நீடுதல் - நீடித்திருத்தல்.

(க - து.) கடுஞ்சொல்லையும் இரக்கமின்மையையுமுடைய அரசனது செல்வம் விரைவிலழியும் என்பது.

6. The abundant wealth of the king whose words are harsh and whose looks are without kindness, instead of abiding with him, will instantly perish.

எ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

பரி:—(இ - ள்.) கடியசொல்லும் குற்றத்தின்மிக்கதண்டமும் அரசனது பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அராமாம், (எ - று).

‡ கடுமொழியால் தானையும் கையிகந்ததண்டத்தால் தேசமும் கெட்டு முரண் சுருங்கி வருதலின் ‖ அவற்றை அரமாக்கி, திண்ணிதாயினுங் ளேச்சம்பாதித்தல், கள்ளுண்டல், காமநுகருதல் என (விசனங்கள்) ஏழாம் என்பது.

* கண் என்பது கண்ணோட்டத்தை (தாட்சண்ணியத்தை)யுணர்த்தி தலால் கருவியாகு பெயராம். (ஓட்டம்-கண்ணினது காரியம்).

† இவை - கடுஞ்சொல்லும் மிகுதண்டமும்.

‡ கடுமொழியால் சேனையும் கையிகந்த தண்டத்தால் குடிகளும் மனமுவந்து அரசனிடத் தன்பில்லாதிருவர்; அதனால் அவனுக்காண்மை சுருங்கி வருமென்பதாம்.

¶ முரண் - வலிமை. ‖ அவற்றை - கடுமொழியையும் கையிகந்த தண்டத்தையும்.

தேயுமென்றற்கு அடுமரணே இரும்பாக்கினர். எ-டு: தேசவருவகம். அரமென்பதனைத் தனித்தனி கூட்டுக. இவை ஐந்துபாட்டானும் செல்வியின்மை, இன்னுமுகமூடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற் சொல்லல், கையிகந்த தண்டமென்றிவைகள் குடிகளஞ்சும் வினையென்பதனாலும், இவை செய்தான் ஆயுளும் அடுமரணுஞ் செல்வமும் இழக்குமென்பதனாலும் கூறப்பட்டன.

தேவி:—(இ - ன்.) கடுமொழியும் - கடியசொல்லும், கையிகந்ததண்டமும் - (குற்றத்தின்) மிகுந்ததண்டமும், வேந்தன் - அரசனது, அடும் - (பகைவரை) வெல்லுதற்கு ஏற்ற, முரண் - மாறுபாடாகிய (இரும்பிணை), தேய்க்கும்-தேயச்செய்யும், அரம் - அரமாம், (எ - று).

கடிய சொல்லாற் சேணையும் அளவுகடந்த தண்டத்தால் தேசமும் கெட்டு மாறுபாடு சுருங்கிவருதலால் அவ்விரண்டையும் அரமாக்கி, வலியதாளுலும் தேயும் என்பதற்கு அடுமரணை இரும்பாக்கிக் கூறினர். கடுமொழியையும் கையிகந்த தண்டத்தையும் அரமாகவுவகஞ்செய்தவர் அதற்கேற்ப அடுமரணை இரும்பாக வுவகஞ் செய்யாமையினல் இஃதவகதேச வுருவகவணியாம். அரமென்பதனைக் கடுமொழி யென்பதனேடும் கையிகந்த தண்டமென்பதனேடும் தனித்தனிகூட்டிக் கடுமொழியாகிய அரமும் கையிகந்த தண்டமாகிய அரமும் என்றுரைத்துக் கொள்க. இவை ஐந்து பாட்டாலும் சமயமில்லாமை, இன்னுமுகமூடைமை, கண்ணோட்டமில்லாமை, கடுஞ்சொற்சொல்லல், அளவுகடந்ததண்டம் என்ற இவைகள் குடிகள் அஞ்சுந் தொழில்களென்பதும், இவற்றைச் செய்யுமரசன் ஆயுளும் பகைவரைவெல்லும் வல்லமையும் செல்வமும் இழப்பானென்பதும் சொல்லப்பட்டன.

(க - து.) கடியசொல்லும் அளவுகடந்த தண்டனையும் அரசனது வலிமையை யழிக்கும் என்பது.

7. Severe words and excessive punishments will be a file to waste away a king's power for destroying his enemies.

அ. இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

"ஆக்கும் பிரதிபதத்திடனே" என்னுஞ்செய்யுளின் விசேடவுரையில் பிரபோத விவேகநூலார் 'கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்த, னடுமுரண் டேய்க்கு மரம்' என்புழி அரமென்னும் ஒருமைப் பெயரை வாக்கிய பேதமாகத் தனித்தனிகூட்டி முடிப்பதனைத் தேர்வட மிழுப் பார்போலப் பிரத்தியேக பதார்த்தவயமென்பார். இதுவுந் தாராதருவயத்தினடக்கிக்கொள்க" என்று கூறுகின்றனர். "ஒருசொன் னின்றே தனித்தனி யுரைதல்" என்னும் (இலக்கணக்கொத்து) வீதியால் அரம் என்னும் ஒரு

பரி:—(இ - ள்) காரியத்தைப்பற்றி வந்த எண்ணத்தை அமைச் சர்மேல் வைத்து அவரோடு தானும் எண்ணிச்செய்யாத அரசன் அப் () பிழைப்பாற் றன்காரியந் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குற்றத் தின் கண்ணே செலுத்தி * அவரை வெகுளுமாயின் அவன் செல்வம் நா டோறுஞ் சுருங்கும், (எ - று).

அரசர்பாரம் பொறுத்தியற்றலொப்புமையான் அமைச்சரை † இனம் என்றும், ‡ தான் பின் பிழைப்பாதலறிந்த அமையாத அதனை அவர்மேல் ஏற்றிவெகுளின் அவர் வெரீஇ நீங்குவர்; நீங்கவே, அப்பிழைப்புத் தீரு மாறும் அப்பாரம் இனிதியக்குமாறும் இலனுமென்பது கோக்கித் திருச் சிறுகும் என்றும் கூறினர். இதனால் ¶ பகுதியஞ்சும் வினையும், அதுசெய் தான் எய்துங்குற்றமுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) (காரியத்தைப்பற்றி வந்தவெண்ணத்தை) இனத் தாற்றி-மந்திரிகள் மேல் வைத்து, எண்ணுக-(அவரோடு தானும்) எண்ணிச் செய்யாத, வேந்தன்-அரசன், (அப்பிழைப்பினால் தன்காரியந் தப்பியவிட த்து), சினத்தாற்றி - (தன்னைக்) கோபமாகிய குற்றத்திலே செலுத்தி, சிறின் - (அவரைக்) கோபிப்பானாயின், திரு - (அவனது) செல்வமானது, சிறுகும் - (நாடோறும்) சுருங்கும், (எ-று).

இராச்சியபாரத்தைத் தாங்கிச்செலுத்துத லொப்புமையால், மந்திரி களை இனம் என்றும், தான் பின்பு தவறிப்போயதையறிந்து அடங்காதஅத் தவறிப் போயதை அவர் மேல் ஏற்றிக் கோபித்தால் அவர் அஞ்சி நீங்குவர்; நீங்கவே, அத்தவறு நீரும்விதமும் அவ்விராச்சிய பாரத்தை இனிது செலுத்தும்விதமும் இலனுமென்பது கோக்கித் திருச்சிறுகும் என்றும் சொல்லினர். இதனால் மந்திரிகளாகிய பததி யஞ்சுஞ் தொழிலும், அது செய்தான் அடையுங் குற்றமுஞ் சொல்லப்பட்டன.

(க - து.) மந்திரிகளுடன் ஆலோசியாது தான் செய்த காரி யம் தவறியபோது அவர்களைக் கோபிக்கு மரசனது செல்வம் நாளுக்கு நாள் குறைந்துபோம் என்பது.

மைப்பெயர் கடுமொழி யென்பதனோடும் கையிகந்த தண்டமென்பத னோடும் தளித்தளி பிரித்து கூடுதலறிக.

() பிழைப்பு - தவறு.

அவரை - அமைச்சரை. † இனம் - தன் சாதியாயுள்ளவர்.

‡ தான் (அரசனுகிய தான்) பின் பிழைப்பாதல் (தவறிப்போயதை) அறிந்த அமையாத (அடங்கி யிராமல்) அதனை (அத்தவறிப்போயதை) அவர் மேல் ஏற்றி (அமைச்சர்மேல் வைத்து) வெகுளின் (கோபித்தால்) அவர் (அமைச்சர்) வெரீஇ (அஞ்சி) நீங்குவர் என்பது.

¶ பகுதி - இராஜ காரியஞ் செய்வார் கூட்டம்.

8. The prosperity of that king will waste away, who without reflecting on his affairs himself, commits them to his ministers, and when a failure occurs gives way to anger and rages against them.

கூ. செருவந்த போழ்திற் சிறைசெய்பா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

பரி:—(இ - ள்.) செரு வருதற்குமுன்னே தனக்குப் * புகலாவ தோர் அரண் செய்துகொள்ளாத அரசன், அது வந்தகாலத்து ஏமமின்மை யான் வெருவிக் கடிதிற்கெடும், (எ - று).

† பகையை வெருவிச் சேர்ந்தார் நீங்குதலின் தமியனுய்த் தானும் வெருவி அப்பகை வயத்தனுமென்பதாம். இதனுல் ‡ தாணஞ்சும் வினையும் () அது செய்தானெய்தும் பயனுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) சிறைசெய்யா - (போர் வருதற்கு முன்னே தனக்குக் காப்பிடமாவதோர்) அரண் செய்துகொள்ளாத, வேந்தன் - அரசன், செருவந்த போழ்தில் - அப்போர்வந்த காலத்தில், வெருவந்து - (காவல் இல்லாமையால்) அஞ்சி, () வெய்து - விரைவில், கெடும் - கெடுவான், (எ - று).

(செருவந்தபோழ்திற் சிறைசெய்யா வேந்தன்) பகைவர்க் கஞ்சித் தன்னேடு சேர்ந்தவர் நீங்குதலால் தனிபனுகித் தானும் அஞ்சி அப்பகைவர் வசத்தனுவனென்பதாம். இதனுல் தான் அஞ்சும் செயலும் அது செய்தான் அடையும் பயனுஞ் சொல்லப்பட்டன.

(க - து.) தனக்குக் காவலாக வோரரண்செய்துகொள்ளாத அரசன் பகைவரெதிர்த்தகாலத்தில் விரைவிற்கெடுவான் என்பது.

9. The king who has not provided a place of defence for himself, will in times of war be seized with fear and quickly perish.

கூ. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

புகலாவதோர் அரண் - பாதுகாப்பாயுள்ள தொருகோட்டை.

† பகைவர்க்குப் பயந்து தன்னேடு சேர்ந்தவர் நீங்கிப்போதலால் தனித்தவனுய்த் தானும் (அரசனும்) பயந்து அப்பகைவர் வசத்தனுவனென்பதாம்.

‡ தாணஞ்சும் வினை - செருவந்தபோழ்திற் சிறைசெய்யாமை. அது செய்தானெய்தும் பயன் - வெருவந்து வெய்து கெடுதல்.

() அது - அஞ்சத்தக்க காரியம்.

பரி:—(இ - ள்.) *கடுங்கோலனைய அரசன் நீதிநூல் * முதலிய கல்லாதாரைத் தனக்குப் † பகுதியாகக் கூட்டாகிற்கும், ‡ அக்கூட்டம் அல்லது நிலத்திற்கு ¶ மிகையாய பாரம் பிறிதில்லை, (எ - று).

() 'கடுங்கோல்' என்பது ஈண்டுமிக்கதண்டத்தின்மேற்றன்னிதனைச் செய்வான்மேற் றுயிற்று. + அவன் அது செய்தற் கியைவாரை யல்லது கூட்டாமையின் 'கல்லார்ப்பிணிக்கும்' என்றும், †† ஏனையவற்றை யெல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் நிலக்குப் பொறை அதுவல்லதில்லை என்றல் கூறினார். நிலக்கென்பது செய்புள் விகாரம். இதனால் வெருவந்த செய்தலின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கடுங்கோல் - கடுங்கோலனைய அரசன், கல்லார் - (நீதிநூல் முதலியவற்றைக்) கல்லாதவரை, பிணிக்கும் - (தனக்குப் பகுதியாகக்) கூட்டாகிற்பான், அதுவல்லது - அக்கூட்டமல்லாமல், நிலத்து - நிலத்திற்கு, பொறை-அதிகமான பாரம், இல்லை-(வேறு) இல்லை, (எ-று).

'கடுங்கோல்' என்பது இந்த அதிக தண்டனையின்மேல்நில்லாது அவ்வதிக தண்டனையைச் செய்யும் அரசன் மேல் நின்றது. அவன் அது செய்தற்குடன்படுவோரை யல்லது கூட்டாமையால் 'கல்லார்ப் பிணிக்கும்' என்றும், மற்றையவற்றை யெல்லாம் சுமக்கின்றது (நிலத்திற்கு) இயல்பாகலால் நிலக்குப்பொறை அதுவல்ல தில்லை என்றுஞ் சொல்லினர். நிலத்திற்கென்பது செய்புள் விகாரத்தால் நிலக்கு எனவந்தது. இதனால் அஞ்சுவனவற்றைச் செய்தலின் குற்றஞ் சொல்லப்பட்டது.

---

* முதலிய என்றமையின், அறநூல் பொருள்நூல்களையுங் கொள்க.

† பகுதி - அங்கம்.

‡ அக்கூட்டம் அல்லது - கல்லாதவர்களின் கூட்ட மல்லாமல்.

¶ மிகையாய பாரம் - அதிகமான பளுவு.


() கடுங்கோலை (அரசியை) யுடைய வரசனைக் கடுங்கோல் என்று கூறியது குணங் குணியாய உபசாரவழக்காம்; பண்பாகுபெயருமாம்.

+ அவன் (கடுந்தண்டனை செய்யு மரசன்) அது (கடுந்தண்டனை) செய்தற் கியைவாரை யல்லது (செய்வதற்குச் சம்மதித்திருப்பவரை யல்லாமல்) கூட்டாமையின் (சேர்க்காமையினால்).

†† "அறனெஞ்சி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப், புன்சொலுரைப்பான் பொறை" என்னும் குறளின் விசேடவுரையில் "எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற் கரிதென்னுங் கருத்தால் 'அறனெஞ்சி யாற்றுங் கொல்' என்றார்" என்றிருத்தலு மிங்குக் கவனிக்கத்தக்கதாம். ஏனையவற்றை யென்றது மலை ஆறு கடல் முதலியவற்றை.

(க - து.) *கடுங்கோலரசன் நீதிநூல் முதலியவற்றைக் கல்லாதவர்களைத் தனக்குப் பகுதியாகச் சேர்த்துக்கொண்டு குடிகளை வருத்துவான் என்பது.*

10. The earth bears up no greater burden than a cruel sceptre which attaches to itself ignorant men as the ministers of its evil deeds.



இருபதாம் அதிகாரம்.

கண்ணேட்டம்:—*On a Gracious Demeanour.*

பரி:—அஃதாவது தன்னெடு பயின்றுரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. * இஃது அவர்மேற் கண் சென்றவழி † நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் ‡ வேருவந்த செய்யாமையுட் கூறியவதனையே சிறப்புப் பற்றி விரித்துக் கூறுகின்றமையின், ¶ இஃததன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—*அஃதாவது தன்னெடு பழகினவரைக் கண்டால் அவர் சொல்லியவற்றை மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேல் கண் ஒடியவிடத்து நிகழ்வதாகலால், அப்பெயரை யுடையதாயிற்று. இது தாட்சண்ணிய மென்றும் முகதாட்சிண்யமென்றும் சொல்லப்படும். முன்னர் வெருவந்த செய்யாமை யென்னுமதிகாரத்தில் சொல்லிய அதனையே தெளிப்புப்பற்றி விரித்துச் சொல்லுதலால், இஃது அதன்பின வைக்கப்பட்டது.*

க. கண்ணேட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

பரி:—(இ-ள்.) கண்ணேட்ட மென்று சொல்லப்படுகின்ற சிறப்புடைய அழகு அரசர் மாட்டு உண்டாகலான் இவ்வுலகம் உண்டாகா நின்றது, (எ-று).

---

* *இஃது தன்னெடு பழகினவர் கூறியவற்றை மறுக்கமாட்டாமை.*

† *நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று - உண்டாவதாகலால் கண்ணேட்ட மென்னும் பெயரினை யுடையதாயிற்று.*

‡ "*கடுஞ்சொல்லன் கண்ணில னாயின்*" *என்னுங்குறளில் கண்ணேட்டமின்மையை வெருவந்தசெய்தலுடைத்தெனக் கூறியிருப்பதிற்குணர்தற் பாலதாம்.*

¶ *இஃததன்பின் வைக்கப்பட்டது - கண்ணேட்ட மென்னு மதிகாரம் வெருவந்த செய்யாமை யென்னு மதிகாரத்திற்குப் பின்னே வைக்கப்பட்டது.*

'கழிபெருங்காரிகை' என்புழி * ஒருபொருட் பன்மொழி † இவ்வுயிர் நிலத்தது சிறப்புணர நின்றது. ‡ இவ்வழகு அதற்குறுப்பாகலின் ¶ 'உண்மையான்' என நிலமேபோலக் கூறினர். இன்னமை வெருவந்த செய்தலாகலின், அவர் நாட்டு வாழ்வார் புலியை யடைந்த புல்வா யிணம்போன்று மஞ்சாமை பற்றி () இவ்வுலகுண்டு என்றார்.

தெளி:—(இ - ள்.) கண்ணேட்ட மென்னும் - கண்ணேட்ட மென்று சொல்லப்படுகிற, கழிபெருங்காரிகை - மிகவும் பெரிய(சிறப்புடைய) அழகானது, உண்மையான்-(அரசரிடத்து) உண்டாயிருத்தலால், இவ்வுலகு - இவ்வுலகமானது, உண்டு - உண்டாகா நின்றது, (எ - று).

'கழிபெருங்காரிகை' என்ற விடத்துக் கழிபெரும் என்னும் ஒருபொருட்பன்மொழி இவ்வுயிரழகுதி சிறப்புணருமாறு நின்றது இவ்வழகு அவ்வுயிர்க்கு அவயவமாயிருத்தலால் (அவ்வழகிற்கு)'உண்மையான்' எனநிலமெய்யுதலுஞ் சொல்லினர். கண்ணேட்டமில்லாமை வெருவந்த (அஞ்சுவனவற்றைச) செய்தலாகலால், அவர் நாட்டு வாழ்வார் புலியையடைந்த மானினம் போன்று காப்பிடம் பெருமை பற்றி இவ்வுலகுண்டு என்றார்.

(க - து) கண்ணேட்ட மென்னுஞ் சிறப்புடைய அழகினையுடைய அரசரது நாடு குறைவின்றி வாழும் என்பது.

1. The world exists through that greatest ornament of princes, a gracious demeanour.

2. கண்ணேட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை

* ஒருபொருளைக்குறிதது வரும் பல சொற்கள் ஒருபொருட் பன்மொழியெனப்படும். இங்கு அழகெனலும் பொருளதாகிய காரிகையென பதற்கு விசேடணமாய் வந்த கழிபெரும் என்பன சிறப்புஎன்னும்ஒருபொருளைக்குறிதது நின்றமையின், ஒருபொருட் பன்மொழி யாயின வென்க. "ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா" எனலும் கன்னூற் சூத்திர மீண்டுணர்த்தற்பாலதாம்.

† இவ்வுயிரழகுதி - அரசது உயிரின் அழகாக கண்ணேட்டத்தினை;

‡ இவ்வழகு அதற்குறுப்பாகலின் - கண்ணேட்டமென்னும் அழகு அரசருயிர்க்கு உறுப்பாயிருத்தலால்.

¶ கண்ணேட்டமென்னும் கழிபெருங்காரிகை யுண்டாயிருத்தலால் என்று (கண்ணேட்டமென்னும் கழிபெருங்காரிகை) நிலத்திருத்தலுங் கூறினரென்பது.

() உண்மையான் உண்டுவுலகு என்றார் என்றும் பாடமுண்டு.

பரி:—(இ - ள்.) உலகநடை கண்ணோட்டத்தின் கண்ணே நிகழ்வது ஆகலான், அக்கண்ணோட்டமில்லாதார் உளராதல் இந்நிலத்திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கன்று, (எ - று).


உலகநடையாவது ஒப்புரவு செய்தல், புதல்தருதல், பிழைத்தன பொறுத்தலென்றிவை † முதலாயின. ‡ அவை நிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பது பற்றி 'நிலக்குப் பொறை' என்றார். ¶ ஆதற்கென்பது சொல்லெச்சம். இவை யிரண்டு பாட்டானும் கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) உலகியல் - உலக நடையானது, கண்ணோட்டத்து - கண்ணோட்டத்தினிடத்தே, உள்ளது - நிகழ்வதாம், (ஆதலால்), அஃதிலார் - அக்கண்ணோட்டமில்லாதவர், உண்மை - உளராதல், நிலக்கு - இந்நிலத்திற்கு, பொறை - பாரமாதற்கே, (வேறொன்றற்கு அன்று), (எ - று).

உலகநடையாவது உபகாரஞ் செய்தல், சாப்பாற்றல், பிழைத்தன பொறுத்தல் என்ற இவை முதலானவை. அவை உண்டாகாமையினால் கண்ணோட்டமில்லாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பது பற்றி 'நிலக்குப் பொறை' என்றார். ஆதற்கு என்னுஞ் சொல் எஞ்சி (குறைந்து) நின்றமையின், அது வருவிக்கப்பட்டது. இவை இரண்டு பாட்டாலும் கண்ணோட்டத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து) உலகநடையானது அரசாது கண்ணோட்டத்தின் கண்ணே நிகழுகின்றதாதலின், கண்ணோட்டமில்லாத அரசருலகத்திற்குப் பாரமாவர் என்பது.

2. The prosperity of the world springs from the kindliness of kings; the existence of those kings who have no kindliness is a burden to the earth.



கூ. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.

* பிழைத்தன பொறுத்தல் - பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதல்.

† முதலாயின என்றமையின், காட்சிக்கெளியனாதல், கடுஞ்சொல்லனல்லனாதல், எல்லே கடந்து இறைப்பொருள் (வரிப்பணம்), வாங்காமை முதலியவற்றையுங் கொள்க.

‡ அவை - ஒப்புரவு செய்தல் முதலாயின.

¶ பொறை (பாரம்) ஆதற்கு எனப்பாலது பொறை என நின்று ஆதற்கு என்னுஞ் சொல் எஞ்சி(குறைந்து)நின்றமையின், ஆதற்கு என்பது சொல்லெச்சமாயிற்றென்க.

பரி:—(இ - ள்.) பல்ல என்ன பயத்ததாம் பாடற்றெழிலோடு பொருந்தும் இன்றுயின்; அதுபோலக் கல்ல என்ன பயத்ததாம் கண்ணோட்டமில்லாதவிடத்து, (எ - று).

*பண் கண் என்பன சாதியொருமைப் பெயர். * பண்களாவன:—பாலையாழ் முதலிய நூற்று மூன்று. பாடற் றொழில்களாவன:—யாழின் கண்|வார்தல்முதலிய எட்டே, ‡ பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்

("செம்பாலை,படுமலைப்பாலை,செவ்வழிப்பாலை, அரும்பாலை,கோடிப் பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்னும்) இவ்வேழு பெரும்பாலையினையும் முதலடித்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும். அவற்றுள்,செம்பாலையுட் பிறக்கும் பண்கள், பாலையாழ், நாகராகம், ஆகரி, தோடி, கௌடி, காந்தாரம்,செந்துருத்தி, உதயகிரி யெனவிவை. பிறவும் விரிப்பின் உரைபெருகுமாதலின் அவற்றை வந்தவழிக் கண்டு கொள்க" "நாற்பெரும் பண்ணுஞ் சாதிநான்கும், பாற்படு திறனும் பண்ணெனப் படுமே, என்ப" என்றும், "பன்னிருபாலையின் உரு தொண்ணூற் றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்றுமூன்றுதற்குக் காரணமாமெனக் கொள்க" எனறும், "பெருந்தான மெட்டினும் கிரியையெட்டினும் பண்ணிப்படுத்தலாற் பண் என்று பெயராயிற்று" என்றும் ஓலப் பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார் கூறியிருக்கின்றனர்.

† "வார்தலென்பது கூட்டிவிரற் செய்தாழில்; வடித்தலென்பது சுட்டிவிரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்; உந்தலென்பது நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழிபட்டதும் என்றறிதல், உறழ்தலென்பது ஒன்றிடையிடும் இரண்டிடையிட்டும் ஆராயதல்; உருட்டலென்பது இடக்கைச் சுட்டிவிரல் தானேயுருட்டலும்,வலக்கைச் சுட்டிவிரல் தானேயுருட்டலும் சுட்டொடு பெருவிரல் கூட்டியுருட்டலும், இருபெருவிரலும் இயைந்து உடனுருட்டலும் எனவரும். 'தெருட்டலென்பது செப்புங்காலை, யுருட்டி வருவ தொன்றே மற்ற, வொன்றன பாட்டி மடையொன்ற நோக்கின்,வல்லோ ராய்ந்த நூலே யாயினும்,வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாயினும், பாட்டொழிந் தலகினி லெஞ்சிய செய்தையும், வேட்டது கொண்டு விதியுற நாடி" எனவரும்; இவை இசைத்தமிழ்ப்பதினெறு படலத்துட் காணவோத்துட் காண்க." "பட்டடையென்பது நரம்புகளில் இளிக்குப் பெயர்; என்னே? எல்லாப் பண்ணிற்கும் அடிமனையாதலின்" என்றனர் ஓலப்பதிகார அரும்பதவுரை யாசிரியர்.

‡ "பண்ணல் பரிவட்டணை பாய்தல் நரவல், கண்ணிய செலவு வினோயாட்டுக் கையூழ், நண்ணிய குறும்போக்கு என்றவெட்டும்'. பண்ணல் பாட நினைத்தபண்ணுக்கு ஓசை, ஓளை, பகை, நட்பான நரம்புகள் பெயருந்தன்மை மாத்திரையறிந்து வீக்குதல். பரிவட்டணை அவ்வீக்கின நரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் காரணஞ்செய்து நடவிப்பார்த்தல். ஆராய்தல் ஆரோகண அவரோகண வகையால் இசையைத்தெரிதல்.அது சுருதி யேற்றுதல் நரவல் ஆனத்தியிலே நிரம்பப்பாடுதல் செலவு. பாடினைத்த

கண்* எடுத்தல், படுத்தல், கலிதல், கம்பிதம், குடில மென்னும் ஐந்தும், † பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ண மூதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடியையாதவழிப் பண்ணுற் பயனில்லாதவாறு போலக் ‡ கண்ணேட்டத்தியையாதவழிக் கண்ணுற் பயனில்லையென்ப தாம். கண் சென்ற வழி நிகழ்தல்பற்றி அதனை யிடமாக்கினர். இதனிக்கட் கண்ணென்பதனைக் () 'கண்ணகன்ஞாலம்'' என் புழிப்போலக் கொள்க.

தேளி:—(இ - ள்.) பண் - இசையானது, பாடற்கு - பாடற்றொழி லோடு, இயைபின்றேல் - பொருத்தமில்லையாயின், என்னும் - என்னபய னுடையதாம், (அதுபோல), கண் - கண்ணானது, கண்ணேட்ட மில்லாத கண் - கண்ணேட்ட மில்லாத விடத்து, என்னும் - என்ன பயனுடைய தாம், (எ-று).

பண் கண் என்பன ஈறுதோன்றாத சாதியொருமைப்பெயர். பண்களா வன:—பாலையாழ் (வீணை) முதலிய நூற்று மூன்று. பாடல் தொழில்களா வன:—யாழினிடத்து வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல்,

---

வண்ணத்திற் சந்தத்தை விடுதல் வீணாயாட்டு. வண்ணத்திற்செய்தபாடலெ ல்லாம் இன்பமாகப்பாடுதல் கையூழ். குடகச்செலவுமாகுளாறு செலவுமாகப் பாடுதல். குறும்போக்கு" என்று கச்சினார்க்கினியார் சிவகசிந்தாமணி-காந் தருவதத்தையாரிலம்பகம் "நிலத்தொழில்" என்னுஞ் செய்யுளின் வீசேட வுரையிற் கூறினர்.

"எடுத்தல்பாட் டிச்சமாம் எண்படுத்தல் மந்தம், தடுத்த கலிதல் சம மாம் - தொடுத்தியன்ற, தன்னாத கம்பிதந் தானடுக்கல் நற்குடிலம், உள் வாங்கிப் பாட லுணர்" என்பதிங்கறியத்தக்கதாம்.

† "சொல்வகை நான்கு வகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என; சுண்ணம் நான்கடியான் வருவது, சுரிதகம் எட்டடியான் வருவது, வண்ணம் ஞான்கடியான் வருவது, வரிதகம் மூப்பத்திரண்டடி யான் வருவது; என்னை? 'சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி, வண்ணநா ஞான்கு வரிதக மெண்ணுன்கென், றெண்ணிய வடித்தொகை பெய்தவும் பெறுமே' என்றாகலின். வண்ணம் ஒருவகையான் மூன்றுவகைப்படும்; பெருவண்ணம் இடைவண்ணம், வனப்புவண்ணமென; அவற்றுள், பெரு வண்ணம் ஐஞ்ஞ்வரும்; இடைவண்ணம் இருபத்தொன்றுவரும்; வனப்பு வண்ணம் நாற்பத்தொன்பதாய்வரும்" என்று அடியார்க்கு நல்லார் சிலப் பதிகார வுரையில் கூறினர்.


‡ "ஒன்று நரம்பென்கோ வொன்றுத வெண்பீன்கோ, இன்றசை தானென்கோ யாதென்கோ - மென்றொடையாழ், பண்ணேட்டு மின் சொற் பிணைத்தோளாய் சேர்ந்தவர்பாற், கண்ணேட்ட மில்லாத கண்" என்று பாரதிவெண்பா கூறுகின்றது.

() திருகோகம் சடவுள்வாழ்த்து. இதன்பொருள். இடமகன்ற பூமி என்பது.

தெருட்டல், அன்னல், பட்டடை என்னும் எட்டும்; பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னும் எட்டும்; கண்டதற்கினிடத்து எதிர்தல், பகிர்தல், கலிதல், கம்பிதல், குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ண முதலியவண்ணங்கள் எழுபத்தாறுமாம். இப்பாடற்பிரமிழ்களுடன் பொருந்தாத வீடத்துப் பண்ணல்(இசையினல்)பயனில்லாதவிதம் போலக் கண்ணேட்டத்துடன் பொருந்தாத விடத்துக் கண்ணல் பயனில்லை என்பதாம்.(தாட்சண்ணியம் ஒருவாமல்) கண்சென்ற விடத்து உண்டாவதாயிருத்தலால் அக்கண்ணே (தாட்சண்ணியத்திற்கு) இடமாக்கினர். 'இல்லாத கண்' என இறுதியிலுள்ள கண்ணென்பது இடம் என்னும் பொருளதாய் நின்றது.

(க - து.) தாட்சண்ணிய மில்லாதகண் பயனுடையதாகாது.

3. Of what avail is a song, if it be not fit to be sung? What is the value of eyes in which there is no kindness?



ச. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினேற்
கண்ணேட்ட மில்லாத கண்.

பதி:—(இ - ள்.) கண்டார்க்கு முகத்தினின்றும் உளபோன்றேன்றல் அல்லது வேறென்னடையினைச் செய்யும், அளவிறவாத கண்ணேடுதலையுடைய வல்லாத கண்கள், (எ - று).

* தோன்றல் அல்லதென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. † கழிகண்ணேட்டத்தினிக்குகற்கு, 'அளவினல்' என்றார். ‡ ஒரு பயனையுஞ் செய்யாவென்பது குறிப்பெச்சம்.

தெளி:—(இ - ன்.) அளவினல் - தகுமளவாக (அளவுகடவாத), கண்ணேட்டம்-கண்ணேடுதலை, இல்லாத - (உடையன) அல்லாத, கண்-கண்கள்,(கண்டார்க்கு), முகத்து-முகத்தினிடத்து, உளபோல்-உள்ளனபோல,

* உளபோல் என்பது தோன்றல் அல்லது என்னுஞ் சொற்களை வேண்டி நிற்றலால் 'தோன்றல் அல்லதென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன' என்று கூறப்பட்டது. ஒருபதம் தன்னை முடிப்பதொரு பதம் 'இல்லாத வழி முடிவு பெறுது நிற்றல் அவாய்நிலையெனப்படும்.

† கழிகண்ணேட்டம் - செய்யவேண்டிய அளவிற்கு மிஞ்சிய தாட்சண்ணியம்

‡ 'எவன் செய்யும் என்ற' கூறினமையின், அளவினற் கண்ணேட்ட மில்லாத கண் ஒரு பயனையுஞ் செய்யா என்பது குறிப்பாய் எஞ்சி (குறைத்து) நின்றது. குறிப்பாயறியுமாறு குறைத்து நிற்கும் பொருள் குறிப்பெச்சமெனப்படும். எச்சம் - குறைவு.

(தோன்றுதல் அல்லாமல்), எவன் செய்யும்- (வேறு) என்னபயனைச் செய்யும், (எ - று).

தோன்றுதல் அல்லாமலென்னுஞ் சொற்கள் அவாய்நிலையால்வந்தன. அளவுகடந்த கண்ணோட்டத்தினின்றும் நீக்குவதற்கு 'அளவினல்' என்றார். (அளவினற் கண்ணோட்டமில்லாத கண்கள்) ஒருபயனையுஞ் செய்யாவென்பது குறிப்பெச்சம்.

(க - து.) தாமளவாகத் தாட்சண்ணியஞ் செய்தலில்லாத கண்களால் யாதொரு பயனுமில்லை என்பது.

4. Beyond appearing to be in the face, what good do they do, those eyes in which there is no well-regulated kindness ?

நி. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்

பரி:—(இ - ள்.) ஒருவன் கண்ணிற்கு அணியுங்கலமாவது கண்ணோட்டம்; † அக்கலமில்லையாயின், அஃதறிவுடையாரால் புண்ணென்றறியப்படும், (எ - று).

‡ வேறணிகலம் இன்மையின் 'கண்ணிற் கணிகலம்' என்றும், கண்ணைத் தோன்றிலும் நோய்களாலும் ¶ புலன்பற்றலாலும் § தியர்வினைத்

* "கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம்" என்பது திரிகடுகம்.

† அக்கலமில்லையாயின் - கண்ணிற்குக் கண்ணோட்டம் (தாட்சண்ணியம்) என்னும் ஆபரணமில்லையாயின்.

‡ கண்ணிற்கு கண்ணோட்டமல்லாது வேறுபரணமில்லை யென்பது "மின்னுமணி, பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக், காணுங் கண் ணெக்குமோ காண்" என்று கன்னெறி கூறுவதாலு மறிதற் பாற்றும்.

¶ புலன்பற்றலாலும் - விஷயங்களை யறிதலாலும். புலல் (நீர்) பற்றலாலும் என்றும் பாடமுண்டு.

[புலி முதலியவற்றைக் கண்டபோதும், தன்னை வருத்தும் பகைவரைக் கண்டபோதும், தனக்குத் துரோகம் செய்த மனைவி முதலாயினரைக் கண்டபோதும், அநீதியாகப் பிறரிடத்திற்போன தனதுபொருளைக் கண்டபோதும், அநீதிமான்களைக் கண்டபோதும் தன்பமுண்டாவதால் புலன் பற்றலும் தியர்வினைத்த லாயிற்றென்க].

[புலன் - உருவம், சையோகம், விபாகம், எண்ணீதலிய விஷயங்கள்; பற்றல்—உருவ முதலியவற்றை யறிதல்].

§ தியர் வினைத்தல் - தின்பத்தை யுண்டாக்குதல். [கண்ணோட்டமில்லாதகண் கண்ணுற்றதோன்று மாயினும் அது நோய்களினுலும் விஷயங்களைப் பற்றுவதாலும் தன்னையுடையவனுக்குத் தின்பத்தை யுண்டாக்கு மென்பதாம்].

தல் நோக்கிப் 'புண்ணென்றுணரப்படும்' என்றுங் கூறினர். இவை மூன்று பாட்டாலும் ஓடாதுநின்ற கணணின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) கண்ணிற்கு-(ஒருவனது) கண்ணிற்கு, அணிகலம்-அணியும் ஆபரணமாவது, கண்ணேட்டம்-தாட்சணணியமாம், அஃதின்றேல்-அவ்வாபரண மில்லையாயின், (அக்கண்), புண்ணென்று—, உணரப்படும்-(அறிவுடையவரால்) அறியப்படும், (எ-று).

கண்ணிற்குக் கண்ணேட்டமன்றி வேறுபரணமில்லாமையால் (கண்ணேட்டம்) 'கண்ணிற்கணிகலம்' என்றும், (கண்ணேட்டமில்லாதகண்) கண்ணுப்பீளைநீரினுலும் நோய்களாலும் பலன்களைப் பற்றுதலாலும் தியர்வீசுதலை நோக்கிப் 'புண்ணென்றுணரப்படும்' என்றும் சொல்லினர். இவைமூன்றுபாட்டாலும் கண்ணேட்டஞ்செய்யாதுநின்றகண்ணின் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க-று) தாட்சண்ணியமென்றும் ஆபரணமில்லாதகண் புண்ணுமென்றிவை கண்ணுக்குவன்பது.

5. Kind looks are the ornaments of the eyes; without these they will be considered to be merely two sores.

மண்ணேடியைந்த மரத்தனையர் கண்ணேணை
டியைந்துகண் ணேடா தவர்.

பரி:—(இ-ள்.) †ஓடாதநீரிய கரிணைடு பொருதகிவைத்து அஃதோடாதவர் (இயங்காநின்றாராயினும் மாணைடு பொருந்தி நிற்கின்ற மரத்தினையொப்பர், (எ-று)

† 'ஓடாதவர்' என்புழிச் சினையினை முதன்மேனின்றது. ‡ மாமும் கண்ணிடையைத்து கண்ணேடாமையின், இதுதொழிலுவமம். ¶ இதனைச்

ஓடுதற்குரிய - கண்ணேட்டஞ் செய்வதற்குரிய.

† 'ஓடாதவர்' என்றவிடத்து (கண்ணுடைய) சினையி (உறுப்பி) னது ஓடாமை (தாட்சண்ணியங் கொள்ளாமை) யென்னுந் தொழில் முதன்மேல் (அக்கண்ணையுடையவர் மேல்) நின்றதெனவது. "சினையினை சினையொடு முதலொடுஞ் சிவறியும்" என்னும் சூத்திரம் இங்கறியத்தக்கதாம்.

‡ மாமும் கண்ணே (கருவியோ) டியைத்து (பொருந்தி) கண்ணேடாமையின் (தாட்சண்ணியங் கொள்ளாமையால்), இது தொழிலுவமையணியாம். தொழிலியுவமானமாகச் சொல்வது தொழிலுவமையனியாம். இங்குக் கண்ணேடாமை தொழில். மாங் கண்ணேடு கூடியிருந்தும் கண்ணேடாதிருத்தலேபோலத தாட்சண்ய மில்லாதவர் கண்ணேடு கூடியிருந்தும் கண்ணேடாதிருக்கின்றன ரென்பது திரண்டபொருள் எனவே, கண்ணேட்டமில்லாதவர் "நீட்டோலை வாயாகின்றுங் குறிப்பறிய, மாட்டாதவனன் மாம்" எனபதுபோல மாமாவ ரென்பதாயிற்று.

¶ இதனை-மண்ணேடியைந்த மரத்தனைய ரென்பதற்கு.

* சுதைமண்ணேடு கூடிய மரப் † பாவையென் றுரைப்பாருமுளர். ‡அஃ துரை யன்மை () காணப்படுங் கண்ணனன்றி ¶ அதனுண் மறைந்து நிற் கின்ற †† ஒருசாருள்ளீட்டாற் கூறினமையாலும், ‡‡ "மரக்கண்ணே மண் ணுள்வாய் கண்ணென்-றிரக்கண்டாய்" என்பதனுமறிக.

தெளி:—(இ - ள்.) கண்ணேடு - (ஒருசாற்சார்ந்த) கண்ணேடு, இயை ந்து - பொருந்தியிருந்தும், கண்ணேடாதவர் - அக்கண்ணேடுதலில்லாதவர், (சஞ்சரிக்கின்றவராயிருந்தாலும்), மணமேறி—, யியைந்த - பொருந்திநிற்கி ன்ற, மாத்தினையர் - மரத்தினையொப்பர், (எ - று).

'கண்ணேடாதவர்' என்றவிடத்தும் உவமையாகிய கண்ணினது ஒரு தல்வினை 'ஓடாதவர்' என்னும் முதல் மட்டில் நின்ற † மரமும் கண்ணேடு கூடிக்கண்ணேடாமையால், இது தொழிலுவமையணியாம்.

(க - து.) தாம் கண்பாலில்லாதவரை யாதரித்து நோயாமை.

6. They resemble the trees of the earth, who, although they have eyes, never look kindly on others.

* சுதை மண் - கண்ணேடியும் மண்ணும் கலந்தரைத்த சாந்து.

† பாவை - பதுமை (பொம்மை)

‡ அஃ தரையன்மை - அவ்வாறு கூறுதல் உரையாகாமை.

() காணப்படுங் கண்ணனன்றி அதனுண் மறைந்து நிற்கின்ற ஒரு சா ருள்ளீட்டாற் கூறினமையாலும் என்பது சிலபிரதிகளில்லை.

¶ அதனுள் - அக்கண்ணினுள்.

†† ஒருசா ருள்ளீட்டால் - ஒருவகையான தாட்சண்ணியம்பற்றி.

‡‡ முத்தொள்ளாயிரம். நிதன் மபாருள். மண்ணுலகத்தைப் யரசாட்சி செய்யும் அரசரது கண் மரத்தினது கணேலே என்று நிலைத்து யாசித்தலே மேற் கொண்டாய் என்பது.

"வரக்கண்டு நாணுதே வல்லேபா னெஞ்சே
மரக்கண்ணே மண்ணுள்வாய் கண்ணென்-றிரக்கண்டாய்
வாளுழுமவ வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென்
றோளுமுவர் தோன்றத் தொழுது". என்பது முத்தொள்ளாயிரம்.

பரிமேலழகர் மறுப்பின் விபரமாவது:—காணப்படுங்கண்ணலன்றி அக் கண்ணினுள் மறைந்து கிடக்கும் தாட்சண்ணியத்தைப்பற்றிக்கூறினமையா லும், 'மரக்கண்ணே மண்ணுள்வார் கண்' என்று பிரயோகமருப்பதாலும், 'மண்ணே டியைந்த மரத்தினையர்' என்பதற்குச் சுதைமண்ணேடுகூடிய மரப் பாவை யொப்பரென்றுரை கூறுதல் பொருந்தாதென்பது. எனவே, மண் ணேடியைந்த மரத்தினையர் என்பதற்குச் சுதைமண்ணேடுகூடிய மரப்பாவை யொப்பரென்று பொருள் கூறுதல் யாதொருபொருத்தமும் மில்லாது நின்ற தாயிற்றென்க.

எ. ‡ கண்ணேட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணேட்ட மின்மையு மில்.

பரி:—(இ - ள்) கண்ணேட்டமில்லாதவர் கண்ணுடையரும் அல்லர்; கண்ணுடையவர் கண்ணேட்டமிலாதலும் இல்லை, (எ - று).

*கண்ணுடையராயின் † காட்சிக்கண்ணே அஃதோடும் என்பது பற்றிக் 'கண்ணேட்டமில்லவர் கண்ணிலர்' எனக்கூறிப் பின் அதனை ¶ எதிர்மறை முகத்தான் விளக்கினர். * உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. இவை யிரண்டு பாட்டானும் கண்ணேடாதாரது இழிபு கூறப்பட்டது.*

தெளி:—(இ - ள்.) கண்ணேட்டமில்லவர் - கண்ணேடுதலில்லாதவர், கண்ணிலர் - கண்ணுடையவருமல்லர், கண்ணுடையார் - கண்ணுடையவர், கண்ணேட்டமின்மையும் - (கண்ணிலராதலன்றி) கண்ணேடுதலிலராதலும், இல்-இல்லை, (எ-று).

கண்ணுடையவராயிருந்தால் காட்சியினிடத்தே அகக்கண் ஓடும் என்பது பற்றிக் 'கண்ணேட்டமில்லவர் கண்ணிலர்' என்றுகூறிப் பின்பு அக்கண்ணேட்ட மில்லாமையை யெதிர்மறை வாயிலாகக் 'கண்ணுடையார் கண்ணேட்ட மின்மையுமில்' என்று விளக்கினர். இன்மையுமென்ற வும்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. இவை யிரண்டுபாட்டாலும் கண்ணேட்டமில்லாதவ ரது இழிபு சொல்லப்பட்டது.

(க - து.) *காட்சண்ணிப மில்லார் குரு—ரும் அஃதுடையார் கண்ணுடையவருமாவர் என்பது.*

7. Men without kind looks are men without eyes; those who really have eyes are also not without kind looks.

ஆ. கருமஞ் சிதையாமற் கண்ணேட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

பரி:—(இ - ள்.) முறைசெய்தலாகிய தந்தொழிலழியாமற் கண்ணேடவல்ல வேந்தர்க்கு உரித்தாந் தன்மை யுடைத்து இவ்வுலகம்.

‡ *யாண்டுத்தீயில்லை, ஆண்டுப்புகையில்லை; யாண்டுப் புகையுண்டு, ஆண்டுத் தீயுண்டு என்பதுபோல யாணடுக்கண்ணேட்டமில்லை, ஆண்டுக்கண்ணில்லை; யாண்டுக்கண்ணுண்டு, ஆண்டுக்கண்ணேட்டமுண்டெனக்கொள்க. இதனால் கண்ணேட்ட (தாட்சண்ய) மில்லாதவர் கண்ணில்லாதவ (குருட) ராவர்: கண்ணுடையவர் கண்ணேட்டமுடையவராவரென்பது நன்கு விளங்கும்.*

† *காட்சிக்கண்ணே அஃதோடும் - தன்னுடன் பழகினவரைக் கண்டவிடத்து அக்கண் தாட்சண்ணியமுடையதாயிருக்கும்.*

¶ *கண்ணிலர் என்பதற்கு எதிர்மறை கண்ணுடையார்.*

இன்மையும் ஏன்னும் உம்மை கண்ணிலராதலன்றி யென்பதைத் தழுவிநிற்றலின், இறந்தது தழுவிய எச்சவும்மை யாயிற்று.

தம்மொடு பயின்றார் பிறரை யிடுக்கண்செய்தழி அவரைக் † கண் ணேடி ஒறுதார்க்கு ‡ முறை சிதைதல் மேல் ¶ "ஓர்ந்துகண் ணேடாது" என்ற முறையிலக்கணத்தாலும் பெற்றும். முறை சிதையவரும்வழிக் கண் ணேடாமையும் வாராவழிக் கண்ணேடலும் ஒருவற்கியல்பாதலருமையின் கண்ணேட்டவல்லார்க்கு' என்றும், (\ அடவியல்புடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலஞ் சேறலின் 'உரிமையுடைத்து' என்றுங் கூறினர். இதனுற் கண்ணேடுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இவ்வுலகு - இவ்வுலகம், கருமம் - (முறைசெய்த லாகிய தமது) தொழில், சிதையாமல் - அழியாமல், கண்ணேடவல்லார்க்கு- கண்ணேடுதல் செய்யவல்ல அரசர்க்கு, உரிமை - உரியதாந்தன்மையை, உடைத்து - உடையதாம், (எ - று).

தம்மொடுபழகினவர பிறர்க்கு இடுக்கண்செய்தவிட்டது அப்பழகினவ ரைக் கண்ணேட்டஞ்செயது தண்டியாதவரசர்க்கு முறைகெடுதல் முன்னே 'ஓர்ந்துகண் ணேடாது' என்னுங் குறளிற்கூறிய முறை இலக்கணத்தாலும் பெற்றும. முறைகெட வருமிடத்துக் கண்ணேடுதல் செய்யாமையும் முறை கெட வாராதவிடத்துக் கண்ணேடுதல் செய்தலும் ஒருவனுக்குச் சுபாவ மாயிருத்தல் அருமையாகலால் 'கண்ணேடவல்லார்க்கு' என்றும், அச்சுபாவ முடையவர்க்கு உலகமுழுதும நெடுங்காலம் வசப்பட்டுவருதலால் 'உரிமையு டைத்து' என்றும் சொல்லினர இதனுல் கண்ணேட்டஞ் செய்யும் விதம் சொல்லப்பட்டது.

(க - து.) நீதிகவறுவாறு தமக்குரியாரிடத்துச் தாட்சண்ணி யஞ்செய்யவல்ல அரசர்க்கு இவ்வுலக ரெடுங்கால முரிமையுடை யதாகும்.

8. Those kings who are able to show kindness, without injury to their affairs, the world will be all their own.

கூ. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

---

* இடுக்கண் செய்தழி - தன்பஞ்செய்தவிடத்து.

† கண்ணேடி - தாட்சண்ணியஞ் செய்து. ‡ முறை - நீதி.

¶ திருக்குறள் செங்கோன்மை- 1. இதன் பொருள். தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை யாராய்ந்து யாவரிடத்தும் தாட்சண்ணியஞ் செய்யாது நடுவு நிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற்குச் சொல்லி யுள்ளதண்டத்தை யமைச்சர் புரோகிதாகளோடு மாராய்ந்துஅவராய்ச்சிக்கு ஏற்ற வண்ணம் செய்வதே நீதியாம் என்பது.

() அவ்வியல்புடையார்க்கு - நீதிகெட வருமிடத்துத் தாட்சண்ணியங் கொள்ளாமையும் நீதிகெட வாராவிடத்துத் தாட்சண்ணியங் கொள்ளுதலு மாகிய சுபாவமுடையவர்க்கு.

பரி:—(இ - ள்.) தம்மை ஒறுக்கும் இயல்புடையா ரிடத்தும் கண்ணோட்டமுடையராயிக் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது, (எ - று)

'பண்பினர்' என்றதனால் அவர் பயிற்சிபெற்றும். † ஒறுத்தாற்றும் பொறுத்தாற்று மென்பன ஈண்டொருசொன்னீர.

தெளி:—(இ - ள்.) ஒறுத்தாற்றும் - (தம்மை) வருத்தும், பண்பினர் கண்ணும் - இயல்புடையாரிடத்தும், கண்ணோடி – கண்ணோடுதலுடையவ ராய், பொறுத்தாற்றும் - (குற்றத்தைப்) பொறுக்கும், பண்பே - இயல்பே, தலை - (அரசர்க்குத்) தலைமையான வியல்பு, (எ - று).

'பண்பினர்' என்றமையின் அவரது பழக்கம் பெற்றும். ஒறுத்தாற்றும் பொறுத்தாற்றும் என்பன இங்கு ஒருசொற்றன்மையன.

(க - து.) அரசர்க்குத் தலைமையான இயல்பாவது தம்மை வருத்து மிபல்புடையவ ரிடத்தும் தாட்சண்ய முடையவராய், அவர் செய்த குற்றத்தைப் பொறுத்தலாம் என்பது.

9. Patiently to bear with, and shew kindness to those who grieve us, is the most excellent of all dispositions.

கo. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

பரி:—(இ-ள்.) பயின்றார் தமக்கு நஞ்சிடக்கண்டுவைத்தும் ‡ கண்ண மறுக்கமாட்டாமையின், அதனையுண்டு பின்னும் அவரோடு மேவுவர்; யாவரானும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுமவர், (எ - று).

நாகரிகமென்பது கண்ணோட்டமாதல் ¶ "மூன்தை யிருந்து நட்டோர் கொடுப்பி, னஞ்சு முண்பர் நனிநா கரிகர்" என்பதனுமறிக. அரசர் அவ ரை ஒருது கண்ணோடற்பால தம்மாட்டுக் குற்றஞ் செய்துழி யென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

* அவர் - வருத்தும் இயல்புடையவர்.

† ஒறுத்தாற்றும் என்பது ஒறுக்கும் எனவும் பொறுத்தாற்றும் என்பது பொறுக்கும் எனவும் பொருள் தந்தமையின், அவைஒருசொல்லின் தன்மைய வாயின வென்க.

‡ கண்மறுக்கமாட்டாமையின்-தாட்சண்ணியத்தால் தடுக்கமுடியாமை யால்.


¶ நற்றிணை 355. இதன்பொருள். முன்னரிருந்து சினேகிதர்கள் கொடு த்தால் விஷத்தையுஞ் சாப்பிடுவர் மற்றந்த கண்ணோட்டமுடையவர் என்பது. தாட்சண்ணியமுடையவர் தமக்குத் தமது நேசர் விஷங்கலந்த வுணவை யிட் டாலும் அதனை மறுக்காமல் உண்பரென்பது இதன் திரண்ட பொருளாம்.

தெளி:—(இ - ள்.) நயத்தக்க - (யாவராலும்) விரும்பத்தக்க, நாகரிகம்-கண்ணோடுதலே, வேண்டுபவர் - விரும்புவோர், நஞ்சு - நஞ்சை, பெயக் கண்டும் - (பழகினவர் தமக்கு) இடப்பார்த்தும், உண்டு - (கண் மறுக்கமாட்டாமையால் அஞ்ஞானே) உண்டு, அமைவர் - (பின்னும் அவரோடு) பொருந்துவர், (எ - று).

அரசர் அவரைத் தண்டியாது கண்ணோட்டஞ்செய்யவேண்டுவது (அவர் பிறரிடத்துக் குற்றஞ் செய்தவிடத்தன்று) தமக்கிடத்துக் குற்றஞ் செய்தவிடத்து என்பது இவரிரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து) தாடசண்யமுடைய வேந்தர் தம்மோடு பழகினவர் தமக்கு நஞ்சுகலந்த உணவிட்டாலும் அதனையுண்டு அவரோடு பின்னும் நேசிப்பர் என்பது.

10. Those who desire to cultivate that degree of urbanity which all shall love, even after swallowing the poison served to them by their friends, will be friendly with them.



இருபத்தோன்றும் அதிகாரம்.

ஒற்றுடல்:—*On the employment of spies.*

பரி:—அஃதாவது பகை நோதுமல் நட்பேன்னு மூன்று திறத்தாரிடமும் * நிகழ்ந்தன அறிதற்கு † ஒற்றரை ஆளுதல். ‡ மேற்சொல்லிய இலக்கணத்தையுடைய அரசனுக்குத் தன்னுடு செலுத்துங்காலும் பிறர் நாடு கோள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றாராகலின், ¶ அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது பகைவர் அயலார் நட்பினர் என்னு மூன்று திறத்தாரிடத்தும் நிகழ்ந்தனவற்றையறிதற்கு ஒற்றரை ஆளுதலாம். மூன்னர்க்கூறிய இலக்கணமுடையவனும் அரசனைக்குத் தன்னுட்டைக் காக்கும்போதும் பிறர் நாட்டைப்பிடிக்கும்போதும் வேண்டுவனவற்றைக்கூறுகின்றாதலால், அவ்விரண்டு காரியங்களுக்கும் அவசியம் வேண்டுவதாகிய இது (ஒற்றுடல்) முன் வைக்கப்பட்டது.

* நிகழ்ந்தன - நடந்த செயல்களை.

† ஒற்றர் - ஆங்காங்கு நடக்குஞ் செயல்களை மறைந்திருந்தறித்து அறியும் வேவுகாரர். ஒற்றர், சாரணர், வேயர், சாரர், வேவுகாரரென்பன ஒரு பொருட்கிளவி. தூர சு என்று பின்னர்க்கூறுதலால் ஒற்றர் தூதராகாரென்க.

‡ மேற்சொல்லிய இலக்கணம் என்றது இறைமாட்சி முதல் கண்ணோட்டமிறுதியாயுள்ள அதிகாரங்களில் கூறியுள்ள இலக்கணங்களை.

¶ அவ்விருமைக்கும் - அரசன் தனது நாட்டினை யாளுதலும் பிறரது நாட்டினைப்பிடித்தலும் ஆகிய அவ்விரண்டற்கும்.

க. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுங்
தெற்றென்க மன்னவன் கண்.

பரி:—(இ - ள்.) ஒற்றும் புகழமைந்த நீதிநூலுமாகிய இவையிரண்டனையும் அரசன் தன்னிரண்டு கண்ணுமாகத் தெளிக, (எ - று).


ஒற்று, தன்கண் செல்லமாட்டாத பரப்பெலாஞ் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் உணர்த்தலானும், நூல், அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளெல்லாஞ் சொல்லி யுணர்த்தலானும் இவையிரண்டனையுமே தனக் † கூனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டு ஒழுகுக என்பதாம். ஒற்றறனே ஒற்றென்றார்; வேந்தனேவேந்தென்றாற்போல. தெற்றென்க என்பது தெற்றென் என்பது ‡ முதனிலைபாக வந்தவியங்கோள். அது ¶ தெரிறென என்னுஞ் செயவெனெச்சத்தானறிக. இதனுல் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மன்னவன் - அரசன், ஒற்றும் - ஒற்றனும், உரைசான்ற-புகழமைந்த, நூலும் - (நீதி) நூலும், (ஆகிய), இவை யிரண்டும் - இவை யிரண்டனையும், கண் - (தன்னிரண்டு) கண்ணுமாக, தெற்றென்க - தெளியக்கடவன், (எ - று).

ஒற்று (ஒற்றனுவன்), தன்கண்செல்லமுடியாத இடமெல்லாம்போய்க் கண்டு அங்கு நிகழ்ந்தவற்றை யெல்லாம் அறிவித்தலாலும், நீதிநூல், அந்நிகழ்ந்தனவற்றிற்குத் தன்னறிவுசெல்லமுடியாததொழில்களையெல்லாஞ்சொல்லி அறிவித்தலாலும், (ஒற்றும் உரைசான்ற நூலும் என்னும்) இவ்விரண்டனையுமே (அரசன்) தனக்கு வனக்கண்ணும் ஞானக்கண்ணுமாக நிச்சயித்துக் கொண்டு நடக்கக் கடவனென்பதாம். வேந்தனே வேந்து என்று பண்பாகு பெயராற் கூறுவது போன்று ஒற்றனே ஒற்று என்று தொழிலாகு பெயராற் கூறினார். தெற்றென்க என்பது தெற்றென் என்னும் இடைசசொல் அடியாகப் பிறந்த வியங்கோள் வினை முற்று. தெற்றென் என்பதுபகுதியாதலைத் தெற்றென என்னும் செய வெனெண்ணும் வினையெச்சத்தாலறிக. இதனுல் ஒற்றனது சிறப்புச்சொல்லப்பட்டது. ஒற்று - முதனிலைத் தொழிற் பெயர். ஒற்றுதல்-வேடமாறிச்சென் றாராய்ந்தறிதல்.

(க - து) அரசனுக்கு ஒற்றன் வனக்கண்ணும் நீதிநூல் ஞானக்கண்ணுமாம் என்பது.

1. Let a king consider as his eyes these two things, a spy, and a book of laws universally esteemed.



"உளக்க ணீதிநூ லாக வொற்றே வெளிக்கண் ணெனவிடித்து" என்று விநாயகபுராணம் கூறுகின்றது.

† **வனக்கண்** - மாமிச வடிவான புறக்கண். **ஒற்று** - **வனக்கண்ணும்; நீதிநூல்** - **ஞானக்கண்ணும்.**

‡ *முதனிலையாகவந்த* - *பகுதியடியாகப்பிறந்த*

¶ **" தெற்றென, அல்ல புரிந்தார்க் கதுதேறன்மி" என்பது நான்மணிக்கடிகை.**

உ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

பரி:—(இ - ள்.) எல்லார்க்கண்ணும் நிகழ்வன எல்லாப்பிறையும் நாடோறும் ஒற்றன் விரைந்தறிதல் அரசனுக்கு உரியதொழி ல், (எ-று).

எல்லார்க்கும் என்றது மூன்று நிறத்தாரையும். நான்காவது எழாவதன் பொருட்கண் வந்தது. † நிகழ்பவை யெல்லாமென்றது நல்லவுந் தீயவுமாய சொற்களேயுஞ் செயல்களேயும் ‡ அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத் ¶ தக்கவழியாகத் தேறுதலாகச் செய்யவேண்டுதலின் "வல்லறிதல்'என்றும், o அவ்விருதொழிற்கும் அறிதல் காரணமாகலின், அதனையே உபசாரவழக் கால் 'தொழில்' என்றுங் கூறினர். ஒற்றனென்பது அதிகாரத்தான்வந்தது. இதனால் ஒற்றினுய பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) எல்லார்க்கும் - எல்லாரிடத்தும், நிகழ்பவை யெல் லாம் - நடப்பனவெல்லாவற்றையும், எஞ்ஞான்றும் - காள்தோறும், வல் லறிதல் (ஒற்றனுல்) விரைந்தறிதல், வேந்தன் றொழில் - அரசனுக்கு உரிய தொழிலாம், (எ - று).

† நிகழ்வன வெல்லாமென்றது என்றும் பாடமுண்டு.

‡ அவை (நல்லவும் தீயவுமாய சொற்களும் செயல்களும்) நிகழ்ந்த பொழுதே (உண்டானகாலத்திலேயே) அவற்றிற்குத் தக்கவழியாக (தகுந்த படியாவது) தேறுதலாக(தெளிந்திருந்தலாவது)செய்யவேண்டுதலின் (செய் யவேண்டியிருத்தலால்) 'வல்லறிதல்' என்று கூறப்பட்டது. [பகைவர் அய லார் சுட்பினர் என்னும் மூன்றுநிறத்தாரிடத்தும் அப்போதப்போ தண்டா கும் நல்லனவும் தீயனவுமாயசொற்களையும்செயல்களையும் அரசன்வேவுகார ரால் உடனுக்குடன் விரைந்தறிந்து அவற்றிற்குத் தக்கவாறு காரியங்களைச் செய்து தெளிந்திருக்க வேண்டுமென்பது கருத்து] இங்கு ஆக என்னும் இடைச்சொல் உறழ்ச்சிப்பொருளில் வந்தது

¶ தக்க அளியாக என்றும் பாடமுண்டு. அளி – கருணை.

o அவ்விருதொழிற்கும் (பகைவர் முதலாயினரிடத் தண்டாய சொற் செயல்களுக்குத் தக்கவாறு செய்தல் தெளிந்திருத்தலென்னுமிருதொழிலைச் செய்தற்கும்) அறிதல் (ஆங்காங்கு நடப்பனவற்றை யரசன் வேவுகாரர்வா யிலாகத்தெரிந்து கொள்ளுதல்) காரணமாகலின் (காரணமாயிருத்தலினுல்) அதனை (அறிதலை)யே உபசாரவழக்கால் 'தொழில்' என்றுங்கூறினர் ஏன்று கூறப்பட்டது. காரணமாகிய அறிதலை அதன்காரியமாகிய தொழிலோ டொற்றுமைப்படுத்தி அறிதல் தொழில் என்று கூறினமையின், இதுகார ணம் காரியமாய வுபசாரவழக்காம். முதல்வேற்றுமையாயுள்ள இரண்டுசொற் கள் ஒருவாக்கியமாய் நிற்குமாயின், அங்கு அவ்விருசொற்களுக்கும் பொருள் ஒன்றேயா மென்பது இங்கறியத்தக்கது வல்லறிதல் வேந்தன் றொழில்என் பதன்கண் அறிதல் என்பதும் தொழில் என்பதும் முதல் வேற்றுமையா யிருத்தலால் அவ்விரண்டும் அபேதமாயின வென்க.

எல்லார்க்கும் என்றது பகைவர் அயலார் நட்பினர் என்னு மூன்று திறத்தாரையும். எல்லார்க்கு மென்னும் நான்கனுருபு எல்லாரிடத்தும் என எழனுருபின் பொருளில் வந்தது; இவ்வாறு வருதல் வேற்றுமை மயக்கமெனப்படும் நிகழ்பவை யெல்லாமென்றது நல்லனவும் தீயனவும் ஆகியசொற்களையும் செயல்களையும். அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத்தக்க வழியாகவாவது தேறுதலாகவாவது செய்யவேண்டுதலால் 'வல்லறிதல்'என்றும், அவ்விருதொழிலுக்கும் அறிதல் காரணமாகலால், அவ்வறிதலையே உபசார வழக்கால் 'தொழில்' என்றுஞ் சொல்லினர். ஒற்றனுல் என்பது ஒற்றுடலென்னும் அதிகாரத்தால் வந்தது. இதனுல் ஒற்றினுலாகிய பயன் சொல்லப்பட்டது.

(க - து.) அரசனது தொழில் எல்லாரிடத்தும் நிகழும் சொற்களையும் செயல்களையும் ஒற்றனுல் விரைந்தறிதலாம் என்பது.

2. It is the duty of a king to know quickly what all happens, at all times, amongst all men

-:-

கூ. ஒற்றினு னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

பரி:—(இ - ள்.) ஒற்றினுனே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றிவித்து † அவற்றுன் எய்தும் பயனே யாராயாத அரசன் வென்றியடையக்கிடந்தது வேறொரு தெறியிலில்லை, (எ - று).

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்களியனுதல் பிறிதிற்றீராமையின் 'கொற்றங்கொளக்கிடந்ததில்' என்றார். ‡ இதற்குக் கொளக்கிடந்த தொரு வென்றியில்லையென் றுரைப்பினு மமையும். இதனுல் ¶ அத்தொழில் செய்யாதவழி வருங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒற்றினுல் - ஒற்றனுலே, ஒற்றி - (பகைவர் அயலார் நட்பினரென்னும் எல்லாரிடத்தும் நிகழ்ந்தனவற்றை) அறிந்துவரச் செய்து, பொருள் – (அந்நிகழ்ந்தனவற்றுல் அடையும்) பயனே, தெரியா - ஆராய்ந்தறியாத, மன்னவன் - அரசன், கொற்றங் கொளக்கிடந்தது-வெற்றியடையக்கிடந்தது, இல் - (வேறெருவழி) இல்லை, (எ - று).

"ஒற்றினு லொற்றிப் பொருடெரிதன் முன்னினிதே" என்பது இனியவை நாற்பது.

† அவற்றுன் எய்தும் பயனே—(பகைவர் முதலாயினரிடத்து) உண்டாயவற்றுல் அடையும் பிரயோசனத்தை.

‡ இதற்கு - (கொற்றங் கொளக்கிடந்த தில் என்பதற்கு), கொள்ளக்கிடந்ததொரு வெற்றியில்லை யென்று பொருள் கூறினுலும்பொருந்தும். இங்ஙகுக் கொற்றங் கொளக்கிடந்த தில் என்பதற்குக் கொளக்கிடந்தது கொற்றம் இல் என்றன்வயமாம்.

¶ அத்தொழில் - ஒற்றினு னொற்றிப் பொருள் தெரிதல்.

அங்ஙிகழ்ந்தனவற்றையும் அவற்றுலடையும் பயனையும் **அறியாமல்** பகைவர்க்கு எளியனுதல் (ஒற்றனால் நீங்குவதன்றி) வேறென்றனால் (அரசனுக்கு) நீங்காமையால் (ஒற்றினை ஞெற்றிப் பொருடெரியா மன்னவன்) 'கொற்றங்கொளக்கிடந்ததில்' என்றார். இதனால் அரசன் அத்தொழில் செய்யாத விடத்து வருங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து) ஒற்றனால் பகைவர் முதலாயினரிடத்து நிகழ்ந்தனவற்றை யறியாத அரசன் வெற்றிபடையான் என்பது.

3. There is no way for a king to obtain conquests, who knows not the advantage of discoveries made by a spy.

ச. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றுங்
கனைவரையு மாராய்வ தொற்று.

பரி:—(இ - ள்.) தங்காரியஞ்செய்வார் சுற்றத்தார் பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற் செயல்களான் ஆராய்வானே ஒற்றனுவான், (எ - று).

தம்மென்றது அரசனுெளப்படுத்தி. அவனுக்குக் காரியஞ் செய்வார் செய்வனவும், சுற்றத்தார் † தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செய்வனவும், பகைவர்•‡ தன் அற்றம் ஆராய்தலும் ¶ மேற்றேறப்படுதலும் முன்னிட்டுத் $ தன்னிடத்துச் செய்வனவு மறிந்து o அவற்றிற் கேற்றன செய்யவேண்டுதலின், () இம்மூவகையாரையும் எஞ்சாமல் ஆராயவேண்டுமென்பார் 'அனைவரையு மாராய்வ தொற்று' என்றார்.

தெளி:—(இ - ள்.) தம் - தம்முடைய, வினைசெய்வார் - காரியஞ்செய்வார், சுற்றம் - சுற்றத்தார், வேண்டாதார் - பகைவர், என்ற - என்று சொல்லப்பட்ட, அனைவரையும் - யாவரையும், ஆராய்வது - (சொல்லாலும் செயலாலும்) ஆராய்பவனே, ஒற்று - ஒற்றனுவான், (எ - று).

ஒற்றனை அரசனுெடு உளப்படுத்தித் தம் என்று கூறப்பட்டது. அவ்வரசனுக்குக் காரியஞ் செய்வார் செய்வனவற்றையும், சுற்றத்தார் தன்னிடத்தும்

வினைசெய்வார் - அரசனுக்குரிய காரியஞ் செய்யும் அமைச்சர் முதலாயினோர்.

† தன்னிடத்தும் - ஒற்றனுகிய தன்னிடத்தும்.

‡ தன் அற்றம் - தனது சோர்வாகிய சமயத்தை.

¶ மேற்றேறப்படுதலும் - பின் தெளியப்படுதலும்.

$ தன்னிடத்துச் செய்வனவுமறிந்து - ஒற்றனுகிய தன்னிடத்துச் செய்யுங் காரியங்களையுந்தெரிந்து.

o அவற்றிற் கேற்றன - இராஜகாரியஞ் செய்வார் செய்வன, சுற்றத்தார் செய்வன, பகைவர் செய்வன என்பவற்றிற்குத் தக்க செயல்களை

() இம்மூவகையார் - வினைசெய்வார், சுற்றத்தார், பகைவர்.

நாட்டிடத்தும் செய்வனவற்றையும், பகைவர் தன் சோர்வை ஆராய்தலும் மேல்தேறப்படுதலும் முன்னிட்டுத்தன்னிடத்துச்செய்வனவற்றையும் அறிந்து அவற்றிற்குத்தக்கனவற்றைச் செய்யவேண்டுதலால், இம்மூவகையாரையுங் குறைபாமல் ஆராயவேண்டுமென்பார் 'அனைவரையு மாராய்வ தொற்று' என்றார். ஆங்கு - அசைநிலை யிடைச்சொல். என்ற என்புழி அகரம் தொக்கு நின்றது. உளப்படுத்தல் - ஒன்றுபடுத்தல்.

(க - து.) இராஜகாரியஞ் செய்பவரையும் உறவினரையும் பகைவரையும் அவர் தம் சொற்செயல்களால் ஆராய்பவனை ஒற்றனுவான் என்பது.

4. He is a spy who watches all men, to wit, those who are in the king's employment, his relatives, and his enemies.

ரு. கடாஅ வுருவோடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

பரி:—(இ - ள்) † ஒற்றப்பட்டார் கண்டால் **ஐயுறத** வடிவோடு **போருந்தி அவர்** ஐயுற்றறியலுறின் **சேயிரித்து நோக்கிய அவர் கண்ணிற் கஞ்சாது நின்று** ‡ **நான்குபாயமுஞ் செய்தாலும் மனத்துக்கொண்டவற்றை** ¶ **உமிழாமை வல்லவனே ஒற்றனுவான்,** (எ - று).

கடாஅ வென்பது கடுக்குமென்னும் பெயரெச்சத் தெதிர்மறை. ஐயுறுத வடிவாவன: பார்ப்பார் வணிகர் $ முதலாயினோ வடிவு.

தெளி—(இ - ள்.) (ஆராயப்பட்டவர் கண்டால்) கடாஅ-சந்தேகியாத, உருவொடு - வடிவோடு,(பொருந்தி), (அவர் சந்தேகித்து அறியத்தொடங்கினால்), கண்ணஞ்சாது - (கோபித்துப் பார்த்த அவர்) கண்ணிற்கு அஞ்சாமல், (நின்று), யாண்டும் - (நான்குபாயமுஞ் செய்தாலும்) எவவிடத்தும், உகாஅமை - (மனதிற்கொண்ட வற்றை) உமிழாதிருக்க, வல்லதே - வல்லவனே, ஒற்று-ஒற்றனுவான், (எ - று).

கடாஅ என்பது ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். இதற்குடம்பாட்டுப்பெயரெச்சம் கடுக்கும் என்பது. சந்தேகியாத வடிவாவன: பார்ப்பார் வணிகர் முதலாயினர் வடிவு.

(க - து.) சந்தேகியாத வடிவத்துடன் பொருந்தி, ஐயுற்றுர் கோபித்துப்பார்க்கும் பார்வைக்குச் சிறிதும் அஞ்சாது,மனத்திற்கொண்டவற்றை அவர்க்குவெளிப்படுத்தாதவனே ஒற்றனுவான்.


† ஒற்றப்பட்டார் - ஒற்றனுல் ஆராயப்படும் பகைவர் முதலாயினர்.

‡ நான்குபாயம் - தான சாம பேத தண்டம்.

¶ உமிழாமை - வெளிப்படுத்தாமை ; அஃதாவது சொல்லாமை. உமிழாமையில் (வெளிப்படுத்தாமையில்) என்றும் பாடமுண்டு.

$ முதலாயினர் என்றமையின், தீர்த்தயாத்திரை செய்வார், தவஞ்செய்வார், முற்றத்துறந்தார் முதலாயினோரையுங் கொள்க.

5. A spy is one who is able to assume an appearance which may create no alarm in the minds of others, who fears no man's face, and who never reveals his purpose.



சு. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்விலை தோற்று.

பரி:—(இ - ள்.) முற்றத்துறந்தாராயும் விரத வொழுக்கினராயும் *உள்புகுதற் கரியவிடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன ஆராயிந்தறிந்து ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து † எல்லாத்துன்பமுஞ் செய்து கேட்டாலும் தன்னே வெளிப்படுத்தாதானே ஒற்றனுவான், (எ-று).

விரத வொழுக்கம் - தீர்த்தயாத்திரை ‡ முதலாயின. ¶ செயினும் என்பது § அறவோரென்று செய்வாரின்மை விளக்கி நின்றது. o மேல் நால் வகையுபாயத்தினுஞ் சோர்வின்மை சொல்லிவைத்து ()ஈண்டுத்தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற் கருமைச் சிறப்பு நோக்கி. § இதனுள் படிவமென்றதனே வேடமாக்கித்துறந்தார் வேடத்தராகியென் றுரைப் பாரு முளர்.

உள்புகுதற்கரிய விடங்கள் - உள்ளே பிரவேசிப்பதற்குச் சாத்தியமா' காதவிடங்கள். அவை அந்தப்புரம், ஆயுதசாலே, தனசாலே, ஆலோசனே செய்யுமிடமுதலியனவாம்.

† எல்லாத்துன்பமும் என்றது கைக்குக்கிட்டியிடல், அண்ணந்தாளிடுதல், தலேகீழாகக்கட்டி மூக்கில் மிளகு நீரை வார்த்தல், கொப்பூழில் (தொப்புளில்) பிள்ளேப் பூச்சியைவைத்துகடட்டுதல், நகங்களில் ஊசியையேற்றுதல் முதலியவதரு லுண்டாகுந் துன்பங்களே.

‡ முதலாயின என்றமையின், பஞ்சாக்கினிமத்தியில் நிற்றல், உண்டி சுருக்கல், தேவாலயவழிபாடு முதலியவற்றையுங் கொள்க.

¶ செயினும் என்ற உம்மை செய்வாரில்லாமையை விளக்கிநிற்றலால், எதிர்மறை யும்மையாம்.

§ அறவோர் - அற (தரும) நெறியிற்செல்வோர்; அவரிங்கு முற்றத் துறந்தார், விரத வொழுக்கினர். "தள்ளா விளேயுளும்" என்னுங் குறளின் விசேடவுரையில் " அறவோர் - துறந்தோர், அந்தணர் முதலாயினர் " என் றிருப்பதிங் குணர்தற்பாற்றும்.

o மேல் என்றது இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளில் 'யாண்டு மூகாமை'என்றதனே.

() ஈண்டு - இக்குறளில். ஈண்டும் என்றும் பாடமுண்டு.

§ இதனுள் - (இக்குறளில்) படிவமென்பதற்கு வேடமென்றுபொருள் கொண்டு, துறந்தார் படிவத்த ராகி என்பதற்குத் துறவிகளின் வேடத்தினே யுடையவராகி யென்று பொருள் கூறுவாருமுண்டென்பது.

தெளி:—(இ - ள்.) துறந்தாராகி - முழுதுந் துறந்தாராயும், படிவத்தராகி - விரத வொழுக்கினராயும், இறந்து - (உள்ளே போதற்கருமையான விடங்களி லெல்லாம்) போய், ஆராய்ந்து (ஆராயவேண்டுவனவற்றை) ஆராய்ந்தறிந்து, என்செயினும் - (அவ்விடத்திருப்பவர் சந்தேகித்துப் பிடித்து) எல்லாத் துன்பமுஞ் செய்துகேட்டாலும், சோர்விலது - (தன்னை) வெளிப்படுத்தாதவனே, ஒற்று - ஒற்றனுவான், (எ - று)

விரதவொழுக்கம் - தீர்த்த யாத்திரை முதலாயின. செயினும் என்பது அறவோரென்று செய்வாரில்லாமையை விளக்கி நின்றது. முன்னே நால்வகை யுபாயத்தினுலும் சோர்வில்லாமையைச் சொல்லிவைத்து இங்குத் தண்டத்தைப் பிரித்துச் சொன்னது அத்தண்டத்தினது சகித்தற் கருமைச் சிறப்புநோக்கியென்க.

(க - து.) துறவிகள் முதலாயினர் வேடத்தைக் கொண்டுபல விடங்களினுஞ்சென்று, ஆராய வேண்டுவனவற்றை யாராய்ந்தறிந்து, அங்குள்ளார் சந்தேகித்துப்பிடித்து யாது செய்யினுந் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனுவான் என்பது.

6. He is a spy who, assuming the appearance of an ascetic, goes into whatever place he wishes, examines into all that is needful, and never discovers himself, whatever may be done to him.

எ. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

பரி:—(இ - ள்.) **ஒற்றப்பட்டார் மறையச்செய்த செயல்களை † அவர்க்குள்ளாயினுறோற் கேட்க வல்லனுய்க் கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப்படாது துணிய வல்லவனே ஒற்றனுவான்,** (எ - று).

மறைந்தவை சொல்லுவாரை அறிந்து,அவர் அயிராமற் சென் ‡ ருரூட்டித் தாமே சொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாகச் செயலாக முன்னே விளைத்து, அத்தொடர்பாற் கேட்குங் காலும் உருதார் போன்று நின்று கேட்க வேண்டுதலின் 'கேட்கவற் றாகி' என்றும், கேட்டறிந்தவற்றைத் தானே ஐயுற்றுவந்து சொல்லின் அரசனுல் அவற்றிற்கேற்ற வினை செய்யலாகாமையின் 'ஐயப்பாடில்லதே' என்றுங் கூறினர். இவை நான்கு பாட்டானும் ஒற்றினிலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மறைந்தவை - (ஒற்றப்பட்டவர்) மறையச்செய்த செயல்களை, கேட்கவற்றாகி - (அவர்க்கு உள்ளாயினுரால்) கேட்க வல்லவ

* ஒற்றப்பட்டார் - வேவுகாரரால் அடித்தறியப்பட்டவர்.

† அவர்க்குள்ளாயினுரால் - ஒற்றப்பட்டவர்க்கு அந்தரங்கமா யிருப்பவர்களால்.

‡ ஒட்டி - அடித்து.

ஞல், அறிந்தவை - (கேட்டு) அறிந்தசெயல்களில், ஐயப்பாடில்லதே - (பின்) சந்தேகப்படாது நிச்சயிக்கவல்லவனே, ஒற்று - ஒற்றனுவான், (எ - று).

ஒற்றப்பட்டவர் மறையச்செய்த செயல்களைச் சொல்லுவாரை அறிந்து, அவர் சந்தேகியாதபடிபோய் ஒட்டி அவர் தாமே சொல்லும்படி அதற்கு வற்ற சொல்லையாவது செயலையாவது முன்னே உண்டாக்கி, அச்சம்பந்தத்தினுல் கேட்கும்போதும் அன்னியர்போல நின்று கேட்கவேண்டுதலால் 'கேட்கவற் றுங்' என்றும், கேட்டறிந்தவற்றைத் தானே சந்தேகித்து வந்து சொன்னுல் அரசனுல் அக்கேட்டறிந்தவற்றிற்கு எற்ற காரியம் செய்தல்கூடாமையால் "ஐயப்பாடில்லதே" என்றும் சொல்லினர். இவை நான்கு பாட்டாலும் ஒற்ற னது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவர் முதலாயினரது இரகசியச் செயல்களைச் சொல்ல வல்லாரிடத்துத் தக்கவாறு கேட்டறிந்து, கேட்டறிந்த வற்றிற் சந்தேகமில்லாதவனை ஒற்றனுவான் என்பது.

7. A spy is one who is able to discover what is hidden, and who retains no doubt concerning what he has known.

அ. ஒற்றேற்றித் தந்த பொருளாயு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல்.

பரி:—(இ - ள்.) ஒரொற்றன் ஒற்றிவந் தறிவித்த காரியத்தன்னை யும் பிறனேரொற்றனுலும் ஒப்புவித்து * ஒப்புமை கண்டுகோள்க

ஒற்றப்பட்டாரோடொத்து நின்று † மாறுபடக்கூறலுங்கூடுமாகலின், ஒருவன் மாற்றந் தேறப்படா தென்பதாம்.

தெளி:—(இ - ள்.) ஒற்று - ஒரொற்றன், ஒற்றி - மறைவாயறிந்து வந்து, தந்த - அறிவித்த, பொருளாயும் - காரியத்தையும், மற்றுமோ ரொற் றினுல், மற்றேரொற்றனுலும், ஒற்றி - அறிந்துவரச்செய்து, கொளல் (ஒப்புமைகண்டு) கொள்ளக்கடவன், (எ - று).

ஒற்றப்பட்டவருடன் கலந்து நின்று மாறுபடச் சொல்லுதலுங் கூடு மாகையால், ஒருவன் சொல் தெளியப்படா தென்பதாம்.

(க - து.) அரசன் ஒரொற்ற னறிந்துவந் தறிவித்த காரியத் தை மற்றேரொற்றனுலும் அறிந்துவரச்செய்து ஒப்புமைகாணக் கடவன்.

8. Let not a king receive the information which a spy has discovered and made known to him, until he has examined it by another spy.

* ஒப்புமைகாணல் - ஒத்திருக்கப்பார்த்தல்.

† மாறுபட - வித்தியாச முண்டாக.

ஒற்றேற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றேக்க தேறப் படும்.

பரி:—(இ - ள்.) ஒற்றரை ஆளுமிடத்து ஒருவனே ஒருவனறியாமல் ஆள்க; அங்ஙனமாண்ட வோற்றர் மூவரை † ஒருபொருண்மேல் ‡ வேறு வேறு விட்டால் ¶ அம்மூவர் சொல்லும் பயனில் ஒத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும், (எ - று).

§ ஆயின் என்பது வருவிக்கப்பட்டது. ஒருவனே யொருவனறியின் தம்மூளியைத்து ஒப்பக்கூறுவராகலின் 'உணராமை யாள்க' என்றும், மூவர்க்கு நெஞ்சொற்றுமைப் படுதலும் பட்டால் நீடு நிற்றலுங் கூடாமையின் 'தேறப்படும்' என்றுங் கூறினர். இதனுனே § அஃதொத்திலதாயின், பின்னும் ஆராய்கவென்பதூஉம் பெற்றும்.

தெளி:—(இ - ள்) (ஒற்றரை ஆளுமிடத்து) ஒற்று - ஒரொற்றனே, ஒற்று - மற்றொரொற்றன், உணராமை - அறியாதிருக்கும்படி, ஆள்க - ஆளக் கடவன், (அவ்வாருண்ட ஒற்றர்மூவரை), உடன் மூவர்-(ஒருபொருள்மேல் வேறு வேறு விட்டால்) அம்மூவருடையு, சொல் - சொல்லும், தொக்க-(பயனில்)ஒத்திருப்பன,(ஆயின்),தேறப்படும்-(அப்பொருள் மெய்யென்று)தெளியப்படும், (எ - று).

ஆயின் என்பது வருவிக்கப்பட்டது. ஒரொற்றனே மற்றொற்றன் அறிந்தால் தம்மூளகலந்துகொண்டு ஒப்பச்சொல்லுவாராகையால்'உணராமை யாள்க' என்றும், மூவர்க்கு நெஞ்சு ஒற்றுமைப்படுதலும பட்டால் நீடித் திருத்தலும் கூடாமையால் 'தேறப்படும்' என்றும் சொல்லினர். இதனுலே அம்மூவர் சொல்லும் பயனில ஒவ்வா திருப்பனவாயின், பின்னும் ஆராய்க வென்பதும் பெறப்பட்டது. உடன்மூவ ரென்பதை மூவருடனென்றன் வயஞ்செய்து, உடனென்னும் மூன்றனுருபு ஆறனுருபின் பொருளில் வந்த தென்று கொள்க.

"ஒருவ ரொருவர் தமையறியா தொருமை வினைக்கண் மூவர்தமை, மருவ விடுக்க மூவர்களும் வந்து மொழிவ சொத்துவிடிற், கருமம தனே மிகத்தெளிக" என்பது விநாயகபுராணம்.

† ஒருபொருண்மேல் - ஒருகாரியத்தின்மேல்.

‡ வேறுவேறுவிட்டால் - தனித்தனியாக அனுப்பினால்.


¶ அம்மூவர் சொல்லும் - அந்த மூன்று ஒற்றர்களது வார்த்தையும்.

§ தொக்க என்னும் அன்சாரியை குறைந்தவினே ஆயின் என்பதை வேண்டி நிற்றலால், அது வருவிக்கப்பட்டது.

§ அஃது - (ஒருகாரியத்தின்மேல் ஒரு காலத்தில் தனித்தனியாக ஒரு வரை மற்றொருவரறியாதபடி அனுப்பிய மூன்றொற்றரும் அறிந்து வந்து சொல்லும் சொல்) ஒத்திலதாயின் (தம்முள் ஒத்திராதுவிரோதப்படுமாஞல்). அஃதொத்திலவாயின் என்றும் பாடமுண்டு.

(க - து.) அரசன் ஒரு காரியத்தை மூன்று ஒற்றர்களால் தனித்தனி யறிந்து தெளியக்கடவன் என்பது.

9. Let a king employ spies so that one may have no knowledge of the other; and when the information of three agrees together, let him receive it.



கo. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னுகு மறை.

பரி:—(இ - ள்) † மறைந்தவை அறிந்து கூறிய ஒற்றின்கட் செய்யுந் ‡ சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யாதொழிக; ¶ செய்தானுயின், தன்னகத்து அடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானும்.


மறையாவது அவனெற்றனுயதூஉம் அவன் கூறியதூஉ மாம். சிறப்புப்பெற்ற இவன் யாவனென்றும் இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலாராகலின் 'புறப்படுத்தானுகும்' என்றார். இவை மூன்று பாட்டானும் ஒற்றரையாளுமாறும், அவரான் நிகழ்ந்தனவறியுமாறும், அறிந்தாற் சிறப்புச் செய்யுமாறும் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்) ஒற்றின்கண் - (மறைந்தவை அறிந்து சொல்லிய) ஒற்றனிடத்து, சிறப்பு - (செய்யும்) சிறப்பினை, அறிய - (அரசன் பிறர்) அறிய, செய்யற்க - செய்யாதிருக்கக்கடவன், செய்யின் - செய்தானுயல்; மறை - (தன்மனத் தடககப்படும்) மறையை, புறப்படுத்தானுகும் - (தானே) வெளிப்படுத்தினவனுன், (எ - று).

மறையாவது அவன் ஒற்றனுனதும் அவன் சொல்லியதும் ஆம். (அரசன் சிறப்பறியவொற்றின்கட்செய்தானுயின்) சிறப்புப்பெற்ற இவன் யாவனென்றும், இச்சிறப்பைப் பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் விடைகூறுவாரும் அயலாராகலால் (மறையைப்) 'புறப்படுத்தானுகும்' என்றார். இவை மூன்று பாட்டாலும் ஒற்றரை ஆளும் விதமும், அவ்வொற்றரால் நிகழ்ந்தனவற்றை யறியும் விதமும், அறிந்தால் அவர்க்குச் சிறப்புச்செய்யும் விதமும் சொல்லப்பட்டன.

(க - து.) ஒற்றர்க்குச் செய்புஞ் சிறப்பினை அரசன் பிறரறியாது செய்யக்கடவன் என்பது.

10. Let not a king publicly confer on a spy any marks of his favor; if he does, he will divulge his own secret.



† மறைந்தவை - ஒற்றப்பட்டார் மறையச் செய்த செயல்களே

‡ சிறப்பினை - வெகுமதியை.

¶ செய்தானுயின் - பிறரறியச் செய்தானுயல்.

இருபத்திரண்டாம் அதிகாரம்.

‡ ஊக்கமுடைமை—On energy.

பரி:—அஃதாவது மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கட் ¶ கிளர்ச்சி யுடைத்தாதல். ஒற்றான் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற்கேற்ற வினை செயிவானுக்கு இஃது இன்றியமையாமையின், ஒற்றுடலின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மனந் தளருத லில்லாமல் தொழில்செய்தலில் எழுச்சியுடையதாதலாம். ஒற்றரால் நிகழ்ந்தனவற்றையறிந்து அவற்றிற்கு ஏற்ற தொழிலைச்செய்யுமரசனுக்கு இஃது (ஊக்கமுடைமை) அவசியம் வேண்டுதலால், ஒற்றுடலின்பின் வைக்கப்பட்டது.

க. உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று.

பரி:—(இ - ள்.) ஒருவரை o உடையரென்று § சொல்லச்சிறந்தது ஊக்கம் ; அவ்வூக்கமில்லாதார் வேறுடையதுதானும் உடையராவரோ, ஆகார், (எ-று).

வேறுடையதென்றது முன்னெய்திநின்ற பொருளை உம்மை விகாரத்தாற் றொக்கது. காக்கும் ஆற்றல் இலராகலின், அதுவும் இழப்பரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உடையரெனப்படுவது - (ஒருவரை) உடையவரென்று சொல்லுதற்குச் சிறந்தது, ஊக்கம் - மனவெழுச்சியாம், அஃதில்லார் - அம்மனவெழுச்சியில்லாதவர், மற்றுடையது - வேறுடையதுதானும், உடையரோ - உடையவராவரோ, [ஆகார்], (எ-று).

வேறுடையதென்றது முன்னடைந்து நின்றபொருளை. உடையதும் என்னும் தெரிநிலை யும்மை செய்யுள் விகாரத்தாற்றொக்கு நின்றது. (ஊக்கமில்லாதவர் முன்னடைந்து நின்ற பொருளை) காப்பாற்றும் வல்லமையில்லாதவராதலால், அப்பொருளையும் இழப்பரென்பதாம்.

(க - து.) ஊக்கமுடையவரன்றி மற்றவர் பொருளுடையவராகார் என்பது.

1. Energy marks out the man of property; as for those who are destitute of energy, do they really possess what they possess?

‡ "முயற்சிதா ளாண்மை யூக்க முந்துதா ளூத்தி யோகம், இயற்றலே யுஞ்ஞமுழப்போ டாள்வினை யிவையுற் சாகம்" என்பது சூடாமணி நிகண்டு.

¶ கிளர்ச்சி - உற்சாகம். o உடையர் - பொருளுடையவர்.

§ சொல்லச் சிறந்தது - சொல்லுதற்குச் சிறந்த காரணமாயிருப்பது.

உ. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

பரி:—(இ - ள்.) ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது; மற்றைப்பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போம்.

*உள்ளம்—ஆகுபெயர். ஊக்கம் * உள்ளத்துப் பண்பாகலின் அதற்கு நிலைநிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதன்மாலைத்தாகலின் அதற்கு நிலைநில்லாமையுங் கூறினர்; கூறவே, அஃதுடைமை அன்றென்பது பெறப்பட்டது.*

தெளி:—(இ - ள்.) (ஒருவனுக்கு) உள்ளமுடைமை - ஊக்கமுடைமையே, உடைமை - (நிலைபெற்ற) உடைமையாம், பொருளுடைமை - மற்றைப் பொருளுடைமையானது, நில்லாது - நிலைபெருமல், நீங்கிவிடும்-நீங்கிப்போம், (எ - று).

உள்ளத்தின் பண்பாகிய ஊக்கத்தை உள்ளமென்று கூறினமையின், உள்ளமென்பது பொருளாகுபெயராம். உள்ளம் - மனம்; ஊக்கம்-அம்மனத்தின் கிளர்ச்சி. ஊக்கம் உள்ளத்தினது குணமாகலால் அவ்வூக்கத்திற்கு நிலை பெறுதலும், பொருள் உடம்பிலும் வேறு யழியுந் தன்மையதாகலால் அப் பொருளுக்கு நிலைபெறுமையுஞ் சொல்லினர்; சொல்லவே, அப்பொருள் உடைமையன்றென்பது பெறப்பட்டது.

(க-து.) *ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைபெற்ற உடைமையாம்; பொருள் நிலைபெற்ற வுடைமையன்றும் என்பது.*

2. The possession of energy of mind is true property; the possession of wealth passes away and abides not.



கூ. ஆக்க மிழந்தேமென் றல்லாவா வூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

பரி:—(இ - ள்.) † இழந்தாமாயினும் யாம் கைப்பொருளே யிழந்தேமென்று அலமாரார்; நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையார், (எ - று).

ஆக்கம்—ஆகுபெயர். ஒருவந்தமாய வூக்கமென்க. கைத்து—கையகத்தாய பொருள்; ‡ "கைத்துண்டாம் போழ்தே கறவா தறஞ்செய்மின்" என்னூர் பிறரும். அல்லாவாமைக்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

** உள்ளத்தின் (மனத்தின்) பண்பாகிய ஊக்கம் உடம்பிலும் வேறாய பொருள்போல அழியத் தன்மையதின்றி ஊக்கமுடையவ னுள்ளவளவும் உடையதாயிருத்தல் பூற்றி அதற்கு நிலைநிற்றல் (அழியாமை) சொல்லப்பட்டது. † இழந்தாராயினும் - கைப்பொருளே யிழந்தாரானுலும்.*

‡ காலடியார் இளமை நிலையாமை-கூ. இதன்பொருள். கையகத்துப் பொருளுண்டா யிருக்குங் காலத்திலேயே (அப்பொருளே) யொளித்துவையாது தருமத்தைச் செய்யுங்கள் என்பது.

தெளி:—(இ - ள்.) ஒருவந்தம் - நிலைபெற்றதாகிய, ஊக்கம் - மனவெழுச்சியை, கைத்து - கைப்பொருளாக, உடையார் - உடையவர், (இழந்தாராயினும்), ஆக்கம் - கைப்பொருளே, இழந்தேமென்று (யாம்) இழந்துவிட்டோமென்று, அல்லாவார் - மனஞ்சுழலார், (எ - று).

ஆக்கத்திற்குக் காரணமான கைப்பொருளே ஆக்கமென்றமையின், ஆக்கமென்பது காரியவாகுபெயராம், ஆக்கம்—மேல்மேலுயர்தல். ஒருவந்தம் என்பதனை ஊக்கமென்பதனோடு கூட்டி ஒருவந்தமாய ஊக்கமென் றுரைக்கப்பட்டது. கைத்து—கையினிடத் திருப்பதாய பொருள். அல்லாவாமைக்கு (மனஞ்சுழலாமைக்கு)க் காரணம் வருகின்ற பாட்டாற் கூறுவார்.

(க - து.) நிலைபெற்ற ஊக்கமுடையவர் கைப்பொருளையிழந் தாராயினும் வருத்தமுறார் என்பது.

3. They who are possessed of enduring energy will not trouble themselves, saying, "we have lost our property".

ச. ஆக்க மதர்விஞைய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

பரி:—(இ - ள்.) அசைவில்லாத ஊக்கத்தை உடையானிடம் பொருள் தானே வழிவினவிக்கொண்டு செல்லும், (எ - று).

அசைவின்மை - † இடுக்கண் ‡ முதலியவற்றுற் றளராமை. வழினவிக்சென்று சார்வார்போலத் தானேசென்று சாருமென்பார் 'அதர்விஞைய்ச் செல்லும்' என்றார். எய்திநின்ற பொருளினும் அதற்குக் காரணமாய வூக்கஞ் சிறந்ததென்பது இவை நான்கு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அசைவிலா - அசைவில்லாத, ஊக்கமுடையானுழை - மனவெழுச்சியை யுடையவனிடத்து, ஆக்கம் - பொருளானது, அதர்விஞைய் - (தானே) வழிகேட்டுக்கொண்டு, செல்லும் - செல்லாநிற்கும்.

அசைவின்மை-இடுக்கண் முதலியவற்றால் மனந்தளராமை. வழிகேட்டுச்சென்று சேர்வார்போல (பொருள்) தானே சென்று (அசைவிலாவூக்க முடையானுழை) சேருமென்பார் (ஆக்கம்) 'அதர்விஞைய்ச் செல்லும்' என்றார். அடைந்துநின்ற பொருளிலும் அப்பொருளிற்குக்காரணமாகிய ஊக்கம் சிறந்ததென்பது இவை நான்கு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து.) நிலைபெற்ற ஊக்கமுடையவனிடத்துப் பொருள் தானே வந்து சேரும் என்பது.

---

* அசைவில்லாத – சலித்தலில்லாத.

† "இடுக்கண் என்பது மலர்ந்தநோக்கமின்றி மையலுக்கம்பட வரும் இரக்கம்" என்றனார் நச்சினார்க்கினியர்.

‡ முதலியவற்றால் என்றமையின், பகைவர் தடுத்தல், செய்தொழிலில் சோர்வுண்டாதல் முதலியவற்றையுங் கொள்க.

4. Wealth will ask for a way to come to the man of unfailing energy.



உ. வேள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு.

பரி:—(இ - ள்.) நின்றநீரி னளவினவாம் நீர்ப்பூக்களின் † தாளி னது நீளங்கள், அதுபோல மக்கள்தம் ஊக்கத்தளவினதாம் அவ நயர்ச்சி, (எ - று).

மலர்-ஆகுபெயர். நீர்மிக்கதனையும் மலர்த்தாள் நீளுமென்பது பட 'வெள்ளத்தனைய' என்றார். இவ்வுவமை ஆற்றலான், ஊக்கமகத்தனையும் மக களுயர்வரென்பது பெறப்பட்டது. உயர்தல். பொருள் படைகளான் மிகுதல்.

தெளி:—(இ - ள்.) *வெள்ளத்தனைய - நின்றநீரினளவினவாம், மலர் - நீர்ப்பூக்களின் தாளினது, நீட்டம் - நீளங்கள், (அதுபோல), மாந்தர்தம் - மக களது, உள்ளத்தனையது - மனவெழுச்சி யளவினதாம், உயர்வு - (அவர்க ளது) உயர்ச்சி, (எ - று).*

மலரினது தாளே மலரென்று கூறினமையின், மலரென்பது பொரு ளாகுபெயராம். நீர்மிகுந்தவளவும் மலரினதாள்கள் நீளும் என்பது தோன்ற 'வெள்ளத்தனைய' என்றார். 'வெள்ளத் தனைய மலர்நீட்டம்' என்னும் உவமா னத்தின் வலியினால், ஊக்கம் மிகுந்தவளவும் மக்க ளுயர்வர் என்பது பெறப் பட்டது. உயர்தல் - பொருளாலும் படையாலும் மிகுதல்.

(க - து.) ஒருவர்க் குண்டாகும் உ பர்வு அவரது ஊக்கத் தினளவேயாம் என்பது.

5. The length of a flower-stalk will be in proportion to the depth of the water in which it grows; the height of a man's greatness is in proportion to his mind.

ரு. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

பரி:—(இ - ள்.) அரசராயினூர் கருதுவதெல்லாம் தம்முயர்ச்சியை யே கருதுக; அவ்வுயர்ச்சி ‡ பால்வகையாற் கூடிற்றில்லையாயினும் அக்கருத்துத் ¶ தள்ளாமை நீர்மையுடைத்து, (எ - று).

§ *உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. ○ தள்ளிய*

"நீரளவே யாகுமா நீராம்பல்" என்று மூதுரை கூறுகின்றது. † தாள் அடிக்காம்பு ‡ பால்வகையால் - விதிவசத்தால். ¶ தள்ளாமை - தவறுமை.

§ *தள்ளினும் என்ற உம்மை தள்ளாமை பெரும்பான்மை யாதலேயும் தள்ளுதல் சிறுபான்மை யாதலேயும் விளக்கி நிற்றலால், முழுவதும் தழுவாத எதிர்மறைப் பொருளது. ○ தள்ளிய வழியும் - தவறிய விடத்தும்.*

வழியுந் தாளாண்மையிற் றவறின்றி நல்லோராற் பழிக்கப்படாமையின், தள்ளாவியற்கைத் தென்பதாம். மேல் 'உள்ளத் தனைய துயர்வு' என்றதனையே வற்புறுத்தியவாறு.

தெவி:—(இ - ள்.) (அரசராயினார்) உள்ளுவதெல்லாம் - நினைப்பதெல்லாம், உயர்வு - (தமது) உயர்ச்சியையே, உள்ளல்-நினைக்கக்கடவர், அது-அவ்வுயர்ச்சியானது, தள்ளினும் - (ஊழ்வகையால்) கூடியதில்லையாயினும், (அந்நினைப்பு), தள்ளாமை நீர்த்து - தள்ளாமைத் தன்மையதாம், (எ - று).

மற்று-அசைநிலை. தள்ளினுமென்ற உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதலை விளக்கியது (அவ்வுயர்ச்சி ஊழ்வகையால்) தள்ளியவிடத்தும் முயற்சியிற் றவறுதல் இல்லாமல் நல்லோரால் பழிக்கப் படாமையால், (அந்நினைப்பு)தள்ளாத இயற்கையுடைய தென்பதாம். முன்னே 'உள்ளத்தனைய துயர்வு' என்றதனையே உறுதிசெய்தவாறும். உள்ளல் என்பது அல்லீற்றுடம்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

(க - து.) அரசர் முயற்சியிற் றவறாது நின்று தமக்குயர்ச்சியையே கருதக்கடவர் என்பது.

6. In all that a king thinks of, let him think of his greatness; and if it should be thrust from him by fate, it will have the nature of not being thrust from him.

எ. சிதைவிடத் தோல்கா ருரவோர் புதையம்பிற
பட்டுப்பா னேற்றங் களிறு.

பரி:—(இ - ள்.) களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல, ஊக்கமுடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவர், (எ-று).

புதை - * அம்புக்கட்டு; † பன்மை கூறியவாறு. பட்டாலென்பது ‡ பட்டெனத்திரிந்து நின்றது. ¶ ஒல்காமை களிற்றுடனும் பாடின்றுதல் உர

* அம்புக்கட்டு - அம்பின் தொகுதி. அம்பு - பாணம்.

† பன்மை - அம்பின் பன்மை.

‡ பட்டு என்ற செய்தென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் ஊன்றும் என்னும் வேறு வினைமுதலின் வினையைக் கொண்டு முடிதற்கு விதியில்லாமையால் 'பட்டால்' என்பது பட்டெனத் திரிந்துநின்றது' என்று கூறப் பட்டது. இங்கு வேறுவினைமுதல்களிறு; அதன்வினை ஊன்றும் என்பது.

¶ உரவோர் என்னும் உவமேயத்திற்குக் கூறிய ஒல்காமை உவமான மான களிற்றேடும், களிறு என்னும் உவமானத்திற்குக் கூறிய பாடின்றுதல் உவமேயமான உரவோரோடும் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. ஒல்கார் என்பதன் பகுதி ஒல்காமை எனவும், பாடின்றும் என்பதன் பகுதி பாடின்றுதல் எனவும் அறிக. களிறு ஒல்காமை (ஒல்காமல்) பாடின்றும் என்றும், உரவோர் ஒல்காமை (ஒல்காமல்) பாடின்றுவர் என்றுங் கொள்க. பாடின்றுதல் - பெருமையை நிலைநிறுத்தல். ஒல்குதல்-தளருதல்.

வோருடனும் சென்றியையாதன. தள்ளினும் தவறுதி * உள்ளியது முடிப்ப ரென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊக்கமுடையாரது உயர்ச்சி கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) களிறு - யானை, புதையம்பின் - கட்டாகிய அம்பி னால், பட்டால் - (புண்) பட்டவிடத்து, பாடேன்றும் - (தளராமல் தன்) பெ ருமையை நிலைநிறுத்தும், (அதுபோல), உரவோர் - மனவெழுச்சியையுடை யவர், சிதைவிடத்து - (தாம் நினைத்த உயர்ச்சிக்கு) அழிவுவந்தவிடத்து, ஒல் கார் - தளரார், (தளராமல் தம்பெருமையை நிலைநிறுத்துவார்), (எ - று).

புதை - அம்பின்கட்டு ; அப்புதையென்பது அம்பு பல வென்பதை அறிவித்து நின்றது பட்டவிடத்து என்னும் பொருளதான பட்டால் என் பது பட்டெனத்திரிந்து நின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடேன்றுதல் உரவோருடனும சென்று பொருந்தின (தாம் நினைத்த வுயர்ச்சி ஊழ்வகை யால்) கூடியதில்லாயினும் தவறாமல் நினைத்ததை முடிப்பரென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் ஊக்கமுடையாரது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க - து.) ஊக்கமுடையவர் தாம் நினைத்த வுயர்ச்சிக்கழிவு வந்த விடத்திந் தளர்ச்சி யடையார் என்பது.

7. The strong-minded will not faint, even when all is lost; the elephant stands firm, even when wounded by a shower of arrows.

அ. உள்ள மிலாதவ ரேய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

பரி:—(இ - ள்.) **ஊக்கமில்லாத அரசர் இவ்வுலகத்தாருள் யாம் † வண்மையுடையேமென்று தம்மைத்தா மதித்தலைப் பெறார்,** (எ - று).

‡ ஊக்கம் இல்லையாகவே முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாமாகலின், செருக்கெய்தார் என்றார். ¶ கொடை வென்றியினைய இன்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனுகாமையின், o தன் மையாற் கூறப்பட்டது.

உள்ளியது - தாமெண்ணிய உயர்ச்சியை.

† வண்மையுடையேம் - ஈகைக் குணமுடையேம்.

‡ ஊக்கத்தினுல் (உற்சாகத்தினுல்) முயற்சியும், முயற்சியினுல் பொரு ளும், பொருளினுல் கொடையும் (பிறர்க்குக் கொடுத்தலும்), கொடையினுல் (வள்ளியமென்னும்) செருக்கும் ஒன்றன்பின் ஒன்றாய்க் கிரமமாயுண்டா கின்றன. இவற்றுள், முதலாவதான ஊக்கம் இல்லாமல் போனுல் மற்ற வையும் முறையே இலவாய்ப் போமென்க. 'ஊக்கம் இவ்வியாகவே முயற் சி' என்றமையின், ஊக்கம் வேறு, முயற்சிவேறு என்பது நன்கு விளங்கும்.

¶ கொடைவென்றியினைய என்பதற்குக் கொடைச் செருக்கினலுண் டாய என்றும் பொருள் கொள்ளலாம்.

o தன்மையாற் கூறப்பட்டது - வள்ளியம் (ஈகைக் குணமுடையேம்) என்று தனித் தன்மைப் பன்மை வினைமுற்றாற் சொல்லப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உள்ளமிலாதவர் - ஊக்கமில்லாத அரசர், உலகத்து - இவ்வுலகத்தாருள், வள்ளியமென்னும் - (யாம்) வண்மையையுடையேமென்று (தம்மைத்தாம்) மதிக்கும், செருக்கு - மதிப்பை, எய்தார் பெரார், (எ - று).

(அரசர்க்கு) ஊக்கமில்லாமையே முயற்சி, பொருள், கொடை, செருக்கு என்னும் இவை மூன்றையே இல்லாமாதலால், (உள்ளமிலாதவர்) செருக்கெய்தார் என்றார். கொடை வெற்றிகளால் ஆகிய இன்பம் தமக்கல்லது பிறர்க்கு வெளியாகாமையால், 'வள்ளியம்' என்று தன்மை யிடத்தாற் சொல்லப்பட்டது.

(க - து.) ஊக்கமில்லாதவர் உலகில் மதிப்படையார்.

8. Those who have no greatness of mind, will not acquire the joy of saying in the world, "we have exercised liberality".

கூ. † பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

பரி:—(இ - ள்.) **எல்லா விலங்கினும் தான் பேருடம்பினது, அது வேயுமன்றிக் கூரியகோட்டையும் உடையது, ஆயினும், யானை தன்னைப் புலியெதிர்ப்படின் அதற்கஞ்சும்,** (எ - று).

*பேருடம்பாண் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியுங் ‡ கருவிச் சிறப்பும் உடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் ¶ அஃதுடைய அதற்கு அஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச் சிறப்பும் உடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் o அஃதுடைய அரசர்க் கஞ்சுவரென்பது தோன்ற நின்றமையின், * பிறிதுமொழிதல்.*

தெளி:—(இ - ள்.) யானை - பரியது - (எல்லா விலங்குகளிலுந் தான்) பெரிய உடம்பையுடையது, (அதுவேயுமன்றி), கூர்ங்கோட்டது – கூர்மையான கொம்புகளையு முடையது, ஆயினும் - ஆனாலும், புலி - தாக்குறின் - (தன்னை) எதிர்ப்படின், வெரூஉம் - (அப்புலிக்கு) அஞ்சும், (எ - று).

பேருடம்பால் (யானைக்கு) வலிமிகுதி சொல்லப்பட்டது. புலியைக் காட்டிலும் மிகுந்த உடல்வலியையும் வெல்லுதற்குச் சிறந்த தந்தத்தையும் உடையதாயினும் யானை ஊக்கமில்லாமையால் அதனையுடைய அப்புலிக்கு அஞ்சுமென்ற இக்குறள், பகைவரைக்காட்டிலும் மிகுந்த உடல்வலியையும்

---

† "நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகணண்ணி, மறமனை வேங்கை யெனவெனி யஞ்சும்" என்பது திருக்கோவையார்.

‡ கருவிச் சிறப்பு - தந்தமாகிய சிறந்த கருவியும்.

¶ அஃதுடைய - ஊக்கமுடைய. o அஃதுடைய - ஊக்கமுடைய.

* உவமேயத்தைக் கூறாமல் உவமானத்தைக் கூறி, அவ்வுவமானத்தினால் உவமேயத்தை விளங்க வைத்தல் பிறிதின் மொழிதலாம்.

வெல்லுதற்குச் சிறந்த ஆயுதத்தையும் உடையவராயினும் அரசர் ஊக்கமிலராயின், அதனையுடைய அரசர்க்கு அஞ்சுவரென்பது தோன்றநின்றலால், பிறிதுமொழிதலென்னு மலங்காரமாம்.

(க - து.) அரசர் உடல் வலியும் படையு முடையவராயினும் ஊக்கமிலராயின், அவர் ஊக்கமுடைய அரசர்க்கஞ்சுவர் என்பது.

9. Although the elephant has a large body, and a sharp tusk, yet it fears the attack of the tiger.

கo. உரமொருவற் † குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

பரி:—(இ - ள்.) ஒருவற்குத் ‡ திண்ணிய அறிவாவது ஊக்கமிகுதி; அவ்வூக்கமிகுதியில்லாதார் மக்களாகார், மரங்களாவார்; ¶ சாதிமரங்களோடு இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள்வடிவே, பிறிதில்லை.

உரமென்பது அறிவாதல் * 'உரனென்னுந் தோட்டியான்' என்பதனானுமறிக. மரமென்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவுங் காரியமுயற்சியும் இன்மைபற்றி 'மரம்' என்றும், மரத்திற்குள்ள பயன்பாடின்மை பற்றி 'மக்களாதலே வேறு' என்றுங் கூறினர். பயன்-பழமுதலியவும்,தேவர் கோட்டம், இல்லம், தேர், நாவாய்கட்கு உறுப்பாதலும் முதலிய. இவை மூன்று பாட்டானும் ஊக்கமில்லாதாரது இழிவு கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, உரம் - (திண்ணிய) அறிவாவது, உள்ள வெறுக்கை - ஊக்கமிகுதியாம், அஃது-அவ்வூக்கமிகுதியை, இல்லார் - இல்லாதவர், மரம் [மக்களாகார்] மரங்களாவார், வேறு - (சாதிமரங்களோடு இம்மரங்களிடத்து) வேற்றுமை வடிவு, மக்களாதலே-மக்கள்வடிவே, [வேறில்லை], (எ - று).

மரமென்பது வருமொழி நோக்காது பன்மைப்பொருளுணர்த்துதலின்,சாதியொருமைப்பெயராம். (ஊக்கமில்லாதாரிடத்து)மக்களுக்குள்ள நல்லறிவும் காரியமுயற்சியும் இல்லாமைபற்றி (அவரை)'மரம்' என்றும், மரத்திற்குள்ள பயன்படுதலில்லாமைபற்றி 'மக்களாதலே வேறு' என்றும் சொல்லினர். மரத்திற்குப் பயன் - பழமுதலியனவும், தேவாலயம், வீடு, தேர், மாக்கலமென்னுமிவற்றிற்கு உறுப்பாதலு முதலியன ஆம். இவை மூன்று பாட்டாலும் ஊக்கமில்லாதவரது இழிவு சொல்லப்பட்டது.

† உள்ள வெறுக்கை - உள்ளத்தி னூக்க மிகுதி. உள்ளம்-மனம்; வெறுக்கை - ஊக்கமிகுதி.

‡ திண்ணிய - உறுதியான.

¶ சாதி மரங்களோடு இம்மரங்களிடை - இயல்பாயுள்ள மரங்களுடன் இம்மக்களாகிய மரங்களிடத்து.

நீத்தார் பெருமை, சு.

(க - து.) ஊக்கமுடையவர் மக்களாவார்; மற்றவர் மரங்களாவார் என்பது.

10. *Energy is mental wealth; those men who are destitute of it are only trees in the form of men.*

இருபத்து மூன்றும் அதிகாரம்.

மடியின்மை—*Against Idleness.*

பரி:—அஃதாவது கருதியன செய்யுங்கால் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஓரோவழிக் † குணவயத்தான் மடி வருதலை நோக்கி, இஃதோக்க முடைமையின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது எண்ணிய காரியங்களைச் செய்யுங் காலத்தில் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையவர்க்கு ஒரோவிடத்துத் தாமதகுண வசத்தால் மடி (சோம்பல்) வருதலை நோக்கி, இஃது (மடியின்மை) ஊக்க முடைமையின் பின் வைக்கப்பட்டது.

க. குடியென்னுங் குன்ற விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

பரி:—(இ - ள்.) தான்பிறந்த ‡ குடியாகிய நந்தா விளக்கு ஒருவன் மடியாகிய இருளுடா நந்திப்போம், (எ - று).

¶ உலகநடையுள்ள தூணையும் $ இடையருது. + தன்னுட் பிறந்தாரை விளக்குதலின் குடியைக் 'குன்ற விளக்கம்' என்றும், * தாமதகுணத்தான்

† குணவயத்தான் - தாமத குணத்தின் வசப்படுதலால். தாமத குணத்தின் வடிவம் மோகமாம். பேருண்டி, அநீதி, உறக்கம், மறதி, சோம்பல், தவறுதல், கொலை, வஞ்சனை முதலியன தாமதகுணத்தாற் றோன்றுவனவாம். "திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே, விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர்" என்று கைவல்லிய நவநீதங் கூறுகின்றது. ‡ குடி - உயர்ந்த குலம்.

¶ உலக நடை - அவன், அவள், அது, நான், நீ என்றற்றொடக்கத்தனவாக வழங்கும் உலகவியவகாரம்.

$ இடையருது - நடுவே நீங்காது.

+ தன்னுட் பிறந்தாரை - தன் வமிசத்திற் பிறந்தவரை.

* காரியவடிவினதாகிய தாமதகுணத்தினால் சோம்பலுண்டாதலின், தாமதகுணத்தின் கருமையை அதன் காரியமாகிய சோம்பலின்மே லேற்றி 'மடியென்னு மாசு' என்று கூறினர். தாமதகுணம்-காரணம்; சோம்பல்-காரியம்; குணம்-கருமை. இது காரணத்தின் குணம் காரியத்திற்காய உபசாரவழக்காம். "குறியு நீல மயக்கமுங் கோதிலா, [illegible]கை டம்மை யிகழ்தலு நித்திரை, செறிதலானது மற்றிவற் றுற்றிண்[illegible]ர், றறிவை மாய்க்கு மதுதம மாவதே" என்று பகவத்கீதை கூறுவது [illegible]யங்கறியத் தக்கதாம்.

வருதலின் மடியை 'மாசு' என்றும், * அஃது எனையிருள்போ லாது † அவ் விளக்கத்தைத் தான் அடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின்'மாசுர மாய்த்து கெடும்' என்றுங் கூறினர். கெடுதல்-பெயர் வழக்கமும் இல்லையாதல்.

தெளி:—(இ - ள்.) குடியென்னுங் குன்றுவிளக்கம் - (தான் பிறந்த) குடியாகிய மழுங்காத விளக்கானது, மடியென்னுமாசு - (ஒருவனது) சோம்பலாகிய இருளானது, ஊர - நெருங்க, மாய்த்துகெடும் - மழுங்கிக் கெடும், (எ - று).

உலகநடை யுள்ளவளவும் இடையறாது தன்னுட் பிறந்தவரை விளக்குதலால் குடியைக் 'குன்றுவிளக்கம்' என்றும், தாமதருணத்திஞல் வருதலால் சோம்பலை'மாசு'என்றும், அது மற்றையிருள்போலாகாமல் அவ்விளக்கத்தைத் தான நெருங்கி மாய்க்கும் வலியுடைமையால் 'மாசுரமாய்த்துகெடும்' என்றும் சொல்லினர். கெடுதல்-குடிப்பெயர் வழங்குதலுமில்லாமற் போதல். மற்றையிருள் - புறவிருளாம்; மடியென்னுமாசு - அகவிருளாம்.

(க-து.) சோம்பலுடையவனது குடியானது தன் பெயர்வழங்குதலு மில்லாது கெடும் என்பது.

1. By the darkness of idleness, the indestructible lamp of family rank will go out and be extinguished.



2. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

பரி:—(இ - ள்.) **தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியாகவேண்டுவார் மடியை மடியாகவேகருதி முயற்சியோடொழுகுக, (எ-று).**

முயற்சியோடென்பது அவாய் நிலையான் வந்தது. நெருப்பிற் கொடியது பிறிதின்மைபற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுகவென்றற்போல ‡ மடியிற்றீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் ¶அப்பெயர் தன்னினே கூறினர். அங்ஙனங்கருதி அதனைக் கடிந்து முயன்றொழுகவே தாமுயர்வர்; உயரவே, குடியுயருமென்பார் 'குடியைக்குடியாக வேண்டுபவர்' என்றார். அங்ஙனம் ஒழுகாக்காற் குடியழியு மென்பது கருத்து.இனி †மடியாவென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுகவென் றுரைப்பாருமுளர்.

* அஃது - மடியென்னு மாசு.

† அவ்விளக்கத்தை - குடியென்னுங் குன்றுவிளக்கத்தை. குடியென்னுங் குன்றுவிளக்கமென்பது உருவகமாம்.

‡ மடியிற்றீயது-சோம்பலினுந் தீமையைத்தருவது.

¶ அப்பெயர் தன்னினே-மடியா என மடியென்னும் பெயரினுலேயே.

†மடியா என்பதனைச் செய்யா என்னும் வாய்பாட்டுவினையெச்சமாக்கி மடியாவொழுகல் என்பதற்கு (மடியைக்) கெடுத்து நடக்கக் கடவர் என்று பொருள் கூறுவாருமுண்டென்பது.

தெளி:—(இ - ள்.) குடியை - (தாம்பிறந்த) குடியை, குடியாக - (மேல் மேலுயரும்) நற்குடியாக, வேண்டுபவர் - விரும்புகின்றவர், மடியை - சோம்பலை, மடியா - சோம்பலாகவே, (நினைத்து), ஒழுகல் – (முயற்சியோடு) ஒழுகக் கடவர், (எ - று).

ஒழுகல் என்னும் அல்லீற்று வியங்கோள் வினைமுற்று முயற்சியோடென்பதை வேண்டி நிற்றலால், முயற்சியோடென்பது வருவித்துரைக்கப்பட்டது. நெருப்பைக் காட்டிலுங் கொடியது வேறில்லாமைபற்றி நெருப்பை நெருப்பாகவே நினைக்கவேண்டும் என்றற்போல மடியைக்காட்டிலுங்கிய தது வேறில்லாமைபற்றி (அதனை) பின்னும் (மடியா என) அப்பெயரினாலேயே சொல்லினர். மடியை மடியாகவே நினைத்து அம்மடியை யொழித்து முயற்சி செய்து நடக்கவே தாம் உயர்வர்; தாம் உயரவே, குடியுயரும் என்பார் 'குடியைக் குடியாக வேண்டுபவர்' என்றார். மடியையொழித்து முயற்சி செய்து நடக்காவிட்டால் குடியழிந்துபோம் என்பது கருத்து.

(க - து.) சோம்பலை விட்டொழுகுவோர் தாம் பிறந்த குடியை மேன்மேலுயரச்செய்வ ரென்பது.

2. Let those,who desire that their family may be illustrious, put away all idleness from their conduct.

ரு. மடிமடிக் கொண்டொழுதும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

பரி:—(இ - ள்.) **விடத்தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுதும் அறிவில்லாதான் பிறந்தகுடி அவன் தன்னினும் முந்துற அழியும்,** (எ - று).

அறிவு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலின் 'பேதை' என்றும், அவனுற் புறந்தரப்படுவதாகலின் † குடி தன்னினு முந்து மடியும் என்றுங் கூறினர். ‡ ஆக்கத்திற் பிற்படினும் அழிவின் முற்படு மென்பதாம், (எ-று).

அவனால் (அறிவில்லாதவனால்) புறந்தரப்படுவதாகலின் (பாதுகாக்கப்படுவதாகலால்) குடி (அவனதுமுயற்சியால் உண்டாவதான குடிவாழ்க்கை) தன்னினும் (அவனறிவில்லாதவனினும்) முந்துமடியும் (முன்னே அழிந்தொழியும்) என்பது. ஒருவனுற் பாதுகாக்கப்படும் குடிவாழ்க்கை அவனுக்குப்பிற்பட்டதாயிருத்தலால், அவனால் அக்குடி வாழ்க்கை பாதுகாக்கப்படாதொழியின், அஃது அவனழிவதற்கு முன்னே அழிந்துபோ மென்பது கருத்து.

(சோம்பலுடையவனது குடிவாழ்க்கை அவன் உள்ளபோதே கெட்டொழியும் என்பதாம்).

† குடி தன்னினு முந்துற அழியும் என்றும் பாடமுண்டு.

‡ ஆக்கத்திற் பிற்படினும் (குடிவாழ்க்கை மேன்மேலுயருதலில் பிற்பட்டாலும்) அழிவின் (அழிதலில் தன்னைப் பாதுகாவாதவனுக்கு) முற்படும் என்பதாம்.

தெளி:—(இ - ள்.) மடி- விடத்தகுவதாகிய, மடி - சோம்பலே, கொண்டு - (தன்னுள்ளே) கொண்டு, ஒழுகும் - நடக்கும், பேதை - அறிவில்லாதவன், பிறந்த குடி - பிறந்த குடியானது, 'தன்னினும் - அவன்தன்னினும் முந்து-முற்பட, மடியும் - அழியும், (எ - று).

அழிவதருஞ் சோம்பலே மனத்துள்ளேகொண்டு நடத்தலால் 'பேதை' என்றும், அவனுல் காப்பாற்றப்படுவதாகலால் குடி தன்னினு முந்து மடியும் என்றும், சொல்லினர். (மடிமடிக்கொண்டொழுகும் பேதை பிறந்த) குடி ஆக்கத்தில் பிற்படினும் அழிவில் முற்படு மென்பதாம்.

(க - து.) சோம்பலுடையவன் பிறந்த குடி விரைந்துகெடும்.

3. The lustre of the family of the ignorant man, who acts under the influence of destructive laziness, will perish, even before he is dead.

ச. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

பரி:—(இ - ள்.) **மடியின் கண்ணே * வீழ்தலாற்றிருத்திய முயற்சியிலராயினுர்க்கு குடியும் மடிந்து குற்றமும் பல்கும், (எ - று).**

மடிந்தெனத் திரிந்து நின்ற வினையெச்சம் இலவென்னும் குறிப்பு வினைப் பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னார்க்கூறுப. இவை நான்கு பாட்டானும் மடியின் தீமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மடி - சோம்பலிலே, மடிந்து - வீழ்தலால், மாண்டவுஞற்றிலவர்க்கு - திருந்திய முயற்சியிலராயினுர்க்கு, குடி - குடியும், மடிந்து - அழிந்து, குற்றம் - குற்றங்களும், பெருகும்-அதிகரிக்கும், (எ-று).

மடிந்து எனத்திரிந்து நின்ற மடிதலால் என்னும் (செயின் என்னும் வாய்பாட்டு) வினையெச்சம் இலவர் என்னும் எதிர்மறைக் குறிப்புவினையால ணையும் பெயரைக்கொண்டு முடிந்தது. மடிதலால் இலவர் என்றும். குற்றங்களைப் பின்வருங் குறள்களிற் சொல்லுவார். இவை நான்கு பாட்டாலும் சோம்பலினது தீமை சொல்லப்பட்டது. உஞற்றிலவர்க்கு என்பது உஞற்று + இலவர் + கு என்று பிரிபடும்.

(க - து.) சோம்பலால் முயற்சியில்லாதிருப்பவர் குடியை யிழப்பது மன்றிக் குற்றமு மடைவர் என்பது.

4. Family greatness will be destroyed, and faults will increase, in those men who give way to laziness, and put forth no dignified exertions.

ரு. நெடுநீர் மறவி மடிதுயி ஞன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

---

* வீழ்தலால் - ஆசைப்படுதலால்.

பரி:—(இ - ள்.) மடியும், விரைந்து செய்வதனை நீட்டித்துச்செய்யும் இயல்பும், மறவியும், துயிலும் ஆகிய இந்நான்கும் இறக்கும் இயல்பினை யுடையார் விரும்பி யேறும் மரக்கலம், (எ-று).

* முன்னிற்றற் பாலதாய மடி செய்யுள் நோக்கி இடை நின்றது. நெடுமையாகிய † காலப்பண்பு ‡ அதன்கண் நிகழ்வதாய செயன்மே னின்றது. கால நீட்டத்தையுடைய செயன் முதன் மூன்றும் தாமதகுணத்திற் றோன்றி உடன் நிகழ்வனவாகலின், மடியொடு ஒருங்கெண்ணப்பட்டன. இறக்கும் இயல்பு - காலுலத்தல். இவை துன்புறு நீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர் விரும்பிக் கொண்டவழித் துன்பத்திடை வீழ்த்தலின், காலுலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்றுகாட்டி அவா விரும்பி யேறியவழிக்கடலிடை வீழ்க்குங் கலத்தினையொக்கு மென்னும் ¶உவமைக்குறிப்புக் 'காமக்கலன்'என்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. + இதற்கு விரும்பிப் பூணும் ஆபரணமென் றுரைப்பாரு மூளர்.

தெளி:—(இ - ள்.) மடி - சோம்பலும், நெடுநீர் - (விரைந்து செய்யுங் காரியத்தை) நீட்டித்துச்செய்யுந் தன்மையும், மறவி - மறதியும், துயில் - துயிலும்,(ஆகிய), நான்கும் - இந்த நான்கும்,கெடுநீரார் - இறக்குமியல்பினை யுடையவர், காமக்கலன் - விரும்பியேறும் மரக்கலமாம், (எ - று).

விரைந்து செய்யவேண்டியதைத் தாமதித்துச்செய்தல், மறதி, தூக்கமென்பனவற்றிற்கு மடி (சோம்பல்) தலைமையாயிருப்பதுபற்றி அது முன் நிற்றற் பாலதாயிற்று.

† காலப்பண்பு - காலத்தின்குணம். இங்குக் காலத்தின் குணம் நெடுமை.

‡ இங்குக்காலத்தின் நெடுமைக்குணம் (காலதாமசம்) அதன்கண் நடை பெறுவதாய செயல்மேல் நின்றதென்பது. இஃது இடத்தின் குணம் இடத்து நிகழ் செயலின்மே லாய உபசாரவழக்காம்.


¶ உவமைக்குறிப்பு-உருவகம். நச்சினர்க்கினியார் "உயர்ந்ததன் மேற்றே புள்ளுங் காலே." என்னும் (தொல்காப்பியம் உவமவியற்)சூத்திரத்தின் விசேட வுரையில் "வாயென்ற பவளமெனவும், வாய் பவளமாகவெனவும், வாய் பவளமெனவும் வந்த பவளக்குறிப்புவமைகளே யிக்காலத்தார் உருவகமென்றே வழங்குப. இனி வாய்பவளமெனவும், கண் கருவிளையெனவும், பெயர்ப்பயனிலை வரின் அவற்றை யொற்றுமைகாட்டி யுருவகம் என்றலாகலின், அதுவும் உவமை யெனவேபடு மென்பது" என்றனர்.

+ காமக்கலன் என்பதற்கு விரும்பித்தரிக்கும் ஆபரணமென்று பொருள்கூறுவாருமுண்டென்பது. [மரக்கலம் மரணம்சமீபித்தவர்க்குப்பெருகுகின்தருவதுபோலத்தோன்றி அவர் விரும்பி ஏறியவிடத்து அவரைக்கடலில் விழுத்துமாறுபோல மடி முதலிய நான்கும் துன்பஞ் சமீபித்தவர்க்கு இன்பஞ் செய்வனபோலத்தோன்றி அவர் விரும்பிக்கொண்டவிடத்து அவரைத் துன்பத்தில் விழுத்தும் என்பதாம்.]

மடி நெடுநீர் மறவி துயில்என்று முன்நிற்றற்பான்மையதான மடியென் பது செய்யுள்நோக்கி 'நெடுநீர் மறவி மடி துயில்' என நடுவே நின்றது. நெடு மையாகிய காலப்பண்பு அக்காலத்தில் நடப்பதாய தொழிலின்மேல் நின் றது. காலதாமதத்தையுடைய செயல், மறவி, துயில் என்னும் மூன்றும் தா மதகுணத்தில் தோன்றி மடியுடன் நடைபெறுவனவாதலால், மடியுடன் ஒரு மித்தெண்ணப்பட்டன. இறக்குமியல்பு-வாழ்நாள்கெடுதல். இம்மடிமுதலியநா ன்கும்துன்புறுந்தன்மை யுடையவர்க்கு இன்பந்தருவனபோலக் காண்பித்து, அவர் விரும்பிக்கொண்டவிடத்து (அவரை) துன்பத்தில் தள்ளுதலால், வாழ் நாள் கெட்டவர்க்குப் பெருக்கத்தைத்தருவதுபோலக் காண்பித்து அவர் விரு ம்பியேறியவிடத்து (அவரை) கடலில் வீழச்செய்யும் மரக்கலத்தை யொக் கும் என்னும் உவமானக் குறிப்புக்'காமக்கலன்'என்னும் சொல்லாற்பெறப் பட்டது.

(க - து.) சோம்பல் முதலியவற்றை விரும்புவோர் விரை வாகக் கெடுவர் என்பது

5. Procrastination, forgetfulness, idleness, and sleep, these four things, are the ornaments desired by those whose nature leads them to destruction.



சு. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடை யார் மாண்பய னெய்த லரிது.

பரி:—(இ - ள.) நிலமுழுதும் ஆண்டாரது செல்வம் தானே வந்தெய்தியவிடத்தும், மடியுடையார் அதனை * மாண்பயனை யெய்துதல் இல்லை, (எ - று).

உம்மை எய்தாமை விளக்கி நின்றது. மாண்பயன் - பேரின்பம். ‡ அச்செல்வம அழியாமற் காக்கும் முயறசி யின்மையின் அழியும்; அழிய வே, ¶ தந்துன்ப நீங்காதென்பதாம். + இதற்கு நிலமுழுதுமுடையவேந்தர் துணையாதல் கூடியவிடத்தும் என்றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) படியுடையார்-நிலமுழுதும் ஆண்ட அரசாது, பற் று - செல்வமானது, அமைந்தக்கண்ணும்-(தானேவந்து) சேர்ந்தவிடத்தும்,

* மாண்ட - மாட்சிமையான.

+ அமைந்தக்கண்ணும் என்றவும்மை எதிர்மறையும்மையாம். இவ்வெ திர்மறையும்மை மடியுடையார் படியுடையார் பற்று (நிலமுழுதும் ஆண்ட அரசாது செல்வத்தை) எய்தாமையை விளக்கி நின்றது.

‡ அச்செல்வம் - நிலமுழுதும் ஆண்டாரது செல்வம்.

¶ தந்துன்பம் - சோம்பலுடையார் தமது துன்பம்.

+ படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் என்பதற்குப் பூமிமுழுதும் உடைய அரசர் துணையாதல் கூடியவிடத்தும் என்று பொருள் கூறுவாரு முண்டென்பது.

மடியுடையார் - சோம்பலுடையவர், (அச்செல்வத்தால்); மாண்பயன் - பேரின்பத்தை, எய்தலரிது - அடைதலில்லை, (எ - று).

அமைந்தக்கண்ணும் என்ற உம்மை அடையாமையை விளக்கிநின்றது. (மடியுடையாரிடத்து) அச்செல்வமானது அழியாமற்காக்கும் முயற்சியில்லாமையினால் அழியும்; அழியவே, தமது தன்பம் ஒழியாதென்பதாம்.

(க - து.) சோம்பலுடையார் பெருஞ் செல்வத்தைப் பெற்றராயினும், அதனாற் பேரின்பத்தைப் பெறார் என்பது.

6. It is a rare thing for the idle, even if they receive the aid of kings, to derive any great benefit from it.

எ. இடிபுரிந் தேள்ளுஞ்சொற் கேட்பார் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

பரி:—(இ - ள்.) **மடியை விரும்புதலான் மாண்டழியப்சியில்லாதார் தம் நட்டார் முன் * கழறுதலே மிகச்செய்து † அதனாற்பயன் காணுமையின் பின் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர்,** (எ - று).

‡ இடியென்னும் முதனிலைத்தொழிற் பெயரான், நட்டாரென்பது பெற்றும். ¶ அவரிகழ்ச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. + அவற்றிற்கெல்லாம் மாறுசொல்லும் ஆற்றலின்மையின் 'கேட்பர்' என்றார்.

தெளி:—(இ - ள்.) மடிபுரிந்து - சோம்பலை விரும்புதலால், மாண்டபெருமைபொருந்திய, உஞற்றிலவர்-முயற்சியில்லாதவர், இடிபுரிந்து - (தமது நட்டார் முன்னர் மிகவும்) கண்டித்துப்புத்திசொல்லி, (அதனாற் பயன்காணுமையினால்), எள்ளுஞ்சொல் - (பின்னர்) இகழ்ந்துசொல்லும் சொல்லை, கேட்பர்—, (எ-று).

கண்டித்துப் புத்திசொல்லுதல் என்னும் பொருளதான இடியென்னும் முதனிலைத் தொழிற்பெயரினால் அவ்வாறு சொல்லுவார் நட்டாரென்பது பெற்றும். அவரிகழ்தல் சொல்லவே, பிறரிகழ்தல் சொல்லாமலே பெறப்பட்டது. அவற்றிற்கெல்லாம் எதிர்பேசும் வலிமையில்லாமையால்'கேட்பர்'என்றார்.

---

* கழறுதல்-இடித்திடித்துக் கட்டுரை (உறுதிமொழிகளைக்) கூறுதல்.

† அதனால் - கழறுதலை மிகச்செய்வதனால்.

‡ "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்னுங்குறள் இங்குக் கவனிக்கத்தக்கதாம்.

¶ அவரிகழ்ச்சி - நட்டார் இகழ்ந்துபேசுதலை.

+ அவற்றிற்கெல்லாம்-நட்டாரும் பிறரும் இகழ்ந்துபேசுவனவற்றிற் கெல்லாம்.

(க-து.) சோம்பலுடையவர் தம்மைப்பற்றி நட்டாரும் பிறரும் இகழ்ந்துசொல்லுதலைக்கேட்பர் என்பது.

7. Those who love idleness, and do not engage in dignified exertions, will hear the words of rebuke and reproach.

அ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஞெனன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.

பரி:—(இ - ள்.) மடியினது தன்மை குடிமை உடையாண்கண்ணே தங்குமாயின்,* அஃது † அவனைத் தன் பகைவர்க்கு அடியனாந் தன்மையை அடைவித்துவிடும், (எ - று).

மடியினது தன்மை - ‡ காரியக்கேடு. ¶ குடிமை - § குடிசெய்தற்றன்மை. 0 அஃது அதனையுடைய அரசன்மேற்றுதல் 'தன்ஞெனன்னார்க்கு' என்றதனுறிக. அடியனுந்தன்மை - தாழ்ந்து நின்றேவல் கேட்டல். இவை நான்குபாட்டாலும் மடிமைக்குற்றங்கள் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) மடிமை - சோம்பலினது தன்மையானது, குடிமைக்கண் - குடிமையுடைய அரசனிடத்தே, தங்கின் - தங்குமாயின், (அஃது அவனை), தன்ஞெனன்னார்க்கு - தன்பகைவர்க்கு, அடிமை - அடியனுந்தன்மையை, புகுத்திவிடும் - அடைவித்துவிடும், (எ - று).

சோம்பலினதுதன்மை - காரியக்கேடு. குடிமை - குடிசெய்தற்றன்மை. அஃது அதனையுடைய அரசன்மேலாதலை 'தன்ஞெனன்னார்க்கு' என்றதனால் அறிக. அடியனுந்தன்மை - (தன்பகைவர்க்கு) வணங்கி நின்றேவல் கேட்டல் இவை நான்குபாட்டாலும் சோம்பலின் குற்றங்கள் சொல்லப்பட்டன

(க - து.) அரசனிடத்துச் சோம்பலுண்டாயின், அஃது அவனது பகைவர்க் கவனியடிமை யாக்கு மென்பது.

8. If laziness take up its abode in a king it will make him a slave of his enemies.

கூ. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

* அஃது - மடியினது தன்மை. † அவனை - குடிமையுடையானை.

‡ காரியக்கேடு - செய்தொழில் முற்றுப்பெறாதழிதல்.

¶ "குடிமையாவது குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம்" என்பர் நச்சினார்க்கினியார்.

§ குடிசெய்தற்றன்மை - குடிவாழ்க்கையை விருத்திசெய்யுந் தன்மை.

0 அஃது - (குடிசெய்தற்றன்மை) அதனை (குடிசெய்தற்றன்மையை) யுடைய அரசன்மேற்றுதல் (அரசன்மேலாகுதல்) 'தன்ஞெனன்னார்க்கு' என்றதனு (தனது பகைவர்க்கு என்றதனு) லறிக என்பது. குடிமை யென்னும் பண்புப்பெயர் குடிமை யுடையவனையுணர்த்துதலால் பண்பாகுபெயராம்.

பரி:—(இ - ள்.) ஒருவன் தன் மடியாளுந்தன்மையை ஒழிக்கவே, அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும், (எ-று).

மடியாளுந்தன்மை - மடியுடைமைக் கேதுவாய தாமதகுணம். குடியாண்மை யென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த குற்றமென்றது மடியான் அன்றிமுன்னே †பிறகாரணங்களான் நிகழ்ந்தவற்றை.அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்குமென்பதாம்.

தெளி:—(இ-ள்.) ஒருவன்,— மடியாண்மை-தனதுசோம்பலே யாளுந்தன்மையை, மாற்ற - ஒழிக்கவே, குடியுள் - (அவனது) குடியுள்ளும், ஆண்மையுள் - ஆண்மையுள்ளும், வந்த—, குற்றம் - குற்றங்கள், கெடும்-அழியும், (எ - று).

சோம்பலே யாளுந்தன்மை - சோம்பலுடைமைக்குக் காரணமாகிய தாமதகுணம். குடியாண்மை யென்பது உம்மைத்தொகை கிலேத் தொடர; குடியும் ஆண்மையும் என லிரியும். உள் என்னும் ஏழனுருபு குடியென்பதனோடுஞ்சென்றியைத்து கின்றது. குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்களென்றது சோம்பலால்நி முன்னே வேறு காரணங்களாலுண்டாயவற்றை. அக்குற்றங்களும் சோம்பலையாளுந் தன்மையை யொழித்து முயற்சியுடையவனாக ஒழியும் என்பதாம்.

(க - து) ஒருவன் தனது தாமதகுணத்தை யொழிப்பானு யின், அவனது குடியினிடத்தும் ஆண்மையினிடத்தும் உண்டாகிய குற்றங்களொழியும் என்பது.

9. When a man puts away idleness, the reproach which has come upon himself and his family will disappear.

கo. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
நூறய தெல்லா மொருங்கு.

பரி:—(இ - ள.) தன்னடியளவானே எல்லாவுலகையும் அளந்த * இறைவன் ‡ கடந்த ¶ பாப்பு முழுதையும் மடியிலாத அரசன் 0 முறையான் அன்றி ஒருங்கே எய்தும், (எ - று).

† பிறகாரணங்கள் - காலமறியாமை, இடமறியாமை, செய்வினையின் மூலமறியாமை, மூடிவறியாமை, சூழ்வன சூழாமை, தீவினவலி தெரியாமை முதலியனவாம்.

இறைவன் - திருமால். ‡ கடந்த - தாவியளந்த.

¶ பரப்பு முழுதையும் - சுவர்க்க மத்திய பாதாள மென்னு மூன்று லகத்தையும். பரப்பையுடைய உலகத்தைப் பரப்பென்றது பண்பாகு பெயராம்.

0 முறையான் அன்றி - கல்வினைக்கேற்பப்பெறும் ரமத்தினுலல்லாது.


* அடியளந்தானென்றது வாளா பெயராய் நின்றது. தாவியதென் பது இடைக்குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முய றலின், இடையீடின்றி யெய்துமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் மடியிலாதான் எய்தும் பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) மடியிலா - சோம்பலில்லாத, மன்னவன் - அர சன், அடி - (தன்) அடியளவாலே, அளந்தான் - (எல்லாவுலகத்தையும்) அளந்த கடவுள், தாவயதெல்லாம் - கடந்தபரப்பு முழுதையும், ஒருங்கு - (முறையாலல்லாமல்) ஒருசேர, எய்தும் - அடைவான், (எ - று).

அடியளந்தான் என்பது அடியால் உலகமளந்தவனென்னும் பொரு ளுணர்த்தாது திருமாலென்னும் பெயர் மாத்திரமாய் நின்றது. தாவியது என்பது இடைகுறைந்து (இடைநின்ற வி என்பது குறைந்து) தாவயது என அளபெடித்து நின்றது. எப்பொழுதும் தொழில்செயதலிலே முயலு தலால், (மடியிலா மனனவன்) உலகமுழுவதையும் தடையில்லாது அடை வானெனபதாம். இவையிரணடுபாட்டாலும் சோம்பலில்லாத அரசன் அடை யும் பயன் சொல்லப்பட்டது.

(க - து.) சோமபலில்லாத அரசன் எலலா வுலகும் ஆளப் பெறுவான் என்பது.

10. The king who never gives way to idleness will obtain entire possession of the space passed over by Him who measured the worlds with His foot.



பின்னிற்கும் தாவயது என்பது திருமால உலகமளந்த வரலாற றைத்தெரிவித்து நிற்றலால், முன்னிற்கும் அடியளந்தான் என்பது அவ்வர லாற்றைத் தெரிவியாது வாளா (சும்மா-யாதொரு விசேடமுங் கற்பியாது) திருமாலென்னும் பெயர் மாத்திரமாய நின்றதெனஉ. "வெருவந்த செய தொழுகும் வெங்கோல ஞபின்" என்னுங் குறளின் விசேடவுரையில் "வெங்கோலனென்பது ஈண்டுவாளாபெயராயநினறது" என்றிருப்பது மிங் குணர்தற் குரியதாம். மாவலி யென்னுமோரசுரன் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் தன் வசப்படுத்திக்கொண்டு ஒருபெரிய யாகஞ்செய்து வருபவர்களுக்கு அளவிறந்ததானகளகொடுத்துவருகின்றபோது, திருமால் (விஷ்ணு) காசிப முனிக்கும் அதிதியெனபாளுக்கும் குறுகிய உருவமுள்ள பிள்ளையாகப்பிறந்து, அம்மாவலியிடத்தசென்று, மூன்றடி மண்யாசித்துப் பெற்றுப், பிறகுதிரிவிக்கிரம வடிவங்கொண்டு, மண்ணுலகதையோரடி யாலும் விண்ணுலகத்தை மற்றோரடியாலும் அளந்து, மற்றோரடியை அம் மாவலியினது தலையின் மீதவைத்து, அவனைப் பாதாளலோகதிலிருக்கும் படியழுத்தி விட்டானென்பது கதை. இதன் விரிவை இராமாயணம் பால காண்டம் வேள்விப்படலத்திற் காண்க.

† தாவியது என்பது தாயது என்றபது தொகுத்தல் விகாரமாமென் பர் இக்காலத்திலக்கணிகள்

இருபத்து நான்காம் அதிகாரம்.

ஆளவினையுடைமை—*On manly effort.*

பரி:—அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சி உடையனுதல். அஃது ஆளும் வினையெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடி கெடுத்தாலும் வினை முயற்சியான் அன்றி ஆளப்படாமையின், இது மடியின்மையின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சியை யுடையனுதல். அம்மெய்ம்முயற்சி ஆளும் வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது. சோம்பலைக் கெடுத்தாலும் தொழில் முயற்சியாலல்லாமல் ஆளப்படாமையின், இது (ஆள்வினையுடைமை) மடியின்மையின்பின் வைக்கப்பட்டது. மெய் - உடம்பு.

க. அருமை யுடைத்தென் † றசாவாமை ‡ வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

பரி:—(இ - ள்.) தஞ் ¶ சிறுமை நோக்கி நாம் இவ்வினை முடித்தல அருமை யுடைத்தென்று கருதித் தளராதொழிக; அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சி யுண்டாக்கும், (எ - று).

சிறுமைநோக்கி யென்பது பெருமை தரும் என்பதனானும், வினை முடித்தலென்பது 0 அதிகாரத்தானும் வருவிக்கப்பட்டன. வீடாது முயலத்தாம் பெரியராவர்; ஆகவே, § அரியனவும் எளிதின் முடியுமென்பதாம்.

தெளி:—(இ - ள்.) (தமது சிறுமையை நோக்கி) அருமையுடைத்தென்று - (நாம் இத்தொழிலை முடித்தல்) அருமையை யுடையதென்று, மெய்ம்முயற்சியாகிய காரணத்தால் தொழிலை வாளுந்தன்மை யுண்டாதல்பற்றி, ஆள்வினை யுடைமை யென்னும் காரியப்பெயரால் மெய்ம் முயற்சி குறிப்பிக்கப்பட்டது. இவ்வாறு கூறுதல் காரிய வாகுபெயராம். ஆள்வினையென்பது ஆளும் வினையென விரிதலின், வினைத்திதாகை நிலைத் தொடராம்.

† *அசாவாமை - சோர்வடையாமை. அசா - சோர்வு (தளர்ச்சி).*

‡ வேண்டும் என்பதை இலக்கணக்கொத்து நூலார் தேற்றப் பொருள்பட்டு சிற்கும் தொழிற்பெயரென்பார்; சேனாவரையர் முதலியோர் வியங்கோட்பொருட்டு என்றும், விதிப்பொருட்டென்றும், தகுதிப்பொருட்டென்றும், வேண்டுவது என்றும் கூறுவர்.

¶ சிறுமை - பொருள், படை, தினை முதலியவற்றின் குறைவு.

0 ஆள்வினை யுடைமை யென்னு மிவ்வதிகாரத்தாலும்.


§ "தண்டைறைசீர் நின்ற தவத்தா லலிமருவும், புண்டரிகம் நின்வதனம் போன்றதால் - உண்டோ, பயின்ரு ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேல், முயன்ரு ன் முடியாப் பொருள்" என்று தண்டியலங்காரத்தில் சங்கீர்ணலங்காரத்திற்கு உதாரணமாகக் காட்டிய இவ்வெண்பாவும் இக்குக் வளித்தற் குரியதாம்.

(நினைதல்), அசாவாமைவேண்டும் - தளராதிருத்தல்வேண்டும், பெருமை (அத்தொழிலே முடித்தற்கு வற்ற) பெருமையை, முயற்சி-முயற்சியானது, தரும்-(தமக்கு) உண்டாக்கும், (எ - று).

நெறமையை நோக்கியென்பது பெருமைதரும் என்றதனாலும், தொழிலே முடித்தலென்பது அதிகாரத்தாலும் வருவிக்கப்பட்டன. விடாது முயற்சிசெய்யத் தாம் பெருமையை யுடையவராவர்; ஆகவே, அரியதொழில்களும் எளிதில் முடியுமென்பதாம்.

(க - து.) தாம் மேற்கொண்ட தொழில் செய்தற் கருமையதென்று தளராது முயற்சியோ டிருப்பவர்க்கு அம்முயற்சி அத்தொழிலே முடித்தற்கேற்ற பெருமையை யுண்டாக்கும்.

1. Yield not to the feebleness which says, "this is too difficult to be done;" labour will give the greatness of mind which is necessary to do it.



உ. வினைக்கண் வினைகெட லோம்பல் † வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

* பரி:—(இ - ள்.) வினையாகிய தூறையைச் செயயாது விட்டாரை உலகம் விட்டது; ‡ அதனுற் செயயப்படும் வினைக்கண் தவிர்ந்திருத்தலே ஓழிக, (எ - று).

¶குறை - இன்றியமையாப் பொருள். ¶ அது 0 'பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே'' என்பதனாலுமறிக.*இதற்குவினைசெய்யவேண்டுங்குறையை நீங்குஞரின் நீங்கிற்றென் றுரைப்பாருமுளர்.

† வினைக்குறை - இன்றியமையாது (அவசியமாகச) செய்யவேண்டிய தொழில்.

‡ அதனால் - செய்யவேண்டிய காரியததைச் செய்யாது விட்டவரை யுலகம் விட்டதனால். ஆதலால் என்றும் பாடமுண்டு.

¶ அது - குறையென்பது இன்றியமையா (இல்லாது முடியா)ப் பொருளே யுணர்த்துதல்.

0 புற நானூறு கஅஅ. இதன்பொருள்.(இன்பத்தால் மயக்கும்பின்னே கலே யில்லாதவர்களுக்கு) பயனுடைய முடிக்கப்படும்பொருளில்லை; தாம உயிர்வாழும் நாளின்கண் என்பது. இதனது விசேடவுரையில் "குறை யெனபது முடிக்கப்படுங்கால் முடிக்கப்படும் பொருள். இனிப்பயக்குறை யுள்ளதென ஒரு சொல்வருவித்துத் தாம் வாழும் நாளும் இல்லையென்று கூறுவாரு முளர்" என்று கூறப்பட்டிருக்கின்றது.


* தீர்ந்தாரின் தீர்ந்தன்று என்பதற்குத் தீர்ந்தாரின்-(தொழில்செய்ய வேண்டுங்குறையை) நீங்கியவரினின்றும்,தீர்ந்தன்று—(உலகம்) நீங்கியது என்றுபொருள்கூறுவாருமுண்டு. தீர்ந்தன்று என்பதில் அன்சாரியையாம்.

தெளி:—(இ - ள்.) உலகு - உலகமானது, வினைக்குறை - தொழிலாயை குறையை, தீர்ந்தாரின் - செய்யாதுவிட்டவரை, தீர்ந்தன்று - விட்டது, (அதனால்), வினைக்கண் - (செய்யப்படுக்) தொழிலினிடத்து, வினை செடல் - செயலற்றிருத்தலே, ஓம்பல் - ஒழியக்கடவன், (எ - று).

குறை - அவசியம் வேண்டியபொருள். ஓம்பல் - அல்லீற்றுடம்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

(க - து.) மேற்கொண்ட காரியத்தை முற்றுப்பெறச் செய்யாது விட்டவரை யுலகம் விட்டு நீக்கிப்போதலால், மேற்கொண்ட காரியத்தைத் தளர்ச்சியின்றி முடித்தல் வேண்டும் என்பது.

2. Take care not to give up exertion in the midst of a work, the world will abandon those who abandon their unfinished work.



கூ. தாளாண்மை யேன்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யேன்னுஞ் செருக்கு.

பரி:—(இ - ள்.) முயற்சியேன்று கொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின் கண்ணே நிலைபெற்றது எல்லார்க்கும் உபகாரஞ் செய்த லென்னும் மேம்பாடு, (எ - று).

பொருள் * கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சி யுடையா ரென்பார் † அவ்வக்குணங்கண்மேல்வைத்தும், ‡ அது ¶ பிறர்மாட்டில்லை யென்பார் 0 'தங்கிற்றே' என்றுங் கூறினர். இவை மூன்றுபாட்டினும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வேளாண்மையென்னும் - (எல்லார்க்கும்) உபகாரஞ் செய்தலென்னும், செருக்கு - மேம்பாடானது, தாளாண்மை யென்னும் - முயற்சியென்ற சொல்லப்படுகிற, தகைமைக்கண் - உயர்ந்தகுணத்தினிடத்தே, தங்கிற்று - நிலைபெற்றது, (எ - று).

பொருள் கைகூடுதலால் (எல்லார்க்கும்) உபகாரஞ் செய்தற் குரியவர் முயற்சி யுடையவரென்பார் (தாளாண்மை யென்னுந்தகைமை, வே

---

* கைகூடுதலான் - கிட்டுதலால்.

† அவ்வக்குணங்கள் மேல் வைத்தலாவது தாளாண்மை (முயற்சி) யுடையாரே வேளாண்மை (எல்லார்க்கும் உபகாரஞ்செய்தலை) யுடையரா வர் என்று கூறுது, தாளாண்மை யுடையாரைத் தாளாண்மை யென்னுந் தகைமை யென்றும், வேளாண்மை யுடையாரை வேளாண்மை யென்னுஞ் செருக்கு என்றும், குணிகளைக் குணங்களின் மேல்வைத்துக் கூறியவாறு மென்க. தாளாண்மை யென்னுந் தகைமை, வேளாண்மை யென்னுஞ் செருக்கு என்பன குணங்கள்; அவற்றையுடையார் குணிகள்.

‡ அது - வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

¶ பிறர்மாட்டு - முயற்சி யில்லாதவரிடத்தி. 0 ஏகாரம் - பிரிநிலைப் பொருளது.

ளாண்மை யென்னுஞ் செருக்கு என) அந்தந்தக் குணங்கள்மேல் வைத்துச், அது பிறரிடத்தில்லே யென்பார் (தாளாண்மை யென்னுந் தகைமைக்ண்) 'தங்கிற்றே' என்றும் சொல்லினர். இவை மூன்று பாட்டாலும் முயற்சி யது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) எல்லார்க்குஞ் உபகாரஞ் செய்தலென்னும் மேம்பாடு முயற்சியுடையாரிடத்து நிலேபெற்றுளது என்பது.

3. The lustre of munificence will dwell only with the dignity of laboriousness.

க. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

பரி:—(இ - ள்.) முயற்சி யில்லாதவன் உபகாரியாந்தன்மை படைகண்டால் அஞ்சும் பேடி அதனிடைத் தன் கையில் வாளே அளுதற்றன்மைபோல (இல்லையாம், (எ - று).

ஆளென்பது முதனிலேத்தொழிற் பெயர். † பேடி வாளேப் பணிகோடற் கருத்துடையளாயினும் ‡ அது தன் அச்சத்தான் முடியாதவாறு போல, முயற்சியில்லாதான பலர்க்கும் உபகரித்தற் கருத்துடையனாயினும் ¶ அது தன் வறுமையான முடியாதென்பதாம் வாளாண்மை யென்பதற்கு வாளாற் செய்யும் O ஆண்மையென்று முரைப்பாரு முளர். இதனுல் அஃதில்லாதானது குற்றங் கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) தாளாண்மையில்லாதான் - முயற்சியில்லாதவன், வேளாண்மை - உபகாரியாந் தன்மை, பேடி (சேனேயைச் சண்டால் அஞ்சும்)பேடியானவள், கைவாளாண்மைபோல-(அசேனேயினிடத்துத் தன்) கையில் வாளேயாளுதற்றன்மைபோல, கெடும் - இல்லேயாம்,(எ-று).

ஆள் என்பது ஆளுதல் என்று பொருள் பட்டமையான், முதனிலேத் தொழிற்பெயராயிற்று. முதனிலே (பகுதி) தொழிற்பெயர்ப் பொருளே யுணர்த்தும்போது முதனிலேதொழிற்பெயரெனப்படுகின்றது.

† ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமும் விரவி (கலந்து) ஒரு வகையேனும் நிரம்பாது நிற்பது பேடியாமென்பர் நன்னூல் விருத்தியுரைகாரர். "ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்திக், காம ஞடிய பேடியாடலும்" என்பதன் விசேடவுரையில் அடியார்க்கு நல்லார் "ஆண்மைத் தன்மையிற்றிரிதலாவது விகாரமும் வீரியமும் நகரும் பெற்றியும் பத்தியும் பிறவுமின்றுதல் ஆண்மை திரிந்த என்பதனுல் தாடியும், பெண்மைக் கோலதது என்பதனுல் முலே முதலிய பெண்ணுறுப்புப்பலவுமுடையது ஆண்பேடென்று பெயர்பெறுமெனக்கொள்க" என்று கூறியிருப்பதிங்கு உணர்தற்பாலதாம். சிலப்பதிகாரம்—கடலாடுகாதை.

‡ அது - வாளேப் பணிகோடற் கருத்து.

¶ அது - பலர்க்கும் உபகரித்தற் கருத்து.

O ஆண்மை - ஒன்றற்குந் தளராது நிற்றல்.

ஆனென்பது முதனிலைத்தொழிற் பெயர். பேடியானவன் வரிசை (பகைவரை வெட்ட) உபயோகித்தற்குக் கருத்துடையவனாயினும் அஃது அவள் தன் அச்சத்தால் முடியாத விதம்போல, முயற்சியில்லாதவன் பலருக்கும் உபகாரஞ் செய்தற்குக் கருத்துடையவனாயினும் அஃது அவன் தன் வறுமையால் முடியாதென்பதாம். இதனால் அம்முயற்சி யில்லாதவனது குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) முயற்சியில்லாதவனிடத்துப் பிறர்க்கு உபகாரஞ் செய்யுந்தன்மை யொருவாற்றானு மின்றும் என்பது.

4. The liberality of him, who does not labour, will fail, like the manliness of a hermaphrodite, who has a sword in its hand.

---

9. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

பரி:—(இ - ள்.) தனக்கின்பத்தை விரும்பாதவனே வினை முடித்தலையே விரும்புவான் தன் * கேளிராகிய பாரத்தின் றுன்பத்தினை நீக்கி † அதனைத் தாங்குந் தூணும், (எ - று).

‡ இஃது ஏகதேச வுருவகம். ஊன்று மென்றது ¶ அப்பொருட்டாதல் 0 "மதலையாய் மற்றதன் வீழ்நன்றி யாங்கு" என்பதனுமறிக. சுற்றத்தார் கட்டாரது வறுமையுந்தீர்த்த + அவர்க்கு †† ஏமஞ் செய்யும் ஆற்றலையுடையனு மெனவே, ‡‡ தன்னைக் கூறவேண்டா வாயிற்று.

* கேளிர் - யோக க்ஷேமங்களைக் கேட்குந் தன்மையர்.

† அதனை - கேளிராகியபாரத்தினை.

‡ இன்பத்தை விரும்பாது தொழில் முடித்தலை விரும்புவானைத் தூண் என்ற உருவகப்படுத்தினவர் அதற்கேற்பக் கேளிரைப்பாரம்(பளுவு) என்ற உருவகப்படுத்தாமையின், இக்குறள் ஏகதேச வுருவகவணியாயிற் றென்க.

¶ அப்பொருட்டாதல் - தாங்கும் என்னும் பொருளினை யுடையதாதல்.

0 நாலடியார் தானாண்மை ஏ. இதன் பொருள். (செல்லினால் தின்னப்பட்ட ஆலமரத்தை) தூணுய்ன்று அவ்வாலமரத்தின் வீழுது தாங்கினாற் போல என்பது.

+ அவர்க்கு - சுற்றத்தார் கட்டாரென்னும் பாகு மித்திரர்களுக்கு.

†† ஏமம் - பாதுகாத்தல்.

‡‡ தன்னைக் கூறவேண்டாவாயிற்று-இன்பத்தை விரும்பாது தொழில் முடித்தலை விரும்புவான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வல்லமையுடையவனுவ னென்பதைச் சொல்லவேண்டுவதில்லை யாயிற்று.

* காரியத்தைவிழையாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனுமெய்து மென்றதனால், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும் எய்தானென்பது பெற்றாம். இதனால் அஃதுடையானது நன்மை கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) இன்பம் விழையான் - (தனக்கு) இன்பத்தை விரும்பாதவனும், வினைவிழைவான் - தொழில் முடித்தலேயே விரும்பு வான், தன்கேளிர் - தனது (சுற்றத்தார் கட்பினென்னும்) கேளிராகிய பாரத்தினது, துன்பம் - துன்பத்தை, துடைத்த - நீக்கி, ஊன்றும் - (அப்பாரத்தைத்) தாங்கும், தூண் - தூணும், (எ - று).

இஃது ஏகதேச உருவகவணி. (இன்பம் விழையாது வினை விழைவான்) கேளிரது வறுமையையுந்தீர்த்து அவர்க்குஏமஞ்செய்யும்வல்லமையையுடை யவனுவனெனவே, (அவன்) தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுதலேச்சொல்ல வேண்டுவதில்லையாயிற்று. காரியமாகிய இன்பத்தை விரும்பாமல் காரண மாகிய முயற்சியை விரும்புவான் எல்லாப் பயனும் அடைவானென்றதனால், காரணமாகிய முயற்சியை விரும்பாமல் காரியமாகிய இன்பத்தை விரும்புவான் ஒருபயனும் அடையானென்பது பெறப்பட்டது. இதனால் அம்முயற்சியுடையவனது நன்மை சொல்லப்பட்டது.

(க - து) இன்பத்தைவிரும்பாது அதற்குக்காரணமாகிய முய ற்சியை விரும்புவான் தன சுற்றத்தார் கட்பினது துன்பத்தையொ ழிப்பான் என்பது.

5. ,He who desires not pleasure, but desires labour, will be a pillar to sustain his relations, wiping away their sorrows.

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

பரி:—(இ - ள்.) அரசர் மாட்டேதாய முயற்சி அவரது செல்வத் தினை வளர்க்கும்; அஃதில்லாமை வறுமையை அடைவித்து விடும்.

செல்வம் † அறுவகை யங்கங்கள். வறுமை ‡ அவற்றுள் வறியராதல்.

முயற்சியின் காரியமாகிய இன்பத்தைவிரும்பாமல் இன்பத்திற் குக் காரணமாகிய முயற்சியை விரும்புவான் எல்லாப்பயனும் அடை வான் என்று கூறினமையின், இன்பத்திற்குக் காரணமான முயற்சியை விரும்பாமல் முயற்சியின் காரியமாகிய இன்பத்தைவிரும்புவான் யாதொ ருபயனும் அடையமாட்டானென்பது பெறப்பட்டதென்க.

† அறுவகையங்கங்கள் - அமைச்சு (மந்திரி), நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பன.

‡ அவற்றுள் வறியராதல் - அமைச்சுமுதலிய அங்கங்களால் குறைவு பட்டவராதல்.

அதனே யடைவிக்கவே, பகைவரான் அழிவரென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) முயற்சி - (அரசரிடத்து உண்டாகிய) முயற்சியானது, திருவினை - (அவரது) செல்வத்தை, ஆக்கும்-வளர்க்கும், முயற்றின்மை - அம்முயற்சியில்லாமையானது, இன்மை-வறுமையை, புகுத்திவிடும் - அடைவித்து விடும், (எ-று).

செல்வம் - அமைச்சு முதலிய அறுவகை யங்கங்கள். வறுமை-அவற்றுல் தரித்திராதல். (முயற்றின்மை) அதனே யடைவிக்கவே, (தரித்திரமுடைய அரசர்தமது) பகைவரால் அழிவரென்பது கருத்து.

(க - து.) முயற்சி செல்வத்தையும் அம்முயற்றின்மை தரித்திரத்தையு முண்டாக்கும் என்பது.

6. Labour will produce wealth; idleness will bring proverty.

எ. மடியுளாண் † மாமுகடி யேன்ப மடியிலான்
ருளுளா டாமரையி னாள்.

பரி:—(இ - ள்.) கரிய ‡ கேட்டை ஒருவன் மடியின் கண்ணே யுறையும்; திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே யுறையுமென்று சோல்லுவர் அறிந்தோர், (எ-று).

¶ பாவதற்கின் கருமை 0 அதன் பயனுய முகடிமே லேற்றப்பட்டது.

* அதனே - வறுமையை(முயற்சியில்லாமையானது) அடைவிக்கவே, (வறுமையை யுடைய அரசர்) பகைவரால் அழிவரென்பது கருத்தாம். முயற்சியில்லாத அரசர் அமைச்சுமுதலிய அங்கங்களால் குறைவுபட்டிருத்தலால், அவர் எளிதில் பகைவரால் அழிவரென்பது திரண்டபொருளாம்.

† மா என்பது இங்குக் கருமை யென்னும் பொருண்மேல் நின்றது.

‡ கேட்டை என்பதற்கு மூத்தாளென்பது பொருள். திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் அக்கடலில் இலக்குமிக்கு முன்னர் மூதேவியுண்டானமை பற்றி அவள் மூத்தாள் எனப்பட்டாள். இவள் சேவர்களுக்குச் சோம்பல் முதலியவற்றை யுண்டாக்குந் தெய்வமாவள்; கருமை நிறமும், சர்ப்பாபரணமும், கழுதைவாகனமு முடையவள். இவளுக்குக் கொடி - காகம்; ஆயுதம் - திடைப்பம்.

¶ பாவம் என்னும் குணம் கருமையென்னும் குணத்தை யேற்றலின் முயினும், கலிஸமயமாபற்றிப் பாவத்திற்குக் கருமைநிறம் கூறப்பட்டது. பொருள் குணத்தையும் தொழிலேயும சாதியையும் ஏற்று நிற்குமென்றும், குணம குணத்தையும் தொழிலேயும், சாதி சாதியையும் குணத்தையும் தொழிலேயும் ஏற்று நில்லாவென்றும் தருக்கநூல் கூறுகின்றது. கீர்த்தி புண்ணியம் சிரிபு முதலியன வெண்மை நிறமுடையன; ஆசை ஆண்மை முதலியன செம்மை நிறமுடையன; அபகீர்த்தி அஞ்ஞானம் முதலியன கருமை நிறமுடையன வென்ற கூறுதலுமுண்டு.

0 அதன்பயனுய முகடிமேல் ஏற்றப்பட்டது—(பாவத்தின் கருமையானது) அப்பாவத்தினது பயனுமுகடி (மூதேவி)யின்மேல் ஏற்றிச்சொல்

மடியும் முயற்சியும் உடையார் மாட்டு நிலையை* அவை தம்மேல் வைத்துக் கூறினர். இவை இரண்டு பாட்டானும் † அவ்விருமைக்கும் ‡ ஏது கூறப்பட்டது.

தேனி:—(இ - ள்.) மாமுகடி - கரிய மூதேவியானவள், மடி - (ஒருவனது) சோம்பலிலே, உளாள - வசிப்பாள், தாமரையினாள் - சீதேவியானவள், மடியிலான் - சோம்பலில்லாதவனது, தான் - முயற்சியிலே, உளாள் - வசிப்பாள், என்ப - எனறு சொல்லுவர் (அறிஞர்), (எ - று).

பாவத்தின் கருமை அதன்பயனிய முகடியின்மே லேற்றப்பட்டது. சோம்பலை யுடையவனிடத்து மூதேவியும் முயற்சியை யுடையவனிடத்துச் சீதேவியும் வசிதகரலை அவை தம்மேல் வைத்து (சோம்பலிலே மூதேவி வசிப்பாள் என்றும் முயறசியிலே சீதேவிவசிப்பாள என்றும்) கூறினர். இவை இரண்டு பாட்டாலும் செல்வத்திற்குக காரணம் முயற்சியென்றும், வறுமைக்குக்காரணம் முயற்சியின்மை யென்றும் சொலலப்பட்டன.

(க - து.) சோம்பலுடையவனிடத்து மூதேவியும் அஃதிலலாதவனிடத்து நச சீதேவியும் வசிப்பர் என்பது.

7. They say that the black Mûdévi (the goddess of adversity) dwells with laziness, and that Latchmi (the goddess of prosperity) dwells with the labour of the industrious.

அ. பொறியின்மை யார்க்கும் பழியன் ¶ றறிவறிக்
$ தாள்வினை யின்மை பழி.

பரி:—(இ - ள்.) பயனைத் தருவதாய + விதியில்லாமை () ஒருவர்க்கும் பழியாகாது; அறியவேண்டு மவற்றை யறிந்து வினை செயபாமையே பழியாவது, (எ - று).

லப்பட்டது. இதனால் பாவஞ்செப்தவன் தான்செய்தபாவத்தின் பயனை அடைவது மூதேவியென்றுயிற்று; ஆகலே, அவன் வறுமையாளன் என்பது வெள்ளிடை மலையாயிற்றென்க.

* அவை தம்மேல் - மடி (சோம்பல்) முயற்சிகளின் மேல்.

† அவ்விருமைக்கும் - செல்வம் வறுமையென்னு மவ்விரண்டற்கும்.

‡ ஏது - முயற்சியும், முயற்சியின்மையும்.

¶ அறிவு என்னும் தொழிற்பெயர் அறியவேண்டுமவற்றை யுணர்த்துதலால் தொழிலாகு பெயராம். இவ்வாறு கூறுதல் இலக்கணநூற்கொள்கை; தருக்கநூற்கொள்கையின்படி பண்பாகுபெயராம்.

$ ஆள்வினையென்பதற்கு ஒரு சொல்லாய் நின்றது.

+ விதியென்றது இங்கு முற்பிறப்பிற் செய்த தல்வினையை.

() எவர்க்கும் என்னும் பாடமுண்டு.

அறியவேண்டுவன- வலி ¶ முதலாயின. 0 தெய்வம் இயைபாவழிஆள் வினை யுடைமையாற் பயனில்லை யென்பாரை நோக்கி, உலகம் ‡ பழவினை பற்றிப் பழியாத ஈண்டைக் குற்றமுடைமை பற்றியே † பழிப்பதென்பார் 'ஆள்வினை யின்மை பழி' என்றார். * அதனால் விடாது முயல்க வென்பது குறிப்பெச்சம்.

தெளி:—(இ-ன்.) பொறியின்மை - (பயனைத் தருவதாகிய) வினையில்லாமை, யார்க்கும் - ஒருவர்க்கும், பழியன்று-பழியாகாது, அறிவறிந்த-அறியவேண்டுவனவற்றை யறிந்து, ஆள்வினையின்மை - தொழில் செய்யாமையே, பழி - பழியாவதாம், (எ - று).

அறியவேண்டுவன-வலிமுதலாயின. ஊழ் பொருந்தாதவிடத்துத் தொழில்செய்தலால் பயன் இல்லை யென்பாரை நோக்கி, உலகம் பழவினை பற்றிப் பழியாத இவ்விடத்துத் தொழில்செய்யாத குற்றமுடைமை பற்றியே பழிப்பதென்பார் 'ஆள்வினை யின்மை பழி' என்றார். அதனால் விடாது முயல்க வென்பது குறிப்பெச்சம்.

(க - து) அறியவேண்டுவனவற்றை யறிந்து தொழில் செய்யாமையே யார்க்கும் பழியாம் என்பது.

8. Adverse fate is no disgrace to any one; to be without exertion, and without knowing what should be known, this is disgrace.

கூ. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

பரி:—(இ-ள்.) முயன்றவினை பால்வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும் பாழாகாது, (எ-று).

+ தெய்வத்தானையுவழித் தன்னளவின்மிக்க பயனைத் தருமென்பது

¶ முதலாயின என்றமையின், காலமும் இடமுங் கொள்க.

0 வினை பயனைத் தருவதற்கு அனுகூலமாகாதபோது தொழில் செய்தலால் பயனில்லை யென்பது "எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது, புண்ணியம் வந்தெய்து போதலால்" என்று ஔவைப்பிராட்டியார் கூறுதலாலு முணரப்படும்.

‡ பழவினை - பூர்வகர்மம்; இது சஞ்சிதமென்றுஞ் சொல்லப்படும்.

† பழிப்பதென்றார் என்றும் பாடமுண்டு.

* அதனால் (ஆள்வினையின்மை பழி என்றதனால்) விடாது முயல்க என்பது குறிப்பாக வுணர்மாறெஞ்சி (குறைந்து) நின்றது.

+ முயன்று செய்ததொழில் ஊழினால் முடிவுபெற்ற விடத்தில் தன்னளவிற்கு மேற்பட்ட பயனைத் தருமென்பது தெய்வத்தா னாகா தெ

உம்மையாற் பெற்றும். † இருவழியும் பாழாகல் இன்மையின், தெய்வ நோக்கியிராது முயல்கவென்பது கருத்து.

தேளி:—(இ-ள்.) (முயன்று செய்ததொழில்) தெய்வத்தான் - ஊழ் வகையால், ஆகாதெனினும் - (கருதிய பயனைத்) தராதாயினும், முயற்சி-முயற்சியானது, தன்மெய்-தனக்கிடமாகிய உடம்பு, வருத்தக்கூலி-(வருந்திய) வருத்தத்தின் கூலியளவு, தரும்-கொடுக்கும், (பாழாகாது), (எ-று).

(முயன்று செய்ததொழில்) ஊழினுலாய விடத்துத் தன்னளவின் மிகுந்த பயனைத் தருமென்பது எனினும் என்ற உம்மையாற்பெற்றும். முயன்ற செய்த தொழில் ஊழ்வகையால் ஆயவிடத்தும் ஆகாதவிடத்தும் பாழாகலின்மையால், ஊழைநோக்கி யிராமல் முயல்கவென்பது கருத்து.

(க-து.) கருதிய பயன் தரும் கல்வினை யில்லா விடத்தும் முயற்சி உடல்வருத்தத்திற்கேற்ற பயனைத்தரும் என்பது.

9. Although it be said that, through fate, it cannot be attained; yet labour, with bodily exertion, will yield its reward.



கo. ஊழையு ‡ முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துளூற்று பவர்.

பரி:—(இ-ள்.) பயனே விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பர் ¶ அவ்விழக்கிற் கினையாது வினையைத்தாழ்வற முயல்வார், (எ-று).

னினும் என்னும் எதிர்மறையுமையாற் பெறப்பட்டது. தன்னளவின் மிக்க பயனுவது தான்கருதிய பயனிலும் அதிகமான பயனுண்டாதல்.

† இருவழியும் (முயன்று செய்த தொழில் ஊழ்வகையால் கருதிய பயனைத் தந்தவிடத்தும் தாராதவிடத்தும்) பாழாகல் (பயனில்லாதொழிதல்) இன்மையின் (இல்லாமையினால்) விதியை யெண்ணி யிராது மேற்கொண்டதொழிலை முயன்று செய்யவேண்டும் என்பது கருத்து. பாழாகவின்மையாவது முயன்று செய்ததொழில் ஊழ்வகையால் முற்றப் பெற்ற விடத்துப் பெரும்பயனையும் முற்றப்பெறுதவிடத்து உடல் வருத்தத்திற் கேற்பச் சிறிது பயனையும் தருதலாம்.

‡ இராமாநுஜக் கவிராயர் தமது கச்சூர்ல் விருத்தியுரையில் சுட்டெழுத்துக்களைக் கூறுமிடத்து "உகரம் எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையும் சுட்டுமெனக்காண்க. உகரம் அவ்வாறு சுட்டிநிற்பதை 'ஊழையு முப்பக்கங்காண்பர்' என்றதற்குப் பின்பக்கமாய் முதுகுகாட்டக் காண்பர் எனப் பொருள் கூறுதலாற்காண்க" என்பர். திருக்கோவையார் "தெளிவளர் வான்சிலை" என்னும் பாட்டிலுள்ள "உங்கனே வர்து தோன்றுவனே" என்பதிலிருக்கு கவனிக்கத் தக்கதாம்.

¶ அவ்விலக்கிற்கு - (தீவினை) பயனை விலக்குவதற்கு.


*தாழ்வறுதல் - சூழ்ச்சியினும், வலி * முதலிய அறிதலினும், செயலினுங் குற்றமறுதல். ‡ ஊழ் ஒருகாலாக இருகாலாகவல்லது விலக்கலாகாமையின், ¶ பலகான் முயல்வார் பயனெய்துவரென்பார் 'உப்பக்கங் காண்பர்' என்றார். தெய்வத்தான் இடுக்கண் வரினும் முயற்சி விடற்பாலதன்றென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது.*

தேளி:—(இ - ள்.) ஊழையும் - (பயனெவிலக்குவதாகிய) ஊழையும், உப்பக்கங்காண்பர் - புறங்காண்பர், உலகின்றி - (அவ்விலக்கிற்கு) இலையாமல், (தொழிலே), தாழாத - தாழ்வற, உஞற்றுபவர் - முயல்வோர்.

தாழ்வறுதல் - ஆலோசனையிலும், வலிமுதலியவற்றை யறிதலிலும், செயலிலுங் குற்றமறுதல். ஊழானது மேற்கொண்ட தொழிலே ஒருமுறையாவது இருமுறையாவது விலக்குதல்லாமல் பலமுறை விலக்கலாதாமையால், பலமுறை முயற்சிசெய்வார் பயனெயடைவாரென்பார் 'உப்பக்கங் காண்பர்' என்றார். ஊழிஞல் துன்பம் வரினும் முயற்சிவிடத்தக்க தன்றென்பது இவை மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது. ஊழென்றது இங்குப் போ கூழை (தீவினையை). புறங்காணல்- முதுகைப் பார்த்தல்.

(க - து.) தாம்மேற்கொண்ட தொழிலைத் தளர்வில்லாத முயற்சியோடு செய்பவர் பயனெவிலக்கும் ஊழையும் விலக்குவர்.

10. They who labour on, without fear and without fainting will see even fate (put) behind their back.



இருபத்தைந்தாம் அதிகாரம்.

இடுக்கணழியாமை—

On Perseverance in Spite of difficulties.

பரி:—அரிதாவது வினையின்கண் முயல்வான் தெய்வத்தானுங், பொருளின்மையானுங், மெயவருத்தத்தானுந் தனக்கிடுக்கண்வந்துழி, அதற்கு மனங்கலங்காமை. †அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

முதலிய என்றது காலத்தையும் இடத்தையும்.

‡ ஊழதிகாரத்தோடு இச்செய்யுள் முரணுமை 'ஊழ் ஒருகாலாக இருகாலாக வல்லது விலக்கலாகாமையின், பலகான் முயல்வார் பயனெய்துவரென்பார் 'உப்பக்கங்காண்பர்' என்றார் என்று கூறினமையால், நன்கு விளங்கும்.

¶ இங்கு மார்க்கண்டன் சுவேதன் முதலியவர்களது கதை ஞாபகத்திற்குக் கொண்டுவரற் பாலதாம்.

† ஆள்வினை யுடைமையென்னும் அதிகாரத்தின்பின் இடுக்கணழியாமை என்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

தெளி:—அஃதாவது தொழில்செய்தலில் முயல்பவன் ஊழிஞலாவது பொருளில்லாமையினலாவது மெய்வருத்தத்தாலாவது தனக்குத்தன்பம் வந்தவிடத்து, அத்துன்பத்திற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.

க. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

பரி:—(இ - ள்.) ஒருவன் வினையாற் றனக்கிடுக்கண் வருமிடத்து † அதற்கழியாது உள்ளமகிழ்க; அவ்விடுக்கணை மேன்மே ¶ லடரவல்லது அம்மகிழ்ச்சி போல்வது பிறிதில்லை ஆகலான், (எ - று).

வினை யினிது முடித்தழி விகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக்கண் வரும்வழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியான் அதனைத்தள்ளி 0 அக்குறை முடிக்கும் ஆற்றலுடையனு மாகலின் 'அதனை யடுத்தூர்வ தஃதொப்ப தில்' என்றார்.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) இடுக்கண் - துன்பமானது, வருங்கால்- (தொழிலால் தனக்கு) வருமிடத்து, நகுக - (அதற்கு அழியாமல் மன) மகிழ்க்கடவன், அதனை - அத்துன்பத்தை, அடுத்து - பொருந்தி (மேலுமேலும்), ஊர்வது - எதிர்க்கவல்லது, அஃதொப்பது- அம்மகிழ்ச்சி போல்வது, இல் - (வேறு) இல்லை, (ஆகலால்), (எ - று).

(ஒருவன் செய்யும்) தொழில்நன்ருக முடிந்தவிடத்து உண்டாவதாய மகிழ்ச்சியை அத்தொழில் முடிதற்கு மேலேலத் துன்பம் வருமிடத்துச்செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியால் அத்துன்பத்தினைத்தள்ளி அக்குறையை முடிக்கும் வல்லமையுடையவ ஞலாகலின் 'அதனை யடுத்தூர்வ தஃதொப்ப தில்' என்றார்.

(க-து.) மேற்கொண்ட தொழிலால் துன்பம் நேர்ந்தவிடத்துத் தளர்ச்சி யடையாது மகிழ்ச்சி யடைபவனுக்கு அத்துன்ப மொழியும் என்பது.

1. If troubles come, laugh; there is nothing like that, to press upon and drive away sorrow.

உ. வேள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

பரி:—(இ - ள்.) வேள்ளம்போலக் கையிலவுய இடும்பைக ளெல்லாம் அறிவுடையவன் தன்னுள்ளத்தான் †ஒன்றனை‡நினைக்க,அத்துணையானே கெடும், (எ - று).

†, அதற்கழியாது - அவ்விடுக்கணுக்குத் தளர்ச்சியடையாமல்.

¶ அடரவல்லது - எதிர்த்துக்கெடுக்க வல்லமை யுடையது.

0 அக்குறை - அத்தொழிற்குறையை.

† ஒன்றனை - தன்பத்திற்கு மாறுபட்டதொன்றை.

‡ நினைந்த துணையானே கெடும் என்றும் பாடமுண்டு.

இடும்பையாவது உள்ளத்தது † ஓர் கோட்பாடேயன்றிப் பிறிதில்லை என்பதூஉம் அது ‡ மாறுபடக்கொள்ள நீங்குமென்பதூஉம் அறிதல் வேண்டுதலின் 'அறிவுடையான்' என்றும், ¶ அவ்வுபாயத்தெண்மைதோன்ற 'உள்ளத்தினுள்ள' என்றுங் கூறினர். இவை யிரண்டொட்டாலும் ஊழினுயிய இடுக்கணால் அழியாமைக்கு உபாயங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) வெள்ளத்தனைய - வெள்ளம்போலக் கரையில்லாதனவாய, இடும்பை - துன்பங்களெல்லாம், அறிவுடையான்—அறிவுடையவன், உள்ளத்தின் - (தன்) உள்ளத்தினால், உள்ள - (ஒன்றை) நினைக்க, கெடும் - (அந்நினைத்த அளவாலே) அழியும், (எ - று).

துன்பமாவது உள்ளதினதொரு கோட்பாடேயல்லாமல் மற்றொன்றன்று என்பதும் அத்துன்பம் மாறுபடக்கொள்ள நீங்குமென்பதும் அறிதல்வேண்டுதலால் 'அறிவுடையான்' என்றும், அவ்வுபாயத்தினெளிமை தோன்ற 'உள்ளத்தினுள்ள' என்றும் சொல்லினர். இவை யிரண்டொட்டாலும் ஊழினுலாயிய துன்பத்தினால் அழியாமைக்கு உபாயம் சொல்லப்பட்டது

(க - து.) துன்பம் வந்த விடத்து அது மனத்தின் குணங்களுள் ஒன்று; நிலைத்திருப்பதன்றென்று கருதுபவர்க்கு அது விரைந்து கெடும் என்பது.

2. A flood of troubles will be overcome by the courageous thought which the minds of the wise will entertain, even in sorrow.

கூ. இடும்பைக் கிடும்பை படுப்ப திடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

பரி:—(இ - ள்.) வினைசெய்யுங்கால் 0 அதற்கிடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர், + அத்துன்பத்தனைக்குத் தாந்துன்பம் வினைப்பர்.

வருந்துதல் - இளைத்து ‡‡ விட நினைத்தல். மனத்திட்ப முடையராய் விடாது முயலவே வினை முற்றப்பெற்றுப் பயன்படும்; படவே,

† ஓர்கோட்பாடு - ஒருவகைக்கொள்கை (அபிப்பிராயம்).

‡ மாறுபடக்கொள்ள - இடும்பை யில்லா யிருப்பதன்று என்னும் அபிப்பிராயத்தைக் கொள்ள.

¶ அவ்வுபாயத்தெண்மை தோன்ற - அவ்விடும்பையை பொழிக்கும் உபாயத்தின் எளிமை விளங்க. அவ்வுபாயம் - உள்ளத்தினுள்ளல்.

0 அதற்கு - அவ்வினை செய்தற்கு.

+ அத்துன்பத்தனைக்கு - வினைசெய்யுங் காலத்து அதற்கிடையே வந்த துன்பத்திற்கு.

‡‡ விட - செய்யுமாறு மேற்கொண்ட தொழிலை ஒவ்வே விட்டுவிட,

எல்லா வின்பையு மிலவாமாகலின் 'இன்பைக் கின்பை படுப்பர்' என்றார். * வருகின்ற பாட்டிரண்டினும் இதற்கு இவ்வாறே கொள்க. † சொற் பொருட்பின் வருநிலை.

தெளி:—(இ - ள்.) இன்பைக்கு - (தொழில் செய்யும்போது அதற்கு நடுவே வந்த) துன்பத்திற்கு, இன்பைபடாதவர் - வருந்தாதவர், இன்பைக்கு - அத்துன்பத்திற்கு, இன்பை - துன்பத்தை, படுப்பர் - (தாம்) உண்டாக்குவார், (எ - று).

வருந்துதல் - இளைத்துச் செய்யாமல் விடாமுயற்சிசெய்யவே தொழில் முடிவுபெற்றபு பயனுண்டாகும்; உண்டாகவே, எல்லாத் துன்பங்களும் ஒழிவனவாமாதலால்'இன்பைக் கின்பை படுப்பர்' என்றார். வருகின்ற பாட்டிரண்டிலும் இதற்கு இப்படியே பொருள் கொள்க. இது சொற்பொருட்பின் வருநிலையணி.

(க - து.) தொழில் செய்யும்போ தண்டாகிய துன்பத்திற்கு வருந்தாதவர் அத்துன்பத்திற்குத் துன்பமுண்டாக்குவர் என்பது.

3. They give sorrow to sorrow, who in sorrow do not suffer sorrow.

ச. மடித்தவா யெல்லாம் பகடன்ன ஞற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

பரி:—(இ - ள்.) விலங்கிய விடங்களெல்லாம் பற்றினுந் சகடமீர்க்கும் பகடுபோல வினையை யெடுத்துக்கொண்டு உயக்கமில்லாமை வந்தற்ற இடுக்கண் தானே துடர்ப்படுதலை யுடைத்து, (எ - று).

'மடித்தவாயெல்லாம்' என்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளற்றுநில ‡ முதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவுங் கொள்க. ¶பகடு மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவழ்த்தும் அரிதினுய்

கீழ வருமபாடலிரண்டிலும் "இடுக்க ணிடர்ப்ப டுடைத்து" என்றும்,'இடுக்க ணிடுக்கட் படும்'என்று முள்ள இதற்கு இவ்வாறே கொள்ளுதலாவது"மனத்திட்பமுடையராய் விடாதமுயலவே வினைமுற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே எல்லாவிடுமையு மிலவாமாகலின்'இடுக்க ணிடர்ப்பா டுடைத்து'என்றார்; 'இடுக்கணிடுக்கட்படும்'என்றார் என்று கொள்ளுதலாம்.

† முன்வந்த இன்பையெனும் சொல்லும் அதன் பொருளும் பின்னும் வந்தமையின், இக்குறள் சொற்பொருட்பின் வருநிலை யணியாம். சொற்பொருட்பின் வருநிலையணியாவது:—முன்வந்த சொல்லும் பொருளும் பின்னும் பலவிடத்து வருவதாம்.

‡ முதலிய என்றமையின், மணல் நிலம், செங்குத்தான இடர், கனர் நிலம் முதலியவற்றையுங் கொள்க.

¶ சீவக சிந்தாமணி - முத்தியிலம்பகம் 186-' வது செய்யுளின்கண் "மருங்கொற்றி மூக்கூன்றித் தாடவழ்த்து வாங்கி" என்றுள்ள பிரயோகமிங்குணர்தற்பாலதாம்.

க்குமாறுபோலத் தன்மெய்வருத்த நோக்காது முயன்றுய்ப்பானென்பார் 'பகடன்ஞன்' என்றார்.

தெளி:—(இ - ள்.) மதித்தவாயெல்லாம் - தடைப்பட்ட இடங்களெல்லாவற்றிலும், பகடன்ஞன் - பண்டியை யிழுத்துசெல்லும் எருதுபோலத் தொழிலே மேற்கொண்டு செலுத்தவல்லவனே, உற்ற - (வந்தி) அடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடர்ப்பாடு - (தானே) துன்பப்படுதலே, உடைத்து - உடையதாம், (எ - று).

'மதித்தவாயெல்லாம்' என்பது பண்டியை யிழுத்துச செல்லும் எருதிற்கும் தொழிலே மேற்கொண்டு செலுத்துகின்றவனுக்கும் பொதுவாகின்றமையின், அம்மதித்தவாயெல்லாமென்பதனைப் பண்டிக்குரு கேற்றவிவ முசலியனவாகவும், தொழிலுக்குரு தடைகளாகவும் கொள்க. தடைசேரிட்டபோது எருது பக்கங்களில் உராய்ந்தும் நிலத்தில் மூக்கையூன்றியும் கால்களே மடக்கிவைத்துத் தவழ்ந்தும அரிதாகப்பண்டியைச செலுத்தும் விதம்போலத் தொழிலே மேற்கொண்டவன் தடைசேரிட்டபோது தன் சரீரப் பிரயாசத்தை நோக்காமல்முயற்சிசெய்து அதனைச் செலுத்துவான் என்பார் 'பகடன்ஞன்' என்றார்

(க - து.) மேற்கொண்ட தொழிலைத் தடை சேரிட்டபோது ஆர்ச்சியின்றி முடிக்கவல்லவனே யடைந்த துன்பமானது னே துன்பப்படும் என்பது.

4. Troubles will vanish before the man, who struggles against difficulties as a buffalo drawing a cart through deep mire.



நு. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

பரி:—(இ - ள்.) இடைவிடாது மேன்மேல் வந்தன வாயினும், † தன்னுள்ளக் கோட்பாடு விடாதானின் உற்ற விடுக்கண்டாம் இடுக்கணிலே பட்டுப்போம், (எ - று).

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன வாய்வருதலு மடங்க 'அடுக்கிவரினும்' என்றார். ‡ அழிவென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேனின்றது. இவை மூன்றுபாட்டானும் தெய்வத்தானையதற் கழியாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அடுக்கி வரினும் - இடைவிடாது மேலுமேலும் வந்தனவாயினும், அழிவிலான் - (தன்னுள்ளக்கோட்பாடு) விடாதவனே,

† தன்னுள்ளக் கோட்பாடு - தன்மனக்கொள்கையாகிய தைரியம்.

‡ அழிவு - மனங்கலங்குதல்; அஃது இங்கு ஆதலால் உள்ளக்கோட்பாடு விடுதலே (மனவுறுதியொழிதலே) புணர்த்ததாதலால், கருவியாகுபெயராம். மனக்கலக்கத்தால் அதைரியமுண்டாம் என்பது கருத்து.